V211,31 N69
31N70.19
61455
3857

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

Fifth Session of the Fourth Legislative Assembly under the Constitution of India.

*15th to 21st March* 1969.

Volume XIX (Nos. 1 to 5).

TABLE OF CONTENTS.

*Saturday, 15th March* 1969.

| | PAGES |
|---|---|
| 1. Point of Order— | |
| Late commencement of the House and late attendance by Ministers ... ... ... | 1 |
| 2. Questions and Answers ... ... ... ... | 2–22 |
| 3. Privilege Matter— | |
| Publication of expunged portions of proceedings in the daily ' Maravan Madal ' ... ... | 22–23 |
| 4. Adjournment Motion— | |
| Shifting of the Defence Institute of Physiology and Allied Sciences from Madras to New Delhi ... ... ... ... ... ... | 23 |
| 5. Announcement— | |
| Committee to go into the matter raised by Thiru M. C. Balan announced earlier by the Deputy Speaker considered not necessary ... ... | 23–28 |
| 6. Personal Explanation— | |
| Late commencement of the House and late attendance by Ministers ... ... ... | 28 |
| 7. Voting on Demands for Grants for 1969-70—*cont.* | |
| Demand No. 12—Police ... ... ... | 28–94 |
| 8. Papers laid on the Table of the House ... ... | 94 |

PAGES

*Monday, 17th March 1969.*

1. Questions and Answers ... ... ... ... 109–132

2. Point of Order—
Three days' notice for consideration by the Legislative Assembly of a Bill amended by the Legislative Council ... ... ... 132–137

3. Ruling regarding appointment of a Committee to go into allegations made by a Member with reference to a matter which was *sub-judice* ... 137

4. Government Bill—
The Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill 1969 (L.A. Bill No. 8 of 1969) ... ... 138–146

5. Government Motion—
Draft amendment to the Madras District Municipalities Act, 1920 ... ... ... 146

6. Voting on Demands for Grants for 1969–70—*cont.*
(i) Demand No. 26—Irrigation. ... ... ...
(ii) Demand No. 41—Capital Outlay on Irrigation.
(iii) Demand No. 27—Public Works—Works.
(iv) Demand No. 28—Public Works—Establishment and Tools and Plant ... ... ...
(v) Demand No. 42—Capital Outlay on Public Works ... ... ... ... ... 146–204

7. Papers laid on the Table of the House.

*Tuesday, 18th March 1969.*

1. Questions and Answers ... ... ... ... 205–227

2. Calling Attention—
(i) Renovation of Big Tank, Ramanathapuram ... 227
(ii) Non-disbursement of loans through Land Mortgage Banks, Ramanathapuram district ... ... ... ... ... 227–228



PAGES

3. Voting on Demands for Grants for 1969–70—*cont.*
(i) Demand No. 16—Agriculture ... ...
(ii) Demand No. 17—Fisheries ... ...
(iii) Demand No. 18—Animal Husbandry ...
(iv) Demand No. 21—Cinchona ... ...
(v) Demand No. 35—Forests ... ...
(vi) Demand No. 39—Capital Outlay on Agriculture ... ... ... ... 239–334
(vii) Demand No. 44—Capital Outlay on Forests

4. Explanatory Statement by Finance Minister—
Prime Minister's visit to drought-affected areas of Tamil Nadu ... ... ... ... 233

5. Point of Clarification—
Right of the Leader of the Opposition to ask for clarification on the statement of a Minister under Rule 82 ... ... ... ... ... 233–239

6. Papers laid on the Table of the House ... ... 334

*Thursday, 20th March 1969.*

1. Questions and Answers ... ... ... ... 401–423

2. Adjournment Motion—
Situation arising out of the lock-out in Parry & Co. at Ranipet, N.A. District ... 424

3. Points of Order—
(i) Statement on Chief Minister's meet with Central Ministers ... ... ... ... 424
(ii) Supply of Policy statement booklets on Demands to Members in advance ... ... 426–427

4. Voting on Demands for Grants for 1969–70—*cont.*
(i) Demand No. 3—General Sales Tax and other Taxes and Duties—Administration ... 427–457
(ii) Demand No. 9—District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Department) ... 457–490

5. Papers laid on the Table of the House ... ... 491–495

PAGES

*Friday, 21st March 1969.*

1. Questions and Answers ... ... ... ... 505–523, 524–525

2. Point of Order—
   Omission of supplementary item in the original question ... ... ... ... ... 524–526

3. Personal Explanation—
   (i) Explanation by Dr. H. V. Hande re: time of raising point of order and allowing 'Zero Hour' after Question Hour ... ... 526–530
   (ii) Withdrawal of a statement made earlier by Thiru A. L. Subramanian ... ... ... 621

4. Adjournment Motion—
   Statement by the Deputy Prime Minister indicating his refusal to allow deficit budget and warning against overdrawal from the Reserve Bank by State Governments and its repercussions ... ... ... ... ... ... 530–535

5. Calling Attention—
   (i) Delay in furnishing statements to notices of calling attention ... ... ... ... 535–536
   (ii) Clash between the toll-gate contractor and Virudhachalam Arts College Students ... 536–539

6. Voting on Demands for Grants for 1969–70—*cont.*
   (i) Demand No. 14—Medical ... ... ...
   (ii) Demand No. 15—Public Health ... ...
   (iii) Demand No. 38—Capital Outlay on Public Health ... ... ... ... ... 539–622

7 Papers laid on the Table of the House ... ... 622

**தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.**

**தமிழ் நாடு ஆளுநர் :**

**சர்தார் உஜ்ஜல் சிங்.**

1. **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதல் அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல்துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, சட்ட மன்றம், செய்தி—விளம்பரம், திரைப்படச் சட்டம்.

2. **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் (நிதி அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— நிதி, திட்டம், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், வணிக வரிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

3. **மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி (உணவு-வேளாண்மைத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வேளாண்மை, உணவு உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, மீன் வளம், காடுகள், சிங்கோனா.

4. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (பொதுச் சுகாதார-அரிசன நல அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், அரிசன நலம், எழுதுபொருள்—அச்சுத் துறை, அரசாங்க அச்சகம், சுற்றுலா, அனாதை இல்லங்கள், இரவலர்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

5. **மாண்புமிகு திரு. செ. மாதவன் (கல்வி-தொழில் அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்—பயிற்சியளித்தலும், கம்பெனிகள், தொழில் நுட்ப கல்வி உள்பட கல்வி, ஆட்சிமொழி, சட்டம், நீதிமன்றங்கள்.

6. **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப் பணிகள், சிறுபாசன சிறப்புத் திட்டம் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள் (Waqfs)

7. **மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், பூதான, கிராமதான இயக்கங்கள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி.

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

Fifth Session of the Fourth Legislative Assembly under the Constitution of India.

*15th to 21st March* 1969.

Volume XIX (Nos. 1 to 5).

TABLE OF CONTENTS.

*Saturday, 15th March* 1969.


| | PAGES |
|---|---|
| 1. Point of Order— | |
| Late commencement of the House and late attendance by Ministers ... ... ... | 1 |
| 2. Questions and Answers ... ... ... ... | 2–22 |
| 3. Privilege Matter— | |
| Publication of expunged portions of proceedings in the daily ' Maravan Madal ' ... ... | 22–23 |
| 4. Adjournment Motion— | |
| Shifting of the Defence Institute of Physiology and Allied Sciences from Madras to New Delhi ... ... ... ... ... ... | 23 |
| 5. Announcement— | |
| Committee to go into the matter raised by Thiru M. C. Balan announced earlier by the Deputy Speaker considered not necessary ... ... | 23–28 |
| 6. Personal Explanation— | |
| Late commencement of the House and late attendance by Ministers ... ... ... | 28 |
| 7. Voting on Demands for Grants for 1969–70—*cont.* | |
| Demand No. 12—Police ... ... ... | 28–94 |
| 8. Papers laid on the Table of the House ... ... | 94 |

PAGES

*Monday, 17th March 1969.*

1. Questions and Answers ... ... ... ... 109–132

2. Point of Order—

Three days' notice for consideration by the Legislative Assembly of a Bill amended by the Legislative Council ... ... ... 132–137

3. Ruling regarding appointment of a Committee to go into allegations made by a Member with reference to a matter which was *sub-judice* ... 137

4. Government Bill—

The Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill 1969 (L.A. Bill No. 8 of 1969) ... ... 138–146

5. Government Motion—

Draft amendment to the Madras District Municipalities Act, 1920 ... ... ... 146

6. Voting on Demands for Grants for 1969–70—*cont.*

(i) Demand No. 26—Irrigation. ... ... ...
(ii) Demand No. 41—Capital Outlay on Irrigation.
(iii) Demand No. 27—Public Works—Works.
(iv) Demand No. 28—Public Works—Establishment and Tools and Plant ... ... ...
(v) Demand No. 42—Capital Outlay on Public Works ... ... ... ... ... 146–204

7. **Papers laid on the Table of the House.**

*Tuesday, 18th March 1969.*

1. Questions and Answers ... ... ... ... 205–227

2. Calling Attention—

(i) Renovation of Big Tank, Ramanathapuram ... 227

(ii) Non-disbursement of loans through Land Mortgage Banks, Ramanathapuram district ... ... ... ... ... 227–228



PAGES

3. Voting on Demands for Grants for 1969–70—*cont.*

(i) Demand No. 16—Agriculture ... ...
(ii) Demand No. 17—Fisheries ... ...
(iii) Demand No. 18—Animal Husbandry ...
(iv) Demand No. 21—Cinchona ... ...
(v) Demand No. 35—Forests ... ...
(vi) Demand No. 39—Capital Outlay on Agriculture ... ... ... ... ... 239–334
(vii) Demand No. 44—Capital Outlay on Forests

4. Explanatory Statement by Finance Minister—

Prime Minister's visit to drought-affected areas of Tamil Nadu ... ... ... ... 233

5. Point of Clarification—

Right of the Leader of the Opposition to ask for clarification on the statement of a Minister under Rule 82 ... ... ... ... ... 233-239

6. Papers laid on the Table of the House ... ... 334

*Thursday, 20th March 1969.*

1. Questions and Answers ... ... ... ... 401–423

2. Adjournment Motion—

Situation arising out of the lock-out in Parry & Co. at Ranipet, N.A. District ... 424

3. Points of Order—

(i) Statement on Chief Minister's meet with Central Ministers ... ... ... ... 424

(ii) Supply of Policy statement booklets on Demands to Members in advance ... ... 426–427

4. Voting on Demands for Grants for 1969–70—*cont.*

(i) Demand No. 3—General Sales Tax and other Taxes and Duties—Administration ... 427–457

(ii) Demand No. 9—District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Department) ... 457–490

5. Papers laid on the Table of the House ... ... 491–495

PAGES

*Friday, 21st March 1969.*

1. **Questions and Answers** ... ... ... ... 505–523, 524–525

2. Point of Order—
   Omission of supplementary item in the original question ... ... ... ... ... 524–526

3. Personal Explanation—
   (i) Explanation by Dr. H. V. Hande re: time of raising point of order and allowing 'Zero Hour' after Question Hour ... ... 526–530
   (ii) Withdrawal of a statement made earlier by Thiru A. L. Subramanian ... ... ... 621

4. Adjournment Motion—
   Statement by the Deputy Prime Minister indicating his refusal to allow deficit budget and warning against overdrawal from the Reserve Bank by State Governments and its repercussions ... ... ... ... ... ... 530–535

5. Calling Attention—
   (i) Delay in furnishing statements to notices of calling attention ... ... ... ... 535–536
   (ii) Clash between the toll-gate contractor and Virudhachalam Arts College Students ... 536–539

6. Voting on Demands for Grants for 1969–70—*cont.*
   (i) Demand No. 14—Medical ... ... ...
   (ii) Demand No. 15—Public Health ... ...
   (iii) Demand No. 38—Capital Outlay on Public Health ... ... ... ... ... 539–622

7. **Papers laid on the Table of the House** ... ... 622

தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

தமிழ் நாடு ஆளுநர் :

சர்தார் உஜ்ஜல் சிங்.

1. **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** (முதல் அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல்துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, சட்ட மன்றம், செய்தி—விளம்பரம், திரைப்படச் சட்டம்.

2. **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** (நிதி அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— நிதி, திட்டம், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், வணிக வரிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

3. **மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** (உணவு-வேளாண்மைத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வேளாண்மை, உணவு உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, மீன் வளம், காடுகள், சிங்கோனா.

4. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** (பொதுச் சுகாதார-அரிசன நல அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், அரிசன நலம், எழுதுபொருள்—அச்சுத் துறை, அரசாங்க அச்சகம், சுற்றுலா, அனாதை இல்லங்கள், இரவலர்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

5. **மாண்புமிகு திரு. செ. மாதவன்** (கல்வி-தொழில் அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்—பயிற்சியளித்தலும், கம்பெனிகள், தொழில் நுட்ப கல்வி உள்பட கல்வி, ஆட்சிமொழி, சட்டம், நீதிமன்றங்கள்.

6. **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** (பொதுப்பணித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப் பணிகள், சிறுபாசன சிறப்புத் திட்டம் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள் (Waqfs)

7. **மாண்புமிகு திரு. மா. முத்துசாமி** (உள்ளாட்சித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், பூதான, கிராமதான இயக்கங்கள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி.

8. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (தொழிலாளர் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழிலாளர், பத்திரப் பதிவு, பயண அனுமதிச் சீட்டுகள், துறைமுகங்கள், சிறைச்சாலைகள், எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சாக்குகளின் விலைகள் வழங்கல் குறித்த சட்டம்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— கூட்டுறவு, போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

10. மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா (அறநிலைய அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— அறக்கட்டளைகள், வீட்டு வசதி, இடவசதிக் கட்டுப்பாடு.

11. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) சீட்டுகள் குறித்த சட்டம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### Governor of Tamil Nadu

### Sardar UJJAL SINGH.

1. Thiru M. KARUNANIDHI, Chief Minister in charge of Public, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers and Deputy Collectors, Police, Elections, Prohibition, Legislature, Information and Publicity and Cinematograph Act.

2. Thiru K. A. MATHIALAGAN, Minister in charge of Finance, Planning, Revenue, Board of Revenue, District Revenue Establishments, Commercial Taxes, Indian Overseas, Refugees and Evacuees.

3. Thiru A. GOVINDASWAMI, Minister in charge of Food, Agriculture, Food Production, Animal Husbandry, Fisheries, Forest and Chinchona.

4. Dr. Thirumathi SATYAVANIMUTHU, Minister in charge of Public Health, Medicine, Harijan Welfare, Women's and Children's Welfare, Stationery and Printing, Government Press, Tourism, Orphanages, Beggars, Approved Schools and Vigilance Services.

5. Thiru S. MADHAVAN, Minister in charge of Industries Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Education including Technical Education, Official Language, Law and Courts.

6. Thiru S. J. SADIQ PASHA, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Project Works, Highways and Waqfs.

7. Thiru M. MUTHUSWAMY, Minister in charge of Municipal Administration. Community Development, Panchayats, Bhoodan and Gramdan. Khadi and Village Industries, Rural Industries Project, Ex-Servicemen and Prosperity Brigade.

8. Thiru P. U. SHANMUGHAM, Minister in charge of Labour, Registration, Passports. Ports, Prisons, Legislation on Weights and Measures. Newsprint Control and Prices and Supplies of Goods Act.

9. Thiru Si. Pa. ADITANAR, Minister in charge of Co-operation, Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

10. Thiru K. V. SUBBIAH, Minister in charge of Religious Endowments, Housing and Accommodation Control.

11. Thiru O. P. RAMAN, Minister in charge of Electricity, Legislation on Money-Lending (Rural Indebtedness) and Legislation on Chits.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன்

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. சி. ஆர். எட்மண்ட்

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

திரு. வி. எஸ். எஸ். மணி
திரு. பி. எஸ். மணியம்
திரு. சு. துரைசாமி
திரு. பு. செ. முத்துச்செல்வன்
திரு. சா. மெய்யப்பன்
திரு. தோ். மு. நல்லசாமி

**சட்டப் பேரவைச் செயலாளர்**

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

**துணைச் செயலாளர்**

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி.

**உதவிச் செயலாளர்கள்**

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)
திரு. ஜி. இராகவன்.
திரு. சி. கு. ராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்.ஸி., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். .. .. | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனார், சி.பா. (அமைச்சர்) .. | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜு, எஸ். .. .. .. | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து. ப. (அரசாங்க தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. .. .. .. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். .. .. .. | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. .. .. .. | கடலாடி (செ. வ.). |
| 8 | ஆனந்தன், மு. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. .. .. | ஸ்ரீவில்லிப்புத்தூர் (செ.வ.). |
| 10 | அண்ணாமலை, சி. வி. எம். .. .. | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. .. .. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். .. .. | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. .. .. .. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. .. .. .. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா, வி. .. .. .. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, எ.வி.பி. .. .. | எழும்பூர் (சென்னை மாநகரம்). |
| 19 | ஆதிமூலம், டி.எஸ். .. .. .. | சேரன்மகாதேவி. |
| 20 | பாலன், எம்.சி. .. .. .. | நாகர்கோவில். |
| 21 | பாலகிருஷ்ணன், எ.கோ. .. .. | வானூர் (செ.வ.). |
| 22 | பலராமன், இல. .. .. .. | கணியம்பாடி. |
| 23 | பாலசுப்பிரமணியன், எ. .. .. | திண்டுக்கல். |
| 24 | பெள்ளி கௌடர், ஜெ. .. .. .. | கூனூர். |
| 25 | பாரதி மோகன், கோ. .. .. .. | குத்தாலம். |
| 26 | பூபதி, எம். .. .. .. .. | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 27 | பூவராகன், கோ. .. .. .. | விருத்தாசலம். |
| 28 | போஜன், கே. .. .. .. .. | உதகமண்டலம். |
| 29 | சீமைச்சாமி, கரு. .. .. | மானாமதுரை. |
| 30 | சிதம்பரநாத நாடார், எ. .. .. | கொளச்சல். |
| 31 | சின்னராஜ், சி. கே. .. .. .. | திருப்பத்தூர். |
| 32 | சின்னச்சாமி, மு. .. .. .. | ஈரோடு. |
| 33 | சின்னசாமி, வி. .. .. .. | ஏர்க்காடு (ஆ.வா.). |
| 34 | சித்தன், என். எஸ்.வி. .. .. | திருமங்கலம். |
| 35 | தனுஷ்கோடி, பி.எஸ். .. .. | திருவாரூர் (செ.வ.). |
| 36 | தருமலிங்கம், ந. .. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 37 | துரைராஜ், சு.ம. .. .. .. | திருவள்ளூர் (செ.வ.) |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 38 | துரைபாண்டியன், என். .. .. | நாங்குனேரி. |
| 39 | துரைராஜ், பி. .. .. .. .. | சங்கரன்கோவில் (செ.வ.). |
| 40 | துரைசாமி, சு. .. .. .. | திருப்பூர். |
| 41 | துரையரசன், ஆ. .. .. .. | அறந்தாங்கி. |
| 42 | எட்மண்ட் ஜி. ஆர். (பேரவைத் துணைத்தலைவர்) .. .. .. | திருச்செந்தூர். |
| 43 | இளம்வழுதி, இரெ. .. .. .. | கடலூர். |
| 44 | எல்லப்பன், பி. எஸ். .. .. .. | அச்சரப்பாக்கம் (செ. வ.). |
| 45 | கணேசன், எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 46 | கணேசன், எஸ். .. .. .. | செம்பனார்கோவில். |
| 47 | ஜார்ஜ், வ. .. .. .. .. | பத்மநாபபுரம். |
| 48 | ஞானசம்பந்தன், கொ. இர. .. | நாகப்பட்டினம். |
| 49 | கோமதிசங்கர தீட்சிதர், க. .. .. | அம்பாசமுத்திரம். |
| 50 | கோபால், எம். .. .. .. | குன்றத்தூர் (செ. வ.). |
| 51 | கோவிந்தன், கே. ஆர். .. .. | தாரமங்கலம். |
| 52 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் தலைவர்) .. | செய்யாறு. |
| 53 | கோவிந்தராசன், ம. சொ. .. .. | மதுரை சென்ட்ரல். |
| 54 | கோவிந்தராசன், சி. .. .. .. | நெல்லிக்குப்பம். |
| 55 | கோவிந்தராஜன், வி. எஸ். .. .. | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 56 | கோவிந்தராசுலு, கே. .. .. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 57 | கோவிந்தராசன், ஆ. .. .. .. | புவனகிரி. |
| 58 | கோவிந்தசாமி, எ. (அமைச்சர்) .. | முகையூர். |
| 59 | ஹபிபுல்லா பேக், டாக்டர் .. .. | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 60 | ஹாண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |
| 61 | இளஞ்செழியன்: வீ. சா. .. .. | விராலிமலை |
| 62 | இராசரத்தினம், டி. .. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 63 | ஜேம்ஸ், ஜே. .. .. .. .. | திருவட்டார். |
| 64 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. .. | மதுரை-கிழக்கு. |
| 65 | ஜயராஜ், பி. .. .. .. .. | நன்னிலம் (செ. வ.). |
| 66 | ஜயராமன், கி. .. .. .. .. | சேலம்-1. |
| 67 | ஜெயராமன், பி. .. .. .. | பேர்ணம்பட்டு (செ. வ.) |
| 68 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. .. | ஜெயங்கொண்டம் (செ.வ.). |
| 69 | கனகசபை, ரா. .. .. .. | சிதம்பரம். |
| 70 | கந்தசாமி கவுண்டர், செ. .. .. | அரவக்குறிச்சி. |
| 71 | கந்தசாமி, எம். .. .. .. | குளித்தலை. |
| 72 | கந்தசாமி படையாச்சி, மு. .. .. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 73 | கண்ணன், எம். ஆர். .. .. .. | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 74 | [illegible], எம். .. .. .. | கிணத்துக்கடவு. |
| 75 | [illegible] அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| 76 | கருணாநிதி, மு. (முதல் அமைச்சர்) .. | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 77 | கருப்பையா, ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ. வ.). |
| 78 | கருப்பையா, ஆர். .. .. .. | அரியலூர். |
| 79 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 80 | காசிராமன், நா. .. .. .. | கும்பகோணம். |
| 81 | கதிரவன், க. மு. .. .. .. | தென்காசி. |
| 82 | கேசவனு, தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 83 | கிட்டப்பா, என். .. .. .. | மாயூரம். |
| 84 | கொளத்தூர் கோதண்டம் .. .. | மதுராந்தகம். |
| 85 | கோதண்டராமன், வி. கே. .. .. | குடியாத்தம். |
| 86 | கோதண்டராமையா, கே. எஸ். .. | உத்தனப்பள்ளி. |
| 87 | கிருஷ்ணமூர்த்தி, கு. .. .. .. | பழனி (செ.வ.). |
| 88 | கிருஷ்ணமூர்த்தி, சி. .. .. .. | கொடவாசல். |
| 89 | கிருஷ்ணமூர்த்தி, மு. .. .. .. | பேராவூரணி. |
| 90 | கிருஷ்ணன், அ. .. .. .. .. | மங்களூர் (செ.வ.). |
| 91 | கிருஷ்ணன், ஈ. ஆர். .. .. .. | சேலம்-2. |
| 92 | கிருட்டிணன், நா. .. .. .. | காஞ்சீபுரம். |
| 93 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. .. .. | அவினாசி. |
| 94 | குமாரசாமி, கே. என். .. .. .. | பல்லடம். |
| 95 | குப்பம்மாள், திருமதி சு. .. .. | போளூர். |
| 96 | மாதவன், செ. (அமைச்சர்) .. .. | திருப்பத்தூர். |
| 97 | மகாதேவன், ப. .. .. .. | கன்யாகுமரி. |
| 98 | மலைச்சாமி, பெ. .. .. .. .. | மேலூர். |
| 99 | மலைக்கண்ணன், வீ. .. .. .. | இளையாங்குடி. |
| 100 | மணி, கே.பி.எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 101 | மணி, எம். எஸ். .. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 102 | மணி, வி. எஸ். எஸ். .. .. .. | ஆத்தூர். |
| 103 | மாணிக்கவாசகம், இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 104 | மணியன், பி.எஸ். .. .. .. | சோழவந்தான். |
| 105 | மாரிமுத்து, அ. .. .. .. .. | ஆடுதுறை. |
| 106 | மாரிமுத்து, எ.ஆர். .. .. .. | பட்டுக்கோட்டை. |
| 107 | மாரிமுத்து, மூ. .. .. .. .. | தலைவாசல் (செ.வ.). |
| 108 | மார்டின், டி. .. .. .. .. | சாத்தான்குளம். |
| 109 | மருதாசலம், என். .. .. .. | பேரூர் (செ.வ.). |
| 110 | மதியழகன், கே. எ. (அமைச்சர்) .. | ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்). |
| 111 | மெய்யப்பன், சா. .. .. .. | காரைக்குடி. |
| 112 | மேத்தா, எம். .. .. .. .. | பெரியகுளம். |
| 113 | மூக்கையா தேவர், பி.கே. .. .. | உசிலம்பட்டி. |
| 114 | முனுசாமி கௌண்டர், பி.எம். .. | [illegible] |
| 115 | முனுசாமி, ரா.ரா. .. .. .. | [illegible] |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| 116 | முனியாண்டி, எ. .. .. .. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 117 | முனு. ஆதி .. .. .. .. | திருப்போரூர். |
| 118 | முருகையன், புலவர் க. .. .. | திருவையாறு. |
| 119 | முருகேசன், க. .. .. .. .. | பாலக்கோடு. |
| 120 | முருகையன், எஸ். .. .. .. | கலசபாக்கம். |
| 121 | செஞ்சி முனுசாமி, வெ. .. .. | செஞ்சி. |
| 122 | முத்தையா, கே. கே. .. .. .. | கடலூர். |
| 123 | முத்தையா, மூ. .. .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 124 | முத்துலிங்கம், எஸ். .. .. .. | வந்தவாசி (செ.வ.) |
| 125 | முத்துசாமி, பா. க.சி. .. .. .. | பெண்ணாகரம். |
| 126 | முத்துசாமி, மா. (அமைச்சர்) .. .. | நாமக்கல். |
| 127 | முத்துச்செல்வன், பு.செ. .. .. | முசிரி. |
| 128 | நாச்சிமுத்து, நா. .. .. .. .. | ஒட்டன்சத்திரம். |
| 129 | நாகலிங்கம், பா. .. .. .. | பொன்னேரி (செ.வ.) |
| 130 | நாகசுந்தரம், ஆர். .. .. .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 131 | நல்லசிவன், க. ர. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 132 | நல்லசாமி, தேர். மூ. .. .. .. | கரூர். |
| 133 | நஞ்சன், சி. .. .. .. .. | கூடலூர் (செ.வ.) |
| 134 | நரசிம்மன், எ. சி. .. .. .. | ஆரணி. |
| 135 | நாராயணன், இரா. .. .. .. | வரகூர். |
| 136 | நடராசன், மு. க. து. .. .. .. | லால்குடி. |
| 137 | நடராஜன், ஜி. .. .. .. .. | காட்பாடி. |
| 138 | நடராசன், ஈ. எம். .. .. .. | அந்தியூர். |
| 139 | நெடுஞ்செழியன், இரா. .. .. .. | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்). |
| 140 | பச்சையப்பன், எஸ். பி. .. .. | சங்கராபுரம். |
| 141 | பழனி, சி. .. .. .. .. | ஓமலூர் (செ.வ.). |
| 142 | பழனியம்மாள், திருமதி வி. .. .. | தாராபுரம் (செ.வ.) |
| 143 | பழனிவேல் ராஜன் .. .. .. | தேனி. |
| 144 | பன்னீர்செல்வம், எம். .. .. .. | ஆம்பூர் (செ.வ.) |
| 145 | பரமசிவன் பி. என். .. .. .. | பொங்களூர். |
| 146 | பரமசிவம், எஸ். .. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 147 | பரிசுத்த நாடார், எ. ஒய். எஸ். .. .. | தஞ்சாவூர். |
| 148 | பட்டாபி நாயுடு, எ. .. .. .. | காவேரிப்பட்டணம். |
| 149 | பீர் முஹமது, ஹாஜி. ம. மு. .. .. | மேலப்பாளையம். |
| 150 | பெரியசாமி, பெ. .. .. .. | ராசிபுரம். |
| 151 | பெருமாள், எ. ஆர். .. .. .. | கரியாப்பட்டி. |
| 152 | பொன்னம்பலம், புலவர் பொ. .. | திருமயம். |
| 153 | பொன்னப்ப நாடார், ஆர். .. .. | விளவங்கோடு. |
| 154 | பொன்னுமலை, தி. .. .. .. | பனமரத்துப்பட்டி. |
| 155 | ராஜு, எ. எம். .. .. .. .. | பவானி. |
| 156 | ராசகோபால், க. மு. .. .. .. | உத்திரமேரூர். |
| 157 | ராசமன்னார், எம். எ. .. .. .. | வாணியம்பாடி. |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 158 | இராசாங்கம், மா. | கம்பம். |
| 159 | ராஜாங்கம், என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 160 | ராஜவேலு, டி. ஏ. | திருச்செங்கோடு. |
| 161 | ராமச்சந்திர துரை, ரா. | கந்தர்வக்கோட்டை. |
| 162 | இராமச்சந்திரன், க. ந. | ஆண்டிமடம். |
| 163 | ராமச்சந்திரன், எம். ஜி. | பரங்கிமலை. |
| 164 | இராமச்சந்திரன், எஸ். | பண்ருட்டி. |
| 165 | ராமலிங்கம், எஸ். | ஸ்ரீரங்கம் (செ.வ.) |
| 166 | இராமமூர்த்தி, க. | திண்டிவனம். |
| 167 | இராமன், மு. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 168 | ராமன், ஓ. பி. (அமைச்சர்). | மேலூர்-தெற்கு (செ.வ.) |
| 169 | இராமராசன், வ.க. | பவானிசாகர் (செ.வ.) |
| 170 | இராமசாமி, இ. | வால்பாறை (செ.வ.) |
| 171 | ராமசாமி கவுண்டர், கே.எம். | கோபிசெட்டிப்பாளையம். |
| 172 | ராமசாமி, எஸ்.ஜே. | அரக்கோணம். |
| 173 | இராசு, ஜே.எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 174 | இரத்தினசபாபதி, மு. | விளாத்திகுளம். |
| 175 | ரெத்தினதேவர், ரா. | முதுகுளத்தூர். |
| 176 | சாதிக் பாட்சா, எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 177 | சகாதேவக் கண்டர், கே. | தண்டராம்பட்டு. |
| 178 | சாமிநாதன், கே. என். | வெள்ளக்கோயில். |
| 179 | சங்கரய்யா, என். | மதுரை—மேற்கு. |
| 180 | சந்தானம், பி.எஸ். | செங்கம் (செ.வ.) |
| 181 | சாரதி, மா.பா. | வேலூர். |
| 182 | சத்தியவாணிமுத்து, டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) (சென்னை மாநகரம்) |
| 183 | சீனிவாசன், பெ. | விருதுநகர். |
| 184 | செல்லக் கவுண்டர், அ. | சேந்தமங்கலம் (ஆ.வா) |
| 185 | சேனுபதி, அ. | காங்கேயம். |
| 186 | சேதுராமன், சி. | சிவகங்கை. |
| 187 | சண்முகம், எம் | விழுப்புரம். |
| 188 | சண்முகசுந்தரம், அ.ப. | பொள்ளாச்சி. |
| 189 | சிறைமீட்டான், தொ.க. | பரமக்குடி (செ.வ.). |
| 190 | சிவஞானம், ம. பொ. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்.) |
| 191 | சிவபெருமாள், க.ந. | ஆத்தூர். |
| 192 | சிவசாமி, மு.ச. | தூத்துக்குடி. |
| 193 | சிவசுப்பிரமணியன், எஸ். | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 194 | சோமசுந்தரம், ந. | வலங்கைமான் (செ.வ.) |
| 195 | சௌந்தரபாண்டியன், நா. | ராதாபுரம். |
| 196 | சௌந்தரபாண்டியன், பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 197 | சௌந்தரராஜ மூப்பனார், இரா. | பாபநாசம். |
| 198 | சுந்தர பாரதி, சௌடி எஸ். | அருப்புக்கோட்டை. |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 199 | சீனிவாசன், சு. | போடிநாயக்கனூர். |
| 200 | சுவாரெஸ், திருமதி ஏ. | நியமன உறுப்பினர். |
| 201 | சுப்பராஜா, ஏ.அ. | இராஜபாளையம். |
| 202 | சுப்பையா, ஆ.கு. | கோட்டூர் (செ.வ.) |
| 203 | சுப்பையா, கே. வி. (அமைச்சர்) | ஆலங்குடி. |
| 204 | சுப்பையா முதலியார், ஏ.ஆர். | கடையநல்லூர். |
| 205 | சுப்பிரமணியம், அ.லெ. | திருநெல்வேலி. |
| 206 | சுப்பிரமணிய கவுண்டர், எம். | தர்மபுரி. |
| 207 | சுப்பிரமணியம், இ.எம். | திருக்கோவிலூர். |
| 208 | சுரேந்திரன், எம். | மேட்டூர். |
| 209 | சுவாமிநாத ஒடையார், த.சி. | மன்னார்குடி. |
| 210 | சுவாமிநாதன், வை. | திருவெறும்பூர். |
| 211 | தம்பி நாயக்கர், பா. | வடமதுரை. |
| 212 | தங்கப்பன், டி. | இராமநாதபுரம். |
| 213 | தவமணி தேவர், வி. | சேடப்பட்டி. |
| 214 | தீர்த்தகிரி, ந. | ஹரூர் (செ.வ.) |
| 215 | தீர்த்தகிரி கவுண்டர், தி. | ஊத்தங்கரை. |
| 216 | திம்மராய கவுண்டர், தி. சி. | நாட்ராம்பள்ளி. |
| 217 | திப்பையா, டி.டி.எஸ். | மேட்டுப்பாளையம். |
| 218 | வடிவேலு, எஸ்.கே. | தொட்டியம். |
| 219 | வரதராஜன், என். | வேடசந்தூர். |
| 220 | வேதாசலம், மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை மாநகரம் |
| 221 | வீரமணி, சி. | சங்கரி (செ.வ.) |
| 222 | வீராசாமி, ந. | ஆர்க்காடு. |
| 223 | வேலப்பன், சி. வே. | கபிலமலை. |
| 224 | வெள்ளத்துரை, ஏ. | வாசுதேவநல்லூர். |
| 225 | வேலுசாமி, பி. | சிங்காநல்லூர். |
| 226 | வெங்கடாசல தேவர், பெ. | வேதாரண்யம். |
| 227 | வெங்கடசாமி, பி. | ஹோசூர். |
| 228 | வேழவேந்தன், கா. | கும்மிடிப்பூண்டி. |
| 229 | விஜய ரகுநாத தொண்டமான், ஆர். | புதுக்கோட்டை. |
| 230 | விஜயராஜ், தா. | திருவண்ணாமலை. |
| 231 | விநயகம், கே. | திருத்தணி. |
| 232 | விசுவநாதன், செ. கோ. | செங்கற்பட்டு. |
| 233 | வில்லியம், எம். | இள்ளியூர். |
| 234 | வெற்றிடம் | பெருந்துறை |
| 235 | வெற்றிடம் | சாத்தூர் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண். (1) | பெயர். (2) | |
|---|---|---|
| 2 | திரு. ப.உ. சண்முகம் | அமைச்சர் |
| 3 | திரு. எஸ். கோவிந்த சாமிநாதன் | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

**சனிக்கிழமை, 1969 மார்ச் 15.**

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-13 அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **புலவர் கா. கோவிந்தன்** *அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

## 1. நடைமுறைக் கேள்வி

### பேரவை குறித்த நேரத்தில் கூடாததும், அமைச்சர்கள் தாமதமாக பேரவைக்கு வருதலும்.

THIRU K. VINAYAKAM: Sir, I rise on a point of order. Yesterday, you have been kind enough to adjourn this House to Meet again at 9 O' clock this morning. But, it is almost 9-15 a.m., now. We have not constituted this House properly at the specified hour, namely 9 a.m., with you Mr. Speaker at the Chair and the House has met late by 15 minutes. May I know the unusual reason for such kind of delay in constituting the House at the specified hour. Whatever may be the causes—may be after all, they are beyond human control—will the Hon. Speaker assure us that this will not happen in future?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. விநாயகம் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்கு இப்படிப்பட்ட நிகழ்ச்சி இனிமேல் நடைபெறாது என்று உறுதி கூறுகிறேன்.*

**திரு. வி. கே. கோதண்டராமன்:** *சார், அதுமட்டுமல்ல. தினந்தோறும் சில அமைச்சர்களைத் தவிர மற்ற அமைச்சர்கள் காலம் கடந்து வரக் கூடிய நிலைமை இருக்கிறது. காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது. இந்த நிலைமை இருப்பதால், நீங்கள் அல்லவா அமைச்சர்களுக்குச் சொல்லவேண்டும். நீங்கள் தயங்கமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். முன்பெல்லாம் சட்டப்பேரவை கூடுவது 8½ மணிக்கு என்று இருந்தது. 8½ மணி என்று இருந்ததை, அவகாசம் வேண்டுமென்று சொல்லி 9 மணிக்கு என்று மாற்றி இருக்கிறோம். அப்படியிருந்தும் இப்படிச் செய்வது நல்லது அல்ல. தயவுசெய்து தாங்கள் இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இந்த நிகழ்ச்சியைப் பற்றி அமைச்சர்கள் உணர்வார்கள், சொல்லவேண்டிய அவசியம் இருக்காது. அப்படிப்பட்ட நிகழ்ச்சி இனிமேல் நடைபெறாமல் இருப்பதற்கு உறுதி அளித்திருக்கிறேன். இந்த உறுதியை ஏற்றுக்கொண்டு கனம் உறுப்பினர் அமைதி கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

# 2. வினாக்கள்—விடைகள்

## வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினா எண்கள் 303 முதல் 343 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### *Corporation Water Works*

* 344 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state whether it is a fact that the residents of Kilpauk, Madras, are frequently subjected to a serious nuisance from the smoke emitted by the Corporation Water Works?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : ஆம்.

**திரு. கே. வினாயகம்** : கீழ்ப்பாக்கத்திலுள்ள கார்ப்பொரேஷன் வாட்டர் வொர்க்ஸ் பம்பிங் ஸ்டேஷன் காலையிலிருந்து மாலைவரை வேலை செய்கிறது. அது இரவிலேயும் வேலை செய்கிற காரணத்தாலும் அதிலிருந்து வெளிவருகிற புகை அந்தப் பக்கத்திலே இருக்கிற மக்க ளுடைய வீடுகளிலே அடர்ந்து வந்து அதனால் அவர்களுடைய சாப்பாடுகூட கெடுவிடுகிறது என்று அமைச்சர் அவர்களுக்கும், கார்பொரேஷனுக்கும் மகஜர் வந்துள்ளதா? Is it not injurious to the public health of the local people? அப்படியென்றால் இதை நிவர்த்தி செய்வதற்கு என்ன முயற்சி செய்தார்கள் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : அந்தப் புகை வந்து உணவில் கலந்து கெட்டுவிடுவதாக எந்தவிதமான புகாரும் வந்ததாகக் குறிப்பில் இல்லை. 55 ஆண்டுகளாக அப்படித்தான் இருக் கிறது. 150 அடி உயரத்தில சிமினி கட்டப்பட்டிருக்கிறது. அதன் மூல மாகத்தான் புகை வெளியில் போகிறது. அது உயரத்தில் செல்வதனால் அந்தப் புகையினால் பாதகம் ஏற்படாது. இவ்வளவு காலமாக இயந்திரம் வழியாக புகை வெளிவந்துகொண்டிருக்கிறது. இனி மின்சாரம் மூலமாக புகை வெளிப்படுத்தப்படும். அதற்கான வேலைகள் நடைபெறு கின்றன. விரைவிலே வேலைகள் முடியும். இந்தப் புகையினால் எந்தவித பாதகமும் ஏற்படாதபடி செய்யப்படும்.

**திரு. எம். எஸ். மணி** : இதுபற்றி மாநகர சுகாதார அதிகாரியிடம் அரசாங்கம் விவரம் கேட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : அப்படி அவரிடத் தில் கேட்டிருப்பதாகத் தகவல் எனனிடத்தில் இல்லை.

**திரு. கே. வினாயகம்** : இப்படி கேள்விகள் நாங்கள் கொடுக்கும் போது சம்பந்தப்பட்ட இலாக்கா கார்ப்பொரேஷன் அதிகாரிகளைக் கேட்டு பதில் சொல்லப்படுகிறதா ? அல்லது கேட்காமலேயே பதில் சொல்லப் படுகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : சம்பந்தப்பட்ட இலாக்காவிலிருந்து பதில் வந்த பிறகுதான் தரபபடுகிறது. இரண்டும் கமிஷனரைக் கேட்டுத்தான் தரப்படுகிறது. புகார் வந்ததா என்று கேட்டதற்கு கிடையாது என்று சொன்னேன்.







### *Donation for Orphanages*

* 345 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government of India have allotted any funds out of the amount donated by an Indian Lady (Selvi Miya Doss) for orphanages in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின்** : ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அந்த அம்மையாரிடமிருந்து ஒரு தொகை அனாதை இல்லங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதென்று முன்பிருந்த அமைச்சர் கூறியிருக் கிறார்கள். தற்போது அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறுகிறார்கள். பழையகாலத்தில் ஒதுக்கப்பட்டு இப்பொழுது நின்றுவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : மிஸ் மியா தாஸ் மத்திய அரசாங்கத்தினிடம் கொடுத்துள்ள நன்கொடையிலிருந்து ஒதுக் திருக்கிறார்களா என்ற தகவல் இல்லை. நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கப் பட்டது என்று எனக்கு எழுதப்படவில்லை.

**திரு. சோ. அழகர்சாமி** : நமது தமிழகத்தில் இப்படிப்பட்ட அனாதை இல்லங்கள் எத்தனை இருக்கின்றன? அவற்றிலே அரசின் சார்பாக நடத் தப்படும் அனாதை இல்லங்கள் எத்தனை ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : எத்தனை அனாதை இல்லங்கள் என்று இப்பொழுது சரியான புள்ளிவிவரம் தர முடியாத நிலையில் நான் இருக்கிறேன் என்றாலும். அரசாங்கத்தின் சார்பில் இன்றைக்கு எந்தவித அனாதை இல்லங்களும் நடைபெறவில்லை. ஆனால், அரசாங்க மானியத்தைப் பெற்று இன்றைக்கு அந்த இல்லங்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : இம்மாதிரியான அனாதைச்சாலைகளை அரசாங்கம் நடத்துவதாக இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, தனியார்களாலும், மிஷன்களாலும் நடத்தப்படும் அனாதை இல்லங்களுக்கு அரசாங்கம் மானியம் கொடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : நான் இப்பொழுது தான் பதில் சொன்னேன். தனியார் நடத்துகின்ற இல்லங்களுக்கு மானியத் தொகைகள் கொடுக்கப்படுகின்றன. அந்தத் தொகையைக்கூட, இப்பொழுது ஒருவருக்கு 10 ரூபாய் என்று இருந்ததை 12 ரூபாயாகக் கூட அதிகரித்து இருக்கிறோம்.

## திருமயத்தில் வட்டமைய மருத்துவமனை

* 346 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள திருமயத்தில் பல படுக்கை வசதிகளைக் கொண்ட வட்டமைய மருத்துவமனை (Taluk Headquarters Hospital) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) ஆம்.

(இ) தேவையான நிலத்தை ஆர்ஜிதம் செய்து மருத்துவத் துறைக்கு மாற்றப்பட்டபின் திருமயம் மருந்தகத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட வட்டமைய மருத்துவமனையாக்க செயற்குறிப்புக்கு ஒப்புதல் பெற்று, நிதி நிலையைப் பொருத்து, வேலை துவங்கப்படும்.

**புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயத்தில் இந்த வட்டமைய மருத்துவமனை இன்னும் எவ்வளவு காலத்திற்குள் அங்கு அமைக்கப்படலாம் என்பதை அறிய விரும்புகிறேன். எவ்வளவு காலம் ஆகும் என்பதை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** காலத்தைப் பற்றி திட்டவட்டமாகச் சொல்ல முடியாது என்றாலும், நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகிறது. விரைவிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். ஆனால், இப்பொழுது திருமயத்திற்கு பத்து மைல் சுற்றுவட்டாரத்தில் பல மருத்துவ நிலையங்கள் இருப்பதால், நோயாளிகள் அவசரமாகச் செல்லவேண்டிய நிர்ப்பந்தமும், விரைவிலே துவங்கவேண்டும் என்ற நிர்ப்பந்தமும் இருக்கவில்லை. இருந்தாலும், செயற்குறிப்பில் இருப்பதன் காரணமாக, விரைவிலே அதை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் எல்லா விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளும்.

**திரு. நா. காசிராமன்:** தலைவர் அவர்களே, திருமயத்தில் ஆஸ்பத்திரி ஏற்படுத்துவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆஸ்பத்திரி கட்டுவதற்கு என்ன செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்க முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மதிப்பீட்டுச் செலவுத் தொகை இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. 3 ஏக்கரா 69 செண்ட் நிலத்தை ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் மதிப்பீடு வரையறுக்கப்படவில்லை.

**திரு. ஆர். கருப்பையா:** திருச்சி மாவட்டம், அரியலூரிலுள்ள மருத்துவமனையில் எக்ஸ்-ரே பிரிவு கட்டி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், இன்னும் அந்தப் பிரிவு வேலை செய்யத் தொடங்கவில்லை. இதை அரசு உடனடியாகக் கவனித்து ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தனியாகக் கேள்வி போடவும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விகள் 347, 348, 349 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

## சென்னையில் கூடிய முதலமைச்சர்கள் மாநாடு

*350 வினா—திரு வி. கே. கோதண்டராமன், திரு சு. துரைசாமி, திரு என். எஸ். வி. சித்தன் } மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 11-ந் தேதி முதல் சென்னையில் கூடிய முதல் அமைச்சர்களின் மாநாட்டில் என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இந்திய உணவு, வேளாண்மை, சமுதாய நல வளர்ச்சி, கூட்டுறவு அமைச்சகம் இந்த மாநாட்டைக் கூட்டியது. இம் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை குறித்த விவர அறிக்கை * ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், இந்த முதலமைச்சர்களின் மாநாட்டை இந்திய உணவு, வேளாண்மை, சமுதாய நல வளர்ச்சி, கூட்டுறவு அமைச்சகம் கூட்டியதாக இந்தக் குறிப்பில் இருக்கிறது. ஒரு வளர்ச்சி வட்டாரத்தில் அரிசனங்கள், பழங்குடி மக்கள் இவர்களின் தொகைக்கு தலைக்கு ரூ. 4 வீதமும், பிற வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு தலைக்கு ரூ. 2 வீதமும் நிதியளிக்க வகை செய்யும் முறையை வகுக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது ஆண்டொன்றுக்கா? அல்லது மாதமொன்றுக்கா? இப்படிக் கொடுப்பதைக்கூட, பிற வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கக்கூடிய அந்த வகைக்கே பயன்படுத்துவதாகச் சொல்லப்படுகிறதே, அதை நல்ல முறையில் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு நிலைமை உள்ளதா என்பதை விளக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தற்போதுள்ள விதிமுறைகளின் படி, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்படுகிற நிதி அவர்களுக்காகத் தான் செலவழிக்கப்படுகிறது. ஆனால், இங்கு குறிப்பிட்டிருக்கிற தாழ்த்தப்பட்டவர்களுக்கு தலைக்கு ரூ. 4 வீதமும், பிற வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு தலைக்கு ரூ. 2 வீதமும் கொடுக்கவேண்டும் என்று, அகில இந்திய ரீதியில், அதற்கு ஒரு முடிவு எடுக்கவேண்டும் என்பதற்காக மத்திய அரசைக் கேட்டுக்கொள்வதற்காக வகுக்கப்பட்ட தீர்மானங்களில் ஒன்றாகும். அம்மாநாட்டிலே தெரிவிக்கப்பட்ட கருத்துக்களிலே இதை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய அரசிடமிருந்து நமக்கு எந்த விதமான தகவலும் வரவில்லை. ஆண்டுக்கு மொத்த மக்கள் தொகை அடிப்படையில் இந்தத் தொகை ஒதுக்கவேண்டும் என்பது கருத்தாகும்.

**திரு. சு. துரைசாமி:** தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்படுகிற தொகைகளில் வீடு கட்டுவதற்காக நில ஆர்ஜிதம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட தொகை முழுவதுமாகச் செலவழிக்கப்படாமல் இருப்பதாக அறிய வருகிறேன். அப்படியானால், மத்திய அரசு மாநில அரசுக்கு ஏதாவது பணம் தருகிறார்களா ?

---

* 95-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டித்தர நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. அதற்கு வேண்டிய தொகையை மத்திய அரசும் தருகிறது; மாநில அரசும் தருகிறது; ஆனால், நிலச் சொந்தக்காரர்கள் பலர், அது குறித்து வழக்குமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்திருக்கிற காரணத்தால், அதிலே சில தாமதங்கள் ஏற்படுகின்றன. எனவே, ஒரு துறையிலிருந்து தான் நில ஆர்ஜிதத்திற்குப் பணம் தரப்படுகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இந்தப் பத்து தீர்மானங்களில் ஆறாவது தீர்மானமாக "குறிப்பிட்ட ஒரு பகுதியில் போதுமான வேலையில்லாதிருக்கும் பணியாளர்கள் வேறு இடங்களில் வேலைக்கு அனுப்பப்படலாம்" என்று இருக்கிறது. இதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறதா? இந்த ஆண்டு அது செயல்படுத்தப்படுமா? இல்லையானால், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், வேளாண்மை அபிவிருத்தி பற்றிப் பேசப்படுகிற நேரத்தில், கேரள மாநிலத்தில் கடலில் வீணாகும் நீரை தமிழகத்திற்குக் கொடுப்பது பற்றி பேச்சுவார்த்தை நடைபெற்றதா? ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட முடிவு ஏதும் உண்டா?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, எந்த எந்த மாநில முதலமைச்சர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டார்கள்? ஊட்டச் சத்துணவு கிராம உழைப்புச் சக்தி ஆகியவற்றின் சிறப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசு தொடர்ந்து மாநில அரசுக்கு உதவி தரவேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள் கிராம உழைப்புச் சக்தித் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்காமல் இருக்கிறார்கள். இதைப் பற்றி நம்முடைய மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி, கிராம உழைப்புச் சக்தித் திட்டத்திற்கு நிதி ஒதுக்கக் கோருமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இந்தியாவில் இருக்கும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்கள் இதிலே கலந்துகொண்டார்கள். எந்த எந்த மாநில முதலமைச்சர்கள் கலந்துகொண்டார்கள் என்ற விவரம் இல்லை இதிலே மனித உழைப்புச் சக்தித் திட்டத்தையெல்லாம் நான்காவது திட்டக் காலத்தில் நாங்கள் கொடுக்கிற மொத்த நிதியிலிருந்து நீங்கள் பங்கிட்டுக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் தான், அதை மாநிலத் திட்டமாக மாற்றியிருக்கிறார்கள். இருந்தாலும் மத்திய அரசு தொடர்ந்து உதவி அளிக்க வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்தி அவர்களைக் கேட்டிருக்கிறது. ஆனால், அதற்கு மத்திய அரசு ஒப்புக்கொள்ளவில்லை.

* **திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, இந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட பொதுவான முடிவில் நம்முடைய மாநிலத்தில் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை மேலும் சிறப்பாக்க இன்றைக்கு இருக்கக்கூடிய பஞ்சாயத்து ஒன்றியங்களின் வேலையை முறைப்படுத்துவதற்கு அரசு ஏதாவது செயற்குறிப்பு தயாரித்திருக்கிறதா ? அதுபற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பொதுவாகவே, அப்படிக் கூட்டப்பட்ட மாநாட்டிலே கலந்துகொண்ட பல்வேறு மாநில அமைச்சர்களும், நம்முடைய தமிழ்நாட்டில் சமுதாய வளர்ச்சித் திட்டம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.



அம்மாநாட்டில் எடுக்கப்பட்டிருக்கக்கூடிய சிலபல முடிவுகள் அகில இந்திய ரீதியில் எடுக்கப்பட்டனவே தவிர, இவற்றில் சிலவற்றை நாங்கள் ஏற்கனவே அமல்படுத்திக்கொண்டு வருகிறோம். இதுபோல், நம்முடைய சமுதாய வளர்ச்சித் திட்டங்களையும், ஊராட்சி ஒன்றியங்களையும் நல்ல முறையில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாம் ஏற்கனவே மேற்கொண்டு செயலாற்றி வருகிறோம்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர்கள் மாநாட்டில் மிகவும் சிறப்பு வாய்ந்த நல்ல தீர்மானங்களை நிறைவேற்றியிருப்பதாகவும், தமிழக அரசு அவற்றிலே ஒரு சில தீர்மானங்களை ஏற்றுக்கொள்வதாகவும் கூறினார்கள். நம்முடைய அரசு ஏற்கனவே சில மாற்றங்களை இந்த சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் செய்வதாகக் கருத்துக் கொண்டிருந்ததே, அது என்ன நிலையில் இருக்கிறது ? மேலும், அதில் நல்ல கொள்கைகளை எடுத்துக் கையாண்டு மக்களுக்கு நல்லதொரு சேவை செய்ய இந்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அவ்வப்போது தேவையான முடிவுகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதல் அமைச்சர்கள் மாநாட்டில், இந்த அரிசனங்களுக்கு ஏதோ சில உதவிகளும், சில நன்மைகளும் செய்து அவர்களை முன்னேற்றிக் கொண்டுவரவேண்டும் என்பதற்காக சில தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். இப்படியெல்லாம் செய்வதைவிட, அரிசனங்கள் என்று இருக்கக்கூடிய இந்தப் பிற்பட்ட சமுதாயத்தை அடிப்படையிலேயே ஒழிப்பதற்கு உறுதியான திட்டம் இடப்பட்டதா? ஜாதிகளில் தாழ்ந்த ஜாதி என்று இருப்பதை ஒழித்து, எல்லோரும் சம ஜாதியாக இருப்பதற்கு ஏதாவது யோசனை பரிசீலிக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மேலும் அதிகமான நிதிகளை ஒதுக்கி அவர்களுக்கு வாழ்க்கைக்குரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து, மற்றவர்களோடு சரிசமமாக இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், தானே ஜாதி ஒழியும். சட்டபூர்வமான முறையில் நாம் இருபதாண்டுக் காலம் நடவடிக்கை எடுத்தும், அது அவ்வளவு தூரம் வெற்றியடையவில்லை. அவர்களுடைய சமுதாய நிலையையும் பொருளாதார நிலையையும் உயர்த்தவேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோது அங்கே வலியுறுத்திப் பேசப்பட்டது.

**திரு. கே. என். குமாரசாமி :** முதல் அமைச்சர்கள் மகாநாட்டில் முற்ப.
மத்திய அரசாங்கத்தினிடம் குவிந்து கிடக்கின்ற அதிகாரங்களை மாநிலங் 9–3
களுக்குப் பகிர்ந்து அளிப்பது சம்பந்தமாக மாநிலங்களுக்கு ஏதாவது கூடுதல் அதிகாரம் வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** குறிப்பிட்ட சில பிரச்னைகளின் மேலே கூட்டப்பட்ட மாநாடாகும் இது. ஆகவே, அதிலே இப்படிப்பட்ட பிரச்னைகளைப் பற்றி விவாதித்திருப்பதற்கு நியாயமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கேள்வி. கேள்வி எண் 351.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கேள்வி போட்ட உறுப்பினருக்கு இரண்டு, மூன்று கேள்விகளாவது தயவுசெய்து அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஸப்ஜெக்ட் ஒன்றும் அவ்வளவு முக்கியமானதாகத் தெரியவில்லை. எனினும் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் வினாவைக் கேட்கலாம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, தலைக்கு ரூ. 4, ரூ. 2 என்ற அடிப்படையில் நிதி கொடுக்கவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எந்த ஆண்டு முதல் இப்படி கொடுக்கப்பட்டு வருகிறது ? ஆண்டுக்கு ஆண்டு சகலவிதமான பொருள்களின் விலைவாசிகளும உயர்ந்துகொண்டே போகிறது என்ற அடிப்படையிலே இந்த ஆண்டு அதிகப்படியாகக் கொடுக்க வேண்டும் என்பதுபற்றி கனம் அமைச்சர் அவர்கள் கேட்டாரா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாநில முதல் அமைச்சர்கள், சமுதாய வளர்ச்சி அமைச்சர்கள மாநாடு கூட்டப்பட்ட நேரத்தில் பழங்குடி மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இவர்கள்பால் தனியாக கவனம் செலுத்தவேண்டும் என்ற வகையில் இதுவரையில் நடைமுறையில இருந்துவருகிற திட்டப்படி அவர்களுக்கு என்று தலைக்கு ரூ. 4, ரூ. 2 தருவதற்கு திட்டம் ஏற்படுத்தப்பட்டு, மத்திய அரசு உதவி அளிக்குமானால், அதைக் கொண்டு பல காரியங்களைச் செய்ய முடியும் என்று ஒரு தீர்மானம் வலியுறுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிற அதிகாரம் அங்கே இல்லை. மத்திய அரசில் இருக்கக்கூடிய நிதிக்குழுவும், மத்திய அரசின் நிதி அமைச்சரும், மத்திய அமைச்சகமும் செய்ய வேண்டிய முடிவு இது. அவர்கள் இந்த விஷயத்தில் எந்தவிதமான முடிவையும் நமக்கு இதுவரையில் அறிவிக்கவில்லை.

**திரு. சு. துரைசாமி :** இந்திய உணவு, வேளாண்மை, சமுதாய நல வளர்ச்சி கூட்டுறவு, அமைச்சகம் இந்த மாநாட்டைக் கூட்டியது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறை சம்பந்தமாகவும் இந்த மாநாட்டில் விவாதம் நடந்ததாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. கூட்டுறவுத்துறை சம்பந்தமாக இந்த மாநாட்டில் ஏதாகிலும் முடிவு எடுக்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** முடிவு எடுக்கப்பட்டதா, இல்லையா என்பதை அறிந்துகொள்வதற்கு கூட்டுறவு அமைச்சகத்திற்கு தனியாகக் கேள்வி போட்டு விவரங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

## *Chairmen of Panchayat Unions*

* 351 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the number of persons belonging to Scheduled Caste elected for the Panchayat Unions as Chairmen?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அரிசன வகுப்பைச் சேர்ந்த மூவர் ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** 375 சேர்மன்களில் மூன்று பேர்கள்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். அரிசனங்கள் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் பஞ்சாயத்து யூனியன்களில் அரிசன மக்களுக்காக திட்டம்போட்டு பல வேலைகளைத் துரிதமாகச் செய்யமுடியும். ஆகவே, இந்த விஷயத்தில் தீவிரமாக கவனம் செலுத்தி, ஏதாவது நடவடிக்கை எடுத்து, இந்த 375 இடங்களில் அரிசனங்களுக்கென்றே தனிப்பட்டு குறைந்தது 45, 50 இடங்களையாவது ஒதுக்கிவைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் தீட்டுமா ?





**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இந்த ஊராட்சி ஒன்றியங்களின் அமைப்பு முறை ஒரு தனிப்பட்ட நிலையிலே இருப்பதாகும். இதற்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் ஊராட்சி மன்றத் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஊராட்சி மன்றத் தலைவர்கள ஊராட்சி மன்ற உறுப்பினர்களால தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஊர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் கிராமத்தில் இருக்கக்கூடிய வார்டுகளைப் பிரிக்கும்பொழுது தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று சில இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அப்பொழுது அங்கே ஊராட்சி மன்றத் தலைவர்கள வந்து அவர்கள் பெரும்பாலராகக் கூடுகிற நேரத்தில்தான் இப்படிப்பட்ட நிலை ஏற்பட முடியும். ஆக, இதிலே பார்க்கும்பொழுது, ஒட்டுமொத்தமாக நாம் சட்டத்தைத் திருத்தி, புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தினாலொழிய, இதற்கு வேறு வழியில்லை. அது எவ்வளவுதூரம் ஜனநாயகத்தில் சாத்தியமாகும் என்பது தான் சட்டமன்றத்தில் முடிவு எடுக்கவேண்டிய ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** அப்படி புரட்சிகரமாக சட்டத்தை மாற்றுவதற்குக் கொஞ்சம் இயலாமல போனாலுங்கூட, நேர்முகமாக, நேராக தேர்ந்தெடுக்கப்பட்டால் ஒருவேளை அரிசனங்கள் வரலாம் பஞ்சாயத்து யூனியன் தலைவராக. ஆகவே, அதற்காகிலும வழி செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி:** இந்த மானியக்கோரிக்கையின் மீது விவாதம் நடந்தபொழுது இதே கேள்வியை நமது பெருமதிப்பிற்குரிய திரு. விநாயகம் அவர்கள் எழுப்பி, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அதற்குத் தக்க பதிலையும் தந்திருக்கிறார்கள்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** இப்பொழுது மிகவும் குறைந்த எண்ணிக்கையில் மூன்று பேர்கள் தான் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் தலைவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. இன்றைக்கு தொகுதியை மாற்றுகிறபொழுது ரிசர்வ் தொகுதி என்று நாம் சில தொகுதிகளை ஒதுக்கியிருக்கிறோம். ஆகவே, சில பஞ்சாயத்து யூனியன்களையும அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான தலைவர்களாக இருக்கவேண்டும் என்ற வகையில் ரிசர்வ் யூனியனாக ஆக்குகின்ற திட்டம் அரசாங்கத்திற்கு உண்டா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** சட்டமன்றத் தொகுதி ஒதுக்கப்படுகின்ற நிலை வேறு. ஊராட்சி ஒன்றியங்களில் அப்படி ரிசர்வ் தொகுதி என்று ஒதுக்குகிறோம் என்றால், ரிசர்வ் தொகுதி அல்லாதவர்கள் பெரும்பாலானவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாவிட்டால் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தங்களுடைய காரியங்களைச் செய்ய முடியாது. தாழ்த்தப்பட்ட மக்கள் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்படுகிற நேரத்தில், மற்றவர்கள் ஒத்துழைப்பு கொடுத்து தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்யவேண்டும். அப்படியில்லாமல் தீர்மானங்கள் தோற்கடிக்கப்படுகிற நிலை ஏற்பட்டால், நடைமுறையில் இயங்க முடியாத நிலை ஏற்பட்டு, அந்த ஊராட்சி ஒன்றியங்களை கலைக்கவேண்டிய சூழ்நிலை வந்துவிடும. ஆகவே, இது ஒத்துழைப்பு அடிப்படையில் ஏற்படவேண்டுமே தவிர, ரிசர்வ் என்று ஒதுக்கும் நிலை நடைமுறையில் சரியாக இருக்கும் என்று எனக்குப் படவில்லை.

**திரு. சி. வீரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துகளிலே அரிசன மக்கள் தொகைக்கு ஏற்ப ஊராட்சித் தலைவர்கள் இல்லாத காரணத்தினால், அவர்கள் ஒன்றியத் தலைவர்களாக வருகிற வாய்ப்பு குறைவாக உள்ளது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இப்படி அவர்களுடைய குறைகளையெல்லாம் எடுத்துச்சொல்வதற்காகத் தான் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வரமுடியாவிட்டாலும், நியமன உறுப்பினர்கள் என்று சில தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களை அங்கம் வகிக்கச் செய்கிறோம். அவர்கள் மூலம் இருக்கிற

குறைகளை எடுத்துச் சொல்லலாம். அப்படி எடுத்துச் சொல்கிறபொழுது தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்துவதற்கு சில திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அவைகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காக ஊராட்சி ஒன்றியங்களிடம் கொடுக்கப்படுகின்றன. அவைகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் குறைகள் இருந்தால், அவ்வப்பொழுது தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

### வேடம்பூரில் வெட்டாற்றின் குறுக்கே பாலம்

*352. வினு—திரு கொ. இர. ஞானசம்பந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுக்கா வலங்கிமான் கூட்டு மன்றத்தின் பார்வையிலுள்ள வேடம்பூரில் வெட்டாற்றின்மீது பஸ் போகும் பாலம் கட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

(இ) இந்த ஆண்டில் வேலை ஆரம்பிககப்படுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** விவரமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது, அதற்குத தொழில் நுட்ப ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட பின்னர் அவ்வேலை தொடங்கப்பெறும்.

### அட்டுபாயில், போர்த்தி கிராமவாசிகளை வேறு இடத்துக்கு குடியேற்றல்.

*353. வினு—திரு. கே. போஜன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

குந்தா மின்சாரத் திட்டத்தினுல் பாதிக்கப்பட்ட, அட்டுபாயில், போர்த்தி என்னும் கிராமங்களின் மக்களை வேற்றிடத்திற்கு மாற்றி, புனர் வாழ்வளிக்கும் (rehabilitation) திட்டத்தை உடனடியாக நிறைவேற்றும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:** அட்டுபாயில் கிராமத்தில் வசிப்பவர்களை வேறிடங்களில் குடியமர்த்துவதைப் பொறுத்தவரையில், புதிய கிராமத்தில் இடம் பெயர்ந்தவர்களுக்கு, வசதிகள் செய்து கொடுப்பதற்கான செலவைத் தமிழ் நாட்டு மின்சார வாரியமும் அரசாங்கமும் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கவேண்டும் என்று 1966 செப்டம்பரில் அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. வருவாய்த்துறை வாரியம் மூலமாக 1968 பிப்ரவரியில் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவசியமான செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்புகளை வருவாய்த்துறை வாரியம் பரிந்துரைத்துள்ளது. மின்சார வாரியத்தின் குறிப்புரைகள் வந்து சேர்ந்துள்ளன. செயற்குறிப்புகளை அரசு ஆலோசித்து வருகிறது.

போர்த்தி, போர்த்தி ஹடா சிற்றூர்களைப் பொறுத்தவரையில், கிராம மக்களை வேற்றிடங்களில் குடியமர்த்துவதற்கென நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியுள்ள விரிவான செயற்குறிப்புகளை மாநில மின்சார வாரியம் ஆலோசித்து வருகிறது.

**திரு. ஜே. பெள்ளி கெளடர் :** தலைவர் அவர்களே, இந்த கிராமங்களின் மக்கள் அரசுக்கு பல வேண்டுகோள் விடுத்து, 12 ஆண்டு காலம் உருண்டோடிவிட்ட காரணத்தினுல், தயவு செய்து அரசு நடவடிக்கை மேற்கொள்ள முன்வருமா?



**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** எல்லாவிதமான அறிக்கைகளும் அரசாங்கத்திற்கு வருகின்றன. அவை பரிசீலனையில் இருக்கின்றன. கூடிய விரைவில் முடிவு எடுக்கப்படும்.

**திரு. நா. காசிராமன் :** அட்டுபாயில், போர்த்தி ஹடா, இந்த கிராமங்களில் உள்ளவர்களை வேற்றிடங்களுக்குக் குடியமர்த்துவதற்கு என்ன முக்கியமான காரணம்? அந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவு எவ்வளவு என்பதைக் கூறமுடியுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** இந்த இரண்டு கிராமங்களில் இருந்தவர்களை வேற்றிடங்களுக்கு மாற்றுவதற்கு ஏறத்தாழ ரூ. 4,41,855 செலவு ஆகும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்த இடங்களில் தண்ணீர் பிடிப்பு இருப்பதால், மற்ற இடங்கள் பொதுவாக இடைஞ்சலாக இருப்பதால், அரசாங்கம் ஆலோசனை செய்து அவர்களை வேற்றிடங்களுக்கு மாற்றுவதற்கான திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது. அதற்கான செயற் குறிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. இன்னும் செயற்குறிப்புகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

**திரு. இல. பலராமன் :** இந்த கிராமங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு அரசாங்கம் உதவியாக எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** விவரம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போடவேண்டும். மொத்தமான தொகைதான் என்னிடம் இருக்கிறதே தவிர, தனிப்பட்ட கணக்கு இல்லை. தனிக்கேள்வி போட்டால், தெரிவிக்கப்படும்.

### *Acknowledgment of complaints from public*

* 304 *Q*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any press note was issued during the first week of December 1967 on the question of acknowledgment of complaints from the public; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி:**

(அ) ஆம்.

(இ) வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு *பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, அவர்களுடைய முறைகளைப் பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

* 98-ம் பக்கத்தில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நடவடிக்கைகளைத்தான் இங்கே வைக்கப்பட்டுள்ள குறிப்பில் எடுத்துக்காட்டியிருக்கிறது.

Dr. H. V. HANDE : Sir, will the Ministry be pleased to state whether at least important demi-official letters written by M.L.As. to Ministers will be answered by Ministers themselves as suggested by the Administrative Reforms Commission previously presided over by our distinguished Shri Moraji Desai? The Commission has said that Ministers should invariably answer important demi-official letters written by M.L.As. to them. Will the Ministry give respect to those sentiments of the Administrative Reforms Commission and answer all important demi-official letters written by M.L.As?

I will explain further. Supposing an M.L.A. writes a letter to a Minister about miscarriage of justice. At a certain level, at the level of Superintendent or Assistant Secretary, he gets a laconic reply from the concerned department. Instead of that, it would be better if the Minister concerned writes a reply to the concerned M.L.A. Then the M.L.A. will feel satisfied. Will the Ministry give effect to that?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதைப் பற்றி, எம். எல். ஏ.க்கள் எழுதுகின்ற கடிதங்களை ஆராய்ந்து அதனுடைய நிலைகளுக்கு ஏற்ப அவர்களுக்குப் பதில்கள் எழுத வேண்டும் என்று செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. விநாயகம்:** சார், எம். எல். ஏ.க்கள் எழுதினால்தான் பதில் சொல்லவேண்டும் என்கிற நியதி இருக்கிறதா அல்லது பொதுவாகவே பொது மக்கள் ஆங்காங்கே இருக்கும் அநியாயத்தைக் குறிப்பிட்டு அமைச்சருக்கு எழுதினால், அதற்கும், 'உங்கள் கடிதம் வந்து சேர்ந்தது, கூடிய சீக்கிரத்தில் நியாயம் பிறக்கும்' என்று அவ்வாறு ஒரு 'அக்னாலெட்ஜ்மெண்ட்' எழுதுவதற்கு இந்த அமைச்சரவை முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்த அந்தக் கடிதத்தில் இருக்கும் தன்மைகளைப் பொறுத்து, விஷயங்களைப் பொறுத்து எழுதப்படும்.

Thiru T. MARTIN : Many people may not have the time to present a written complaint to the Minister. Therefore will the Ministry allot one day in a month specifically for hearing complaints orally from the public?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எப்பொழுது இவ்வளவு நாட்கள் இருக்கும்போதே, பொதுமக்களைச் சந்திக்க, அவர்கள் கோரிக்கைகளை வாங்குவதற்கு காலம் கொடுப்பதில், வேறு காரியங்களைக் கவனிக்க முடியாமல், மந்திரிகள் கஷ்டப்படுகிறார்கள். ஒரு நாள் ஒதுக்குவது என்றால், மந்திரிகள் சிக்கிக் கொண்டால் இன்னும் ஆபத்தாகப் போய்விடும்.





## ஆபாச புத்தகங்கள்.

* 305 வினா.—திரு வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மைசூர் ராஜ்ய எல்லையில் அச்சிடப்பட்டு 1954-ம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள 'நியூ ஜாலி கிளப்', என்ற ஆபாச புத்தகம் இம்மாநிலத்தில் விற்பனை செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதைத் தடுக்க எடுத்த அல்லது எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** (அ) இல்லை.

(இ) வினா எழாது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், இந்த ஆபாசப் புத்தகங்கள் விற்பனைக்கு வந்து கடைகளில் சாதாரணமாக இருக்கும் பத்திரிகைகளோடு கார்ட்டூன் புத்தகங்களும் இருக்கின்றன. ஆகவே, தயவு செய்து இந்தமாதிரியான புத்தகங்களைத் தடுக்க விசேஷ நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** உறுப்பினர் கேட்டிருப்பது, 'நியூ ஜாலி கிளப், புத்தகம் பற்றிக் கேட்டார்கள், பதில் கொடுத்தேன். விற்பனைக்கு வந்து, அவர்கள் வாங்கிய புத்தகங்களைப் பற்றி எனக்குத் தெரியாது.

## *' Ombudsman '.*

* 306. Q.—Thiru A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to introduce the system of ' Ombudsman ' in our State?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இல்லை.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரிடமிருந்து, இது சம்பந்தமாக ஏதேனும் குறிப்பு மாநில அரசுக்கு வந்துள்ளதா? அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? எழுதிய பதில் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மக்கள் நலக்காப்பாளர் என்ற குறிப்பு வரவில்லை.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** தலைவர் அவர்களே, பெரிய பெரிய அதிகாரிகள், லஞ்ச ஊழல் போன்ற குற்றங்கள் செய்ததாக புகார் வந்தால், அவற்றை விசாரிக்க ஒரு 'ஆம்புட்ஸ்மேன்' இருந்தால்தான், நலமாக இருக்கும் என்பதை சர்க்கார் அறிவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இப்பொழுதே அவற்றையெல்லாம் கண்டுபிடிக்க ஏற்பாடுகள் இருந்து வருகின்றன.

**திரு. கே. விநாயகம்:** சார், ஆம்புட்ஸ்மன் ஸிஸ்டம் இங்லாந்தில் தான் முதன் முதலாக அமுலுக்கு வந்து நல்ல பயன் தந்திருக்கிறது. நாங்கள் அது பற்றிப் படித்திருக்கிறோம். அது நல்ல ஸிஸ்டம் (குரல்: ஸ்வீடனில்) ஆமாம், ஸ்வீடனில் இருந்து வந்தது. அது நல்ல ஒரு ஸிஸ்டமாக இருந்தால், அதைப் பரிசீலித்து, நம் நாட்டிற்கு

உகந்தவகையில் அதை அமைத்துக்கொள்ள, அரசு நல்ல அம்சங்களை ஏற்றுக்கொண்டு—வெளிநாட்டிலிருந்து வருகிறது. ஆகவே, அந்நியப் பொருள் என்று உதாசீனம் செய்யாமல்—செயல்படக்கூடாதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நமக்கு ஏற்ற வகையில் காரியங்களைச் செய்ய ஏற்பாடுகள் செய்துகொள்ளலாம். அதைப் பின்பற்ற வேண்டிய நிலை இல்லை.

**வாரத்தில் ஐந்து நாட்கள் வேலை.**

* 307 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாரத்திற்கு 5 நாள் வேலை செய்ய விருப்பம் தெரிவித்து செக்ரடிரியேட்டில் உள்ள N. G. G. O.-க்கள் கருத்து தெரிவித்துள்ளனரா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசின் கொள்கை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) சிலர் தெரிவித்துள்ளனர்.

(இ) இதுபற்றிய செயற்குறிப்பு ஆலோசனையிலுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசிதழ் பதவில்லாத உத்தியோகஸ்தர்கள் உற்சாகமாக வேலை செய்யும் பொருட்டு, இந்தத் திட்டத்தைச் சீக்கிரம் அமல் நடத்த முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** திறமையாக வேலை செய்ய, இது உற்சாகப்படுத்துவதாக, போதுமான அளவிற்கு இதைச் செய்யமுடியுமா என்பதை யோசிக்க வேண்டும். இப்பொழுதே கோப்புகளெல்லாம் விரைவாகச் செல்ல வேண்டுமென்ற அளவிற்கு எண்ணுவதால், பொது மக்கள் குறைபாடுகள் அதிகமாக இருப்பதால், இப்படி இரண்டு நாட்கள் விடுமுறை விட்டால், அரசின் காரியங்கள் நல்ல முறையில் நடக்குமா என்பதை யோசிக்க வேண்டும். அதைத்தான் யோசித்துக் கொண்டு இருக்கிறது என்று குறிப்பிட்டேன்.

THIRU T. MARTIN: In the Secretariat, many women are working. They leave their babies in the homes and come to the office and while working in the office they have to think of their babies in homes. In the circumstances may I request the Hon. Minister to state whether the Government will come forward to construct a creche here so that the babies may be kept here itself?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இப்பொழுது அதைப்பற்றி யோசிப்பதற்கில்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அரசாங்க ஊழியர்கள் அலுவலகங்களுக்கு காலை 9 மணிக்கே வரத்தயார் என்று அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்களா? குறிப்பாக சென்னை தவிர மற்ற இடங்களில் காலை 9 மணிக்கு ஆரம்பித்தால் அவர்களாகவே அப்படி காலையில் வர முன் வந்தால், அதை அரசு ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதைப்பற்றி ஏற்கனவே கூறியது போல, அப்படி அவர்கள் முன்வருகிறார்கள் என்றால், அதைப்பற்றி சிந்தித்துச் செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**திரு. கே. என். குமாரசாமி:** மூளை உழைப்பு உள்ளவர்களுக்கு, ஐந்து நாட்கள் என்று அரசு ஆலோசிக்கும்போது, உடல் உழைப்புத் தொழிலில் உள்ளவர்கள் பற்றியும் ஆலோசிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதை ஆலோசிப்பதை அடுத்துத் தான் இதை ஆலோசிக்க வேண்டும்.

*Boundary stones*

* 338 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Finance be pleased to state:

(a) whether there is any proposal to paint the boundary stones in the fields so as to know the correct boundaries to the ryots; and

(b) if so, when it will be implemented?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY: Are the Government aware that murders as well as civil disputes of landholders take place due to the displacement of boundary stones? Will the Government take efforts to check up these stones and paint them regularly to show the boundaries clearly and correctly to the landholders?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: We are aware that certain disputes arise. A clear cut programme should be drawn up for the purpose and strictly adhered to.

THIRU K. VINAYAKAM: Apart from painting these boundary stones with some colour, are the Government aware of the fact that many landholders are complaining that their lands are not properly demarcated and that the boundary stones, which have been there for ages long, are missing resulting in confusion? Will the Government take steps to re-survey the entire lands in the State and settle them properly with these boundary stones?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: I do not agree with the hon. Member, totally. There may be one or two cases, stray cases. It does not necessitate re-survey in that direction. A clear-cut programme should be drawn and it must be strictly adhered to.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எல்லைக் கற்கள் வயல்களிலே இருக்கும்போது அவற்றை நகர்த்துவதற்குச் சுலபமாக இருக்கிறது. இதனால் சிலர் எல்லைக் கற்களை நகர்த்தி வைத்து விடுகின்றனர். ஆகவே, இப்படிச் செய்வதை கண்டுபிடிக்கப்பட்ட பிறகு எல்லைக் கற்களை நகர்த்தியவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்வதுபற்றி அரசாங்கம் யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, மெயின்ட்டனன்ஸ் ஃபீல்ட் சர்வேயர்கள் 15 சதவீத அளவை, எல்லைக் கற்கள் சரியாக, நேராக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டுமென்றும், 10 சதவீத அளவை கணக்கப்பிள்ளை மேற்பார்வையிட வேண்டும் என்றும் வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை மேலும் மேலும் அதிகரித்து இந்தத் துறை சீராக இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இருப்பதாக இல்லையென்று நான் மூலப் பதிலிலேயே சொன்னேன்.

### மின் வசதியற்ற கோட்டாட்சி அலுவலகங்கள்

*** 339 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் மின் வசதி செய்து தரப்படாத கோட்டாட்சி அலுவலகங்கள் இன்னும் எத்தனை உள்ளன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எதுவுமில்லை.

**திரு. நா. காசிராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ரெவின்யூ டிவிஷன் ஆபீஸ்களில் எல்லாம் முன்காலம் போலவே "பங்காக்கள்" ஓடிக்கொண்டிருக்கின்றன. நாம் இப்பொழுது வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம். மின்சாரம் போன்ற நவீன வசதிகள் எல்லாம் தற்போது இருக்கின்றன. ஆகவே, அந்த ஆபீசர்களுக்கெல்லாம் மின்சார வசதியை உண்டுபண்ணி, மின்சார விசிறி, மின்விளக்கு போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிற அக்கறையை நான் வெகுவாக பாராட்டுகிறேன். 'பங்கா, போன்றவைகள் எல்லாம் பழைய கால தர்பாரிலே இருந்துவந்த சின்னங்கள். காலம் வெகு வேகமாக மாறிக்கொண்டு வருகிறது. இந்தச் சின்னங்கள் எல்லாம் கால வெள்ளத்தில் தானாகவே மறைந்துவிடும். காலாகாலத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம்.

### சம்பளத்துடன் அகவிலைப்படியை இணைத்தல்

*** 340 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு, மத்திய அரசு ஊழியர்களுக்கு அளித்திருப்பதுபோல் சம்பளத்துடன் அகவிலைப்படியையும் இணைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசி ஏறிவருகிற இந்த நாளிலே வரவினத்தையும் செலவினத்தையும் சரிக்கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே அரசு இதை ஆலோசித்து விரைவாக செயல்படுத்துமா ? இதனால் அரசாங்கத்திற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்ற குறிப்பு ஏதேனும் அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, அதைத் தான் நான் குறிப்பிட்டேன். இது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. என்று நான் முதலிலேயே சொன்னேன். அடிப்படைச் சம்பளத்துடன் பஞ்சப்படியைச் சேர்ப்பதனால் ஏற்படும் விளைவுகளைப்பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.





The Government of India have decided to treat the Dearness Allowance admissible to their employees as pay for certain purposes. The purposes for which the Dearness Pay would count, i.e., in respect of pensions and gratuities, contributory provident funds, compensatory allowances (like House Rent, City Compensatory, Hill and expensive locality allowances, etc.), travelling allowance, leave salary, recovery of rent, etc., have also been laid down. If the Government of India's decision is applied to State Government servants the amounts of Dearness Allowance sanctioned with effect from 1st December 1966, as shown in Column (2) below, will have to be merged with pay.

| *Pay limit* | *Rates of Dearness Allowance.* |
|---|---|
| | RS. |
| Below Rs. 90 ... ... ... ... | 47 |
| Rs. 90 and above but below Rs. 150 ... | 70 |
| Rs. 150 and above but below Rs. 210 ... | 90 |
| Rs. 210 and above but below Rs. 400 ... | 110 |
| Rs. 400 and above but below Rs. 1,000 | 120 |

The Tamil Nadu Secretariat Association has requested for the merger of a portion of Dearness Allowance with pay. The benefits that would be conferred on Government servants by such merger and possible dimunition in certain existing concessions, if the decision of the Government of India are adopted in toto, are being examined in detail.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நகரசபை நிர்வாகத்தின்கீழ் வேலை செய்யும் நகரசுத்தித் தொழிலாளர்களின் சம்பளம் ஒரு பங்கு, பஞ்சப்படி ஆறு பங்கு என்ற அளவில் இருக்கிறது. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஊழியர்கள் என்று சொல்லக்கூடிய நேரத்திலே இவர்களும் அத்தியாவசியமான (essential) ஊழியர்கள்தான். இவர்கள் இல்லையென்றால் தொத்துநோய் வரும். நோய் விரைவில் எல்லா இடங்களிலும் பரவிவிடும். ஆகவே, இந்தத் தொழிலாளர்களையும கணக்கில் எடுத்துக்கொண்டு பஞ்சப்படியை சம்பளத்துடன் இணைக்கவேண்டும் என்பதைப்பற்றி அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும், மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் ஊழியர்களுக்கு பஞ்சப்படி விலைவாசி உயர்வின் அடிப்படையில் தரப்படுகிறதா ? அப்படி தரப்படுகிறது என்றால், இந்திய அரசிலிருந்து ஐந்தாவது நிதிக் கமிஷன் வந்தபோது, அதனிடம் அதிகமாகச் செலவாகும் தொகை தரப்பட வேண்டுமென்று இந்த அரசு கோரியதா ? பஞ்சப்படியை அடிப்படைச் சம்பளத்துடன் இணைப்பதனால் ஏற்படும் அதிகச் செலவுகளுக்கு. நிதிக் கமிஷனிடமிருந்து நமக்கு எவ்வளவு தொகை கிடைக்கும் என்ற வாய்ப்பு இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, ஐந்தாவது நிதிக் கமிஷனிடம் மட்டுமல்ல; வழக்கமாக எல்லாக் கமிஷன்களிலும் இந்த அரசு வற்புறுத்திவருகிறது. ஒரு அடிப்படை அம்சத்தைச் சொல்ல விரும்புகிறேன். பஞ்சப்படியை அடிப்படை சம்பளத்துடன், விலைவாசி உயர்வுக்காக சேர்க்கப்பட்டது. அகவிலைப்படியைக் குறைக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் குறிக்கோளாக இருக்க வேண்டுமே தவிர, இதை அடிப்படைச் சம்பளத்துடன் இணைத்துவிடுவதால் மட்டும் சரியான பரிகாரம் ஏற்பட்டுவிடாது.

**திரு. கே. விநாயகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சம்பளத்துடன் பஞ்சப்படியைச் சேர்ப்பதனாலே அதிகத் தொகை இப்போது ஆகிறது என்றிருந்தாலும், அவர்கள் ஓய்வு பெற்ற நேரத்திலே இதன் விளைவாக பென்ஷன் தொகையை அதிகமாகத் தர வேண்டுமென்ற ஐயப்பாடு அரசுக்கு இருக்கிறதா? அந்த ஐயப்பாட்டை மனதில் வைத்துக்கொண்டுதான் அரசாங்கம் முடியாது என்று சொல்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்.** தலைவர் அவர்களே, பரிசீலனை செய்கிறது என்றால் முடியும் என்றும் பொருள் அல்ல, முடியாது என்றும் பொருள் அல்ல. அதற்கான காரணகாரியங்களை ஆராய்கிறது என்பதுதான் பொருள். பென்ஷன் தொகை அதிகமாகிறது என்பதனால் கொடுக்கக்கூடாது என்பதல்ல. சில இடங்களில் கெடுதல்களும் இருக்கின்றன. நம்முடைய அரசாங்க ஊழியர்கள் சங்கமே கூட பஞ்சப்படியில் ஒரு பகுதியைத்தான் சேர்க்க வேண்டுமென்று கேட்கிறது. இவையெல்லாம் விரிவாக ஆராயப்பட வேண்டுமே தவிர, அவசரமாகச் செய்வதற்கில்லை. ஆராய்ச்சி முடிவதற்கு முன்னால் எதுவும் சொல்வதற்கில்லை.

*Supply of wheat to Tiruchirappalli town.*

* 341 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state:—

(*a*) whether it is a fact that wheat was not supplied to wheat consumers (North Indians) in the Tiruchirappalli town during the month of August 1967; and

(*b*) if so, the steps taken to ensure regular supply of wheat to Tiruchirappalli?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** (அ) இல்லை, கோதுமை சாப்பிடுபவர்களுக்கு கோதுமை வழங்கப்பட்டது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு கே. விநாயகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கோதுமை சாப்பிடுபவர்கள் வட இந்தியர்கள். அவர்களுக்குக் கோதுமை தரப்படும் என்பது தெரியும். 1967 ஆகஸ்ட் மாதத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டதன் விளைவாக அவர்களுக்குக் கோதுமை கிடைக்கவில்லையென்று மகஜர்களை அரசாங்கத்திற்கும், கலெக்டர் அவர்களுக்கும் கொடுத்தது தெரியுமா? பின்னால் அதை எப்படி சமாளித்தார்கள்?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி:** தலைவர் அவர்களே, 1967 ஆகஸ்ட் மாதத்திலே 402 குவிண்டால் அளவுள்ள கோதுமை திருச்சி நகரிலே வழங்கப்பட்டிருக்கிறது. திருச்சி நகரில் 218 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. ஒவ்வொரு கடைக்கும் இரண்டு மூட்டை கோதுமை என்ற வீதத்தில் வழங்கப்பட்டிருக்கிறது.



DR. H. V. HANDE: Sir, what is the basis on which wheat is distributed to different towns? Has the Government got as much wheat as it wanted during 1968 and 1969 and is the Government aware of the fact that even in Madras City, especially in my constituency, Sowcarpet, a number of times people suffered from shortage of wheat and they complained also. In view of this will the Government tell us the method of distribution of wheat to Madras City and the various towns?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும். கோதுமை கிடைக்காத குறைபாடு எங்கும் இல்லை. அங்கத்தினர் அவர்களுடைய தொகுதியில் குறைபாடு இருந்தாலும் அதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், குறைபாடு நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சகாதேவக் கவுண்டர்:** பேரவைத் தலைவர் அவர்களே, யூனியன் மூலமாகவும், பஞ்சாயத்து மூலமாகவும் கட்டாயப்படுத்தி கோதுமை வழங்கப்படுகிறதே, அது எந்த நோக்கத்தின் அடிப்படையில் வழங்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் பஞ்ச நிலைமை ஏற்பட்ட காரணத்தினால், அந்தப் பகுதி மக்கள் பட்டினியால் வாடக்கூடாது என்பதற்காக கோதுமையாவது கொடுத்ததற்கு கனம் அங்கத்தினர் அவர்கள் நன்றி தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

*Commissioner of Civil Supplies Office*

* 342 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether there is any classification of Government servants into Superior and Inferior staff in the Office of the Commissioner of Civil Supplies, Accounts Wing; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திருப்பூர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்**

* 343 **வினா: திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு உணவு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

சென்னிமலை பிர்க்கா காட்டில் (Forest) 50 ஏக்கர் நிலம் திருப்பூர் கூட்டுறவு பால் பண்ணைக்கு ஏலத்தில் விடப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** சென்னிமலையில் 50 ஏக்கர் நிலத்திலிருந்து புல் வெட்டி அகற்றும் உரிமை திருப்பூர் கூட்டுறவுப் பால் வழங்கு சங்கத்துக்கு 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதி முதல் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரையில் மூன்றாண்டுகட்கு ஏக்கர் ஒன்றுக்கு ஓராண்டிற்கு ரூ. 5 வீதம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் திருப்பூர் கூட்டுறவுப் பால வழங்கு சங்கத்துக்கு 50 ஏக்கரா காட்டு நிலத்தைத ஏக்கர் 50 ரூபாய் என்ற அளவுக்கு குத்தகைக்கு விட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அந்தக் காட்டில இருந்து அந்தக் கூட்டுறவு சங்கத்திற்கு எந்தவிதமான தீவனமும் வந்து சேரவில்லை. அது மட்டும் அல்லாமல் இந்த மன்றத்தில் 1967-க்கு முன அமைச்சராக இருந்த ஒருவருடைய உறவினர் என்ற காரணத் தினால் இப்படி குத்தகைக்குவிடப்பட்டு பயன் இல்லாமல இருக்கிறது என்று பலமுறை எழுதியும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. இனியாகிலும் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** குத்தகைக்கு எடுத்திருக்கும் நபர் யார் என்ற விபரம் என்னிடத்தில் இல்லை. இந்த ஒப்பந்தம் 1969-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் தேதியோடு முடிவடைகிறது. ஆகவே இப்போது ஒப்பந்தத்தை மீறுவதற்கில்லை. புல் கொடுப்பதில்லை என் கிறார்கள். புல் கொடுப்பதாகத்தான் என்னிடம் தகவல் இருக்கிறது. தனிப்பட்ட உழவர்களுக்குக் கூட தலைச்சுமை கட்டுக்கு 5 பைசா, வண்டிச் சுமைக்கு ஒரு ரூபாய் என்று வழங்கப்படுகிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** ஒரு ஏக்கர் ஐந்து ரூபாய் வீதம் 50 ஏக்கரா குத்தகைக்கு விட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்தச் சங்கத்தார் கால்நடை ஒன்றுக்கு அங்கே போய் மேய்வதற்கு என்ன தொகை வசூலிக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** இந்த காட்டு இலாக்கா நிலத்தில் 50 ஏக்கரா நிலத்தைக் குத்தகைக்கு எடுத்திருப்பவர் அதை வேறு ஒருவருக்கு உட் குத்தகைக்கு விட்டிருக்கிறார் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அந்தமாதிரி உட்குத்தகைக்கு விடுவதற்கு உரிமை கிடையாது. கனம் அங்கத்தினர் அந்த விவரத்தை எழுதிக் கொடுத்தால், அதை வைத்தே ஒப்பந்தத்தை ரத்து செய்ய உதவியாக இருக்கும். அதை எழுதித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது குத்தகைக்கு எடுத்திருக்கும் நபர் யார் என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை என்று சொன்னார்கள். ஒரு வேளை அமைச்சருக்குத் உறவினர் என்கிற விவரம் தெரிந்தும பண்பாட்டினால் சொல்லாமல் இருந்திருக் கலாம். ஆயினும் அந்த நபர் பகிரங்க ஏலத்தில்தான அந்த நிலத்தைக் குத்தகைக்கு எடுத்திருக்கிறார், மாகசியம் பிட் என்கிற முறையில்தான இவருக்கு அந்த நிலம் குத்தகைக்குக் கொடுக்கப் பட்டது என்கிற விவரம் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** குறிப்பிட்ட மந்திரியைக் காப்பாற்ற வருவதுபோல இந்தக் கேள்வியை உறுப்பினர் கேட்டுவிட்டார். பண்பாட்டிற்காக அந்த நபர் யார் என்பது தெரியாது என்று நான் மறைத்துச் சொன்னேன். அவர் விடவில்லை. உண்மையில் மந்திரியி னுடைய உறவினருக்குத்தான் அந்த நிலம் குத்தகைக்கு விடப்பட்டிருக் கிறது. பகிரங்க ஏலத்தில் இல்லை. 'ஹையஸ்ட் பிட்டர்' என்ற முறையில் விடவில்லை. குத்து மதிப்பாக வைத்து மந்திரியின் உறவினர் என்ற முறையில்தான விடப்பட்டிருக்கிறது.

**திரு. சு. துரைசாமி :** அமைச்சர் அவர்கள் 50 ஏக்கரா நிலத்தை குத்து மதிப்பில் குத்தகைக்கு விடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதனால் கூட்டுறவுப் பால்பண்ணைக்கு எதுவும் பயன் இல்லை. அதையும் உட்குத்தகைக்கு விட்டிருக்கிறார். ஆகவே இதை வைத்தே அந்த ஒப்பந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று கேட்கவிரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பால் பெருக்குத் திட்டத்தை ஊக்குவிக்கவேண்டுமென்ற அடிப்படையில் அது விடப்பட்டிருக்கிறது. உண்மையில தனிப்பட்டவர்களுக்கு உட்குத்தகை விடப்பட்டிருக்கிறது என்பது உண்மையானால்—அவர் எப்படிப்பட்டவர் ஆனாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசாங்கம் தயங்காது.

### பல்லடம் சாலை—ஈஸ்வரன் கோயில் சாலை சந்திப்பு

***347 வினா : திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள பிரதான சாலையான பல்லடம் ரோடும், ஈஸ்வரன் கோயில் சாலையும் சந்திக்கும் இடத்தில் சாலையை விரிவு படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** குறிப்பிடப்பட்ட திட்டம் ஏதும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சு. துரைசாமி :** திருப்பூர் நகரத்தில் உள்ள பிரதான சாலை—பல்லடம் ரோடும். ஈஸ்வரன் கோவில் சாலையும் சந்திக்கும் இடம் மிகவும் முக்கியமானது. உடுமலைப்பேட்டை, தாராபுரம், போன்ற ஊர்களுக்குச் செல்லும் முக்கியமான இடம். அந்தச் சாலையில் இருக்கும் நெருக்கடி காரணமாக சமீபத்தில் கூட ஐந்தாறு பேர்கள் விபத்துக்குள்ளாயிருக் கிறார்கள். ஆகவே இனியாகிலும் அதை உடனடியாக விரிவுபடுத்தும் நடவடிக்கையை அரசு எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தச் சந்திப்பில் பாதை யின் அகலம் 55', கழிவு நீர்க் கால்வாய் நீங்கலாக 47', 48' அகலம் இப்போதே இருப்பதனால், அந்தச் சந்திப்புச் சாலையை அகலப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

**திரு. சு. துரைசாமி :** இப்போது அந்த இடத்தில் உள்ள நெருக்கடி அதிகமாக இருப்பதனாலும், இரண்டு லாரிகள் போனாலே 40' போதாத நிலைமை இருப்பதனால—இன்றைக்கு அது ஒரு பிரதான சாலையாக இருப்ப தால், இனியாகிலும் அப்படியொரு திட்டத்தை அரசு வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 48' அகலத்தில் மிகத் தாராளமாக வண்டிகள் போகலாம்.

### நந்தியாறு கால்வாய்

***348—வினா : திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி, திருமழபாடி பகுதியிலுள்ள நந்தியாறு பாசன வாய்க்காலில் உள்ள அடிஓடை பாலம் மழையினால் அடித்துச் செல்லப்பட்டதன் காரணமாக பாதிக்கப்பட்ட விளை நிலம் எவ்வளவு ?

(இ) அதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் வகுக்கப்பட்டதா ?

(உ) அப்படியானால் அதன் உத்தேச செலவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :**

(அ) நந்தியாறு கால்வாயில் பாலக்கால் மழையினால் அடித்துச் செல்லப்பட்டமையினால் பயிரிடும் நிலங்கள் எவையும் பாதிக்கப்படவில்லை.

(இ) அண்டு (உ) இந்த பாலக்கால் ரூ. 1,98,000 தோராய செலவில் மீண்டும் கட்டப்பட்டுள்ளது.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இந்தப் பாலம் மழையினால் அடித்துச் செல்லப்பட்டு திரும்ப அடைக்கப்பட்டது என்றாலும் அதற்குப் பக்கத்தில் ஓடுபாலமாக இருக்கக்கூடிய இடத்தில் தண்ணீர் தேங்குவதனால்—அது பழுதடைந்திருக்கிற நிலைமையினால் இனிமேலாவது அந்தப் பாலத்தை மாற்றி பக்கா பாலமாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஒரு லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் செலவில் இப்போதுதான்—இரும்புத்தொட்டியோடு அந்தப் பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா :** ஒரு லட்சம் 98 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருப்பது இரும்புத் தொட்டிதான். இது குறுகலாக இருப்பதனால் தண்ணீர் வர போதுமான வழியில்லை. மழை காலத்தில் அதற்கு சிறிது தூரத்திலேயே திருமழபாடி சாலையில் இருக்கிற ஓடுபாலத்தில் தண்ணீர் தேங்கி இதை அடித்துப்போகும் நிலை ஏற்படுகிறது. ஆகவே இதனை பக்கா பாலமாகவே மாற்றி அமைக்கும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதுபோலத் திட்டம் இல்லை.

**சோமனூர் ரயில் நிலையம் அருகில் சுரங்கப்பாதை.**

* 349 **வினா : திரு. கே என். குமாரசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை ஜில்லா, பல்லடம் தொகுதி சோமனூர் ரயில்வே ஸ்டேஷன் பக்கம் உள்ள ரயில்வே கேட்டின் கீழ் சுரங்கப்பாதை அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் என்றால் எப்பொழுது வேலை மேற்கொள்ளப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அவ்வித திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** அந்த இடத்தில் லாரிகள், பஸ்கள், வண்டிகள் எல்லாம் போக நெருக்கடியாக இருக்கிறது. அரை மைல் தூரத்தில் ஒரு ரயில்வே பாலம் இருக்கிறது அதையாவது ரிப்பேர் செய்து பாலத்திற்கு அடியில் ரோடுபோட ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ரயில்வே லைன்களுக்குக் கீழ் பாலம் அமைப்பது மத்திய சர்க்காரின் வேலையாகும். உறுப்பினர் தன் கருத்தை மத்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. அவையுரிமைக் கேள்வி.

**பேரவைத் தலைமையால் அகற்றப்பட்ட ஆணையிடப்பட்ட பகுதியை "மறவன் மடல்" என்ற செய்தித்தாள் வெளியிட்டது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சித்தன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். "1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் தேதி அன்று திரு. ராமச்சந்திர துரை பேசிய பேச்சில் ஒரு பகுதியை





பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கி விட உத்தரவிட்டார்கள். அப்படி நீக்கப்பட்ட பகுதி "மறவன் மடல்" என்ற பத்திரிகையில் வந்திருக்கிறது, இது உரிமையை மீறிய செயலாகாதா?" என்று எழுப்பியிருக்கிறார்கள். நம் விதிகளின்படி இது உரிமையை மீறிய நிகழ்ச்சி தான். ஆயினும் நம்முடைய அவையில் 1965-லும், 1966-லும் இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்பட்டபோது குறிப்பிட்ட அந்த பத்திரிகைகளின் மீது பேரவைத் தலைவர் அவர்களே நடவடிக்கை எடுத்துக் கொள்வதாகத் தீர்ப்பு அளித்திருக்கிறார். அதைப்போலவே இந்த நிகழ்ச்சி சம்பந்தமாக பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட பத்திரிகை மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வார் என்று அறிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை நாளை மறு நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

## 4. ஒற்றிவைப்புத் தீர்மானம்

**"டிஃபென்ஸ் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஃபிஸியாலஜி அண்டு அலைடு ஸயன்ஸஸ்" என்ற நிறுவனத்தை சென்னையிலிருந்து டில்லிக்கு மாற்றுதல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் shifting of Defence Institute of Physiology and Allied Sciences from Madras to D lhi என்ற பொருள் குறித்து விவாதிப்பதற்காக இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது மிக முக்கிய மான நிகழ்ச்சியாக இருந்தாலும், மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த தாக இருக்கிற காரணத்தாலே இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

## 5. அறிவிப்பு

**திரு. எம். வி. பாலன் அவர்கள் குறிப்பிட்ட ஒரு காரியத்தைப்பற்றி ஆய்வு செய்ய துணைத்தலைவர் அறிவித்தபடி குழு அமைக்க தேவையில்லாத நிலை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, அவர்கள் இந்த அவையிலே இல்லாதவரைப் பற்றிக் கருத்துகள் கூறினார்கள் என்றும், அதனால் அதற்கு அவர் நேரடியாகப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் எனக் கூறி, அதைப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டு, பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு கமிட்டி அமைப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால், சட்டமன்ற நிகழ்ச்சிக் குறிப்புக்களைப் பார்க்கும்பொழுது சில நிலைமைகள் தெளிவாகின்றன. அந்தக் கமிட்டி அமைக்கவேண்டிய அவசியம் இல்லாத நிலைமை இருக்கிறது. அதைப்பற்றி இங்கே கூற விரும்புகிறேன். 1957-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் தேதி இந்த மன்றத்தில் நிதிநிலை அறிக்கையை அந்நாள் நிதியமைச்சர் வைக்கும்பொழுது "கன்னியாகுமரிப் பகுதியைப் பொறுத்தவரை, அதைத் தனி ஜில்லாவாகவே வைத்துக் கொள்வதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த நாங்குனேரி தாலூக்காவை இம்மாவட்டத்திலிருந்து பிரித்து கன்னியாகுமரி மாவட்டத்துடன் சேர்க்கப்படும். அதன் பயனாக இரு மாவட்ட அதிகாரிகளுக்கும் வேலைச் சுமை ஓரளவு சமமாக்கப்படும்" என்று நிதிநிலை அறிக்கையிலே அது பிரிக்கப்படும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு அதையொட்டி திரு. சங்கர் அவர்கள் ஜூலை 12-ம் தேதி பேசிய பேச்சு "நிதி அமைச்சர் அவர்கள் இங்கு வரவுசெலவுத் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது இந்தவிதமான திட்டங்களைப் பேசிவிட்டுக் கடைசியில நாங்குனேரித் தாலுகாவை கன்னியாகுமரி ஜில்லாவோடு சேர்த்துவிட்டோம் என்று சொன்னார்கள். நான அந்தச் சமயத்தில் அசெம்பிளிக்கு வரவில்லை. பல அசந்தர்ப்பங்களினால் ஊரில இருந்தேன். இதைப்பற்றி அதிகமாகத் தினசரிகளில வரவில்லை. 'தினமணி', 'தந்தி' பத்திரிகையில் இதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதைப் பார்த்து விட்டுப் பலரும் என்னிடம் வந்து கேட்டார்கள்; எனக்கும் இதைப் பார்த்தவுடன் தூக்கி வாரிப்போட்டது, இவ்வாறு நடக்காது. எங்களிடம் இதைப்பற்றிக் கேட்கவில்லை என்று சொனனேன. பதினைந்து நாட்களுக்கு முன்னால கனம் மந்திரி பக்தவத்சலம் அவர்கள் குற்றாலத்திற்கு வந்திருக்கும்போது என்னிடம் கேட்டார்கள். நாங்குநேரி தாலுக்காவை கன்னியாகுமரி ஜில்லாவோடு சேர்த்திருக்கிறது பற்றி உங்களுக்கு ஏதாவது ஆட்சேபம் இருக்கிறதா என்று கேட்டார்கள். இதைப் பொதுமக்கள் விரும்பவில்லை, மேலும் விரும்பமாட்டார்கள் என்று சொனனேன். அப்படியிருந்தும் மந்திரி கமிட்டியார் எங்களிடம் அதாவது அந்தத் தொகுதி எம். எல். ஏ-க்களிடம் கேட்காமல் அங்குள்ள பஞ்சாயத்து போர்டு பிரஸிடெண்டிடம் அல்லது அங்குள்ள பொது மக்களிடம் கேட்காமல் செய்ததைப்பற்றி நான் வருந்துகிறேன. ஆனால் எதிர்கட்சிக்காரர்களுக்கும் ஆளும் கட்சிக்காரர்களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. ஆகவே நான் இங்கு வந்தவுடன் முக்கிய மந்திரியிடமும், நிதி மந்திரியிடமும், ரெவின்யூ மந்திரியிடமும் இதைப்பற்றிச் சொன்னேன். அவர்கள் இதைப்பற்றி ஆலோசித்து முடிவு எடுப்போம் என்று சொன்னார்கள்" என்றும்; "இந்தத் தாலுக்காவைக் கன்னியாகுமரியோடு சேர்க்கக்கூடாது என்று எனக்குப் பல தந்திகள் வந்திருக்கின்றன. இலங்கையிலிருந்தும் தந்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே இதை மந்திரி அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். இதைப்பற்றி இன்னும் கூடுதலாக ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்றும் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அந்த இலாகா மானியத்தின்மீது விடையளித்துப் பேசுகின்ற அப்பொழுது இருந்த வருவாய்த் துறை அமைச்சர் திரு. மாணிக்கவேலு அவர்கள் "நிலகிரியைப்போல் இருக்கலாம், அதோடு அதற்கு சுற்றுப்பக்கத்திலுள்ள பகுதிகளைச் சேர்த்தால் நன்றாக இருக்கும். கோவில்பட்டி தாலுக்காவை கன்னியாகுமரி ஜில்லாவோடு சேர்க்கமுடியாது. அது தூரத்தில் இருக்கிறது. ஐந்து அல்லது பத்து மைல்களுக்கு அருகாமையில் இருக்கின்ற தாலுக்காவைத்தான் சேர்க்க முடியும். அப்படிச் சேர்ப்பதற்கு சிலர் பிரியப்பட்டிருக்கிறார்கள். சிலர் பிரியப்படாமல் இருக்கலாம். கன்னியாகுமரியோடு சேர்த்தால் சௌகரியமாக இருக்கும் என்று அப்பொழுது தோன்றியது. இம்மாதிரி ஜில்லா பகுதிகளை மாற்றியமைப்பதற்குச் சில சடங்குகள் இருக்கின்றன. எல்லா கெஜட்டுகளிலும் பிரசுரித்து, ஏதாவது ஆட்சேபனை இருக்கிறதா என்று பார்த்து, பிறகு அமலுக்குக் கொண்டுவரவேண்டும். மாற்றவேண்டும் என்ற உத்தேசம் தான் இப்போது தெரிவிக்கப்படுகிறது. எல்லா சடங்குகள் முடிந்த பிற்பாடுதான் இது அமுலுக்கு வரும்" என்று பேசியிருக்கிறார்கள்.

முதலிலே நிதிநிலை அறிக்கையிலே பிரிப்பது என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. திரு. சங்கர் அவர்கள் அதுபற்றிப் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு பிரிக்கப்படாத நிலை இருக்கிறது. ஆகவே அதையொட்டி மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலன் மேலும உறுதியான சான்றுகளைத் தரவேண்டியதில்லை என்ற காரணத்தால் அவர்கள் அதை உறுதிப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் அமைக்கப்போவதாகச் சொல்லப்பட்ட கமிட்டி தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நேற்றுச் சபையிலே இது சம்பந்தமாக கமிட்டி அமைக்கப்படுமென்று சொல்லப்பட்டது. சொல்லவேண்டிய விஷயங்களைத் தாங்கள் ரொம்பவும் சிரமப்பட்டுச் சொல்லியிருக்கிறீர்கள்.



அதேபோல அன்று ஒரு கமிட்டி போடவேண்டுமென்று சொன்ன நிலையில்ல தாங்கள் அதற்கும் சிரமப்பட்டு இதுபோல் பழைய குறிப்புகளை எல்லாம் பார்த்து........

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதற்குப் பழைய குறிப்புக்கள் இல்லையே.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பழைய குறிப்புக்கள் என்றால் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் போல் இருக்கிறது. ஆகவே அந்தக் கமிட்டியைத் தாங்கள் போட வேண்டுமென்பதைத் வேண்டாமென்று சொல்வது வருத்தமாக இருக்கிறது. அந்தக் கமிட்டியை அமைத்து இன்னும் விவரமாக அதைப் பரிசீலனை செய்தால் ஒழுங்காக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், ஏற்கனவே தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பைச் சொல்லிவிட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அதை ஒத்துக்கொள்கிறார்களா? தலைவர் அவர்களுடைய முடிவுக்கு மரியாதை கொடுக்கிறார்களா அல்லது எதிர்ப்புத் தெரிவிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மரியாதை கொடுக்காமல் இருக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. பேரவைத் தலைவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் எப்பொழுதும் மரியாதை காட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கிற வருத்தமெல்லாம் ஒரு கமிட்டி அமைத்து அந்தக் கமிட்டியிலே இதை முடிவுசெய்யவேண்டும் என்பதுதான். கமிட்டியிலே எதைப் பார்ப்போமோ அதைத் தான் இப்பொழுது கூறினேன். திரு. பாலன் அவர்கள் அந்தக் கமிட்டியிலே கூறவேண்டியதை இங்கே குறிப்பிட்டு இருக்கிறோம். எனவே அப்படி ஒரு கமிட்டி அமைக்கத் தேவையில்லை என்ற அளவுக்கு நம்மிடத்திலே ரிக்கார்டுகள் இருக்கின்றன. ரிக்கார்டுகள் இல்லாத நேரத்திலே கமிட்டி இருக்கலாம். ஆனால ரிக்கார்டுகள் இருக்கின்றன, நிகழ்ச்சிக் குறிப்புகளில்லை. எனவே அதற்காக ஒரு கமிட்டி அமைக்கவேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன. இதுபோல் அந்தக் கமிட்டிக்கும் பார்க்கிறேன். பார்த்து, ஏதாவது இருந்தால நானே முடிவு எடுக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நேற்று பேசிய கனம் அங்கத்தினர் காமராஜ் என்று சொல்லியிருக்கிறார்கள். திரு. காமராஜ் என்று அந்தக் குறிப்புகளிலே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுப்பிரமணியம் நிதியமைச்சராக இருந்த அமைச்சரவையில திரு. காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். திரு. சுப்பிரமணியம நிதியமைச்சராக இருந்து அந்த நிதிநிலை அறிக்கையைக் கொடுத்திருக்கிறார். திரு. காமராஜ் அவர்களுடைய சம்மதம் இல்லாமல் திரு. சுப்பிரமணியம அப்படிச் சொல்லியிருப்பாரா? திரு. காமராஜ் எடுத்த முடிவு பின்னால திரு. சங்கர் சொன்னதற்குப் பிறகு கைவிடப்பட்டது. நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டது. பின்னால் செயல்படுத்தப்படவில்லை. நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பதற்குச் சான்று இருக்கிறது, அதற்குப் பின்னால் அதைப்பற்றி திரு. சங்கர் கூறியதற்குச் சான்று இருக்கிறது. அதற்குப் பின்னால் அது செயல்படுத்தப்படவில்லை என்பதற்கும் சான்று இருக்கிறது என்பது எல்லோருக்கும தெரிந்த நிகழ்ச்சியாக இருக்கிறது. ஆகவே அதற்காக ஒரு கமிட்டி தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் ;** விளக்கத்திற்கு நன்றி, ஆனால் அதே மாதிரி ஒவ்வொரு விஷயத்திற்கும் தாங்கள் சிரமப்பட்டுச் சொன்னால் நலமாக இருக்கும்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கூடுமானவரையில் இதிலே பேரவைத் தலைவர் அவர்கள் முயற்சியெடுத்துக்கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

THIRU K VINAYAKAM : Does it follow that the ruling given by the Deputy Speaker yesterday has been abrogated by the Hon. Speaker?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கமிட்டி போடத் தேவை இல்லை என்பதற்கான முறையில் ஆதாரங்கள் கிடைத்துவிட்டன. ஆகையினால் துணைத் தலைவர் கமிட்டி அமைக்கவேண்டுமென்று சொன்னதை தலைவர் புறக்கணிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** நேற்றைய தினம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள், அந்தத் தீர்ப்பு நிலவில் இருக்கிறதா, இல்லையா? நிலவில் இருக்கிறது என்றால் இன்று தீர்ப்புக் கூறியது எந்தச் சட்டத்தின் அடிப்படையில் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டத்தின் அடிப்படை அல்ல நிகழ்ச்சி முறைகள். பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு கமிட்டி அமைக்கப்படும் என்று தீர்ப்புக் கூறினார்கள். அதை அவர்கள் கூறிய குற்றச்சாட்டுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டு அதற்கான சான்றுகளைக் கூற வேண்டுமென்பதற்காகத்தான் கமிட்டி அமைக்க வேண்டுமென்று கோரியது. அந்தக் கமிட்டியை அமைக்க வேண்டிய அதற்காக அமைக்க வேண்டாத அளவுக்குச் சான்றுகள் இருக்கின்றன. திரு. பாலன் தேவையில்லாத அளவுக்கு சான்றுகள் இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பேரவையில் தாங்கள் சுட்டிக்காட்டிய சான்றுகள் மீது நம்பிக்கை இல்லையென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருதுவார்களானால், அந்தச் சான்று கள் ஆதாரமற்றவை என்று கருதுவார்களானால் அந்தக் கமிட்டியை வைத்து சான்றுகள் சரியானவையா அல்லவா என்பதை நிரூபிக்கலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் ;** அந்தச் சான்றுகளைத் தவறு என்று சொல்லும்படியான அளவுக்கு புத்தி இல்லாததனம் எனனிடத்தில இல்லை. அபிஷியல் ரிப்போர்ட்டில் இருந்து தாங்கள் படித்ததை ஏற்றுக் கொள்ளுகிறேன் தாங்கள் இவ்வளவு சிரமப்பட்டு தேடி வக்காலத்து எடுத்துக் கொள்ளும் நேரத்தில் வேறு ஏதாவது வேலையை கவனித் திருக்கலாமே, தங்களுக்கு ஏன் அந்தச் சிரமம்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு இருக்கின்ற வருத்தம் எல்லாம் அன்று திரு. ஞானசம்பந்தன் சாட்டிய குற்றச்சாட்டை நிரூபிக்கவேண்டுமென்ப தற்காக ஒரு கமிட்டிபோடப்பட்டது. இந்தக் கமிட்டி வேண்டாமென்று தாங்கள் கூறிவிட்டீர்கள். அதே போன்று அந்தக் கமிட்டியையும் வேண்டாமென்று தாங்கள் கூறினால் பழியை அவர்கள் ஏற்றுக்கொண்ட வர்களாக ஆகிவிடுகிறார்கள், திரு. ஞானசம்பந்தன் கூறியதற்கு சட்ட மன்ற நடவடிக்கைப் புத்தகத்தில் எந்தவிதமான ஆதாரமும் கிடை யாது, அவர் வெண்மணி சம்பவத்திற்குக் காங்கிரஸ்காரர்கள்தான் காரணம் என்று சொன்னார், அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறியதற்கு பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக அவர் கூறினார், அதற்காக ஒரு கமிட்டி போடப்பட்டது அந்தப் பொறுப்பை அவர் நிலைநாட்ட வேண்டுமென்பதற்காகத்தான். திரு. கருத்திருமன் அவர்கள் ஞானசம்பந்தத்துக்கும் தாங்கள் வக்காலத்து வாங்கி அந்தக் கமிட்டி இல்லாமல் செய்துவிடவேண்டுமென்று சொன்னால், அது இவர்களுடைய வழக்குக்கே நல்லதல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தப் புத்தகங்களை எல்லாம் நான் தேடி அலைந்து எடுக்கவில்லை, திரு. பாலன் அவர்கள்தான் தேடி என்னிடத்தில் கொண்டு வந்து கொடுத்தார்கள். அவர்கள் கொடுத்த புத்தகங்களில் இருக்கிற குறிப்புக்களைப் படித்திருக்கிறேன், நான் அவற்றைத் தேடிப் போகவில்லை. திரு. பாலன் அவர்களே கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலமைச்சர் அவர்கள் ஒரு விஷயத்தை சொன்னார்கள். இவர்கள் வள்ளுவர் வழியிலே வந்தவர்கள் என்று கூறிக்கொள்ளுகிறார்கள். குறளிலே 'பிரித்தலும் பேணிக் கொளலும்' என்று இருக்கிறது. பிரித்தல் என்று இருக்கிறதே அதிலே இறங்கி இருக்கிறார்கள் முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வழியோடு சொல்லுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 'பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந் தார்ப் பொருத்தலும் வல்லதமைச்சு' என்று இருப்பதிலே முதல் பகுதியைத் திறமையாக முதலமைச்சர் அவர்கள் நடத்தியிருக்கிறார்கள். இங்கே இப்போது கூறியவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை என்ற நிலை எனக்குக் கிடையாது. நேற்று துணைத் தலைவர் அவர்கள் ஒரு கமிட்டி அமைக்கப்படும் என்று தீர்ப்புக் கொடுத்துவிட்டார்கள். நான் கேட்பது எல்லாம், அந்தக் கமிட்டி விசாரித்து முடிவு செய்யவேண்டியதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கமிட்டி எதற்காக அமைக் கப்பட வேண்டுமென்று பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கூறி னார்கள்? திரு. பாலன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சாட்டினார். எதிர்த் தரப்பில் அதை நிரூபிக்க வேண்டுமென்று கேட்கப்பட்டது. அவர் 'நிரூபிக்கிறேன்' என்று சொன்ன பிறகு அதற்கு ஒரு கமிட்டி அமைக்க வேண்டுமென்று கேட்டதற்கு பேரவைத் துணைத் தலைவர் அவர் கள் ஒத்துக்கொண்டார்கள். எதை நிரூபிக்க வேண்டுமென்று கேட்டார் களோ அதற்காக ஆதாரங்களைக் கொடுத்து விட்டார்கள். இப்போது கமிட்டி தேவையில்லாத நிலை ஏற்பட்டு விட்டது. பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய தீர்ப்புக்குப் புறம்பாக, கமிட்டி வேண்டாமென்று சொல்லவில்லை.

THIRU J. JAMES : There is a legal flaw.

**திரு. ந. வீராசாமி :** தலைவர் அவர்களே, பாலன் அவர்கள் பேசிய பேச்சினால் எழுந்த பிரச்சினைக்குத் துணைத் தலைவர் அவர்கள் குழு அமைக்க ஒத்துக்கொண்டார்கள். அதற்கான ஆதாரங்கள் மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டு, இனி ஒரு குழு தேவையில்லை என்று முடிவு சொன்ன பிறகு அதன்மீது இப்படிப்பட்ட விவாதங்கள் நடைபெறுவது ஒழுங்குதானா?

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தீர்ப்புகள் வழங்கும்போது அது சரியாகவும் இருக்கலாம், தப்பாகவும் இருக்கலாம். கோர்ட் ஆப் லா என்று வரும் போது சரியாகவோ, தப்பாகவோ இருக்கும்போது அதன் மேல் அப் பீலுக்குப் போக வழிவகை இருக்கிறது. நேற்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பு வழங்கினார்கள். சரியோ, தப்போ அந்த தீர்ப்பு சேர்மனுக்குப் பின் வருகின்ற தலைவர்களையும் கட்டுப்படுத்தும். நேற்றைய தினம் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி கமிட்டி அமைக்கப்பட வேண்டும். இந்தச் சான்றுகள் எல்லாம் கமிட்டியின் முன் வைக்கப் பட வேண்டிய சான்றுகள். கமிட்டி அமைக்கப்படுமுன் சான்றுகளை வாங்க தலைவருக்கு உரிமை இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'லீகல் ஃப்ளா' ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வக்கீலுக்குப் படித்தவர்கள். கமிட்டி அமைக்கும் நிலை ஏன் உண்டாயிற்று? திரு. பாலன் அவர்கள் ஒரு

குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்கவேண்டுமென்று எதிர்த் தரப்பிலிருந்து கேட்கப்பட்டது. 'பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன்' என்று அவர் சொன்னார். அதற்கு ஒரு கமிட்டி அமைத்து அந்தக் கமிட்டியின் முன் அவரை விசாரிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதற்குப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், 'ஒரு கமிட்டி அமைக்கிறேன்' என்று சொன்னார்கள். அந்தக் கமிட்டியின் முன்னால் என்ன சான்றுகளை அளிக்கிறேன் என்று சொன்னார்களோ அந்தச் சான்றுகளை அளித்துவிட்ட பிறகு அந்தக் கமிட்டி எதற்காக? இதில் 'லீகல் ஃப்ளா' என்ன இருக்கிறது? இதை மேலும் வளர்க்க வேண்டாம். இதிலே எந்தவிதமான ஒழுங்கீனமும் இல்லை. இதை இந்த அளவோடு விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

## 6. தன்னிலை விளக்கம்

### பேரவை தாமதமாகக் கூடியதற்கு முதலமைச்சர் விளக்கம்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை 9 மணிக்குக் கூடவேண்டிய பேரவை 9¼ மணிக்குக் கூடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. நண்பர் விநாயகம் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பி இருக்கிறார்கள். நானும் அதற்காக உள்ளபடியே வருந்துகிறேன். அமைச்சர்கள் இருவர் வந்திருந்தும்கூட அவர்களுக்குக் கேள்விகள் இல்லாத காரணத்தால், கேள்விக்குரிய பதிலைச் சொல்லவேண்டிய அமைச்சர்கள் சற்றுக் காலம்தாழ்ந்து வந்த காரணத்தால் அந்த நிலை ஏற்பட்டது. குறிப்பிட்ட நேரத்தில் வர வேண்டுமென்று அமைச்சர்கள் எவ்வளவோ முயற்சித்தாலும்கூட, காலையிலேயே நூறு பேரையாவது சந்தித்துவிட்டுத்தான் வரவேண்டியிருக்கிறது. சட்ட மன்றத்தில் சந்தித்துச் சில குறைபாடுகளைத் தர வேண்டிய சட்ட மன்ற உறுப்பினர்கள்கூட வீட்டுக்கு வந்திருக்கிறார்கள். அவர்களையும் பார்த்துவிட்டு வரவேண்டிய பொறுப்பும், கடமையும் அமைச்சர்களுக்கு இருக்கிறது. இந்தத் தாமதத்திற்கு விளக்கம் தருகிற நேரத்திலே சட்ட மன்றம் நடைபெறுகிறபோது பொதுமக்களும் மற்றவர்களும் அமைச்சர்களிடத்தில் முறையீடுகளைச் சொல்லும் நேரத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்கு வாய்ப்பாகவும் இதை எடுத்துக்கொள்கிறேன். சட்ட மன்றம் 9¼ மணிக்குக் கூடியது என்று பெரிய எழுத்தில் போடக்கூடிய பத்திரிகைகளும் நான் சொன்ன விளக்கத்திற்கும் முக்கிய இடம் தரும் வகையில், பொதுமக்கள் சட்ட மன்றம் நடைபெறக்கூடிய நேரத்தில் அமைச்சர்களைக் காலை நேரத்தில் தொந்தரவு கொடுக்காமல், மாலை நேரங்களில் சந்திப்பதற்கு வழிவகை செய்யும் அளவுக்கு பத்திரிகையாளர்கள் ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும். இன்று நடைபெற்ற சம்பவத்திற்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## 7. 1969–70 ஆம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு — தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 12—காவல் துறை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,92,25,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."



**திரு. கே. என். குமாரசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 14,92,25,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறைக் கொள்கையைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 12—காவல்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,92,25,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU T. MARTIN: To discuss the failure to maintain law and order in the State, I move the following cut motion :—

"That the allotment of Rs. 14,92,25,500 under Demand No. 12—Police be reduced by Rs. 100".

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே சந்தேக வழக்குத் தொடுக்கும் முறையைக் கைவிட வேண்டியதைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 14,92,25,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE: To discuss policy and to point out the need to avoid the occurrence of death of persons in police custody, I move the following cut motion :—

"That the allotment of Rs. 14,92,25,500 under Demand No. 12—Police be reduced by Rs. 100."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் இப்போது பேரவை முன் விவாதத்திற்கு வருகின்றன. முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கை மீதான ஒரு ஆய்வுரை* சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அவர்கள் கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறிய பிறகு நான் முடிவாக என் கருத்துக்களைக் கூற இருக்கிறேன். அச்சிடத் தரப்பட்டுள்ள இந்த ஆய்வுரையில் ஆறாவது பக்கத்தில் ஒரு சிறிய தவறு ஏற்பட்டிருக்கிறது. அதை மாத்திரம் உறுப்பினர்கள் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 6-வது பக்கத்தில் 16-வது பகுதியில் விவசாய நிலவரம் என்ற தலைப்பில் "இந்த ஆண்டில், உழவுத் தொழிலாளர்கள் முக்கியமாகத் தங்கள் கூலியை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். இந்தக் கோரிக்கைக்கு இணங்க இயலாத நிலக்கிழார்கள் பயிரிடுவது, அறுவடை செய்வது முதலிய வேலைகளுக்கு அன்றாட ஊதியம் பெறும் தொழிலாளர்களை நியமித்துக்கொண்டனர்" என்று இருக்கிறது. அதற்கு அடுத்து வருவதில் "இதனால் ஆத்திரம் கொண்ட உழவுத் தொழிலாளர்கள் மிராசுதார்களையும் தற்காலிகத் தொழிலாளர்களையும் அச்சுறுத்தி வந்தனர்" என்ற வாக்கியத்திற்குப் பதிலாக "இதனால் உழவுத் தொழிலாளர்கள் மிராசுதார்களிடையே

* 98—107-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கசப்புணர்வு எழுந்தது" என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் காவல் துறை மானியத்தின்மீது உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்கிய பிறகு என் முடிவுரையை நிகழ்த்தலாம் என்ற அளவில் அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைய தினம் நடைபெற இருக்கிற விவாதம் காவல் துறை பற்றியது. உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லவேண்டுமே தவிர சொற்களில் கொஞ்சம் வேகத்தை ஏற்றிக்கொண்டு ஒருவருக்கொருவர் வசைமாரி பொழிகின்ற அந்த முறைக்கு ஆளாகாமல் நல்ல கருத்துக்களை மட்டும் அமைதியான முறையில் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** துறையோ காவல் துறை, போலீஸ். வசைமாரி என்றால் இதற்கு முன் வசைமாரி நடந்ததா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்களின் உரைக்கு குறுக்கே நான் நிற்கவில்லை. அவர்கள் கூறவேண்டிய குற்றச்சாட்டுகளைத் தாராளமாகக் கூறட்டும். ஆனால், பொதுவான குற்றச்சாட்டுக்களைக் கூறாமல் குறிப்பிட்ட அளவில் பேசவேண்டும். கருத்துக்களில் வேகம் காட்டுங்கள். ஆனால் சொற்களில் வேகம் காட்ட வேண்டாம்.

***திரு. டி. மார்டின் :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காவல்துறை மானியத்தின்மீது என் கட்சி சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். சட்டத்தையும், ஒழுங்கையும் காப்பாற்றுவதற்கு வலிமைமிகுந்த ஒரு காவல் படை தேவை என்பது யாரும் ஒத்துக்கொள்ளக்கூடியது. இதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஜனநாயக ஆட்சிமுறையை நாம் ஏற்றுக் கொண்டு ஜனநாயக ஆட்சி முறையை நம் வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொண்டுள்ளோம். ஆட்சியின் மூன்று முக்கிய அங்கங்களான லெஜிஸ்லேச்சர், எக்ஸிக்யூட்டிவ், ஜுடீஷியரி என்ற மூன்று அங்கங்களும் சிறப்பான முறையில் பணி புரிய உதவுவது காவல் துறை. காவல் துறையின் இன்றியமையாத பணியினை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறோம். காவல் துறை ஆற்றுகிற பணிகள் காரணமாக நாட்டில் அமைதியான வாழ்க்கையும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் நாட்டு வாழ்க்கை நடைபெறுவதற்கு இவர்கள் அச்சாணி போல் இருக்கிறார்கள் வாழ்க்கையை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று நாட்டு வாழ்க்கை, இன்னொன்று காட்டு வாழ்க்கை. காட்டில் விலங்குகள் வாழ்கின்றன. விலங்குகள் வாழ்கிற நிலையில் அவைகள் மனிதனைவிட சிலசில நேரங்களில் சிறப்புடன் வாழ்கின்றன. அப்படி நாட்டில் சிறப்புடன் வாழமுடியாது. குறிப்பாக அன்னத்தை எடுத்துக்கொண்டால் அதன் இறகைப்போல் எந்த மனிதனும் அப்படிப்பட்ட ஆடையை அணிந்துகொள்ள முடியாது. துள்ளி விளையாடும் புள்ளிமானைப்போல் உள்ள ஒரு நங்கை நல்லாளை நாம் மனதில் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாது. என்றாலும், காட்டு வாழ்க்கையை நாம் நாட்டு வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் அங்கு வல்லூறுகள் வட்டமிடுகின்றன, வண்ணப்பறவைகளைக் கொல்ல. புள்ளிமான் துள்ளி ஓடும்போது அதன் மீது பாயத் தயாராகிறது புலி. ஒன்று வாழ நினைக்கிறது, மற்றொன்று வாழ விடாமல் தடுக்கிறது. தத்திச் செல்லும் கீறி ஊர்ந்து செல்லும் பாம்பைக் கடித்துக்கொல்கிறது. மெலியாரை வலியார் அடக்கக்கூடிய தன்மையை நாம் காட்டில் காண்கிறோம். கள்ளங்கபடமற்ற செம்மறியை வஞ்சக நரி பதுங்கி நின்று தாக்குகின்றது. அதேபோல் நாட்டிலும் ஏற்பட்டுவிடக்கூடாது. ஜனநாயக ஆட்சியில் ஆளும் கட்சி, எதிர்கட்சிகள் என்று சொல்லும் போது ஆளும் கட்சிக்குத் தலைவரும் தொண்டர்களும் இருப்பதுபோல் எதிர்கட்சிகளுக்கும் தலைவர்களும், தொண்டர்களும் இருக்கிறார்கள். நாட்டு வாழ்க்கை நடைபெறவேண்டுமானால் போலீஸார் ஆளும் கட்சிக்குத் துணைபோய் எதிர்கட்சிகளை நசுக்கக்கூடிய அளவில் நடக்கக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





இன்று நடைமுறையில் இருப்பதைப் பார்த்தால் அரசியல் காரணங்களுக்காக வழக்குகள் நீதிமன்றங்களில் தொடரப்படுகின்றன. குறிப்பாக இந்த மன்றத்தில் அங்கம் வகிக்கக்கூடிய திரு. பூவராகன் அவர்கள் மாமனார்மீது ஒரு வழக்கு நீதிமன்றத்தில் தொடரப்பட்டது. அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, அரசியல் காரணங்களுக்காக, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக எதிர்கட்சியினரை அழித்துவிட வேண்டுமென்ற நோக்கத்தில் போலீஸாரின் துணையை ஆட்சியாளர் நாடுகிறார்கள். குற்றம் நடந்த பின்னர்தான் போலீஸ் அங்கு செல்லவேண்டும் என்றில்லை. குற்றங்கள் நடப்பதை போலீஸ் தடுக்கிறார்கள். குற்றம் நடந்த பின்னர் நீதிக்காக நீதிமன்றங்களுக்குச் செல்கிறார்கள். ஆனால் நீதமன்றத்தில் தலையிடுவது எப்படி குற்றமாகக் கருதப்படுகிறதோ அதேபோல் அரசியல் துறையில் உள்ளவர்களானாலும் சரி, அல்லது மற்றவர்களானாலும்சரி போலீஸ் துறையில் தலையிடுவதை இந்த அரசு தடுத்து நிறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக வன்முறையாளர்கள் நாகர்கோவிலில் ஒரு லாரியில் ஏறிச் சென்று ஒரு சிறிய கிராமத்தைத் தாக்கிவிட்டு ஓடி வந்து அமைச்சர்கள் இருந்த இல்லத்தில் புகுந்து அதைத் தொடர்ந்து வந்த பெருமக்கள் அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யும்போது இந்த மன்றத்தில் அங்கம் வகிக்கக்கூடிய நண்பர் ஜேம்ஸ், நண்பர் சௌந்தர பாண்டியன் இவர்கள் அவர்களை அமைதியாகச் செல்லுங்கள் என்று கேட்ட நேரத்தில் அவர்களையும் கைதுசெய்து ஜாமீனில் விடவேண்டுமா? இதற்கு ஒரு வழக்கு தேவையா? இந்த வழக்கை இந்த சர்க்கார் இதற்கு முன்பாகவே வாபஸ் வாங்கியிருக்க வேண்டாமா என்று கேட்கிறேன்.

மேலும், மதுரையில் ஒரு பக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீதும், இன்னொரு பக்கத்தில் காங்கிரஸ்காரர்கள் மீதும் வழக்குகள் செக்ஷன் 107 ப்ரொஸீடிங்க்ஸ் நடந்துகொண்டிருக்கிற நிலையில் இந்த அரசு அதை புனர்பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸாரை கண்ணியமாக நடத்தவேண்டுமென்று ஏற்கனவே கூறப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் இந்த விதமான வழக்குகள் தேவையா? எவ்வளவு வழக்குகளை ஆளுங்கட்சி வாபஸ் வாங்கியிருக்கிறது? போலீஸார்மீது தீ வைத்துக் கொளுத்திய, போலீஸாரைக் கொன்ற வழக்குகளைக்கூட இந்த அரசு வாபஸ் வாங்கியிருக்கிறது. ஆகவே, அரசியல் காரணங்களுக்காகப் போடப்பட்டுள்ள இந்த வழக்குகளை ஏன் வாபஸ் வாங்கக்கூடாது என்று கேட்கிறேன்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட என்றிருக்கும் போலீஸார் வோட்டு சேகரிக்கும் வேலையில் அமர்த்தப்படக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, நாகர்கோவில் தேர்தலில், மற்றும் தென் காசியிலும் போலீஸார் வாக்காளர்கள் மத்தியில் வந்து வோட்டு சேகரிக்கும் ஒரு முறையைப் பார்த்தோம். அது இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஆதாரம் வேண்டுமென்று நீங்கள் கேட்கலாம், நிச்சயமாக ஆதாரம் இருக்கிறது.

தூத்துக்குடியிலிருந்து ஏ.எஸ்.பி. தேர்தல் சமயத்தில் நாகர் கோவிலுக்கு வந்தார். அதற்கு ஆதாரமாக நான் இங்கு நிற்கிறேன். என்னுடைய கண்ணாலேயே நான் கண்டேன். ராமன்புதூர், மறவன் குடியிருப்பு, தளவாய்புரம் முதலிய இடங்களுக்கு போலீஸ் கான்ஸ்டபிள் களுடன் வந்து வோட்டு சேகரிக்கிற முறையில் ஈடுபட்டார். இது நல்லதல்ல. போலீஸார் ஆட்சியில் உள்ளவர்களுக்கு நிச்சயமாக உதவி செய்வார்கள். காரணம், அவர்கள் சிறகொடிந்த பறவைகள்போல் இருப்பவர்கள். அவர்கள் ஆட்சியாளருக்கு நிச்சயமாக நன்மை செய் தால்தான் தங்களுக்கு நன்மை கிடைக்கும் என்று செய்வார்கள்.

[திரு. டி. மார்டின்]

காரணம் அவர்களது முன்னேற்றம் இவர்களது கையில் இருக்கிறது. ஆகவே, எப்படி நாம் நீதிமன்றத்தில் தலையிடக்கூடாது என்றிருக்கிறதோ அதேபோல் போலீஸாரிடமும் தலையிடாமல் இருக்கவேண்டும்.

மேலும், இந்த மானியக் கோரிக்கையில் City Police—Maintenance of Vehiclesக்கு 1967–68-ல் 18 லட்சம் ரூபாய் ஒதுக்கிவிட்டு 1969–70-க்கு 16,60,000 ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். அங்கு குறைவு ஏற்பட்டிருக்கிறது. உடை தளவாடங்கள் என்ற தலைப்பில் 1967–68-ல் 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இப்போது நான்கு லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆபீஸ் கன்டிஜன்ஸில ஐந்து லட்சம் ஒதுக்கப்பட்டது மூன்று லட்சமாக பொதுவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. Quarantine staff-க்கு 1967–68-ல் 64,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது இப்போது ரூ. 42,000 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட போலீஸாருக்கு நிச்சயமாக வாகனங்கள் தேவை. ஆனால் அந்த முறையில் 67–68-ல் 31 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது இப்போது 29 லட்சமாக குறைக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 4 லட்சம் ரூபாய் குறைக்கப்படுகிறது. ரிவார்டுக்காக 1967–68-இல், வீரச்செயல் புரிபவர்களுக்காக, 2,77,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது 1969–70-ல் 2,40,000 ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் 30,000 ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட போலீஸாருக்கு உடையும், தளவாடங்களுக்காகவும் 68–69-இல் 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது 27 இலட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும், மாவட்ட போலீசாருக்கு மருத்துவச் செலவுக்காக, பாவம் அவர்கள் அடிகிடி பட்டு வந்த நேரத்திலோ அல்லது வீடுகளில் உள்ளவர்களுக்கு சுகவீனம் ஏற்படுகின்ற நேரத்திலோ வைத்தியம் செய்து கொள்ளுவதற்காக ஒதுக்கப்பட்டிருப்பது, 1967–68-இல் 2,10,000 ரூபாய். ஆனால் இப்பொழுது 1969–70-இல் 1,63,000 ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக கிரிமினல் இன்வெஸ்டிகேஷன் பணி மிகவும் முக்கியமான பணியாகும். நடக்கின்ற 100 குற்றங்களில் கிட்டத்தட்ட 68 சதவிகிதம் நாம் துப்புகண்டுபிடிக்கிறோம். அதில் தலைசிறந்த போலீஸ் நிர்வாகத்தை வைத்திருந்தும் நாம் இந்தத் துப்புத் துலக்கும் துறைக்காக அதிகப்படியாக மானியம் ஒதுக்கவேண்டிய நேரத்தில் அந்த ஆபீசர்களின் பேக்காக 67–68-இல் 1,30,000 ரூபாயாக ஒதுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது 1,27,000 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஆபீசர்களைக் குறைத்துவிட்டார்களோ என்னவோ, அதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஸ்பெஷல் ரிவார்டுக்காக 1967–68-ல் 2,50,000 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது 69–70-இல் 2,34,000 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்கள் உயிரையே பணயம் வைத்துப் பணிபுரிகின்றார்கள். முன்பு இந்த அவையில் எதிர்கட்சித் தரப்பில் இருந்தவர்கள், இப்பொழுது ஆளுங்கட்சியில் இருக்கிறார்கள், அவர்கள் கூறியதை நினைவுபடுத்த விரும்புகிறேன். உயிரைப் பணயம் வைத்து, கடும் வெயில் என்றும் பாராமல், கடும் மழையென்றும் பாராமல், கடும் இரவென்றும் பாராமல் பணிபுரியும் அவர்கள் ஏதாவது ஒரு ஆபத்திலே சிக்கிவிட்டால் அவர்களுக்கு ரிவார்டு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் ஸ்பெஷல் ரிவார்டுக்காக 67–68-இல 2,50,000 ரூபாயாக ஒதுக்கப்பட்டிருந்தது இப்பொழுது 2,34,000 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. துப்புத் துலக்குவதற்கு, நிச்சயமாக 'பிங்கர் பிரிண்டிங்' மற்றவைகளுக்கும் போட்டோ மிகவும் முக்கியமானது. அதற்கு 67–68-இல் 2,50,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது 2,34,000 ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. அதோடு ஆர்ம்ஸ் அண்டு அம்யூனிஷனுக்கு 67–68-இல் 31 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இப்பொழுது 69–70-இல் 14 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறோம். ஆக இதில் 17 லட்சம் ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றிப் பொதுமக்கள்



[திரு. டி. மார்டின்]

என்ன நினைப்பார்கள்? துப்பாக்கிகள் வெடிக்கும், ஆனால் குண்டுகள் வராது, வாகனங்கள் வரும், பெட்ரோல் இருக்குமோ இல்லையோ, போலீசார் வருவார்கள், ஆனால் அவர்களாகவே நல்லமுறையில் செயலாற்ற முடியுமா என்ற எண்ணம் மக்களுக்குத் தோன்றுதா? எனவே, ஆர்ம்ஸ் அண்டு அம்யூனிஷனுக்குக் குறைத்தது தவறு. இதில் 17 லட்சம் ரூபாய் குறைத்து இருக்கிறார்கள். மேலும், இண்டியன் பீனல் கோடு–இன் கீழ் நிகழ்ந்த சிறு நியூசன்ஸ் குற்றங்கள் தவிர மற்றக் குற்றங்களின் எண்ணிக்கை 1967-இல் 54,331 குற்றங்களாக இருந்தது, 1968-இல் 55,756 குற்றங்களாக ஆகியிருக்கிறது. இதில் 1,425 குற்றங்கள் கூடியிருக்கின்றன. மதுவிலக்குக் குற்றங்களின் கீழ் 1966-இல், காங்கிரஸ் ஆட்சியில், 1,89,000 வழக்குகளாகயிருந்தது, இந்த 1968-இல் 2,53,000 வழக்குகளாகக் கூடியிருக்கின்றது. இம்மாதிரி வழக்குகளைப்பற்றி, நான் பேசும்போது மற்ற மாநிலங்களில், காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களில் மதுவிலக்கை தளர்த்தி இருப்பதைக்காட்டி இங்கே என்ன குறை இருக்கின்றது என்று காட்டலாம். உண்மையிலேயே, தர்மம் தழைத்தோங்கும் தமிழகத்திலிருந்து கூறுகின்றேன், குடிப்பது பாவம் என்று கருதும் நாட்டிலேயிருந்து பேசுகிறேன், என்று நான் பதில்கூற முடியும். இந்த மதுவிலக்குக் குற்றங்கள் அதிகரித்திருப்பதைத் தடுத்திருக்க வேண்டும்.

அடுத்து, தீ விபத்து நிகழ்ச்சிகள் 1968-இல் 4613 நடந்திருக்கின்றன. (மணியடிக்கப்பட்டது). இன்னும் 2 நிமிஷங்கள் கொடுங்கள். என கட்சியில் தொடர்ந்து பேசுபவர்களுக்கு இரண்டு நிமிஷங்களைக் குறைத்துக் கொள்ளுங்கள். ஆகவே, தீ விபத்துச் சம்பவங்கள் 1968-இல் 4,613 நடந்திருக்கின்றன. தீ அணைப்புச் சம்பவங்கள் தொடர்ந்து சங்கிலித் தொடர்போல நடந்துகொண்டு வருகின்றன. சென்னையிலே நடைபெற்றது, திருச்சிக்குச் சென்றது, பின்பு தஞ்சாவூரில் நடைபெற்றது, விழுப்புரத்தில் நடைபெற்றது, இப்பொழுது திரும்பவும் சென்னை கிருஷ்ணாம்பேட்டையில் நடைபெற்றிருக்கிறது. எனவே, இந்தத் தீ வைப்புச சம்பவங்களுக்குத் தீவிரமான, பெரியதொரு நடவடிக்கையை நல்ல முறையில் செய்ய இந்த அரசு புனராலோசனை செய்து இதற்கு ஒரு ஸ்பெஷல் போலீஸ் போர்ஸ்–ஐ அலாட் செய்து, தீவைப்புக்கான காரணங்களைக் கண்டுபிடிக்கவேண்டும். வருஷா வருஷம் தீ வைப்புச் சம்பவங்கள் ஜூன், ஜூலை மாதங்களில் நடைபெறுகின்றன என்று அறிக்கையில் கூறிவிட்டால்மட்டும் போதாது. ஏன் நடைபெறுகின்றது என்பதை ஆராய்ச்சி செய்யவேண்டும், தீவைப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து நடக்கவிடாமல் தடுப்பதற்கு முயலவேண்டும். முன்னாலே காரியங்கள் நடப்பது, பின்னாலே அதைச் சொல்லுவது என்று சொல்லாமல் முன்னாலேயே அதைத் தடுப்பதற்கு நாம் ஆயத்தமாக ஆகிக்கொள்ள வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மேலும், தீ வைப்புச் சம்பவங்கள் சம்பந்தமாக ஸ்பெஷல் ஆபீசர் கொடுத்திருக்கும் ஒரு அறிக்கையை, சப்–ஜுடீஸ்கீழ் வருகின்ற சம்பவங்களை நீக்கிவிட்டு, மற்றச் சம்பவங்கள்பற்றிய அறிக்கையை இந்தச் சட்டமன்றத்தில் அறிவிக்க ஆட்சியாளர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மேலும், கூட்டங்கள் நடத்துவதும், ஊர்வலங்கள் நடத்துவதும் ஜனநாயக உரிமை என்று நான் சொல்லவில்லை, காலஞ்சென்ற முதலமைச்சரவர்கள் இந்த மாமன்றத்திலே பேசியிருக்கிறார்கள். ஊர்வலங்கள் நடத்துவது, கூட்டங்கள் நடத்துவது ஜனநாயக உரிமை. அந்த உரிமையைப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டுமேயல்லாது அதைத் தடுக்கக்கூடிய அளவில் இருக்கக் கூடாது என்று காலஞ்சென்ற முதலமைச்சரவர்கள் சொன்னதை நான் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தடியடி என்று செய்யும் நேரத்தில் கொஞ்சம் குறைத்து, தடியடி செய்யும் நேரத்தில் அதிகம் அடிபடாத அளவுக்குச் செய்யவேண்டும். காலஞ்சென்ற முதலமைச்சரவர்கள் நல்ல முறையில் இன்னொரு யோசனையையும் தெரிவித்தார்கள். தடியடிக்குப் பதில் தண்ணீரை அதிகமாக மக்கள்மீது விட்டால் கூட்டம் கலைந்துசென்று விட வழியிருக்கும். மேல்நாடுகளில் அப்படிப்பட்ட முறை இருக்கிறது.

அந்த முறையை இந்த நாட்டில் ஏன் கையாளக்கூடாது என்று நான் கேட்கவில்லை, காலஞ்சென்ற முதலமைச்சரவர்கள் இந்த மாமன்றத்திலே கேட்டிருக்கிறார்கள். அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

11 துப்பாக்கிச் சூடுகள் இந்த ஆட்சியில் நடைபெற்றிருக்கின்றன. துப்பாக்கிச் சூடுகள் திடீரென்று மின்னல் வேகத்தில் நடைபெறுவதில்லை, அதற்கு அடிப்படைத் தளங்கள் எங்கெங்கோ அமைந்து இருக்கின்றன, அதைப்பற்றிப் போலீசாருக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது அமைச்சரவர்கள் கீழ்வெண்மணிச் சம்பவத்தைப்பற்றி ஒன்று கூறினார்கள். தொழிலாளர்களுக்கும், மிராசுதாரர்களுக்கும் இடையே கசப்புணர்ச்சி ஏற்பட்டது என்று சொன்னார்கள். நிச்சயமாகக் கசப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதைப் போலீசார் நன்கு அறிவார்கள். முன்பே அறிந்திருக்கிறார்கள். அப்படி அறிந்திருந்தும், கீழ்வெண்மணிச் சம்பவம் நடைபெறாமல் தடுப்பதற்கு ஏன் இந்த அரசு தவறிவிட்டது என்று கேட்கிறேன். எனவே, போலீசாரின் கரங்களைக் கட்டுண்ட வகையில் நாம் செய்ய வேண்டியதில்லை. அவர்கள் மிகவும் சுதந்திரமாக நடக்க, அவர்கள் நீதியை நிலைநாட்ட ஆட்சியாளர்களும் சரி, எதிர்க்கட்சியிலே இருப்பவர்களும் சரி, கடமைப்பட்டிருக்கிறார்கள். அதேநேரத்தில் முதலமைச்சரவர்களின் கவனத்திற்கு நான் ஒன்றைக் கூறிக் கொள்வேன். இந்த அரசியல் கேஸ்களை வாபஸ் வாங்கிவிட்டு நல்லதொரு சுமூகமான அரசியல் நிலைமை ஏற்படச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. இரெ. இளம்வழுதி:** பேரவைத் தலைவரவர்களே, இந்தக் காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விழைகிறேன். எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. டி. மார்ட்டின் அவர்கள் இந்த மன்றத்தின் உறுப்பினர் திரு. பூவராகன் அவர்களின் மாமனார்மீது போடப்பட்ட வழக்கு அரசியல் காரணத்தினால் போடப்பட்டதாகவும், அவர் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்கள். அவர்மீது போடப்பட்ட வழக்கு ஒரு வீட்டை நெருப்பு வைத்துக் கொளுத்தியதாகப் போடப்பட்டதாகும். மேலும் அவருடைய மாமனார் விடுதலை செய்யப்பட்டது, சாட்சியம் இல்லை என்று விடுதலை செய்யப்பட்டாரேதவிர பொய் வழக்கு என்று விடுதலை செய்யப்படவில்லை.

அதுமட்டுமல்ல, மதுரையில் நடைபெற்ற சம்பவத்தைப்பற்றியும்; நண்பர் திரு. மார்டின் அவர்கள் குறிப்பிட்டார்கள். மதுரையில் நடைபெற்ற சம்பவத்தைப்பற்றி உண்மையிலேயே காங்கிரஸ்காரர்களும், மற்றவர்களும் வெட்கப்படவேண்டிய காரியமாகும். ஏனென்றால் மதுரையில் நடைபெற்ற சம்பவத்தைப்பற்றிக் கூறும்பொழுது என்னவென்று கவனிக்க வேண்டும். போலீசாரால் எடுக்கப்பட்ட நடவடிக்கை ஒரு கோர்ட்டின் உத்தரவை நிறைவேற்றுவதற்காக எடுத்த நடவடிக்கையாகும். கோர்ட்டிலே போட்ட வாரண்டை மதிக்காமல் இருந்ததால், அதற்குப் பிறகு சில காங்கிரஸ்காரர்களைப் போலீசார் கைது செய்து கோர்ட்டிற்கு அழைத்துச்சென்று, கோர்ட்டில் அவர்களை 15 நாட்கள் ரிமாண்டில் வைக்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டபிறகு, அவர்களை ஜெயிலுக்குப் போலீஸார் அழைத்துச் சென்றார்கள். கோர்ட்டுக்கு மதிப்புக் கொடுப்பதற்காகவும், கோர்ட்டாருக்கு மதிப்புக் கொடுப்பதற்காகவும், ஜெயிலுக்கு அழைத்துச் சென்றார்கள். வழியில் காங்கிரஸ்காரர்கள் கூடிக்கொண்டு, அப்படி அழைத்துச் செல்லப்பட்ட கைதிகளை விடுவிக்கும் நோக்கத்திலே கலவரம் செய்தார்கள். அந்தக் கூட்டத்தினரைக் கலைப்பதற்குப் போலீசார் பிரம்படி செய்து கூட்டத்தைக் கலைப்பது குற்றமா ? அல்லது கூட்டத்தை அனுமதித்து விட்டு கைது செய்யப்பட்டு செல்கிற நபர்களை விடுவிப்பதற்கு விட்டுவிட வேண்டுமா ? இதே நிலையில் காங்கிரஸ்காரர்கள் இருந்தால் அப்பொழுது என்ன நடந்திருக்கும் ?





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ்காரர்கள் என்றால் மீதி இருப்பவர்களெல்லாம் யார் ? 100-க்கு 100 பேரும் காங்கிரஸ்காரர்களா ? பொதுமக்கள் கூடியிருக்கமாட்டார்களா ? பொதுவாகக் காங்கிரஸ்காரர்கள் என்றால், காங்கிரஸ்காரர்களைத்தவிர மற்றவர்கள் தி.மு.க.காரர்கள் என்று சொல்லிவிடலாமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மார்டின் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே நாகர்கோவிலிலே திராவிட முன்னேற்றக் கழகத்தார் அடித்து விட்டு, மந்திரிகள் இல்லத்தில் புகுந்து விட்டார்கள் என்று சொன்னார்.

**திரு. டி. மார்டின் :** வன்முறையாளர்கள் என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆகவே, சாதாரண அளவிலே குற்றச்சாட்டுக் கூறினால், குறிப்பிட்டுக் கூறாமல் பொதுவாகக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம்........

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் சொன்னதற்குப் பிறகு எங்கள் கனம் அங்கத்தினர் எந்த வாதத்திலும் தலையிடவில்லை. அவர்கள் பேச வேண்டுமென்றால் பேசட்டும், நாங்களும் பேசிக் கொண்டிருப்போம்.

**திரு. இரெ. இளம்வழுதி :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறுக்கிட்டதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். கைது செய்யப்பட்டு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட காங்கிரஸ்காரர்களை விடுவிக்க வேண்டுமென்று முதல் நாளே நோட்டீஸ் போட்டு, பேசியது பொதுமக்களா ? காங்கிரஸ்காரர்களா ? (ஆரவாரம்). அந்தக் காங்கிரஸ்காரர்களை விடுவிக்க வேண்டுமெனபதற்காகப் பொதுமக்களுக்கு என்ன அக்கறை ஏற்பட்டு இருககிறது ? காங்கிரஸ்காரர்களை கைது செய்தது நிச்சயமாக போலீஸ் அல்ல. கோர்ட்டினுடைய வாரண்டின்மீது அவர்களைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லும்போது பொதுமக்களுக்கு என்ன அக்கறை இருக்கிறது ? அப்படி இருந்திருக்குமானால் 1967-ம் ஆண்டு இவர்கள் படுதோல்வி அடைந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. ஆகையினால்தான் சட்டம் கெட்டுவிட்டது, அமைதி போய்விட்டது என்று அடிக்கடி பேசுகின்ற காங்கிரஸ்காரர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், நீங்களாகவே ஒரு பிரச்னையை உருவாக்கிக்கொண்டு நீங்களாகவே ஒரு கலவரத்தை உற்பத்தி செய்துகொண்டு, நீங்களே கல்லெறி செய்துகொண்டு, நீங்களே போலீசாரைத் தடுத்து, நீங்களாகவே லாரிகள் மீது பறபல வன்முறைகள் செய்துகொண்டு, பிறகு போலீஸார் தற்காப்புக்காகவும், கோர்ட்டினுடையநடவடிக்கைகளைப் பாதுகாக்கவும் முயற்சி செய்யும் போது நீங்கள் வன்முறையில் ஈடுபட்டால் எப்படி சட்டம், அமைதி காக்கப்படும் என்று எனக்குப் புரியவில்லை. அதே நேரத்தில் காங்கிரஸ் ஆட்சி நடந்திருக்குமானால், நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அப்பொழுது போலீஸார் பேசாமல் பார்த்திருப்பார்களா ? அந்தக் கலவர நபர்களுக்குப் பணிந்து விடுதலை செய்திருப்பார்களா ? அப்பொழுது போலீஸார் முறையைத் திருப்பி, இந்த கைது செய்யப்பட்ட காங்கிரஸ்காரர்களைக் காங்கிரஸ் காரியாலயத்தில் கொண்டுபோய் விட்டிருப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அது மட்டுமல்ல, கடந்த இரண்டாண்டுக்காலமாக காங்கிரஸ் கட்சியினர் தமிழ்நாட்டில் சட்டம் கெட்டு விட்டது.. ... (திரு. டி. மார்டின் எழுந்து நின்றார்).

THIRU Ere. ELAMVAZHUTHI : I am not yielding.

THIRU T. MARTIN : On a point of order, Sir. On page 457 in May's Parliamentary Practice, under the heading "Matters pending judicial decision", it is said "Matters awaiting the adjudication of a court of law should not be brought forward in debate."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொட்டேஷன் தேவையில்லை.

THIRU T. MARTIN: Therefore my point of order is that the Learned Member, who is a lawyer, is referring to the merits of a case which is now pending before a court. What I said was that in the interests of proper administration and proper accord between political parties, it is better not to refer to the cases.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நானும் உறுப்பினர் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். அவர்கள் அந்த வழக்கு பற்றி பேசுவாரானால் நானே குறுக்கிட்டு அதை நிறுத்துவேன். பேரவைத் தலைவருக்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது. வழக்கு மன்றங்களிலே இருக்கிற நிகழ்ச்சிகளைப் பற்றி பேசக்கூடாது என்பதற்கெல்லாம் தீர்ப்புகள் இருக்கின்றன. அதைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நண்பர் மார்டின் அவர்கள் நல்ல திறமையான வழக்கறிஞர். அந்தக் காரணத்தினாலே வழக்கு நீதிமன்றத்திலே இருக்கும்போது அதுபற்றி அங்கத்தினர் பேசக்கூடாது என்று குறிப்பிட்டார். அதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால், மாண்புமிகு நண்பர் இளம்வழுதி அவர்கள் பேசிய நேரத்தில் தாங்கள் குறிப்பிட்டதைப்போல் அங்கு நடைபெற்ற சம்பவங்களைக் குறிப்பிட்டார்கள். வழக்கினுள்ளே அவர்கள் நுழையவில்லை. ஆனால் மார்டின் அவர்கள் பேசுகிற நேரத்தில் தி.மு.க. என்றால், பிறகு வன்முறையாளர்கள் என்று கூறிவிட்டார். அந்த வன்முறையாளர்கள் அமைச்சர்கள் தங்கியிருந்த விடுதிக்குள்ளே வந்து புகுந்துவிட்டார்களே என்று குறிப்பிட்டார்களே, அமைச்சர்கள் அப்படி வன்முறையாளர்களுக்கு அவர்களறையில் பாதுகாப்பு அளித்தார்களா? அது வழக்கினுடைய தன்மையைக் கெடுக்காதா? அது அங்கத்தினரவர்களுக்குத் தெரியாதா என்றுதான் கேட்கவிரும்புகிறேன்.

**திரு. இரெ. இளம்வழுதி:** நண்பர் திரு. மார்டின் அவர்கள் சிறந்த வழக்கறிஞர் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நானும் அப்படித்தான் எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால்..........

THIRU K. VINAYAKAM: This is an insinuation. Either he must withdraw it or you must instruct him. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இளம்வழுதி அவர்கள் இந்த மன்றத்திலே எந்த உறுப்பினரையும், இன்னொரு உறுப்பினரைக் குறைவாகவோ, குற்றஞ்சாட்டியோ, இழிவாகவோ பேசுவது முறையாகாது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** திரு. இளம்வழுதி, எண்ணிக்கொண்டிருந்தேன் என்று தான் சொன்னார். அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டேன் என்று இன்னும் சொல்லவில்லையே.

**திரு. இரெ. இளம்வழுதி:** ஆனால், நான் அந்த மதுரை சம்பவத்தைப் பற்றி, நிகழ்ச்சிகளை எடுத்துச் சொன்னேனே தவிர, அந்த 107 கேஸ்களைப் பற்றிச் சொன்ன புகார்களைப் பற்றியோ, காங்கிரஸ்காரர்கள்தான் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்றோ சொல்லவே இல்லை. அதைப்பற்றிக் குறிப்பிடவில்லை.

மேலும், என்னுடைய நண்பர் திரு. மார்டின் அவர்கள் நாகர்கோவில் வன்முறையைப் பற்றியும் சொன்னார்கள். அங்கே நடைபெற்றது வன்முறைகள், அந்த வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டது காங்கிரஸ்காரர்கள் என்பது அனைவருக்குமே தெரியும். நான் அதைப்பற்றி மேலும் பேச விரும்பவில்லை,





இந்தக் காவல் துறை மானியத்தின்மீது ஒரு முக்கியமான கருத்தை சொல்லாமல் இருக்க முடியவில்லை. மது விலக்குக் கொள்கை. அந்த மதுவிலக்குக் கொள்கை என்பது தத்துவார்த்த ரீதியில் மிகச் சிறந்த கொள்கையாகும். ஆனால், நடைமுறையில் கொஞ்சங்கூட ஒத்துவரக்கூடிய திட்டமாக இல்லை என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், மது விலக்குக் கொள்கையை, அகில இந்தியா பூராவும் அமல் செய்யவேண்டிய நிலையில் இருக்கிற காங்கிரஸ், காங்கிரஸ் சர்க்கார் இருக்கிற பல மாநிலங்களில் மதுவிலக்கை எடுத்துவிட்டார்கள். நம்முடைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சி. சுப்பிரமணியம் அவர்கள் சென்ற வாரம் ராம்கார் ராஜாவை பீகார் மந்திரிசபையில் சேர்த்ததற்காக தன்னுடைய ராஜிநாமாவை காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பினார்கள். திரு. நிஜலிங்கப்பா அவர்கள் மைசூர் முதலமைச்சராக இருந்தபொழுது, "நான் மதுவிலக்கை ரத்து செய்கிறேன், என்னை யாரும் கேட்கமுடியாது," என்றார்கள். அந்த நேரத்தில் திரு. சுப்பிரமணியம் அவர்களோ, இங்கு இருக்கிற காங்கிரஸ்காரர்களோ, வேறு யாராவது கொஞ்சமாவது எதிர்த்து பேசினார்களா? அவர் சொன்னதை எதிர்த்துச் சொன்னார்களா? திரு. சி. சுப்பிரமணியம் ராஜிநாமா செய்தாரா? இல்லை. அதற்கு மாறாக, திரு. நிஜலிங்கப்பா அவர்களுக்கு பரிசு கொடுக்கின்ற முறையில், முதலமைச்சர் பதவியிலிருந்து அவர் அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராக பதவி உயர்வு செய்யப்பட்டார்கள். அந்த முறையிலே பார்த்தால், காங்கிரஸ் கட்சியினர், மதுவிலக்கின் மீதோ, அந்த கொள்கையின்மீதோ நம்பிக்கையில்லாமல் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, மது சாப்பிட்டவனை நம்பவைப்பதே மிகுந்த சிரமமாக இருக்கிறது. வழக்கு மன்றங்களில் மதுவிலக்கு சம்பந்தப்பட்ட வழக்குகள் நிரூபிக்க முடியாத நிலைமையில் இருக்கின்றன. (மணி அடிக்கப்பட்டது) இடையிலே கொஞ்சம் தடுத்திருந்ததாலே, 3 நிமிஷம் கொடுங்கள்.

சாராயம் பற்றி வழக்கு மன்றங்களில் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்கள். அண்மையில் ஒரு வழக்குக்கு சுப்ரீம் கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டது. "அந்த வழக்கில் சாராயம் என்றால், சப்-இன்ஸ்பெக்டரோ, அல்லது மதுவிலக்கு அதிகாரியோ, 'வாசனை' என்று சொன்னால் அது எவிடென்ஸ் ஆகாது. ஒருவர் 'எவிடென்ஸ்' தருவதற்கு அதைப்பற்றி தெரிந்த அளவுக்கு அவருக்கு டெக்னிக்கல் க்வாலிஃபிகேஷன் இருக்கவேண்டும். ஆகையினால், சோதனைச் சாலையில் 'கெமிக்கல் அனலிஸிஸ்' செய்து அது சாராயம் என்று விஞ்ஞான ரீதியில் சொன்னாலொழிய சாராயம் ஆகாது" என்று சொல்லி, சுப்ரீம் கோர்ட்டில், வழக்கிலிருந்தவர்களை விடுதலை செய்தார்கள். அது மட்டுமல்ல, சென்ற ஆண்டு சினிமா நடிகை பிராந்தி குடிப்பதாக வழக்கு போடப்பட்டு, அந்த வழக்கில் சினிமா நடிகைக்கு கீழ் கோர்ட்டிலே தண்டனை அளிக்கப்பட்டது. ஆனால், சென்னை நீதி மன்றத்தில் வழக்கை விசாரித்த நீதிபதி அவர்கள், ஒருவர் குடித்திருந்தால், அந்த வாசனையைக்கொண்டு, அவர் புரஹிபிட்டட் ஆல்கஹாலைக் குடித்திருப்பதாக அர்த்தம் அல்ல, பிராந்தி குடித்திருப்பதாக அர்த்தம் அல்ல, எனவே அவர்களது இரத்த பரிசோதனைக்கும், சிறுநீர் பரிசோதனைக்கும் பிறகுதான் அதைத் தீர்மானிக்கமுடியும் என்று நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. ஏறக்குறைய, சாராயம் எது என்று சொல்ல முடியாது, அதைக் குடித்தவர்களையும் நிரூபிக்க முடியவில்லை. ஆகையினால் இந்த இரண்டு கருத்துக்களை வைத்துப் பார்த்தால் நிறைய வழக்குகள் வழக்குமன்றங்களில் நிரூபிக்க முடியவில்லை.

அது மட்டுமல்ல, நமது காவல் துறை இந்தியாவிலே சிறந்த துறை என்ற பெயர் வாங்கியது. ஆனால் மதுவிலக்கை அமல் செய்கின்ற வகையில், தங்களுடைய சிரத்தையை எல்லாம் மதுவிலக்கு குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலேயே செலவிடுகிறார்கள். கொலை, கொள்ளை, கலவரம் இந்த வழக்குகளிலே இன்வெஸ்டிகேஷன் தேவையிருக்கிறது. ஆனால் சாராய வழக்குகளிலே இன்வெஸ்டிகேஷன் தேவையில்லை. எனவே, போலீஸார் தங்களுடைய சிரமங்களை எல்லாம், செயல்முறைகளையெல்லாம் செலவிட்டு சாராய வழக்குகளிலே ஈடுபடுகிறார்கள். இதனால் நம்முடைய காவல் துறையினருக்கு இருக்கிற திறமை வீணாகிறது. எனவே மதுவிலக்கை

[திரு. இரா. இளம்வழுதி] [1969 மார்ச் 15

எடுத்துவிட்டால், வருமானம் வரும், உணவுப் பிரச்னைதீரும், போலீஸ் நிர்வாகம் நன்றாக இருக்கும். கோர்ட்டுகளிலே நாம் அவமானப்படத் தேவையில்லையென்ற முறையிலே நான் இந்த அரசை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு வேண்டாம் மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு மரியாதை கொடுப்பதற்காக இந்த ஓர் ஆண்டு மது விலக்கை வைத்திருந்து, அடுத்த ஆண்டிலாவது நிச்சயமாக நாம் மது விலக்கை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்பொழுது மணி 11 ஆகிவிட்டது. இன்னும் நமக்கு 2½ மணி நேரம்தான் இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் 1½ மணி நேரம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். பாக்கி இருக்கிற ஒரு மணி நேரத்தில், 14 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஆகவே, உறுப்பினர் ஒவ்வொருவரும் ஐந்து நிமிடத்திற்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00 ***திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்** : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தின் மீது என்னுடைய கருத்துக் களைக் கூற விரும்புகிறேன். இப்பொழுது போலீஸ் டிபார்ட்மெண்டில் அவர்களுக்கு இருந்த கிரிப் குறைந்து, மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. இந்த அரசாங்கம் வந்த பிறகு போலீஸ் அதிகாரிகள் கலவரம் நடக்கின்ற இடங்களில் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருக்க வேண்டிய நிலை இருக்கிறது. அதை முதல் அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக விளக்கி போலீஸ் இலாகாவிற்கு நல்ல கிரிப் இருக்கும்படி செய்தால்தான், எதிர்காலத்தில் நல்ல பாதுகாப்பு இருக்கும். இல்லையென்றால், யாருக்கும் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்படும். அமைச்சர்களுக்குக் கூட பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டு விடுமோ என்று நான் அஞ்சக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் இதிலே நல்ல கவனம் செலுத்தி, போலீஸ் இலாகாவிற்கு ஒரு நல்ல கிரிப் ஏற்பட வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டம், ஒழுங்கு நிலை குலைவதாக காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள். ஆனால், அதே நேரத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் குலைப்பதற்கு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்து வருகிறார்கள். அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் மதுரையில் நடந்த சம்பவங்களும், மற்ற சம்பவங்களும் இருக்கின்றன. இப்படி நடந்து கொண்டு போவதை விட்டுக்கொண்டே போனால், மிகவும் மோசமான நிலை ஏற்படும்.

(திரு. சு. துரைசாமி தலைமை)

கொள்ளை, கலவரம், கல் எறி முதலியவைகள் செய்யக்கூடிய நிலையில் இருப்பதை, நல்லவிதமான நடவடிக்கை எடுத்து, தடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்கைப்பற்றிக் கூறினார்கள். மதுவிலக்கு இந்த மாநிலத்தில் ஃபெய்லியூர் ஆகிவிட்டது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். கள் எங்கு பார்த்தாலும் கிடைக்கிறது. வீடுவீடாக மது கிடைக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலே பனைமரங்களிலிருந்து பதநீர் இறக்குவதற்கு லைசென்ஸ் வழங்கப்படுகிறது. ஆனால் ஒரு பனைமரத்தி லிருந்து கூட பதநீர் இறக்குவது கிடையாது. கள்ளைத்தான் இறக்குகிறார் கள். கள் பப்ளிக்காக விற்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதில் போலீஸ் இலாகா மிகவும் கவனம் செலுத்தவேண்டும். இல்லையென்றால் எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் அவர்கள் சொன்னதுபோல மதுவிலக்கை கைவிட்டு விடவேண்டும். இதனால் நமக்கு பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு, மதுவிலக்கும் நல்ல முறையில் நடக்காமல் இருக்கிறது. ஆகவே, இதை நல்ல முறையில் கண்காணிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மதுவிலக்கு விஷயத்திலே போலீஸ்



1969 மார்ச் 15] [திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்]

இலாகாவில் ஹெட்கான்ஸ்டேபிள்களும், அதற்குக் கீழ் மட்டத்தில் இருப்பவர்களும் குற்றவாளிகளுக்கு உடந்தையாக இருக்கிறார்கள். அவர் களுக்கு பல இடங்களில் வாடிக்கை கொடுக்கப்படுகிறது. ஒரு மாதத்திற்கு ஒரு கேஸ் போடுவது என்று அவர்களுக்குள் எக்ரிமெண்டு. ஒரு மாதத்திற்கு ஒரு தரம் கேஸ் போட்டால், ரூ. 40, 50 அபராதம் செலுத்தவேண்டியிருக்கும், ஒரு நாள் மது வாங்குகிற தொகையிலிருந்து அதை செலுத்திவிடலாம். இம்மாதிரி செய்துகொண்டு இருக்கிறார்கள். இதைத்தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் சீட்டாட்ட கிளப்புகள் அதிகமாக ஏற்பட்டுக்கொண்டிருக் கின்றன. கிளப்புகளில் எப்பொழுது பார்த்தாலும் கள் சாராயம் தான். கள் சாராயம் இல்லாத சீட்டாட்ட கிளப்பே கிடையாது. இப்படிப்பட்ட சீட்டாட்ட கிளப்புகளைத் தடை செய்யவில்லை என்று சொன்னால், கிராமங்கள் சீர்குலைந்துவிடும், கிராமத்திலுள்ள இளைஞர்கள் கெட்டுவிடுவார்கள். ஆகவே, அரசு கட்டாயமாக இந்த சூதாட்டத்தை நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீதிகள் தோறும் பார்மஸி ஏற்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் பார்மஸிக்கு எதற்காக லைசென்ஸ் வாங்குகிறார்கள் என்றால், போதை தரக்கூடிய சாமான்களை விற்பதற்குத்தான். மருந்துகள் என்ற பெயரால் போதை தரக்கூடிய வஸ்துக்களை விற்கிறார்கள். ஆகவே, அதிலே கவனம் செலுத்தி, போதை தரக்கூடிய வஸ்துக்களை அப்படிப்பட்ட பார்மஸிகளில் விற்கக்கூடாது என்று தடை செய்ய வேண்டும். இல்லை யென்றால், அப்படிப்பட்ட பார்மஸிகளுக்கு லைசென்ஸ் கொடுப்பதை நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சந்தேகக் கேஸ்கள் போடுகிறார்கள். சந்தேகக் கேஸ்கள் போடுகிறோம் என்று சொல்லி ரொம்பவும் மரியாதையான ஆட்களைக்கூட பிடித்து கேஸ் போட்டுவிடுகிறார்கள். அவர் எந்த ஊர், யார் என்பதை விசாரணை செய்யாமலேயே, பிடித்து ரிமாண்டிற்கு அனுப்பிவிடுகிறார்கள். பிறகு அவர் வக்கீலைப் பிடித்து, வக்கீல் பீஸ் கொடுத்து, வழக்காட வேண்டிய நிலை இருக்கிறது. சந்தேகக்கேஸ்கள் பிடிக்கும்பொழுது, அவர் எந்த ஊர்க்காரர், சந்தேகத்திற்கு லாயக்கானவரா என்பதைப்பற்றியெல்லாம் விசாரித்த பிறகுதான் ரிமாண்டுக்கு அனுப்பவேண்டும். அம்மாதிரி சூழ்நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். அதனால் பெருத்த கஷ்டம் ஏற்படுகிறது. எங்கு பார்த்தாலும் சந்தேகக் கேஸ்கள் போடப்பட்டு, மரியாதைப்பட்டவர்கள் கூட ரிமாண்டுக்கு அனுப்பப்படும் நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட தொந்தரவுகளை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெடிஷன்களை விசாரிப்பதற்கு போலீஸ் ஸ்டேஷனில் விசாரணை நடக்கும்பொழுது போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனால், இன்றைக்கு நாளைக்கு என்று வாய்தா போட்டுக்கொண்டே போகிறார்கள். காலையில் வா, மாலையில் வா, மத்தியானம் வா என்று இப்படி ஒத்திப்போட்டுக் கொண்டிருப்பதால், போகிறவர்கள் ஜீவனத்திற்கு வேலைக்குப் போய் வேலை செய்யமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. நிச்சயமாக ஒரு தேதி குறிப்பிட்டு, அந்தத் தேதியில் விசாரணை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் அதிகாரிகளில் சில பேர்கள் மோசமாக இருக்கிறார்கள். சனவரி 17-ம் தேதியன்று விருதுநகரில் நானும், சட்டமன்ற அங்கத்தினர் காரைக்குடி திரு. மெய்யப்ப செட்டியார் அவர்களும் கடைவீதி ஓரத்தில் காரை நிறுத்திவிட்டு, கொஞ்சம் சாமான் வாங்குவதற்குச் சென்று கொண்டிருந்தோம். விருதுநகர் டெப்யூடி சூப்பரிண்டெண்டெண்டு அவர்களும் சில நிமிடங்கள் கழித்து, எங்களுக்குப் பின்னால் அவர் காரை நிறுத்திவிட்டு அவரும் சில சாமான்கள் வாங்குவதற்குச் சென்றார். அவர் சாமான் வாங்கிக்கொண்டுவந்த பிறகு அவர் காரை எடுக்கிற நேரத்தில், அவர் காரை ஸ்டார்ட் செய்ய முடியவில்லை. எங்கள் காரை எடுத்தால்தான் அவர் காரை தள்ளி எடுக்க முடியும். எங்கள் காரை எடுக்கச்சொன்னார். நாங்கள் டிரைவர் இல்லை, இதோ சில நிமிஷங்களில்

காரை எடுத்துவிடுகிறோம் என்று சொன்னோம். உடனே அவர் உங்களையெல்லாம் சார்ஜ் செய்யவேண்டும். நீங்கள் யார் என்று கேட்டார். உங்கள் கார் இருக்கும் இடத்திலேயேதான் என்னுடைய காரும் இருக்கிறது என்று சொன்னேன். இரண்டு பேர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது கொஞ்சம் அவமரியாதையாக அவர் பேச ஆரம்பித்தார். 'நீ யார்' என்று கேட்டதற்கு, நான் யாரோ ஒருவன். ரோடில் இருப்பவன், உங்கள் காருக்கு வருவது எங்கள் காருக்கும் வரட்டும் என்று சொன்னேன். அதற்குப் பிறகு மெய்யப்ப செட்டியார் அவர்கள் கொஞ்சம் சமாதானப் படுத்தி, டயரை ஒடித்து, ஸ்டார்ட் பண்ணாமலேயே காரைக் கொஞ்சம் தள்ளி நிறுத்தினார். பிறகு அந்தக் காரை தள்ளி எடுத்துக்கொண்டு போனார்கள். சட்டமன்ற உறுப்பினருக்கு இம்மாதிரி ஒரு நிலை ஏற்பட்டால் மற்றவர்களின் நிலை எப்படி இருக்கும்? இதிலெல்லாம் கொஞ்சம் கவனம் செலுத்தி இந்தக் குறைகளையெல்லாம் நீக்கவேண்டும். இம்மாதிரி சில அதிகாரிகள்தான் நடந்துகொள்கிறார்கள். மற்ற அதிகாரிகள் நல்லவர்களாக இருக்கிறார்கள். ஒருசிலர்தான் அம்மாதிரி இருக்கிறார்கள். இதையெல்லாம் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் டிபார்ட்மெண்டிலே கீழ்நிலையில் இருப்பவர்களுக்கு சம்பளத்தை உயர்த்தவேண்டும் வீடுவசதி செய்து தரவேண்டும். எல்லா போலீஸ் ஸ்டேஷன்களிலும் போலீஸ் லைன் கட்டிக்கொடுக்கவேண்டும். அவர்களுக்கு வீட்டுவசதியும், சம்பள வசதியும் செய்துகொடுத்தால், லஞ்சம் குறையும். இதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு சர்க்கிளுக்கு ஒரு ஜீப் கட்டாயம் கொடுக்கவேண்டும். மோசமான டிபார்ட்மெண்டுகளுக்கு ஜீப் கொடுக்கும்பொழுது. போலீஸ் துறைக்கு ஜீப் இல்லை என்று சொல்லக்கூடாது. எல்லாப் போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் டெலிபோன் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. எம். கண்ணப்பன்:** மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற காவல் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டிலிருக்கிற காவல் துறை பல்வேறு துறைகளிலும் தன்நிகரற்று உலகமெல்லாம் புகழ் பெறக் கூடிய வகையில் கடந்த காலத்தில் பணியாற்றிக்கொண்டு வந்திருக்கிறது. தமிழகத்தில் காவல் துறை சிக்கனத்திற்கும், திறமைக்கும் பெயர்பெற்று விளங்குகிறது என்பதை இங்கு இருக்கிற அமைச்சர்களோ, அரசியல் வாதிகளோ கூறவில்லை. போலீஸ் துறையிலே ஆபு மலையிலே இருக்கிற இரகசியப் போலீஸ் பயிற்சிக் கல்லூரியின் ஆராய்ச்சியாளர் தமிழகக் காவல் துறை திறமை மிக்க காவல் துறை என்று புகழ்ந்திருக்கிறார். அப்படிப்பட்ட காவல்துறைக்கு நம்முடைய தமிழக அரசு செலவு செய்யும் தொகையைப் பார்த்தால், மத்திய அரசு தம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் 13·9 சதவிகிதம்தான் காவல்துறைக்கு செலவு செய்கிறார்கள். அதே சமயத்தில அஸ்ஸாம் மாநிலத்தை எடுத்துக்கொண்டால் வரவு செலவுத் திட்டத்தில் 10 சதவிகிதம் செலவு செய்கிறார்கள். ஆனால், தமிழக அரசு வரவு செலவுத் திட்டத்தில் பார்த்தால், 4·9 சதவிகிதம் மட்டுமே இங்கே செலவு செய்கிறார்கள். குறைந்த அளவில் செலவு செய்தாலும் கூட, சிறந்த முறையில், செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

மதுவிலக்கு சம்பந்தமாக தீவிரமான அக்கறை எடுத்துக் கொண்டு, அதிகாரிகளும் நல்ல வகையில் செயல் பட்டுக்கொண்டு வருகிறார்கள். சுற்றிலும் உள்ள மாநிலங்களில், கேரளாவை எடுத்துக்கொண்டால், அங்கே மதுவிலக்கு அமுலில் இல்லை, அதே போல, மைசூரை எடுத்துக்கொண்டாலும், ஆந்திர மாநிலத்தை எடுத்துக்கொண்டாலும், அங்கெல்லாம் மதுவிலக்கு இல்லை. ஆனால், நம்முடைய தமிழகத்தில் மதுவை ஒழித்துக்கட்ட நல்ல முறையில் வேலை செய்யப்படுகிறது. ஏராளமான குற்றங்களை காவல் துறையினர் கண்டுபிடித்திருக்கிறார்கள். 1968-ல் மட்டும், மதுவிலக்குக் குற்றங்கள் 2,53,607 கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன. அந்த வகையில் மதுவிலக்குத் தீவிரமாக அமல்



படுத்தப்பட்டு வருகிறது. காவல் துறையினரின் அக்கறை பாராட்டத் தக்கது. ஆனால், எனக்கு முன்னால் பேசிய ஒரு உறுப்பினர் குறிப்பிட்ட போது, இங்கே மதுவிலக்கை எடுக்க வேண்டும் என்கிற தன்னுடைய கொள்கையை குறிப்பிட்டார்கள். அதை ரத்து செய்வது என்பது, நிச்சயமாக நாட்டிற்கு, சுதந்திரத்திற்காகப் போராடி வாங்கித்தந்த மகாத்மா காந்தியிலிருந்து, நம்முடைய மறைந்த பேரறிஞர் அண்ணா வரை, பெரியோர்கள் நாட்டின் நன்மைக்காக மதுவிலக்கை அமுல் படுத்த வேண்டும் என்கிற கருத்தைச் சொல்லி வந்தார்கள். அதிகப்படியாக காவல் துறையினரின் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு, காந்திய தத்துவத்தையும், அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையையும் எடுத்துச் சொல்லி, மதுவிலக்கை தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்னை நகரத்தைப் பொருத்த வரையில், காவல் துறையினர் புதிய நெருக்கடிகளைச் சமாளித்திருக்கிறார்கள். 1968-ல், குறிப்பாகச் சொல்லப் போனால், ஆண்டு முதலில் நடந்த நிகழ்ச்சி உலகத் தமிழ் மாநாடு. அந்த மாநாடு சென்னை மாநகரத்தில் நடந்தபோது, அந்த நேரத்தில் போக்கு வரத்தை எடுத்துக்கொண்டால், அல்லது வேறு, வேறு கண்காணிப்புக்களை எடுத்துக் கொண்டால், காவல்துறை வெகு திறமையாக செயல் பட்டு, வெளிநாட்டு அறிஞர்களெல்லாம் நம்முடைய காவல் துறையை புகழ்ந்து சென்றிருக்கிறார்கள். அறிஞர் அண்ணாநகரில் நடந்த உலக வாணிப சந்தையில், சட்டம் ஒழுங்கு இவற்றை பாதுகாத்து, எந்த விதமான இடையூறுகளும் இல்லாமல், திறமையாகப் பணிசெய்திருக்கிறார்கள். அதே மாதிரி, சட்டக்கல்லூரி மாணவர்களுக்கும் போக்கு வரத்துத் துறையினருக்கும் மோதல் நடந்தபோதும், திறமையாகச் சமாளித்திருக்கிறார்கள். அதேமாதிரி, குடிசைகள் தீப்பற்றி எரிந்தபோதும் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மக்களுக்கு உதவிகள் கொடுப்பதிலும், அங்கங்கே தீப்பிடிக்காத வகையில், பரவாமல் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துச் சமாளித்திருக்கிறார்கள். ஒன்றே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சமீபத்தில் மத்திய சர்க்கார் ஊழியர்கள் நாடு பூராவும் வேலைநிறுத்தம் செய்தபோது, டெல்லியில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. இன்னும் பல்வேறு மாநிலங்களில் கண்ணீர் புகை அடிக்கப்பட்டது, தடியடி பிரயோகம் நடந்தது. என்றாலும்கூட, நம்முடைய தமிழகத்தில் குறிப்பாக சென்னையில் ஒருவர்கூட கைது செய்யப்படாத அளவிற்கு காவல் துறையினர் திறமையாக வேலைசெய்து, ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் மத்தியில் திறமையைக்காட்டி செயலாற்றியிருக்கிறார்கள். அந்த அளவிற்குக் காவல் துறையை எவ்வளவு பாராட்டினாலும் தகும். வெகு நல்ல முறையிலே பணியாற்றியிருக்கிறார்கள்.

அதேநேரத்தில், வேறொரு பிரச்சனையையும் குறிப்பிட விரும்புகிறேன். ஏனைய அரசு ஊழியர்கள் பெறுகிற அளவிற்கு இல்லாமல் இருக்கிற இவர்களுடைய சம்பளம் சட்டமன்றத்தில் எதிர்கட்சியாக இருந்த காலத்திலிருந்து, இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கும்போதும், குறிப்பிட்டிருக்கிறோம் அதைப்பற்றி. இந்த ஆண்டு முடியாவிட்டாலும், அடுத்த ஆண்டிலாவது, அவர்களுடைய சம்பள விகிதத்தை அதிகப் படுத்தித் தரவேண்டும். நாடுகாக்கும் பணிபுரிகிறவர்களுடைய நிலைகளைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு நம்மிடம் இருக்கிறது.

சம்பளத்தை, திருத்தப்படுவது பற்றி ஆராய்ந்து, அவர்களுடைய குடும்பங்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். அவர்களுடைய குழந்தைகள் படிக்க, எதிர்காலத்தில் வேலை வாய்ப்புகள் பெற, எந்த விதமான சலுகைகள் கொடுக்கப்படவேண்டும் என்பதைக் கவனிக்க வேண்டும். குறிப்பாக, போக்குவரத்துபடி, டி. ஏ., கொடுப்பது மிக மிகக் குறைவாக இருக்கிறது. இவைகளையெல்லாம் அதிகப்படுத்த வேண்டும் இன்றைக்கு ஆய்வாளருக்கு ரூ. 3·50 என்றும், காவலருக்கு ரூ. 1·50 என்றும் இருக்கிறது. அவற்றை மாற்றி அதிகப்படுத்த வேண்டும். அவர்களுடைய செலவிற்குப் போதுமான வகையில் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கூட, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் குறிப்பிட்டது போல, கிராமப்பகுதிகளில் நகர் பகுதிகளில், காவல் நிலையங்களில் நல்ல முறையில் கண்டிப்பாக பணி செய்ய, தொலைபேசி மூலம் இணைக்கவேண்டும். அந்த வசதி செய்து கொடுக்கவேண்டும். சிற்றூர்களுக்குச் செய்திகள் அனுப்ப, பொது மக்களோடு தொடர்புகொள்ள, ஆபத்துகளை அறிவிக்க உடனடியாக அந்த நிலையங்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படவேண்டும்.

இவ்வளவு வசதிக் குறைவில் பணியாற்றும் காவல் துறையினரை பாராட்ட வேண்டிய நல்ல ஒரு வாய்ப்பு இருக்கும்போது, அதைச் செய்ய வேண்டுமே அல்லாது, காங்கிரஸ் கட்சியினர் கூறுகிறபடி, ஏதோ ஆளும் கட்சியோடு சேர்ந்து கொண்டார்கள், சலுகை காட்டுகிறார்கள் என்று குறிப்பிடுகிறார்கள். காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது, எந்த எந்த செயல்கள் நடந்திருக்கின்றன என்று பார்த்தால் தெரியும். இந்தி எதிர்ப்பு போராட்டம் நடந்தபோது, மக்கள் எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளானார்கள்? அதைப்பற்றி இந்த மாமன்றமும், தமிழகமும் என்றைக்கும் மறந்துவிட முடியாது. இவர்கள் இப்படிக் குற்றங்களைச் சொன்னாலும், காவல் துறையினர், கட்சி பேதம் இல்லாமல், நாட்டு நன்மைக்காக, செயல் ஆற்றிவரும் காவல்துறையை பாராட்டி ஒரே ஒரு கருத்தைச்சொல்ல விரும்புகிறேன்.

தாற்காலிக சபாநாயகராக இருக்கும் தலைவரவர்கள் திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர். திருப்பூர் தொகுதியில் ஒன்ரேகால் லட்சம் மக்களுக்கு மேலாக இருந்தும், அங்கே ஒரே ஒரு காவலர் நிலையம் தான் இருக்கிறது. அங்கே இரண்டாக ஆக்கவேண்டும் என்று மாண்பு மிகு முதல் அமைச்சர் அவர்களிடத்திலேயும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலேயும் முறையிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும். பல்வேறு நகரங்களிலும், குறைந்த மக்கள் தொகை இருந்தாலும், அதிகப்படியான காவல் நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே, திருப்பூரிலேயும் மற்றொரு காவலர் நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த மானிய கோரிக்கையை வரவேற்று, தமிழக போலீஸை நல்ல முறையில் பாராட்டி, விடைபெறுகிறேன், வணக்கம்.

***திரு. எ பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இம்மானிய கொள்கை விளக்கக் குறிப்பின் ஆறுவது பக்கத்தில், இருந்த பிழையை எங்கள் தரப்பில் எடுத்துக்காட்டியதற்கிணங்க திருத்தியதற்காக நன்றி.

முதலில் காவல் துறையினரின் அவசரமான கோரிக்கைகளை முன் வைக்க விரும்புகிறேன். இன்றைக்குத் தினப்படி ரூ. 1.25 தான் கொடுக்கப்படுகிறது. இது 1928-ம் வருஷத்திலிருந்து இருக்கிறது. இங்கே வேலை செய்பவர்களுக்கு 10 அணா (62பைசா) கொடுக்கப்படுகிறது. அது 'ரீடிகுலஸ்'' பரிகாசத்திற்கு உரியது. அதை அவசரமாக மாற்ற வேண்டும். இங்கு வர பஸ்-பாஸ் கூட இல்லாத கஷ்டம் இருக்கிறது. போன ஆகஸ்டு மாதம் பணி செய்ததற்கு இன்னமும் படி கொடுக்கப் படவில்லை என்று அறிகிறேன். தீயணைக்கும் படையினருக்கு உள்ள அளவு





சம்பளத்தையும் படியையும் உயர்த்தித்தர வேண்டும் என்று, மூன்றாவது முறையாக பட்ஜட் கூட்டத்தில் வற்புறுத்துகிறேன். காவல் துறையினரின் க்வார்ட்ர்ஸ்களில் பல இடங்களில் விளக்கு வசதி சரியாக இல்லை. மாலை 6 மணி முதல் 9 மணி வரை மட்டும் விளக்கு எரிகிறது. உடனடியாக அதைச் சரிசெய்து கொடுக்க வேண்டும்.

ஸ்பெஷல் பிராஞ்ச் போலீசார் லாரிகளில் இங்கே வட்டமிடுகிறார்கள் என்று வெகு நம்பகமாக அறிகிறேன். அவர்கள் சட்டமன்றம் இருக்கும் இடங்களில் வரக்கூடாது. அதைக் கண்டிப்பாக அமுல் படுத்த வேண்டும் என்று முதல் அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, இங்கு ஒரு பிரசுரம் இருக்கிறது. காவல் துறை அதிகாரிகளுக்குக் குடியரசுத் தலைவர் பதக்கங்களை ஆண்டுதோறும் வழங்கி வருகிறார். இந்தப் பதக்கங்கள் இவர்களுக்கு ஏன் தரப்பட்டுள்ளன? ஜனநாயகத்தை ஒடுக்கியதற்காக, உழைப்பாளிகளை ஒடுக்கியதற்காக, தொழிலாளர்களை ஒடுக்கியதற்காக கொடுக்கப்பட்ட பதக்கங்களே என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. சமூக விரோத சக்திகளை ஒடுக்கியதற்காக என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. யார் அந்தச் சமூகவிரோத சக்திகள் யார் சமூக விரோதி இன்று சமூக விரோதி நாளை அமைச்சர் என்பதை மறக்க வேண்டாம். 1946-லே ரயில்வே வேலை நிறுத்தத்தை ஒடுக்கியதற்கு இப்போது பதக்கம் என்று இருக்கிறது. தெலிங்கானா விவசாயிகளின் இயக்கத்தை ஒடுக்கியதற்கு பதக்கம், திரு. சுரேந்திரன் என்பவரைக் கைது செய்து அமைதியை நிலைநாட்டியதற்காக பதக்கம் என்று சொல்லப்படுகிறது. பதக்கங்கள் கொடுப்பது என்பது இந்த இலாகாவுக்கு மக்களின் மேல் இருக்கிற குரோதத்தையே காட்டுகிறது. ஆகவே மாறிவரும் நிலைமைக்கேற்ப குடியரசுத் தலைவர் பதக்கங்கள் இந்த இலாக்காவிற்குக் கொடுக்கும் வழக்கத்தைத் திருத்தியமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலேயே சுட்டவர்களுக்கெல்லாம் பதக்கங்கள் வழங்கலாம் என்று இன்னும் ஒரு பத்தாண்டுகளுக்கு பின்னே வரும் சர்க்கார் சொல்லலாம். ஆகவே, இந்த நிலை போகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையில் வருந்தத்தக்க சில சம்பவங்கள் ஏற்பட்டபொழுது தோழர் இராமமூர்த்தி, எம் பி. அவர்கள் நேரடியாகப் பார்த்து, அவர்களுடைய அனுபவங்களையும் விவரங்களையும் குறித்து அறிக்கைவிட்ட நேரத்தில் அதற்கு ஐ.ஜி அவர்கள் "பேக் ஆஃப் லைஸ்" என்று மறுப்பு அறிக்கை விட்டார்கள். பொறுப்பாக இருக்கும் அதிகாரிகள் இப்படிச் செய்யலாமா? பொறுப்பானவர்கள் குற்றம் சாட்டும்போது, "என்ன என்று விசாரணை செய்கிறேன், பரிசீலனை செய்கிறேன்" என்று சொல்லியிருக்க வேண்டும். அதிகாரிகளுக்குப் பல உரிமைகள் இருக்கலாம். ஆனால் நிதானமாக இருக்கவேண்டும். இது ஒரு வர்க்கக் குரோதத்தைக் காட்டுகிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, பொதுக்கூட்டங்களில் மைக் வைத்துக்கொள்ள இரண்டு ரூபாய் கட்டி அனுமதி வாங்க வேண்டியிருக்கிறது. இப்படிச் செய்வது 'டாக்ஸ் ஆன் பப்ளிக் மீட்டிங்'காக ஆகிறது. இரண்டு ரூபாய் வாங்குவதை நிறுத்திவிட வேண்டும். மற்றும் கலை நிகழ்ச்சிகளை இரவு 12 மணிவரை நடத்துவதற்கு வேண்டிய அனுமதியை உள்துறைச் செயலாளர் அவர்களிடம் வந்துதான் வாங்க வேண்டியிருக்கிறது. இதனால் வீண் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த இடத்திலுள்ள சூப்பிரண்டெண்டு ஆஃப் போலீஸ் அவர்களிடத்தில் இதற்கான அனுமதி வழங்கும்படியான அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அனுமதி தாராளமாக வழங்கப்படவேண்டும் என்றும் உத்திரவிட்டு விடவேண்டும்.

அடுத்து, சந்தேகக் கேஸ் இந்த ஏற்பாடே ஒழிய வேண்டும்' மாதத்திற்கு இவ்வளவு என்ற கோட்டா இருக்கிறது. மாதத்திற்கு இவ்வளவு கேஸ்கள் போடவேண்டும் என்ற முறை இருந்து வருகிறது. தற்போது அந்த முறை கிடையாது என்று அமைச்சர்கள் சொன்னாலும், இந்த முறை இருந்து வரத்தான் செய்கிறது. ஆகவே, இந்தக் கோட்டா முறையை நீக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து, குற்றம் செய்தவர்களை முதலில் லாக்கப்பில் வைக்காமல்; 'கஸ்டடி'யில் வைத்திருக்கிறார்கள். அவருக்கு வேண்டிய சாப்பாட்டை அவருடைய வீட்டில் இருந்து கொண்டுவந்து கொடுக்கும்படியாக வைத்துக்கொள்கிறார்கள். அவர்களைக் கோர்ட்டுக்குக் கொண்டுசெல்ல 4 நாட்கள், 5 நாட்கள், ஒருவாரம் என்ற நிலைமை இருந்து வருகிறது. மேலதிகாரியிடம் புகார் செய்தால், வேறு ஸ்டேஷனில் கொண்டுபோய் வைத்துக்கொண்டு, அப்படி ஆளே இல்லை என்கிறார்கள் இப்படி அரசியல் சட்டத்திலுள்ள உரிமைகளைப் பறிக்கிறார்கள். தவிர, லாக்சப்பில் இருக்கும் போது அடி, உதை, குத்து, எல்லாம் நடைபெறுகின்றன. சில சமயங் களில் லாக்கப்பில் மரணம் என்ற நிலைகூட ஏற்படுகிறது. லாக்கப்பில் அடைக்கப்பட்டவன் எப்படி இறந்துவிட்டான் என்றால், தற்கொலை என்று சொல்லிவிடுகிறார்கள். லாக்கப்பில் அடைக்கும்போது அவனுடைய உடைமைகளை எல்லாம் பறித்துக்கொள்கிறார்கள். அவனுடைய அரை ஞாண் கயிறையும் கூட அறுத்துவிடுகிறார்கள். அந்த நிலையில் தற்கொலை என்று கதை கட்டிவிட்டால் ஏற்றுக்கொள்ள முடியுமா? இதைப்பற்றிப் பலமுறை சொல்லியாகிவிட்டது. மதுரையில் வேலு கேஸ் எப்படி நடந்தது ஆர். டி. ஓ. ரிப்போர்ட்டுக்குப் பிறகு அந்தக் கேஸ் சம்பந்தமாக செஷன்ஸ் கோர்ட்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால் அந்தக் கேஸையே மூடிமறைத்துவிட்டிருப்பார்கள். ஆனால் மதுரை மக்கள் விழிப்போடு இருந்த காரணத்தினால்தான் அது செஷன்ஸ் கோர்ட்டுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அமைச்சர் ஒரு கேள்விக்கு பதில் சொல்லும் போது முன்பின் முரணாக இருந்தது. 'கிட்னி' கோளாறினால் செத்தார் என்று சொன்னார்கள். கிட்னி கோளாறால் சாகவில்லை. கிட்னி கோளாறு ஏற்படும் வகையில் அடித்துக் கொல்லப்பட்டார். என்பது ஊரறிந்த விஷயம். இப்படி அடித்துக் கொல்வது என்பது நிறைய இடங்களில் நடைபெற்றுவருகிற விஷயமாகும். நெய்வேலியில் இப்படி ஒரு சம்பவம் நடந்தது. நானும், திரு. சி. கோவிந்தராஜனும் போய் இருந்தோம். அதைப்பற்றி நானும் அவரும் அதிகாரிகளுக்கும் மற்றவர் களுக்கும் தந்தி கொடுத்தோம். கொடைக்கானலிலே இப்படி ஒரு சம்பவம் நடந்தது. ஏதோ சூசைட் தற்கொலை என்று சொல்லிவிடு கிறார்கள். நான் சொல்லிக்கொள்வதெல்லாம், தற்கொலை என்ற பேச்சை நம்பவே கூடாது.

அடுத்தபடியாக, போலீஸ் நிலையங்களில் சரியான மரியாதை கிடைப்ப தில்லை. போலீஸ் ஸ்டேஷனுக்கு வருபவர்களை உட்கார் என்றுகூடச் சொல்வதில்லை. புகார் கொடுக்க வருகிறவர்களை வரவேற்று உட்கார வைப்பது என்ற சாதாரண மரியாதைகூட காட்டப்படுவதில்லை. இப்பொழுது இருக்கும்படியான ஜனநாயக சமுதாயத்தில், ஒருவரை மற்றவர் மதிப்பது என்ற மரியாதை இருக்க வேண்டும். யாராக இருந்தாலும் மரியாதை அளிக்க வேண்டும். எம். எல். ஏ.க்கள் வந்தால் மட்டும் மரியாதை என்பதல்ல. யார் வந்தாலும் மரியாதை கொடுத்து உட்கார வைக்கவேண்டும். புகாருக்கு ஸ்டாம்ப் ஒட்டிக் கொடுத்தால் அதற்கு ரசீது தரவேண்டும் பிற்பாடு அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது என்பதுகுறித்த பதில் அனுப்பவேண்டும். ஒருவரை போலீஸ் காரர் கைது செய்து ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்துவிட்டால், போலீ சாரே அவருடைய வீட்டுக்குப் போய் இன்னாரை, இன்ன குற்றத்திற் காகக் கைது செய்திருக்கிறோம் என்ற தகவலைக் கொடுக்க வேண்டும். ஒன்றும் செய்யாமல் கைது செய்து எங்கோ கொண்டுபோய் விடுகிறார்கள். அவருடைய குடும்பத்தார் விஷயம் இன்னதென்று தெரியாமல்



அவருடைய குடும்பமே பரிதவிக்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே கட்டாயமாக, கைது செய்யப்பட்டவருடைய குடும்பத்திற்கு செய்தியை முதலில் தெரிவிக்க வேண்டும் 'பெய்லபிள்' அல்லது 'நான்-பெய்ல பிள்' என்று தெரிவிக்க வேண்டும். இவ்வாறு பல ஆக்க ரீதியான செயல்களைச் செய்வதற்கு ஆலோசனைகள் நடத்தி, தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தண்டிப்பதற்கு முன்னாலே கைகளில் விலங்கு போட்டு குற்றவாளிகளைத் தெருவில் நடத்தி அழைத்துச் செல்கிறார்கள். கைதி யினுடைய கால்களில், செருப்புகூட இருக்காது, தார் ரோடுகளில் கைதிகளை வெயில் வேளைகளில் நடத்திச்செல்கிறார்கள். கைதிகளை போலீஸ் லாரியில், அல்லது வேனில்தான் கொண்டுபோக வேண்டு மென்ற முறை வேண்டும். அந்த முறையை அனுசரிக்க வேண்டும்.

பெண்களைப் பொறுத்தவரையில் என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. பெண்களைக் கைது செய்துவிட்டால் தனிப்பட்ட முறையில் நடத்தப்பட வேண்டும். இன்று காலை பத்திரிகையில்கூட படித்தேன். மைசூரில் 'லேடி ரெசிப்ஷனிஸ்ட்' வைக்கப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல முறை யாகும் பெண்களுக்கு குறிப்பாக தனி (பிரைவசி) ஏற்பாடுகள் இருக்க வேண்டும். எல்லோரையும் போல் அவர்களையும் பகிரங்கமாக வைத்து நடத்துவது நல்லதல்ல. ஆகவே, இந்த விஷயங்கள் எல்லாம் திருத்தி யமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும், 'போலீஸ் கோர்ட்', 'மான்யூவல்' எல்லாம் இருக்கின்றன. இவைகள் எல்லாம் எத்தனையோ ஆண்டுகளாக இருந்து வருகின்றன, அவைகளைக் காலத்திற்கேற்றாற்போல் திருத்தியமைக்க வேண்டும். போலீஸ்காரர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் நேரத்தில் 'போலீஸ் கரிகுலம். என்று என்ன சொல்லிக் கொடுக்கப்படுகிறது? ஜனங்களை மதிக்கச் சொல்லிக் கொடுக்கப்படுகிறதா அல்லது ஜனங்களை வெறுப்பது, மிரட்டுவது, விரட்டுவது எப்படி என்று சொல்லிச் கொடுக்கப்படுகிறதா? ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லிக் கொடுக்கப் படுகிறதா? அல்லது அதிகாரத்தைக் காட்டி மக்களை மிரட்ட வேண்டும் என்று சொல்லிக் கொடுக்கப்படுகிறதா? பயிற்சிக் காலத்தில் எப்படி அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும் என்பதைப் பற்றித் தீர்மானிக்க ஒரு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும். மக்களை மதிக்கும் வகையில் மக்களை நேசிக்கும் வகையில் இருக்கும்படியான உணர்வை அவர்களிடம் ஏற்படுத்த நாம் கட்டாயமாக ஓர் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். போலீஸ் இலாகாவானது விரிவான அளவில் போலீஸ் நிலையங்கள் மூலமாக பொதுமக்களிடம் தொடர்பு கொண்டிருக்கும் துறையாகும். பொதுமக்களின் மத்தியில் போலீஸ் துறையைப்பற்றி ஓர் அதிருப்தி வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது. அந்தமாதிரியான அதிருப்தியைத் தீர்க்கும் வகையில் போலீஸ் நிலையங்கள் எல்லாம் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுமக்களின் முழு மதிப்பையும் பெறும் வகையில் இதனுடைய கொள்கைகளைப்பற்றி தீவிரமாக ஆலோசித்து, திருத்தியமைக்கத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

போலீஸ் நிலையங்களில் இன்னும் ஜாதிக் குரோதங்கள் இருந்துகொண்டு இருக்கின்றன. இன்னும் இருப்பது உண்மை. ஜாதிக் குரோதங்கள் இருக் கின்றன என்பது எல்லாத் தரப்பில் இருப்பவர்களுக்கும் தெரியும். ஆகவே, அதை மாற்ற தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, சமூக விரோத சக்திகள், சமூகவிரோத சக்திகள் என்று சொல்கிறார்களே, யாரை சமூக விரோத சக்திகள் என்று சொல்வது? சமூகத்தைக் கொள்ளையடிப்பது, கள்ள மார்க்கெட் நடத்துவது பொருட்களைப் பதுக்கி, பெருமளவில் லாபம் சம்பாதிப்பது, கள்ள நோட்டு அடிப்பது போன்ற வேலைகளில் ஈடுபடுபவர்களை சமூகவிரோத

சக்திகள் என்று சொல்லலாம். கள்ள நோட்டு அடிப்பது என்பது மறுபடியும் கோயம்புத்தூரிலே நடந்திருக்கிறது. வசதிகளையும் செல்வாக்கையும் படைத்தவர்கள்தான் இன்றையதினம் சமூக விரோத சக்திகளாகச் செயல்படுகிறார்கள். உழைப்பாளர்கள் தங்களுடைய வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக ஏதாவது செய்தால் 'லேபர் ட்ரபிள்' என்று சொல்கிறார்களே தவிர, அதை 'கேபிடலிஸ்ட் ட்ரபிள்' என்று சொல்வதில்லை. உழைப்புக்கேற்ற ஊதியம் கொடுக்காமல் ஆலையை இழுத்து மூடிவிடுகிறானே, அது 'கேபிடலிஸ்ட் ட்ரபிள்' தானே? கேபிடலிஸ்ட் ட்ரபிள் என்று சொல்லமாட்டேன் என்கிறார்கள். நிலத்தில் பாடுபடும் விவசாயி தன்னுடைய முன்னேற்றத்திற்காக நியாயமாகக் கேட்கும் கூலியைக் கேட்கும்போது அதை கிஸான் ட்ரபிள் என்கிறார்கள். நியாயமாக, மனிதாபிமான உணர்வின் அடிப்படையில் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் இருப்பது மிராசுதார் ட்ரபிள் என்று ஏன் சொல்லக்கூடாது? இவைகள் எல்லாம் ஒரு சித்தாந்தமாக—ஐடியாலஜி—ஆளும் வர்க்கங்களுக்கு சாதகமாக இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். ஆகவே, அதை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, போலீஸ் பற்றி வரக்கூடிய பல புகார்கள் இருக்கின்றன. போலீஸ் அதிகாரிகள் இப்பொழுது டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலுக்கு வருவதில்லை. போலீஸ் அதிகாரிகளுடன் கலந்து பேசுவதற்கும், ஆங்காங்கே உள்ள நிலைமைகளை விளக்குவதற்கும் இப்போது எம்.எல்.ஏ.-க்களுக்கும், எம்.பி.-க்களுக்கும் வாய்ப்பு இல்லை. மாதம் ஒரு தடவையாவது மாவட்டத்தில் இருக்கிற உயர்தர போலீஸ் அதிகாரிகள் M. L. A.-க்கள் M.P.-க்கள் கலந்துகொள்ளும் கூட்டம் நடந்தால், ஆங்காங்குள்ள நிலைமைகளைச் சொல்லவும், போலீஸ் அதிகாரிகள் எந்தெந்த ஸ்டேஷனில் என்ன என்ன புகார் இருக்கின்றதென்று தெரிந்து 'செக்' செய்யவும் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். போலீஸைப்பற்றி வரும் புகார்களையெல்லாம் போலீஸ் அதிகாரிகளைக் கொண்டே மேல் விசாரணை செய்து வருவது சரியல்ல, அதை மாற்றியமைக்கவேண்டும்.

அடுத்தபடியாக, 1967 ம் ஆண்டு மேட்டூர் அணை பக்கத்தில் கேசவன் என்பவருடைய மனைவி சாந்தா என்பவளை ஒரு போலீஸ்காரர் கொண்டுபோய்விட்டார். போலீஸில் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு போலீஸ் மானிய விவாதத்தில் இதை குறிப்பிட்டேன். முதலமைச்சரிடம் புகாரையும் கொடுத்தேன். மனைவியை இழந்தவர் இன்னமும் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார். இதுவரையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை. இன்ன இன்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இதைப் பரிசீலனை செய்கிறோம் என்றாவது அவருக்குத் தெரிவிக்க வேண்டாமா? எனக்கு தெரிவிக்க வேண்டாமா? இம்மாதிரி விஷயங்களில் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கடைசியாக, மதுவிலக்கு பற்றிக் கூற விரும்புகிறேன். மதுவிலக்கு போக வேண்டிய நேரம் வந்துவிட்டது. முதலமைச்சர் அவர்களுடைய முயற்சியினால் பாண்டிச்சேரியிலும் நம்முடைய மந்திரிசபை வந்துவிட்டது. அங்கு ஒரு கொள்கை இங்கு ஒரு கொள்கை என்று இருக்கமுடியாது இருக்கக்கூடாது. மதுவிலக்குக் கொள்கை தோற்றுப் போய்விட்டது. இதனால் பல புதிய குற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. போலீஸ் இலாக்காவைப் பற்றி வரக்கூடிய புகார்கள் எல்லாம் விரோதமானதாகத்தான் இருக்கின்றன. போலீஸ் நிலையங்களில் சாராயம் இருந்தவண்ணமாக இருக்கின்றன. மதுவிலக்குத் தோற்றுப்போய்விட்டது.
முற்பகல் 11-30 அதை ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும். அதற்காக ஒரு வருஷம் காத்திருக்க வேண்டுமென்பதில்லை. அமலாக்க முடியாத ஒன்றை அகற்றுவதற்குக் காலம் கடந்து காத்திருக்க வேண்டியதில்லை. உடனடியாக அதை எடுத்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இன்றைய தினம் தமிழகத்தில் இந்த இலாக்காவைப் பற்றி வேகமா அதிருப்தி வளர்ந்து வருகிறது. மிராசுதார்களைச் சார்ந்து இருக்கிறார்கள் அவர்கள் வீட்டிலேயே சோறு தின்று, அவர்கள் வீட்டுத் திண்ணையிலேயே படுத்திருந்து அவர்களுக்காக பல காரியங்களைச் செய்கிறார்கள் இதை மறைத்துப் பயன் இல்லை.

விலாகம் கிராம தீ வைப்பு சம்பந்தமாக நான் விசாரித்தேன் ஸ்தல போலீஸ் புகார் கொடுக்கவில்லை. பக்கத்தில் உள்ள ஸ்டேஷ தகவல் தரவில்லை. மாயூரத்திற்குச் சென்று வைக்கப்போருக்குத் தீ வைக்கப்பட்ட கேஸ் எழுதி—அதற்குப் பிறகு மிராசுதார்களோடு சேர்ந்து போலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வருகிறார்கள். அந்த இலாக்காவில் நல்லவர்களே இல்லை என்று சொல்லவில்லை. பாதகமான வற்றைத்தான் சொல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவேதான் இந்த இலாக்காவைச் சீர்திருத்த அடிப்படையிலேயே மாற்றம் செய்ய வேண்டும். அவர்களுடைய கோட், மான்யூல், எஜுகேஷன் கரிகுலம் பழக்க வழக்க அடிப்படை உணர்ச்சி—இன்னும் டெவலெப்மெண்ட் ப்ரொக்கிராம்களில் அவர்களை எப்படி பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதை எல்லாம் பரிசீலனை செய்து உங்கள் ஆட்சி காலத்திலேயே நல்லமாற்றம் வரவேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியில் உள்ள திரு. இளம்வழுதி அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர், அவர்கள் இந்த மன்றத்தில் ஒரு கருத்தினை எடுத்துக் கூறினார்கள். மதுவிலக்குத் திட்டத்தை ஒரு வருட காலத்திற்குப் பிற்பாடு எடுத்துவிடவேண்டுமென்ற கருத்தினைக் கூறினார்கள். அவர் பெரிய வழக்கறிஞர், சட்ட அமைச்சராகவோ, போலீஸ் அமைச்சராகவோ வரக்கூடிய தகுதிபெற்றவர்—அப்படி வரமுடியாத ஏமாற்றத்தின் பேரிலே இந்தக் கருத்தினை எடுத்துக் கூறினார்களோ என்னவோ தெரியவில்லை.

THIRU A. BALASUBRAMANIAN : Is it not an insinuation, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கெனவே திரு. இளம்வழுதி அவர்களுக்கு என்ன தீர்ப்புக் கொடுத்தேனோ அதுவே இதற்கும் பொருந்தும். கனம் உறுப்பினர் இப்படிச் சொல்வது சரியல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : திரு. இளம்வழுதி அவர்களுடைய ஆற்றலையோ, அறிவையோ குறைத்து நான் பேசவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். திரு. இளம்வழுதியைக் குறிப்பிட்டுச் சொல்லும்போது ஏமாற்றம் அடைந்தார் என்ற வார்த்தையினை உபயோகப்படுத்தினார்கள், எதற்காக என்று விளக்கவில்லை. அதை அவர் திரும்பப்பெறுகிறாரா, உறுதிப்படுத்துகிறாரா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. இரெ. இளம்வழுதி : துணைத் தலைவர் அவர்கள் ஏமாற்றம் அடைந்ததாகச் சொன்னது எங்கள் கட்சி விவகாரம். அதில் அவர் தலையிடவேண்டியதில்லை. அந்த வார்த்தைகளை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அவர்களுடைய கட்சி விவகாரத்தில் நான் தலையிடவில்லை. மதுவிலக்குத் திட்டம் தோற்றுவிட்டது என்ற ஏமாற்றத்தின் காரணமாக அவர் அதை எடுத்துவிடவேண்டுமென்று செல்லத் தேவையில்லை என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் பேசுகின்றபோது அவர் பெரிய வழக்கறிஞர், சட்ட அமைச்சராகவோ, போலீஸ் அமைச்சராகவோ வந்திருக்க வேண்டியவர். அப்படி வரமுடியாது போன ஏமாற்றத்தின் காரணமாகத்தான இப்படிப் பேசுகிறார்களோ என்னமோ என்பதாகத்தான் குறிப்பிட்டார்கள். இப்போது குறுகிட்டுப் பின்னால் இருந்து வந்த யோசனையை எடுத்துக் கொண்டு—வழக்கறிஞர் மார்டின் சொன்னதைக் கொண்டு சொன்னதை மாற்றித் தப்பிக்கொள்ள 'மதுவிலக்குத் தோற்றுவிட்டது என்ற ஏமாற்றத்தினால்' என்று சொல்லவேண்டாம். அவருக்குச் சொல்லிக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் யார் பதவியில் இருந்தாலும்—தங்களுக்குப் பதவி கிடைக்கவில்லை என்று ஏமாற்றம் அடைந்து யாரும் வேறு எந்தக் காரியங்களிலும் ஈடுபடமாட்டார்கள். திரு பொன்னப்ப நாடார் அவர்களே தலைவராக வந்திருக்க வேண்டியவர். வராத ஏமாற்றத்தின் காரணமாக இப்படிச் சொல்கிறார் என்று சொல்ல முடியும். மிக விரிந்த தன்மை படைத்த துணைத் தலைவர் அவர்கள் இப்படி எடுத்துச் சொன்னது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த மதுவிலக்கை எந்தக் காரணத்தைக் கொண்டும் நீக்கக்கூடாது என்று வன்மையாகத் தெரிவித்துக் கொள்கிறேன். தார்மீக அடிப்படையில் வாதாடவில்லை. ஏனைய மாநிலங்களில் மதுவிலக்கு இல்லை, இங்கும் வேண்டாம் என்பது சரியல்ல. மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள் இந்த மதுவிலக்கை எந்தக் காரணத்தைக்கொண்டும் நீக்குவது இல்லை என்று இந்த மன்றத்திலேயே கூறியிருக்கிறார்கள். அவர் மறைந்த சிறிது காலத்திற்குள்ளாகவே அவர்களது கட்சியில் இருந்து மதுவிலக்கை ஒழிக்கவேண்டுமென்ற கருத்து வருவதற்கு ஆச்சரியப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அகில இந்திய காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திலேயே இன்னும் 8 ஆண்டு காலத்திற்கு மதுவிலக்கை வற்புறுத்தக்கூடாது என்று தீர்மானித்திருக்கிறார்களே, அது இவர்களுக்கு எவ்வளவு பெரிய ஆச்சரியமாக இருக்கவேண்டும்? (சிரிப்பு)

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** எல்லோரும் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கு வாய்ப்பாக ஒரு கால்வரம்பைக் குறிப்பிட்டார்களே தவிர வேறு எந்தவிதமான கருத்தும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எட்டு வருஷத்திற்குள் மதுவிலக்கை பூரணமாகக் கொண்டுவரவேண்டும் என்ற அடிப்படையில்தான் தீர்மானிக்கப்பட்டது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அதுவும் தர்மம் தழைத்த தமிழ் நாட்டில் மதுவிலக்கை எக்காரணம் கொண்டும் எடுக்கக்கூடாது என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

சட்டம்-ஒழுங்கு சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை என்பதற்கு பாராளுமன்ற இடைத்தேர்தல் காலத்தில் நூறுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் இந்த அரசுக்கும்—மத்திய அரசுக்கும் மகஜர் கொடுத்தார்கள். போலீஸ்காரர்கள் ஒருதலைப் பட்சமாக நடந்துகொண்டார்கள் என்று பல குற்றச்சாட்டுகளைக் கூறினார்கள். அதை எடுத்து விவரமாகவும் சொல்ல முடியும். நேரம் இல்லாத காரணத்தினால் சொல்லாமல் விடுகிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தைக் கூறவிரும்புகிறேன். நாகர்கோவில் கிட்டு கொலை கேஸ் பிப்ரவரி 7-ஆம் தேதி என்று கருதுகிறேன். ஒருசில எதிரிகளை கோர்ட்டில் ஆஜர் செய்ய அவர்கள் ஜாமீன் மனுவை தாக்கல் செய்தார்கள். ஸ்பெஷல் நீதிபதி ஜாமீனில் விட உத்தரவு பிறப்



பித்தார். அதற்குப் பிற்பாடு ஏனையவர்களை கோர்ட்டில் ஆஜர்படுத்தக் கூடாது என்று நான்கைந்து தினம் ரிமாண்டில் அடைத்து—கோர்ட்டைத் தடுக்கும் முறையில் கோர்ட்டைச் சுற்றி போலீஸ் காவல் போட்டிருந்தார்கள். சாதாரணமாக இந்த மாதிரியான நிகழ்ச்சி இதுகாலம் நடந்தது இல்லை. நானும் 23 ஆண்டுகளாக வழக்கறிஞராக இருந்திருக்கிறேன். இதுபோல எந்த ஆட்சியிலும் ஏற்பட்டதில்லை.

இதற்கு நேர்மாறாக கருங்கல் பகுதியில் கொலை கேஸ் நடந்தது. எதிரிகளை இன்னும் கைது செய்யவில்லை. கூட்டணி சார்பாக மிகவும் தீவிரமாக அவர்கள் தேர்தலில் துணைபுரிந்தவர்கள், அதை நிரூபிக்க முடியும். இதைப் போலீஸ் அதிகாரிகளிடமும் எடுத்துக் கூறினேன். ஏன் கைது செய்யவில்லை, காங்கிரஸ்காரர்கள் மீது என்றால் உடனே வழக்கு எடுக்கிறார்கள். இது தர்மம்தானா என்று சிந்திக்கவேண்டும்.

இன்னொரு நிகழ்ச்சி. பாராளுமன்ற இடைத் தேர்தலின்போது மார்த்தாண்டம் தேர்தல் காலத்திலே நான் என்னுடைய காரியாலயத்திற்குப் பக்கத்தில் காரை நிறுத்தியிருந்தேன். அப்போது குளித்தலை சப்-இன்ஸ்பெக்டர் அந்தக் காரை அங்கே நிறுத்தக்கூடாது என்று கூறினார். ஏன் என்று கேட்டேன். அங்கே எவ்வித இடைஞ்சலும் இல்லை. டி.ஐ.ஜி. உத்தரவு என்றார். அப்படியானால் அந்த உத்தரவைக்கொடு, நான் கட்டுப்படத் தயாராய் இருக்கிறேன் என்றேன். ஆனால் டி.ஐ.ஜி. உத்தரவைக் காட்ட மறுத்துவிட்டார்கள். அதன் காரணமாக அந்த விவகாரம் அப்படியே முடிந்தது. அவர்கள் பேசுகின்ற தன்மையைப் பார்க்கின்றபோது பலவிதமான காரியங்கள் அங்கே நடந்திருக்கின்ற தன்மையையும் பார்க்கலாம். டி.ஒய்.எஸ்.பி. பொன்னையா என்பவர் அங்கு வந்து பல தேர்தல் வேலைகளைப் பார்த்திருக்கிறார்.

அதேபோல ரிசர்வ் ஜமேதார் சின்னத்தம்பி என்பவர் குருந்தங்கோடு என்ற இடத்திலே வீடுகளிலே புகுந்து அடித்திருக்கிறார். ராஜாக்கமங்கலம் என்ற இடத்திலே சப்-இன்ஸ்பெக்டர் ஆக இருந்த நபர் பலரையும் அடித்திருக்கிறார், இதைப்பற்றி எல்லாம் வழக்குகள் வழக்கு மன்றத்திலே இருக்கிற காரணத்தாலே நான் விவரங்களை எடுத்துக்கூற விரும்பவில்லை. இப்படி காட்டுமிராண்டித்தனமான நிகழ்ச்சிகள் பல அங்கு நடந்திருக்கின்றன. அதற்கும் போலீஸாரும் உடந்தையாக இருந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 8-1-1969-ஆம் தேதியன்று திரு. டேனியல் பி.ஏ.,பி.எல். என்பவர் கூட்டுறவுத் தலைவராக இருக்கிறார்கள், அவரைக் குத்தித் தாக்கினார்கள். தாக்கியவர்கள்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, அந்த கேஸைப்பற்றி எந்தவிதமான விசாரணையும் நடக்கவில்லை.

ஜேம்ஸ், பி.ஏ., பி.டி., எக்ஸ்-எம்.எல்.ஏ., அவர் டி.ஒய்.எஸ்.பி.யின் பிரதர்-இன்-லா. அவர்மேல் 307-வது பிரிவின்கீழ் வழக்கு போட்டு குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். அவர்கள் அங்கே தலைமையாசிரியராக இருக்கிறார்கள். இப்படிப் பெரிய பெரிய மனிதர்கள்மேல் எல்லாம் பொய் வழக்குகளைப் போட்டு ஜோடனை செய்திருக்கிறார்கள். தேர்தல் காலத்திலே பல தவறுகள் நடந்திருக்கலாம். கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்காமல் போலீஸ் அதிகாரிகள் நடுநிலைமையுடன் நடக்கவேண்டியவர்கள் நடுநிலை மையுடன் நடக்காததன் காரணமாகப் பல விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. பலர் தாக்கப்பட்ட நேரத்தில் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த நேரத்தில் ஆஸ்பத்திரிக்குக் கூட குழித்துறை, கொல்லங்கோடு போன்ற இடங்களில் விடவில்லை. அங்கே கார்களை உடைத்தார்கள், தாக்கினார்கள், பலர் காய முற்றார்கள். எனவே கட்சிக் கண்ணோட்டத்தோடு போலீஸ்காரர்கள் இருந்ததால்தான் சட்டம் ஒழுங்கு கெட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசிய உறுப்பினர்கள் யாரும் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்ததாகத் தெரியவில்லை. 5 நிமிடம் என்பது 10 நிமிடம் 15 நிமிடம் என்று போய்க்கொண்டே இருந்தால் மாலை நாலு மணி, ஐந்து மணி என்று போகும். எனவே உறுப்பினர்கள் ஐந்து நிமிடத்திற்குள் உரைகளை முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற காவல்துறை மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாகவும், சிறப்பாகவும் தமிழகக் காவல் துறையினர் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதை, நாங்கள் அல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலேயே சிறந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை அத்தனை பேர்களும் சொல்லியிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சுட்டிக்காட்ட வேண்டுமானால் காவல் துறையில் உள்ள விஞ்ஞானத் துப்பறியும் போட்டியில் தமிழகக் காவல் துறையினர் அதிகமான கேடயங்களைப் பெற்றிருக்கிறார்கள். தமிழகக் காவல் துறையினர் பாராட்டுக்குரியவர்கள். மிகக் குறுகிய செலவிலே 4·9 கோடி ரூபாயே செலவு செய்கிறார்கள். இந்த நிலைமையில் அவர்கள் செய்திருக்கின்ற காரியங்களைப் பார்த்தால் நிச்சயமாக பாராட்டுக்குரியதாகும். எதிர்க்கட்சி நண்பர்கள் காவல் துறையினரின் பேரிலே எடுத்துச் சொல்லுகின்ற களங்கங்கள், குற்றச்சாட்டுகள் இதன் காரணமாக, சட்டம் அமைதி கெட்டுவிட்டது, கெட்டுவிட்டது என்று அவர்களே சொல்கின்ற அளவுக்கு நிலைமைகளை ஏற்படுத்திவிட்டு, அதற்குக் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகின்ற நேரத்தில், சட்டம் கெட்டுவிட்டது, ஒழுங்கு கெட்டுவிட்டது என்று அவர்களே காவல் துறையினர்மீது குற்றஞ்சாட்டுகிறார்கள். உதாரணத்திற்கு சொல்லவேண்டுமானால் நாகர்கோவில் இடைத் தேர்தலின்போது எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சுப்பிரமணியமும் இங்கே இருக்கிற போலீஸ்காரர்கள் நல்ல முறையில் பணியாற்றவில்லை, ஆகவே மத்திய அரசிலிருந்து போலீஸ் அங்கு வருவதாகச் செய்தியை வெளியிட்டார்கள். இங்கே இருக்கிற காவல் துறையினர்மீது அவர்கள் சாட்டுகின்ற குற்றச்சாட்டு நல்ல முறையிலே அவர்கள் பணியாற்றவில்லை, அதனால்தான் மத்திய அரசிலிருந்து காவல் துறையினர் அங்கே வருகிறார்கள் என்ற நிலைமை இருந்தது. சட்டம், அமைதியைக் காப்பதில் ஈடுபடுகின்ற காவல் துறையினரையும், பொதுமக்களையும், நாட்டிலே சட்டத்தையும் அமைதியையும் காக்க வேண்டும். ஜனநாயகம் தழைக்க வேண்டுமென்ற எண்ணத்திலே உள்ளவர்களை அவர்களே நிலைமைகளை உருவாக்கிவிட்டு நடவடிக்கையில் இறங்குகின்ற வேளையில் தடுக்கப்படுகிறார்கள். அவர்களுக்குக் காட்டப்படுகிற மரியாதையைக் காட்டாத காரணத்தால்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே 75 கோடி ரூபாய் செலவழித்து மத்தியத் போலீஸ் வைத்து இருக்கிறார்கள். மாநில அரசுமீது நடவடிக்கை எடுக்கவேண்டும், ஏதாவது குற்றஞ்சாட்டவேண்டும் என்பதற்காகத்தான் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதை, கலைக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். இன்னும் இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் கூறும்பொழுது, தமிழகத்திலே போலீஸ்காரர்கள் ஆற்றியிருக்கிற பணி பெரும்பணி பாராட்டுக்குரியது.

இப்பொழுது எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் ஆளுங்கட்சியிலே இருந்தபொழுது போலீஸ்காரரை என்ன என்ன பேசியிருக்கிறார்கள் எந்த அளவுக்கு போலீஸ்காரர்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதும் தெரியும். இறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன், இப்படிப்பட்ட நல்ல பணிகளை ஆற்றிவருகின்ற அவர்களுக்கு வசதிகள் செய்துதர வேண்டும். அந்தக் காலத்தில் கொடுத்துவந்த படிதான் இன்றைக்கும் தரக்கூடிய ரீதி இருக்கிறது. விலைவாசிகள் ஏற்றத்தின் காரணமாக அவர்களுக்கு அதை மாற்றியமைத்து எதிர்காலத்தில் அவர்களும் நல்ல வாய்ப்பையும் வசதியையும் பெறக்கூடிய அளவுக்குச் செய்துகொடுத்தால் இந்த நாட்டு மக்களின் நலன்களைப் பாதுகாக்கின்ற அளவுக்கு அவர்கள்





பணியாற்றமுடியும் என்று சொல்லிக்கொண்டு வெளிமாநிலங்களிலேகூ கண்டுபிடிக்கமுடியாத நிலையில் இருந்த முகமூடித் திருட்டை நம்முடை மாநிலக் காவல் துறையினர் திறமையாகக் கண்டுபிடித்ததோடு தன் டனையும் வாங்கித்தந்திருக்கிறார்கள். அது இந்த நாட்டிற்கும் அந் துறைக்கும் பெருமையைத் தரக்கூடியது. அப்படிப் பெருமையை தேடித்தந்த அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண் மென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்

*** திரு. மு. முத்தையா :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே இந்த காவல்துறை மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல் விரும்புகிறேன். என் கடன் பணி செய்து கிடப்பதே என்பது போல் போலீஸ் துறையினரும் ஒழுங்கான முறையில் பணி செய்யவேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் பகுதியை பொறுத்தவரையில் முன்னாள் பிரிட்டிஷ் ஆட்சியைப்போலவே இன்னும் சில நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. இரண்டு விவசாயிகள் ஆற்றிற்கு அந்தப்புரம் இரண்டு வைக்கோல் கட்டுகளை எடுத்துக்கொண்டு வரும் பொழுது போலீஸ்காரர்கள் வந்தார்கள். அதோ போலீஸ் வருகிறது என்று சொன்னார்கள். காரணம் போலீஸ்காரர்களைக் கண்டால் அவ்வளவு பயம் அவர்களுக்கு. அவர்கள் பக்கத்தில் வந்து ‘ எங்கே திருடினாய், கீழே போடு’ என்று சொன்னார்கள். அவர்கள் பயந்து கொண்டு போட்டுவிட்டார்கள். அதற்குப்பிறகு ‘ திருடினாயா ’ என்று கேட்டார்கள். இல்லை என்று சொன்னவுடன் தூக்கிக்கொண்டு போ என்று சொல்லி விட்டதால், தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். அதே போல் இன்றும் கிராமப்புறங்களிலே நடந்து வருகிறது. சில சந்தர்ப்பங்களிலே அரிசனப் பகுதிகளிலே கலவரம், கொலை நடந்துவிட்டால் சம்பந்தப்பட்டவர், சம்பந்தப்படாதவர்கள், பெண்டு பிள்ளைகள் எல்லோரையும் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போய்விடுவார்கள். அதோடு விடாமல் போலீஸ்காரர்கள் அவர்களுடைய உணவுப் பொருள்களையும், விவசாயக்கருவிகளையும், சேதப்படுத்துகிறார்கள். அவர்களுடைய சட்டி பானைகளைக் கூட உடைக்கிறார்கள். பகுத்தறிவு இல்லாத பருந்து கோழிக் குஞ்சைத் தூக்கிக்கொண்டு போகும் பகுத்தறிவாளர்களாகிய போலீசார் ஏழை கிராம மக்களுடைய கோழிக்குஞ்சுகளைக்கூட தூக்கிக்கொண்டு போய் விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையைப் போக்கவேண்டுமென்று காவல் துறையினரையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வியாபாரத்திலே கோட்டா லிஸ்டம் இருப்பதுபோல் போலீஸ் துறையிலும் கோட்டா லிஸ்டம் இருக்கிறது. ஒவ்வொரு ஸ்டேஷனிலும் இத்தனை கேஸ்கள் கண்டிப்பாக பதிவுசெய்யப்பட வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த நிலை இருக்கும் அளவிலே நிரபராதிகள் அவர்களிடம் சிக்கிக் கொண்டு தவிக்கிறார்கள். சாராயம், கஞ்சா போன்ற லாகிரி வஸ்துக்கள் அவர்களிடம் இருந்தது போல் ஜோடனை செய்து கேஸைப்பிடிக்கிறார்கள். ஆகவே, இந்த கோட்டா லிஸ்டத்தை அறவே ஒழிக்கவேண்டும்.

சில கிராமங்களிலே போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. அரிசன மக்கள் வாழுகிற இடங்களில் இருக்கிற டீ கடைகளில் துண்டு கிளாஸ் போடுகிறார்கள். துண்டு கிளாஸ் இருக்கிறது என்று சொன்னால் சொல்லுகிற நபர் மீதே குறைப்படுகிறார்கள். இந்த அவல நிலை எல்லாம் மாறவேண்டும்.

போலீஸ் துறையினருக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகள் எல்லாம் அதிகார பூர்வமாக இருக்கவேண்டும். அப்போதுதான் அசம்பாவிதமான கிளர்ச்சிகள் ஏற்படும்போது சட்டப்படி அதிகாரபூர்வமாக நடவடிக்கை எடுப்பார்கள். அப்படி நடவடிக்கை எடுக்கவிடாமல் அரசோ மற்றவர்களோ குறுக்கிடும்போது அசம்பாவிதம் நுழைகிறது. அதற்குப்பிறகு பல விதமான அட்டூழியங்கள் ஏற்பட்டு போலீஸ்காரர்கள் இழிச்சொல்லைக் கேட்கவேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகிறார்கள்.

கிராமப்புறங்களில் மது ஒழிப்பு பற்றி மிகவும் பிரச்சாரம் செய்கிருர்கள். மது ஒழிந்ததாக இல்லை. மது என்று சொல்லக்கூடிய பொருள் முன்னுல் பத்து கிராமங்களுக்கு ஒரு கிராமத்தில்தான் லைசென்ஸ் பெற்று கடை இருந்தது இப்போது குடிசைத் தொழிலாக இருக்கிறது. ஆகவே பின்தங்கிய கிராமங்களுக்கெல்லாம் போலீசார் சென்று அங்குள்ள மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் கண்டிப்பாக ஒரு..............[மணி அடிக்கப்பட்டது].

*திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1969-70ம் ஆண்டுக்குரிய காவல் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். தமிழக காவல் துறையினர் மிகச் சாமர்த்தியமாகவும், திறமையாகவும் பணியாற்றியுள்ளார்கள் என்பதைக் கடந்த கால சம்பவங்கள் நன்ருக எடுத்துக் காட்டுகின்றன. சென்னையிலும், வெளியூர்களிலும் கடந்த இரண்டாண்டு காலமாக பரவலாக நடைபெற்று வந்த தீ வைப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்ட பிறகு தற்போது தீ வைப்புக் குற்றங்கள் பெரும்பாலும் குறைந்திருப்பது பாராட்டத்தக்கது. தீ வைப்பு சம்பவங்களின்போது தீயணைக்கும் படை செய்த சேவை பாராட்டுக்குரியது. இரண்டாண்டு காலமாக தமிழகத்தில் மாணவர்கள் பிரச்சினை எழுகின்ற நேரத்தில் எல்லாம் பல சங்கடங்களையும், அதிகாரிகள் பல தாக்குதல்களைத் தாங்கிக் கொள்ள வேண்டிய அளவுக்கும் உள்ள நிலையில் பொறுமையுடன் பெருமையாக நிலைமையைச் சமாளித்திருக்கிருர்கள்.

சென்ற ஆண்டு குடந்தையில் 10 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடிய நேரத்தில் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் திறமையாக நிலைமையைச் சமாளித்திருக்கிருர்கள்.

உலகத் தமிழ் மாநாடு நடந்த நேரத்திலும், பேரறிஞர் அண்ணு அவர்கள் மறைந்த நேரத்தில் 50 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் சென்னையிலே கூடிய நேரத்திலும் அசம்பாவிதங்கள் எல்லாம் ஏற்படாத அளவுக்கு மிகத் திறமையாகப் பணியாற்றி இருக்கிருர்கள்.

இந்த இரண்டாண்டு காலத்தில் ஐந்தாறு கள்ள நோட்டு அடிக்கும் கும்பல்களைப் பிடித்திருப்பதும் பாராட்டுக்குரியது.

சென்னையில் சாமர்த்தியமாகக் கொள்ளையடித்த பவேரியா கூட்டத்தினரைப் பிடித்து அவர்கள் தண்டனை பெறச் செய்ததும் குறிப்பிடத்தக்க ஒன்ருகும்.

அண்மையில் நடைபெற்ற நாகர்கோயில் இடைத் தேர்தலின்போது காங்கிரஸ்காரர்கள் திட்டமிட்டு வன்முறைச் செயல்களில் இறங்கிஞர்கள். நூற்றுக்கணக்கான கழகத் தோழர்களைத் தாக்கிய நேரத்திலும், கழகத் தோழர் இட்டு கொலை செய்யப்பட்ட நேரத்திலும் போலீஸ்காரர்களைப் பற்றிப் பகிரங்கமாக பல கூட்டங்களில் மிக மட்டமாகத் தாக்கிப் பேசிய நேரத்திலும், காவல் துறையினர் அண்ணுவின் கனிந்த உள்ளத்தைப் புரிந்து கொண்டு பொறுமையுடன் சமாளித்து பணியாற்றியது குறிப்பிடத் தக்க ஒன்று. இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்திருக்கக்கூடிய ஒரே காரணத்தால்தான் காவல் துறை பெரிய அதிகாரிகளான முன்னுள் ஐ. ஜி. அருள் அவர்களையும். திரு மாணிக்கம் அவர்களையும் டில்லி சர்க்கார் எங்களுக்குத் தேவை என்று கருதி எடுத்துக் கொண்டார்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. 'anti-smuggling squad' என்ற இலாகாதான் உணவு தானியக் கடத்தலை எல்லாம் கவனிக்கிறது. இது தற்போது சென்னையில் இருக்கிறது. இது போன்று கோவையிலும், மதுரையிலும் இருக்குமாளுல் பக்கத்து மாநிலங்களுக்கு லாரி மூலம் உணவு தானியம் போவதைப் பெருமளவுக்குக் கட்டுப்படுத்த முடியும்.





மதுவிலக்குப் பிரச்சினையில் மற்ற மாநிலங்கள் பின்னடைந்து இருக்கும் போது தமிழக மாநிலம் தீவிரமாக அமல்படுத்தி வருவதை அகில இந்திய துணைப் பிரதமரே பாராட்டியிருப்பதிலிருந்து நன்ருகப் புரிந்து கொள்ள முடியும். அந்தப் பிரச்சினையில் இந்த அரசு தீவிரமாகச் செயல்படும் என்று கருதுகிறேன்.

பெரிய போலீஸ் அதிகாரிகளைப் பொருத்தவரை நல்ல முறையில் நடந்து கொண்டாலும் சாதாரண போலீஸ்காரர்கள் பொது மக்களிடம் சந்தேகக் கண்ணுடன் செல்லுவதை நிறுத்த உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசின் சார்பில் இருக்கக் கூடியவர்கள் போலீசாரை அணுகுகிருர்கள் என்று காங்கிரஸ்காரர்கள் குற்றம் சாட்டிஞர்கள். அண்மையில் டில்லியில் யூனியன் டெரிடரி போலீஸ் நிர்வாகத்தில் அரசியல் வாதிகள் தலையீடு இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க உயர் மட்டக் குழு ஒன்றை அமைத்தார்கள் இந்திய சர்க்கார் உள் நாட்டு அமைச்சர் சவான் அவர்கள். குழு பரிசீலனை செய்து அரசியல் வாதிகள் அன்ருட போலீஸ் நிர்வாகத்தில் தலையிடுகிருர்கள் என்று ஆதாரபூர்வமான நிகழ்ச்சிகளை அந்தக் குழு அறிவித்திருக்கிறது. மத்திய சர்க்கார் நிர்வாகத்தில் இருக்கக்கூடிய யூனியன் பிரதேசத்தில் இந்த நிலைமை இருக்கிறது என்ருல் யார் தலையிட்டிருப்பார்கள் என்று நீங்களே சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டது).

*திரு. எம். சுரேந்திரன் : சபையின் முன் வைத்திருக்கிற போலீஸ் மானியக் கோரிக்கை மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். போலீசின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது இந்த ராஜ்யத்தில் இருக்கிற 50,331 சதுர மைல்களில் பரவி இருக்கின்ற நான்கு கோடி மக்களைக் காவல் புரிவதற்காக உள்ள அவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன். இவர்கள் தலையில் ஏற்பட்டிருக்கும் பளு மிகவும் அதிகமானது. அதைத் தாங்கி சிறிது தூரம் நடப்பதற்குள்ளாக பல நேரங்களில் இவர்கள் தளர்ந்து விடுவதற்கான காரணங்கள் இருக்கின்றன. அப்படித் தளருகிறபோது அவர்கள் மீண்டும் உற்சாகமாகப் பணி செய்வதற்கு வேண்டிய முறையிலே அவர்களுடைய வருமானத்தையும் உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்ள விவரப்படி அவர்களின் நண்பகல்
சம்பளம், சாதாரண கான்ஸ்டபிளுக்கு ரூ. 70 என்றிருக்கிறது. ஹெட் 12-00.
கான்ஸ்டபிளுக்கு ரூ. 90 என்றிருக்கிறது. சப் இன்ஸ்பெக்டருக்கு ரூ. 140 என்றும் உதவி சப் இன்ஸ்பெக்டருக்கு ரூ. 110 என்று இருக்கிறது. இன்றைய நிலையில், இன்றுள்ள விலைவாசியில் அவர்கள் இந்தச் சம்பளத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்த முடியுமா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. அப்படிச் செய்யாவிட்டால் அவர்கள் வாழ்க்கைப் பளுவை தாங்க முடியாமல், அந்த பளுவால் ஏற்படக்கூடிய தளர்ச்சியிலிருந்து தேற முடியாமல் உற்சாகம் குன்றிப் போய் அவர்கள் கீழே விழுந்து விடுவார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். சாதாரண ஒரு தொழிற்சாலையில் வேலை செய்கிற கடைசி ஊழியனுக்குக் கிடைக்கக்கூடிய வருவாய் கூட ஒரு போலீஸ் கான்ஸ்டபிளுக்கு இல்லை என்று சொன்னுல், அவர்கள் சமுதாயத்தில் எடுத்துச் செயல்படுத்த வேண்டிய பணிகளையும் அவர்கள் பொறுப்புக்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவர்களின் சம்பளம் எவ்வளவோ குறைவாக இருக்கிறது என்பது நன்கு புலனுகும்.

காவல் துறையினர் இந்த சமுதாயத்தில் இருக்கக்கூடிய மக்களுடன் மிக அதிகமான தொடர்புகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். சமுதாயத்தில் இருக்கிற ஏற்றத்தாழ்வுகளை கணக்கிலெடுத்துக்கொண்டு குற்றங்களைச் செய்வது எந்தெந்தச் சூழ்நிலையில் புரிகிறார்கள், எந்தெந்தச் சூழ்நிலையில் அவர்களுடைய குணங்களில் மாற்றம் ஏற்படுகிறது என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கக்கூடிய ஒரு கால கட்டத்தில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் இன்று தேசத்தில் இருக்கிற நிலைமை, கிராமங்களில் உள்ள கட்டுப்பாடுகள் எல்லாம் தளர்ந்து போய் விட்டன. ஜாதீயக் கட்டுப்பாடுகள் எல்லாம் தளர்ந்து போய்விட்டன. இப்படி எல்லாக் கட்டுப்பாடுகள் தளர்ந்து போய்கொண்டிருக்கிற நிலையில் குற்றங்களின் எண்ணிக்கை அதிகப்பட்டுக் கொண்டு வருகிறது என்பதை புள்ளி விவரங்கள் கூறுகின்றன. குற்றங்களை தடுத்து நிறுத்த வேண்டும். குற்றங்கள் செய்வதற்குப் பின்னால் அவற்றைச் செய்தவர்களைக் கண்டு பிடித்து அவர்களுக்கு தண்டனை வாங்கித் தரப்படுகிறது. குற்றவாளிகள் ஏன் குற்றங்கள் செய்கிறார்கள், குற்றங்கள் ஏற்படாமல் அவற்றை எவ்வளவு தூரம் தடுத்து நிறுத்த முடியுமோ அந்தளவிற்கு தடுத்து நிறுத்துவதற்கான வழிவகைகளை காணவேண்டிய கட்டத்தில் இன்று நாம் இருக்கிறோம். அரசியல் மாற்றம் என்ற துடிதுடிப்பு, பொருளாதார மாற்றம் என்ற துடிதுடிப்பு. சமுதாய மாற்றத்தில் துடிதுடிப்பு என்று இப்படி துடிதுடிப்புகளின் மத்தியில் நாம் வளர்ந்து கொண்டிருக்கும் போது பழைய கால முறைகளையே நாம் கையாள்வது, அந்த முறைகளைக் கையாண்டு குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பது, அப்படிக் கண்டு பிடித்து அந்தக் குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தருவது என்ற முறையே நீடித்து வருகிறது. இந்த முறைகளில் மாற்றங்கள் ஏற்படா விட்டால் ஒன்றோடொன்று முரண்பட்டு, ஒன்றோடொன்று மோதி பல பிரச்சினைகள் பல சிக்கல்கள், பல கிளர்ச்சிகள், பல அபவாதங்கள் ஏற்பட வழிவகை ஏற்படும்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு மார்டின் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையில் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு எந்தெந்த ஐட்டங்களில் தொகை குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். ஏன் அப்படி குறைக்கப்படவேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. ஒருவேளை நிதிநிலையில் உள்ள கஷ்டங்கள் அதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால் அந்தக் கஷ்டங்களுக்காக எங்கே குறைக்கலாம், எங்கே கூட்டலாம் என்பதில் சரியான கவனம் செலுத்தப்படவில்லை என்று நினைக்கிறேன். அவர்கள் ஏற்கனவே குறைந்த வருவாய் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இரண்டாவதாக, அவர்கள் குறைவான எண்ணிக்கை உள்ளவர்களாக இருக்கிறார்கள். மூன்றாவதாக. இன்றுநாட்டில் ஏற்பட்டுக்கொண்டுவருகிற இரண்டு ஆண்டுகளாக உள்ள கிளர்ச்சிகள், குழப்பங்கள், சண்டை சச்சரவுகள் இவைற்றையெல்லாம் பார்க்கும்போது அவர்கள் எவ்வளவு திறமையாக பணியாற்றி வந்திருக்கிறார்கள் என்பதற்கு அது எடுத்துக்காட்டாக இருக்கிறது. அப்படி திறமையாக பணியாற்றுகிறவர்களை உற்சாகப்படுத்துவதற்குப் பதிலாக அவர்களுடைய உற்சாகத்தைக் குறைக்கும் முறையில் இந்த மானியம் அமைந்திருக்கிறது என்று சொன்னால் அதை என்னால் வரவேற்க முடியாது. அவர்கள் மீது என்னால் பல குற்றங்களைச் சொல்ல முடியும். அவர்கள்மீது குறைகள் பலவற்றை நாம் காண முடியும். இருப்பினும் அவர்களின் நிலை, அவர்களின் தன்மை, அவர்களுக்குள்ள பொறுப்புகள் இவை மிகவும் மகத்தானவை என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இந்த தேசத்தில் ஒவ்வொரு ராஜ்யத்திலும் உள்ள காவல் துறையினர் எந்த மாதிரி பணி புரிந்து வருகிறார்கள். அவர்களின் திறமை, அவர்களுக்காகச் செலவிடுவது என்று இவை பற்றியெல்லாம் சிறிது காலத்திற்கு முன்னர் ஒரு ஆராய்ச்சி நடந்தது.



அந்த ஆராய்ச்சியின்படி, தமிழ்நாட்டிலுள்ள காவல் துறையினர்தான் மற்ற ராஜ்யங்களிலுள்ள காவல் துறையினரைவிட நல்ல முறையில் திறமையாகப் பணியாற்றியிருக்கிறார்கள் என்று அவர்கள் நற்சான்று வழங்கியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. மற்ற ராஜ்யங்களில் செலவழிக்கப்படும் தொகையை விட மிகக் குறைவாகத்தான் இங்கு செலவழிக்கப்படுகிறது என்றும் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே இந்த இரண்டையும் வைத்துப் பார்க்கிறபோது அவர்களுக்காக செலவு செய்யப்படும் தொகையை இன்னும் அதிகரிப்பதற்குப் பதிலாக அதைக் குறைத்திருப்பது சரியானது என்று என்னால் ஒத்துக்கொள்ளமுடியவில்லை. அதே நேரத்தில் கான்ஸ்டபிள்கள் இருக்கிறார்கள். அவர்களின் வசதிகளை இன்னும் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வாரத்திற்கு ஒரு நாள் ஆஃப் ட்யூட்டி கொடுக்கிறார்கள். அப்போது அவர்கள் வேலை செய்தால் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற பணம் ரூபாய் ஒன்றுதான் என்று கூறப்படுகிறது. அவர்கள் வேலை செய்யும் நாட்களுக்கு நாம் என்ன கொடுக்கிறமோ அந்தப் பணத்தைக் கூட அவர்களுக்கு இந்த ஆஃப்ட்யூட்டியில் வேலை செய்யும்போது கொடுக்கவில்லை என்று சொன்னால் அது சிறிதும் வரவேற்கத்தக்கதல்ல. அதேபோல் அவர்களுக்கு வீடுகள் கொடுக்கப்படுகின்றன. அதிகப்படியான வசதிகள் அங்கு இல்லாவிட்டாலும் குறைந்த அளவு வசதிகளாவது அவர்களுக்குச்செய்து தரப்பட வேண்டும்.

இப்போதுள்ள நிலையில் அவர்கள் வீடுகளில் ஆறு மணியிலிருந்து ஒன்பது மணிக்குள்ளாகத்தான் விளக்குகள் எரிய வேண்டும், அதற்கு மேல் எரிந்தால் அவர்களே அணைத்தும் விடுவதாக அறிகிறேன். இது ஒரு சரியான முறையா? இன்று அவர்கள் வீடுகளில் பள்ளிகளிலும், காலேஜ்களிலும் படிக்கக்கூடிய குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒன்பது மணிக்குள் படித்து, உண்டு, தூங்கப் போகவேண்டுமென்று சொன்னால் அவர்கள் எப்படிப்படித்து பரிட்சையில் வெற்றி பெற முடியும்? இவ்வளவு யூனிட்களுக்கு அவர்கள் கட்டணம் கட்ட வேண்டியதில்லை என்ற சலுகை அளிக்கப்படுகிறது. ஆனால் அதற்கு மேல் எரிகிற யூனிட்களுக்கு அவர்கள் கட்டணம் செலுத்த வேண்டும் என்று கட்டளையிட்டாலும் கூட பரவாயில்லை. ஆனால் ஒன்பது மணிக்கு மேலாக படிக்கக்கூடக் கூடாது என்றால் அது அவர்களின் குழந்தைகளின் முன்னேற்றத்தைத் தடுக்கக் கூடியதாக அமையும். ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. இதேபிரச்சினை குறித்து கடந்த மானியக் கோரிக்கையின்போதும் பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அதற்கு அன்றுள்ள முதல் அமைச்சர் அவர்களும் பதில் தந்திருக்கிறார்கள். அதை நான் இப்போது படித்துப் பார்த்தேன். இம்மாதிரியான நிலை மாறவேண்டும்.

அதோடு போலீஸ் ஸ்டேஷன் சம்பந்தப்பட்டவரை நான் ஏற்கனவே போன மானியக்கோரிக்கையின்போது சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் ஒவ்வொரு ஜீப் குறைந்த பட்சம் அளிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறேன். ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் ஒவ்வொரு டெலிபோனாவது இருக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறேன். இன்றைய தினம் அவர்கள், கொலை, கொள்ளை, திருட்டு இவற்றைக் கண்டு பிடிப்பது என்பது மட்டுமல்ல. இன்றைய நிலையில் புதியதொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

சமீப காலத்தில் பணக்காரர்கள், பரம்பரைத் தன்மையில் பெரிய மனிதர்கள் என்று கருதப்படுகிறவர்கள், சமுதாயத்தில் செல்வாக்கு பெற்றவர்கள் அவர்கள் அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள போலீஸின் உதவியைக் கோருகிறார்கள். அவர்களுக்கு சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டிருக்கிற நிலையில் உள்ள மக்கள். சமுதாயத்தில் தாழ்ந்திருக்கக்கூடிய மக்கள், கல்வியில் பொருளாதாரத்தில் தாழ்ந்திருக்கிற நிலையில் உள்ள மக்கள் இவர்களை எல்லாம் அவர்கள் விரும்பவகைபோல் நடத்துவதற்கு உரிமை இருக்கிறது என்று அவர்கள்

இன்றும் கருதிக் கொண்டிருக்கிறார்கள். அந்த உரிமையை அவர்களுக்குத் தேடித் தருவதற்கு போலீஸாரின் உதவியை நாடுகிறார்கள். அப்படி போலீஸும் அவர்களுக்கு பலயிடங்களில் உதவியும் செய்கிறார்கள். அப்படி உதவி செய்யாவிட்டால் அவர்களுக்கு பல்வேறுவிதமான கோளாறுகளை ஏற்படுத்துகிறார்கள். அவர்களுக்குப் பத்திரிக்கைகள் இருக்கின்றன. அவர்கள் பிரசாரம் செய்கிறார்கள். கிளர்ச்சிகளை ஏற்படுத்துகிறார்கள். சண்டைசச்சரவுகளை ஏற்படுத்துகிறார்கள். போலீஸுக்குச் சக்தியில்லை, பலமில்லை என்ற எண்ணம் ஏற்படக்கூடிய வகையில் ஒரு நிலையை உண்டாக்கிவிடுகிறார்கள். ஆகவே குற்றங்கள் எங்கே துவங்குகிறது? எங்கே ஆரம்பித்து வளர்கிறது? இதையெல்லாம் நுணுக்கமாக ஆராய்ந்து அதன் அடிப்படையைக் கண்டுபிடித்து அதை மாற்றவேண்டும்.

முன்பிருந்ததைப்போல் இன்று போலீஸார் யாரை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்ற நிலை மாறிவிட்டது. ஆகவே, அன்றைய நிலையில் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களை புனர்பரிசீலனை செய்ய வேண்டிய கட்டம் வந்திருக்கிறது. எனக்கு முன் பேசிய பலர் மதுவிலக்கு பற்றிச் சொன்னார்கள்.. (மணியடிக்கப்பட்டது.) மதுவிலக்கு இன்று வெற்றி பெறவில்லை என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் அது குறித்த சட்டம் இருப்பதால் போலீஸிற்கு மதுவிலக்கை நடத்த வேண்டிய பொறுப்பிருக்கிறது. அந்தப் பொறுப்பில் அவர்கள் சரியானபடி நடக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் இருக்கின்றன.

பலர் பலயிடங்களில் துப்பாக்கிகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வைத்துக்கொண்டிருப்பது சட்டவிரோதமானது. ஆனால் இன்று துப்பாக்கிகள் செய்வதற்கும், அவற்றை விற்பதற்கும், அவற்றைக் கையாளுவதற்குமான சூழ்நிலை இருப்பதால் இன்று பலயிடங்களில் பல சம்பவங்கள் நடைபெற்றிருப்பதைக் காண்கிறோம். (மணியடிக்கப்பட்டது.) எல்லோரும் துப்பாக்கி வைத்துக்கொள்வதினால் ஒன்றும் முழுகிவிடாது. அதனால் ஒரு குழப்பமும் உண்டாகிவிடாது என்று சொல்லிக்கொண்டு நேரமில்லாததால் மற்ற விஷயங்களை விளக்கமுடியாததற்கு என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி**: தலைவரவர்களே, காவல்துறை மானியத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தி என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இன்றையத்தினம் காவல்துறை மானியத்தின் மீது இந்த அவையிலே நடந்திருக்கும் விவாதத்தின் அடிப்படையிலே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் ஒரு நிலை, சட்டம், ஒழுங்கு இவற்றிற்கு இருந்த மரியாதையும், பயமும் மக்களிடையே குறைந்து வருகின்ற பரிதாபகரமான நிலைமையும், அதற்காக குற்றச்சாட்டுக்களை இந்தத் தரப்பிலேயிருந்து அந்தத் தரப்பினர்மீதும், அந்தத் தரப்பிலேயிருந்து இந்தத் தரப்பினர்மீது சொல்லப்பட்டாலும்கூட அந்த குற்றச்சாட்டுக்கள் உண்மையென்ற நிலைமையும், அதற்கான பொறுப்பினைக் கடைசியாக ஏற்க வேண்டிய நிலையில் அரசு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் வலியுறுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடுகூட, இந்த மரியாதை குறைந்துவரும் நேரத்தில் போலீசார் கலவரங்கள் நடக்கும்பொழுது சட்டம் ஒழுங்கைச் சீராக்க வேண்டிய நேரத்தில் அவர்களுடைய கரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. எதும் செய்ய முடியாமல் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே, இப்பொழுது இருக்கின்ற அரசு, அவர்கள் உரிய முறையிலே நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரமோ அல்லது உத்தரவு இடமுடியாத நிலைமையிலோயுள்ள அந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பதை எவ்வளவுதான் மறுத்தாலும் அதை மக்கள் மத்தியிலிருந்து அகற்றிவிட முடியாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





அடுத்து, பல நேரங்களிலும் கலவரங்கள் நடக்கும் நேரங்களில், சட்டம், ஒழுங்கு, அமைதி, சீர்கேடு அடையக்கூடிய நேரத்தில் அரசு தரப்பில் அடிக்கடி விசாரணைக் கமிஷன் என்று நியமித்து நீதி விசாரணை நடக்கிறது என்று கூறி, அதற்கான பரிகாரங்களைக் காண உடனடியாகப் பேச முடியாத ஒரு நிலைமையும், அதை மக்கள் மன்றத்திலே விவாதிக்க முடியாத ஒரு நிலைமையும் ஏற்படுத்தி, அதனுடைய காரண காரியங்கள் என்ன, அது எதற்காக ஏற்பட்டது, அரசு எங்கேயாவது தவறு செய்ததா அல்லது அதிகாரிகள் எங்கேயாவது தவறு செய்தார்களா அல்லது பொதுமக்கள் எங்கேயாவது தவறு செய்தார்களா என்ற உண்மையான நிலையை நாட்டுக்குத் தெரிவிக்க முடியாத, தவறுகளைத் திருத்திக்கொள்ள முடியாத நிலையை இன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த அரசு உண்மையிலேயே இப்படிப்பட்ட நிலைமைகளிலே போலீசாருக்கு உரிய முறையிலே அதிகாரம் தருபவர்களாக இருந்தால் நீதி விசாரணை, மற்ற விசாரணைகள் மீதான முடிவுகளை இந்த அவைக்கு வைக்க வேண்டும். வைத்து உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சட்டம், அமைதி, ஒழுங்கைப்பற்றி நாம் எவ்வளவுதான் திரும்பத் திரும்பப் பேசினாலும்கூட, கடந்த பிப்ரவரி மாதம் 3-ம் தேதியும், 4-ம் தேதியும், ராஜாஜி ஹாலிலே நம்முடைய பெருமதிப்பிற்குரிய முன்னாள் முதலமைச்சரவர்களுடைய சடலம் இருந்தபொழுது நடந்த நிகழ்ச்சிகள் கலவரங்கள், துப்பாக்கிச் சூடு, கண்ணீர்ப் புகை, தடியடி இவையெல்லாம் நாம் எந்த அளவுக்கு சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். நம்முடைய போலீசாரைப் பொறுத்தவரையில் பவேரியா கொள்ளைக் கூட்டத்தினரையும் கள்ள நோட்டு அச்சடிப்பவர்களையும் கண்டு பிடித்தமைக்காக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் மிகவும் நல்ல முறையிலே அதைச் செய்திருக்கிறார்கள். அவர்களை நல்ல முறையிலே இயங்கவிட்டால் மிகச் சிறப்பாக இருக்கும் என்பதற்கு அது எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தவிர, நாகர்கோயிலில் நடந்த நிகழ்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாமல், கலவரங்கள் அவர்களையும் மீறி, அவர்கள் கண்ணுக்கு எதிரே நடந்த கலவரங்கள் என்ற நிலைமை ஒரு எச்சரிக்கை என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நகரத்திலேயும்சரி, நாட்டிலேயும்சரி சூதாட்டம் பெருகி வருகிறது. 'ரெக்ரியேஷன் கிளப்புகள்' என்று இந்த நகரத்திலே பெருகி அதிகப்படியான அளவில் இன்றைக்கு அந்தக் கிளப்புகளில் சூதாட்டம் ஒன்றையே தொழிலாக வைத்து நடைபெறுகின்றன. மூர்மார்க்கெட், மெரினா பீச் பாதையோரங்களில் சூதாட்டங்கள் நடைபெறுவதைப் போலீசார் பார்த்துக் கொண்டு போகவேண்டிய நிலைமையில் இருக்கிறார்களே தவிர, நடவடிக்கை எடுக்க முடியாதவர்களாக, எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறார்கள். அதைத் தவிர்த்து நாட்டிலே நல்ல நிலைமை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நம்முடைய காவல் துறையிலே இருக்கின்ற டி. எஸ்.பி. கள் நம்முடைய மாநில அளவிலே நியமிக்கப்படுகின்றவர்களுக்கு இந்திய சர்க்காரிலே யு. பி. எஸ். ஸி.-யில் நியமிக்கப்படுகின்ற ஐ. பி. எஸ். அதிகாரிகளுக்கு இருப்பதைபோல அவர்களுடைய பதவியிலே, உத்தியோக உயர்வு அளிப்பது, பதவித் தகுதி இவற்றிலே ஏற்றுக்கொள்ளாது இருக்கக்கூடிய நிலைமை யிருக்கிறது. இதைச் சீர்படுத்தி ஒன்றாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். இதற்கு உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு கோரிக்கை, மலையாளிகள் எதிர்ப்புக் கோரிக்கை, மாவோ சிந்தனைகள் போன்ற நாட்டிலே பலாத்கார உணர்வுகளைத் தூண்டக்கூடிய புத்தகங்கள், விளம்பரங்கள் இருக்கின்றன. அவைகளைத் தடுக்க முடியாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். பலமுறை மன்றத்திலே எடுத்துக் கூறிக்கொண்டிருக்கிறோம். அரசு தங்களுடைய கூட்டணியில் அவர்கள் இருக்கிறார்கள் என்பதால் விட்டுவிடக் கூடாது, அப்படிப்பட்ட

எண்ணம் மக்கள் மத்தியிலே பரவக் கூடாது. இதைப்பற்றிக் கடந்த இரண்டாண்டுக் காலயாகச் சொல்லி வருகின்ற நிலைமை இருக்கிறது, இந்த நிலை மாறி அடுத்த ஆண்டு இதைப்பற்றிச் சொல்ல முடியாத நிலையில் மாற்றி அமைத்து நல்ல முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திண்டிவனத்தில் '.·.பையர் ஸ்டேஷனு'க்கு ஓராண்டுக் காலமாக கட்டிடம் இல்லை. அந்தக் கட்டிடத்தை உடனடியாகக் கட்டித் தரவேண்டு மென்று கேட்டுக்கொண்டு, எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுக்கப் பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்.

* **திரு. பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, இதுவரை பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் போலீஸ் நிர்வாகத் துறையைப் பற்றியும், சட்டம், ஒழுங்கு இங்கே சரியாகப் பாதுகாக்கப்படவில்லை என்றும் இங்கே எடுத்துக் கூறினார்கள். சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பதில் போலீசாருக்கு மாத்திரம் இல்லாமல் போலீசாரோடு, பொது மக்களுக்கிருக்கும் பொறுப்பையும் நாம் மறந்துவிடக் கூடாது. நம்முடைய தமிழகக் காவல் துறையினர், உலகத் தமிழ் மாநாடு நடந்த நேரத்திலும், இங்கே உலகப் பெருஞ்சந்தை நடந்த நேரத்திலும், கும்பகோணத்தில் மகாமக விழா நடந்தபொழுதும் எவ்வளவு அருமையாக சட்டம், ஒழுங்கைக் காப்பாற்றினார்கள் என்பது தெரியும். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களே, அதிலும் குறிப்பாக கும்பகோணம் நகரசபைத் தலைவர் அவர்களே பாராட்டியிருக்கிறார்கள். அந்த அளவுக்குப் பாராட்டுப் பெற்ற நம்முடைய காவல் துறையினர் பற்றி அறிஞர் அண்ணாவின் உடலைப் பார்ப்பதற்குப் பொதுமக்கள் வந்த நேரத்தில் ஏற்பட்ட சம்பவத்தைக் குறிப்பிட்டு இங்கே ஒரு நண்பர் குற்றம் சாட்டினார். ஆனால் அந்தச் சம்பவத்தின் பொழுது காவல் துறையினர் இதைவிட எப்படி நடந்தால் அதைத் தவிர்த்திருக்கலாம் என்று யாராலும் நிச்சயமாக ஒரு மாற்றுப் பரிகாரம் தர முடியாது. தவிர்க்க முடியாத நிலைமை, உணர்ச்சிவசப்பட்ட கூட்டம், பொதுமக்கள் உணர்ச்சி வசப்பட்டிருந்தார்கள். ஊர்வலம் போகின்ற நேரத்தில், வாதத்திற்காகச் சொன்னால், ஐ. ஜி. அவர்கள் போகின்ற காரின் கூரையில் ஏறத்தாழ 20 பேர்கள் அமர்ந்து சென்றார்கள். இரயிலில் வந்து பாலத்தில் மோதி மாண்டார்கள். கூட்ட நெரிசலைச் சமாளிக்க முடியாமல், சடலத்தையே காப்பாற்ற முடியாதோ என்ற சந்தேகமான நிலைமையில் போலீசார் கண்ணீர்ப் புகை செய்தார்கள். அது காவல்துறையினரின் தவறு அல்ல. பொதுமக்களில் சிலர் அங்கே கடைபிடிக்க வேண்டிய அமைதியை மறந்த காரணத்தால் அந்தச் சூழ்நிலை ஏற்பட்டது.

இன்னொன்று கூற விரும்புகிறேன். காவல் துறையினர் தங்களுடைய கடமையை நிறைவேற்ற அமைச்சர்களுடைய ஆணை மாத்திரம் அல்ல, ஆளுங்கட்சியின் கட்டளைகள் மாத்திரம் அல்ல, எதிர்க்கட்சியும் தங்களுடைய கடமையை மறந்துவிடக் கூடாது. எதிர்க்கட்சி நண்பர்கள், காவல் துறை சரியாக நடைபெறுவது சம்பந்தமாக அழைத்துப் பேசுகின்ற நேரத்தில் தங்களுடைய ஒத்துழைப்பைத் தரவேண்டும்.

உதாரணமாக, அருமைக் காங்கிரஸ் நண்பர்கள் சட்டம், ஒழுங்கு இல்லை இல்லை என்று நாளெல்லாம் பேசுகின்ற அவர்கள், 24 மணி நேரமும் சட்டம், ஒழுங்கை உடைப்பதில் மிகத் தீவிரமாக பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மதுரையிலே நடந்த சம்பவத்தைப்பற்றி போலீசார்மீது இவர்கள் கூறுகிறார்கள். ஆனால் மதுரையில் நடந்தது என்ன? குற்றவாளிகளைப் போலீசார் லாரிகளில் ஏற்றிக்கொண்டு வரும்பொழுது அவர்களை விடுவிப்பதற்கு பலாத்காரமாக 100 பேர் போகிறார்கள். போலீஸ் லாரியின் மீது கல்லெறிந்தார்கள், போலீசார் மண்டைகள் உடைக்கப்பட்டன. லாரியின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. பொதுமக்கள் காயமடைகிறார்கள். இவ்வளவையும் பார்த்துக்கொண்டு போலீசார் மௌன சுவாமி [illegible] சும்மாயிருக்க வேண்டும் என்று நம்முடைய காங்கிரஸ் [illegible] எப்படி எதிர்பார்க்கிறார்கள் என்று புரியவில்லை.



இருபது ஆண்டு காலமாக இந்த நாட்டை நிர்வகித்தவர்கள், சட்டம் தெரிந்தவர்கள், அப்படிப்பட்ட மாபெரும் தவறைச் செய்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் தலைவரவர்கள் சொன்னார்கள், எங்கள் கட்சிக்காரர்கள் என்று எப்படிக் குறிப்பிட்டுச் சொல்லுகின்றீர்கள் என்று. 1965-ல் ஒரு சாதாரண மண்டல காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் மாவட்ட போலீஸ் அதிகாரி பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, தடுக்கும்பொழுது, அதையும் மீறி, மாணவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்திய நேரத்தில் அரிவாளால் வெட்டினார், வீரையா என்பவர். குத்து, வெட்டு என்று போலீசாரை அண்டவிடாமல் மாணவர்கள் குடலைச் சரித்திருக்கிறார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. கோர்ட்டிலே அவர் குற்றவாளி என்று தண்டிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே, பலாத்காரத்திற்கு, காங்கிரஸ்காரர்கள் பரம்பரை பாத்தியமாக இருக்கிறார்கள். அவர்கள் பலாத்காரத்தைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் அதிகாரிகள்மீது பாய்ந்துக் கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியில் 5, 6 காவல் நிலையங்களில், கள்ளிக்குடி, டி. கல்லுப்பட்டி, விருதுநகர் மேற்கு இப்படிப்பட்ட காவல் நிலையங்களில் இப்படிப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் அத்தனைபேரும் பரம்பரை கேடிகள், குற்றவாளிகள். உடனே காங்கிரஸ்காரர்கள், கொடியைப் பிடித்துக்கொண்டு, எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களைக் கைது செய்துவிட்டார்கள் என்று ஊர்வலங்கள் வருவதும், காவல் நிலையங்களுக்கருகில் போய் இரவெல்லாம் தூங்காமல் இருப்பதும், ஏதாவது அனாதைப் பிணங்கள் இறந்துகிடந்தால் அதைத் தூக்கிவைத்துக்கொண்டு தியாகி என்று சொல்லி, வீதியில் தூக்கிக்கொண்டு வருவதும், ஆன காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். அவர்கள் சட்டம், ஒழுங்கு நல்லமுறையில் காப்பாற்றப்படவில்லை என்று கூறுகிறார்கள். அதற்குச் சொந்தக்காரர்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கூறிக் கொண்டு, நம்முடைய காவல்துறைக்குச் சில சலுகைகளைச் செய்யவேண்டும். அவர்களுக்குச் சம்பளம் குறைவு, இல்லங்கள் சரியாகக் கட்டப்படவில்லை. அவர்களுக்குக் குவார்ட்டர்ஸ் கட்டித்தர வேண்டும். பஸ்களில், இரயில்களில் செல்வதற்கு ப்ரீ பாஸ் வழங்கப்பட வேண்டும், அவர்களுடைய சமுதாய அந்தஸ்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுது விவாதத்திலிருக்கிற மானியக் கோரிக்கை சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்வருகிறேன். இதற்கு முன்னால் மன்றத்தில் உறுப்பினர்கள் சொல்லியிருக்கின்ற கருத்துக்களைப் பார்க் இன்றபொழுது காவல்துறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று இன்றையதினம் புலனுகின்றது ஒருகாலத்தில் நில உடைமையாளர் களையும் இன்னும் தொழில் அதிபர்களையும் பாதுகாப்பதற்காக காவல் படைகளை உபயோகப்ப த்திக்கொண்டு வந்தார்கள். அன்றயதினம் சர்வாதிகார ஆட்சி இருந்த காலத்தில் தங்களுடைய இஷ்டத்திற்கு, தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, ஏழை எளியவர்களை வாட்டி வதைப்பதற்காக, அவர்களை அடித்துத் துன்புறுத்துவதற்காக ஏற்பட் டிருக்கக்கூடிய ஒரு படையாக அமைந்திருந்தது, காவல் படை. இன்று, அதற்கு நேர்மாறாக, எல்லாத் துறைகளிலும் வெகுவேகமாக மாற்றம் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றது. இன்றையதினம் பழைய பிரிட்டிஷ் காலத்திலே ஏற்படுத்தப்பட்ட போலீஸ் படைகளை வைத்துக்கொண்டு, ஆட்சி நடத்துவது என்பது மக்களுக்கு விரோதமான செயல்களிலே ஈடுபடக் கூடிய ஒரு நிலையிலேதான் கொண்டுபோய்விடும். ஆகவே, போலீஸ் கோட் சம்பந்தமாக ஒழுங்குமுறை ஆய்வுக் குழு ஒன்று அமைத்து, பரிசீலனை செய்து போலீஸ் கோடிலே இருக்கக்கூடிய தவறான, ஜனநாயகத்துக்கு விரோதமான அம்சங்களை மாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அமைச்சரவர்கள் கொடுத்திருக்கக்கூடிய இந்த அறிக்கையில் மத்திய அரசு ஊழியர்கள் போராட்டம் சட்ட அமைதிக்குப் பங்கம் இல்லாத முறையில் நடந்ததாக குறிப்பிட்டிருக்கிறார்கள். இம்மாதிரி

[திரு. ஆ. கு. சுப்பையா] [1969 மார்ச் 15

நடந்திருக்கக்கூடிய அந்த நிலையில் அவர்கள்மீது இன்றையதினம் வழக்குகள் தொடரப்பட்டு, வழக்குகள் வழக்கு மன்றங்களிலே இருந்து கொண்டிருக்கின்றன. அம்மாதிரியான வழக்குகளை வாபஸ் வாங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்தப்படியாக, காவல் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு கடைநிலை ஊழியர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சதவிகிதம். அவர்களுக்கு ஒதுக்கிய சதவிகிதத்தைப் பார்த்துச் செய்ய முடியாத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு மாற்றாக இனிமேலாவது அந்தந்த துறையில் அவர்களுக்கு எவ்வளவு ஒதுக்கப் படவேண்டுமோ அதைப் பார்த்து செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றையதினம் இந்தக் காவல் துறையிலே ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள் மிகவும் குறைந்த சம்பளம் பெற்றுக்கொண்டிருக்கக் கூடிய காவலர்கள், பெரும்பாலோர் ஏழைகளாக இருப்பதன் காரணமாக, அவர்கள் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய உரிமைகளைச் சொல்வதற்குக்கூட இன்றையதினம் எந்தவிதமான உரிமைகளும் இல்லாத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, காவல் துறையைச் சார்ந்தவர்கள் சங்கம் வைத்துக்கொள்வதற்கு அனுமதி வழங்கவேண்டும். அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தை குறைந்தது ரூ. 100 அளவுக்காவது உயர்த்த வேண்டும். வீடுகளில்லாமல், கிராமங்களிலே மிக அவதிப்படுகிறார்கள் காவலர்கள் ஆகவே அவர்களுக்கு காலனிகள் அமைத்துக் கொடுக்கவேண்டிய நிலை அரசாங்கத்திடம் இல்லையென்று சொன்னாலும் குறைந்தபட்சம் வீட்டு வாடகை என்று சொல்லக் கூடிய அந்த வாடகையை ரூ. 25 அளவுக்காவது உயர்த்த வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

காவல் துறையினருக்குப் புகார்கள் வந்தால், ஒரு குறிப்பிட்ட காலத்தில் அந்தப் புகார்களை விசாரித்து 'பைசல்' செய்து, முடித்துவிட வேண்டும். வேலையிலே ஈடுபட்டிருக்கக்கூடிய மக்கள் காவல் நிலையத்திற்கும் வீட்டிற்குமாக அலைந்துகொண்டிருக்கிற நிலை ஏற்படாத அளவுக்கு நிலையை உருவாக்க வேண்டுமென்ற ஆலோசனையை சொல்வதற்கு விரும்புகிறேன்.

தீ விபத்துகளைக் கண்டுபிடிப்பதற்காக புலன் ஆய்வுக்குழு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தீ விபத்துக்கள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருவது மட்டுமல்ல, ஒவ்வொரு வருஷமும் நாம் பார்க்கின்றோம், எரிந்துகொண்டிருக்கக்கூடிய வீடுகள் எல்லாம் அரிசன ஏழைகளுடைய வீடுகளாக இருக்கின்றன. யார் அந்த அரிசன ஏழைக் குடில்களுக்குத் தீ வைக்கிறார்கள் என்பதை புலன் ஆய்வுக்குழு கண்டுபிடிக்க வேண்டும். அதைத் தடுத்து நிறுத்துவதற்குரிய முறைகளைக் கையாள வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

மதுவிலக்கு அமுலிலே இருப்பது சம்பந்தமாக, அதைக் கைவிடுவது நல்லது என்று எல்லோருமே சொல்லிக்கொண்டு வருகிறோம். அரிஷ்டம் என்ற பெயரில், பயங்கரமான போதை கலந்த வஸ்துக்களை விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதை ஏழை எளியவர்கள் அருந்தி வருவதன் காரணமாக இன்றையதினம் வழக்குகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. அதுமாதிரி, எந்த எந்த கம்பெனிகள் போதை கலந்த அரிஷ்டங்களைத் தயார் செய்கின்றார்களோ, அவர்களைத் தடை செய்து, அவர்களுடைய லைசென்ஸ்களைப் பறிமுதல் செய்யவேண்டுமென்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

இறுதியாக, விவசாயிகள், தொழிலாளிகள் தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடுகின்றபொழுது இன்றையதினம் போலீஸார்கள் தலையிடக் கூடாது என்ற ஒரு நிலையை ஏற்படுத்தியாக வேண்டும். அவர்கள் தலையிடுவதன் மூலமாக, ஆங்காங்கு செல்வாக்குள்ள நபர்கள், முதலாளிகளாக இருந்தாலும், நிலப் பிரபுக்களாக இருந்தாலும், தங்களுக்குச் சாதகமாக காவலர்களைப் பயன்படுத்திக்கொண்டு, விவசாயிகளுக்கும்,



1969 மார்ச் 15] [திரு. ஆ. கு. சுப்பையா]

தொழிலாளிகளுக்கும் விரோதமான வகையிலே ஈடுபடுகிறார்கள். நிலத்திலிருந்து வெளியேற்றுவதற்கும் பண்ணையிலிருந்து வெளியேற்றுவதற்கும் அதுபோன்று கதவடைப்பில் ஈடுபடுகிற நேரத்திலே, தொழிலாளிகளுக்கு விரோதமாக ஈடுபட்டு வருவதையும் தடை செய்கின்ற முறையிலே இன்றையதினம் அரசாங்கம் திட்டவட்டமான கொள்கையை வகுத்தாக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது) இம்மாதிரி இருக்கிற நேரத்தில் இன்றையதினம் ஏழைகள்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். எனக்கு முன்னால்கூட அங்கத்தினர்கள் குறிப்பிட்டதைப்போல், 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்ற முறையில் ஏழைகள்மீதுதான் வழக்குத் தொடருகிறார்கள். ஏதாவது நடந்தால், உடனே அவர்கள்மீது வழக்குத் தொடர்ந்து கோர்ட்டிலே நிறுத்துகிறார்கள். அவர்களை அவதிக்குள்ளாக்குகிறார்கள். அந்த நிலை மாறியாக வேண்டும். பிரச்னைகள் அதிகரித்துவருகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுமக்களுக்கும் போலீசாருக்கும் சுமுகமான உறவு நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னால், மேம்பாடான முறையில் அமுல்படுத்த வேண்டுமென்று சொன்னால், போலீஸாருடைய நடைமுறை கொள்கைகள், விதிகள், கட்டுப்பாடுகள் இத்தனையையும் மாற்றுவதற்குரிய முறையில் இன்றையதினம் நாம் திட்டவட்டமான அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால், போலீஸார் செய்யக்கூடிய சிறு தவறுகளும் ஆளும் கட்சித் தலையிலேதான் விழும். அந்த நிலைமைதான் ஏற்படுகிறது என்று சொல்லிக்கொண்டு. அதற்குரிய முறையிலே அரசாங்கம் ஆராய்ந்து இந்த போலீஸ் ஒழுங்குமுறை ஆய்வுக்குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சுதந்திராக் கட்சி சார்பிலே கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். 14 கோடி சில்லறை ரூபாய்க்கு இந்தத் துறையின்கீழ் ஒதுக்கப்பட்டிருந்தாலும் இது ஓரளவேனும் போதாது என்பதைப் பற்றி இங்கே நான் சொல்வதற்கு வாய்ப்பிருக்கிறது. பல சலுகைகள் தேவை, பல வசதிகள் தேவை, அவர்களுக்கு. இன்னும் அவர்களுக்குச் சரியான 'ஹவுசிங் ஸ்கீம், போட்டு, வசதி செய்யவில்லை, நம்முடைய அரசாங்கம் என்று இங்கே அரசாங்கத்திற்கு நினைவூட்ட விரும்புகிறேன். இந்தக் கோரிக்கைக்குக் குறைவாக இருக்கிறது. மற்ற மாநிலங்களை நாங்கள் ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்திலே அஸ்ஸாம் மாநிலத்திலே 10·9 சதவிகிதம் பட்ஜெட்டிலே இதற்காகச் செலவிடக்கூடிய நிலையைப் பார்க்கின்றோம். அதே நேரத்தில் டெல்லி சர்க்காரும் 13 சத விகிதம் இதற்காகச் செலவு செய்வதை நாம் பார்க்கின்றோம். ஆனால், இங்கு குறைவாகச் செலவு செய்கிறார்கள். காவல் துறையினர் நல்ல காரியங்களைச் செய்கிறார்கள். அப்படியிருந்தாலும்கூட, இன்றையதினம் பரவலாக இருக்கக்கூடிய அபிப்பிராயம் என்னவென்றால், காவல் துறையிலே பணியாற்றக் கூடியவர்கள் மக்களைச் சரியான வகையிலே கவனிக்கவில்லை, மக்களை புண்படுத்தக்கூடிய அளவுக்கு காவல் நிலையத்திலே, போலீஸ் ஸ்டேஷனிலே நடந்து கொள்கிறார்கள் என்கின்ற புகாரைத்தான் பார்க்கிறோம். இதை அரசாங்கம் ஜாக்கிரதையாகக் கண்காணிக்க வேண்டும். ஏனென்றால், போலீஸ் துறையிலே நடக்கக்கூடிய தவறுகள் எல்லாம் அரசாங்கத்திற்குத்தான் வருமே தவிர, வேறு யாருக்கும் போகாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இப்பொழுது என்னுடைய தொகுதியான பூங்காவிலே (பார்க்) பிற்பகல்
இரண்டு பாகங்கள் இருக்கின்றன. சூளை, சௌகார்பேட் என்று இரண்டு 12-30
ஏராளமான பாகங்கள் இருக்கின்றன. சூளையில் என்ன பார்க்கிறோம்? பேர்கள் அங்கே ப்ரொஹிபிஷன் கேஸ்களில் அகப்பட்டுக் கொள்வதைப் பார்க்கிறோம். இங்கே நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், போலீஸ்காரர்கள் தயவுசெய்து அங்கே இருக்கக்கூடியவர்கள் என்ன காரணத்தை ஒட்டி இந்த கேஸ்களில் சிக்கிக்கொள்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். எந்த இடத்தில் ப்ரொஹிபிஷனுக்கு எதிராக

தேவையாக இருக்கக்கூடிய பொருள்கள் உற்பத்தியாகிறது என்பதைப் பார்க்க வேண்டும். யார் கள்ளச் சாராயத்தைத் தயார் செய்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். தயார் செய்பவர்களை ஏன் தடுக்கவில்லை என்றுதான் அரசாங்கத்தைத் தட்டிக் கேட்கக்கூடிய ஒரு நிலைமை இன்று இருக்கிறது. அரசாங்கத்திற்குத் தெரியும், போலீஸ் துறையிலே உயர்ந்த அதிகாரிகளுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். எந்த இடத்தில் கள்ளச் சாராயம் உற்பத்தியாகிறது என்று தெரியும் யார் யாருக்குப் பெர்மிட் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரியும். பெட்ரோமாக்ஸ் லைட்டுக்குத் தேவை என்ற காரணத்தை ஒட்டி லைசென்ஸ் கொடுத்திருந்தாலும், மற்ற தவறான காரியங்களுக்குச் சாராயத்தை விற்பனை செய்கிறார்கள். ஏன் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்று நான் கேட்க விரும்புகிறேன்.

புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள். 2½ லட்சம் பேர்கள் மீது ப்ரொஹிபிஷன் கேஸ்கள் போடப்பட்டிருப்பதாக புள்ளி விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 2½ லட்சம் பேர்கள் என்றால், 2½ லட்சம் குடும்பங்கள் தவறான போக்கில் போய்க்கொண்டிருக்கிற வகையில் வழக்கு போட்டிருக்கிறார்கள். ப்ரொஹிபிஷன் கேஸ் என்றால் ஒரு குடும்பமே பாதிக்கப்படுகிறது. அனாவசியமான வகையில் இந்த வழக்குகளைப் போட்டு, மக்களைக் கீழ்த்தரமாகப் பேசி, அவமரியாதையாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், கேஸ்களின் எண்ணிக்கை உயர்ந்திருப்பதாகச் சொல்வதில் பயனில்லை. ஜாஸ்தியாகக் கேஸ் போட்டார்கள், ஆகவே காவல் துறையைப் பாராட்ட வேண்டும் என்று சொல்வதைவிட, எந்த இடங்களில் கள்ளச் சாராயம் உற்பத்தியாகிறது என்று கண்டுபிடித்து, நடவடிக்கை எடுத்துக்கொண்டால், அரசாங்கத்தைப் பாராட்ட முடியும். கேஸ்களின் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு காவல் துறையினரைப் பாராட்ட வேண்டும், ஜாஸ்தியாகக் கேஸ் போட்டார்கள் என்று பாராட்ட வேண்டுமென்றால் பாராட்டுவதற்கில்லை.

அடுத்தபடியாக, police stations are the places which have to be the public relations points also. என்ற தலைப்பின்கீழ் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் ஸ்டேஷனில் இருக்கக்கூடிய அதிகாரிகள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரக்கூடிய நபர்களை கீழ்த்தரமாகப் பேசக்கூடாது. ஒரு நபர் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தால் 'டி. எம். கே-யாக இருந்தால் என்ன' என்று அலட்சியமாகச் சொல்கிறார்கள். 'அண்ணா படத்தை மாட்டிக் கொண்டு வந்தால் என்ன விட்டுவிடுவேனா?' என்றெல்லாம் அலட்சியப்படுத்தி, அண்ணா அவர்களை இழுத்து, தி. மு. க. தலைவர்களை இழுத்துப் பேசி, தாறுமாறாக பேசக்கூடிய ஒரு காட்சியைப் பார்க்கிறோம். எனக்கு இம்மாதிரி புகார்கள் வந்திருக்கின்றன. நான் எதற்காக இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், தி. மு. க-வுக்காக காவல் துறையினர் பணிபுரிகிறார்கள், தி. மு. க. சார்பிலே அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு கருத்து தவறான கருத்து. நான் நிச்சயமாக, திட்டவட்டமாக, ஆதாரபூர்வமாகச் சொல்ல முடியும். எனது தொகுதியைப் பொறுத்த வரையில், காங்கிரஸ்காரர்கள், பெரிய பெரிய உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கக்கூடியவர்கள்—நான் ஆதாரத்தோடு நிரூபிக்க முடியும்—அவர்கள் கையாட்களாக இருக்கிறார்கள். அவர்கள் சொல்கிறபடி நடக்கிறது. வேண்டிய அளவுக்குச் சலுகை கொடுத்துக்கொண்டு, பண வசதி கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்;** சபாநாயகர் அவர்களே,................

DR. H. V. HANDE : I am not yielding the floor. If it is a point of order, I will yield.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.





**டாக்டர் எச். வி. ஹாண்டே:** திட்டவட்டமாக நான் நிரூபிக்க முடியும். பல தோழர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், காங்கிரஸ் நண்பர்கள், லைசென்ஸ் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். லைசென்ஸ் பெற்றுக்கொண்டு, தவறான வகையில் அதைப் பயன்படுத்தி அதிகாரிகளைத் தங்களுடைய கையிலே போட்டுக்கொண்டு, தவறான போக்கில் போய்க்கொண்டிருக்கிறார்கள், இந்தத் தவறான போக்கை நிறுத்த வேண்டும். அரசாங்கம் இதைக் கண்காணிக்க வேண்டும். கழகத் தோழர்களும், சுதந்திராக் கட்சித் தோழர்களும் என்ன சொல்கிறார்கள் என்றால் 'சென்ற பல ஆண்டுகளாக திரு. பக்தவத்சலம் ஆட்சியிலும் சரி, திரு. காமராஜ் ஆட்சியிலும் சரி, நாங்கள் முதுகில் அடி வாங்கிக்கொண்டிருந்தோம். இப்பொழுதும்கூட அடி வாங்கக்கூடிய தலையெழுத்தா எங்களுக்கு?' என்று கேட்கக்கூடிய பரிதாபகரமான நிலை இன்றையதினம் இருக்கிறது. அதை உடனே தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தைப் பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். சௌகார்ப்பேட்டையில் ஒரு பயங்கரமான நிலைமை இருக்கிறது. அடிக்கடி இந்தி அஜிடேஷன் என்று எங்காவது ஒரு இடத்தில் ஏதாவது ஒரு காரணத்தையொட்டி தகராறு ஏற்பட்டால், மனது புண்படக்கூடிய நிலையில், முதலில் தாக்கப்படக்கூடிய இடம் என்னுடைய தொகுதிதான். ஆகவே, இந்தத் துறையின்கீழ் பேசுகின்ற நேரத்தில் நான் என்ன கேட்டுக்கொள்கிறேன் என்றால், இதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். இதிலே மாணவர்கள் ஈடுபடவில்லை. சில சாதாரண சிறு குழந்தைகள், அவர்களுக்குச் சலுகை இருக்கிறதோ, தைரியம் இருக்கிறதோ—காங்கிரஸ் ஆட்சியில் 1965-ல் நடந்தது, நாங்கள் பார்த்தோம், இப்பொழுதும் நடந்துகொண்டிருக்கிறது—அவர்கள்தான் இதிலே ஈடுபடுகிறார்கள். ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், எங்காவது கலவரம் ஏற்படுகிற சூழ்நிலை உருவாக்கப்பட்டால், உடனே 'ப்ரிவெண்டிவ் ஆக்ஷனை' தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிக் கலவரம் ஏற்படக்கூடிய காட்சியை அடிக்கடி பார்க்கிறோம். இத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்படக்கூடும் என்று தெரிந்தால், உடனே போலீஸ் பந்தோபஸ்தை அதிகமாகக் கொடுக்க வேண்டும். அங்கே பல நண்பர்கள் வியாபாரம் செய்கிறார்கள். அங்கே முக்கியமான பொருள்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு மாட்ச் ஸ்டிக்கை கொளுத்தி விட்டால், அப்படியே எல்லாப் பொருள்களும் எரிந்து போகக்கூடிய, தமிழ் நாட்டில் பயங்கரமான சேதம் ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை நிலவுகிறது. ஆகவே, சௌகார்ப்பேட்டையில் அப்படி எந்தவிதமான ஒரு கலவரமும் ஏற்படப் போகிற நேரத்தில், முன்கூட்டியே அதைத் தடுப்பதற்கு உடனே திட்டம் போடவேண்டும்.

இன்னும் ஓரிரண்டு கருத்துக்களைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். அதாவது போலீஸ் மொரேல், காவல் துறையில் பணிபுரியக்கூடியவர்களின் மொரேல் எப்படி இருக்கிறது என்றால் கீழ்த்தரமாக இருக்கிறது. 'மொரேல் ஈஸ் லோ' எதற்காகச் சொல்கிறேன் என்றால், அரசியல் கட்சிகள் புகுந்து, காங்கிரஸ் கட்சி ஒரு பக்கம், தி. மு. க. ஒரு பக்கம் இப்படி இரண்டு கட்சிகளும் புகுந்து, தங்கள் தங்கள் சார்பிலே பணியாற்ற வேண்டும் என்று விரும்புவதால்தான், மொரேல் இப்படிக் கீழான நிலைமையில் இருந்து வருகிறது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், நாகர்கோவிலில் என்ன நடந்தது? நாகர்கோவிலுக்கு உயர் அதிகாரி, மத்திய அரசு ஸி.ஐ.டி. இலாகாவிலிருந்து உயர்ந்த அதிகாரி பார்வையாளராக வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது என்பதை பத்திரிகையிலே பார்த்தோம். அவர் வந்தாரா, இல்லையா என்பது தெரியாது. அமைச்சர் மாதவன் அவர்கள் அன்று விளக்கினார்கள், வரவில்லை என்று சொன்னார்கள். அதுபற்றி மகிழ்ச்சி. ஆனால், வரக்கூடிய சூழ்நிலை இருந்திருக்கிறது கீழ்த்தளத்தில் வேலை செய்யக்கூடிய எஸ். ஐ., அல்லது கீழ் மட்டத்தில் இருக்கக்கூடிய இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ் போன்ற அதிகாரிகள் காங்கிரஸ்காரர்கள் மேல் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டால், தங்களுக்கு மத்திய அரசில் வானால் நடத்தக்கூடிய துறையில் தகராறு ஏற்படும் என்று நினைத்

துக் கொண்டு செயல்படுகிற ஒரு போக்கை நாம் மாற்றி அமைக்க வேண்டும். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் மத்திய அரசு இதில் தலையிடுவதற்கு என்ன வேலை இருக்கிறது? அப்படி என்ன ஒரு பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டது அங்கே? மற்ற மாகாணங்களில் 'லா அண்டு ஆர்டர் பிரேக் டவுன்' ஆகவில்லையா? ஆகவேதான் நான் என்ன சொல்கிறேன் என்றால், முதல் அமைச்சர் அவர்கள் துணிச்சலோடு திட்டவட்டமாகச் சொல்லிவிட வேண்டும். 'இது எங்களுடைய வேலை. யாரும் இங்கே வரவேண்டிய தேவையில்லை'. ஸி. ஐ. டி. ரிபோர்ட் தெரியும் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். ஸி.ஐ.டி. ரிபோர்ட்டு அவர்களுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்? என்ன காரணத்தையொட்டியோ அந்த ரிபோர்ட்டு எழுதுவதற்கு முன்பே அதற்குக் காரணபூதர்களாக இருந்தார்களோ என்னவோ, இல்லாவிட்டால் எப்படி அவர்களுக்குத் தெரிந்திருக்க முடியும்? எப்படி அவர்களுக்குத் தெரிந்தது என்ற விளக்கத்தை அவர்கள் இங்கே கொடுக்கவில்லை. காங்கிரஸ்காரர்கள் "நாகர்கோவிலில் எங்களுக்கு அடி விழுகிறது, எங்களை அவமானப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள், இதைத் தவிர்க்க வேண்டும், எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை; சட்டம், ஒழுங்கு, அமைதி குலைந்துவிட்டது' என்று சொன்னபொழுது, அங்கே மத்திய அரசு இலாகாவிலிருந்து போலீஸ் அதிகாரி வரக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தினால் போலீஸ்காரர்கள் வாஸ்வத்திலே தி. மு. க. தோழர்களைத்தான் அடித்தார்களே தவிர, காங்கிரசுக்கு மிகுந்த பாதுகாப்பு நாகர்கோவிலில் கிடைத்திருக்கிறது என்பது என்னுடைய கருத்து. அதனால் தான் 'மொரேல் லோ' என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

பூந்தாழங்குடியில் என்ன ஆயிற்று? சில தோழர்கள் மீது வழக்கு போடப்பட்டது. அதற்குப் பிறகு பல அரசியல் காரணங்களைக் கொண்டு அந்த வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டார்கள். ஆகவே, என்ன ஆயிற்று? போலீஸ்காரர்களுக்குத் தைரியமில்லை. இதற்குப் பிறகு தஞ்சாவூரில் என்ன நிலைமை? எந்தப் போலீஸ் அதிகாரியும் திட்டவட்டமாக, தைரியமாக, உறுதியாக எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. அப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டால் எத்தகைய ஒரு உத்தரவு போடுவார்களோ என்ற ஒரு தயக்கம் இருக்கிறது. 42 நபர்கள் கொளுத்தப்பட்டார்கள். அவர்கள்மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. அப்படிக் கொளுத்தியதற்கு யார் காரணமோ அவர்கள்மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. அவர்கள்மீது இருக்கக்கூடிய வழக்கை வாபஸ் செய்துகொண்டால், அது எவ்வளவு தவறோ, அதுமாதிரி இதுவும் தவறாகும் என்று சொல்லிக்கொள்கிறேன். மிராசுதாரர்களாக இருந்தாலும் சரி, பாட்டாளி மக்களாக இருந்தாலும் சரி, வழக்கு போடப்பட்டிருந்தால், அரசியல் காரணங்களை ஒட்டி, அந்த வழக்கை வாபஸ் வாங்கக் கூடாது என்பதைத்தான் நான் சொல்கிறேன். கடைசியாக ஒரே ஒரு வார்த்தை.

In areas like Hosur and Vepanapalle where the majority are Telugu-speaking people, some local police officers and local C.I.D. officers have shown discrimination against them and displayed a fanatical attitude towards Telugu-speaking people. In October 1968 Telugu students in the Hosur Taluk were beaten severely and this fact has been reported. We request this Government to give protection to these people and instruct the police officers that they should not show any discrimination against Telugu people.

இந்த விஷயத்தை என்னுடைய சட்ட மன்றத் தோழர்கள், ஹொசூர் நண்பர்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கருத்தை வற்புறுத்திச் சொல்லி, காவல் துறையினர் காங்கிரஸ் தரப்பில் வேலை செய்வதை மாற்றி, அவர்கள் நடுநிலையில் பணியாற்றும் வகையில்





கண்காணித்து, பயம் இல்லாமல், முதல் அமைச்சர் அவர்கள் தைரியமாகச் செயலாற்றுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லி முடிக்கிறேன்.

*திரு. ஆர். கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தின் பேரில் எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விழைகிறேன்.

போலீஸ் நிர்வாகம் சென்ற ஆண்டுகளில், சிறந்ததாக, நன்றாக பணியாற்றுவதாக இருந்தது. ஆனால் அப்படிச் சிறந்திருந்த காலமெல்லாம் காங்கிரஸ் ஆட்சியில் இருந்ததே தவிர, முன்னேற்றக் கட்சியின் ஆட்சியில், அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, போலீஸ் வெகுவாகக் கெட்டுவிட்டது என்று குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக என்னுடைய தொகுதியில், அரியலூரில், பொதுக் கூட்டம் நடத்த முடியவில்லை. அந்த முறையில் தடுத்திருக்கிறார்கள். கூட்டத்தைத் தடுத்தவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்திருக்கிறார்களே அல்லாமல், கூட்டம் நடத்துபவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க இந்த போலீஸ் இலாக்கா முன்வரவில்லை. உதாரணமாக, கும்பகோணத்திலிருந்து ஒரு பெண்மணி அங்கே பேச வந்திருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், அதே மேடையில் ஏறி, பலவாறு அவர்களை ஏசிப் பேசி, வாய்க்கு வராத சொற்களைப் பேசினார்கள். போலீஸ் வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள்.

அடுத்து இன்னொரு கூட்டத்தில் எங்கள் குமரி அனந்தன் பேசினார்கள். திரு. ஹலீம் பேச வந்திருந்தார்கள். அந்தக் கூட்டம் நடக்க முடியாமல், அவைகளையும் தடுத்து, எவ்வளவு இடையூறுகள் செய்ய முடியுமோ அவ்வளவையும் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள், பேரைச் சொல்ல விரும்பவில்லை, அத்தகைய தொல்லையை ஏற்படுத்தினார்கள். போலீஸ் நிர்வாகம் எதுவுமே செய்யவில்லை. போலீஸ் இலாக்கா கூட்டம் நடத்தும் காங்கிரஸ் கட்சிக்குப் பாதுகாப்புக் கொடுக்காமல் தடுப்பவர்களுக்கே பாதுகாப்பாக இருந்தார்கள்.

உடையார்பாளையத்தில் துப்பாக்கிச் சூடு ஏற்பட்டது. நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. அதில் இறந்தவர்கள் நான்கு பேர்கள். நட்ட ஈடாக பணம் கொடுக்கப்படும் என்று மறைந்த முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆனால் இதுவரையில் கொடுக்கப்படவில்லை என்று நினைக்கிறேன். முதல் அமைச்சரவர்கள் தக்க ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுக்கொள்ளுகிறேன். துப்பாக்கிச் சூடு நடந்தபோது போலீஸ் பொது மக்களை ரிமாண்டில் வைத்தார்கள். அப்படி மக்கள் ரிமாண்டில் இருக்கும்போது, அவர்களை போலீசார் பேசிய பேச்சுக்கள், வசை மொழிகள் காதால் கேட்கக் கூடியதாக இல்லை. துப்பாக்கிச் சூடு நடந்த மறுநாள் அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் அங்கே வந்திருந்தார்கள். போலீசார் மாணவர்களை அப்பொழுது அமைச்சர் அங்கே இல்லை—எவ்வாறெல்லாம் பேசினார்கள்? —கண்டபடி திட்டினார்கள், என்று மாணவர்கள் உள்ளம் வெதும்பச் சொன்னார்கள் . அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா? சொற்களால் தாறுமாறாகப் பேசுவது, அடி கொடுப்பது இவைதான் அவர்கள் வழக்கம் கேஸ் போட்டால் போடட்டும். ஆனால், தாறுமாறான முறையில் பேசக்கூடாது என்பதைத்தான் குறிப்பிட விரும்புகின்றேன்.

அடுத்து எங்கள் பகுதியில், அது கிராமப் பகுதியாக இருப்பதால், போலீஸ் இலாக்கா சரிவர வேலை செய்வதில்லை, செய்யவும் முடிவதில்லை. ரோடு வசதி இல்லை. போலீஸ் ஸ்டேஷனிலிருந்து சப்-இன்ஸ்பெக்டர் சைகிளில் கிராமங்கள் பத்து, பதினைந்து மைல் தூரத்தில் இருக்கின்றன. கொலைக் குற்றங்கள், வேறு சாராய கேஸ்களை கண்டு சென்றுதான், கேஸ்களைக் கண்டு பிடிக்கச் சென்றால், பிடிக்க வேண்டிய நிலை இருக்கிறது. அந்த கிராம மக்களுடைய தயவில்தான் இவர்கள் வாழவேண்டிய

நிலை ஏற்படுகிறது. போலீஸார் பயமில்லாமல் வேலைசெய்வது என்பது முடியாத நிலை. அது இப்படிப் பட்ட காடாரம்பமான பிரதேசம். ஆகவே, அந்த மாதிரிப் பகுதிகளில் இருக்கும் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு, மோட்டார் சைகிள்கள் கொடுத்தால் தான் வேலையை நல்ல முறையில் அவர்களால் செய்ய முடியும்.

போலீஸ் இலாக்காவிலே இருக்கிறவர்களுக்குச் சம்பளம் குறைவாக இருப்பதை எல்லாப் பகுதி அங்கத்தினர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கையையும் அதிகப்படுத்த வேண்டும் என்றும் எல்லோரும் எண்ணம் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நிலையில் ஒதுக்கப் பட்ட தொகையைக் குறைத்துக் கொண்டே இருக்கிறோம். அப்படிச் செய்வதால் நிர்வாகம் சரியாக நடைபெறாது. நடைபெறவும் இயலாது.

குறிப்பாக ஒன்றை மட்டும் சொல்லி முடிக்கிறேன். இப்பொழுதெல்லாம், அடிக்கடி லாரிகளில் ஜனங்களை ஏற்றிக்கொண்டு சென்னைக்கும், கோவைக்கும், திருச்சிக்கும் மக்கள் போகிறார்கள். போலீஸ் அதிகாரிகளோ இவற்றையெல்லாம் கண்காணிப்பதாகவோ பார்ப்பதாகவோ தெரியவில்லை. அதுபோன்ற நிலை இல்லாமல், போலீசார் நல்ல முறையில் பணிபுரிய அமைச்சர் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இன்னும் ஒன்றை மட்டும் சொல்லி முடிக்கிறேன். குறிப்பாக இந்த ஆட்சியில் இருண்ட சூழ்நிலையைத்தான் காண முடிகின்றது பல்லவருக்கு முன் களப்பிரர் ஆட்சி இருண்ட ஆட்சியாயிருந்தது. கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் தமிழகத்தில் ஏற்பட்ட களப்பிரர் ஆட்சி இருண்ட கால ஆட்சியாகவே இருந்து மறைந்து விட்டது. அதே போன்று இன்று ஏற்பட்டுள்ள தி. மு. க ஆட்சியும் தமிழகத்தில் இருண்ட கால ஆட்சியாகவே இருக்கின்றது என்று குறிப்பிடுவதில் வியப்பொன்றுமில்லை. காரணம் எந்தவிதமான முற்போக்கான காரியமும் நடைபெறவில்லை. அதே போன்று இந்த திராவிட முன்னேற்றக்கட்சி ஆட்சியில் நீதி, நேர்மை இவற்றைக் கவனிக்கவில்லை. ஏழைகளுக்கு, விவசாயிகளுக்கு பாதுகாப்புக் கொடுக்கவில்லை. மக்களை மக்களாக மதித்து செயல்படவில்லை. இனிமேலாவது, முதல் அமைச்சர் இவற்றைச் செம்மையாகச் செய்ய, ஆவன செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின், முதல் அமைச்சரவர்கள் காவல் துறையை எடுத்தவுடன், எதிர்க்கட்சித் தலைவர் கூட அச்சம் தெரிவித்தார்கள். அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட கடந்த சில நாட்களாக, காட்டிவரும் பரிவையும், பாசத்தையும், எதிர்க் கட்சித் தலைவரும் வாழ்த்துவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஒரு சிறந்த ஜனநாயக வாதி என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த விவாதங்கள் நடைபெற்றுவருகின்றன என்பதைத் தெரிவிக்கிறேன்.

சட்டம், ஒழுங்கு பற்றி அடிக்கடி பேசப்படுகிறது. இந்த சட்டமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவருவது என் கடமை என்று கருதுகிறேன். காவல் துறையைப் பற்றி பலரும் பேசினார்கள். எதிர்க் கட்சித் தலைவரும் அடிக்கடி குறிப்பிடுவதால், குறிப்பிட விரும்புகிறேன். நெய்வேலியில் ஏதோ வாரியார் அவர்கள் சம்பந்தப்பட்ட சம்பவத்தில், போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை என்கிறார்கள். அதே நேரத்தில், மதுரையில் வாரண்ட் வாங்க மறுத்தவரை, போலீசார் அழைத்துச் சென்றபோது, போலீசாரை வேறு விதமாகச் சொல்லுகிறார்கள். அதே போலத்தான், விவசாயத் தொழிலாளர்கள் அடித்துச் சிறைக்குச் சென்றபோதும், அதே போலத்தான் பூந்தாழங்குடியில் துப்பாக்கிச்சூடு ஏற்பட்டவுடனே, 'பார்த்தீர்களா, தொழிலாளர்களைச் சுட்டுப் பொசுக்கியிருக்கிறார்கள் என்றார்கள். நாகர்கோயில் பற்றிப் பேசும்போது கூட்டணித் தொண்டர்கள் தாக்கப் பட்டார்கள். போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தவுடன் என்ன சொன்னார்கள். காலிகளையும்,





குண்டர்களையும் போலீஸ் உடையை அணிவித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றார்கள். சட்டம் அமைதி காக்கப் படவில்லை, நாகர்கோவிலில், இரவோடு இரவாக காங்கிரஸ் தொண்டர்கள் தாக்கப் பட்டார்கள் என்று பேசப்படுகிறது. ஆனால் நடந்தது என்ன, அமைச்சர் மீது கல் எறியப் பட்டது. அமைச்சர்கள் தங்கியிருந்த மாளிகை மீது கல்லெறியப்பட்டது. திராவிட முனனேற்றக் கழகத் தோழர் கொலை செய்யப்பட்டார்.

உண்மையிலேயே சொல்லப் போனால், முரண்பாடாகப் பேசுகிறார்கள். பஸ் தொழிலாளர்களுக்கும், மாணவர்களுக்கும் தகராறு வந்தபோது போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை என்றார்கள். ஆனால், திண்டுக்கல்லில் மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்தபோது. போலீசார் நடவடிக்கை எடுத்தால், அடிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஒரே போலீஸ்; எடுக்கப்பட்டது ஒரே வகையான நடவடிக்கை; ஆனால் விமரிசனத்தில் முரண்பாடு இருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். செய்யக் கூடியதைக் குற்றம் சொல்லுகிறார்களே தவிர வேறொன்றும் இல்லை என்று குறிப்பிட்டார்கள்.

சட்டம் அமைதி கெட்டுவிட்டது, நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லும்போது, இன்னொன்றையும் சேர்த்துக் கொள்ளுவார்கள் என்று எதிர்பார்த்தேன். அதையும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 6—9—68 அன்று சத்தியமூர்த்தி பவனில், இரு கோஷ்டிகளுக்கிடையே தகராறு வந்ததால் சட்டம் ஒழுங்கு கெட்டு சண்டை ஏற்பட்டது. போலீசார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை, என்று கேட்பார்களோ என்றுகூட எதிர் பார்த்தேன்.

மதுவிலக்கு பற்றித் தீவிரமாகப் பேசினார்கள்.

மதுவிலக்கைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாகர் கோயில் இடைத் தேர்தல் நடந்தபொழுது, ராஜக்கமங்கலத்தில் 30 பேர்கள் அடங்கிய கூட்டமாக வந்து தாக்கினார்கள். போலீஸ் நடவடிக்கை எடுத்தபோது, அப்படித் தாக்கியவர்களில் 15 பேர் குடிவெறியில் இருந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கைது செய்தவர்களை ஜாமீனில் விடுவித்து, அவர்கள் வெளியே வந்தபோது அவர்களை மாலை போட்டு வரவேற்றது யார் தெரியுமா ? தமிழ்நாடு காங்கிரஸின் முன்னாள் தலைவர் திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள்தான். இது சரிதானா ? மதுவிலக்கைப் பற்றிப் பேச உங்களுக்கு வெட்கமில்லையா ? சட்டம், ஒழுங்கைப் பற்றி வானளாவப் பேசுகிறார்கள். போலீஸ் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க முடியாமல் போய்விட்டது என்று பேசுகிறார்கள். மக்கள் எழுச்சி ஏற்படும்பொழுது போலீசால் சட்டம் ஒழுங்கைக் காப்பற்ற முடியாமல் போகலாம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், பிரெஞ்சுப் புரட்சியைச் சொல்லலாம், அப்பொழுது போலீஸால் சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்ற முடியவில்லை. சோஷலிசப் புரட்சி நடந்த போதும் போலீஸால் சட்டத்தை நிலை நிறுத்த முடியவில்லை. ஆந்திர மாநிலம், மராட்டிய மாநிலம் உருவான போதெல்லாம் மத்திய போலீஸ் அவர்களிடம்தானே இருந்தது. என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? 1965-ம் ஆண்டு தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடந்ததே அந்த நேரத்தில் மாணவர்களைச் சுட்டுப் பொசுக்க முடிந்ததே தவிர, சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்ற முடிந்ததா ? அரிசி இல்லையென்று கிளர்ச்சி செய்தான் அப்பாவி அர்ஜுனன். அவனைச் சுட்டுக் கொல்ல முடிந்ததே தவிர, பொதுஜன அமைதியை உண்டாக்க முடியவில்லை. எந்தெந்த நேரத்தில் மக்கள் எழுச்சி ஏற்படும், அதற்கான காரணங்கள் என்னவென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு மூன்று வழிகள் உண்டு. ஒன்று, கொள்கை வழியில் மக்கள் போராட எழும்போது, இரண்டாவது, பொருளாதாரச் சீர்குலைவு காரணமாகவும், வறுமையின் காரணமாகவும் ஏற்படலாம். மூன்றாவதாக, சமுதாயத் தேவைக்கேற்ப சட்டம் மாறவில்லையென்றால் ஏற்படுவதும் உண்டு. கடந்த ஆண்டுகூட இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடந்தது. மாணவர்களுடைய நல்ல காலமோ,

நம்முடைய நல்ல காலமோ காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் இல்லை. அப்படி அவர்கள் இருந்திருந்தால் மாணவர்களைச் சுட்டுப் பொசுக்கியிருப்பார்கள். மாணவர்களுடைய உணர்ச்சியைப் புரிந்துகொண்டு நாம் இந்த சட்டமன்றத்தில் இருமொழித் தீர்மானம் போட்டு, தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகளும் எங்களுக்குப் போதும் என்று மத்திய அரசுக்கு அறிவித்து விட்டோம். சட்டம், அமைதி என்றால் என்ன என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். சட்டம் அமைதி என்பதன் அடிப்படை உண்மையைப் புரிந்து கொண்டால், காவல் துறை எந்த அளவுக்குப் பணியாற்றியிருக்கிறது என்பதை உணருவார்கள்.

காவல்துறை சிறந்த முறையில் பணியாற்றியிருக்கிறது என்பதற்குச் சில சான்றுகளைக் கூற விரும்புகிறேன். முகமூடிக் கொள்ளை வழக்கைக் கண்டுபிடித்தார்கள். முகமூடிக் கொள்ளை வழக்கு ஒரு சுவையான தொடர் நாவல் அல்லவா? இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். கள்ள நோட்டு வழக்குகளைக் கண்டுபிடித்தார்கள். இது போலீசாரின் வெற்றிக்கு முத்துக்குள் பதிக்கப்பட்ட மகுடம் போல் அமையவில்லையா? தவிர, தீ விபத்து ஏற்பட்ட நேரங்களில் எல்லாம் அல்லும் பகலும் பாடுபட்டார்களே அதற்கு நாம் நன்றியாவது தெரிவிக்க வேண்டாமா? நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபொழுது, திரு. கருணாநிதி அவர்களையும் என்னையும் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் போட்டார்களே அதைப்போல் நாங்கள் எதிர்க் கட்சியினரை சிறையில் போடாமல் இருக்கிறோமே அதற்காக நன்றியாவது தெரிவிக்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஏன் போடக்கூடாது?

**திரு எஸ். இராமச்சந்திரன்:** போடுவதற்கான காரணங்கள் இருக்கின்றன. சட்டம், அமைதி என்று சொல்லும்போது, காவல் துறையிலே உள்ளவர்கள் குற்றம் நேராமல் தடுப்பதற்கும், குற்றம் செய்தவர்களை தண்டிப்பதற்குத்தான் இருக்கிறார்கள். அரசியல் கொள்கைக்கும் அவர்களுக்கும் நிச்சயமாக சம்பந்தமில்லை. எதிர்க் கட்சியினர் தங்களுடைய பேச்சும் எழுத்தும் போக்கும் நல்லமுறையிலே அமைத்துக்கொள்ள வேண்டும்.

கடந்த ஆண்டு மகாத்மா நூற்றாண்டு விழாவின்போது, காந்தியின் பெயரால் பாத யாத்திரை ஒன்று நடந்தது. மகாத்மா காந்தியின் பாரம்பர்யம் என்று சொல்லிக்கொள்கிறவர்கள் அந்தப் பாத யாத்திரையை நடத்தினார்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலத்தில் பாத யாத்திரை ஒன்று நடந்தது. விருத்தாசலத்தின் ஒரு பகுதியில் 'அண்ணா நகர்' என்பது. அரசாங்க அச்சகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்காக குடியிருப்பு வசதி செய்துகொடுப்பதற்காக அந்த இடத்தில் மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களால் ஓர் அடிக்கல் நாட்டப்பட்டது. பாதயாத்திரை அந்தப்பக்கம் சென்றது. கொஞ்சநேரத்தில் அங்கிருந்த அடிக்கல் காணப்படவில்லை. அடிக்கல்லைத் தேடிப் பார்த்தோம். எங்கோ ஒரு மூலையில் போடப்பட்டிருந்தது பாத யாத்திரை சென்றவர்களின் போக்கு அந்த நிலைமையை உண்டாக்கியது. இதை ஒரு புகைப்படம் எடுத்து வந்திருக்கிறேன். இந்த நிகழ்ச்சியைப் பேரவைத் தலைவர்மூலமாக எதிர்க்கட்சியினருக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

அடுத்து, நாகர்கோயிலில் நடந்த இடைத் தேர்தலின்போது பொதுக் கூட்டத்தில் பேசப்பட்ட நிகழ்ச்சிகளைச் சொல்ல விரும்புகிறேன். காலையிலேயே பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதி பெற்றுக்கொண்டு விட்டேன். ஆகவே, இதைச் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பொதுக் கூட்டத்தில் பெரும் தலைவர்கள் எல்லாரும் கலந்துகொண்டார்கள்.



திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி என்ன என்ன எல்லாம் பேசினார்கள் தெரியுமா? "பொய்யையும் புளுகையும் சொல்லி ஆட்சிக்கு வந்துவிட்டார்கள்" என்று பேசியிருக்கிறார்கள். (திரு. பி. ஜி. கருத்திருமன்: பத்திரிகையைப் படிக்கலாமா?) நான் காலையிலேயே பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னர்தான் படிக்கிறேன்.

"பொய்யையும் புளுகையும் சொல்லி ஆட்சிக்கு வந்துவிட்டவர்கள் இன்று உருட்டல் மிரட்டல் மூலம் தேர்தலில் வெற்றி பெறலாம் என்று நினைக்கிறார்கள். போலீஸ் உதவியுடன் காசு கொடுத்து ஓட்டு வாங்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். அப்படி வரும்போது அவர்களை விரட்டு" என்பதோடு அவர் நிறுத்திவிடவில்லை. 'அடியுங்கள்' என்று சொல்லி முடித்திருக்கிறார். இதைப் பேசியது சாதாரண குட்டித் தலைவர் அல்ல; பெரும் தலைவர் காமராஜ் அவர்கள்தான் நாகர்கோயிலில் நடந்த கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, அந்தப் பொறுப்பை கனம் உறுப்பினர் ஏற்றுக்கொள்வாரா? அந்தப் பெரியவர் சொல்லியிருக்கிறார் என்று பத்திரிகையில் போட்டதை ஏற்றுக் கொள்ள முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 'கனம் அங்கத்தினர் பொறுப்பேற்றுக்கொள்கிறாரா?' என்று கேட்பதைவிட இதை வெளியிட்டிருக்கும் 'நவசக்தி' பத்திரிகை அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகின்றேன். இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தவர் யார் தெரியுமா? தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமை தாங்கியிருக்கிறார்கள் 'உங்கள் நண்பன்' என்று சினிமாப் படம் எடுத்து உங்கள் ஆட்சியில் காட்டினீர்களே, அவர்களைப்பற்றி விரிவான அளவில் பேசினீர்களே, அந்த 'உங்கள் நண்பனுக்கு' நீங்கள் இழைக்கும் கொடுமை இது.

இன்னொன்றையும் கூறவிரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள், "நாகர்கோயில் தேர்தலுக்கு மத்திய போலீசை வரவழைக்கப்போகிறோம், மத்திய உள்துறை மந்திரி திரு. சவான் வருகிறார்" என்றெல்லாம் கூறிவந்தார்கள். தயவுசெய்து இந்தப் பூச்சாண்டியை எங்களிடம் காட்டவேண்டாம் என்று அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டம், ஒழுங்கு, அமைதியைக் காப்பது மாநில அரசின் உரிமை. இதில் போய் 'மத்திய சர்க்காரிடம் புகார் செய்வேன்' என்று ஏன் எதிர்க்கட்சித் தலைவர் சொல்லவேண்டும்? ஒருவேளை அவர் டெல்லிக்குப் புகார் கொடுப்பதற்காகத்தான் இருக்கிறாரோ, என்னவோ? எதிர்க்கட்சித் தலைவர் டெல்லிக்குப் புகார் கொடுக்கத்தான் இருக்கிறாரே தவிர, நமக்கு நியாயமாக வாங்கித்தரப்பட வேண்டிய அதிகாரத்தை வாங்கித்தரப் போகிறார் என்று நாம் எண்ணுவதற்கில்லை.

மத்தியப் போலீசைப்பற்றி உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மத்திய போலீசுக்காக நாம் 1961–62-ல் செலவழித்தது ரூபாய் 6 கோடி 60 லட்சம். 1968-69-ல் 12 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம். சட்டம் ஒழுங்கு இவைகளுக்குச் சம்பந்தமில்லாத மத்திய அரசு போலீஸ் சம்பந்தமாகச் செலவழித்தது 1961–62-ல் 18 கோடியே 76 லட்சம். 1968–69-ல் செலவழித்தது 71 கோடியே 91 லட்சம். அதாவது 72 கோடி ரூபாய். நான்கு மடங்கு தொகை அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

மாநில அரசுகளின் மீதுள்ள நம்பிக்கை நாளுக்கு ஒரு பங்காக ஆகி விட்டது என்பதைத்தானே இது எடுத்துக்காட்டுகிறது? ஒரே இடத்தில் ஒரே காரியத்திற்காக இரு வேறு துறைகள் பணியாற்றிக்கொண்டிருக் கின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

அண்மையில் தொழில் நிறுவனங்களைக் காப்பாற்றத் தொழில் பாது காப்புப்படை யசோதா ஒன்று உருவாக்கப்பட்டதே, ஏன் இந்த இரட்டை ஆட்சி? மெட்ராஸ் அவுஸ் அருகே அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தாக்கப்பட்டாரே, ஏன் இந்த நிலை உருவானது? மத்திய அரசு மாநில அரசுகளின் அதிகாரத்தையெல்லாம் பறித்துக்கொண்டே வருகிறது. அவர்கள் சார்ந்திருக்கிற காங்கிரஸ் ஆட்சி செய்யும் மாநிலங் களே மத்திய அரசின் போக்கைக் கண்டிக்கிறது என்பதை நாம் நம்பினாலும் அவர்கள் நம்ப மறுக்கிறார்கள். நம்முடைய எதிர்க்கட்சி யினர் நாம் செய்யவில்லை என்ற புகார் கொடுக்கிறார்களே தவிர, அதி காரம் மத்தியிலிருந்து பிரித்துத் தரவில்லையென்று கேட்கவில்லை. நீங்கள் எங்கே இந்த ஆட்சிக்கு உதவிசெய்யப் போகிறீர்கள்?

சட்டம், அமைதிக்கு முதல் முக்கியத்துவம் வாய்ந்தது தரமான பேச்சு என்று குறிப்பிட்டேன். இப்படி பொறுப்பிலே உள்ள தலைவர்கள்கூட, குறிப்பாக எதிர்க்கட்சியிலே உள்ள தலைவர்கள்கூட சட்டம், ஒழுங்கைக் குலைக்க ஏதாவது திட்டமிட்டிருக்கிறார்களோ என்னவோ? அதன் ஒரு பகுதியாகத்தான் மத்திய போலீசை வரவழைக்கவேண்டுமென்று அவர்கள் பேசுவது. சட்டம் அமைதியைச் சீர்குலைத்து காங்கிரஸ் அல் லாத மாநிலங்களைக் கவிழ்க்க சதி நடக்கிறதோ என்று ஐயுறும் நிலை யில்தான் அவர்களுடைய போக்கு இருந்துவருகிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தாம் ஏற்றிருக்கும் பொறுப்பைப் பெருந்தன்மை யுடன் கடைப்பிடித்து, அரசினர் கொள்கைகளை ஆதரித்து, தமிழ் நாட்டினுடைய பண்பாட்டையும், தமிழருடைய மரபையும் காப்பாற்ற வேண்டுமென்று உங்களைப் பணிவுடன் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

பகல் 1-00 திரு. பி. ஜி. கருத்திருமன்: உதவி சபாநாயகர் அவர்களே, அவை முன் இருக்கும்படியான காவல்துறை மானியத்தின்மீது எங்கள் கட்சி சார்பாகக் கொண்டுவந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இங்கே நடந்த விவாதத்தைப் பார்க்கிறபோது—எப்படி நாட்டிலே ஒரே குழப்பமாக இருக்கிறதோ அப்படியேதான் ஒரே குழப்பமாக இருந் தது இந்தச் சர்க்கார் எந்த விஷயத்திலும் தெளிவாக "ஒழுங்காக" கட்டுப்பாடாக இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

காவல்துறை இந்த நாட்டுக்கு இன்றியமையாத துறை. நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ, மக்கள் சுதந்திரத்தோடு வாழ சட்டம் அமைதி ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும். காவல் துறையினர்தான் இதற்குச் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும்.

சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையில் நமது காவல்துறை யினர் சிறப்பாகப் பணிபுரிவதில் பேராற்றல் படைத்தவர்கள். திறமைக் கும், ஒழுங்குக்கும், கட்டுப்பாட்டிற்கும்—சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பும் சரி, கிடைத்தபிறகும் சரி—உலகப் புகழ்பெற்றவர்கள். அதை யாரும் குறைசொல்ல முடியாது. அவர்கள் புரிந்துள்ள தியாகங்கள் எல்லாம் பாராட்டுவதற்குரியன. மேலும் அவர்கள் வேறு யாரும் இல்லை. நம் மைச் சேர்ந்தவர்கள்—நம்முடைய உறவினர்கள், நம்முடன் படித்தவர்கள், நம்முடைய நண்பர்கள்—ஆகவே நாம் வேறு, அவர்கள் வேறு என்பதாக அவர்களை வேறு ஓரினமாக ஒதுக்கவேண்டிய அவசியம் இல்லையென்று நான் கருதுகிறேன்.



இப்போது இருக்கிற குறைபாடு எல்லாம் நாம் அவர்களைச் சுதந்திர மாகச் செயல்பட அனுமதிக்கிறோமா என்பதுதான். அரசியல் நோக்கு இல்லாமல் அவர்கள் சுதந்திரமாகத் தங்கள் காரியத்தைச் செய்ய அனுமதித்து அதற்குமேல் அவர்கள் தவறு செய்தால் அரசாங்கம் நட வடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப் படும். ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமை இல்லை. போலீஸ் காரர்கள் என்றால் ஆளும் கட்சிக்காரர்கள் சொல்வதை எல்லாம் கேட்க வேண்டும். அவர்கள் ஆளும் கட்சிக்கு ஆதரவாகத்தான் இருப்பார்கள் என்கிற மனப்பான்மை வளருகின்ற சூழ்நிலைதான் இருக்கிறது. அதனால் தான் போலீஸ் துறையினரின் திறமை பாதிக்கப்படுகிறது.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னாலே ஆளவந்தார் கொலை நடந்தது. குற்றவாளியைக் கண்டுபிடித்தார்கள். இப்போதுகூட வடநாட்டு முகமூடி கொள்ளையர்களைக் கண்டுபிடித்தார்கள். பாராட்டத்தான் வேண்டும், அவர்களுடைய திறமைக்கு. இல்லையென்று சொல்லவில்லை. நல்ல காரியங்களைச் செய்கிறபோது, திறமையான காரியங்களைச் செய்கிறபோது எதிர்க்கட்சியின் சார்பில் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்று ஆளும் கட்சியில் இருக்கக்கூடியவர்களின் போக்கு எப்படி இருக்கிறது? நல்ல வேளையாக பக்தவத்சலம் அவர்கள் சில பைல்களை எரித்தார்கள். எரிக் காமல் இருந்திருந்தால் இவர்கள் என்ன பண்ணியிருப்பார்கள்? இவர் களுடைய பெருந்தன்மை, பண்பாடு எல்லாம் அப்போது தெரிந்துகொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எரித்ததற்கு என்ன காரணம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விளக்குவார்களா?

திரு. பி. ஜி. கருத்திருமன்: அதை வேறு விளக்க வேண்டுமா? உங் கள் பண்பாடு, உங்கள் பெருந்தன்மை என்பது எல்லாம் உண்மையில் என்ன என்பதை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டாம் என்றுதான் எரித்தார்கள். இல்லையென்றால் எப்படி எப்படியெல்லாம் வஞ்சம் தீர்த் துக்கொண்டிருப்பீர்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: போலீஸ்காரர்களைத் தான் எந்த எந்த வகையில் எல்லாம் தூண்டி விட்டிருக்கிறோம் என்பதை நாங்கள் தெரிந்துகொள்ளக் கூடாது என்பதற்காகவும் எரித்திருக்கலாம் அல்லவா?

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)

திரு. பி. ஜி. கருத்திருமன்: அடேயப்பா! இப்போது இருக்கிற முதல் அமைச்சர் அவர்கள் கற்பனையிலே மிகச் சிறந்தவர். அது எனக்குத் தெரியும். அவருக்கு ஒரு பட்டமே கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். கற்பனையில் மிகவும் சிறந்த நமது முதலமைச்சருக்கு "கற்பனை சோதி" என்றே பட்டம் கொடுக்கிறேன்.

குறிப்பாக நமது நாட்டின் நன்மைக்காகப் பணியாற்றக்கூடிய அதிகாரிகளுக்கு மாறி வருகின்ற ஆட்சியாளர்கள் இடைஞ்சலாக இருக்கக் கூடாது என்றே பைல்கள் எரிக்கப்பட்டிருக்கவேண்டும். போலீஸ்துறையினர் எவ்வித பயமும் இன்றி தங்கள் பணியை ஆற்றக்கூடிய நிலை வேண்டும். இவர்கள் தவறு செய்தார்களா, அவர்கள் தவறு செய்தார்களா என்கிற பிரச்சனை இல்லை. இப்போது நடப்பது என்ன? நல்லவேளை கடந்த பத்து வருஷங்களாக நடந்தது என்ன என்று முதல் அமைச்சர் விளக்கி திப்பு சுல்தான் காலத்தில் இருந்து இழுக்காமல் னார்கள். எதற்கெடுத்தாலும் காங்கிரஸ்காரர்களைக் குறை சொல்லித் தப்பிக்க முயன்றால் நாங்கள் தி. மு. க. வைக் குற்றம் சாட்ட

இப்போது இருக்கும்படியான பிரச்சினைகளில் உங்களுடைய தெளிவான கொள்கை என்ன ? திட்டம் என்ன ?

1965-லே இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்று நடந்ததே, வன்முறை, அராஜகம் எல்லாவற்றையும் தூண்டிவிடுவது—ஒன்றுமே தெரியாது என்பது இதுதானே இவர்கள் போக்கு 1965-லே நடந்தது என்ன ? திருப்பூரிலே பட்டப்பகலிலே ஒரு ரோட்டிலே இரண்டு சப் இன்ஸ்பெக்டர்களை அடித்துக் கீழே தள்ளி வண்டியை அவர்கள்மேல் ஏற்றி—"ஐயோ ! தண்ணீர், தண்ணீர்" என்று கேட்ட நேரத்திலே அவர்கள் வாயில் பெட்ரோலை ஊற்றிக் கொளுத்தினார்களே—நீங்கள் வந்தவுடன் கொடுத்த பரிசு என்ன ? தன்னுடைய சகா ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட கொடிய அநீதியை அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள். குற்றவாளியைக் கண்டுபிடித்து வழக்கு தொடரப்பட்டு, நீதிமன்றமும் தண்டனை கொடுத்தது. நீங்கள் வந்தவுடன் அவர்களை விடுதலை செய்துவிட்டீர்கள். இந்த நாட்டில் சட்டம், அமைதி இருக்குமா ? இறந்துபோன சப் இன்ஸ்பெக்டர்களுக்கு பெண்டாட்டி, குழந்தை குட்டிகள் எல்லாம் இருக்கின்றன. கோரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் வந்தவுடன் அவர்களை விடுதலை செய்துவிட்டால் என்ன அர்த்தம் ? அந்த வன்முறைச் செயல்களுக்கு எல்லாம் நீங்கள் உடந்தைதானே ? மறைந்த முதல் அமைச்சர் அவர்களிடம் இதைப்பற்றிக் கேட்டதற்கு "எல்லாம் குழப்பம்" என்றார். உங்கள் அறிவிலே, திட்டத்திலே எல்லாம் குழப்பம்தான் என்று குற்றஞ் சாட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** நீங்கள் வந்தவுடன் பாலதண்டாயுதத்தை விட்டுவிட்டீர்களே, அதற்கு அந்த அரசு உடந்தையா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதுதான் சங்கடமான சமாசாரம். "இதற்கு என்ன ஐயா ?" என்றால் பாலதண்டாயுதத்தை விட்டுவிட்டீர்களே, சாவர்க்காரை விட்டுவிட்டீர்களே என்றெல்லாமா கேட்பது ? இதற்கு நேரிடையாகப் பதில் சொல்லவேண்டும். பாலதண்டாயுதம், வி. டி. சாவர்க்கார் போன்றோர்மீது சாட்டப்பட்ட குற்றமும் இந்தக் குற்றமும் ஒன்றா ? இப்படிப்பட்ட பயங்கர குற்றத்தைச் செய்தவர்களை ஏன் விட்டீர்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்களை விட்டது தவறு என்பதற்காகச் சொல்லவில்லை. அப்படி அவர்களை விடுதலை செய்த காரணத்தினால் அந்தச் சர்க்கார் தான் அவர்களைத் தூண்டிவிட்டார்கள், அந்தச் சர்க்கார்தான் அவர்களுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்று சொல்வது பொருந்தாது என, எங்கள்மீது குற்றஞ் சாட்டப்படுவதை மறுப்பதற்காகத்தான் சொன்னேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு, வன்முறைச் செயல்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்கவேண்டும். இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இல்லையென்று சொன்னால் இவர்கள் வந்தவுடன் ஏன் கொலைக் குற்றம் செய்து தண்டிக்கப்பட்டவர்களை விட்டார்கள் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திருப்பூரிலே விட்டுவிட்டார்கள் என்று சொன்னார்கள். ஒரு விஷயம் அவர்கள் ஞாபகமில்லாமல் பலமுறை திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். திருப்பூரில் கொலை செய்யப்பட்டதுபற்றி யார் குற்றவாளி என்பது நிரூபிக்கப்படவில்லை. கலவரம்தான் இருந்தது. கொலை செய்தவர்கள் யார் என்று நிரூபிக்கப்படவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கொலைக்குக் காரணமாக இருந்தவர்கள் என்று கூறுகிறேன்......





**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் அதை ஆட்சேபிக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கோர்ட்டில் தீர்ப்பு அப்படி இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கோர்ட்டில் அப்படி தீர்ப்பு என்பது தவறு.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதையெல்லாம் இவர்கள் தப்பித்துக் கொள்வதற்குச் சொல்கிறார்கள்......

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்' சார். ஹி இஸ் ஃபர்னிஷிங் இனகரக்ட் இன்பர்மேஷன். அவர்கள் கொலைக் குற்றம் என்று முதலிலே பேசினார்கள். கொலைக் குற்றம் என்று சார்ஜ் ஷீட் போடப்பட்டது. அது நிரூபிக்கப்படவில்லை. கலவரத்திற்குத்தான் தண்டனை விதித்தார்கள். மொழிக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களை இந்த அரசினுடைய கொள்கையின் அடிப்படையிலே விடுவித்து இருக்கிறார்கள். அது இந்த அரசாங்கத்திற்கு மட்டுமல்ல. எல்லா அரசாங்கங்களுக்கும் உண்டு. கொலை செய்தவர்களை 10 வருஷம் கழித்து விட்டுவிடுகிற நிலைமையும் உண்டு. விவாதத்திற்காகச் சொல்லும்பொழுது அந்தக் கொலையாளிக்கு பக்த வத்சலம் உடந்தையாக இருந்தார்களா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். திருப்பூரைப்பற்றித் தவறான கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். யாரும் அக்குற்றம் நிரூபிக்கப்படவில்லை. கொலைக் குற்றத்திற்காக தண்டனை அனுபவிக்கப் படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திருப்பூரிலே இரண்டு சப்இன்ஸ்பெக்டர்கள் கொலை செய்யப்பட்டது உண்டா இல்லையா ? முழுப் பூசணிக்காயை மறைக்கவேண்டாம். ஆகவே, கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நடந்த நிகழ்ச்சியை யாரும் மறுக்க முடியாது. நம்முடைய நிதியமைச்சர் அவர்களுடைய வாதம், வழக்கு தொடரப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. கொலைக் குற்றம் என்று தீர்ப்பளிக்கப்படவில்லை என்பதுதான். கொலை நடந்தது என்பது மறைக்கப் படவில்லை. அப்படி மறைக்கப்பட்டிருந்தால்தான் முழுப் பூசணிக்காயை மறைக்கின்ற நிலைமை வரும். எனவே, நிரூபிக்கப்படாத ஒன்றை கொலைக் குற்றம் என்று சொல்வது முறைதானா என்றுதான் நிதி யமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நடந்த கொலைபற்றி ஆயிரம் தடவை சொல்வதற்கு எனக்கு உரிமை உண்டு, பத்தாயிரம் தடவை சொல்ல உரிமை உண்டு. கொலைக் குற்றம் என்று சொல்லட்டும். அது சம்பந்தமாக வந்த கேஸ்களை ஏன் விட்டார்கள் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தவறானது, கொலை செய்தவர்களை விட்டுவிட்டார்கள் என்பது. நீங்களே கூடச் செய்திருக்கலாம், உங்களுடைய நண்பர்கள் செய்திருக்கக்கூடும்....

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அந்தக் கொலைகாரர்களை இவர்கள் மறைத்து வைத்திருக்கிறார்கள்......

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் மறைத்து வைத்திருந்த கெட்டிக்காரத்தனத்தைப் பாராட்டுகிறேன்......

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தண்டனை அடைந்தவர்கள் மீது கொலைக் குற்றம் சாட்டப்படவில்லை. கொலை நடந்தது வாஸ்தவம்தான். கண்டுபிடிக்கவேண்டிய நிலைமையை அந்த அரசாங்கம் ஏற்படுத்தாதது அந்த அரசாங்கத்தினுடைய தவறுதான், அந்தப் பழி அவர்களுக்குத் தானே தவிர இந்த அரசாங்கத்திற்கு வராது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ரொம்பப் புண்ணியவான்கள். நீங்களாவது கண்டுபிடித்திருக்கலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கொலை செய்ததைத் தண்டிக்கவில்லை என்று குறிப்பிட்டது இந்த அரசை அல்ல, பழைய பக்தவத்சலம் ஆட்சியில் உள்ள குறைபாடுதான் அது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் ஒப்புக்கொள்கிறார்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பழைய ஆட்சிதான் மோசமானது என்று போகசொல்லிவிட்டார்கள், அதோடு அவரும் போய்விட்டார். திறமையுள்ள நீங்கள் என்ன செய்திருக் கிறீர்கள் ? 20 வருஷமாக இல்லாத அளவுக்கு தீவைப்பு நடந்திருக்கிறதே, எங்கே பார்த்தாலும் நடக்கிறதே, சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்தீர்களா ? அந்த அறிக்கை எங்கே என்று கேட்டால் ஹைகோர்ட்டில் கேஸ் இருக்கிறது என்று சொல்கிறார்கள். தவறு செய்தால் தப்பித்துக்கொள்ளலாம் என்ற நிலைமைதான் இருக்கிறது. யாராக இருந்தாலும் சரி, தவறு செய்கிறவர்கள் காங்கிரஸாக இருந்தாலும், தி. மு. க வாக இருந்தாலும் சரி, கருத்திருமனாக இருந்தாலும் சரி, நண்பராக இருந்தாலும் சரி தண்டனை கொடுங்கள். நான் சொல்வதெல்லாம் யாராக இருந்தாலும் தவறு செய்தால் தண்டனை கொடுங்கள் என்பதுதான். பூவராகன மாமனார் கைது செய்யப்பட்டார் என்றெல்லாம் சொன்னார்கள்.

சில பத்திரிகைகள் இருக்கின்றன, காலையிலும் புளுகுகிறான், மாலையிலும் புளுகுகிறான். மாஜி அமைச்சர் பூவராகன் மாமனார் கைது செய்யப்பட்டார். என் பெயரை ரத்தினவேல் கவுண்டர் என்று போட்டால் என்ன ? மாஜி அமைச்சர் பூவராகன் மாமனார் என்றுதான் போடவேண்டுமா ? இப்படி ஒரு பத்திரிகை இருக்கவேண்டுமா ? சபாநாயகர் அவர்களே, அந்தப் பத்திரிகையை கிழித்து எறியவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்......

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி ;** பூவராகன் மாமனார் என்று போட்டது தவறு என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்லுகிறார். அவர் திரு. பூவராகவன் மாமனார் அல்லவா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதுதான் கற்பனையிலே வருகிற தவறு. மக்களுடைய மனதைக் கெடுக்கும்படியான செய்திகளையும் கவர்ச்சிகளைக் காட்டக்கூடிய படங்களையும் போடக்கூடாது. "கவர்ச்சிப் படத்தைப் பார்த்தீர்களா?" என்று ஜோராகப் போடுகிறார்கள். இப்படி மாணவர்கள் சமுதாயத்தைக் கெடுக்கக்கூடிய பத்திரிகைகளை நிறுத்த வேண்டாமா? சப்போர்ட் பண்ணுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. பலவிதமான ஆதரவுகள் எல்லாம் அவர்களுக்கு வந்து கொண்டிருக் கின்றன. வாழ்க! கடைசிவரைக்கும் இருக்கவேண்டும். அந்தப் பத்திரிகை, இந்தப் பத்திரிகை, எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் தேசத் துரோகம், சமுதாயத்தைக் கெடுக்கக்கூடியவை, இவற்றைப் போடக்கூடியவற்றை நிறுத்தவேண்டும். "சதக், சதக், படக், படக்"—இது ஒரு பத்திரிகையா





ஐயா? சாக்கடையைவிட மோசமான சாக்கடைப் பத்திரிகை. இத்தனையும் செய்துவிட்டு தமிழர் பண்பாடு, நாங்கள் தமிழர்கள், தமிழுக்காக செய்கிறோம், தமிழில் மொழிபெயர்ப்பு பிரமாதமாக இருக்கும் என்றெல்லாம் சொல்லிக்கொள்கிறார்கள். நாங்கள் ஆட்சியில் இருக்கும் பொழுது போலீஸை தாக்கி எழுதிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது காங்கிரஸ்காரர்கள் கைது, பின்னாலே சிறிய எழுத்திலே தி. மு. க. வும் கைது செய்யப்பட்டார்கள். ஏன் இப்படிப் போடவேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது போலீஸ் மானியம்....

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** போலீஸ் மானியம், இது ரொம்ப ரொம்ப முக்கியமான விஷயம். சட்டம், அமைதி வேண்டுமானால் பிரச்சாரமும் நல்ல முறையில் இருக்கவேண்டும். சட்டமன்றத்திலே நடப்பதையெல்லாம், காங்கிரஸ்காரர்கள் வெளியேறினார்கள், என்று எங்கோ போட்டுவிட்டு கவர்ச்சி நடிகைப் படத்தைப் பாருங்கள் என்று பெரியதாக போடுகிறார்கள். போலீஸ் இந்தப் பத்திரிகையைப் பார்த்தால் தவறான செய்திகளை, மக்களைக் கெடுப்பதற்கான செய்திகளைத் தருவதற்குத் தூண்டு போகின்றது என்று தெரிந்து கொள்ளலாம்.

**திரு. பெ. சீனிவாசன் :** குறிப்பிடுகிற பத்திரிகை எந்தப் பத்திரிகை என்பது அனைவருக்கும் தெரிகிறது. அதன் மூலமாக குறிப்பிட்ட அமைச்சரை மறைமுகமாகத் தாக்குகிறார். எனவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன. ஒரு பத்திரிகை தவறாக நடக்கிறது என்று புரிந்தும் போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பேசலாம். பத்திரிகை வளர்ச்சிக்காக எந்த, எந்த முறையிலே செய்திகளைப் போட விரும்புகிறார்களோ அதைப் போடுகிறார்கள், அதுபற்றி இங்கே பேசிக் கொண்டு வருவது நல்லதல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, தமிழகக் காவல் துறை 1967-ம் ஆண்டு வரை சிறப்பாகத்தான் இருந்தது. அதிலே இருக்கின்ற மனிதர்களும் அதே மனிதர்கள்தான். இந்த ஆட்சி வந்த பிறகுதான் நிலை மாறிவிட்டது. இந்த ஆட்சி வந்தபிறகு பொதுக் கூட்டத்தில் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசுகின்ற பேச்சுகள் அதிகமாகி இருக்கின்றன. மதுரைச் சம்பவத்தைப் பற்றிப் பேசும்போது "காக்கிச் சட்டை" என்றெல்லாம் பேசலாமா என்றார்கள். அப்படிப் பேசுவது யாராக இருந்தாலும் தவறுதான். அப்படிப் பேசக் காரணம் என்ன? ஆளும் கட்சியில் இருப்பவர்கள் பெரிய, பெரிய காரியங்களை செய்யும்போதுகூட அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. தேனி வெங்கடாசலபுரத்தில் நடந்தது என்ன? சட்டசபை உறுப்பினர் முறையிட்டால் கைது செய்யப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டார். டி. எஸ். பி. அவர்கள் சம்பவம் நடக்கவில்லை என்று சொன்னார்.

**திரு. பெ. சீனிவாசன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நான் போய் முறையிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள். இது தவறான தகவல் அல்லவா?

Thiru K. VINAYAKAM : It is not a point of order. We have not mentioned the name of the gentleman.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பும்போது அதைப் பற்றி நான் கூறுவதற்கு முன்னால் நீங்களே அது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல என்று கூறுவது சரியல்ல.

இந்த மன்ற விதிகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மன்ற நடை முறைக்கு மாறாக ஏதேனும் நடந்தால் அதை மட்டுந்தான ஒழுங்குப் பிரச்சினையின் கீழ் சுட்டிக்காட்ட வேண்டும். உங்களைப் பற்றி மற்றவர்கள் ஏதேனும் கூறினால் அதற்கு விளக்கம் சொல்லுவது ஒழுங்குப் பிரச்சினையின் கீழ் வராது. பேச்சு முடிந்த பிறகு தன்னிலை விளக்கம் என்ற முறையில கடைசியில் வேண்டுமானுல் கூறலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஒரு பெரிய டி. எஸ். பி. தவருன தகவல் கொடுத்து கைது செய்யப்படவில்லை என்று சொல்லுகிருர் என்றால் என்ன அர்த்தம்? அவர்களைச் சார்ந்தவர்களுக்குப் பாது காப்பு கொடுக்கிருர்கள். இதைப் பற்றி அறிவிலும், ஆற்றலிலும், பண்பிலும் சிறந்த மறைந்த அண்ணு அவர்களிடத்தில் சொன்னபோது அவர்கள் வருத்தம் தெரிவிக்கும் நிலை ஏற்பட்டது. அந்த அளவுக்கு போலீஸ் இலாகாவைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கியிருக்கிருர்கள். துலுக்கப்பட்டியில் ஒரு விவகாரம் நடந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொற்களை அறிந்து பயன்படுத்த வேண்டும். இலக்கியம் அறிந்த எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், கோவைக் கம்பன் என்று பெயரெடுத்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வாயிலிருந்து "குட்டிச் சுவர்" போன்ற வார்த்தைகள் வருவது நல்லதுதாஞ என்று அவரே சிந்தித்துப் பார்க்கட்டும். அன்பார்லிமென்டரி வார்த்தை என்ற முறையிலே சொல்லவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கம்பன் ராஜ்யம்போல் நடந்து வந்தால் நானும் கம்பனைப் போல் பேசியிருப்பேன். "கள்வர் இல்லாமையால் காவலும் இல்லை" என்று கம்பன் கூறியது போல் அமைந்திருந்தால் நானும் கம்பனைப்போல் பாராட்டியிருக்க முடியும், பேசியிருக்க முடியும். அப்படி இல்லையே! துலுக்கப்பட்டியில் நடந்தது என்ன? நான் போலீஸ் காவலர்களைப் பாராட்டுகிறேன். அங்கு ஒருவரைக் கைது செய்து கொண்டு போய்விட்டார்கள். கைது செய்யப்பட்ட நபர் வெளியே வந்தார், எப்படி? யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுங்கள். பண்ருட்டி அங்கசதினர் அவர்கள் பத்திரிகையிலிருந்து ஒன்றைப் படித்தார்கள். அவர் படித்த வாசகத்தை நான் சரியாகப் படிக்கிறேன். உருட்டல், மிரட்டல்களுக்கு அடுத்தபடியாக போலீஸ் உதவியுடன் காசு கொடுத்து ஓட்டு வாங்க திட்டமிட்டிருக்கிருர்கள்; அவர்கள் வந்தால் அவர்களை விரட்டி அடியுங்கள் என்று காமராஜர் அவர்கள் பேசியிருக்கிருர்கள். இதிலே என்ன தப்பு? மக்களுக்குப் பொதுவாக இருக்கக்கூடியவர்களை உபயோகிக்கும் போது என்ன செய்ய முடியும்? போலீசை வைத்துக் கொண்டு நீங்கள் ஓட்டு வாங்கலாம். நாங்கள் விரட்டியடித்தால் அது பலாத்காரமா? (குறுக்கீடு) இந்தக் கதையை என்னிடம் வைத்துக் சொல்லாதீர்கள். அவ்வாறு காமராஜ் அவர்கள் சொன்ஞர்கள் என்றால் வேறு யாருக்கும் அந்தத் தைரியம் கிடையாது. அவருக்குத்தான் இருக்கிறது. விரட்டி அடிக்கத்தான் அடிப்போம்.

**திரு. மு. சின்னசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நாகர்கோவில் தேர்தலிலே போலீசை வைத்துக் கொண்டு பணம் கொடுத்தது எனக்குத் தெரியும் என்ற முறையிலே சட்டமன்றத்திலே கூறியிருக்கிருர்கள். அதை நிரூபிக்கும் பொறுப்பை ஏற்கத் தயாராக இருக்கிருரா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சட்டசபையில் அவர் படித்ததை நான் படிக்கிறேன். அவருக்குப் படிக்க உரிமை இருக்கிறது, எனக்குப் படிக்க உரிமை கிடையாதா?





போலீஸ்காரர்களை வைத்து காசு கொடுத்தார்கள் என்று அவர் சொன்ஞல் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

**திரு. வி. எஸ். கோவிந்தராஜன் :** பணம் கொடுத்தார்கள் என்ற வார்த்தை அவருடைய பேச்சிலே வந்தது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்படியெல்லாம் ஏமாற்றி தவறை மறைக்கப் பார்க்கிறீர்களா?

நான் நாகர்கோவிலிலே தேர்தலின்போது ஒரு மாதம் இருந்தேன். பூரண பொறுப்பையும் ஏற்றுக்கொண்டேன். என்னுடைய 20 வருஷ அரசியல் வாழ்வில் நான் போலீஸ் ஸ்டேஷனுக்கே போனது கிடையாது. எனக்கு அங்கு போலீஸ் ஐ. ஜி. வீட்டில் இருக்கும் நிலைமை ஏற்பட்டது. என்னுடைய கல்லூரித் தோழன் என்ற முறையிலே எனக்கு அவரைத் தெரிந்திருந்தாலும், அவர் ஐ. ஜி. என்ற நிலையிலே இருக்கும்போது நான் அங்கு தங்கியிருந்தேன். இரவு 12 மணிக்கு டெலிபோன், 2 மணிக்கு டெலிபோன், 3 மணிக்கு டெலிபோன் என்று வந்த சீராக இருந்தன. நான் என்னுடைய பாதுகாப்புக்காக அங்கு போய் இருக்கவில்லை. அங்கே மக்கள் வீடுகளைத் தாக்கிக் கொண்டிருக்கும் நிலை. (ஆளும் கட்சி வரிசையில்: த்சொ த்சொ..) நாக்கைச் சப்பாதீர்கள்.

மதுரையில் நடந்த சம்பவத்திற்கு கோர்ட் மூலம் நடவடிக்கை எடுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனுல் எப்படிப்பட்ட கேஸ்? 'கருத்திருமன் ஒரு ரவுடி, பெரிய தவருன காரியத்தைச் செய்துவிட்டான் என்று கூறி ஒரு சம்மன் கொடுத்தால் நான்கூட அந்த சம்மனை வாங்கமாட்டேன. எம்.ஏ. படித்த ஒருவர், ஆசிரியர் ஒருவர்—மனம் புண்பட்டிருக்கிருர்கள். கோர்ட்டுக்குப் போகும்படியான சமயத்தில் தடியடிப் பிரயோகம் ஏன் நடந்தது? ஒரு 'வான்' போய் நின்றது. இன்னொரு 'வான்' வந்தது. அங்கே கொந்தளிப்பான நிலை இருக்கிறது என்று தெரியும். ஏன் முன் ஏற்பாடுகளைச் செய்யவில்லை? இரண்டு வான்கள் வந்து பிறகு தடியடி நடத்தினர்கள். மண்டையில் அடிப்பதா? பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் போராட்டம் நடத்தியபோது கூட இப்படி நடக்கவில்லை. ஏதோ காலுக்குக் கீழே அடிப்பார்கள். ஐந்து, பத்துபேருக்கு வேண்டுமென்றால் அடிப்பட்டிருக்கும். ஆனுல் நீங்கள் நடத்துகிற தடியடி அதையெல்லாம் மிஞ்சிவிட்டது. ஆகஸ்ட் 1-ம தேதி இளைஞர் காங்கிரஸ் ஊர்வலத்தின்போது தடியடி நடத்தினீர்களே—காந்தி—இர்வின் பாலத்திலிருந்து மூர்மார்க்கெட் வரையில். மண்டையில் அடிப்பட்டார்கள். எச்சரிக்கையாக அடிப்பது என்றால் காலுக்குக் கீழ்தான் அடிக்கவேண்டும. போலீஸ்காரர்கள் என்ன செய்வார்கள். சிறிதைப் பெரிதாக....

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** காங்கிரஸ் தோழர்கள் அப்படி நடந்துகொண்டதைக் கண்டித்து மதுரை ஜில்லா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சின்னக்கருப்ப தேவர் அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிருர். அது அவர்களுக்குத் தெரியாது என்று கருதுகிறேன்.

பிற்பகல் 1-30

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்களைச் சந்தித்தேன். அவர்கள் கொடுத்த அறிக்கையும் பத்திரிகைகளில் வந்ததும் முரணுக இருக்கிறது என்று சொல்லியிருக்கிருர்கள். நான் சொல்வது என்னவென்ருல், யார் தவறு செய்தாலும நடவடிக்கைகள் எடுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. ஆகஸ்ட 1-ம் தேதி எவ்வளவு பேர்கள் அடிபட்டார்கள்? கணக்கு கம்மியாக வந்துகொண்டிருக்கிறது. இவ்வளவு பேர்கள் அல்ல, அவ்வளவு பேர்கள் அல்ல என்று சொன்ஞர்கள். போலீஸ் உத்தரவு கொடுத்த வழி வேறு. போன வழி வேறு என்று சொல்கிருர்கள். காந்தி—இர்வின் பாலத்திலிருந்து தினத்தந்தி ஆபீஸ் எவ்வளவு தூரம் இருக்கிறது. தினத்தந்தி பத்திரிகை ஆபீசை மன்று பர்லாங் தூரம் இருக்கிறது.

தாக்க திட்டமிட்டார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் மனதில் நினைத்தார்களாம். இது வெறும் கற்பனை. கற்பனையில் உள்ள அரசாங்கம் கற்பனையில் போகிறது. அப்படி மனதில் நினைத்தார்கள் என்றால் அடிதடி தினத்தந்தி ஆபீஸ் அருகில் அல்லவா நடந்திருக்க வேண்டும்.

இதையெல்லாம் நான் ஏன் கூறுகிறேன் என்றால் உங்களுக்கு நேரடியான பதில் கிடையாது. மாணவர்களில் எங்கேயோ ஒருவர் அடிபட்டார், அதைப் பெரிதுபடுத்துகிறார்கள் என்று கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எத்தனை கல்லூரி மாணவர்கள் விடுதிகளில் புகுந்து அடித்திருக்கிறார்கள் தெரியுமா. இந்துவிலேயே அந்த போட்டோ கூட வந்திருந்தது. அவர்கள் "ஆனந்தமாக" கல் எறிந்துகொண்டிருக்கிறார்கள். போலீஸ் கமிஷனர் பார்த்துக்கொண்டிருக்கிறார். இந்துவில் இந்த போட்டோ வந்தது. இதை மறுக்கமுடியுமா? நான் சொல்வது இதெல்லாம் கூடாது என்பதுதான். அவர்கள் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருந்ததை படத்தில் பார்த்தோம். திடீரென்று நடந்துவிட்ட நிகழ்ச்சி என்று சொன்னார்கள். பிறகு சோமசுந்தரம் கமிஷன் விசாரணை, ஒன்பது மாத விசாரணை, ஆயிரக்கணக்கான சாட்சிகள் என்று நடந்திருக்கிறது. நாங்கள் தேடிக்கொண்டு போகிறோமாம், நாங்கள் தேடி அலையவேண்டிய வேலை இல்லை. எவ்வளவு மாணவர்கள் அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடந்தார்கள். வெட்டரினரி காலேஜ் ஹாஸ்டலில் ஒன்றுமே நடக்கவில்லையா?

பேசிவிட்டுப் போய்விட்டார், ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொன்னார்களா என்று கேட்பார்கள். நான் சொல்கிறேன். போலீஸ் தனியாக இயங்கக்கூடிய பூரண உரிமையை அவர்களுக்குக் கொடுங்கள். சட்டம் அமைதியைப் பாதுகாக்க அவர்கள் என்ன நடவடிககைகள் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்று திட்டவட்டமாகச் சொல்லுங்கள். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் சரி நடவடிக்கைகள் எடுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. யாராக இருந்தாலும் சரி தவறு செய்பவர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற நம்பிக்கை மக்கள் மனதில் ஏற்படவேண்டும். சர்க்கார் போலீஸ் நடவடிக்கைகளில் தலையிடக்கூடாது என்ற நிலை வரவேண்டும். அதைத் திட்டவட்டமாக அறிவிக்கவேண்டும். குழப்பமான. திட்டமில்லாத, கொள்கையில்லாத ஒரு நிலையினால்தான் இந்தக் காரியங்கள் எல்லாம் நடக்கின்றன.

மதுவிலக்கை எடுத்துக்கொண்டால் இந்த அரசாங்கம் அதைத் தொடர்ந்து செய்வதை நான் பாராட்டுகிறேன். எங்கள் கொள்கையைத் திட்டவட்டமாக நிறைவேற்றுவதாகச் சொல்வதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதன்மேல் எடுத்துக்கொள்ளப்படுகிற நடவடிக்கைகளைப் பார்த்தால் அப்படியிருக்கிறதா என்றால் இல்லை. ஆகவே இந்த மதுவிலக்குத் திட்டத்தை சர்க்கார் இன்னும் தீவிரமாக அமல்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் என்னவாகும் என்று சர்க்காருக்குத் தெரியும். ரொம்பச் செய்தால் எந்தெந்த ஆட்கள் மாட்டிக்கொள்வார்கள் என்று தெரியும். திருட்டுச் சாராயம் காய்ச்சுபவர்கள்மீது நடவடிக்கைகள் எடுத்தால் அரசியல் தொடர்ப, அரசியல் ஆதரவு கெட்டுப் போகும் என்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடலாம். காந்தீயப் பரம்பரையை ஆதரிக்கிறோம், அதைப் பின்பற்றுகிறோம், மதுவிலக்கை ஆதரிக்கிறோம், ஆதரிக்கிறோம் என்று சொல்கிறார்கள். உங்கள் காங்கிரஸ் மாநிலங்களில் அமல்படுத்தாததை நாங்கள் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். நல்லவேளையாக பாண்டிச்சேரியில் அவர்கள் கட்சி ஆட்சிக்கு வந்திருக்கிறது. என்ன செய்யப்போகிறார்கள் என்று தெரியாது. அங்கு மதுவிலக்கைக் கொண்டுவரப் போகிறார்களா அல்லது இப்போதிருக்கும் நிலையை ஆதரிக்கப் போகிறார்களா என்று தெரியவில்லை. இவர்கள் இரண்டு இடங்களில் இருக்கிறார்கள். ஆனால் நாங்கள் எவ்வளவு மாநிலங்களில் உள்ள மக்களின் நிலையை அறிந்து செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைச் சிந்திக்கவேண்டும். நிர்வாகத்திற்கு வந்தால்தான் அதன் கஷ்டம் தெரியும்.





அடுத்தபடியாக, போலீஸ்க்குச் சென்று யார் புகார் கொடுக்கிறார்களோ அவர்களையே அரெஸ்ட் செய்யும் நிலை பல இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. ஹரிஜன மானியத்தின்மீது பேசுகையில், எழுதிக் கொடுத்தார்களா, எங்கே கொடுத்தார்கள் என்று கேட்டார்கள். நாங்குனேரியில் திசையன்விளையில் நான்குபேர்கள் ஹரிஜனங்கள் போலீஸில் புகார் கொடுத்தார்கள். கையெழுத்து போட்டு கொடுத்திருக்கிறார்கள். அவர்களை அடித்து ஜாதியின் பெயரைச் சொல்லி உங்களுக்கு இங்கே என்ன வேலை என்று சொன்னதாகக் கொடுக்கப்பட்டிருப்பது இந்த விண்ணப்பம். "எங்கள் ஊரா மூக்கன், பிச்சை, சணமுகம் இவர்கள் வந்து எங்களை திசையன்விளை போலீஸுக்கு கூட்டிக்கொண்டு போனார்கள். திசையன்விளை சப் இன்ஸ்பெக்டர் அவர்களிடத்தில் வாக்குமூலம் சொன்னோம். அவர்கள் போலீஸ் எஃப். ஐ. ஆர்-ல பதிவு செய்துகொண்டார்கள். எஃப். ஐ. ஆர்-ல் திருநெல்வேலி 1-வது வகுப்பு மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்பிவிட்டு எங்களை நாங்குனேரி மருத்துவ மனைக்கு அனுப்பினார்கள். நாங்கள் மருத்துவ மனையில் மருந்துபோட்டு 7 நாளைக்குப்பின் எங்கள் ஊர் வந்து சேர்ந்தோம்."

நாகர்கோவிலில் டானியல் பி.ஏ.,பி.எல்., பிப்ரவரி 7-ம் தேதி குத்தப்பட்டிருக்கிறார்கள். அப்படிச் செய்தவர்கள் மீது ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆராய்ச்சி மணி அடித்தவுடன் நீதி கொடுப்போம் என்று சொன்னதாகச் சொல்கிறார்கள்.

A case has been registered under Section 307, Indian Penal Code. I was in the hospital for five days. It is strange to note that neither investigation has been conducted nor any one of the culprits have been apprehended so far.

தவறு செய்பவர்களுக்கு தண்டனை இல்லை. அவர்கள் தவறுகளைச் செய்துகொண்டே போகலாம். தவறு செய்பவர்கள் போலீஸை கண்டபடி ஏசலாம். ஆளும் கட்சிக்கு ஆதரவாகத்தான் போலீஸ் இருக்கும் என்ற மனப்பிராந்தியில் போகவேண்டாம். போலீஸ் சுயமாக இயங்குவதற்கு பூரண சுதந்திரம் கொடுக்கவேண்டும். யாராக இருந்தாலும் சரி தவறு செய்பவர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். பல விடங்களில் பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. நாகர்கோவிலில் 200 கேஸ்கள் இருக்கின்றன. ஆளும் கட்சியில இருப்பவர்களுக்கு, கூட்டணியில் இருப்பவர்களுக்கு சிறிது அனுதாபம். காங்கிரஸ்காரர்கள் என்றால் தேடிப்பிடித்து, கூட்டிக் குறைத்து எல்லாம் செய்கிறார்கள். இதுதான் இப்போதுள்ள நிலைமை. இந்தப் போக்கு நல்லதல்ல, இதை மாற்றவேண்டும்.

இப்போது திருட்டுப் புரட்டுக் குற்றங்கள் குறைந்துவிட்டன. அரசியல் சார்பாக உள்ள கேஸ்கள்தான் அதிகமாகயிருக்கின்றன. அதற்காகவா நாங்கள் சுதந்திரம் வாங்கினோம்? இதற்காகவா நாங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடி அடிபட்டோம்? சுதந்திரம் வாங்கி இப்போது நீங்கள் அங்கு உட்கார்ந்திருக்கிறீர்கள். நாங்கள் அப்போதும அடிபட்டோம், இப்போதும் அடிபடுகிறோம். உரலுக்கு ஒருபுறம் இடி, மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்பார்கள். அதுபோல் இருக்கிறது. இந்த நிலை போகவேண்டும். ஆகவே நான் ஒன்று சொல்கிறேன். ஆறு மாத காலம் கொடுக்கிறோம். காந்திஜி நூற்றாண்டு விழாவிற்குள் தவறான, நியாயம் இல்லாத கேஸ்கள் இருக்கக்கூடாது; இல்லாவிட்டால், அக்டோபருக்கு மேல் பெரியதொரு போராட்டத்தை நாங்கள் துவக்கவேண்டியிருக்கும.

தவறான கேஸ்கள் வேண்டாம். போலீஸின்மீது மக்களுக்கு நம்பிக்கையிருக்கிறது, போலீசார் சரியாகத்தான் செய்வார்கள், யாராக இருந்தாலும் நீதி வழங்கப்படும் என்று நீங்கள் செய்யாவிட்டால் அக்டோபர் மாதம் 2-ஆம் தேதி தமிழ்நாடு பூராவும் நான் ஒருவனே காங்கிரஸ் கட்சியின் சார்பில் போராட்டம் நடத்தத் தயாராக

யிருக்கிறேன். (சிரிப்பு) சிரிப்பதற்காகச் சொல்லவில்லை. அக்டோபர் 2-ஆம் தேதி அத்தகைய போராட்டம் நடக்கமுடியாத நிலையில் இந்தச் சர்க்கார் நடந்துகொள்வார்கள் என்ற நம்பிக்கையிலே இருக்கிறேன்.

முதலமைச்சரவர்கள் இப்பொழுது வந்திருக்கிறார்கள். முன்னாலே மந்திரிசபை அமைத்த சமயத்திலேயே இந்தத் துறையைத்தான் அவர் விரும்பியதாக எனக்குத் தெரிகிறது, அது உண்டோ இல்லையோ தெரியாது. இப்பொழுது வந்திருக்கிறார்கள். அப்பொழுதிருந்த துடுக்கும், கோபமும் குறைந்திருப்பதாக அறிகிறேன். அதை வரவேற்கிறேன், அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நாகர்கோவில் தேர்தல் நடந்த சமயத்திலே இருந்த துடுக்கு இப்பொழுது கொஞ்சம் குறைந்திருக்கிறது. அப்பொழுது பேசிய பேச்சுக்கள் இப்பொழுது கிடையாது. 200 பேர் என்ன, 2,000 பேர்களைக் கைது செய்வேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது அப்படிச் சொல்ல மாட்டார்கள். இரண்டாயிரம் பேரென்ன, 2,49,49,000 பேரைக்கூட கைது செய்யலாம். ஆனால், அப்படிப்பட்ட நிலையில செய்யமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அந்த நிலையைவிட்டு நிதர்சனமாக தமிழ் நாட்டுக்குச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வருகிறது என்பதைப்பற்றி அக்கறை கிடையாது. ஆனால், சட்டம், அமைதி எப்பொழுதும் பாதுகாக்கப்படவேண்டும். இரண்டு வருஷங்களிலே வேதனை தரக்கூடிய, சகிக்க முடியாத, மக்கள் வாழக்கூடிய நிலையிலே பாதுகாப்பு இல்லாமல் இருக்கும்பொழுது அதை மாற்றியமைக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய கட்சியின் சார்பில் கொண்டுவரப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ள காவல்துறை மானியத்தின மீது பலவேறு கட்சிகளினுடைய தலைவர்களும், உறுப்பினர்களும் இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் தங்களுடைய கருத்துக்களை யெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எனக்கு, அவராகவே வலிய வந்து ஒரு பட்டத்தையும் இன்றையதினம் சூட்டியதற்கு நான் கைம்மாறாக ஏதாவது தரவேண்டும். அவர் என்னை 'கற்பனை ஜோதி' என்றார், ஆனால் இந்த மாமன்றத்தில், புதிய அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, அவர் பேசுகின்ற பேச்சுக்களி லெல்லாம் வெடிக்கின்ற ஹாஸ்ய வெடிகளைப் பார்க்கின்ற நேரத்தில் அதற்குக் கைமாறாக, 'ஹாஸ்ய ஜோதி கருத்திருமன்' என்கின்ற பட்டத்தை (சுறுக்கீடு) ஆசிய ஜோதி அல்ல, 'ஹாஸ்ய ஜோதி' என்கின்ற பட்டத்தை .....

**திரு. கே. விநாயகம்:** ஹாஸ்யம் என்பது வடமொழியாயிற்றே.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும் என்பதால் அந்த மொழியிலே வைத்தேன்.

இந்த மானியத்தைப் பொறுத்தவரையிலும், எதிர்க்கட்சியிலே நாங்கள் இருந்தபொழுது போலீஸ் துறையினுடைய எல்லா வகையான கொள்கைகளையும் எடுத்து விமர்சித்திருக்கிறோம், நடவடிக்கைகளைப்பற்றி எங்களுடைய விமர்சனங்களைக் கூறியிருக்கிறோம். அந்த நேரத்திலும் அடக்குமுறைகளைப்பற்றி எங்கள் கருத்துக்களையெல்லாம் அறிவித்திருக்கிறோம். ஆனால் எதிர்க்கட்சியின் தலைமைப் பொறுப்பிலேயிருந்த நாங்கள் அவ்வளவும் பேசிவிட்டு இறுதியாகவாவது அல்லது பேச்சிலே ஒரு பகுதியாகவாவது, கஷ்டப்படுகின்ற காவல் துறையினருக்கு இன்னின்ன சலுகைகளை வழங்க வேண்டுமென்பதை அந்த மானியத்திலே பேசுவதை ஒரு முறையாகவும், மனப் பக்குவமாகவும், மனிதத் தன்மையாகவும் கருதி, அப்படியெல்லாம் பேசியிருக்கிறோம். ஆனால்......





**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எங்கள் கட்சியின் சார்பிலே திரு. மார்டின் அவர்கள் பூரணமாகப் பேசியிருக்கிறார்கள். நானும் பேசியிருப்பேன், நேரம் இருந்தால்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** யார் பேசியிருந்தாலும், எதிர்க் கட்சித் தலைவரவர்களிடமிருந்து ஒரு கோரிக்கையை எதிர்பார்த்தேன். காவல் துறையினருக்கு இன்னின்ன சங்கடங்கள் இருக்கின்றன, இவைகளை யெல்லாம் போக்க வேண்டுமென்று சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். அப்படி அவர்கள் சொல்லவில்லை என்பது உள்ளபடியே எனக்கு வருத்தம் கொடுக்கக்கூடிய ஒன்றுதான். காவல் துறையைப்பற்றி அவர்கள் நடத்திய ஒரு விளையாட்டு விழாவில், மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். "எந்தச் சமுதாயத்திலிருந்து போலீஸ் படையினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ அந்தச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்ற நிலைக்கண்ணாடிகளாக அப்படையினர் விளங்குவார்கள். அந்தச் சமுதாயத்திலிருந்து வெகுதூரம் அவர்கள் விலகியிருப்பதில்லை. போலீஸ் படை நன்றாக நேர்த்தியாகச் செயல்படுகிறது என்றால் அது சமுதாயத்தின் தன்மையைக் காட்டும். அதேபோல போலீஸ் படையினர் எங்கேனும் செயல் ஆற்றுவதில் தவறுகள் இழைத்தால் சமுதாயத்தில் நிலவும் குறைப்பாட்டையே அவை காட்டுகின்றன.

தங்களால் உருவாக்கப்படாத பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டிய வர்களாக அவர்கள் இருக்கிறார்கள். முரண்பாடு ஏற்படுகிற இடங்களில் எல்லாம் அவர்கள் இருந்தாக வேண்டி இருக்கிறது. சகலவிதத்திலும் சகிப்புத் தன்மையோடு அவர்கள் நடந்துகொள்ள வேண்டி இருக்கிறது. உள்ளக் கொந்தளிப்பு அடையாமல் பற்றற்ற அமைதியுடன் நடந்து கொள்ள வேண்டியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். பெற்ற சிறந்த பயிற்சிக்கு ஒப்ப, கடமை உணர்ச்சி மிக்கவர்களாக அவர்கள் நடந்து கொள்ள வேண்டி உள்ளது" என்கின்ற கருத்தினை பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்த விழாவிலே உரையாற்றுகின்ற நேரத்திலே குறிப் பிட்டார்கள்.

இந்த மானியத்தின் மீது எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களை நாம் சட்டமன்ற நடவடிக்கை நிகழ்ச்சிகளிலே இணைக்கிறோம். அது மாத்திரம் அல்ல. போலீஸ் துறையைச் சார்ந்த அதிகாரிகள் அவர்களே அவைகளைக் கவனமாகக் கேட்கின்ற வாய்ப்பும் இந்த மாமன்றத்திலே ஏற்பட்டிருக்கிறது. இங்கு எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களை எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளலாமோ ஏற்று, சிற்சில இடங்களில் சிறிய தவறுகள் நடைபெற் றிருந்தாலும் அவைகளைத் திருத்திக்கொள்ளுகின்ற அந்தப் பண்பினை போலீஸ் துறை நிச்சயமாகப் பெறும் என்ற நம்பிக்கையை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நம்முடைய நண்பர் திரு. டி. மார்டின் அவர்கள் பேசியபொழுது, இந்த மானியத்தில் ஒதுக்கப்பட்ட சில தொகைகளின் வித்தியாசங்களை எடுத்துச் சொல்லி, அதில் குறைத்துவிட்டார்கள் என்று அறிவித்தார்கள். 1967–68-க்கும், 1969–70-க்கும் உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடித்து சுட்டிக்காட்டினார்கள். "ஆர்ம்ஸ் & அம்யூனிஷன்ஸ்" என்ற தலைப்பில் 1967–68-ல் 31½ லட்சம் ரூபாயும், 1968–69-ல் 14 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1969–70-ல் 14 லட்சம் ரூபாய் என்று குறைத் திருக்கிறீர்களே, இப்படியிருந்தால் காவல்துறை எப்படி ஒழுங்காகக் கடமையாற்ற முடியும் என்று கேட்டார்கள். 1967–68-ல் அதற்கு முந்திய ஆண்டிலுள்ள பாக்கிகள், அதாவது அரியர்ஸ் 18 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டியிருந்ததால் 32 லட்சம் ரூபாய் என்று கணக்கு இருக்கிறதே தவிர வேறல்ல என்பதையும், அந்த 18 லட்சம் ரூபாயையும் குறைத்துப் பார்த்தால் நாம் எதையும் அந்த ஆண்டிலிருந்து காவல் துறைக்குக் குறைத்துவிடவில்லை என்பதையும் மாண்புமிகு மார்டின் அவர்கள் உணருவார்கள் என்று கருதுகின்றேன்.

'குவாரண்டைன் ஸ்டாஃப்'க்கு 1967—68-ல் 64,438 ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1968–69-ல் 42,400 ரூபாயும், 1969–70-ல் 42,400 ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படிக் குறைந்திருக்கிறதே என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். 1967–68-ல் 'அதர் அலவன்ஸஸ்' என்ற தலைப்பில் 'மிஸ்கிளாஸிபிகேஷன் ஆஃப் அக்கவுண்ட்'' ஏற்பட்டு விட்டது. இதனால் இந்தத் தலைப்பில் மொத்தம் ரூ. 33,226 கணக்கில் புகுந்து விட்டது. ஆகவே, இதையும் அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதைப்போல, டிஸ்டிரிக்ட் போலீஸ்-மெயின்டனன்ஸ் ஆஃப் வெஹிகில்ஸ் என்ற தலைப்பில் 1967–68-ல் 33 லட்ச ரூபாயும், 1968–69-ல் 29 லட்ச ரூபாயும், 1969—70-ல் 29 லட்ச ரூபாயும் உள்ளது. ஏறத்தாழ 4, 5 லட்சம் குறைக்கப்பட்டிருக்கிறது. 1967–68-ல் 5 லட்சம் அதிகமானதற்குக் காரணம் பழைய வாகனங்களைப் பழுது பார்ப்பதற்காக அப்பொழுது அந்தச் செலவு ஆகியிருக்கிறது. 1968–69, 1969–70-ல் புதிய வாகனங்கள் வாங்கப்பட்டுவிட்ட காரணத்தினால் பழுது பார்க்கும் செலவு குறைக்கப்பட்டிருக்கிறது 'பர்சேஸ் ஆஃப் நியூ வெஹிகில்ஸ்' என்ற தலைப்பின் கீழ், 1967–68-ல் 11 லட்சம் ரூபாயும், 1968–69-ல் 20 லட்சம் ரூபாயும், 1969–70-ல் 32 லட்சம் ரூபாயும் உள்ளது. எனவே, 1968–69-ல் புதிய வாகனங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன என்ற முறையிலும் பராமரிப்புக்கான செலவு குறைந்தது நியாயம்தான் என்று நண்பரவர்கள் உணருவார்கள் என்று கருதுகின்றேன்.

குறைந்திருக்கும் இவைகளை மாத்திரம் சுட்டிக்காட்டினார்கள் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கும் இனங்களை அவர்கள் சொல்லவில்லை. அதுதான் எதிர்க்கட்சிக்குள்ள இலக்கணம் என்று வகுத்துக் கொண்டிருக்கும் காரணத்தால் அவர்கள் சொல்லவில்லை என்று கருதுகிறேன்.

இரயில்வே போலீஸ் விஷயமாக 1967–68-ல் 31 21 லட்சமும், 1968–69-ல் 34 லட்சம் ரூபாயும், 1969–70-ல் 35·36 லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சி.ஐ.டி. விஷயமாக 1967–68-ல் 51 லட்சமும் 1968–69-ல் 59 லட்சமும், 1969–70-ல் 62 73 லட்சமும், மானியங்கள் என்னும் விஷயத்தில் 1967–68-ல் 3·73 லட்சமும், 1968–69-ல் 4·75 லட்சமும், 1969–70-ல் 4·71 லட்சமும், 'ஃபையர் சர்வீஸ்' விஷயத்தில் 1967–68-ல் 61 லட்சமும், 1968–69-ல் 75 லட்சமும், 1969–70-ல் 84 லட்சமும், 'ஸிட்டி போலீஸ்' விஷயமாக 1967–68-ல் 158 லட்ச ரூபாயும், 1968–69-ல் 195 லட்ச ரூபாயும், 1969–70-ல் 220 லட்ச ரூபாயும் என்கின்ற அளவுக்கு அதிகமாகி இருக்கிறது.

மொத்தத்திலே பார்க்கப்போனால் போலீஸ் துறைக்காக செலவழிக்கப்படுகிற பணம் 1967—68-ல் 12 கோடி, 1968—69-ல் 13·73 கோடி, 1969–70-ல் 14 கோடியே 70 லட்சம் ரூபாய் என்கின்ற அளவுக்கு இது உயர்ந்திருக்கிறது என்பதையும் நாம் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும்.

தமிழ்நாட்டின் காவல்துறை எவ்வளவு சீரோடும், சிறப்போடும் தங்களுடைய கடமைகளை ஆற்றி வருகிறது? எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் குறிப்பிட்டதைப்போல் இன்று மாத்திரமல்ல, பல நாட்களாகவே, பல்லாண்டு காலமாகவே, தமிழ் நாட்டு காவல்துறை இந்த இந்திய துணைக் கண்டத்தில் இருக்கிற எல்லா மாநிலங்களையும் விட சிறப்பு வாய்ந்தது, பாராட்டத்தக்கது என்பதற்கான புள்ளி விவரங்களை மத்திய அரசே தொகுத்து வெளியிட்டிருக்கிறது. அதன்படி பார்த்தால் ஓராண்டில் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற குற்றங்களுக்கான புள்ளி விவரப்படி தமிழகக் காவல் துறையினர் எத்தகைய திறமை பெற்றிருக்கிறார்கள் என்பது வெகுத் தெளிவாக விளங்கும். அசாமிலே 100 குற்றங்கள் நடைபெற்றிருக்குமானால் அவைகளில் 6 சதவீதத்தைத்தான் அம்மாநில காவல் துறையினர் கண்டுபிடித்து தண்டனை வாங்கித் தந்திருக்கிறார்கள். பீகாரில் 12.8 சதவீதம் கண்டுபிடித்திருக்கிறார்கள், 87.2 சதவீதம் குற்றங்கள் கண்டுபிடிக்கப்படாமலேயே இருந்திருக்கின்றன, குஜராத்தில்





25.3 சதவீதமும், ஜம்மு காஷ்மீரில் 17.1 சதவீதமும், கேரளாவில் 33·9 சதவீதமும், மத்தியப் பிரதேசத்தில் 29.7 சதவீதமும், நாகாலாந்தில் 3 சதவீதமும், இராஜஸ்தானத்தில் 24·9 சதவீதமும், உத்தரப்பிரதேசத்தில் 18.8 சதவீதமும் கண்டு பிடித்து தண்டனை பெற்றுத் தந்துள்ளனர். ஆனால், தமிழ்நாட்டிலே மாத்திரம் 59·9 சதவீதம் வழக்குகள் நிரூபிக்கப்பட்டு தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளன.

கொலை வழக்குகளில் அசாமில் 34.5 சதவீதமும், பீகாரில் 22·2 சதவீதமும், மத்தியப் பிரதேசத்தில் 39·1 சதவீதமும் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்திலே 52·5 சதவீதம் கண்டு பிடிக்கப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அளவுக்கு தமிழகத்தினுடைய காவல் துறைக்கு மத்திய அரசே புள்ளி விவரம் மூலமாக நல்ல மதிப்பைத் தந்திருக்கிறது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'கம்பனுடைய ஆட்சியா நடைபெறுகிறது, என்று அங்கலாய்த்துக்கொண்டு, ஆயாசப்படுத்திக்கொண்டு, 'கம்பனுடைய ஆட்சியிலே கள்வர் இல்லாமையால் ஒரு காவலும் இல்லை' என்று குறிப்பிட்டார்கள். அது இராமனுடைய ஆட்சியிலே என்று சொல்லி இருந்தால் கூட நான் ஒத்துக்கொண்டிருப்பேன். கம்பன் ஆண்டதாக எனக்குத் தெரியவில்லை, அவர் தமிழை ஆண்டிருக்கிறார்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: கம்பர் கண்ட இராமராஜ்யத்தில்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கம்பர் கண்ட இராமராஜ்யத்தில் கள்வர் இல்லையென்றார். சீதையையே தூக்கிப்போகிற கள்வன் இருந்தான் (சிரிப்பு).

திரு. பி. ஜி. கருத்திருமன்: அங்கு ஒரு எதிர்க்கட்சி உங்களைப்போல் இருந்து தூக்கிப் போயிருப்பார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 'கள்வர் இல்லாமையால் ஒரு காவலும் இல்லை' என்று குறிப்பிட்டார். ஏதோ இந்த இரண்டாண்டு காலத்திலே தான், தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசை நாங்கள் அமைத்த பிறகுதான் கள்வர்கள் அதிகப்பட்டு விட்டதைப்போலவும், அதற்கு முன்பு 20 ஆண்டு காலமாக இந்தப் புனிதர்கள் ஆண்டபோது, கள்வர்களே இல்லாததைப் போலவும், திருட்டுக்களை நடைபெறுததைப் போலவும் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். நான் 20 ஆண்டுக்காலம் பின்னோக்கிச் செல்ல விரும்பவில்லை. 1962-லேயிருந்து மட்டும் புள்ளிவிவரத்தைத் தருகிறேன், அவர்கள் புரிந்து கொள்வார்கள். 'கள்வர் இல்லாமையால் ஒரு காவலும் இல்லை' என்ற கருத்திருமனுடைய காங்கிரஸ் கட்சி ஆட்சி எவ்வாறு நடைபெற்றது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். 1962-லே தமிழ்நாட்டில் நடைபெற்ற திருட்டுகள் 20,252; 1963-ல் 19,622; 1964-ல் 20,880; 1965-ல் 20,007 ; 1966-ல் 22,612 ; 1967-ல் 22,923 என்கின்ற அளவிலே 22,000, 20,000 என்கின்ற அளவுக்கு 1962-லே இருந்து திருட்டுகள் அப்போதே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிக் கண்டு பிடிக்கப்பட்ட திருட்டுகள், வழக்கு மன்றத்திற்கு சென்று அதனாலே பலர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக, கள்வர் இல்லாமலே, வேறு எந்தக்குற்றங்களும் இல்லாமலே அவர்களுடைய கம்பர் ஆட்சி, காங்கிரஸ் ஆட்சி நடைபெறவில்லை என்பதை எடுத்துக்காட்டத்தான் இதைச் சொன்னேன்.

கொலைகளைப் பொறுத்தவரையிலே, 1962-ம் ஆண்டிலே 700, 1963-ம் ஆண்டிலே 681, 1964-ம் ஆண்டிலே 799, 1965-ம் ஆண்டிலே 723, 1966-ம் ஆண்டிலே 758, 1967-ம் ஆண்டிலே 740, 1968-ம் ஆண்டிலே 765 என்கின்ற அளவுக்கு நடந்திருக்கின்றன. தற்கொலைகளைப் பொறுத்தவரையிலே, 1962-லே 1803, 1964-லே 1,651, 1965-லே 1,698, 1966-லே 1,799, 1967-லே 1,791 என்கின்ற அளவுக்கு இருந்திருக்கின்றன. எதுவுமே நடைபெறவில்லை, தி. மு. க.

ஆட்சியிலேதான் கொலை, களவு, திருட்டு இப்படிப்பட்ட குற்றங்கள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்று அவர் கூறிய கூற்றுக்கு மறுப்பாகத்தான் இதைக் கூறுகிறேனே அல்லாமல், வேறு எதற்கும் சொல்லவில்லை. எந்த ஆட்சி நடைபெற்றாலும் காவல் துறை இருப்பதும் அதற்குப் பணம் செலவழிப்பதும், குற்றங்களைத் தடுக்கவும், செய்த குற்றங்களுக்குத் தண்டனை வழங்கவும்தான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

மதுவிலக்கைப் பொறுத்தவரையிலே இப்பொழுது எத்தனை குற்றங்கள் அதிகமாக இருக்கின்றன என்று எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டார் 1967-லே ஒரு லட்சத்து 90 ஆயிரத்து சொச்சம் இருந்தது 1968-லே 2 இலட்சத்து 53 ஆயிரத்து சொச்சம் ஆகியிருக்கிறதே என்று கூறிவிட்டு, முன்னுக்குப் பின் முரணாக ஒன்றைச் சொன்னார்கள். இவர்கள் இப்பொழுது மதுவிலக்குக் குற்றவாளிகளைப் பிடிக்கவில்லை, காரணம் அவர்கள் ஏதோ ஒருவகையிலே இந்த ஆட்சியாளர்களுக்குத் தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். எங்களுடைய ஆட்சியில் 2 இலட்சத்து 53 ஆயிரத்து சொச்சம் மதுவிலக்குக் குற்றவாளிகள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய ஆட்சியிலே ஒரு இலட்சத்து 89 ஆயிரத்து சொச்சம் மதுவிலக்குக் குற்றங்கள்தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** குற்றம் செய்தவர்கள், உங்களுடைய ஆட்சியிலே தாராளமாகச் செய்கிறார்கள், எங்களுடைய......

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** எங்களுடைய ஆட்சியிலே குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கிறோம், தொடர்பில்லாத காரணத்தால். உங்களுடைய ஆட்சியிலே அவர்களில் பலர் விடப்பட்டிருக்கிறார்கள், உங்களோடு தொடர்பு கொண்ட காரணத்தால்.

சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளைப்பற்றி அடிக்கடி, காவல் துறை மானியத்திலே மாத்திரமல்ல, எந்த மானியமாக இருந்தாலும், அது கவர்னருடைய உரைமீது விவாதமாக இருந்தாலும், வரவு-செலவு திட்ட விவாதமாக இருந்தாலும், எப்படி அவர்கள் எந்தப் பிரச்னையானாலும் கொள்முதலைக் கொண்டு வருகின்றார்களோ அதைப் போலவே சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளைப் பற்றி எல்லாவற்றிலும் பேசி இருக்கிறார்கள். ஆனால், காவல் துறை மானியத்திலே பேசுவது மிகுந்த பொருத்தம் உடையது என்ற காரணத்தால் தமிழ்நாட்டிலே சட்டம் இல்லை, அமைதி இல்லை, ஒழுங்கு இல்லை என்று நண்பர் மார்டின் அவர்களும், காங்கிரஸ் தரப்பிலே பேசிய உறுப்பினர்களும், இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இதே வகையில் நன்கு வாதாடி இருக்கிறார்கள். சட்டம், அமைதி, ஒழுங்கு இல்லையென்று ஏன் கூறுகிறார்கள் ? ஏன் இப்படிப்பட்ட ஒரு சுலோகத்தை தி.மு.க. அரசு தொடங்கியதிலிருந்து அவர்கள் சொல்லிக்கொண்டு வருகிறார்கள் ? காங்கிரஸ் ஆட்சியின்போது எவ்வளவோ அராஜகங்கள் நடைபெற்றிருக்கின்றன. எத்தனை முதுகுளத்தூர்கள் நடைபெற்றிருக்கின்றன ? அந்த நேரத்திலே கூட, எதிர்க்கட்சிக்காரர்கள் பிரச்சார மேடையில் சட்டம் இல்லை, ஒழுங்கு இல்லை, அமைதி இல்லை என்று பழைய 'வந்தே மாதரம்' போல் ஒரு சுலோகம் வைத்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால், தி. மு. க. அரசு தொடங்கிய காலத்திலிருந்து காங்கிரஸ் நண்பர்கள் மேடைதோறும், இந்த மன்றத்திலே பேசுகின்ற வாய்ப்பு கிடைக்குந்தோறும் இதையே திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றார்கள். இந்திய அரசியல் சட்டப் பிரிவுகள், 352, 356, 360-ன்படி உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்படும்போதும், அரசியல் சட்டம் பாதுகாக்கப்படாமல் சட்டம், ஒழுங்கு கெடும்போதும் ஜனநாயக யந்திரம் செயலற்றுப் போகும் போதும், பொருளாதாரத்தில் குழப்பம் ஏற்படும்போதும் மத்திய அரசு தலையிட்டு ஜனாதிபதி ஆட்சி ஏற்படுத்தலாம் என்றிருக்கிறது. இதை அப்படியே வளர்த்துக்கொண்டு போய் ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வருவதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள் என்றுதான் திட்ட





வட்டமாக நம்புகிறேன். அதைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய பேச்சிலே சொன்னார். ஆறு மாத காலக் கட்டம் தருகிறோம். அதற்குள் திருந்தாவிட்டால் புரட்சி, அந்தப் புரட்சி அடிப்படையிலே சட்டம், அமைதி, ஒழுங்கு என்கின்ற பேச்சு, மத்திய சர்க்காருடைய தலையீடு. எந்தப் புரட்சியாக இருந்தாலும், சர்ச்சில் சொன்னாரே 'London can take it' என்று அதைப் போல் திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. (பலத்த ஆரவாரம்.) ஆனால் நியாயமான காரணங்களுக்காகப் போராடுங்கள். நேர்மையான காரணங்களுக்காகப்போராடுங்கள். அதை விட்டு விட்டு சட்டம் இல்லை, அமைதி இல்லை, ஒழுங்கு இல்லை என்று ஒரு தவறான பிரச்சாரத்தை, ஒரு கற்பனைப் பிரச்சாரத்தை மக்கள் நம்பாத ஒன்றை எடுத்துச் சொல்லி, அதன் காரணமாக நாங்கள் ஒரு புரட்சி ஆரம்பிக்கிறோம் என்று சொன்னால், புரட்சிக்குப் பிறகு என்ன ஆகும் ? இந்த அரசு கவிழும். கவிழட்டும். கவிழ்ந்த பிறகு என்ன ஆயிற்று மேற்கு வங்காளத்தில் ? (ஆரவாரம்) கவிழ்த்தீர்களே கேரளத்தில், கவிழ்ந்தபிறகு என்ன ஆயிற்று கேரளத்தில் ? கவிழ்த்தீர்களே பஞ்சாபில், என்ன ஆயிற்று பஞ்சாபில் ? (ஆரவாரம்) கவிழ்த்தீர்களே, கவிழ்த்துக் கொண்டீர்களே, என்ன ஆயிற்று புதுவை மாநிலத்தில் ? நீங்கள் கவிழ்க்கக் கவிழ்க்க நாங்கள் கட்டுமரம்போல், உருண்டு, திரண்டு கலம்போல் வருகின்ற திராவிட முன்னேற்றக் கழகமும், தோழமைக் கட்சிகளும் ஆட்சி அமைக்கும் என்று துடிப்போடு அல்ல, மிகுந்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். (பலத்த ஆரவாரம்)

சட்டம், அமைதி கெட்டுவிட்டது என்று கூறுகிறீர்களே ? நான் [பிற்பகல் 2-00
பிற மாநிலங்களை ஒப்புநோக்கிக் காட்டினால், அங்கே நடப்பதையெல்லாம் சொல்லவேண்டுமா, முன்பு நடந்ததையெல்லாம் சொல்லவேண்டுமா என்று சொல்வீர்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், எந்த அரசாங்கத்திலும், இப்படிப்பட்ட காரியங்கள் தவிர்க்க முடியாதவைகளாக ஆகிவிடக்கூடும். அப்படி ஆகிவிடுகிற நேரத்தில் மற்ற மாநிலங்களைவிட அதிகமாக நம்முடைய மாநிலத்தில் நடைபெற்று விடவில்லை என்பதை எண்ணிப் பார்ப்பதற்குத்தான் இந்தப் புள்ளி விவரங்களை இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

1968-ல் செப்டம்பர் திங்கள் 19-ம் தேதி டெல்லியில் நடந்தது. மத்திய பொதுப்பணித் துறை அலுவலகங்களும், வேறு சில மத்திய அலுவலகங்களும் உள்ள இந்திரபிரஸ்த பவனுக்குள் போலீசார் நுழைந்து சர்க்கார் ஊழியர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்து துரத்தி அடித்தனர். இரு நபர்கள் உயிரிழந்தனர். சுமார் 300 பேர் காயமடைந்தனர். இந்திரபிரஸ்தஎஸ்டேட்டில் இந்திரபிரஸ்த பவனுக்கும் விகாஸ் பவனுக்கும் இடையேயுள்ள ரஸ்தாவில் ஊழியர்களை ஜனசங்க எம். பி. ஒருவர் சமாதானப்படுத்த முயற்சித்துக்கொண்டிருந்தார். அப்போது பிற்பகல் 2 மணி. போலீஸார் முன்னெச்சரிக்கைத் தராமல் தடியடிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர். இடைவேளையின்போது ஊழியர்கள் சிறு கூட்டமாகக் கூடினர். அவர்களைக் கலைக்கப் போலீசார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வெடித்தனர். ஊழியர் கோஷ்டியினர் மேல் மாடியில் கூடி போலீசார் மீது கற்களையும் பாட்டில்களையும், இதர பொருள்களையும் வீச ஆரம்பித்தனர். இந்திரபிரஸ்த பவனில் பல்வேறு மாடிகளில் சூப்பரின்டெண்டிங் என்ஜினியர் ஒருவர் உட்பட சில சர்க்கார் அதிகாரிகள் போலீசாரால் அடிக்கப்பட்டனர். அதிகாரிகள் வெளியே இழுத்து வரப்பட்டனர். காயமடைந்தவர்களில் அநேகர் உடனடியாகக் கவனிக்கப்படவில்லை. அநேகப் பெண் ஊழியர்களுக்கும் தடியடி கிடைத்தது. முகம் கழுவும் அறைக்குள் ஓடி ஒளிந்த பெண்கள் வெளியே இழுத்து வரப்பட்டனர்....இது நடந்தது மத்திய சர்க்கார் ஊழியர்கள் போராட்டம் நடைபெற்ற நேரத்தில்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்ன நடவடிக்கை எடுத்தார்கள் மத்திய சர்க்கார் தெரியுமா ?

THIRU K. VINAYAKAM : Police officials were suspended and some of them were dismissed also.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைப்போலவே இந்த சர்க்காரும் செய்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வெளி மாநிலங்களைப் பற்றிக் குறிப்பிடுவதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை கிடையாது. அது மாதிரி இங்கும் நடக்கவேண்டும் என்று விரும்புகிறார்களா ? இங்கே ஓரளவுக்கு நடந்திருக்கிறது. மற்ற மாநிலங்களில் நடந்த அளவுக்கு இங்கே நடக்க வேண்டுமென்று காத்துக்கொண்டிருக்கிறார்களா ? அல்லது நடந்தது தவறு, இனிமேல் அப்படி நடக்காமல் திருத்திக்கொள்ளவேண்டும் என்று கருதுகிறார்களா ?....

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் ஒப்பிட்டுக் காட்டியது டெல்லியில் நடைபெற்றதைவிட, குறைந்த அளவுக்குத்தான் இங்கே நடந்திருக்கிறது என்பதை எண்ணிப்பார்ப்பதற்குத் தான். அப்படிப்பட்ட இந்த மாநிலத்தில் நீங்கள் ஆறு மாதம் கெடு கொடுக்கிறீர்கள். அங்கெல்லாம் எத்தனை மாதம் கெடு கொடுப்பீர்களோ ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள் ஆறு மாதம் கெடு எதற்காகக் கொடுத்தோம் ? தவறான பொய் வழக்குகள் பல இடங்களில் போடப்பட்டிருக்கின்றன, அரசியல் நோக்கத்தோடு. அவற்றையெல்லாம் பைசல் செய்து நல்ல முறையில் செயல்படவேண்டும். இல்லையென்றால் அதற்காக நாங்கள் போராடுவோம் என்றுதான கூறினேன். முதல் அமைச்சர் அவர்கள், அதற்குள்ளே 'இது ஒரு அரசியல் பிரசாரம், ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வருவதற்குத் தான் இப்படியெல்லாம் செய்கிறார்கள்' என்றெல்லாம் கற்பனை உலகத்தில் சென்றுகொண்டிருக்கிறார்கள். அப்படியெல்லாம் சொல்லவேண்டுமென்றால் நான் தைரியமாகச் சொல்வேன். மறைத்துப் பூசிப் பேசவேண்டிய தேவையில்லை. இது மாதிரி சரியாக நடக்கவேண்டும். அதற்கு ஒரு சந்தர்ப்பத்தை நாங்கள் கொடுக்கிறோம், நாங்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கிறோம் என்று தான் சொன்னேன். அதைத் தவறான முறையில் எடுத்துக்கொள்ள வேண்டாம். இது மாதிரி இதையெல்லாம் பைசல் செய்தால் தமிழ் நாட்டில் சட்டம், அமைதி பாதுகாக்க உதவியாக இருக்கும் என்று தான் சொன்னேன் எனது மனதிற்குத் தெரியும். அப்படியில்லையென்றால், எங்கள் ஊழியர்களுக்குக்கஷ்டம் என்றால், நாங்கள் போராட்டம் ஆரம்பிக்கவேண்டியிருக்கும் என்றுதான் சொன்னேன். அப்படி நிலைமை ஏற்படாமல் இருக்கும், அதற்கு வேண்டியதைச் செய்வார்கள் என்று நம்புகிறேன் என்ற வார்த்தைகளையும் நான் சொன்னேன். அதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாங்கள் செய்கின்ற நல்ல காரியங்களை 'அல்ல' என்று கூறி, 'நாங்கள் அதற்கு ஒரு போராட்டம் ஆரம்பிப்போம்' என்று சொன்னால், அப்பொழுது அந்த நேரத்தில் நாங்கள் அதற்குப் பதில் சொன்னால், இது கற்பனை என்று அப்படியே விட்டுவிடுவார்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** போராட்டம் என்றால், பொது மக்கள் ஆதரவு வேண்டும். போராட்டம் என்றால் விளையாட்டு இல்லை. மக்கள் ஆதரவு இருக்கவேண்டும். மக்கள் உணர்வு இருக்கவேண்டும்...

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுதாவது அதைப் புரிந்து கொண்டீர்களே ? புரிந்துகொண்டதற்கு நன்றி. மேற்கு வங்கத்தில் 10 மாதங்களில் 315 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்துள்ளன. இதன் காரணமாக 115 பேர் இறந்துள்ளார்கள். (குறுக்கீடு) அவசரப்படாதீர்கள்.





அதற்காகத்தான் நான் இப்படிச் சொன்னேன். குடியரசுத் தலைவரின் ஆட்சி நடைபெற்ற நேரத்தில். நான் உங்களைப் புரிந்துகொண்டு தான் அப்படிச் சொன்னேன். நீங்கள் உடனே கூட்டணி என்று கூச்சலிடுவீர்கள், மறுபடியும் உங்களை மடக்கலாம் என்று தான் அப்படிச் சொன்னேன். அதில் வெற்றியும் பெற்றுவிட்டேன்.

பீகாரில் 54 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்துள்ளன. அதில் 41 பேர் இறந்துள்ளனர். உத்திரப்பிரதேசத்தில் 52 தடவை துப்பாக்கிப் பிரயோகம் நடந்துள்ளது. இதில் 47 பேர் இறந்துள்ளனர். பஞ்சாபில் 8 முறை துப்பாக்கிப் பிரயோகம் நடந்துள்ளது. இதில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

சட்டம், அமைதி கெட்டுவிடுகிறது என்கின்ற காரணத்தை அடிக்கடி சொல்லி இங்கிருக்கிற தி. மு. க. அரசின் மீது மாசுமருவினை ஏற்படுத்தலாம், அல்லது ஒரு போராட்டத்தைத் தொடங்கலாம் என்கின்ற எண்ணம் எவ்வளவு தவறானது என்பதைச் சுட்டிக் காட்டத் தான் நான் இவைகளையெல்லாம் எடுத்துச் சொன்னேனே அல்லாமல், ஏதோ எதிர்கட்சித்தலைவர் சொல்லியிருக்கிறார், நான பதிலுக்கு இதை எடுததுக்கொண்டு ஆணவத்தோடு சொல்கிறேன் என்பது அல்ல. அவர்கள் இப்படி ஒரு போராட்டம் நடத்தினால் பொது மக்கள் ஆதரவு கிடைக்குமா என்று அவர்களுக்கே சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. அப்படி அவர்கள் ஒரு போராட்டத்தைத் தொடங்கினால் தி. மு. க. சர்க்கார் என்ன, காவல்துறை என்ன சும்மா இருக்குமா? ஏன், அவரே சொல்லியிருக்கிறார். தி. மு. க. சர்க்கார் போலீஸை முடக்கிப்போடக்கூடாது, உத்தரவிடக்கூடாது என்று சொல்லியிருக்கிறார், அப்பொழுது காவல்துறையினர் கை என்ன செய்யும்? பூவையா பறித்துக்கொண்டிருக்கும்? 'நீங்கள் போலீஸ் நடவடிக்கையைத் தடுக்கக்கூடாது. நீங்கள் எந்தவிதமான அறிவுரையும் அவர்களுக்கு வழங்கக்கூடாது' என்று குறிப்பிட்டுவிட்டு நீங்களே 'ஒரு போராட்டத்தைத் தொடங்குவோம்' என்று சொல்லி அதற்கு ஆறு மாத தவணை வைக்கிறீர்கள். இது இரண்டாவது ஆறு மாத தவணை, முதலில் நாங்கள் ஆட்சிக்கு வந்தபொழுது ஒரு முறை தவணை வைத்தீர்கள். இங்கே ஆறு மாத தவணை கொடுக்கிறீர்கள். காங்கிரஸ் கட்சி பெரிய தலைவர்கள் 6, 7 நாள் என்று சொல்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எதற்கு முதலில் ஆறு மாதம் என்று சொன்னார்கள்? ஆறு மாதத்திற்கு தி. மு. க. ஆட்சியைப்பற்றி ஒன்றும் பேசக்கூடாது என்றுதான் தவணை வைத்தோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சாட்டையால் அடிப்போம் என்று சொன்னார்கள், அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை கடலூரில் வீதி வீதியாக இழுத்து, சாட்டையால் அடித்திருக்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். இவைகளெல்லாம் தமிழ் நாட்டுப் பண்பாட்டிற்கு ஏற்றவைகள், அரசியல் நாகரிகத்திற்கு உட்பட்டவைகள் என்பதாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருதுகிறார்களா என்பது எனக்குப் புரியவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்பொழுது ஆட்சியில் இருக்கும் பொறுப்பான அமைச்சர்கள் 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் படி அரிசி போடுவோம். படி அரிசி போடவில்லை என்றால், முச்சந்தியில் வைத்து எங்களை சாட்டையால் அடியுங்கள்' என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னதைத் தான் அவர்கள் செய்தார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்படி சொன்னதைச் செய்தார்கள் என்று சொன்னால் அதை ஆதரித்தார்கள் என்றுதான் அர்த்தம். முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் தலைவர், 'ஆளுக்கு ஒரு வீடு தருவோம்' என்று சொன்னார். தமிழ் நாட்டில் காங்கிரஸ் வெற்றி பெறாவிட்டாலும், அகில இந்திய ரீதியில் பல மாநிலங்களில் வெற்றி பெற்று

வந்திருக்கிறது. ஆளுக்கு ஒரு வீடு அவர்களால் தரமுடியவில்லை என்பதற்காக காமராஜ் அவர்களின் சிலையை ஆந்திராவில், மைசூரில் செய்து வைத்து "நீங்கள் என்ன செய்தீர்கள், ஆளுக்கு ஒரு வீடு கட்டிக் கொடுக்க முடியவில்லையே ?" என்று எங்கள் அண்ணாவின் சிலைக்கு நடந்ததுபோல செய்யலாமா என்றால், எதிர்க்கட்சியினர் அப்படிச் செய்ய மாட்டோம். எதிர்க் கட்சியினருக்கு அந்த அளவுக்கு பண்பாடு குறைந்த மனம் கிடையாது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கடலூரில் நடந்ததற்கு வருத்தம் கூறவில்லை. 'நீங்கள் சொன்னீர்கள், ஆகவே, அப்படிச் செய்தார்கள் என்று கருதுகிறேன்' என்று கூறினால், எங்களுக்கு இருக்கிற சங்கடம், இப்படி நடைபெறுகின்ற காரியங்களையெல்லாம் எங்களிடத்தில் பேசுகின்ற நேரத்தில், அல்லது இந்த மன்றத்தில் பேசுகின்ற நேரத்தில் ஏதோ கண்டிப்பதுபோல கண்டித்துவிட்டு, பிறகு அப்படிச் செய்கிறவர்களை மேலும் மேலும் ஊக்குவிக்கிற நிலையில்தான் இருக்கிறார்கள் என்று நாங்கள் கருத வேண்டியிருக்கிறது.

பத்திரிகைகளின் தரம் பற்றி பேசப்பட்டது. கவர்ச்சிப்படம் போடும் பத்திரிகை என்றெல்லாம் பேசினார்கள். காவல் துறை மானியத்தில் பாதிப் பகுதியை பத்திரிகைத் துறை மானியமாக நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மாற்றிவிட்டார்கள். நான் சொல்கிறேன், இப்பொழுதுகூட உறுதி அளிக்கிறேன். அவர்கள் பேசிய பேச்சு மூலம், கவர்ச்சிப் படம் போடும பத்திரிகை என்று அவர்களால் சுருதப்படுகிற பத்திரிகைகள் கூட அதைத் திருத்திக் கொள்ளக்கூடும். அப்படிப்பட்ட பத்திரிகை தி.மு.க. பேச்சைக் கேட்கிற பத்திரிகை என்று எதிர்க்கட்சித் தலைவர் ஒப்புக்கொண்டால் நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். அந்தப் பத்திரிகை நிச்சயம் திருத்திக் கொள்ளக்கூடும். அதற்கு நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் கட்சி ஆதரவிலே உள்ள பத்திரிகையிலிருந்து சில வாசகங்களை இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். அப்படி இனி அந்தப் பத்திரிகையில் வராது என்று கூறி பொறுப்பேற்றுக்கொண்டு, அதைச் செயல்படுத்திக்காட்ட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தயாராக இருக்கிறார்களா ? முடியாது அவரால், அதுதான் அவர் எழவில்லை.

ஒரு பத்திரிகையில் வருகிறது. காவல் துறை பற்றி வந்திருக்கிறது.

"மதுரையிலே நாலைந்து வாய்தாக்களுக்கு நெடுமாறனைக் கைது செய்யப் பயந்து அவமானமுற்ற போலீஸ் நாய்கள் ஒரு காரணமுமில்லாமலே நமது தோழர்களைத் தாக்கி இருக்கின்றன.

—— கடிதம் 6—3—69"

"போலீஸ் இலாகாவிலுள்ள பேதைகளுக்கு என்னுடைய கடைசி எச்சரிக்கை ஒன்று. இன்றைய ஆட்சி தன் மரணப் படுகுழியை வேகமாகத் தோண்டிக் கொண்டிருக்கிறது. இதை நம்பி சட்டத்திற்குப் புறம்பான காரியங்களில் போலீஸ் ஈடுபடுமானால் அதன் அழிவு வெகு தூரத்தில் இல்லை.

——கடிதம் 6—3—69"

1967—ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு வருவதற்கு முன்பு தேர்தல் பிரசாரத்தின்போது, மைலாப்பூரில் திரு. அரங்கண்ணலை ஆதரித்துப்பேசிய கூட்டத்தில், காவல் துறையினர் வெகு பாரபட்சமாக நடத்துகிறார்கள். ஆட்சியாளர்களின் பக்கம் சேர்ந்து கொண்டு அடக்குமுறைக்கு ஆளாக்குகிறார்கள் என்று நாங்கள் உணர்ந்து, அன்றைக்கு நான் சொன்னேன், 'ஒரே ஆட்சி என்பது நிச்சயமில்லை ; ஆட்சி மாறி மாறி வரும் ; கட்சிகள் மாறி மாறி ஆட்சிக்கு வரும் ; ஆறு நாள் தான், அரசு மாறக் கூடும், எங்களை அடக்குமுறைக்கு ஆளாக்காதீர்கள் என்று. அதே இடத்தில் மறுநாள் பக்தவத்சலம் பேசியிருந்தார்கள், எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருந்தது. "கருணாநிதி ஆட்சி மாறும் என்ற ஒரே வார்த்தைக்கு எச்சரிக்கிறேன், சட்டப்படி வழக்குத் தொடரப்படும்" என்று பக்தவத்சலம் குறிப்பிட்டிருந்தார்கள்.





ளன் நல்ல காலமோ என்னமோ, ஆறு நாளைக்குப் பிறகு அவர் ஆட்சிக்கு வரவேயில்லை ; வந்திருந்தால் ஒருகால் பாளையங்கோட்டைக்குப் பதில் ஒரு பாலைவனக் கோட்டையைத் தேர்ந்தெடுத்திருக்கக் கூடும். இவை எந்த அளவிற்குத் தரக் குறைவான வார்த்தைகள் ? பத்திரிகையில் போட்டிருக்கிறது. "இதை நம்பி சட்டத்திற்குப் புறம்பான காரியங்களில் போலீஸ் ஈடுபடுமேயானால் அதன் அழிவு வெகு தூரத்தில் இல்லை" என்று. இது காங்கிரஸ் பத்திரிகையில் வந்திருக்கிறது. இன்னும்,

"72-க்குப் பிறகும் உத்தியோகம் பார்க்க விரும்புகிற போலீஸ்காரன் இப்போதே ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும்."

——கடிதம் 6—3—69

அதே பத்திரிகையில் இன்னும்,

"அதோடு நமது எம். எல். ஏக்களுக்கு ஒரு வார்த்தை."

"மதுரையில் போலீஸ் நடத்திய பொறுக்கித்தனத்துக்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும்."

——கடிதம் 6—3—69

"நெடுமாறனை கைது செய்ய போலீஸ் நாய்கள் மோப்பம் பிடித்து அலைகின்றன."

"வாரியார் தாக்கப்பட்டபோது நெய்வேலி போலீஸ் இலாகாவிலிருந்த பெண்கள் கையைக் கட்டிக் கொண்டிருந்திருக்கின்றனர்."

—கடிதம்.

பெண்கள் போலீஸ்காரர்களே கிடையாது. இந்த வார்த்தைகளால், போலீஸ்காரர்களுடைய அனுதாபத்தை இழப்பதோடு மட்டுமல்லாமல், பெண்களையும் அவமானப்படுத்தி, அவர்களுடைய ஓட்டுக்களையும் இழக்கிறார்கள். மேலும்,

"போலீஸாரின் திமிர்வாதப் போக்கினை—அராஜக வெறித்தனத்தை எதிர்த்து, பிப்ரவரி 2-ந்தேதியன்று மதுரை மாநகரில் பிரம்மாண்டமான கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெறும்."

"தக்கலை இன்ஸ்பெக்டர் ரூ. 10-க்கு விலை போனார்."

"இரண்டாண்டு கால தி.மு.க. ஆட்சியில் போலீஸ்காரர்கள் என் போர் கழகவெறியர்களாகவும், கடைந்தெடுத்த காலிகளாகவுமே பெருமளவு மாற்றப்பட்டுள்ளனர் அல்லது மாற்றம் பெற்றுள்ளனர் என்ற உண்மையே நாளும் உறுதியாகி வருகிறது."

"மதுரை போலீஸ் ரௌடிகள் பிரம்பால்தானே அடித்தனர் என்று பெரிய மந்திரி, கருணாநிதி கூறுகிறார்."

திரு. பி. ஜி. கருத்திருமன் : தயவு செய்து சொல்ல வேண்டும், காங்கிரஸ் பத்திரிகை என்பதற்கு என்ன ஆதாரம் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாள் பத்திரிகை "கடிதம்" "நாத்திகம்" காங்கிரஸ் பத்திரிகைகள் இல்லையா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : காங்கிரஸ் கட்சிப் பத்திரிகை என்று ஏற்றுக் கொள்ள முடியாது. அது எங்கள் கட்சிப் பத்திரிகை இல்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தப் பத்திரிகைக்காரர்கள் காங்கிரஸ்காரர்களா, இல்லையா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : காங்கிரஸ்காரர் நடத்துவதால் அது காங்கிரஸ் பத்திரிகை என்று சொல்லிவிட முடியாது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : அவர்கள் அதை ஒத்துக் கொண்ட வரையில் நன்றி. நாளைக்குக் கொடுப்பார்கள்; அந்தப் பத்திரிகைகளில் கருத்திருமனைப் பற்றி வரும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : அது மலிவான பிரசாரத்திற்கு வேண்டுமானால் உதவும். அந்தப் பத்திரிகைகள் காங்கிரஸ் பத்திரிகை இல்லை. கவர்ச்சிப் படம் வந்தது யார் பத்திரிகை ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இப்படிப்பட்ட பதிலை வைத்துக் கொண்டிருக்கும்போது, அந்தப் பத்திரிகையைப்பற்றிப் பேசியிருக்கக்கூடாது.

மதுவிலக்கைப் பற்றி அதிகமாகப் பேசப்பட்டது. ஒரு ஆண்டு காலத்திற்கு இருக்கட்டும், அடுத்த ஆண்டு அதை ரத்து செய்யலாம் என்று உறுப்பினர் திரு. இளம்வழுதி குறிப்பிட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் வலியுறுத்தப்பட்டது. முதல் அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டவுடன், அறிஞர் அண்ணா, மதுவிலக்கை தீவிரமாக அமுல் படுத்துவோம் என்று சொன்னார்கள். அதற்கு ஏற்றவாறு எல்லா நடவடிக்கைகளும் தமிழக அரசு எடுத்துவருகிறது ; குறைபாடுகள் இங்கொன்றுமங்கொன்றும் இருக்கலாம் ; குறைபாடுகள் இருப்பதால் சிலபேர் மதுவிலக்குச் சட்டத்தை மீறி நடக்கிறார்கள் என்பதால், அந்தக் கொள்கையைக்கைவிட வேண்டுமா என்பது கேள்விக்குரிய விஷயமாகும். அதே நேரத்தில், மத்திய சர்க்கார் இப்படி மதுவிலக்கு சட்டத்தைப் போற்றி, பேணி தீவிரமாக அமுல் நடத்துகின்ற மாநிலங்களுக்கு எந்த விதமான உற்சாகமும் கொடுக்கிறதா என்றால், இல்லை. திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் புதிதாக எந்த மாநிலமாவது மதுவிலக்கு அமுல்படுத்துமேயானால், அந்த மாநிலத்திற்கு மானியம் வழங்கப்படும் என்று சொல்லுகிறார்கள். அதற்காகவாவது, கெட்டிக்காரத்தனமாக ஒரு மூன்று மாதத்திற்கு மதுவிலக்கை ரத்து செய்துவிட்டு, புதிதாக ஆரம்பித்து மானியத்தை கொடுங்கள் என்று கேட்க வேண்டுமா என்பது எனக்குப் புரியவில்லை. இந்த அரசு பொறுப்பை ஏற்றுக் கொண்டபிறகு. அண்ணாவுக்குப் பிறகு, சுசீலா நய்யார் அவர்கள் மதுவிலக்குப் பிரசாரத்திற்குத் தலைவர் என்ற வகையில் அந்த அம்மையார் எனக்கு ஒரு கடிதம் எழுதியபோது, அண்ணா அவர்கள் எவ்வளவு தீவிரமாக செய்தார்களோ அதே தீவிரமாக மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். நான் இந்த மன்றத்தின் முன்னவன் என்ற முறையில், இந்த மன்றத்தின் மூலம் அவர்களைக் கேட்டுக்கொள்வேன், மத்திய சர்க்கார் இது போன்ற மாநிலங்கள் மதுவிலக்கு அமுல்படுத்தும்போது, நல்ல மானியங்களை வழங்க வேண்டும் என்று சுசீலா நய்யார் போன்றவர்கள் மத்திய சர்க்காரோடு போராட வேண்டும் என்று. (குறுக்கீடு) புதுச்சேரியில் உங்கள் சர்க்கார் வந்துவிட்டது, செய்யுங்கள் என்கிறார்கள். இதுவரையில் உங்கள் சர்க்கார்தானே இருந்தது, என்ன செய்தீர்கள் ? காமராஜர் கடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், என்ன சொன்னார்கள் ? புதுச்சேரியின் வருமான நிலையில் மதுவிலக்கு அமுல்படுத்துவதற்கு இல்லை என்றார்கள். புதுவையின் வருமானம் ரூ. 3 கோடி, டெல்லி கொடுக்கும் பணத்தையும் சேர்த்து. புதுவை மாநிலத்தின் வருமானம் ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவு. அதில் ரூ. 75 லட்சம் இந்தக் கலால் வரியின் மூலம்தான் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இதுவரையில் மதுவிலக்கு திட்டத்தைப் பற்றிப் பேசாத எதிர்க்கட்சித் தலைவர் இப்பொழுது ஏன் பேசுகிறார்கள் ? மதுவை எடுத்துவிட்டு, அந்த வருமானத்திற்கும் திண்டாடி திருவோடு ஏந்துங்கள் என்று புதுவை திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு அறிவுரை கூறுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

மதுவிலக்கு அரசியல் சட்டத்திலேயே சேர்க்கப்பட்டுள்ள ஒன்று. எல்லா மாநிலங்களிலும் மதுவிலக்கு அமல் படுத்தப்படவேண்டும், என்று சொல்லப்பட்டிருக்கிறது. [illegible] ஒரு கொள்கை, மகாத்மா





காந்தியின் திட்டம், இந்தியா முழுவதும் பரவிடவேண்டும் என்ற கருத்து, அப்படிப்பட்ட கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கருதுவார்களேயானால், மதுவிலக்கை அமல்படுத்த, தமிழ்நாடு போன்று அமல் நடத்தும் அந்த மாநிலங்களையும், மற்ற மாநிலங்களையும் ஒன்றாக வைத்துப் பார்க்கக்கூடாது. அப்படிப் பார்த்துக் கொண்டு இந்த மானியம் வழங்கமாட்டேன், கடன் கேட்டுக் கொண்டே இருங்கள், பிச்சை எடுத்துக் கொண்டே இருங்கள் என்று சொன்னால், மதுவிலக்கை நீக்கலாமா என்ற கேள்வி எழுவது ஆச்சரியம் இல்லை. அந்தக் கேள்விக்கு பதில், பரிசீலனையின் மேல், மாற்ற வேண்டுமா என்ற நிலை வந்தால் வியப்புக்குரியது அல்ல. நம் மாநிலம் தன் வருமானத்தைக் குறித்து, நிதி நிலையைக் குறித்து. எவ்வளவு வருமானத்தைக் கொடுக்கிறது என்று இந்தக் கலால் வரியை எண்ணிப்பார்த்து யோசிக்கத் தலைப்பட்டால் ஆச்சரியம் இல்லை. அன்றைய நிலையில், அது ரூ. 17 கோடியாக இருந்தது. இன்று ரூ. 40 கோடி அளவிற்கு, அந்தத் திட்டம் ரத்துச் செய்யப்படுமேயானால், தமிழக அரசுக்கு வரும். ஆனால் அந்த 40 கோடி ரூபாய் வருகிற நேரத்தில் எவ்வளவோ திட்டங்களை நாம் தமிழகத்தில் நிறைவேற்ற முடியும். இல்லையென்று சொல்லவில்லை. மகாத்மா காந்தி அவர்களின் கொள்கை என்ன ஆவது என்பதுதான் விஞக்குறியாக இருக்கிறது ? சமூகம் கெட்டுவிடுமே என்ற அங்கலாய்ப்பு தான் எங்களுக்கு இருக்கிறது. டெல்லியிலே இருக்கிறவர்கள், குறிப்பாக திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் இதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். மதுவிலக்குக் கொள்கையை அமல் நடத்துவதால் மாநிலத்திற்கு 40 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறதே, நாம் ஒரு 20 கோடி ரூபாய் கொடுத்து உதவலாம் என்ற அளவுக்காவது நல்லெண்ணம் இருந்தால் எவ்வளவோ வரவேற்கலாம். மதுவிலக்குக் கொள்கையை உற்சாகமாகக் கடைப்பிடிக்கலாம். மத்திய அரசு நல்ல முறையில் சிந்தித்து இதில் நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீசார்கள் எந்த அளவுக்குத் தங்கள் கடமைகளை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசிய நண்பர்களும், சுதந்திரா கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் கூடப் பாராட்டிப் பேசினார்கள். போலீசார்கள், உலகத் தமிழர் மாநாடு நடைபெற்றபோதும், குடந்தை மகாமகத்தின்போதும், இறுதியாக பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்ததையொட்டி, 30 லட்சம், 40 லட்சம் அளவுக்கு மேற்பட்ட மக்கள் சென்னை நகரில் கூடிய நேரத்தின் போதும் எந்த அளவுக்குக் கட்டுக்கோப்பாகத் தங்களுடைய கடமைகளை ஆற்றினார்கள் என்பதும், பாராட்டப்பட வேண்டிய விஷயங்கள். மத்திய உள்துறை அமைச்சர் திரு சவான் அவர்களே இந்தப் போலீஸ் துறையைப் பாராட்டினார்கள் என்பதும், ஆளுநர் அவர்களின் பாராட்டும் இந்தத் துறைக்குக் கிடைத்திருக்கிறது என்பதும், இந்தியப் பிரதமர் இந்திரா அம்மையார் அவர்கள் கலந்து கொண்ட அஞ்சலிக் கூட்டத்தில் போலீசார்கள் எந்த அளவிற்குப் பணியாற்றியிருக்கிறார்கள் என்பது குறித்து திருமதி இந்திரா காந்தி அம்மையார் அளித்த பாராட்டுதல்களும் போலீஸ் துறைக்குக் கிடைத்திருக்கின்றன என்பதை இந்த மன்றத்திலே உள்ள அனைவரோடு சேர்ந்து நானும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, துப்பாக்கிப் பிரயோகங்கள் நடத்துவதைப்பற்றிப் பேசப்பட்டது. துப்பாக்கிப் பிரயோகத்தைப் பொறுத்தவரையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் குடிகாரர்களைப் பிடிக்கப் போனபோதும், கள்வர்களைக் கைது செய்யப்போனபோதும் நெருக்கடி நிலைமையின் காரணமாக ஏற்பட்டவை. இரண்டொன்றுதான் விவசாயிகளின் கிளர்ச்சியின்போது ஏற்பட்ட தொல்லைகளினால் உண்டானவை. நான் இதைப்பற்றி அதிகம் பேச விரும்பவில்லை. துப்பாக்கிப் பிரயோகத்தைப் பொறுத்தவரையில் 'ஷூட் டு கில்' என்ற கொள்கைதான் கடைப்பிடிக்கப்படுகிறது. சுடுவதற்கு முன் கண்ணீர்ப் புகை, தடியடிப் பிரயோகம் முதலியவைகளையெல்லாம் பயன்படுத்திய பிறகுதான் இது கையாளப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தை, கலவரத்தை அடக்க முடியவில்லையென்றால், எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்ட பின்னர்தான் கடைசிக் கட்டமாக நடத்தப்பட வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசைப் பொறுத்தவரையில் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். 'ஷூட் டு கில்' 'கொல்வதற்குச் சுடு' என்பதை மாற்றி, 'திறமையற்றவராக ஆக்குவதற்குச் சுடு' என்பதையும் கடைசி முயற்சியாகத்தான் கொள்ளவேண்டும். அப்படிச் சுடும்போது, உயிரிழப்பு ஏற்படுமானால் போலீஸ் அதற்குப் பொறுப்பு அல்ல. இப்படிப்பட்ட நேரத்தில் சிலர் உயிர் இழந்தால் அதற்குப் போலீஸ் பொறுப்பாளி அல்ல.

அடுத்து, இன்னும் போலீஸ் துறையில் இருக்கிற காவலர்கள் அநேக கஷ்ட நஷ்டங்களுக்காளாகிறார்கள், விபத்துகளுக்காளாகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் அரசு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்யும் என்று கூறிக்கொள்வதோடு, அவர்களுடைய கோரிக்கைகளை தன் நிதி நிலைக்கேற்றவாறு படிப்படியாக நிறைவேற்றித் தருவதும் அரசின் கடமையாகும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். போலீஸின் க்ஷேமநல நிதிக்காக ஆண்டுதோறும அரசு ஈட்டு மானியமாக 50 ஆயிரம் ரூபாய் கொடுத்து வந்தது. அதிகாரிகள் நன்கொடை மூலமாக 50 ஆயிரம் ரூபாய் சேர்க்கிறார்கள். அரசு கொடுக்கும் ஈட்டுமானியம் போதவில்லையென்று கூறியதன் காரணமாக, அரசு கொடுக்கும் ஈட்டுமானியத் தொகை 50 ஆயிரத்தை ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தித் தருவது என்று அரசு முடிவு எடுத்திருப்பதை எல்லா அங்கத்தினர்களும் வரவேற்பார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸார்களின் இல்லங்களில் பத்து யூனிட்டுகள் மட்டுமே மின்சாரம் பயன்படுத்தலாம் என்ற நிலை இருந்து வந்தது. இதனால் இரவு எட்டு மணிக்கே விளக்கை அணைத்துவிடும் நிலைமை இருந்தது. இந்த நிலைமை குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு ஏற்றதல்ல. (சிரிப்பு) ஆகவே, தற்போது 10 யூனிட்டுகள் வரை மின்சாரத்தைப் பயன்படுத்தலாம் என்ற நிலையை, இரவு எட்டு மணி வரைக்கும் விளக்கு எரிக்கலாம் என்ற நிலையை மாற்றி, 20 யூனிட்டுகள் வரை மின்சாரத்தைப் பயன்படுத்தலாம் என்று இந்த அரசு வசதி செய்து கொடுத்திருக்கிறது. இதன் காரணமாக, இந்த அரசுக்குக் கிட்டத்தட்ட 8 லட்சம் ரூபாய் செலவாகும். நிதியமைச்சர் அவர்களோடு கலந்து கொண்டு இதைக் கொடுத்துவிடலாம் என்று இருக்கிறோம். (திரு பி. ஜி. கருத்திருமன் : நாங்களும் கொடுத்துவிடுகிறோம்).

அடுத்தபடியாக, இண்டியன் போலீஸ் மெடல், பிரசிடெண்ட்ஸ் போலீஸ் அவார்டு என்ற இரண்டு மெடல்கள் சுதந்திர தினத்தன்றும், குடியரசு தினத்தன்றும் மத்திய அரசால் கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும், பதினைந்து ஆண்டுக்காலம் அல்லது சில குறிப்பிட்ட ஆண்டுக் காலம் பணிபுரிந்தவர்களுக்கும், அவர்கள் புரிந்த தீரச்செயல்களுக்குச் சான்றாகவும், கடமையில் வழுவாமல் இருந்த காரணங்களுக்காகவும் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் சுமார் 50 பேர்களை சிபாரிசு செய்து மத்திய அரசுக்கு ஒரு பட்டியலை அனுப்புகிறோம். அப்படிப்பட்ட பட்டியலில் அவர்கள் ஐந்தாறு பேர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இண்டியன் போலீஸ் மெடல், பிரசிடெண்ட்ஸ் போலீஸ் அவார்டு என்று பதக்கங்களை குடியரசுத் தலைவர் வழங்குகிறார்கள். இப்போதும் அந்த முறை நீடிக்கப்படலாம். மாநில அரசின் அளவில், திறமையாகப் பணியாற்றும் அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் அவர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் சிறுசிறு தவறுகளைச் செய்திருந்தால்கூட இத்தகைய புகழைப் பெறலாம் என்ற அளவில் போலீஸ் துறையினரை ஊக்குவிக்கும் தன்மையில் மாநில மட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இத்தனை பதக்கங்கள் என்று குறிப்பிட்டு, அதனை, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான ஒவ்வொரு செப்டம்பர் 15-ம் தேதியன்று வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், அதற்கு 'முதலமைச்சர் பதக்கம்' என்று பெயர் வழங்கலாம் என்பதையும் இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்து, போலீஸ்காரர்களுக்கு இந்த ஆண்டு வீட்டு வசதிக்காக 15 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரிடம் கேட்டிருக்கும் கடன் தொகை வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, 15 லட்சம் ரூபாய் செலவில் போலீஸ்காரர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைக் கூறி, நல்ல பல கருத்துக்களைக் கூறியதற்காக எல்லா நண்பர்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு, இந்த மானியத்தின்மீது தரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளையெல்லாம் உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோளை விடுத்து, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிதிக் கோரிக்கையின்மீது விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வெட்டுத்தீர்மானங்கள் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு கே. என். குமாரசாமி :** திரு. ஆ. கு. சுப்பையா ஆகியோர் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால், அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

**திரு டி. மார்டின் :** நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் சட்டம், அமைதி காக்கப்படும் என்ற உறுதியைக் கொடுக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். பிற்பகல் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வாக்கெடுப்பின்போது அதைப்பற்றி கேட்கக்கூடாது.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** வாக்குறுதி கொடுத்தால் வெட்டுத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** சட்டம், அமைதி, ஒழுங்கு இப்போது காக்கப்படுவது போலவே எப்போதும் காக்கப்படும்.

கோரிக்கை எண் 12-க்கு திரு டி. மார்டின் அவர்கள் கொடுத்த வெட்டுத்தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

கோரிக்கை எண் 12-க்கு திரு எ. பாலசுப்பிரமணியன், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர் கொடுத்துள்ள வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"கோரிக்கை எண். 12—காவல்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,92,25,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

*நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று பிற்பகல் 2
இந்த அளவுக்கு முடிவுற்று 17—3—69 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.*

(8) பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. *Statutory Rules and Orders.*

@ 89. Notification issued with G.O. Ms. No. 2506, Home, dated the 2nd September 1968, in regard to exemption from payment of tax leviable, in respect of the car bearing registration number MSQ 3611 belonging to Dr. Gerald Kester, United States Agency for International Development Mission for India. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

@ 90. Notification issued with G.O. Ms. No. 2483, Home, dated the 30th August 1968, in regard to exemption from payment of tax leviable, in respect of the vehicles belonging to the Project Manager, United Nations Development Programme, Mineral Project, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

@ 91. Notification issued with G.O. Ms. No. 2401, Home, dated the 20th August 1968, in regard to exemption from payment of tax leviable in respect of the trailer bearing registration number MDB 5816 belonging to the Team Leader Agricultural Production Promotion Programme, University of Tennessee, care of the Agricultural College and Research Institute, Coimbatore. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

B. *Reports, Notifications and other papers.*

† 83. Policy note on Demands under Revenue (English and Tamil).

† 84. Housing in Tamil Nadu 1968-69 (English and Tamil).

@ 85. Fifth Report of the Committee on Rules, 1969.

---

@ Laid on the Table of the House on 14th March 1969.

† Despatched to Members on 13th March 1969.



## இணைப்பு 1.

(5-ம் பக்கத்தில் 350-ம் எண்ணுள்ள வினாவிற்குறிய விடையைக் காண்க.)

**சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி நிர்வாகத் திட்டங்களின் வருங்காலச் செயல்முறையும் அமைப்பும்.**

1966 அக்டோபரில் நடைபெற்ற சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி நிர்வாக மாநில அமைச்சர்கள் மாநாடு பரிந்துரைத்த சமுதாய நலவளர்ச்சி குறித்த வரைவுக் கொள்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமுதாய நலவளர்ச்சி, ஊராட்சி நிர்வாகம் குறித்த கொள்கையில் அணுகு முறைகளை பொதுவாக ஒப்புக்கொள்கையில், 1968 ஜூன் 11-ம் நாளன்று சென்னையில் நடைபெற்ற முதலமைச்சர்கள், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி ஆகியவற்றின் பொறுப்பில் உள்ள "மாநில அமைச்சர்கள் மாநாடு வேளாண்மை உற்பத்தி உட்பட ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சிக்காக கீழ்க்கண்டவாறு தீர்மானித்தது :—

(1) சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி நிர்வாகத் திட்டங்கள் தொடர்ந்து செயல்படவும், வலுப்படுத்தவும் வேண்டும்.

(2) இன்னும் முதல் நிலையிலும், இரண்டாம் நிலையிலுமுள்ள வளர்ச்சி வட்டாரங்களுக்கு, அவற்றுக்குரிமையுள்ள நிதியுதவி தொடர்ந்து கிடைக்கும். ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு வளர்ச்சி வட்டாரங்களை மாற்றுவதற்கு ஐந்தாண்டுகள் என்று கால வரையறையை வரையறுத்துள்ள தற்போதுள்ள நடைமுறை விதி மன நிறைவு அளிப்பதாயில்லை. ஆய்வுக்குழு ஒன்று இது பற்றி முழுமையும் ஆராய்ந்து வளர்ச்சி வட்டாரம் ஒன்றின் குறிப்பிட்ட செயல் நிலையை முடிவு செய்வதற்கு மிகப் பொருத்தமான வழி முறைகளை வகுக்க வேண்டும். ஆனால், இரண்டாம் நிலைக்குப் பிந்திய வளர்ச்சி வட்டாரங்களுக்கும், மத்திய அரசும், மாநில அரசாங்கங்களும் சமமாகப் பங்கிட்டுக்கொள்ளும் அடிப்படையில் இரண்டாம் நிலையிலுள்ளவாறு அதே மாதிரியில் நிதி உதவி தொடர்ந்து அளிக்கப்பட வேண்டும். மாநிலத் திட்ட உயர் வரம்பிற்கு அதிகமாகவும் மேற்கொண்டும் மத்திய உதவி இருக்கவேண்டும். ஒரு வளர்ச்சி வட்டாரத்தில் அரிசனங்கள், பழங்குடி மக்கள் இவர்களின் தொகைக்கு தலைக்கு ரூ. 4 வீதமும் பிற வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குத் தலைக்கு ரூ. 2 வீதமும் ஆண்டுதோறும் நிதியளிக்க வகை செய்யும் முறையை வகுக்கலாம் என்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி ஆராயப்படலாம்.

(3) பழங்குடி மக்களின் வளர்ச்சி வட்டாரங்கள் குறித்து தனிக் கவனம் செலுத்தப்படவேண்டும். இத்திட்டத்தை நிறைவேற்றுகையில் அவற்றிற்கு இது அளிக்கப்படவேண்டும்.

(4) சமுதாயத்தின் பின் தங்கிய பிரிவினருக்கு, இதுபோன்றே போதுமான அளவிற்கு நிதிப்பங்கு ஒதுக்கப்படவேண்டும். இப்பிரிவினருக்கு சிறப்பாக எவ்வாறு உதவி அளிக்கப்படலாமென்பது பற்றி ஆய்வுக்குழு ஒன்று ஆராய வேண்டுமென்னும் கருத்து மேலும் பரிசீலனை செய்யப்படலாம்.

(5) பல வளர்ச்சித் திட்டங்களை நெறிப்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் இம் மாநில அரசாங்கம் அவசியமெனக் கருதுகிற அமைப்பு மாற்றங்கள், மாநிலத் தலைமையிடங்களில் செய்யப்படலாம். அது போன்றே வளர்ச்சி வட்டாரங்களின் அமைப்புகள், மாதிரியில் செய்யும் மாற்றங்கள், திட்ட வாய்ப்பையும் பகுதிக்குப் பகுதியுள்ள வேலைச் சுமையையும் கணக்கில் கொண்டு செய்யப்படலாம்.

(6) குறிப்பிட்ட ஒரு பகுதியில் போதுமான வேலையில்லாதிருக்கும் பணியாளர்கள் வேறு இடங்களில் வேலைக்கு அனுப்பப்படலாம்.

(7) அரசாங்க நிறுவனங்களுக்கும், அரசாங்கச் சார்பில்லாத செயலிகளுக்கும் இடையில் நல்ல ஒருங்கிணைப்பு இருக்கும் வகையில் இம் மாநிலத்தில் உள்ள நிலைமைக்கு ஏற்பத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

(8) மக்களாட்சியின் அதிகாரப் பிரிவினைக் கொண்ட கருவியாக ஊராட்சி நிர்வாகம் அமைந்திருப்பதால், நிர்வாகத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிப்பதோ அல்லது இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பதோ அந்தந்த மாநிலங்களின் விருப்பத்திற்கு விட்டுவிடப்படுகிறது. கூடுதலான உள்ளூர் நிதி வாயில்களைப் பெருக்கி கொள்வதற்கு ஊராட்சி மன்றங்களுக்குத் தகுந்தவாறு ஊக்கம் அளிக்கப்படவேண்டும். இது குறித்து மத்திய அரசாலும் மாநில அரசாங்கங்களாலும் இணை மானிய அடிப்படையில் அளிக்கப்படவேண்டும்.

(9) ஊட்டச் சத்துணவு, கிராம உழைப்புச் சக்தி ஆகியவற்றின் சிறப்புத் திட்டங்களுக்குத் தொடர்ந்து ஆதரவு அளிக்கப்படவேண்டும்.

(10) குடும்ப நலத் திட்டப் பிரச்சாரப் பணி சமுதாய நல வளர்ச்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படலாம்.

*Future directions and pattern of Community Development and Panchayat Raj Programmes.*

While generally endorsing the approaches to policy on Community Development and Panchayati Raj, as enunciated in the draft policy statement on Community Development, recommended by the Conference of State Ministers for Community Development and Panchayati Raj, held in October 1966, the Conference of Chief Ministers and State Ministers-in-charge of Community Development and Panchayati Raj, held at Madras on the 11th June 1968, decided that, for integrated rural development, including agricultural production—

(1) The Community Development and Panchayati Raj Programmes should continue and be strengthened.

(2) Blocks still in stage I and stage II should continue to receive the financial assistance they are entitled to. The present criterion for transition of blocks from one stage to another, however, purely in terms of time sequence of 5 years, is not satisfactory. A Study Group should go into this whole question and work out more appropriate norms for determining the particular operational stage of a block. But for post stage II blocks also, there should be continued financial assistance on the same pattern as in the second stage on the basis of equal sharing by the Central and State Governments. The Central assistance should be over and above the State Plan ceiling. One suggestion made was that a rough and ready method could be to provide funds annually at the rate of Rs. 4 per head of the Scheduled Castes and Scheduled Tribes population and Rs. 2 per head of the other population in the Block. This could also be examined.



(3) The Tribal blocks require special attention. This should be secured to them in implementing the programme.

(4) Similarly adequate share of resources should be earmarked for the weaker sections of the community. The suggestion that a Study Team should examine how this section can be specially assisted, may be further examined.

(5) Such structural changes as may be considered necessary by the State for the direction and co-ordination of various developmental programmes may be made at the state headquarters. Similarly changes in the organisational pattern of the blocks may be brought about, taking into account the actual programme potential and workload from area to area.

(6) Functionaries who are not likely to have enough work in a given area may be re-deployed.

(7) Likewise, suitable arrangements should be made according to the condition in the State, to ensure better co-ordination between the official and non-official agencies.

(8) Panchayati Raj as the instrument of democratic decentralisation should continue, the question of three-tier or two-tier structure being left to the option of the States. Suitable incentives to Panchayati Raj, instructions for mobilising additional local resources should be provided on a matching basis by the Centre and the State.

(9) The special programmes of Applied Nutrition and Rural Manpower also deserve continued support.

(10) Non-clinical Family Planning work may be entrusted to the Community Development agency.

## இணைப்பு 2.

**[11ம் பக்கத்தில் 304-ம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க]**

[பொது (செய்தி-விளம்பரத்) துறையின் 1967-ம் வருடம் டிசம்பர் மாதம் 13-ம் நாளிட்ட 19-ம் எண் செய்திக் குறிப்பின் நகல்.]

**அமைச்சர்களுக்கு அளிக்கப்படும் குறையீடுகள் : கொள்கையில் மாற்றம் இல்லை.**

மாவட்டங்களிலுள்ள அதிகாரிகளிடமும், துறைத் தலைவர்களிடமும் செய்யப்படும் குறையீடுகளும் முறையீடுகளும் குறிப்பாக அமைச்சரவை மாற்றத்திற்குப் பின் கவனிக்கப்படுவதில்லையென்றும் அமைச்சர்களிடம் அளிக்கப்படும் குறையீடுகள்கூடக் கவனிக்கப்படுவதில்லையென்றும் சென்னை, நாளேடு ஒன்றில் வந்த செய்தி அரசாங்கத்தின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

(2) அரசாங்கத்தின் கொள்கையில் இவ்வகையில் மாற்றம் எதுவுமில்லை யெனத் தெளிவுபடுத்த அரசாங்கம் விரும்புகிறது, அத்துடன் பொது மக்களின் குறைகள் அனைத்தையும் இயன்ற அளவில் மிக விரைந்து போக்குவதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதென்பதையும் அரசாங்கம் வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

1969 மார்ச் 15]

[Copy of Press Note No. 19, Public (Information and Publicity), dated 13th December 1967.]

*Complaints to Ministers: No change in Policy.*

The attention of the Government has been drawn to a news item in one of the Dailies of Madras that complaints and representations lodged with the heads of departments and officers in the districts are not acknowledged especially after the change in the Ministry and that even complaints made to Ministers are not acknowledged.

(2) The Government wish to make it clear that there has no change in the policy of the Government in this regard. On the other hand, Government wish to reiterate that they are very keen to redress all grievances of the public to the utmost extent and with the utmost expedition possible.

## இணைப்பு 3.

[29-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### தமிழ் நாட்டுக் காவல் துறை 1968–69-ம் ஆண்டிற்கான ஆய்வுரை.

சட்டத்தையும் ஒழுங்கையும் காக்க, ஒரு வலிமை வாய்ந்த காவற் படை மிகத் தேவையானது. தமிழ் நாட்டுக் காவல் படை நமது நாட்டில் மிகச் சிறந்த நிறுவனம் என்கிற புகழை அது தொடர்ந்து காப்பாற்றி வருகிறது.

### 2. படைக்கலந்தாங்கிய காவற்படை.

ஆவடியிலுள்ள படைகலந்தாங்கிய சிறப்புக் காவற்படை I-ம் அணி, தரப்படுத்தப்பட்ட அமைப்பு முறைக் கிணங்க தொடர்ந்து அதன் தலைமையிடமான ஆவடியில் பணியாற்றி வருகின்றது. இந்திய சேமக் காவற்படையாயுள்ள படைச்கலந்தாங்கிய சிறப்புக் காவற்படையின் II-ம் அணி நாகாலாந்தில் இந்திய அரசுக்காகத் தொடர்ந்து பணியாற்றி வருகின்றது. 1969 பிப்ரவரியில் அதை இம் மாநிலத்திற்குத் திரும்ப அனுப்பிவிடவும் அதனைக் கலைத்து விடவும் கருதப்பட்டது. ஆனால், போர்த்திற நடவடிக்கைக் காரணங்களால் முதற்கண் திட்டமிட்டபடி அது அவ்வாறு அனுப்பப்பட இயலாதென்று தெரிகின்றது. படைக்கலந் தாங்கிய சிறப்புக் காவற்படை IV-ம் அணி இம் மாநிலத்திற்குத் திரும்ப அனுப்பப்பட்டு, ஆவடி, தலைமையிடத்தில் பணியாற்றி வருகிறது.

மலபார் சிறப்புக் காவற்படை I-ம் அணி "நேபாவில்" இந்திய அரசுக்காகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. மலபார் சிறப்புக் காவற் படை 1-ம் அணி அனுப்பப்பட்ட பிறகு மலபார் சிறப்பு காவற்படை III-ம் அணி இம்மாநிலத்திற்குத் திரும்ப அனுப்பப்பட்டு 1—7—1968 முதல் கலைக்கப்பட்டது. பிறகு அது மத்திய சேமக் காவற்படையுடன் இணைக்கப்பட்டு, அப் படையின் 42-வது அணியாக அமைக்கப்பட்டது. மலபார் சிறப்புக் காவற்படை II-ம் அணி திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாற்றில் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.



1969 மார்ச் 15]

### 3. காவல்துறையில் உள்ள அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர்களின் சத வீதம்.

1968 டிசம்பர் 31-ம் நாளன்றைய நிலவரப்படி, காவல் துறையில் வேலைக்கமர்த்தப்பட்ட அரிசனங்களின் சத வீதம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

| | மொத்தம். | வேலைக்கமர்த்தப்பட்ட அரிசனங்கள். | சத வீதம். | பழங்குடி மக்கள். | சத வீதம். | பின்தங்கிய வகுப்பினர். | சத வீதம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| அரசிதழ் பதிவு அதிகாரிகள் | 267 | 19 | 7·1 | 2 | 0·7 | 45 | 16·9 |
| அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகள்.— | | | | | | | |
| (அ) கடைநிலைப் பணியாளர்கள் நீங்கலான ஏனையோர். | 39,567 | 6,090 | 15·4 | 62 | 0·16 | 12,975 | 32·8 |
| (ஆ) கடைநிலைப் பணியாளர். | 286 | 88 | 30·8 | .. | .. | 49 | 17·1 |

இந்த ஆண்டில் வேலைக்கு எடுத்துக்கொண்ட காவலர்களின் எண்ணிக்கை :—

| | | |
|---|---|---|
| 1. | வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. | 469 |
| 2. | வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அரிசனங்கள், பழங்குடி மக்களின் மொத்த எண்ணிக்கை | 99 |
| 3. | சத வீதம் .. .. .. | 20·10 |

பின் தங்கிய வகுப்பினர்—

| | | |
|---|---|---|
| 1. | வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை .. | 469 |
| 2. | வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின் தங்கிய வகுப்பினரின் மொத்த எண்ணிக்கை | 178 |
| 3. | சத வீதம் .. .. .. | 37·9 |

காவலர் படையில் உள்ள பணியாளர்களின் தற்போதைய எண்ணிக்கை குறித்த விவரங்கள் 3-(அ), 3-(ஆ)-ம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

4. **பயிற்சியும் தேர்வும்.**—காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் நால்வரும், காவல் துறை உதவிக் கண்காணிப்பாளர் ஒருவரும், மாவட்டங்களில் தங்களது செயல்முறைப் பயிற்சியை முடித்ததன் மேல் ஆய்வு ஆண்டில் உட்கோட்டங்களுக்கு நியமிக்கப்பட்டனர்.

ஆபுமலை தேசியக் காவற்படைப் பயிற்சிக் கழகத்தில் பயிற்சி பெற்று வந்த காவல் துறை உதவிக் கண்காணிப்பாளர்கள் (தகுதி நிலை பெற்றவர்கள்) நால்வர் பயிற்சி பெறும் பொருட்டு, வேலூரில் உள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தனர். மாவட்டங்களில் செயல்முறைப் பயிற்சி பெறுவதற்கென ஆறு உதவித் தலைவர்கள் அனுப்பப்பட்டனர்.

புது டில்லியிலுள்ள பொது நிர்வாக இந்திய நிறுவனத்தில் இந்தியக் காவற்பணி அதிகாரி ஒருவர் பயிற்சி பெற்றார்.

வேலூர் காவலர் பயிற்சிக் கல்லூரியில் தமது பயிற்சியை முடிப்பதன் மேல, இரண்டு உதவித் தளவாய்கள் (தகுதி நிலை பெற்றவர்) ஆவடியில் உள்ள படைக்கலந்தாங்கிய சிறப்புக் காவற்படை I-ம் அணியில் செயல் முறைப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர்.

தகுதி நிலை பெற்ற காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் இருவர், வேலூரிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியில் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்.

தகுதி நிலைபெற்ற காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவர் தற்போது மாவட்டத்தில் பயிற்சி பெற்று வருகிறார்.

இரு காவல்துறை அதிகாரிகள் ஆபுமலையிலுள்ள தேசிய காவற் பயிற்சிக் கழகத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இந்தூரிலுள்ள படைக்கலன் உத்திகள் மத்தியப் பள்ளியில் படைக்கலந் தாங்கிய சிறப்புக் காவற் படையைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் பயிற்சி பெற்றனர்.

காவலர்களாகத் தெரிந்தெடுக்கத் தகுதி பெற்றவர்கள் கிடைக்காத காரணத்தால், குறைந்த அளவிற்குத் தேவையான உடல் தகுதிகள் பெற்று இராதவர்களுக்கு ஆதரவாக விலக்கு அளிக்கப்பட்டது. காவலர்களாகத் தெரிந்தெடுப்பதற்குரிய வேறு தகுதிகளை அவர்கள் பெற்றிருந்ததே இதற்குக் காரணமாகும்.

நேரடியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட உதவித் துணை மேற்பார்வையாளர்கள் 15 பேர் வேலூரிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்த ஆண்டில் துணை மேற்பார்வையாளர்கள், சேமத் துணை மேற்பார்வையாளர்கள் எவரும் தெரிந்தெடுக்கப்படவில்லை.

5. **கல்கத்தா, ஹைதராபாத் ஆகிய இடங்களிலுள்ள மத்தியப் புலனாய்வுப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி.**—கல்கத்தாவிலும், ஹைதராபாத்திலும் உள்ள மத்தியப் புலனாய்வுப் பயிற்சிப் பள்ளிகளில் புலனாய்வுக்குத் தொடர்பான விஞ்ஞானக் கருவிகளிலும் மேம்பட்ட வழிகளிலும் 14 வாரப் பயிற்சி பெறுவதற்கென இந்த ஆண்டில் ஒவ்வொரு இடத்திற்கும் 6 துணை மேற்பார்வையாளர்கள் அனுப்பப்பட்டனர்.

6. **நினைவூட்டுப் பயிற்சி.**—காவல் துறை அதிகாரிகளுக்காக ஆண்டு தோறும் நடைபெறும் ஆறு வார நினைவூட்டுப் பயிற்சிப் பாடமுறை 1968-ல் மீண்டும் தொடங்கப்பட்டது. முதல் தொகுதியினர் 1968 நவம்பரிலிருந்து பயிற்சியைத் தொடங்கி முடித்தனர். இரண்டாவது தொகுதி அதிகாரிகள் 1968 டிசம்பரிலிருந்து பயிற்சியைத் துவக்கினர்.

7. **மருத்துவச் சார்பான சட்ட ஆய்வுத் துறை (Forensic Science).**—இந்த ஆண்டுக்கான குற்றவியல்-மருத்துவச் சார்பான சட்ட ஆய்வியலில் தகுதிப் பட்டயப் பாடமுறை 1968 நவம்பர் திங்களில் துவக்கப்பட்டது. காவல் துறையின் 6 அதிகாரிகள் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர்.

குற்றவியல் மருத்துவச் சார்பான சட்ட ஆய்வியலில் எம்.ஏ பட்டப் படிப்பு 1968 ஜூலை முதல் தொடங்கியது. 7 பேர் தெரிந்தெடுக்கப் பட்டனர். இரண்டாண்டுக்கால அளவுகொண்ட இப்பாட முறையில் அவர்கள் பயின்று வருகின்றனர்.

8. **குற்றம்.**—சிறப்புச் சட்டங்களின்கீழும் உள்ளூர் சட்டங்களின் கீழும் சிறு தொல்லைகள் உண்டாக்குவது குறித்த இந்திய தண்டனைச் சட்டக் கோவையில் கண்டுள்ள பிரிவுகளின்கீழும் நிகழ்ந்த சிறு குற்றங்கள் நீங்கலாக, 1968-ல நிகழ்ந்த பிடி ஆணை வேண்டாக் குற்றங்களின் மொத்த எண்ணிக்கை 55,756 ஆகும். 1967-ல் இவை 54,331 ஆக இருந்தன. இதனால் 1,425 குற்றங்கள் கூடின. குற்றங்களைத் தாராளமாக அறிவித்தலும், குற்றங்களைத் தாராளமாகப் பதிவுசெய்தல், பாதகமான பருவ நிலைமைகள் ஆகியவை அதற்குக் காரணங்களாகும்.



9. **துப்புத் துலக்கல்.**—1967-ம் ஆண்டில் துப்புத் துலக்கப்பட்ட பிடி ஆணை வேண்டாக் குற்றங்கள் 60·2 சத வீதமாகும். 1968-ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 61 சத வீதமாகும். 1967-ம் ஆண்டில் துப்புத் துலக்கப்பட்ட கடுங் குற்றங்கள் 66·5 சத வீதமாகும். 1968-ல் அவை 68·0 சத வீதமாகும்.

10. **மதுவிலக்கு.**—சென்னை மாநகரம் நீங்கலாக மாவட்டங்களில் இந்த ஆண்டுத் துப்புத் துலக்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 2,00,951 ஆகும். இந்த எண்ணிக்கை 1967-ல் 1,59,347 ஆகும். துப்புத் துலக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையில் 41,604 அதிகரிப்பு ஏற்பட்டது. அதாவது, 26·1 சதவீதம் அதிகரித்துள்ளது. மாவட்டங்கள் அனைத்திலும் இந்த அதிகரிப்பு ஏற்பட்டது. சென்னை மாநகரம் உட்பட எல்லா மாவட்டங்களிலும் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் 3-(உ)-ம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்திலும் சரகத்திலும் இயங்கும் காவல் பகுதியினர்கள் கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சப்படும் இடங்கள் குறித்துத் தங்கள் நாட்டத்தைச் செலுத்தினர். இந்த ஆண்டில் மதுவிலக்குச் சட்டம் மன நிறைவளிக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டது.

11. **மாவட்டக் குற்றப் புள்ளிவிவரக் கழகம்.**—குற்றங்கள் குற்றவாளிகள் பற்றிய விவரங்களைத் திரட்டுவது, அவற்றைப் பற்றிய தகவல் தருவது மேலும், முக்கியமான குற்றங்களின் தன்மை, அவர்கள் கூட்டாகச் சேர்ந்து இயங்கும் விதம் ஆகியவற்றைப் பற்றிய தனி ஆய்வு செய்வது, குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்டவரிடம் துப்புத் துலக்குபவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி ஆலோசனை கூறுவது போன்ற பணிகளை மாவட்டக் குற்றப் புள்ளி விவரக் கழகம் நன்கு நிறைவேற்றி வந்தது. விரல் ரேகை, காலடிச் சுவடு பற்றி அறிவதில் தனிப்பயிற்சி பெற்ற தலைமைக் காவலர் விஞ்ஞான உதவியாளர்களும் வழக்குகளைத் துப்புத் துலக்குவதில் மிகவும் உதவியாயிருந்தனர். விரல் ரேகை (கண்டுபிடிப்பு) கழகத்தினைச் சேர்ந்த திறமைசாலிகள் குற்றம் நடந்த இடத்தை உடனடியாகச் சென்று பார்வையிடுவர். முக்கியமான வழக்குகளில் விரல் ரேகை குறித்துத் துப்புதுலக்குவதற்காக இவர்களுடைய உதவி வேண்டப் படுகிறது. குற்றம் நடந்த இடங்களில் குற்றவாளிகள் விட்டுச் சென்ற விரல் ரேகை அடையாளங்களிலிருந்து 259 வழக்குகளில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனர். குற்றப் புலனாய்வுத் துறையில் குற்றவியல் பிரிவுடன் இணைந்துள்ள குற்றம் செய்யும் முறைகளையும் அவற்றைக் கண்டுபிடிக்கும் வழிகளையும் கற்பிக்கும் மாதிரிக் கழகம் மாவட்டங்களிலுள்ள துப்பறியும் கழகங்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு இணக்கமாகப் பணி புரிந்தது

12 **நாய்ப்படைப் பிரிவு.**—தமிழ்நாட்டில் தற்போது சென்னை மாநகரில் ஒன்றும், மதுரையில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக மூன்று துப்பறியும் நாய்ப்படை பிரிவுகள் பணியாற்றி வருகின்றன. தற்போது நாய்ப்படைப் பிரிவில் உள்ள நாய்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் 3-(இ)-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

13 **பிச்சைக்காரர் விடுதி.**—பிச்சை எடுப்பதைத் தடை செய்யும் 1945-ம் ஆண்டுச் சட்டம் இம்மாநிலம் எங்கணும் 1966, மே 1-ம் தேதி முதல் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. தற்போதுள்ள பிச்சைக்காரர் விடுதிகள் [இவற்றின் விவரங்கள் 3-(ஈ)-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன] தொடர்ந்து நன்கு செயலாற்றி வருகின்றன.

14. **நெறிபிறழ்ந்த சிறுவர் விடுதி.**—இன்றைய தேதியளவில் தமிழ் நாடு முழுவதிலும் 29 நெறிபிறழ்ந்த சிறுவர் விடுதிகள் செயல் [illegible] மன நிறைவளிக்கத்தக்கதாய் உள்ளது. பழனியில் உள்ள

நெறிபிறழ்ந்த சிறுவர் விடுதி நீங்கலாக ஏனைய விடுதிகள் அனைத்தும் மாநில அரசிடமிருந்தும் மத்திய அரசிடமிருந்தும் மானியம் பெற்றுச் செயல்பட்டு வருகின்றன. சென்னை மாநகரில் கோடம்பாக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட சிறுவர் விடுதி 1968 மார்ச்சிலிருந்து இயங்கத் தொடங்கியுள்ளது. காவல் துறையின் பொறுப்பில் உள்ள பிச்சைக்காரர் விடுதி காப்பு முகாம்பற்றிய விவரங்கள் 3(ஈ)-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன

15. **வகுப்புப் பூசல்கள் நிலைமை.**—பெரிய கலவரங்களாகக் கருத முடியாத சில சிறு வகுப்புப் பூசல்கள் இந்த ஆண்டில் நிகழ்ந்தன.

16. **ஏர்முனை நிலவரம்.**—இந்த ஆண்டில், உழவுத் தொழிலாளர்கள் முக்கியமாகத் தங்கள் கூலியை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். இந்தக்கோரிக்கைக்கு இணங்க இயலாத நிலக்கிழார்கள் பயிரிடுவது, அறுவடைசெய்வது முதலிய வேலைகளுக்கு அன்றாட ஊதியம் பெறும் தொழிலாளர்களை நியமித்துக் கொண்டனர். இதனால் உழவுத் தொழிலாளர்கள் மிராசுதார்களிடையே கசப்புணர்வு எழுந்தது. தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்வெண்மணி கிராமத்தில் 25 குடிசைகள் அழிக்கப்பட்டன. பெண்களும் சிறுவர்களுமாக 42 அரிசனங்கள் தீயிற்கு அஞ்சி ஒரு குடிசையில் ஒளிந்திருந்தனர். அவர்கள் உயிரோடு எரிக்கப்பட்டனர். சென்னையிலுள்ள குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த குற்றப் புலனாய்வுப் பிரிவு இதுகுறிததுப் புலன் விசாரணை செய்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உழவுத் தொழிலாளர்களின் சிக்கல்கள், மிராசுதாரர்கள் உழவுத் தொழிலாளர்கள் ஆகியோரிடையே உள்ள உறவு ஆகியவைபற்றி ஆராய்வதற்காக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது.

17. **தொழிலாளரிடையே அமைதியின்மை.**—இந்த ஆண்டு தனியார் தொழிற்சாலைகளில் தொழிலாளர் கிளர்ச்சிகள் பல நடந்தன. இதன் விளைவாகக் கதவடைப்புகள் ஏற்பட்டன. தொழில் நிறுவனங்கள் தற்காலிகமாக மூடப்பட்டன. தீபாவளிப் பண்டிகைக்கு முன்னர், பணியாளர்களுக்குப் பூரிப்பூதியம் வழங்குவதில் தகராறுகள் ஏற்பட்டன. இந்த ஆண்டில் ஆயுள் ஈட்டுறுதிக் கழகப் பணியாளர்கள் தங்கள் அலுவலகங்களில் கணக்கீட்டுப் பொறிகளை அமைப்பதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து வந்தனர்.

மத்திய அரசுப் பணியாளர்கள் 1968, செப்டம்பரில் வேலைநிறுத்தம் செய்தபோது காவல்துறை குறுக்கிடும் அளவுக்குச் சட்டமும் ஒழுங்கும் மீறப்படவில்லை.

18. **மாணவர் கிளர்ச்சி.**—மாணவர்களை மறு வகுப்புக்குத் தேறுமல் நிறுத்தி வைத்தல், கல்லூரி விடுதிகளில் சிறந்த வசதிகள் செய்து தரப்படவேண்டுமென்று கேட்பது போன்றவற்றிற்காக மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள் செய்து, வகுப்புக்களுக்குச் செல்லாது இருந்துவிட்டனர். ஊர்வலங்கள் நடத்துதல், கல்லெறிதல், எதிர்ப்புக் கோசங்களை எழுதுவதற்காக ரயில்களையும் பிற வண்டிகளையும் நிறுத்தி வைத்தல், இந்திப் பெயர்ப் பலகைகளிலுள்ள எழுத்துக்களை அழித்தல் போன்ற ஆர்ப்பாட்டங்கள் நடத்தி இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை இந்த ஆண்டு முதலிலும் மாணவர்கள் தொடர்ந்து நடத்தினர். அனைத்திந்திய வானொலியில் இந்தி செய்தி அறிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்ததற்கு இம்மாநிலத்திலுள்ள மாணவர் சமுதாயம் மறுப்பு தெரிவித்தது. தமிழ்நாட்டிலுள்ள வானொலி நிலையங்கள் இந்தி செய்தி அறிக்கையை ஒலிபரப்பக்கூடாதென்று சென்னை மாநகரிலும் மாவட்டங்களிலும் உள்ள கல்லூரி மாணவர்கள் ஊர்வலங்கள் நடத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றினர். தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை பேருந்து ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்த சட்டக் கல்லூரி மாணவருக்கும் பயணித்துணைவர் ஒருவருக்குமிடையே சச்சரவு ஏற்பட்டதால் 1968 மார்ச்சில் பெருங்கலவரம் ஏற்பட்டது. இந்த மோதல் குறித்து விசாரணை செய்வதற்காக ஒருவர் அடங்கிய ஆணைக்குழு



ஒன்றை ஏற்படுத்தியதனால் இது குறித்து மேற்கொண்டும் சிக்கலேதும் நிகழவில்லை. தமிழ்நாட்டில் மாணவர் சமுதாயத்தில் பலர் 1968, ஜனவரி 25-ம் தேதியை "தியாகிகள் தின"மாகக் கொண்டாடினர்.

19. **காவலர் துப்பாக்கி சுடல்.**—இந்த ஆண்டில் 11 தடவை காவலர் சுட நேர்ந்தது.

20. **கண்ணீர்ப்புகை.**—இந்த ஆண்டில் 6 தடவை கண்ணீர்ப்புகை விட வேண்டியிருந்தது.

21. **காவல்துறை வானொலி.**—தமிழ்நாட்டுக் காவல்துறை வானொலி அமைப்பில் 16 நிலையங்களும், 42 உட்கோட்ட வானொலி நிலையங்களும், 19 இயக்கும் நிலையங்களும், 4 மீ. உயர் அலை நிலையங்களும் (V. H. F. Stations), 5 நகரக் கட்டுப்பாட்டு அறைகளும், வெள்ளக்காலங்களில் அபாய நிலைமை குறித்து செய்திகள் திரட்டுவதற்கான 7 நிலையங்களும் உள்ளன. மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் கம்பியில்லாத் தந்தி மூலம் சென்னை மாநகருடன் இணைக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் மத்தியச் சரகம், தென் சரகம், மேற்குச் சரகம், ஆகிய மூன்று கட்டுப்பாட்டு நிலையங்கள் உள்ளன.

சென்னை மாநகரக் காவல்துறை மலபார் சிறப்புக்காவல் படை, படைக்கலம் தாங்கிய சிறப்புக் காவல்படை ஆகியவற்றிற்குக் கூடுதலாகக் கிளைகள் உள்ளன. மேட்டூர், கீழ் அணைக்கட்டு, கல்லணை, தஞ்சாவூர், பவானிசாகர், தேக்கடி மற்றும் சென்னை நகரின் கட்டுப்பாட்டு நிலையம் ஆகிய இடங்களில் வெள்ளக் காலங்களில் உதவி செய்வதற்கான நிலையங்கள் உள்ளன. தற்போது உட்கோட்டத் தலைமையிட நிலையங்கள் 42 பணிபுரிந்து வருகின்றன.

குற்றங்கள், சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநிறுத்துதல், அவசரக் காலத் தேவைகள், தேர்தல்கள், விழாக்கள், கிளர்ச்சிகள், முதன்மை பெற்றோர் வருகை ஆகியவை குறித்துத் தகவல்களைப் பரப்புவதற்காக வானொலி நிலையங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

22. **காவல்படையினருக்குக் குடியிருப்பு வசதி.**—காவல் படையினரின் திறனையும், ஒழுங்குணர்வையும் வளர்க்கும் வகையில், அப்படையினருக்கு அரசாங்க உறைவிடங்கள் கட்டிக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்று 1956-ல் தொடங்கப்பட்டது. காவல் படையினரில் குறைந்தது 80 சத விகிதத்தினருக்காவது அரசாங்க உறைவிடங்கள் கட்டித் தர வேண்டுமென்பதே இதன் நோக்கமாகும்.

இந்த ஆய்வுரை ஆண்டில், காவல்துறையின் உதவி மேற்பார்வையாளர்கள் இருவர், தலைமைக் காவலர்கள் 3 பேர், காவலர்கள் 25 பேர் ஆகியோருக்கான குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு அவர்கள் அவற்றில் குடிபுகுந்தனர்.

23. **காவலர் நலப்பணித் திட்டங்கள்.**—1956-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாட்டுக் காவலர் குடும்ப நலன் குறித்த நிறுவனங்கள் செவ்வனே பணியாற்றி வருகின்றன. காவலர் ஒவ்வொருவரின் குடும்ப வருமானத்தையும் உயர்த்தும் பொருட்டு நூல் நூற்றல், தையல் வேலை, பாய் முடைதல், கம்பளி ஆடை தயாரித்தல், தீக்குச்சி தயாரித்தல், பட்டாசுக்குழல் தயாரித்தல், பீடி சுற்றுதல், காகித உறை தயாரித்தல், புத்தகம் கட்டுதல், பாற்பண்ணை, கோழி இன வளர்ப்பு, கைப்பணிகள் முதலியவை குறித்து முந்திய ஆண்டுகளில் வகுக்கப்பட்ட திட்டங்கள் தொடர்ந்து மனநிறைவளிக்கும் வகையில் செயல்பட்டு வருகின்றன. 1968, செப்டம்பரில் தமிழ்நாட்டுக் காவலர் நலப் பொருட்காட்சி கலை நிகழ்ச்சி திருச்சிராப்பள்ளியில் நடத்தப்பட்டன. அனைத்திந்திய காவலர் நலப் பொருட்காட்சி கலை நிகழ்ச்சி 1968, நவம்பரில் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள பூனாவில் நடத்தப்பட்டன. அதில், தமிழ்நாட்டுக் காவல்துறைக் குழுவினரும் பங்கு கொண்டனர்.

24. **தமிழ்நாட்டுக் காவலர் அறநிதி.**—1957-ம் ஆண்டு ஜூலையில் காவல்துறையின் அரசிதழ் பதிவுப் பெறாத பணியாளர்களின் நிலைகளை மேம்படுத்துவதற்காகத் தொடங்கப்பட்ட தமிழ்நாட்டுக் காவலர் அறநிதி மன நிறைவளிக்கும் வகையில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. இந்த அறநிதியின் நிதி வசதியைப் பெருக்குவதற்காக, அதன் உறுப்பினர்கள் தாமாகவே செலுத்தும் தொகைக்கு நிகரான தொகையைப் பேரளவு ரூ. 50,000-க்கு உட்பட்டு, ஆண்டுதோறும் மானியமாக வழங்குவதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. 1968-ம் ஆண்டில், அரசாங்கத்திட மிருந்து பெற்ற மொத்த மானியம் ரூ. 50,000 ஆகும்.

இந்த நிதியின் உறப்பினர்களுக்குரிய பல்வேறு வகையான வசதித் திட்டங்களுக்காகவும், இடர் உதவி குறித்தும் 1—1—68 முதல் 31-12-68 வரையில் இந்நிதியிலிருந்து ரூ. 1,05,310 செலவிடப்பட்டுள்ளது.

25. **ஊர்க்காவல்படை.**—தொண்டாற்றும் நிறுவனமான ஊர்க்காவல் படை, 1963 லிருந்து செயல்படத் தொடங்கியது. முதலில் 10,000 பேர் (91 அணிகள்) கொண்ட ஊர்க்காவல் படையை அமைக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. பின்னர் 1965 அக்டோபரில் ஊர்க்காவல் படையின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, 22 கூடுதல் அணிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்தது. அதன்மூலம் ஏற்பளிக்கப்பட்ட ஊர்க்காவல் படையின் மொத்த எண்ணிக்கை 113 அணிகளாயிற்று. (12,430 பேர்) ஏற்பளிக்கப் பட்ட எண்ணிக்கைக்கு மாறாக, 31—12—1968 அன்றைய நிலவரப்படி இப்படையின் எண்ணிக்கை 11,316 ஆகும். (சென்னை மாநகரில் 3,731 வெளியூர்களில் 7,585.)

தமிழ்நாடு முழுவதிலும் இரவு ரோந்து, போக்குவரத்துக் கட்டுப்பாடு ஆகிய வழக்கமான பணிகளில் காவல்துறையினருக்கு ஊர்க்காவல் படையினர் தொடர்ந்து உதவி செய்தனர். 1968-ல் நடந்த மாநகராட்சித் தேர்தல்களின் போதும் அவர்கள் சிறந்த பணியாற்றினர்.

26. **கள்ளக்கடத்தல் தடுப்பு.**—கண்காணிப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுத்துறை, சென்னை—கண்காணிப்புப் பிரிவு 1964-ம் ஆண்டு அக்டோபரில் நிறுவப்பட்டது. பல்வேறு உணவு தானியங்கள் குறித்த கட்டுப்பாட்டு ஆணைகளையும் இன்றியமையாத உணவுப் பொருள்களான நெல், அரிசி, சர்க்கரை, கோதுமை முதலியவற்றின் விலைகள் ஏறாமல் பார்த்துக்கொள்ள அரசாங்கம் மேற்கொள்ளும் ஏனைய ஒழுங்குமுறை ஏற்பாடுகளையும் செயல்படுத்துவது உணவு வழங்கல் துறை கண்காணிப்புப் பிரிவின் முக்கிய பணியாகும். மேலும் இன்றியமையாப் பண்டங்களை நியாய விலைக்கு வழங்குவதை உறுதிப்படுத்துவதில் உணவு வழங்கல் துறை மேற்பார்வையாளர் அலுவலகத்திற்கு இந்தப் பிரிவு உதவி புரியும்.

1968-ம் ஆண்டில் இப்பிரிவு 5,797 குற்றங்களைத் துப்புத் துலக்கியது. அவற்றில் 397 குற்றங்கள் பதுக்கல் சம்பந்தப்பட்டவை ஆகும்; 5,400 குற்றங்கள் கள்ளக்கடத்தல் சம்பந்தப்பட்டவையாகும்.

27. **தீயணைப்புப் படை.**—இதுகாறும் மாநிலக் காவல் துறைத் தலைவரின் பொறுப்பிலும், மேற்பார்வையிலும் முற்றிலும் இருந்து வந்த தீயணைப்புப் படைப்பிரிவு காவல் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, 1967 அக்டோபர் திங்கள் 4-ம் நாள் முதல் தனிப்பட்ட இயக்குநர் ஒருவரின் மேற் பார்வையில் தனித்துறையாகச் செயல்பட்டு வருகின்றது. தீயணைப்புப் படைத் துறையிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் 3-(ஊ)-வது இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இம்மாநிலத்தில் இப்போது 56 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. அவற்றில் 12 நிலையங்கள் சென்னை மாநகரிலும், 44 நிலையங்கள் வெளியூர் நகரங்களிலும் அமைந்துள்ளன. மேலும் மூன்று நிலையங்களை நிறுவுவதற்கு ஏற்கனவே ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அவற்றை மாநகரில் நிறுவுவதற்கான இடங்கள் கிட்டியதும் அவை நிறுவப்படும்.





தருமபுரி, ஸ்ரீரங்கம், பெரம்பலூர், பரமக்குடி ஆகிய நான்கு இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தீயணைப்பு நிலையத்தை நிறுவ ஏற்கெனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த நான்கு தீயணைப்பு நிலையங் களையும் நிறுவுவதற்கு தீ அணைப்பு படை இயக்குநர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். நமது மாநிலத்தில் நகர்ப்பகுதிகளில் ஏற்படும் தொழிற்சாலை தீ விபத்து, வீடுகளில் ஏற்படும் தீ விபத்து, ஏனைய தீ விபத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தீயணைப்புப் படை நிலையங்கள் வருங்காலத்தில் எந்தெந்த இடங்களில் நிறுவப்பட வேண்டுமென்பதற்கு இந்த அரசாங்கம் "முறைவைப்புப் பட்டியல்" ஒன்றை தயாரித்துள்ளது. இந்தப் பட்டியலின்படி. 28 நகரங்களில் தீயணைப்பு நிலையங்கள் நிறுவ வேண்டும்.

1968-ம் ஆண்டில் 5,196 தடவைகள் தீயணைப்புப் படை உதவிக்கு அழைக்கப்பட்டது. தீ விபத்து ஏற்பட்ட 4,613 நிகழ்ச்சிகளில் 56 தீ விபத்து நிகழ்ச்சிகள் கடுமையானவை. இவற்றில் ஒவ்வொன்றிலும் உயிரிழப்பும், 50,000 ரூபாய்க்கு மேற்பட்ட உடைமை இழப்பும் ஏற்பட்டன. தீ விபத்து அழிவிலிருந்து ஏறக்குறைய 385 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் காப்பாற்றப்பட்டன.

1968-ம் ஆண்டு ஜூன்-ஜூலைத் திங்கள் சென்னை மாநகரத்திலுள்ள தீயணைப்புப் படைபிரிவிற்குச் சோதனை காலமாகும். இககாலத்தில் மொத்தம் 362 தீ விபத்துக்களை எதிர்த்துப்போராட வேண்டியிருந்தது. அவற்றில் 236 குடிசைப் பகுதிகளில் ஏற்பட்டவையாகும். இந்தத் தீ விபத்துக்களினால் ரூ. 13·5 லட்சம் பெறுமானமுள்ள சொத்து சேத மடைந்தது. இவ்விபத்துக்களில் 7 பேர் உயிரிழந்தனர்.

குடிநீர் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் மக்களுக்கு நீர் வழங்கித் துணைபுரிவதற்காகத் தீயணைப்புப்படை வண்டிகள் அனுப்பப்பட்டன. இவ் வாண்டில் 370 அழைப்புக்களுக்கு இணங்கிச் சென்று மீட்புப் பணியாற்றி யுள்ளனர். கிராமப் பகுதியில் வாழும் மக்களுக்குத் தீ விபத்தைத் தடுப் பதில் உள்ள பொறுப்பினை உணர்த்தும் பொருட்டும், தீ விபத்து ஏற்பட்ட தொடக்க நிலையில் அந்த இடத்திற்குத் தீயணைப்புப்படை வரும் வரை தீயை அணைக்கும் வகையை அவர்களுக்கு விளக்கவும், கிராமங் களில் தீ விபத்துக்களால் ஏற்படும் தீமைகளைக் குறைக்கவும், கிராமத் தீ விபத்துக் கண்காணிப்பு தீயணைப்புப்படை ஒன்று, உள்ளூர் காவல்துறை அதிகாரிகளின் உதவியுடன அமைக்கப்பட்டுள்ளது. 194 தீ விபத்துகளின் போது தீயணைப்பதில் தீயணைப்புப் படையினருக்கு இந்தப் படை உதவியா யிருந்தது.

**காவலரின் ஒழுங்குணர்வு** :—இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு, அனைத்திந்திய தேசிய விளையாட்டுகள், மகாமகம் விழா, இந்திய உலக வாணிக-தொழில் சந்தை, வேலை நிறுத்தங்கள், மாணவர்கள் கிளர்ச்சிகள், வகுப்புவாதக் கிளர்ச்சிகள் ஆகியவை குறித்த பலத்த பந்தோபஸ்து வேலைகளிலும், ஏனைய பணிகளிலும் காவலர்கள் ஈடுபட்டிருந்த போதிலும் குற்றங்கள் கட்டுமீறாமலிருந்தன, சட்டமும் ஒழுங்கும் சரிவரக் காக்கப் பட்டன. காவல் படையினரின் ஒழுங்கும். கட்டுப்பாடான மனஉறுதியும் எப்போதும் போல் உயர்ந்த நிலையில் இருந்தன.

காவல்துறையினருக்கும், பொதுமக்களுக்குமிடையே நிலவும் நல்லுறவை மேம்படுத்தவும், காவல்துறையினர் தங்கள் கடமைகளை இன்னும் செவ்விய முறையில் நிறைவேற்றுவதற்கும் உதவியாக இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் ஆன்ற கருத்துக்களை எடுத்தியம் பினால் அவற்றை அரசு வரவேற்கும்.

[1969 மார்ச் 15

## இணைப்பு 3-(அ)

காவல் படையின் எண்ணிக்கை (31-12-1968 அன்றுள்ளபடி)

| | | |
|---|---|---|
| 1. | மாநிலக் காவல்துறைத் தலைவர் .. | 1 |
| 2. | மாநிலக் காவல்துறை துணைத்தலைவர்கள் .. | 6 |
| 3. | காவல்துறை கண்காணிப்பாளர்கள் .. | 26 |
| 4. | காவல்துறை கூட்டுக் கண்காணிப்பாளர்கள். .. | 6 |
| 5. | காவல்துறை உதவிக் கண்காணிப்பாளர்கள் .. | 24 |
| 6. | காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்கள் (நிலை 1). | 114 |
| 7. | காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்கள் (நிலை 2). | 15 |
| 8. | மேற்பார்வையாளர்கள் .. .. | 335 |
| 9. | சேம மேற்பார்வையாளர்கள் .. .. | 44 |
| 10. | உதவி மேற்பார்வையாளர்கள் .. .. | 1,527 |
| 11. | சேம உதவி மேற்பார்வையாளர்கள் .. | 208 |
| 12. | இளநிலை உதவி மேற்பார்வையாளர்கள் .. | 138 |
| 13. | சேம இளநிலை உதவி மேற்பார்வையாளர்கள். | 147 |
| 14. | தலைமைக் காவலர்கள் .. .. | 4,170 |
| 15. | காவலர்கள் .. .. .. | 28,349 |



1969 மார்ச் 15]

## இணைப்பு 3-(இ)

இம் மாநிலத்திலுள்ள துப்பறியும் நாய்ப் படையின் எண்ணிக்கை.

| இடம். | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை. | தற்போதைய எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சென்னை மாநகரம் .. | 9 நாய்கள் | 3 நாய்கள். |
| | | 4 நாய் குட்டிகள் பயிற்சி பெற்று வருகின்றன. |
| மதுரை புறநகர்ப் பகுதி. | 5 நாய்கள். | 4 நாய்கள். |
| | | 1 நாய்க்குட்டி பயிற்சி பெற்று வருகிறது. |
| கோயம்புத்தூர் .. | 3 நாய்கள். | 1 நாய் |
| | | 2 நாய்க்குட்டிகள் பயிற்சி பெற்று வருகின்றன. |

## இணைப்பு 3-(ஈ)

இம்மாநிலத்திலுள்ள காவல்துறையினர் பொறுப்பில் உள்ள அரசு நடத்தி வருகிற பிச்சைக்காரர் விடுதியும் காப்பு முகாமும்.

| | சேர்த்துக் கொள்ளப் படுபவர்கள் குறித்த ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை. | தற்போதுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| 1. காஞ்சிபுரத்திலுள்ள காப்பு இல்லம். | 100 | 26 |
| 2. மேல்பாக்கத்திலுள்ள காப்பு முகாம் | 850 | 686 |

## இணைப்பு 3-(உ)

சென்னை மாநகரம் உட்பட எல்லா மாவட்டங்களிலும் பதிவு செய்யப்பட்ட மதுவிலக்கு வழக்குகளின் எண்ணிக்கையையும், தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையையும் காட்டும் அறிக்கை.

| | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.. |
|---|---|---|
| 1966 .. .. | 189,548 | 172,528 |
| 1967 .. .. | 190,713 | 171,541 |
| 1968 .. .. | 253,607 | 223,276 |

1969 மார்ச 15

## இணைப்பு 3–(ஊ)

தீயணைப்புப் படைப் பணியாளர் எண்ணிக்கை.
(31—12—1968 அன்றுள்ளபடி.)

| வகை. | | | |
|---|---|---|---|
| தீயணைப்புப் படை இயக்குநர் | .. | .. | 1 |
| தீயணைப்புப் படை கூட்டு இயக்குநர் | — | .. | .. |
| தீயணைப்புப்படை துணை இயக்குநர் | .. | .. | 1 |
| கோட்டத் தீயணைப்பு அதிகாரிகள் — | | | |
| நிலை 1 | .. | .. | 2 |
| நிலை 2 | .. | .. | 5 |
| கண்காணிப்பாளர்கள் | .. | .. | 3 |
| உதவியாளர்கள் | .. | .. | 24 |
| எழுத்தர்கள் | .. | .. | 82 |
| சுருக்கெழுத்தாளர்கள் | .. | .. | 2 |
| தட்டச்சர் | .. | .. | 11 |
| சிற்றெழுத்தர் | .. | .. | 1 |
| ஏவலர்கள் | .. | .. | 2 |
| கோட்ட உதவி தீயணைப்பு அதிகாரி | .. | .. | 10 |
| தீயணைப்பு நிலைய அலுவர்கள் | .. | .. | 73 |
| முன்னணித் தீ அணைப்பவர் | .. | .. | 271 |
| யந்திரக் கம்மியர்—வலவர்கள் | .. | .. | 72 |
| தீயணைப்பவர்—வலவர்கள் | .. | .. | 438 |
| தீயணைப்பவர் | .. | .. | 1,702 |
| தீயணைப்பு—யந்திரக் கம்மியர் | .. | .. | 4 |
| தீயணைப்புத் தச்சர் | .. | .. | 1 |
| பற்றவைப்பவர் | .. | .. | 1 |
| குப்பை கூட்டும் முழுநேரப் பணியாள் | .. | .. | 3 |
| நீர்சேகரத்தொட்டி பணியாள் | .. | .. | 6 |
| நீர்சேகரத்தொட்டி மேஸ்திரி | .. | .. | 1 |
| படகாரர்கள் | .. | .. | 9 |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

## திங்கட்கிழமை, 1969 மார்ச் 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில பேரவை கூடியது.

## 1. வினாக்கள்–விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Baby food seized from Burma Market.*

* 351 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state, with reference to Question No. 8 answered on the floor of the Assembly on 12th February 1968:

(*a*) the number of food tins and packets seized in 'Burma Market'; and

(*b*) when it was seized ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** (அ) பர்மா அங்காடித் தெருவில் கைப்பற்றப்பட்ட குழந்தைகள்/வலாதோர் உணவு டப்பிகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | | | | |
|---|---|---|---|---|
| ஹார்லிக்ஸ் | .. | .. | .. | 16 |
| அமுல் (பெரியது) | .. | .. | .. | 2 |
| கிளாக்ஸோ (பெரியது) | | .. | .. | 2 |
| கிளாக்ஸோ (சிறியது) | | .. | .. | 14 |
| ஆஸ்டர்மில்க் (பெரியது) | | .. | .. | 2 |
| ஆஸ்டர்மில்க் (சிறியது) | | .. | .. | 8 |
| லாக்டோஜன் (சிறியது) | | .. | .. | 9 |
| லாக்டோஜன் (பெரியது) | | .. | .. | 3 |

(இ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதி அன்று கைப்பற்றப்பட்டன.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, கப்பலிலிருந்து இறங்கி துறைமுகத்திற்கு வெளியே வந்து சுங்கம் கட்டியபின் சில பிரயாணிகள் அதை விற்றாலும், அதை வாங்கி விற்கும்போது போலீசார் கைப்பற்றுவதாக திரும்பத் திரும்ப புகார்கள் வந்திருக்கின்றனவே அதைப்பற்றி அரசினர் அனுதாபத்துடன் கவனித்து ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** நான் குறிப்பிட்ட பொருள்கள் ரேஷனுக்குரியவை. சர்க்கார் 20 சத விகிதம் பொறுப்பு ஏற்றுக் கொண்டு ரேஷன் ஷாப் மூலமாகவும், பெண்கள் கோவாப்பரேடிவ் சங்கங்கள் மூலமாகவும் விற்கிறார்கள். 80 சத விகிதத்தை மானுபாக்சரர்கள் ரீடெய்லர்கள் மூலமாகவும் விற்கிறார்கள். சுங்கம் கட்டி விற்கிறவர்கள் தானா இல்லையா என்பதற்கு வேண்டிய தகவல் அவர்கள் கொடுப்பார்களானால் பரிசீலிக்கலாம். தற்சமயம் தவறான முறையிலே விற்கப்

படுகிறது. அதைத் தவிர்க்கக்கூடிய முறையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. பீரியாடிகல் செக் அப் செய்யும்போது அவைகள் கண்டு பிடிக்கப்படுகின்றன. உண்மையிலேயே கஸ்டம்ஸ் ட்யூட்டி போட்டிருக்கிறது என்று சொன்னால் அதன்மீது நடவடிக்கை எடுக்காது. தவறு என்று சொன்னால் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எம். எஸ். மணி :** வெளிநாட்டிலிருந்து நம்முடைய தமிழகத்திற்கு வருகிறவர்கள் இதுபோன்ற உணவுப் பொருள் டப்பாக்களை எக்ஸைஸ் ட்யூட்டி கட்டி விட்டு அதை ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் கட்டி பர்மா அகதிகளுக்கு விற்று அவர்கள் அதை வாங்கி விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திரு எ. பாலசுப்ரமணியம் அவர்கள் கேட்ட கேள்வியைத்தான் திரு மணி அவர்களும் கேட்கிறார்கள். அது ரேஷன் பொருள்களாக இருப்பதால் தனிப்பட்டவர்களிடமிருந்து வாங்குவதற்கும், விற்பதற்கும் உரிமை மறுக்கப்படுகிறது. வெளிநாட்டிலிருந்து வருகிறவர்கள் தங்கள் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்துவதில் ஆட்சேபனையில்லை. அவர்கள் அதை விற்கக்கூடிய நிலையில் ரேஷன் பொருள்களைவிட கூடுதல் விலையில் விற்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால் பல தவறுகள் ஏற்படுகின்றன. அநியாயமான முறையில், அக்கிரமமான முறையில் விற்கிறார்கள். அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று வேறு கேள்விகள் கேட்பதற்குக்கூட வசதியாகிவிடும். அதனால்தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு வி. கே. கோதண்டராமன் :** சார், கைப்பற்றப்பட்ட பொருள்கள் யாருக்குக் கொடுக்கப்பட்ட கோட்டா பொருள்கள் ? தனிப்பட்ட யாருக்காவது கொடுக்கப்பட்ட கோட்டா பொருள்களா ? அல்லது வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களிடமிருந்து வாங்கி விற்றதாலே கைப்பற்றப்பட்டதா? தவறான முறை என்று மட்டும் சொல்லிவிட்டால் போதாது. உண்மையில் தவறு நடந்திருந்தால் தவறு செய்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

. **மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** இது வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்தவர்களுடைய பொருளா அல்லது தனிப்பட்டவர்களுடைய கோட்டா பொருளா என்ற விவரம் இல்லை. ஆனால் பீரியாடிகல் செக்அப் செய்யும்போது அது அவர்களுக்கு உரியதாக இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டதால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ரேஷன் கடைக்காரர்களெல்லாம் எவ்வளவு வாங்குகிறார்கள், எவ்வளவு விற்கிறார்கள் என்று கணக்கு வைக்கிறார்கள். ஆனால் இங்கே தவறான முறையில் வைத்திருந்தது பற்றித்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களிடமிருந்து வாங்கி விற்றார்களா அல்லது பதுக்கி வைத்தார்களா என்ற விவரம் இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பர்மா அங்காடியில் விற்பது போன்று சென்னையிலுள்ள பல பெரிய கடைகளில் கள்ளச் சந்தையிலே சில பொருள்கள் விற்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிப்பட்ட விவரம் தெரிந்து அரசாங்கத்திற்கு உதவி செய்கிற முறையில் தகவல் கொடுத்தால் அதன் மீது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** தலைவர் அவர்களே, பர்மா அகதிகள் கடைகள் வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய கஷ்ட நிலைமையினாலே அப்படிப்பட்ட பொருள்களை விற்று, அதில் லாபம் கிடைக்குமா என்று பார்க்கிறார்கள். அரசாங்கம் அவர்களை ஊக்குவிப்பதற்கு நல்ல பல காரியங்கள் செய்துவருகிறது. இதை மனதில் கொண்டு



கைப்பற்றப்பட்ட சாமான்களை, கன்ட்ரோல் விலைக்கு அவர்களே விற்று அதில் வரும் தொகையை அவர்களுக்கே கிடைக்கச் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பர்மா அகதிகளின்மீது அரசாங்கத்தின் அனுதாபம் நிச்சயமாக உண்டு. அதற்காக வியாபாரிகள் தவறாக நடந்தால் அனுதாபம் தவறாக கொண்டுபோய்விடும். ரேஷன் பொருள்கள் ஒழுங்காக விற்கப்படவில்லையென்றால், கண்காணிக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது.

## மீன்பிடி இயந்திரப் படகுகள் இறக்குமதி

*355 வினா—**திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திற்குப் புதிய மீன் பிடிக்கும் இயந்திரப் படகுகளை இறக்குமதி செய்வதற்கான பேச்சு வார்த்தையை முதல் அமைச்சர் அவர்கள் சப்பான் அரசோடு கலந்து உரையாடினார்களா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. சொ. கோவிந்தராசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இனியாவது இதுமாதிரி எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஜப்பானிலிருந்து யான்மார் என்ஜின் செய்வதற்கு ஜப்பான் கொலாபரேஷனுடன் கூடிய தொழிற்சாலை எண்ணூர் பகுதியிலே நிறுவவேண்டுமென்று தமிழக அரசு முயற்சி எடுத்திருக்கிறது. அதற்காக மத்திய உணவு அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்கள் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை ஊக்குவிக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசாங்கத்தின் நிதித்துறையிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. அதற்கு இப்போது எதிர்ப்பு இருக்கிற காரணத்தால்தான் அந்தத் திட்டம் இன்னும் உருவாகாமல் அப்படியே இருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் ஜப்பான் நாட்டுக்குச் சென்றிருந்தபோது இந்த ஸ்தாபனத்தோடு தொடர்பு கொண்டு அந்தத் தொழிற்சாலையை எண்ணூர் பகுதியிலே நிறுவுவதற்கு ஆலோசனை செய்தார்கள். இது மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. எண்ணூர் பகுதியில் வேறொரு விழா நடந்த நேரத்திலே, எண்ணூர் பகுதியிலே யான்மார் என்ஜின் தொழிற்சாலை வரவேண்டிய எல்லா வழியையும் செய்வதாக வாக்குறுதி அளித்தார்கள். இன்னும் நம்பிக்கை இருக்கிறது. அதைப்பற்றி அண்மையிலேகூட வற்புறுத்தியிருக்கிறோம். தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். அதைக் கொடுத்தால்தான் நம் மாநில மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கும்.

**திரு. டி. மார்டின் :** பெல்ஜியத்திலுள்ள மெ[illegible] என்ற ஆர்கனைசேஷன் 100 மோட்டார்களை கட்டுமரங்களில் பொருத்துவதற்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது இயந்திரப் படகுகளை ஜப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்வது பற்றிய கேள்வி.

THIRU T. MARTIN : This question pertaining to Belgium also comes under the Hon. Minister's jurisdiction. He will be able to answer.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அல்ல. மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கிறது.

**திரு. டி. தங்கப்பன் :** ஜப்பான் நாட்டிலிருந்து படகுகள் இறக்குமதி செய்யப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த நாட்டில் படகுகள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டபோதிலும் மீன்வளம் அதிகமாக இருக்கிற இராமநாதபுரம், இராமேஸ்வரம், மண்டபம் பகுதி களுக்கு அதிகமாக படகுகள் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருக் கிறது. ஆகவே, வெளியே இருந்து ஏராளமான படகுகளை வாங்கி வழங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இது இறக்குமதி செய்கிற விஷயம் அல்ல. இறக்குமதி செய்யக்கூடிய அளவிலே முதலமைச்சர் அவர் கள் முயற்சி எடுத்தார்களா என்பது கேள்வி அத்தகைய முயற்சி இல்லை. எண்ணூரிலே யான்மார் என்ஜின் தொழிற்சாலையைக் கட்ட வேண்டுமென் பதுதான் திட்டம். மண்டபம் படகு கட்டும் தொழிற்சாலையில் தயாராகும் படகுகள் பூராவும் இதுவரை இராமநாதபுரம் மாவட்டத்திற்கேதான் இதுவரை கொடுக்கப்பட்டு வந்தன மற்ற மாவட்டங்களுக்கும் அந்தப் படகுகளைக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. ஆகவே, கனம் அங்கத்தினர் அவர்களுடைய குற்றச்சாட்டு தவறான குற்றச்சாட்டு. ஆகவே, தற்போது அடுத்த மாவட்டமான திருநெல்வேலி மாவட்டத்திற்கும் படகுகளை ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்திற்கும் சில படகுகளை ஒதுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** கடற்கரை ஓரத்தில் மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் நிலையை மாற்றி ஆழ்கடல் தூரத்தில் சென்று மீன் பிடிப்பதன் மூலம் அந்நிய நாட்டுச் செலாவணியையும் பெற்றுக் கொள்ளலாம், உள்நாட்டுத் தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்கும் என்ற நிலையில் ஜப்பான் ஒத்துழைப்போடு தூத்துக்குடி பகுதியில் இயந்திரப் படகு கட்டும் தொழிற்சாலையை எற்படுத்த அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** ஆழ்கடலில் சென்று மீன் பிடிப் பதற்காகத்தான் விசைப் படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அப்படி வழங்கப்பட்டிருந்தும் அவர்கள் கட்டுமரக்காரர்கள் பிடிக்கும் இடத்திலேயே மீன் பிடிக்கிறார்கள் என்ற தகராறும் ஏற்படுகிறது. அந்த முறையில் தான் விசைப்படகுகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றன. குறிப்பாக யான்மார் எஞ்சினைத்தான் மீனவர்கள் விரும்புகிறார்கள். இதுவரை 272 விசைப்படகுகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசாங்க உதவியுடன் விரைவில் எண்ணூரில் அதற்கான தொழிற்சாலை துவக்கப்படும்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** எண்ணூரில் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு மத்திய விவசாய அமைச்சரகம் ஒத்துக்கொண்டிருக் கிறது என்று அமைச்சர் அவர்கள் பதிலில் தெரிவித்தார்கள். 35 கோடி ரூபாயில் ஆரம்பிக்கப்படும் இந்தத் திட்டத்தை இங்கு ஆரம்பிக்கக்கூடாது என்று வட நாட்டில் இருக்கக்கூடிய வியாபாரிகள், தொழில் அதிபர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அவ்வாறு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் மொரார்ஜி தேசாய்க்கு வேண்டியவர்கள் என்று சொல்லப்படுவது உண்மையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதல் பகுதிக்கு மட்டும் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கலாம்.



(திரு கே. விநாயகம் உட்கார்ந்தபடியே குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பின் பகுதியை அனுமதிக்க வில்லை என்று பேரவைத் தலைவர் அவர்கள் கூறிய பிறகும் திரு. விநாயகம் அவர்களுக்குச் சந்தேகம். என்னுடைய பதிலைத் தெரிந்து கொண்ட பிறகு அவருடைய குறையைக் கூறலாம். இதற்கு மத்திய அரசிலே எதிர்ப்பு இருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. டாக்குமென்டரி எவிடென்ஸ் இருக்கிறது. திரு. ஜெகஜீவனராம் அவர்களை விடத் தூய்மையான மனம் படைத்தவர்கள் இருக்க முடியாது. அவர்கள் சொல்லுகின்ற வார்த்தையில் நம்பிக்கை இருக்கிறது. திரு. விநாயகம் அவர்களுக்குச் சந்தேகம் இருக்குமானால் அவர்களையே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

*Cotton package programme.*

* 356 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the Central Government has sponsored cotton package programme in about 90,000 acres in Tamil Nadu this year; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** (அ) & (இ) : 1968-69-ம் ஆண் டில் பருத்தி முனைப்புத் திட்டத்தின்கீழ் 90,000 ஏக்கர் பரப்பளவில் பருத்தி பயிரிட ரூ. 2·50 லட்சம் கொடுப்பதாகத் தொடக்கத்தில் இந்திய அரசு ஒப்புக் கொண்டது. பின்னர், அதன் முடிவை மாற்றிக்கொண்டு 60,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடுவதற்கு ரூ. 2,42,400 மட்டுமே கொடுக்க ஒப்புக்கொண்டது. இம் மானியத்தை ஒப்புக் கொண்டு இவ் வரசாங்கம், 1968–69-ல் வேலைத்திட்டம் தொடர்ந்து நடைபெறுவதற் கான ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**திரு கே. விநாயகம் :** இந்த 60,000 எக்கரிலே பருத்தி உற்பத்தி செய்வதற்கு இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் எவ்வளவு மானியம் கேட்டது ? கேட்ட மானியத்தைக் கொடுத்தார்களா அல்லது குறைத்தார்களா ? எந்தெந்த மாவட்டங்களில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அவர்களுடைய கேள்விக்கு நான் முதலில் சொன்ன பதிலிலேயே விடை இருக்கிறது. அதைக் கவனித்திருப்பாரானால் இந்த விவரங்களைத் தெரிந்து கொண்டிருக்க முடியும். கோவை, மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

**திரு. சு. துரைசாமி :** தமிழ்நாட்டில் உற்பத்தியாகக் கூடிய பஞ்சு தமிழ்நாட்டின் தேவையில் மூன்றில் ஒரு பகுதியாகத்தான் இருக்கிறது. நீண்ட இலைகளையுடைய பஞ்சை உற்பத்தி செய்ய அதிகமாக மத்திய உதவி பெற்று இந்தத் திட்டத்தை எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்து வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மத்திய அரசாங்கத்தை இந்த அரசாங்கம் நிச்சயமாக வற்புறுத்தும். திரு விநாயகம் அவர்களுக்கு இருக்கிற குறைபாடெல்லாம் எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தை யே கேட்டுக் கொண்டிருக்கிறார்களே என்பது. மத்திய அரசுக்கும் ராஜ்ய அரசுக்கும் தொடர்பு இருக்கின்ற காரணத்தால், அந்தத் தொடர்பு சுமுகமான முறையில் இருக்க வேண்டுமென்ற காரணத்தால், உரிமை யாகப் பெற வேண்டிய பொருளையோ, பணத்தையோ கேட்டுப் பெற்றுத் தான் ஆக வேண்டும். அதில் ஒன்றும் தவறு இல்லை.

[1969 மார்ச் 17

**திரு. பி. வேலுசாமி :** சென்ற ஆண்டு உற்பத்தியானது எவ்வளவு? இந்த ஆண்டு எவ்வளவு ஏக்கர் அதிகமாகியிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அது பற்றிய தகவல் இல்லை. தனிக்கேள்வி போட வேண்டும்.

**திரு. ஆர். கருப்பையா :** பருத்தி பயிரிடுவதற்கு மானியத் தொகை கொடுக்கின்ற இந்த முறையின்படி திருச்சி மாவட்டத்தில் எத்தனை ஏக்கர்களில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் ? அங்குள்ள விவசாயி களுக்கு மானியத் தொகை வழங்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** எவ்வளவு தொகை என்ற விவரம் இல்லை. திருச்சி மாவட்டத்திற்கு உறுதியாக வழங்கப்பட்டிருக் கிறது என்ற தகவல் இருக்கிறது. விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வியாகக் கேட்டால் பதில் சொல்ல முடியும்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, பருத்தி பயிரிடு வதற்கு கரிசல் மண்தான் முக்கியம் என்று சொல்லுகிறார்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஏன் தென்னார்க்காடு மாவட்டத்தை மறந்துவிட்டார் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தென்னார்க்காடு மாவட்டத்தை நான் மறக்கமாட்டேன் என்பதை அவர்கள் நிச்சயமாக உணருவார்கள். தென்னார்க்காடு மாவட்டத்திலும் பருத்தி விளைகிறது. ஆனால், இந்தத் திட்டத்தினுடைய அடிப்படையில் எங்கெங்கே பாக்கேஜ் ப்ரோகிராம் நடைபெறுகிறது என்று விளக்கம் கேட்கப்பட்டது. அதைத்தான் குறிப் பிட்டேன். என்னுடைய விழுப்புரம் வட்டத்திலும் பருத்தி விளைகிறது, பண்ருட்டி வட்டத்திலும் பருத்தி விளைகிறது. அப்படியிருக்க தென்னார்க் காடு மாவட்டத்தை நான் மறந்துவிட்டதாக உறுப்பினர் அவர்கள் நினைத்தால் அது தவறு. அதை அவர்கள் திருத்திக்கொள்ளவேண்டும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் கோவை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக் கோவில்பட்டி வட்டாரம் தான் அதிகமாகப் பருத்தி விளைவிக்கக்கூடிய பிரதேசம் என்பதை நான் அறிகிறேன். ஆகவே, அந்தப் பருத்தி விளைவிக்கும் பிரதேசத்திற்கும் இந்த முனைப்புத் திட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா ? இந்தத் திட்டத்தின் அடிப்படையில் விவசாயிகளுக்கு எந்தவிதமான உதவிகள் அளிக்கப்படுகின்றன என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரி விக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதைப்பற்றி முழு விவரம் இல்லை. கோவில்பட்டிக்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படாத நிலைக்கும் தகவல் இல்லை. திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டி வருகிற காரணத்தால், அது சேர்த்துக்கொள்ளப்படுமா என்பதை யோசிக்கவேண் டும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** எம்.சி.க்யூ. 4, 5 என்று புது விதைகளெல்லாம் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. மிகவும் வரவேற்கத் தக்கதுதான். ஆனால், அதை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கொடுத்து, ஒருசில இடங்களில் அதை விரிவுபடுத்த ஒரு வழி செய்துவிட்டால்தான் எந்தெந்த மாவட்டத்தில் இதை வரவேற்கிறார்கள் என்று பார்ப்பதற்கு வழி ஏற்படும். ஆங்காங்கு எக்ஸ்பெரிமெண்டலாகச் செய்வதற்கு சர்க்கார் யோசிக்குமா ? எழுதிக்கேட்டால் அது ப்ராஜெக்ட் ஏரியாவில் இல்லை. டெவலப்டு ஏரியாவில் இருக்கிறது, மற்ற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்து வதற்கு தற்சமயம் முடியாது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, எல்லா



1969 மார்ச் 17]

மாவட்டங்களுக்கும் அம்மாதிரி விதைகளைக் கொடுத்து, அதன் மூலமாக விரிவுபடுத்துவதற்கு வழி செய்தால் அநேகம் பேர்களுக்குக் கிடைக்க வழி இருக்கும். அதைச் செய்ய சர்க்கார் திட்டம் வகுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** எம்.சி.க்யூ. 5 ரகம் இப் பொழுது கோவையில் பரீட்சார்த்தமாக சில ப்ளாட்களில் போடப்பட்டு, நல்ல பலன் தரக்கூடிய அளவுக்கு நிலைமை உருவாகியிருக்கிறது. கோவையில் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக அது நல்ல பலன் கொடுக்கும் நிலைமை உருவாகியிருக்கிறது. அதை எங்கெங்கே பயன் படுத்தலாம் என்று விவசாய நிபுணர்கள், மண் வளத்தைப் பார்த்து தகவல் கொடுத்தால் அதைப் பரப்புவதற்கு முயற்சி நடைபெறும். எம்.சி.க்யூ. 5 நல்ல பலன் அளிக்கும் என்று அண்மையில் நான் கோவை சென்றிருந்தபோது டீன் அவர்கள் தெரிவித்தார்கள்.

*Writ Petitions by paddy producers.*

* 357 *Q.*—THIRU K. VINAYAKAM : }
THIRU N. S. V. CHITHAN : } Will the Hon. the

Minister for Food and Agriculture be pleased to state whether the Bench of the High Court have allowed a batch of Writ Petitions by paddy producers, who demanded fair and reasonable prices and adequate compensation for the paddy procured by the Government ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** ஆம். அரசாங்கம் கொள்முதல்செய்த நெல்லுக்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒருவருக்கும் கோயம்புத்தூர் மாவட் டத்தில் இருவருக்கும் கூடுதலாகவிலை கொடுக்கவேண்டுமென்று செய்யப்பட்ட மூன்று ரிட் மனுக்களில் அவ்வாறே கொடுக்க வேண்டுமென மாண்புமிகு நீதிபதி பி.எஸ். கைலாசம் அவர்கள் தீர்ப்பளித்தார். இந்தத் தீர்ப்பு செயல் படுவது நீதிபதிக்குழு ஒன்றினால் இப்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே கொடுக்கப் பட்டிருக்கிற விலை குறைவு என்று சொல்லி, அந்த நெல்லின் தரத்தைப் பார்த்து அதிக விலை கொடுக்கவேண்டும் என்று தீர்ப்பு வந்த பிறகும் அது ஏன் இன்னும் கொடுக்கப்படவில்லை ? ஒருவேளை அரசாங்கம் ஃபுல் பெஞ்ச் அப்பீலுக்குப் போயிருக்கிறதா என்று . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தத் தீர்ப்பு செயல்படுவது நீதிபதிக் குழு ஒன்றினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் இப்பொழுது தெரிவித்தார்களே.

**திரு. கே. விநாயகம் :** அரசாங்கம் கொள்முதல் செய்த முறை தவறு கொள்முதல் செய்த நெல்லுக்குப் பணம் கொடுப்பதைவிட, நேரடியாக அந்த விவசாயினுடைய வீட்டுக்கே போய் நெல்லைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி இன்னொரு ஜட்ஜ்மெண்ட் அதிலே இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் உறுப்பினர் திரு. விநாயகம் ஒரு சிறந்த வழக்கறிஞர். ஒன்றுக்கொன்று முடிச்சுப் போட்டுப் பார்க்கிறார்.

**திரு. கே. விநாயகம் :** (உட்கார்ந்துகொண்டே) ஐஸ் வைக்க வேண் டாம்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஐஸ் வைத்தாலும் கரைந்து விடும். அவ்வளவு உஷ்ணம். என்னுடைய பதிலை நான் தமிழில்தான் சொன் னேன். தமிழில் விவரம் அறிந்தவர்கள் அந்த விவரத்தைப் புரிந்து

கொள்ளாமல் கேட்கிறார்கள். நீதிபதிக்குழு அதை தடை செய்திருக்கிறார்கள். தடை செய்த பிறகு, பணம் கொடுப்பது பற்றியோ, நெல்லைத் திருப்பிக் கொடுப்பது பற்றியோ எப்படி நான் பதிலளிக்கமுடியும் என்று ஒரு வழக்கறிஞர் கருதுகிறார் என்றுதான் தெரியவில்லை. இன்னொரு கேள்விக்கும் இதற்கும் தொடர்புபடுத்துகிறார். அது நெல் கொள்முதல் பற்றியது. இது விலையைப் பற்றியது. விலையைப் பொறுத்த வரையில் 'கோர்ஸ்', 'மீடியம்', 'ஃபைன்' என்று மூன்று ரகமாகப் பிரித்துத்தான் விலை நிர்ணயம் செய்கிறார்கள். விலை நிர்ணயத்தைப்பற்றி தான் மாண்புமிகு நீதிபதி திரு. கைலாசம் அவர்கள் தீர்ப்பு கொடுத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. விநாயகம் அவர்களும் திரு. சித்தன் அவர்களும் அதைப்பற்றித்தான் கேள்வி கேட்டிருக்கிறார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நெல் கொள்முதலுக்கு அரசாங்கம் தற்போது கொடுத்து வருகிற விலையை நியாய விலை என்று அரசு கருதுகிறதா ? உற்பத்திச் செலவு அதிகமாகி, உற்பத்தி செய்யப்படும் தானியங்களின் விலை குறைந்து வரும் நேரத்தில், விளைபொருள்களுக்கு அதிக விலை கொடுப்பது நியாயம் என்று அரசு கருதுகிறதா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி மிகப் பொதுவாக இருக்கிறது. துணைக் கேள்வி, மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்த அரசு இப்பொழுது கொடுக்கும் விலை நியாயமானது என்பதை மத்திய உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டு சென்னைக்கு வரும்போதெல்லாம் வலியுறுத்திச் சென்றிருக்கிறார்கள். அண்மையில்கூட, இம்மாதம் 9-ம் தேதி, சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில்கூட அதைப்பற்றிச் சொன்னார்கள். வாங்கிச் சாப்பிடுகிறவர்களுடைய நிலைமையையும் கவனிக்க வேண்டியது ஒரு அரசாங்கத்தின் பொறுப்பு என்று சொல்லியிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Sir, is the Government aware of the fact that His Lordship in the course of the judgment observed that in the circumstances His Lordship was unable to resist the conclusion that the action taken by the authorities was in total disregard of the law and, in addition, is the Government aware also of the fact that His Lordship has observed that the method adopted by the authorities had no sanction in law and it was regrettable that the officers should have harassed the landlord ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு தீர்ப்பு கொடுக்கப்பட்டு, அதற்கு மேல் அப்பீலுக்குப் போயிருக்கும்போது, அந்த அப்பீல் முடிவாகும் வரைக்கும் அதைப்பற்றி விவாதிக்கக் கூடாது. அதைப்பற்றி நிர்ப்பந்திப்பது முறையல்ல.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தீர்ப்பைப்பற்றி நான் பேசவில்லை. முறையிலே பல கோளாறுகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு நீதிபதி தீர்ப்புக் கொடுத்திருக்கிறார். அந்தத் தீர்ப்புக்கு மேல் அப்பீலுக்குப் போயிருக்கிறார்கள். அந்த அப்பீலில் என்ன முடிவாகும் என்று இப்பொழுது தெரியாது. இந்நிலையில் அதுபற்றி விவாதிப்பது நியாயம் அல்ல.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** இந்த அரசாங்கம் கொள்முதல் செய்கிற நேரத்தில் நிலச்சுவாந்தார்களுக்கு எந்தவிதமான துன்பமும் ஏற்படுத்தாத வகையில் கொள்முதல் செய்யவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு போடுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது வேறு கேள்வி.



**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நிலச்சுவான்தார்களை அரசாங்கம் துன்புறுத்துவதாக கனம் அங்கத்தினர் கருதுவது தவறு. அரசாங்கம் விவசாயிகளைத் துன்புறுத்தாது, விவசாயிகளைத் துன்புறுத்துவதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்கிறேன். கொள்முதல் விஷயத்தில் அவர்கள் கொள்கை வேறு. (திரு. கே. விநாயகம் உட்கார்ந்து கொண்டே குறுக்கீடு) உங்கள் இரண்டு பேர்களுடைய கொள்கை இதிலே ஒன்றாக இருக்கலாம். நீதிபதியினுடைய தீர்ப்பைப்பற்றி விவாதிக்கக் கூடாது என்று பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்புக் கூறிவிட்டார்கள். அந்த நீதிபதி கொடுத்திருக்கும் தீர்ப்பைச் செயல்படுத்துவதை நிறுத்திவைக்கும்படி இரண்டு நீதிபதிகள்—மாண்புமிகு திரு. வீராசாமி அவர்களும், மாண்புமிகு திரு. இராமபிரசாத ராவ் அவர்களும்—தடை விதித்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கும் தீர்ப்பு சரியா இல்லையா என்பதை இந்த மன்றத்தில் நான் சொல்லக்கூடாது என்பதற்காகச் சொல்லவில்லை. இது வழக்குமன்றத்தில் இருக்கிறது என்று தெரிந்திருந்தும், ஜட்ஜ்மெண்ட்டில் என்ன என்ன இருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் பேசக்கூடாது என்று தெரிந்திருந்தும், வேண்டுமென்றே ஏதாவது குறை சொல்லவேண்டும் என்பதற்காகக் குறை சொன்னால், அது பிரயோஜனப்படாது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஐயா, ரிட் மனுக்களைத் தாக்கல் செய்தவர்கள் நேரடியாக நெல் உற்பத்தி செய்யக் கூடியவர்களா, அல்லது நிலத்திற்கு சொந்தக்காரர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் தான்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்திற்குப் பிறகு வைத்துக் கொள்ளலாம்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, உற்பத்தி செய்கிற நெல்லுக்கு விலையை உயர்த்தவேண்டும, உயர்த்த வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் கூறுகிறார்கள். அப்படிக் கேட்கிற அனைவரும் உற்பத்தியாளர்களா ? வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் யாரும் அவர்களில் இருக்கவில்லையா ?

THIRU K. VINAYAKAM (Sitting) : How does it arise out of this question?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. எம். எஸ். மணி அவர்கள் தம்முடைய கேள்வியைத் திரும்பப் போட வேண்டும்.

**திரு. எம். எஸ். மணி:** உற்பத்தி செய்கிற நெல்லுக்கு கொள்முதல் விலையை உயர்த்தவேண்டும் என்று காங்கிரஸ் கட்சியிலே உள்ள மாண்புமிகு அங்கத்தினர்கள் விரும்புகிறார்கள். எனவே, அவர்கள் அனைவரும் உற்பத்தியாளர்கள்தானா அல்லது வாங்கிச் சாப்பிடுகிறவர் யாராவது அவர்களில் இருக்கிறார்களா ?

[1969 மார்ச் 17

**திரு. கே. விநாயகம்:** தயவு செய்து 'ரீ-கன்ஸிடர்' செய்யுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு கேள்விக்குப் போய்விட்ட பிறகு முந்திய கேள்விக்குத் துணைக் கேள்வி அனுமதிப்பதென்றால்....

**திரு. கே. விநாயகம்:** ஒரே ஒரு துணைக் கேள்வி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே நாம் ஒரு வழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Please hear me. Then you can pass judgment. This is an important question. The effect of the question has been taken away by other members. You must allow the original questioner .........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கேள்வியையொட்டிய பொருள் வழக்கு மன்றத்தில் இருப்பதால், இதில் மேற்கொண்டு துணைக் கேள்விகள் கேட்க நான் இடமளிக்க மறுக்கிறேன்.

THIRU K. VINAYAKAM (Sitting) : If you are going to shield the Government like this, may God help us !

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இந்த சர்க்காரை தலைவர் அவர்கள் காப்பாற்றுவதாகக் குறை சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு விநாயகம் அவர்கள் சட்டம் படித்தவர்கள். இங்கு பல ஆண்டுகளாக உறுப்பினராக இருந்தவர்கள். உட்கார்ந்து கொண்டு பேசுகிற வழக்கம் கூடாது. எல்லோரும் அப்படி உட்கார்ந்து கொண்டு பேசினால் ஊர்க் கூட்டத்தில் பேசுவதுபோல் ஆகும். ஆகவே அப்படிச் செய்வது முறையல்ல.

THIRU K. VINAYAKAM : Sir, the Chair should not take cognizance of these things.

**திரு. வி. டி. அண்ணாமலை:** தலைவர் அவர்களே, விநாயகம் அவர்கள் அடிக்கடி இப்படி தொந்தரவு செய்கிறார்கள். எழுந்து நின்று தலைவர் அவர்களின் அனுமதியைப் பெற்றுத்தான் இங்கு எதையும் பேச வேண்டுமே தவிர அடிக்கடி உட்கார்ந்து கொண்டு பேசுவது என்றால் இது சட்ட மன்றமா அல்லது கடைவீதியா ?

**திரு. கே. விநாயகம்:** கடைவீதி என்று சொல்கிறார்கள் ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஊர்க் கூட்டத்தில் பேசுவது மாதிரி என்று நான் சொன்னேன் அல்லவா, அதுபோல்தான் இது.



1969 மார்ச் 17]

**திரு. என். எஸ். வி. சித்தன்:** அவர்கள் என்ன காரணத்திற்காக ஊர்வலம் வந்தார்கள், என்ன குறைகளை அவர்கள் எழுப்பினார்கள்? அவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதா? அவைமீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** நகரமன்றத் தலைவரும் 33 கவுன்சலர்களும் ஊர்வலமாக வந்தார்கள். ரேஷன் கார்டு பதிவு எடுக்கும்போது சிலர் விடுபட்டுப் போனதாக ஒரு கோரிக்கை. சர்க்கரை அளவைக் குறைக்கக் கூடாது என்பது இரண்டாவது கோரிக்கை. பொது மக்கள் ஒரு பர்லாங் தூரம் போய் அரிசி வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே ஒரு பர்லாங்கிற்கு உள்ளாகவே அரிசி கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்பது ஒரு கோரிக்கை. கோதுமை, கோதுமையால் செய்யப்பட்ட பொருள்கள் இவை பாமிலி கார்டு ஹோல்டர்ஸ்க்கு கிடைக்கவேண்டும் என்பது நான்காவது கோரிக்கை. முனிசிப்பல் எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதிகளிலும் பாமிலி கார்டு முறையை அமலாக்கவேண்டும் என்று இப்படி ஐந்து கோரிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். அவை சம்பந்தமாக தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. விடுபட்டுப்போனவர்கள் யார் யார் என்று பார்க்க அதிகாரிகள் போகிறார்கள். சில பேர்கள் விண்ணப்பம் கொடுக்கிறார்கள். அப்படி விடுபட்டுப் போயிருக்கிறது என்பவர்களின் இல்லங்களுக்குப் போய் பார்க்கிற நேரத்தில் அந்தப் பகுதிகளில் அவர்கள் இருப்பது கிடையாது. தொழிலாளர்கள் காலையில் வேலைக்குப் போகிறோம் என்று சொல்கிறார்கள். அதனால் இரவு நேரங்களிலும் போய் பார்க்கிறார்கள். அதிகாலையிலும் போய் பார்க்கிறார்கள் அதிகாரிகள். விடுபட்டுப் போயிருந்தால் அவர்கள் பெயர்களும் சேர்க்கப்படுகின்றன. சர்க்கரையின் அளவு மதுரையில் மட்டும் மே மாதத்தில் கொடுக்கப்பட்டது 5,25,500 கிலோ சர்க்கரையை வருமான அடிப்படையில் வழங்கி கொண்டிருக்கிறார்கள். ஆகவே. அந்த கோரிக்கை சரியானதல்ல. வாங்கி சாப்பிடுகிறவர்கள் என்ன வருமானத்தைக் கொடுத்திருக்கிறார்களோ அந்த அடிப்படையில் கொடுத்து வருகிறார்கள். அதில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய விஷயம் இல்லை. அனும்பாள்புரம், அரப்பாளையம், அனுப்பண்டி போன்ற இடங்களைச் சேர்க்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவை முனிசிப்பல் எல்லைக்குள் இல்லாததால் அந்த மூன்று கிராமங்களின் லொக்கேஷனை மாற்ற வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போதுள்ள இடத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதுபற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு நமக்குக் கொடுக்கிற கோதுமையை பரவலாக வழங்கி வருகிறோம். முனிசிப்பல் நகரங்களில் மட்டுந்தான் இந்த பாமிலி கார்ட் முறை அமலாக்கப்படுகிறது. பற்றுப் பகுதிகளுக்கு விஸ்தரிக்க சந்தர்ப்ப சூழ்நிலை சரியாகவில்லை.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** நேற்றைய தினம் நடந்த தமிழ் நாடு காங்கிரஸ் பேரவைக் கூட்டத்தில் தண்ணீருக்குக் கூட ரேஷன் கார்டு கொடுக்கப்பட்டிருப்பதாக கேலியாகப் பேசினார்கள். அத்தகைய ரேஷன் கார்டுகள் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டதா அல்லது வேறு யாரால் கொடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** அவர்கள் இல்லாததையெல்லாம் கற்பனை செய்து பேசினால் அதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்கவேண்டிய அவசியம் கிடையாது.

**திரு. நா. வீராசாமி:** 1968 எப்ரல் மாதம் மதுரை நகரில் நகர மன்ற உறுப்பினர்கள் ஊர்வலம் வந்தார்கள் என்று சொன்னார்கள். அந்த ஊர்வலத்தில் ஒரு பகுதியினர் அரிசி விலையை குறை என்று கோஷம் போட்டும் இன்னொரு பகுதியினர் நெல் விலையை உயர்த்து என்றும் கோஷம் போட்டதாக செய்தி வந்தது. அது அரசின் கவனத்திற்கு வந்ததா ? இப்படி ஒன்றுக்கொன்று முரண்பட்ட விதத்தில் போடுகிற கோஷம் பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதில் வாங்கிச் சாப்பிடுகிறவர்களும் இருக்கிறார்கள், சர்க்காருக்கு அளக்கிறவர்களும் இருக்கிறார்கள். சர்க்காருக்கு அளக்கிறவர்கள் நெல் விலையை உயர்த்துங்கள் என்று சொல்லுகிறார்கள். வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் அரிசி விலையைக் குறையுங்கள் என்று சொல்லுகிறார்கள்.

## Ration shops in Madras City.

* 359 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether a holiday was given to the ration shops in Madras City on April 8th, 1963 ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஆம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அப்படி விடுமுறை அளிக்கப்பட்டதற்கு காரணம் என்ன ? அன்றைய தினம் ரேஷன் வாங்குபவர்கள் கஷ்டப்பட நேர்ந்ததே, இதுமாதிரி அனுமதிப்பது சரியா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ரேஷன் கடைக்காரர்கள் வருடாந்திர மாநாடு கூட்டுவதற்காக மனு போட்டார்கள். முன்கூட்டியே வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு அறிவித்துவிட்டு அன்றையதினம் லீவ் விடப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக வேறொரு விடுமுறை தினத்தில் அந்த ரேஷன் கடையைத் திறந்து ரேஷன் வழங்கப்படும் என்ற தகவலைக் கொடுத்ததால் பொது மக்களுக்கு இடையூறு எற்படவில்லை.

**திரு. டி. மார்டின் :** சென்னை நகரில் சில கடைகளுக்கு அதிகமான கார்டுகளும் சில கடைகளுக்கு மிகக்குறைவான கார்டுகளும் விநியோகம் செய்திருப்பதும், குடும்பக் கார்டுகள் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு இன்னும் அநேகம் பேர்களுக்கு அவை வழங்கப்படாமல் இருப்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்தக் கேள்வி ரேஷன் கடைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது பற்றியது. இருந்தாலும், இதற்குப் பதில் அளிப்பது பொது மக்களுக்கு உபயோகமாக இருக்கும் என்பதால் சொல்கிறேன். சில கடைகளுக்கு அதிகமான கார்டுகள் இருப்பது உண்மை. காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது அப்படியெல்லாம் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நாங்கள் பார்த்து குறைத்துக் கொண்டுதான் வருகிறோம். நடவடிக்கைகள் எடுத்து அதை குறைத்துக் கொண்டுதான் வருகிறார்கள். அப்படிக் குறைக்கிறபோது ஏன் குறைக்கிறீர்கள் என்ற முறையீடுகள் [illegible] கொண்டிருக்கின்றன. பரவலாக மக்களுக்கு கிடைக்கக்கூடிய அளவிற்கு கார்டுகளை சமப்படுத்தி அமைக்கிற முறையில் கூடுதல் கடைகள் திறக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. உறுப்பினர் அவர்கள் கூறுகிறபடி [illegible] ஏற்படாத அளவிற்கு நிச்சயமாகப் பார்த்து கொள்வோம்.





**திரு. கே. பி. எஸ். மணி :** சென்னை நகரில் அரசாங்கத்திற்குத் தொல்லை கொடுக்கவேண்டுமென்று கள்ளக் கார்டுகள் வழங்கப்படுவதாகக் கூறி அதன் மூலம் கடைக்காரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தொல்லை ஏற்படுவதாக புகார் வந்திருக்கிறதா ? அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** புகார்கள் வந்ததன் மீதுதான் போலிக் கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அதோடு அரசாங்கத்திற்கு மனுவும் கொடுக்கிறார்கள், எங்களுக்கு கார்டுகள் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று. கார்டுகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதால் நாங்கள் பாதிக்கப்படுகிறோம் என்றும் சொல்கிறார்கள். என் வீட்டுக்கு இரண்டு முறை ஊர்வலம் போயிருக்கிறார்கள். சட்டமன்றம் நடக்கும்போது அப்படி போயிருக்கிறார்கள். இங்கே வரச் சொல்லுங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு வந்து குறைகளைச் சொல்லவில்லை. விசாரித்துப் பார்க்கும்போது வெளி ஊர்களுக்குப் போயிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். வெளியூர்களின் மீது பழி சுமத்துகிறார்கள். பலருக்கு கார்டு கொடுத்திருக்கிறோம் விசாரித்துப் பார்த்து. சித்ரா டாக்கீஸுக்கு எதிரில் குடிசைகளில் பலர் வாழ்கிறார்கள். அவற்றிற்கு நம்பர்கள் கிடையாது. இருந்தாலும் விசாரணை செய்கிறார்கள். தெரு ஓரங்களில் நடைபாதைகளில் வசிப்பவர்களுக்கும் இன்ன தெருவிற்கு அருகில் இன்ன கட்டடத்திற்கு எதிரில் வசிக்கிறோம் என்று தகவல் கொடுத்தால்கூட விசாரிக்கிறோம். அப்படியெல்லாம் விசாரிக்கப்பட்டு கார்டுகள் வழங்கப்படுகின்றன. இப்படியெல்லாம் செய்யும்போது கால தாமதம் ஆகிறது என்று குறை சொல்லவேண்டுமென்று சொல்லி அதைப் பெரிதாக பத்திரிகைகளில் போடவேண்டும் என்ற நோக்கத்தில் அப்படிச் செய்கிறார்கள். வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் பாதிப்பது என்பது மட்டுமல்லாமல் கூடுதல் அரிசி கொடுப்பதால் கூடுதல் செலவு ஏற்படக் கூடிய ஒரு நிலையை உண்டாக்கவேண்டுமென்ற நோக்கத்தில்கூட இது செய்யப்படுகிறது.

**திரு. கே. விநாயகம் :** இந்தக் குடும்பக் கார்டுகள் விநியோகம் செய்வதிலே பெருத்த தாமதம் ஏற்பட்டது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? நந்தனத்திலே இருக்கிற அலுவலகத்திலே உத்தியோகஸ்தர்களைப் பொதுமக்கள், உள்ளே புகுந்து, ரகளை செய்து அடித்ததும் தெரியுமா ? அப்படிப்பட்ட தவறுகளை நிவர்த்திப்பதற்கு அரசாங்கம் உடனடியாக என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** எதிர்க்கட்சி கொறடா அவர்கள் அரசாங்கத்திற்கு உதவிசெய்கிற முறையிலே ஒரு நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதிகாரிகளை அலுவலகத்திலே புகுந்து அடித்திருக்கிறார்கள். சட்டையைக் கிழித்து இருக்கிறார்கள். . . . .

**திரு. கே. விநாயகம் :** (உட்கார்ந்துகொண்டே) எல்லாம் உங்களுடைய கட்சிக்காரர்கள் தான்.

**திரு. வி. எஸ். கோவிந்தராஜன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . . . . . . . . .

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சிக்காரர்கள் என்று உட்கார்ந்துகொண்டே சொல்கிறார்கள். திரு. விநாயகம் அவர்களைப் போன்றவர்களுடைய தலைமையில்தான் அப்படிப்பட்டவர்கள் வந்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. விநாயகம் அவர்களே நான் பலமுறை சொல்லியும் அவர்கள் தெரிந்துகொள்ளமுடியாது என்று சொன்னால் என்ன செய்வது ? ஒருவர் பேசிக்கொண்டிருக்கின்றபொழுது நீங்களும் உட்கார்ந்துகொண்டே பேசிக்கொண்டிருந்தால் சட்டசபை [illegible] எப்படி நடக்கும் ? [illegible] ? இப்படி நடைபெற்றால் எப்படி [illegible] ? [illegible] முறையை

இதைப்பற்றிச் சொல்வது ? மீண்டும் அந்த முறையை அவர்கள் தொடர்ந்து பின்பற்றுவதாக இருந்தால் தலைவரை வெளியே போகச் சொல்லிவிட்டு அவர்களே நடத்தலாம். மீண்டும் அப்படிச் செய்வது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உட்கார்ந்துகொண்டே பேசினால் அது சட்டசபை நடவடிக்கைக் குறிப்பிலே வராது என்று நினைத்துக்கொண்டு அவர்கள் அடிக்கடி உட்கார்ந்துகொண்டே பேசுகிறார்கள். எனக்கும் அனுபவம்,—திரு விநாயகம் 1942-லே இருந்து இந்த சட்டசபையிலே இருக்கிறார், நானும் இருக்கிறேன்—அந்த மன்றத்திலே உண்டு. நானும் அவரைமாதிரி கீழே உட்கார்ந்துகொண்டே சொல்வதானால் அதை அவரால் தாங்கிக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.—அந்த நிலையை திருத்திக்கொண்டுவிட்டால் நலமாக இருக்கும்.

**திரு. என். கிட்டப்பா :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். . .

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உட்காருங்கள். நந்தனத்திலே அந்த நிலைமை ஏற்பட்டது உண்மைதான். அதிகாரிகளைத் தாக்கியதாலே காலதாமதம் இருக்கிறது என்று சொல்லமுடியாது. எப்படியாவது கார்டு லை வாங்கவேண்டும் என்றுதான் அப்படிச் செய்திருக்கிறார்கள். நிச்சயமாக காலதாமதம் ஏற்படவில்லை. அந்த அலுவலகத்திலே உள்ளவர்கள் இதற்காக இரவு பகலாக வேலை செய்திருக்கிறார்கள். இரவு நேரத்திலேகூட நாங்கள் வேலைக்குப் போய்விடுகிறோம், தகவல் கொடுப்பதற்கு ஆள் இல்லை என்று சொன்னால். அப்படிப்பட்ட இடங்களிலும் அவர்கள் போய் பார்க்கிறார்கள். துரிதமாக நடவடிக்கை எடுக்கிறார்கள். போல்ப் பேர்வழிகள் அங்குதான் கேட்போம் கொடுக்கவேண்டுமென்று சொல்வதால் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. இந்த நிலைமைகளை எல்லாம் உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் யோசிக்கவேண்டும். எனவே காலதாமதம் அதிலே ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## Report on double crop cultivation.

* 360 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the Member, Board of Revenue appointed to examine and report on the possibility of cultivating two crops where only one crop was possible has submitted his report to the Government; and

(*b*) if so, the results thereof ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :**

(அ) ஆம்.

(ஆ) இந்த அறிக்கையில் கண்டுள்ள ஆலோசனைகளின் அடிப்படையில், இயன்ற இடங்களிலெல்லாம் ஒரு போக நிலங்களை இருபோக நிலங்களாக மாற்றுவதற்கான வேலைத்திட்டம் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலங்காலமாக ஒரு போக நிலங்களாக இருந்து வந்த 2,20,832 எக்கர் நிலங்கள் 1967–68-ல் இருபோக நிலங்களாக மாற்றப்பட்டன. இதனால் நெல் உற்பத்தி 2,25,428 டன் கூடுதலாகியது.

**திரு. கே. விநாயகம் :** சார், இந்த இருபோகங்களாக உற்பத்தி செய்யப்பட்டதாலே அதிக உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படும்பொழுது எந்த எந்த மாவட்டங்களிலே அந்த முறை கையாளப்பட்டது ? இந்த குறிப்பிட்ட முறையை செங்கற்பட்டு மாவட்டத்திலும்



அமலுக்குக்கொண்டுவருவதற்கு குறிப்பு இருக்கிறது என்று ரெவின்யூ போர்டு மெம்பர் சொல்லியிருக்கிறாரா ? இல்லை என்றாலுங்கூட இதை அமல்படுத்துவதற்கு என்ன என்ன சூழ்நிலைகள் வேண்டும் செங்கற்பட்டு மாவட்டத்திலே ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்த இருபோகச் சாகுபடியானது தஞ்சாவூர், வட ஆற்காடு, தென் ஆற்காடு, மதுரை, தர்மபுரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகிறது. செங்கற்பட்டிலே போதுமான தண்ணீர் வசதி இருக்குமானால் அதுபற்றி யோசிக்கலாம். இப்பொழுது அங்கு இருக்கிற வசதியெல்லாம் மின் இணைப்பைக் கொண்டும், கிணற்றுப் பாசனம் மூலமாகவும்தான் அங்கே அதிகச் சாகுபடி செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, இந்த ரேஷன் திட்டத்தையொட்டி கோவையிலே. . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ரேஷன் பற்றிய கேள்வியல்ல இது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தயவுசெய்து மன்னிக்கவேண்டும். நான் முந்தின கேள்விக்குக் கை தூக்கினேன். தாங்கள் கூப்பிட்டு விட்டீர்கள். நான் பேசிக்கொண்டிருந்ததால் கவனிக்கவேயில்லை. தயவுசெய்து மன்னிக்கவேண்டும்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** ஒருபோக நிலங்களை இருபோக நிலங்களாகக் கொண்டுவருவதற்கு நியமிக்கப்பட்ட வருவாய்த் துறை அதிகாரி மொத்தம் தமிழ்நாட்டில எந்த எந்த மாவட்டங்களில். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாவட்டங்களைப் பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்களே.

**திரு. எஸ். ஆறுமுகம் :** எத்தனை எக்கர் விளைவிக்கலாம் என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்? 20 கோடி ரூபாய் அளவிலே ஒரு விவசாயத் திட்டத்தைத் தயார் செய்து மத்திய அரசுக்கு மாநில அரசு அனுப்பியதா ? அதற்காக மத்திய அரசு என்ன பதில் சொல்லியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ராயப்பா அவர்கள் கொடுத்த திட்டத்தின் அடிப்படையிலே தொகை கேட்கிறோம். இன்னும் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். ராஜ்ய உணவு அமைச்சர், திரு அண்ணா சாகிப் சிண்டே அவர்களை உணவு உற்பத்திக்கான மின் இணைப்புக்காகவும், சிறுபாசனத்திற்காகவும் 6 கோடி ரூபாய வேண்டுமென்று நாம் கேட்டபொழுது மத்திய அரசு உதவி செய்யும் என்று சொன்னார்கள். இன்னும் வந்து சேரவில்லை. அதற்குப் பிறகும் முதலமைச்சர் அவர்கள் மாநாட்டிலே அறிஞர் அண்ணா அவர்கள் இதை வற்புறுத்தி இந்த தொகையை அவர்கள் கொடுப்பார்களானால் தமிழ்நாடு உணவுத்துறையில் தன்னிறைவு பெறுவதோடு மட்டுமல்ல, அண்டை மாநிலங்களுக்கும் உதவ முடியும் என்று கூறினார்கள். அதன்பிறகு தஞ்சைக்கு வந்திருந்த உணவுத் துறையமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்கள் சென்னைக்கு அரிசியை அனுப்பிய விழாவிலே கலந்துகொண்டபொழுது இதைப்பற்றி எடுத்துச்சொல்லப்பட்ட நேரத்திலே அதை அனுதாபத்தோடு கவனிக்கிறேன் என்று சொன்னார்கள். நீங்கள் கேட்கிற 20 கோடி ரூபாய் இல்லாவிட்டாலும் சிறிய அளவிலாவது கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் இங்கே வருகின்ற பொழுதெல்லாம் இதைப்பற்றி நாம் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் [illegible] குறுவையை 3 லட்சம் என்றும் சம்பாவை 6 லட்சம் என்றும் இருபோகமாகக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. சாத்தனூர் அணை, கிருஷ்ணகிரி [illegible] பகுதியிலே இந்தத் திட்டத்தை எப்படி மேற்கொள்ளமுடியும் என்பதைப் பற்றியெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## Potato cold storage in Hosur taluk.

*361 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether there is any proposal to construct a cold storage to preserve seed potatoes in Hosur taluk; and

(b) if so, when it will be constructed ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:**

(அ) உருளைக்கிழங்குகளைப் பாதுகாப்பதற்கான குளிர்ப்பதனசாலை ஒன்றை ஹோசூர் வட்டத்தில் நிறுவுவதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: In the matter of potato cultivation, next to Nilgiris, Hosur takes the second place. There are a good number of cultivators of this vegetable. This is a delicate vegetable and gets rotten within a few days unless preserved in cold storage. The District Agricultural Officer is of the opinion that a cold storage plant is wanted there. The cultivators want it. Under these circumstances, will the Government be pleased to sanction a cold-storage plant for this taluk ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனையைப் பரிசீலனை செய்யலாம்.

## கதர்

*362 **வினா—திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1966-67-ம் ஆண்டிலும், 1967-68-ம் ஆண்டிலும் கதர் விற்பனை முறையே எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:**

1966-67-ல் ரூ. 202·91 லட்சம்.

1967-68-ல் ரூ. 208·57 லட்சம்.

**திரு. ஏ. இ. நரசிம்மன்:** தலைவரவர்களே, இந்தக் கதர் விற்பனையில் சில குறிப்பிட்ட நேரங்களிலே தான் ரிபேட் கொடுக்கப்படுகிறது. எப்பொழுதுமே ரிபேட் கொடுத்தால் விற்பனை அதிகமாகும் என்பதைப் பற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அகில இந்திய ரீதியில் கிராமக் கைத்தொழில் ஆணைக் குழுவின் பரிந்துரைகளின்படி அவர்கள் கொடுக்கும் நிதியைப் பொறுத்துச் செய்யப்படுகிறது. ஆகவே, ஆண்டு முழுவதும் ரிபேட் கொடுப்பதற்கு வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. வை. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, எந்த மாவட்டத்தில் அதிகமாக கதர் விற்பனையாகியுள்ளது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** மதுரை மாவட்டத்தில் [illegible] வட்டத்திலே [illegible] தெரிகிறது.





**திரு. ஏ. எம். இராஜா:** தலைவரவர்களே, 1966-67, 1967-68 ஆண்டுகளில் தமிழகத்தில் விற்கப்பட்ட கதர் அனைத்தும் தமிழகத்திலேயே உற்பத்தி செய்யப்பட்டதா ? அல்லது வடநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்யப்பட்டு அது விற்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** கதருக்குத் தேவையான சில பட்டு ரகங்கள், நூல்கள் வெளி மாநிலங்களிலேயிருந்து வாங்கப்பட்டு, நாமாக நெசவு செய்து விற்கப்பட்டதுதான்.

*363 **வினா—திரு. கே. என். குமாரசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் நெய்கின்ற கைத்தறியாளருக்கு கூலி உயர்வு கொடுக்க சர்க்காருக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் என்றால், எப்பொழுது, எவ்வளவு உயர்த்தப்படும் ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:**

(அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இந்தக் கதர் நெய்கின்ற தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு கொடுப்பது பற்றி கேட்ட கேள்வி ரொம்ப நாட்களுக்கு முன்பு கேட்கப்பட்டது. ஆனால், அதற்குப்பின்னாலே அந்தக் கதர் நெய்கின்ற தொழிலாளர்களுக்கு நூல் நூற்கின்ற பஞ்சு கொடுப்பதில்லை. நெய்கின்ற நூல் கிடைக்காமல் 6 மாதங்களாக நிறுத்தப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக அவர்களுக்கு மீண்டும் பஞ்சு நூலைக் கொடுத்து மீண்டும் அவர்களது வேலைக்குப் பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** புதிய அரசு பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பின்னாலே சிலபல இடங்களில் கதர் வாங்கிக்கொள்ளவில்லை. தங்களுக்குக் கட்டிவரவில்லை என்று சொல்லிவிட்டார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், நம்முடைய டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் அணிவதன் மூலம் அது கிழிந்துவிடும் என்று இருந்தது. அதனால் அவர்களது வேண்டுகோளையேற்று விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அதனால், அப்படி உற்பத்தியாகும் துணியைச் செலவழிக்க முடியாது என்று கருதி, தேக்கம் ஏற்பட்டுவிடும் என்று கருதி சிலபல இடங்களில் நிறுத்தப்பட்டது. இன்னும் சில இடங்களில் நஷ்டம் அதிகம் ஏற்பட்டது என்பதனால் நிறுத்தப்பட்டது. இப்பொழுது சீராக்கப்பட்டு பெரும்பாலும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு உற்பத்தி அதிகமாகி விற்பனையும் அதிகமாகி இருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, கதர் உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் அதிகம் வருகின்ற வகையில், சென்ற 1966-67-ம் ஆண்டைவிட, காங்கிரஸ் ஆட்சிக்குப் பிறகு புதிய ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால் 6 லட்சம் ரூபாய் அதிகமாக விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்று விபரங்கள் தரப்பட்டன. எந்த அடிப்படையில் இப்படி விற்பனை அதிகமாகியிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** குறிப்பிட்ட ஒரு கட்சிக்காரர் களுக்கு மட்டும் சொந்தம் என்கிற நிலையிலிருந்து அது மற்றவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்ட நிலைக்கு மாறி, நாட்டு மக்கள் அத்தனைபேரும் [illegible] தங்கள் [illegible] கொடுத்ததன் மூலம் [illegible] விற்பனை அதிகமாகியது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பத்தினர், இதில் குடும்பம் பூராவுமே அலைந்தாலும் ஒரு மாதத்திற்கு 60 ரூபாய், 70 ரூபாய்க்கு மேல் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. எனவே, அதை அதிகப்படுத்த அரசு ஏதாவது முயற்சி செய்யுமா ? அல்லது வேறு ஏதாவது மார்க்கம் கொடுத்து, அதாவது ராட்டைகளை அதிகப்படுத்தி, அல்லது வேறு விஞ்ஞான பூர்வமான நிலையில் அவர்களுக்கு ஏதாவது செய்து கூலி உயர்வு கிடைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி:** கிராமப் பகுதிகளில் வேளாண்மை போன்ற மற்றத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்கள் தங்கள் ஓய்வு நேரங்களிலே இந்த மாதிரியான தொழில்களைச் செய்து கூடுதல் வருமானமாகக் கிடைப்பதற்காக இது அமைக்கப்பட்டது. ஆகவே, மாதம் பூராவுக்கும் இவ்வளவுதான் ஊதியம் வருகிறது என்று அந்தக் கணக்கை எடுப்பது ஒத்து வராது. இரண்டாவதாகச் சுட்டிக்காட்டிய ராட்டைகளை அதிகமாக உற்பத்தி செய்யும் முறையில் 'டெக்ஸ்டூல் ராட்டை'களைப் பயன்படுத்தினால் ஒரு மடங்குக்கு இரு மடங்காக வரும். ஏற்கெனவே, 1 ரூபாய் பெற்றுக்கொண்டிருந்தால் இதன் மூலம் 2 ரூபாய் கிடைக்கும். ஆனால், டெக்ஸ்டூல் ராட்டைகள் கிடைப்பதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. விரைவாக எல்லாப் பகுதிகளும் பயன்படுத்த எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி:** தலைவரவர்களே, கதர் உற்பத்தி செய்யும் தொழிலாளர்களிடம், கூலியில் ஒரு பகுதியைப் பிடித்தம் செய்து, வருஷக் கடைசியில் அந்தத் தொகை அவ்வளவுக்கும் கதராகவே வாங்கிக் கொள்ளவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்யப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** கதரை நூற்று, கதரை நெசவு செய்து விற்பனை செய்கிறவர்கள் கதரை அணிந்துகொண்டால்தான் மற்றவர்கள் அதன்மேல் நம்பிக்கை வைப்பார்கள். அதனால் அவர்கள் அதை அணிய வேண்டுமென்று வேண்டுகோள்கள் விடப்படுகின்றன. அவ்வளவு தொகைக்கும் கதர் வேண்டுமென்பதில்லை. இருக்கிற நெசவாளர்கள் அந்தத் தொகை முழுவதற்கும் கதராகவே வாங்கி வேறு இடங்களிலே விற்று அந்தப் பணத்தைக் கொண்டு செலவழிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆண்டு முழுவதற்கும் கடைசியாக போனஸ் கிடைக்கிறது. நடுவிலே வேண்டுமென்றால் அந்தக் கணக்கிலே எடுத்துக் கொண்டு சரிக்கட்டுகிறார்களே தவிர இது கட்டாயப்படுத்தப்படுவதில்லை.

**திரு. ஆர். கருப்பையா:** தலைவரவர்களே, முன்பெல்லாம் தீபாவளி, பொங்கல் சமயத்தில் கதர் விற்கப்படும்பொழுது ரூபாய்க்கு 20 பைசா ரிபேட் கொடுத்தார்கள். சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் ரூபாய்க்கு 10 காசு தான் ரிபேட் கொடுக்கிறார்கள். ஆனாலும் விற்பனை பாதிக்கப் படவில்லை என்று அமைச்சரவர்கள் சொல்லலாம். ஆனால் 20 பைசா கொடுத்தால் இன்னும் அதிகமாக கதரை வாங்கி அணிய விரும்பு வார்கள். இனிமேலாவது அப்படிச் செய்ய இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அதற்கான தகவல் இல்லை. அப்படியே செய்வதாகயிருந்தாலும், மத்திய ஆணைக் குழுவின் கட்டளை இருக்கின்றன, அதற்கு அடங்கி செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

### ஸ்தல ஸ்தாபனங்களில் பணிபுரிவோர்

*364 **வினா—திரு. நா. காசிராமன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்துக்கள், நகரசபைகள் இவைகளின்கீழ் பணிபுரியும் ஊழியர்களின் சம்பள விகிதங்களை (pay scales) அரசாங்க ஊழியர்களின் சம்பள விகிதத்திற்கு உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இல்லை.



*365 **வினா—திரு வி. கே. கோதண்டராமன்:
திரு கரு. சீமைச்சாமி:** } மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

முனிசிபல் சர்வீசை ராஜ்ய சர்க்கார் சர்வீசுக்குக் கொண்டுவரும் ஆலோசனை எந்த நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :** 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை விரிவாகத் திருத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இத்துடன் இச்செயற்குறிப்பும் ஆலோசனையில் எடுத்துக்கொள்ளலாம்.

**திரு வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த ஆலோசனையிலிருப்பது எத்தனை ஆண்டு காலமாக ஆலோசனையில் இருக்கிறது. இன்னும் எத்தனை ஆண்டு காலத்திற்குள்ளாக அல்லது எத்தனை மாதத்திற் குள்ளாக அந்த ஆலோசனை முடிவுபெறும் ?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :** ஏற்கெனவே இதுபற்றி, கடந்த காலத்திலேயிருந்த அரசாங்கம் சட்டதிட்டத்தைத் திருத்த முடிவெடுத்தது. ஆனால் தேர்தல் நெருங்கிய காரணத்தால் அது விட்டுப்போய் இப்போது காலாவதி ஆகிவிட்டது. ஆகவே, புதிய முறைகளில், அதிலுள்ள சங்கடங்கள் அனைத்தையும் நிவர்த்தி செய்யவேண்டும். இதில் கால தாமதமானாலும் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று எடுத்துக்கொள்ளப் படுகிறது. எவ்வளவு விரைவிலே செய்து முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவிலே செய்து முடிக்கப்பெறும்.

**திரு இரா. சௌந்தரராஜ மூப்பனர் :** தலைவரவர்களே, சம்பளத்தை உயர்த்தாவிட்டாலும்; 25, 30 வயதில் நியமனம் செய்யப்பட்ட கடைநிலை ஊழியர்களைத் தொடர்ந்து பணியாற்ற அனுமதியில்லாதது பற்றி அரசு என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :** அது பற்றிய தகவல் இல்லை.

**திரு ஏ. சி. நரசிம்மன் :** தலைவரவர்களே, அரசாங்க ஊழியர்கள் தங்களுடைய லீவை சரண்டர் செய்து ஒருமாதச் சம்பளத்தைப் பெறலாம் என்று இருக்கும்பொழுது நகராட்சி ஊழியர்களுக்கும் அந்தச் சலுகைகள் வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :** அவர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு கே. விநாயகம் :** ஐயா, முனிசிபல் சர்வீஸிலே, கமிஷனர்கள், ஹெல்த் ஆபீசர்கள், எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியர்கள் ஆகிய சர்வீசை "புரோவின்ஷியலைஸ்" செய்து வைத்திருக்கிறார்கள். கீழே மாத்திரம் உத்தியோகஸ்தர்களான யு.டி.சி., எல்.டி.சி. மற்றுமுள்ள யிருக்கும் உத்தியோகஸ்தர்களான யு.டி.சி., எல்.டி.சி. மற்றுமுள்ள வர்களை அப்படிச் செய்யாததற்குக் காரணம், குறைவான ஊதியம் பெறுவதாலே ஆங்காங்கு மாற்றுவதனால் கஷ்டம் ஏற்படும். ஆகவே, உயர்ந்த ஊதியம் பெறும் உத்தியோகஸ்தர்களை மட்டும் மாற்றினால் போதும் என்பதை அடிப்படையாக வைத்துத்தான் முன்பு இதை விட்டுவிட்டது என்று தெரியுமா ? எனவே, தேர்தலுக்காக விட்டுவிட வில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொன்ன பதிலைத் தவருகப் புரிந்துகொண்டார்கள் என்று கருது கிறேன். ஏற்கெனவே இருந்த அரசாங்கம் இப்படியெல்லாம் மாற்று வதால் சங்கடங்கள் ஏற்பட்டுவிடும் என்று ஆலோசனையை விட்டுவிட்ட தாகக் கருதிச் சொல்லுகிருர்கள். அவர்களும் ஆலோசித்திருக்கிருர்கள். ஆனால் தேர்தல் நெருங்கியதால் சட்டத்தை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை வரும் என்று கருதி விடப்பட்டது என்று சொன்னேனே தவிர

தேர்தல் வருகிறது என்பதற்காக கைவிட்டார்கள் என்று நான் சொல்ல வில்லை. எனவே, கனம் உறுப்பினரவர்கள் தங்கள் கட்சியைக் காட்டிக் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

DR. H. V. HANDE: With regard to provincialisation of municipal services even in the Upper House when Dr. A. L. Mudaliar raised this question, the then Chief Minister Hon. Mr. M. Bhaktavatsalam gave the assurance that it would be considered. In view of this, will the Hon. Minister let us know what the exact difficulties are in the way of provincialisation, whether there are any extra financial commitments and whether the Government agree in principle at least that by provincialising the services the administration will be toned up and that the present difficulty which the Government find in the Corporation would be absent? Will the Government tell us whether it agrees in principle?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி:** இப்பொழுது அரசாங்க ஊழியர் களுக்கும், நகராட்சி மன்றங்கள், உள்ளாட்சி மன்றங்கள் இவைகளில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கும் சம்பளத்திலே வேறுபாடு இருக்கிறது. அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்று கணக்கை எடுக்கிற பொழுது, முன்னாலே சம்பளக் கமிஷன் சிலவற்றை கருத்திலே கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறது. அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்றாலும் நகராட்சியினுடைய நிதிநிலை அதற்கு இடம் கொடுக்கவேண்டும். அந்த நிதிநிலை இடம் கொடுக்காத தனாலே, அப்படிக் கொடுக்கவேண்டுமென்றால், நகராட்சியினுடைய நிதி அதற்கே போய்விடும் என்ற சங்கடநிலை ஏற்படுகிறது. ஆக ஊழியர்களுக்கான சம்பளத்தை மாற்றி மாநிலம் முழுவதும் உள்ள அதிகாரிகளாக மாற்றுகிறபொழுது உண்மையிலே அரசாங்கத்திற்குக் கொஞ்சம் பணம் தேவைப்படும் என்பதை இயல்பாக ஒத்துக்கொள்ள முடியும். ஆனால் அவைகளுக்காக மட்டும் நீண்ட காலத்திற்கு ஒதுக்கப் படுவது சரியல்ல. மாநில அளவில், மாவட்ட அளவில், சலுகைகளைப் பெறுவதற்கு சீர்திருத்தி செப்பனிட முடியுமா என்பதைப் பற்றித்தான் அரசு பரிசீலித்து வருகிறது.

முற்பகல் 10-00.

**திரு என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்களில் பியூன், வாச்மேன் ஆக பணிபுரிபவர்களுக்கு அவர்களுடைய வேலை முடிந்த பிறகு பென்ஷன் வழங்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உள்ளதா?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி:** மற்ற எல்லாவற்றையும் ஆலோசிக்கிற பொழுது, நிதிநிலையினுடைய அடிப்படையிலே இவைகளையும் ஆலோசிப்பதற்கு அரசாங்கம் தயங்காது.

**திரு ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே 'லோக்கல் செல்ப் கவர்ன்மெண்ட்' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள், இப்பொழுது கொஞ்சமாவது அங்கே நகரசபையிலே இருக்கக்கூடிய தலைவர்களுக்கோ, அங்கே இருக்கக்கூடியவர்களுக்கோ பயந்து நடக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இதை சர்க்கார் மாற்ற விரும்பினால் பின்பு அரசியல் எல்லாம் வரும் என்ற கருத்து இருக்கிறதா? அதை ஆலோசித்து இருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி:** 'லோக்கல் செல்ப் கவர்ன்மெண்ட்' என்று ஏற்படுத்துவது அந்தப் பகுதியிலே 'டி-சென்ட்ரலைஸ்' பண்ணி, வேலைகளெல்லாம் உடனடியாக முடிப்பதற்கு, பொதுச்சேவையிலே ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களெல்லாம் அந்தப்பணிக்குவரவேண்டுமென்பதற்காக ஏற்பட்டது. வருகிற அதிகாரிகளைப் பயப்படுத்துவதற்கு ஏற்பட்டது அல்ல. நகராட்சி





ஆணையாளர்கள், நகராட்சிப் பொறியாளர்கள் போன்றவர்களெல்லாம் இப்பொழுதும் மாநில அளவிலே நியமிக்கப்படும் அதிகாரிகள். ஆனால் எந்த நகராட்சி ஆணையாளரும் தலைவரும் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்வதாகவோ, ஆணையாளர் நகராட்சித் தலைவருக்கு அடங்காத நிலையோ இல்லை. டி-சென்ட்ரலைஸ்டு, அதிகாரத்தை ஒருவர்மேல் திணிப்பதற்காக ஏற்படவில்லை. அந்த அந்த பகுதிகளைக் கருத்திலே கொண்டு ஜனநாயக உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்றுதான் இது ஏற்படுத்தப்பட்டது. அந்த வகையிலே ஏற்பட்டதுதான்; அதிகாரத்தைப் பயன் படுத்த அல்ல. ஒரு வேளை ராஜபாளையத்தை 'வேட்டிக்கன் சிட்டி' மாதிரி தனியாக அமைக்கவேண்டுமென்று உறுப்பினர் நினைத்தால், காலம் கனிந்துவரும் வரை அவர் காத்திருக்கவேண்டும். அதுவரை மக்களும் உறுப்பினரைத் தலைவராக வைத்திருக்கவேண்டும்.

## ஊராட்சி ஒன்றியங்களின் கணக்குத் தணிக்கை

* 366—வினா: **திரு. பெ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களின் வரவு-செலவுகளை தணிக்கை (Audit) செய்யப்பட்டு வருகிறதா?

(இ) ஆம் எனில், வருடத்துக்கு எத்தனை முறை?

(உ) குளித்தலை வட்டம், கிருஷ்ணராயபுரம ஊராட்சி ஒன்றியத்தின் வரவு செலவு எப்போது தணிக்கை செய்யப்பட்டது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) ஆம்.

(இ) ஊராட்சி ஒன்றிய வரவு-செலவு கணக்குகள் அரையாண்டுக்கு ஒருமுறை பரிசீலிக்கப்படுகின்றன.

(உ) கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி முடியவுள்ள நிதி ஆண்டிற்குரிய வரவு-செலவு கணக்குகள் 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் தேதிமுதல் 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் தேதிவரையுள்ள நாட்களில் தணிக்கை செய்யப்பட்டுள்ளன.

**திரு. பெ. சௌந்திரபாண்டியன்:** தலைவர் அவர்களே, தணிக்கை யாளர்கள் முன்னறிவிப்பு கொடுத்து தணிக்கை செய்ய ஊராட்சி ஒன்றியங்களுக்கு செல்வதால் அவர்கள் கணக்கு வகைகளை சரிப்படுத்துவதற்கு வாய்ப்பாக இது அமைகிறது. ஆகவே, முன்னறிவிப்பு இன்றி, திடீரென தணிக்கை செய்ய அரசு ஆலோசனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** வரவு-செலவு கணக்குகளை தணிக்கை செய்வது, போன ஆண்டிலே நடைபெற்று, முடிந்ததைப் பற்றிதான். முன் அறிவிப்பு கொடுத்ததனாலேயே இருக்கிற கணக்குகளை திருத்திவிட முடியுமா? திடீரென்று நடைமுறையிலே இருக்கிற கோளாறு களைக் கண்டுபிடிக்கத்தான் முன் அறிவிப்பு இல்லாமல் செல்வது உண்டு. ஆடிட்டுகளிலே முன் அறிவிப்பு கொடுக்காமல் சென்றால், கணக்குகளை எல்லாம் சமர்ப்பிக்க முடியாது, விதிமுறைகளும் இடம் கொடுக்காது. ஆண்டாண்டு காலமாக, அங்கே மட்டுமல்ல, மாநில அளவிலே மத்திய அளவிலே நோட்டீஸ் கொடுத்துத்தான், தவணை கொடுத்துத்தான் தணிக்கை செய்யப்படுகிறது. அதிலே முறைகேடு எதுவும் இல்லை, மாற்றுகிற உத்தேசமும் இல்லை.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** வரவு-செலவு கணக்குகளை தணிக்கை செய்து தணிக்கையாளர் குறிப்புகளை எழுதி இருக்கிறார்கள். ஒழுங்கீனங்களைப்பற்றியும் மற்ற விஷயங்களைப்பற்றியும் குறிப்புகள் எழுது

இருக்கிறார்கள். இம்மாதிரி எழுதப்பட்ட குறிப்புகள்மீது பஞ்சாயத்து யூனியன்கள் நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றன. அம்மாதிரி குறிப்புகள்மீது நடவடிக்கை கண்டிப்பாக எடுப்பதற்கு ஒரு உத்தரவை அரசு தரப்பிலிருந்து பிறப்பித்து, வரவு-செலவைக் கணிக்க ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி:** அப்படி எழுதப்படுகிற குறிப்புகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கவனத்துக்கு சுட்டிக்காட்டப்பட்டதனுடைய அடிப்படையில் விரைவாக அவைகளை முடிவு செய்து அரசாங்கத்திற்கு அறிக்கைத் தரவேண்டுமென்றும் குறைகள் நிவர்த்திக்கப் படவேண்டுமென்றும் அவ்வப்போது கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

*Collection bonus system*

* 367 Q.—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether collection bonus system has been introduced in the State Transport Department; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார்:** (அ) இல்லை. (இ) இவ் வினாவுக்கு இடம் இல்லை.

**திரு. கே. விநாயகம்:** தேசியமயமாக்கிய இந்தத் துறையிலே போதிய அளவுக்கு நமக்கு வரவேண்டிய வருவாய் வருவதில்லையென்று குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். அதே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா, அரசாங்கப் போக்குவரத்துத் துறையில் வசூல் பூரிப்பூதியம் வழங்கும் திட்டம் பற்றியது.

**திரு. கே. விநாயகம்:** அதற்குத்தான் வருகிறேன். 'ஐ எம் கமிங் டு தி பாயிண்ட்'. மற்றவர்கள், தனிப்பட்டவர்கள் நடத்துகிறார்கள். அவர்களுக்கு அதிகமாக 'கலெக்ஷன்' வருகிறது. நமது பஸ்கள் போகிற இடத்திலே 'கலெக்ஷன்' வராமல் இருக்கிறது. அதற்காகத்தான், ஊக்கப்படுத்துவதற்குத்தான் 'போனஸ்' தரலாம் என்ற ஆலோசனையை எதிர்க்கட்சிக்காரர்களும், ஆளும் கட்சிக்காரர்களும் சொன்னார்கள். இது அமுலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டிருக்கும்போது ஏன் கைவிடப்பட்டது? புதிதாக வந்திருக்கிற அமைச்சரவர்கள், இதை யோசித்து ஆரம்பித்துப் பார்த்து, நல்ல முறை என்று ஏற்றுக்கொண்டு, அமுல் படுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தமிழக அரசுக்கு போக்குவரத்துத் துறையில் இழப்பு ஏற்பட்டு வருகிறது என்பது உண்மை. ஆனால் இந்த ஊக்க போனஸ் கொடுப்பதில் பற்பல சிக்கல்கள், பிரச்சினைகள் ஏற்படுகின்றன. முதலாவது, ஊக்க போனஸ் கொடுப்பது என்றால் வசூல் செய்கிற கண்டக்டருக்கு மட்டும் கொடுப்பதா, டிரைவருக்கும் சேர்த்து கொடுப்பதா என்ற சிக்கல் இருக்கிறது. இரண்டாவது, வசூல் தொகையின் அடிப்படையில் கொடுப்பதா, அல்லது எத்தனை டிக்கட்டுகள் விற்கப்பட்டன என்ற அடிப்படையில் கொடுப்பதா என்ற சிக்கலும் இருக்கிறது. வசூல் அடிப்படையில் கொடுப்பதானால், நாள்படி வசூலில் கொடுப்பதா, வாரப்படி வசூலில் கொடுப்பதா, மாதப்படி வசூலில் கொடுப்பதா என்ற சிக்கல் இருக்கிறது. நாள்படி வசூலில் கொடுக்கலாம் என்றால் செவ்வாய்க்கிழமை வசூல் குறைவாக இருக்கிறது. வாரத்தின் அடிப்படை





யில் என்றால் மாதத்தின் முதல் வாரத்தில் அதிகமாக வசூல் ஆகிறது, கடைசி வாரத்தில் குறைவாக இருக்கிறது. மாதத்தின் அடிப்படையில், விழாக் காலங்களிலும், திருமணக் காலங்களிலும் வசூல் அதிகமாக இருக்கிறது. இப்படியெல்லாம் பற்பல சிக்கல்கள் இருப்பதன் காரணமாக, இவைகளை ஆராய்வதற்கும், போக்குவரத்து துறையிலே ஏற்படுகின்ற இழப்பை சரிபடுத்துவதற்கும், அதேசமயம் ஊழியர்களை ஊக்குவிப்பதற்கும் ஆன வழிவகைகளை ஆராய்வதற்காக, மேல்மட்டக் குழு உயர் திரு சோமசுந்தரம் அவர்களுடைய தலைமையிலே அமைந்திருக்கிறது. ஆனால் ஒன்றைமட்டும், நமது எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஊக்க போனஸ் என்ற முறை பம்பாயிலுள்ள போக்குவரத்துத் துறையில் சோதனையாக அமுல்படுத்தப்பட்டு, அது வெற்றிகரமாக இல்லையென்று கைவிடப்பட்டுள்ளது.

**கூட்டுறவு நிறுவனங்களின் கணக்குகள்**

* 368—**வினா திரு. கே. போஜன்:** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நிறுவனங்களின் கணக்குகளைத் தனியார்துறைத தணிக்கையாளர்களைக் கொண்டு தணிக்கை செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** கூட்டுறவு நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்யும் பொறுப்பு அரசைச் சேர்ந்தது. என்றாலும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், நூற்பு ஆலைகள் இவைகளின் கணக்குகளை தனியார் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களைக் கொண்டு தணிக்கை செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதி 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் நாள். அந்த ஆணை எண் 824.

DR. H. V. HANDE : Does this Government feel that it is much cheaper to have this audit done by private agencies ? Is it a fact that there is greater independence if independent agencies audit ? What are the reasons for the issue of this order ? Is this Government going to ratify it?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** முந்திய அரசு பிறப்பித்த அந்த ஆணை நல்லெண்ணத்தின அடிப்படையிலே பிறப்பிக்கப்பட்டது என்பதை, மறைந்த முன்னாள் முதல்வரின் அரசும், அதற்குப் பின்னால் வந்த இப்பொழுதுள்ள அரசும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால், தணிக்கை முறைகளை நன்றாக ஆராய வேண்டியிருக்கிறது என்ற காரணத்திற்காக கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த பெரிய நிறுவனங்களின் கணக்குகளையும் குறிப்பாக நூற்பாலைகளின் கணக்குகளையும் சர்க்கரை ஆலைகளுடைய கணக்குகளையும் தணிக்கை செய்வதற்கு இப்போதுள்ள முறைகளைத் திருத்தி அமைக்கவேண்டுமா என்பதை உயர்திரு சந்தானம் அவர்களுடைய தலைமையில் உள்ள குழு ஆராய்ந்துள்ளது.

**திரு. எம். சுரேந்திரன்:** கேள்வி எண் 367-க்கு ஒரு சப்ளிமெண்டரி கேள்விகூட அனுமதிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது அடுத்த கேள்விக்குப் போயாகிவிட்டது. இப்பொழுது வரப்போகின்ற மானியக் கோரிக்கையில் அதைப்பற்றிப் பேசிக்கொள்ளலாம். நேரம் ஆகிவிட்டது.

**திரு. சி. கோவிந்தராசன்:** தணிக்கை செய்யக்கூடிய முறை அந்தந்த இலாகாவிலிருந்து கூடாது, அதற்குப் பதிலாக மாநில ஆடிட்டர் ஜெனரலின்கீழ் ஆடிட் நடப்பதுதான் நல்லது. நிதியமைச்சர் அவர்கள் இறுதி ஆடிட், மாநில ஆடிட்டர் ஜெனரல் கீழ்தான் நடைபெறுகிறது என்று

குறிப்பிட்டார்கள். தனியார் துறையிலிருந்து ஆடிட்டர் போவதாயிருந்தால் கூட்டுறவுத் துறையில் நிச்சயம் பல்வேறுவிதமான ஊழல்களுக்கும், வேறுவிதமான முறைகேடுகளுக்கும் இடம் இருக்கும் என்பதை ஏற்கனவே முன்பிருந்த அரசாங்கம் பிறப்பித்த உத்தரவினால் வரக்கூடிய விளைவுகளை அனுபவித்து உணர்ந்திருக்கும்பொழுது, அதை ரத்த செய்து நேரடியாக அரசாங்க ஆடிட்டரே ஆடிட் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அரசாங்கம் ட்கின்ற தணிக்கையில் தாமதம் ஏற்படுகின்றது. அதற்கு அதிகச் செலவும் ஆகின்றது என்பதைக் கருத்தில் கொண்டுதான, தணிக்கை ய் ன்ற முறைகளைப்பற்றி புனராய்வு செய்வதற்காக திரு. சந்தானம் அவர்களின தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழு ஆராய்ந்துள்ளது. அந்த அறிக்கை விரைவிலே எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கோ. இர. ஞானசம்பந்தன்:** இந்த முறையில் தவறு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அரசாங்க முறையில் தாமதம் இருந்து, அரசாங்க முறையிலே செலவும் அதிகமாய் இருக்குமானால், அதைப்பற்றி அரசாங்கம் போதுமான அளவு கவனம் எடுத்துக்கொண்டு, செலவைக் குறைப்பதற்கும், தாமதத்தைப் போக்குவதற்கும் அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஏற்கெனவே நான் முந்திய வினாவுக்கு விடை அளித்திருக்கிறேன். அரசுத் துறையில் இருக்கும்படியான தணிக்கையாளர்களைக் கொண்டு தணிக்கை செய்வதிலே அதிக தாமதம் ஏற்படுகின்றது என்பதை இந்த அமைச்சு உணர்ந்திருக்கிறது. தாமதம் மட்டுமல்ல, செலவும் அதிகமாக அந்தந்தக் கூட்டுறவு நிறுவனங்களே தாங்கவேண்டியதாகவும் இருக்கிறது என்பதையும் இந்த அமைச்சு உணர்ந்திருக்கிறது. திரு. சந்தானம் குழுவானது இதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கும்பொழுது, அதன முடிவைக் கையில் வாங்கிக்கொண்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கக் கருதியுள்ளோம் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. நடைமுறைக் கேள்வி

### மேலவையில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டு சட்டப் பேரவைக்கு அனுப்பப்பட்ட மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள மூன்று நாட்கள் அவகாசம் கோரல்.

DR. H. V. HANDE: On a point of order, Sir, I wish to raise a point of order under sub-rule (4) of Rule 83. It says that a point of order may be raised in relation to the business before the House at the moment. The business that has been placed before the House immediately after questions and answers, is No. 2 Government Bills. Rule 120 says that after such a Bill, with such amendments or recommendations has been laid on the table, any Minister in the case of a Government Bill or in any other case, any member after giving three days' notice. may move that the amendments or recommendations be taken into consideration. Now we have before this House a Bill that has been returned by the Legislative Council. So it has to be formally introduced. After that three days, notice



has to be given. Whatever Bill it may be, when it comes with the recommendation of the Council with any amendments, it has the same disabilities of any other normal Bill. That Bill has to be introduced and three days' notice has to be given. An amending Bill suffers from the same disability as any normal Bill, till such time it gets the President's assent under Article 200 of the Constitution. Therefore, all the rules of procedure applicable to an ordinary Bill, applies to this Bill also. In other words, the Bill has got three stages. The first stsage is the stage of introduction.

அறிமுகப்படுத்துவது.

Later on, comes the stage of consideration. We must have time to move amendments. An important situation has been created by the Legislative Council returning the Bill with amendments. The Bill has to be introduced here and three days' notice be given, as in the case of other Bills. This Bill also suffers the same disabilities as a regular Bill. Three days' notice has to be given. Then only we will have time to give notice of any amendments which we may like. We will then only have time to go through the Bill, in its amended form. Let us not treat this as a party issue. We will discuss it calmly. We have to be given time to meet the new situation that has arisen.

I request, you, Sir, to give your considered ruling on the point I have raised.

THIRU P.G. KARUTHIRUMAN: I support the hon. Member's suggestion that the consideration of the Bill be postponed to some other day.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** எதிர்கட்சித் தலைவர் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்காக நான் அதை ஏற்றுக்கெள்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு விதிமுறைப் பிரச்னையை இங்கே கொண்டுவரத் தேவையில்லை என்பது தான் உண்மையான நிலை. ஏனென்றால், விதி 120-ல் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது.

'After such a Bill, with such amendments or recommendations has been laid on the table, any Minister in the case of a Government Bill or in any other case, any Member after giving three days' notice may move that the amendments or recommendations be taken into consideration.'

கவுன்சிலிலிருந்து வரக்கூடிய திருத்தங்களுக்கு அல்லது அப்படிப் பட்ட அமெண்டுமெண்டை இங்கே கொண்டுவருவதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன.

வழக்கமான பில்களுக்கு அனுசரிக்கவேண்டிய முறைகளை இதற்கும் அனுசரிக்கவேண்டியதில்லை. கவுன்சிலிலிருந்து வருகின்ற அமெண்டுமெண்டை சில வேளைகளில் இந்தச் சபை ஏற்றுக்கொள்ளலாம், அல்லது ஏற்கனவே இந்தச் சபை எடுத்த முடிவை உறுதிபடுத்தலாம். இதற்கெல்லாம் இடைஞ்சல் வரக்கூடாது என்பதற்காகத்தான் இதற்காக தனி விதிமுறைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரே ஒரு குறைபாடு இருந்தால்தான் இந்த அரசாங்கம் திருத்திக்கொள்ள வேண்டியிருக்கும். நோட்டீஸ் கொடுக்கப்படாமல் இருந்தால்தான் திருத்திக்கொள்ளவேண்டியிருக்கும். 14-ம் தேதியே நோட்டீஸ் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இது விதிமுறைகளை அனுசரித்துத்தான் இருக்கிறது. ஆனால் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. அவகாசம் வேண்டுமென்றால் நாளையதினமே கூட எடுத்துக்கொள்ளலாம்.

THIRU P. G. KARUTHIRUMAN : It can be taken up on the coming Saturday.

DR. H. V. HANDE : I fully agree that the Bill as amended by the Council was placed on the table and circulated to us on 14th March 1969. But I request you to consider this point. The Bill has to be formally introduced ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 120-வது விதியில் இப்படிப்பட்ட நிலைமை இல்லை. மூன்று நாட்கள் நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அறிமுகப்படுத்தப்படவேண்டிய தேவையே இல்லாமல் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்றுதான் இருக்கிறது.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : "After such a Bill, with such amendments or recommendations has been laid on the table any Minister in the case of a Government Bill or in any other case, any member after giving three days' notice, may move that the mendments or recommendations be taken into consideration."

சாதாரண "பில்" மாதிரி இது அறிமுகப்படுத்தப்படவேண்டியதில்லை. இதற்குரிய விதிமுறைகள் வேறு. 120-வது விதியிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

After such a Bill has already been introduced, in respect of an amendment to the Bill, a mere notice is sufficient. That is the point.

DR. H. V. HANDE : Any amendment which the Government brings forward to a Bill is formally introduced. I request that the same facility be given to this amendment also.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "ஃபெஸிலிடீஸ்" கேட்பது வேறு, பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பி அது முறையா என்று கேட்பது வேறு. வசதி வேண்டும் என்று கேட்கலாம், திருத்தம் கொடுக்கவேண்டும் என்று சொல்வது வேறு நிலைமை. இது முறையாக வரவில்லை என்று சொல்லுவது வேறு. இதில் எந்தவிதமான முறைகேடும் இல்லை என்பதைத் தெரிவிக்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கூறினார்கள், அதற்கு வேண்டிய அறிவிப்பு ஏற்கனவேயே கொடுக்கப் பட்டிருக்கிறது என்று. கனம் அங்கத்தினர் டாக்டர் ஹாண்டே அவர்கள்



எழுப்பிய பாயிண்ட் ஆப் ஆர்டர் சரியாக இல்லை என்று கூறிவிட்டாலும் ஏற்கனவே உத்தேசித்தபடி திருத்தம் பற்றிய பரிசீலனையை இப்பொழுதே எடுத்துக்கொள்வதுதான் சரியாக இருக்கும். இதில் எந்த விதிமுறைச் சிக்கலும் இல்லாததால், நிகழ்ச்சியில் போட்டபடியே, ஒத்திவைக்காமல், எடுத்துக்கொள்ளலாம். ஒத்திவைப்பது சரியாக இருக்காது என்பதைத் தெரிவிக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இந்த "பில்" விவாதத்திற்கு வருகிறது. இன்னும் படிக்கவேண்டும். சனிக்கிழமை எடுத்துக்கொள்ளலாம் என்று ஒத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எதிர்க் கட்சித் தலைவர் சொல்வதை நான் முழு மனத்தோடு ஏற்றுக்கொள்கிறேன். திரு. சங்கரய்யா அவர்களுடைய யோசனைக்கு முன்பே இது ஒத்துக்கொள்ளப் பட்டதால், இதை சனிக்கிழமையே எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மற்ற மசோதாக்களையும் அன்றைக்கே எடுத்துக்கொள்ளலாமே.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதற்கும் இதற்கும் சம்புந்தம் இல்லை. மற்றதையெல்லாம் இன்றைக்கே எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போதோ, அல்லது மானியக் கோரிக்கைகள் விவாதத்தின்போதோ, மற்ற அலுவல்களை தலைவர் அவர்கள் அனுமதியோடுதான் கொண்டுவரவேண்டும். அப்படிக் கொண்டுவரும்போது, நாங்கள் விவாதத்திற்குத் தயார் செய்யவேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில் முக்கியமான மசோதாக்கள், மற்ற பொருள்கள் பற்றி மசோதாக்கள் கொண்டுவரும்போது, அதில் போதுமான கவனம் செலுத்தி, தெளிவாகப் பேசுவதற்குத் தயாராக வரமுடியாது, என்கிற நிலை அங்கத்தினர்களுக்கு ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க இந்த மானியக் கோரிக்கைகள் விவாதத்தின்போது வேறு அலுவல்கள் வருவது சரியா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது டாக்டர் ஹாண்டே அவர்களுக்குச் சொன்னதுதான் உங்களுக்கும் பொருந்தும். இந்த நேரத்தில் அரசாங்க மசோதா கொண்டுவரக்கூடாது என்று விதியில்லை. பேரவைத் தலைவருடைய அனுமதியோடு கொண்டுவருவதற்கு விதிகளில் இடம் இருக்கிறது. ஆகவே, விதியில் முரண்பாடு எதுவும் இல்லை. வசதி வேண்டும், அதற்காக நேரம் கொடுக்கவேண்டும், என்று அங்கத்தினர்கள் கேட்கலாம். அதில் ஒன்றும் ஒழுங்குப் பிரச்சினை இல்லை. திரு. இராமமூர்த்தி அதை உணரவேண்டும். நேரம் வேண்டும் என்று கேளுங்கள். முறைகேடு வரக்கூடாது. அது சரி. ஆனால், மசோதாக்கள் கொண்டுவருவதற்கு வழி இருக்கிறது. இதில் ஒன்றும் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** விதி 120 தெளிவாக இருக்கிறது. கனம் அமைச்சர் 14-ந் தேதியே சபையில் நோட்டீஸ் கொடுக்கப் பட்டிருக்கிறது என்றார்கள். 14, 15, 16-ம் தேதிகள் போக ஒரு மெம்பர் ஒரு திருத்தம் கொடுக்கவேண்டுமானால், 17-ந் தேதிதான் கொடுக்க முடியும். Notice of three days' clear time has to be given. அதனால் ஒரு மெம்பர், நோட்டீஸ் கொடுக்க நினைத்தால், 17-ந் தேதி எடுத்துக்கொள்வதாக இருப்பதால், நான் ஒரு அமெண்ட்மெண்ட் கொடுக்கவேண்டும் என்று நினைத்தால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது எப்பொழுதும் கொடுக்கலாம் உறுப்பினர்கள் இந்த நேரத்தில் திருத்தங்கள் கொடுக்கவேண்டும் என்று கொடுத்தால்கூட ஏற்றுக்கொள்ளுகிறோம். திருத்தங்கள் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. வாய்ப்பு இல்லை என்று சொல்ல முடியாது. 14-ம் தேதி நோட்டீஸ் கொடுக்கப்பட்டது என்றாலும், 12-ம் தேதியே திருத்தப்பட்ட மசோதா அங்கத்தினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இவ்வளவு பேசி, விதி எப்படி இருக்கிறது என்று சொல்லி, உறுப்பினர்களுடைய வசதிக்காக வேறொரு நாள் எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவான பிறகு, மீண்டும், மீண்டும் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பி, மன்றத்தின் காலத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று சொல்லுகிறேன்.

***திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, இது வேறு சற்று முன்பு கேள்வி நேரத்தின்போது, அமைச்சர் எனக்குப் பதில் சொல்லும்போது, ''பிரொவின்ஷலைஸேஷன்'' பற்றிக் கேட்டபோது, அவர்கள் கூறிய பதிலில் சில வார்த்தைகள் "ராஜபாளையத்தை 'வாடிகன் சிட்டி" போல, தனியாக அமைக்க வேண்டும் என்று உறுப்பினர் நினைத்தால்....'' என்று சொல்லி மிரட்டினார்கள். அந்த வார்த்தைகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி பார்ப்போம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதிலே, நோட்டீஸ்தான் 14-ம் தேதி கொடுக்கப்பட்டதே தவிர, ''பில்'' கவுன்சில் அமெண்ட் மெண்டை ஒட்டி 12-ம் தேதியே உறுப்பினர்களுக்கு வினியோகிக்கப் பட்டிருக்கிறது. இரண்டு நாட்கள் முன்னாலேயே சட்டமன்றத்தில் வைக்கப்பட்ட ஏடுகளில் இருக்கிறது. அதிலே தொடர்ந்து அங்கத்தினர் கள் கவனம் செலுத்தியிருக்கலாம். பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இந்த நேரத்தில் வேண்டுமென்றாலும், அமெண்ட் மெண்ட் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது பொது விதிமுறைகளுக்கு அனுசரித்து வராது. குறிப்பிட்ட திருத்தத்தின் அடிப்படையில் இந்த சபை என்ன செய்கிறது என்பதைத் தெளிவாக்க ஏற்படும் திருத்தங்களுக்கு வரம்பு முறைகள் இருக்கின்றன. அதிலே ஒன்றும் விதித் தவறு இல்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** அமைச்சரவர்கள் 12-ம் தேதி வினியோகிக்கப்பட்டது என்றார்கள். (மாண்புமிகு திரு. கே. ஏ மதியழகன் : It is published.) 12-ம் தேதி பப்லிஷ் செய்யப் பட்டது என்று சொன்னார்கள். ஆனால், இந்த அவையில் எப்பொழுது 'கன்ஸிடரேஷனுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பது அப்பொழுது தெரியாது. எந்தத் தேதியில் 'கன்ஸிடரேஷன்'' என்பது எனக்குத் தெரியாது. எந்த அங்கத்தினருக்கும் தெரியாது' 14-ம் தேதிதான், 17-ம் தேதி எடுத்துக்கொள்ளப்படும் என்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. மூன்று நாள் வேண்டும் என்றால், எப்பொழுது அமெண்ட்மெண்ட் கொடுப்பது? இப்பொழுது சனிக்கிழமை எடுத்துக் கொள்ளலாம் என்பதால் பிரச்சினை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி அவர்கள் திருத்தம் கொடுப்பதாக இருந்தால், மூன்று நாள் இடை வெளி வேண்டும் என்று கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டேன். மசோதா எடுத்துக்கொள்ளும் அன்றே திருத்தம் ஏற்றுக்கொள்ளப் படுகிறது. மூன்று நாள் வேண்டும் என்று, எந்த திருத்தமும்



திருப்பப்பட்டு இருந்தால், அந்த ஆட்சேபனையைச் சொல்லலாம். அப்படியில்லை நிலைமை. இப்பொழுது கொடுத்தால்கூட திருத்தங்களை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆகவே, அதில் எந்தவித மான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

**3. நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருக்கையில் அது சம்பந்தமாக ஓர் உறுப்பினருடைய குற்றச்சாட்டு பற்றி குழு அமைத்தல் குறித்த தீர்ப்பு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுப்பராஜா அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினைபோன்று—அது உரிமைப் பிரச்சினை இல்லை—ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். 13-ம் தேதியன்று, திரு. சிவ சுப்பிரமணியம் அவர்கள பேசும்போது, குறுக்கிட்டு, திரு. ஞான சம்பந்தன், கீழ்வெண்மணி நிகழ்ச்சியில் காங்கிரஸ்காரர்கள்தான் பிரதான சக்தியாக இருந்தவர்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார் கள். அதற்கு, 'அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள முடியுமா' என்று காங்கிரஸ் தரப்பிலிருந்து கேட்கப்பட்டது. திரு. ஞானசம்பந்தன், 'பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன்' என்று சொன்னார்கள். அப்படிப் பொறுப்பேற்றுக் கொள்வதாக இருந்தால், ஒரு குழு அமைக்க முடியுமா என்று கேட்டதற்கு, 'குழு அமைக்க முடியும்' என்று பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு கொடுத்தார்கள். அதை ஒட்டி, திரு. சுப்பராஜா, கீழ் வெண்மணி நிகழ்ச்சி வழக்கு மன்றத்தில் இருக்கும்போது, குழு அமைப்பது நம்முடைய விதிமுறைப்படி மாறு பாடாக இருக்காதா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். அதன் மேல் நான் தீர்ப்பு அளிப்பதாகக் கூறியிருக்கிறேன்.

நம்முடைய சபாநாயகர்கள் கூடிய மாநாட்டில் இப்படிப்பட்ட பிரச்சினை ஆராயப்பட்டது. அந்த நேரத்தில் அம் மாநாட்டிற்கு தலைமை வகித்த, பார்லிமெண்ட் ஸ்பீக்கர், திரு. ரெட்டியார் அவர்கள், நம் முடைய உறுப்பினர்களுக்கு, வழக்கு மன்றத்தில் இருக்கிறது ஒரு பிரச்சினை என்பதற்காக விவாதிக்கக்கூடாது என்று தடைபோட்டு, ஒரு முக்கியமான நிகழ்ச்சியைப்பற்றி இந்த மன்றத்திலே விவாதிக்க உரிமை மறுப்பது முறையாகாது என்று கூறி, அதே நேரத்தில், அந்த நிகழ்ச்சிகளைப்பற்றிக் கூறும்போது, நிகழ்ச்சிகளுக்கு விளக்கமாக வழக்கின் உட்புகுந்து பேசத் தடை விதிக்கவேண்டும், மேலெழுந்த வாரியாக வழக்கு மன்றத்தில் இருக்கிறது என்று விவாதத்தை மறுத்துவிடக்கூடாது என்று கருத்துப்பட கருத்துத் தெரிவித்திருக்கி றார்கள். இதை அந்தப் பேரவைத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கி றார்கள்.

"While on the one hand the Chair has to ensure that no discussion in the House tends to prejudice the course of justice, the Chair has to see that the House is not debarred from discussing an urgent matter of public importance on the ground that a similar allied or linked matter is before a court of law. The test of *subjudice* in my opinion should be that the matter sought to be raised in the House is substantially identical with the one on which a court of law has to adjudicate." என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். அந்த முறையில் திரு. கொ. இர. ஞானசம்பந்தன் அவர்கள், அதில் ஈடுபட்டிருக்கிறவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்ற பொதுவான குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறார்கள். அதற்குப் பொறுப்பு ஏற்று குழு அமைக்கிறோம் என்று சொல்லியிருக் கிறோம். குழு அமைக்க வேண்டுமென்று கோருவது நடைமுறையில் இருக்கிற வழக்குமன்ற நிகழ்ச்சிக்கு எந்தவிதமான குறுக்கீடும் இல்லாத காரணத்தால் அதில் எந்தவிதமான முறைகேடும் இல்லை யென்று தீர்ப்பு அளிக்கிறேன்.

**4. அரசினர் மசோதா.**

**தமிழ்நாடு 1969-ம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு—நியாயவாரம் செலுத்துதல் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 8/1969).**

* THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I beg to move—

"That the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill,* 1969 (L.A. Bill No. 8 of 1969) be taken into consideration."

During August 1968, the Government brought before this House a Bill called the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1968 (L.A. Bill No. 18 of 1968) so as to provide for the preparation and maintenance of record of tenancy rights in respect of agricultural lands as a preliminary step towards implementation of further progressive land reform legislation. According to clause 2 (8) (a) of that Bill, "tenant", in relation to any land to which the Madras Cultivating Tenants Protection Act, 1955 (Madras Act XXV of 1955) applies, means a cultivating tenant as defined in clause (aa) of section 2 of that Act and includes a sub-tenant, if he contributes his own physical labour or that of any member of his family in the cultivation of such land. The object was that the record of tenancy rights which is to be prepared and maintained under the said Bill when enacted into law should also contain particulars about the sub-tenants.

The Select Committee which considered the Bill suggested that before the law relating to the preparation of Record of Tenancy Rights is enforced, sub-tenants should be protected from eviction in the same way as a cultivating tenant under the Madras Cultivating Tenants Protection Act, 1955. In pursuance of this suggestion of the Select Committee, the Government have brought forward this present Bill. Under the present Bill, a sub-tenant who contributes his own physical labour or that of any member of his family in the land will be deemed to be a cultivating tenant for the purposes of the Madras Cultivating Tenants Protection Act, 1955.

In Kathaperumal Padavachi *Versus* Muthiah Odayar. (1963 I M.L.J. 359), it was held that a sub-lessee cannot have any rights as against the head lessor as there is neither privity of estate nor privity of contract between the head lessor and the sub-lessee and that the head lessor's rights will not be affected by the sub-lease and that the sub-tenants' rights will stand or fall with the right of the chief tenant. It has been considered necessary that if a sub-tenant continues in possession of the land notwithstanding that the person who sub-let the land to such sub-tenant ceases to have the right to possession of such land either by efflux of time of the main lessor or by forfeiture thereof, then the sub-tenant should have the right to protection from eviction. Such a sub-tenant has to be treated as a cultivating tenant for the purposes of the Madras Cultivating Tenants Protection Act, 1955 (Madras Act XXV of 1955).

* Published in the Fort St. George Gazette Extraordinary, dated 5th March 1969.



To give effect to the above objects clause 2 of the Bill seeks to make suitable changes in the definition of a cultivating tenant as contained in clause (aa) of section 2 of Madras Act XXV of 1955. The other changes made by clause 2 of the Bill in Madras Act XXV of 1955 are consequential.

Clause 3 seeks to make suitable changes in the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956, consequent on the amendment suggested in clause 2 to the Madras Cultivating Tenants Protection Act, 1955.

I request the House, Sir, to accept the motion.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன் உள்ள கேள்வி:— *"தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு—நியாயவாரம் செலுத்துதல் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 8/1969)-வை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்."*

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.*

*பிரிவுகள் 2, 3, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு இவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.*

*(திரு. ஆர். கிருஷ்ணசாமி கவுண்டர், திரு. க. இராமமூர்த்தி, டாக்டர் ஹாண்டே எழுந்து நின்றார்கள்.)*

**திரு. க. இராமமூர்த்தி :** *நாங்கள் இதை விவாதிக்க விரும்புகிறோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *நான் வாக்கெடுப்புக்கு விடும்போது நீங்கள் யாரும் விவாதம் வேண்டுமென்று கேட்கவில்லையே?*

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** *மூன்றாவது வாசிப்பின்போது விவாதிக்கலாம் அல்லவா?*

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** *மூன்றாவது வாசிப்பின் போது விவாதித்துக் கொள்ளலாம்.*

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** *தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு—நியாயவாரம் செலுத்துதல் (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண். 8/1969) நிறைவேற்றப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.*

***திரு. க. இராமமூர்த்தி :** *பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு—நியாயவாரம் செலுத்துதல் திருத்த மசோதாவை அறிமுகப்படுத்தியிருக்கிற நேரத்திலே இந்த மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு அளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், இந்த மசோதா என்ன காரணங்களுக்காக அறிமுகப்படுத்தப்படுகிறது என்பதைப் பார்க்கிற நேரத்தில், இன்னொரு மசோதாவுக்காக அமைக்கப்பட்ட ஒரு செலக்ட் கமிட்டி இந்த மசோதாவைப் பரிசீலித்து சிபாரிசுகளைச் செய்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது. அந்த செலக்ட் கமிட்டி என்ன [illegible]திற்காக அமைக்கப்பட்டதோ, அந்தக் காரியங்களைக் கடந்து, [illegible] மசோதாவின் வேலையை ஏற்றுக்கொண்டு, சில திருத்தங்களை அரசுக்குச் சிபாரிசு செய்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இந்த மசோதா அவையில் அறிமுகப்படுத்தப்*

பட்டிருக்கிறது. இதில் அமைந்திருக்கும் வாசகமாவது : The Select Committee which considered the Bill suggested that sub-tenants should be protected from eviction in the same way as a cultivating tenant என்பதாகத்தான் இதை விளக்குகிற வகையில் அமைந்திருக்கிறது இந்த மசோதாவுக்காக நியமிக்கப்படாத செலக்ட் கமிட்டி அல்லது இந்த மசோதாவை பரிசீலனை செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்படாத சிலர் முடிவெடுத்து அவர்களுடைய சிபாரிசின் பேரில் இந்த மசோதா வந்திருக்கிறது. நியாயமான சிபாரிசின் அடிப்படையில், தெளிவான அதிகாரம் படைத்தவர்கள் அரசுக்குச் சிபாரிசு செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணகாரியங்கள் எப்படி இருந்தாலும் நியாயமற்ற நிலைமை விவசாயிகளைப் பொறுத்தவரையில் ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மசோதாவைப்பொறுத்தவரையில் இதிலே ''கல்ட்டிவேட்டிங் டெனன்ட்ஸ்'' யார் என்பதற்கான விளக்கத்தைத் தந்து அதன் அடிப்படையில் இந்தத் திருத்த மசோதா வந்திருக்கிறது. நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கல்ட்டிவேட்டிங் டெனன்ஸி என்பது நிலச் சொந்தக்காரர்களுக்கும், நிலத்தில் பயிரிடும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிற ஒருவருக்கும் ஏற்படுகிற ஒப்பந்தம்—கான்ட்ராக்ட்—ஆகும். சொத்து உடையவர்களுக்கும், ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் அந்த நிலத்தில் பயிரிடும் உரிமையைப் பெறுபவருக்கும் ஏற்படும் ஒப்பந்தமாகும். இது அந்த அடிப்படையில்தான் கல்ட்டிவேட்டிங் டெனன்ட்ஸ் என்றவார்த்தையைப் பொருள் கொள்ளவேண்டும். இங்கே இந்த அவையில் வந்திருக்கிற திருத்த மசோதாவானது ஓர் ஒப்பந்தமாக, விநோதமான விளக்கத்தை அளித்திருக்கிற மசோதாவாக வந்திருக்கிறது. நிலச் சொந்தக்காரர் தான் அறியாத, தான் விரும்பாத, தனக்கே யார் என்று தெரியாதவரிடத்தில் சட்டத்தின் மூலமாக ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் என்று வழி செய்திருக்கிறது. இந்த மசோதாவின் காரணமாக, ஒரு நிலச் சொந்தக்காரர் தான் விரும்பாமலே, தான் அறியாத ஒருவரிடம் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவரைக் கட்டுப்படுத்தும் அளவில் இந்த மசோதா வழிவகை செய்திருக்கிறது. இது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது, நியாயத்திற்கும் புறம்பானது, பாசிஸ முறைக்கு அடி எடுத்து வைக்கின்ற மசோதாவாகும். இது விவசாயிகளுக்கு நன்மை செய்கின்ற மசோதா அல்ல, சிறு நிலச்சுவான்தார்களைப் பெரிதும் பாதிக்கும். பெரிய நிலச்சுவான்தார்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படமாட்டார்கள். இருபது ஏக்கர், இருபத்தைந்து ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு, ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் இப்படி சிக்கலில் போனாலும் பொருளாதார வகையில் பெரிதும் பாதிக்கப்பட மாட்டார்கள். சிறு நிலம் வைத்திருப்பவர்கள் தான் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இதன் காரணமாக சிறு நிலக்காரர்கள் நிலத்தைவிட்டுவிட்டே நகர்ப்புறங்களைத் தேடி ஓடும்படியான நிலைமை வந்துவிடும். ஆகவே இந்த மசோதாவைக் கைவிட வேண்டும். அல்லது சிறு நிலக்காரர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்கிற சூழ்நிலையையாவது ஏற்படுத்த வேண்டும். அவசர கோலத்தில் இதை நிறைவேற்றத் தேவையில்லை என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, சாதாரணமாக ஒரு பொய் சொன்னால் அதைச் சரிக்கட்ட ஒன்பது பொய் சொல்ல வேண்டுமென்பது பழமொழி.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பொய்யென்று சொல்லக் கூடாது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதை வாபஸ் பெற வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : மன்னிக்கவேண்டும். ஒரு தடவை உண்மைக்கு மாறான செயலைச் சொல்லிவிட்டால் அல்லது செய்துவிட்டால் அதனையே ஒன்பது தடவை செய்யவேண்டுமென்று பழமொழி சொல்வார்கள்.



அதுபோல ஒரு தடவை நீங்கள் டெனன்ஸி ரெக்கார்டு பில்லில் உண்மைக்கு மாறான, விரோதமான செயலைச் செய்துவிட்டதனால் அதைச் சரிக்கட்ட இப்போது இதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். உண்மையில் நல்லவையோ, பொல்லாதவையோ சட்டங்களைக் கொண்டு வாருங்கள். ஆயினும் அவை உங்களுடைய எண்ணங்களுக்கு—நோக்கங்களுக்கு ஒத்ததாகவாவது இருக்கவேண்டும். இந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டு வந்திருப்பதால் நோக்கம் குத்தகைதாரர்களுக்கு, சிறு நிலக்காரர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காகும். இந்த மசோதாவின் நோக்கத்தில் அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது நீங்கள் கொண்டு வந்திருக்கும்படியான திருத்தம் அதற்கு முற்றிலும் விரோதமானது என்பதை மிகத் தெளிவாகச் சொல்ல தயவு செய்து எனக்கு அனுமதி கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இது குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம். இந்தத் திருத்தத்தின் மூலம் குத்தகைதாரர் பாதுகாக்கப்படமாட்டார். சப் டெனன்ட் என்ற பெயரில் வேறு ஒருவரிடத்திலே குத்தகைதாரர் நிலத்தைக் கொடுத்திருந்தால் அந்த வேறு ஒருவனைப் பாதுகாப்பதாக நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். உண்மையில் இது சிறு நிலக்காரர்களையும் பாதுகாக்காது, குத்தகைக்காரரையும் பாதுகாக்காது. நிலப்பிரபுக்களுக்காக நான் பேசுவதாக நினைக்கலாம். ஏற்கனவேயே நான் சொன்னேன். பெருநிலம் வைத்திருப்பவர்களை இந்த மசோதா பாதிக்காது. இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என்பதாக ஐந்து ஏக்கருக்குள் இருக்கிறவர்களுக்குத் தான் குத்தகைக்குவிட வேண்டிய நிலைமை இருக்கிறது. பொருளாதாரத் துறையில் கட்டுப்படியாகாத காரணத்தினாலும், வேறு ஊர்களில் வேலை செய்கின்ற நிலையிலும் ஒரு வருடம், இரண்டு வருடம், ஐந்து வருடம் என்று குத்தகைக்கு விட்டுவிட்டால் அப்புறம் அந்த நிலத்தை எடுக்கிற உரிமையே நிலக்காரருக்கு இல்லாமல் போகிறது. குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டப்படி நிலக்காரர் ஒருவரிடத்தில் குத்தகைக்கு விட்டிருந்தால் அவர் வேறு ஒருவரிடத்தில் குத்தகைக்குவிட உரிமையே இல்லை. அப்படி விட்டார் என்று தெரிந்தால் சட்டப்படி மூலக் குத்தகை அக்ரிமெண்டே கான்சலாகி விடுகிறது. அப்படி இருக்க, இதுபோன்ற ஒரு திருத்தத்தை ஒரு தலைப்பக்கத்தில் சேர்ப்பதில் பயன் இல்லை. இதைச் சேர்த்தால் இதுபோல பல இடங்களில் மாறுதல் செய்யவேண்டும். குறிப்பாக கல்டிவேடிங் டெனட்ஸ் பாதுகாப்பு ஆக்டில் 3 (2) (b) இன் கீழ் ஹைக்கோர்ட் தீர்ப்பில் 'Sub-leasing even a part of the leasehold land will entitle the landlord to seek eviction from the entire leasehold property...' என்று இருக்கிறது. இப்படி ஒவ்வொரு செக்ஷனைச் சொல்லிக் கொண்டு போகலாம்.

இன்னும் 4 (எ) (1) செக்ஷனில் ஒருவர் தம் நிலத்தை யாரிடத்தில் குத்தகைக்குவிட்டிருக்கிறாரோ அவர் சொந்தமாகவோ குத்தகையாகவோ 6⅔ ஏக்கருக்குமேல் வைத்திருந்தால் நிலக்காரர் திரும்பவும் நான்கைந்து ஏக்கராக்களைத் தம்மிடத்திலே எடுத்துக்கொள்ள உரிமை இருக்கிறது. அதுவும் இப்போது புறக்கணிக்கப்படுகிறது.

அடுத்து குத்தகைக்குப் பெற்றவன் குத்தகை கொடுக்கவில்லை என்றால் அவன் பூமியைத் திரும்ப எடுத்துக்கொள்ளலாம் என்று 3 (4) (எ) செக்ஷனில் உரிமை இருக்கிறது இப்போது குத்தகையும் கொடுக்காமல் சப்டெனன்டுக்குக் கொடுத்ததாக ஏமாற்றிவிட வழியேற்படுகிறது.

இனி இந்தத் திருத்தம் வருமானால் பூமியைத் தரிசாகப் போட்டாலும் போடலாம், குத்தகைக்கே விடவேண்டாம் என்று நினைப்பான். ஒரு பூமியைக் கொடுத்துவிட்டால் கொடுத்தது தான் என்கிற நிலை வருகிறது.

ஆகவே நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டும். இல்லாவிட்டால் ஒரு செலக்ட் கமிட்டியையாவது ஏற்படுத்தி இதை நல்ல முறையில் ஆலோசிக்கவேண்டும். ஏற்கனவே

உள்ள பல சட்டங்கள் திருத்தப்படவேண்டும். சென்னையில் உள்ள ஒருவர் தம் வீட்டை ஒருவருக்கு வாடகைக்கு விட்டால் வாடகைக்கு எடுத்தவர் வீட்டுக்காரருக்குத் தெரியாமலேயே வேறு ஒருவருக்கு வாடகைக்கு விட உரிமை இருக்கிறதா? நிலக்காரர்களுக்கு மட்டும் ஏன் இந்தச் சட்டம்? யாருமே சொத்து வைத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லிவிடுங்கள். இப்படிப்பட்ட அக்கிரமமான காரியத்தைச் செய்யக்கூடாது. இது நியாயமற்றது. நிலக்காரர்களுக்குப் பெரும் அநீதி விளைவிப்பது, ஆகவே இதைக் கைவிடவேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெ. பெள்ளி கவுடர் :** தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் பேசும்போது கனம் உறுப்பினர், "நீங்கள்", "நீங்கள்" என்று குறிப்பிடுகிறார். நீங்கள் என்பது தலைவரைக் குறிக்காதா? நீங்கள் என்பது தலைவரைக் குறிக்கிறதா, அரசைக் குறிக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுவாக நமது உறுப்பினர்கள் எல்லாம் "நீங்கள் நீங்கள்" என்றே குறிப்பிடுகிறார்கள். அது தலைவரைக் குறித்தாலும் தலைவர் அதைக் கண்டுகொள்வதில்லை. ஆளுங்கட்சிக்காரர் 'நீங்கள்' என்பது எதிர்க்கட்சிக்காரர்களையும், அவர்கள் 'நீங்கள்' என்பது ஆளும் கட்சியையும் குறிப்பது என்பது ஒரு பழக்கமாகவே ஆகிவிட்டது.

**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மசோதாவை எங்கள் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய சுதந்திரா கட்சி உறுப்பினர் இதன் அடிப்படையான பிரச்சினையைப் பற்றி ஒன்றும் விளக்கவில்லை.

1968-ஆம் வருஷத்திலே குத்தகை உரிமைப் பதிவு ஆவண மசோதா பொறுக்குக் கமிட்டியில் சப்டெனண்ட் தான நிலத்தில் சாகுபடி செய்கிறார். ஏற்கனவே 1955-ம் ஆண்டுச் சட்டத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் பலர் வெளியேற்றப்படுகிறார்கள் என்று கருதி—அதற்கான பாதுகாப்பு ஷரத்து சேர்க்கப்பட்டு இருக்கிறது ஆகவே உண்மையில் இன்றைக்குப் பாதிக்கப்படுபவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டுமானால் சப் டெனண்ட்ஸ் பற்றித்தான் கவலைப்பட்டிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக முன்பு என்ன இருந்தது என்றால் சப் டெனண்ட்டுக்கே இந்த உரிமை இல்லாமல் போய்விடும் என்ற நிலைமை இருந்தது. மற்றொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். பொறுக்குக் கமிட்டியிலே ஏகமனதாக காங்கிரஸ் கட்சியினரும், சுதந்திராக் கட்சியினரும் இதை ஏற்றுக்கொண்டார்கள். எந்த விதமான டிஸெண்டிங் நோட்டும் இல்லை. ஆனால் இப்பொழுது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதை எதிர்ப்பது ஆச்சரியமாக இருக்கிறது. குத்தகை உரிமையைப் பதிவுசெய்ய வேண்டுமென்று கொண்டு வருகின்ற நேரத்திலே 1955-ம் வருஷச் சட்டத்திலே டெனண்ட் என்று இருப்பதை சப் டெனண்ட் என்று மாற்றாமல் இருந்தால் சப்டெனண்ட்களை நாமே வெளியேற்றுவதற்கு வகை செய்தவர்களாக ஆகிவிடுவோம். எனவே இது புதியதாக ஒன்றையும் கொண்டு வரக்கூடிய நிலையில் இல்லை. அவர்களையும் வெளியேற்ற முடியாத நிலைமையில் அரசாங்கம் அதைக் கொண்டு வருகிறது. சப்லீஸுக்கு விடக்கூடியவர்கள் பாதிக்கப்படலாமா என்பதில்லை. சப்லீஸுக்கு எடுத்துக் கொண்ட விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டம் அடிப்படை நோக்கத்தை மீறவில்லை. பதிவு செய்ய வேண்டுமென்ற முறையைக் கொண்டுவரும்பொழுது சப்டெனண்ட்களைப் பொறுத்தவரையிலும் பாதிக்கப்படக்கூடாது என்ற அளவிலே இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது. எனவே சாதாரண மக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய இந்த சட்டத்திற்கு நாங்கள் ஆதரவு கொடுக்கிறோம். அரசாங்கம் இதைக் கொண்டு வந்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.





**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரித்து நானும் சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின்படி உள் குத்தகைக்கு விட்டு இருந்தால் அதைக் கட்டுப்படுத்தாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. உள் குத்தகைக்கு எடுத்தவர்களைப் பாதுகாப்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை நாங்கள் ஆதரிக்கிறோம். இடைத்தரகர்கள் இடையிலே இருந்து உள் குத்தகைக்கு விட்டு ஆதாயத்தை எடுத்துக்கொள்கிறார்கள். இது பெரும் அநீதியாக இருக்கிற காரணத்தாலே இந்த அரசாங்கம் குத்தகைதாரர்கள் பதிவு செய்யும் மசோதாவைக் கொண்டுவருகின்ற நேரத்தில் இதையும் கொண்டுவருகிறது. இதற்கு எல்லாக் கட்சியினரும் சுதந்திரக் கட்சியினரும் காங்கிரஸ் கட்சியினரும், திறமையான அனுபவம் வாய்ந்த காங்கிரஸ்காரர்கள் திரு என். ஆர். தியாகராஜன், திரு. பொன்னப்ப நாடார் போன்றவர்கள் எல்லாரும் ஏகமனதாக ஆதரித்தார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துதான் ஆகவேண்டும். இல்லை என்றால் இடைத் தரகர்கள் இருந்து கொண்டு ஆதாயமடையக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. நிலச் சொந்தக்காரர்களுக்கும் உழவர்களுக்கும் இடையில் இருக்கிறவர்கள் எல்லாம் ஆதாயம் பெறுவார்கள். அதைத் தடுக்கவேண்டுமென்ற முறையில்தான் இது சிபாரிசு செய்யப்பட்டது. ஆனால் உறுப்பினர் தெரிந்து பேசுகின்றாரா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். கனம் உறுப்பினர் பேசும்பொழுது சொன்னார். தெரிந்து பேசுகின்றாரா என்று தெரிந்தவர் பேசுகின்றார், செலக்ட் கமிட்டியிலே எந்தக் காரணத்திற்காக......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** தெரிந்து பேசுகின்றாரா என்று சொல்வது முறையா என்பதுதான் என்னுடைய கேள்வி.

***மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** திரு. இராமமூர்த்தி அவர்கள் வருத்தப்படக்கூடாது; அவர்கள் பேசுவது ரொம்பத் தவறு, செலக்ட் கமிட்டியிலே அவர்கள் கட்சிக்காரர்களும் இருந்தார்கள். சப் டெனண்ட் என்ற விஷயமே மிகச் சிறிய விஷயம்தான். இப்படி ஒரு மணி நேரத்தை வீணாக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கவேண்டாம். அவர்கள் வருத்தப்படக்கூடாது. திரு இராமமூர்த்தி அவர்கள் தெரிந்துதான் பேசுகிறார்கள். சப்டெனண்ட்டுக்கு இல்லாமல், பயிர் செய்கிறவனுக்கு இல்லாமல் இடைத்தரகர் எவனுக்கோ கொடுத்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்கள் பயிர் செய்கிறார்கள் என்பதற்காக ஒரு ரிக்கார்டு வேண்டுமென்பதற்காக கொண்டு வருகிறோம். புதிதாக டெனனட் என்று இருப்பதற்கு இலக்கணம் கூறவில்லை. சப் டெனண்ட்டுகள் வெளியேற்றப்படுவார்களோ என்பதற்காக ஒரு நியாயம் இருக்கவேண்டுமென்ற முறையில்தான் எல்லாக் கட்சியினரும் இதற்கு ஒத்துக்கொண்டார்கள். கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட்டிலே என்ன இருக்கிறது என்பதையும் பார்க்கவேண்டும். பல்லாயிரக்கணக்கானவர்கள் வெளியேற்றப்படக்கூடாது என்பதற்காகச் செய்யக்கூடிய ஒரு சிறிய சட்டப்பிரச்னைதான் இது. இந்த மன்றம் இன்னும் வேறுமாதிரியான விஷயங்களை விவாதிக்க வேண்டியிருக்கும்பொழுது இதற்காக நேரத்தை வீணாக்கக்கூடாது. வீணாக்குகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. இதற்காக யாரும் ஒன்றும் பயப்படவேண்டியதில்லை. அரசாங்கத்திற்கு இருக்கிற சிறிய சட்டப்பிரச்னை இது. 1955-வது சட்டத்திலே இருக்கிற சிறு விதிமுறைகளிலே வருவதுதான் இது. மூலச்சட்டத்திற்கு எப்படிப் பொருந்தும் என்பதையும் பார்க்க வேண்டும். எனவே சப் டெனன்ட்டுகளுக்கும் ப்ரொடெக்ஷன் வேண்டுமென்பதற்காகக் கொண்டுவரப்படுகிறது மாண்புமிகு உறுப்பினர் திரு கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் (குறுக்கீடு) கவுண்டர் என்றாலும் நாயுடு என்றாலும் எல்லாம் ஒன்றுதான். அது உயர்வு

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 மார்ச் 17]

இது உயர்வு என்பது அல்ல. அடையாளம் சொல்வதற்காகத்தான் சொன்னேன். அவினாசித் தொகுதி உறுப்பினர் இதற்காக இவ்வளவு வருத்தப்பட வேண்டாம் என்பதையும் தெரிவித்துக்கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு ஆ. கு. சுப்பையா பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசி முடிக்கட்டும்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, நான் பேசிய பிறகு அப்புறம் சந்தேகங்கள் இருந்தால் கேட்டுக்கொள்ளலாம். எனக்கு முன்னால் பேசியவர்கள் சிறு நிலக்கிழார்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். குத்தகை வாரதார்கள் சட்டத்தில் அவர்களுக்கு விதிவிலக்கு இருக்கிறது. ஐந்து ஏக்கர் நிலம் உள்ளவர்கள் சொந்தத்தில் சாகுபடி செய்தால் அதற்கு விதிவிலக்கு இருக்கிறது. எனவே, இந்தத் திருத்தம் அவசியமானது. எனவே, இந்த நிலைமையை அவர்கள் புரிந்துகொண்டுதான் பேசுகிறார்களா என்றுதான் கேட்டேன். அவர்கள் புரியாதவர்கள் என்று சொல்லவில்லை. இந்தச் சட்டம் மிகமிக அவசியமானது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மேல்சபை இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைப்பற்றியும் கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** காங்கிரஸ்காரர்கள் எதிர்க்கிறார்கள் என்று சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் பொறுக்குக் கமிட்டியிலே நல்ல முறையிலே சொல்லியிருக்கிறோம், யார் உழுகின்றானோ அவனுக்குத்தான் சொந்தம் என்ற அடிப்படையிலே சொல்லியிருக்கிறோம். திரு இராமமூர்த்தி அவர்கள் இங்கே விளக்கத்திற்குத்தான் சொன்னார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. எங்களுக்கு இருக்கும்படியான எண்ணமெல்லாம் ஏற்கனவே உழும்படியான குடியானவர்களை வெளியேற்றக்கூடாது என்பதுதான். இன்டர்மிடியரிஸ் இருப்பதாலே தான் இது வருகிறது. இது ஒன்றும் பெரிய பிரச்னையாகத் தெரியவில்லை. சப்டெனன்ட்டாக இருந்தாலும் சரியே, அல்லது சப் சப்டெனன்ட்டாக இருந்தாலும் சரியே உழுகிறவர்களுக்குத்தான் நிலம் சொந்தம் என்ற அடிப்படையிலேதான் இருக்க வேண்டுமென்பதைத்தான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சிறு நிலக்கிழார்கள் எல்லாம் விதிவிலக்கு இருப்பதாலே ஒரு வேலிக்கு குறைந்து உள்ளவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று ஏற்கனவே சட்டத்திலே இருக்கிறது. எனவே இது தவறு என்று அவர்கள் சொல்லவில்லை, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்ற அடிப்படையான ஜீவாதார உரிமையை காங்கிரஸ் கட்சி தீவிரமாக வரவேற்கிறது என்பதைச் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** இந்த நேரத்திலே நான் எதிர்க்கட்சித் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் என்ன கருத்தைத் தெரிவித்தார்களோ அந்த அடிப்படையிலேதான் இது அமைந்திருக்கிறது. அவர்கள் சொன்னதற்காக மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் சொன்னார்கள் சப் சப் டெனன்ட்டு என்று. எவன் உழுகிறானோ, எவன் பயிரிடுகிறானோ அவனுக்குப் பாதுகாப்பே தவிர, இடையிலே இருக்கிறவன், மிராசுதாருக்கும் உழுகிறவனுக்கும் மத்தியில் இருக்கிறவனுக்கு அந்த நிலைமை இருக்கக் கூடாது என்பதைத் தெரிந்துகொண்டு, அந்த முறையிலே நல்ல வகையிலே அமைந்து இருக்கிற இந்த மசோதாவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



1969 மார்ச் 17]

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** உழுபவர்களுக்கு உபத்திரவம் முற்பகல் 11-00
கொடுக்கக்கூடாது என்பதை நான் பரிபூரணமாக ஒத்துக்கொள்கிறேன். மத்தியிலே ஒருவர் வந்து நிலச் சொந்தக்காரரின் உரிமையைக் கெடுக்க வேண்டாம் என்றுதான் கூற விரும்புகிறேன். திரு ஆ. கு. சுப்பையா அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களிடத்தில் இருந்து ஏதாவது விளக்கம் வேண்டுமென்றால் சொல்லுங்கள். அவருக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** சபையினுடைய அருமையான நேரத்தைக் குலைக்க வேண்டாமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பலருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமையைச் சீர்படுத்துவதற்குக் கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டும். அந்தப் பிரச்சினையில் உறுப்பினர் அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மன்றத்தில் எந்த உறுப்பினருக்கும் ஒரே பொருள் குறித்து இரண்டாவது முறையாகப் பேச உரிமை கிடையாது. அமைச்சர் அவர்கள் பேசியதற்கு ஏதாவது விளக்கம் கேட்கலாமே தவிர, புதிய பிரசங்கமே செய்யக்கூடாது. அதுதான் சட்டமன்ற விதிமுறை.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** ஏற்கனவே, அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு விளக்கம் கொடுத்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் கொடுக்கக்கூடாது, விளக்கம் கேளுங்கள்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** விளக்கம் கேட்கிறேன் என்பதற்குப் பதிலாக விளக்கம் கொடுக்கிறேன் என்று தவறுதலாகச் சொல்லி விட்டேன். மன்னித்து விடுங்கள். சபையினுடைய நேரத்தை வீணாக்க வேண்டாமென்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை விட்டுவிடுங்கள்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** உழைப்பவர்களுக்கு நிலம் இருக்கட்டும், உரிமை இருக்கட்டும், இடையிலே இருப்பவர்களுக்கு வேண்டாம் என்பதுதான் என்னுடைய அழுத்தமான கருத்து.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கடைசியில் சொன்ன வார்த்தையை நிறைவேற்றத்தான் இது வருகிறது.

(திரு எம். சுரேந்திரன் எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லியபிறகு நீங்கள் பேசமுடியாது. விளக்கம் வேண்டுமானால் கேளுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** எல்லாக் கட்சியின் சார்பிலும் பேசினார்கள். எங்களுடைய கட்சியின் சார்பில் பேச விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிய பிறகு விளக்கம் வேண்டுமானால் கேட்கலாமே தவிர, இன்னொரு உறுப்பினர் பேசுவது முறையாகாது.

[பேரவைத் தலைவர்]



பேரவையின் முன்னுள்ள கேள்விகள் :—

தமிழ்நாடு 1969-ம் ஆண்டு, பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு-நியாயவாரம் செலுத்துதல் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 8/1969) நிறைவேற்றப்படவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு மசோதா சட்டமாக ஆக்கப்பட்டது.

## 5. அரசினர் தீர்மானம்

### 1920-ம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சி மன்றங்கள் சட்டத்தின் கீழ் திருத்த வரைவு

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

1920-ம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சி மன்றங்கள் சட்டம் (1920-ம் ஆண்டு சென்னை சட்டம் V) 305-வது பிரிவின் 1-ம் துணைப் பிரிவின் கீழ் தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் திட்டமிடப்பட்டுள்ள மேற்கூறிய சட்டம் IV-அட்டவணை, 8-வது விதி, (1-A) துணை விதியின் (a) பகுதியின் திருத்த வரைவு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

### வரைவு

1920-ம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டம் (1920-ம் ஆண்டு சென்னை சட்டம் V) 305-வது பிரிவின் (1) துணைப் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மேற்கூறிய சட்டத்தின் IV-வது அட்டவணையிலுள்ள விதிகளால், தமிழ்நாடு ஆளுநர் இதனால் கீழ்க்கண்ட திருத்தத்தைச் செய்கிறார்.

### திருத்தம்

"மேற்கூறிய விதிகளில் 8-வது விதி (1-A) துணை விதியில் (a) பகுதியில், 'ஆறு அரை ஆண்டுகள்' என்ற சொற்களை நீக்கி, 'ஏழு அரை ஆண்டுகள்' என்ற சொற்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 6. 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 26—பாசனம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,11,07,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. க. சகாதேவக் கவுண்டர் :** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையினர் தயாரித்து அனுப்பியுள்ள சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,11,07,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.





**திரு. ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, கோவில் மடத்திற்குச் சொந்தமான கிராமங்களிலும் குத்தகை சாகுபடிதாரர்களுக்கு வசதியாக சமுதாயக் கிணறுகள் தோண்டுவது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,11,07,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, குந்தா கழிவு நீர்த் திட்டத்தை அமல்படுத்துவது பற்றியும் பல்லடம் தாலூகா கோவை அவனாசி தாலூகாக்களுக்குப் பாசனவசதி செய்வது பற்றியும் விவாதிக்க—

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,11,07,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** பேரவைத் தலைவர் அவர்களே, வைகை நதியில் இருந்து பிரியும் வாய்க்கால் போன்ற கிருதுமால் நதி தூர்ந்துபோய் இருப்பதை உடனடியாகச் செப்பனிட்டு பாசன வசதி செய்துகொடுப்பதன் அவசியம்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,11,07,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய பாசனக் கிணறுகளை பொதுப்பணித் துறையில் அரசே வெட்டிக்கொடுக்க வேண்டியது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,11,07,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,60,25,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

THIRU K. RAMAMOORTHI : Sir, to discuss policy I move the following cut motion :—

'That the allotment of Rs. 7,60,25,100 under Demand No. 41—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100.'

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள தண்ணீர்த் தேக்கங்களைக் கட்டி முடிக்க வேண்டியதைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 7,60,25,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கண்மாய்களுக்கு தூர் எடுப்பதும், நீர்ப்பிடிப்பு அதிகப்படுத்துவதும் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 7,60,25,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை, பெரிய கண்மாய் 20 வருடங்களுக்கு மேலாக, தூர் எடுக்கப்படாமல் இருப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 7,60,25,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டு தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(இ) கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்களே ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,48,15,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. வை. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் செல்லும் எல்லா மார்க்கங்களிலும் உள்ள சாலைகளை நெடுஞ்சாலைத் துறையினர் எடுத்துக்கொள்வது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள்-பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,48,15,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கூத்தாநல்லூர்-தில்லைவிளாகம் வழி, வேதபுரம் சாலையை அகலப்படுத்தி கப்பி போடவேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள்—பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,48,15,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டு தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் நகரசபையை சேர்ந்த ஒண்டிபுதூருக்கும் பட்டணம் புதூருக்கும் மத்தியில் நொய்யல் ஆற்றில் குறுக்கு பாலம் கட்டுவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள்—பணிகள்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,48,15,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சீர்கெட்டு விட்ட எல்லாச் சாலைகளையும் உடனடியாக சீர்படுத்துவதற்கு போதுமான நிதி ஒதுக்குவது குறித்து விவாதிக்க—

" கோரிக்கை எண் 27 பொதுப் பணிகள்—பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 9,48,15,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



(ஈ) கோரிக்கை எண் 28—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும்.

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" கோரிக்கை எண் 28— பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,94,44,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மண்வாரி புல்டோசர் ஆகிய இயந்திரங்களைக் கொண்டு தரிசு நிலங்களைச் செம்மைப் படுத்தத் திட்டம் வகுப்பது பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 28—பொதுப் பணிகள் — பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 3,94,44,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்களை எல்லாம் நிரந்தர ஊழியர்களாக ஆக்குவது பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 28—பொதுப் பணிகள் — பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 3,94,44,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. வை. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று வருடம் அனுபவம் உள்ளவர்களை நிரந்தரமாக்குவது பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 28—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 3,94,44,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. பி. வேலுசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை பணியாளர்கள் சம்பள விகிதம் பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள், பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 3,94,44,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

[1969 மார்ச் 17

THIRU K. RAMAMOORTHI: To discuss policy, I move the following cut motion:—

"That the allotment of Rs. 6,28,36,400 under Demand No. 42-Capital Outlay on Public Works be reduced by Rs. 100."

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** தலைவர் அவர்களே, பொதுப் பணிகள் மூலதனச் செலவுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 42—பொதுப் பணிகள்—மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 6,28,36,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழி கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களே, காட்பாடி சாலைக்கும் பெங்களூர் சாலைக்கும் தொடர்பு ஏற்படுத்த விரிஞ்சிபுரம் ஆற்றில் பாலம் கட்டுவதைப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 42—பொதுப் பணிகள்—மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 6,28,36,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தின் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகள் பற்றிய என் உரை*கள் உறுப்பினர்களுக்கு அச்சிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களைக் கூறிய பிறகு நான் பதிலில் என் கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார்:** தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பாக பொதுப்பணித் துறை, பாசனத் துறை மானியக் கோரிக்கைகளின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இன்று ஆளும் கட்சி தன் தேர்தல் அறிக்கையில் கொடுத்துள்ள வாக்குறுதிகள் மத்திய அரசினிடம் கேட்டுக் கொடுத்தது போலவும், அதை இப்போது அவர்கள் மறுப்பதுபோலவும் சொல்லி மக்களைத் திசை திருப்புவது வியப்பாக இருக்கிறது. எந்த அளவிற்கு இந்த அரசாங்கம் பொதுப் பணித்துறை, நீர்ப் பாசனத் துறை இவற்றில் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று பார்த்தால் சிறு பாசனத்திற்காக 1967–68 ல் ரூ. 1103 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது 1969–70-ல் அது 611 லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. சாலைகளை எடுத்துக் கொண்டால் 1967–68-ல் 203 லட்சம் என்று ஒதுக்கியிருந்ததை இப்போது 181 லட்சமாக குறைத்திருக்கிறார்கள். சாலைப் போக்குவரத்தை எடுத்துக் கொண்டால் 1967–68-ல் 220 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. 1969–70-ல் 99 லட்சமாக குறைக்கப்பட்டிருக்கிறது. உள்நாட்டு நீர்வழிகளுக்காக ஒன்றுமே ஒதுக்கப்படவில்லை. புதிய கிணறுகள் உதவித் திட்டத்தில் 474·30 லட்சத்திலிருந்து 40.38 லட்சமாகக் குறைத்திருக்கிறார்கள். ஆனால் நில அடமான வங்கிகள் மூலம் பம்பு செட்டுகளுக்குக் கடன் வழங்குவதால் இதில் குறைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் 1969-70-ல் நில அடமான ஈட்டுறுதி ஆவணங்களை 440 லட்சத்திலிருந்து 400 லட்சமாக குறைத்துள்ளார்கள். அதனால் மத்திய அரசு பங்கு 220 லட்சத்

*97–183ம் பக்கத்தில் 1 முதல் 4 இணைப்புக்களாக அச்சிடப்பட்டுள்ளன.



1969 மார்ச் 17] [திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார்]

திலிருந்து 200 லட்சமாகக் குறைந்துள்ளது. இதன் பாக்கி நிதி வசதிக்காகக் கிராமப்புற சேமிப்பைத் திரட்ட முடியும் என்று நம்பிக்கையைத் தெரிவித்துள்ளார்கள். ஆவணம் என்று குறிப்பிட்டாலும் அல்லது வரி என்று குறிப்பிட்டாலும் உருவத்தில்தான் மாறுபடுகிறதே தவிர எந்த விதத்திலும் விவசாயிகளின் மேலுள்ள வரிச்சுமை நீங்கவில்லை.

நிலவரி எடுக்கப்படும் என்று கூறிப் பாசனத் தீர்வை என்று போடுவதாகக் கூறுகிறார்கள். விவசாயிகளின் மீதுள்ள வரிச் சுமை குறைந்தபாடில்லை. சுந்தரம் என்பவர் அழகன் என்று பெயர் வைத்துக் கொண்டால் பெயரில்தான் வித்தியாசம் இருக்கிறதே தவிர இரண்டு பெயர்களும் ஒரே ஆளைத்தான் குறிக்கிறது. அதேபோல் பெயர்களை மாற்றினாலும் வரிச் சுமை குறையவில்லை. நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 1967–68ல் 619 லட்சமாகச் செலவு செய்ததை 1969–70ல் 116·76 லட்சமாகக் குறைத்துள்ளார்கள்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தில் 1967-ல் நீர்ப்பாசன மாநாடுகள் கூட்டினார்கள். ஆனால் 1968-ல் அப்படி ஒரு மாநாடும் கூட்டப்படவில்லை. காரணம், 1967-ம் ஆண்டு மாநாடுகளில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளைப் பற்றி மக்கள் கேட்டால் என்ன செய்வது என்பதால் அப்படி கூட்டப்படவில்லை என்று பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டதில் வீணாக கடலில் செல்லும் தண்ணீரை லிஃப்ட் இரிகேஷன்மூலம் உபயோகப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக முத்துப்பேட்டை பகுதியில் திட்டமிடப்பட்டுள்ள ஐந்து பம்பிங் ஸ்கீம்கள் செயல்பட இன்னும் முயற்சி எடுக்கப்படவில்லை.

அடுத்தபடியாக, எங்கள் தொகுதியில் கொங்கன் வாய்க்கால் கரைகளை உயர்த்த வேண்டும் என்று சொன்னால் பெரிய திட்டங்கள் போடுகிறோம், அப்போது அதை எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். பத்து அல்லது பதினையாயிரம் ரூபாய் செலவு செய்தால் அந்தக் கரைகளை உயர்த்தலாம், அப்படி உயர்த்துவதினால் ஒரே ஆண்டில் ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அளவிற்கு உணவு உற்பத்தியை நாம் அதிகப் படுத்தமுடியும். ஆனால் அதை யாரும் கவனிப்பதாகத் தெரியவில்லை.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்கள் மூலம் குடிமராமத்து வேலைகள் செய்யப்படுகின்றன. அதற்கு ஆயக்கட்டு ஏக்கர் ஒன்றுக்கு 2½ ரூபாய் செலவு செய்ய அனுமதி தந்திருக்கிறார்கள். அதில் ஒரு ரூபாய் அரசாங்கமும், 1½ ரூபாய் விவசாயியும் கொடுக்கிறார்கள். இப்போதுள்ள கூலிப் பிரச்சினையில் இந்த 2½ ரூபாய் ஏக்கர் ஒன்றுக்கு என்பது கட்டுபடியாகாது. ஆகவே பஞ்சாயத்துக்கள் அந்த வேலைகளை எடுத்துச் செய்ய தயங்குகிறார்கள். 1968–69 ல் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 56 லட்சம் ரூபாய் மானியமாகத் தந்தார்கள். அதை இப்போது 50 லட்சமாகக் குறைத்திருப்பதைப் பார்க்கும்போது இந்த அரசாங்கம் விவசாயத்தில் எந்த அளவிற்கு அக்கறை காட்டுகிறார்கள் என்பது தெரியவரும். தஞ்சையைப் பொறுத்த மட்டில், குடிமராமத்து வேலைகளை ஆற்றில் தண்ணீர் வற்றியவுடன் மண் ஈரமாக இருக்கும்போது எடுத்துக் கொண்டால்தான் மண்ணை வெட்டுவதற்கு எளிதாகும், செலவும் குறையும். ஒரு வாய்க்கால் மூன்று நான்கு பஞ்சாயத்துக்களுக்கு வரும்போது ஒரு பஞ்சாயத்து தலைவர் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானம் போட்டு இன்னொரு பஞ்சாயத்து தலைவர் குடிமராமத்துத் தேவை இல்லை என்றுத் தீர்மானம் போட்டுவிட்டால் அந்த வாய்க்கால் வேலை நடைபெறாது. நல்ல முறையில் தண்ணீர் வருவதும் தடைபடும் அதனால் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் கெட்ட பெயர் ஏற்படுகிறது. 1858-ம் ஆண்டு கட்டாய வேலைச் சட்டத்தின் கீழ் (கம்பல்ஸரி லேபர் ஆக்ட்) இவ்வேலை எல்லா இடங்களிலும் பி.டபிள்யூ.டி. மூலம் எடுக்கப்பட்டு, வடிகால் வசதி, பாசன வசதிகள் இவற்றைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சையில் உள்ள பாசன ஆறுகளுக்கு மாஸ்டர் பிளான் ஒன்று போட்டு தூர் எடுக்க வேண்டும். ஆறுகளின் கரைகளைப் பலப்படுத்தி அவற்றின் மீது நல்ல சாலைகளை அமைத்தால் கரையும் பாதுகாக்கப்படும், சாலை வசதியும் பெருகும். அத்துடன் ஆற்றுக் கரைகளிலும், வாய்க்கால்களிலும் கால்வாய்களிலும் உள்ள ஆக்கிரமங்களை தைரியமாக அரசு நீக்க முன்வரவேண்டும்.

அடுத்தபடியாக, சிக்கனமாக நீர்ப்பாசனம் செய்ய ஸ்பிரிங்க்ளர்களை வைத்து வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். தமிழ் நாடு—மைசூர் ஒப்பந்தப்படி காவிரியிலிருந்து நமக்கு தண்ணீர் வந்துகொண்டிருக்கிறதா, கிடைக்க வேண்டிய கன அடி அளவிற்கு தண்ணீர் நமக்கு கிடைக்கிறதா என்று பார்ப்பதில் அங்குள்ள அதிகாரிகளுக்குச் சில சிரமங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அந்தச் சிரமத்தை கவனித்து நமக்கு கிடைக்க வேண்டிய அளவிற்கும தண்ணீர் வந்து கொண்டிருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, காவிரிப் பழைய டெல்டாப் பிரதேசத்தில உடனடியாக வடிகால் வசதிகளை எடுத்துச் செய்ய வேண்டும். காவிரியில் முறை வைத்துத் தண்ணீர் விடும்போது அங்குள்ள விவசாயிகளின் முறையீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யாததினால் இந்த ஆண்டுத் தாளடிப் பயிர்கள் காய்ந்துபோயிருக்கிற நிலையை அரசாங்கம் உணர வேண்டும்.

அடுத்தபடியாக, மக்களிடையே ஒரு கருத்துப் பரவியிருக்கிறது. இந்த மாநிலத்தைப் பஞ்சப் பிரதேசமாக அறிவிக்க தமிழ்நாடு அரசு தவறிவிட்டது என்று பொதுமக்கள பேசுகிறார்கள். எல்லாம் நன்றாக இருக்கிறது எங்கள் ஆட்சியில் என்று பெருமையாகப் பேசுகிறார்களேதவிரத் தமிழகத்தின உண்மை நிலையையும், எதிர்கால நிலையையும் ஆளும் கட்சியில் யாரும் அக்கறையுடன் எண்ணிப் பார்க்கவில்லை. அடுத்தபடியாக, நான்காம் ஐந்தாண்டுத் திட்ட வரைவுப் புத்தகத்தில் சாலைகள் பற்றி குறிப்பிடுகையில் தமிழகத்தில் சாலைகள் 1000 பேருக்கு 1.194 மைல் தான். ஆனால் அகில இந்தியச் சராசரி 1.230 ஆகும். அதிலும் குறிப்பாக தஞ்சை, செங்கல்பட்டு மாவட்டங்களில் அது மிகவும் குறைவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே தஞ்சை மாவட்டத்தை பொறுத்த அளவில் சாலைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் உணவு உற்பத்தியை அதிகப்படுத்தவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைச் சந்தைகளுக்கு எடுத்துச் செல்லவும் முடியும்.

அடுத்தபடியாக, சாலை பராமரிப்புக்காக நபர் ஒன்றுக்கு 40 காசு என்று கொடுக்கிறார்கள். அதை 80 பைசாவாக உயர்த்த வேண்டும் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே. காரணம், இது நீர்க் கசிவுப் பிரதேசமாக இருப்பதால் சாலைகள் அடிக்கடி கெட்டுவிடுகின்றன. அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றியங்களுக்கு சாலை மானியம் என்று ரூ. 23·41 லட்சம் கொடுக்கப்பட்டு வந்ததை ரூ. 19·99 லட்சமாக குறைத்திருப்பது ஏமாற்றத்தை அளிக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் செயல்படுகிற பகுதிகளில் மூன்று கோடி மக்களுக்குமேல் இருக்கிறார்கள். ஆனால் 25 அல்லது 30 லட்சம் மக்களைக் கொண்ட சென்னை நகருக்கு ரூ. 22·38 லட்சத்திலிருந்து ரூ. 46.50 லட்சமாக உயர்த்தியிருக்கிறார்கள்.

இதை வரவேற்கிற நேரத்தில் கிராமத்தில் வாழ்கின்ற நாங்கள் என்ன பாவம் செய்தோம். ஏன் எங்கள் பங்கைக் குறைத்தீர்கள்? பட்டணங்களில் உயர்த்திய வீதத்தையும், கிராமத்திற்குக் குறைத்த வீதத்தையும் ஒப்பிட்டு பார்க்கும்போது ஏன் இந்த பாரபட்சம்? ஏன் இந்த அநியாயம் என்று கேட்கிறேன். அத்துடன், எதிர்க்கட்சியில் இருந்து இன்று ஆளுங்கட்சியினராக இருக்கும் நண்பர்கள் முன்பு பேசியபோது பொதுப்பணித்துறையில் வேலை செய்யும் பணியாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று பல





தடவை இம்மாமன்றத்தில் பேசினார்கள். அது நடவடிக்கைப் புத்தகங்களில் இருக்கிறது. ஆனால் இபபோது அப்பேச்சுக்கு இடம் கொடுக்காது, நிரந்தரமாக்குவதற்குப் பதிலாக, வேலைக் குறைப்புச் செய்துகொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி வேலைக்குறைப்பு செய்யக்கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறி, அவர்களுக்கும் நல்லதொரு வேலைவாய்ப்பை அளிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த நேரத்திலே இன்னொன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சர்க்கார் உத்தியோகங்களுக்கு ஆள் எடுக்கும்பொழுது, எம்.பி.எஸ்.சி. மூலம் எடுக்கும்பொழுது இப்பொழுதிருக்கும் கம்யூனல் ஜி. ஓ-வின்படி எடுப்பதுடன் குடும்பங்கள் சொத்து அடிப்படையிலேயும் மேற்கொள்வது நன்றாகயிருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால் சில வசதி படைத்தவர்கள், தங்கள் குழந்தைகளும் அலுவலகப் பயிற்சி பெற வேண்டுமென்பதற்காக அரசாங்க உத்தியோகத்தில் அக்குடும்பத்தினர் அமர்த்துகிறார்கள். அந்த நிலையில்லாது கம்யூனல் ஜி. ஓ-வை அடிப்படையாகக் கொள்வதோடு, குடும்பத்தின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு, ஏழ்மை நிலையிலுள்ளவர்களின் தகுதியையும் திறமையையும் அடிப்படையாகக் கொண்டு வேலைக்கு ஆள் எடுத்தால் ஓரளவுக்கு ஏழை மக்களுக்கு வாய்ப்பிருக்கும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சாயத்து ஒன்றியத்தில் ஒரு மைலுக்கு மதிப்பிடுகின்ற பராமரிப்புச் செலவுக்கும் நெடுஞ்சாலையில் 1 மைலுக்கு மதிப்பிடுகின்ற தொகைக்கும் உள்ள வித்தியாசத்தைப் போக்கி ஒன்றியங்களுக்குப் பராமரிப்புச் செலவை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்றியங்களில் எடுத்துக் கொள்ளும் வேலைகளைப் பொது நிதியிலிருந்து செலவு செய்ய கிராம அபிவிருத்தித் துறை இயக்குநரின் அனுமதியும், அரசாங்க அனுமதியும் பெறுவதில் மிகவும் காலதாமதம் ஏற்படுகின்றது. ஒன்றிய வரவு-செலவுத் திட்டத்தில் இடம்பெற்று அரசாங்கத்தால் ஒப்புறுதி அளிக்கப்பட்ட வேலைகளை மீண்டும் டி.ஆர்.டி-க்கு போகத் தேவையில்லை எனக் கூறிக்கொள்கிறேன்.

மாவட்ட சாலைகள் அளவிலாவது, அதாவது மேஜர் டிஸ்டிரிக்ட் ரோட்ஸ், குறுக்கு சாலை, குறுகிய சாலை போன்ற அறிவிப்புப் பலகைகளை தெளிவாகப் போட்டு பல விபத்துக்களைத் தடுக்க வேண்டும். சில புதிய பாலங்கள், சாலைகள் ஆகியவற்றிற்கு வசூலிக்கப்படுகின்ற சுங்க வரி ஆண்டுக் கணக்காக வசூலிக்கப்படுகின்றன. செலவு செய்த தொகைக்குமேல் வசூல் செய்வதை நிறுத்தவேண்டும்.

குடந்தையிலேயுள்ள தென்னிந்தியாவின் கேம்பிரிட்ஜ் என்ற பெருமையுள்ள கல்லூரியில் படிக்கும் சுமார் 1,600 மாணவர்களுக்குச் சொந்தத்தில் ஒரு ஹாஸ்டல் இல்லாததால் மாணவர்கள் அவதிப்படுகிறார்கள். அதை உடனடியாக எடுத்து வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடந்தையிலுள்ள மன்னார்குடி, திருவாரூர், காரைக்கால் போன்ற ஊர்களுக்கு பிரிகின்ற சாலையிலும், மாயவரத்திலும் ரயில் பாதையின் மீது மேம்பாலம் கட்ட அரசு முயற்சி எடுத்து ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன். கொள்ளிடம் பாலம், விளாங்குடி, திருமானூர், கொள்ளிடத்தில் அமைக்கப்படும் பாலத்தின் வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று தெளிவாகக் கூறவில்லை. அதையும் உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு முக்கியத்துவம் தரக்கூடிய சிறுபாசனத் திட்டங்களிலும் அரசு நல்லதொரு முயற்சியை மேற்கொள்வதற்குக் கவனம் எடுத்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

*திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

[திரு. அ. லெ. சுப்பிரமணியம்] [1969 மார்ச் 17

இந்தத் துறையை இதற்கு முன்னாலே இன்றைய தினம் முதலமைச்சர் அவர்களாக இருக்கும் மதிப்பிற்குரிய கருணாநிதி அவர்கள் தன்னுடைய ஆளுகையின்கீழ் வைத்திருந்தார்கள். அந்த நேரத்தில் மிகச் சுறு சுறுப்பாக மக்கள் குறைகளைக் கவனித்து நல்ல முறையிலே செயலாற்றி வந்திருக்கிறார்கள். இன்றையத் தினம் அந்தப் பொறுப்பேற்றிருக்கும் அமைச்சர் மாண்புமிகு திரு சாதிக்பாட்சா அவர்களும் அந்தச் சுறுசுறுப்போடு தொடர்ந்து நடத்துவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. அதற்கான என்னுடைய நல்வாழ்த்தை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வளவு சொல்வதற்குக் காரணம், என்னுடைய தொகுதியில் தீர்க்கப்படாத ஒரு பிரச்சினை இருக்கிறது. அதைத் தீர்த்துவைக்க வேண்டு மென்றுதான் இ படிப்பட்ட பீடிகையோடு ஆரம்பித்திருக்கிறேன். இன்றையத் தினம் திருநெல்வேலியைப் பொறுத்தவரையில் அங்கே ஒரு இரயில்வே கேட் இருக்கிறது. இருபதாண்டுக் காலமாக மக்கள் அங்கே மேம்பாலம் இல்லாமல் துயரப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை ஒரு இரயில்வே மேம்பாலமாக ஆக்க வேண்டுமென்று எல்லாக் கட்சித் தலைவர் களும் சேர்ந்து தெரிவித்திருக்கிறார்கள். 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் தேதியில் இதைத் தமிழக அரசு கொள்கையளவில் ஒப்புக்கொண்டு 35 லட்சம் ரூபாயை ஒதுக்கச் சம்மதித்து இருந்தது. சென்ற ஆண்டு திருநெல்வேலியில் நடந்த போக்குவரத்து மாநாட்டிலும் இந்தக் கருத்தை நான் வலியுறுத்தியிருக்கிறேன். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு முத்தையா பிள்ளை அவர்களும் முயற்சி எடுத்திருக்கிறார்கள். தென்மாவட்ட வளர்ச்சி மன்றத்திலும் இதற்கான தீர்மானம் நிறை வேற்றப்பட்டிருக்கிறது. சர்வகட்சியினரும் அடங்கிய குழுவை அமைத்து, முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சரைச் சந்தித்தோம். ஆசியாவிலேயே மிகப் புதுமையான பாலம் என்று சொல்லப்படுகிற அளவுக்கு, இரண்டு அடுக்குகளைக் கொண்ட பாலமாக அமையவிருக்கிறது. ஆனால், அங்கே யிருக்கின்ற ஒரு சில சுயநலம் கொண்ட வியாபாரிகள் மிகுந்த எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் சர்வகட்சியினரும் இது வந்தாக வேண்டு மென்ற விருப்பத்தோடு இருக்கிறார்கள். ஆனால், இன்று அங்கேயிருக் கின்ற காங்கிரஸ் கட்சியின் நகர் மன்ற உறுப்பினர் இந்தப் பாலம் அமையக் கூடாது என்று தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் இங்கே ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுடைய நெல்லை மாவட்டக் காங்கிரஸ் தலைவர், இந்த மன்றத்திலே உறுப்பினராக இருக்கின்ற மதிப்பிற்குரிய துரைபாண்டியன் அவர்கள் வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே, இந்த இடத்திலே பாலம் கட்டுவதற்கு ஆதரவு தந்திருக்கிறார்கள். தீர்மானமும் நிறைவேறியிருக்கிறது. கட்சித் தலைவர் சொன்னாலும்கூட அந்தக் கட்சியைச் சேர்ந்த நகர மன்ற உறுப்பினர் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். இதையும் நான் எதிர்க் கட்சித் தலைவரவர்களின் கவனத்திற்கு இந்த நேரத்திலே கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, சிடி இம்ப்ரூவ்மெண்ட் கமிட்டி என்ற பெயரில் சுயநலமுள்ள வியாபாரிகள் சேர்ந்து குழு அமைத்துக்கொண்டு எதிர்ப் பைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த எதிர்ப்புக்களுக்கெல்லாம் அஞ்சாமல் பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் விரைவிலே இந்தப் பாலத்தைக் கட்டித்தர வேண்டுமென்று நான் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக இந்த நேரத்தில் மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்த வேலையை விரைவாகத் துவங்குவதற்கு உறுதி மொழியைத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தேசீய நெடுஞ்சாலைகளிலே, புறச்சாலைகள் அதாவது பைபாஸ் ரோடு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டுள்ளது. திருநெல் வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், திருநெல்வேலியிலும், கோயில்பட்டியிலும் அந்த பைப்பாஸ்ரோடு போடப்பட வேண்டுமென்று கோரிக்கை இருக்கிறது. அதற்கான நிலங்கள் கையகப்படுத்தப்படாமல் இருக்கின்றது. அதை விரைவிலே செய்து முடிக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். கோயில்பட்டியிலே



1969 மார்ச் 17] [திரு. அ. லெ. சுப்பிரமணியம்]

இரயில்வே கேட் அடைக்கப்பட்டுவிடுவதால் எக்ஸ்பிரஸ் பஸ்கள்கூட மிகவும் தாமதமாக வருகின்றன. அதைத் தவிர்க்க திருநெல்வேலியிலும் கோயில்பட்டியிலும் புறச் சாலைகளை அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அமைச்சரவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளு கின்றேன்.

குறிப்பைப் பார்க்கும்பொழுது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேசீய நெடுஞ்சாலைகளுக்காக ரூ. [illegible]00 லட்சம் கேட்டிருந்தோம். ஆனால் 152 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய சாலை நிதியிலிருந்து இந்திய அரசு வழங்கும் நிதியில் 57 லட்சம் ரூபாய் வேண்டுமென்று கேட்டதற்கு 27 லட்சம் ரூபாய் மட்டுமே வழங்கப்படுமென்று குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது. இத்தகைய குற்றச் சாட்டை நமது அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் உறுப்பினர்கள் எல்லாம், குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் போன்ற வர்கள், மத்திய அரசுக்கு இதை நல்ல முறையில் எடுத்துச் சொல்லி மாநில அரசு விஷயத்தில் பாரபட்சம் காட்டாமல் இந்த நிதியை ஒதுக்க ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்; அந்த நிதியைத் தர வேண்டுமென்று வலியுறுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

இதைப்போலவே, சென்னையையும், கன்னியாகுமரியையும், இணைக்கும் வகையில் கடற்கரையோரமாகச் சாலைகள்போட 14 கோடி ரூபாய்க்குத் திட் டத்தை இன்றைக்கு இந்த அரசு அனுப்பியிருக்கிறது. அமைச்சரவர்களின் குறிப்பைப் பார்க்கும்பொழுது மத்திய சர்க்கார் இப்பொழுது இதற்கு 6 கோடி ரூபாயாகச் சுருக்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னதாகத் தெரிகிறது. இதனால் இத்திட்டத்தில் காலதாமதம் ஆகிறது. இந்தக் கடற்கரைச் சாலையை அமைத்தால் இருக்கின்ற சிறு துறைமுகங்களையெல்லாம் ஒன்றாக இணைக்கலாம். ஆகவே, இதையும் முடித்துத்தர வேண்டுமென்று நமது அமைச்சரவையை இந்த நேரத்தில் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

தேசீய நெடுஞ்சாலைக்காக 100 அடி தூரத்திற்குக் கையகப்படுத்திக் கொள்கிறார்கள். இன்று நாங்குநேரியில் தண்ணீர்க் குழாய்கள் போட வேண்டுமென்றால், ரோட்டைத் தோண்டக்கூடாது என்று மத்திய சர்க்கார் உத்தரவு தந்திருக்கிறார்கள். இதனால் நகரங்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, அதையும் தவிர்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நெல்லை வழக்கறிஞர்கள் சங்கத்திற்காக ஒரு கட்டடம் கட்ட முன்னால் பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் 19,700 ரூபாய் வழங்கி, இன்று அந்தக் கட்டடத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

ஆனால், கோர்ட்டுகளைப் பொறுத்தவரையில் ஒன்றைக் கூற விரும்பு கிறேன். திருநெல்வேலியில் இருக்கும் நீதி மன்றங்கள் எல்லாம தனித் தனியாக ஒவ்வொரு இடத்திலே இருக்கின்றன. சப் மாஜிஸ்டிரேட் கோர்ட் வண்ணாரப்பேட்டையிலே இருக்கிறது. கட்டடம் மிகப் பழையதாக இருக்கின்றது. இதையெல்லாம் ஒருங்கிணைத்து ஒன்று சேர்த்து ஒரே கட்டடத்தில், மதுரையில் அமைய இருப்பதைப்போல், விரைவாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஹைகோர்ட்கூட சிபார்சு செய்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருப்பதாக அறிகிறேன். இதையும் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் [illegible] வருகிறேன்.

மருத்துவக் கல்லூரி, ஹெட்குவர்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி, இன்று ஒரு கல்லூரியாக ஆகியிருக்கிறது. ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியில் மிகக் குறைந்த படுக்கை வசதிகளே இருக்கின்றன. எனவே, மெடிகல் காலேஜிற்குத் தனியாக மருத்துவ மனை கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இது புளூ பிரிண்டிலும் சேர்க்கப்பட்டிருக்கிறது. மெடிகல் கல்லூரி தனியாக வைத்து, மருத்துவ மனை கட்டுவதற்குக் கிட்டத்தட்ட 40 லட்சம் ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது. அதையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று, இங்கு முன்னாள்
முற் பகல் 11-30 சுகாதார அமைச்சராகவும், இன்று பொதுப்பணித் துறை அமைச்சராகவும் விளங்குகின்ற அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். அவர்களுக்கு இந்தப் பிரச்சினை நல்ல முறையிலே தெரிந்திருக்கிறது என்பதையும் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு பார்க்கின்ற நேரத்தில், இப்படி பி. டபிள்யூ. டி. க்குரிய கட்டடங்கள் நமது மாநிலம் முழுவதும் கிட்டத்தட்ட 34 கோடி, 35 கோடி ரூபாய்க்கு மதிப்புள்ள கட்டடங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருந்தாலும் கூட இன்னும் பல்வேறுபட்ட அரசு அலுவலகங்கள் எல்லாம் வாடகைக் கட்டடத்திலே இருப்பதைக் காண்கின்றோம். இப்படி வாடகைக் கட்டடத்தில் இருப்பதால் "ரெக்கரிங் எக்ஸ்பெண்டிச்சர்" வந்துகொண்டிருக்கிறது. ஆகையால், இதையும் நல்ல முறையில் முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

பாசன வசதியைப் பொறுத்தவரையிலும் ராம நதி, கடனா நதி திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேற்றப்படுகின்றன. நாங்குநேரி தாலுகாவில் பச்சையாறு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பேரவைத் துணைத் தலைவருடைய வட்டத்தில், தென்காசியிலிருந்து, மேலப் புதுக்குடி குளத்திற்குத் தனிக்கால் வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. இப்படித் தனிக்கால் வெட்டப்பட்டால் 11 குளங்கள் நீர்ப்பாசன வசதி பெறும். ஒரு போக நிலங்கள் இரு போக நிலங்களாகும். அதையும் விரைவிலே முடித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இப்படி இருக்கிற தண்ணீரைப் பகிர்ந்தளிப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள், நில உடைமையாளர்கள் அடங்கிய இரிகேஷன் அட்வைசரி போர்டை மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் அமைக்க வேண்டும் என்று விரும்பி வேண்டுகிறேன். இந்தத் திட்டத்திற்கு ஆதரவு தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு நான் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 25 உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். மணி இப்பொழுது 11½ ஆகியிருக்கிறது. இன்னும் 2 மணி நேரம் இருக்கிறது. பிறகு ஒரு மணி நேரம் மேலும் எடுத்துக் கொண்டாலும், எதிர்க்கட்சித் தலைவருக்கும், அமைச்சர் அவர்களுக்கும் 1 மணி நேரம் வேண்டியிருக்கும். ஆகவே, உறுப்பினர்கள் கண்டிப்பாக 5 நிமிடத்திற்குமேல் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி:** தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசன மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களை இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நான் ஆசைப்படுகிறேன். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிய பின்னால் எதிர்பாராத வகையில் வானம் பொய்த்துவிட்டால், பஞ்ச நிலைமையை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அரசாங்கம், இறைவைப் பாசனத்தை உறுதியாகக்கொண்டு இனிமேல் திட்டத்தை அமைக்கும் என்ற கொள்கைக்கு வந்திருப்பது மிகவும் வரவேற்கத் தகுந்த முறையாகும். அந்த இறைவைப் பாசன ஊற்றும் வற்றிவிடாமல் இருப்பதற்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் இந்த நேரத்திலே, நாம் மழைத் தண்ணீரை ஊற்று நீராக்கக்கூடிய அந்தத் திட்டத்தையும் செயல்படுத்தினால் தான் இறைவைப் பாசனத்திற்கும் ஒரு உறுதியான திட்டத்தை அமைக்க முடியும். அதே நேரத்திலே இதையும்





செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்கு முக்கியமாக, நமது கால்வாய், வாய்க்கால்கள், மேலும் தண்ணீர் கொடுக்கக்கூடிய கண்மாய்கள் இந்த மாதிரியான இடங்களையெல்லாம் நாம் இந்தத் திட்டத்திற்காகத் தேர்ந்தெடுத்து, அங்கே நிலத்திலே விழக்கூடிய தண்ணீரை வீணாக ஓடவிடாமல் இருப்பதற்கு பல தடுப்புகளைப் போட்டு, 5 அல்லது 6 அடி விட்டத்தில் பல ஆழக் கிணறுகளை வெட்டுவதன்மூலம் அங்கே இருக்கிற மழை நீரை ஊற்று நீராக்கக்கூடிய திட்டத்தைச் செயல்படுத்த முடியும். அந்த முறையிலே அரசாங்கம் முனைந்து செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, இந்தியாவிலே, பாரத தேசத்திலே இருக்கக்கூடிய காவிரியையும் கங்கையையும் இணைக்கவேண்டுமென்ற பெரும் திட்டம் பல காலமாகப் பேசப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தை நடைமுறையிலே இப்பொழுது எடுத்துக்கொள்ளாவிட்டால் கூட, தமிழகத்திலே இருக்கிற எல்லா நதிகளையுமாவது இணைக்கக்கூடிய திட்டத்தை செயல்படுத்துவதற்கு நமது அரசாங்கம் முன்வரவேண்டும். அதை நமது அரசாங்கம் முனைப்போடு கவனிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, என்னுடைய குறையைக் கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். பல ஆண்டுக் காலமாக பேசப்பட்டு வருகிற கிருதுமால் நதித் திட்டம் இன்னும் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம். பாண்டியர் காலத்தில் ஏற்பட்ட வாய்க்கால் பிறகு புண்ணிய நதியாக, கிருதுமால் நதியாகக் கருதப்படுகிறது. ஆனால், அந்தப் புண்ணிய நதி ஆரம்பிக்கப்படுகிற இடம், மதுரையைக் கடந்து வரக்கூடிய அந்த நேரத்திலே, மெட்ராசுக்கு எப்படி கூவம் இருக்கிறதோ, அதைப்போல் ஒரு சாக்கடை நதியாக, கிருதுமால் நதி மதுரை வழியாகச் செல்கிறது. அந்த கிருதுமால் நதியை நாம் செம்மைப்படுத்துவதன் மூலமாக, பாசன வசதிக்கேற்ற முறையிலே அதைச் சீர்படுத்துவதன் மூலமாக, நாம் நிச்சயமாக மதுரையைத் தவிர, இராமநாதபுரம் மாவட்டத்திலே இருக்கக்கூடிய மானாமதுரை, அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர் ஆகிய தாலூகாக்களில் இருக்கக்கூடிய சுமார் 50,000 ஏக்கர் பரப்புள்ள நிலங்களுக்குப் பாசன வசதி கொடுக்க முடியும். அந்தத் திட்டத்தை உடனே எடுத்துக்கொண்டு செயல்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த கிருதுமால் நதியிலிருந்து பல கால்வாய்கள் பிரிந்திருக்கின்றன. ஒவ்வொன்றும் சுமார் 10,000, 5,000 ஏக்கர் அளவுள்ள நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கக்கூடியதாக இருக்கிறது. அவற்றிலே முக்கியமாக இருக்கக்கூடிய ஒடகூர், கால்வாய், மரியூர், அட்டூனூர், மானூர் ஆகிய அணைகளையும் நாம் செப்பனிடக்கூடிய வேலையை எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த கிருதுமால் நதித் திட்டத்தை இப்பொழுது இந்த அரசு கைக்கொள்ளும் என்பதைப்பற்றி முடிவான அபிப்பிராயத்தை, இந்த விவாதம் முடிவதற்கு முன்பாகவே நம்முடைய அமைச்சரவர்கள் அறிவிப்பார்கள் என்று நான் கருதுகிறேன். இராமநாதபுரத்திலே இருக்கக்கூடிய மக்கள் எப்பொழுது இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதிலே மிகுந்த அக்கறையும், ஆவலும் உள்ளவர்களாக இருப்பதால், இந்த நேரத்திலே அந்தத் திட்டம் உறுதியாக எடுத்துக்கொள்ளப்படும் என்ற அறிவிப்பை இந்த அவையிலே அமைச்சர் அவர்கள் வெளியிட்டால் அங்குள்ள மக்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள். (மணி அடிக்கப்பட்டது) எனவே, நான் நமது அமைச்சரை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன், அந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று.

அதற்கடுத்தபடியாக, அருப்புக்கோட்டைத் தாலூகாவைப் பொறுத்தவரையிலும் உள்ள குறையையும் தெரிவித்துக்கொண்டு பேச்சை முடித்துக் கொள்கிறேன். கடந்த காலத்தில் அருப்புக்கோட்டைத் தாலூகாவிலே எந்தவிதமான நீர்ப்பாசன வேலைகளும் எடுத்துக்கொள்ளப்

படவே இல்லை. அங்கு பல புதிய கண்மாய்கள் அமைக்கப்பட வேண்டிய திட்டங்கள், கடந்த 10 ஆண்டுக் காலமாக அமைக்கப்படாமல் இருப்பதை நான் அறிகிறேன். எனவே, அங்கு ஒரு திட்டம், குறிப்பாக குல்லூர் சந்தை, திருவிருந்தாள்புரம் என்ற திட்டங்கள் இருக்கின்றன. அந்தத் திட்டங்களின் மூலமாக சுமார் 5,000 ஏக்கர்களைப் பொதுவாக அருப்புக்கோட்டைத் தாலூகாவிலே நாம் பாசனத்திற்குக் கொண்டு வரமுடியும். இதைப்போல் இன்னும் இருக்கக்கூடிய கண்மாய்கள் திட்டங்களையும், கவுண்டர் நதியிலே கட்டவேண்டிய அணையைப் பற்றியும் கவனிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றை எல்லாம் அரசாங்கம் பரிசீலித்து இந்த நிதி ஆண்டிலேயே செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

*திரு. வீ. மலைக்கண்ணன் : சபைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் இன்று கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கையின்மீது இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழ் மாவட்டத்தைப்பற்றி நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகும். எல்லாத் துறைகளிலும் அங்கு வாழ்கிற மக்கள், அங்கே இருக்கிற கண்மாய்களையும், வாய்க்கால்களையும் அதற்கு மேல் வானத்தையும் பார்த்து வாழ்கிறார்கள். அந்த கண்மாய்களைச் சீர்செய்து கொடுத்து, வாய்க்கால்களைப் பழுது பார்த்துக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது வைகைச் சீரமைப்பு வேலை நடந்துகொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்திலே ஏறக்குறைய நூற்றுக்கணக்கான கண்மாய்களும், வாய்க்கால்களும் இருக்கின்றன. அந்த வாய்க்கால்களைச் சீர்படுத்திக் கொடுப்பதன்மூலம், அங்கே இருக்கிற நிலங்களுக்கு நாம் நல்ல பாசன வசதி செய்து தரமுடியும்.

இரண்டாவது, பெரிய கண்மாய் என்று கூறக்கூடிய இராசசிங்கமங்கலம் கண்மாய், தமிழ்நாட்டில் பெரிய கண்மாயாக இருக்கிறது. 10,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி செய்யக்கூடிய கண்மாய இது. இந்தக் கண்மாய்க்கு வைகையிலிருந்து இரண்டு கால்கள் உண்டு. ஒன்று மேல் நாட்டார் கால், மற்றொன்று கீழ் நாட்டார் கால். இப்பொழுது வைகையில் தண்ணீர் கரைபுரண்டு போனாலும்கூட, அந்தக் கண்மாய்களுக்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூடப் போய்ச் சேர வழியில்லை. ரூ. 7 இலட்சத்தில் மேல் நாட்டார் கால் பழுதுபார்க்கும் மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு, அது தலைமைப் பொறியாளர் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதுகுறித்து நான் அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கூறி இருக்கிறேன். அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தருமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இராமநாதபுரம் பகுதியில் இன்னும் கண்மாய்களில் தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றது. அரசாங்கம் இனாம் கிராமங்களை இப்பொழுது எடுத்துக்கொண்டு வருவதால் இன்னும் இன்வெஸ்டிகேஷன் ஆகாமல் இருக்கிறது. அங்கு 2,000 கண்மாய்களுக்குமேல் இன்வெஸ்டிகேஷன் ஆகாமல் இருக்கிறது. ஆகவே இன்வெஸ்டிகேஷனை விரைவில் முடித்து, அவற்றிற்கு மதிப்பீடு அளித்து அந்தக் கண்மாய்களைப் பழுது பார்ப்பதற்கான வேலைகளைச் செய்யவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வேலையைத் துரிதப்படுத்த, தேவகோட்டையில் ஒரு இன்வெஸ்டிகேஷன் டிவிஷன் துவங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தேவகோட்டை கோட்டத்தைச் சேர்ந்த பகுதியில் சிறுகாம்பையூர் அணைக்கட்டு வேலை நடந்து வருகிறது. அந்த வட்டாரத்தில் இதுபோன்ற பல திட்டங்கள் உருவாவதற்கு வாய்ப்புகளும், வசதிகளும் இருக்கின்றன. மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றையும் நிறைவேற்றித் தரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கே மண்வேலை செய்வதற்குத் தற்போது கொடுக்கப்படும் கூலி மிகவும் குறைவாக இருக்கிறது. நான் கூலி குறைவாக இருப்பதால் ஆட்கள் கிடைப்பதில்லை



வேலை சுணங்குகிறது. வைகை சீரமைப்புத் திட்டவேலை கூட, கூலி குறைவால், ஆட்கள் கிடைக்காமல், காண்ட்ராக்டர்களும் கிடைக்காமல் துரிதப்படுத்திச் செய்ய இயலவில்லை. ஆதலால், திட்டங்கள் விரைவில் நிறைவேறி, விரும்பிய பலனைப் பெற மண் வேலை செய்வதற்கு நாள் கூலியை உயர்த்தித் தரவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கிழக்குப் பகுதியில் பாதை வசதிகள் மிகவும் குறைவு. திடீரென வெள்ளத்தில் கண்மாய்கள் உடைப்பெடுக்கும் போது, அதிகாரிகள் செல்வதற்கு பாதை வசதிகள் கிடையாது. ஆகவே உடனுக்குடன் அதிகாரிகள் சென்று கவனிக்க முடியவில்லை. தமிழ் நாட்டின் இருட்டு கண்டம் அங்கே இருக்கிறது என்று கூட சொல்லலாம். சாலை வசதியில்லாமல் அந்தப் பகுதி மக்கள் படும் தொல்லை சொல்ல முடியாது. மழைக் காலத்தில் கிராமத்திற்கு உரம், தழை முதலியவற்றை எடுத்துச்செல்லவேண்டுமானாலும். அல்லது நோயாளிகளை, கர்ப்பஸ்திரிகளை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவேண்டுமானாலும், கட்டிலில் வைத்து பிணத்தை எடுத்துச் செல்வதுபோல தூக்கிச்செல்ல வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. 8 மைல், 10 மைல் தூரம் அப்படிச் செல்லவேண்டும், வண்டியில் போக முடியாது. 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் அந்தப் பகுதி புறக்கணிக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது நம்முடைய மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் அங்கு வந்து பார்த்து இருசாலைகள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த சாலைகளைச் சீக்கிரம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் ஆண்டுதோறும் டவுன் ஓடும் ஊராட்சி ஒன்றியத் தடத்தை அரசாங்கம் 300 மைல் வரை எடுத்துக்கொள்கிறது. ராமநாதபுரம் கிழக்குப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. 54, 64 ஊராட்சி மன்றங்களைக் கொண்டு, பெரிய பரப்பளவில், சாலைகளைப் பராமரிப்புச் செய்ய இயலாமலும், புதிய பாதை அமைக்க வசதியில்லாமலும் இருக்கின்ற இளையாங்குடி ஊராட்சி ஒன்றியம், போகலூர் ஊராட்சி ஒன்றியம் போன்றவைகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அவைகளுக்கு முதல் ஸ்தானம் கொடுத்து, அந்தத் தடங்களை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். இளையாங்குடி ஊராட்சி ஒன்றியத்தில், இரு ஒன்றியத் தடத்தில், அதாவது, மானாமதுரை—இளையாங்குடி, வழி தெ. புதுக்கோட்டை சாலை, சாலைக் கிராமம்—சருகணி வழி சூராணம் சாலை இந்த இரு சாலைகளிலும் பஸ்கள் போய்க்கொண்டிருக்கின்றன. இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பே இந்த சாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்வதாக இருந்தது. அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து இந்தப் பகுதிக்கு மெத்த இரக்கம் காட்டி இந்த ஆண்டிலாவது இந்தப் பாதைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி அரசாங்கம் எடுத்துக்கொண்டால் ஊராட்சி ஒன்றியத்தால் கிராமங்களுக்கு அதிகமாக இணைப்புப் பாதைகள் போட்டுத்தர முடியும். ஆகவே, அந்த இரண்டு பாதைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தொண்டியிலிருந்து தேவிப்பட்டணம் செல்லும் கடற்கரைச் சாலை ஒன்று இருக்கிறது. அந்தச் சாலையில் புதிய பாலங்கள் இல்லாமல் இருப்பதினாலும், இருக்கக்கூடிய பாலம் பழைய பாலமாக இருப்பதினாலும், பாதை வசதி இல்லாமல் இருக்கிறது. அந்தக் கடற்கரைச் சாலையில் பாலங்கள் கட்டி சாலையை மேம்படுத்தி, பஸ் ஓடுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீர்ப்பாசனத்தைப்பொறுத்த வரையில், பல்கலைக்கழக மான்யக் குழுவைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் எஸ். கே. கோஷ் என்பவர் மலிவான செலவில் மழையை உண்டு பண்ணலாம் என்று கூறியிருக்கிறார்.

Dr. S. K. Ghosh, University Grants Commission Visiting Professor, has developed a rain-making technique within the reach of the peasants. He said :—At a cost of hardly Rs. 20 it will be

possible to precipitate rains from clouds which are not raining naturally and areas up to about ten square miles will receive the rainfall the quantum of which will depend on cloud concentration and their liquid water content.

He said it should be possible for Indian farmers to precipitate rains for their fields. The village panchayats could stimulate rain-bearing clouds by seeding them with self-exploding rubber balloons. The technique comprises dispersion of finely powdered sea salt to form big drops of rains, he added.

Dr Ghosh hoped the farmers would reconsider the idea of preferring taccavi loans to actual rains என்று அவர் பாலூவில் கூறியிருக்கிறார். இந்த முறை எளிதான முறையாக இருக்கிறது. இந்த முறையை அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். இது மாதிரி முக்கியமான திட்டங்களைப்பற்றிக் கூறும்பொழுது, இந்த சோதனையைச் செய்வதன்மூலம் நாம் மழையைப் பெய்விக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார். இதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எல்லாத் துறைகளிலும் அரசாங்கம் ஒரு தனித் திட்டம் தயாரித்து (A master plan outside the Fourth Five - Year Plan), அதை அமுல் நடத்தினால் தான் இந்தப் பகுதி மக்கள் வளர்ச்சி அடையமுடியும், இந்தப் பகுதியிலிருக்கிற மக்கள் ஆப்ரிக்கா கண்டத்தில் இருப்பதுபோல இருக்கிறார்கள். ஆகவே இதற்கு தனியாக ஒரு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. என். வரதராஜன்** : துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தைப்பற்றி விவாதிக்கிறபொழுது, தமிழ்நாட்டில் இன்றைக்கு இருக்கக் கூடிய பஞ்சம், வறட்சி இவைகளையும் நாம் மனதில்கொண்டு, இதை விவாதிக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். இதில் பின்தங்கிய பகுதிகளில் அதிகமாக கவனம் செலுத்தவில்லை என்று நான கருதுகிறேன். சென்ற ஆண்டு இதே மானியத்தின் மீது நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பேசிய காலத்தில் பின்தங்கிய பகுதிகளுக்கு ஒரு டன் அரிசி விளையவேண்டுமென்றால் ரூபாய் 3,000 செலவிடவேண்டும் என்ற ஒரு விதி இருப்பதைத் தளர்த்தி அதிக உதவி அளிக்கப்படும் என்றார். மஞ்சளாறு திட்டம் நிறைவேற்றுவதற்கு ஒரு டன் அரிசி விளைவதற்கு ரூ. 10,000 செலவிடப்பட்டிருக்கிறது. ஆகவே, பின்தங்கிய பகுதிகளுக்கு உதவி செய்வேன் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். பின்தங்கிய நிலையில் இருக்கும்படியான கிராமப்புறங்கள், புஞ்சை, வறண்ட பிரதேசங்கள், நீர்நிலை இல்லாத பிரதேசங்கள் ஆகியவைகளுக்கு உதவி செய்வதற்கான திட்டங்களை நாம் அவசியம் தீட்டவேண்டும் என்று வற்புறுத்துகிறேன். மாநில அளவிலே 14 மேஜர் திட்டங்களும், 41 மீடியம் திட்டங்களும் ஆய்வில் இருக்கின்றன என்று நான் கருதுகிறேன். இவையல்லாமல் இன்னும் நூற்றுக்கணக்கணக்கான திட்டங்கள் அரசின் கைவசம் இருக்கின்றன. இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். உடனடியாக புன்செய்ப் பகுதி மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னால் மூன்றாவது முறையாக இந்த மானியக் கோரிக்கையில் பேசுகின்றேன். என் தொகுதியில் இருக்கும்படியான நிலைமை மிகவும் பயங்கரமானது. அந்தப் பகுதியில் எந்த விதமான தண்ணீர் வசதியும் இல்லை. உழைப்பதற்கு 4 லட்சம் விவசாயிகள் இருக்கிறார்கள். அது மிகவும் வறண்ட பிரதேசம். அங்கே குடவனாறு என்ற ஒரு ஆறு ஓடுகிறது. அந்தக் குடவனாற்றில் அணை கட்டவேண்டும் என்று நீண்ட நெடு நாட்களாக ஒரு திட்டம் ஆய்வில் இருந்து கொண்டிருக்கிறது என்பது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இத்திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஆய்விலே





இருந்து கொண்டிருக்கிறது என்றுதான் சொல்லப்படுகிறது. குடவனாறுத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தால் தான் இந்தப் பகுதி மக்கள் வாழமுடியும், இல்லையென்றால், அங்கே ஆண்டுக்கு ஆண்டு அழுதுகொண்டே இருக்கும்படியான சூழ்நிலை தான் இருக்கிறது. நித்ய கண்டம் பூர்ண ஆயுசாக என்று சொல்வதைப்போல் அங்குள்ள விவசாயிகள் நிலை இருக்கிறது.

குடவனாறுத் திட்டம் கைவிடப்படாது, பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்தை இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளவில்லை. அந்த திட்டத்தைக் கைவிடாமல் அவசியம் அமல் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை லட்சுமணப் பட்டி அருகில் கட்டவேண்டும். அப்படிக் கட்டினால் தான் வேடசந்தூர் பகுதி மக்களுக்குத் தண்ணீர் கிட்டும். திருச்சி மக்களுக்கு நான் எதிரி அல்ல. இந்தப் பிராந்தியம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. ஆகவே. குடவனாறு திட்டத்தை இந்த ஆண்டிலாவது அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் குடவனாறு திட்டம் கைவிடப்பட்டதாகக் கருதவேண்டியதில்லை என்று கடந்த ஆண்டு கூறினார். சொல்லிக்கொண்டே காலத்தைத் தள்ளிப் போடக்கூடாது. இந்த அணையை பெரிய திட்டத்தில் சேர்க்கவேண்டும். அப்போதுதான் வேடசந்தூர் பகுதியில் விவசாயத்திற்கு விமோசனம் பிறக்கும். குடிநீர்ப் பிரச்னையும் தீரும்.

அடுத்து, கோவை மாவட்டம் வடக்குப் பகுதி மிகவும் வறட்சிப் பகுதியாக இருக்கிறது. பல்லடம், அவனாசி, சூலூர், பெரியநாயகன் பாளையம் முதலிய பகுதிகளுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் வருவதற்கு வேறு எந்த வசதியும் கிடையாது. குந்தா கழிவு நீர்த் திட்டத்தை அமுல் நடத்தினால் தான் அந்தப் பகுதிக்குத் தண்ணீர் கிடைக்கும் என்று மத்திய பாசன அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் சொல்கிறார்கள். தமிழக அரசிடமிருந்து ஆய்வு முடிந்து தங்களுக்கு இன்னும் அறிக்கை கிடைக்கவில்லை என்று பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் அளித்திருக்கிறார். ஆகவே, அந்த ஆய்வு விரைவிலே முடிந்து அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

என் தொகுதியில் பல்வேறு குளங்களைப் பற்றி நான் ஏற்கனவே விளக்கமாக அமைச்சர் அவர்களுக்கு எழுதியிருக்கிறேன். கல்வார்பட்டியில் ரெங்கமலை ஓடை என்ற ஓடைக்குப் பக்கத்தில் ஒரு குளம் கட்டவேண்டும். ராஜகவுண்டன்வலசு என்ற ஊருக்குப் பக்கத்திலும் ஒரு பெரிய குளம் கட்டவேண்டும். முட்டநாகம்பட்டிக்கு அருகில் ஒரு பெரிய குளத்தை வெட்டுவதற்காக ரூ. 1½ லட்சம் செலவில் காண்டிராக்ட்டுக்கு விடப்பட்டது. அங்கே வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. காண்ட்ராக்டர் கால் பகுதி வேலையுடன் விட்டுவிட்டுப் போய்விட்டார். ஒன்றரை ஆண்டுகாலமாக வேலை நடைபெறாமல் இருக்கிறது. அதை உடனே நிறைவேற்றவேண்டும். வட்டாற்றிலே ஒரு குளத்தை அமைக்க ஆய்வு முடிந்துள்ளது. உடன் வேலையை ஆரம்பிக்கவேண்டும். தேவர்மலையில் அத்திமடை ஓடையில் குளம் கட்டித் தரவேண்டும். இந்தத் திட்டங்களையெல்லாம் துரிதமாக அமுல் நடத்தித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சரவை பஞ்சாயத்து யூனியன்களில் பொதுப் பாசனக் கிணறுகளை வெட்டலாம் என்ற ஒரு உத்தரவிட்டிருக்கிறது. அது நல்ல உத்தரவு தான். பஞ்சாயத்துக்களுக்கு பொதுக் கிணறுகளை வெட்டித் தரக்கூடிய நிலையில் பணவசதி கிடையாது. நம்முடைய பொதுப் பணித்துறை அப்படிப் பட்ட கிணறுகளை புன்செய்ப் பிரதேசத்தில் வெட்டித் தந்தால்தான் விவசாயம் அபிவிருத்தி அடையும். இன்னொன்றையும் நான் அரசுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பொதுமக்கள், விவசாயிகள் தங்களுடைய உழைப்பு மூலம் ஒரு பகுதி உதவியை அந்தத் திட்டத்திற்குக் கொடுக்கத்

தயாராக இருக்கிறார்கள். நீர்ப்பாசனம் இல்லாத வறட்சியான பிரதேசங்களிலுள்ள மக்கள் அதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். பொதுப் பாசனக் கிணறுகள் வெட்டித்தருவதற்கான பெரிய திட்டங்களை வகுத்து, மக்களுடைய ஒத்துழைப்புடன் அவைகளை நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோலத்தான் பூமிக்கு அடியில் இருக்கக்கூடிய தண்ணீரைக் கொண்டுவருவதற்கான திட்டங்களையும் துரிதமாக அமுல் நடத்தவேண்டும். இதற்கு ரூ. 87 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாக ஆய்வு உரையில் கூறப்பட்டிருக்கிறது. அது மிகவும் குறைவான மதிப்பீடு. 4, 5 கோடி ரூபாயை ஒதுக்கவேண்டும். நாம் ஏற்கனவே பூமிக்கு மேலே இருக்கும் தண்ணீரில் 94 பகுதி தண்ணீரை உபயோகத்திற்குக் கொண்டுவந்துவிட்டோம், அணைக்கட்டுகளின் மூலம். ஆகவே, இனி பூமிக்கு அடியிலுள்ள தண்ணீரை மேலே கொண்டுவருவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டால்தான், அது தமிழக விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். அப்படிப்பட்ட திட்டங்களைக் கொண்டு வருவதற்கு இன்னும் பல கோடி ரூபாய்களை அதிகமாக ஒதுக்கி, அந்தத் திட்டங்களை துரிதமாக நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும். மதுரை மாவட்டத்தின் பின்தங்கிய பகுதிகளை இதில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய ரோடு வேலைகளில், மைல் கூலி தொழிலாளர்கள், நீண்டகாலமாக நிரந்தரமற்ற நிலையிலேயே இருக்கிறார்கள். அவுட்-டர்ன் முறை, எட்டு மணி வேலை என்று இரண்டு தொல்லைகள் இருக்கிறதேயல்லாமல், நிரந்தரம் இல்லை. மூன்று ஆண்டுக்கு மேல் வேலையில் இருந்திருந்தால், அப்படிப்பட்டவர்கள் நிரந்தரமாக்கப்படவேண்டும். அதே போல, ரோடு இன்ஸ்பெக்டர்களுக்கு 22 மைல் கண்காணிப்பது என்று சொல்லுகிறார்கள்; அவர்களுடைய மாநாட்டில் கூட அதைப் பற்றிச் சொன்னார்கள்; அப்பொழுது நம்முடைய மறைந்த முதல் அமைச்சர் அதை அனுதாபத்தோடு கவனிப்பதாகச் சொன்னார்கள். . . (மணியடிக்கப்பட்டது) சார், 12 நிமிஷம் என்று தலைவர் சொன்னார்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** ஓர் உறுப்பினருக்கு ஐந்து நிமிஷந்தான்.

**திரு. என். வரதராஜன் :** இன்றைக்கு நான் ஒரே உறுப்பினர் என்று எனக்கு 12 நிமிஷம் கொடுப்பதாகத் தலைவர் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** என்னிடம் அப்படிச் சொல்லவில்லை.

**திரு. என். வரதராஜன் :** நான் ஒரே பேச்சாளர்; தயவுசெய்து 12 நிமிஷம் கொடுக்க வேண்டுகிறேன்.

ஆகவே, அந்த மைல் கூலியாட்களுக்கும், ரோடு இன்ஸ்பெக்டர்களுக்கும் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செக்ஷன் ஆபீசர்கள் சம்பந்தமாக, இப்பொழுது வேலை செய்துக் கொண்டிருப்பவர்களை எடுத்துவிட்டு, பி.இ. படித்த வேலையில்லாத எஞ்ஜினியர்களுக்கு வேலை கொடுக்கப் போவதாகப் பேசப்படுவதால், அங்கே இருக்கும் செக்ஷன் ஆபீசர்களுக்கு வேலை இல்லாமல் போகும் நிலை இருப்பதாக அவர்கள் கவலைப்படுகிறார்கள். புதிதாக வேலை கொடுக்கும்போது, அந்த செக்ஷன் ஆபீசர்கள் பாதிக்கப்படாத நிலையில் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, பொதுவாக காண்ட்ராக்ட் மூலம் வேலைகள் செய்வதில் பயன் இருக்கிறதா என்பதை அரசு ஆழ்ந்து பரிசீலிக்கவேண்டும். காண்ட்ராக்ட் வேலைகள் பலன் அளிப்பதில்லை. ஒரு வேலையை 5,000 ரூபாய்க்குக் கொடுத்தால், அதில் பாதிப் பணத்திற்குக்கூட வேலை செய்வதில்லை என்கிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட வேலைகளை கொஞ்சம் கொஞ்சமாக—ஒரே நாளில் தலைகீழாகப் புரட்டிவிட முடியும் என்று சொல்லவில்லை—கொஞ்சம் கொஞ்சமாக இலாகாவே எடுத்துக்கொண்டு, நிரந்தரமற்ற, ஒர்க்-சார்ஜ்ட் தொழிலாளிகள் இவர்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து, அந்த வேலைகளைச் செய்ய ஆரம்பிக்கலாம் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.





மதுரையில் பை-பாஸ் ரோடு போட்டு, பாலம் கட்ட பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இலட்சக்கணக்கான ரூபாய் செலவாயிருக்கிறது. ஆனாலும், அங்கே லைட் வசதி இல்லாததால், மதுரை பை-பாஸ் ரோட்டில் பெரிய விபத்துக்கள் ஏற்படுகின்றன. பை-பாஸ் ரோடு போட்டுவிட்டு, எலக்ட்ரிக் பல்புக்கு சிக்கனத்தைப் பிடிக்கவேண்டுமா என்பதை யோசிக்கவேண்டும். சம்பந்தப்பட்ட டிபார்ட்மெண்ட் உத்தரவு போட்டு, அந்தப் பாலத்திற்கு லைட் போடவேண்டியதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறுமலை வாழைப்பழத்தைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனால் அந்த சிறுமலைக்குப் போக ரோடு வசதி கிடையாது. பஞ்சாயத்து யூனியன் பராமரிக்க வேண்டுமென்றால், அவர்களிடம் பணவசதியில்லை. சிறுமலை வாழைப்பழங்கள் ரஷ்யாவிற்குக்கூடப் போவதாகச் சொல்லப்படுகிறது, அதனால் அந்நியச் செலாவணி கிடைக்கும். சிறுமலைப் பழத்தைக் கொடுக்கும் சிறுமலைக்கு ரோடு வசதியை மாநில அரசே போட்டுக்கொடுத்து அதைப் பராமரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து ரோடுகள் கவனிக்கப்படாத நிலையில், மிக மோசமான நிலையில் இருக்கின்றன. அவர்கள் தங்களிடம் நிதிவசதியில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, நாமே அப்படிப்பட்ட ரோடுகளை எடுத்து, பராமரிக்கவேண்டியது அவசியமானது என்று கூறிக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

***திரு. தொ. க. சிறைமீட்டான் :** பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, நமது பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து நானும் என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கீழ் இராமநாதபுரம் பகுதியில் மழைக் காலங்களில் அதிக மழை காரணமாக வெள்ளம் வந்துகொண்டிருக்கிறது. மழை வந்தாலும் புயலோடு சேர்ந்து வருகிறது. மழை இல்லாவிட்டால், வறட்சி நிலை நீடிக்கிறது. இந்த நிலையில் அந்தப்பகுதி மக்கள் ஆண்டுதோறும், பல மாவட்டங்களுக்குச் சென்று பிழைக்கும் நிலைதான் இருக்கிறது. மழைக் காலங்களில் கண்மாய்கள் ஜமீந்தார்கள் காலம் தொட்டு, சரியானபடி சீர்படுத்தி வைக்கப்படாததால், கண்மாய் கால்வாய்கள் உடைப்பு எடுத்து, சிறிய கிராமங்களையும் கூட அடித்துச் செல்லும் சூழ்நிலை இருக்கிறது, மழைக் காலங்களில். வெள்ளம், மழை இல்லாத காலங்களில் பஞ்சம் ஏற்படுகிறது. அதைப் போக்கும் வகையில், வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் அமைந்துள்ளது என்பதை அந்தப் பகுதி மக்கள் வரவேற்கிறார்கள். அந்தக் கால்வாய்த் திட்டத்தின்கீழ் பார்த்திபனூர், வரகனூர் பக்கங்களில் பொறிமதகுகள் இரண்டு அமைக்கும் திட்டம் உள்ளது. இரு அருகுகளிலும் கால்வாய் அமைத்துத்தர திட்டம் இருக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்ற, பரமக்குடியில் ஒரு தனி நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் அமைத்து, வைகை ஸ்கீம் முடியும் வரையில் அந்த அலுவலகம் பரமக்குடியில் இருந்தால்தான் கூடிய சீக்கிரம் திட்ட வேலைகள் முடியும் என்பதால், நிர்வாகப் பொறியாளர் அலுவலகத்தைப் பரமக்குடியில் வைக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. தொ. க. சிறைமீட்டான்] [1969 மார்ச் 17

அந்தக் கால்வாயிலிருந்து பிரிந்து செல்லும் பல பெரிய கால்வாய்கள் இருக்கின்றன. ஊத்தங் கால்வாய், மேல நாட்டார் கால்வாய், கீழ நாட்டார் கால்வாய், இளையாங்குடி கால்வாய், பார்த்திபனூர் கால்வாய் போன்ற பல கால்வாய்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் 10, 15 கண்மாய்களுக்குப் பாசன வசதி தரக்கூடிய கால்வாய்கள். ஒவ்வொன்றிற்கும் ஆற்றுமுகப்பில் தலை மதகுகள் அமைத்து எல்லா ஏழை எளிய மக்கட்கும் சிறு கிராமத்தார்கட்கும் பகிர்ந்து அளிக்கும் வகையில் குடிமராமத்து என்று தற்பொழுது இருப்பதை மாற்றி பொதுப்பணித் துறையில் ஏற்று நடத்தி அந்தப் பகுதி மக்கள் வாழ வசதியைப் பெருக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கீழ் இராமநாதபுரம் பகுதியில் ரோடு வசதியே கிடையாது. அந்த நிலை நம்முடைய அமைச்சர்களுக்கு நன்கு தெரியும். ஆனால் கடந்த காலத்தில் இருந்த அமைச்சர்களுக்குத் தெரியாது. காரணம், 20 ஆண்டு காலமாக, அந்தப் பகுதிக்கு வந்தபோதெல்லாம் அவர்கள் கிராமங்களுக்குச் செல்வதில்லை, குறிப்பாக சிறு கிராமங்களுக்குச் சென்றதே கிடையாது. அப்படிச் சென்றாலும், நல்ல ரோடு வழியாகச் சென்று திரும்பிவிடுவார்கள். இந்த நிலை இன்னமும் நீடிக்கிறது. அந்தப் பகுதியில் ரோடு வசதியைப் பெருக்கித்தரவேண்டும் என்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மதுரை-இராமநாதபுரம் சாலையில் எட்டுவயலுக்கு அருகாமையில் மேம்பாலம் பழுது அடைந்திருக்கிறது. அது பழுது பார்க்கப்படாமல் இருக்கிறது. அதனால் போக்குவரத்து அதிகமாக உள்ள அந்தப் பாலத்தை விரிவு படுத்தி, நல்ல முறையில் அமைக்க திட்டம் இருப்பதாக அறிகிறேன். ஆனால் இதுவரையில் அது செயல்படவில்லை. உடனடியாக அதைச் செயல்படுத்தவேண்டும். மதுரை, ராமநாதபுரம், பார்த்திபனூர் செல்லும் பஸ் பொதுமக்களுக்கு தொந்தரவான சூழ்நிலையைக் கொடுக்கிறது. நெருக்கமான தெருவாக இருப்பதால், அங்கே அருகாமையில் ஒரு பை-பாஸ் ரோடு அமைக்கும் திட்டம் இருப்பதாக அறிகிறேன். உடனடியாக அந்த பை-பாஸ் ரோட்டை அமைத்துத் தரவேண்டும் என்று கோருகிறேன்.

இராசசிங்கமங்கலம்-இளையாங்குடி சாலையிலிருந்து ஆர். எஸ். மங்கலம் கண்மாய்க்குத் தென் பகுதியில் அரியாங்கோட்டை, பஞ்சனூர் இருக்கிறது. வட பகுதியில் பல ஊர்களுக்கு சாலை வசதி இருக்கிறது. அப்பகுதி விவசாயிகள் ரோட்டைக் கடந்து தென்பகுதி சென்று விவசாயத்தைக் கவனிக்க வசதியில்லை. ஆகவே, அரியாங்கோட்டையை இணைத்தும் பஞ்சனூருக்கு நேராக ஒரு பாலமும் அமைத்துத் தரக் கோருகிறேன்.

கிழக்கு இராமநாதபுரம் பஞ்சப்பகுதி. ஆண்டுதோறும் பஞ்சப்பகுதி. ஆனால் இந்த ஆண்டு மிகக் கொடூரமான பஞ்சம். 90 சதவிகிதம் சாதாரண விவசாய மக்கள் தொகை. அவர்களுடைய கஷ்டத்தை நீக்க, முதுகளத்தூர், பரமக்குடி போன்ற இடங்களில் பஞ்ச நிவாரணக் கடைகள் பல ஏற்படுத்தி, வசதி செய்து கொடுக்கவேண்டும். நீர்ப் பாசனம் பெருகும் வகையில் திட்ட வேலைகள் செய்ய அதிகப் பணம் ஒதுக்கி மக்களை ஆதரிக்கவேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன்.

நண்பகல் 12-00

**திரு. கே. சகாதேவக் கவுண்டர்:** மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசனம் பற்றிய மானியத்தின்மீது என் கட்சியின் சார்பாகக் கொண்டுவந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சிறுபாசனத் திட்டத்திற்காக ஒவ்வொரு ஆண்டிலும் ஒதுக்கப்படும் தொகை சரியான முறையில் முழுவதும் செலவிடப்படுவதில்லை. போன ஆண்டிலே, அதாவது 1967-68 லே 247 லட்சம் ரூபாய் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டது எனக் கருதுகிறேன். இதிலே, 147 லட்சம் ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது. பாக்கி 100 லட்சம் ரூபாய் செலவழிக்கப்படாமல்



1969 மார்ச் 17] [திரு. கே. சகாதேவக் கவுண்டர்]

அப்படியே நின்றுபோய்விட்டிருக்கிறது. சிறுபாசனம், விவசாய உணவு உற்பத்தி பெருகுவதற்கு முக்கியமான திட்டமாகும். இப்படிப்பட்ட திட்டங்களுக்கு ஒதுக்கிய பணத்தை அந்தந்த ஆண்டுகளிலேயே செலவு செய்யவேண்டும்.

அதுமட்டுமல்ல, என்னுடைய தொகுதியிலே 1966-ம் வருஷத்திலே எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்ட பல திட்டங்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் அப்படியே இருக்கின்றன. 1 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் செலவில் தானிப்பாடி அணையைக் கட்டவேண்டுமென்ற கோரிக்கை அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து, இந்த அணையைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டிலே பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தால் பஞ்சம் தாண்டவமாடுகிறது. தானிப்பாடி தொகுதி மக்கள் குடிப்பதற்கும், அங்குள்ள ஆடு, மாடுகள் குடிப்பதற்கும் தண்ணீர் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எங்கும் வறட்சி நிலையே தென்படுகிறது. ஆகவே, தானிப்பாடி அணையை இந்த ஆண்டிலேயே சர்க்கார் அனுமதித்து, திட்ட வேலைகளை மேற்கொண்டால் அந்தப் பகுதி மக்கள் இந்த பஞ்சகாலத்தில் வேலைவாய்ப்பு பெற முடியும். இதைப் பஞ்ச நிவாரண வேலையாக மேற்கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் தீவிர கவனம் செலுத்தி, தானிப்பாடி அணையை உடனே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 1966-ல் ஏற்பட்ட புயலினால் பாதிக்கப்பட்ட ஏரிகள் எல்லாம் இன்னும் மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என் தொகுதியில் ராயந்தபுரம் ஏரியின் கரை உடைந்துவிட்டது. பிறகு அந்த மண் போட்டு அடைத்தார்கள். சரியான முறையில் கரை போடாததால், மறுபடியும் கரை உடைந்துவிட்டது. மறுபடியும் அந்த ஏரியின் கரையைக் கட்டவேண்டி வந்தது. இவ்விதமாக முதலிலேயே சரியான முறையில் கவனம் செலுத்தி கரை கட்டுவதில்லை. மேலும் மதகு சரியானபடி அமைக்கப்படாததால் அடிக்கடி கரை உடைந்து அருகிலுள்ள நிலங்களுக்குச் சேதமும் ஏற்படுகிறது. சிறுபாசனத் திட்டங்கள் செம்மையான முறையில் செய்யப்படுவதில்லை. உடைபட்ட ஏரிகள், கால்வாய்கள், அணைகள் இவற்றைப் புதுப்பிக்க அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்று மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் தானிப்பாடி அணைத் திட்டத்தை மேற்கொண்டால் பஞ்சத்தினால் வாடிக்கொண்டிருக்கும் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வசதி ஏற்படும். ஆகவே, அரசு மிகத் தீவிரத்தோடு கவனம் செலுத்தி தானிப்பாடி அணைத் திட்ட வேலைகளை ஆரம்பிக்கவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தவிர, என்னுடைய தொகுதியில் சாத்தனூர் அணை இருக்கிறது. இந்த அணையிலிருந்து செல்லும் கால்வாயின் நீளம் 22 மைல். இதில் 8 மைல் தூரத்திற்கு கால்வாய் நீளம் கான்கிரீட் போடப்பட்டிருக்கிறது. இன்னும் பாக்கியுள்ள 14 மைல் தூரத்திற்கும் கான்கிரீட் போடப்பட்டால் இன்னும் அதிகமாக 5 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்துகொடுக்காவிட்டால் ஏரியின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்கள் எல்லாம் சாகுபடிக்குப் பயன்படாமல் இருக்கின்றன. வாணாபுரம், கூடலூர், அல்லப்பனூர் போன்ற பகுதிகளில் சுமார் 100 ஏக்கர் நிலம் கோரை வளருவதால் சாகுபடிக்குப் பயன்படுத்தப்படாமல் இன்றுவரையில் இருந்து வருகின்றன. ஆகவே, இந்த ஆண்டிலே அணையின் தண்ணீரை நிறுத்தியவுடன், அந்த நிலங்களில் வடிகால் வசதி ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்பதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் நல்ல ரோடு வசதிகள் கிடையாது. ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்குச் செல்ல நல்ல போக்குவரத்து வசதி மிகவும் முக்கியம். யூனியனிலே கேட்டால் சாலை அமைப்பதற்கான நிலத்தை தானமாக வாங்கிக்கொடுக்க முடியுமா என்று கேட்கிறார்கள். பஞ்சாயத்துக்கள் அந்த நிலங்களைத் தானமாக வாங்கிக் கொடுக்கும் வசதியில் இல்லை. இப்படியே நிலைமை சென்று கொண்டிருந்தால், கிராம மக்கள் எந்தக் காலத்திலுமே தங்களுக்கு வேண்டிய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள முடியாது. ஆகவே, பஞ்சாயத்து யூனியன் மூலமாக நிலத்தை வாங்கி நல்ல ரோடு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று அரசு உத்தரவிடவேண்டும்.

கடைசியாக ''பஞ்சம தரிசு'' நிலங்கள் அரிசனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த நிலங்களில் கிணறு வெட்டிக்கொள்ள, மற்ற வசதிகளைச் செய்துகொள்வதற்கு அரசாங்கத்தைக் கடன் கேட்டால் அந்த நிலங்களுக்குத் தரமுடியாது என்று சொல்லப்படுகிறது. மிகவும் பின்தங்கிய வகுப்பினரான அரிசனங்களுக்கு அந்த நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த நிலங்களில் கிணறு வெட்டிக்கொள்ள வழிவகை செய்து தரவில்லை. ஆகவே, சட்டத்தையாவது மாற்றி, அந்த பஞ்சமதரிசு நிலங்களுக்கும் கடன் கொடுக்கலாம் என்ற நிலைமையை உண்டாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு அதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். ஜெய் ஹிந்த்.

**திரு. அ. ப. சண்முகசுந்தரம்** : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன். நம்முடைய தமிழ் நாட்டிலே இப்போது நிறைவேற்றிக் கொண்டு வருகிற திட்டங்களிலே மிகப் பெரிய திட்டம் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டமாகும். இதற்காக நாம் இதுவரை 39 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். வருகிற ஆண்டுக்கு நாம் 2½ கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 16 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்திருக்கிறோம். அந்தத் திட்டம் பாதித் திட்டம்தான் பூர்த்தியாகியிருக்கிறது. இன்னும் பாதி வேலை முடிய வேண்டியிருக்கிறது. பரம்பிக்குளம்-ஆளியாறு, தோணக்கடவு பாசனத்திற்கு உபயோகிப்பதை ஒட்டியிருக்கிற பெருவாரிப் பள்ள அணைக்கட்டு வேலையை ஆரம்பிக்கக்கூடாது என்று கேரள அரசு தடுத்து நிறுத்தியிருக்கிறது. தேக்கடி அணைக்கட்டுக்கு பேச்சு வார்த்தை நடைபெறுகிறது. சோலையாறு அணை 345 அடி உயரமுள்ளதாக ரூபாய் 10 கோடி செலவில் துரிதமாக நடந்துகொண்டிருக்கிறது. அதற்குப் பிறகும் நீராறு தண்ணீர் வந்து பாசனத்திற்குக் கிடைக்குமா என்றால் இல்லை. நீராறு அணை ஆரம்பிக்க நமது அரசு கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி விரைவில் முடிக்க வேண்டும். மின்சாரத் துறையானது மின்சாரம் எடுப்பதற்காக பல கோடி ரூபாய்களைச் செலவழித்திருக்கிறது. நீராறு அணையின் மூலமாக சுமார் 1 லட்சம் ஏக்கருக்குப் பாசனம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். தமிழ் நாட்டில் இருக்கிற திட்டங்களோடு இந்த நீராறு திட்டத்தை இணைக்காமல் கேரள அரசுடன் விரைவில் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். இந்த திட்டத்திற்கும் பவானி திட்டத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும்





இல்லை. இதைப்பற்றி கேரள அரசாங்கமும், நம்முடைய அரசாங்கமும் நல்ல முறையில் உடன்பாட்டுக்கு வருகிற நல்ல சூழ்நிலை இருக்கிறது. இரண்டு திட்டங்களையும் இணைத்துப் பேசினால் சில பல தகராறுகள் வரக்கூடும். கேரள அரசுடன் நல்ல முறையில் பேசி உடன்பாடு கண்டு திட்டத்தை முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களும் அந்தப் பகுதியில்தான் இருக்கிறார் என்ற காரணத்தால் அவருக்கு அதிக அக்கறை இருக்குமென்று நம்புகிறேன். அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முடித்துக் கொடுக்க வேண்டுமென்று முன் கூட்டியே என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின்கீழ் பழைய ஆயக்கட்டுகளில் 30 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி செய்யபபடுகிறது. பழைய ஆயக்கட்டில் உடையகுளம் கொளப்பத்து தனி வாய்க்காலில் ஏழுகுளம் பாசனம் இருக்கிறது. இதனால் 3 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனத்திற்கு வரும்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு முறையிலும் தண்ணீர் பாயும்போது, பொதுப்பணித் துறையினர் தண்ணீரின் அளவைக் குறைத்து விடுகிறார்கள். பிறகு அங்குள்ள விவசாயிகள் வந்து அமைச்சரைப் பார்த்து, அவர் சிபாரிசு செய்வதன்பேரில் தண்ணீர் விடுகிறார்கள். ஒவ்வொரு முறையும் வந்து அமைச்சர் அவர்களிடம் எடுத்துச்சொல்வது விவசாயிகளுக்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அவர்கள் அதை ஆயக்கட்டு வேலையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறையும் தண்ணீர் உறுதியாகக் கிடைக்குமென்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அதைப்போலவே தான் பழைய ஆயக்கட்டுகள் உள்ள பகுதிகளில்—50 குளங்களுக்குமேல் இருக்கின்றன. அவற்றுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும்.

மேலும் இந்த ஆயக்கட்டில் புதிதாக கிணறுகள் வெட்ட முன்வந்து மின் இணைப்புக் கேட்கிறபோது பாசன காலத்தில் மின் இணைப்பைத் துண்டித்து விடுவோம் என்கிறார்கள். பாசன காலத்தில் தண்ணீர் குறையைப் போக்கத்தான் கிணறுகள்—ஒரு ஆள் இரண்டு கையினாலும் வேலை செய்கிறான் என்பதற்காக அவனது ஒரு கையை வெட்டி விடுவது போல் கிணற்றுக்கு கொடுக்கப்படுகிற மின் இணைப்பைத் துண்டிப்பது சரியல்ல. ஆகவே இது பற்றியும் அமைச்சர் அவர்கள் ஆலோசித்து—அதுபோல துண்டிக்கப்படும் என்கிற நிலையை மாற்றி—எப்போதும் மின் இணைப்பு இருக்கும்படியாக உறுதி செய்ய வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு க. ர. நல்லசிவன்** : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, காவேரி, பவானி, பெரியார், அமராவதி ஆகியவற்றின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் சமீப காலமாக மழை குறைந்து வருகிறது என்பது ஒவ்வொரு வருஷமும் நீர்ப்பாசன மானியக் கோரிக்கை சம்பந்தமாக அளிக்கப்படுகிற அறிக்கையில் இருந்து தெரிகிறது. வருடத்திற்கு 5%, 10% என்று குறைந்திருப்பதைப் பார்க்கிறோம். அந்தப் பகுதியில் ஏன இப்படி மழை குறைந்து வருகிறது என்பதை நன்றாகப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். இதைச் சீர்திருத்துவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்காவிட்டால் பாசனம் பெறுகிற நிலங்களுக்கு வருகிற காலத்தில் ஆபத்து வந்து விடும். அந்தப் பகுதிகளில் காடுகள் அழிக்கப்படுகின்றன. மேலும் யுகலிப்டஸ், சின்கோனா போன்றவைகள் வளர்க்கப்படுகின்றன, அதுதான் மழைக் குறைவுக்கு காரணம் என்றும் அடிபடுகிறது. ஒழுங்காக உரிய மழையைப் பெற மனிதனால் சாத்தியமான காரியங்களைச் செய்ய வேண்டும். இதற்கென்றே பரிசீலனை செய்ய ஒரு குழு அமைப்பதுகூடப் பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தின்கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது. சமீபத்தில் காவேரி சம்பந்தமாக மைசூர் அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் காரணமாக காவேரிப் பாசனம் பெரிதும் பாதிக்கப்படுமோ என்கிற ஐயம் நம் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் இவ்விஷயத்தில் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர்கள் எவ்வளவு கவனம் காட்டினார்களோ அதுபோல இது பற்றி இப்போதுள்ள நமது அமைச்சரும் கவனம் செலுத்த வேண்டும். 1924, 1974 என்ற ஒப்பந்தம் எப்படி இருந்த போதிலும் கூட நம்முடைய திட்டங்களினால் விஸ்தரிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் அந்த ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இது சம்பந்தமாக மைசூர் சட்டசபையில் விரிவாகப் பேசப்படுகிறது. காவேரியின் மீது புதியதாக ஹேமாவதி கபினி, லட்மணதீர்த்த—போன்ற உப நதிகளில் எல்லாம் அணை கட்ட மைசூர் அரசாங்கம் முயற்சிக்கிறது. மத்திய அரசாங்கத்திடம் நம்முடைய அரசாங்கம் இதுபற்றி சரியான முறையில் எடுத்துச்சொல்லி—நம்முடைய பாசன நிலங்கள் பாதிக்கப்படாதவாறு நடவடிக்கை எடுத்துக்கொண்டாக வேண்டும்.

அதற்கடுத்தபடியாக நமது ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் புதியதாக பாசனத்திற்கு நிலங்களைக் கொண்டுவருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. உண்மைதான். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் கிடைக்கக்கூடிய இயற்கை நீர்வளத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். மகிழ்ச்சியுறுகிறோம். ஆனால் புதியதாகப் பாசன ஆதாரங்களை நாம் ஏற்படுத்தாவிட்டால் இன்னும் எத்தனையோ ஆயிரக்கணக்கான நிலம் உடையவர்களது அபிலாஷைகள் நிறைவேற்றப்படாமல் போய்விடும். இப்போதே பார்க்கிறோம். பவானிஆறு, பரம்பிக்குளம் பகுதிகளில் பாசனத்திற்குத் தண்ணீர் வேண்டுமென்ற கோரிக்கை வருகிறது. இப்போது இருக்கிற ஆயக்கட்டுகளுக்கு எவ்வளவு தண்ணீர் கொடுத்தாக வேண்டுமோ அதைக் கொடுத்து மீதம் இருந்தால் தான் கொடுப்பது என்பதில் அழுத்தம் திருத்தமாக இருக்க வேண்டும். கோரிக்கை எவ்வளவு அழுத்தமாக வருகிறது என்பதை மட்டும் கவனித்துக் கொண்டு போகக்கூடாது. முன்பு இருந்த அரசாங்கம் இது போன்று தான் பல திட்டங்களுக்கு அஸ்திவாரம் போட்டுவிட்டார்கள். பழைய பாசனப் பகுதிக்குத் தண்ணீர் உத்தரவாதம் செய்துவிட்டு மீதமுள்ள தண்ணீரைத்தான் எப்படி உபயோகிப்பது என்பது திட்டமிடப்பட வேண்டும்.

அதற்கடுத்தபடியாகப் பலமுறை சபையில் சொல்லியிருக்கிறேன். ஏனோ அரசாங்க கவனத்திற்கு வரவில்லை. சரித்திர காலம் தொட்டே கிட்டத்தட்ட ஒரு க்யூசெக்சுக்கு 20, 25 ஏக்கராத்தான் பாசனம் செய்ய முடியும் என்கிற நிலை உள்ளது. இன்றைக்கு எந்தப் பயிருக்கும் இவ்வளவு அதிகமான அளவு தண்ணீர் வேண்டியதில்லை என்று அனுபவம் காட்டுகிறது. புதிதாகப் பாசனத்திற்கு வந்துள்ள காவேரியிலும், பவானியிலும், அமராவதியிலும், பெரியாற்றிலும் கூட ஒரு க்யூசெக்சுக்கு 25 ஏக்கரா என்ற அடிப்படையில்தான் இருக்கிற பழைய வாய்க்கால் உண்டு. குறைந்த பட்சம் ஒரு க்யூசெக்சுக்கு 40 ஏக்கரா என்ற அளவிலாவது பாசனமளிக்க திட்டமிட்டு அதற்கான காரியங்களைச் செய்தால்தான் அதிகமான நிலங்களுக்குப் பயன் அளிக்க முடியும். இதற்கு அடிப்படையாக பழைய கால்வாய்களை நவீனமாக்கியாகவேண்டும். இதற்குப் பணம் தேவை. ஆகவே பழைய வாய்க்கால்களை நவீனமாக்குவதற்கு ஆகிய செலவை அந்த வாய்க்காலைப் பயன்படுத்திக் கொள்கிற நிலக்காரர்களிடம் இருந்தே ஒரு பகுதி வசூல் செய்துவிடலாம் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி பழைய வாய்க்கால்களை நவீனமாக்க நடவடிக்கை எடுத்து, ஒரு க்யூசெக்சுக்கு 40 ஏக்கரா என்ற அளவில் பாசனத்திற்குத் தண்ணீர் கொடுக்க ஆரம்பித்தால் இரண்டு, மூன்று லட்சம் ஏக்கராவுக்குப் புதிதாக சாகுபடிக்குத் தண்ணீர் கிடைக்க முடியும்.





அதற்கடுத்தபடியாக தேசத்திலுள்ள நதிகளை இணைக்க வேண்டுமென்ற கோரிக்கை பொதுவாகப் பேசப்படுகிறது. இது பற்றி நான் முன்பு டெல்லியில் பேசியபோது அவ்வளவு ஆதரவு இல்லை. தமிழகத்திற்கு இருக்கக்கூடிய அவசரம், அவசியம் போல வேறு எந்த மாநிலத்திற்கும் இல்லை, ஆயினும் அப்படியொரு திட்டம் நிறைவேற்றப்பட்டால்தான் ஏராளமான நிலங்களைப் பாசன வசதி பெறச் செய்ய முடியும். இது ஒரே நாளில் நடந்து விடுவது இல்லை. நம்முடைய கனவுகள் எல்லாம் காலத்தினால்தான் நனவாகும். ஆகவே இது பற்றி சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் இந்த அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் மத்திய அரசுக்கு தேசத்திலுள்ள நதிகளை எல்லாம் இணைக்கும் திட்டத்தைப் பற்றி வற்புறுத்தியாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பத்து நிமிடத்துக்கு மேலாகி விட்டது.

**திரு. க. ர. நல்லசிவன் :** கரும்பு உற்பத்தி ஆயத்தீர்வை மூலமாக எக்ஸைஸ் டியூடி ஒரு கோடி ரூபாய் கிடைக்கிறது. ஒரே ஒரு டிவிஷன் தான் இப்பொழுது வைத்துக் கொண்டிருக்கிறோம் இன்னும் அதிகமாக 1½ கோடி ரூபாய் அளவில் வருவாய் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே கோவையில் கரும்பு உற்பத்தி ஆலைகள் அதிகமாக ஏற்பட்டிருக்கிற தன்மையில் இன்னும் ஒரு டிவிஷன் போட்டு அங்கே உள்ள ரோடுகளைப் புதுப்பிக்கவும் மற்ற ஏற்பாடுகளைச் செய்யவும் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில் எங்களுடைய பகுதி மிகமிகப் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. எல்லோருமே அப்படித்தான் சொல்வார்கள். ஆனால் எங்களுடைய பகுதியைப் பொறுத்தவரையில் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் 10 ஏக்கர், 8 ஏக்கர் என்று குறைந்த நிலப்பரப்பு உள்ள பகுதியில் லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழித்துக் கிணறுகள் வெட்டியும் இப்பொழுது ஒன்றும் பயன் படாமல் வறண்ட நிலைமை இருப்பதால் அங்கே இருக்கக்கூடியவர்கள் ஏராளமான பேர்கள் வெளியேறிப் போய்கொண்டிருக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. முதல் தரமான பருத்தி அன்னியச் செலாவணியைச் தேடித்தரக்கூடிய நிலைமை போய் இன்றைக்கு வறண்ட நிலைமையில் தான் அந்தப் பகுதிகள் இருந்து கொண்டிருக்கின்றன.

குந்தாக் கழிவு நீர்த்திட்டம் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை; மேல் பவானித் திட்டம் இப்பொழுது இருக்கிற இடம் தெரியாமல் போய் விட்டது. அவலூசித் திட்டம், குந்தா கழிவு நீர்த் திட்டம் என்றெல்லாம் இருந்த திட்டங்கள் காகித அளவிலேதான் இருக்கின்றனவே தவிர, காரிய அளவிலே இன்னும் வரவில்லை. இந்த முறையும் அப்படியே தான் இருக்கிற நிலைமை இருக்கிறது. இந்த ஆண்டாவது உடனடியாக அவற்றையெல்லாம் காரிய சாத்தியமாக ஆக்கிவிட்டால் நல்லது. இல்லா விட்டால் மக்கள் வாழ முடியாத நிலைமை இருக்கிறது. அவர்கள் எந்தவிதமான வரியும் கொடுக்கச் சக்தியில்லை. அக்கம்பக்கத்திற்குச் சென்றுவிடக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. செய்யவேண்டிய வற்றில் மிக மிகச் சிறிய திட்டங்களும் இருக்கின்றன. அந்தத் திட்டங்களுக்கு எல்லாம் அனுமதி கொடுக்கப்பட்டு, ஆராய்ச்சிகள் நடந்து முடித்தும் கூட அந்தத் திட்டத்தைப் பற்றிய காகிதங்கள் எங்கே இருக்கின்றனவோ என்ற நிலைமைதான் இருந்துவருகிறது.

நல்லாறு திட்டம் போன்ற திட்டங்கள் என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. அதுபற்றிக் கேள்விகள் கேட்டும் வரவில்லை. பெரிய திட்டங்களும் இல்லை, சிறிய திட்டங்களும் இல்லை.

இந்த அறிக்கையைப் பார்த்தேன். வறட்சிப் பகுதிகளைப் பொறுத்த வரையில் வேறு சில ஜில்லாக்களுக்கு அதிகமான சலுகை கொடுக்கப் படுகிறது. கோவை, சேலம், தர்மபுரி போன்ற ஜில்லாக்களும் வறட்சிப் பகுதிகள்தான், அங்கே எந்தவிதமான சலுகைகளும் கொடுக்கப் படவில்லை. "வறட்சிக்கான துயர்தணிப்பு நடவடிக்கைகளை, தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலும் அதாவது இராமநாதபுரம், தென் ஆர்க்காடு முதலிய மாவட்டங்களிலும் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது" என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் பகுதிபற்றிக் குறிப்பிடப்பட வில்லை. நாங்களும் மக்கள்தான். நோங்களும் மக்களாக வாழ வேண்டும். மிகச் சிறந்த முறையிலே உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருப்பவர்கள் நாங்கள், எங்களுக்கும் துணை புரியவேண்டும். நீர்வளத்தைக் கண்டுபிடிக்க பெரிய பெரிய ஆராய்ச்சி நிறுவனங்களை எல்லாம் நிறுவ முயற்சிகள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்படுவதாகப் பத்திரிகைகளிலே பார்த்தேன். நான் இந்தக் கட்டத்திலே சொல்லிக் கொள்கிறேன். எல்லோருக்கும் எவ்வொன்றும் எளிதன்று. நான் இதிலே நிபுணர் அல்ல. பூமிக்கடியிலே நீர் இருப்பதைக் கண்டு பிடிக்கப் பல ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன. சட்டமன்ற உறுப் பினர்களுக்கும் பொறியியல் நிபுணர்களுக்கும் பூமிக்கடியில் எங்கெல்லாம் தண்ணீர் இருக்கிறது என்பதைக் காட்டக்கூடிய அளவிலே பல ஆராய்ச்சிகளைச் செய்து காட்டக்கூடிய முறையிலே தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றவர்களுக்கும் அதைப் பயன்படுத்திக் கொள்ளும்படி செய்துவிட முடியும். பலர் அதைத் தெரிந்துகொள்வதற்கும் வாய்ப்பாக இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கட்டும், அல்லது இந்தத் துறையில் நிபுணர்களாக இருக்கட்டும் எல்லோருக்கும் நான், ஒரு நாள் ஒதுக்கட்டும், செய்துகாட்டுகிறேன்.

எங்கள் பகுதியில் கனடியன் நிபுணர்கள் வந்து பார்த்துவிட்டு இப்படியே இழ்மையே போய்க்கொண்டிருந்தால் வறண்டு பாலைவனம்தான் ஆகும் என்று சொன்னார்கள். எனவே இழ்மே போனால்மட்டும் போதாது. இயற்கையால் மட்டுமின்றி மழையைச் செயற்கையாகவும் பெய்ய வைப்பதற்கு திட்டங்களை மேற்கொள்ளவேண்டும். நோய் வருவதற்கு முன்பேயே நாம் அதைத் தடுக்கவேண்டும். நோய் வந்ததற்குப் பின்னால் அதைத் தடுப்பதற்கு முயல்வதால் பயன் இல்லை. அதையெல்லாம் விவரமாக எடுத்துச் சொல்லலாம். ஆனால் நேரம் இல்லை. இடம் கொடுத்தால் விளக்கிக் காட்டுவதற்கு வாய்ப்பு இருக்கும். எப்படி எப்பொழுது கொடுப்பார்களோ எனக்குத் தெரியாது. எனவே ஒரு கண்ணுக்கு வெண்ணெய், ஒரு கண்ணுக்கு சுண்ணாம்பு என்று இல்லாமல் எல்லாப் பகுதிகளையும் சமமாகப் பாவிக்கவேண்டும்.

எங்களுடைய ஜில்லாவில் ஒரு பகுதிக்குக் கொடுக்கப்பட்ட சலுகை மற்றொரு பகுதிக்குக் கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றியெல்லாம் அங்கேயுள்ளவர்கள் கூட்டம் போட்டுப் பேசுகிறார்கள். நீங்கள் வேறு கட்சிக்கு ஓட்டுப் போடாதிருந்தால் குந்தா கழிவு நீர்த் திட்டம் கொண்டுவந்திருப்பார்கள் என்று பேசியிருக்கிறார்கள். அந்த நல்ல திட்டம் வந்திருக்கும் என்று பேசியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் பற்றிப் பேச வாய்ப்பு இல்லாத காரணத்தால் என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளைப்பற்றிப் பேச வாய்ப்பு இல்லாத காரணத்தால் நான் இதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. எல்லப்ப பாகவதருடைய அச்சரப்பாக்கம் தொகுதியிலே அரசூர்பாளையம் வேலையையும், திரு. அழகப்பத்தேவர் தொகுதியிலே உள்ள சிவகாசித் திட்டத்தையும், திரு. கோதண்டராமையா அவர்கள் தொகுதியில் உள்ள ஹொசூர் டாங்க் திட்டம், குப்பம்மாள் டாங்க் திட்டம், தளவாய் டாங்க் திட்டம் போன்ற திட்டங்கள் எல்லாம் காகித அளவிலேயே இருக்கின்றன. அவற்றை எல்லாம் காரிய அளவிலே கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அறுபது ஆண்டுகளுக்கு முன்னாலே [illegible] திட்டம் எல்லாம் சும்மா கிடைக்கிறது. எனவே, [illegible]





பகுதியிலே உள்ள மக்கள் வெளியேறக்கூடிய நிலைமை இருக்கிறது. எங்களையும் எப்படியாவது வாழவைக்கவேண்டியதற்கு வழி வகைகள் செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. துரையரசன்** : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய உரையைத் துவக்குகிறேன். இந்தத் துறையை ஏற்றிருக்கிற நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும், அந்தத் துறையில் பணியாற்றுகின்ற தலைமைப் பொறியாளர், செயலாளர் மற்றும் மாநிலத்திலே சிறப்பாகப் பணியாற்றுகின்ற அத்தனைபேர்களுக்கும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே பாராட்டுத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், கடந்த இருபது ஆண்டு காலத்திலே 1967-ஆம் ஆண்டிற்கு முன்னதாக ஆண்டுகொண்டிருந்த காங்கிரஸ்காரர்கள் ஆட்சியிலே இந்த மன்றத்திலே எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த நாங்கள் எடுத்துவைத்த கருத்துக்கள் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் இருந்தது. அதிகாரிகள் சுதந்திரமாகப் பணியாற்ற முடியாத நிலைமை இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக இந்தத் துறையிலே உள்ளவர்கள் மிகச் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள். அது விவசாயத் துறைக்கும் ஒரு நல்ல ஆக்கமாக இருக்கிறது என்ற காரணத்தால் நான் அந்தத் துறையைப் பாராட்டுகிறேன். அந்தத் துறையில் கீழ்மட்டத்திலே பணியாற்றுகின்றவர்களுடைய கோரிக்கைகள்—லஸ்கர், மேஸ்திரிகள் போன்றவர்களுடைய கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும், தற்காலிகமானவர்கள் நிரந்தரமாக்கப்படவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கடந்த ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் அஸ்திவாரக் கல் நாட்டி, 9 லட்ச ரூபாய் செலவில் கட்டப் படுகிற மருத்துவ மனைக்கு—அது இன்னும் ஆறு மாதத்தில் கட்டி முடிக்கப்பட்டுவிடும்—பேரறிஞர் அண்ணா மருத்துவமனை என்று பெயரிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகுடியிலிருந்து வெள்ளாற்றுக்கு ஒரு வாய்க்கால் வெட்டி பொன்பேத்தி வழியாகத் தண்ணீர் கொண்டுவரவேண்டும். அறந்தாங்கிக்குப் பக்கத்திலே சொட்டுப்புள்ளி வாத்தல் என்று இருப்பது 20 ஆண்டுக் காலமாக காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே செய்யப்படாத அந்த திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்கின்றது. அதைத் துரிதமாக முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்தாணி ஏரிக்குப் பக்கத்திலே ஒரு அணை கட்டப்படுகிறது, அதாவது குப்பத்தேவன் என்ற இடத்திலே கட்டப்படுகிறது, அதை இன்னும் மேற்கே ஒரு மைல் தள்ளிக் கட்டினால் எல்லா வகையிலும் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் அத்தாணிக்கும் அதோடு குப்பதேவனுக்கும் தண்ணீர் நிச்சயமாகக் கிடைக்கும்.

ஆவுடையார் கோவிலில் இரண்டு அணைகள் கட்டப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அதோடு மணமேல்குடி, பெருமருதூர், மலையூர் போன்ற பிற்பகல் 12-30
இடங்களிலும் அணை கட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடலோரப் பகுதியில் வெள்ளாற்றுக்குத் தடுப்புச் சுவர் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்படி திட்டங்கள் எல்லாம் அதிகாரிகளால் பரிசீலிக்கப்படுவதாகத் தெரிகிறது. அந்தத் திட்டங்களைத் துரிதமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆவுடையார்குப்பம் சாலையை நெடுஞ்சாலைத் துறையினர் மேற்கொள்ள வேண்டும். அதனால் விவசாயிகள் பயனடைவார்கள். அறந்தாங்கி

[திரு. ஆ. துரையரசன்] [1969 மார்ச் 17

புதுக்கோட்டை சாலையில் 13 கல் தொலைவை மாயனூருக்கு ஐந்து கல் தொலைவை நெடுஞ்சாலைத் துறையினர் மேற்கொள்ள வேண்டும். மணமேற்குடி வரை உள்ள சாலையை மேற்கொள்ளவேண்டும்.

வீரமங்கலத்தில் ஒரு அணைக்கட்டு கட்டமுடியும். மருத்தாங்குடி ஆற்றில் ஒரு அணைக்கட்டு கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையைக் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஏற்றிருந்த நேரத்தில் எந்த அளவுக்கு சுறுசுறுப்பாகப் பணியாற்றினார்களோ, கருத்தரங்குகளை எல்லாம் கூட்டி நல்லமுறையில் விவசாயத்திற்கு வழிவகைகளைச் செய்தார்களோ அந்த முறையில் நம்முடைய தற்போதைய பொதுப்பணித் துறை அமைச்சரும் பணியாற்றுவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, இன்றையதினம் விவாதத்தில் இருக்கக்கூடிய மானியங்களின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து மேட்டூர் நீர்த் தேக்கத்தில் நீர் மட்டம் குறைந்திருந்தும், பொதுப்பணித் துறையினர் மிகச் சாமர்த்தியமாகத் தண்ணீர் விநியோகம் செய்திருக்கிறார்கள் என்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படும்போதெல்லாம் அங்கு அமைக்கப்பட்டுள்ள கமிட்டியின் மூலமாக விவசாயிகளுடைய கருத்தை அறிந்து முறையாகத் தண்ணீர் விட்டதால் ஓரளவு விவசாயத்தைப் பாதுகாக்க முடிந்தது. தஞ்சை மாவட்டத்தில் இன்னும் சில பிரதேசங்களில் இறைவைப் பாசனத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக, தண்ணீர் இல்லாத மேட்டுப்பிரதேசங்களில், ஆற்றில் ஓடி வீணாகும் தண்ணீரை எடுத்து விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியும். ஆனால் அவ்வாறு பயன்படுததும்போது அபகத் தீர்வை விதிப்பதன் காரணமாக விவசாயிகள் மின் இறைவைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க மறுக்கிறார்கள். அந்தக் கிராமத்திற்குத் தண்ணீர் வசதி செய்து தரப்படுகிறதோ இல்லையோ மொத்த ஏரியாவுக்கு என்று வரி விதிப்பதால் அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். அம்மாதிரி வரி விதிக்காமல் உண்மையாக எவ்வளவு தீர்வையோ அதை மட்டும் வசூலிப்பதற்கான நடவடிக்கையை எடுப்பதன் மூலமாகத்தான் தஞ்சை மாவட்டத்திலே மேட்டுப் பிரதேசங்களிலே ஆற்றிலே வீணாகக் கூடிய தண்ணீரை இறைவைப் பாசனத் திட்டத்தின் மூலம் பயன்படுத்த முடியும்.

சமுதாயக் கிணறுகள் தோண்டுவதைப் பற்றி சுறுசுறுப்பு இல்லையென்பது என்னுடைய அபிப்பிராயம். சமுதாயக் கிணறுகளைத் தோண்டிக் கொடுப்பதன் மூலந்தான் சிறு நிலம் வைத்திருக்கக்கூடியவர்களுக்கும், குத்தகை வாரத்திற்கு விவசாயம் செய்துகொண்டிருப்பவர்களுக்கும் வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். அரசாங்கச் செலவிலேயே அம்மாதிரிக் கிணறுகளைத் தோண்டி வரக்கூடிய வருவாயைப் பெருக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் மிகப் பெரிய மடங்கள், கோயில்களுக்குச் சொந்தமான கிராமங்கள் இருக்கின்றன. 500 ஏக்கர், ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணத்தில் வைத்திருக்கிறார்கள். அந்த நிலங்களை எல்லாம் குத்தகை வாரத்திற்கு விவசாயம் செய்கிறார்கள். அவர்களுக்கு கிணறுகள் வெட்டவோ, பாசன வசதிகள் செய்துகொள்ளவோ எந்தவிதமான வாய்ப்பும், வசதியும் இல்லாமல் இருக்கிறது. அம்மாதிரியான இடங்களிலும் அரசாங்கம் சமுதாயக் கிணறுகளைத் தோண்டிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சையில் வடிகால் திட்டத்திற்காய் செலவு செய்யப்பட்டு வருகிறது. அதற்கு ஒதுக்கியிருக்கக்கூடிய ரூபாய் மிகக் குறைவானது. அதற்கு அதிகமான நிதியை ஒதுக்க வேண்டும்.



1969 மார்ச் 17] [திரு. ஆ. கு. சுப்பையா]

தஞ்சை ஜில்லாவில் 50,000 ஏக்கர் நிலங்களுக்கு மேல் நீரில் மூழ்கிப் பாழாகிவிடுகின்றன. அதைத் தடுத்து நிறுத்த வடிகால் திட்டத்தைச் சுறுசுறுப்பாக நிறைவேற்ற வேண்டுமென்று பலமுறை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தென்பேரை என்ற கிராமத்தில் இந்தத் திட்டத்தை செயல்படுத்தினால் 3,000 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்படுவதை நிறுத்த முடியும். ஆகவே, மற்ற பல இடங்களிலும் ஆழக் கிணறுகளைத் தோண்டி பாசன வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலந்தான் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதால் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெடுஞ்சாலை விஷயமாக என்னுடைய வெட்டுத் தீர்மானங்களில் கொடுத்திருக்கக்கூடிய விஷயங்கள் அத்தனையும் கடந்த பத்தாண்டுகளாகச் சொல்லப்பட்டு வருகின்ற முக்கியமான விஷயங்களாகும். 20 மைல் 25 மைல் தூரத்தில் இருக்கக்கூடிய சாலைகளை அங்குள்ள பஞ்சாயத்துக்களோ, பஞ்சாயத்து யூனியன்களோ செய்ய முடியாத நிலை இருக்கிறது. அந்த அளவுக்கு நிதி வசதி போதுமானதாக இல்லை என்பதுதான் காரணம். அந்தச் சாலைகளையெல்லாம் நெடுஞ்சாலைத் துறையினரே ஏற்று செய்யவேண்டும். கோரையாறு, பாமணியாறு, ஹரிச்சந்திரா நதி போன்ற ஆறுகள் குறுக்கே ஓடுகின்றன. அவற்றுக்குப் பாலம் கட்டவேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கூறப்பட்டு வருகிறது. கோரையாறு-பாமணியாற்றில் பாலம் கட்டினால் அது திருத்துறைப்பூண்டி சாலையை இணைக்கும். தட்டாங்கோவில்-தலைஞாயறு சாலை 27 மைல் நீளம் உள்ளது. அந்த வேலையை நிறைவேற்றிக் கொடுத்தால் மக்களுடைய போக்குவரத்துக்கு வசதியாக இருக்கும் மன்னார்குடி—முத்துப்பேட்டை சாலையை அகலப்படுத்துவதும் முக்கியமானது. அங்கு போதுமான அகலம் இல்லாததால் எந்த நேரத்தில் என்ன நேருமோ என்ற நிலை இருக்கிறது. கூத்தாநல்லூர்—தில்லைவிளாகம் சாலையை விரிவுபடுத்துவதும் அவசியமாகும்.

திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சி நிலையைப் போக்க ஆழக் கிணறுகளைத் தோண்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தண்ணீர் இல்லை என்றால் எப்படி விவசாயம் செய்து உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும்? இதற்கு முன்னால் சில செல்வாக்குள்ள நபர்களின் நிர்ப்பந்தத்தின் காரணமாக கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யக்கூடிய நிலை இருந்தது. அதனால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லாமல் இருக்கிறது. அம்மாதிரி நிலைமையை நம்முடைய சர்க்கார் ஏற்காமல் நியாயமான வேலைகளை ஏற்று பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். எங்கு காரியங்களைச் செய்வதன் மூலம் மக்களுக்கும் சமுதாயத்திற்கும் உதவி செயய முடியுமோ அந்த வேலைகளை எடுத்துச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஏ. சி. நரசிம்மன்:** மாண்புமிகு சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு என் அஞ்சலியைச் செலுத்திக் கொண்டு என் உரையை ஆரம்பிக்கிறேன். இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய தொகுதிபற்றி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நகராட்சிகளுக்கு இதற்கு முன்னால் ஐந்தாண்டுத் திட்டங்கள் என்ற பெயரில் பாதிக் கடன் தொகையாகவும், பாதி மானியத் தொகையாகவும் பணம் கொடுக்கப்பட்டு சில வேலைகள் நடந்து வந்தன. ஆனால் இப்போது ஐந்தாண்டுத் திட்டம் அமலில் இல்லாததால் அத்தகைய திட்டங்கள் கைவிடப்பட்டிருக்கின்றன. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அவை கைவிடப்பட்டிருக்கின்றன. ஐந்தாண்டுத் திட்டம் அமலில் இருந்தபோது பெரிய பெரிய வேலைகளை நகராட்சி மன்றங்கள் ஏற்று நடத்த உதவியாக இருந்தன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் எப்போது வருமோ

என்று சொல்லமுடியாது. இருந்தாலும் வருடாந்திரத் திட்டங்கள் என்ற முறையில் சிலவற்றை ஏற்று ஒவ்வொரு ஆண்டும் நகராட்சிகள் இரண்டு மூன்று வேலைகளை செய்வதற்கு பாதி மானியமாகவும், பாதி கடனாகவும் பணம் கொடுத்து ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில், ஆரணி-சேத்துப்பட்டில், விண்ணமங்கலத்திற்கருகில் செய்யாறு என்றிருக்கிறது. அதில் ஒரு மேம்பாலம் கட்டவேண்டுமென்று முன்பிருந்த பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு மனு கொடுத்து எஸ்டிமேட்ஸ்கூட தயாரித்தார்கள். வேகமாக தயாரிக்கப்பட்ட அந்த எஸ்டிமேட் இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பது தெரியவில்லை. ஆகவே எவ்வளவு சுறுசுறுப்பாக அந்த எஸ்டிமெட்ஸ் தயாரிக்கப்பட்டதோ அந்த அளவிற்கு சுறுசுறுப்புடன் அந்த வேலையை எடுத்து நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணியில் உள்ள மருத்துவ மனையில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. அந்த மருத்துவமனை பொதுப்பணித் துறையினரால் கட்டப்பட்டது. அங்கு பல க்ராக்ஸ் ஏற்பட்டிருக்கின்றன. அதைத் சீர் செய்வதற்கு பொதுப்பணித் துறை வேகமாக முன்வருவதில்லை. அங்கு விளக்குகளுக்கு தவறான கனெக்ஷன்ஸ் கொடுத்து விட்டு அதனால் ஏக காலத்தில் நாற்பது ஐம்பது விளக்குகள் ப்யூஸாகி விடுகின்றன. அந்த விளக்குகளை ரீப்ளேஸ் செய்ய பொதுப்பணித் துறையிலிருந்து அக்கறை எடுத்துக்கொள்வதில்லை. அதுபற்றி அங்குள்ள மருத்துவ அதிகாரி எவ்வளவு கடிதங்கள் எழுதினாலும் அவர்கள் நடவடிக்கைகள் எடுப்பதில்லை. ஆகவே அதை உடனடியாகக் கவனிக்கவேண்டும்.

ஷெட்யூல் ஆஃப் ரேட்ஸ் மாவட்ட அளவில் எந்த முறையில் நிர்ணயிக்கிறார்கள் என்று தெரியவில்லை. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் ஒரு மேஸ்திரி கூலி வேலைக்கு வரவேண்டுமென்றால் அவர்கள் கூலி நாள் ஒன்றுக்கு ரூ. 3·40 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எந்த வீடு கட்டும் மேஸ்திரியாவது நாள் ஒன்று ஆறு ரூபாய்க்கு குறைந்து வருவார்களா என்றால் வரமாட்டார்கள். ஒரு கிணறு வெட்ட வேண்டுமென்றாலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற ரேட்ஸ் படி யாரும் வேலைக்கு வருவதில்லை. அதன் காரணமாக பல வேலைகள் தடைபடுகின்றன. ஒரு கிராமத்தில் ஒரு கிணறு வெட்டவேண்டுமென்றால் இந்த ஷெட்யூல் ஆஃப் ரேட்ஸ்படி யாரும் வேலை செய்ய முன்வருவதில்லை. கிராமப் பஞ்சாயத்துக்கள் அதை ஏற்று நடத்தலாம் என்றால் ஏகப்பட்ட நஷ்டம் வரும் என்பதால் அவர்கள் அதை ஏற்று நடத்த முன்வருவதில்லை. இதற்காக டெண்டர் கோரினால் டெண்டர் போடுகிறவர்களும் ஒதுங்கிக் கொள்கிறார்கள். ஒரு இடத்தைப் பார்த்துவிட்டுமட்டும் கூலி நிர்ணயிக்கிறார்கள். ஆகவே இந்த ஷெட்யூல் ஆஃப் ரேட்ஸ் தயாரிக்கும்போது மாவட்ட அளவில் தயாரித்து கலெக்டரின் அங்கீகாரத்தோடு அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இந்த ஆய்வுரையில் பல்வேறு நகராட்சிகளின் கட்டடங்களைக் கட்டுவதாக ஏற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது ஆனால் ஆரணி நகராட்சிக்காக கட்டப்படுகிற கட்டடம், 2,40,000 ரூபாயில் கட்டப்படுகிற கட்டடம் பற்றி இந்தத் திட்டத்தில் இணைக்கப்படவில்லை. அதற்கு பணமும் பெற்றுவிட்டார்கள். டெண்டர் கோரிவிட்டார்கள். இருந்தும் அது ஏன் இதில் இடம் பெறவில்லை என்று தெரியவில்லை. அதைவிட சிறிய திட்டங்கள் இந்த ஆய்வுரையில் இணைக்கப்பட்டுள்ளன. ஆனால் ஆரணி நகராட்சி மன்றக் கட்டடம் கட்டுவது பற்றி இதில் ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. காரணம் தெரியவில்லை. ஆரணியில் ஒரு பாலம் கட்டியிருக்கிறார்கள். ஆனால் அதில் விளக்குகள் போடாமல் விட்டுவிட்டார்கள். அப்படி விளக்குகள் போடவில்லை என்பதால் நகராட்சி மன்றமே தன் சொந்தச் செலவில் விளக்குகளைப் போடலாம் என்றால் அதற்குண்டான உத்தரவு கூட ஹைவேஸ் டிபார்ட்மெண்டிலிருந்து இன்னும் வராததால் அங்கு விளக்குகள் கூட போட முடியவில்லை. (மணியடிக்கப்பட்டது.)





ரூபாய் ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட திட்டங்களை எஸ்.எம். ஐ. பி. திட்டத்தின்கீழ் கொடுத்திருக்கிறார்கள். அதில் வட ஆர்க்காடு பொறுத்தவரையில் ஏதாவது திட்டமிருக்கிறதா என்றால் இல்லை. சிறிய திட்டங்களிலாவது இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. வட ஆர்க்காடு மாவட்டம் புறக்கணிக்கப்பட்ட மாவட்டமாக இருக்கக்கூடாது. அங்கு பல்வேறு திட்டங்களைக்கொண்டுவந்து நிறைவேற்றவேண்டும். அங்குள்ள பல்வேறு ஏரிகளில் என்றுமே டிஸில்ட்டிங் நடந்ததில்லை. அந்த வேலைகளை இப்போது ஏற்றுக்கொண்டால் பஞ்ச நிலையின் கொடுமை ஓரளவிற்கு தணியும். அதோடு அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். வட ஆர்க்காட்டில் நீர்ப்பாசனத்திற்குப் பெரிதும் உதவியாகயிருக்கிற காவேரிபாக்கம் ஏரி, மகேந்திரவாடி ஏரி போன்றவற்றை ஆழப்படுத்தவேண்டும். அந்த ஏரிகளைத் தூர் எடுத்து ஆழப்படுத்தவும், வரத்துக் கால்வாய்களையும் ஒழுங்குபடுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. தங்கப்பன்:** தலைவர் அவர்களே, இன்றையதினம் நம் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என் கருத்துக்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உண்மையிலேயே காங்கிரஸ் ஆட்சியில் இருந்ததைவிட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வேளாண்மை முன்னேற்றத்திற்கான நல்ல பல காரியங்களும், பாசன வசதிகளும் மிகவும் அதிகப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இப்போது பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம், மணிமுத்தாறு திட்டம், கடானா நதித் திட்டம், வைகைக் கால்வாயைப் புதுப்பிக்கும் வைகை மாடர்னைசேஷன் ஸ்கீம் போன்ற திட்டங்களில் இன்றையதினம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த வைகை கால்வாய் திட்டத்திற்காக அரசு நான்கு கோடி ரூபாய் தான் ஒதுக்கியிருக்கிறது. 40 கோடி ரூபாய் அளவில் உள்ள சேது சமுத்திரத் திட்டம் ஐந்து ஆண்டுகளில் முடிந்துவிடும் என்று மத்திய பொறியாளர் திரு வெங்கடேஸ்வரன் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாற்பது கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படுகிற அந்தத் திட்டம் ஐந்து ஆண்டுகளில முடிந்துவிடும் என்றால் நான்கு கோடி ரூபாய் செலவாகும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஐந்து ஆண்டுகள் ஆகுமா என்பதை அரசு, பிரதம என்ஜினியர் அவர்களைக் கேட்டு, அவர்களது விளக்கத்தைப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் கிழக்குப் பகுதி பற்றி எனக்கு முன் பேசிய பலர் குறிப்பிட்டார்கள். பொதுவாக, இராமநாதபுரம் மாவட்டம் மற்ற மாவட்டங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது எந்தளவிற்கு பின்தங்கியிருக்கிறது, எந்தளவிற்கு அது கைவிடப்பட்டிருக்கிறது என்ற நிலைமைகளை இன்றல்ல இருபது ஆண்டுகளாக நாம் உணர்ந்து வருகிறோம். காங்கிரஸ் ஆட்சி காலத்தில்தான் அதுமாதிரியான சிரமங்கள் இருந்தன என்றால் நம்முடைய ஆட்சி காலத்தில் அது தீரவேண்டும்; எப்படியும் தீரும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

பொதுவாக, என் பகுதியில் பாசனங்களைப் பொறுத்த வரையில் எவ்வளவுதான் அரசின் கவனத்தைத் திருப்ப முயன்றாலும் அது முடிவதில்லை. பத்து நாள் தண்ணீர் இல்லை, இருபது நாள் தண்ணீர் இல்லை, ஒரு மாதம் தண்ணீர் இல்லை என்ற நிலையில் சாவி அறுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

மானாவாரி நிலங்களைப் பற்றி நான் குறிப்பிடவில்லை. தண்ணீருக்கு உத்தரவாதம் பெற்ற வைகைப் பாசனத்தில் உள்ள கண்மாய்களைப் பற்றித்தான் குறிப்பிட விரும்புகிறேன். தண்ணீர் உத்தரவாதம் என்று சொன்னால், அந்தக் கண்மாய்களின் நிலை, அந்த ஆயக்கட்டுகளில் இவ்வளவு விளையும் என்ற உத்தரவாதத்திற்கு சம்பந்தப்பட்ட என்ஜினியர்கள் உறுதியளிக்கவேண்டும்.

இராமநாதபுரம் பெரிய கண்மாயை எடுத்துக்கொண்டால் அங்கு நாலாயிரம் எக்கர் ஆயக்கட்டு இருக்கிறது. அந்த ஆயக்கட்டுகள் பத்து நாள் தண்ணீர் இல்லை, இருபது நாள் தண்ணீர் இல்லை, ஒரு மாதம் தண்ணீர் இல்லை என்று சாவி அறுக்கிற நிலையில்தான் பொறியாளர்கள் அதைக் கவனித்து வருகிறார்கள். சாதாரணமாக தண்ணீர் வருகிறதா என்றால் வருகிறது. கண்மாய்களின் நிலை அப்படியிருக்கிறது. எட்டடி கட்டக்கூடிய கண்மாயில் இப்போது ஐந்தடிதான் தண்ணீர் வைக்க முடிகிறது. அதை இருபோக சாகுபடிக்கு எடுத்துக்கொள்வதாக ஏற்கனவே இராமநாதபுரம் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலெக்டர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். அங்குள்ள எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியர் 32 லட்சம் ரூபாய்க்குள்ள ஒரு திட்டத்தை பிரதம என்ஜினியர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை இதில் காணவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்திலேயிருக்கும் ஒரே கண்மாய் அந்தப் பெரிய கண்மாய்தான். இருபோகச் சாகுபடித் திட்டத்தை நடத்துவதற்கு வசதியானது. ஆனால் இன்று அறிக்கையிலே பார்த்தால் அந்தத் திட்டமே வரவில்லை. அதோடு மட்டும் அல்ல, பொதுவாகத் என்னுடைய பகுதியிலே வருகின்ற திட்டங்களெல்லாம் ஒரு லட்சம், 1½ லட்சம் என்னும் அளவிலேயிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் அல்லாத மற்ற பகுதிகளிலே கோடிக் கணக்கான ரூபாய் செலவழிக்கப் படுகிறது. இனிமேலாவது, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும், நமது அரசும் கிழக்குப் பகுதியிலே, பெரிய திட்டங்களை, மாஸ்டர் பிளான்ஸ்களை உருவாக்கி இந்தப் பாசன வசதிகளை ஒழுங்கு படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அப்படியில்லையென்றால் அரசுக்கும் நஷ்டம் ஏற்படும் கண்மாய்கள் நல்ல நிலையில இல்லையென்றால் உடைப்பு ஏற்பட்டு சேதம் ஏற்படும். அதனால் பொதுப்பணித்துறை இலாக்காவிற்கு மட்டும் அல்ல, ஹைவேஸ் இலாக்காவிற்கும் கஷ்டம் ஏற்படுகிறது. கண்மாய் உடைப்பெடுத்தால் ரோடுகள் அடித்துச் செல்லப்படும்.

என் பகுதி ரோடுகளின் நிலைகளை எடுத்துக்கொண்டால் நல்ல நிலையில் இல்லை, பொதுவாக இந்தியாவிலிருந்து வருகின்ற யாத்திரிகர்களையும், உலகத்திலிருந்து வருகின்றவர்களின் கவனத்தையும் கவரத்தக்க வகையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம் அமைந்திருக்கிறது, இப்பொழுது இலங்கையிலிருந்து அகதிகள் வருகிறார்கள், அவர்களுக்கு 70 லட்சம் ரூபாய் செலவிலே பல்வேறு வகைகளில் செலவிடப்பட்டு, ரோடு வசதிக்காக 20 லட்சம் ரூபாய், கட்டிட வசதி மற்றும் பல்வேறு வசதிகளுக்காக பல லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பொதுப்பணித்துறை எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியரின் ஆபீஸ் சிவசங்கையிலேயிருக்கிறது, அதனாலே பல கஷ்டங்கள் இருக்கின்றன, இராமநாதபுரம் மாவட்டத்தின்முக்கியநகராக இராமநாதபுரம் இருந்தும் எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியரின் அலுவலகம் அங்கு அமைவதற்கு நமது அரசு இதுவரையிலே செயல்படாதது உண்மையிலேயே வருந்தத் தக்கது. இனிமேலாவது வருகின்ற காலங்களிலே இப்படிப்பட்ட கஷ்டங்களையெல்லாம் போக்க வேண்டும். இராமநாதபுரம் கல்லூரி கட்டிடத்திற்கு 5 லட்சம் ரூபாய் இதுவரையில் மக்கள் தொகையாகச் செலுத்தியிருந்தும்கூட கல்லூரிக் கட்டிடத்திற்கு இதுவரையில் பணம் ஒதுக்கப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, இந்தக் குறையைப் பொதுப் பணித்துறை அமைச்சரவர்களும், நமது அரசும் தீர்க்க ஆவன காரியங்களைச் செய்யும் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.

**திரு. வை. சுவாமிநாதன்:** துணைத்தலைவரவர்களே, என் சார்பாகவும் என் கட்சியின் சார்பாகவும் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். திருச்சி, தஞ்சை மாவட்டங்கள்தான் தமிழ்நாட்டிற்கு உணவு அளிக்கக்கூடிய மாவட்டங்கள் ஆகும். இந்த மாவட்டங்களில் உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்க வேண்டுமானால் இந்த மாவட்டங்களிலேயுள்ள நீர் நிலைகளை நல்ல





முறையிலே பேணிவைக்க வேண்டியது அரசினரின் பொறுப்பாகும். திருச்சி மாவட்டத்திற்கும் தஞ்சை மாவட்டத்திற்கும் தண்ணீரை அளிக்கும் நதி காவேரி நதியாகும். இந்த காவேரி நதியில் ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலே பெரிய தண்ணீர்த் தட்டுப்பாடு வந்துவிடுகிறது. அதன் காரணமாக, சூல்வளைப்பிடி என்று சொல்வார்களே அந்த கதிர் வாங்கக்கூடிய நேரத்தில் தண்ணீர் இல்லாமல் பல ஆயிரக்கணக்கான எக்கர்களில் விளைச்சல் பாதிக்கிறது. இதற்கு ஏதாவது நல்ல திட்டங்களை அரசாங்கம் ஆராய்ந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக மேட்டூர் அணையை இன்னும் 10 அடி உயர்த்த வாய்ப்பிருப்பதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். அரசாங்கம் இதை ஆராய்ந்து மேட்டூர் அணையை இன்னும் 10 அடி உயர்த்தினால் மேட்டூரில் கிட்டத்தட்ட 40 அடி தண்ணீருக்கு மேல் தேக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அம்மாதிரி செய்துவிட்டால் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் ஏற்படக்கூடிய தண்ணீர்ப் பஞ்சத்தைத் தவிர்க்க வழி செய்ய முடியும். இதை அரசாங்கம் ஆராயவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே மைசூர் அரசாங்கத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டால், அதிகப்படியான தண்ணீரைக் காவிரியில் பெறக்கூடிய திட்டத்தை அரசாங்கம் ஆராயவேண்டும். ஏனென்றால் மைசூரிலிருந்து அதிகப்படியான தண்ணீர் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். நான் சமீபத்திலே கேள்வி நேரத்தின்போதுகூட சொன்னேன், காவேரிக் கரையைப் பலப்படுத்த வேண்டுமென்று. ஆனால், பலமாக இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள் ஆனால், வெள்ளம் ஏற்பட்ட காலத்தில் பார்த்தால் கஷ்டமாக இருக்கும். கல்லணையில் அடிக்கடி உடைப்பு ஏற்படக்கூடும். இதைத் தவிர்க்கத்தான் காவேரிக் கரையை இன்னும் பலமாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அப்படிச் செய்தால்தான் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கைத் தடுக்க முடியும்.

அதைப் போலவே, கல்லணை, தமிழ் நாட்டில் முக்கியஸ்தலமாக இருக்கிறது. திருச்சி, தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் உல்லாச ஸ்தலங்கள் கிடையாது. எனவே, கல்லணையை ஒரு உல்லாச ஸ்தலமாக ஆக்கவேண்டும். மற்ற மாவட்டங்களை யெடுத்துக்கொண்டால், மதுரையில் வைகையும், செங்கற்பட்டுக்கு மகாபலிபுரமும், வடார்க்காடு, தென்னார்காடு மாவட்டங்களுக்கு சாத்தனூரும் இருக்கிறது. இப்படி ஒவ்வொரு மாவட்டத்தில் ஒரு உல்லாசஸ்தலம் இருக்கிறது. ஆனால், திருச்சி, தஞ்சை மாவட்டங்களுக்கு உல்லாசஸ்தலம் கிடையாது. ஆதலால், கல்லணையை ஒரு டூரிஸ்ட் சென்டராக ஆக்க வேண்டும்.

திருச்சி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், செக்கோஸ்லேவியா நாட்டைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்களும், வங்காள நாட்டு மக்களும், கல்கத்தா போன்ற பெரிய நகரத்தின் மக்களும் இருப்பதால், அங்கு பல மாவட்டங்களையும் சேர்ந்தவர்கள் இருப்பதால் கல்லணையை உல்லாச ஸ்தலமாக ஆக்கவேண்டும்.

இன்று, கல்லணைக்கு பஸ், லாரி போக்குவரத்துக்கள் ஏற்றதாக இல்லை. கல்லணையை பஸ், லாரி போக்குவரத்திற்கு லாயக்காக ஆக்கிவிட்டால் திருச்சி, தஞ்சைக்குள்ள தூரம் குறையும். ஆகவே, அதைச்செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

திருச்சியை எடுத்துக்கொண்டால், முக்கியமாக ஜேடர்பாளையம் திட்டம் ஒன்றிருக்கிறது. இதற்குக் கிட்டத்தட்ட 23 கோடி ரூபாய் ஆகுமென்று ஆராய்ச்சி செய்யப்பட்டது. ஆனால் இது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதை உடனடியாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். திருச்சி மாவட்டத்தில் இருக்கக்கூடிய அரியலூர், உடையார்பாளையம் ஆகிய

இடங்களில்உள்ள மக்கள் மிகவும் பின்தங்கிய, குறைந்த வசதியுள்ளமக்கள். அவர்களுக்கு உபயோகமாக இருக்கும்பொருட்டு ஜேடர்பாளையம் திட்டத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, விளாங்குடி, திருமானூர் கொள்ளிடம் பாலத்தை கட்டித்தர வேண்டும். மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சரவர்களால் துவக்கிவைத்து இரண்டு வருஷங்களாகியும், இன்னும் இங்கு வேலை தொடங்கவில்லை. இதையும் உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்தத் துறையிலே வேலை செய்யும் ஊழியர்களுக்கு அதிகச் சம்பள வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்று கூறி முடிக்கிறேன்.

* **திரு. பி. வேலுசாமி:** உதவி சபாநாயகரவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். தென் மாநிலங்களிலே, அநேகமாகச் சென்னை மாநிலத்தைத்தவிர மற்ற மாநிலங்களில் உள்ள தண்ணீரை ஒத்துப்பார்த்தால் நமது மாநிலம் குறைவான அளவில் இருப்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். இந்நிலையில் நமக்குத் தண்ணீர் பற்றுக்குறை என்பது பொதுவாகத் தெற்கேயிருக்கும் ஒரு நிலை. அந்த நிலையிலே நமது நாட்டில் எங்கெல்லாம் ஆற்றுப் பாசனம் இருக்கிறதோ அங்கெல்லாம் முழுவதுமாக சிமெண்டால் கரைகளைக் கட்டவேண்டும். இன்ஜினியர்கள் சொல்லுகிறார்கள், தண்ணீரில் 25 சத விகிதம் பூமிக்குக் கீழே பர்குலேஷன் தண்ணீராக உபயோகமற்றுப் போய்விடுகிறது என்று சாதாரணமாகச் சொல்லப்படுகிறது. எனவே, நாம் சிமெண்ட் கரைகளைக் கட்டினால் தமிழ் நாட்டிலே நீர்ப்பாசனத்திலே உள்ள பூமிகளில் இன்னும் 25 சத விகிதம் தண்ணீர் பாசனத்திற்கு அதிகமாகப் பயன்படும் என்றுதான் தெரியவருகிறது. ஆகவே, அந்த முயற்சியிலே நமது பங்கு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நமது சர்க்கார் சிந்திக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தாற்போன்று, கோவை ஜில்லாவைப் பொறுத்தவரையில் இரண்டு அமைச்சர்கள், குறிப்பாக நிதியமைச்சரவர்களும், மராமத்து அமைச்சரவர்களும், கோவை ஜில்லாவைச் சேர்ந்தவர்கள். பணமும், திறமையும் இரண்டும் சேர்ந்திருக்கிறது. இரண்டும் இருந்தும், காலத்தில் இந்த ஜில்லாவிலே அதிக உதவி இருந்தால் வாஸ்தவமாகவே வேறு மாவட்டங்களின் கவனம் இந்த மாவட்டத்திற்குத் திரும்பி விடும் என்ற அச்சத்தாலோ என்னவோ கொஞ்சம் தளர்த்தப்பட்டிருக்கிறது. இதற்கு இருக்க வேண்டிய அளவிலேயிருந்து கொஞ்சம் குறைவாக இருக்கிறது. குறிப்பாக இந்த குந்தா கழிவுநீர் திட்டத்தைப் பற்றி வெகுகாலத்திற்கு முன்பேயிருந்து சொல்லப்படுகிறது. 1965-ம் ஆண்டிலே இந்தத் திட்டத்திற்காகச் சொல்லப்பட்டதற்கும், இன்றைக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சொல்வதற்கும் உள்ள தாரதம்மியத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். 1965–ஆம் ஆண்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ளதைக் குறிப்பிடுகின்றேன்:

"நான்காவது திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட புதிய நடுத்தரப் பாசனத் திட்டங்களில், அவினாசி பகுதிக்கும், கோயம்புத்தூர் மாவட்ட மேட்டு நிலங்களுக்கும் பாசன வசதிகள் அளிப்பதற்கான திட்டம் மிக முக்கியமானதாகும். பில்லூர் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீரை பம்பு மூலம் இறைத்து பவானியில் வலது கரையில் உள்ள ஒரு புதிய கால்வாயில் அத் தண்ணீரைச் சேர்ப்பது மூலம் இத்திட்டம் நிறைவேற்றப்படும். குந்தா நீர் மின்சாரத் திட்டத்தின்கீழ்ச் சேர்க்கப்பட்ட தண்ணீர் உட்பட 12,600 மில்லியன் கன அடி தண்ணீரைப் பயன்படுத்தி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் புன்செய்ப் பாசனம் பெறும் 1,08,000 ஏக்கர் நிலத்துக்கு இரண்டு முறைகளில் பாசன வசதி அளிப்பதே அதன் நோக்கம் ஆகும். இத்திட்டத்திற்காக ரூ. 600 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. அதன் மூலம் 27,300 டன் அதிக உணவு உற்பத்தி கிடைக்கும்."





1965-ம் ஆண்டிலே கொடுக்கப்பட்ட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இப்பொழுது தந்திருக்கிற ஐந்தாண்டுத் திட்டத்திலே அதைப்பற்றி சொல்லப்படுகிறது, "அவினாசித் திட்டம்:—இத்திட்டம் மொத்தம் ரூ. 4 கோடிச் செலவில் 12,000 ஏக்கர் நன்செய் நிலங்களுக்கு, பவானியிலிருந்து 800 கன அடித் தண்ணீரை பயன்படுத்தி பாசன வசதிக்கு வகை செய்யும் திட்டமாகும். நான்காவது திட்டகால இறுதிக்குள் இத்திட்டம் முடிவடையும்" என்று. ஆகவே இந்த திட்டம் அந்தப் பகுதிக்கு வரவில்லையென்று சொன்னால் மிகவும் கஷ்டமேற்படும். இப்பொழுதுள்ள நிலையிலே அந்தப் பகுதியில் அநேகமாக 200 அடி ஆழக்கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இனிமேல் தண்ணீரே கிடையாது. கனடா தேசத்திலேயிருந்து வந்த புவியியல் நிபுணர்கள் அந்தப் பகுதியைப் பார்த்த பிறகு, அந்தப் பகுதியில் தண்ணீர் மிகவும் கீழே சென்றுவிட்டது, அங்கு தண்ணீர் கிடைக்க வழி செய்யவில்லை என்று சொன்னால், அந்தப் பகுதியிலே வாழும் மக்கள் அந்தப் பகுதியை விட்டு வெளியேற வேண்டுமே தவிர, வேறு வழியில்லையென்று அவர்கள் ஒரு ரிப்போர்ட்டை கொடுத்தார்கள். (மணி அடிக்கப் பட்டது) அங்கே என்ன நிலைமை என்றால், இப்படி ஒரு திட்டம் நிறைவேற்றப்படவில்லையானால், அந்தப் பகுதியிலே இருக்கிற 3 இன்ஜினிரிங் காலேஜ்களை வெளியேற்ற வேண்டும், ஒரு மெடிக்கல் காலேஜை வெளியேற்ற வேண்டும், 35 டெக்ஸ்டைல் தொழிற்சாலைகளை வெளியேற்ற வேண்டும். 30 இன்ஜினிரிங் தொழில்களை அங்கிருந்து போக்கவேண்டும். இப்படி அந்தப் பகுதியிலே உள்ள சொத்துக்கள் போல் பல கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களுக்கு நஷ்டம் ஏற்படும். இப்போது கோவை நிலை என்ன? பழைய ஜமீன் வீட்டு நாற்காலியைப்போல் இருக்கிறது. ஜமீன் போனபிறகும் நாற்காலிக்கு கால் மூன்றுதான் இருக்கும். அதில் உட்கார்ந்தால் நிலை என்ன? அதைப்போல் அந்தப் பகுதி பாதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள நிலையைப் பார்த்தால் பஞ்சம், பஞ்சாலைகளிலே வேலை கிடையாது, வறட்சிப் பிரதேசம், 3 ஆண்டுகளாக மழை பெய்யவில்லை. இம்மாதிரி மோசமான நிலை அங்கே தாண்டவமாடுகிறது. நிதி அமைச்சர் அவர்களும் இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அழுத்தமாக சொல்லிக்கொள்கிறேன். பஞ்சாலைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் 15 இலட்சம். அதோடு 300 அடி, 200 அடி ஆழத்திலும் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. 25 அடிக்குக் கீழே தண்ணீர் இருக்கும் பகுதிக்கு ரூ. 40 லட்சம். 200 அடிக்குக் கீழே தண்ணீரில்லாமல் போகிற பகுதிக்கும் சேர்த்து ஒதுக்கி இருப்பது ரூ. 18 லட்சம். இதையெல்லாம் பார்க்கின்றபொழுது, அந்தப் பகுதி வாஸ்தவமாகவே புறக்கணிக்கப்படுகிறதோ என்ற ஐய உணர்வு எனக்கு ஏற்படுகிறது. அந்த நிலைமைகளையெல்லாம் கொஞ்சம் மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக அந்த குந்தா கழிவு நீரைக்கொண்டு பயனடையும் வசதியை அந்தப் பகுதிக்கு விஸ்தரிப்பதற்கு நமது அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்வதோடு, கடைசியாக இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன். தேசிய ஒருமைப்பாடு என்று பேசப்படுகிறது....(மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்)

***திரு. ஆ. கருப்பையா :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் என் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் செலுத்திக்கொண்டு இந்த பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததின் காரணமாக, திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்த அளவில், வட பகுதி பூராவுமே பஞ்சப் பிரதேசமாக ஆகி விட்டது. இருந்தாலும் கூட, மணிமுத்தாறு, பாபநாசம் போன்ற அணைகளில் தண்ணீர் கொள்ளளவு குறைந்திருந்தாலும், அங்கே உள்ள அதிகாரிகளுடைய திறமையினால் அதை பங்கீடு செய்து முறைப்படி தண்ணீர் விட்டு, நல்ல முறையில் வேலைகள் நடப்பதைப் பார்க்கின்றோம். அந்த அளவுக்கு செய்ததற்கு அந்த அதிகாரிகளை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

[திரு. ஆ. கருப்பையா] [1969 மார்ச் 17

அத்துடன் என்னுடைய கங்கை கொண்டான் தொகுதியைப் பொறுத்த மட்டில், என்னுடைய தொகுதியிலே சித்தாறு நதி என்று ஒரு நதி ஓடிக்கொண்டிருக்கிறது. பல காலமாகவே அந்த நதியை நம்பி, பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் முதல் போட்டுப் போட்டு இழந்திருக்கிறார்களே தவிர அவர்கள் வாழ்ந்ததாக இதுவரை சரித்திரத்திலே கூட இல்லை. 18 அணைகள் அந்த நதியிலே இருந்தாலும்கூட, மேலே தண்ணீர் தேக்கி வைத்து, விவசாயத்திற்கு குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கக்கூடிய அளவு அங்கே ஒரு அணைத் திட்டம் இல்லாத காரணத்தால் அந்தப் பகுதி பஞ்சப் பிரதேசமாகவே இருந்து வருகிறது. இந்த நிலையில் விவசாயிகள் மழையை நம்பி விவசாயம் செய்யவேண்டியிருக்கிறது. அவர்கள் விவசாயம் செய்து, பயிரை வளர்த்து மகசூல் கையாளக்கூடிய நேரத்திலே தண்ணீர் இல்லாமல் ஆண்டுதோறும் இந்த நிலைமை இருப்பதால் அவர்கள் விவசாயத் தொழிலை விட்டு விட்டு ஓடக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இதற்கு நாம் ஒரு முடிவு கண்டாக வேண்டும்.

நமது அரசு கல்லாறு, அச்சன்கோவில், புனலூறு போன்ற திட்டங்களை துரிதமாக நிறைவேற்றினால், இந்தப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடைய கஷ்டக்தைப் போக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய சின்ன யோசனை ஒன்றையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதை அரசு பூரண மனதோடு ஏற்று செயல்படுத்தித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது கட்டியிருக்கிற கடனாநதி, ராமநதி திட்டத்திலிருந்து மானூர் குளத்திற்கு ஒரு கால்வாய் வெட்டி அந்தக் குளத்தில் தண்ணீரை உபரியான நேரங்களில் பெருக்கிக் கொண்டால் அந்தக் குளத்தை நம்பியிருக்கக்கூடிய பள்ளிமடைக்குளம், புதூர் குளம், நாஞ்சான்குளம் போன்ற குளங்களெல்லாம் வளமாகும். அதிலிருந்து 5,000 ஏக்கரை நாம் பாதுகாக்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு அதிகமான பணம் ஒன்றும் செலவிட வேண்டியதில்லை. இநத பஞ்ச நிவாரண வேலையிலேயே அதை தொடங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சித்தாறு நதியை நம்பியிருக்கிற கங்கைகொண்டான் குளமும், அதே நிலையில்தான் இருக்கிறது. திருநெல்வேலி வழி ராமன் பட்டியிலிருந்து ஒரு கால்வாய் கங்கைகொண்டான் குளத்திற்குச் செல்கிறது. அது தூர்ந்து போய் சில காலமாகவே தூர் எடுக்கப்படாமல் இருக்கிறது. அந்த கால்வாயைத் தூர் எடுத்து, உபரியான காலங்களில், அணைக்குக் கீழே போகக்கூடிய மழைத் தண்ணீரைப் பயன்படுத்தி அந்தப் குளத்தை பெருக்கிக்கொண்டால், அதன் மூலமாக 5,000 ஏக்கருக்குப் பாதுகாப்பளிக்கமுடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளங்குளம், பாப்பான்குளம், பண்டாரக்குளம், பதினாலாம்பேறிக் குளம் இவைகளில் உபரியான காலத்தில் நீர் நிரப்பி வைத்துக்கொண்டால் அங்கே இருக்கிற உணவுப் பஞ்சத்தை ஓரளவு தீர்ப்பதற்கும் நல்ல நிலையிலே பயிர் செயவதற்கும் வசதியாக இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் தாம்பிரபரணி நதி ஓடுகின்றது. அதற்கு அந்தப் பக்கமும் இந்த பக்கமும் விவசாயிகள் விவசாயம் செய்யவேண்டுமானால் சிந்தூந்தரப்பாலத்தைத் தாண்டிவர வேண்டும். அதைக் கடந்தால் மொரப்பனாட்டுப்பாலம் என்ற பாலத்திற்கு வந்துதான் விவசாயிகள் இந்தப் பக்கத்திலிருந்து, அந்த பக்கத்திற்கும் அந்தப் பக்கத்திலிருந்து இந்தப் பக்கத்திற்கும் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கு இடையிலே உள்ள தூரம் ஏறத்தாழ 13 மைல்கள் ஆகும். ஆகையினால், விவசாயிகள் அந்தக் கரையிலிருந்து இந்தப் பக்கம் பொருள்களைக் கொண்டு செல்லவேண்டுமானால் 15 மைல்கள் தூரம் சுற்றிப்போக வேண்டியிருக்கிறது. அதிலே சுமார் 2 பர்லாங் தூரம் மணல் இருப்பதால் அவர்கள்



1969 மார்ச் 17] [திரு. ஆ. கருப்பையா]

போவதும் தடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு சிறு ஓடுபாலமாவது கட்டினால் அந்த விவசாயிகளுடைய கஷ்டத்தை நீக்க வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லி, பாலமடைப்பக்கம் அல்லது அரவன்குளம் பக்கமாவது அந்தப் பாலத்தை அமைத்துத் தரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் என்னுடைய தொகுதியான கங்கைகொண்டானில் 1966–ல் பெய்த மழையின் காரணமாக பராக்கிரமபாண்டியன் குளம் உடைபட்டுப் போயிருக்கிறது. அதன் காரணமாக, அங்கே மணியாச்சி ரோடுக்கும் மதுரைக்குப் போகும் சாலைக்கும் இடையே இணைப்புப் பாதையாக இருந்த கங்கைகொண்டான் பாலம் என்ற பாலம் அடித்துச் செல்லப்பட்டது. ஆனால், அந்தப் பாலம் இதுநாள் வரைக்கும் செப்பனிடப்படாமல் அப்படியே இருக்கிறது. இதனால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதையும்கூட கவனிக்க வேண்டுமென்று மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

குத்தகைதார்கள் பாதுகாப்பு சட்டம் என்று ஒன்று இந்த மன்றத்திலே கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. அந்த சட்டத்திற்கு உண்மையிலே விவசாயிகள் சார்பாக இந்த அமைச்சரவைக்கு நான் நன்றிகலந்த வணக்கத்தோடு பாராட்டு தெரிவித்துக்கொண்டு, அந்த சட்டத்தின் காரணமாக திருநெல்வேலியிலே உள்ள விவசாயிகள் உண்மையிலே இந்த அரசைப் பாராட்டுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கே போன ஆண்டு நடந்த சம்பவம், குத்தகை பாதுகாப்புச் சட்ட சம்பந்தமாக நடந்த ஒரு சம்பவம்தான். இடைத்தரகர்களுக்கும் உண்மையான குத்தகைக்காரர்களுக்கும் ஊடே ஏற்பட்ட ஊடலில் நடந்த ஒரு சம்பவம் துப்பாக்கிப் பிரயோகம் வரை கொண்டுபோய் விட்டிருக்கிறது. நமது சர்க்கார் நிறைவேற்றியிருக்கிற இந்த சட்டத்தைப்பற்றி அங்குள்ள விவசாய ஏழை குத்தகைதார்கள் மிகவும் சந்தோஷப்படுகிறார்கள் என்பதை விவசாயிகளின் சார்பாகவும் தெரிவித்துக்கொண்டு, சர்க்காருக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இநத மன்றத்தில் கொண்டுவந்திருக்கும் பாசனப் பொதுப்பணித் துறை மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ராமனாதபுரம் ஜில்லா பகுதி மிகவும் வரண்ட பகுதி என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். குறிப்பாக, அமைச்சர்களுக்கு ராமனாதபுரம் ஜில்லா எப்படி இருக்கிறது என்பது நன்றாகத் தெரியும். இப்பொழுது அங்குள்ள மக்கள் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாமல், வரண்டுபோய், மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற நிலையில் இருக்கிறார்கள். ராமனாதபுரம் ஜில்லா பகுதிக்கு வரப்பிரசாதமான ஒரு திட்டத்தை நான் கொடுத்தேன். அதாவது இரண்டு போகத்திற்குத் தண்ணீர் பெறக்கூடிய முறையில் கண்வாய்களை ஆழப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் எழுதியிருந்தேன். அதற்கு, பரிசீலனையில் இருப்பதாக எனக்குப் பதிலும் வந்திருக்கிறது. என்ஜினியரிங் டிபார்ட்மெண்டில் பரீட்சார்த்தமாக சில கண்மாய்களை எடுத்துக்கொண்டு செய்யப்போகிறோம் என்று முதலில் சொன்னார்கள். இப்பொழுது அது செய்யப்படாமல் இருக்கிறது. கண்மாய்களை ஆழப்படுத்தி இரண்டு போகத்திற்கு ராமனாதபுரம் ஜில்லாவிற்கு தண்ணீரைப் பெறக்கூடிய நிலையை ஏற்படுத்தினால் ஒழிய, வேறு எந்த வகையிலும் ராமனாதபுரம் ஜில்லா தத்தளித்துக்கொண்டிருப்பதை மாற்றமுடியாது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இரண்டு மூதல் அமைச்சர்களை இதற்கு முன்பு தந்திருக்கக்கூடிய இந்த ஜில்லா மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. கண்மாய்களை ஆழப்படுத்தி, இரண்டு போகத்திற்குத் தண்ணீர் தேக்கக்கூடிய

நிலையில் ஏற்பாடு செய்தால்தான், ராமனுதபுரம் ஜில்லாவிற்கு மிகவும் வரப்பிரசாதமாக இருக்கும். அதை அவசியம் செய்யவேண்டும். அந்த மாதிரி செய்து இந்த இரண்டு போகத்திற்குத் தண்ணீர் நிரப்பப்படு கின்ற கண்மாய்களில் மீன் பண்ணைகளை ஏற்படுத்தினால், அதனால் அரசாங்கத்திற்கு லாபம் வரும். மேலும், கம்போஸ்டு உரத்தைத் தயார் பண்ணுவதற்கு சிறுசிறு குழித்தாமரைச் செடிகளை அங்கே ஏற்படுத்தினால், அதன் மூலம் நல்ல கம்போஸ்டு உரத்தைத் தயார் செய்து விவசாயத்திற்கு உபயோகப்படுத்தலாம். ஆகவே அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமனுதபுரம் ஜில்லாவிலே போக்குவரத்து சாலைகள் மிகவும் குறைவு. ஏற்கனவே பஸ்கள் செல்லக்கூடிய சாலைகள் சில அரசாங் கத்தினால் போடப்பட்டிருக்கின்றன. அவை எந்தவிதமான மராமத்தும் செய்யப்படாமலே பழுதடைந்து கிடக்கின்றன. அவற்றை எடுத்துக்கொண்டு பராமரிப்பதற்கு பஞ்சாயத்துகளிலும் சரி, பஞ்சாயத்து யூனியன்களிலும் சரி நிதி கிடையாது. அம்மாதிரி கேட்பாரற்று கிடைக்கக்கூடிய நிலையில் பல சாலைகள் இருக்கின்றன. பல இணைப்புச் சாலைகளும் இருக்கின்றன. (மணி அடிக்கப்பட்டது). இப்பொழுதுதானே ஆரம்பித்தேன். (மாண்பு மிகு பேரவைத் தலைவர்: ஒரு உறுப்பினருக்கு ஐந்து நிமிடம்தான்) பஞ்சாயத்து யூனியனுக்கு தலைக்கு 40 காசு என்ற அடிப்படையில் பணம் ஒதுக்கப்படுகிறது. அதை வைத்து எந்தவிதமான அபிவிருத்தி யையும் செய்யமுடியாது. ஒன்று, தூரத்தின் அடிப்படையில் பணம் ஒதுக்கவேண்டும். இல்லையென்றால், தலைக்கு ரூ. 2 என்ற நிலையி லாவது பணம் ஒதுக்கி, அந்த ரோடுகளை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசீய நெடுஞ்சாலை என்னுடைய தொகுதியில் மின்பசலம் முதல் திருப்பாலக்குடி வரையில் இருக்கிறது. அது எந்தவிதமான பராமரிப் பும் இல்லாத நிலையில் இருக்கிறது. பல இடங்களில் பாலம் இல்லாமல் போக்குவரத்திற்குக் கஷ்டமாக இருக்கிறது. அதை உடனடியாக செப்ப னிட்டுக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருப்புணவாசல் ஓரியூர் சாலையில் பம்பாறு என்று ஒரு ஆறு இருக்கிறது. அதில் பாலம் கட்டுவதற்கு ஒரு திட்டம் போடப்பட்டு எஸ்டிமேட்டுகள் போடப் பட்டிருக்கின்றன. அது எப்படி வந்திருக்கிறது? பாலம் கட்டுப்படாமல் இருக்கிறது. அது தஞ்சாவூர் ஜில்லா–ராமனுதபுரம் ஜில்லா இணைப் புக்கு அவசியமான பாலம். அதையும் ஏற்பாடு செய்துதரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது பஞ்ச நிவாரணத்திற்காக ரூ. 40 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. போர்டு மெம்பர் அவர்கள் வந்து பார்வையிட்டார்கள். மதுரையில் 12–ம் தேதி மதுரை, ராமனுதபுரம் ஜில்லாக்களில் இருக்கிற பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களைக் கூட்டி அவர்கள் யோசனையையும் கேட்டார்கள். எல்லோரும் ஏகமனதாக குடி தண்ணீர் ஊரணிகளை ஆழப்படுத்துவதிலும், கால் நடைகளுக்கான குடி தண்ணீர் ஊரணிகளை ஆழப்படுத்துவதிலும், ரோடுகளை செப்பனிடுவதிலும், பணத்தைச் செலவு செய்யவேண்டும் என்று கூறினார்கள். நானும் அதிலே கலந்துகொண்டேன். அவசியம் இந்தத் திட்டங்களுக்கு செலவிடுவதற்கு ஏற்பாடு செய்துதரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் வளப்பத்தைக் காட்டுவது நீரோட்டம்; பொருளாதார வளர்ச்சியைக் காட்டுவது காரோட்டம். நீரோட்டத்தை நெறிப்படுத்துவதற்கும், காரோட்டத்திற்கு உதவும் சாலைகளை அமைப்ப தற்கும், செப்பனிடுவதற்கும் பொதுப்பணியாற்றுகின்ற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். என்னுடைய முசிறி வட்டம் அரசியல் துறையில் இரண்டு சிறப்பிடம்





பெற்றிருக்கிறது. முதலாவதாக முசிறி வட்டத்தில் 5 சட்ட மன்ற உறுப்பினர்களும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் அங்கம் வகிக்கின் றோம். இரண்டாவதாக முசிறி வட்டத்தில் ஒரு சிறு ஊரில் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கிறோம். ஆகவே, இந்த இரண்டு சிறப்புக்களைப் பெற்ற முசிறி வட்டத்திற்கு நம்முடைய தமிழக அரசு இரண்டு சிறப்பான திட்டங்களை நடப்பு ஆண்டில் சேர்த்திருக் கிறது. இது உண்மையிலேயே அரசாங்க வரலாற்றிலும், சமுதாய வரலாற்றிலும் ஒரு ஏற்றத்தை அளித்திருக்கிறது. எனது தொகுதி மக்கள் சார்பாகவும், என்னுடைய வட்டத்து மக்கள் சார்பாகவும் தமிழக அரசைப் பாராட்டி, இந்த மானியக் கோரிக்கையை வரவேற் கிறேன். முதலாவது திட்டம் முசிறி–குளித்தலை காவிரிப்பாலம். இந்தத் திட்டம் நீண்ட பல ஆண்டுகளாக வகுக்கப்பட்ட, கேட்கப்பட்ட திட்டமாகும். இந்தத் திட்டம் 1957–ம் ஆண்டில் அன்றைய சட்ட மன்ற உறுப்பினரும், இன்றைய முதல் அமைச்சருமான கலைஞர் அவர்களால் எடுத்துரைக்கப்பட்ட திட்டமாகும். இந்தத் திட்டத்தை, குறிப்பாக தமிழக அரசு, பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப் பட்ட அரசு, நிறைவேற்றியிருக்கிறது என்பதைக்காண எனது வட்டத்து மக்கள் உளமார பெருமைப்படுகிறார்கள், பாராட்டுகிறார்கள். முதல் அமைச்சர் அவர்களையும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களையும் நானும் பாராட்டுகிறேன்.

இந்த நடப்பு ஆண்டில் முசிறி வட்டத்தில் கொல்லி மலைப்பகுதி யில் அய்யாற்றின் குறுக்கே ஓர் அணைக்கட்டு கட்டுவதற்கு திட்டம் தீட்டியிருப்பதில் ஆற்றல்மிகு அண்ணாவின் ஏற்றமிகு ஆட்சித் திறமை வெளிப்படுகிறது. இது மிகவும் பாராட்டத்தக்கது. போற்றத்தக்கது. மக்கள் நலம் கருதி ஏராளமான நஞ்சை நிலங்களுக்கு நிரந்தரமான நீர்ப்பாசனத்திற்கு வழிவகை செய்திருப்பது மிகவும் சிறப்புடைய தாகும். ஆகவே, என்னுடைய வட்டத்து மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் குடியிருக்கிற குளித்தலை மக்கள் சார்பாகவும் இந்த மானியத்தை வரவேற்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே 1957–ம் ஆண்டில் அன்றைய சட்டமன்ற உறுப்பினரும் இன்றைய முதல் அமைச்சருமான கலைஞர் அவர்கள் எடுத்துரைத்த திட்டம் குடகனாறு திட்டம். அந்தக் குடகனாறு திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, அதற்கு மதிப்பீடு போடப்பட்டு, இடையிலே 1962–வது தேர்தலில் காங்கிரஸ் அரசே அந்தப் பகுதி மக்களிடம் "ஓட்டு தாருங்கள், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறோம்" என்று கேட்டுவந்தபிறகு, கூடையிலே போட்டு வேட்டுவைத்த நிலைமையில், இந்த அரசு அதிலே கவனம் செலுத்தி, அதையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். குளித்தலை வட்டத்தில் பொன்னணியார்த் திட்டம் இந்த நடப்பாண்டில் சேர்க்கப்பட்டிருப்பதற்கும் பாராட்டுகிறேன். அமராவதி வெள்ளம் மழை காலத்தல் காவேரியில் கலக்கிறது. கோடைகாலத்தில் வறட்சியால் என் தொகுதி மக்களுடைய உள்ளத்தைக் கலக்குகிறது. ஆகவே, அப்படி மக்களின் உள்ளத்தைக் கலக்கும் நிலையை மாற்றி, குறுக்கே அணைக்கட்டை அமைத்துத் தண்ணீரைத் திருப்பிவிட்டால் நிரந்தரப் பாசனம் மணவாசி, மாயனூர், கட்டளை புலியூர் பகுதிகளுக்குக் கிடைக்கும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கைமீது, ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். வறட்சியாக இருந்து செயல் முறைக்கு கருணை நிறைந்த கருணாநிதியிடமிருந்து சாதிக்கக்கூடிய சாதிக்பாட்சாவிடம் கருப்பா நதித்திட்டம் வந்திருக்கிறது. ஒன்றரைக்கோடி ரூபாய்க்கு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. நிதி காணாது என்கிற நிலைதான் இருக்கிறது. வேறு வகையில் மத்திய சர்க்காரிட மிருந்து ஒரு பக்கம் எதிர்பார்ப்பதோடுகூட, ஷெட்யூல்ட் பாங்குகள் மூலம் நிதி திரட்ட செயல்பட்டால் வழி ஏற்படும். ஆகவே இதை ஊன்றிக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு எ. ஆர். சுப்பையா முதலியார்] [1969 மார்ச் 17

ரீ-ஆர்கனைஸேஷன் என்ற முறையில் சென்ற பட்ஜட்டின்போது சொன்னார்கள். ஆனால் அதை செவ்வனே செய்ய ஒரு வருஷம் ஆகியும் எதுவும் செய்யப்படவில்லை. உதாரணமாக, ஒரு ஜி. ஓ. இருக்கிறது. ஜி. ஓ. எம். எஸ். 1961, டேட்ட் 27-6-68. அந்த ஜி. ஓ. படி அணைக்கட்டு மட்டும் ஒப்புவிக்க வேண்டும் என்று இருந்துகொண்டிருக்கிறது. அதோடு சேர்ந்த சானல், குளங்களெல்லாம் செயல்படாமல் இருக்கின்றன. எல்லாவற்றையும் சேர்த்துச் செய்தால்தான் அது சரியான ஆர்கனைஸேஷன் ஆகும், ஒழுங்கான ரீ-ஆர்கனைஸேஷன் ஏற்படும்.

ரெகுலரைஸேஷன் அண்ட் மெயின்டினன்ஸ் இரண்டும் ஒருவர் கையில் இருக்கவேண்டும். மெயின்டினன்ஸ் ஒருவர் கையிலேயும், ரெகுலரைஸேஷன் இன்னொருவர் கையிலும் இருப்பது சரியில்லை. இவற்றை ஒன்றாகச் செயல்படுத்த வேண்டும்.

மைனர் இர்ரிகேஷன் டாங்க்ஸ் பஞ்சாயத்து யூனியனில் இருக்கின்றன. எஸ். எம். ஐ. பி.-க்கு ரொம்பவும் குறைவாக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டுகளுக்கு முன் என்ன ஈவு இருந்ததோ அதுவே இன்றைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை உயர்த்தவேண்டும். அது ஒரு நல்ல காரியம்.

எஸ். எம். ஐ. பி. வேலைகளுக்கு கங்கரன்ஸ் ஆப் தி கலெக்டர் வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதனால் தாமதம் ஏற்படுகிறது. கங்கரன்ஸ் ஆப் தி கலெக்டர் அவசியம் இல்லை. புது வேலைக்கு அவரிடம் போகவேண்டும் என்று சொன்னாலும் சொல்லலாம். ஆனால் சாதாரண வேலைக்கு கங்கரன்ஸ் வேண்டும் என்பதில்லை. அப்படிச் செய்தால்தான் இணைப்பு வேலை உடனடியாக செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். இன்றைக்கு நம்முடைய திட்டமே அதிக ஆட்கள் தேவையில்லை என்பதுதான். அதனால்தான், ரெவின்யூ போர்டை அபாலிஷ் செய்யவேண்டும் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறோம். ஏன் இந்தக் கங்கரன்ஸ்? புது வேலைக்கு மட்டும் வாய்ப்பு வைத்துக்கொண்டு, இர்ரிகேஷன் டிபார்ட்மென்டே செய்வதுதான் நலமாக இருக்கும்.

மாடர்னைஸேஷன் ஆப் தி சானல்ஸ்; வரவேற்கத்தக்க ஒரு அம்சம். அதிலே இந்த வருஷத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 10 லட்சம். திட்டத்திற்கு பூரா ரூ. 4 கோடி இது காணாது. கூடுதலாக ஒதுக்க வேண்டும். முக்கியமாக சிக்கனமாகச் செய்து நல்ல வகையில் பாசனம் கொண்டுவர மாடர்னைஸேஷன் அத்தியாவசியம்.

அதுபோக 'கிரௌண்ட்வாட்டர் பிராஜக்ட் இருக்கிறது. அதைப்பார்க்கும்போது, அது 1966-ல் ஆரம்பிக்கப்பட்டது என்பது தெரியும். மெட்ராஸ் ஃபெர்டிலைசர்ஸ், மெட்ராஸ் ரிஃபைனரிக்காக வேலை செய்யப்படுகிறது. கிரௌண்ட் வாடர் இண்டஸ்ட்ரிக்கு வேண்டும். இருந்தாலும் 1966-லே ஆரம்பிக்கப்பட்டது, இன்றுவரையில் செயல்படாமல், நீர்ப்பாசனத்திற்கு ஒதுக்கவேண்டும் என்று திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஃப்ரையாரிடி லிஸ்டு போடப்பட்டிருந்தது. 1965-66-ல் பழைய அரசு ஒரு ப்ரையாரிடி லிஸ்ட் வைத்திருந்தார்கள், அந்த லிஸ்ட் பற்றி அவ்வளவாகப் பேசவேண்டாம் என்று நினைக்கிறேன். இப்பொழுது இருக்கும் கஷ்டம், வறட்சி நிலை இவற்றை அனுசரித்து ஆய்வுக்குழு மாற்றவேண்டும் என்று நினைக்கிறேன். திருச்சியில் ஒரு சென்டர் இருக்கிறது. அவர்களிடம் கேட்டால் அது ஏதோ ஒரு காலத்தில் அந்த ப்ரையாரிடி லிஸ்ட் தயாரிக்கப்பட்டது. அதன்படி நீங்கள் கிரௌண்ட் வாடர் பிராஜக்டை அமுல் நடத்துவதினால், புதிதாகச் செல்லும் இடத்திற்கு நன்மை கிட்டாது. அது தவறு. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைகளில், வறட்சி உள்ள இடங்களுக்கு அந்த பிராஜக்டை உடனடியாகக் கொண்டுபோகவேண்டும் என்று சொன்னார்கள். அந்த வகையில் செயல்படவேண்டும்.



1969 மார்ச் 17] [திரு. எ. ஆர். சுப்பையா முதலியார்]

அதுபோக, வாட்டர் மானேஜ்மெண்ட், இன்றைக்கு மேட்டூரை எடுத்துக்கொண்டால், 60 சதவிகிதம் ஸ்டோரஜ் கபாசிடிதான். இந்த வருஷம், டர்ன்-ஸிஸ்டம் மூலமாக நன்றாகச் செயல்பட்டது. ஆகையினால், அந்த டர்ன்-ஸிஸ்டத்தை ஒவ்வொரு இடத்திலும் நன்றாகச் செயல்படுத்த ஒவ்வொரு இடத்திலும் கோ-ஆர்டினேஷன் அண்ட் யூடிலைஸேஷன் குழு ஒன்று வைத்து, எல்லாவிதமான வேலைகளையும் பொதுப் பணித் துறைக்குக் கொடுத்தால், நலமாக இருக்கும்.

Assessment based on actual usage of water என்ற வகையில் வழி செய்வது நலமாக இருக்கும். அஸெஸ்மெண்ட் ஒரு ஃப்ளாட் ரேட்டாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக்சுவல் யூஸேஜ், இவ்வளவு தண்ணீர் உபயோகிக்கிறார்கள் என்பதைக் கண்டு அதற்குத் தக்க தீர்வை விதிக்கும் புதிய வழி இருந்தால், சிக்கனம் ஏற்படும். தண்ணீர் அதிகமான இடத்திற்குப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு சொட்டுத் தண்ணீரையும் காப்பாற்ற வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவே, assessment based on actual usage of water என்று செய்தால், சிக்கனம் ஏற்படும். அந்த வகையில் மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமானது, இல்லீகல் இர்ரிகேஷன். அக்கிரமமான முறையில் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. அப்படிப் பாய்ச்சப்படுவதை, இன்று பொதுப்பணித்துறை இலாகா கிரிமினல் கேஸ் எடுக்கவேண்டும் என்றால், சம்பிரதாயத்தை முன்னிட்டு, ரெவின்யூ டிபார்ட்மெண்ட் சொல்லி, போலீஸ் நடவடிக்கை எடுக்கவேண்டியதாக இருக்கிறது. ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்டில்போல, அங்கே இல்லீகல் கட்டிங்க்கு ஆக்ஷன் எடுக்க அவர்களுக்கே பவர்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போல, இங்கும் செய்யலாம். யாராவது தப்பிதமான முறையில் தண்ணீர் கொண்டுபோனால், அதன்பேரில் நடவடிக்கை எடுக்க பொதுப் பணித்துறைக்கு கிரிமினல் பவர் கொடுத்தால், பலவிதமான தப்புக்கள் நிற்க வழி ஏற்படும்.

அடுத்து எங்க்ரோச்மெண்ட். எங்கே பார்த்தாலும், குளம், கரை எங்கும் ஆக்கிரமிப்பு. இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பைப்பற்றி எழுதி அனுப்பினால், அதனால் பலன் இல்லை. பொதுப்பணித்துறை ஆட்களைக் கேட்காமலேகூட, ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்டார், குளத்து உள் வாயில் மரங்களைப் பயிர் செய்ய வில்லேஜ் பாரஸ்ட் என்ற வகையில், செய்கிறார்கள். ஓரளவிற்கு அவர்களைக் கேட்கவேண்டும். நீர்பிடிப்புக்குக் கெடுதலாக இருக்குமா என்பதையெல்லாம் தெரிந்துகொண்டு செய்யவேண்டும். ரெவின்யூ டிபார்ட்மெண்ட் பர்மிஷன் கொடுப்பது சரியில்லை. எங்க்ரோச்மெண்ட் சம்பந்தமாக பொதுப்பணித்துறைக்கு அதிகாரம் கொடுத்தால் நன்றாகச் செயல்பட முடியும். தண்ணீர் கூடுதலாகக் கிடைக்கும், விவசாயம் பெருகும், அதிக நிலம் பயிர் செய்ய வழி ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

* திரு. மு. இரத்தினசபாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை அமைச்சர் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கையின்மீது, என்னுடைய கருத்துகளை என் தொகுதியின் சார்பாக எடுத்துக் கூற விரும்புகிறேன்.

எனது தொகுதியான விளாத்திகுளம், தமிழகத்தில், மிக வறட்சியான தொகுதி என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. கடந்த 30 ஆண்டு காலமாக பருவமழை இல்லாததால், பெய்தாலும், 4, 5 வருஷத்திற்கு ஒருமுறையே மழை பெய்வதால், மிக வறட்சியான நிலை இருக்கிறது. அந்த நிலையில் மக்கள் முழுக்க முழுக்க, வேறு தொழில் இல்லாமல், விவசாயத் தொழிலிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால், இந்தப் பொதுப்பணித்துறை மூலமாக இந்த மக்களுக்கு விவசாயத்தில் [illegible]வம் ஏற்பட விவசாயத்தில் பாடுபட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இந்த அரசு பொதுப்பணித்துறை மூலம், நல்ல திட்டங்களைச்செய்து

[திரு. மு. இரத்தினசபாபதி] [1969 மார்ச் 17

தந்து, ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அவையில் குறிப்பிட்ட சிறப்பு சிறு பாசன திட்ட முறையை அந்தப் பகுதிக்கு ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும். அந்தப் பகுதி முன்னேற்றம் இல்லாமல் இருக்கிறது. அந்த வகையில், சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட புதிய குளங்கள், மதிப்பீடு செய்யப்பட்டு, ஆய்வில் இருப்பதாகத் தெரிகிறது. முக்கியமாக. எல். வெங்கடேச்வரபுரம் புதுக் குளம், ராமச்சந்திராபுரம் புதுக்குளம், புதுப்பட்டி குளம், வேடப்பட்டி குளம், அருங் குளம், வடமலாபுரம் குளம், முத்தையாபுரம் குளம், பெரியசாமிபுரம் குளம், துலுக்கன் குளம் ஆகிய குளங்களுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிகிறது. அவற்றை மொத்தமாக எடுக்காவிட்டாலும், ஆண்டுக்கு இரண்டு குளம் வீதம் எடுத்து மக்களுடைய ஆவலைப் பூர்த்திசெய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30 அதுபோக, அங்கு பலப் பல ஓடைகள் ஓடுவதால் நிறைய குளங்களை அமைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. முன்னால் இருந்த ஜமீன்தார் ஆட்சிக்காலத்தில் குளங்கள் எல்லாம் தூர் எடுக்காமல் அப்படியே தூர்ந்துபோய்விட்டன. உள்ளே இருந்த இடங்களைச் சிலர் பட்டாவாக மாற்றியிருக்கிறார்கள். நீர்பிடிப்பு உள்ள இடங்களில் புதிதாக பட்டா வழங்கியவர்கள் நல்லபடியாக இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. நன்செய் நிலத்தை நன்செய் நிலமாக வைத்துக்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கை விட்டிருந்தார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2 குளங்கள் தூர் எடுத்து, திருத்தியமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பழைய குளங்களை தூர் எடுத்துப்புதுப்பித்துத் தரவேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது. ஜமீந்தார் காலத்தில் தூர்ந்துபோன குளங்கள் தூர் எடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசினருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நாகலாபுரம், நெடுங்குளம், கன்னிமார்க் குளம், குளத்தூர், ஆவுடையார் குளம் ஆகிய குளங்களையும் உடனடியாக ஆய்வுக்கு எடுத்து அந்தப் பகுதியில் பாசன வசதியை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமப் பணித் திட்டங்கள் மூலமாகக் கிராமங்களுக்குக் குடிதண்ணீர் விநியோகம் செய்வதை ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகச் செய்து கொடுத்திருக்கிறார்கள். 1965-ம் ஆண்டு என் பகுதியில் குடிதண்ணீர் திட்டத்தை நல்ல முறையில் செய்வதற்கு பொதுவழித் துறையிலிருந்து தனியாக ஓர் இலாகாவை ஏற்படுத்தி ஆய்வு செய்திருக்கிறார்கள். Special rural water supply investigation division for water difficulty and scarcity areas என்ற ஒரு டிவிஷனை ஏற்படுத்தி, பல பகுதிகளில் ஆய்வு செய்து, பல திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு இருக்கின்றன அவை எந்த நிலையில் இருக்கின்றன என்பது தெரியவில்லை. குடிதண்ணீர் திட்டத்தை துரித முறையில் நடத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் பஞ்சப் பாட்டைப்பாடுகிறார்கள். நான் கூடுமானவரையில் அதைப் பாட வேண்டாமென்று நினைத்தேன். எல்லோரும் பஞ்சப் பாட்டு பாடும்போது, நானும் அந்த முறையிலே சில விஷயங்களைச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். முக்கியமாக இர்ரிகேஷன் விஷயமாக ஒரு வார்த்தை, எங்கள் திருநெல்வேலி ஜில்லாவிலே ஒரு அணைக்கட்டு வேலை நடக்கிறது. அது இன்னும் நாலைந்து வருஷங்களுக்கு இழுத்துக் கொண்டு போகுமோ என்று பயப்படுகிறேன். 8 கோடி, 10 கோடி ரூபாய்க்குத் திட்டங்கள் இருந்தால் ஐந்து வருஷ காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் ஒதுக்கிக் கொடுப்பது நல்லது. 1¼ கோடி ரூபாய் அளவில் திட்டம் போட்டு ஒரு மூன்று வருஷ காலத்தில் வேலையை முடித்துவிடுவது நல்லது. இந்த வருஷம் கடானா நதிக்கு 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டத்திற்குக்கூட 25 லட்சம் ரூபாய் ஒதுக்க முடியுமா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும்.



1969 மார்ச் 17] [திரு. டி. எஸ். ஆதிமூலம்]

அதேபோல் ராமநதித் திட்டத்திற்குக் கொடுக்க வேண்டும். இந்தத் திட்டங்கள் எல்லாம் இருபது வருஷங்களாகப் பரிசீலனையில இருந்து வருபவை. இவைகளைச் சீக்கிரமாக நிறைவேற்றினால், நாட்டு மக்களுக்கு தண்ணீர் வசதி கிடைத்து, நாட்டில் செழிப்பு ஏற்படும்.

மணிமுத்தாறு திட்டம் இருக்கிறது. அது முக்கியமான அணைக்கட்டுத் திட்டம். இது சென்ற காங்கிரஸ் அரசாங்கத்தில் கட்டி முடிக்கப்பட்டது இதை எப்போதுமே தாமிரபரணி டெல்டா சிஸ்டத்திற்கு ஒரு உப கிரகம் மாதிரி தயார் செய்து வைத்திருக்கிறார்கள். தஞ்சை, திருச்சிராப்பள்ளி ஜில்லாக்கள் மாதிரி அடுத்த நீர்ப்பாசனத் திட்டமாக இருப்பது தாமிரபரணித் திட்டமாகும். இதில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்கும் பாதுகாப்பிற்கும் 500 மிலியன் கனஅடி தண்ணீரை எப்போதுமே மணிமுத்தாறு திட்டத்தில் வைக்கவேண்டும்.

அடுத்து, கார் சாகுபடி ரொம்ப முக்கியம். அதில் அதிக மேனி கிடைக்கும். இந்தப் பயிருக்கு ஜூன் மாதத்தில் தண்ணீர் கொடுப்பது தவறிப் போய்விடுகிறது. அரசாங்கம்தான் என்ன செய்யும்? கடவுள் தான் என்ன செய்வார்? நீர்ப்பாசன இலாகாவானது முன்னெச்சரிக்கையோடு கவனத்தில் வைத்துக் கொண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி தண்ணீர் திறந்துவிட்டால் கார் சாகுபடியில் நல்ல மகசூல் கிடைக்கும். அதிலே அரசாங்கம் தன் கவனத்தைச் செலுத்தவேண்டும்.

'எக்ஸ்பிளாய்ட்' பண்ணி, 'எக்ஸ்பிளாய்ட்' பண்ணி எல்லா வேலைகளையும் முடித்துவிட்டோம், வேலை ஒன்றும் பாக்கி இல்லை என்று இருபது வருட காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது வழக்கமான பல்லவி, இன்னும் எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. சர். சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் போட்ட திட்டம் இருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்யும் மழை மேற்கே ஓடி, அரபிக் கடலில் கலந்து, தண்ணீர் வீணாகிவிடுகிறது, என்று பெரிய பெரிய திட்டங்களையெல்லாம் மேதாவிகள் சொல்லியிருக்கிறார்கள். நான் அந்த மேதாவித்தனத்தில் சொல்லாவிட்டாலும், விவசாய உற்பத்தியை உத்தேசித்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

பச்சையாறு திட்டம் என்று ஒன்று இருக்கிறது. நல்ல முறையில் இதை ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வேலை செய்தால் வறட்சிப் பகுதியிலுள்ள சுமார் முப்பது, நாற்பது கிராமங்களுக்கு ஜீவாதாரமாக இது விளங்கும் என்று கருதுகிறேன். குளங்களை ஆழப்படுத்துவது என்பது முப்பது வருட காலமாக காங்கிரஸ் அரசாங்கத்தில் இருக்கிறது. அதோடு புதிய குளங்களையும் வெட்ட வேண்டும்.

இர்ரிகேஷன் சம்பந்தமாகச் சொன்னதோடு, ரோடு சம்பந்தமாகச் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். கிராம வேலைகள் ரொம்பவும் புறக்கணிக்கப்படுகின்றன. கொடுத்திருக்கும் அறிக்கையின் 28-வது பக்கத்தைப் பாருங்கள்.

1967-68-ம் ஆண்டுக்கான திட்டங்களுக்கு சுமார் 271 லட்சம் ரூபாயும் 1968-69-ம் ஆண்டுக்கான திட்டங்களுக்கு 211 லட்சமும் செலவிடப்பட்டிருக்கிறது, 1968-69-ம் ஆண்டில் தொகை குறைந்திருக்கிறது. மேலும், 1969-70-ம் ஆண்டுக்கான தொகை 247 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 1967-68-ல் கிராமப் பணித் திட்டங்கள், ரோடு, மற்ற வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட 271 சொச்சம் லட்சம் ரூபாய் கூட இந்த வருடத்திற்கு ஒதுக்கப்படவில்லை. 1967-68-ம் ஆண்டின் தொகையைவிட இந்த ஆண்டு தொகை குறைந்திருக்கிறது. 1967-68 ஆண்டு பட்ஜெட் 200 கோடி, இந்த ஆண்டு 210 கோடி ரூபாய். சர்க்காருக்கு இவ்வளவு பெரிய வருவாய்கள் இருந்து, பட்ஜெட் பெரிய முறையில் இருந்தாலும் கிராமாந்திர வேலைகளுக்குத் தொகை ஒதுக்கீடு மிகவும் குறைவாக இருக்கிறது. சுமார் 20 கோடி ரூபாய் பல

டாக்ஸ் வருமானம் கிடைக்கிறது. 'சென்ட்ரல் ரோடு கிராண்ட்' என்று சொல்லக்கூடிய பெட்ரோல் மோபைல் ஆயில் முன்னாளில் எல்லாம் 2 கோடி ரூபாய்தான என்றால், இப்போது செஸ் வருமானங்கள் கிட்டத் தட்ட 6 கோடி, 7 கோடி என்ற அளவில் இருக்கிறது. ஆகவே, கிராமாந்திர ரோடு வேலைகளுக்கு ரொம்ப தொகையை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாப்பாங்குடி பஞ்சாயத்து யூனியன் என்ற ஒரு பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது. 1950-லே நான் அதில் பிரசிடெண்ட்டாக இருக்கும் போது ஒரு ரோடு போட்டேன். போட்டேன் என்றால் நானே போட வில்லை, போடும்படியான வேலையைத் துவக்கி வைத்தேன். 1950-லே போட்ட ரோடு அவ்வளவுதான். அதற்குமேலே அந்த ரோடைச் செம்மைப் படுத்திச் சீர் செய்ய நாதியே இல்லை. ரோடு எல்லாம் அழிந்துபோய் விட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. சீக்கிரம் பேச்சை முடித்துக்கொள்ளவேண்டும்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** அந்த ரோடை மராமத்து செய்து கொடுக்க வேண்டும். அதை மராமத்துச் செய்ய குறைந்தது 30 ஆயிரம் ரூபாய் தேவைப்படும் என்று சொல்கிறார்கள். அரசினர் அதைச் செய்து கொடுக்க வேண்டும்.

பல சில்லறைப் பாலங்கள் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதி களிலும் இருக்கின்றன. நீங்கள் அதைச் செம்மைப்படுத்திச் சீர் செய்து தர வேண்டும். 1968-69-ல் 300 மைல் தூரமுள்ள ரோடை நேஷனல் ஹைவேஸ்க்கு எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். நமது ராஜ்யத்தில் 14 மாவட்டங்கள் இருக்கின்றன. 300 மைலை 14-ஆல் வகுத் தால் எவ்வளவு வரும்? கணக்கு என்ன வருகிறது? பேரவைத் தலைவர் அவர்களும் துரிதமாக உரையை முடிக்க வேண்டும் என்கிறார்.

திருநெல்வேலியில் ரயில்வே மேம்பாலம் ஒன்று இருக்கிறது. இதைப் பற்றி சீஃப் இன்ஜினியரிடம் பேசியிருக்கிறேன். "ஆதிமூலம் நீங்கள் சொல்வது தப்பு" என்று சொன்னார்கள். அந்தப் பாலம் கட்டுவதால் ஊர் அமுங்கிப் போய்விடும். இந்த மேம்பாலம் கட்டுவதன் மூலம் திருநெல்வேலி சமுத்திரத்தில் ஆழ்ந்துவிட்டதுபோல் தோன்றும் என்று கூறினேன்.

ஆகவேதான் நான் சொல்கிறேன். வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள், அதனால் சொல்கிறேன் என்றல்ல. நான் வியாபாரிகளுக்காகச் சொல்ல வில்லை. அவர்கள் என்ன எனக்கு நூறு ரூபாய் தருகிறார்களா? இப்போது பாலம் அமைக்க உத்தேசித்திருக்கிற இடத்திற்குப் பரர்லெலாக ஒரு ரோடை ஒதுக்கி அந்த இடத்திலே பாலத்தை அமைத்தால் திருநெல்வேலி நகர மக்களது வாழ்க்கை பாதிக்கப்படாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஆனால் அதற்குச் சொல் கிறார்கள்—இந்த இடத்தில் பாலம் அமைக்க 35 லட்சம் ஆகும் என்றால் அந்த இடத்திற்கு 47 லட்சம் ஆகும் என்கிறார்கள். பண மதிப்பு இழந்திருக்கும் இந்தக் காலத்தில் 12 லட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவு ஆவதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** திருநெல்வேலியில் பாலம் அமைப்பது சம்பந்தமாக சர்வகட்சிக்காரர்களும் கூட—சுதந்திராக் கட்சிக் காரர்களும் சேர்ந்தே இந்த இடத்தில்தான் அமைக்க வேண்டும் என்ப தாகத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். டெவலப்மெண்டு கவுன்சிலிலும் இந்த இடத்திலதான் பாலம் அமைக்க வேண்டும் என்று தீர்மானம்





போட்டிருக்கிறார்கள் என்பதான தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே, திரு. ஆதிமூலம் தம்முடைய சொந்தக் கருத்தை இங்கே தெரிவித்துக்கொள்ளுகிறாரா அல்லது அவர்களுடைய கட்சிக் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறாரா என்று கேட்கிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** கட்சிக் கருத்தாகச் சொல்லவில்லை. என்னுடைய தனிப்பட்ட அபிப்பிராயம். நான் சொல்கிற கருத்தில் உள்ள உண்மையை திரு. ஏ. எல். சுப்பிரமணியம் அவர்களும் உணர் வார்கள். ஆனால் இன்னொரு இடத்தில் அமைப்பது என்றால்—உடனே அதற்கு எஸ்டிமேட் தயாரிப்பது, அது சம்பந்தப்பட்ட பூர்வாங்க காரியங் களைச் செய்ய தாமதம் ஆகிவிடுமே, நம்ம காலத்திலேயே வரவேண்டும், வேறு இடம் என்றால் நம்ம பீரியட் முடிந்துவிடப் போகிறதே என்ப தாகத்தான் எண்ணி இந்த இடத்திலேயே இருக்கட்டும் என்கிறார். (சிரிப்பு) ஆகவே, நான் சொன்ன யோசனையையும் கொஞ்சம் கவனியுங்கள் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக டிப்ளமா ஹோல்டர்சுக்கு, பி.இ. பட்டதாரிகளுக்குச் சலுகை காட்ட வேண்டும் என்பதற்காக எடுத்துவிடுவதாகத் தெரிகிறது. ஆகவே இருக்கப்பட்டவர்களையாவது வீட்டுக்குப் போகச்சொல்லாத நிலைமையில் இதுபற்றி கவனமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வணக்கத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. எம். வில்லியம்:** சபாநாயகர் அவர்களே, குமரி மாவட்டத்தில் சித்தாறு-பட்டணங்கால் திட்டம் 1969 ஜூன் முதல் பயன் அளிக்கத் தொடங்கும் நிலையில் வேலைகள் முடிந்துவிடும் என்பதாக அமைச்சர் அவர்களுடைய ஆய்வு உரையில் கூறியிருக்கிறார்கள். அவ்வண்ணம் முடிந்துவிடுமானால் மகிழ்ச்சி அடைவோம். ஆனால் இன்னும் சித்தாறு-1 மண் அணை கட்டும் வேலை முடியவில்லை. அதேபோல கால்வாய் வேலையும் முடிவடையவில்லை. அந்த வேலைகளைத் துரிதமாக முடித்து சித்தாறு-பட்டணங்கால் திட்டத்தை பயன் அளிக்கச் செய்ய வேண்டும். 1969 ஜூனுக்குள் அதை முடித்துக் கொடுத்தால் நிச்சயமாக அனைவரும் வரவேற்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். ஆகவே பட்டணங்கால் வேலையை மிகவும் தீவிரமாக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது, நொய்யாறு-இடகரை சானல் வேலையைப் பற்றி ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுபோல நொய்யாறு-இடகரை சானல் வேலை நல்ல முறையில் சீரமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். அடிக்கடி கால்வாயில் உடைப்புகள் ஏற்படுகின்றன. மழைக் காலங்களில் மழைத் தண்ணீர் கால்வாயில் வந்து சேர்ந்து கால்வாய் தூர்ந்து போகிறது. அதனால் விவசாயம் செய்கின்ற மக்கள் பாதிக்கப் படுகின்றார்கள். இம்முறையை மாற்றி, கரைகளை உறுதிப்படுத்தி, மழைத் தண்ணீர் வந்து கலக்காதவாறு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். வில்லியம்] [1969 மார்ச் 17]

அடுத்து இரண்டு முக்கியமான பாலங்கள் குழித்துறை ஆற்றில் கட்டப்பட வேண்டும். அவை இரண்டாவது திட்ட காலத்திலேயே சேர்க்கப்பட்டவை. கணபதியான் கடவிலும் பெருதுவிளக்கடவிலும் பாலங்களுக்கும் எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருந்தது. அவைகளை ஆராய்ந்து நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. கே. ஆண்டி என்ற குருசாமி**: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள பாசனவசதி, சாலை வளர்ச்சி, கட்டிட அமைப்பு, சிறு துறைமுக வளர்ச்சி முதலிய மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய திருவில்லிபுத்தூர் தொகுதியிலுள்ள சில பிரச்னைகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் ஏற்கனவே பின்தங்கிய மாவட்டம். அதிலும் குறிப்பாக மேற்கு இராமநாதபுரம் மாவட்டம்; வடகிழக்குப் பருவ மழையை நம்பிதான் வாழ்கின்ற மாவட்டம். ஆனால் அங்கு ஒரு பாகம் நல்ல விளைச்சல், ஒரு பாகம் குடி தண்ணீர் இல்லாமல் சங்கடப்படக்கூடிய நிலை இருந்து வருகின்றது. ஆகவே, 18 வருட ஆட்சியில் பிளவுக்கல் அணை என்ற ஒரு திட்டம் தீட்டி எந்த ஒரு பயனுமடையாமல் இப்போது 74 லட்சம் ரூபாய் மதிப்பில் பெரியாறு, கோயிலார் என்கிற ஒரு அணைத் திட்டம் தீட்டி எல்லாப் பொறியியலார் பார்வை, மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வை எல்லா முடிந்து அதனுடைய அங்கீகார ஒப்புதல் இன்றைய தினம் அரசினர் பார்வையில் இருக்கின்றன. ஆனால், இன்றைய அரசு இந்த அணைத் திட்டத்தை நிறைவேற்றினால் 15 ஆயிரம் ஏக்கர் இருபோக சாகுபடியாகும் என்கிற மனநிறைவோடு கூறிக்கொண்டு மேலும் இப்படி மழை இல்லாமல் போனால் இதன் மேற்கு பாகத்தில் ஒரு சிறு மலையைக் குடைந்து அதற்கு மேற்கே சாதாரணமாக பதினேழு, பதினெட்டு மைல் தூரம் கால்வாய் வெட்டினால் பம்பை ஆற்று நீர் கொண்டு வருவதற்கு ஏதுவாக இருக்கும். இதன் பயனாக அந்த ஏரியாவில் உள்ள பொது சனங்கள் குறை தீரும். மேலும் ஐம்பது, அறுபதாயிரம் ஏக்கரா நன்செய் நிலங்களாக மாறும். நல்ல விளைச்சல் தரக்கூடியதாக அமையும்.

அருகாமையில் உள்ள கல்லணை ஆறு; இது பஸ், வண்டி முதலியன போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும் இருக்கிறது. அதில் ஒரு பாலம் கட்டுவதற்குப் பொறியாளர் பார்வையிட்டு அது சம்பந்தப்பட்ட பேப்பரும் அரசு ஒப்புதல் பெற வந்திருக்கிறது. கல்லணை ஆற்றில் ஒரு பாலம் கட்டினால் வத்திராயிருப்பு, மகாராஜபுரம் வழியாக மதுரை போக வசதியாக இருக்கும் என்பதைக் கூறிக்கொண்டு, மேலும் பல கிராமங்களுக்கு ரோடு போக்குவரத்து இல்லாமல் இருந்து வருகின்றன. இதையும் துரிதப்படுத்தி அந்த ஏரியாவில் உள்ள மக்களுக்குச் சாலைப் போக்குவரத்து வசதியை அளிக்க வேண்டும்.

மேலும் அந்த ஏரியாவில் உள்ள கண்மாய், ஏரிகள் பல காலமாக தூர் எடுக்காமல் இருந்து வருகின்றன. ஆதலால் இந்தக் கண்மாய்களை மராமத்து செய்யும் வேலையைப் பூர்த்தி செய்தால் விவசாயத்திற்கும் ஏதுவாக இருக்கும் என்பதைக் கூறிக்கொண்டு, மேலும் அந்த ஏரியாவில் விளைச்சல் இல்லாத காரணத்தால் அங்கு உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு—பஞ்சத்தைப் போக்க ஏதுவாக இருக்கும் என்பதைக் கூறிக் கொண்டு என் வணக்கத்தைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.



1969 மார்ச் 17] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

1965-ஆம் வருடம் நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்தவரும் முன்னாள் மத்திய உணவு அமைச்சராக இருந்தவரும் ஆகிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அமெரிக்காவுக்கு ஒரு கோடி டன் தானியத்தை வாங்குவதற்குச் சென்றிருந்தார்கள். அங்கே இருக்கும்படியான நிபுணர்கள் எல்லாம் நாட்டினுடைய சுபீட்சத்திற்கு என்ன தேவை என்று சொல்லும் சமயத்திலே, ஒரே ஒரு வார்த்தையைச் சொன்னதாகவும் அந்த வார்த்தையிலே எவ்வளவு உண்மை பொதிந்து இருக்கிறது என்பதையும் நான் சென்ற சமயத்திலே அவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஆங்கிலத்திலே வாட்டர் என்று சொன்னார்கள். வாட்டர் என்றால் நீர், அதாவது தண்ணீர். தண்ணீர் கிடைத்துவிட்டால் நாம் அதை எந்த அளவுக்குச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்கிறோமோ அதைப்பொறுத்துத்தான் நாட்டில் சுபீட்சம் இருக்கிறது என்ற நிலையிலே கூறினார்கள்.

மழை வந்தால் தண்ணீர், மழையில்லாவிட்டால் எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்பதை இந்தச் சர்க்காரே வர வர உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். இதிலே அதிகமாக காங்கிரஸ் கட்சியைத் திட்டவில்லை என்று நினைக்கிறேன். வழக்கமாகத் திட்டுவார்கள். நாங்கள் அணைகளைக் கட்டவில்லை என்று சொல்ல முடியுமா? இரண்டு ஆண்டு காலமாகிறது, அதிகமாகப் பண்ணிக் கொடுக்கிறோம் என்று சொன்னீர்கள். அவர்களும் ஓரளவுக்குச் செய்துதான் தீரவேண்டும். அது சர்க்காருடைய கடமை. நாங்கள் செய்யவில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

இன்னொன்று வேண்டுமானால் செய்யலாம். முன்னால் போட்டிருக்கின்ற கற்களையெல்லாம் எடுத்துவிட்டு வேறு கற்களைப்போட்டு மந்திரிகளுடைய பெயர்களைப் போட்டுக்கொள்ளலாம். அது வேண்டுமானால் செய்யலாம். (குறுக்கீடு) அது உங்கள் வேலை என்று சொல்கிறார்கள். எங்கள் வேலை இல்லை. நீங்கள்தான் அப்படிச் செய்துகொண்டிருக்கிறீர்கள். நம்முடைய எஞ்சினியர்கள் எல்லாம் 100-க்கு 80 சதவீதம் பாசனங்களைச் செய்து கொடுக்கின்ற நிலையிலே உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள். வடக்கே உள்ள கோசி ப்ராஜக்டுக்குக்கூட நம்முடைய எஞ்சினியர்கள் உதவி செய்து இருக்கிறார்கள். அப்படி உயர்ந்தவர்கள் எல்லாம் இந்தத் துறையிலே இருக்கிறார்கள். வெறும் திட்டம் இருக்கிறது, மத்திய சர்க்கார் பணம் கொடுக்கவில்லை என்று சொல்ல முடியாது. நீர்ப்பாசன வசதிகளைப் பொறுத்தவரையில் லாபகரமான திட்டமாக இருந்தால், உபயோகமான திட்டமாக அவர்கள் போடுவார்களானால் மக்களுக்கு ரொம்பவும் பிரயோஜனப்படும்.

நாம் தமிழ் நாட்டிலே 100-க்கு 97 சதவீதம் தண்ணீரைப் பயன்படுத்திக் கொண்டோம். மத்திய சர்க்காரோடு போராடுவதற்கு அவர்கள் வந்தால் இதிலே என்ன செய்யப் போகிறார்கள்? பாஷைவாரி மாநிலம் பிரிக்கப்பட்டதால் ஆற்றைப் பொறுத்தும்கூட இது எனக்குச் சொந்தம், அது உனக்குச் சொந்தம் என்று வந்துவிட்டது. மேற்கே கேரளாவிலே இருக்கின்ற தண்ணீரை இங்கே கொண்டுவருவார்களானால் தேசீய ஒருமைப்பாடு இரண்டு ராஜ்யங்களுக்கும் இடையே இருக்குமானால் நல்லது.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 மார்ச் 17

என்று சொல்லிக் கொண்டு வந்தீர்களே, நீங்கள் ஏன் செய்யவில்லை? செய்யுங்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடு) இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் நீங்கள் என்ன சொன்னீர்கள்? எதிர்க் கட்சித் தலைவர் ஆலோசனை என்ன சொன்னார்கள் என்று கேட்பார்கள். எனவே, கிருஷ்ணா நதித் தண்ணீரைக் கொண்டுவர முயற்சிகள் நீங்கள் எடுத்துக் கொள்ளவேண்டும். (குறுக்கீடு) துண்டு என்றால் என்ன செய்யமுடியும்? நான் வாங்கிக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

இந்த இரண்டு வருஷங்களிலே காவிரியில் தண்ணீர் குறைந்துகொண்டே வருகிறது. எனக்கு இருக்கும்படியான விவசாய அனுபவத்தின்படி நான் சொல்கிறேன். முன்னாலே எல்லாம் தண்ணீரை வீணாக்கிக் கொண்டிருக்கின்ற நிலைமை எல்லாம் இருந்தது. 45 கியூசெக்ஸ் பீட் வாட்டர் பிரயோஜனப் படுத்த வேண்டிய இடத்தில் தஞ்சாவூரில் 200 க்யூசெக்ஸ் பீட் தண்ணீரைப் பயன்படுத்தினார்கள். தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தினால் உற்பத்தியும் பெருகும்; நவீன காலத்திலே பலருக்கும் பயன்படும். எங்களுடைய ஊரிலே ஒரு போகமாக இருந்தது; இப்பொழுது அதே தண்ணீரை வைத்துக்கொண்டே இரண்டு போகமாகச் செய்து உற்பத்தியைப் பெருக்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறோம்.

வரப்பு நிறையத் தண்ணீர் நிறுத்தினால்தான் வயல் என்று சொன்ன காலம் போய்விட்டது. இப்பொழுது தண்ணீரை நிரப்பிவிட்டு மீண்டும் காய்ந்து வடிந்துவிடக் கூடிய நிலைமைதான் ஜப்பான் போன்ற நாடுகளிலே கூட செய்யப்படுகிறது. வாய்க்கால் வசதி சரியாக இல்லாததாலும் தண்ணீர் வசதி கிடைக்கவில்லை. மத்திய அரசாங்கத்திலே இதற்காக வடிமுனைக் கிணறுகள் வெட்டுவதற்குத் திட்டம் போட்டிருக்கிறார்கள், அது செயல்படுத்தப்படுகிறது என்று நினைக்கிறேன். வாய்க்கால்களை நல்ல முறையில் போடுவதற்கு உடனடியாகத் திட்டம் போட்டு வேலை செய்தால் தண்ணீர் மிச்சப்படுத்த முடியும்.

தண்ணீர் எந்த எந்த இடங்களிலே இருக்கின்றது என்பதையும் எஞ்சினியர்கள் கண்டுபிடிக்க வேண்டும். எந்த எந்த இடத்தைப் பிரயோஜனப்படுத்தலாம் என்று நிபுணர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டும். இதிலே அரசியல் குறுக்கிடக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். சில பேர்கள் அங்கு தண்ணீர் இருக்கிறது, இங்கு தண்ணீர் இருக்கிறது, எங்களுக்குக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஏற்கனவே கொடுத்து வருகிற தண்ணீரை நல்ல முறையில் கொடுக்க வேண்டும், அதை நல்ல முறையிலே பயனபடுத்தச் செய்யவேண்டும். கோயம்புத்தூர் ஜில்லாவைப் பொறுத்தவரையில் நான் ஏதோ எதிர்ப்பதாகச் சொன்னார்கள்.

நான் உண்மையைச் சொல்வதற்குப் பயப்படவே மாட்டேன். கழிவு நீரா அல்லது உபரி நீரா என்பதுதான் கேள்வி. உபரி நீரை நாங்கள் ஏன் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது என்று கேட்கிறார்கள். குந்தா முன்னால் மலை மேல் ஓடியது. இப்பொழுது குழாய் வழியாக வருகிறது. இதை எஞ்சினியர்கள் நன்றாக விளக்க வேண்டும். கேரளத்திலிருந்து வரும்படியான தண்ணீர் அல்ல. ஏற்கனவே இருக்கின்ற தண்ணீரை அணைகட்டி இப்பொழுது குழாய் மூலமாகக் கொடுக்கிறார்கள். எனவே உபரித் தண்ணீர் கிடையாது. பழைய பாசனப் பகுதிகளுக்கே கீழ்ப்பவானித் தண்ணீர் போதுமானதாக இல்லை. இரண்டு ஷிப்டு எல்லாம் இல்லை. இதிலே நான அரசியல் பண்ணுவதாய் இருந்தால் பண்ணலாம். ஏற்கனவே இருக்கும்படியான பாசனத்திற்குக்கூட தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்படுகின்ற நிலைமையில்....



1969 மார்ச் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுமாதிரியெல்லாம் அவ்வப்பொழுது பதில் சொல்லமுடியாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவர் அவருடைய அபிப்பிராயத்தைச் சொன்னால் பரவாயில்லை, நான் என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்கிறேன்.

இதைப்பற்றியெல்லாம் எஞ்சினியர்கள் சிந்திக்க வேண்டும். கீழ் பவானியில் 1,500 க்யூசெக்ஸ் தண்ணீர் 5 மாதத்திற்கு டிரை கிராப்சுக்கு விடுவது என்று திட்டமிடப்பட்டது. ஆனால் பிறகு நஞ்சைக்கு நான்கு மாதத்திற்கு கொடுப்பதாகத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டது. 2500 கியூசெக்ஸ் தண்ணீர் போகிறது. இதனால் கலிங்கராயன் வாய்க்கால், தடபள்ளி வாய்க்கால், அறக்காட்டு வாய்க்கால நிலைமைகள் பாதிக்கப்படுகின்றன. ஏற்கனவே அனுபவித்து வரக்கூடிய குடியானவனுக்குப் போகத்தான் மிச்சம் என்ற உத்தரவாதம் கொடுக்கப்பட்டது. அந்த நிலை மாறி ஐந்து மாதம் என்பது 8 மாதமாகவும், நஞ்சைக்குக் கிடையாது, புஞ்சைக்கு மட்டுந்தான் என்பது மாறி நஞ்சைக்குக் கொடுக்கவும் பரிட்சார்த்தமாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளை எல்லாம் சமாளிக்க ஆழமான கிணறுகளை வெட்டவேண்டும். 'If the mercy of the Heaven fails. open the bowels of earth to find water'. என்று மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள். ஆயிரம் அடி, ஆயிரத்து ஐநூறு அடி என்ற அளவுக்குக் கூட எட்டு லட்சம், பத்து லட்சம் என்று செலவு செய்துகூட கிணறுகளை வெட்டி மின்சார வாரியத்தின் மூலமாக மின்சாரத்தைக் கொடுத்து அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கிணறாவது அந்த வகையிலே வெட்ட வேண்டும்.

சாலைப் போக்குவரத்தில் மேலும் அதிகமாக வசதிகளைச் செய்ய வேண்டும். நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். ரோடுகள் எல்லாம் முன்னால் இருந்த அளவுக்குத் தற்போது இல்லையென்ற குற்றச்சாட்டு இருக்கிறது. டிவிஷன்களை மாற்றியமைத்திருக்கிறார்கள். அது எவ்வளவு தூரம் வெற்றிகரமாக இருக்கும் என்பது இனிதான் தெரிய வேண்டும். என்னுடைய அனுபவத்தில் பார்க்கும்போது பி. டபிள்யூ. டி. கட்டடங்கள் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. அதற்கு ஒரே ஒரு சான்று, ஆஸ்டல் கட்டியிருக்கிறார்களே, அதைப் பார்த்தாலே போதும். 45 லட்சம் ரூபாய்க்குத் திட்டம் போட்டு 60 லட்சம் ரூபாய் வரை செலவழித்திருக்கிறார்கள். அது பூரணமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது. (திரு. எஸ். முருகையன்: நீங்கள்தான் கட்டினீர்கள்) நாங்கள்தான் கட்டினோம் என்றால் எங்கள் மேல் நடவடிக்கை எடுங்களேன். திறப்பு விழா நீங்கள்தானே பண்ணினீர்கள். எதைச் சொன்னாலும் நீங்கள்தான், நீங்கள்தான் என்று சொன்னால் நடவடிக்கை எடுங்களேன். மறுபடியும் நீங்களே வருவீர்கள், பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லுகிறீர்களா? (திரு. எஸ். முருகையன்: அது முடியாது) அது மக்கள் தீர்மானம் செய்ய வேண்டிய விஷயம்.

முதலமைச்சர் அவர்கள் முன்பு பி. டபிள்யூ. டி. பொறுப்பை ஏற்றிருந்தார்கள். அப்போது எஞ்சினியர்கள், சூப்பர்வைசர்கள் எல்லாம் வேலையிலிருந்து நீக்கப்படுவதாகச் சொல்லப்பட்டது. ஆயிரக் கணக்கான பேரை எடுத்து விட்டதாகச் சொல்லபபடுகிறது. அதைப் பற்றிக் கேட்கப் பட்டபோது, அவர்கள் எல்லாம் வேலைக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட தாகச் சொல்லப்படுகிறது. இன்னும் கூட 300 பேருக்கு மேற்பட்டவர்களை எடுத்துக் கொள்ளாத நிலை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவை யெல்லாம் அவர்களுடைய நிலையற்ற போக்கைக் காட்டுகிறது. யாராக இருந்தாலும் அவர்களை வேலையிலிருந்து நீக்காமல் அதிகமாக வேலை வாங்கும் அளவுக்குத் திட்டத்தைப் போட வேண்டும். இவர்களை எல்லாம் வேலையிலிருந்து நீக்காது தகுதிக்குத் தக்கபடி டிப்ளோமா ஹோல்டர்சை எல்லாம் கூட வேலையில் வைத்துக் கொண்டால்தான் திட்டங்களை வெற்றி காமாகச் செய்யமுடியும்.

இதுவரை பொதுவான விஷயங்களைப் பற்றிக் கூறினேன். தற்போது என்னுடைய தொகுதியைப் பற்றிச் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே ஒரு வாய்க்கால் வெட்ட ஆரம்பிக்கப்பட்டு, அது நிறுத்தப்பட்டு, மீண்டும் ஆரம்பித்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அந்த வேலையை நிறுத்திய பெருமை அவர்களுக்கு உண்டு. அதை மீண்டும் ஆரம்பித்ததற்காக என்னுடைய நன்றி. இதை முதலிலேயே செய்திருந் தால் 2000 டன் அளவுக்கு உற்பத்தி ஏற்பட்டிருக்கும். செய்ய வேண்டிய சமயத்தில் செய்யாத காரணத்தால் 2,000 டன் நஷ்டமாகியிருக்கிறது, தாளவாடி பிர்க்கா பிற்போக்கான பிர்க்கா. மலைமேல் இருக்கிறது, அங்கு குளம் குட்டைகளுக்கான திட்டத்தைப் போட வேண்டும். குன்றி பள்ளம் என்ற ஒரு இடம் இருக்கிறது, அங்கு ஒரு திட்டத்திற்கு 20, 25 லட்சம் ரூபாய் செலவாகும் என்று எஞ்சினியர்கள் மதிப்பிட்டு அனுப்பி யிருக்கிறார்கள், அதை நிறைவேற்றுவதன் மூலம் ஆயிரம் ஏக்கருக்குமேல் பாசன வசதி பெற முடியும்.

நெடுஞ்சாலைத் துறையினர் கீழே மட்டும் ரோடு போட்டுப் பயன் இல்லை, மலைப் பிரதேசங்களிலும் ரோடுகளைச் செப்பனிட்டு நல்ல முறையில் போட வேண்டும். கம்மநாயக்கன்பாளையம்-புத்தியாத்தூருக்கு இடையே ஃபாரஸ்ட் ரோடு இருக்கிறது. மூங்கில் காடுகள் சூழ்ந்த இடம், பத்தாயிரம் ஜனத் தொகை இருக்கிறது, அந்த ரோடை நல்ல முறையில் போட்டுக் கொடுக்க வேண்டும். தாளவாடி—திம்பம் பஸ் ரூட் இருக்கிறது, அந்த ரோடை நல்ல முறையில் போட வேண்டும். லோயர் பவானி பகுதியில் கூத்தா மங்கலம்—சத்தியமங்கலம் ரோடு ஹைவேசில் இருந்தது.

இந்த மானியத்தின் மீதுள்ள பிரச்சனைகள் ஒவ்வொரு அங்கத்தின ருக்கும் உள்ள பிரச்சனைகளாகும். அவற்றை யெல்லாம் செய்யவேண்டு மென்றால் குறிப்புகள் கொடுக்க வேண்டும். ராயப்பா கமிட்டி என்று போட்டோம், நூறு கோடி ரூபாய் அளவிற்குத் திட்டங்கள் போட்டிருக் கிறோம் பார்த்தீர்களா என்றார்கள். அந்தத் திட்டங்கள் என்னவாயிற்று என்று தெரியவில்லை. நூறு கோடி ரூபாய்க்குத் திட்டம் மட்டும் போட்டு பிரயோஜனமில்லை. அப்படி திட்டம்போட்டு விட்டு ஐநூறு பேர்களை வெளியே அனுப்பினால் மக்கள் என்ன நினைப்பார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். நூறு கோடி ரூபாய் அளவிற்குத் திட்டம் போடுவது என்றால் எவ்வளவு என்ஜினியர்கள் வேண்டும், எவ்வளவு சூப்பர்வைசர் கள் வேண்டும் என்று பார்க்க வேண்டும்.

ஒரு பக்கத்தில் சிக்கன நடவடிக்கைகள் பற்றிச் சொல்கிறார்கள். அதே சமயத்தில் பாருங்கள் எங்கள் திட்டத்தை என்றும் சொல்கிறீர்கள். இதுதான் எனக்குப் புரியவில்லை. பைத்தியம் தெளிந்தால் கல்யாணம், கல்யாணம் ஆனால் பைத்தியம் தெளியும் என்ற நிலையில்தானே இருக்கிறது. ஒரு பக்கத்தில் சிக்கன நடவடிக்கைகள் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள், இன்னொரு பக்கத்தில், பாருங்கள் எங்கள் திட்டங் களை என்று சொல்கிறீர்கள். என்ஜினியரிங் டிபார்ட்மெண்டில் சிக்கன





சிமெண்டும் போட்டுத்தான் ஆகவேண்டும். எவ்வளவு இரும்பு போட வேண்டுமோ அவ்வளவையும் போட்டுத்தான் ஆகவேண்டும். அஸ்தி வாரம் எவ்வளவு போடவேண்டுமோ அந்தளவிற்குப் போட்டுத்தானாக வேண்டும். ஆகவே இதில் சிக்கன நடவடிக்கைகள் எடுப்பது என்பது ஆபத் தாகும். உற்பத்தியைப் பெருக்குவதில் ஆகும் செலவும் சிக்கனமாக இருக்கவேண்டும். வனங்களை உபயோகிக்கும் விஷயத்தில் சிக்கனமாக இருக்கவேண்டும். திட்டங்கள் வெறும் திட்டங்களாகப் போகக்கூடாது. திட்டம் என்பது வெறும் காகிதத்தில் உள்ள திட்டமாக மட்டும் இருக்கக் கூடாது. திட்டங்களை நன்கு நிறைவேற்ற வேண்டுமானால் அது சம்பந்தப் பட்டவர்களிடம் பொறுப்பை பூர்ணமாக ஒப்படைக்க வேண்டும். பொறுப்பை பூர்ணமாக சம்பந்தபபட்டவர்களிடம் கொடுக்கவேண்டும். அதில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது. சம்பந்தப்பட்டவர்களிடம் பூர்ண பொறுப்பைக் கொடுத்துவிட்டு அது நிறைவேற்றப்படவில்லை என்றால அதற்கு மேல் நடவடிக்கைகள் எடுக்கும் சக்திதான் நம்மிடம் இருக்க வேண்டும் ஆகவே திட்டங்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட தக்க நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும். திட்டங்கள் வேகமாக நடத்தப்படவேண்டும். நம் நாட்டில் எங்கெங்கு ஆறுகள் அதிகமாக ஓடுகின்றனவோ!! அவைகளை இணைக்க ஒரு மனதான திட்டத்தைக் கொண்டு வரவேண்டும். கிருஷ்ணா, வெண்ணாறு திட்டங்களின் நிலையை இப்போதாவது உணர்ந்து மேற்கே போகும ஆறுகளைக் கிழக்கே கொண்டு வருவதற்கு வேண்டிய திட்டங்களை நம் முதல் அமைச்சர் அவர்களும் கேரள முதல் அமைச்சர் அவர்களும் சேர்ந்து கொண்டு வருவார்களேயானால் நாங்கள் அதற்கு உறுதுணையாக நிற்கத் தயார். இது மக்கள் பிரச்னை. இது அரசியல் கட்சிப் பிரச்னை அல்ல. யார் வேண்டுமானாலும் வரலாம், யார் வேண்டுமானாலும் போகலாம். இவையெல்லாம் மக்கள் பிரச்னை. ஆகவே மக்கள் பிரச்னைகளை மனதில் கொண்டு வேண்டியதைச் செய்ய வேண்டும் என்று கூறி எங்கள் வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்ற கனம் உறுப்பினர்களும் நல்ல பல கருத்துக்களைச் சொன்னார்கள். மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் ஏழாவது நாள் நடக்கிறது கடந்த ஆறு தினங்களில நடைபெற்ற விவாதங்களில் சூடு இருந்தது, ஆனால் அந்தச் சூடு இல்லாமல் இன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் கருத்துக்களைக் கூறியதிற் காக அவர்களுக்கு நான் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளேன். நீர்ப் பாசனத் துறை என்ற காரணத்தினால் ஒரு வேளை குளிர்ச்சியோடு ஆற அமர கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நல்ல பல கருத்துக்களை உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எல்லாக் கருத்துக்களும் நாட்டின் முன்னேற்றத்திற்காகச் சொல்லப்பட்ட கருத்துக்களாகத்தான் நான் கருதுகிறேன். இங்கு பல கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டாலும் அரசாங்கக் கொள்கையைப் பொறுத்த வரையில் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோ அல்லது மற்ற எதிர்க்கட்சி நண்பர்களோ எந்தவிதமான குறைபாடும் சொன்னதாகத் தெரியவில்லை.

பொதுவாக, நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்த வரையிலும் நெடுஞ் சாலைத் துறையைப் பொறுமத வரையிலும் அரசாங்கம் கொண்டிருக்கிற கொள்கையை இந்த மன்றம் ஆதரிப்பதாகத்தான் நான் கருதுகிறேன். இங்கு சொல்லப்பட்ட கருத்துக்களில் ஒவ்வொருவரும் தங்கள் தொகுதிப் பிரச்சனைகளை அதிகமாக வற்புறுத்தியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலை வரும், மற்ற உறுப்பினர்களும் ஒதுக்கப்பட்ட நிதி போதாது, இன்னும அதிகப்படியாக நிதி ஒதுக்கப்படவேண்டுமென்ற கருத்தைத்தான் வலி யுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களைச் சொன்னதற் [illegible] நான் என் நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். எதிர்க்

கட்சி உறுப்பினர்கள் வெட்டுப் பிரேரணைகள் கொடுத்திருந்தாலும் அவற்றை வெட்டுப் பிரேரணையாகஅல்லாமல் ஒட்டுப் பிரேரணைகளாகத்தான் நான் கருதுகிறேன். இன்னும் அதிகப்படியான தொகை ஒதுக்க வேண்டும் என்றுதான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள். வேறு பல கருத்துக்களும் சொல்லப்பட்டன. அவற்றையெல்லாம் அரசாங்கம் பரிசீலிக்கும். இதில் மகிழ்ச்சிக்குரிய நிலைமை என்னவென்றால் அவற்றைக் கேட்பதற்கு நிதி அமைச்சர் அவர்களும் இந்த மன்றத்தில் இருந்திருக்கிறார்கள். உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களுக்கு மேல் காரியங்கள் செய்ய அது நல்ல பயன் அளிக்கும்.

ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் ப்ராஜக்ட்-க்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை குறைந்திருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். இந்த ஆண்டு 222·18 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த பட்ஜட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையை விட அதிகமாக நாம் செலவு செய்திருக்கிறோம். ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் ப்ராஜக்ட்-க்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 210 லட்சம், ஆக்சுவலாக செலவாகியிருப்பது 247·57 லட்சம் ரூபாய். ஆகவே, திட்டங்கள் இருக்குமானால், நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்கள் என்று அரசு கருதுமானால், பயன் அளிக்கக்கூடியது என்றால், அவற்றிற்கு நிதி ஒதுக்குவதில் ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் ப்ராஜக்ட்டைப் பொறுத்து எந்தவிதமான தடங்கலும் ஏற்படாது. இங்கு சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு ஒவ்வொன்றாக பதில் சொல்ல நேரமில்லையாதலாலும், உங்கள் பொறுமையைச் சோதிக்காமலும் சில காரியங்களை மட்டும் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

நம் நண்பர் திரு. நல்லசிவன் அவர்கள் காவிரி ஒப்பந்தம் பற்றிச் சொன்னார்கள். மைசூர் மாநிலத்திற்கும் நம் மாநிலத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் பற்றிச் சொல்லி, சர்வ ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றிச் சொன்னார்கள். சில மாதங்களுக்கு முன்னால் நம் முதல் அமைச்சர் அவர்கள் இதே மன்றத்தில் ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள்.

''1924-ம் ஆண்டு ஒப்பந்தப்படி தமிழகத்திற்கு உரித்தான நீர் ஓட்ட அளவு சிறிதேனும் குறைவின்றி தொடர்ந்து அனுப்புவதற்கு மைசூர் அரசு உறுதி அளித்துள்ளது. அந்த உறுதி நிறைவேற்றப்படும் வகையில் விதிமுறைகள், செயல்முறை, நிர்வாக நடைமுறை ஏற்பாடுகள் ஆகியவை பற்றி விரிவான விவாதம் நடத்தப்பட்டிருக்கிறது. 1924-வது ஆண்டு ஒப்பந்தத்திற்கு ஏற்பவும், உட்பட்டும், நீர் அளவைகள் ஏற்படுத்தல், அவற்றினை ஆய்ந்து கணக்கிடுதல், புது தேக்கத்தில் அவ்வாறு, இந்த உறுதி நிறைவேறும் வகையில் நீரைத் தேக்குவது என்பதற்கான விதிமுறைகள்; அவ்விதிகள் செயல்முறையில் நிறைவேற்றப்படவும், படுகின்றனவா என கண்காணிப்பதற்கும் தேவையான ஏற்பாடுகள், பதிவு முறைகள் குறித்து இவை வரைவுகள் தயாரிக்கப்பட்டு தொடர்ந்து இரு அரசுகளும் பரிசீலித்து முடிவு மேற்கொள்ளும் என்று கருத்து அறிவித்திருக்கிறார்கள். இரு மாநிலங்களுக்கும் உள்ள பிரச்னைகள் குறித்து ஆலோசித்து அவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக்கொள்ளும். நம் மாநில மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து, நம்முடைய கோவை மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் கோவை மாவட்டம் புறக்கணிக்கப்படுகின்றதோ என்ற அச்சத்தைத் தெரிவித்தார்கள். குந்தா கழிவுநீர்த் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்திச் சொன்னார்கள். என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே பாசனத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட பகுதிகளுக்குப் போதுமான நீர் வசதிகளைச் செய்த பிறகு இந்தத் திட்டத்தைப் பரிசீலிக்க





வேண்டுமென்பது ஒரு எண்ணமாகும். அடுத்து, நம்முடைய கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் குறிப்பிட்டது—ஏற்கெனவே தண்ணீர் இருப்பதாகக் கடந்த காலத்திலே திட்டங்கள் வரையப்பட்டிருக்கின்றன. அத் திட்டங்களை நிறைவேற்றித்தர வேண்டும். அதன்மூலம் கோவை மாவட்டத்தில் சில பகுதிகள் பயன்பெறும் என்று தெரிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்களும் சில நாட்களுக்கு முன்பு கோவையில் சென்ற பொழுது இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்யலாம், முடிந்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்ற கருததைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் சொன்ன கருத்துக்களையும், நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் சொன்ன கருத்துக்களையும் அரசாங்கம் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

நமது கோவை மாவட்டத்தைச் சார்ந்த உறுப்பினரவர்கள், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் இருந்தாலும் புறக்கணிக்கப்படுகிறது என்ற கருத்தில் குற்றச்சாட்டை திரு. வேலுசாமி அவர்கள் சொன்னார்கள். கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கால்நடைத் தீவனங்களுக்காக 10 லட்சம் ரூபாயும், கிணறு வெட்டுவதற்காக 14 லட்சம் ரூபாயும் இந்த அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது. அவிநாசி வட்டாரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். குறிப்பாகக் குறைபாடுகள் இருந்தால் திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கும், மாவட்ட ஆட்சித் தலைவரவர்களின் கவனத்திற்கும் கொண்டு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டுள்ளேன்.

நம்முடைய சுதந்திராக் கட்சி உறுப்பினரவர்கள், மாவட்டக் கருத்தரங்குகள் சரிவர நடைபெறவில்லை, மாவட்டக் கருத்தரங்குகளில் ஏற்பட்ட முடிவுகள் நிறைவேற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது உண்மையல்ல. மாவட்டக் கருத்தரங்குகள் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் பல மாவட்டங்களில் நடைபெற வேண்டியிருக்கின்றன. அதன் முடிவுகளின்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. நடைபெற வேண்டிய கருத்தரங்குகளை நடத்தி அதிலும் பயனுள்ள கருத்துக்களைக் கேட்டறிந்து, அது எதிர்க் கட்சியிலிருந்து வந்தாலும், அதையும் நிச்சயமாக ஆவன செய்வோம் என்று உறுதி கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்திலுள்ள 'ட்ரெய்னேஜ் ப்ராப்ளம்' பற்றிச் சொன்னார்கள். தமிழ்நாட்டின் பாசனவசதிகள் என்ற புத்தகத்தில் 32-ஆம் பக்கத்திலே குறிப்பிட்டிருக்கின்ற திட்டங்களை அவர்கள் சற்றுப் பார்த்தார்களானால் தஞ்சை மாவட்டம் புறக்கணிக்கப்படவில்லை என்று அறிவார்கள். ஆதாயமுள்ள திட்டங்களின் கீழ் மன்னார்குடி வட்டம், கானாஞ்சிமேடு கிராமத்தில் உள்ள காட்டுவாரி வடிகாலை மேம்படுத்தல் ரூ. 2,20,000; திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ள மனங்கொண்டனூர் வடிகாலை மாற்றியமைத்தல ரூ. 3,28,000; உரிய ஆதாயம் தராத திட்டங்களின்கீழ், மொட்டையார் வடிகாலை மேம்படுத்தல் ரூ. 2,49,300. இப்படிப்பட்ட திட்டங்கள் அரசாங்கத்தின் கவனத்திலே கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

நம்முடைய நண்பர் திரு. ஏ. எல். சுப்பிரமணியம் அவர்களும்; திரு. ஆதிமூலம் அவர்களும் திருநெல்வேலி மேம்பாலத்தைப்பற்றிக் கருத்து தெரிவித்தார்கள். ஏ. எல். சுப்பிரமணியம் அவர்கள், இது சர்வ கட்சியினராலும் முடிவு செய்யப்பட்ட பிரச்னை, அதுவுமில்லாமல் அரசு அனுமதித்திருக்கின்ற பிரச்னை, அதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். சுதந்திராக்கட்சி ஆதிமூலம் அவர்கள் கல்லைவிட்டெறிந்தால் பழம் விழுந்தாலும் விழும், இல்லாவிட்டால் கல் விழும் என்று அவருடைய கருத்தைச் சொன்னாரே ஒழிய அதை அவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொண்டிருந்திருக்க மாட்டார்கள் என்று

கருதுகிறேன். சீஃப் எஞ்சினியர் அவர்கள் டிஸ்கஸ் செய்தார்கள். ஒப்புக் கொள்ளப்பட்ட பிரச்னையை, அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்வோம் என்டதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். எனக்குக் கிடைத்த தகவல்களின்படி, டெண்டர் கோரப்பட்டு டெண்டர்களுக்கு அனுமதி அளிப்பதற்கான நிலையிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தார்கள். அதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை சுப்பிரமணிபுரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்தக் காரியம் நல்லமுறையில் நடைபெறும் என்றுதெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. சௌடி. சுந்தரபாரதி அவர்கள் கிருதநால்நதி திட்டத்தை அருப்புக் கோட்டைக்குப் பயன்தரத்தக்க வகையில் அரசாங்கம் உடனடியாக நிறைவேற்ற வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கருத்து தெரிவித்தார்கள். அரசாங்கம் இதைப்பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

Detailed proposals for a scheme costing Rs. 3.70 lakhs submitted by the Superintending Engineer, Ramnad circle have been returned to him with certain technical remarks. The remarks are being attended to by the local officers. The proposal aims at stabilisation of 1,601 acres of existing ayacut and bridging the gap in an extent of 320 acres.

The other anicut schemes under contemplation to utilise the Gridanal river flows are as follows :—

1. Construction of an anicut across Gridanal river to feed Seemaikal channel and 34 tanks in Aruppukottai taluk.

2. Construction of an anicut across Gridanal river to feed Maraiyoor and Manoor tanks in Aruppukottai taluk.

3. Construction of a regulator across Gridanal river to feed Odathur and other tanks in Aruppukottai taluk.

4. Construction of an anicut across Gridanal river to feed Irunjirai, Olakkudi, etc., tanks in Aruppukottai taluk.

5. Construction of an anicut across Gridanal river to feed Varisayoor, Veerakudi, etc., tanks in Aruppukottai taluk.

6. Construction of an anicut across Gridanal river to feed Veeraselam and other tanks in Aruppukottai taluk.

அடுத்து, நம்முடைய ஆரணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வருத்தத் தோடு தெரிவித்தார்கள், என்னுடைய மாவட்டத்தைப் புறக்கணித்து விட்டார்களே என்று சொன்னார். ஆனால், வடார்க்காடு மாவட்டம் புறக்கணிக்கப்படவில்லை என்பதற்குச் சில விவரங்கள் சொல்ல விரும்பு கிறேன். கண்டரை திட்டத்திற்கு 46 லட்சம் ரூபாயும், தாணிப்பாடி திட்டத்திற்கு 1,12,000 ரூபாயும், கீழ்ப்பாளூர் திட்டத்திற்காக 65,000 ரூபாயும் ஆக இந்த அளவுக்குத் திட்டங்கள் ஆரணி தொகுதியில் நிறை வேற்ற நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.





Construction of a bridge at 6/1 Arani-Chetpet Road across Cheyyar near Vinnamangalam was proposed originally under Part II for 1969–70 as an additional item at a cost of Rs. 12 lakhs but deleted in the final list of reduce total outlay.

இதில் எந்தத் திட்டத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் செய்ய வேண்டிய காரியமாக இருப்பதால் சற்று ஒற்றிப் போடப் படுகிறதே தவிர புறக்கணிக்கப்பட்டதாகக் கருதக் கூடாது.

திரு. சுவாமிநாதன் அவர்கள் கிராண்ட் அணைக்கட்டை, டூரிஸ்ட் சென்டராக மாற்ற வேண்டு மென்ற கருத்துக்களையும், இன்னும் சில கருத்துக்களையும் சொன்னார்கள். அதுபற்றி அரசாங்கம் பரிசீலித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர் கட்சித் தலைவரவர்கள் பொறியியல் வல்லுநர்களுக்கு பொறியியல் துறையினருக்குப் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பாராட்டுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். என்றாலும் அவர்கள் ஒரு முறையைச் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர் விடுதி சரிவரக் கட்டி முடிக்கப்படவில்லை என்றும், அதறகு நீங்கள்தான் எஜமானர்கள் என்றும் தெரிவித்தார்கள். நாங்கள் மாத்திரம் அல்ல, எதிர் கட்சித் தலைவரவர்களும் சேர்ந்துதான் எஜமானர்கள். அப்படிப்பட்ட காரியங்களைப் பார்க்க அரசாங்கம் முயற்சிகளை எடுததுக் கொள்ளும் என்பதைத் தெரி வித்துக்கொள்ளுகின்றேன்.

கார்காலப் பயிருக்குத் தண்ணீர் விடுவதுபற்றி திரு. ஆதிமூலம் அவர்கள் சொன்னார்கள்.

Rules of regulation for Manimuthar reservoir already provide for diversion of 1,200 M.Cft. of water during Kar season and 600 M.Cft. during Pishanam season for Tambraparni ayacut. This has been of great help to the old ayacut during critical times.

எனவே, அதுபற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்தப்படியாக, திருநெல்வேலி மாவட்டத்திலிலுள்ள பச்சையாறு ரிவர் ஸ்கீம் 97 இலட்சம் ரூபாய் மதிப்பீடுடையது, சூப்பரிண்டெண்டிங் இன்ஜினீயருடைய பரிசீலனையில் இருந்து வருகிறது. பரிசீலனை முடிந்த பிறகு அதற்குரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இராமநாதபுரம் தாலூகாவைச் சேர்ந்த பெரிய கண்மாய் தூர்ந்து போயிருப்பதைப்பற்றியும் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நண்பர் தங்கப்பன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

' Plans and estimates have been prepared. The cost of desilting-*cum*-reclamation scheme as now framed is Rs. 11.50 lakhs. They are under consideration by Superintending Engineer. If the scheme is found feasible, it will be considered by Government.'

அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இந்த பஸ் போக்குவரத்துக்கான பாதைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை சொன்னார்கள். ஏற்கனவே அங்கத்தினர்களுக்குத் தெரியும். இந்த ஆண்டு 300 மைல்களை அரசாங்கம் பராமரிப்பதற்கான முயற்சிகள் செய்து வருகிறது, என்பது.

அது வெற்றி பெறும் என்ற நம்பிக்கையும், பிறகு விரிவான அளவுக்கு சாத்தியமான இடங்களில் அரசாங்கம் இந்த போக்குவரத்து ஸ்தாக்களைப் பராமரிப்பதற்கான முயற்சிகளைச் செய்யும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குடி மராமத்தைப் பொறுத்து ஓரிரு கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். குடி மராமத்து வேலைகள் கனம் அங்கத்தினர்கள் சொல்லியதுபோல் சரிவர கவனிக்கப்பட்டு வருகிறது என்ற நிலைமை இருந்து வருகிறது. அதற்கு அரசாங்கம் மேலும் நடவடிக்கை எடுக்க எண்ணி இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட அளவு செஸ் விதித்து, அதன் மூலமாகத் தொகையைப் பெற்று, குடி மராமத்து வேலைகளைக் கவனிப்பதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"மைனர் இரிகேஷன் மெயிண்டனன்ஸ்"ஸை பி. டபிள்யூ. டிபார்ட்மெண்ட் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கு இப்பொழுது இருக்கிற பஞ்சாயத்து கோடில் சில மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. அந்த மாற்றங்களைச் செய்வதற்குரிய முயற்சியில் நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதைப் பரிசிலித்த பிறகு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிலையில் கனம் உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த ஆண்டு பருவ மழை பொய்த்திருக்கிறது, நாம் எதிர்பார்த்த அளவுக்குப் பருவ மழை பெய்யவில்லை. பல பகுதிகளிலே தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. இவ்வளவு இருந்தாலும் பாதகம் இல்லாத அளவுக்கு, நல்ல முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு உறுப்பினரும் சொன்ன கருத்துக்களை எல்லாம் நான் மட்டுமல்ல, இங்கே வந்திருக்கிற அதிகாரிகளும் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எந்தெந்த திட்டங்கள் சாத்தியமாக இருக்கின்றனவோ அவைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாவட்டம், எந்த மாவட்டமானாலும், எல்லா மாவட்டங்களும் பாரபட்சமில்லாமல் ஒரே மாதிரியாகக் கருதப்பட்டு, மாவட்டத் திட்டம் மட்டுமல்ல, அந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்தவைகளுக்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்பதை கவனத்திலே கொண்டு திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, அங்கத்தினர்கள் சொன்ன கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கொண்டு, நடவடிக்கை எடுக்க முயற்சி எடுத்துக் கொண்ட காரணத்தால் எல்லோருமே பொதுவாக அந்தந்த தொகுதிகளிலே இருக்கிற பிரச்னைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிற முறையிலே கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவைகளின் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாவட்ட கருத்தரங்குகள் ஆங்காங்கு நடத்த வேண்டுமென்ற கருத்துக்கள் இருக்கின்ற காரணத்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்கனவே கருத்தரங்குகள் நடத்திய மாவட்டங்களல்லாமல், கருத்தரங்குகள் நடைபெறாத மாவட்டங்களில் முதலாவதாகவும், மறுபடியும் அதைத் தொடர்ந்து எல்லா மாவட்டங்களிலும் கருத்தரங்குகள் நடத்தப்படும், விவசாயிகளின் கஷ்டங்களை உணர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்டடத் துறையைப் பொறுத்தவரையில், நம்முடைய கட்டடத் திட்டங்கள் ஓரளவுக்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நம்முடைய நண்பர் ஏ. எல். சுப்பிரமணியம் அவர்கள் வக்கீல்களுக்காக, பார்





அசோஸியேஷன் சேம்பருக்காகக் கட்டடம் கொடுத்ததற்கு பாராட்டுத் தெரிவித்தார்கள். மருத்துவ மனைகளுக்குக் கட்டடங்கள் வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறார்கள். ஒதுக்கப்பட்ட நிதியை அனுசரித்து அதற்காக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய அரசாங்கம், மருத்துவ மனைகள், பள்ளிக்கூட கட்டடங்கள் இவைகளை முதலாவதாக விரைவுபடுத்துவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறது. அதற்கான நல்ல சூழ்நிலை உருவாகி இருப்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 2 ஆண்டு காலமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொதுப் பணித் துறையின பொறுப்பை ஏற்றுக் கொண்டு நல்லமுறையில் செயல்பட்டிருக்கிறார்கள் என்றுதான் இங்கே பேசிய நண்பர்களுடைய பேச்சிலிருந்து தெரிய வருகிறது. அவருடைய உற்சாகமும் ஆற்றலும் எனக்கு அவ்வளவு இல்லை யென்றாலும் எதிர்க்கட்சித் தலைவர், மற்றவர்களுடைய ஒத்துழைப்பு மிகவும் தீவிரமாகக் காரியங்களைச் செய்வதற்கு பயன்படும் என்று தெரிவித்துக்கொண்டு, பொதுப்பணித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுடைய நல்ல ஒத்துழைப்பு இந்த பாராட்டுதலைக் பெற்றிருக்கிற காரணத்தால் அதிலே பணியாற்றக்கூடிய தலைமைப் பொறியாளர்கள், அதிலே பணியாற்றக்கூடிய அதிகாரிகள், அலுவலர்கள் செயலாளர்கள் அத்துணைபேருக்கும் நானும் பாராட்டும் நன்றியும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, திரு. ஆதிமூலம் அவர்களும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் சூபர்வைசர்கள் பற்றிய பிரச்னைகளைச் சொல்லிவந்தார்கள். அது கடந்த ஆண்டுகளாக இருந்து வந்திருக்கிற பிரச்னை. ஏற்கனவே சர்விஸ் கமிஷன் மூலமாக அவர்கள் தேர்ந்தெடுக்கப்படாத நிலைமைகள் இருக்கிற காரணத்தாலே சில பிரச்னைகள் இருந்து வருகின்றன. என்றாலும் கூடுமானவரை அவர்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டத்தைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் ரோட் இன்ஸ்பெக்டரும் மற்றுமுள்ள அதிகாரிகள், சூப்பர்வைசர்கள் இவர்கள் எல்லாம் நியமிக்கப்பட்ட காரணத்தால் சில ஆண்டுகளுக்குப் பிறகு அது பிரச்னையாக உருவாகியிருக்கிறது. இந்தப் பிரச்னை கடந்த சில நாட்களாக அதிகாரிகளின் கவனத்திலே இருந்து வருகிறது. எனவே, இத்தகைய சிக்கல்களை எல்லாம் தீர்ப்பதற்கு நாங்கள் முயற்சி எடுக்கும்போது எதிர்க்கட்சி நண்பர்களும் ஒத்துழைப்பைத் தந்து, மேலான ஆதரவைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் சமர்ப்பித்திருக்கின்ற கோரிக்கைகளை வெட்டில்லாமல் நிறைவேற்றித் தரவேண்டுமென்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டு பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் முடிவுற்றது. அடுத்து வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 26—பாசனம். முதலில் வெட்டுத் தீர்மானங்கள் மீது வாக்கெடுப்பு.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தம்முடைய பதிலில பழைய திட்டமான குடவளுறைப் பற்றி எந்த பதிலும் சொல்லவில்லை. ஒரு வார்த்தை அதைப்பற்றி சொன்னால் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. சகாதேவ கவுண்டர், திரு. ஆ. கு. சுப்பையா, திரு. கே. என். குமாரசாமி, திரு. என். வரதராஜன் ஆகியோர்களின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி அவர்கள் இருக்கையில் இல்லையாதலால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

“கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ.9,11,07,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்.”

*நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள்.

திரு. இராமமூர்த்தி அவர்கள் இருக்கையில் இல்லையாதலால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றதாகக் கருதப்படும்.

**திரு வி. கே. கோதண்டராமன் :** சார், தமிழகத்திலே உள்ள எல்லா நீர்த் தேக்கங்களையும் கட்டி முடிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வெட்டுத் தீர்மானம். சென்ற ஆண்டிலே, அப்பொழுது அமைச்சராக இருந்த . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் பேச்சை முடித்தவுடனே விளக்கம் கேட்டிருக்கவேண்டும். இப்பொழுது வாக்கெடுப்பு. நீங்கள் உங்கள் வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறீர்களா, இல்லையாயென்று சொன்னால் போதும.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இது முக்கியமான விஷயம். பசியைப் போக்குவதற்காக வேண்டி உள்ள ஒரு அடிப்படையான நல்ல காரியம். ஆகையினாலே, சென்ற ஆண்டிலே கொடுத்த வாக்குறுதி அடிப்படையிலே நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, பஞ்சநிலையைப் போக்குவதற்கு இந்த அளவுக்காவது நீங்களும் முயற்சி எடுக்கிறீர்கள் என்பது தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் உதவி புரிகிறேன் என்று சொல்கிறார். ஆகவே, நீர்த் தேக்கங்களை உடனே கட்டி முடிக்க வேண்டும் என்பதற்காக மத்திய சர்க்காரை எதிர்த்துப் போராடி அங்கே எவ்வளவு பணம் பெறுவதற்கு......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம்மாதிரி வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்துகிறீர்களா, இல்லையா என்று கேட்கிற சமயத்தில் விளக்கம் கேட்கும் வழக்கம் இல்லாத வழக்கத்தை மேற்கொள்ளக் கூடாது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** என்னுடைய கருத்தைச் சொல்லித் தானே நான் வற்புறுத்துகிறேனா, இல்லையா என்று சொல்ல வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினருக்கு பேசுவதற்குக் கொடுக்கும் நேரம் ஐந்து நிமிடம். இப்பொழுது வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறீர்களா, இல்லையா என்று கேட்கும்பொழுது, ஐந்து நிமிடம் எடுத்துக் கொள்வது என்றால் அது முறையாகாது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேசுவதற்கும் அதிக நேரம் அனுமதிக்கமாட்டேன் என்கிறீர்கள். அந்த நிலைமையில் நான் சொல்ல வேண்டியதைச் சொல்லித்தானே வற்புறுத்துகிறேனா, இல்லையா என்று கூற வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர் வேண்டுமானால் அதிக நேரம் பேசலாம். அதை அவர்களுடைய கட்சித் தலைவர்களோடு கலந்து முடிவு பண்ணிக் கொள்ள வேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இப்பொழுது நான் பேசவில்லை. விளக்கம்தான் சொல்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறீர்களா, இல்லையா ?

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அந்த அடிப்படையில் வற்புறுத்தவில்லை என்றுதான் சொன்னேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

திரு. சோ. அழகர்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானமும் பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெறப்பட்டது.

திரு சௌடி சுந்தரபாரதி அவர்கள் இருக்கையில் இல்லையாதலால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானமும் பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெற்றதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

“கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு‘ என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,60,25,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.”

*நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள். வெட்டுத் தீர்மானங்கள்.

திரு. வை. சுவாமிநாதன் அவர்கள் இருக்கையில் இல்லையாதலால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெற்றதாகக் கருதப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா, திரு கே. என். குமாரசாமி, திரு. சி. கோவிந்தராஜன் ஆகியோர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

“கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,48,15,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.”

*நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும், வெட்டுத் தீர்மானங்கள்.

திரு. சோ. அழகர்சாமி, திரு. கொ. இரா. ஞானசம்பந்தம், திரு. பி. வேலுசாமி ஆகியோர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

திரு. வை. சுவாமிநாதன் அவர்கள் இருக்கையில் இல்லையாதலால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானமும் பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெற்றதாகக் கருதப்படும்.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

“கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,24,44,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.”

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள்—மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள்.

திரு. இராமமூர்த்தி அவர்கள் இருக்கையில் இல்லையாதலால், அவர் களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றதாகக் கருதப்படும்.

திரு. பா. கிருஷ்ணசாமி கவுண்டர், திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர்களின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகின்றன.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள்—மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,28,36,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பிற்பகல் 2-44 பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 7. பேரவை முன் வைகைப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

†92. Notification issued with G.O. Ms. No. 319, **Industries,** Labour and Housing (Housing), dated the 29th January 1968 in regard to the issue of the Madras State Housing Board (Maintenance of Accounts) Rules, 1968. [Laid on the Table of the House under section 160 (4) of the Madras State Housing Board Act, 1961 (Madras Act 17 of 1961).]

93. Notification issued with G.O. Ms. No. 2954, Home, **dated** the 7th October 1968 in regard to exemption from payment of tax leviable in respect of vehicle bearing registration number MDR 4864, belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Health Officer, Ramanathapuram at Madurai. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

### B. *Reports, Notifications and other papers.*

@86 A Review on Tamil Nadu Police 1968-69 (**English and** Tamil).

---

**†Laid on the Table of the House on 15th March 1969.**

**@ Despatched to Members on 14th March 1969.**





## இணைப்பு I

[42-ம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பைக் காண்க]

### 1969-70 பாசனத் துறைக்கான மானியக் கோரிக்கைகள்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கு இணங்க கோரிக்கை எண் 26—"பாசனம்" என்னும் தலைப்பின்கீழ் ரூ. 9,11,07,800-க்கு மேற்படாத தொகையை அரசிற்கு மானியமாக அளிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.

மேலும் ஆளுநர் அவர்களின் பரிவுரைப்படி கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு ரூ. 7,60,25,100-க்கு மேற்படாத தொகையை மானியமாக அரசிற்கு வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போதுள்ள பாசனத் திட்டங்களைத் தக்க முறையில் பேணி வருவதற்காகவும், அவற்றிலிருந்து பெருமளவு பயன்பெறும் பொருட்டு, அவற்றை விரிவுபடுத்துதல், மேனிலைப்படுத்துதல், பேணி வருதல் ஆகியவற்றிற்கான செலவும், வெள்ளத்தாலும், புயலாலும் சேதமடைந்த பகுதிகளைச் செப்பனிடும் பணி முதலியவற்றிற்கான செலவும், "கோரிக்கை 26—பாசனம்" என்ற மானியத்திலிருந்து பெறப்படும். நிறைவேறி வருகிற அல்லது நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும் புதிய பாசன வேலைத்திட்டங்களுக்காக ஆகும் செலவினங்களின் பெரும் பகுதி கோரிக்கை 41—பாசன மூலதனச் செலவு என்ற மானியத்திலிருந்து ஏற்கப்படும். வருவாய்த் துறையினரின் கண்காணிப்பில் உள்ள சிறு பாசன வேலைகளுக்கான ரூ. 73,02,900 மானியமும் கோரிக்கை 26-ல் அடங்கியுள்ளது. பாசனப் பணிகள் இயல்பான கட்டமைப்பிற்கும், ஆக்கத்திற்கும் வேண்டப்படும் பணியாட்கள், கருவிகள், பொறிகள் இவற்றின் மொத்தச் செலவுத் தொகை 28-வது கோரிக்கையின்கீழ் வருகிறது. பாசனச் செலவின் ஒரு பகுதியான ரூ. 1,03,80,900 கோரிக்கை 26—பாசனம் என்பதன் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

1969-70-ம் ஆண்டில் பாசனத்திற்கெனச் செலவிடக் கருதியுள்ள மொத்த மானியத் தொகை ரூ. 16,71,32,900 ஆகும்.

காவிரி, அமராவதி, பவானி, பெரியாறு, தாமிரவருணி, கோதை யாறு ஆகிய ஆறுகளின் நீர்கோள் பகுதிகளில் ஜூன் திங்கள் இரண்டாவது பகுதியில் இயல்பாகத் தொடங்க வேண்டிய தென் மேற்குப் பருவ மழையும் மிகவும் காலங் கடந்தே பெய்யத் தொடங்கியது. காவிரி நீர் கோள்பகுதியில் எழு சத வீதம் மழை குறைவாகப் பெய்தது. பவானி நீர் கோள் பகுதியில் 23 சத வீதம் மழை குறைவாகப் பெய்தது. பெரியாறு நீர் கோள் பகுதியில் மழை 4 சதவீதம் அதிகமாகப் பெய்தது. மேட்டூர் நீர்த் தேக்கத்தில் 11 சதவீதமும், பவானி சாகரில் 41 சதவீதமும், பெரியாறு ஏரியில் 10 சதவீதமும், பேச்சிப்பாறை நீர்த் தேக்கத்தில் 23 சதவீதமும் குறைவாகத் தண்ணீர் சேர்ந்தது. இக் காலத்தில் அமராவதி நீர்த் தேக்கத்தில் இயல்பாகச் சேரக்கூடிய நீரின் அளவை விட 2 சத வீதமும், பெருஞ்சாணியில் 22 சதவீதமும், பாபநாசத்தில் 31 சதவீதமும் அதிகரித்தது. தென்மேற்குப் பருவ மழை தாமதமாகப் பெய்ததால் மேட்டூர் நீர்த் தேக்கம், பெரியாறு பாசன ஏற்பாடு, கோதையாறு பாசன ஏற்பாடு ஆகியவற்றில் பாசனத்திற்கு நீர் விடும் தேதி தள்ளிப் போடப்பட்டது. மேட்டூர் நீர்த் தேக்கத்தில் ஆண்டு முழுவதும் குறைந்த அளவிற்கே நீர் இருந்ததால் இந்த நீர்த் தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு நீர் விட முடியவில்லை. 26,270 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களில் கூடுதலாகப் பயிர் விளைவிப்பதற்காக, கிருஷ்ணகிரி, சாத்தனூர் நீர்த் தேக்கங்களிலிருந்து, தனியாகத் தண்ணீர் விடப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் குறிப்பாக, வடகிழக்குப் பருவ மழை பொய்த்து விட்டது. காவிரி, பவானி, அமராவதி, பெரியாறு, கோதையாறு ஆகிய ஆறுகளின் நீர் வரவுப் பகுதிகளில் வடகிழக்குப் பருவ மழை பெரிதும் தவறிவிட்டது. காவிரி நீர்கோள் பகுதியில் 64 சதவீதமாகவும், பவானியில் 72 சதவீதமாகவும், பெரியாற்றில் 31 சதவீதமாகவும் மழையின் அளவு குறைந்தது. இதனால் நீர்த்தேக்கங்களுக்கு வந்த நீரின் அளவும் குறைந்தது. இப் பற்றுக்குறை மேட்டூர் நீர்த் தேக்கத்தில் 36 சத வீதமாகவும், பவானி நீர்த் தேக்கத்தில் 54 சத வீதமாகவும், பெரியாறு நீர்த் தேக்கத்தில் 35 சதவீதமாகவும் பேச்சிப்பாறையில் 26 சதவீதமாகவும், அமராவதி நீர்த்தேக்கத்தில் 49 சதவீதமாகவும் பாபநாசத்தில் 21 சதவீதமாகவும் இருந்தது. பெருஞ்சாணியில் மட்டும் இயல்பாக, வரக்கூடிய அளவைவிட 13 சதவீதம் அதிகமாக இருந்தது.

இந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததால் பவானி சாகரின் கீழுள்ள இரண்டாம் முறை ஆயக்கட்டிற்குப் பாசன வசதி அளிக்க இயலவில்லை. மேட்டூரில் கிட்டிய குறைந்த தேக்க நீரைச் சிக்கனமாகவும், மிக்க பயனுறுவகையிலும் வழங்கிப் பங்கீடு செய்ய வேண்டியிருந்தது. அப்பொழுதுதான் வளர்ந்துவரும் பயிர்கள் நன்கு வளர்ந்து விளையும் நிலையை அடைய முடியும். இம்மாதிரியான இடர்ப்பாடுகள் பெரியாறு, அமராவதி நீர்த் தேக்கங்களிலும் ஏற்பட்டன, இதனை தீர்க்க முறைமாற்று ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. வளர்ந்து வரும் பயிர்கள் சாவியாகப்போகாமல் காப்பதற்காக, நீர்த்தேக்கங்களில் குறைந்த அளவு இருக்கவேண்டிய தண்ணீரும் பாசனத்திற்காக விடப்பட்டது. இந்த நீர்த்தேக்கங்களிலிருந்து பாசனம் பெறும் ஆயக்கட்டுப் பகுதிகளில் சிலவற்றில் நீண்டகாலப் பயிர் விளைவிக்கப்படுவதும் இந்த இடர்ப்பாட்டிற்கு ஒரு காரணமாகும். ஏனெனில், பாசன ஏற்பாடு குறுவைப் பயிர்களுக்கு மட்டும்தான் அமைய முடியும். பெரிய நீர்த்தேக்க ஏற்பாடுகளின்கீழ் மொத்தமுள்ள 23 லட்சம் ஏக்கர் பரப்பளவில் சுமார் 2 லட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கீழ்பவானி திட்டத்தின் கீழுள்ள இரண்டாம் முறை ஆயக்கட்டுப் பகுதியும் வீடூர் ஆயக்கட்டுப் பகுதி முழுவதும், மணிமுத்தாறு, பெரியாறு, வைகை, அமராவதி ஆயக்கட்டுப் பகுதிகளின் கணிசமான பகுதியும் இப் பற்றுக்குறை நிலையினால் பாதிக்கப்பட்டன.

செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களில் ஏற்பட்ட வறட்சி நிலைமையின் காரணமாக துயர் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் அரசு, பொதுப்பணித்துறை நீர் வழங்கு வாய்க்கால்களைத் தூர்வாரி பண்படுத்துவதற்காகவும், பொதுப்பணித்துறை ஏரிகளைச் செப்பனிடுவதற்காகவும், ரூ. 9·03 லட்சம் செலவை மேற்கொள்ள அரசு சனவரி 1969-ல் ஒப்பளிப்பு வழங்கியது. மேற்சொன்ன துயர் தணிப்புப் பணிகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தை அரசு 1969-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ம் தேதியன்று ஆய்வு செய்தது. நடப்பாண்டில் (1968–69) செங்கற்பட்டு மாவட்டத்தில் துயர் தணிப்பு நடவடிக்கை குறித்து 128 பணிகளை மேற்கொள்வதற்காக ரூ. 5 லட்சம் செலவிட முடிவு செய்யப்பட்டது. வறட்சிக்கான துயர் தணிப்பு நடவடிக்கைகளை, தமிழ் நாட்டின் பிற மாவட்டங்களிலும் அதாவது இராமநாதபுரம், தென் ஆற்காடு முதலிய மாவட்டங்களிலும் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

நமது மாநிலத்தில் நீரும் நிலமும் குறைந்த அளவிலேயே கிட்டுகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். நில மேல் நீர் வாய்ப்புக்களைப் பாசனத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதற்கான பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு ஏறத்தாழ எல்லாப் பணிகளும் முடிக்கப்பட்டு விட்டன. எனவே, நமது மாநிலத்தில் நிலத்திற்கடியில் கிடைக்கக்கூடிய நீர்வளத்தைக் கண்டுபிடித்துப் பயன்படுத்திக் கொள்வது குறித்த முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். இந்த நோக்குடன் நிலத்திற்கடியில் நீர்வளம் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை விஞ்ஞான



முறையில் ஆய்ந்து அறிவதற்கான பணியை இரண்டு நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன. அவையாவன (1) ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தைச் சேர்ந்த நில நீர்வளத் திட்டம்; (2) பொதுப்பணித் துறையைச் சேர்ந்த நில நீர்ப் பிரிவு. நில நீர் ஆய்வின் முடிவுகளையொட்டி உற்பத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். நில நீர்வளம் ஒன்றே பாசன வாயிலாக அமைந்துள்ள வறண்ட பகுதிகளில் பாசனம் அளிப்பதற்காகவும், பிற பகுதிகளில் கிட்டும் பாசன வாய்ப்புக்களைப் பெருக்குவதற்காகவும் இத்தகையத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

காவிரி சங்கமத்தைப் பொறுத்தவரையில் மேற்பரப்பில் உள்ள பாசன வாய்ப்புக்களுக்குக் கூடுதலாக, நில நீர்வளத்தைப் பயன்படுத்துவதற்கான திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் மிக அக்கறை காட்டிவரும் உலக வங்கி, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தைச் சேர்ந்த சிறப்பு நிதித் திட்டத்தின் முடிவுகளையொட்டி, தஞ்சாவூர் கழிமுகப் பகுதிக்காக, விரிவாக இணைக்கப்பெற்ற வளர்ச்சித் திட்டமொன்று வகுக்கப்படலாமென்று ஆலோசனை கூறியுள்ளது. இது அரசின் ஆய்விலுள்ளது.

திட்டப் பணிகள் எந்த அளவுக்கு முன்னேறியுள்ளன என்பது பற்றிய விவரங்களை இப் பேரவையின்முன் வைக்கப்பட்டுள்ள விரிவான ஆய்விலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

வைகை வாய்க்கால்களைப் புதுப்பிப்பதற்காக ரூ. 395 லட்சம் செலவில் வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ள சென்ற ஆண்டு நாம் ஒப்புதல் வழங்கினோம். தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி வாய்க்கால்களில் சீரமைப்பதற்காக ரூ. 23 கோடி செலவாகக்கூடிய அடங்கல் திட்டமொன்று அரசின் ஆய்வில் உள்ளது. இவ் வேலைத் திட்டத்தினை நான்காம் திட்டத்தில் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது. 1,08,000 ஏக்கர் பரப்பளவிற்குப் பாசன வசதியை உறுதிப்படுத்தவும் மேலும் 3,50,000 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களுக்கு இருபோக பாசன வசதியை ஏற்படுத்தவும் இத்திட்டம் வகை செய்யும். காவிரிக் கழிமுகப் பகுதி பாசன ஏற்பாட்டின் கீழ் ரூ. 3·9 லட்சம் செலவில் 16 வாய்க்கால்களை முன்னோடி வேலைத் திட்டங்களாக வெட்டும் பணி ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. பின்னர் இவை தலைமைத் திட்டத்தோடு சேர்க்கப்படும். மேற்கொண்டும் ஐந்து வாய்க்கால்களை வெட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறுபாசனத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 1968 டிசம்பர் வரையில் நாம் ரூ. 1,57 லட்சம் செலவு செய்துள்ளோம். 31,705 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களுக்குப் புதிதான பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பதுடன், தற்போதுள்ள 74,000 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களுக்குப் பாசன வசதி உறுதிப்படுத்தப்பட்டது. நீரில் மூழ்கக்கூடிய 290 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் நீரில் மூழ்காதபடி வகை செய்யப்பட்டது.

பாசனம், கட்டிடங்கள், வெள்ளத் துயர் தணிப்பு நடவடிக்கைகள் பாசனத் திட்டங்களுக்கான ஆய்வு போன்ற பல்வேறு பணிகளை வெவ்வேறு அதிகாரிகள் கவனித்து வந்தனர். இதனால் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ள விழையும் பொதுமக்கள் எந்த அதிகாரியை நாட வேண்டுமென்று அவர்களிடையே குழப்பம் ஏற்பட்டு வந்தது. இந்த நிலைமையைத் தவிர்க்க, ஒருங்கிணைந்த நிறுவனம் ஒன்றை நிறுவவும் ஒவ்வொரு அதிகாரிக்கும் தனித்தனி அதிகார வரம்பைப் பிரித்துக் கொடுக்கவும் இந்த அரசு ஏற்பாடு செய்தது. அரசு செய்துள்ள முக்கியமான மாற்றங்களில் இதுவும் ஒன்றாகும். இவ்வேலைத் திட்டம் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை மாநகருக்கு நீர் வழங்கல், உள்நாட்டு நீர் வழிகள், சாலைகள் ஆகிய பணிகளும் என்னுடைய பொறுப்பின்கீழ் உள்ளன. அவைபற்றியும் சில சொற்கள் சொல்ல விழைகிறேன்.

சென்னை மாநகரில் குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதுபற்றி இம் மாநில அரசு மிகுந்த நாட்டம் செலுத்திவருகிறது. ரூ. 21·3 கோடி செலவில் வீராணம் ஏரியிலிருந்து காவிரி நீரைக் கொண்டு வருவதற்கான திட்டமொன்றுக்கு இம் மாநில அரசு 1968, நவம்பர் திங்களில் ஒப்புதல் வழங்கியது. இந்த திட்டத்தின்மூலம் நாள் ஒன்றுக்கு 400 லட்சம் காலன் நீர் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தம் 135 மைல் தொலைவிற்கு 66 அங்குலம் விட்டமுள்ள உறுதிப் படுத்தப்பட்ட கற்கலவைக் குழாய்கள் போடப்பட்டு, அவை மூலம் நீரைச் சென்னை மாநகருக்கு எடுத்துவரத் திட்டமிடப்பட்டுள்ளது. வீராணம் ஏரியிலிருந்து முதற்கண் நீர் இறைப்பதுடன் வடலூர், திண்டிவனம் இரண்டு இடங்களிலும் விசையேற்ற நிலையங்கள் அமைக்கப்பட்டு நீர் இறைக்கப்படும். இத் திட்டம் குறித்து விரிவான வரைபடங்களும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இப்பணி 1969 மார்ச் முடிவுக்குள் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1969 ஏப்ரல் முதற்கொண்டு இப் பணி முழு வேகத்துடன் தொடங்கப்படும். இவ் வேலைத்திட்டத்திற்காக 1969–70 திட்ட மதிப்பீட்டில் 50 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவமழை பொய்த்ததன் விளைவாக ஏற்பட்டுள்ள தற்போதைய குடிநீர் நெருக்கடியைச் சமாளிப்பதற்காக தாமரைப்பாக்கம் பஞ்சட்டி பகுதிகளில் நில நீர் வாயில்களைப் பயன்படுத்தி சென்னைக்கு நீர் வழங்கும் அவசரத் திட்டமொன்றை ரூ. 37 லட்சம் செலவில் மேற்கொள்ள அரசாங்கம் 1969 பிப்ரவரித் திங்களில் ஒப்பளிப்பு வழங்கியது.

கூவம் மேம்பாட்டுத் திட்டம், பக்கிங்காம் கால்வாய்த் திட்டம் ஆகிய பணிகளை மேற்கொள்ள அரசு 1967-ம் ஆண்டு மத்தியில் ஒப்பளிப்பு வழங்கியது. இவை நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆற்றின் வாய்ப்பகுதியில் கரை கட்டும் பணி ஏறத்தாழ முடிவடைந்துவிட்டது. சுவர் கட்டும் பணியும் விரைவாக நடைபெற்று வருகிறது. ஆற்றின் வாய்ப்பகுதியில் மணல்வாரிப் பொறி ஒன்றையும் பொறி மதகு ஒன்றையும் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக 1968–69-ல் (1969 பிப்ரவரி வரையில்) ரூ. 2·68 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதுவரையில் இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 3·92 லட்சம். 1969–70-ல் கூவம் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ. 5 லட்சமும் பக்கிங்காம் கால்வாய்த் திட்டத்திற்காக ரூ. 8 லட்சமும் செலவிட நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கூவம் மேம்பாட்டுத் திட்டத்தின் முதல் நிலைப்பணி 1970–71 இறுதியில் முடிவடையும். இப் பணி முடிவடைந்தவுடன் கூவம் ஆறு அலை மோதும் ஆறாக அமைந்துவிடும். அதற்குப் பிறகு ஆற்றங்கரையை எழில்படுத்தும் பணியை மேற்கொள்ளவும் இதற்காக ஆற்றின் கரையோரங்களில் வாழும் குடிசைப் பகுதி மக்களின் மறுவாழ்விற்கு வகை செய்வதற்காகவும் ரூ. 30 லட்சம் செலவிடப்படும்.

மத்திய சாலை நிதியிலிருந்து இந்திய அரசு ஆண்டுதோறும் வழங்கும் நிதி போதவே போதாது. 1967–68-ல் ரூ. 22·8 லட்சம் ஒதுக்கப்பட்டது. ஆனால், நடப்பாண்டில் ஏற்கனவே ஏற்றுக் கொண்ட பொறுப்புகளுக்கென 30 லட்சம் ரூபாய் உட்பட ரூ. 57 லட்சம் ஒதுக்கப்பட வேண்டுமென்று நாம் கேட்டுள்ளதற்கு மாறாக இதுவரையில் ரூ. 27 லட்சம் மட்டுமே வழங்கப்படுமென்று இந்திய அரசு குறிப்பிட்டுள்ளது. மத்திய சாலை நிதியிலிருந்து மாநில அரசுக்குக் கிடைக்கவேண்டிய இறுதிப் பங்குத் தொகையை இந்திய அரசு இன்னும் முடிவு செய்யவில்லை. தற்காலிக அடிப்படையிலேயே இதற்கான நிதியை ஒதுக்கி வருகின்றது. நமது வளர்ச்சித் துறையில் மிக முக்கியமான இத் திட்டங்களுக்காக நமது தேவைகளை இந்திய அரசு உணர்ந்து உரிய காலத்தில் உதவித் தொகை வழங்க முன்வர வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.





## இணைப்பு-2.

### தமிழ்நாட்டின் பாசன வசதிகள்—ஆய்வுரை 1968–69

இந்த ஆய்வுரை, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த பின்னர் கழிந்த மூன்றாவது ஆண்டிற்கு உரியதாகும். 1968–69 இறுதிவரை, பாசன வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. 1969–70 முதல் 1973–74 வரையிலான 4-வது திட்டத் தின் பாசன வேலைத் திட்டங்களும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. 4-வது திட்டம் இறுதி வடிவம் பெற்று ஏற்பளிக்கப்பட்ட பின்னர் இவை நிறைவேற்றப்படுவதற்கு மேற்கொள்ளப்படும்.

### முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்கள்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் தமிழ் நாட்டில் 22·00 லட்சம் ஏக்கர் நிலம் பெரும் பாசனத் திட்டங்களின் கீழ்ப் பாசன வசதி பெற்றது. முதலாவது திட்டக் காலத்தில் 9 புதிய பாசன வேலைகள் தொடங்கப்பட்டன. 1·32 லட்சம் ஏக்கர் பரப்புள்ள ஆயக்கட்டுக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது. இது தவிர, 1·24 லட்சம் ஏக்கர் பழைய ஆயக்கட்டுக்குப் பாசன வசதி உறுதிப்படுத்தப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் 1·77 லட்சம் ஏக்கர் புதிய ஆயக்கட்டிற்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது ; 1·15 லட்சம் ஏக்கர் பழைய ஆயக்கட்டுக்குப் பாசன வசதி உறுதிப்படுத்தப்பட்டது. முதலாவது, இரண்டாவது திட்டங்களின் போது, பாசனத் திட்டங்களுக்கென முறையே ரூ. 20·15 கோடியும், ரூ. 14·45 கோடியும் செலவிடப்பட்டன.

### மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும், 1966–67, 1967-68 ஆண்டுத் திட்டங்களும்.

பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டத்தைத் தவிர ஒன்பது வேலைத் திட்டங்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டன. இவற்றில் பாலாறு அணைக்கட்டு—கால்வாய் மேம்படுத்தும் பணியும், சாத்தனூர் திட்டம் II-ம் நிலைப்பணியும், கோமுகி நதித் திட்டப் பணியும் முற்றுப் பெற்று அவற்றின் பயன்களும் பெறப்பட்டன. மஞ்சளாறு நீர்த் தேக்கத் திட்டம் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு திட்டத்தின் பாற்படாத பணியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. சித்தாறு-பட்டணங்கால் திட்டம் 1963–64-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு நிறைவேறி வருகிறது. இத் திட்டத்தின் பயன் 1969, ஜூன் முதற்கொண்டு கிட்டத் தொடங்கிவிடும். மணிமுக்தா நதித் திட்டம், கடானா நதித் திட்டம், இராம நதித் திட்டம் ஆகியவை 1966–67-ல் தொடங்கப்பட்டன. மணிமுக்தா நதித் திட்டம் பெரும்பாலும் முடிவடைந்துவிட்டது. கடானா நதி, இராம நதித் திட்டங்கள் நன்கு முன்னேறி வருகின்றன. 1967–68ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட "வைகைக் கால்வாய் புதுப்பிக்கும் திட்டம்" நிறைவேறி வருகிறது. மூன்றாவது திட்டத்திலும் 1966–67, 1967–68 ஆகிய இரண்டு ஆண்டு திட்டங்களிலும் பெரும் பாசனத் திட்டங்களுக்கு ரூ. 36·43 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இது வரை ரூ. 39·81 கோடி செலவாகியுள்ளது.

ஆய்விலுள்ள இந்த ஆண்டு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்தபின்னர் உள்ள மூன்றுவது ஆண்டுத் திட்ட (1968-69) ஆண்டாகும். 1968-69 இறுதிவரை எஞ்சிய திட்டங்களின் முன்னேற்றமும் 1969-70 ஆண்டுக்குரிய வேலைத் திட்டமும் கீழே விவரமாகக் கூறப்பட்டுள்ளன.

## (1) பரம்பிக்குளம்--ஆழியாறு திட்டம்

| | பாசனம். | புனல்-மின்சாரம். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூ. லட்சத்தில்.) | | |
| வேலைத் திட்டத்திற்கான செலவு. | 35,35·69 | 32,17·00 | 67,53·00 |
| இரண்டாவது திட்டத்தில் செய்யப்பட்ட செலவு. | 4,26·71 | .. | .. |
| மூன்றுவது திட்டத்தில் செய்யப்பட்ட செலவு. (1961-62 முதல் 1965-66 வரை). | 26,21·16 | .. | .. |
| 1966-67, 1967-68-ல் செய்த செலவு. | 5,61·11 | .. | .. |
| 1968-69 திருத்த மதிப்பீடு. | 2,36·00 | .. | .. |
| 1968-69 முடிய செய்த மொத்தச் செலவு. | 38,44·98 | .. | .. |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு (1969-70 முதல் 1973-74 வரை). | 11,24·00 | .. | .. |
| 1969-70 திட்ட மதிப்பீடு. | 2,50·00 | .. | .. |

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் பல நோக்கப் பெருந்திட்டமாகும். இத் திட்டம் இரண்டாவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டதாகும். இது மூன்றுவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து நடத்தப்பட்டு, நான்காவது திட்டக் காலத்தில் எல்லா வகைகளிலும் முற்றுப்பெறும். இத் திட்டத்திற்கு ரூ. 67·53 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2·40 லட்சம் ஏக்கர் பரப்புள்ள நிலத்திற்கு பாசன வசதி கிடைப்பதுடன், தமிழ்நாடு, கேரள மாநிலங்களில் பாலாறு, ஆழியாறு ஆகியவற்றின் கீழ் சுமார் 30,000 ஏக்கர் பரப்புள்ள பழைய ஆயக்கட்டிற்கு மேலும் பாசன வசதி கிட்டும் வகையிலும், இத் திட்டத்திலுள்ள நான்கு மின் நிலையங்களிலுமாகச் சேர்த்து 1,85,000 கிலோ வாட் உற்பத்தித் திறனுடன் மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையிலும் இத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இரு மாநிலச் சார்புள்ள ஆறுகளை இரண்டு மாநிலங்களின் நலன்களுக்காகப் பயன்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாதலால், கேரள மாநிலத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்வது அவசியமாகும். கேரள அரசு ஒத்துழைப்பு நல்கியதால், நீராறு, தேக்கடி ஆறுகளைப் பயன்படுத்தும் முறை தவிர, இத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து உடன்பாடு ஏற்பட்டது. நீராறு, தேக்கடி ஆறுகளைப் பயன்படுத்தும் முறை குறித்து பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. இது குறித்து விரைவிலே முடிவேற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.





இத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வரும்போதே படிப்படியாக உடனுக்குடன் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது இத் திட்டத்தின் சிறப்புக் கூறுகும்; அதாவது, திட்டம் முழுவதும் நிறைவேற்றி முடிக்கப்படும்வரை காத்திராமல், பகுதிப் பணி முடிவுற்றதும் ஏற்பட்ட பாசனத் திறன் உடனடியாகப் பயன்படுத்தப்படுகிறது.

ஆழியாறு அணை, பரம்பிக்குளம் அணை, துணக்கடவு அணை, சர்க்கார்பதி மின்நிலையம், திருமூர்த்தி அணை, தண்ணீரை எடுத்துச் செல்லுவதற்கான இடை இணைப்பு ஏற்பாடுகள், நிகரான பாசனக் கால்வாய் ஏற்பாடுகள் ஆகியவை அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 345 அடி உயரமுள்ள சோலை ஆறு அணை (இதுவே தமிழ் நாட்டிலுள்ள மிக உயரமான அணையாகும்) நல்ல வகையில் நிறைவேறி வருகிறது. திட்டமிட்டவாறே தண்ணீரைத் திருப்பிவிடும் நிலை நிறைவேற்றப்பட்டுள்ளது. சோலையாறு தண்ணீர் திருப்பி விட்டவுடன் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் முக்கியமானதொரு வேலைப்பகுதி முடிவடைந்துவிடும். நீராறு, தேக்கடி தண்ணீரைப் பயன்படுத்தும் வகை குறித்து கேரள அரசுடன் உடன்பாடு ஏற்பட்டவுடன், இப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றி முடிக்கப்படும்.

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப் பகுதியில் 1968-ம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை இயல்பான அளவு பெய்தது. ஆனால், வடகிழக்குப் பருவ மழைப் பொய்த்துவிட்டது. எனவே, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட நீர்த் தேக்கத்தில் தண்ணீர் இருப்பு தேவையான அளவில் இல்லை. எனினும், கிடைத்த நீரைக்கொண்டு, 1968-ம் ஆண்டில் 1,15,173 ஏக்கர் நிலப்பரப்புக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது. இதில் 64,147 ஏக்கர் பரப்புள்ள நிலம் மட்டுமே இவ்வசதியைக் கீழே காட்டியுள்ளபடி பயன்படுத்திக்கொண்டது :—

| தொடர் இலக்கமும் கால்வாயின் பெயரும். | பாசனம் அனுமதிக்கப்பட்ட கால அளவு. | பாசனம் நீட்டிக்கப்பட்ட கால அளவு. | பாசனம் அனுமதிக்கப்பட்ட பரப்பளவு (ஏக்கர்) | இப்பாசனப் பருவத்தில் 31—12—68 வரை கால்வாய் நீரைப் பயன்படுத்திக் கொண்ட பரப்பளவு. (ஏக்கர்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 பொள்ளாச்சிக் கால்வாய். | 10—6—68 முதல் 25—10—68 வரை. | 26—10—68 முதல் 20—12—68 வரை. | 23,379·00 | 8,137·00 |
| 2 வேட்டைக்காரன் புதூர் கால்வாய்—மண்டலம் I. | 10—6—68 முதல் 25—10—68 வரை. | 26—10—68 முதல் 15—12—68 வரை. | 5,891·00 | 1,463·00 |
| 3 வேட்டைக்காரன் புதூர் கால்வாய்—மண்டலம் II. | 26—10—68 முதல் 10—3—69 வரை. | .... | 5,455·00 | 504·00 |
| 4 ஆழியாறு கிளைக்கால்வாய். | 15—9—68 முதல் 31—1—69 வரை. | 1—2—69 முதல் 15—3—69 வரை. | 4,593·00 | 616·00 |
| 5 சேதுமடை கால்வாய். | 15—9—68 முதல் 31—1—69 வரை. | 1—2—69 முதல் 15—3—69 வரை. | 4,971·00 | 659·00 |
| பரம்பிக்குளம் தலைக்கால்வாய் 27/5 மைலிலிருந்து 54/7 மைல் வரை. | 20—8—68 முதல் 31—12—68 வரை. | 1—1—69 முதல் 31—1—69 வரை. | 42,700·00 | 36,026·00 |
| பரம்பிக்குளம் தலைக்கால்வாய் 54/7 மைலிலிருந்து 70/5 மைல் வரை. | 2—10—68 முதல் 16—2—69 வரை. | 17—2—69 முதல் 15—3—69 வரை. | 28,184·00 | 16,742·00 |
| | | | 1,15,173·00 | 64,147·00 |

இவற்றுடன்கூட, தமிழ் நாடு, கேரள மாநிலங்களிலே பாலாறு, ஆழியாறு ஆகியவற்றின் கீழ் சுமார் 30,000 ஏக்கரா பழைய ஆயக்கட்டுக்கும் பாசன வசதி அளிக்கப்பட்டது.

மேலும், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் உப்பாறு நீர்த்தேக்கத்தில் இருந்த குறைந்த அளவு நீரைக்கொண்டு, உப்பாறு ஆயக்கட்டில் சுமார் 4,000 ஏக்கர் பரப்பில் விளைந்து வந்த பயிர்களின் தேவையை நிறைவு செய்வதற்காக சிறப்புப் பாசன வசதி அளிக்கப்பட்டது. 1968-ம் ஆண்டில் வட கிழக்குப் பருவ மழை பொய்த்த போதிலும், இந்த நடவடிக்கையின் பயனாக பயிர்கள் முதிர்ந்து விளைந்தன.

இந்த ஆயக்கட்டிலே முறையான பாசன வசதி அளிக்கப்படாத பாலாறு வடிநிலப் பகுதிக்கும் அவ்வாறே பொள்ளாச்சி வட்டத்திலும் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட நீர்த் தேக்கங்களிலிருந்து விளைந்து வந்த பயிர்களுக்கு (தென்னை உட்பட) சிறப்புப் பாசன வசதி அளிக்கப்பட்டது. 1968-ம் ஆண்டில் வட கிழக்குப் பருவ மழை பொய்த்த போதிலும், இந்த நடவடிக்கையின் பயனாய் இப் பயிர்கள் முதிர்ந்து வளர்ந்தன.

வேளாண்மைத் துறை வருவாய்த் துறை முதலான பல துறைகள் முறையான ஆயக்கட்டு மேம்பாடு குறித்த பணியில் இணைந்து செயலாற்றுவதற்கென மாநில அளவில் இணக்க வாரியம் (Co-ordination Board) ஒன்றையும், திட்ட அளவில் ஒரு பயன்பாட்டுக் குழுவையும் (Utilisation Team) அரசு அமைத்துள்ளது. ஐ.எ.எஸ். அதிகாரி ஒருவர் இதன் தலைவராவார். பயிர் வகையை விருப்பம்போல் தெரிந்தெடுப்பது, கால்வாய் நீரைப் பயன்படுத்திப் பயிருக்குப் பாசன வசதி செய்வது, உரங்களைப் பயன்படுத்துவது போன்ற பணிகளை மேற்கொண்டு பாசனப் புன்செய்ப் பயிர்களை பயிரிடுவது குறித்து உழவர்களுக்கு விளக்கும் பொருட்டு வேளாண்மைத் துறை துணை இயக்குநரின் மேற்பார்வையில் 30 கட்புல விளக்கப் பண்ணைகளை அரசு துவக்கியுள்ளது. மேலும் வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத்தின் உதவியுடன் திட்டப் பகுதி உழவர்களுக்குக் கடன்கள் வழங்கும் திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அத் திட்டத்தின்கீழ், நிலங்களைப் பண்படுத்தல், விதைகளையும் உரங்களையும் எருக்களையும் வாங்குதல் முதலிய பணிகளுக்கென ஏக்கருக்கு ரூ. 600 வீதம் அந்த உழவர்களுக்குக் கடன் வழங்கப்படும். இத் திட்டம் செயல்பட்டு வருகிறது. பாசனத்திற்கு வகை செய்யப்பட்ட பரப்பளவிற்கும் திட்ட நீரைக்கொண்டு பாசனம் அளிக்கப்பட்ட பரப்பளவுக்கு இடையிலுள்ள வேறுபாட்டை நீக்க, திட்டப் பயன்பாட்டுக் குழு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

## (2) சித்தாறு - பட்டணங்கால் திட்டம்

| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| வேலைத் திட்டத்திற்கான திருத்தச் செலவு .. | 734·88 |
| மூன்றுவது திட்டத்தில் செய்யப்பட்ட செலவு (1961-62 முதல் 1965-66 வரை.) | 205·35 |
| 1966-67, 1967-68-ல் செய்த செலவு .. .. | 194·48 |
| 1968-69 திருத்த மதிப்பீடு .. .. .. | 85·00 |
| 1968-69 முடியச் செய்த மொத்தச் செலவு .. | 484·83 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு (1969-70 முதல் 1973-74 வரை). .. | 222·00 |
| 1969-70 திட்ட மதிப்பீடு .. .. .. | 80·00 |





பேச்சிப்பாறை அணைக்குக் கீழ், கோதையாற்றுக்குள் விழும் இரு சிற்றாறுகளின் குறுக்காக இரண்டு சிறிய நீர்த்தேக்கங்களை அமைப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும். இப்போதுள்ள பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளின் முழு நீர்த்தேக்க மட்டங்கள், அவற்றின் கொள் அளவை கூடுதலாக்குவதற்காக உயர்த்தப்படும். பட்டணங்கால் கால்வாய் எனப்படும் புதிய கால்வாய் ஒன்றையும் வெட்டத் திட்டமிடப்பட்டுள்ளது திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் துணை வட்டத்தில் 17,000 ஏக்கர் புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி அளிப்பதற்கென இப்போதுள்ள நீலப்பாறை கால்வாயிலிருந்து ஒரு கிளைக் கால்வாய் வெட்டப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் 15,000 ஏக்கர் இருபோக பரப்பளவும் (மொத்தப் பரப்பளவு 30,000 ஏக்கர்), திருநெல்வேலி மாவட்டத்தில் 17,000 ஏக்கராவும் புன்செய்ப் பயிரிடுவதற்கென இத் திட்டத்தின் மூலம் பாசன வசதி பெறும். இத் திட்டத்தின் செலவு-பலன் குறித்த விகிதாச்சாரம் 5 சதவீத வட்டி வீதத்தில் 1·81 ஆகும்; 10 சதவீத வட்டி வீதத்தில் 1·09 ஆகும். இந்த ஆண்டில் திட்ட முன்னேற்றத்தைப் பொறுத்தவரை, பேச்சிப்பாறை – பெருஞ்சாணி அணைகளின் தற்போதைய முழு நீர்த்தேக்க மட்டத்தை உயர்த்தும் பணி நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. சித்தாறு I-வது அணையில் மண் அணை கட்டும வேலை முடிவடையும் நிலையில் உள்ளது. சித்தாறு II-வது அணையில் மண் அணை வேலை நடந்து வருகிறது. கால்வாய் வெட்டும் பணியும் நல்ல வகையில் நடந்து வருகிறது. இத் திட்டம் 1969 ஜுன் முதல் பயன் அளிக்கத் தொடங்கி விடும்.

## (3) புதிய திட்டங்கள்

(அ) மூன்றுவது திட்டத்தைச் சேர்ந்த (1) மணிமுக்தா நதித் திட்டம், (2) ராம நதித் திட்டம், (3) கடானு நதித் திட்டம் ஆகிய 3 திட்டங்களை மூன்றுவது திட்டக் காலத்தில் மேற்கொள்ள இயலவில்லை. இத் திட்டங்கள் 1966-67-ம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, எஞ்சிய திட்டங்களாக 4-வது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றின் சுருக்க விவரம், 4-வது. திட்ட நிதி ஒதுக்கம், 1969-70 ஆண்டுக்கான நிதி ஒதுக்கம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

### (1) மணிமுக்தா நதித் திட்டம்

| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. | 117·61 |
| 1966-67, 1967-68 ஆண்டுகளில் செய்த செலவு .. | 55·99 |
| 1968-69 திருத்த மதிப்பீடு .. .. .. | 34·34 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு (1969-70 முதல் 1973-74 வரை). | 18·00 |
| 1969-70 திட்ட மதிப்பீடு .. .. .. | 18·00 |

தென் ஆர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில் மணிமுக்தா நதியின் குறுக்கே 72 கோடி 80 லட்சம் கன அடி கொள்ளளவுள்ள ஒரு நீர்த்தேக்கம் அமைப்பக்கும், வலப்புறத்தில் 7-1/2 மைல் நீளமுள்ள கால்வாய் வெட்டுவதும் இத் திட்டத்தின் நோக்கங்களாகும். தற்போது பாசனம் பெறும் சுமார் 250 ஏக்கருக்குப் பாசன உறுதி அளிக்கவும், 4,000 ஏக்கர் புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றவும் இத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் இந்த ஆண்டில் பெரும்பாலும் நிறைவேறியுள்ளது. 1969-70-ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 18 லட்சத்தைப் பயன்படுத்தி எஞ்சியுள்ள சிறு பணிகளும் வேலை நிறைவுப் பணிகளும் செய்து முடிக்கப்படும்.

## (2) ராம நதித் திட்டம்

(ரூ. லட்சத்தில்.)

| | |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. | 95·70 |
| 1966-67, 1967-68 ஆண்டுகளில் செய்த செலவு .. | 9·48 |
| 1968-69 திருத்த மதிப்பீடு .. .. .. | 5·07 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு 1969-70 முதல் 1973-74 வரை). | 75·00 |
| 1969-70 திட்ட மதிப்பீடு .. .. .. | 30·00 |

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தாமிரவருணியின் கிளையாகிய ராம நதியின் குறுக்கே 15 கோடி கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டுவதும், புதிய கால்வாய் ஒன்று வெட்டுவதும் இத் திட்டத்தின் நோக்கங்களாகும். இந்த ஆற்றின் மூலம் பாசனம் பெறும் 4,170 ஏக்கர் தற்போதைய ஆயக்கட்டு நிலங்களுக்குப் பாசன உறுதி அளிப்பதும் இத் திட்டத்தின் குறிக்கோளாகும். அம்பாசமுத்திரம் வட்டத்திலுள்ள 500 ஏக்கர் புதிய நிலப் பரப்பும் பாசனத்தின் கீழ்க் கொண்டுவரப்படும். ஆனால், இந் நிலங்களில் அக்டோபர்-பிப்ரவரி பட்டத்தில் ஒரு போகம் மட்டும் பயிரிடப்படுவதற்குப் பாசன வசதி அளிக்கப்படும். இத் திட்டத்திற்கு 1966 நவம்பரில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. பணியாளர் குடியிருப்புகள், அணைப் பகுதி, நீர் பரப்புப் பகுதி ஆகியவற்றிற்குத் தேவைப்படும் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. மண் அணை அமைக்கும் பணி நடந்து வருகிறது.

## (3) கடானு நதித் திட்டம்

(ரூ. லட்சத்தில்.)

| | |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. | 1,73·80 |
| 1966-67, 1967-68 ஆண்டுகளில் செய்த செலவு .. | 14·48 |
| 1968-69 திருத்த மதிப்பீடு .. .. .. | 14·36 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு (1969-70 முதல் 1973-74 வரை). | 1,54·00 |
| 1969-70 திட்ட மதிப்பீடு .. .. .. | 30·00 |

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், பாப்பான் குளத்திலிருந்து சுமார் 2 மைல் தொலைவில் கடானு நதியின் (தாமிர வருணியின் கிளை) குறுக்கே 38 கோடி கன அடி நீர் கொள்ளும் நீர்த் தேக்கம் ஒன்றைக் கட்டி, மேற்படி ஆற்றின் உபரி நீரைத் தேக்கி வைப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இந்த ஆற்றினால் பாசனம் பெறும் 7,112 ஏக்கர் கொண்ட தற்போதைய ஆயக்கட்டு நிலத்திற்குப் பாசன உறுதியளிப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும். மேலும் இரண்டு பருவங்களில் கூடுதலாக 1,000 ஏக்கர் நிலத்தைப் பாசனத்தின் கீழ் கொண்டு வருவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது. இத் திட்டத் திற்கு 1967 சனவரியில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. நீர் பரப்புப் பகுதி, அணைப் பகுதி, சாலை, பணியாளர் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு வேண்டிய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. மண் அணை கட்டும் பணி நிறைவேறி வருகிறது.



## (4) வைகைக் கால்வாய்களைப் புதுப்பித்தல்

(ரூ. லட்சத்தில்.)

| | |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. | 3,94·00 |
| 1967-68 ஆண்டில் செய்த செலவு .. .. | .. |
| 1968-69 திருத்த மதிப்பீடு .. .. .. | 5·64 |
| 4-வது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு (1969-70 முதல் 1973-74 வரை) | 3,93·00 |
| 1969-70 திட்ட மதிப்பீடு .. .. .. | 10·00 |

வைகை ஆற்றிலிருந்து 100-க்கு மேற்பட்ட வாய்க்கால்களின் மூலம் 414 ஏரிகளுக்கு நீர் பாய்கிறது. இவற்றின் ஆயக்கட்டு 1,32,000 ஏக்க ராகும். இவற்றில் பெரும்பாலான கால்வாய்களுக்கு தலை மதகுகள் இல்லாததால் இவற்றில் பெருக்கெடுத்து ஓடும் நீர் கட்டுப்படுத்தப்படுவ தில்லை. இவை முன்னாள் ஜமீன்தாரி பகுதிகளில் இருந்ததால், உரிய தரத்தில் பேணப்படவுமில்லை. எனவே, எல்லாக் கால்வாய்களுக்கும் ஏரிகளுக்கும் போதுமான அளவு தண்ணீரை நியாயமான வகையில் விடுவதற்காக, வைகையாற்றின் குறுக்கே இரண்டு பொறி மதகுகள் அமைத்து அதன் இரு புறத்திலும் பலவேறு வாய்க்கால் களுக்கு நீர் வழங்க கிளைக் கால்வாய் அமைக்கப்படும். பாசன வசதி அளிக்கத் திட்டமிட்டுப் பாசனவசதி அளிக்கப்படாத 13,900 ஏக்கர் நிலங்கள் இத் திட்டத்தால் பாசனம் பெறுவதுடன், 95,882 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி உறுதிப்படும். இத் திட்டத்திற்கு 1968 மார்ச் திங்களில் தான் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இது தொடக்க நிலையில் உள்ளது. வரும் ஆண்டுகளில் இத் திட்டம் முனைப்பாகச் செயல் படுத்தப்படும். இது தொடர் திட்டமாக 4-வது திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது.

## தஞ்சாவூர் வாய்க்கால்களைப் புதுப்பித்தல்

(ரூ. லட்சத்தில்.)

| | |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. | 23,00.00 |
| 1967-68-ல் ஏற்பட்ட செலவு .. .. ... | 1·57 |
| 1968-69-ம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு .. | 10·00 |
| நான்காம் திட்ட மொத்த நிதி ஒதுக்கம் (1969-70 முதல் 1973-74 வரை). | 5,00·00 |
| 1969-70-ம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு .. | 20·00 |

காவிரிக் கழிமுகத்தில் இப்போதுள்ள பாசன வாய்க்கால்களைப் புதுப் பித்தலே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின்கீழ், காவிரிக் கழிமுகத்தில் 50 ஏக்கர் பரப்பளவு வரையில் பல்வேறு தலை வாய்க்கால் களையும், கிளை வாய்க்கால்களையும் மேம்படுத்தவும் கருதியுள்ளது. இத்துடன் மிகுதியான கசிவு உள்ள இடங்களில் எல்லாம் ஆறு, வாய்க்கால் பகுதிகளில் கரை கட்டுதல், படுகை அணைகளைப் பொறி மதகுகளாக மாற்றுதல் ஆகிய பணிகளுக்காக வாய்க்கால்களுக்குக் குறுக்கே புதிய பொறி மதகுகள் கட்டுதல் ஆகிய வேலைகளைச் செய்யவும் கருதப் படுகிறது. கழிமுகத்தில் வடிகால் ஆறுகள் இவைவற்றிற்கு நேரடியாக நீர் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. புலனாய்வுகள் செய்யப்பட்டதன் அடிப்படையில், ரூ. 11·50 கோடி செலவில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப் பட்டது. பிறகு இது அடுத்து ரூ. 23·00 கோடியாக மாற்றப்பட்டது. 1,98,000 ஏக்கர் பரப்பளவுக்குப் பாசன வசதியை உறுதிப்படுத்தவும், மேலும் 3,50,000 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களுக்கு இருபோக

பாசன வசதியை ஏற்படுத்தவும் இத் திட்டம் வகை செய்யும். மூல திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னோடியாக, முன்னோடித் திட்டங்களின் கீழ் இதுவரை 21 பணிகள் நிறைவேற்ற அரசு அனுமதித்துள்ளது. இதுவரை அனுமதிக்கப்பட்ட 21 பணிகளில், 16 பணிகள் நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. 5 வாய்க்கால்களின் வேலை 1969-ல் பாசனத்துக்கு நீர்விடுவது நிறுத்தப்படும் காலப்பகுதியில் எடுத்துக் கொள்ளப்படும். 2 வாய்க்கால்களில் அதாவது A2 கோவிந்த காவிரி வாய்க்கால், ராஜன் வாய்க்கால் வேலைகள் பெரும்பாலும் முடிவடைந்து விட்டன. எஞ்சியுள்ள வாய்க்கால்களின் வேலை பல்வேறு கட்டங்களில் முன்னேறி வருகின்றது.

## (இ) வெள்ளத் தடுப்பு, கடல் அரிப்புத் தடுப்புத் திட்டங்கள்

நான்காவது ஐந்தாண்டு வரைவு திட்டத்தில், இவ்வேலைத் திட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் முறையே ரூ. 25 லட்சமும், ரூ. 10 லட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வெள்ளத் தடுப்பு, கடல் அரிப்புத் திட்டங்களின் புலனாய்வு வேலை எடுத்துக்கொள்ளப்படும். நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்திக் கொள்ள தகுந்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

1969–70-ம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் பெரிய நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 450·38 லட்சம் ஆகும்.

## சிறப்புச் சிறு பாசனத் திட்டம்

இது ஐந்தாண்டுத் திட்ட வேலையாகும். விரைவான பலனளிக்கக் கூடியவையும், ஒவ்வொன்றும் ரூ. 15 லட்சத்திற்கு குறைந்த செலவில் சிறு வேலைகளைக் கொண்டவையுமான பாசனத் திட்டங்களை எடுத்துக் கொள்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

இத் திட்டத்தின்கீழ், அடியிற்காணும் வகையைச் சேர்ந்த வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

1. உடைப்பு எடுத்த அல்லது கைவிடப்பட்ட ஏரிகளைச் சீரமைத்தல்.

2. ஆறுகளிலிருந்து பிரிந்து செல்லும் பழைய ஊற்று வாய்க்கால்கள் அல்லது வெள்ள வாய்க்காலைத் தூர் எடுத்து புதுப்பித்து புதிய ஏரிகளை அமைத்தல்.

3. பாசன ஏரிகளுக்குப் போகும் நீரைப் பெருக்குவதற்கு ஆற்றுக்குக் குறுக்கேயும், வடிகாலுக்குக் குறுக்கேயும் முறையே அணைக்கட்டு கட்டுதல் அல்லது திசை திருப்பும் சாதனங்களை ஏற்படுத்தல்.

4. உப்பங்கழியால் பாதிக்கப்படும் கடற்கரை அருகில் உள்ள சதுப்பு நிலங்களை, தக்க வடிகால் வசதி ஏற்படுத்தி பண்படுத்தல்.

5. ஆற்று நீரிறைக்கும் திட்டங்கள்.

6. குளத்திற்குக் கீழே 3,000 அடிக்குள் அமைந்த நீர் மட்டத்தை உயர்த்தும் பொருட்டு கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, மதுரை மாவட்டங்களில் குளங்களை அமைத்தல்.

7. ஓடைகளுக்குக் குறுக்கே அணைக்கட்டுகளைக் கட்டுதல்.

31—3—968 தேதி வரை (பாசனத்) தலைமைப் பொறியாளரும், (உணவு உற்பத்தி) மேற்பார்வைப் பொறியாளரும் இத்திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு பெற்றிருந்தனர். எல்லா பாசன திட்டங்களுக்கும் ஒரு சீரான முகவரி நிறுவனம் 1—4—1968 முதல் ஏற்படுத்தப்பட்டது. இத்தேதியிலிருந்து சிறப்புச் சிறுபாசன வேலைத் திட்டங்கள் யாவும் (பாசனத்) தலைமைப் பொறியாளரின் பொறுப்பில் வந்தன.



I, II, III-ம் திட்டங்களிலும், 1966–67, 1967–68 ஆண்டுத் திட்டங்களிலும் சிறப்புச் சிறுபாசனத் திட்டத்திற்கு ஏற்பட்ட செலவும், அடைந்த பலன்களும், முடித்த வேலைகள் முதலியவையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | முடிக்கப்பட்ட வேலைகள் | செலவு (ரூ. லட்சத்தில்.) | பலன்கள். புதிய பரப்பளவு எக்கர். | பலன்கள். நிலை பெற்றன. எக்கர். | பலன்கள். மூழ்கிய நிலங்களை மீட்டல். எக்கர். | கூடுதல் உணவு உற்பத்தி ஏற்படுத்தப்பட்ட வளம். (டன்.) |
|---|---|---|---|---|---|---|
| I-வது திட்டம் .. .. | 2,448 | 290·00 | 32,000 | 4,30,000 | .. | 69,750 |
| II-வது திட்டம் .. .. | 2,250 | 473·52 | .. | 1,87,500 | .. | 20,863 (பொதுப்பணித் துறை பகுதி மட்டும்) |
| III-வது திட்டம் .. .. | 4,286 | 1,113·99 | 135,402 | 4,10,581 | .. | 1,19,024 |
| 1966–67 ஆண்டுத் திட்டம் .. .. | 935 | 328·91 | 23,059 | 73,909 | 3,416 | 21,110 |
| 1967–68 ஆண்டுத் திட்டம் .. .. | 751 | 307·74 | 18,022 | 51,544 | 691 | 15,524 |

நடப்பாண்டில் (ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டு பாசன வசதி அளிக்கப் படாத பகுதிகள் உட்பட) 30,500 எக்கர் புதிய நிலங்களுக்கும் இப்போதுள்ள 74,000 எக்கர் நிலத்திற்குப் பாசன வசதி நிலைப்படுத்துதற்கும 830 வேலைகள் முடிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டன. 1968–69-ம் ஆண்டில் எதிர்பார்க்கும் செலவு ரூ. 247·60 லட்சமாகும். இதில் ரூ. 146·83 லட்சம் 1968 டிசம்பர் வரை செலவிடப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் கூடுதல் உணவு உற்பத்தி 24,500 டன் ஆகும்.

மாநில அரசு தயாரித்த (1969–70 முதல் 1973–74) நான்காவது திட்டத்தின் நோக்கம் ரூ. 1,400·00 லட்சம் முதலீடு செய்து 2·94 லட்சம் எக்கர் பாசன வசதி நிலைப்படுத்தவும், 1·24 லட்சம் புதிய நிலத்திற்குப் பாசனமும் செய்வது ஆகும்.

சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தின் கீழ், 1969–70-ம் ஆண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் (ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டு பாசன வசதி அளிக்கப்படாத பகுதி உட்பட) 21,000 எக்கர் புதிய பரப்பளவும், இப்போதுள்ள 49,000 எக்கர் ஆயக்கட்டுக்குப் பாசன வசதியை உறுதிப் படுத்தி விளைச்சலுக்குக் கொண்டுவரவும் 600 பாசன வேலைகள் முடிக்கத் திட்டமிடப்பட்டிருக்கின்றன. 1969–70-ம் ஆண்டுக்கான திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 222·18 லட்சம் ஆகும்.

## தூர் வாருதல் நிலம் பண்படுத்துதல்

தூர் ஏறிவிட்டதன் காரணமாக கொள் அளவு இழந்துவிட்ட ஏரிகளின் படுகைகளில் தூர் எடுக்கவும் முழு ஏரி மட்டத்தை உயர்த்துவதன் மூலம் இழந்த முழு சேமிப்பின் அளவில் ஒரு பகுதியையேனும் மீட்கும் வகையிலே அத்தகைய ஏரிகளின் முழு ஏரி மட்டத்தை உயர்த்துவதற்கும் இத் திட்டத்தில் கருதப்பட்டுள்ளது. தெரிந்தெடுத்த மாவட்டங்களில் சோதனைத் திட்டமாகத் தொடங்கிய இத் திட்டம், மாநிலம் முழுவதும் விரைவில் விரிவுபடுத்தப்படும். I-வது II-வது III-வது திட்டங்களிலும், தொடர்ந்து இரு ஆண்டுத் திட்டங்களிலும் தூர் வாருதல், நிலம் பண்படுத்தல் திட்டத்தின்கீழ் ஏற்பட்ட செலவும், முடிக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கையும் பலன்கள் முதலியவையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | முடிக்கப்பட்ட வேலைகள். | செலவு (ரூ. லட்சத்தில்,) | பலன்கள். பாசன வசதி அளிக்கப் படாத பகுதிகள் | ஏரி எதிர் வாயில் நிலம் பண்படுத் தல். | கூடுதல் உணவு உற்பத்தி ஏற்பட்ட வளம் |
|---|---|---|---|---|---|
| | | | எக்கர். | எக்கர். | டன்கள். |
| II-வது திட்டம் | 38 | 41·75 | 2,208 | 604 | 1,285 |
| III-வது திட்டம் | 53 | 108·05 | 2,039 | 1,038 | 1,279 |
| 1967–68 ஆண்டுத் திட்டம். | 5 | 21·14 | 174 | 45 | 98 |
| 1967–68 | 15 | (—)5·48* | 489 | 209 | 297 |

(*மற்ற கோட்டங்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்ட யந்திரங்களுக்கு வாடகைக் கட்டணம் காரணமாக, ஏற்பட்ட பெரும் நிலுவைத் தொகைகள் வசூலிக்கப்பட்டதால் செலவு ஏற்பட்டது.)





(1968–69) நடப்பாண்டில், ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டு பாசன வசதி அளிக்கப்படாத 575 எக்கர் நிலத்துக்குப் பாசனம் அளிப்பதற்கும், 290 எக்கர் ஏரி எதிர்வாயில் நிலங்களைப் பண்படுத்துவதற்கும் 12 வேலைகள் முடிக்கக் கருதப்பட்டுள்ளன. 1968–69-ம் ஆண்டுக்கான தோராயச் செலவு ரூ. 10·28 லட்சம் ஆகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (1969–70 முதல் 1973–74) நோக்கம், 1,250 எக்கர் ஏரி எதிர்வாயில் நிலங்கள் பயனடையவும் ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டு பாசனம் அளிக்கப்படாத 2,500 எக்கர் நிலங்களைப் பாசனத்தின் கீழ்க்கொண்டு வரவும் ரூ. 60·00 லட்சம் செலவில் 50 ஏரிகளைப் பண்படுத்துவது ஆகும். இதனால் ஏற்படும் உணவு உற்பத்தி வளம் 1,563 மெட்ரிக் டன் ஆகும். 1969–70-ம் ஆண்டுத் திட்டத்தைப் பொருத்தவரையில் ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டு பாசனம் அளிக்கப்படாத 500 எக்கர் நிலங்கள் பாசனம் அடையவும் 250 எக்கர் ஏரி எதிர்வாயில் நிலங்களைப் புண்படுத்தவும், 10 வேலைகள், 313 டன் உணவு உற்பத்தி வளத்துடன் திட்டமிடப்பட்டுள்ளன. 1969–70-ம் ஆண்டுத் திட்ட மதிப்பீடு ரூ. 12·00 லட்சம் ஆகும்.

## நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வேலைத் திட்டங்கள் வருவாய் உற்பத்தியிலோ அல்லது ஆதாரக் கொள்கையின் அடிப்படையிலோ அன்றி பலன்–செலவு விகிதாசாரம், இத்திட்டங்களினால் அடையும் மறைமுகமான பலன்கள், இத்திட்டங்களின் கீழ் வரும் பகுதிகளின் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் அடிப் படையில் அமைந்துள்ளன. இம் மாநிலத்தில் கிடைக்கக்கூடிய சுமார் 94 சதவீத பாசன வளம் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டுவிட்டது. மேலும் மேற்பரப்பு நீர்ப்பாசன வளர்ச்சிக்கு மிகக் குறைந்த வாய்ப்பு உள்ளது. எனவே, பயன்படுத்தாது எஞ்சியுள்ள நீர் பெருக்கைப் பயன் படுத்துவதற்கு நான்காம் ஐந்தாண்டுத் திட்டப் பாசன வேலைகள் திட்டமிடப்பட்டுள்ளன. இதனால் ஆதாரம் புதுப்பிப்பதன் மூலமாகப் பழைய பாசன முறைகளைச் சீர்படுத்துவதன் அடிப்படையிலும், அதனால் [illegible]றந்த நீர்வரவும், பாசன மேம்பாடு அடையவும், இவற்றால் எந்த [illegible]று அளவுக்கு மிச்சம் ஏற்படக்கூடுமோ அந்த அளவுக்குப் பாசன [illegible]ரிவாக்க வேலை மேற்கொள்ளப்படலாம்.

வரைவு நான்காவது திட்டத்தில், கீழ்க்காணும் தொடர் திட்டங்களுக்கு வசியமான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அவையாவன:— [illegible]ம்பிக்குளம்-ஆழியாறு திட்டம், சித்தாறு-பட்டணங்கால் திட்டம், [illegible]மநதி, கடானா நதி, மணிமுக்தா நதி, வைகை வாய்க்கால்களை [illegible]ஒப்பித்தல் முதலியன.

வெள்ளத் தடுப்பு, கடல் அரிப்புத் தடுப்புத் திட்டங்களன்றி கீழ்க் [illegible]ணும் புதிய பாசனத் திட்டங்களை மேற்கொள்ளவும் இத் திட்டத்தில் [illegible]கை செய்யப்பட்டுள்ளது:—

(1) தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி வாய்க்கால்களை [illegible]ஒப்பித்தல்.

(2) பெரியாறு வாய்க்கால்களை மேம்படுத்தல்.

(3) அனிஞசி திட்டம்.

(4) பரப்பலாறு திட்டம்.

(5) பாலாறு பொரந்தலாறு திட்டம்.

(6) சின்னாறு திட்டம்.

(7) காவிரிக் கழிமுகத்தில் வடிகால் திட்டங்கள்.

[1969 மார்ச் 17

(8) கொல்லிமலைகள் அருகில் அய்யாறுக்குக் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல்.

(9) தண்டரை அணைக்கட்டுத் திட்டம்.

(10) நந்தன் வாய்க்காலை மீண்டும் பயனுக்குக் கொண்டு வருதல்.

(11) மருத நதித் திட்டம்.

(12) கருப்பா நதித் திட்டம்.

(13) வைப்பாற்றுத் திட்டம்.

(14) பொன்னணியாறு திட்டம்.

(15) பிளவுக்கால் திட்டம்.

(16) தொட்டஹல்லா திட்டம்.

பாசன மத்திய செய்முறைக் குழு IV-வது திட்டத்தில் ரூ. 3,901 லட்சம் முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது. இத் திட்டம் திட்ட ஆணைக்குழுவின் பரிசீலனையில் இருந்துவருகிறது.

1969-70-ம் ஆண்டுத் திட்டத்தில், தொடர்த் திட்டங்களுக்கும், கீழ்க்காணும் புதிய திட்டங்கள் முதலியவற்றிற்கும் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது :—

(i) கொல்லி மலைக்கருகில், அய்யாறுக்குக் குறுக்கே அணைக் கட்டு கட்டுதல்.

(ii) தண்டரை அணைக்கட்டுத் திட்டம்.

(iii) நந்தன் வாய்க்காலை மீண்டும் பயனுக்குக் கொண்டு வருதல்.

(iv) மருத நதித் திட்டம்.

(v) கருப்பா நதித் திட்டம்.

(vi) ஆத்தங்கரையில் வைப்பாறுக்குக் குறுக்கே அணைக்கட்டு.

(vii) பொன்னணியார் திட்டம்.

(viii) பிளவுக்கால் திட்டம்.

(ix) தொட்ட ஹல்லா திட்டம்.

## திட்டத்தின்பாற்படாத வேலைகள்

ஐந்தாண்டுத் திட்ட வேலைகளுடனும், திட்டத்தின்கீழ் வராத பல் வேறு வேலைத் திட்டங்களும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வராத முக்கியமான வேலைகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

| | | மதிப்பிட்ட செலவு. | தற்போதைய கட்டம். |
|---|---|---|---|
| 1. | சோழவூருக்கு அருகில் பொன்னியாற்றுக்குக் குறுக்கே அணைக் கட்டு கட்டுதல். | ரூ. 30 லட்சம் (திருத்தப் பட்டது). | 1,968 அடி நீளமுள்ள அணைக்கட்டு முழுவதும் கட்டி முடிக்கப்பட்டது. தலைமதகு வேலையும் கரைகட்டும் வேலையும் நடைபெற்று வருகிறது. |
| 2. | காவிரிக்கழிமுகத்தில் 123 எ வகுப்பு வாய்க்கால்களில் கார் வாருகல். | ரூ. 5 லட்சம். | வேலை நடைபெற்று வருகிறது. |



1969 மார்ச் 17]

| | | மதிப்பிட்ட செலவு. | தற்போதைய கட்டம். |
|---|---|---|---|
| 3. | காவிரி, வெண்ணாறு வடிகால்களில் பாசி அகற்றுதல். | ரூ. 1·5 லட்சம். | வேலை நடைபெற்று வருகிறது. |
| 4. | 13 அமராவதி வாய்க் கால்களைப் புதுப் பித்தல். | ரூ. 13·08 லட்சம். | பல்வேறு கட்டங்களில் முன்னேறி வருகிறது. |
| 5. | 9 தாமிரவருணி வாய்க்கால்களைப் புதுப்பித்தல். | ரூ. 24·56 லடசம. | 9 வாய்க்கால்களில் 4 வாய்க்கால் வேலை முடிந்தது. எஞ்சிய வாய்க்கால் வேலை பல் வேறு கட்டங்களில் முன்னேறி வருகிறது. |
| 6. | மஞ்சளாறு திட்டம். | ரூ. 109·00 லட்சம். | கால்வாயில் எல்லாப் பணிகளும் முடி வுற்றன. மண் அணை யில் தார் போடும் பணியும் வடிவுக் கதவுகள் அமைக்கும் பணியும் முடிவடைய வேண்டியுள்ளது. |
| 7. | வஞ்சி ஓடையை மேம்படுத்துதல். | ரூ. 0·50 லட்சம். | எறத்தாழ பணி முடிந்து விட்டது. |

## நிலநீர் ஆய்வு

### 1. பொதுப்பணித் துறை நிறைவேற்றும் பணிகள்

| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| தற்காலிக நான்காம் திட்டச் செலவு .. .. | 60·00 |
| 1967–68-ல் செலவானது .. .. .. | 18·99 |
| 1968–69-ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு .. .. | 10·69 |
| 1969–70-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு .. | 7·66 |

நீர் வழங்கும் நிலைமைகளை ஆராய திரு. ஜோசப் பார்னியா தலைமையிலான ஐக்கிய நாடுகள் குழு ஒன்று சென்னைக்கு வந்தது; நிலநீர் வளத்தைப் பயன்படுத்தி மேம்படுத்துவதுதான், நீர்ப் பற்றாக் குறையைப் போக்குவதற்குச் சிறந்த வழியாகுமென்று கருத்தறிவித்தது. இக்கருத்திற்கு முதல் படியாக, முறையாக நிலநீர்ப் பரிசோதனையை ஆராய்ந்து, நடத்துவதற்காக இந்த அரசாங்கத்தின் பொதுப்பணித் துறையில் நிலநீர் ஆய்வுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்திய அரசின் உணவு-வேளாண்மை அமைச்சு, நிலநீர் வாயில்கள் ஆய்வுத் திட்டத்தைத் தயாரிக்கச் சில வழிமுறைகளைக் கூறியது.

அதன் கருத்துரைப்படி, இந்த அரசாங்கம் ரூ. 55 50 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் (கருவிகள் வாங்கவும் நிர்வகிக்கவும் ரூ. 44 லட்சமும் பணியாளர்களுக்காகும் செலவுக்கு ரூ. 11·50 லட்சமும்) விரிவான திட்டத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியது. இம்மாநிலத்தில் நிலநீர் வாயில்களை ஆராய்ந்து கண்டறிவதற்கு இத்திட்டம் ஐந்து ஆண்டுக் காலம் செயல்படுத்தப்படும். மேற்சொன்ன திட்டத்தை 1968–69-ம் ஆண்டிலிருந்து நிறைவேற்ற, பொதுப்பணித் துறைப் பிரிவு ஒன்று அவசியமான பணியாளர்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பகுதிகள் நீங்கலாகத் தமிழ்நாடு முழுவதிலும் நிலநீர் வாயில்கள் பற்றி மும்முரா ஆய்வு நடத்தி விரிவாகக் கண்டறிவதே மேற்படி திட்டத்தின் நோக்கமாகும். தொடக்கத்தில் கீழ்க்காணும் ஆறு மாதிரித் தொகுதிகள் ஆய்வுக்கு மேற்கொள்ளப்படத் திட்டமிடப்பட்டுள்ளது :—

1. வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் சில பகுதிகள்.
2. கோயம்புத்தூர் மாவட்டம்.
3. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள புதுக்கோட்டைப் பகுதி.
4. வைகை ஆற்றுக் கழிமுகம்.
5. இராமநாதபுரம் மாவட்டம்.
6. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் சில பகுதிகள்.

மேற்படி திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒப்பளிக்கப்பட்ட பிரிவு, 3—6—1968-ல் அமைக்கப்பட்டது; திருச்சியில் இதன் தலைமையிடம் உள்ளது; திருச்சி, காரைக்குடிப் பகுதிகளிலும் வைகை, வைப்பாறு கழிமுகம் பகுதிகளிலும் ஆய்வு நடத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மேலும் கருவிகளையும் புவியியல் ஆய்வுப் பணியாளர்களை அமர்த்தவும் அமராவதி நொய்யல் கழிமுகப் பகுதிகளுக்கு இந்த ஆய்வை விரிவாக்கவும் இந்திய அரசின் குழாய்க்கிணறு ஆய்வு நிறுவனத்தின் கருத்துரையின் அடிப்படையில், திட்ட மதிப்பீட்டை ரூ. 87 லட்சத்திற்குத் தலைமைப் பொறியாளர் திருத்தி யமைத்தார். (கருவிகள் வாங்குதல் இயக்கும் செலவுகளுக்கு ரூ. 74·50 லட்சமும் பணியாளர் செலவுக்கு ரூ 12·50 லட்சமும்.) இது அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.

2. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிலநீர் நிறுவனம் நிறைவேற்றிய பணிகள்

| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| தற்காலிக நான்காம் திட்டச் செலவு .. .. | 42·00 |
| 1967-68-ல் செலவானது .. .. .. | 10·61 |
| 1968-69-ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு .. | 6·90 |
| 1969-70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. .. .. .. | 9·42 |

தேர்ந்தெடுத்த பகுதிகளில், அதாவது சென்னை நகர், அதன் சுற்றுப் புறங்கள், பாலாறு கழிமுகப் பகுதி, நெய்வேலிப் பகுதி, காவிரிக் கழிமுகம் ஆகிய இடங்களில் நிலநீர் வாய்ப்புகளை ஆராயும் சிறப்புத் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்பளித்துள்ளது. இந்த நிறுவனம் 1966 மார்ச் முதல் அதன் செயலைத் துவக்கியது; முதல் மூன்று பகுதிகளில் அதாவது சென்னை மாநகரும் அதன் சுற்றுப்புறமும் பாலாற்றுப் பகுதி, நெய்வேலி பகுதி ஆகிய இடங்களில் ஆய்வு முடிவுறும் (முதல் நிலை) நிலையிலுள்ளது. காவிரி கழிமுகப் பகுதியில் விரிவாகவும் பரந்தும் ஆராய்ச்சி நடத்துதல் நான்காவது திட்டக் காலத்தில் இத் திட்டத்தின் II-ம் நிலையில் மேற்கொள்ளப்படும்.



### வீராணம் நீர் வழங்கும் திட்டம்

அன்றாடம் 400 லட்சம் காலன் நீர் வழங்கும் வாயிலாகக் காவிரி ஏற்பாட்டில் வீராணம் ஏரியிலிருந்து நீர் பெற்று சென்னை மாநகருக்கு அதிக அளவு நீர் வழங்குவதற்கான திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்பளித்துள்ளது. இதை நிறுவுவதற்கு இத் திட்டத்திற்கு ரூ. 21·30 கோடி செலவாகுமென்றும், ஆண்டுதோறும் பேணிவர ரூ. 45 லட்சம் செலவாகுமென்றும் மதிப்பிடப்படுகிறது. மொத்தம் 135 மைல் நீளத்திற்கு 66" சுற்றளவுள்ள கான்கிரீட் குழாய்கள் மூலம் சென்னை மாநகருக்கு நீர் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

வீராணத்தில் தொடக்கத்தில் நீர் இறைக்கப்பட்டு இடையே வடலூர், திண்டிவனம் ஆகிய நீரேற்று நிலையங்களில் இந்நீர் இறைக்கப்படும். இத் திட்டத்திற்கு விரிவான திட்டங்களையும் மதிப்பீடுகளையும் ஆராய்ந்து தயாரிக்கும் பணி நடந்து வருகிறது; 31-3-1969-ல் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1969 ஏப்ரல் முதல் இப்பணி முனைப்பாகத் தொடங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்திற்கு 1969-70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 50 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து

### கூவம் ஆறு மேம்பாட்டுத் திட்டம்

சென்னை நகரில் ஓடும் கூவம் ஆற்றைக் கடல் ஓதம் உடையதாகவும் தூய்மையானதாகவும் நீர்ப்போக்குவரத்துக்கு ஏற்றதாகவும் அமைக்கும் பொருட்டு, இரண்டு நிலைகளில் நிறைவேற்றப்படக்கூடிய ரூ. 118·50 லட்சம் செலவாகும் வேலைத் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்பளித்துள்ளது. ரூ. 32 லட்சம் செலவாகும் இத் திட்டத்தின் முதல்நிலையை நிறைவேற்றுவதற்கு 1967 ஜூலையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது; இரண்டாம் நிலைப் பணிகளுக்கு ரூ. 56·50 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது; மேலும் இந்த ஆற்றின் மருங்கில் குடிசை வாழ்வோரைக் குடியமர்த்துவதற்கு ரூ. 30 லட்சம் செலவாகும்.

இத் திட்டத்தின் முதல் நிலையில் கீழ்க்காணும் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன :—

| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| 1. சங்கமுகத்தில் கடலோர அணைக்கட்டுதலும் பயிற்சிப் பணிகளும் .. .. .. | 13·70 |
| 2. தூறு எடுத்து அவற்றை அகற்றுவது முதலியவற்றுக்கான செலவு .. .. .. | 10·30 |
| 3. கூவம் ஆற்றின் சங்கமுகத்தில் மணல் எடுப்புக் குழாய் நிறுவப்படுவதற்காகத் தோணித்துறை கட்டுதல் .. .. .. .. | 8·00 |
| | 32·00 |

முதல் நிலையில் சங்கமுகத்தில் கடலோர அணை கட்டப்படும்; கால்வாயைக் கடலுக்குள் செலுத்துவதும் மணல்வாரிக் குழாய் நிறுவுவதும் தோணித் துறை அமைப்பதும் செயல்படுத்தப்படும். இரண்டாம் நிலையில், ஆற்றினை ஆழப்படுத்தி இதன் இருமருங்குகளையும் எழிற்படுத்துதல் செயல்படுத்தப்படும்; பூங்கா, புல்வெளி, நடைபாதைகள் அமைத்தல் மூலம் எழிற்படுத்தப்படும். இத் திட்டத்தின் முதல் நிலை முடிக்கப்பட்டால் கூவம் ஆறு, ஏற்றவற்றமுள்ள ஆறாக அமையும்; இதன் பிறகு எழிற்படுத்தும் பணி

மேற்கொள்ளப்படும். இதற்கென தாழ் குடியிருப்போரைக் குடியமர்த்தும் பணியும் ஒரே காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதல் நிலைப் பணி நடைபெறுகிறது; ஆற்றின் சங்கமுகத்தில் கரையமைக்கும் வேலை, பெரும்பாலும் முடிவுபெற்றுள்ளது; அங்கு ஆற்றின் இருமருங்கிலும் கரைகட்டும் பணி விரைந்து நடைபெற்று வருகிறது. மணல்வாரி விசையேற்றம் வாங்கி நிறுவுவதற்கான ஏற்பாடும் ஆற்றின் சங்கமுகத்தில் கடலோர அணை கட்டும் ஏற்பாடும் செய்யப்பட்டு வருகின்றன. 1968–69-ல் (1969 பிப்ரவரி வரையில்) ரூ. 2·68 லட்சம் செலவிடப் பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு மொத்தம் ரூ. 3·92 லட்சம் இதுவரையில் செலவழிக்கப்பட்டுள்ளது. 1968–69-ல் ரூ. 5·00 லட்சம் இப் பணிக்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1969–70-ம் ஆண்டு ரூ. 5 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் முதல் நிலைப் பணி 1970–71-ம் ஆண்டு இறுதிக்குள் முடிவுறும்.

## பக்கிங்காம் கால்வாய் மேம்பாட்டுத் திட்டம்

சென்னை மாநகரிலுள்ள பக்கிங்காம் கால்வாயை மேம்படுத்தும் சிறு அளவுப் பணிகள் மேற்கொள்ளும் திட்டத்திற்கு 1967 ஆகஸ்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் இப்பணிக்கு ஆகும் மதிப்பீட்டுச் செலவு ரூ. 44 லட்சம் எதிர்பார்க்கப்படுமாறு இத் திட்டம், கீழ்க்காணும் பணிகளுக்கு வழி வகுக்கிறது :—

| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| 1. மூன்றுவது திட்டத்திலிருந்து மேற்கொண்ட பணிகள் .. .. .. .. | 0·85 |
| 2. இயந்திரங்கள்— | |
| கூவம் பணிக்கு மணல்வாரி விசையேற்றம் வாங்குதல்; பக்கிங்காம் கால்வாய்ப் பணிக்கு தகுந்த பொருத்திகளுடன் சங்கிலிச் சக்கர வண்டியுடன் இணைக்கப்பட்ட மண்வெட்டி இயந்திரத்தை வாங்குதல் .. .. .. | 19·15 |
| 3. சேர்விட வசதிகள்— | |
| கலோனல் லாஸ் பாலத்திற்கு அருகில் சிந்தாதிரிப்பேட்டையில் தோணித் துறை கட்டுதல் .. | 10·60 |
| 4. நீர்க்கரைக் கட்டியிருப்பு வழிச்சாலை இணைப்புகள் முதலியன— | |
| (i) தெற்கு பக்கிங்காம் கால்வாயின் 3/0 மைலிலிருந்து 3/5 வரையில் இருமருங்கிலும் பிதுக்கத்தை நிறுத்திவைப்பற்கு வலுவூட்டிய கான்கிரீட் சிமிட்டித் தூண்களை அமைத்தல் .. .. .. | 11·42 |
| (ii) வடக்கு பக்கிங்காம் கால்வாயின் 1–0+330 முதல் 1–5 வரையில் தோணித்துறையில் சாலைகள் அமைத்தலும் அவற்றிற்கு தார் போடுதலும் .. .. .. | 1·43 |
| (iii) வடக்கு பக்கிங்காம் கால்வாயின் 2–7 முதல் 3–1+330 வரையில் கற்கள் தோணித்துறையில் சாலை அமைத்தல் .. .. | 0·55 |
| | 44·00 |





இப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. 1968–69-ம் ஆண்டில் ரூ. 5 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. 1969–70-ம் ஆண்டிற்கான இத் திட்டத்திற்கு ரூ. 8 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

இப் பணிகள் 1973–74 இறுதியில் முடிவடையுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

(1968–69-ம் ஆண்டில்) 1968-ம் ஆண்டு டிசம்பர் இறுதிக்குள் இத் திட்டத்திற்கு செலவு ரூ. 1·66 லட்சம் ஆகும்.

திட்டமிட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டால் பக்கிங்காம் கால்வாய் மாநகரின் எல்லைக்குள் சிறப்பாகப் பேணப்படும். தற்போதுள்ள படகு போக்குவரத்து சேர்விட வசதிகள் அளிக்கப்பட முடியும். இப்போது இத்தகைய வசதிகள் யாவும் இல்லை.

## பருவ நிலைகள்

1968–69-ம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை காலங் கடந்து பெய்தது. இம்மழை காவிரி, பவானி, அமராவதி, பெரியாறு, தாமிரவருணி, கோதையாறு ஆகியவற்றின் நீர் வரவுப் பகுதிகளில் வழக்கமாகப் பெய்வதைவிடக் குறைவாகவே பெய்தது. மேற்படி நீர் வரப்புப் பகுதிகளில் வடகிழக்குப் பருவ மழைகூடப் பொய்த்து விட்டது. இத்தகைய மாறுபாடானப் பருவ நிலைகள் காரணமாகவே கிடைத்த நீரை காவிரிச் சங்க முகத்திற்கும், பெரியாறு, கோதையாறு திட்டங்களுக்கும் பகிர்ந்தளிப்பதில் இடர்பாடுகள் நேரிட்டன. இதன் விளைவாகவே நீர் வழங்கும் அளவைக் குறைக்கவும், முறை ஏற்பாட்டினை மேற்கொள்ளவும் அவசியம் நேரிட்டது.

பாசனப் பருவ காலத்தின் தொடக்கத்திலிருந்தே மேட்டூர் நீர்த் தேக்கத்தில் மிகவும் குறைந்த அளவிலேயே நீர் தேங்கி இருந்த காரணத்தினாலும் தென்மேற்குப் பருவ மழை காலங் கடந்து பெய்ததாலும் நீர்த் தேக்கம் 1968, ஜூலை 7-ம் நாளன்று தான், அதாவது 25 நாள் காலந்தாழ்த்திப் பாசனத்திற்குத் திறக்கப்பட இயன்றது. இதன் விளைவாக காவிரி சங்கமுகப் பகுதியில் பெருவாரியான நிலப்பரப்பில் குறுகிய கால அல்லது நடுத்தரக் கால வகையைச் சேர்ந்த இரண்டே பயிர்களை விளைவிப்பதற்காக இயல்பான பயிர் முறையை மாற்றி வேறு முறை பின்பற்ற வேண்டியதாயிற்று. தென்மேற்குப் பருவ மழைக் காலத்தின் போதும் மேட்டூர் நீர்த்தேக்கம் நிறைந்து உபரி நிலை ஏற்படவில்லை. மெர்க்காராவில் காவிரி நீர்வரவுப் பகுதியில் தென்மேற்குப் பருவ மழைக் காலத்தின்போது 7 சத வீதம் குறைவாகவே மழை பொழிந்தது. நீர்த் தேக்கத்தினுள் 11 சதவீதம் குறைவாகவே நீர் வந்து சேர்ந்தது. இந்தக் காலத்தின் போது நீர்த்தேக்கத்திற்கு கிடைத்த நீரைக் கொண்டு பாசனத்திற்கு நீர் விடுவதை விவேகமுடனும் விழிப்போடும் முறைபடுத்தியதன் மூலமாக குறுவையும், ஆடுதுறை 27 நெல்லும் செவ்வனே விளைவிக்கப்பட்டன.

காவிரி நீர் வரவுப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை முற்றிலும் தவறிவிட்டது. மெர்க்காராவில் 64 சத வீதம் அளவிற்கு மழை குறைந்து விட்டது; மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு நீர் வரவு 36 சத வீதம் குறைந்து விட்டது. இந்த நிலைமைகளின் காரணமாக, கட்டுப்பாடான அளவுகளில் முறை ஏற்பாட்டினைப் பின்பற்றி பாசனத்திற்கு நீர் வழங்க வேண்டியதாயிற்று. பாசனம் பெறுகின்ற பகுதிகளில் நல்ல மழை பெய்த போதெல்லாம் நீர்த் தேக்கத்திலிருந்து அந்தப் பகுதிகளுக்கு நீர் விடுவதும் நிறுத்தப்பட்டது. சம்பாப் பயிர்கள் நன்றாகவே விளைந்து அறுவடை செய்யப்பட்டன. தாளடிப் பயிர்களைக் காக்கும் பொருட்டு 16—2—1969 ம் நாள் முதல் மேட்டூர் அணையிலிருந்து நீர் வழங்கப்பட்டது. இந் நீர்த் தேக்கம், பாசனத்திற்கு 23—2—1969-ல் மூடப்பட்டது. இந்த இறுதிப் பாசனம் மூலம் 50,000 எக்கர் காக்கப்பட்டிருக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

புதிய கட்டளை உயர்மட்டக் கால்வாயும் புள்ளம்பாடிக் கால்வாயும் 1968-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் நாளன்று திறந்து விடப்பட்டு 15—2—1969 வரையில் இரண்டு மாதங்கள் கூடுதலான காலத்திற்கு நீர் வழங்கப்படவும் அனுமதிக்கப்பட்டது. அவற்றின் பாசனத்திலுள்ள பயிர்களைக் காக்க 1969, பிப்ரவரி 23-ம் நாள் வரையில் தொடர்ந்து வழங்கப்பட்ட நீரை இக் கால்வாய்களும் பயன்படுத்திக் கொண்டன. மேட்டூர்க் கால்வாயும் 4—8—1968-ல் பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டது. 1969 ஜனவரி, 15-ம் நாள் வரையில் கூடுதலான ஒருமாத காலத்திற்கு நீர் வழங்கப் படவும் அனுமதிக்கப்பட்டது.

கீழ் பவானி தலைக் கால்வாயின் கீழ்உள்ள முதல் முறைப் பாசன ஆயக்கட்டிற்கும் 1—8—1968-ம் நாளிலிருந்து நீர் வழங்கப்பட்டது. கூடுதலாக 20 நாட்களுக்கு நீர் வழங்கப்பட்ட பின்னர் இக் கால்வாய் 21—12—1968-ம் நாள் மூடப்பட்டது. வடகிழக்குப் பருவ மழை பொய்த்த தாலும், நீர்த் தேக்கங்களில் போதிய அளவு நீர் இல்லாததாலும், இரண்டாம்முறை பாசன ஆயக்கட்டு நிலங்களுக்கு நீர் வழங்க முடியவில்லை. இருந்த போதிலும், குரங்கன்பள்ளம் வடிகாற் பாசனத்தின் கீழ் விளைந்து வந்த பயிர்களைக் காக்கும்பொருட்டு தலைக் கால்வாய் மூலம் ஏறத்தாழ 10 நாட்கள் தனிப்பட்ட வகையில் நீர் வழங்கப்பட்டது.

அமராவதி தலைக் கால்வாய், வழக்கமான நாளான ஆகஸ்ட் திங்கள் முதல் நாளன்று பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டது. வடகிழக்குப் பருவ மழையின் போது நீர்த் தேக்கத்தில், 50 சத வீதம் நீர் தான் சேர்ந்தது. நீர்த் தேக்கத்தில் குறைந்த அளவு நீர் இருப்பு காரணமாக, அமராவதி தலைக் கால்வாய்க்கு 31—1—1969-க்கு மேல் நீர் வழங்க முடியவில்லை. நீர்த் தேக்கத்திலிருந்து நீரை, அமராவதி பழைய ஆயக் கட்டிற்கு, மார்ச் 1969 வரை வழங்க வேண்டி இருந்தது ஆதலால் முறை மாற்றத்தின் மூலம் நீர் வழங்கப்பட்டு, இடையிடையே பழைய ஆயக்கட்டிற்கும் நீர் வழங்கப்படுகிறது. அமராவதி தலைக் கால்வாயில், விவசாயிகள் 8,500 ஏக்கர் பரப்பில் சம்பா விளைச்சலை மேற்கொண்ட தால், நீர் வழங்குவது நீட்டிக்கப்பட்டது. இக் கால்வாயின்கீழ் விளையும் பயிர்களைக் காப்பாற்ற, நீர்த் தேக்கத்தில் இருக்கவேண்டிய குறைந்த அளவு நீர் அளவையும் குறைத்து, 15—2—1969 முதல் 6 நாட்களுக்கு தனிப்பட்ட வகையில் நீர் வழங்கப்பட்டது.

பருவத் தொடக்கத்தில், நீர்த் தேக்கத்தில், நீர் இருப்பு குறைவாக இருந்தாலும், தென்மேற்குப் பருவ மழை காலம் தாழ்த்துப் பெய்த தாலும் பெரியாறு, கம்பம் பள்ளத்தாக்கில் இரு போகப் பயிர் விளையும் பகுதிகளில் முதல் போகப் பயிருக்கு, 35 நாட்கள் கழித்தே, அதாவது 5—7—1968 முதற்கொண்டே நீர் வழங்க அனுமதிக்கப்பட்டது. தென் மேற்குப் பருவ மழையின் போது, பெய்த மழை அளவும், நீர்த் தேக்கத்தில் வந்து அடைந்த நீரின் அளவும் வழக்கமான அளவில் இருந்தது. வட கிழக்குப் பருவ மழை காலத்தில் வழக்கமான அளவை விட பெய்த மழை அளவு 31 சத வீதமும் நீர் கோள் பகுதிகளிலிருந்து வரும் நீரின் அளவு 35 சத வீதமும் குறைந்தது. ஒரு போகப் பயிர் விளையும் பகுதிக்கு வழக்கமான நாளான 15—8—1968 அன்று நீர் விடப் பட்டது. திருமங்கலக் கால்வாய்க்கு, வழக்கமாக ஜூன் 1-ம் தேதி விடப் படும் நீர், 12—9—1968 முதல் விடப்பட்டது. பெரியாறு புதிய விரிவுப் பகுதிக்கு, செப்டம்பர் திங்கள் 15-ம் நாள் வழக்கமாக விடப்படும் நீர், 6—11—1968 முதல் விடப்பட்டது. பெரியாறு நீர்கோள் பகுதியிலும், வைகை நீர்கோள் பகுதியிலும், வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததால், முறைப் பாசன ஏற்பாட்டின்படி, 1969-ம் ஆண்டு ஜனவரி திங்கள் இறுதி வரைதான் நீர் வழங்க முடிந்தது. வைகை பழைய ஆயக்கட்டிற்கு, தனி முகமாக நீர் விடப்பட்டது. பெரியாறு ஆயக்கட்டுப் பகுதியில், பெரி யாறு தலைக்கால்வாய் 18-வது மைல் வரை உள்ள 11,000 ஏக்கர் நிலத் தில் விளைந்துள்ள பயிர்களுக்கு, வைகை நீர்த் தேக்கத்திலிருந்து 17—2—1969, 19—2—1969 ஆகிய இரு நாட்களிலும் தனிப்பட்ட வகையில்





நீர் பாய்ச்சப்பட்டது. 3,000 ஏக்கர் நிலத்தில் முழு விளைச்சலும், எஞ்சிய 8,000 ஏக்கர் நிலத்தில் ஓர் அளவு விளைச்சலும், இந்த தனிப்பட்ட பாசனத் தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. பாசனத்திற்காக, பெரியாறு ஏரியிலோ, வைகை நீர்த் தேக்கத்திலோ நீர் இருப்பு ஏதும் இல்லை. பெரியாறு பகுதியில் உள்ள 1,77,000 ஏக்கர் நிலத்தில் சுமார் 84,000 ஏக்கரில் முழு விளைச்சலும், 20,000 ஏக்கர் நிலத்தில் சற்று குறைந்த விளைச்சலும் எதிர்பார்க்கப்படுகிறது. நீர் தேவையுள்ள மீதிப் பகுதிகள், உள்ளூர் மழையை எதிர்பார்க்க வேண்டும். அப்படி இல்லை எனில் உள்ளூர் வாயில்களிலிருந்து நீரை இறைத்துக் கொள்ளவேண்டும். திருமங்கல கால்வாய்க்கு நீர் விடுவது, 27—1—1969 வரை அனுமதிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தில், பரப்பளவு முழுவதிலும் குறுவைப் பயிர் விளைவிப்பதற்காக முன்னதாகவே 10—6—1968 முதல் நீர் வழங்கு வது அனுமதிக்கப்பட்டது. இந் நீர்த்தேக்கத்தில் ஜூன் திங்கள் முதல் செப்டம்பர் திங்கள் 20-ம் நாள் வரை வந்து சேர்ந்த நீர் குறைவாக இருந்தமையால், கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்ட ஆயக்கட்டிற்கு நீர் வழங்குவதில் இடர்ப்பாடு ஏற்பட்டது. 1968 ஆகஸ்ட் திங்கள் முதல் முறை பாசன திட்டம் பின்பற்றப்பட்டது. ஆயக்கட்டிற்கு செப்டம்பர் திங்களில் 20-ம் நாள் வரை நீர் வழங்குவது அனுமதிக்கப்பட முடியவில்லை. இதன் பிறகு நீர்த் தேக்கத்தில் அதிக அளவில் நீர் வந்து சேர்ந்தது. கிருஷ்ணகிரி நீர்த் தேக்கம், பரூர் ஏரி ஆகியவைகளின் கீழ் விளைந்துள்ள பயிர்களுக்கு 28—2—1969-க்கு மேல் நீர் வழங்குவது, 30—4—1969 வரை அனுமதிக்கப்படும்.

சாத்தனூர் நீர்த்தேக்கத்தில் 17,270 ஏக்கர் பரப்பளவில், கூடுதலாக ஒரு பயிரை விளைவிப்பதற்காக 15—6—1968 முதல் 31—10—1968 வரையில் நீர் வழங்கப்பட்டது. 21,000 ஏக்கர் பரப்பளவு முழுவதிலும், குறுவை நெல் பயிரிடுவதற்காக 1—1—1969 முதல் நீர் வழங்கப்படுகிறது. திருக் கோயிலூர் அணைக்கட்டு அமைப்பின்கீழ் 5,000 ஏக்கர் நிலப் பரப்பளவில் இரண்டாம் போகம் பயிரிடுவதற்காக நீர் வழங்கப்படுகிறது.

வடகிழக்குப் பருவ மழை முற்றிலும் பொய்த்ததால், 1968-69 ஆண்டில், வீடூர் நீர்த் தேக்கம் பாசனத்திற்காக திறக்கப்படவில்லை. இந் நீர்த்தேக்கத்தில் உள்ள நீர், பழைய தொண்டியாறு ஆயக்கட்டுப் பகுதியில், விளைந்து நிற்கும் பயிர்களுக்காகப் பயன்படுத்தப் படுகிறது.

தாமிரவருணி அமைப்பில், பாபநாசம் நீர்த்தேக்கத்தில், பருவ காலத் தொடக்கத்தில், நீர் இருப்பு மிகவும் குறைவாக இருந்தது. ஜூலைத் திங்கள் பிற்பகுதியில் தான் அதிக அளவில் நீர் வந்து சேர்ந்தது. ஆதலால் தொடக்கத்தில், மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்து நீர் பெற அனுமதிக்கப்பட்டது. கார், பிஷாணப் பயிர்களுக்கு நீர் வழங்குவதில் இடர்ப்பாடுகள் எதுவும் ஏற்படவில்லை.

மணிமுத்தாறு நீர்த் தேக்கத்தில், 1968 நவம்பர் திங்களின் பிற்பகுதியி லிருந்து போதிய அளவில் நீர் வந்து சேர்ந்தது. நீர்த் தேக்கத்தில் உள்ள நீர் இருப்பைக் கொண்டு, 12,200 ஏக்கர் பரப்பிற்கு பாசன வசதி அளிக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏரிகளுக்கு நீர் வழங்கப் படுகிறது.

பதினைந்து நாள் தாமதத்திற்குப் பிறகு, 16—6—1968 அன்று, கோதை யாறு நீர்த் தேக்கம், பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டது. இரு பருவ காலங்களிலும் நீர்த் தேக்கங்களில் வழக்கமான அளவு நீர் சேர்ந்ததால், பாசன கால முடிவு வரை, அதாவது 1969 பிப்ரவரி திங்கள் இறுதி வரை, நீர் வழங்குவதில் இடர்ப்பாடு ஏதும் இருக்காது என எதிர் பார்க்கப்படுகிறது.

கோமுகி நீர்த்தேக்கம், 5,000 ஏக்கர் பரப்பிற்குப் பாசனம் அளிப்ப தற்காக 1—10—1968 அன்று திறந்து விடப்பட்டது. பயிர்களைக் காப்பாற் றுவதற்காக தலைக் கால்வாயிலிருந்து நீர் வழங்குவது 31—3—1969 வரை அனுமதிக்கப்படும்.

மஞ்சளாறு நீர்த்தேக்கம், 1,150 ஏக்கர் பரப்பிற்குப் பாசனம் அளிப்பதற்காக 1—11—1968-ல் திறந்து விடப்பட்டது. பாசன காலத்தின் பிற் பகுதியில், பருவ நிலைமைகள் பாதகமாக இருந்தபோதிலும், பாசன அமைப்புகள் எல்லாவற்றின் மூலமும் போதுமான அளவு நீர் வழங்கப்பட்டது. பெரியாறு அமைப்பின் கீழ் இரு போகப் பயிறும், ஒரு சிறிய அளவு தாளடிப் பயிறும், அமராவதி கால்வாயின்கீழ் உள்ள ஒரு புதிய ஆயக்கட்டும், துறையின் சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களினாலும், குறைந்த அளவு நீர் இருப்பினாலும் இறுதி நிலையில், தண்ணீர் பற்றுக் குறையினால் பாதிக்கப்படக் கூடும்.

## விவர அறிக்கை I.

### ரூ. 5 லட்சமும் அதற்கு மேலும் செலவாகும்

### நிறைவேற்றப்பட்டுவரும் முக்கிய சிறு பாசன சிறப்புத் திட்டங்கள்.

**தஞ்சாவூர் மாவட்டம்—**

(1) ஒரத்தநாடு-கீழையூர் முதலிய கிராமங்களில் உள்ள மேட்டுப் பகுதிகளுக்கு கண்ணனாற்றிலிருந்து நீர் இறைத்தலின் மூலம் பாசன வசதி அளித்தல்—ரூ. 14·46 லட்சம்.

(2) நீர்ப்பாசன வசதி அளித்தல்—வேளாங்கண்ணி விசையேற்றுத் திட்டம்—ரூ. 7·15 லட்சம்.

(3) பூவனம் கிராம எல்லையில் அக்னியாற்றின் குறுக்கே அணை கட்டுதல்—ரூ. 9·47 லட்சம்.

**திருச்சி மாவட்டம்—**

(4) லாடபுரம் கிராமத்தில் கோனேரி ஆற்றின் குறுக்கே நீர்த் தேக்கம் ஒன்றைக் கட்டுதல்—ரூ. 11·50 லட்சம்.

(5) கொப்பம்பட்டி கிராமத்தின் அருகே ஏரி வெட்டுதல்—ரூ. 12·60 லட்சம்.

(6) சோபானுபுரம் கிராமத்தில் புதிய ஏரி வெட்டுதல்—ரூ. 6·05 லட்சம்.

**மதுரை மாவட்டம்—**

(7) பழனி வட்டத்திலுள்ள நவக்காணி கிராமத்தில் ஏரி வெட்டுதல்—ரூ. 5·39 லட்சம்.

**செங்கற்பட்டு மாவட்டம்—**

(8) லட்சுமிபுரத்தின் அருகே ஆரணியாற்றின் குறுக்கே அணை கட்டுதல்—8·19 லட்சம்.

(9) அன்னப்பநாயக்கன் குப்பம் கிராமத்தில் ஆரணியாற்றின் குறுக்கே அணை கட்டுதல்—ரூ. 12·60 லட்சம்.

(10) சத்திய விஜய நகரத்துக்கருகில் கமண்டல நாகநதியின் குறுக்கே அணை கட்டுதல்—ரூ. 5·75 லட்சம்.

**கன்னியாகுமரி மாவட்டம்—**

(11) அருவிக்கரை ஆற்றுப் பாசன ஏற்பாட்டின் கீழ் அருவிக்கரை இடக்கரைக் கால்வாயையும் வலக்கரைக் கால்வாயையும் மேம்படுத்தல்—ரூ. 6·93 லட்சம்.





**திருநெல்வேலி மாவட்டம்—**

(12) கோரம் பள்ளம், பொட்டைக்குளம் ஏரிகளின் நீர் மட்டத்தை முழுவதற்கும் உயர்த்துவது—ரூ. 5·17 லட்சம்.

(13) மேலக்கரந்தை கிராமத்தின் அருகில் புதிய ஏரி வெட்டுதல்—ரூ. 8·54 லட்சம்.

**இராமநாதபுரம் மாவட்டம்—**

(14) கூத்தங்கால் வரவுகாலே புதுப்பித்தல்—ரூ. 12·30 லட்சம்.

(15) ஹனுமந்தக்குடி கிராமத்தின் அருகே அணைக்கட்டுதல், திருப்பக் காலே மங்களக்குடி வரவுகாலுக்கு நீர் வழங்க தலே மதகு அமைத்தல்—ரூ. 10·16 லட்சம்.

(16) சிறுகாம்பியூர், மற்ற 12 ஏரிகளுக்கும் நீர்வழங்க மணிமுத்தாற்றின் குறுக்கே அணை கட்டுதல்—ரூ. 6·40 லட்சம்.

**சேலம் மாவட்டம்—**

(17) ஓமலூர் வட்டத்தில் சேமுமலைக்கும் சிவிலிக்கரடுக்கும் இடையே ஏரி வெட்டுதல்—ரூ. 5·18 லட்சம்.

**தருமபுரி மாவட்டம்—**

(18) மண்டலபள்ளத்தின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல்—ரூ. 6·53 லட்சம்.

**கோயம்புத்தூர் மாவட்டம்—**

(19) சென்னம்பட்டி கிராமத்தில் புதிய ஏரி வெட்டுதல்—ரூ. 7·65 லட்சம்.

(20) புஞ்சைப் புளியப்பட்டி, கோவில்புதூர் கிராமங்களுக்கு அருகே ஏரி வெட்டுதல்—ரூ. 5·05 லட்சம்.

(21) வரபாளையம் கிராமத்தின் சந்தைபாளையத்தின் அருகில் ஏரி வெட்டுதல்—ரூ. 5·40 லட்சம்.

(22) வேமந்தபாளையம் கிராமத்தில் கொளத்தூர் பள்ளம் குறுக்கே ஏரி வெட்டுதல்—ரூ. 6·00 லட்சம்.

## விவர அறிக்கை II.

### 1968-69-ம் ஆண்டில் அரசாரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட சிறு பாசன சிறப்புத் திட்டங்களைக் காட்டும் விவர அறிக்கை.

### செங்கற்பட்டு மாவட்டம்.

**ஆதாயமுள்ள திட்டம்—**

(1) திருத்தணி வட்டத்தில் உள்ள மஹாங்காளிபுரம் கிராமத்தில் புதிய ஏரி வெட்டுதல்—ரூ. 2,20,000,

**உரிய ஆதாயம் தராத திட்டங்கள்—**

(1) திருத்தணி வட்டத்தின் நேதம்புரம் கிராமத்திலுள்ள தாமரைக் குளம் ஏரியை சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 4,000.

(2) பொன்னேரி வட்டத்தின் மாட்டூர் கிராமத்திலுள்ள கரியங்குளம் ஏரியை சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 4,700.

[1969 மார்ச் 17

### கோயம்புத்தூர் மாவட்டம்.

**ஆதாயம் உள்ள திட்டங்கள்—**

(1) கோபி வட்டத்தில்—கிராமத்தில் உள்ள வடிகாலைப் பயன்படுத்திக் கொள்ள எலத்தூர் வடிகாலுக்குக் குறுக்கே திருப்புமடை அணை கட்டுதல்—ரூ. 3,99,800.

(2) கோபி வட்டத்தின் அழுக்குளி கிராமத்தில் உள்ள வடிகாலைப் பயன்படுத்திக் கொள்வதற்காக வடிகாலின் குறுக்கே கலிங்கல் கட்டுதலும், கலிங்கலின் இடது கரையிலிருந்து கால்வாய் வெட்டுதலும்—ரூ. 1,17,200.

(3) கருமந்துாரின் 169-ம் எண் நில அளவைப் புலத்திலும், காட்டுப்பாளையம் கிராமம் 175-ம் எண் நில அளவைப் புலத்திலும் உள்ள வடிகாலைப் பயன்படுத்திக் கொள்ளுதல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை—ரூ. 3,17,000.

### தருமபுரி மாவட்டம்.

**ஆதாயம் உள்ள திட்டங்கள்—**

(1) ஹரூர் வட்டத்திலுள்ள காரை ஒட்டு அணைக்கட்டையும், வாய்க்காலையும் மேம்படுத்தல்—தலைமதகை மேம்படுத்துதல்—ரூ. 1,90,000.

**ஆதாயம் இல்லாத திட்டம்—**

(1) சோமநாதபுரம் ஏரி, சொக்கநாதபுர கிராமம், ஹோசூர் வட்டம் (முன்னாள் ஜமீன்)—ரூ. 19,500.

(2) தருமபுரி வட்டத்தின் பேகாரஹள்ளி கிராமத்தில் உள்ள தலை ஏரியை சிறப்புச் செப்பனிடுதல் (சிறுபாசன வாயில்)—ரூ. 12,400.

(3) வட்டி மாரடதஹள்ளி ஏரியை சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 6,000.

(4) துலுக்கன் ஏரி, வைரநாயக்கன்பட்டி கிராமம், ஹோசூர் வட்டம்—ரூ. 4,95,000.

### ராமநாதபுரம் மாவட்டம்.

**ஆதாயமுள்ள திட்டங்கள்—**

(1) சாத்தூர் வட்டத்தின் கள்ளம்பட்டி கிராமத்தில் புதிய ஏரி வெட்டுதல்—ரூ. 4,60,000.

(2) திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள கோவிலாங்குறிச்சி ஏரியின் நீர் மட்டத்தை முழுவதும் உயர்த்துதல்—சிவகங்கை வட்டத்தில் உள்ள பாட்டன்குறிச்சி ஏரி எதிர்வாயிலில் வரவுகால் வெட்டுதல்—ரூ. 1,10,000.

(3) சாத்தூர் வட்டத்திலுள்ள சங்கரநாதம் கிராமம் அருகில் வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டுதல்—ரூ. 9,18,000.

(4) சாத்தூர் வட்டம், கீழத்திருங்கல் கிராமத்தில் புதிய ஏரி வெட்டுதல்—ரூ. 1,24,000.

(5) ராமநாதபுரம் வட்டம், நாயர் ஆற்றுக்குக் குறுக்கே படுகை அணை கட்டுதல்—ரூ. 1,98,000.

**உரிய ஆதாயம் தராத திட்டங்கள்—**

(1) சிவகங்கை வட்டம், மறத்தூர் கிராமத்தில உள்ள ராணிக்கியனேந்தல் ஏரியைச் சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 10,800.

(2) சிவகங்கை வட்டம், மாத்தூர் கிராமத்திலுள்ள மேம்பாணி ஏரியைச் சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 6,300.



1969 மார்ச் 17]

(3) திருப்பத்தூர் வட்டம், மணப்பட்டி கிராமத்தில் உள்ள திருமான் ஏரியைச் சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 8,700.

(4) சாத்தூர் வட்டம், செங்குளம் ஏரியின் தாங்கலை முடிவு செய்து மேம்படுத்துதல்—ரூ. 10,000.

(5) திருவாடானை வட்டம், சேக்குடி கிராமத்தில் உள்ள சேக்குடி ஏரியைச் சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 12,100.

(6) ராமநாதபுரத்திலுள்ள அரியநேரி ஏரியை மேம்படுத்துதல்—ரூ. 80,000.

### தென் ஆர்க்காடு மாவட்டம்.

**ஆதாயமுள்ள திட்டங்கள்—**

(1) திருக்கோயுலூர் வட்டம், ஆங்கனூர் பெரிய ஏரியைச் சிறப்புச் செப்பனிடுதலை மேற்கொள்ளுதல், சேஷ நதிக்கு குறுக்கே அணை கட்டுதல்—ரூ. 1,05,000.

(2) சிதம்பரம் வட்டம், உப்பனாற்றுக்கு குறுக்கே பொறி மதகு—பாலம் கட்டுதல்—ரூ, 4,19,000.

(3) செஞ்சி வட்டம், சேவலபுரி கிராமத்தின் அருகே வராஹ நதிக்கு குறுக்கே அணைகட்டு கட்டுதல்—ரூ. 12,90,000.

**உரிய ஆதாயம் தராத திட்டங்கள்—ஒன்றும் இல்லை.**

### வட ஆர்க்காடு மாவட்டம்.

**ஆதாயமுள்ள திட்டங்கள்—ஒன்றும் இல்லை.**

**உரிய ஆதாயம் தராத திட்டங்கள்—**

(1) போளூர் வட்டம், கீழ்ப்பாலூர் கிராமத்தில் தூர் எடுத்து பண்படுத்தல் பணி செய்தல்—ரூ. 65,000.

### தஞ்சாவூர் மாவட்டம்.

**ஆதாயமுள்ள திட்டங்கள்—**

(1) மன்னார்குடி வட்டம், காளாஞ்சிமோடு கிராமத்தில் உள்ள காட்டுவாரி வடிகாலை மேம்படுத்தல்—ரூ. 2,20,000.

(2) மாயவரம் வட்டம், தலைஞாயிறு கிராமத்தில் உள்ள மானவாரி நிலங்களுக்கு பழவாற்றிலிருந்து நீர் இறைத்தலின் மூலம் பாசன வசதி அளித்தல் ரூ. 1,69,000.

(3) திட்டக்குடி, எட்டிப்புளிக்காடு கிராமங்களில் முறையே பனைய குளம், ஒத்தை ஏரிகளைப் புதிடபித்தல்—ரூ. 1,11,000.

(4) சேந்தமங்கலம் கிராமம், குன்னியூரில் அரிச்சந்திரா நதிக்கு குறுக்கே பொறிமதகு கட்டுதல்—ரூ. 1,35,000.

(5) திருத்துறைப்பூண்டி வட்டம், தொண்டியக்காடு கிராமத்தில் உள்ள 700 ஏக்கர் மேட்டுப் பகுதி நிலத்துக்கு வளவனூர் வடிகாலிலிருந்து நீர் இறைத்தலின் மூலம் பாசன வசதி அளித்தல்—ரூ, 4,50,000.

(6) திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ள மனங்கொண்டனூர் வடிகாலை மாற்றியமைத்தல்—ரூ. 3,28,000.

(7) கும்பகோணம் வட்டம், திருமலைராஜன் ஆற்றுக்குக் குறுக்கே உள்ள திப்பிராஜபுரம் அணையை பொறிமதகாக மாற்றி அமைத்தல்—ரூ. 1,20,000.

[1969 மார்ச் 17

**உரிய ஆதாயம் தராத திட்டங்கள்—**

(1) அறந்தாங்கி வட்டத்திலுள்ள நரசிங்கக் காவிரிக்கு குறுக்கே அணை கட்டுதல்—ரூ. 1,47,000.

(2) மொட்டையார் வடிகாலை மேம்படுத்துதல்—ரூ. 2,49,300.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**

**ஆதாயமுள்ள திட்டங்கள்—**

(1) உடையார்பாளையம், மணக்குடி கிராமத்திலுள்ள மணக்குடி, ஏத்த ஏரிகளுக்குப் பயன்படும்படி கல்லாறு ஓடைக்கு குறுக்கே அணை கட்டுதல் —ரூ. 1,48,000.

(2) உடையார்பாளையம் வட்டம், கருப்பிள்ளை கட்டளை கிராமத்திலுள்ள 4 ஏரிகளுக்கு பயன்படும் வகையில் அருங்கால் ஓடைக்குக் குறுக்கே அணை கட்டுதல் —ரூ. 1,33,000.

(3) பெரம்பலூர் வட்டம், காரூர் கிராமத்திலுள்ள காரூர் ஓடைக்குக் குறுக்கே அணை கட்டுதல்—ரூ. 1,31,340.

**உரிய ஆதாயம் தராத திட்டங்கள்—**

(1) திருமயம் வட்டம், மதியானி கிராமத்தில் உள்ள அரசியேந்தல் ஏரியைச் சிறப்புச் செப்பனிடுதல் (முன்னாள் புதுக்கோட்டை சமஸ்தானம்) —ரூ. 4,600.

(2) குளத்தூர் வட்டம், பாக்குடி கிராமத்திலுள்ள இடையன் குளம் ஏரியைச் சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 8,000.

(3) திருமயம் வட்டம், பிலிவலம் கிராமத்திலுள்ள துவரன் கண்மாயைக் சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 17,800.

(4) திருமயம் வட்டம், மேலநிலைவயல் கிராமத்திலுள்ள செல்ல முத்திரையன் ஏரியைச் சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 5,740.

(5) திருமயம் வட்டம், மேலநிலைவயல் கிராமத்திலுள்ள நீலிமுடுக்கேந்தல் ஏரியைச் சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 10,200.

(6) குளத்தூர் வட்டம், பொய்யாமணி கிராமத்திலுள்ள உமையப் குளம் ஏரியைச் சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 7,500.

(7) குழித்லை வட்டம், காரைப்பட்டி கிராமத்தில் உள்ள மோங்கி குளம் ஏரியைச் சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 6,100.

(8) குளத்தூர் வட்டம், அன்னவாசல் கிராமத்திலுள்ள கமண்டல ஏந்தல் ஏரியைச் சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 9,000.

(9) குளத்தூர் வட்டம் மினவேலி கிராமத்தில் உள்ள குப்ப கவுண்டன் குளம் ஏரியைச் சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 5,200.

(10) மலையன கண்மாய்க்கு சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 7,400.

(11) சேந்தன்குளம் ஏரிக்குச் சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 3,200.

**திருநெல்வேலி மாவட்டம்.**

**ஆதாயம் தரக்கூடிய திட்டங்கள்—இல்லை.**

**உரிய ஆதாயம் தராத திட்டங்கள்—**

(1) நான்குநேரி வட்டத்தில் கஸ்தூரி ரங்கபுரம் கிராமத்திலுள்ள பெருங்கன்னக்குளத்தைச் சிறப்பாகச் செப்பனிடுதல்—ரூ. 27,800.



1969 மார்ச் 17]

(2) செங்கோட்டை வட்டம், கார்குடி கிராமத்திலுள்ள கொம்புதாட்டிக் குளத்தைச் சிறப்பாகச் செப்பனிடுதல்—ரூ. 5,000.

(3) செங்கோட்டை வட்டம், செங்கோட்டை கிராமம் அனஜன்செட்டி தீர்த்த குளத்துக்குச் சிறப்புச் செப்பனிடுதல்—ரூ. 8,800.

(4) சங்கரன் கோயில் வட்டம், தேவர்குளம் கிராமத்தில் ஸ்ரீகுளத்தைச் சிறப்பாகச் செப்பனிடுதல்—ரூ, 3,000.

(5) செங்கோட்டை வட்டம் புளியூர் கிராமத்திலுள்ள அனஞ்ஜ பெருமாள் தீர்த்த குளத்தைச் சிறப்பாகச் செப்பனிடுதல்—ரூ. 5,600.

(6) நான்குனேரி வட்டம், காருச்சுட்டுப்புத்தூர் கிராமத்திலுள்ள ஸ்ரீகிருஷ்ணபேரி குளத்தைச் சிறப்பாகச் செப்பனிடுதல்—ரூ. 13,700.

(7) உத்தம்குளம் அருகில் குளம் அமைக்க—ரூ. 84,000.

**மதுரை மாவட்டம்**

**ஆதாயம் தரக்கூடிய திட்டங்கள் —**

திண்டுக்கல் வட்டம், வேலாயுதம் பாளையம் கிராமத்தின் அருகில் ஊத்தங்கரையாரின் குறுக்கே குறுக்கே ஏரி புதிதாக அமைக்க—ரூ. 2,13,000.

**உரிய ஆதாயம் தராத திட்டங்கள்—**

திண்டுக்கல் வட்டம், ஆர். கொம்பை கிராமத்தின் அருகில் வரட்டாறு குறுக்கே புதிதாக ஏரி அமைத்தல்—ரூ. 3,00,000.

**சேலம் மாவட்டம்.**

**ஆதாயம் தரக்கூடிய திட்டங்கள்—இல்லை.**

**உரிய ஆதாயம் தராத திட்டங்கள்—**

நாமக்கல் வட்டம், எருமைப்பட்டி கிராமத்திலுள்ள எருமைப்பட்டி ஏரிக்கு தண்ணீர் வசதியைப் பெருக்க வறட்டாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல்—ரூ. 97,180.

**தூர்வாரிப் பண்படுத்தும் திட்டம்—**

தூர்வாரிப் பண்படுத்தும் திட்டத்திற்காகப் பெரும் மண் வாரிக்கொட்டும் இயந்திரங்கள் வாங்குதல்—ரூ. 8,60,000.

## விவர அறிக்கை III.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழும், மூன்று ஆண்டுத் திட்டங்களின் கீழும் திட்டச் சாதனைகளையும், பிற விவரங்களையும் காட்டுகிற விவர அறிக்கை.

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | எந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது அல்லது நீர்வரவு வாயில். | ஆதாயம் அடைந்த மாவட்டம். | வேலை தொடங்கிய ஆண்டு. | வேலை நிறைவேற்ற ஆண்டு. | செலவு. | திட்டத்தின்கீழ் முடிவான பாசனளவு. புதிய பரப்பளவு. | திட்டத்தின்கீழ் முடிவான பாசனளவு. பழைய ஆயக்கட்டுகளை நிலைப்படுத்தல். | 3-வது ஆண்டுத் திட்டத்தின் (1968-69) முடிவில் எதிர்பார்க்கப் பயன்படும் பாசனப் பரப்பளவு. புதிய பரப்பளவு. | 3-வது ஆண்டுத் திட்டத்தின் (1968-69) முடிவில் எதிர்பார்க்கப் பயன்படும் பாசனப் பரப்பளவு. பழைய ஆயக்கட்டுகளை நிலைப்படுத்தல். | குறிப்புரைகள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | (ரூபாய் லட்சத்தில்.) | | (ஏக்கரில்.) | | | |
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது எடுத்துக்கொண்ட பாசனத் திட்டங்கள் (1951-56). | | | | | | | | | | |
| 1 கீழ்பவானி .. | பவானி .. | கோயம்புத்தூர், திருச்சி. | 1949 | 1956 | 10,34·00 | .. | 207,000 | .. | 195,000 | நெற் பயிருக்குப் பாசன வசதி அதிகரிப்பதால் 1 95,000 ஏக்கர் நிலங்கள் முடிவாகப் பயன்படும். |
| 2 கோதையார் திட்டம். | கோதையாறு | கன்னியாகுமரி | .. | 1956 | 43·70 | .. | 1,17,400 | .. | 1,17,400 | இரு போகம் பயிரிடுவதால் மொத்தப் பரப்பு கொடுக்கப்பட்டுள்ளது. |
| 3 காவிரிச் சங்க முகப் பகுதியில் வடிகால் ஏற்பாடு. | காவிரிச் சங்க முகப் பகுதி. | தஞ்சாவூர் | .. | 1956 | 30·00 | — | 40,000 | | | தஞ்சாவூர் மாவட்டத்தில் நீரில் மூழ்கியுள்ள பகுதிகளிலிருந்து நீரை வடிகட்டும் வேலை நடைபெறுகிறது. |
| 4 மேட்டூர் கால்வாய்த் திட்டம். | காவிரி .. | கோயம்புத்தூர், சேலம். | 1949 | 1957 | 1,92·91 | 45,000 | .. | 45,000 | .. | .... |
| 5 மணிமுத்தாறு நீர்த் தேக்கம். | மணிமுத்தாறு | திருநெல்வேலி | 1950 | 1958 | 5,05·00 | 20,000 | 83,000 | 20,000 | 83,000 | .. |
| 6 அமராவதி நீர்த் தேக்கம். | அமராவதி | கோயம்புத்தூர் | 1953 | 1958 | 3,34·14 | 21,500 | 32,000 | 21,500 | 32,000 | .... |
| 7 வைகை நீர்த் தேக்கம். | வைகை | மதுரை, ராமநாதபுரம். | 1954 | 1959 | 3,30·00 | 22,800 | .. | 2,020 | .. | .... |
| 8 கிருஷ்ணகிரி நீர்த் தேக்கம். | பெண்ணாறு | தர்மபுரி | 1955 | 1958 | 2,02·43 | 9,000 | .. | 9,000 | | . |
| 9 சாத்தனூர் நீர்த் தேக்கம். | பெண்ணாறு | வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு. | 1954 | 1958 | 2,58·00 | 21,000 | .. | 21,000 | | |

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | எந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது அல்லது நீர்வரவு வாயில். | அமைந்துள்ள மாவட்டம். | வேலை தொடங்கிய ஆண்டு. | வேலை நிறைவுற்ற ஆண்டு. | செலவு. | திட்டத்தின்கீழ் முடிவான பரப்பளவு. புதிய பரப்பளவு. | பழைய ஆயக்கட்டுகளை நிலைப்படுத்தல். | 3-வது ஆண்டுத் திட்டத்தின் (1968-69) முடிவில் எதிர்பார்க்கப்படும் பாசனப் பரப்பளவு. புதிய பரப்பளவு. | பழைய ஆயக்கட்டுகளை நிலைப்படுத்தல். | குறிப்புரைகள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | (ரூபாய் லட்சத்தில்) | | (ஏக்கரில்) | | | |
| 10 ஆரணியாறு நீர்த் தேக்கம் | ஆரணியாறு | செங்கல்பட்டு, சித்தூர். | 1951 | 1957 | 1,05·89 | 2,530 | 2,036 | .. | 6,066 | இத் திட்டத்தின் தலைப் புப் பகுதி ஆந்திரப் பிரதேசத்திற் குமாற்றப்பட்டுள்ளது. எனவே, தமிழ் நாட்டிலுள்ள பரப்பளவு மட்டும் 11-வதுபத்தியில் கொடுக்கப்பட்டுள்ளது. |
| **இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட புதிய பாசனத் திட்டங்கள் (1956—61.)** | | | | | | | | | | |
| 11 புதிய கட்டளை உயர் மட்டக் கால்வாய். | காவிரி | திருச்சிராப் பள்ளி, தஞ்சாவூர். | 1957 | 1960 | 2,24·58 | 20,622 | .. | 18,100 | .. | .... |
| 12 புள்ளம்பாடிக் கால்வாய். | காவிரி | திருச்சிராப் பள்ளி. | 1957 | 1960 | 2,05·88 | 22,114 | .. | 19,750 | .. | .... |
| 13 வீடூர் திட்டம் | வராக நதி | தென் ஆர்க்காடு. புதுச்சேரி. | 1958 | 1959 | 88·94 | 3,200 | .. | 2,600 | .. | .... |
| 14 நெய்யாறு திட்டம். | நெய்யாறு | கன்னியாகுமரி | 1959 | 1963 | 90·30 | 5,800 | .. | 2,900 | .. | ஆயக்கட்டின் இறும் முடிவு நடவடிக்கை செய்யப்படுவதற்கான பரப்பளவு 5,800 ஏக்கர் மட்டுமே. |
| 15 பரம்பிக்குளம், ஆழியாறுதிட்டம். | பரம்பிக்குளம் ஆழியாறு. | கோயம்புத்தூர் | 1959 | .. | 67,53·00 | 2,47,000 | -- | 95,000 | .. | .... |
| 16 கன்னியாகுமரி மாவட்டத்தில் நடுத்தரப் பாசனத் திட்டம். | கோதையாறு பாசன ஏற்பாடு. | கன்னியாகுமரி | 1957 | 1961 | 22·00 | இப்போதுள்ள வாய்க்கால்களைப் புதுப்பிப்பதும், பழைய ஏரிகளைப் புதுப்பிப்பதும், இப்போதுள்ள பரப்பளவுக்கு பாசன வசதி மேம்படுத்துவதும் திட்டத்தின் குறிக்கோளாகும். | | | | |
| **மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட புதிய பாசனத் திட்டங்கள் (1961-66).** | | | | | | | | | | |
| 17 பாலாறு அணைக்கட்டு கால்வாய்களை மேம்பாடு செய்தல். | பாலாறு. | வட ஆர்க்காடு, செங்கற்பட்டு. | 1961 | 1965 | 63·50 | 3,285 | -- | 3,285 | -- | .. |
| 18 சாத்தனூர் திட்டம் இரண்டாம் நிலை. | பெண்ணாறு. | தென் ஆர்க்காடு. | 1961 | 1964 | 60·00 | 5,000 (இரு போகம்) | -- | 5,000 | -- | .. |
| 19 கோமுகி நதித்திட்டம். | கோமுகி. | தென் ஆர்க்காடு. | 1963 | 196 | 1,21·00 | 5,000 | -- | 5,000 | -- | .. |
| 20 சித்தாறு— பட்டணங்கால் திட்டம். | கோதையாறு. | கன்னியாகுமரி, திருநெல்வேலி. | 1963 | 1968 | 7,34·88 | 32,320 | 14,680 | -- | -- | .. |

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | எந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது அல்லது நீர்வரவு வாயில். | ஆதாயம் அடையும் மாவட்டம். | வேலை தொடங்கிய ஆண்டு. | வேலை நிறைவுற்ற ஆண்டு. | செலவு. | ஐந்தாண்டுத் திட்டத்தின்போது பயன்பட்ட பாசன வளம்: புதிய பாசனம். | ஐந்தாண்டுத் திட்டத்தின்போது பயன்பட்ட பாசன வளம்: நிலைப்படுத்தப்பட்டது. | 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் (1968-69) எதிர்பார்க்கப்படும் பாசன வளம்: புதிய பாசனம். | 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் (1968-69) எதிர்பார்க்கப்படும் பாசன வளம்: நிலைப்படுத்தப்பட்டது. | குறிப்புரைகள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | (ரூபாய் லட்சத்தில்) | | (ஏக்கரில்) | | | |
| மஞ்சளாறு திட்டம். | மஞ்சளாறு. | மதுரை. | 1963 | 1966 | 1,05·00 | 2,000 | 3,136 | 2,000 | 3,136 | இவ்வேலைத் திட்டம் ஐந்தாண்டு திட்டத்திலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது. |
| 1966–67 ஆண்டுத் திட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட புதிய பாசனத் திட்டங்கள். | | | | | | | | | | |
| மணிமுக்தா நதித் திட்டம். | மணிமுக்தா நதி. | தென் ஆர்க்காடு. | 1966 | 1969 | 1,17·61 | 4,000 | 250 | .. | .. | .. |
| கடானா நதித் திட்டம். | கடானா நதி. | திருநெல்வேலி. | 1963 | புதிய நான்காவது திட்டம். | 1,73·80 | 1,000 | 7,112 | .. | .. | .. |
| ராம நதித் திட்டம். | ராம நதி. | திருநெல்வேலி. | 1966 | ஷ | 95·70 | 500 | 1,500 | .. | .. | .. |
| 1967–68 ஆண்டுத் திட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட புதுத் திட்டம் | | | | | | | | | | |
| வைகைக் கால்வாய்களைப் புதுப்பித்தல். | வைகை. | மதுரை. | 1967–68 | புதிய நான்காவது திட்டம். | 3,95·00 | 13,900 | 95,882 | .. | .. | .. |



## விவர அறிக்கை IV

### 1969–70 க்கான பாசன வேலைத் திட்டம்

அளவு : 1,000 ஏக்கரில்.

| தொடரிலக்கம், திட்டத்தின் பெயர். | 1969–70 க்கான நிதி ஒதுக்கம். | பாசன வளம். | பயன்பாட்டுக் குறிக்கோள் அளவு. |
|---|---|---|---|
| | (ரூ. லட்சத்தில்) | | |
| 1 பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம். | 250·00 | 140·00 | 120·00 |
| 2 சித்தாறு-பட்டணம் கால் திட்டம். | 80·00 | 10 00 | 7·00 |
| | | 3·25 | 2·25 |
| 3 மணிமுத்தா நதி திட்டம். | 18·00 | 0·25 | 0·25 |
| 4 இராம நதி திட்டம். | 30·00 | .. | .. |
| 5 கடானா நதித் திட்டம். | 30·00 | .. | .. |
| 6 தஞ்சாவூர் வாய்க்கால்களைப் புதுப்பித்தல். | 20·00 | .. | .. |
| 7 வைகை வாய்க்கால்களைப் புதுப்பித்தல். | 10·00 | .. | .. |
| 8 கொள்ளிமலை அருகிலுள்ள அய்யாறு குறுக்கே அணைக் கட்டு கட்டுதல். 9 தண்டரை அணைக்கட்டு திட்டம். 10 நந்தன் கால்வாய் மீட்டளித்தல். 11 மருத நதித் திட்டம். 12 கருப்பா நதித் திட்டம். 13 ஆத்தங்கரை அருகே வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டுதல். 14 பெண்ணாறு திட்டம். 15 பிளவுக்கால் திட்டம். 16 தோட்ட ஹல்லா திட்டம் | 10.00 | | |

## இணைப்பு 3

# தமிழ் நாட்டு சாலை வளர்ச்சித் திட்டம்,

(1968–69-ம் ஆண்டுக்குரிய அறிக்கை.)

### நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் துறை.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உயிர்நாடிபோன்று சாலைகள் விளங்குகின்றன. வளர்ந்துவரும் தொழில் வளர்ச்சியாலும், பொருளாதார முன்னேற்றத்தாலும் நாளுக்கு நாள் பெருகிவரும் தேவையை அவை நிறைவேற்ற வேண்டியுள்ளன. சாலைப போக்குவரத்து, கிராமங்களின் நீர் வழங்குத் திட்டம், குடியிருப்பு வசதிகள், ஊராட்சி–ஊராட்சி ஒன்றியங்களின் செயல் திட்டங்கள், ஆகியவற்றிற்குப் பொறுப்பாகவுள்ள நெடுஞ்சாலை-கிராமப் பணித்துறை இவ்வாறு வளர்ந்துவரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய முனைப்பான வேலைத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டபோது தமிழ்நாட்டு சாலைகளின் மொத்த நீளம் 21,198 மைல்களாக (34,115 கிலோ மீட்டர்களாக) இருந்தது. முதல் திட்ட முடிவில், இந்த நீளம் 24,045 மைல்களாக (38,697 கிலோ மீட்டர்களாக) உயர்ந்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் மேலும் 1,822 மைல் (2,932 கிலோ மீட்டர்கள்) கூடிற்று. மூன்றாவது திட்டத் தொடக்கத்தில் சாலைகளின் மொத்த நீளம் 25,867 மைல்களாக (41,629 கிலோ மீட்டர்களாக) இருந்தது. மூன்றாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளின் மூலம், ஊராட்சிகள்–ஊராட்சி ஒன்றியச் சாலைகள் உட்பட 10,889 மைல்கள் (17,524 கிலோ மீட்டர்கள்) சாலை அமைக்க முடிந்தது. 1965–66-ம் ஆண்டு முடிவில், ஊராட்சி–ஊராட்சி ஒன்றியச் சாலைகள் உட்பட, நெடுஞ்சாலை-கிராமப் பணித்துறையின் பொறுப்பிலிருந்த சாலைகளின் நீளம் 36,756 மைல்கள் (59,153 கிலோ மீட்டர்கள்) ஆகும். 1968 ஏப்ரல் 1-ல் அவைகளின் மொத்த நீளம் 40,129 மைல்களாக (64,582 கிலோ மீட்டர்களாக) இருந்தது. 1968–69-ல் 1011 மைல் (1,627 கிலோ மீட்டர்கள்) புதிய சாலை போடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் நாட்டுச் சாலைப்பற்றிய புள்ளி விவரம், இந்தியாவின் சாலைகள் பற்றிய விவரங்களோடு ஒப்பிடப்பட்டுள்ளது. ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு எத்தனை மைல் நீலமுள்ள சாலை உள்ளதென்ற விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு சாலையின் நீளம். (மைல்களில்.) |
|---|---|
| இந்தியா முழுவதும் .. .. | 123 |
| தமிழ் நாடு .. .. .. | 119 |

இதுவரை நிறைவேற்றப்பட்ட சாலைப் பணிகளைப் பற்றியும், 1969–70 ஆண்டுக்குரிய திட்டங்களைப் பற்றியும் கீழே ஆய்வுரை கொடுக்கப்பட்டுள்ளது. வளர்ச்சித் தேவைகளுக்கு இன்றியமையாது வேண்டுகிற சாலைப் பணிகளை நிறைவேற்றுதல், சாலை அமைக்கும் மூலதனச் செலவை முடிந்தவரை சுருக்குதல் ஆகிய இரண்டு நோக்கங்களும் எய்தப்பெறும் வகையிலேயே அடுத்து வரும் ஆண்டிலும் சாலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.



சாலை வளர்ச்சித் திட்டங்கள் கீழ்க்காணும் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன:—

(அ) மத்திய அரசுத் திட்டம்—தேசிய நெடுஞ்சாலைகள்.

(ஆ) மாநிலத் திட்டங்கள்—மத்திய உதவி பெறும் திட்டங்களும் மத்திய அரசுத் திட்டங்களும்.

### (அ) மத்திய அரசுத் திட்டம்—தேசிய நெடுஞ்சாலைகள்.

தேசிய நெடுஞ்சாலைகளென அமைக்கப்படும் முக்கிய நீள் பெருஞ் சாலைகளை அமைக்கும் பொறுப்பையும், பேணி வரும் பொறுப்பையும் இந்திய அரசு ஏற்றுள்ளது. ஆயினும், அப்பணிகளை இந்திய அரசின் சார்பில், மாநில நெடுஞ்சாலை-கிராமப் பணித்துறையே நிறைவேற்றி வருகிறது. நகரங்களுக்கு வெளியே அமைந்துள்ள இத்தகைய சாலைப் பகுதிகளின் மூலச் செலவு முழுவதையும் இந்திய அரசு ஏற்கிறது. நகரங்களில் அமைந்துள்ள இச் சாலைகளில் புதிய அமைப்புகளுக்கான செலவை மாநில அரசும், உள்ளாட்சி மன்றமும் பகிர்ந்துகொள்கின்றன. இவற்றைப் பேணிவருவதற்காகும் செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்கிறது. நகர எல்லைகளுக்குள் உள்ள இத்தகைய் சாலைகளைப் பேணி வருவதற்காகும் செலவை இந்திய அரசு கொடுக்கிறது. இவ்வாறு கொடுக்கப்படுகிற செலவுத் தொகை மைல் ஒன்றுக்கு ரூபாய் 5,000 அல்லது நடைமுறையில் ஆகும் செலவு இவற்றுள் எது குறைந்ததோ அதுவேயாகும்.

முதலாவது, இரண்டாவது திட்டக்கால அளவுகளில் தேசிய நெடுஞ் சாலைகளின் மேற்பரப்பை மேம்படுத்தவும், சாலைகள் போடவும், பெரும் பாலங்கள், சிறு பாலங்கள் ஆகியவற்றிற்காகவும் முறையே ரூ. 151 லட்சமும், ரூ. 182 லட்சமும் செலவிடப்பட்டன. மூன்றாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 200 லட்சம். ஆனால் இந்திய அரசு ஒதுக்கித் கொடுத்தது. ரூ. 152 லட்சம் மட்டுமே. செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 152 லட்சமாகும்.

தமிழ் நாட்டில் இத்தகைய நெடுஞ்சாலைகள் அனைத்தும் அநேகமாக இரு அணிப் பாதைகள் கொண்டவை. வண்டி செல்லும் சாலைப் பகுதிகள் அகலமாக்கப்பட்டபின் நீண்ட தூரப் பயணத்திற்கு வசதியாக, முக்கிய நகரங்களின் நெரிசலான போகுவரத்தைத் தவிர்த்து அந்த நகரங்களுக்கு வெளியே புறச்சாலைகள் அமைக்க வேண்டியதாயிற்று. மதுரை மாநகரின் வெளிப்புறம் அமைக்கப்பட்டிருக்கும் புறச்சாலை, வைகை ஆற்றின் பாலம்; திருச்சி நகரின் வெளிப்புறம் அமைக்கப்பட்டிருக்கும் புறச்சாலை, காவிரிப்பாலம் ஆகியவை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முடிக்கப்பட்டவையாகும் புறச்சாலை அமைக்கத் தேவையான நிலத்தை அரசு சட்டத்தின்படி கையகப்படுத்துவதற்கு பல ஆண்டுகளாகும். எனவே, புறச்சாலை அமைக்கத் தேவையான நிலத்தை கையகப்படுத்தும் பணியை மேற்கொள்வதுடன், இரண்டாவது திட்டத்தில் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத வேலைகளை முடிப்பதில் மட்டுமே மூன்றாவது திட்டக் காலத்தில் நாட்டம் செலுத்தப்பட்டது. கீழ்காணும் நகரங்களுக்கான புறச்சாலைகளுக்குரிய நிலப்பகுதியை கையகப்படுத்தும் வேலைகள் பல நிலைகளில் நடந்து வருகின்றன.

ஸ்ரீபெரும்பூதூர்.
பூவிருந்தவல்லி.
வாணியம்பாடி.
விஷாரம்.
வேலூர்.
கோவில்பட்டி.
திருநெல்வேலி.

ராமநாதபுரம்.

சென்னை.

சமையேற்றிய நிலையில் 12 டன் வரை எடையுள்ள வண்டிகள் செல்வ தற்கு எற்ற முறையில் சிறு பாலங்கள் பலவற்றை வலுபபடுத்தும் பணி யும் மேற்கொள்ளப்பட்டது.

இப்போதுள்ள தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதற்காகவும், அவற்றின் வளர்ச்சிக்காகவும், நான்காவது திட்டக் காலத்தில் மத்தியத் துறை வேலைத் திட்டத்தின் பகுதியாக இந்திய அரசு ரூ. 22·85 கோடி ஒதுக்கிக் கொடுக்குமென எதிர்பாக்கப்படுகிறது. வாரணசி கன்னியாகுமரி, சென்னை-பெங்களூர், சென்னை-கல்கத்தா சாலைகள் போன்று இந் நாட்டினை இணைக்கின்ற நீள்பெரும் சாலைகளின் பகுதிகள் தமிழ் நாட்டிலே அமைந்துள்ளன. நான்காவது திட்டக் காலத்தில் இச் சாலை களின் வளர்ச்சிக்காக ரூ. 18·00 கோடி செலவிடக் கருதியுள்ளது. இதில் வலுவற்ற நிலையிலுள்ள சாலைகளைத் தரமுயர்த்துவதற்காக ரூ. 414 லட்சம் செலவிடப்படும்; புதிய பாலங்கள் கட்ட ரூ. 50 லட்சம் செலவிடப் படும் நான்கு அணிப் போக்குவரத்து நடைபெரும் வகையில் வண்டி செல்பாதைகளை அகலப்படுத்துவதற்கு ரூ. 300 லட்சம் செலவழிக்கப்படும். வேறு சில சாலைகளில் இரண்டு அணிப் போக்குவரத்து நடைபெறும் வகையில், வண்டி செல்பாதைகளை அகலப்படுத்துவதற்கும், தார் போடுவ தற்கும் ரூ. 145 லட்சம் செலவழிக்கப்படும். ரூ. 216 லட்சம் செலவில் மேம்பாலங்கள் அல்லது சுரங்கப் பாதைகள் கட்டுவதற்கும், ரூ. 250 லட்சம் செலவில் புறச் சாலைகள் அமைப்பதற்கும், இத் திட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது. பாம்பனில் ரூ. 4·35 கோடி செலவில் சாலைப் பாலம் ஒன்றைப் புதிதாகக் கட்டவும் கருதியுள்ளது.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக முடிக்கப்பட்ட பின், ஆண்டு திட்டங்கள் மூன்றின் கால அளவுகளில் அதாவது 1966–67, 1967–68, 1968–69 ஆண்டுகளில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள இந்திய அரசு அனுமதித்துள்ளது :—

| தொடர் எண். | வேலையின் பெயர். | செலவு மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | 45-வது எண் தேசிய நெடுஞ்சாலையில் 17/4 மைலில் தாம்பரத்திற்கு அருகில் கட்டப்படும் மேம்பாலத்திற்கு அணுகு சாலைகள் அமைத்தல். | 13·51 |
| 2 | 46-வது எண் தேசிய நெடுஞ்சாலையாகிய ராணிப் பேட்டை-கிருஷ்ணகிரி சாலையில் 74/2—76/4 மைல்களுக்கு இடையில் விஷாரம் நகருக்குப் புறச்சாலை அமைப்பதற்குரிய நிலத்தைக் கைப்படுத்தல். | 3·87 |
| 3 | 5-ம் எண் தேசிய நெடுஞ்சாலையில் 32/8-வது மைலில் பாலத்தைத் புதுப்பித்துக் கட்டுதல். | 3·49 |
| 4 | ராமேஸ்வரம் சாலை ரயில் நிலையம் வழியாக, ராமேஸ்வரம் நகரிலிருந்து தனுஷ்கோடிக்குச் சாலை அமைத்துச் சரளைக்கல் பரப்புதல். | 15·59 |
| 5 | ராமேஸ்வரம் ரயில் நிலையம் வழியாக ராமேஸ் வரம் நகரிலிருந்து தனுஷ்கோடிக்குச் செல் லும் வழியில் குறுக்கு வடிகால் வேலைகளும், சிறு பாலங்களும். | 5·47 |





மேலே (1) இனத்தைப் பொறுத்தவரை, வேலை நடந்து வருகிறது. (2) இனத்தைப் பொறுத்தவரை நிலம் கையகப்படுத்தும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (3) இனத்தைப் பொறுத்த வரையில் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. (4) இனத்தை பொறுத்த வரையில் வேலை நடந்து வருகிறது. (5) இனத்தைப் பொறுத்த வரை ஒப்பந்தப் புள்ளி முடிவு செய்யப்பட்ட பின்னர் பணி மேற்கொள்ளப் படும்.

சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலையின் 86/4 மைலில் ரூ. 11·75 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்ட சங்கரா பரணி பால வேலை தொடர் பணியாக எடுத்து முடிக்கப்பட்டது. தனுஷ்கோடியில் கடற் பாலத்தை ரூ. 17 லட்சம் செலவில் சீர்படுத்தும் பணி இம் மாநிலத் திற்கு உதவி மானியத் திட்டமாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதற்காகும் செலவிற்கு மத்திய நிதியிலிந்து தொகை வழங்கப்படும்.

### (ஆ) மாநிலத் திட்டங்கள்—மத்திய உதவி பெறும் திட்டங்களும், மத்திய அரசுத் திட்டங்களும்.

1966–71 ஆண்டுக்கென நான்காவது திட்டம் வகுக்கப்பட்ட போதிலும், அது எற்பளிக்கப்பட்டு நிறைவேற்றப்படவில்லை. மூன்றுவது திட்டம் முடிவடைந்த பின்னர், 1966-67, 1967–68, 1968–69 ஆண்டுகளுக்குரிய ஆண்டுத் திட்டங்களுக்கு எற்பளிக்கப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டன. மூன்றுவது திட்டக் காலத்திலும், அடுத்துவந்த ஆண்டுத் திட்டக் கால அளவுகள் மூன்றிலும், அதாவது 1966–67, 1967–68, 1968–69 ஆண்டு களிலும், வேளாண்மைப் பாங்கான மாவட்டங்களிலே சாலை வளர்ச்சிப் பணியை எத்துணை விரைவாக மேற்கொள்ளவேண்டுமோ, அத்துணை விரைவாக மேற்கொள்ள முடியவில்லை. தொழிற்சாலைப் பணிகளுக்குப் பயன்படுகிற சாலைப் பணிகளுக்கு முதலிடம் அளித்ததே இதற்குக் காரணமாகும். (1) வேளாண்மைப் பகுதிகள், (2) வறட்சியால் பாதிக்கப் பட்ட பகுதிகள், பின்னிலைப் பகுதிகள், (3) தொழிற்சாலைப் பகுதிகள் ஆகிய பல்வேறு துறைகளிலும் சாலைகளை மேம்படுத்துவதே நான்காவது திட்டக் கருத்தாகும். ரூ. 37 கோடிக்குத் திட்டி அனுப்பப்பட்ட புதிய நான்காவது திட்டம் (1969–74) முனைப்பாக ஆராயப்பட்டு வருகிறது. இவற்றுள் மத்திய நெடுஞ்சாலைத் திட்டங்களும், பொருளாதார பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த சாலைத் திட்டங்களும், கிழக்குக் கடற்கரை சாலை திட்டங்களும் அடங்கும். ரூ. 3,388 லட்சம் + ரூ. 282·57 லட்சம்=ரூ. 3,670·57 லட்சம் அல்லது 37 கோடி. புதிய நான்காவது திட்டத்தில் கூறப்பட்டுள்ள திட்டங்கள் அனைத்தும் நிறை வேற்றப்பட்டால் நான்காவது திட்ட முடிவில் தமிழ் நாட்டில் மொத்தம் 48,434 மைல் நீளமுள்ள சாலை இருக்கும். நடப்பு நிதியாண்டு முடிவில் சாலையின் நீளம் 42,000 மைல் அளவில் இருக்கும்.

நடப்பு நிதி ஆண்டு முடிவில் ஒரு சதுர மைலுக்கு 0·834 மைல் சாலை இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், நான்காவது ஐந்தாண்டு திட்ட முடிவில் ஒரு சதுர மைலுக்கு 0·962 மைல் சாலை இருக்கும்.

தனித்தனி திட்டங்களின் சுருக்க விவரம், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு (1969–74), 1966–67, 1967–68, 1968–69 ஆகிய மூன்று ஆண்டுத் திட்டங்களின்போது எய்திய சாதனை, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாவது ஆண்டாகிய 1969–70-ம் ஆண்டிற்குரிய வேலை திட்டம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

மாநில நெடுஞ்சாலைகள்—அரசுச் சாலைகள்—மத்திய உதவி பெறுபவை.

| | | | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|
| | | | 163·00 |
| முதல் திட்டக் கால அளவு (1951–56) செலவு (கணக்கு) | | .. | 296·00 |
| இரண்டாவது திட்டக் கால அளவு (1956–61) | ,, | .. | 572·19 |
| மூன்றுவது திட்டகால அளவு (1961–66) | ,, | | |

ஆண்டுத் திட்டக் கால அளவு—செலவு.

| | (ரூபாய் லட்சத்தில். |
|---|---|
| 1966-67 (கணக்கு) .. .. .. .. .. | 65·30 |
| 1967-68 (கணக்கு) .. . .. .. .. | 52·34 |
| 1968-69 (திருத்த மதிப்பீடு) .. . .. .. | 61·73 |
| நான்காவது திட்ட தாற்காலிக நிதி ஒதுக்கீடு (1969-74). | 900·00 |
| 1969-70 (திட்ட மதிப்பீடு) .. .. .. .. | 66·47 |

(நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டு.)

மாநில அரசினரால் பேணிவரப்படும் சாலைகளின் வளர்ச்சிக்கு இத் திட்டம் வகை செய்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றி முடிக்கப்பட்ட பிறகு நிதி வசதி இடர்ப்பாடாக இருந்த காரணத்தால் ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் கால அளவுகளில் அதாவது, 1966-67, 1967-68, 1968-69 ஆண்டுகளில் இதுவரை 35 பணிகள் ரூ. 171·10 லட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு நிறைவேற்றி முடிக்கப்பட்டன. இதன் விவரத்தை I-ம் அட்டவணையில் காணலாம். 1966-67, 1967-68, 1968-69 திட்ட சாதனைகள் (1966-67, 1967-68 கணக்குகள்; 1968-69-ல் எதிர்பார்க்கப்படுவது) தார்-காண்கிரீட் 1 மைல் 2 பர்லாங்; தார் போட்டது 18 மைல் 4 பர்லாங்; புதிதாகச் சரளைக்கல் போட்டது 10 மைல் 5 பர்லாங்; புதிய சாலை அமைப்பு 1 மைல் 2 பர்லாங்; 12·51 எண் மேம்பாடுகள் 12·08; எண் பெரும் பாலங்கள் ; 14·35 எண் சிறுபாலங்களும், வாராவதிகளும். இப்போது கட்டப்பட்டு வரும் பெரும்பாலங்கள் சிலவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(1) தென் ஆற்காடு மாவட்டத்தில் கடிலம் ஆற்றில் பாலங்கள் (செலவு ரூ. 28·50 லட்சம்).

(2) தென் ஆற்காடு மாவட்டத்தில் பாப்பனப்பட்டி—வழுதாவூர் சாலையில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே பாலம் (செலவு ரூ. 12 லட்சம்).

(3) தஞ்சாவூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டை—மீமிசல் சாலையின் 12/4 மைலில் அக்கினியாறு பாலம் (செலவு ரூ. 10 லட்சம்).

(4) திருநெல்வேலி நகர எல்லையில், திருநெல்வேலி—செங்கோட்டை சாலையின் 1/4 மைலில் சாலை இருப்புப்பாதை கடவிற்குப் பதிலாக மேம்பாலம் (செலவு ரூ. 35 லட்சம்).

1968-69-ல் நிறைவேற்றப்பட்ட சில பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| தொடர் எண். | பணியின் பெயர். | செலவு (ரூ. லட்சத்தில்). |
|---|---|---|
| 1 | கடலூர்—விருத்தாசலம்—சேலம் சாலையில் 4/2 மைல் முதல் 10/0 மைல் வரை 32 அடி சாலை அமைத்து, தாரிட்ட பரப்பை 22 அடியாக அகலப்படுத்துதல் (தென் ஆர்க்காடு மாவட்டம்). | 3·30 |
| 2 | கடலூர்—விருத்தாசலம்—சேலம் சாலையில் 10/0 மைல் முதல் 16/2 மைல் வரை 32 அடி சாலை அமைத்து, தாரிட்ட பரப்பை 22 அடியாக அகலப் படுத்துதல் (தென் ஆர்க்காடு மாவட்டம்). | 3·80 |





| தொடர் எண். | பணியின் பெயர். | செலவு (ரூ.லட்சத்தில்.) |
|---|---|---|
| 3 | கடலூர்—விருத்தாசலம்—சேலம் சாலையில் 21/4 மைல் முதல் 25/0 மைல் வரை 32 அடி சாலை அமைத்து, தாரிட்ட பரப்பை 22 அடியாக அகலப் படுத்துதல் (தென் ஆர்க்காடு மாவட்டம்). | 1·68 |
| 4 | சேலம்—கடலூர் சாலையில் 15/0 மைல் முதல் 20/0 மைல் வரை பெரும் பாலங்களையும், சிறு பாலங்களையும் புதுப்பித்துக் கட்டுதல் (சேலம் மாவட்டம்). | 1·38 |
| 5 | தும்பல்—பள்ளியகவுண்டன்பாளையம் சாலையின் 1/7 மைலில் பாலம் கட்டுதல் (சேலம் மாவட்டம்). | 1·60 |
| 6 | தஞ்சாவூர்—திருச்சிராப்பள்ளி சாலையின் 32/8 மைலிலுள்ள பாலத்தை அகலப்படுத்துதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | 1·55 |
| 7 | முத்தூர்—திட்டக்குடி சாலையின் 13/2 மைலில் படுகைப்பாலம் கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | 2·53 |
| 8 | திருவெறும்பூர்—சூரியூர் சாலையை மேம்படுத்தல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | 2·52 |
| 9 | திருவெறும்பூர்—சூரியூர் சாலையின் 2/2 மைலில் உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | 1·55 |
| 10 | சேலம்-கடலூர் சாலையின் 13/7 மைலில் பாலம் ஒன்றைக் கட்டுதல். | 0·95 |

புதிய நான்காவது திட்டம் 1969-70 முதல் தொடங்கியுள்ளது. இந்தப் புதிய நான்காவது திட்டத்தில் இவ்வேலைத் திட்டத்தின் கீழ் ரூ. 900 லட்சம் செலவிடத் திட்டமிட்டுள்ளது.

நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டாகிய 1969-70-க்காக ரூ. 36 லட்சம் செலவுள்ள 11 இனங்கள் அடங்கிய வேலைகளின் பட்டியல் ஒன்று II-ம் பாகத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்படுவதற்காக அண்மையில் அரசாங்கத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது தொடர்ந்து நிறைவேற்றப்படும் வேலைகளுக்கென (பாகம் I), ரூ 55 லட்சம் ஒதுக்கப்படுகிறது. II-ம் பாகம் புதிய வேலைகளுக்கு ரூ. 10 லட்சம் ஒதுக்கப்படுகிறது. I, II-ம் பாக வேலைகள் இரண்டிற்கும் சேர்ந்து 1969-70-ல் ரூ. 65 லட்சம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏனைய சாலைகள் ஊராட்சி-ஊராட்சி ஒன்றியச் சாலைகள்
(மத்திய அரசின் உதவி பெறுபவை).

| | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| முதல் திட்டக்கால அளவு (1951-56) செலவு (கணக்குகள்). | 159·00 |
| இரண்டாவது திட்டக்கால அளவு (1956-61) செலவு (கணக்குகள்). | 205·00 |
| மூன்றாவது திட்டக்கால அளவு (1961-66) செலவு (கணக்குகள்). | 170·00 |

(ரூபாய் லட்சத்தில்).

ஆண்டுத் திட்டக்கால அளவுகள் (செலவு).

| | |
|---|---|
| 1966–67 .. .. .. .. .. .. | 13·51 |
| 1967–68 .. .. .. .. .. .. | 23·41 |
| 1968–69 (திருத்த மதிப்பீடு) .. .. .. | 20·00 |

நான்காவது திட்ட தற்காலிக நிதி ஒதுக்கம்.

| | |
|---|---|
| 1969–74 .. .. .. .. .. .. | 190·00 |
| 1969–70 (திட்ட மதிப்பீடு) (நான்காவது திட்ட முதல் ஆண்டு). | 19·99 |

ஊராட்சி ஒன்றியங்களும் ஊராட்சிகளும் பேணி வருகின்ற முன்னாள் மாவட்ட வாரியச் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளுக்கென "இணைய சாலைகள்" என்பதன்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. நிதி நிலைமை சாதகமாக இராத காரணத்தால் மூன்று ஆண்டுத் திட்டக்கால அளவின்போது இதுவரை ரூ. 110·78 லட்சம் செலவில் 23 வேலைகளுக்கு மட்டுமே ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது· அவை குறித்து II-ம் விவர அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது. 1966–67, 1967–68, 1968–69 ஆகிய இந்த மூன்று ஆண்டுக்கால அளவுகளிலும் எய்திய சாதனைகள், 1966–67, 1967–68 கணக்குகள் +1968–69-ல் எதிர்பார்க்கப்படும் சாதனைகள் இவை எழு மைல் ஆறு பர்லாங் புதிய சாலை அமைப்பு, பத்து மைல் ஆறு பர்லாங் புதிதாக சரளைக்கல் பாவுதல், 10.77 எண் பெரும்பாலங்கள், 4·80 எண் சிறுபாலங்கள்; படுகைப்பாலங்கள் 1·08 எண் மேம்பாட்டுத் திட்டங்கள். கீழ்க்கண்ட பெரிய வேலைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன—(1) புவனகிரி—குறிஞ்சிப்பாடி சாலையின் 7/2—3 மைலில் பரவனாற்றின் குறுக்காக மூழ்கு பாலம் (ரூ. 8 லட்சம் செலவில்—தென் ஆர்க்காடு மாவட்டம்); (2) அம்மாப்பேட்டை—கோவிந்தகுடி சாலையில் சேரி கிராமத்தின் அருகில் வெட்டாற்றின் குறுக்காக பாலங்கள் (ரூ. 8 லட்சம் செலவில்—தஞ்சாவூர் மாவட்டம்); (3) திருநெல்வேலி மாவட்டம், ஆலடியூரில் தாமிரவருணி ஆற்றின் குறுக்காக உயர்மட்ட பாலம் (ரூ. 8·25 லட்சம் செலவில்); (4) வலங்கைமான் ஊராட்சி ஒன்றியத்தின் வேடம்பூரில் வெட்டாற்றின் குறுக்காக பாலம் (ரூ. 7·50 லட்சம் செலவில்—தஞ்சாவூர் மாவட்டம்).

1968–69-ம் ஆண்டில் கீழ்க் கண்ட வேலைகளை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

| தொடர் எண். | வேலையின் பெயர். | செலவு (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|
| 1 | தஞ்சாவூர் மாவட்டம், வைத்தீஸ்வரன் கோவில் தென்னலக்குடி சாலையில் 0/6 மைலில் கூப்பிட வனாற்றின் குறுக்காக, பாலம் ஒன்றைக் கட்டுதல். | 3·18 |
| 2 | தஞ்சாவூர் மாவட்டம், நீடூர்-நாரணமங்கலம் சாலையின் 0/5 மைலில் பவழநாற்றின் குறுக்காக, பாலம் ஒன்றைக் கட்டுதல். | 3·75 |
| 3 | சேலம் மாவட்டம், காரியமங்கலம்-அகரம் சாலையின் 5/4 மைலில் படுகைப் பாலம் ஒன்றைக் கட்டுதல். | 4·95 |
| 4 | காட்டுக்கோட்டை-உடையநத்தூர் சாலையின் 1/6-7 மைலில் சாலை அணை ஒன்றை அமைத்தல். | 0·37 |



புதிய நான்காவது திட்டம்.

1969-70 முதல் தொடங்கப்பட விருக்கிறது. இத்திட்டத்திற்காக ரூ. 190 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

நான்காவது திட்டத்தின் முதலாண்டில் அதாவது, 1969–70-ல் ரூ. 58·85 லட்சம் செலவில் II-ம் பகுதியின்கீழ் உள்ள 22 வேலைத் திட்டங்கள் அரசின் ஒப்புதலுக்காகப் பரிந்துரைக்கப் பட்டுள்ளன. இவற்றில் ரூ. 17·50 லட்சம் செலவுத் தொகையிலான மூன்று வேலைத் திட்டங்களுக்கு ஏற்கெனவே ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, 1968–69-லேயே நிறைவேற்றப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன. I, II-ம் பகுதி வேலைத் திட்டங்களுக்காக (அதாவது ஒப்பளிக்கப்பட வேண்டிய எஞ்சிய வேலைத் திட்டங்களும், புதிய வேலைத்திட்டங்களும்) 1969–70-ல் ரூ. 20 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

சாலைகளைப் பேணுதல்..

1960–61 முதல் செயலுக்கு வந்த ஊராட்சிகள்–ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தமான புதிய அமைப்பின்கீழ், முன்னாள் மாவட்ட வாரியத்தின் பொறுப்பில் இருந்த இணைய மாவட்டச் சாலைகளின்கீழ் உள்ள கீழ்த்தரச் சாலைகளும், கிராமச்சாலைகளும் இடத்திற்கேற்றவாறு ஊராட்சி ஒன்றியச் சாலைகளாகவும், ஊராட்சிச் சாலைகளாகவும் மாற்றப்பட்டுள்ளன. இச்சாலைகள் அவற்றால் வருங்காலத்தில் பேணி வரப்படுவதற்குரியவை. பின்னர், பேருந்துகள் செல்லும் சாலைகள் அனைத்தும் அரசுக்குப் படிப்படி யாக மாற்றுவதன் மூலம் ஊராட்சி ஒன்றியங்களும் ஊராட்சிகளும் இப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படும். நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து, படிப்படி யாக நிறைவேற்றப்படும் திட்டத்தின்கீழ் இப்பணிகளைச் செயல்படுத்தத் திட்ட மிடப்பட்டுள்ளது. இதற்கேற்ப 1960–61 முதல் 1967–68 வரையிலுள்ள 8 ஆண்டுக் காலத்தில் அரசினால் எடுத்துக்கொள்ளப்பட்ட பேருந்து வழி தடங்களின் மொத்த நீளம் 4,512 மைலகளாகும். 1968–69-ல் பேருந்து வழித் தடச் சாலைகளில் மொத்தம் 300 மைல் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காகவும் பிற்காலத்தில் அவற்றைப் பேணி வருவதற்காவும் எடுத்துக்கொள்ளும்படி ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால், இச் சாலைகள 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல்தான் முறையாக அரசினால் பேணிவருவதற்காக மேற்கொள்ளப் படும். 1969–70-ல் மேலும் 300 மைல் நீளமுடைய பேருந்து வழித்தடச் சாலைகளை வருங்காலத்தில் பராமரிப்பதற்காக, மேற்கொண்டு அவற்றை மேம்படுத்துவதற்கான செயற்குறிப்பை அரசு ஆலோசனை செய்து வருகிறது. 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி அன்று அரசினால் எடுத்துக்கொள்ளப்படவேண்டி எஞ்சிநிற்கும் சாலைகளின் மொத்த நீளம் 1,620 மைல்களாகும், தற்சமயம் பேருந்து வழித்தடச் சாலைகள் என அறிவிக்கப்பட்ட சாலைகள் இவற்றில் சேர்க்கப்படவில்லை. இவை படிப்படியாக அரசினால் மேற்கொள்ளப்படும்.

1969–70-ல் பல்வேறு மாநிலச் சாலைகளை (அரசுச் சாலைகள்) பேணி வருவதற்குத் தேவைப்படும் நிதி அளவு ரூ. 5·26 கோடியாகும். 1968–69 திருத்த மதிப்பீட்டில் இது ரூ. 5·12 கோடியாக இருந்தது. சாலைகளைப் பேணிவருவதற்கான தொகையில் 20 சத வீதமே சாலைகள் அமைக்கும் பணிக்காகச் செலவிடப்பட்டது. இக் கட்டுப்பாடு இப்போது தளர்த்தப்பட்டுள்ளது. தற்போதைய போக்குவரத்தைச் சரிக் கட்டுவதற்குத் தேவையான சாலைகளைப் பேணிவருவதற்குத் தடை செய்யாமல் கிடைக்கக்கூடிய கூடுதல் நிதியைக் கொண்டு புதிதாக சாலைகள் அமைக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

[1969 மார்ச் 17

### கருவிகளும் பொறிகளும் (மத்திய அரசு உதவி பெறுபவை).

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| தல் ஐந்தாண்டுத் திட்டம் (1951—56) செலவு .. | 99·00 |
| ரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956—61) செலவு | 46·00 |
| ன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் (1961—66) .. | 69·00 |
| **ஆண்டுத் திட்டங்கள்** (செலவுத் தொகை)— | |
| 1966-67 .. .. . | 13·09 |
| 1967-68 .. .. | 1·75 |
| 1968-69 (திருத்த மதிப்பீடு) .. .. | 1·46 |
| தாற்காலிக நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் .. | 50·00 |
| 1969-70 திட்ட மதிப்பீடு (நான்காம் திட்டத்தின் முதல் ஆண்டு). | 2·50 |

நெடுஞ்சாலைகள் ஆராய்ச்சி நிலையத்திற்குத் தேவைப்படும் விஞ்ஞானக் கருவிகளும், சாலைகள், பால வேலைகளுக்காக தேவைப்படும் பொறிகளும், கருவிகளும் ஒவ்வோர் ஆண்டும் வாங்கப்படுகின்றன. புதிய நான்காவது திட்டம் 1969-70 முதல் தொடங்கப்படவிருக்கிறது. இந்தப் புதிய நான்காவது திட்டத்தில் இத் திட்டத்திற்காக, ரூ. 50 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

1969-70-ல் அதாவது, நான்காவது திட்டத்தின் தொடக்க ஆண்டில் ரூ. 16·12 லட்சம் செலவிலான இரண்டாம் பகுதியின்கீழ் உள்ள திட்டங்கள் ஒப்புதல் வழங்கப்படுவதற்காக அரசின் ஆலோசனையில் இருந்து வருகின்றன. 1969-70-ல் ரூ. 2·50 லட்சம் நிதி ஒதிக்கம் செய்யப்பட்டுள்ளது.

### மத்திய சாலை நிதி (ஒதுக்கீடும் இருப்பும்) (மத்திய அரசு உதவி பெறுபவை).

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951—56) (செலவு) (கணக்கு). | 166·00 |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956—61) (செலவு) (கணக்கு). | 239·00 |
| மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் (1961—66) (செலவு) (கணக்கு). | 189·00 |
| ஆண்டுத் திட்டக்கால அளவுகள் (செலவு)— | |
| 1966-67 (கணக்கு) | 32·73 |
| 1967-68 ௸ .. | 23·03 |
| 1968-69 (திருத்த மதிப்பீடு) .. | 27·00 |
| தாற்காலிக நான்காவது நிதி ஒதுக்கம் (1969—74). | 282·57 |
| 1969-70 திட்ட மதிப்பீடு (நான்காவது திட்டத்தின் முதலாண்டு). | 25·00 |



1969 மார்ச் 17]

இத் திட்டத்தின்கீழ், அரசாங்கச் சாலைகளிலும் மற்ற சாலைகளிலும், வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மத்தியச் சாலை நிதி (இருப்பு நிதி)யிலிருந்து மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கு, இந்திய அரசு முழுமையாகவோ, ஓரளவோ ஒதுக்கும் இருப்பு நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதி வழங்குகிறது. எஞ்சியவற்றிற்கு மத்தியச் சாலை நிதி (செலவு ஒதுக்கீடு)லிருந்துதான் எடுத்துக்கொள்ள வேண்டும். ரூ. 76·10 லட்சம் மதிப்புள்ள மூன்றுவது திட்டத்தின எஞ்சிய வேலைகளைத் தவிர மத்தியச் சாலை நிதி (ஒதுக்கீடு)-ன கீழ் செயல்படுத்தப்படுவதற்காக மேற்கொள்ள கீழ்க்கண்ட இரண்டு பணிகளுக்கு மட்டுமே இந்திய அரசு 1966-67-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

| தொடர் எண். | வேலையின் பெயர். | செலவு (ரூ. லட்சத்தில்). |
|---|---|---|
| 1 | பெரம்பலூர் மானமதுரை சாலை, திருமானூரில் கொள்ளிடத்தின் குறுக்கே படுகைப் பாலம் ஒன்றை அமைத்தல் (தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி மாவட்ட எல்லை). | 44·00 |
| 2 | கிழக்குக் கடற்கரைச் சாலை-கோவளம் (செங்கற்பட்டு மாவட்டம்) அருகே சிற்றோடை மீது பாலம் ஒன்று கட்டுதல். | 25·00 |

ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்கப்பட்டவுடன் இவ் விரண்டு பணிகளும் மேற்கொள்ளப்படும். 1966-67, 1967-68, 1968-69-ம் (1966-67, 1967-68 செலவு கணக்குகள் + 1968-69-ல் எதிர்பார்க்கப்படும்) ஆண்டுகளில் எய்திய சாதனைகள் வருமாறு :—

| | மைல் | பர். |
|---|---|---|
| தார் போடுதல் | 3 | 2 |
| புதிதாகச் சரளைக்கல் போடுதல் | 91 | .. |
| பெரிய பாலங்கள், படுகைப் பாலங்கள் | 6·58 (எண்ணிக்கை) | |
| மேம்படுத்தும் பணிகள் | 3·29 (எண்ணிக்கை) | |
| சிறு பாலங்கள் | 0·89 (எண்ணிக்கை | |

மேலும் வாராவதிகளும் கட்டப்பட்டுள்ளன. திருச்சி மாவட்டத்திலுள்ள கோட்டைக்காடு சாலையின் மேம்பாட்டுப் பணி உட்பட தரம் உயர்த்தும் பணி ரூ. 1·25 லட்சம் செலவில் 1968-69 லேயே முடிக்கப்பட்டுவிட்டது. செயல்படுத்தப்பட்டுவரும் சில பெரிய வேலைத் திட்டங்கள் வருமாறு:—

| தொடர் எண். | வேலைகள். | செலவு (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | ஒக்கூரிலிருந்து தியத்தூர் வரை அதாவது எலம்ப வயல், தீயூர் (தஞ்சாவூர் மாவட்டம்) சாலைகளை தரம் உயர்த்துதல். | 11·00 |
| 2. | ஆலத்தூர் கரை, கொளக்கநத்தம்—அரியலூர் சாலையை (சிறு கழிவுநீர் அகற்றும் திட்டங்களும் சேர்ந்தது) (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) தரம் உயர்த்துதல். | 5·28 |
| 3. | சமயபுரம் கரிய மாணிக்கம் சாலை மேம்பாடு (படுகைப் பாலங்களும் சேர்ந்தது), (திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | 4·62 |
| 4. | இளையான்குடி-இராஜசிங்கமங்கலம் சாலையில் கல் பரப்புதல் (இராமநாதபுரம் மாவட்டம்). | 12·00 |

| தொடர் எண். | வேலைகள். | செலவு (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|
| 5. | பெண்ணகரம்-பெரும்பாலை சாலையில் கருங்கல் போடுவதன் மூலம் தரம் உயர்த்துதல் (தருமபுரி மாவட்டம்). | 2·75 |
| 6. | கொக்களத்துறை சாலையை மாற்றி அமைத்தலும், மேம்படுத்துதலும் (நீலகிரி மாவட்டம்). | 1·65 |

புதிய நான்காவது திட்டம் 1969-70 முதல் தொடங்கப்படவிருக்கிறது. இத் திட்டத்தில் சாலைத் திட்டங்களுக்காக ரூ. 282·57 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மாநில அரசினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள புதிய வேலைத் திட்டங்கள் இந்திய அரசின் ஆலோசனையில் இருந்து வருகின்றன. 1969-70-ல் இத் திட்டத்திற்காக ரூ. 25 லட்சத்துக்கு ஒதுக்கை செய்யப்பட்டுள்ளது.

## பெருநகரங்களின் சாலை மேம்பாட்டுத் திட்டம் (நகரச் சாலைகள் மேம்பாடு உட்பட).

### (மத்திய அரசு உதவி பெறும் திட்டங்கள்).

(ரூ. லட்சத்தில்.)

| | |
|---|---|
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் (1951-56) (செலவு) (கணக்கு).<br>இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் (1956-61) (செலவு) (கணக்கு). | முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இத் தகைய திட்டம் எதுவும் இல்லை. |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961-66) (செலவு) (கணக்கு). | (91·15 மட்டுமே) நகரச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மட்டுமே ஒப்புதலளிக்கப்பட்டது. |

ஆண்டுத் திட்ட காலங்கள் (செலவு)—

| | |
|---|---|
| 1966-67 (கணக்கு) .. .. | 35·19 |
| 1967-68 (கணக்கு) .. .. | 22·38 |
| 1968-69 (திருத்த மதிப்பீடு) .. .. | 29·50 |

நான்காவது திட்ட தாற்காலிக நிதி ஒதுக்கம்—

| | |
|---|---|
| 1969-74 .. .. .. | 600·00 |
| 1969-70 (திட்ட மதிப்பீடு) .. .. | 46·50 |

(நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டு).

சென்னை மாநகரம் விரைந்து வளர்ச்சி அடைந்து வருகிறது. நேர்
பாக்குவரத்து இடையீடின்றி இயங்க வேண்டும். சென்னை மாநகரில்
-7 மைல்கள் 5 பர்லாங்கு தொலைவுள்ள 3 தேசிய நெடுஞ்சாலைகளையும்
964-ம் ஆண்டில் அரசாங்கம் எடுத்துக் கொண்டது. சென்னை மாநகரத்தில்
பாக்குவரத்து அதிகரித்துள்ளதால் பல அணிப் போக்குவரத்து வசதி
களுடன் சாலைகள் அகலப்படுத்தப்பட்டன.



ஆண்டு வாரியான செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண். | ஆண்டு. | செலவு. மாநகரச் சாலை மேம்பாடு. | செலவு. பெருநகரச் சாலை மேம்பாட்டுத் திட்டம். | மொத்தம். |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| | மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலம்— | | | |
| 1. | 1964-65 .. .. | 35·13 | .. | 35·13 |
| 2. | 1965-66 .. .. | 56·02 | .. | 56·02 |
| | மொத்தம் .. | 91·15 | | 91·15 |
| | ஆண்டுத் திட்டக் காலங்கள்— | | | |
| 3. | 1966-67 .. .. | 35·09 | .. | 35·19 |
| 4. | 1967-68 .. .. | 12·39 | 9·99 | 22·38 |
| 5. | 1968-69 .. .. (திருத்த மதிப்பீடு). | 1·82 | 27·68 | 29·50 |
| | நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் (1969—74)— | | | |
| 6. | 1969-70 திட்ட மதிப்பீடு) ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டு | | 46·50 (சென்னை மாநகராட்சி செலவிடப்பட வேண்டிய தொகையும் இதில் அடங்கும்). | 46·50 |

பெருநகர்
பெரு முக்கியத்துவம் அளிக்கப்படுகிற பல திட்டங்களில் சென்னை மாநகரிலுள்ள
சாலைகள் வளர்ச்சித் திட்டமும் ஒன்றாகும். 1961-ம்
மக்கட் தொகை 1941-ம் ஆண்டில் 7·75 லட்சமாக இருந்தது. 1940-ம்
ஆண்டில் 17·29 லட்சமாக அதிகரித்துவிட்டது. நகரின் பரப்பளவு மைல்களாக
ஆண்டில் 30 சதுர மைல்களாக இருந்தது. தற்போது 50 சதுர நகரத்தில்
விரிவடைந்துள்ளது. இவ்வாறு வெகு வேகமாக வளர்ந்துவரும் முறையில்
சிறந்த போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித்தர திட்டமிட்ட நகரின் மேம்
சாலைகள் அமைக்க வேண்டியது இன்றியமையாததாகும். வேலைத் திட்டம்
பாட்டுக்கென முன்னர் வகுத்த திட்டங்களில் தனிப்பட்ட செலவில்
எதும் தீட்டப்படவில்லை. எனினும், ரூ. 86·22 லட்சம் மதிப்பீட்டுச் (III-வது விவர
ஏற்கெனவே ஒப்புதலளிக்கப்பட்ட 6 பணித் திட்டங்களும் ஆண்டிலிருந்து இந்த
அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு) 1966-67-ம் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த
திட்டத்தின்கீழ் நிறைவேற்றுவதற்குக் 1969-70-ம் ஆண்டுத் திட்டத்
6 பணிகளும் எஞ்சிய வேலைத் திட்டங்களாக சாலை ஆய்வுக் குழுவின் பரிவுரை
திலும் நிறைவேற்றப்படும். பெருநகரச் திட்டக்காலத்தில் சென்னை மாநகரிலும்
களின் அடிப்படையில் நான்காவது மேற்கொள்ளப்படவிருக்கும் பல்வேறு
அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.
திட்டங்களுக்காக ரூ. 6 கோடி தனியே நெடுஞ்சாலைத் துறையும்
நான்காவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகளை செலவில் 33
சென்னை மாநகராட்சியும் நிறைவேற்றும் ரூ. 100 லட்சம் ரூ. 143
மைல்களுக்குத் தார் போடுதல், தற்போதுள்ள 15 சாலைகளை 7 பெரிய
லட்சம் செலவில் மேம்பாடு செய்தல், ரூ. 100 லட்சம் செலவில் 14 மேம்பாலங்களையும்
பாலங்களையும் படுகைப் பாலங்களையும் கட்டுதல், ஆகியவை
சுரங்கப் யாதைகளையும் ரூ. 256·56 லட்சம் செலவில் கட்டுதல் சில
அனைத்தும் இத் திட்டத்தில் அடங்கும். நிறைவேற்றப்படவிருக்கிற
முக்கியமான திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(அ) 45-வது தேசிய நெடுஞ்சாலையில் ஜெமினியருகில் ரூ. 45 லட்சம்
செலவில் விரைவு மேம்பாலம் (flyover) கட்டித் தருதல்.

(இ) சென்டிரல் நிலையத்தில் ரூ. 55 லட்சம் செலவில் மேம்பாலம் கட்டுதல்.

(உ) துரைசாமி சாலை, கண்ணம்மாப்பேட்டை, கெங்குரெட்டி சாலை, ஹாரிங்டன் சாலை ஆகிய இடங்களில் தற்போதுள்ள சாலை-இருப்புப் பாதைக் கடவுகளில் ரூ. 100 லட்சம் செலவில் சுரங்கப்பாதைகள் கட்டுதல். துரைசாமி சாலை, கண்ணம்மாப்பேட்டை சாலை ஆகியவற்றில் சுரங்கப் பாதைகள் அமைக்கும் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதலளித்துள்ளது. இந்த இரண்டு பணிகளுக்கும் முறையே ரூ. 25·24 லட்சம் ; ரூ. 25·00 லட்சம் செலவில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு (நெடுஞ்சாலை) தலைமைப் பொறியாளர் தொழில் நுட்ப ஒப்புதலை வழங்கியுள்ளார். இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக அந்த மதிப்பீடுகளைச் சென்னை மாநகராட்சிக்கு அனுப்பியுள்ளார்.

(எ) 4-வது தேசிய நெடுஞ்சாலையில் பொது மருத்துவ மனைப் பாலத்தை அகலப்படுத்துதல், 45-வது தேசிய நெடுஞ்சாலையில் உள்ள வாலாஜா பாலத்தை அகலப்படுத்துதல், ஆண்டர்ஸன் சாலை, ஹாரிஸ் சாலை, கமாண்டர்-இன்-சீப் சாலை, ஆண்டர்சன் சாலை ஆகியவற்றில் கூவத்தின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்துதல், எலியட்ஸ் பீச் சாலையிலும் லாயிட்ஸ் சாலையிலும் பகிங்காம் கால்வாயின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்துதல். இந்த வேலைத் திட்டங்களுக்கு ரூ. 92 லட்சம் செலவிடப்படும்.

(ஐ) அடையாற்றின் குறுக்கே உள்ள எலிபின்ஸ்டன பாலத்தை ரூ, 50 லட்சம் செலவில் புதுப்பித்துக் கட்டுதல்.

சென்னை-கல்கத்தா சாலை (தேசிய நெடுஞ்சாலை-5) சென்னை-சித்தூர்-பெங்களூர் சாலை (தேசிய நெடுஞ்சாலை-4) சென்னை-திருச்சிராப்பள்ளி-திண்டுக்கல் சாலை (தேசிய நெடுஞ்சாலை 45) ஆகிய சாலைகள் சென்னை நகரின் ஊடே செல்லாமல் உள்வட்டச்சாலை வெளிவட்டச்சாலை என வழங்கப்படுகிற புறச்சாலைகள் மூலம் (தேசிய நெடுஞ்சாலை 45-ன் கீழ் வருகிற பகுதிகள் நீங்கலாக) நேரடியாக இணைப்பு கொடுப்பதற்கான கூடுதல் செயற்குறிப்புகளும் ரூ. 75 லட்சம் செலவில் நிறைவேற்றப்படச் சேர்க்கப்பட்டுள்ளன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாவது ஆண்டாகிய 1969–70-ல் நிறைவேற்றப்பட்டுவரும் வேலைத் திட்டங்கள் தவிர, ரூ. 45 லட்சம் செலவில் 45-ம் எண் தேசிய நெடுஞ்சாலையில் ஜெமினியருகில் விரைவு மேம்பாலம் கட்டும் பணியை 1969–70 II-ம் பகுதியின் கீழ் எடுத்துக் கொள்ள அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

வளர்ந்துவரும் " பெருஞ் சென்னையில் " போக்குவரத்து ஆய்வை நடத்துவதற்காக சென்னை மாநகரத்திற்கான விரிவான பெருந் திட்டத்தைத் தயாரிக்க தனிப்பட்ட போக்குவரத்துப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு நகர அமைப்புத் துறையுடன் ஒருங்கிணைந்து ஏற்கெனவே ஆய்வு நடத்தத் தொடங்கிவிட்டது.

(சென்னை மாநகராட்சியின் பங்கு உட்பட) 1969–70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ. 46·50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



## தற்போதுள்ள சாலை—இருப்புப் பாதை

## கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலம்/சுரங்கப்பாதை கட்டுதல்.

(மத்திய அரசு உதவி பெறும் திட்டங்கள்.)

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் (1951—56) (செலவு) (கணக்கு). | இந்த திட்ட காலங்களில் இத்தகைய திட்டம் ஏது மில்லை. |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956—61) (செலவு) (கணக்கு). | |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961—66) (செலவு) (கணக்கு). | 1,00·57 |
| ஆண்டுத் திட்டகாலங்கள்— | |
| 1966-67 (கணக்கு) .. .. | 15·18 |
| 1967-68 (கணக்கு) .. .. | 0·55 |
| 1968-69 (திருத்த மதிப்பீடு) .. | .. |
| நான்காவது திட்ட தாற்காலிக நிதி ஒதுக்கம்— | |
| 1969–74 .. .. | 1,20·00 |
| 1969-70 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). (நான்காவது திட்டத்தின் முதலாண்டு). | 5·00 |

மூன்றாவது திட்டக் காலத்தில், சென்னை மாநகரில் அடியிற்கண்ட இரு வேலைத் திட்டங்களும் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டன :—

| | மதிப்பீட்டுச் செலவு (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| 1. திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 48·20 |
| 2. உயர்நீதி மன்றத்தின் அருகில் ஸ்பிரிங்ஹேவன் சாலையில் சுரங்கப்பாதை ஒன்றைக் கட்டுதல். | 69·30 |

இந்த இரண்டு வேலைத் திட்டங்களும் நிறைவேற்றி முடிக்கப்பட்டு போக்குவரத்திற்காகத் திறந்து விடப்பட்டுள்ளன. கலங்கரை விளக்கம் சுரங்கப்பாதை திட்டத்தில் முடிக்காது எஞ்சியுள்ள வேலைகள் மட்டுமே ரூ. 17·33 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் நிறைவேற்றக் கருதப்பட்டிருந்தன. இவ்வேலைகள் 1966–67-ல் நிறைவேற்றி முடிக்கப்பட்டன. கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் மேம்பாலம் கட்டும் பணி திட்டத்தின்பாற்படாத பணியாக மேற்கொள்ளப்பட்டது. ரூ. 39 லட்சம் செலவில் எடுத்துக்கொள்ளப்பட்ட இத்திட்டச் செலவில் பாதிப் பங்கினை தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் ஏற்றுக்கொண்டது. இப்பணி முடிக்கப்பட்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டது என்பதையும் ஈண்டுச் சுட்டிக்காட்ட வேண்டும். 1966–67-ம் ஆண்டிலும் 1967–68-ம் ஆண்டிலும் புதிய திட்டம் எதற்கும் ஒப்புதலளிக்கப்படவில்லை. மதுரை மாநகராட்சி எல்லைகளுக்குள் அடியிற்கண்ட

இரண்டு மேம்பாலங்களுக்கு அரசாங்கம் அண்மையில் ஒப்புதலளித்துள்ளது :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1. 7-ம் எண் தேசிய நெடுஞ்சாலையின் 300/2 மைல் தொலைவில் தறபோதுள்ள சாலை—இருப்புப் பாதை கடவுக்குப் பதிலாக மேம்பாலம் கட்டுதல். (சுப்ரமணியபுரத்தில் 1/1-2 இ. மீட்டர் ரயில் பாதைத் தொலைவு.) | 37·00 |
| 2. 7-ம் எண் தேசிய நெடுஞ்சாலையின் 300/7 மைல் தொலைவில் தற்போதுள்ள சாலை.இருப்புப் பாதை கடவுக்குப் பதிலாக மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். (மீனாட்சி ஆலையில் 496/5-6 ரயில் பாதைத் தொலைவு.) | 31·00 |

இத்திட்டத்திற்கென 1969–70-ம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 5.00 லட்சம் தனியே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. செங்கற்பட்டு நகராட்சி எல்லைக்குள் (45-வது தேசிய நெடுஞ்சாலை) சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலையில் 34-3-வது மைலில் மேம்பாலம் ஒன்றைக் கட்டும் திட்ட வேலையை ரூ. 15·00 லட்சம் செலவில் 1969–70-ம் ஆண்டின் II-வது பகுதித் திட்டத்தின் கீழ் நிறைவேற்ற அனுமதிக்கப்பட்டுள்ளது. விரிவான மதிப்பீட்டையும் திட்டங்களையும் தயாரித்த பின்னர் விரைவாகப் பரிசீலனை செய்து இந்தப் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

பொருளாதார, பல மாநில முக்கியத்துவத் திட்டம்
(மத்திய அரசு ஆதரவு பெற்றது).

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் (1951–56) (செலவு) (கணக்கு) | 15·69 |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956–61) (செலவு) [(கணக்கு) | 83·59 |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961–66) (செலவு) (கணக்கு.) | 44.84 |
| ஆண்டு திட்டக் காலங்களில் செலவு— | |
| 1966–67 (கணக்கு) .. .. .. | 7·48 |
| 1967–68 (கணக்கு) .. .. .. | 5·00 |
| 1968–69 (திருத்த மதிப்பீடு) .. .. | 5·00 |
| நான்காவது திட்ட தாற்காலிக நிதி ஒதுக்கம்— | |
| (1969—74) .. .. .. .. | 1,85·00 |
| 1969–70 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு) .. | 3·05 |
| (நான்காவது திட்டத்தின் முதலாண்டு). | |

பொருளாதார, பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த சாலைத் திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்படும் சாலை அமைப்பு, வளர்ச்சிப் பணிகள் மத்திய அரசினால் தொடங்கப்படுபவை. இந்தச் சிறப்புத் திட்டம், முதல் ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதியில் இந்திய அரசினால் தொடங்கிவைக்கப்பட்டது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி குன்றுகளுக்கு மலைச் சாலை அமைத்தல், அரக்கோணம்-திருவள்ளூர் சாலை, பண்ணைக்காடு–மங்கலக்கொம்பு சாலை ஆகியவற்றை மேம்படுத்துதல் போன்ற பழைய வேலைகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன. சேலம் மாவட்டத்தில், இத் திட்டத்தின்கீழ ரூ. 31·50 லட்சம் மதிப்புள்ள கீழ்க்கண்ட இரு புதிய வேலைகளுக்கு மூன்றும் திட்டக்காலத்தில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இந்திய அரசு இத் திட்டத்தின்கீழ் மானியமாக வழங்க ஒப்புக்



கொண்ட தொகை ரூ. 31·50 லட்சம். இந்த இரு வேலைகளும் எஞ்சிய வேலைகளாக முடிக்கப்படுவதற்காக 1966–67 முதல் எடுத்துக்கொள்ளப் பட்டன. அவையாவன :—

| | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1. தமிழ் நாட்டின் எல்லையில் உள்ள மேட்டூரை, மைசூர் மாநிலத்தில் உள்ள மாதேசுவரத்துடன் குமாத்தூர் வழியாக இணைக்கும் சாலையில் தமிழ் நாட்டுப் பிரிவுக்கு மேம்பாட்டு வேலைகள். | 17·00 |
| 2. தீர்த்தம்-பேரிகை சாலையை அமைத்தலும் பாலங்கள் கட்டுதலும். | 14·50 |
| மொத்தம் .. | 31·50 |

1966–67-ம் ஆண்டில் இத் திட்டத்தின்கீழ் இந்திய அரசு கீழ்க்கண்ட ஒரு வேலையை மட்டுமே அனுமதித்துள்ளது :—

சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்லும் கீழ்க் கடற்கரைச் சாலையில் மாமல்லபுரத்திலிருந்து மரக்காணம் வரை தென் ஆர்க்காடு மாவட்ட எல்லை வரை இணைக்கப்பெறாத பகுதிகளில் சாலை அமைத்தல், இந்த வேலையின் செலவு மதிப்பு 32 லட்சம் ரூபாய். மத்திய அரசு இவ் வேலைக்கான செலவில் பாதிப் பங்கை ரூ. 16 லட்சத்திற்கு மேற்படாமல் மானியமாக அளிக்க முன் வந்துள்ளது. மிகுதியை மாநில அரசாங்கம் ஏற்கவேண்டும். தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ், கீழ்க் கடற்கரைச் சாலை முழுவதையும் அமைக்கும் 14 கோடி ரூபாய் திட்டத்திற்கு இந்திய அரசு இதுவரை அனுமதி வழங்கவில்லை. எனினும், இத் திட்டம் இப்போது இரண்டு நிலைகளில் நிறைவேற்றப்படவிருக்கிறது. கீழ்க் கடற் கடற்கரைச் சாலையில் சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு சாலை அமைக்கும் முதல் நிலைப் பணியை மேற்கொள்ள ரூ. 6 கோடி ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நான்காவது திட்டத்தில் எடுத்தக் கொள்வதற்காக ரூ. 6·50 கோடி செலவிலான சுருங்கிய திட்டம் ஒன்று மாநில அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இச் சாலை தமிழ் நாடு, புதுச்சேரி மாநிலங்களையும், தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தையும், கடலூர், நாகப்பட்டினத்தில் உள்ள சிறு துறைமுகங்களையும் இணைப்பதுடன், மீன் பிடித்தல், உப்புத் தொழில்கள் முதலியவற்றை மேம்படுத்துவதன் மூலம், கடற்கரைச் சாலைகளின் தேவைகளையும் பூர்த்தி செய்வதால் இதனை பொருளாதார, பல மாநில முக்கியத்துவம் கொண்ட சாலைத் திட்டங்களின் கீழ் எடுத்துக் கொள்ளும்படி நெடுஞ்சாலைத் தலைமைப் பொறியாளர் பரிந்துரைத்துள்ளார்.

பொருளாதார பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட இரண்டு புதிய வேலைகளை 1969–70-ம் ஆண்டு முதலே, அதாவது புதிய நான்காம் திட்டத்தின் முதல் ஆண்டிலேயே நிறைவேற்றுவதற்காக, இந்திய அரசின் ஏற்பளிப்பைப் பெறுவதற்கு நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் துறைத் தலைமைப் பொறியாளர் பரிவுரை செய்துள்ளார். இது குறித்து இந்த அரசு இந்திய அரசுக்கு விரைவில் கடிதம் எழுதும்.

| தொடர் எண். | வேலையின் பெயர். | செலவுத் தொகை. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | எண்ணூர் கழிமுகப் பகுதியில் பாலம் ஒன்று கட்டி அதனை சென்னை-எண்ணூர் புதிய சாலையுடன் இணைத்தல். | 60·00 |
| 2 | முசிரியையும்-குளித்தலையையும் இணைப்பதற்காக மணப்பாறை-துறையூர் சாலையில் காவிரியின் குறுக்கே பாலம் கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | 80·00 |

1966-67, 1967-68, 1968-69-ம் ஆண்டுகளுக்கான திட்டச்சாதனை (1966-67, 1967-68-க்கான கணக்கு + 1968-69-ல் எதிர்பார்க்கப்படுவது) 15 மைல்கள் 2 பர்லாங்குகள் புதிய சாலைகள் அமைத்தலும், 0·63 சீர்மைப்பு செய்தலும் ஆகும்.

இத் திட்டத்திற்காக 1969-70-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின் கீழ் ரூ. 3·05 கோடி ஒதுக்கும்படித் தலைமைப் பொறியாளர் அரசின் நிதித் துறையைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

### சுங்க வரி.

மலைச்சாலைகளுக்கும், பாலங்களுக்கும் சுங்க வரி விதிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்தது. பத்து லட்சம் ரூபாய் மதிப்பிற்குட்பட்ட பாலங்களுக்கும், மலைச்சாலைகளுக்கும் சுங்க வரி விதிப்பதில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது. 1965-66-ம் ஆண்டில் இருந்து பத்து லட்சம் ரூபாய் மதிப்பிற்கு மேற்பட்ட பாலங்களுக்கு மட்டுமே சுங்க வரி விதிக்கப்படும். இவைகளிலும் குறிப்பிட்ட வகையான வண்டிகளுக்கு சுங்க வரியினின்று விலக்களிப்பது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

### நெடுஞ்சாலை ஆய்வுக்கூடம்.

சென்ற ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும், சாலைகளில் வேலை செய்யுமிடத்திலும், சோதனைச் சாலையிலும் ஆராய்ச்சிகள் நிகழ்த்தி புதிய கோட்பாடுகளின் அடிப்படையில் சிறந்த சிக்கன வடிவமைப்புகளைத் தயாரிக்கவும், தேற்ற முறையையும், செய்முறையையும் இணைத்துப் பார்க்கவும் நெடுஞ்சாலை ஆய்வுக்கூடம் முயற்சி எடுத்துக்கொண்டது. இப் பிரிவின் பல்வேறு பிரிவுகளின் பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

மண் ஆராய்ச்சிப் பகுதியில், மண் வலுவினை முடிவு செய்வதற்கும், கடைக்காலின் தன்மை, கட்டிடங்களுக்குத் தேவைப்படும் கடைக்காலின் உச்ச அளவு, சாலைக் கடைக்காலுக்கு வேண்டிய பற்பல பொருள்களின் உறுதித் தன்மை, ஏற்ற கலவை அளவு ஆகிய இவற்றை முடிவு செய்வதற்காக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள் இவை உறுதிகுலைந்து சீர்கெடுவதற்கான காரணங்களை அறிவதற்காகவும், இயன்ற இடங்களில் எல்லாம் அவை ஏற்படாமலிருப்பதற்கான வழிமுறைகள் பற்றிக் கருத்துத் தெரிவிப்பதற்காகவும் ஆய்வு செய்யப்பட்டன. இந்த ஆண்டில் கடைக்கால்களின் வடிவமைப்பு குறித்த 21 சோதனைகளும், சாலைகள்—சாலை அமைப்புகள் உறுதி குலைவது குறித்த 7 சோதனைகளும் நடத்தப்பட்டன. இவற்றில் மிகவும் முக்கியமான சோதனைகளாவன: (1) மணலியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள உரத் தொழிற்சாலை, (2) சென்னைத் துறைமுகத்தில் பாஸ்பர அமிலம் வந்திறங்குமிடம், (3) தண்டையார்பேட்டையில் உள்ள இந்திய எண்ணெய்க் கழகத்தில் உயவெண்ணெய் கலக்குமிடம்.

நிலக்கீல்-சரளைக்கல் ஆய்வுக்கூடத்தில், நிலக்கீல் பொருள்கள், சாலைக் கற்கள் இவற்றின் பயன்கள் குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கீழ்க்கண்டவை குறித்து ஆய்வுகள் நடத்தப்படுகின்றன:—

(1) சாலைகளில் அடையாளக் குறிகள் போடுவதற்கென வண்ணக் கற்கள் முதலியவற்றைப் பயன்படுத்துதல், (2) சேதமடைந்து வரும் நிலக்கீல் போட்ட மேற்பரப்பை உறுதிப்படுத்துவதற்கு வகை செய்தல், இல்லாவிடில் புதிதாக நிலக்கீலை அதிகச் செலவில் போடவேண்டிவரும். பல்வேறு வகை சாலைகள் சறுக்காமல் இருக்கும் வகையில் அமைத்தல். 13 ஆராய்ச்சித் திட்டங்களில் சில நிறைவேறி வருகின்றன.

கற்கலவை கட்டிட அமைப்பு ஆராய்ச்சிகள் நிகழும் பகுதியில் கற்கலவை மாதிரிகளைச் சோதித்தல், செங்கற்கலவைப் பொருட்களுக்கு களிமண்ணின்



உபயோகம், முறுக்கேற்றப்பட்ட கம்பிகளை வலுவேற்ற கற்கலவை உத்திரங்களுக்கு உபயோகித்தல் ஆகியவை குறித்து ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன.

இந்த ஆய்வுக்கூடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள 10 ஆராய்ச்சித் திட்டங்களில் சில கீழே விவரிக்கப்பட்டுள்ளன. அவையாவன:—

(1) நீண்ட சதுரத் திறப்புகளுடனோ, அவையன்றியோ உத்திரங்களை உறுதிப்படுத்தல், (2) 28 நாட்களில் கற்கலவையின் உறுதியை முடிவு செய்து அறிவதற்குப் பதிலாக, மூன்று நாட்களில் முடிவு செய்தறிவது, (3) கற்கலவையின் உறுதித் தன்மையை பாதிக்காத விதத்தில் சிமிட்டி, மணல், இவற்றின் அளவைக் குறைத்து, சிமிட்டியில் சாம்பலைப் பயன்படுத்தல், (4) நீண்ட தொலைவிலிருந்து தூய நீரைக் கொண்டு வருவதைத் தவிர்ப்பதற்காக கான்கிரீட் தயாரிப்பதில் கடல் நீரைப் பயன்படுத்தல் போன்ற ஆராய்ச்சித் திட்டங்கள். போக்குவரத்து ஆய்வுக்கூடத்தில் (1) அடையாளமிடும் பொருள், (2) செலவு குறித்த ஆய்வு, (3) வேகமும், தாமதமும், (4) நடந்து செல்வோர், (5) சாலைகளின் இயல்புகள், (6) வண்டிகளும், சாலைகளைப் பயன்படுத்துபவர்களும், (7) போக்குவரத்தில் சிக்கனம்—ஆகியவை குறித்த ஆய்வுகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. சென்னை மாநகரம், வெளியூர்களில் உள்ள போக்குவரத்துக் கட்டுப்பாடு, நிர்வாகம் ஆகியவற்றுடன் இப் போக்குவரத்துப் பிரிவு தொடர்புகொண்டிருந்தது. நமது மாநிலத்தில் சாலைகளில் செல்லும், பல அச்சுகள் கொண்ட வண்டிகள், லாரி போன்ற பெரிய வண்டிகள் ஆகியவை ஏற்றிச் செல்ல அனுமதிக்கத்தக்க மொத்த சுமையின் அளவு முடிவு செய்யப்பட்டது. பாலங்கள், நடந்து செல்வோருக்கான சுரங்கப் பாதைகள் ஆகியவற்றைக் கட்டுவதனால் பொருளாதார முறையில் ஏற்படக்கூடிய சிக்கனத்தைக் கண்டறிவதற்காக அவற்றின் நன்மைகள் மதிப்பிடப்பட்டன.

1968-69-ம் ஆண்டில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் மேற்கூறிய ஆய்வுக்கூடங்களின் பணிகள் குறித்த சுருக்கம் கீழ்க்கண்ட விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:—

| தொடர் எண். | ஆய்வுக்கூடத்தின் பெயர். | கிடைத்த மாதிரிகளின் எண்ணிக்கை. | நடத்தப்பட்ட ஆய்வுக்கூட பரிசோதனைகள். | நடத்தப்பட்ட களப் பரிசோதனைகள். | ஏனைய துறைகள் அல்லது நிறுவனங்களிடமிருந்து கிடைத்த விசாரணைகள். | எடுத்துக்கொள்ளப்பட்ட மேம்பாடுகள். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | மண் .. .. .. | 1,178 | 5,024 | 347 | 19 | 14 |
| 2 | நிலக்கீல், சூளைக்கற்கள் | 259 | 8,007 | 210 | 11 | 13 |
| 3 | கற்கலவை, பாலங்கள், கட்டிடங்கள். | 754 | 3,320 | 2 | 11 | 10 |
| 4 | போக்குவரத்து | .. | .. | .. | .. | * |

* சென்னை மாநகரில் 22 குறுக்கு வெட்டுச்சாலைகள் நகர்ப்புறங்களில் 21 குறுக்கு வெட்டுச் சாலைகள் 6 [illegible] வளைவுகள்.

## போக்குவரத்து கருவிகள் பிரிவு.

நீலக்கீல, உருளைக்கலவை இயந்திரம், பல அளவைகளில் தார் காய்ச்சும் கலன்கள். கையால் துளையிடும் கருவிகள். இழுவண்டிகள், குளிர்ந்த ஆஸ்பால்ட் கலவை இயந்திரங்கள், நெடுஞ்சாலை ஆய்வுக்கூடத்துக்குத் தேவையான கருவிகள், கற் கலவை இயந்திரங்கள் ஆகியவை இந்தப் பிரிவில் தயாரிக்கப்படுகின்றன. தவிர, உள்ளாட்சி மன்றங்களுக்காகவும், அரசாங்கத்தின் ஏனைய துறைகளுக்காகவும், உருளைக் கலவை இயந்திரம், கையாள் தள்ளும் சிறுவண்டி, கழிவுப் பொருள் எடுத்துச் சேர்க்கும் கலன்கள் ஆகியவை போன்ற பிறர்க்கான பணிகளும் செய்துகொடுக்கப்படு கின்றன.

## போக்குவரத்துப் பொறியியல் பகுதி.

இப் பகுதியில், சென்னை மாநகரின் வெவ்வேறு சாலைச் சந்திப்புகளிலும், முக்கிய சாலைகளிலும், பார்வையிடலும் அமைப்பு திட்டமும் நடத்தப் பட்டன. மாநகராட்சி, காவல் துறை, ஆகியோரின் துணைகொண்டு தகுந்த செய்முறைகளும், போக்குவரத்தை வழிப்படுத்தும் அமைப்புகளும், போக்குவரத்து பொறியியல் கோட்டப் பொறியாளரால் திட்டமிடப்பட்டன.

## சாலைத்திட்ட ஆய்வுத் திட்டம்.

மாநிலத்தின் முக்கியமான சாலைத் திட்டங்களையும், பாலங்கள் கட்டும் பணிகளையும் மேற்கொள்ளுமுன் அவற்றிற்குரிய மதிப்பீடுகளையும் வரை முறைகளையும் தயார் செய்ய முன்னோடியான ஆய்வுகளை அவற்றிற் குரிய தலத்தில் நிகழ்த்திக் கணக்கிடுதல் இவ்வட்டத்தின் முக்கிய பணியாகும். கரும்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப் படும் வேலைகளுக்காகத் தனியே ஒரு கோட்டம் இருக்கிறது. இதுவும் ஆய்வுத்துறை வட்டப் பொறுப்பிலுள்ளது. 1968-69-ம் ஆண்டில் இவ்வாறு ஆய்வுகள் நடத்தி ஒப்பளிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கையும், அவற்றின் மதிப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| தொடர் எண். | இனத்தின் விவரம். | பணிகளின் எண்ணிக்கை. | வேலைகளின் மதிப்பு (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | தலைமைப் பொறியாளருக்கு அனுப் பப்பட்ட செயற் குறிப்புகள். | 215 | 2,145 |
| 2 | தலைமைப் பொறியாளருக்கு அனுப் பப்பட்ட விவரமான செயற் குறிப்புகள். | 51 | 327 |
| 3 | தொழில்நுட்ப ஒப்பளிப்பு வழங்கப் பட்ட பணிகள். | 111 | 71 |

## கிராமப் பணித் திட்டங்கள்.

தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கிராமப் பணித் திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்கள் மிக்க ஊக்கத்துடன் செயல்படுத்தி வருகின்றன. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கிராம பணிகளுக்கென ஒதுக்கீடு செய்யப் பட்ட நிதி ஒன்று சேர்க்கப்பட்டு திட்ட முழுமையும் கிராமப்புறங்களுக்கு தண்ணீர் வழங்குதல் (கிணறுகள் தோண்டுதலும், குழாய் மூலம் தண்ணீர் வழங்குதலும்) இணைச் சாலைகளை அமைத்தலும், பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுதலுமான மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அரசினரால் செலவிடப் பட்டது. தேசியத் திட்டத்தினால் விளையும் பயன்களும் பரந்த அளவில் எல்லா மக்களுக்கும் கிட்டுமாறு செய்வதும் மக்களின் முக்கியத் தேவைகள்



யாவையும் குறுகிய காலத்தில் பூர்த்தி செய்வதுமே நோக்கமாகும். 1967-68-ம் ஆண்டுக்கான திட்டங்களுக்கு ரூ. 271·05 லட்சமும், 1968-69-ம் ஆண்டுக்காக 211 லட்சமும் முறையே செலவிடப்பட்டுள்ளது. மேலும் 1969-70-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் 247·95 லட்சம் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. 1968 டிசம்பர் 31 முடிய புள்ளிவிவரக் குறிப்புகள் கீழே தரப்பட் டுள்ளன :—

| | | |
|---|---|---|
| 1 | உயர் நீர்த் தொட்டிகள் அமைத்தல் | 2,770 |
| 2 | குடி நீர்க்கிணறுகள் | 54,300 |
| 3 | சொந்தக் கட்டிடங்களில் உள்ள பள்ளிக்கூடங்கள் | 12,140 |
| 4 | இந்த ஆண்டில் நிறைவேற்றியுள்ள இணைச்சாலை களின் எண்ணிக்கை. | 2,760 |
| 5 | இந்த ஆண்டில் நிறைவேற்றியுள்ள இணைச்சாலைகளின் மொத்த நீளம்—1,180 மைல்கள். | |
| 6 | இணைச்சாலைகளின் மொத்த நீளம்—19,200 மைல்கள். | |

அரிசனங்கள், மீனவர்கள் மற்றும் பிற்போக்கு வகுப்பினர்களின் நலனுக்காக மட்டுமே நிறைவேற்றப்பட்ட கிராமப் பணித் திட்டங்களுக்காக பொதுமக்களிடமிருந்து பெறும் உதவித் தொகை. அரசினரால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அரிசன நலத்துறையின் நிதியிலிருந்து 15 சத வீதம் நீர் வழங்கும் பணிகளுக்காகவும், 10 சத வீதம் இணைச் சாலைகளை அமைப்பதற்கும் உதவித் தொகை பெறப்படுகிறது. அரிசன மக்களுக்கு மட்டும் பயன்தரும் பணிகளுக்காக 20 சத வீதம் நிதி ஒதுக்கம் செய்யுமாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு அறிவுரைகள் அனுப்பியுள்ளது.

## பொதுப் பணித் துறையின் (கட்டிடப் பிரிவு) பணிகள் பற்றிய ஆய்வுரை.

(1968-69ம் ஆண்டுக்கு உரியது.)

மாநில அரசின் பல்வேறு துறைகளுக்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டித்தருவதே பொதுப் பணித் துறையிலுள்ள கட்டிடப் பிரிவின் முக்கிய அலுவலாகும். சென்னை மாநகருக்கு வீராணம் குடிநீர் வழங்குத் திட்டமும் இப்பொழுது கட்டிடப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு துறைகளின் தேவைகளுக்கேற்ப திட்டம் தீட்டி, வடிவமைத்துக் கட்டிடம் கட்டித் தருவது கட்டிடப் பிரிவின் பொறுப்பாகும். இவற்றைத் தவிர, மத்திய அரசுத் துறைகளுக்காகவும் ஓரளவு அரசுப் பாங்குபெற்ற நிறுவனங்களுக்காகவும் அவ்வப் பணிகளின் சிறப்புக்கருதி, முகவராகச் செயல்பட்டு அக்கட்டிடப் பணிகளை நிறைவேற்றித் தருகிறது. மாநில அரசுக் கட்டிடங்களைப் பொதுப் பணித் துறையே பேணி வருகிறது.

27-வது கோரிக்கையில் கண்டுள்ள தொகை ரூ. 20,000 வரை மதிப் புள்ள புதிய கட்டிடப் பணிகள் அனைத்தையும் கொண்டதாகும். மத்திய உதவி பெறும் திட்டங்களுக்குக் கிடைக்கின்ற மத்திய நிதி உதவியைக் கணக்கில் கொண்டு, இவற்றிற்கு ஆகும் செலவுத் தொகை மூலதனக் கணக்கிலிருந்து வருவாய்க் கணக்கிறகு எடுத்தெழுதப்படுகிறது. பொதுப் பணித் துறையின் பொறுப்பிலுள்ள கட்டிடங்களைப் பேணி வருவதற்கு ஆகும் செலவு அவற்றிற்குரிய சொத்து வரியும் இக்கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தத் தலைப்பின்கீழ் 1968-69-ம் ஆண்டிற்குப் புதிய கட்டிடப் பணிகளுக்காக ரூபாய் 29·685 லட்சம் ஒதுக்கப்பட்டதற்கு மாறாக 1968-69, திருத்த மதிப்பீட்டில் ரூ. 33·803 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

"50. டி—மராமத்துகள்" என்ற தலைப்பில் 1968-69-ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 89·31 லட்சமாகும். இதற்குரிய திருத்த மதிப்பீடு இப்போது ரூ. 132·74 லட்சமாகும். இந்தச் செலவினம் கட்டிடங்கள் பேணுதல் செலவு, பிறப்புச் செப்பனிடுதல், சொத்து வரி ஆகிய வற்றிற்குரிய தாகும். பொதுப் பணித் துறையின் பொறுப்பிலுள்ள கட்டிடங்களின் மொத்த மூலதன மதிப்பு 1968-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ந் தேதி நிலவரப்படி ரூ. 34·90 கோடியாகும். இத் தலைப்பின்கீழ்ச் செலவுகள் கூடியவரை சிக்கனமாகவும், அதே நேரத்தில் அவசியமான வேலைகளைத் தரங்குறையாமல் செய்து பழுதுபார்க்கும் வகையிலும் திட்டமிடப்பட்டிருக் கின்றன.

ரூ. 20,000-க்குமேல் செலவுள்ள பெருங் கட்டிடங்களைப் பொறுத்தவரை, 1968-69-ம் ஆண்டிற்கு மூலதனத் திட்டச் செலவின்கீழ் ரூ. 303·10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1968-69 திருத்த மதிப்பீடு ரூ. 330·11 லட்சமாகும்.

## மருத்துவம்.

மருத்துவ மனைகளுக்கும் ஏனைய மருத்துவ நிலையங்களுக்கும் வேண்டி யுள்ள கட்டிடங்களுக்காகவே பொதுப் பணித் துறையின் மூலதனச் செலவின் பெரும பகுதி செலவிடப்படுகிறது. இக் கட்டிடங்களுக்காக 1968-69, திருத்தச் செலவு மதிப்பீடு ரூ. 114·09 லட்சமாகும். செங்கற் பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அண்மையில் தொடங்கப்பட்ட 3 மருத்துவக் கல்லூரிகள் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்றன. படிப்படியான திட்டத்திற்கு இணங்கக் கட்டிடப் பணிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிக்காக, கல்லூரி கட்டிடங்களும், விடுதிக் கட்டிடமும், பணியாளர்களுக்கான குடியிருப்புகளும் முதல் நிலையின்கீழ் சுமார் ரூ. 28 லட்சம் செலவில் கட்டப்பட்டன. இரண்டாவது நிலையில் ரூ. 12·90 லட்சம் செலவில் கட்ட தொடங்கப்பட்ட கட்டிடங்கள் பெரும்பாலும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மூன்றாவது நிலையில் ரூ. 8 லட்சம் செலவில் கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு நிறைவேறி வருகிறது. விடுதிக் கட்டிடத்தில் 2-வது மாடி ஒன்றை ரூ. 1·95 லட்சம் செலவில் கட்டும் செயற்குறிப்புக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வண்ணமே, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கு ரூ. 15·80லட்சம் செலவில் கட்டிடங்கள் இரு நிலைகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 3-வது நிலையில் ரூ. 13·60 லட்சம் செலவில் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. நான்காவது நிலையில் ரூ. 7·30 லட்சம் செலவில் கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இக் கட்டிடப் பணி விரைவில் தொடங்கு மென எதிர்பார்க்கப்படுகிறது.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிக்கு முதல் நிலையில் ரூ. 12·54 லட்சம் செலவில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலையில் ரூ. 18·40 லட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கட்டிடங்கள் நல்ல முறையில் கட்டப்பட்டு வருகின்றன. ரூ. 11·90 லட்சம் செலவில் மூன்றும் நிலைக் கட்டிடங்கள் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படும்.

புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தவிர, இப்போதுள்ள மருத்துவக் கல்லூரிகளும் அவற்றுடன் இணைந்துள்ள மருத்துவ மனைகளும் பல்வேறு நிலையங்களின் அதிகரித்த தேவையை ஈடு செய்வதற்காக விரிவாக்கப்பட்டு வருகின்றன. சென்னையில் அரசுப் பொது மருத்துவ மனையில் இதய நோய்ப் பிரிவிற்காக ரூ. 16 லட்சம் செலவில் 7 மாடிக் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. கட்டிட வேலை முடிவடைந்துவிட்டது. ஏனைய வேலைகள் நிறைவேறி வருகின்றன. இக் கட்டிடத்தில் ரூ. 1·7 லட்சம் செலவில் மேலும் ஒரு மாடி. கட்டுவதற்கான செயற்குறிப்பு தீட்டப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது.





சென்னையில் அரசுப் பொது மருத்துவ மனையில் நரம்பியல் மருத்துவப் பிரிவுக்கான நான்கு மாடிக் கட்டிடம் ஒன்று ரூ. 7 லட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இந்தக் கட்டிடத்தின்மீது மேலும் 3 மாடிகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 3 மாடிகள் கட்டவும் விசை ஏணி அமைக்கவும், இக் கட்டிடத்தில் குளிர் வசதி ஏற்படுத்தவும், ரூ. 9·50 லட்சம் செலவுள்ள மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. கூடுதல் மாடிகள் கட்டும் பணி விரைவிலே தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கண் மருத்துவ மனையில் அலுவலக நடைமுறைப் பிரிவு ஒன்று ரூ. 14·09 லட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. இக் கட்டிடத்தில் மேலும் ஒரு மாடி கட்டுவதும் அரசாங்க ஆலோசனையில் உள்ளது. இரண்டாவது மாடி கட்டுவதற்கு ரூ. 14·25 லட்சம் செலவாகும். எழும்பூரி லுள்ள மகளிர் சிறுவர் மருத்துவ மனையில் குழந்தை நோய்ப் பிரிவு ஒன்று ரூ. 26·36 லட்சம் செலவில் கட்டிமுடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கீழ்ப்பாக்கத்திலுள்ள மருத்துவ மனையில் ரூ. 10·05 லட்சம் செலவில் அலுவலக நடைமுறைப் பிரிவு, காச நோய்ப் பிரிவு சமையற்கூட் பிரிவு களுக்காக புதுக்கட்டிடங்கள், முடிவுறும் நிலையில் உள்ளது.

ராயப்பேட்டை அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் பணியும், பல நிலைகளில் மேற்கொள்ளப்பட்டது. முட நீக்கியப் பிரிவு, எக்ஸ்ரே பிரிவு முதலானவை அமைவதற்கான 3 மாடிக் கட்டிடம் ஒன்று ரூ. 6.25 லட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டு வேலை நடந்தேறி வருகிறது.

கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் பிணியியல் பிரிவும், நுண்ணுயிர் இயல் பிரிவும் ரூ. 3·50 லட்சம் செலவில் (கீழ்த்தளம் மட்டும்) கட்டப்பட்டு வருகின்றன.

இந்திய மருத்துவ முறைக்குப் போதிய ஊக்கம் அளிக்கும் பொருட்டு அரும்பாக்கம் இந்திய மருத்துவ முறை மருத்துவமனை 100 படுக்கைகளுடன் ரூ. 8·18 லட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. கட்டிடப் பணி அனைத்தும் தொடங்கப்பட்டு நடந்தேறி வருகிறது.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் ரூ. 10·05 லட்சம் செலவில் கூடுதல் விடுதிக் கட்டிடங்களும், இப்போதுள்ள செவிலியர் குடியிருப்புகளை மேம்படுத்துவதுடன் மேற்கொண்டு செவிலியர் குடியிருப்புகளும் ரூ. 7·61 லட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

மாவட்டங்களில் பல்வேறு இடங்களிலே நடப்பு ஆண்டில் புதிய மருத்துவ மனைகள் கட்டப்பட்டு வருவதுடன் இப்போதுள்ள மருத்துவ மனைகள் விரிவு படுத்தப்பட்டும் வருகின்றன.

ஆம்பூரில் அரசு மருத்துவ மனைக்கு ரூ. 7·59 லட்சம் செலவிலும், ஸ்ரீபெரும்புதூரில் அரசு மருத்துவமனைக்கு ரூ. 9·70 லட்சம் செலவிலும், அறந்தாங்கியில் அரசு மருத்துவமனைக்கு ரூ. 8·72 லட்சம் செலவிலும் கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு நடந்தேறி வருகிறது.

தாம்பரத்தில் ரூ. 11·965 லட்சம் செலவில் 100 படுக்கை மருத்துவ மனைக் கட்டிடங்கள் கட்டுவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய் யப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டு முடிவதற்குள் கட்டிடப் பணி தொடங்கிவிடும். திருத்துறைப் பூண்டியில் உள்ள மருத்துவ மனைக்கு 24 படுக்கையுள்ள மருத்துவமனைப் பிரிவு ஒன்று ரூ. 1·20 லட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, வேலை நடந்தேறி வருகிறது.

தேனியில் அரசு மருத்துவமனைக்கு ரூ. 8·64 லட்சம் செலவில் புதுக் கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கட்டிடப் பணியும், தேவக்கோட்டையில் அரசு மருத்துவமனைக்கு ரூ. 10 லட்சம் செலவில் கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, கட்டிடப் பணியும் தொடங் குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டங்கள்.

இத் திட்டத்தின்கீழ் கட்டிடங்கள் கட்டும் பொறுப்பை தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைத்துள்ளது. கட்டிடங்களுக்கான எல்லாச் செலவுத் தொகையும் ஈட்டுறுதிக் கழகத்தால் ஏற்கப்படுகிறது. இதுகாறும் இத்திட்டத்தின்கீழ் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கட்டிடப் பணிகளின் மொத்த மதிப்பு ரூ. 5 கோடியாகும். இதில் 1968 டிசம்பர் 31-ந்தேதி முடிய ரூ. 4·10 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட 39 மருந்தகங்களிலேயே 33 மருந்தகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திருவல்லிக்கேணி, கொண்டித்தோப்பு மருந்தகக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தாம்பரம், தல்லாகுளம், உசிலம்பட்டி ஆகிய இடங்களிலே கட்டுவதற்கு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மருந்தகங்களைப் பொறுத்தவரை பணியினைத் தொடங்குவதற்கு, கட்டவேண்டிய தொகையினை தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் இன்னும் கட்டவில்லை.

பதினாறு இடங்களிலே 16 படுக்கையுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கட்டுவதற்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் முதலில் ஒப்பளிப்பு வழங்கியது. புதுக்கோட்டையிலும், விருதுநகரிலும் மட்டுமே கட்டிடப் பணி தொடங்கப்பட்டுள்ளது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து புதிய அனுமதி கிடைக்காததால் ஏனைய இடங்களில் கட்டிடப் பணியை மேற்கொள்ள முடியவில்லை. தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் இம் மாநிலத்திலே கட்டிட வேலைத் திட்டத்தை இப்போது குறைத்துவிட்டது. எனவே, தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் திட்டச் செலவு கணிசமாகக் குறைந்துள்ளது.

சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள, 500 படுக்கைகளுடன் கூடிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டு செயலாற்றத் தொடங்கி உள்ளது. கோயம்புத்தூரில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனைக்கு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் ஒப்பளிப்பு வழங்கியபடி, நீராவி சலவைக்கூடம் முதலியவை கட்டுவது தள்ளிவைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தினிடமிருந்து அனுமதி பெற்ற பின்னர் இத்தகைய திட்டங்களை மேற்கொள்ள எண்ணியுள்ளது. கோயம்புத்தூரில் தலைமை மருத்துவமனைக் கட்டிடங்கள் முதலில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டபடி பெரும்பாலும் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மதுரையில் புதுக் கட்டிடங்களும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனைக்கான இரண்டு அறுவைக்கூடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இப்போதுள்ள தொத்து நோய் மருத்துவமனை புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்ட பின்னரே, தொத்து நோய் மருத்துவமனை இப்போதுள்ள கட்டிடத்தை மேம்படுத்தும் பணியை மேற்கொள்ள முடியும்.

## குடும்ப நலத்திட்ட அறுவைச் சிகிச்சை நிலையங்களும், ஆரம்ப சுகாதார நிலையங்களும்.

நார்த்தாம் பூண்டியில் ஆரம்ப சுகாதார நிலையமும், குடும்ப நலத் திட்ட நிலையமும் ரூ. 1·42 லட்சம் செலவில் கட்டப்படுவதற்கு அண்மையில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த இடத்தில் கட்டிடப் பணியைத் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

நாற்பத்திநான்கு இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்களுடன் இணைந்துள்ள கிராமப்புற குடும்பநல அறுவைச் சிகிச்சை நிலையங்களை ரூ. 40·48 லட்சம் செலவில் மத்திய அரசு வைக்குவிக்கும் திட்டமாகக் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பற்பல இடங்களிலும்



சிறப்பு முயற்சிகள் கட்டிடப் பணியை விரைந்து மேற்கொள்வதற்குச் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிராமப்புற குடும்பநல அறுவைச் சிகிச்சை நிலையங்களும், எழும்பூரில் வட்டாரக் குடும்ப நலத்திட்ட பயிற்சி நிலையம் ஒன்றையும் ரூ. 5 லட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## வேளாண்மை.

மதுரையில், இரண்டாவது வேளாண்மைக் கல்லூரிக்கான கட்டிடங்கள் ரூ. 67·00 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டன. மதுரையில் டிராக்டர் பட்டறைக்கான கட்டிடங்கள் ரூ. 2·40 லட்சம் செலவில் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்வேலை நிறைவுறும் தறுவாயில் உள்ளது. மதுரையில் வேளாண்மைக் கல்லூரிக்கான மாணவர் விடுதிக் கட்டிடங்கள் ரூ. 13·00 லட்சம் செலவில் கட்டி முடிக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. நடப்பாண்டில் ரூ 1·0 லட்சம் செலவில் குடியாத்தத்தில் மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடம் கட்டும் வேலை தொடங்க விருக்கிறது.

## கால்நடை வளர்ப்பு.

உதகமண்டலத்தில் அரசினர் பால்பண்ணைக்கான கட்டிடங்கள் வேலைக்காக ரூ. 12·00 லட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இவ்வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டன. நடப்பாண்டில் கொருக்கையில் ரூ. 2·73 லட்சம் செலவில மாவட்டக் கால்நடைப் பண்ணை விரிவாக்க வேலை எடுத்துக்கொள்ளப்படும். செங்கர்பட்டில் கால்நடை மருத்துவ மனைக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் ரூ. 1·19 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மீனளம்.

கடந்த ஆண்டில் தொடங்கிவைக்கப்பட்ட ரூ. 32,000 செலவில் அடையாறில் மீனளப்பயிற்சி நிலையம், ரூ. 2·26 லட்சம் செலவில் எண்ணூரில் உறைபனி நிலையத்துக்கான கட்டிடங்கள் கட்டுதல், இடிந்தகரையில் ரூ. 35,500 செலவில் பனிக்கட்டி-குளிர்ப்பதன சேமிப்புச் சாதனங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல் வேலைகள் யாவும் இப்போது முடிவடைந்துள்ளன. தூத்துக்குடியில் மீனளப்பயிற்சி நிலையத்துக்கான கட்டிட வேலை ரூ. 50,000 செலவில் முடிவுறும் நிலையில் உள்ளது.

நிலம் கிருஷ்ணகிரி, சாத்தனூர், வீடூர், கோமுகி, பூஞ்சான் சதுப்பு மணிமுத்தாறு ஆகிய இடங்களில் மீன் பண்ணைகளுக்கான கட்டிடங்கள் கட்டும் வேலை ரூ. 7·92 லட்சம் செலவில் முன்னேறி வருகிறது.

கல்பாக்கம் அணுமின் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களை பிறிதொரு தக்க இடத்தில் குடியேற்றுவதற்காக ரூ. 4·90 லட்சம் செலவில் 325 வீடுகள் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. கட்டிடக் கட்டுமான வேலை தொடங்குவதற்கான தொடக்கப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இந்தப் புதிய குடியிருப்புக் காலனியில் ரூ. 25,000 செலவில் சமுதாயக்கூடம் ஒன்றும் கட்டப்படும். தஞ்சாவூர் மாவட்டம் அம்மாப்பட்டிணத்தில் மீனவருக்காக ரூ. 2·25 லட்சம் ஒப்பளிப்பு பெற்ற 60 வீடுகளில் 30 வீடுகள் முடிவுறும் நிலையிலும், எஞ்சியுள்ள வீடுகள் பல்வேறு கட்டங்களிலும் நிறைவேறி வருகின்றன.

## கல்வி.

நடப்பாண்டில், கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலக மனைக்குள் ரூ. [illegible]50 லட்சம் செலவில் தேர்வுக்கூடம் கட்டுதல், கும்பகோணத்தில் [illegible] கல்லூரியில் பொதுக்கூட்டம் கூடுவதற்கான [illegible] ரூ. 1·15 லட்சம் செலவில் கட்டுதல், கும்பகோணம் [illegible] ஒன்றை ரூ. [illegible]

(மகளிர்) அரசினர் கல்லூரிக்கான இரண்டாம் நிலைக் கட்டிடங்கள் ரூ. 8·80 லட்சம் செலவில் கட்டுதல், மதுரையில் மகளிர்க்கான ஸ்ரீ மீனாட்சி அரசுக் கல்லூரிக்குக் கூடுதல் கட்டிடங்கள் ரூ. 5·00 லட்சம் செலவில் கட்டுதல் ஆகிய வேலைகள் முடிக்கப்பட்டன.

நடப்பாண்டில் கீழ்க்காணும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அவை நடைபெற்று வருகின்றன :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1. வேலூர், முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரிக்கு நிலையான கட்டிடங்களைக் கட்டுதல். | 8·50 |
| 2. கடலூர், அரசினர் கலைக் கல்லூரிக்கான முதல், இரண்டாம் நிலைக்கட்டிடங்கள் கட்டுதல். | 11·90 |
| 3. தஞ்சாவூர், மகளிர் அரசினர் கலைக்கல்லூரிக்கு நிலையான கட்டிடங்கள் கட்டுதல். | 8·50 |
| 4. கிருஷ்ணகிரி, நாமக்கல், ராசிபுரம் ஆகிய இடங்களில் அரசினர் கலைக்கல்லூரிக்கு நிலையான கட்டிடங்கள் கட்டுதல். | 25·50 |
| . கரூர், அரசினர் கலைக் கல்லூரிக்கு நிலையான கட்டிடங்கள் கட்டுதல். | 6·50 |

## அரிசன நலம்.

இத் திட்டத்தின்கீழ், மாணவ மாணவிகள் விடுதிக் கட்டிடங்கள் கட்டும் வேலை பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்டது. நடப் பாண்டில் ரூ. 1·75 லட்சம் செலவில் கோயம்புத்தூரில் மாணவியர் விடுதி ஒன்றும், ரூ. 1·35 லட்சம் செலவில் சிதம்பரத்தில் நந்தனார் சிறுமியர் உயர் நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பு அறைகள் கட்டும் வேலையும் முடிக்கபபட்டுள்ளன. ரூபாய் 95,000 செலவில் செங்கத்தில் மாணவர் விடுதிக் கட்டிட வேலை நடைபெற்று வருகிறது. நடப்பாண்டில் கீழ்க்காணும் மாணவர் விடுதிக் கட்டிடங்கள் கட்டும் வேலை மேற்கொள் வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன :—

| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| 1. சேலத்தில் கல்லூரி மாணவருக்கான அரசினர் விடுதி | 2·55 |
| 2. பாளையங்கோட்டையில் மாணவியர் அரசினர் விடுதி | 2·75 |
| 3. புதுக்கோட்டையில், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினரின் விடுதி. | 1·80 |
| 4. வட ஆர்க்காடு மாவட்டத்தில் அதியனூரில் அட்டவணைப் பழங்குடியினருக்கான விடுதி. | 1·18 |

## காவலர் குடியிருப்பு.

காவல் துறைப் பணியாளர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் இதுவரை 7,274 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு காவல் துறையிடம் ஒப்படைக்கப் பட்டன. தொடக்கத்தில் ஒத்திவைக்கப்பட்ட ரூ. 23·00 லட்சம் மதிப்பீ கொண்ட வேலைகள் இப்போது மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. பல்வே நிலைகளில் இவ்வேலைகள் நிறைவேறி வருகின்றன.



## சிருலா.

திருச்செந்தூரில் சுற்றுலா மாளிகை ஒன்று ரூ. 2·30 லட்சம் செலவில் கட்டப்படடுவருகிறது. கன்னியாகுமரியில் சுற்றுலா மாளிகை கட்டும் வேலையைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குற்றாலம் நகரியக் குழுவின் சார்பில், இவ்வாண்டில் பொதுப்பணித் துறையினரால் குற்றாலத்தில் நகரமண்டபம் ரூ. 4·40 லட்சம் செலவில் கட்டப்பட்டது.

தென் இந்தியாவில் சிருலா நிலையங்களில், மாமல்லபுரம் மிகச் சிறப்பான இடம் பெறுகிறது. இதனை மேலும் எழிற்படுத்தி பெரு வாரியான சுற்றுப்பயணிகள் முக்கியமாக அன்னிய நாட்டினரை இங்கு ஈர்ப்பதற்காகவும், மாமல்லபுரம் ஒருங்கிணைப்பு வளர்ச்சிக்கான "பெருந் திட்டம்" ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. ரூ. 1·00 கோடி செலவிலான "பெருந்திட்டத்தில்" வகை செய்துள்ள பல்வேறு இன வேலைகளுக் கான செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

## கதர் விற்பனை நிலையம் (குறளகம்).

இவ்வேலை சுமார் ரூபாய் 70 லட்சம் செலவில் முடிவுறும் நிலையில் உள்ளது. கிடங்குப் பகுதியில் மேலே இரண்டு அடுக்குகளும், மற்ற பகுதியின்மேல் ஒரு அடுக்கும் கட்டும் வேலையும் இதில் அடங்கும். இந்த மதிப்பீடு வேலைகள் நடப்பாண்டு இறுதிக்குள் முடிவுறும் என்று அட்டவணையிடப்பட்டுள்ளது. இப்போது சிறு கட்டட வேலையும், விசை ஏணிகள் நிறுவும் வேலையும் நடைபெற்று வருகின்றன.

## பொது நிர்வாகம்.

செங்கற்பட்டு மாவட்டத் தலைமையிட அலுவலகங்கள் காஞ்சிபுரத்திற்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து, ரூ. 19·20 லட்சம் செலவில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், காவலர் கண்காணிப்பாளர் அலுவலகம் கட்டும் வேலைக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இவ்விரு அலுவலகக் கட்டி டங்கள் கட்டும் வேலை நடைபெற்று வருகிறது.

## நீதி நிர்வாகம்.

ரூபாய் 40·00 லட்சம் செலவில் மதுரை–ராமநாதபுரம் பொது நீதி மன்றக் கட்டிட வேலை, முந்திய ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது. நடப்பாண்டில் வேலை கணிசமாக முன்னேறியுள்ளது. இக்கட்டிடத்தின் எல்லாப் பிரிவுகளிலும் அடித்தள வேலை முடிந்தது. நடப்பாண்டில் சுமார் ரூ. 15 லட்சம் செலவிடப்படும். அடுத்த ஆண்டுவாக்கில் கட்டிட வேலை முழுவதும் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## நகராட்சிக் கட்டிடங்கள்.

நகராட்சிக் கட்டிடங்கள் சிலவற்றைக் கட்டும் வேலை பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறை கட்டுமானத்தின் கீழ் வரும் பெரிய நகராட்சி வேலைகளாவன :—ரூ. 6·16 லட்சம் செலவில் வேலூரில் நகராட்சி அங்காடி, ரூ. 1·80 லட்சம் செலவில் தாம்பரம் நகராட்சிக்கான அலுவலகக் கட்டிடங்கள், ரூ. 1·74 லட்சம் செலவில் திருவொற்றியூர் நகராட்சிக்கான அலுவலகக் கட்டிடங்கள், ரூ. 2·10 லட்சம் செலவில் காஞ்சிபுரத்தில் நகரமண்டபம் ஆகியவை.

## இந்திய அரசுக் கட்டிடங்கள்.

திருச்சிராப்பள்ளியில், போர்க்கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலைக் கட்டிடங்கள் கட்டும் வேலைக்காக மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 5·73 கோடி ஆகும். 1964 மார்ச்சில் முதலில் தொடங்கப்பட்ட வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 56·31 லட்சம் செலவில் (350 வீடுகள்)

கூடுதலான குடியிருப்புகள் கட்டும் வேலை நடைபெறுகின்றது. நடப்பாண்டில் ரூ. 20 லட்சம் செலவில் தனுஷ்கோடியில் இலங்கை அகதிகளைத் தங்க வைப்பதற்காக, குடிநீர்வசதி, மின் இணைப்பு முதலிய வசதிகளுடன் தங்கும் விடுதிகள் கட்டுதல்—1969, ஜூலையில் இலங்கை அகதிகள் வருவரென்று எதிர்பார்க்கப்படுவதால், இவ்வேலைகள் கூடியமட்டில் விரைவில் முடிக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அஞ்சல் தந்தித் துறையினர் வேண்டுகோளுக்கிணங்க, ஆங்காங்கு அஞ்சல் அலுவலகங்களும், தொலைபேசி நிலையங்களும் முகவராக செயல் பட்டு அமைக்க பொதுப்பணித் துறை ஒப்புக்கொண்டது. ஒவ்வொன்றும் ஒரு லட்சத்துக்கு குறைந்த செலவில் பல கட்டட வேலைகள் இத் துறையால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### கட்டட ஆராய்ச்சி.

கட்டட கட்டுமான வேலைகளைப் பெருவாரியான அளவில் மேற் கொண்டு நிறைவேற்றும் ஒரு துறைக்காக, ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று இன்றியமையாது தேவைப்படுகிறது. பொதுப்பணித் துறையைச் சார்ந்த கட்டடப் பிரிவுக் கோட்டம் இந்த வேலையில் ஈடுபட்டுள்ளது.

### சென்னை மாநகருக்கான வீராணம் குடிநீர் வழங்கு திட்டம்.

சென்னை மாநகரில் குடிநீர் வசதியைப் பெருக்குவதற்காக, காவிரி நீரைச் சிதம்பரம் வட்டத்தில் வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்குக் கொண்டுவரும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இந்தச் செயற்குறிப்பினைத் திட்ட ஆணைக்குழு ஒப்புக்கொண்டது. இத்திட்டத்திற்கு ரூ. 21·30 கோடி செலவுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது.

விரிவான புலனாய்வு வேலை, திட்டங்கள், மதிப்பீடுகள், மற்ற வரிவடிவ விவரங்கள் தயாரித்தல் ஆகிய வேலைகள் முடிவுறும் நிலையில் உள்ளன. இத் திட்டம் 1969—70-ல் மும்முரமாகத் தொடங்கி வைக்கப்படுமென்றும் எதிர்ப்பார்க்கப்படுகிறது. இத் திட்டம் முழுவதும் நான்காவது ஐந்தாண்டு திட்டக் காலத்திலே முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டம் நிறைவேற்றப்பட பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.



### அட்டவணை 1.

**மாநில சாலைகள் (அரசு சாலைகள்)—புதிய வேலைகள் 1966–67 முதல் 1968–69 வரை அங்கீகரிக்கப்பட்டவை.**

| வரிசை எண். | வேலையின் விபரம். | மதிப்பு (ரூ. லட்சத்தில்). |
|---|---|---|
| 1966–67— | | |
| 1 | சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பேசின் பாலத்திற்கு அருகாமையில் உள்ள மூன்று பாலங்களையும் அகலப்படுத்துதல் (சென்னை சைதாப்பேட்டை). | 20·00 |
| 2 | ஊட்டி-மேட்டுப்பாளையம் சாலையில் மைல் 12/7-ல் இருப்புப் பாதைக்கு அடியில் பாலம் கட்டுதலும் சாலையை நேராக ஒழுங்குபடுத்துதலும் (நீலகிரி மாவட்டம்). | 4·00 |
| 3 | சென்னை-திருத்தணி 53/1 மைலிலும், மற்றும் அரக்கோணம்-ரேணிகுண்டா 9/1 மைலிலும் நந்தி ஆற்றின் குறுக்கே பாலங்கள் அமைப்பதை தவிர்க்க நதிக்கு இணையாக ஒரு மாற்று சாலை யமைத்தல் (செங்கல்பட்டு மாவட்டம்). | 1·00 |
| 4 | அரந்தாங்கி-பள்ளப்பட்டி சாலை. 1/3-4 மைலில் வெள்ளாற்றின் குறுக்கே படுகைப் பாலம் கட்டி சாலையை அபிவிருத்தி செய்தலும். (தஞ்சாவூர் மாவட்டம்). | 0·46 |
| 5 | திருநெல்வேலி சந்திப்பிற்கு அருகாமையில் உள்ள திருநெல்வேலி-செங்கோட்டை சாலை மைல் 1/4-ல் உள்ள சாலை, இருப்புப்பாதை சந்திப்பிற்கு பதி லாக ஒரு மேம்பாலம் கட்டுதல் (திருநெல்வேலி மாவட்டம்). | 35·00 |
| 6 | மேற்கே செல்லும் பெரிய சாலையிலிருந்து மைல் 10/2-லிருந்து பிரிந்து சென்று ஸ்ரீ தேவி கருமாரி யம்மன் கோவிலுக்குச் செல்லும் கிளைச்சாலை மைல் 0/1-ல் கூவம் ஆற்றின் குறுக்கே உள்ள படுகைப் பாலத்தை புதுப்பித்து கட்டுதல் (செங்கல்பட்டு மாவட்டம்). | 3·20 |
| 7 | கோவை-மேட்டுப்பாளையம் சாலை. மைல் 3/2-ல் ஒரு பாலம் கட்டுதல். (கோயம்புத்தூர் மாவட்டம்). பாதுகாப்பு வேலை. | 0·35 |
| 8 | சென்னை-எண்ணூர் துரிதசாலையிலிருந்து 1/3 மைலில் சென்னை சுத்திகரிப்பு பகுதிகட்கு சென்றுதிருவொற்றியூர்.பொன்னேரி-பாஞ்செட்டி சாலை. மைல் 2/3-ல் இணைக்கும் ஒரு புதிய சாலை யமைத்தல் (செங்கல்பட்டு மாவட்டம்). | 32·50 |
| | (1966–67)—மொத்தம் .. | 96·51 |

| வரிசை எண். | வேலையின் விபரம். | மதிப்பு (ரூ. லட்சத்தில்). |
| --- | --- | --- |
| 1967-68— | | |
| 9 | திருச்சிராப்பள்ளி-கோயம்புத்தூர் சாலையையும் மற்றும் தேசீய சாலை 7-யும் மைல் 46/0-ல் ஏற்படும் சந்திப்பை அபிவிருத்தி செய்தல். இது கரூர் நகராண்மை எல்லைக்குட்பட்டது (திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | 1·20 |
| 10 | பக்கிங்காம் கால்வாய் கரையில், எல்லியட் கடற்கரைச் சாலையிலிருந்து ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட சாலையை அமைத்தல். சென்னை நகர எல்லைக்குட்பட்டது (சென்னை நகரம்-செங்கல்பட்டு மாவட்டம்). | 3·00 |
| 11 | சூளும்பேட்டை சாலையில் 1/5 மைலில் ஒரு பாலம் கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 2·12 |
| 12 | சூளும்பேட்டை சாலையில் 1/7 மைலில் மற்றொரு பாலம் கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 3·00 |
| 13 | மாவூர்-சத்தியகுடி மைல் 1/7—4/5-க்கு சரளைக் கற்கள் பரப்புதலும், தார் போடுதலும். (பலவீனமான பாலங்களை புதுப்பித்தலும் சேர்ந்தது) (தஞ்சாவூர் மாவட்டம்). | 4·20 |
| 14 | ஆண்டியூர்-அம்மாப்பேட்டை மைல் 5/6-7-ல் ஒரு பாலம் கட்டுதல் (கோயம்பத்தூர் மாவட்டம்). | 2·60 |
| 15 | நொய்யல் ஆற்றின் குறுக்கே உடுமலைப்பேட்டை திருப்பூர் சாலை. மைல் 38/4-ல் உள்ள பாலத்தை அகலப்படுத்துதல். திருப்பூர் நகர எல்லைக்குட்பட்டது (கோயம்புத்தூர் மாவட்டம்). | 5·75 |
| 16 | வேதாரண்யம் கால்வாய் குறுக்கே மைல் 23/7-ல் ஆலங்குடி-தலைஞயர் சாலையில் ஒரு பாலம் கட்டுதல் (தஞ்சாவூர் மாவட்டம்). | 3·00 |
| 17 | வேளாங்கண்ணி-வேதாரண்யம் சாலை. மைல் 0/1—10/4, சரளைக் கற்கள் பரப்புதல் (தஞ்சாவூர் மாவட்டம்). | 3·15 |
| 18 | முதுகளத்தூர்-சிக்கல் சாலை. மைல் 0/0—12/3-க்கு சரளைக் கற்கள் பரப்புதல் வடிகால் வேலைகளும் சேர்ந்தது (ராமநாதபுரம் மாவட்டம்). | 3·70 |
| 19 | வேலூர் நகர எல்லைக்குட்பட்ட கடலூர்-சித்தூர் சாலை. மைல் 117/7-லிருந்து 118/2 (இ.மீ. 188/6—189/2) வரை அகலப்படுத்தியும், உயர்த்தியும் அபிவிருத்தி செய்தல். | 2·00 |
| | (1967-68)—மொத்தம் .. | 33·72 |



| வரிசை எண். | வேலையின் விபரம். | மதிப்பு (ரூ. லட்சத்தில்). |
| --- | --- | --- |
| 1968-69 | | |
| 20 | தஞ்சாவூர் நகர எல்லைக்குட்பட்ட தஞ்சாவூர்-கந்தர்வ கோட்டை சாலை. மைல் 0/3-ல் இருப்புப் பாதையின் கீழ் சாலையை அமைத்தல் (தஞ்சாவூர் மாவட்டம்). | 0·40 |
| 21 | சதுரங்கபட்டினம்-சுரப்பன் சாலை மைல் 40/0 முதல் 40/8 வரை அகலப்படுத்தி தார் போடுதல் (ஒரு மைல் காஞ்சீபுரம் நகர எல்லையில் உள்ளது) (செங்கல்பட்டு மாவட்டம்). | 1·11 |
| 22 | காஞ்சீபுரம் நகர எல்லைக்குட்பட்ட செங்கல்பட்டு-காஞ்சீபுரம் சாலை, மைல் 38/4-8. (5 பர்லாங்குகள்) சாலை அகலப்படுத்துதலும் தார் போடுதலும் (செங்கல்பட்டு மாவட்டம்). | 0·91 |
| 23 | காஞ்சீபுரம் நகர எல்லைக்குட்பட்ட பொன்னேரிக் கரை-காஞ்சீபுரம் சாலை. மைல் 18/2-8 (7 பர்லாங்குகள்) உள்ள சாலையை அகலப்படுத்துதலும், தார் போடுதலும் (செங்கல்பட்டு மாவட்டம்). | 1·00 |
| 24 | வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஓசூர்-தாலி சாலை. மைல் 11/6-ல். உள்ள பாலத்தை மறுபடியும் கட்டுதல் (தர்மபுரி மாவட்டம்). | 0·30 |
| 25 | குள்ளன்சாவடி-காட்டு கூடலூர் சாலை. மைல் 1/2-ல் உள்ள மூழ்கும் பாலத்தை கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 1·50 |
| 26 | ஆவுடையார் கோவிலிலிருந்து ஒக்கூருக்கு செல்லும் சாலை அபிவிருத்தியும் பாம்பாற்றின் குறுக்கே பாலம் கட்டுதலும் சேர்ந்தது (தென் ஆற்காடு மாவட்டம்). | 6·00 |
| 27 | பாப்பனப்பட்டி-வழுதாவூர் சாலை. மைல் 10/4–5-ல் சங்கராபரணி ஆற்றின குறுக்கே ஓர் மூழ்கும் பாலம் கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 12·00 |
| 28 | முத்துப்பேட்டை-மிமிசால் சாலை. மைல் 12/4-ல் அக்னி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல் (தஞ்சாவூர் மாவட்டம்). | 10·00 |
| 29 | நத்தம்-செந்துறை சாலை. மைல் 10/3-ல் பாலாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல் (மதுரை மாவட்டம்). | 1·50 |
| 30 | நத்தம்-செந்துறை சாலை. மைல் 12/8-ல் மூடமலை ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல் (மதுரை மாவட்டம்). | 1·00 |
| 31 | மதுரை-தேனி சாலையிலிருந்து வைகை அணைக்கு செல்லும் 4 மைல் நீளமுள்ள சாலையை அபிவிருத்தி செய்தல் (மதுரை மாவட்டம்). | 0·60 |
| 32 | திண்டுக்கல்-வட்டணம் சாலை. மைல் 34/3-ல் பாலாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல் (மதுரை மாவட்டம்). | 1·80 |

[1969 மார்ச் 17

| வரிசை எண். | வேலையின் விபரம். | மதிப்பு (ரூ. லட்சத்தில்). |
|---|---|---|
| | **1968-69—தொடர்ச்சி** | |
| 33 | திருப்பத்தூர்-நட்ராம்பள்ளி சாலை, மைல் 4/7-ல் கோட்டூர் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல் (வட ஆற்காடு மாவட்டம்). | 0·60 |
| 34 | மதுரை-மேலூர் சாலையில் உள்ள சத்தியர் ஓடை மைல் 3/8-ல் உள்ள பாலத்திற்கு கண்களை அதிகப்படுத்துதல் (மதுரை மாவட்டம்). | 0·90 |
| 35 | மதுரை-அழகர்கோவில் சாலை, மைல் 4/1-ல் உள்ள பாலத்திற்கு கண்களை அதிகப்படுத்துதல் மதுரை மாவட்டம்). | 1·25 |
| | (1968-69)—மொத்தம் .. | 40·87 |

மொத்த தொகுப்பு—

| வரிசை எண் | | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| 1966-67—(1 முதல் 8 வரை) | .. | 96·51 |
| 1967-68—(9 முதல் 19 வரை) | .. | 33·72 |
| 1968-69—(20 முதல் 35 வரை) | .. | 40·87 |
| மொத்தம் | .. | 1,71·10 |

## அட்டவணை 2.

(ஊராட்சி ஒன்றிப்பு மற்றும் ஊராட்சி சாலைகள்) மற்ற சாலைகள் 1966-67 முதல் 1968-69 வரை அனுமதிக்கப்பட்ட புதிய சாலைகள்.

| வரிசை எண். | வேலையின் விபரம். | மதிப்பு (ரூ. லட்சத்தில்). |
|---|---|---|
| | **1966-67—** | |
| 1 | வேலந்தாங்கல்-அத்திப்பட்டு மேல் மலையனூர் சாலை அபிவிருத்தி. மைல் 0/0—3/4 (தென் ஆற்காடு மாவட்டம்). | 0·88 |
| 2 | ராப்பூசல் சாலை, கொளத்தூர், பாக்குடி சாலை சந்திக்கும் வரை சரளைக் கற்கள் பரப்புதல். மைல் 0/0—4/6 மற்றும் 6/1-8 (திருச்சிராப் பள்ளி மாவட்டம்). | 0·97 |
| 3 | மைல் 0/0—1/2 வரை நாகதீர்த்தம் சாலைக்கு சரளைக் கற்கள் பரப்புதலும், மைல் 15-ல் சிறிய பாலம் கட்டுதலும் (மதுரை மாவட்டம்). | 1·00 |
| 4 | ஓடம்பள்ளி-பாப்பம்பாளையம் சாலைக்கு சரளைக்கற்கள் பரப்புதல். மைல் 1/7—6/1 (சேலம் மாவட்டம்). | 0·98 |



1969 மார்ச் 17]

1966-67—தொடர்ச்சி.

| வரிசை எண். | வேலையின் விபரம். | மதிப்பு (ரூ. லட்சத்தில்). |
|---|---|---|
| | **1966-67—தொடர்ச்சி** | |
| 5 | புவனகிரி-குறிஞ்சிப்பாடி சாலையில் மைல் 7/2-3-ல் பறவனாற்றில் ஓர் மூழ்கு பாலம் கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 8·00 |
| 6 | பட்டம்புதூர் மேலேப்பட்டி சாலையில் மைல் 0/3-ல் கௌசிக ஆற்றின் குறுக்கே ஓர் மூழ்கு பாலம் கட்டுதல் (ராமநாதபுரம் மாவட்டம்). | 2·25 |
| 7 | கண்டடம்-கோவிந்தபுரம் சாலை, மைல் 6/4-5-ல் உப்பார் ஆற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்டுதல் (கோயம்புத்தூர் மாவட்டம்). | 3·50 |
| 8 | சேரி கிராமத்தில் அம்மாபேட்டை-கோவிந்தகுடி சாலையில் வெட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் (தஞ்சாவூர் மாவட்டம்). | 8·00 |
| | (1966-67)—மொத்தம். | 25·58 |
| | **1967-68—** | |
| 9 | ஆலடியார் என்னும் இடத்தில் தாம்பரபரணி ஆற்றின் குறுக்கே ஓர் உயர் மட்ட பாலம் கட்டுதல் (திருநெல்வேலி மாவட்டம்). | 8·25 |
| 10 | மேலில்பட்டி சாலையில் மைல் 1/2, 1/4, 1/5 மற்றும் 2/8-ல் படுகைப் பாலங்களும் கட்டுதல் (திருநெல்வேலி மாவட்டம்). | 4·00 |
| 11 | ஆலங்குளம்-நெட்டூர் சாலையில் நெட்டூருக்கு அருகில் சிற்றாற்றில் ஒரு பாலம் கட்டுதல் (திருநெல்வேலி மாவட்டம்). | 3·50 |
| 12 | பரமக்குடி-முதுகுளத்தூர் சாலையில் உள்ள வன்னி வாய்க்காலிலிருந்து தேசீய சாலை 49-ல் உள்ள பாண்டி கண்மாய் இருப்புப்பாதை நிலையத்திற்கு ஒரு சாலை அமைக்க (வழி) வெங்கட்ட குறிச்சி (14 மைல் 3 பர்லாங்கு) (ராமநாத புரம் மாவட்டம்). | 14·27 |
| 13 | சிங்கம்புணரி-திரிகன்கோட்டை ஆறு வரை சரளை கற்கள் பரப்புதலும், கி. மீ. 0/0 முதல் 6/2 உப்பாற்றிலும், பாலாற்றிலும் பாலங்களை கட்டுவதை சேர்த்து (ராமநாதபுரம் மாவட்டம்). | 5·00 |
| 14 | பள்ளப்பட்டி-பிரான்மலை சாலையில் மைல் 0/6-ல் பாலாற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்டுதல் (மதுரை மாவட்டம்). | 1·90 |
| 15 | வி. குமாரத்தூர்-கைக்களத்தூர் சாலை, மைல் 9/7-ல் ஒரு படுகை பாலம் கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | 1·50 |
| 16 | விரிஞ்சிபுரம் இருப்புப்பாதைக்கு செல்லும் பாதையில் மைல் 1/5-6 மற்றும் 2/4-6 படுகைப் பாலங்கள் கட்டுதல் (வட ஆற்காடு மாவட்டம்). | 4·10 |

1967-68—தொடர்ச்சி.

| வரிசை எண். | வேலையின் விபரம். | மதிப்பு (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|
| 1967-68 - தொடர்ச்சி | | |
| 17 | பிலாசூர் படாகனூர்—மான்சூராபாத் சாளேக்கற்கள் பரப்புதல் (வட ஆற்காடு மாவட்டம்). | 2·15 |
| 18 | கலவை-சமணந்தஹல்லி சாலை. மைல் 4/8-ல் பொன்னியாற்றின் குறுக்கே ஒரு படுகைப்பாலம் கட்டுதல் (தர்மபுரி மாவட்டம்). | 6·75 |
| | (1967-68)—மொத்தம் .. | 51·42 |
| 1968-69— | | |
| 19 | வலங்கைமான் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வெடாம்பூருக்கு அருகில் வெட்டாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுவது (தஞ்சாவூர் மாவட்டம்). | 7·50 |
| 20 | வாலாஜாபாத்-திருப்பாலைவனம் சாலையில் மைல் 0/1-5 வாலாஜாபாத்துக்கு அருகில் ஒரு படுகைப் பாலம் பாலாற்றின் குறுக்கே கட்டப்படுவது (செங்கல்பட்டு மாவட்டம்). | 7·00 |
| 21 | மாருதிபட்டி-எஸ். எஸ். கோட்டை சாலை. மைல் 0/7-ல் முறையூருக்கு அருகில் பாலாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல் (ராமநாதபுரம் மாவட்டம்). | 2·50 |
| 22 | சாலை கிராமம், சருகனி சாலையில் இருந்து ஆனந்தூருக்கு சாலை அமைத்தல் (வழி) வண்டல், மற்றும் ஆர்யன் கோட்டையிலிருந்து இளையான்குடி இருப்புப்பாதை நிலையம்வரை சாலை அமைத்தலும், மங்கலம் சாலை முதல் ராமநாதபுரம் நாயனூர் கோவில் சாலையில் உள்ள காவனூரை சந்திக்கும் வரை சாலை அமைத்தல், (வழி) பி. கோடிகுளம், பெருங்குளம் முதலியவை. (ராமநாதபுரம் மாவட்டம்). | 15·00 |
| 23 | சேனூர் அணைக்கட்டில் வெட்டாற்றின் குறுக்கே சாலைப் பாலம் கட்டுவதும், நீர்கண்டிப் பலகைக் கட்டுவதும். (தஞ்சாவூர் மாவட்டம்). | 1·78 |
| | 1968-69—மொத்தம் .. | 33·78 |

மொத்த தொகுப்பு—

| வரிசை எண். | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1966-67—(1 முதல் 9 வரை) | 25·58 |
| 1967-68—(10 முதல் 19 வரை) | 51·42 |
| 1968-69—(20 முதல் 24 வரை) | 33·78 |
| மொத்தம் .. | 1,10·78 |





அட்டவணை 3.

தலைநகர் புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட புதிய வேலைகள்.

| வரிசை எண். | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. ரூ. |
|---|---|---|
| 1 | எண்ணூர்-துரித வழிச் சாலையில் 3/1-வது கல்மைலிலிருந்து திருவொற்றியூர்-பொன்னேரி-பாஞ்செட்டி சாலை 2/3-வது மைல் வரை, மணலி அருகே நிறுவியுள்ள எண்ணெய் சுத்தகரிப்பு சாலையை இணைக்குமாறு, புதிய சாலை அமைத்தல். | 32,50,000 |
| 2 | சென்னை-பெங்களூர் சாலையில் 4/2 மைலில் அமைந்தகரைக்கு அருகிலிருக்கும் பாலம் அகலப்படுத்தும் வேலை. | 4,50,000 |
| 3 | சென்னை-கல்கத்தா சாலையில் (தேசிய நெடுஞ்சாலை) சென்னை நகர எல்லையில், பேசின் பாலம் அருகே மூன்று பாலங்களை அகலப்படுத்திக் கட்டுதல். | 20,00,000 |
| 4 | சென்னைத் துறைமுகத்திலிருந்து சென்னை-கல்கத்தா சாலை 5/5-வது மைல் வரை, சாலையை மேம்படுத்தல் (தேவையான நிலத்திற்கு அரசு உரிமை பெறுதல் மட்டும்). | 21,00,000 |
| 5 | மர்மலாங்கு பாலத்திலிருந்து இரும்புலியூர் செல்லும் சாலைக்குரிய மேம்பாட்டு வேலைகள். | 3,00,000 |
| 6 | மாமல்லபுரச் சாலையுடன் மர்மலாங்கு பாலம் இரும்புலியூர் சாலையை இணைத்தும், வேளச்சேரி, தாம்பரம் ஆகிய இடங்களில் துணைச் சாலைகளை அமைக்கவும். | 5,22,000 |
| | மொத்தம் .. | 86,22,000 |

[1969 மார்ச் 17

## இணைப்பு 4

### தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்கள ஆற்றும்பணி குறித்த ஆய்வுரை—1968–1969.

தமிழ்நாட்டில் கடலூர், நாக்கப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய மூன்று நடுத்தரத் துறைமுகங்கள் உள்ளன. பரங்கிப்பேட்டை, தொண்டி, பாம்பன், ராமேசுவரம், கீழக்கரை, குலசேகரப்பட்டினம், கொளச்சல் ஆகிய ஏழு சிறு துறைமுகங்களும் தமிழ்நாட்டில் உள்ளன. வெப்பலோடையும், கன்னியாகுமரியும் அண்மையில் சிறு துறைமுகங்களாக அறிவிக்கப் பட்டுள்ளன.

2. மாநிலச் சிறு துறைமுகங்கள் நிதி, மாநில ஏற்றுமதி, இறக்கு மதிக் கட்டண நிதி, மாநிலக் கப்பல் வழிகாட்டுக் கட்டண நிதி ஆகியவற்றி லிருந்து மாநிலத் துறைமுகச் செலவு சரிக்கட்டப்படுகிறது. துறைமுகங்கள் நிதி இம்மாநிலத்தின் எல்லாச் சிறு துறைமுகங்களுக்கும் பொதுவாகும். ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டண நிதிகள் ஒவ்வொரு துறைமுகத்திற்கும் தனித்தனியாக இருக்கும். கடல் துறை, துறைமுக நிதிகளை இம்மாநிலத் தொகுதி நிதியுடன் இணைக்கவேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. இது குறித்து தக்கபடி சட்டமியற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

3. எனினும், தூத்துக்குடித் துறைமுகம் சட்டப்படி நிறுவப்பட்டுள்ள பெருவாரியத்தினால் தொடர்ந்து நிர்வகிக்கப்படும். தூத்துக்குடி பெருந் துறைமுகமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. புதிய துறைமுகம் செயல்படத் தொடங்கியவுடன், தற்போதுள்ள நடுத்தரத் துறைமுகத்தின் நிர்வாகம் புதிய பெருந்துறைமுக நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டு, புதிய துறைமுகப் பொறுப்பாண்மைக் கழகத்திடம் அதன் நிர்வாகம் நிலைபெறும். தற்போதுள்ள துறைமுகம் ரூபாய் 210 லட்சம் செலவில் மீன்பிடித் துறைமுக மாகவும் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

4. **வளர்ச்சித் திட்டங்கள்.**—தமிழ்நாட்டில் உள்ள சிறு துறைமுகங்கள் குறித்த வளர்ச்சித் திட்டங்களைப் பொதுப் பணித் துறையுடன் இணைக்கப் பட்ட கடற்பணிகள் வட்டத்தால் நிறைவேற்றப்படுகின்றன.

### மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிவுறாத எஞ்சிய வேலைத் திட்டங்களில் முன்னேற்றம்.

**கடலூர் துறைமுகம்.**—தற்போது நிறைவேற்றப்பட்டு வரும் கடலூர் துறைமுக வளர்ச்சித் திட்டம் மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டமாகும். இதில் (i) ஆற்றுப் பயிற்சி வேலை, (ii) அலை தடுப்புச் சுவர்கள் கட்டுதல் என்ற இரண்டு பிரிவுகள் உள்ளன. ஆற்றுப் பயிற்சி வேலைகள் இப்போது முடிந்து விட்டன. அலை தடுப்புச் சுவர்கள் கட்டுவதற்கான வடிவமைப்பு மாற்றப்பட்டுள்ளது. அதன்படி, அலை தடுப்புச் சுவர்களுக்குப் பதிலாக கான்கிரீட் மேடை ஒன்றின் மீது 350 டன் மொத்த கொள் அளவு கொண்ட இரண்டு மணல்வாரிக் குழாய்களைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. உறுதியான கற்கலவையாலான இம் மேடை இப்போது கட்டப்பட்டு வருகிறது. இத் திட்டம் முழுவதும் 1971 மார்ச்சில் முடிக்கப்படவேண்டும் என்று திட்ட மிடப்பட்டுள்ளது. மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை ரூபாய் 139·24 இலட்ச மாகும். அதில் ரூபாய் 50·00 இலட்சம் 1968 டிசம்பர் வரையில் செலவு செய்யப்பட்டுள்ளது.

**நாகப்பட்டினம் துறைமுகம்.**—நாகப்பட்டினம் துறைமுகத்தில் பயணிகள் தங்குவதற்கான நிலையம் ஒன்றைக் கட்டும் வேலை முடிந்தது. இதுவும் மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டமாகும். இதன் மதிப்பீட்டுச் செலவு ரூ. 8·8 லட்சமாகும். 1968 டிசம்பர் வரையில் ரூ. 8·64 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.



1969 மார்ச் 17]

**குலசேகரப்பட்டினம், எண்ணூர், வெப்பலோடை.**—நான்காவது ஐந் தாண்டுத் திட்டக் காலத்தில் குலசேகரப்பட்டினம், எண்ணூர், வெப்பலோடை ஆகிய துறைமுகங்களை மேம்படுத்தும் செயற்குறிப்புகளுக்குத் தொடர்பாக அந்த இடங்களில் நீரியல் ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு முடிவடைந் துள்ளது. சிறு துறைமுகங்களின் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட நிதி குறைக்கப் பட்டதால் இந்த திட்டங்கள் முன்னேற முடியவில்லை.

**தூத்துக்குடித் துறைமுகம்.**—தூத்துக்குடித் துறைமுகத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்திய அரசு 27 இலட்சம் ரூபாய் ஒதுக்கியது. நிறைவேற்றப்பட மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| (i) | 300 பரித் திறனுள்ள இழு டீசல் படகு (Tug) ஒன்று வாங்குதல். | இவை வாங்கப்பட்டு பயன் படுத்தப்படுகின்றன. |
| (ii) | இயங்கும் கிரேன்கள் இரண்டை வாங்குதல். | |
| (iii) | மண் எடுத்துச் செல்லும் 100 டன் திறனுள்ள மூன்று தோணிகளை வாங்குதல். | ஷை |
| (iv) | 300 டன் திறனுள்ள மூன்று சரக்குத் தோணிகளை வாங்குதல். | |
| (v) | நீரைக் கலக்கி மண்ணை வெளி யகற்றும் பம்புகள், குழாய்த் தொடர்களுடன் கூடிய தோணி ஒன்றை வாங்குதல். | 30' சதவீத வேலை முடிந்து விட்டது. |
| (vi) | பணிக்களரிச் சாதனம் அமைத்தல். | பணிக்களரி செயல்படத் தொடங்கியுள்ளது. |

### நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சித் திட்டங்கள்

இம்மாநிலத்திலுள்ள நடுத்தரத் துறைமுகங்களையும், சிறு துறைமுகங் களையும் மேம்படுத்தவும, எண்ணூர், வெப்பலோடை, புன்னைக்காயல் ஆகிய இடங்களில் புதிய துறைமுகங்களை நிறுவவும் ரூ. 607 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சிறு துறைமுகம் குறித்த மாநிலச் செயற்குழு பரிவுரை செய்தது. ஆயினும், நான்காவது திட்டக்காலத்தில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரே ஒரு துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு மட்டுமே நிதி உதவி அளிக்க இந்திய அரசு தற்போது திட்டமிட்டுள்ளது. இதன்படி இந்த அரசு கடலூர்த் துறைமுகத்தை மேம்பாடு செய்யலா மென்று கருத்து தெரிவித்துள்ளது.

நான்காவது திட்டநிதி ஒதுக்கத்தில் எஞ்சியுள்ள தொகைகளைப் பொறுத்து, நாகப்பட்டினம் துறைமுகத்திற்குத் தொடர்பான வேலைகளையும் திட்டக் காலத்தின் நடுவில் மேற்கொள்ளும்படி இந்த அரசு மத்திய அரசைக் கேட்கவிருக்கிறது. கடலூருக்குத் தொடர்பான வேலைத் திட்டம் I-ம் இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ளது. இவ் வேலைத் திட்டத்தை 1969–70ல் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

### தூத்துக்குடித் துறைமுகத் திட்டம்

ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 10 லட்சம் டன் சரக்குகளைக் கையாள்கிற வகையில் அமைந்துள்ள தூத்துக்குடித் துறைமுகம், நடுத்தர துறைமுகங் களில் மிகப் பெரிய துறைமுகமாகும். ஆயினும், இத்துறைமுகம் திறந்த அலையான இடத்தில் நங்கூரம் பாய்ச்சுவதற்கேற்ற வசதியுடையதாகும். ஆழமான நீரில் "ஹேர் தீவின்" கிழக்காக கரையை விட்டு 6 மைல் தொலைவில்தான் கப்பல்களை நங்கூரம் பாய்ச்சி நிறுத்த வேண்டியுள்ளது.

சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கான சிறு படகுகள் கப்பலுக்கும் கரைக்குமாக வந்து போய்க்கொண்டிருக்கின்றன. தூத்துக்குடியை ஆழ்கடல் துறைமுகமாக மாற்றவேண்டுமென்று நடுத்தர துறைமுக வளர்ச்சிக் குழு 1960-ம் ஆண்டில் பரிவுரை செய்தது. இப் பரிவுரையை இந்திய அரசு ஏற்றுக் கொண்டது. இத்திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. ரூபாய் 14 கோடி தொடக்கச் செலவு மதிப்பீடு அடிப்படையில் ரூ. 5 கோடி இத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது. இத் திட்டத்திற்காக ஒருவரைத் தலைமைப் பொறியாளராகவும் நிர்வாக அதிகாரியாகவும் நியமித்து, இதை 1963-ம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்வதற்கு இந்திய அரசு ஏற்பளித்தது. இது மத்திய அரசுத் திட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இவ்வேலைத் திட்டத்தை அரசியலமைப்பின் 258-எ பிரிவின் கீழ் இந்திய அரசிடம் தமிழ்நாடு அரசு ஒப்படைத்துள்ளது.

தெற்கிலும், வடக்கிலும் இரண்டு அலைதடுப்புச் சுவர்களை அமைத்து நீரடைத்த பகுதியை ஏற்படுத்துவதன் மூலம் செயற்கை ஆழ்கடல் துறைமுகம் ஒன்றைக் கட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அலை தடுப்பிகள் ஒவ்வொன்றும் கடலுக்குள்ளாக 4,000 மீட்டர் நீளமும் இரண்டிற்குமிடையில் 1,275 மீட்டர் இடைவெளியும் கொண்டதாக அமைக்கப்படும். 122 மீட்டர் அகலமுள்ள நுழைவாயில் ஒன்றும் ஏற்படுத்தப்படும். அதிக அளவு 30 அடி ஆழம் கொண்ட இத்துறைமுகத்தில் ஆறு துறைகளுக்குரிய இடவசதி இருக்கும். பின்னர் இதனை 35 அடியாகவும் ஆழப்படுத்த இயலும். இப்பகுதி தொழில் மயமாக்கப்படும் என்பதைக் கருத்தில் கொண்டு துறைமுகத்தில் கையாளப்படக்கூடிய சரக்குகளின் அளவு குறித்து கூட்டுக்குழு ஒன்றால் ஆய்வு செய்யப்பட்டது. திரு திருமலை, தமிழ்நாடு அரசாங்கச் செயலாளர், பொதுப்பணித் துறை, திரு லுத்ரா, தலைவர், போக்குவரத்துப் பிரிவு, திட்ட ஆணைக்குழு ஆகிய இருவரும் இக் கூட்டுக் குழுவின் உறுப்பினர்களாவர். 1971–72-ம் ஆண்டில் 22·35 லட்சம் டன்களாகவும் 1975–76-ல், 35·10 லட்சம் டன்களாகவும், 1980–81-ல் 44·20 லட்சம் டன்களாகவும் சரக்குகள் இத்துறைமுகம் மூலம் கையாளப்படும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய அரசு இதற்கென ரூபாய் 24·40 கோடி மதிப்பீட்டுச் செலவிற்கென 1968, ஜூனில் நிர்வாக ஒப்புதலளித்துள்ளது.

**வேலை முன்னேற்றம்.**—இத் திட்ட வேலைக்கான பணியில் கரையில் கட்டிட வேலைக்கான பணி 1963-ம் ஆண்டின் நடுவில் தொடங்கப்பட்டது. தொலைகடல் பணிகளை 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ந் தேதி இந்திய அரசின் பிரதம மந்திரியாயிருந்த திரு லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் தொடங்கி வைத்தார்.

(அ) **கரை வேலைகள்.**—நிலத்தில் துளையிடுதல், கடலில் துளையிடுதல், நீரியல் ஆய்வு, நிலங்களைக் கையகப்படுத்துதல் ஆகிய தொடக்க வேலைகள் முடிவுற்றன. மாநில அரசு நிலங்கள், துறைமுகப் பொறுப்பாண்மைக் கழக நிலங்கள், மத்திய அரசு நிலங்கள், பட்டா நிலங்கள் ஆக மொத்தம் 3,097·99 ஏக்கரா பரப்பளவைத் துறைமுக எஸ்டேட், ரயில் கிளைப் பாதை, கல்வெட்டியெடுக்கும் இடங்கள் ஆகியவற்றுக்காக ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. துறைமுக எஸ்டேட்டுக்கென 2,377·22 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படும். 300 ஏக்கரா பரப்பளவைத் தவிர, ஏனைய நிலப்பரப்பளவு முழுவதும் கையகப்படுத்தப்பட்டு விட்டது. துறைமுக எஸ்டேட்டில் பணியாளர் குடியிருப்புகள், மருந்தகம், கடைகள், தொடக்கப்பள்ளி ஆகியவற்றைக் கட்டுதல், சாலைகள் போடுதல், பாலங்கள் கட்டுதல், மீளவிட்டானிலிருந்து துறைமுகப்பகுதி முடிவடையும்வரை கிளை ரயில் பாதை அமைத்தல், தண்ணீர் வசதி, மின்சார வசதி, கழிவுநீர் அகற்றும் வசதி ஆகியவற்றிற்கு வகை செய்தல் முதலிய வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

(இ) **தொலைகடல் பணிகள்.**—அலைதடுப்புச் சுவர், சப்பல் துறை, நெருக்கமான துறைகள், ஆகியவற்றைக் கட்டுதல், அணுகுபாதையை சீர்படுத்துதல் ஆகியவை தொலைகடல் பணிகளில் அடங்கும். தெற்கு அலைத் தடுப்புச் சுவரின் மொத்த நீளம் 3,797 மீட்டராகும். இதில் 1,143 மீட்டர் தொலைவுக்கு கட்டப்பட்டுவிட்டது.



L.S. 1,143 மீட்டரிலிருந்து வரும்பாதை (—5·4 மீட்டர் ஆழம்) போடப்பட்டு வருகிறது. வடக்கு அலைதடுப்புச் சுவரின் மொத்த நீளம் 4,142 மீட்டராகும். இதில் 5·5 மீட்டர் ஆழத்திற்கும் கரையிலிருந்து 1,165 மீட்டர் நீளத்திற்கும் கட்டப்பட்டுவிட்டது. L.S. 1,165 மீட்டரிலிருந்து 1,365 மீட்டர் வரை பணிகள் மேலும் நிறைவேறி வருகின்றன.

பிரிந்து செல்லும் சாலைகளையும் ரயில் பாதைகளையும் இறுதிவரையில் கொண்டு செல்லும் அணுகு பாதை கரையிலிருந்து 666 மீட்டர் நீளத்திற்கும் 81 மீட்டர் அகலத்திற்கும் —2·00 மீட்டர் ஆழத்திற்கும் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டும் உள்ள பகுதிகளுக்கான அணுகு பாதைகள் குறித்து நிரப்பும் வேலை விரைவில் மேற்கொள்ளப்படும். அலைதடுப்புச் சுவர்கள் கட்டும் பணி முன்னேற்றமடைந்த பின்னர் சப்பல் துறையையும் நெருக்கமான துறைகளையும் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

இந்த வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இந்திய அரசு நிதி அமைச்சகத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி, ஆண்டுதோறும் நிதி ஒதுக்கப்படுகிறது. 1968, டிசம்பர் இறுதிவரையில் இத் திட்டத்திற்காக ரூ. 6·55 கோடி செலவாகியது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்வேலைகளுக்கென ரூபாய் 17·70 கோடி நிதி ஒதுக்கும்படி துறைமுகங்கள் குறித்த திட்ட துணைக்குழு ஆலோசனை தெரிவித்துள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்காக பெரிய அளவில் நிதி ஒதுக்கப்படுமென்று இந்த அரசு விழைகிறது. இரண்டு துறைகள் கட்டி முடிக்கப்பட்டு 1971, அக்டோபருக்குள் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எஞ்சியுள்ள மூன்று துறைகளும் 1972, டிசம்பரிலிருந்து செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**மாநில அரசால் நிறைவேற்றப்படும் வேலைகள்.**—இத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மாநில அரசும் தனது பங்காக கணிசமான அளவுக்கு உதவி வழங்கியுள்ளது. சாலை போடுதல், நீர் வழங்கல், மின்சார வசதி செய்து தருதல், மற்றும் இதுபோன்ற வசதிகள் உட்பட துறைமுக எல்லைகளுக்குள் வேண்டிய வசதிகள் அனைத்தையும் தங்களுடைய செலவிலேயே செய்து தரவும் அவர்கள் தொடக்கத்திலேயே ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

தொழில் தேவைகளுக்காக 5,000 ஏக்கர் பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. துறைமுகங்கள் கட்டப்பட்டுவரும்பொழுதே, அத் அப்பொழுதுதான துறைமுகத்திற்கு அருகில் திட்டமிட்டு தொழிற் பிரிவுகளை ஏற்படுத்துவது சாத்தியமாக இருக்கும். மீட்புப் பணிகளுக்காக மணலைத் தோண்டியெடுப்பதற்கென அரசு 1,049·47 ஏக்கர் நிலப்பகுதியைக் கையகப்படுத்தியுள்ளது. நிலக்கையகப்படுத்தும் பணியாளர்கள் மாநில அரசினால் நியமிக்கப்படுகின்றனர். ஆனால், செலவில் ஒரு பகுதி துறைமுக நிர்வாகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. துறைமுகத்திற்கும் அங்கிருந்து செல்வதற்கும் தேவையான போக்குவரத்து வசதி செய்து தருவதற்காக ரூ. 63·45 லட்சம் செலவில் துறைமுக எல்லைக்கு அப்பால் முக்கியமான சாலைப்பணிகளை மாநில அரசு தன் சொந்த செலவில் மேற்கொண்டுள்ளது.

தூத்துக்குடி–பாளையங்கோட்டை சாலையிலிருந்து துறைமுகத்திற்கு பிரியும் 6·14 கிலோ மீட்டர் நீளமுள்ள நெடுஞ்சாலை, தூத்துக்குடி–திருச்செந்தூர் சாலையிலிருந்து பிரியும் 2·6 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை, கடற்கரை சாலை, தூத்துக்குடி நகரம், துறைமுகம் ஆகியவற்றை இணைக்கும் 1·72 கிலோ மீட்டர் நீளமுள்ள இணைப்புச் சாலை ஆகியவை முக்கியமான சாலைகளாகும். விரைவில் முடிக்கப்படவிருக்கும் இணைப்புச் சாலையைத் தவிர ஏனைய சாலைகள் குறித்த வேலைகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன.

துறைமுகக் கட்டிடப்பணி நிறைவேறிவரும் நிலையில் தூத்துக்குடி நகராட்சி தண்ணீர் வழங்கல் திட்டத்தின்மூலம் நாளொன்றுக்கு ஒரு லட்சம் காலன் நீர் வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்துள்ளது. மாநில அரசாங்கத்தினால் ரூபாய் 4·46 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட 6

அங்குல பெரும் குழாய்மூலம் நீர் வழங்கப்படுகிறது. துறைமுகத்திற்கு மட்டும் 10 லட்சம் காலன் நீர் வழங்குவதற்காகவும், துறைமுகப் பகுதியைச் சுற்றி ஏற்படக்கூடிய தொழிற்சாலைகளுக்கு 20 லட்சம் காலன் நீர் வழங்குவதற்காகவும் முக்காணிக்கு அருகில் வாழவல்லானில் தாமிரவருணி ஆற்றிலிருந்து 30 லட்சம் காலன நீர் வழங்கும் திட்டத்தையும் அவர்கள் நிறைவேற்றி வருகின்றனர். இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 76·50 லட்சமாகும். இநத வேலைகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. வருங்காலத்தில் வளர்சசி பெறக்கூடிய தொழில்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நாளொன்றுக்கு 1 கோடி காலன் நீர் வழங்கும் பெரிய திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் முடிவடைந்துள்ளன.

### சேது சமுத்திரத் திட்டம்.

இந்தியாவின் மேற்குக் கரையையும், கிழக்குக்கரையையும் இணைக்கும் கடற்பாதையை மேம்படுத்துவதற்காகவும், அதன் பிரயாண நீளத்தைக் குறைப்பதற்காகவும் மன்னார் வளைகுடாவை, பாக்ஜலசந்தியுடன் இணைப்பதே சேது சமுத்திரத் திட்டத்தின் நோக்கமாகும். இதனால் 30 அடி ஆழத்தில் செல்லக்கூடிய பெரிய கப்பல்கள் இலங்கையைச் சுற்றியும் அதன் தென்முனையைச் சுற்றியும் வளைத்துப் போவதைத் தவிர்த்து, சுற்றி வளைத்துப்போகும் இலங்கை வழியில் சில சமயம் சுழற்காற்றும், புயலும் வீசுவதையும் தவிர்த்து இக் கடற்பாதையை அபாயமின்றி பயனபடுத்த முடியும்.

**ஆய்வுப்பணிகள்.**—சேதுசமுத்திரத் திட்டம் குறித்த ஆய்வுப் பணிகள், சுதந்திரததிற்குப் பிறகு, 1956–ம் ஆண்டில் திரு ஏ. ராமசாமி முதலியார் அவர்களின் தலைமையின் கீழ்ச் செயல்பட்ட குழு ஒன்றினால் நடத்தப்பட்டது. மண்டபம் நிலப்பகுதிக்குக் குறுக்காகக் கால்வாய் ஒன்றை அமைக்க வேண்டுமென்றும், சேதுசமுத்திரத் திட்டம், தூத்துக்குடி துறைமுகத் திட்டம் ஆகிய இரண்டினையும் ஒரே சமயத்தில் மேறகொண்டு நிறைவேற்றுவது அவசியம் என்றும் இக் குழு பரிவுரை செய்தது.

ஆயினும், இந்திய அரசு இதுகுறித்து மேற்கொண்டும் ஆய்வுப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டுமெனக் கருதி, 1964–ம் ஆண்டில் உயர் மட்டக்குழு ஒன்றை நியமித்தது. நம்பகமான திட்ட அறிக்கை தயாரிக்கப்படவேண்டும் என்று இக் குழு முடிவு செய்தது. இந்த நோக்கத்திற்காக மத்திய அரசின் தலைமைப் பொறியாளர் திரு சி. வி. வெங்கடேஸ்வரன் 1965, மே திங்களில் நியமிக்கப்பட்டார். இதுகுறித்து நியமிக்கப்பட்ட சிறப்புப் பொறியியல் பிரிவு அவருக்கு உதவி செய்தது. தலைமை பொறியாளர்–ஆலோசகர் சேதுசமுத்திரத் திட்டம் குறித்த தனது திட்ட அறிக்கையை 1968, ஜூன் திங்களில் பணிந்தனுப்பினர்.

**திட்ட அறிக்கை.**—திட்ட அறிக்கையின் முக்கிய கூறுகள் கீழ்க் கண்டவையாகும். கால்வாயின் பல்வேறு அமைப்புகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு மண்டபம் அமைப்பு, இராமேஸ்வரம் அமைப்பு ஆகிய இரண்டும் சாத்தியமானவை என்று இறுதியாகக் கண்டறியப்பட்டது. கால்வாயின் ஒவ்வொரு அமைப்பின் கீழும் கீழ்க்கண்ட நான்கு அணுகுக் கால்வாய்கள் உள்ளன:—

(அ) தெற்கு அணுகுக் கால்வாய்.

(இ) தரைக் கால்வாய்.

(உ) வடக்கு அணுகுக் கால்வாய்.

(எ) வங்காள விரிகுடாக் கால்வாய்.



இந அமைப்புகள் குறித்த விவரங்களும், தற்போதைய செலவு விவரங்களும் கீழே விதங்களின்படி அவற்றின் மதிப்பீட்டுச் செலவு கொடுக்கப்பட்டுள்ளன:—

| | விவரம். | | மண்டபம் அமைப்பு. (தொகை ரூபாய் லட்சத்தில்.) | இராமேசுவரம் அமைப்பு. (தொகை ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| | (1) | | (2) | (3) |
| 1 | தெற்கு அணுகுக் கால்வாய் | .. | 10,34·48 | 6,01·08 |
| 2 | தரைக் கால்வாய் .. .. | .. | 10,64·22 | 2,71·69 |
| 3 | வடக்கு அணுகுக் கால்வாய் | .. | 3,49·85 | 2,11·80 |
| 4 | வங்காள விரிகுடாக் கால்வாய் | .. | 10,53·93 | 10,53·93 |
| | பெரு மொத்தம் | .. | 35,02·48 அல்லது 35·02 கோடி. | 21,38·50 அல்லது 21·38 கோடி. |

இதன் மூலம் இராமேசுவரம் அமைப்பைவிட மண்டபம் அமைப்பிற்குச் செலவு அதிகம் என்று தெரிய வருகிறது.

மண்டபம் கால்வாய் அமைப்பைக் காட்டிலும் இராமேசுவரம் கால்வாய் அமைப்பு குறைந்த நீளம் உள்ளது என்பதை கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்:—

| | | காலவாய்களின் நீளம். | |
|---|---|---|---|
| | | மண்டபம் கால்வாய் அமைப்பு. அடி. | இராமேசுவரம் கால்வாய் அமைப்பு அடி. |
| தெற்குப்புற அணுகுக் கால்வாய். | | 33,600 | 13,000 |
| தரைக் கால்வாய் .. | .. | 20,400 | 11,500 |
| வடக்குப்புற அணுகுக் கால்வாய் | .. | 90,400 | 19,200 |
| மொத்தம் | .. | 144,400 | 43,700 |

செலவுத் தொகையை குறைக்க இராமேசுவரம் கால்வாய் அமைப்பின்கீழ் தெற்கு அணுகுக் கால்வாயை 1,500 அடி கிழக்குப்புறமாக சிறிதளவு திருப்ப திட்டமிடப்பட்டுள்ளது. திருத்தி அமைக்கப்பட்ட கால்வாய் அமைப்பின், தெற்குப்புற அணுகுக் கால்வாய், தரைக் கால்வாய், வடக்குப்புற அணுகு சாலைக் கால்வாய் உட்பட குறுக்குக் கால்வாயின் மொத்த நீளம் 6 மைலாகும். முந்தைய கால்வாய் அமைப்பில் இது 7 மைலாக இருந்தது. மாற்றியமைக்கப்பட்ட இராமேசுவரம் கால்வாய் அமைப்பாகத் திட்ட அறிக்கையில் அமைப்பே இறுதியான கால்வாய் அமைப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தெற்குப்புற அணுகுக் கால்வாயின் நீர்

மட்டத்துக்கடியில் மண்டபம் கால்வாய்ப் பகுதியை அமைத்தல் மிகக் கடினமானதாகும். இது இராமேசுவரம் கால்வாய் அமைப்பை விடக் கடினமானதாகும். இராமேசுவரம் கால்வாய் அமைப்பு மண்டபம் கால்வாய் அமைப்பைவிட நீளத்தில் மிகக் குறைவானதாகும். 30 அடி ஆழங்கொண்ட இராமேசுவரம் கால்வாய் அமைப்பைக் கட்டுவதற்கு ரூபாய் 37·50 கோடி செலவாகும் என்றும், மண்டபம் அமைப்பிற்கு ரூ. 55·60 கோடி செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே இராமேசுவரம் கால்வாய் அமைப்பிற்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

**வருவாய் நிலை.**—கால்வாய் திறக்கப்பட்டு ஓரிரண்டுகளான பிறகு, இத் திட்டத்தின் வருவாய் நிலை கீழ்க்கண்டவாறு இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.—

| வருவாய். | | | செலவு ரூபாய் லட்சத்தில். | | நிகர வருவாய் ரூபாய் லட்சத்தில். |
|---|---|---|---|---|---|
| மொத்த டன்கள். (லட்சத்தில்.) | டன் ஒன்றுக்கு வீதம். | மொத்தம் ரூபாய் லட்சத்தில். | | | |
| | | | இயக்குதல், பேணி வருதல். | 49 | |
| | | | தேய்மானம் .. | 21 | |
| 155 | 1·55 | 232 | மொத்தம் .. | 70 | 162 |

**ஏற்றுமதி—இறக்குமதித் திறன்.**—சேதுசமுத்திரத் திட்டம் இயங்குகையில் ஆதாயம் தரக்கூடிய திட்டமாகும். இத்திட்டத்திற்கு 1969-ல் ஒப்புதல் வழங்கப்பட்டால், 1974-ல் இந்தக் கால்வாய் ரூ. 232 லட்சம் வருவாயைப் பெற்றுத்தரும். அதாவது, தொடங்கப்பட்டவுடன் 4½ சத வீதம் ஆதாயத்தையும் 30-வது ஆண்டில் 14 சத வீத ஆதாயத்தையும் பெறுவதற்கு இத் திட்டம் வகை செய்யும். இக்கால்வாயின் மூலம் கிடைக்கும் மொத்த வருவாயில் 80 சத வீத அந்நியச் செலாவணி கிடைக்கும். இத்திட்டம் செயல்படுகையில் பயணத்தில் 360 கடல் மைல் தொலைவு மிச்சப்படும். இது ஒருநாள் பயணத்தையோ அல்லது இரண்டு நாள் பயணத்தையோ குறைக்கும். அதே அளவுக்கு நிலக் கட்டணங்களையும் குறைக்கும். கப்பல் நிறுவனத்தினரின் நிகர ஆதாயத்தை இது அதிகரிக்கும். இக் கால்வாய் தூத்துக்குடி துறைமுகத்தின் நேர்பாதையில் அமைவதால் அதற்கு இத்திட்டம் ஊக்கமூட்டுவதாய் இருக்கும். தூத்துக்குடித் திட்டம், சேதுசமுத்திரக் கால்வாய் திட்டம் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் தூத்துக்குடி-சேதுசமுத்திரப் பகுதிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் தொழில்கள் வளர்ச்சியடையும். வணிகக் கப்பல்களும், கடற்படைக் கப்பல்களும் தேய்மானம் எதுவுமில்லாமல் பாதுகாப்பாகச் செல்வதற்கு இக் கால்வாய் வகை செய்யும்.

முடிவுரை.—ஆலோசனை அதிகாரியால் நடத்தப்பட்ட ஆய்வுப்பணி, ஆராய்ச்சி ஆகியவை கீழ்க்கண்ட முடிவுகளைக் குறிப்பிடுகின்றன:—

(1) இத் திட்டம் தொழில் நுட்ப முறையில் சாத்தியமானதொன்றாகும்.

(2) மண்டபத்தில் ஒன்றும், இராமேசுவரத்தில் ஒன்றுமாக இரண்டு இடங்கள் கால்வாய் வெட்டுவதற்காக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு இடங்களிலும் ஆய்வுகள் நடத்தப்பட்டன. மேலே குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக, இராமேசுவரத்திலிருந்து அமைக்கப்படும் கால்வாய் ஏற்றதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.



(3) மேற்கிலிருந்துவரும் போக்குவரத்திற்கு முக்கிய முனையான குமரிமுனையிலிருந்து சென்னை, விசாகப்பட்டணம், கல்கத்தா செல்வதற்கு முறையே 353 295, 259 கடல் மைல் நீளப் பயணம் குறையும். இவ்வழியே தூத்துக்குடித் துறைமுகத்தைக் கடந்து சென்றால் மேலும் 81 மைல் பயணத்தொலைவு குறையும்.

(4) தற்போது 30 அடி ஆழம் வெட்டுதல் போதுமானது என்று கருதப்படுகிறது. ஆழம் பின்னர் 32 அடியாக அதிகரிக்கப்படும். வருங்காலத்தில் இங்குள்ள போக்குவரத்தை ஒட்டி இந்த ஆழத்தை அதிகரிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

(5) நிகர வருவாய் படிப்படியாக உயர்ந்து அது பல ஆண்டுகளுக்குப்பின் பன்மடங்காக உயரும்.

ஆலோசனைப் பொறியாளர் இத்திட்டத்தைப்பற்றிய தனது அறிக்கையை மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் அனுப்பியுள்ளார். மாநில அரசு இத்திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு இந்திய அரசை வற்புறுத்திவருகிறது. இந்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்ட பிறகு இவ்வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

## இணைப்பு I

### 1969-70-ம் ஆண்டுக் காலத்தில் மேற்கொள்ள எண்ணியுள்ள வேலைகள்.

| துறைமுகத்தின் பெயர். | தொடர் எண்ணும் வேலையின் பெயரும். | செலவு மதிப்பீடு. | 1968 வரை செலவு. | நான்காம் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம். | 1969-70-க்கான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| | **நான்காம் திட்டத்திற்கான எஞ்சிய வேலைத் திட்டம்.** | | | | |
| கடலூர் துறைமுக மேம்பாட்டுத் திட்டம். | அலைதடுப்புச் சுவர்களைக் கட்டுதலும், ஆற்றுப் பயிற்சி வேலைகளும். | 139·24 | 50·00 | 89·24 | 39·15 |
| | மொத்தம் .. | 139·24 | 50·00 | 89·24 | 39·15 |
| | **நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் புதிய வேலைத் திட்டங்கள்.** | | | | |
| கடலூர் .. .. .. | 1. தற்போதுள்ள "எர்ஸ்கின்" என்னும் தூர் வாரிக்குப் பதிலாக நீருக்கடியில் தூர் வாருவதற்காக 12 அங்குல அளவு உறிஞ்சுவாய் அமைப்புடையதும் குழாய்த் தொடர்புடையதும் ஆகிய தூர் வாரி ஒன்றை வாங்குதல். | 11·00 | .. | .. | 6·00 |
| | 2. மரக்கலங்களை இழுப்பதற்காக 300 பரித்திறனுள்ள இழு படகு ஒன்றை வாங்குதல். | 7·00 | .. | .. | 4·00 |
| | 3. 100 டன் திறனுள்ள உருக்காலான சிறு கப்பலைச் சாதனங்களுடன் வாங்குதல். | 3·60 | .. | .. | 2.00 |
| | | 21·60 | .. | .. | 12·00 |

சுருக்கம்.

| | |
|---|---|
| 1. தொடர்ந்து நிறைவேற்றப்படும் வேலைத்திட்டங்கள். | 39·15 |
| 2. புதிய வேலைத்திட்டங்கள் .. .. | 12·00 |
| பெரு மொத்தம் .. | 51·15 |

## இணைப்பு II

மத்திய அரசின் கீழ் உள்ள வளர்ச்சி வேலைத் திட்டங்களுக்காக செய்யப்பட்ட செலவு விவரங்களைக் காட்டும் அறிக்கை (மூன்றும் திட்டகாலத்தில் எஞ்சிய வேலைத் திட்டங்கள்.)

| தொடர் எண்ணும் வேலைத்திட்டத்தின் பெயரும். | மூன்றும் வேலைத் திட்டக் காலத்தில் நிதி ஒதுக்கீடு. | 1967-68 வரை ஏற்பட்ட மொத்தச் செலவு. | 1968-69-ல் எதிர் பார்க்கப்படும் செலவு. | 1969-70-ல் நிதி ஒதுக்கம். | குறிப்புகள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | |
| **கடலூர் துறைமுகம்—** | | | | | |
| 1. அலைதடுப்பு சுவர்களைக் கட்டுதல், ஆற்றுப் பயிற்சிப் பணிகள்—மதிப்பீடு ரூ. 1,39·24 லட்சம். | 50·00 | 50·00 | 6·70 | 39·15 | பணி நிறைவேறி வருகிறது. |
| **நாகப்பட்டினத் துறைமுகம்—** | | | | | |
| 2. கம்பிகள் பொருத்தி உறுதியான கற்கலவைக் காரையால் தோணித் துறைமுகம் ஒன்றைக் கட்டுதல். இயங்கும் மணல் வாரி இயந்திரம் ஒன்றை நிறுவுதல்—மதிப்பீடு ரூ. 16·4 லட்சம். | 10·00 | 12·55 | இல்லை. | இல்லை. | பணி முடிந்து விட்டது. |
| 3. பயணிகள் தங்கும் நிலையம் ஒன்றைக் கட்டுதல்—மதிப்பீடு ரூ. 8·8 லட்சம். | .. | 5·96 | 2·85 | இல்லை. | ௸ |
| **கொளச்சல் துறைமுகம்—** | | | | | |
| 4. சரக்குகளை அடுக்கி வைப்பதற்கான மேடையுடன் கூடிய சரக்கு இறக்கும் மேடை ஒன்றைக் கட்டுதல் துளையிடும் வேலைகளுக்கான திருத்த மதிப்பீடு ரூ. 87,000. | 2·00 | 0·86 | இல்லை. | இல்லை. | துளையிடும் வேலை முடிந்து விட்டது. |
| **தூத்துக்குடித் துறைமுகம்—** | | | | | |
| 5. 300 பரித்திறனுள்ள இழு படகு ஒன்றை வாங்குதல். | 5·00 | 8·74 | 2·12 | இல்லை. | பணி முடிந்து விட்டது. |
| 6. இரண்டு டன் சுமை எடுக்கும் இயந்திரம் கிரேன்களை வாங்குதல். | 2·50 | 4·37 | இல்லை. | இல்லை. | ௸ |
| 7. மண் எடுத்துச் செல்லும் 100 டன் திறனுள்ள மூன்று தோணிகளை வாங்குதல். | 2·50 | 4·77 | இல்லை. | இல்லை. | ௸ |
| 8. 300 டன் கொள் அளவுள்ள மூன்று சரக்குத் தோணிகளை வாங்குதல். | 5·00 | 11·76 | இல்லை. | இல்லை. | ௸ |
| 9. நீரைக் கலக்கி மண்ணை வெளியேற்றும் பம்புகள். குழாய்த் தொடர்புகளுடன் கூடிய தோணி ஒன்றை வாங்குதல். | 3·00 | 6·91 | 4·00 | இல்லை. | 30 சத வீதம் பணி முடிந்து விட்டது. எஞ்சிய பணி நடந்தேறி வருகிறது. |
| 10. பணிக் களரி, சாதனங்கள் முதலியன அமைத்தல். | 2·00 | 2·01 | இல்லை. | இல்லை. | பணி முடிந்து விட்டது. |
| | 82·00 | 107·93 | 15·67 | 39·15 | |
| * தூத்துக்குடித் துறைமுகம் மட்டும் | 27·00 | 38·60 | 6·12 | இல்லை. | |

குறிப்பு.—தூத்துக்குடி துறைமுகத்திலுல் செலவு செய்யப்பட்ட ரூ. 27 லட்சத்திற்கு மேற்பட்ட செலவு, தூத்துக்குடித் துறைமுகப் பொறுப்பாண்மைக் கழகத்திலுல் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

## இணைப்பு IIட.

### நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வளர்ச்சி வேலைத் திட்டங்கள்.

| துறைமுகத்தின் பெயரும், திட்டமும். | | மதிப்பீட்டுச் செலவு. ரூ. |
|---|---|---|
| **கடலூர் துறைமுகம்—** | | |
| தொடர்ந்து வரும் திட்டம்— | | |
| அலை தடுப்புச் சுவர்களைக் கட்டுதல்—ஆற்றுப் பயிற்சிப் பணிகள்—திருத்த மதிப்பீடு ரூ. 139·24 (முன்னதாக செலவு செய்யப்பட்ட ரூ. 50·00 லட்சம் நீங்கலாக). | | 89,24,000 |
| **புதிய திட்டங்கள்—** | | |
| முறை வைப்பில் முதலிடம்— | | |
| 1. தற்போதுள்ள "எர்ஸ்கின்" என்னும் சுமார் 28 ஆண்டுகளாக உள்ள இயந்திரத்திற்குப் பதிலாக நீருக்கடியில் தூர் வாருவதற்காக 12 அங்குல அளவு உறிஞ்சுவாய் அமைப்புடையதும் குழாய்த் தொடர்பு உடையதும் ஆகிய தூர் வாரி இயந்திரம் ஒன்றை வாங்குதல் | | 11,00,000 |
| 2. மரக்கலங்களை இழுப்பதற்காக 300 பரித் திறனுள்ள இழு படகு ஒன்றை வாங்குதல் .. .. | | 7,00,000 |
| 3. 100 டன் திறனுள்ள உருக்காலான சிறு கப்பல், சாதனங்களுடன் .. .. .. | | 3,60,000 |
| 4. தெற்குத் தோணித் துறையிலும், வடக்குத் தோணித் துறையிலும் மத்தியத் தோணித் துறையிலும் சரக்கு அடுக்கும் பகுதிகளுக்கு சிமெண்ட் காரை போடுதல் .. .. .. | 4,33,000 | |
| 5. வடக்குத் தோணித் துறையையும், மையத் தோணித் துறையையும் இணைக்கும் தோணித்துறை கட்டுதல் .. .. .. .. .. .. .. .. .. .. | 2,40,000 | |
| 6. தரை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றைக் கட்டுதல்—நகராட்சி நீர்த் தேக்கத்திலிருந்து அவசியமான பம்புகளையும் குழாய்த் தொடர்களையும் எடுத்துவரும் செலவு உள்பட .. .. .. | 1,00,000 | |
| மொத்தம் .. | 29,33,000 | |
| முறை வைப்பில் இரண்டாமிடம்— | | |
| 7. மண் எடுக்கும் இரண்டு இயந்திரங்களுடன் கூடிய ஒரு தூர் வாரிக் கப்பலை வாங்குதல்.. .. | 13,30,000 | |
| 8. உப்பளத்திற்கு வடக்கிலும், கிழக்கிலும் 1,500 அடி நீளமுள்ள சரக்கு மேடை ஒன்றைக் கட்டுதலும், அதற்கு மின்சார வசதி செய்தலும் .. .. .. .. .. | 10,00,000 | |
| 9. உப்பளப் பகுதிகளைப் பண்படுத்துதலும், உப்பளத்திற்குள் சாலை வசதிகள் செய்தலும் .. | 5,00,000 | |
| மொத்தம் .. | 28,30,000 | 57,63,000 |

| துறைமுகத்தின் பெயரும், திட்டமும். | | மதிப்பீடுச் செலவு. ரூ. | |
|---|---|---|---|
| **நாகப்பட்டினத் துறைமுகம்—** | | | |
| **முறை வைப்பில் முதலிடம்—** | | | |
| 1. பயணிகள் தோணிகளை இழுத்துச் செல்லும் இழு படகு .. .. .. .. | .. | 7,00,000 | |
| 2. சரக்குக் கொட்டகை ஒன்றை அமைத்தல் .. .. .. .. .. | .. | 75,000 | |
| மொத்தம் | .. | 7,75,000 | |
| **முறை வைப்பில் இரண்டாமிடம்—** | | | |
| 3. சிறிய தூர் வாரும் கப்பல் ஒன்றை வாங்குதல் .. .. .. .. .. | .. | 5,52,000 | |
| **முறை வைப்பில் மூன்றாமிடம்—** | | | |
| 4. இழு படகுகளுக்காகவும், தூர் வாரும் கலங்களுக்காகவும் சரக்குப் பாதைகள் கட்டுதல் .. | .. | 4,00,000 | |
| மொத்தம் | .. | 17,27,000 | 25,02,000 |



## இணைப்பு IV.

### 1968-69 வரவு-செலவுத் திட்ட திருத்த மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள வேலைகள்.

| துறைமுகத்தின் பெயர். | தொடர் எண்ணும், வேலையின் பெயரும். | மதிப்பீட்டுத் தொகை. | 1968-69 வரவு-செலவுத் திட்ட திருத்த மதிப்பீடு. |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| | **எஞ்சிய வேலைத் திட்டங்கள்.** | | |
| கடலூர் .. .. .. | 1. அலைதடுப்புச் சுவர்களைக் கட்டுதலும், ஆற்றுப் பயிற்சி வேலைகளும். | 1,39·24 | 6·70 |
| நாகப்பட்டினம் .. .. | 2. பயணிகள் தங்குவதற்கான நிலையம் ஒன்றைக் கட்டுதல் .. | 8·80 | 2·50 |
| | மொத்தம் .. | | 9·20 |
| | **புதிய திட்டங்கள்.** | | |
| கடலூர் .. .. .. | 1. தற்போதுள்ள "எர்ஸ்கின்" என்னும் தூர்வாரி இயந்திரத்திற்குப் பதிலாக நீர்க்கடியில் தூர் வாருவதற்காக 12 அங்குல அளவு உறிஞ்சு வாய் அமைப்புடையதும், குழாய்த் தொடர்பு உடையதுமாகிய தூர்வாரி இயந்திரம் ஒன்றை வாங்குதல். | 11·00 | 4·25 |
| நாகப்பட்டினம் .. .. | 2. சரக்குக் கொட்டகை ஒன்றை அமைத்தல் .. .. .. | 0·75 | 0·75 |
| | மொத்தம் .. | | 5·00 |

1969 மார்ச் 1

1969 மார்ச் 17]

இணைப்பு

V.

**1959-60 முதல் 1967-68 வரை தமிழ் நாட்டிர்**
**டள்ள துறைமுகங்களின் மூலமாகச் சென்ற மொத்தச்**
**சரக்குகளின்**
**பெறுமானம் (டன் கணக்கில்).**

| தொடர் எண்ணும் துறைமுகத்தின் பெயரும். | 1959-60. | 1960-61. | 1961-62. | 1962-63. | 1963-64. | 1964-65. | 1965-66. | 1966-67. | 1967-68. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. தூத்துக்குடி .. .. .. | 8,32,738 | 9,59,366 | 8,42,533 | 10,25,173 | 9,34,893 | 10,50,272 | 9,93,734 | 9,53,880 | 10,80,207 |
| 2. கடலூர் .. .. .. | 4,21,804 | 4,28,913 | 4,66,850 | 4,67,811 | 4,98,478 | 5,45,494 | 4,16,440 | 3,97,375 | 2,40,370 |
| 3. நாகப்பட்டினம்.. .. .. | 53,371 | 39,813 | 40,757 | 57,619 | 52,340 | 71,929 | 72,162 | 91,179 | 1,11,331 |
| 4. பரங்கிப்பேட்டை .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 5. அதிராம்பட்டினம் .. .. | 17 | இல்லை. | இல்லை. | இல்லை. | இல்லை. | .. | .. | (துறைமுகம் மூடப்பட்டது). | |
| 6. தொண்டி .. .. .. | 13 | 971 | இல்லை. | இல்லை. | இல்லை. | .. | .. | 2 | 15 |
| 7. பாம்பன் .. .. .. | 2,192 | 3,105 | 1,420 | 1,478 | 6,129 | 2,094 | 8,152 | 7,436 | 10,245 |
| 8. தனுஷ்கோடி .. .. .. | 8,112 | 8,125 | 7,753 | 7,221 | 7,430 | 3,581 | .. | (துறைமுகம் மூடப்பட்டது). | |
| 9. கீழக்கரை .. .. .. | 2,474 | 1,426 | 1,302 | 1,058 | 1,538 | 1,243 | 4,795 | 436 | 922 |
| 10. கொளச்சல் .. .. .. | 10,155 | 9,800 | இல்லை. | இல்லை. | 14,455 | 25,598 | 26,900 | 29,230 | 39,413 |
| 11. குலசேகரப்பட்டினம் .. .. | 819 | 782 | 644 | 252 | 800 | 150 | .. | .. | .. |
| மொத்தம் .. | 13,81,695 | 14,52,301 | 13,61,259 | 15,60,612 | 15,16,863 | 17,00,361 | 15,22,183 | 14,79,538 | 14,82,503 |
| (தூத்துக்குடி நீங்கலாக) மொத்தம் .. | 4,98,957 | 4,92,935 | 5,18,726 | 5,35,439 | 5,81,170 | 6,50,089 | 5,28,449 | 5,25,658 | 4,02,296 |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

**செவ்வாய்க்கிழமை, 1969 மார்ச் 18.**

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்--புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## (1) வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண்கள் 369 முதல் 373 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### மேம்பாலங்கள்

* 374 **வினா.**—திரு கொளத்தூர் கோதண்டம், திரு. கே. வினாயகம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

G.S.T.—சாலையில் இரும்புலியூரில் மேம்பாலம் கட்டுகின்ற செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா**: தாம்பரத்திற்கு அருகே உள்ள இரும்புலியூரில் தென் நீளபெருஞ்சாலையின் 17/4 மைலில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுவதற்கு மத்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அணுகுசாலைகள் அமைக்கும் வேலையும், சிறு பாலங்கள் கட்டும் வேலையும மேற்கொள்ளப்பட்டுள்ளன.—

* 375 **வினா.**—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை C.S. & W.—மில் அருகில் உள்ள ரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுவதால் போக்குவரத்து பாதிக்கப்படுவதை போக்க அவ்விடத்தில் அரசு மேம்பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா**: (அ) ஆம்.

(இ) C.S. & W. ஆலை அருகே சாலை இருப்புப்பாதைக் கடவின் குறுக்காக மேம்பாலம் ஒன்று கட்டுவது குறித்த செயற்குறிப்பை நான்காவது திட்டத்தில் சேர்ப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதியாகத் தயாரிக்கப்பட்டு, இத்திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கினால், நிதி வசதிக்குட்பட்டும் வேலைகளை நிறைவேற்றுவது குறித்த முறை வைப்பினையொட்டியும் இந்த வேலை மேற்கொள்ளப்படும்.

[1969 மார்ச் 18

**திரு. கே. விநாயகம்:** இந்த இரும்புலியூர் கேட் பற்றி வேடிக்கையாகக் கூடச் சொல்வார்கள், கொலைக்காரன் கேட் என்று. அங்கு போக்குவரத்து ரொம்பவும் தடைபடுகிறது. கார்கள் பஸ்கள், லாரிகள் முதலிய எல்லா வாகனங்களும் நின்றுவிடுகின்றன. அந்த மேம்பாலம் கட்டுவதற்கு இப்போது ஆரம்பித்திருக்கிறார்கள். எவ்வளவு சீக்கிரத்தில் அந்த வேலை முடியும்? அதற்கு என்ன எஸ்டிமேட் ஆகும்? மத்திய அரசாங்கம் எவ்வளவு கொடுக்கிறது? மாநில அரசாங்கம் எவ்வளவு கொடுக்கிறது? இந்தப் பாலம் உபயோகத்திற்கு வர எத்தனை நாட்கள் ஆகும்? பொதுமக்களுக்கு சீக்கிரமாக வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கனம் உறுப்பினர் அவர்கள் எத்தனை கேள்விகள் போடுவது?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The Government of India conveyed their technical approval and financial sanction to the estimate amounting to Rs. 8,82,200. The Chief Engineer has reported that tenders for the work of forming approaches have been settled and that the formation of approaches and construction have been taken up for execution. A sum of Rs. 5,92,500 has been proposed in the Budget Estimates.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலுள்ள ரயில்வே கேட்டை அடிக்கடி மூடிவிடுகிறார்கள். அதன் காரணமாகக் கல்லூரிகளுக்குச் செல்கிறவர்களும், தொழிற்சாலைகளுக்குச் செல்கிறவர்களும், கலெக்டர் அலுவலகத்துக்குச் செல்கிறவர்களும் டவுன் பஸ்ஸிலே செல்கிற காரணத்தினால் அரைமணி நேரம் அல்லது முக்கால் மணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டுவிடுகிறது. ஆகவே மாநில அரசாங்கம் இதற்குச் சலுகை காட்டி இந்தப் பாலத்தை விரைவிலே கட்டிக்கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** குறிப்பிட்ட மேம்பாலம் தேசிய நெடுஞ்சாலையிலே இருக்கிற காரணத்தினால் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலே செய்யவேண்டியிருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு இருக்கிற செலவு ரூ. 28 லட்சம். மாநில அரசாங்கம் அவ்வளவு செலவு செய்வதற்கு வாய்ப்பு இல்லை. கனம் உறுப்பினர் அவர்கள் சொல்கிறபடி போக்குவரத்திலே தடை ஏற்படுவது உண்மைதான். எனவேதான் நம்முடைய மாநில அரசு மத்திய அரசாங்கத்திடம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா:** தமிழகத்திலே புதிதாக எந்தெந்த இடத்திலே மேம்பாலங்கள் கட்டப்படும் என்று அறிவிக்க இயலுமா? நீண்ட நாட்களாக மாயூரம் மேம்பாலத்தைக் கட்டவேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருவதால் அதை விரைவிலே நிறைவேற்றித்தர அரசு முன்வருமா?

THE HON. THIRU S. J. SADIQ PASHA:

*Under National Highway (Urban).*

1. Over-bridge at M. 300/2 of N.H. 7 of Tirupparankundram Road near Subramaniapuram in Madurai Municipality.

2. Over-bridge at M. 300/7 of N.H. 7 on Tirupparankundram Road near Meenakshi Mills in Madurai Municipality.

3. Over-bridge at M. 197/6 of N. H. 45 near Palakkarai in Tiruchirappalli Municipal limits.



1969 மார்ச் 18]

4. Over-bridge at M. 325/7 of N. H. 47 in Coimbatore Municipality.

5. Over-bridge at M. 34/3 of N. H. 45 in Chingleput Municipal limits.

6. Over-bridge at M. 98/6 of N. H. 45 in Villupuram Municipal limits.

7. Over-bridge at M. 296/8 of N.H. 7 on Thathaneri Road in Madurai Municipal limits.

*Other than National Highway*

1. Over-bridge at M. 7/8 of Harur-Morappur Road.

2. Over-bridge at M. 0/7 of Kumbakonam-Needamangalam Road.

3. Over-bridge at M. 20/7 of Kumbakonam-Sirkali Road near Mayuram Junction.

4. Over-bridge at M. 19/7 of Thanjavur-Nagapattinam Road near Needamangalam.

5. Over-bridge at M. 0/3 of Pudukottai-Manamadurai Road near Namanasamudram.

6. Over-bridge at M. 4/8 of Tiruchirappalli-Salem Road near Uthamankoil Road.

7. Over-bridge at M. 1/4 of Dindigul-Vattanam Road.

8. Over-bridge at M. 6/7 of Tiruchirappalli-Chidambaram Road.

9. Over-bridge in North Cotton Road in Tuticorin Town.

10. Construction of an underbridge in Thanjavur-Pattukkottai Road in Thanjavur Municipal limits.

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, 1963-ம் வருஷத்திலே கோவையிலுள்ள அவிநாசி ரோட்டிலே இருக்கிற மேம்பாலத்தைக் கட்டுவதற்காக மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு அதற்காக நகரசபையும் ஒரு பகுதி பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அந்த விஷயம் என்ன ஆயிற்று? காலதாமதத்திற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இதுபற்றிய விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. காலதாமதத்திற்குக் காரணம் நிதிதான்.

**திரு இரா. மாணிக்கவாசகம்:** காலதாமதத்துக்குக் காரணம் அந்தப் பகுதியில் இரு மருங்கிலும் உள்ள வீட்டுக்காரர்கள் ஆட்சேபனை செய்வது தான் என்பது உண்மையா?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

THIRU K. VINAYAKAM : May I know on what basis this preferential list has been prepared for the construction of over-bridges over railway lines? From the list I find that only bridges over railway lines falling in the southern parts of our State have been preferred and the northern parts have been neglected. If that is not so, why is the bridge in the Tiruttani area neglected?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் லிஸ்டைப் படித்தவுடனே அந்த லிஸ்டில் உள்ளவற்றிற்கெல்லாம் கேள்வி போடக் கூடாது.

THIRU K. VINAYAKAM : I only wanted to know on what basis the list has been prepared, and why a particular area has been left out.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எப்படி முடியும்? ஒரு லிஸ் டைப் படித்தவுடன், அதிலுள்ள எல்லாவற்றிற்கும் எப்படிக் கேட்க முடியும்?

**திரு தி. தீர்த்தகிரி கவுண்டர்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர் கள் தந்த லிஸ்டிலே மொரப்பூர் மேம்பாலம் கட்டுவதாகக் குறிப்பிட்டார் கள். தர்மபுரிக்கே இந்த மொரப்பூர் ரயில்வே ஸ்டேஷன் ஒன்றுதான் இருக்கிறது. எனவே அந்த மேம்பாலம் கட்டும் வேலை எப்போது துவக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தனியாகக் கேள்வி கேட் டால் பதில் சொல்லலாம்.

**திரு. ஜ. துரைசாமி:** அமைச்சர் அவர்கள் எந்தெந்த இடங்களிலே மேம்பாலம் கட்டப்படும் என்ற விவரம் கொடுத்தார்கள். அதிலே நான் காவது இடமாகத்தான் கோயம்பத்தூரை சேர்த்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். கோயம்பத்தூர் மற்ற எல்லா இடங்களைக்காட்டிலும் போக்கு வரத்தாலும், மற்ற காரணங்களாலும் முக்கியமாக இருப்பதால் அதை மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி ஒன்று இரண்டு ஆண்டிற்குள் கட்டி முடிக்க முயற்சி எடுத்துக்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு எஸ். ஜே சாதிக் பாட்சா:** கனம் உறுப்பினர் அவர் களுடைய கேள்வி அந்த முயற்சிக்குப் பக்க பலமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

**திரு. ம. சொ. கோவிந்தராசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை யில் எடுத்துக்கொள்ளப்பட்ட மேம்பாலங்கள் எத்தனை? வேலைகள் எப் போது ஆரம்பிக்கப்படும்? எப்போது முடிக்கப்படும் என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நான் படித்ததிலே எத் தனை என்று சொல்லியிருக்கிறேன். எப்போது ஆரம்பிக்கப்படும் என்ற விவரம் குறிப்பில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல லாம்.

THIRU K. VINAYAKAM : Sir, is there any proposal for the construction of an over-bridge in the Madras-Bombay line at Tiruttani Railway Station?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** என்னிடத்தில் இருக்கிற குறிப்பில் அது இல்லை.





## புதிய இருப்புப் பாதைகள்

* 376 வினா.—**திரு. பெ. மலேச்சாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

மதுரை—காரைக்குடிக்கு மேலூர் வழியாகவும் திண்டுக்கல்—காரைக் குடிக்கு நத்தம் வழியாகவும் புதிய இரயில் பாதை அமைக்கவேண்டு மென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தியுள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா:** இந்திய அரசுக்கு அவ்வித பரிந்துரை ஏதும் செய்யப்படவில்லை.

**திரு. பெ. மலேச்சாமி:** தலைவர் அவர்களே, மதுரையிலிருந்து காரைக் குடிக்கு இரயில் பாதை அமைப்பதுபற்றி வெள்ளையர் காலத்திலேயே அதற்கான சர்வே எல்லாம் நடத்தப்பட்டு விட்டது. எனவே சர்வே நடத்திய குறிப்புகளை ஆராய்ந்து, மீண்டும் மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்துவதற்கு குறிப்பு ஏதாவது வைத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தற்போது அதுபோன்ற குறிப்பு இல்லை. கனம் உறுப்பினர் அந்தக் கோரிக்கையை அரசாங்கத் திற்கு அனுப்பினால் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கலாம்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு எந்த எந்த இரயில் பாதைகளை தமிழ் நாட்டில் போடவேண்டும் என்று நமது அரசு சிபாரிசு செய்திருக்கிறது? அதில் நெல்லை—குமரி இரயில் பாதை சேர்க்கப்பட்டிருக்கிறதா? மேட்டுப்பாளையம் உதகமண்டலம் இரயில் பாதையை எடுத்துவிடுவதாக மத்திய அரசினர் சொன்னார்களே, அதைப் பற்றிய நிலைமை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார் களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கனம் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு நீண்ட பட்டியல் கொடுக்க வேண்டியுள்ளது. என்றாலும், அதைப்பற்றி நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

The following is the list of new railway lines recommended to the Government of India for being taken up on a priority basis during the successive Plan periods :—

(i) Theni-Gudalur.
(ii) Neiveli-Vridhachalam-Salem.
(iii) Salem-Bangalore.
(iv) Chinnasalem-Chingleput.
(v) Tirunelveli-Cape Comorin.
(vi) Salem-Tiruchirappalli.
(vii) Manamadurai-Tutitcorin.
(viii) Thanjavur-Pattukottai.
(ix) Kancheepuram-Vellore.
(x) Satyamangalam-Chamrajanagar.
(xi) Manamadurai-Virudhunagar.
(xii) Ariyalur-Salem.
(xiii) Karur-Dindigul.

[1969 மார்ச் 18

மேட்டுப்பாளையம்-உதகமண்டலம் இரயில் பாதையைப் பொறுத்தவரையில், அது லாபகரமாக இல்லாததைக் காரணமாகக் காட்டி, அதை எடுத்துவிடவேண்டும் என்று மத்திய அரசு வற்புறுத்தியது. ஆனால், நம்முடைய அரசு, மேற்படி இரயில் பாதையை எடுக்கக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்து, அந்த பாதை தொடர்ந்து இருக்கவேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது.

**திரு. ந. தீர்த்தகிரி**: தலைவர் அவர்களே, ஹரூரிலிருந்து சேலம் செல்லும் வழியில் புதுப்பட்டி என்னும் இடத்தில் உள்ள ஒரு பாலத்தில் பத்துபேர் இறந்துவிட்டார்கள், 32 பேர் காயமடைந்தார்கள். இப்படி ஐந்தாறு தடவை அங்கே விபத்துகள் நிகழ்ந்திருக்கின்றன. இது அரசுக்குத் தெரியுமா? அந்தப் பாலத்தைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா**: விபத்து ஏற்பட்டிருக்கலாம். அதற்கான காரணம் அரசாங்கத்திற்குத் தெரியாது.

**திரு. ஆ. கு. சுப்பையா**: ஐயா, நமது மாநிலத்தில் தற்சமயம் இருக்கும் இரயில் பாதைகள் சிலவற்றை எடுப்பதாக உத்தேசம் இருந்துகொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. எந்த எந்த பாதைகளை எடுக்கக்கூடாது என்று மத்திய அரசுக்கு நமது அரசு சிபார்சு செய்துள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: மேட்டுப்பாளையம்-உதகை, மாயவரம்-தரங்கம்பாடி, பேரளம்-காரைக்கால், நீடாமங்கலம்-மன்னார்குடி ஆகிய பாதைகளை எடுத்து விடவேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. மேற்படி பாதைகளை எடுப்பது சரியல்ல என்று இந்த அரசு வற்புறுத்தி வருகிறது.

**திரு. இல. பலராமன்**: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில், வேலூர்-காஞ்சீபுரம் இரயில் பாதை அமைக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்திருப்பதாகச் சொன்னார்கள். காஞ்சீபுரம் மிகப் பிரசித்தி பெற்ற நகரமாக இருப்பதாலும், காஞ்சீபுரத்திலிருந்து வேலூர் செல்லும் பாதை மிகப் பின் தங்கிய பிரதேசம் வழியாகச் செல்லவேண்டியிருப்பதாலும், அதற்கு தமிழ்நாடு அரசு தனிச் சலுகை அளித்து, அதை உடனடியாக எடுத்துக் கொள்ளுவது பற்றி இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

(விடை இல்லை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சற்று முன்புதான் திரு. விநாயகம் அவர்களுக்குச் சொன்னேன், அமைச்சர் அவர்கள் பட்டியல் கொடுத்தால் அதில் உள்ள ஒவ்வொன்றைப் பற்றியும் துணைக் கேள்விகள் கேட்டு, அவற்றிற்கு அமைச்சர் விளக்கம் அளிக்கவேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? துணைக் கேள்வி, மூலக் கேள்விக்கு மிகத் தொலைவாகப் போகக்கூடாது.

THIRU B. VENKATASWAMY: Sir, from Salem to Bangalore it would take about six hours' time to do journey in the railway. So, will this Government make a strong representation to the Central Government to make it a broadgauge line?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: There is no such proposal at present.



1969 மார்ச் 18]

**திரு. எஸ். ஜே. ராமசாமி**: தலைவர் அவர்களே, பலப்பல இடங்களுக்கு இரயில் பாதைகள் போடவேண்டும் என்று சட்டசபையில் உறுப்பினர்கள் கேள்விகள் கேட்பதும், அவற்றைப்பற்றி, மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்துள்ளதாக அமைச்சர்கள் பதில் அளிப்பதும் பல நாட்களாக நடந்து வருகிறது. அரக்கோணம்-சென்னை இரயில் பாதையை மின்சாரப் பாதையாக்கவேண்டும் என்று பல காலமாகப் பேசப்பட்டு வருகிறது. ஆண்டுக்காண்டு எதிர்ப்பார்த்து, தள்ளிப் போடப்படுகிறது. அதை இந்த ஆண்டிலாவது எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று இரயில்வே போர்டுக்கு இந்த அரசு சிபார்சு செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: கனம் உறுப்பினர் அவர்கள் கோருகின்ற அரக்கோணம்-சென்னை இரயில் பாதையை மின்சார இரயில் பாதையாக அமைக்க வேண்டும் என்று இந்த அரசு வற்புறுத்தி வருகிறது. கனம் உறுப்பினருக்கே தெரியும், மத்திய அரசிடம் வற்புறுத்தத்தான் செய்யலாமே தவிர, வேறு ஒன்றும் செய்ய முடியாது.

**திரு. சு. துரைசாமி**: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, எந்த எந்த இரயில் பாதைகளை அமைக்க வேண்டும் என்று மாநில அரசு சிபார்சு செய்திருக்கிறது என்பது பற்றிச் சொன்னபோது சாமராஜ நகர் இரயில் பாதை சம்பந்தமாகவும் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் ஒரு பட்டியலைப் படித்தார்கள். எந்த எந்த இடங்களுக்கு இரயில் பாதைகள் போடவேண்டும் என்று மாநில அரசு சிபார்சு செய்துகொண்டே இருக்கிறது என்றாலும், அதிலே எந்தவிதமான முடிவும் ஏற்படாமல் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இதை வற்புறுத்தும் முறையில், நம்முடைய சட்டப் பேரவையின் மூலமாக தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசை வற்புறுத்த இந்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்வது இந்தச் சபையின் அனுமதியைப் பெற்றுத்தான். கனம் உறுப்பினர் அவர்கள் கருதத்தக்க அளவுக்கு நிலைமை ஏற்படவில்லை என்று நான் கருதுகிறேன்.

**திரு. டி. மார்டின்**: ஸ்பீக்கர், சார். புதிய இரயில் பாதைகளை மத்திய அரசிடமிருந்து கேட்பதைவிட முன்பு பாரி அண்டு கம்பெனியார் திருச்செந்தூர் தாலூகாவில் திசையன்விளைக்கு சிறு இரயில் வண்டிகள் விட்டுவந்தார்கள். அது போன்ற சிறு இரயில் வண்டிகள் விடுவதற்கு இந்த அரசு முற்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: அதுபற்றிய குறிப்பு என்னிடம் இல்லை. இது நல்ல கருத்தாக இருக்குமானால் அரசாங்கம் பரிசீலிக்கலாம்.

### *Assistant Engineers in Highways Department*

* 377 *Q.*—THIRU S. RAMACHANDRAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(*a*) whether the services of the Assistant Engineers in the Highways Department are yet to be regularised from the year 1963;

(*b*) if so, the action taken by the Government for expediting this; and

(*c*) the number of such persons yet to be regularised so far?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:**

(அ) ஆம்.

(இ) தமிழ்நாடு நெடுஞ்சாலைப் பொறியாளர் பணியில், உதவிப் பொறியாளர் வகையில் 1963 முதல் 1966 வரை ஆண்டு வாரியாகத் தாற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| 1963 | 5 |
| 1964 | 14 |
| 1965 | 22 |
| 1966 | 12 |

இவற்றில் 24 தாற்காலிக நியமனங்கள், பொதுப்பணித்துறையில் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் தேதியிட்ட 551-ம் எண். அரசாங்க ஆணையில் பிறப்பித்த கட்டளைகளின்படி முறைப்படுத்தப் பட்டன. ஏனையோரின் பணியினை முறைப்படுத்துவது பற்றி, தமிழ்நாடு அரசாங்க அலுவலர் தேர்வுக் கழகத்துடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

(உ) இன்னும் முறைப்படுத்தப்பட வேண்டிய தாற்காலிக நியமனங்களின் எண்ணிக்கை 29 ஆகும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்த நெடுஞ்சாலைத் துறை உதவிப் பொறியாளர்களுக்கு, வருடாந்திரச் சம்பள உயர்வு அதன் அடிப்படையில் கிடைக்கவேண்டிய பஞ்சப் படி உயர்வு ஆகியவை எல்லாம் கிடைக்கவில்லை. ஐந்தாறு ஆண்டுகளாக இப்படிக் கால தாமதமாகி வருகிறது ஆகவே, உடனடியாக அவர்களுடைய பதவிகளை ரெகுலரைஸ் செய்து, ஒழுங்குமுறைக்குக் கொண்டுவந்து அவர்களுக்கு ஊக்கத்தை அளிப்பதற்காக அரசு தனி நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கனம் உறுப்பினர் சொல்வதுபோல் விசேஷ நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. விநாயகம்:** சார், இந்தத் துறையிலே ஒரு சிலரைத் தாற்காலிகமாக வைத்துக்கொண்டு, அவர்களுக்குப் பல ஆண்டுகளாக இப்படி ஊதிய உயர்வு அல்லாமல் இருப்பதற்குக் காரணம், இவை சாங்ஷண்டு போஸ்டுகளாக இல்லாமலிருப்பதுதான், அவை சாங்ஷண்டு போஸ்ட்களாக இருந்தால் இந்தத் தொல்லை இல்லை. அந்தப் போஸ்ட்களை சாங்ஷன் செய்யாதது அரசாங்கத்தின் தவறு. ஆகையால் போஸ்ட்களை சாங்ஷன் செய்தபிறகுதான் அவர்களை உத்தியோகத்தில் நியமிக்க அரசாங்கம் வழி வகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், இது 1963 முதல் 1966 வரை தாற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்களின நிலைமையாகும். இனிமேல் சாங்ஷன் செய்யப்பட்ட இடத்தில்தான் நியமனம் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கனம் உறுப்பினர் திரு விநாயகம் அவர்கள், "போஸ்ட்களை சாங்ஷன் செய்யாதது அரசாங்கத்தின் தவறு" என்று குறிப்பிட்டார்கள். இது குற்றச்சாட்டு ஆகும். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டே இருக்கக்கூடாது.

**திரு. கே. விநாயகம்:** கேள்வி நேரத்தில் அரசாங்கத்திடமிருந்து விளக்கத்தைத்தான் கேட்கிறேன்.





**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** அம்மாதிரி தற்காலிகமாக நியமிக்கப்படுகிறவர்கள் எத்தனை ஆண்டுகளில் ரெகுலரைஸ் செய்யப்படுகிறார்கள்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதற்கான விவரம் என்னிடம் தற்போது இல்லை.

**திரு. சி. கோவிந்தராசன்:** தலைவர் அவர்களே, சாங்ஷண்டு போஸ்ட், சாங்ஷன் ஆகாத போஸ்ட் என்று சொல்லப்படுகிறது. 1963-ம் ஆண்டிலிருந்து இப்படி தற்காலிகமாக அந்த உதவிப் பொறியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படியானால், சாங்ஷண்டு போஸ்டு என்று சொல்வது எந்த அடிப்படையில்? சாங்ஷண்டு போஸ்ட் ஆக இருக்கும்போது, அதை நிரந்தரமாக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதுபற்றி விவரம் என்னிடம் தற்போது இல்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இதை ரெகுலரைஸ் செய்யும்போது இவர்களுடைய ஸீனியாரிடி அடிப்படை பார்க்கப்படுமா? வேறு முறைகள் கையாளப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஸீனியாரிடி, தகுதி ஆகியவற்றையெல்லாம் கவனித்து பப்ளிக் சர்விஸ் கமிஷன் செலக்ஷன் செய்த பிறகு நிரந்தரமாக்கப்படும்.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, தொழில் நுணுக்கத் துறையைச் சேர்ந்துள்ள இப்படிப்பட்ட பகுதிகளில் அதனுடைய தலைமைச் செயலாளர் என்பவர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருப்பதால் நடைமுறையில் சில முடிவுகளுக்கு வரும்போது சிக்கல் ஏற்படுகிறது. விவசாயம், பொதுப்பணித் துறை போன்ற தொழில் நுணுக்கம் மிகுந்த துறைகளில் அத்துறை நிபுணர்கள் தலைமைப் பொறுப்பில் இருக்கவேண்டும் என்ற ஆலோசனை அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இக் கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** சார், கல்லூரியில் படித்துவிட்டு, இளைஞர்கள் நிறைய வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த வகையில் இந்த அரசாங்கம் வேலை கொடுக்க காரண்டி கொடுக்க வேண்டும் என்பதற்கு ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி நெடுஞ்சாலைத் துறையைப் பற்றியது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** எந்த வகைகளில் கொடுக்கலாம் என்று கனம் உறுப்பினர் சொன்னால், அதைப் பற்றி யோசிக்கலாம்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** கடந்த ஆட்சி காலத்திலேயே அதிக நாளாக தாமதப்படுத்தப் பட்டுவிட்டது, இப்பொழுது ரெகுலரைஸ் பண்ணிய பிறகு அர்ரியர்ஸ் ஆஃப் பே எந்த ஆண்டிலிருந்து தருவதாக சர்க்காருக்கு உத்தேசம் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. ந. இராமச்சந்திரன்: எம். பி. எஸ். ஸி-யில் எத்தனை விழுக்காடு ஏற்பட்டது? சர்வீஸுக்கு ரெக்ரூட் செய்யப்பட்டதில் எவ்வளவு விழுக்காடு, எவ்வளவு தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தயவுசெய்து தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையில் இருக்கும் மைனர் இர்ரிகேஷன் ஓவர்சியர்கள் ஐந்து ஆண்டுகள் ஆகியும் ரெகுலரைஸ் செய்யப்படாததால், சம்பள உயர்வு, சர்க்கார் சலுகைகள் கிடைக்காமல் இருப்பதால், அவர்களுடைய சர்வீஸை ரெகுலரைஸ் செய்ய முடியுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. ஏ. எம். ராஜா: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்த பதிலிலே 63-லிருந்து இன்று வரை நிறைய அஸிஸ்டெண்ட் எஞ்ஜினியர் ரெகுலரைஸ் செய்யப்படாமல் இருக்கிறார்கள் என்றார்கள். ஆகவே, இப்பொழுது ஏ. ஈ-கள் டைரக்ட் ரெக்ரூட் செய்வதை நிறுத்தி வைத்துவிட்டு, கீழேயிருந்து பிரமோஷன் பேரில் வருகிறவர்களுக்கு வாய்ப்பு அளிக்க டைரக்ட் ரெக்ரூட்மெண்டை நிறுத்திவைக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே அதைப் பற்றி விதி முறைகள் இருக்கின்றன. அவற்றை அனுசரித்து நாமினேஷன்கள் செய்யப்படுகின்றன. கனம் உறுப்பினருடைய கருத்தையும் பரிசீலிக்கலாம்.



*Purchase of tar from Neyveli Project*

* 379 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Highways Department has given up purchasing tar produced at Neyveli Projects?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The Neyveli Lignite Corporation which was approached by this State Government for installing a commercial road tar manufacturing plant by the Corporation at Neyveli have stated that they are not interested in starting such a plant, as, in their view, the final product cost will not be competitive with the commercially available bitumen. Hence the question of purchasing tar from Neyveli Lignite Corporation does not arise.

THIRU K. VINAYAKAM : Where does the Government now purchase the tar required for Government purposes and at what competitive rates they are selling the tar to the Government?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதைப் பற்றிக் குறிப்பு என்னிடத்தில் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த நெய்வேலித் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னால், நம் பெரு மதிப்பிற்குரிய காமராஜ நாடார் அவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று இந்த திட்டம் ஆரம்பித்தால், எங்குமே மண் ரோடே இருக்காது, மெடல் ரோடே இருக்காது, எல்லா இடத்திலும் டார் ரோடுதான் இருக்கும் என்று அந்த அளவிற்குப் பேசினார்களே, அந்த அளவில் உபயோகிக்க ரொம்பக் குறைந்த அளவில் நாமே உற்பத்தி செய்யக் கூடிய நிலை ஏற்படும் என்று சொன்னார்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: அதற்கு வருகிறேன், அப்படிச் சொன்னார்களே, இப்பொழுது குறைந்த விலையில் ஏன் கிடைக்கவில்லை என்ன சமாசாரம், என்ன காரணம் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அவர் அப்பொழுது சொன்னதற்கு நான் பதில் சொல்ல முடியாது.

திரு. இல. பலராமன்: சார், நெய்வேலி கார்ப்பரேஷன் மூலமாக இங்கே உபபொருள் என்ற வகையில் டார் உற்பத்திசெய்ய தனிப்பட்ட முறையில் தமிழகத்தில் ஒரு ஸ்தாபனத்தை அமைத்து உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது போன்ற செயற் குறிப்பு தற்போது இல்லை.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய மத்திய சர்க்காரின் பொதுத்துறை நிறுவனத்தில் நஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, பொதுத்துறை நிறுவனங்களுக்கு மாநிலப் பிரதிநிதிகள் கொண்ட ஆலோசனைக் குழுவை அமைக்க வேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நெய்வேலியில் மட்டுமல்ல, மத்திய சர்க்காரின் பொதுத் துறை நிறுவனங்களிலெல்லாம் நஷ்டமாகத்தான் இருக்கிறது. இன்றைக்கு அது ஒரு பெரிய பொருளாதாரப்

பிரச்சினையாக இருக்கிறது. மாண்புமிகு மறைந்த முதல் அமைச்சர், அண்ணா அவர்கள கடந்த இரண்டு வருஷமாக டெல்லி அரசிடத்தில் வருஷந்தோறும், வரி விதிக்கும்போது, அப்படி வரி விதிப்பதற்குப் பதிலாக, பொதுத் துறைகளில் உள்ள நிறுவனங்களில் லாபம் வந்தால் வரி விதிக்க வேண்டிய அவசியமே இருக்காது, அந்த முறையில் மத்திய சர்க்கார் தெளிவாகக் கவனம் செலுத்தினல், அந்தத் துறையில் சரியாக அமைக்க பயன்படும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. டி. மார்டின்: ஸ்பீக்கர் சார், நெய்வேலியில் எந்த வருஷத்தில் தார் உற்பத்தி செய்தார்கள்? அதனுடைய காஸ்ட் என்ன, அதை யார் நிர்ணயம் செயதார்கள், எந்த வகையில் வித்தியாசம் வருகிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதைப் பற்றி ஒரு தனிக் கேள்வி எழுப்பினால், நெய்வேலி கார்ப்பொரேஷனோடு தொடர்பு கொண்டு, எல்லா விவரங்களையும் இந்தச் சபையில் தெரிவிக்கிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி கவுண்டர்: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் பொதுத் துறையில் ஏராளமான பணத்தைப் போடுவதால், ஒவ்வொரு தடவையும் வரி போட வேண்டியதாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி, தார் சம்பந்தப் பட்டது. அது சம்பந்தமாகக் கேள்வி கேளுங்கள்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி கவுண்டர்: அமைச்சர் சொன்னதற்கு விளக்கம் கேடகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் சொன்னதற்கெல்லாம் விளக்கம் கேட்க முடியாது. அடுத்து, திரு. கோதண்டராமய்யா.

THIRU K. S. KOTHANDARAMIAH: What is the total quantity of tar required for our State for each year?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: My Friend may put a separate question.

திரு. கே. விநாயகம்: சார், இருக்கிற கேள்வி தார் என்ன விலைக்கு நமக்குக் கொடுக்கிறார்கள் என்பது பற்றி. அவர்கள் விளக்கம் தந்தார்கள். அதிலே மத்திய சர்க்காரைப் பற்றியெல்லாம் கருத்து சொல்வதற்கு இந்த மேடையைப் பயன்படுத்திக் கொள்வதை விட்டு விடவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கே. விநாயகம்: அதுதான் கேட்கிறேன். தார் வேண்டுமென்று நம்முடைய சர்க்கார் கேட்டதா? அவர்கள் உற்பத்திசெய்து விலை அதிகம் என்று சொன்னார்களா? அல்லது உற்பத்தியே செய்யாமல் சொன்னார்களா? இந்த கேள்விக்கு என்ன பதில் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மறுபடியும் என்னுடைய பதிலைப் படித்து விடுகிறேன்.

The Neyveli Lignite Corporation which was approached by this State Government for installing a commercial road tar manufacturing plant by the Corporation at Neyveli have stated that they are not interested in starting such a plant as, in their view, the final product cost will not be competitive with the commercially available bitumen. Hence the question of purchasing tar from Neyveli Lignite Corporation does not arise.



திரு. ஆ. கு. சுப்பையா: ஐயா, தனியார் துறையின்மீது வைத் துள்ள காதலின் காரணமாகத்தான், இந்த நிர்வாகிகள் சரியான முறையில் நிர்வாகம் செய்யாமல இம்மாதிரியான நஷ்டங்கள் ஏற்படு இன்றன. ஆகவே, நிர்வாகத் துறையை மாற்றி அமைத்து, திறமையோடு நடத்த மத்திய சர்க்காரோடு யோசனை செய்ய நம் அரசு முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேறு கேள்வி.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது மத்திய சர்க்காரின் பொறுப்பில் இருக்கிறது. இந்த யோசனையைச் சொல்ல எங்களுக்கு ஆட்சேபனையில்லை.

*Electricity grid station at Hosur*

* 380 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any proposal to construct an electricity grid station at Hosur in Dharmapuri district?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: இல்லை.

THIRU B. VENKATASWAMY: Sir, from the answer given by the Minister, I understand that there is no proposal to construct an electricity grid station at Hosur. But one year back I read in "The Hindu" that there was a proposal to construct a grid station at Hosur. Has this Government proposed any alternative system to store the electricity that we are getting from the Mysore State?

THE HON. THIRU O. P. RAMAN: Already there is a station working with a capacity of 32/11 Kw. Therefore at present there is no proposal either to establish a new sub-station or to upgrade the previous one.

THIRU K. S. KOTHANDARAMIAH: At present there is a power station at Karimangalam in Dharmapuri district. Dharmapuri district is a very backward area and thousands of wells have to be supplied with electric pumpsets. Because the power available at Karimangalam is not sufficient and as there is failure of power frequently, construction of a grid station at Hosur will be advantageous. The power also enters from Mysore State to Madras State through Hosur. Considering this, will the Government consider the proposal?

THE HON. THIRU O. P. RAMAN: If it is a reasonable demand, let the matter be intimated to the Government and it will be considered.

[1969 மார்ச் 18

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இல்லை, ஐயா.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை ஃபர்ஸ்ட் லேன் பீச்சிலுள்ள பர்மா அகதிகள் வைத்து இருக்கும் கடைகளை, சுங்க இலாகா அதிகாரிகள் சென்னை போலீஸ் உதவியோடுதான் சோதிக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, எந்த நேரத்திலேயும் சென்னை போலீஸ் உதவியை சுங்க இலாகா அதிகாரிகள் நாடவில்லை என்பதாக அடிஷனல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் நமக்கு விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். சுங்க இலாகா அதிகாரிகளுக்கு என்று சில அதிகாரம் இருக்கிறது. நம்முடைய உதவியை அவர்கள் நாடியதில்லை.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள பர்மா அகதிகள் வைத்திருக்கும் கடைகள் டெம்பரரி ஷெட்டாக இருக்கிற காரணத்தால் அவர்களுடைய பொருள்கள் களவு செய்யப் படுவதாகவும் அந்த இடத்தில் ஏராளமான திருட்டுக்கள் நடைபெறுவதாகவும் சொல்கிறார்களே, அவர்களுக்கு பர்மனென்ட் ஷெட் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே பர்மா அகதிகளுக்கு நிரந்தரமாகக் கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பது வேறு பிரச்சினை, அந்த இடத்திலே என்ன செய்வது என்பது பிரச்சினை. அந்த இடத்தில் கடைகள் இருப்பதை யாருமே விரும்பவில்லை. பர்மா அகதிகளிடத்தில் அரசாங்கத்தினுடைய பரிவு உணர்ச்சி இருக்கிறது என்பது வேறு, அவர்கள் நெடுஞ்சாலையை ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற பிரச்சினை வேறு. அவர்களுக்கு வேண்டியவைகளைச் செய்து கொடுக்கத் தனியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே பர்மா அகதிகளின் கடைகளிலே கஸ்டம்ஸ் அதிகாரிகள் போலீசை வைத்துக்கொண்டு அவர்களுடைய சாமான்களைப் பறிமுதல் செய்துகொண்டு போனார்கள் என்ற புகார் அமைச்சரவைக்கு வந்ததா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, 1969-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 14-ம் தேதியன்று 11 மணிக்கு கஸ்டம்ஸ் அதிகாரிகள் ஏறக்குறைய 500 கடைகளில் புகுந்து பல பொருள்களைப் பறிமுதல் செய்ததாக உள்துறை அமைச்சகத்திற்கு தந்தி ஒன்று வந்தது. அந்தத் தந்தியில், "சுங்க அதிகாரிகள் பல பொருள் களைப் பறிமுதல் செய்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அந்தப் பொருள்களைத் திரும்ப வாங்கித்தர வேண்டும், நாங்கள் மீண்டும் தொழில் செய்யவேண்டும்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. சுங்கத் துறையைப் பொறுத்தவரையில் அவர்களுக்கென்று தனியாகச் செயல் படும் சுதந்திரம் உண்டு. அவர்களுக்கென்று சில அதிகாரங்கள் தரப் பட்டிருக்கின்றன. அந்தத் துறையினர் எடுக்கும் நடவடிக்கைகளில் நாம் தலையிடுவதற்கில்லை. இந்தத் தந்தியை உள்துறை அதிகாரிகள் சுங்கத் துறை அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து, அதன்மீது உரிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** பேரவைத் தலைவர் அவர்களே, பர்மாவிலிருந்து அகதிகளாக வந்து அரசாங்க உதவியுடன் இவர்கள் வியாபாரம் செய்து வருகிறார்கள். அந்த இடத்தில் கட்டிடம் கட்டிக் கொடுத்து, நிரந்தரமாக வியாபாரம் செய்துகொள்ள வாய்ப்பு இல்லை யென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர்கள் நிரந்தரமாக வியாபாரம் செய்ய ஓர் இடத்தை ஏற்படுத்திக்கொடுக்க அரசு முன்வருமா?



1969 மார்ச் 18]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, வாய்ப்பு இல்லையென்று சொல்லவில்லை. அதைவிட தகுதியான இடங்கள், வாய்ப்பான இடங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த இடங்களுக்கு அவர்கள் செல்ல மறுக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் கோட்டை வரையில் தங்களுடைய வியாபாரத்தை விஸ்தரித்துக்கொண்டு வரும்படியான நிலைமையாக, அவர்களுடைய பிரச்சினை மாறிக்கொண்டிருக்கிறது. பர்மா அகதிகளுடைய பிரச்சினை மட்டுமல்ல, அவர்கள் உரிய காரியங்களில் ஈடுபட்டு அவர்களுடைய நல்வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற வழியில் தனி இலாகா ஒன்று செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

THIRU K. VINAYAKAM : Are the Government aware of the fact that the Customs Department has no jurisdiction over the Burma market which is situated outside the limits of the Customs Department. So, Sir, the raid is illegal. In that case, will this Government desist from helping them with our Police force ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பெரிய வழக்கறிஞர். சட்ட விரோதமானது என்பதல்ல. இதைப்பற்றி வழக்கு மன்றத்தில் வாதாடிக் கொள்ளலாம். கஸ்டம்ஸ் அதிகாரிகள் எங்கு வேண்டுமானாலும் போய் சோதனையிடலாம். கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்கிற மாதிரி இது சட்ட விரோதமானதல்ல. கப்பலிலிருந்து வரும் சாமான்கள் கள்ளத்தனமாக இந்தக் கடைகளுக்கு வந்து விடுகின்றன என்ற காரணத்திற்காக அவர்கள் சோதனையிடுகிறார்கள். கப்பலிலே வரும்படியான "ஸ்மக்லிங் கூட்ஸ்" எல்லாம் இந்த பஜாரில் இருப்பதாக அவர்களுக்குத் தெரிந்து, வந்து சோதனையிடுகிறார்கள். அவர்களுக்கென்று தனி அதிகார வரம்பு இருக்கிறது. இது சட்ட விரோதம் அல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. எம். எஸ். மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, பர்மாவிலிருந்து வந்த அகதிகள் இங்கு கடை வைத்து வியாபாரம் செய்ததற்குப் பிறகு இங்குள்ள பெரிய ஷாப் கடைகளில் வியாபாரம் குறைந்துவிட்ட காரணத்தால் அவர்கள் மத்திய சர்க்காருக்குப் புகார் செய்து, அதன் பிறகு சுங்க அதிகாரிகள் சோதனையிட்டு கள்ளச் சாமான்களை எடுத்துச் சென்றதாக நம்முடைய அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பர்மா அகதிகளின்மேல் இருக்கிற பரிவு உணர்ச்சியைப் பாராட்டுகிறேன். அரசாங்கத்திற்கும் அவர்களினமேல் பரிவு உணர்ச்சி இருக்கிறது. அங்குள்ள கடைகளில் வெளிநாட்டுச் சாமான்கள் இருக்கின்றன. இந்தச் சாமான்கள் கள்ளத்தனமாகக் கப்பலில் வந்தவை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். கடைக்காரர்களைக் கேட்டால், வெளிநாட்டுப் பிரயாணிகள் சுங்க வரிகளைக் கட்டிவிட்ட பிறகு எங்களுக்கு விற்கப்பட்ட பொருள்கள் என்று சொல்கிறார்கள். சிங்கப்பூர் பிரயாணிகளிடத்தில் நாங்கள் வாங்கிய பொருள்கள் என்று கடைக்காரர்கள் கூறுகிறார்கள். அப்படி கடைக்காரர்கள் வாங்கியதற்கான தஸ்தாவேஜுகள் எதுவும் வைத்திருக்கவில்லை. அந்தப் பொருள்கள் எல்லாம் திருட்டுத்தனமாகத்தான் வந்தவை என்று அதிகாரிகள் புகார் சொல்லுகிறார்கள். ஆகவே, அதிகாரிகள் நடந்துகொண்டது அத்துமீறிய சம்பவம் என்று சொல்லமுடியவில்லை. அவர்களுக்குள்ள அதிகாரத்தின் மீது அவர்கள் சோதனையிடுகிறார்கள். அதிகாரிகள் நடந்துகொண்டது நியாயம் இல்லையென்ற எந்தவிதமான தகவலும் கொடுக்கவில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பர்மாவிலே நல்லபடியாக வாழ்ந்து, இங்கே வந்து அவதிப்படக்கூடிய பர்மா அகதிகளுக்குப் பரிவு காட்டுகிறோம்; சர்க்கார் பரிவு காட்டுகிறது

என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சாமான்களை சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்வது மாத்திரமல்ல, ஸேல்ஸ்-டாக்ஸ் டிபார்ட்மெண்டும் அவர்களுக்குத் தொல்லை கொடுப்பதாகச் சொல்லப் படுகிறதே, புதிய கடைகளை அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கும் வரையி லாவது, அந்த அதிகாரிகளைக் கொஞ்சம் நெளிவு சுளுவாக இருக்கும்படி சொல்லமுடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, ஸேல்ஸ்-டாக்ஸ் அதிகாரிகள் கொஞ்சம் நெளிவு சுளுவாக இருக்கிற காரணத்தால்தான் அரசாங்கம் நடத்துவதற்கு வேண்டிய நிதி ஆதாரங் களைத் தேடிக்கொடுத்து வருகிறார்கள். உறுப்பினர் அவர்கள் நினைக்கிற மாதிரி கெடுபிடி செய்யக்கூடாது என்கிற நேரத்தில் அரசாங்கத்திற்கு நியாயமாகச் சேர வேண்டியது போய்விடக்கூடாது என்பதற்காக அதி காரிகள் செயல்படுகிறார்கள். அதிகாரிகளுக்கும் அரசாங்கத்தின்பால் அக்கறை இருக்கிறது. அரசாங்கத்திற்குச் சேரவேண்டியதைச் சரியாக வசூலிக்கிறார்கள். ஆனால் சிலர் அரசாங்கத்திற்குச் சேரவேண்டியதைக் கொடுக்காமல், ஏமாற்றல் செய்வதையும் அரசாங்கம் அனுமதிக்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தாசில்தார்களுக்கு ஜீப் கார் வழங்கல்

* 370 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு தாலுகா தாசில்தார்களுக்கும் ஜீப் கார் வழங்குவ தென்று சென்னையில் நடைபெற்ற கலெக்டர்கள் மாநாட்டில் செய்யப் பட்ட முடிவு அமல் நடத்தப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆம்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் களுக்குக் கொடுத்திருக்கிற ஜீப்புகள் அடிக்கடி கலெக்டர் அலுவலகத் திற்கும், தாசில்தார் அலுவலகத்திற்கும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? மேலும் அரசாங்க ஜீப்புகள் அடிக்கடி ரிப்பேர் ஆகிப்போகிறது. அவற்றை அந்த அந்த மாவட்ட அளவிலேயே ரிப்பேர் செய்து பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பட்டுக்கோட்டைக்கு வழி என்ன என்பது கேள்வி. கொட்டைப்பாக்கு என்ன விலை என்று இராம மூர்த்தி கேட்கிறார்.

**திரு. ஜெ. பெள்ளி கவுடர் :** தாலுக்கா அலுவலகங்களில்..........

**திரு. க. இராமமூர்த்தி** எழுந்தார்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன், கேள்வி நேரத்தில் இல்லை.

THIRU K. RAMAMOORTHY : Sir, it is not personal explanation. The Hon. Minister has made an insinuation.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, it is not an insinuation.

THIRU K. RAMAMOORTHY : Sir, If the Hon'ble Minister has no answer, let him say he has no answer. But, he has no business to insinuate me.





**திரு. ஜெ. பெள்ளி கவுடர் :** தாலுக்கா அலுவலகங்களில் மிக முக்கியமான வேலைகள் அதிகமாகிவிட்டதனால், பலவிடங்களைச் சென்று பார்வையிட தாசில்தார்களுக்கு ஜீப் வழங்கும் காரியம் எத்தனை மாதங் களில் அமுலுக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்தத் திட்டம் பழைய அரசாங்கத்தாரால் ஏற்கப்பட்டது. நமது மாநிலத்தில் மொத்தம் 113 தாசில்தார்கள் இருக்கிறார்கள். வருடத்திற்கு ஐந்து லட்சம் என்று இது வரை ஒதுக்கி ஜீப் வாங்கப்பட்டு 19 பேர்களுக்குத்தான் கொடுக்கப் பட்டுள்ளது. ஆகவே, இந்த ஆண்டு 6 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். ஜீப் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** 25 பஞ்சாயத்துக்கள் கொண்ட யூனியனுக்கு ஜீப் வழங்கப்படுகிறது. அப்படி இருக்க 75,100 ரெவின்யூ வட்டங்களைச் சேர்ந்த தாசில்தார்களுக்கு ஜீப் வழங்கினால்தான் செம்மை யாகக் காரியங்களைச் செய்ய முடியும். உடனடியாக எல்லோருக்கும் ஜீப் வழங்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உறுப்பினருடைய கருத்து முழுவதையும் ஏற்றுக்கொள்ளுகிறோம். அதன் அவசியத்தை, அவசரத்தை உணர்ந்துதான் புதியதாக ஜீப்கள் வாங்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடு கூட அனிமல் ஹஸ்பெண்டரி, பிஷ்ஷரீஸ் போன்ற இலாக்காக்களில் உள்ள ஜீப்களையும் எடுத்துக்கொள்ள உத்தர விட்டிருக்கிறோம்.

**திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் :** தாலுக்காவில் பணிபுரிகிற தாசில்தார் அடிக்கடி வட்டார வளர்ச்சி வேலை செய்கிற அளவுக்கு ஜீப்புகளை எடுத்துப்போகிறார்கள், அதைத் தடுக்க வேண்டுமென்ற அடிப் படையில்தான் திரு. இராமமூர்த்தி கேள்வி கேட்டார்கள். அதற்குப் பதில் அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** முன்பு சொன்ன பதிலே தான் இதற்கும். பேஸ்டு ப்ரொக்கிராமாக தாசில்தார்கள் எல்லோருக்கும் ஜீப் வழங்கப்பட்டுவிட்டால் இதற்கு அவசியம் இராது.

**திரு. கா. வேழவேந்தன் :** எல்லா மாவட்டங்களில் உள்ள தாசில் தார்களுக்கு உடனடியாக ஜீப் கொடுத்துவிட முடியாது என்ற உண்மையை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒதுக்கப்படுகிற ஜீப்புக் களைக்கூட மாவட்ட ஆணையாளர் கண்காணிப்பில் வைத்து அவசியமான காரியங்களுக்குத் தேவைப்படுகிறபோது எடுத்துச் செல்லும் திட்டத்தைப் பரிசீலனை செய்ய முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த யோசனை நடை முறைக்கு ஒத்து வராது. ஒவ்வொரு தாசில்தாரும் ஒரு ஜீப் வைத்துக் கொள்ளலாம். சினிமாக் கொட்டகையிலும், நகைக் கடைகளிலும் ஜீப் இருக்கிற நிலையை மாற்றி புதிய ஜீப்கள் வாங்குவதோடுகூட, அங்கங்கே இருக்கிற ஜீப்புகளையும் பகிர்ந்துகொண்டு அவசியமான பொறுப்புக்களை நிறைவேற்ற ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. கே. என். குமாரசாமி:** பஞ்சாயத்து யூனியன்களுக்கு கண் டெம்டு ஜீப்புகளை வாங்கி வழங்குகிறார்கள். அதுபோல இப்போதும் மிலிடரி ஏலத்தில் எடுத்துக்கொடுக்கப்போகிறார்களா ? அல்லது புதிய ஜீப்புக்களே வாங்கி அளிக்கப்போகிறார்களா ? புதிய ஜீப்புகள் வாங்கினால் சரியான முறையில் அவற்றைப் பராமரித்து வரவும் நடவடிக்கை எடுப்பார்களா ?

**திரு. சி. நஞ்சன் :** தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதி மலைப் பிரதேசமான பகுதி. அந்த வட்டார தாசில் தாருக்கு ஜீப் வசதி கிடையாது. பஞ்சாயத்து யூனியனில் ஒரு ஜீப் இருந்தது. அது அடிக்கடி ரிப்பேர் ஆகி வந்தது, அதையும் கண்டெம் செய்துவிட்டார்கள். அந்த ஏரியாவில் இப்போது ஜீப்பே இல்லை. ஆகவே, அந்த வட்டாரத்தில் நல்ல முறையில் சேவை செய்ய தாசில்தாருக்கு உதவியாக உடனே ஜீப் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது நல்ல கோரிக்கை. உடனடியாகக் கவனிக்கிறேன்.

## நீலகிரி மாவட்ட அரசு ஊழியர்களுக்கு மாரிக்காலப்படி

* 371 வினா.—திரு. கே. போஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) நீலகிரி மாவட்டத்தில் பணிபுரியும் அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட குளிர்கால படி, உதகை, குன்னூர், கோத்தகிரி ஆகிய மூன்று நகரங்களில் மட்டும் பணிபுரியும் அரசு ஊழியர்கட்கு வழங்கப் பட்டுள்ளதென்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால், மற்ற கிராமப் பகுதிகளில் பணிபுரியும் ஊழியர் களுக்கும் வழங்கப்படாமைக்குக் காரணம் யாது ?

(உ) அந்த ஊழியர்களுக்கும் இந்தக் குளிர்கால படி கிடைக்க வழிவகை செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ), (இ), (உ)—உதகை, கோத்தகிரி, குன்னூர், கோடைக்கானல் ஆகிய இடங்களில் உள்ள அரசு பணியாளர்களுக்கு வழங்கப்படும் மாரிக்காலப் படி 1,000 மீட்டர் உயரத்திலே உள்ள மலைப் பகுதிகளில் பணியாற்றும் அரசு பணியாளர்களுக்கும் 68—69 மாரிக்காலம் முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. போஜன் :** இப்போது கொடுக்கப்படுகிற விண்டர் அலவன்சு உதகை, கோத்தகிரி, குன்னூர் போன்ற நகரங்களில் உள்ளவர்களுக்குத் தான் கொடுக்கப்படுகிறது. பனி என்பது இங்கேமட்டும்தான் பெய்கிறது என்பதல்ல. நீலகிரி மாவட்டம் முழுவதுமே இருக்கிறது. ஆகவே மற்ற எல்லா இடங்களிலும் உள்ள அத்தனை அலுவலர்களுக்கும் கொடுக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கேள்வி கேட்டு நான்கு மாதங்களுக்குமேல் ஆகிவிட்டது என்று நினைக்கிறேன். முன்பு உதகை கோத்தகிரி, குன்னூர், கோடைக்கானல் போன்ற நகரங்களுக்குத்தான் இருந்தது. ஆனால், 69-ல் 1,000 மீட்டர் உயரத்திற்கு மேல் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுவிட்டது. கூடலூர், கீழ்கோத்த கிரி, மஞ்சூர், நடுவட்டம் இன்னும் வால்பாறை போன்ற எல்லா இடங் களிலும்—ஆயிரம் மீட்டர் உயரத்திற்குமேல் உள்ள பிரதேசத்தில் இருக்கும் அலுவலர்கள் எல்லோரும் இந்த அலவன்சு பெறுகிறார்கள். ஊருக்குப் போனவுடன் கூடக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

**திரு. ஜெ. பெள்ளி கவுடர் :** தலைவர் அவர்களே, இந்தக் குளிர் காலப் படியைக் கொடுப்பதில் நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களுக்குக் கொடுப்பதில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. சிலபேர் களுக்குக் கிடைக்கிறது. சிலபேர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படிக் கொடுக்கிறபொழுது மலையினுடைய கணக்கை எடுக்கும்பொழுது 5,000 ; 3,000 ; 2,000 என்ற அளவை வைத்துப் [illegible] அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எனக்கு அப்படியொன்றும் தகவல் இல்லை. அப்படிப்பட்ட நிலைமை உண்மையிலேயே இருந்தால் அதுபற்றி அங்குள்ள அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லலாம். இன்னும் பெரிய விவகாரமாக இருந்தால் அதை அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டுவந்தால் அரசாங்கம் கவனிக்கலாம்.

**திரு. கே. விநாயகம் :** 1000 மீட்டருக்கு மேலேதான் குளிர் அடிக் கிறது; என்பது அரசாங்கத்தின் கருத்தா ? 1,000-க்கு 10-க்கு கீழே 990-ல் குளிர் இல்லை என்று அர்த்தமா ? 1,000-க்கு கீழே எத்தனை கிராமங்கள் பட்டணங்கள் இருக்கின்றன. அவர்களுக்கும் என்ன நிவாரணம் தரப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் கேள்வி அவ்வளவு நியாயமான கேள்வியல்ல. ஆயிரம் என்பதில் சில வரம்புகளைக் கட்டுகிறோம். 1,000 மீட்டர் என்பது ஒரு எல்லைக்கோடு. அதற்குக் கீழே 999-க்கு இல்லையா என்று சொன்னால் எங்கே போய் விடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசிக்க வேண்டும். 999-க்குக் கொடுத்தால், மாண்புமிகு உறுப்பினர் 998-க்கு இல்லையா என்று கேட்பார்கள். எனவே சில வரம்பு முறைகளுக்கு விதிமுறைகளுக்கு உட்பட்டு இயங்குகிறோம். அவர்களுக்கு அந்த வகையில் சில செலவுகள் ஏற்படும் என்பதற்காக அரசாங்கம் இதை ஏற்படுத்தி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு விநாயகம் அவர்கள் மலை ஏறட்டுமே ! (சிரிப்பு).

**திரு. கே. விநாயகம்:** மலையிலே ஏறுவது என்பது பிரச்னையல்ல. கேள்விதான், இப்பொழுது......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் உங்களைக் கூப்பிடவில்லை.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், இந்த விண்டர் அலவன்ஸ் எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது. அதை வைத்துக் கொண்டு அந்த ஊழியர்களுக்கு கம்பளிப் போர்வையாவது வாங்கிக்கொள்ளக் கூடிய அளவுக்கு விண்டர் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** விண்டர் அலவன்ஸ் என்பது அடிப்படைச் சம்பளம் 750 ரூபாய்க்கு மேற்படாதவர்களுக்கு 10 சதவீதம்

10 per cent of pay subject to a minimum of Rs. 10 and maximum of Rs. 25.

என்ற அளவிலே நான்கு மாதங்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

four months from 16th November of the year to 15th March of the subsequent year.

இப்படி நான்கு மாதங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. 750 ரூபாய்க்கு மேல் அடிப்படைச் சம்பளம் இருக்கிறவர்களுக்கு

amount by which pay falls short of Rs. 775.

என்ற அளவிலே கொடுக்கப்படுகிறது.

## இராமநாதபுரத்தை இரு மாவட்டங்களாக்குதல்

* 372 வினா.—திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

**திரு. சி. நஞ்சன் :** தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதி மலைப் பிரதேசமான பகுதி. அந்த வட்டார தாசில் தாருக்கு ஜீப் வசதி கிடையாது. பஞ்சாயத்து யூனியனில் ஒரு ஜீப் இருந்தது. அது அடிக்கடி ரிப்பேர் ஆகி வந்தது, அதையும் கண்டெம் செய்துவிட்டார்கள். அந்த ஏரியாவில் இப்போது ஜீப்பே இல்லை. ஆகவே, அந்த வட்டாரத்தில் நல்ல முறையில் சேவை செய்ய தாசில்தாருக்கு உதவியாக உடனே ஜீப் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது நல்ல கோரிக்கை. உடனடியாகக் கவனிக்கிறேன்.

## நீலகிரி மாவட்ட அரசு ஊழியர்களுக்கு மாரிக்காலப்படி

* 371 வினா.—**திரு. கே. போஜன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) நீலகிரி மாவட்டத்தில் பணிபுரியும் அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட குளிர்கால படி, உதகை, குன்னூர், கோத்தகிரி ஆகிய மூன்று நகரங்களில் மட்டும் பணிபுரியும் அரசு ஊழியர்கட்கு வழங்கப் பட்டுள்ளதென்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால், மற்ற கிராமப் பகுதிகளில் பணிபுரியும் ஊழியர் களுக்கும் வழங்கப்படாமைக்குக் காரணம் யாது ?

(உ) அந்த ஊழியர்களுக்கும் இந்தக் குளிர்கால படி கிடைக்க வழிவகை செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ), (இ), (உ)—உதகை, கோத்தகிரி, குன்னூர், கோடைக்கானல் ஆகிய இடங்களில் உள்ள அரசு பணியாளர்களுக்கு வழங்கப்படும் மாரிக்காலப் படி 1,000 மீட்டர் உயரத்திலே உள்ள மலைப் பகுதிகளில் பணியாற்றும் அரசு பணியாளர்களுக்கும் 68—69 மாரிக்காலம் முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. போஜன் :** இப்போது கொடுக்கப்படுகிற விண்டர் அலவன்சு உதகை, கோத்தகிரி, குன்னூர் போன்ற நகரங்களில் உள்ளவர்களுக்குத் தான் கொடுக்கப்படுகிறது. பனி என்பது இங்கேமட்டும்தான் பெய்கிறது என்பதல்ல. நீலகிரி மாவட்டம் முழுவதுமே இருக்கிறது. ஆகவே மற்ற எல்லா இடங்களிலும் உள்ள அத்தனை அலுவலர்களுக்கும் கொடுக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கேள்வி கேட்டு நான்கு மாதங்களுக்குமேல் ஆகிவிட்டது என்று நினைக்கிறேன். முன்பு உதகை கோத்தகிரி, குன்னூர், கோடைக்கானல் போன்ற நகரங்களுக்குத்தான் இருந்தது. ஆனால், 69-ல் 1,000 மீட்டர் உயரத்திற்கு மேல் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுவிட்டது. கூடலூர், கீழ்கோத்த கிரி, மஞ்சூர், நடுவட்டம் இன்னும் வால்பாறை போன்ற எல்லா இடங் களிலும்—ஆயிரம் மீட்டர் உயரத்திற்குமேல் உள்ள பிரதேசத்தில் இருக்கும் அலுவலர்கள் எல்லோரும் இந்த அலவன்சு பெறுகிறார்கள். ஊருக்குப் போனவுடன் கூடக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

**திரு. ஜெ. பெள்ளி கவுடர் :** தலைவர் அவர்களே, இந்தக் குளிர் காலப் படியைக் கொடுப்பதில் நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களுக்குக் கொடுப்பதில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. சிலபேர் களுக்குக் கிடைக்கிறது. சிலபேர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படிக் கொடுக்கிறபொழுது மலையினுடைய கணக்கை எடுக்கும்பொழுது 5,000 ; 3,000 ; 2,000 என்ற அளவை வைத்துப் படிப்படியாக அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எனக்கு அப்படியொன்றும் தகவல் இல்லை. அப்படிப்பட்ட நிலைமை உண்மையிலேயே இருந்தால் அதுபற்றி அங்குள்ள அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லலாம். இன்னும் பெரிய விவகாரமாக இருந்தால் அதை அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டுவந்தால் அரசாங்கம் கவனிக்கலாம்.

**திரு. கே. விநாயகம் :** 1000 மீட்டருக்கு மேலேதான் குளிர் அடிக் கிறது; என்பது அரசாங்கத்தின் கருத்தா ? 1,000-க்கு 10-க்கு கீழே 990-ல் குளிர் இல்லை என்று அர்த்தமா ? 1,000-க்கு கீழே எத்தனை கிராமங்கள் பட்டணங்கள் இருக்கின்றன. அவர்களுக்கும் என்ன நிவாரணம் தரப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் கேள்வி அவ்வளவு நியாயமான கேள்வியல்ல. ஆயிரம் என்பதில் சில வரம்புகளைக் கட்டுகிறோம். 1,000 மீட்டர் என்பது ஒரு எல்லைக்கோடு. அதற்குக் கீழே 999-க்கு இல்லையா என்று சொன்னால் எங்கே போய் விடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசிக்க வேண்டும். 999-க்குக் கொடுத்தால், மாண்புமிகு உறுப்பினர் 998-க்கு இல்லையா என்று கேட்பார்கள். எனவே சில வரம்பு முறைகளுக்கு விதிமுறைகளுக்கு உட்பட்டு இயங்குகிறோம். அவர்களுக்கு அந்த வகையில் சில செலவுகள் ஏற்படும் என்பதற்காக அரசாங்கம் இதை ஏற்படுத்தி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு விநாயகம் அவர்கள் மலை ஏறட்டுமே ! (சிரிப்பு).

**திரு. கே. விநாயகம்:** மலையிலே ஏறுவது என்பது பிரச்னையல்ல. கேள்விதான், இப்பொழுது......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் உங்களைக் கூப்பிடவில்லை.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், இந்த விண்டர் அலவன்ஸ் எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது. அதை வைத்துக் கொண்டு அந்த ஊழியர்களுக்கு கம்பளிப் போர்வையாவது வாங்கிக்கொள்ளக் கூடிய அளவுக்கு விண்டர் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** விண்டர் அலவன்ஸ் என்பது அடிப்படைச் சம்பளம் 750 ரூபாய்க்கு மேற்படாதவர்களுக்கு 10 சதவீதம்

10 per cent of pay subject to a minimum of Rs. 10 and maximum of Rs. 25.

என்ற அளவிலே நான்கு மாதங்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

four months from 16th November of the year to 15th March of the subsequent year.

இப்படி நான்கு மாதங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. 750 ரூபாய்க்கு மேல் அடிப்படைச் சம்பளம் இருக்கிறவர்களுக்கு

amount by which pay falls short of Rs. 775.

என்ற அளவிலே கொடுக்கப்படுகிறது.

## இராமநாதபுரத்தை இரு மாவட்டங்களாக்குதல்

* 372 வினா.—**திரு என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தற்பொழுது அந்தச் செயற்குறிப்பு இல்லை.

**திரு. பெ. சீனிவாசன்:** இந்த இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்ற கோரிக்கை கடந்த 10, 15 ஆண்டுகளுக்கு மேலாகவே இருந்து வருகிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இன்றைக்கும் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த அத்தனை சட்ட மன்ற உறுப்பினர்களும் இதை ஆதரிப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்தப் பிரச்னை இருப்பது தெரியும். அதற்குப் பரிகாரம் தேடவேண்டுமென்பதிலே அரசாங்கத்திற்கு அக்கறை இருக்கிறது. உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் கடைசியாக ஒன்றைச் சொன்னார்கள், எல்லோரும் ஆதரிப்பார்கள் என்று அவர்கள் சொன்னதிலே தற்பொழுது சங்கடங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொல்கிறார்கள் இராமநாதபுரத்தைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர் திரு. தங்கப்பன் அவர்கள் பிரித்தால் ராமநாதபுரம் தலைநகராக அமையவேண்டும் அல்லது மண்டபம் அமையவேண்டுமென்று சொல்கிறார்கள். கனம் உறுப்பினர் சீனிவாசன் தொகுதியைச் சேர்ந்த வர்த்தக சங்கத்துக்காரர்கள் அதை இரண்டாகப் பிரித்து கோவில்பட்டித் தாலூகாவையும் அங்கிருந்து பிரித்து விருதுநகரோடு சேர்த்து விருதுநகரைத் தலைநகரமாக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். சிவகாசி முனிசிபாலிட்டியைச் சேர்ந்தவர்களும், ராஜபாளையம் முனிசிபாலிட்டியைச் சேர்ந்தவர்களும் ராமநாதபுரத்தைத் தலைநகராக வைக்காதீர்கள். அப்படி வைத்தால் 130, மைல், 140 மைல் தூரம் ஆகும் என்று சொல்கிறார்கள். சிவகங்கையைச் சேர்ந்தவர்களுடைய கோரிக்கை என்னவென்றால் சிவகங்கைதான் லாயக்கான இடம். அங்கே பல மாவட்டத் தலைமை அலுவலகங்கள் இருக்கின்றன, எனவே அங்கேதான் அமையமுடியும் என்ற கோரிக்கையை வைக்கிறார்கள். இப்படியெல்லாம் பல கோரிக்கைகள் இருக்கின்றன. இதற்குப் பரிகாரம் காணவேண்டுமென்பது எல்லோருடைய கடமையும் ஆகும்.

**திரு. ஏ. அ. சுப்பராஜு:** இந்த ஜில்லா கிழக்கே வங்காள விரிகுடாவிலேயிருந்து இந்தப் பக்கம் கேரளா பார்டர் வரை டச் பண்ணுகிறது. அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இரண்டாகப் பிரித்து கிழக்கு மேற்கு என்று இரண்டாகப் பிரித்து புதிய தலைநகரம் தேர்ந்தெடுப்பதற்கு சீட்டு எழுதிப் போட்டு குலுக்கும் முறையில் தேர்ந்தெடுத்துவிடக்கூடிய முறையை கையாள்வார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இது திருவுளச்சீட்டு அரசாங்கமல்ல. ரெவின்யூ போர்டு மாதிரி இதுவும் ராபர்ட் கிளைவ் காலத்திலிருந்து இருந்து வந்திருக்கிறது. அந்தக் காலத்திலேயிருந்து மதுரையைத்தான் தலைநகரமாக வைத்திருக்கிறார்கள். ஜமீன்தார்கள் அடிமைப்படுத்திவிட்டு குத்தகை வாங்கிக்கொண்டிருந்த காலம் அது. அப்படித்தான் எல்லா அமைப்புகளும் இராமநாதபுரத்திலே இருக்கின்றன. நில உறவு முறைகள், ஜமீன் முறைகள் எல்லாமே அப்படித்தான் இருக்கின்றன. இருநூறு வருஷமாக இருந்து வருகின்ற முறையை மாற்றுவதிலே காலதாமதம் ஏற்படும். திருவுளச் சீட்டை நம்பவில்லை உங்களுடைய திருவுள்ளத்தை நம்பி ராமநாதபுரம் மாவட்டத்திலே தலைநகரம் அது எந்த இடமாக இருந்தாலும் அமைவதற்கு வாய்ப்பு இருக்கவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய கருத்து. எல்லோருடைய யோசனைகளையும் எடுத்துக்கொண்டு அரசாங்கம் இதிலே முடிவெடுக்கும்.

## வெல்லத்தின் மேல் பல முனை வரி.

*373 வினு:—திரு. ஆர். கருப்பையா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) வெல்லம், சர்க்கரைக்கு பலமுனை வரி இந்த ஆண்டு அரசினரால் போடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், இந்த வரியை நீக்கிவிடும் எண்ணம் அரசினருக்குண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) ஆம். 1968 ஜனவரி 1-ம் தேதி முதல் அரசாங்கம் பனைவெல்லம் தவிர, தூள் வெல்லம கட்டி வெல்லம் முதலியவற்றிற்கு 3 சதவீதத்தில் பலமுனை வரி விதித்துள்ளது. சர்க்கரைக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

**திரு. ஆர். கருப்பையா:** இந்த மாநிலத்தின் முதலமைச்சர் பொறுப்பை மதிப்பிற்குரிய காமராஜர் ஏற்றிருந்த நேரத்தில் வெல்லம் காய்ச்சுவது குடிசைத் தொழில் என்ற காரணத்தால் அதற்கு விற்பனை வரி இருக்கக்கூடாது என்று அதை நீக்கினார்கள். அயல் மாநிலங்களில் கூட இதற்கு வரி இல்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்தவுடன் மீண்டும் அதற்கு பலமுனை விற்பனை வரியைக் கொண்டு வந்தது நியாயமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நியாயம் என்று கருதித்தான் இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது.

**திரு. இல. பலராமன்:** வெல்லத்திற்கு விற்பனை வரி போட்டிருப்பதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? இதைப் பற்றி வியாபாரிகள் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுத்தார்களே, அதனுடைய முடிவு என்னவாயிற்று?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்தக் கேள்வியைக் கேட்டதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வெல்லத்திற்கு முதலிலே வரி கிடையாது. இதிலே ஒரு மாதிரியாக லாபம் எல்லாம் வெளியே போகின்ற நிலை இருந்த காரணத்தாலும், அரசாங்கத்திற்கும் வருவாய் அதிகரிக்க வேண்டுமென்ற காரணத்தாலும் இதற்கு வரி போடப்பட்டது. அவ்வாறு வரி போட இந்த அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு என்று ஹைகோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

**திரு. கே. விநாயகம்:** வெல்லத்திற்கு இதுவரை வரி இல்லாமல் இருந்தது. இப்போது சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் போடாமல் மல்டி பாயிண்ட் டாக்ஸ் போட்டதால் பல கட்டங்களிலே அதிகமாக வரி செலுத்த வேண்டிய நிலைமையிலே வெல்லம் நமது மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்குச் செல்லுவது குறைந்துவிட்டது என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** வெளி மாநிலங்களுக்குப் போகக்கூடாது என்பதுதான் இந்த அரசாங்கத்தின் அடிப்படையான கொள்கை. இதற்காக மத்திய அரசாங்கத்துடன் போராடிக்கொண்டிருக்கிறோம். இத்தனை மைலுக்கு அப்பால் போனால் தடை செய்யவேண்டுமென்பதற்காக உத்தரவு கொடுக்க வேண்டுமென்று போராடிக் கொண்டிருக்கிறோம். வெளி மாநிலங்களுக்குப் போய்விடுவதால் ஏழை எளிய மக்களுக்கு கிடைக்க வழி இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து இந்த வரிக்கு ஆதரவாகத்தான் இருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

## கவன ஈர்ப்பு

### (அ) இராமநாதபுரம் பெரிய கண்மாயை தூர்வாரி மராமத்து செய்தல்.

**திரு. தங்கப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தாலுக்கா பெரிய கண்மாய் தூர்ந்துபோய் வேளாண்மைக்குத் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு பயிர்கள் சாவியாகி விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாவதால், அக்கண்மாயைத் தூர்வாரி மராமத்து செய்யவேண்டிய அவசிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா.:** இராமநாதபுரம் பெரிய கண்மாயைத் தூர் வாரிப் புனரமைக்கும் திட்டத்திற்கான மதிப்பீடும், வரை படங்களும் ரூபாய் பதினோரு லட்சத்து ஐம்பதாயிரத்திற்குத் தயாரிக்கப்பட்டு பொதுப்பணித் துறையினரின் பரிசீலனையிலுள்ளது. இது அரசுக்கு எட்டியதும் அது ஆலோசிக்கப் பெறும்.

**திரு. டி. தங்கப்பன்:** தலைவர் அவர்களே, அவசியத்தை முன்னிட்டு இந்த ஆண்டிலேயே அந்தக் கண்மாய் வேலைகளைத் துவக்க அரசு அங்கீகாரம் கொடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஏற்கனவே குறிப்பிட்டது போல் அவசர அவசியத்தை முன்னிட்டு தேவையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

### (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நில அடைமான வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படாமை.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு நில அடைமான வங்கியின் மூலமாக ஒப்பளிக்கப்பட்டும் அதற்குண்டான தொகைகளை இதுவரை பட்டுவாடா செய்யாததைப் பற்றிய அவசர அவசியப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் 1—4—1968 முதல் 15—2—1969 வரை நில அடைமான வங்கிகள் மூலமாக வழங்கப்படுவதற்கென ஒப்பளிக்கப்பட்ட நீண்ட காலக் கடன் தொகை ரூ. 122·43 இலட்சமாகும். இதையொட்டி 28—2—1969 வரை வழங்கப்பெற்ற கடன் தொகை ரூ. 72·59 இலட்சமாகும். அந்தத் தேதியில் வழங்கப் பெறாமல் இருந்த கடன்கள் தொகை ரூ. 49·85 இலட்சமாகும். இந்தத் தொகையினை நில அடைமான வங்கிகள் 31—3—1969-ம் தேதிக்குள் வழங்கிவிடும்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, சில சமயங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டும் கூட பணம் வரவில்லை, காலதாமதமாகிறது என்ற நிலை இருக்கிறது. இதற்கு முன்பு இருந்த முறைப்படி இந்த மாதிரி பஞ்சாயத்துக்களில் காலதாமதம் ஆகிறது என்பதால்தான் கூட்டுறவு அடைமான வங்கிகள் மூலமாக சீக்கிரத்தில் கொடுப்பதற்கு இந்தத் திட்டம் வந்தது. ஆனையால் சர்க்கார் ஒரு மாதமோ அல்லது இரண்டு மாதமோ காலவரையறை நிர்ணயித்து அந்தக் காலவரையறைக்குள் கொடுக்க வேண்டுமென்ற முறையில் உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கடன் வழங்குவதில் விவசாயிகளுக்கு அலைச்சலும், செலவும், தொல்லையும், காலதாமதமும் ஆகிறது என்பதை நன்று உணர்ந்து இந்தக் குறைகளைப் போக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மாதம் 15-ம் நாள் சில முக்கியமான நல்ல முடிவுகளை எடுத்து அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர கூட்டுறவுத் துறை அமைச்சருக்குத் தெரிவித்துள்ளார்கள். அந்த முடிவுகளைச் செயலுக்குக் கொண்டு வந்தவுடன் விவசாயிகளுக்கு அலைச்சலோ, செலவோ, தொல்லையோ, காலதாமதமோ இல்லாமல் கடன்கள் வழங்கப்படும்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** இந்தக் கஷ்டங்கள் இல்லாமல் விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பதற்கான முக்கியமான முடிவுகளை எடுத்திருப்பினும், பட்டியலில் உள்ளது போல் வரிசையாகக் கொடுக்காமல் சில நேரங்களில் பின்னால் இருப்பவர்களுக்கு முன்னாலும் முன்னால் இருப்பவர்களுக்குப் பின்னாலும் கொடுக்கக்கூடிய நிலை இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** நான் ஏற்கனவே அறிவித்தபடி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மாதம் 15-ம் தேதி, அதாவது இன்றைக்கு மூன்று நாட்களுக்கு முன்னால், முக்கியமான சில நல்ல முடிவுகளை எடுத்துள்ளார்கள். அந்த முடிவுகள் அமலுக்கு வந்த பிறகு, வரிசைக் கிரமம், அல்லது முன்பின் என்பதற்கான நிலைமைகள் எல்லாம் இல்லாமல், வெகு விரைவாகக் கடன் தொகைகள் வழங்கப்படும்.

## (3) 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீதான வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 1969–70-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம். மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 16—வேளாண்மை.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண். 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,99,88,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண். 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 15,99,88,900-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



**திரு. கே. என். குமாரசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, பயிர் பாதுகாப்புத் திட்டம் கொண்டு வருவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 15,99,88,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. இல. பலராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயி வாங்கக்கூடிய பொருள்களின் விலைகள் அதிகரித்து, விவசாயிக்கு உற்பத்திச் செலவு அதிகரித்து இருப்பதைக் குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 15,99,88,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலமுள்ள குத்தகை விவசாயிகளுக்கு விவசாயக் கருவிகள், பூச்சிக் கொல்லி மருந்து, இதர உழவடைக் கருவிகள் பாதி விலையில் கொடுக்கவேண்டிய அவசியத்தைக் குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 15,99,88,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயச் சட்டம் கொண்டு வருவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 15,99,88,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### (ஆ) கோரிக்கை எண் 17—மீனளம்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,70,57,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

**DR. H. V. HANDE:** Sir, to discuss policy and to point out the need to give more boats for fishing for fishermen at Washermenpet, Ennore and in Kanyakumari District, I move the following cut motion—

"That the allotment of Rs. 1,70,57,500 under Demand No. 17 —Fisheries be reduced by Rs. 100."

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்குத் தேவையான விசைப்படகுகளை அரசு கொடுக்கத் தவறியதை விவாதிக்க—

"கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,70,57,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்குக் கூட்டுறவு ஸ்தாபனம் மூலமாகப் படகுகள் விநியோகிப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,70,57,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### (இ) கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,12,21,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss the necessity to open more Veterinary Hospitals in the State and to start a Calf Breeding Centre in Hosur taluk, I move the following cut motion—

"That the allotment of Rs. 4,12,21,600 under Demand No. 18—Animal Husbandry be reduced by Rs. 100."

**திரு. ஆ. கு. சுப்பையா:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் தலா ஐந்து கால்நடை உதவி நிலையங்கள் திறக்க வேண்டியது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 4,12,21,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் எல்லாப் பஞ்சாயத்துப் பெருமன்றங்களின் எல்லைக்குள்ளும், ஒரு கால்நடை மருத்துவ விடுதி கட்டுவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 4,12,21,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்கு வளர்ச்சிக்கான மேய்ச்சல் நிலங்கள் ஒதுக்குவது சம்பந்தமான பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 4,12,21,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். பூபதி:** பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல கால்நடை இனங்களை வளர்க்க, நோய்களிலிருந்து தடுத்து அபிவிருத்தி செய்வது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 4,12,21,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



### (ஈ) கோரிக்கை எண் 21—சின்கோனா.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 21—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 56,00,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. க. இராமமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 21—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 56,00,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss policy and point out the need to step up production of Cinchona as a vital foreign-exchange-earner, I move the following cut motion—

"That the allotment of Rs. 56,00,900 under Demand No. 21—Cinchona be reduced by Rs. 100."

### (உ) கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,09,77,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

DR. H. V. HANDE : Sir, to discuss policy I move the following cut motion—

"That the allotment of Rs. 2,09,77,600 under Demand No. 35—Forests be reduced by Rs. 100."

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளில் சாகுபடிக்கு லாயக்கு உள்ள இடங்களை நிலமற்ற தொழிலாளர்களுக்கு பகிர்ந்து கொடுப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 2,09,77,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகள் சிறு சுள்ளிப் பொறுக்கி வருவதற்குக் காட்டிலாகாவினால் விதிக்கப்படும் கட்டணத்தை நீக்குவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 2,09,77,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் காட்டு வளத் துறையில் செயல்படுகின்ற ரப்பர் தோட்ட தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை கொடுக்காமல், சில வேலைகளைக் குத்தகைக்கு விடுவதைப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 2,09,77,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஊ) கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்,

"கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 30,10,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

DR. H. V. HANDE : Sir, to discuss policy I move the following cut motion—

"That the allotment of Rs. 30,10,400 under Demand No. 39—Capital Outlay on Agriculture be reduced by Rs. 100."

**திரு. இல. பலராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டந்தோறும் விதைப் பண்ணைகள் ஆரம்பிப்பதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 30,10,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(எ) கோரிக்கை எண் 44—காட்டுவள மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 44—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,13,39,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

DR. H. V. HANDE : Sir, to discuss policy, I move the following cut motion—

"That the allotment of Rs. 1,13,39,700 under Demand No. 44—Capital Outlay on Forests be reduced by Rs. 100."

**திரு. வை. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ரப்பர், தேயிலை, சந்தனம் ஆகியவற்றின் அபிவிருத்தி பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 44—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,13,39,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில், சந்தனத் தைலம், சந்தன சோப்பு, சந்தனப் பவுடர் தயாரிப்பதைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 44—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,13,39,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக்கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வருகின்றன. அதற்கு முன் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 82-வது விதியின்கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.



## (4) நிதி அமைச்சரின் விளக்க உரை

### தமிழக வறட்சிப் பகுதிகளை பார்வையிட இந்தியப் பிரதமரின் வருகை

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புடைய முதலமைச்சரவர்கள் டெல்லி நகரத்திற்கு, அவர்கள் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு முதல் விஜயமாகப் போய இருப்பதை இந்த மாமன்றம் அறியும். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இன்று காலையில் தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு, நேற்று நம்முடைய மாண்புமிகு பிரதம அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்களோடு, உணவு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்களோடு, வெளிவிவகார அமைச்சர் திரு. தினேஷ் சிங் அவர்களோடு, உள்துறை அமைச்சர் திரு. சவான் அவர்களோடு பேசியதைக் கூறினார்கள். மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்கள், இங்கேயுள்ள வறட்சிப் பகுதிகளையெல்லாம் பார்வையிடுவதற்கு வருவதாகச் சொன்ன செய்தியை அவர்கள் கூறியதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுதத மாதம் என்று கருதுகிறேன், அவர்கள் வருவதாக வாக்களித்திருக்கிறார்கள். இந்தத் தகவல்களை மாண்புமிகு முதலமைச்சரவர்களின் சார்பிலே நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். உணவுத் துறை அமைச்சரவர்கள் முதல் தவணையாக 10,000 டன்கள் உணவுப் பொருள்களை அனுப்பி வைக்க, அரிசி கொடுக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். மேலும் கொடுக்க வேண்டுமென்று முதலமைச்சரவர்கள் வற்புறுத்தி இருக்கிறார்கள். மாநிலத்தின் பிரச்சினையை விவாதித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றத்துக்கு வெளியிலே, தகவல்கள் பத்திரிகையில் மூலம் வந்தாலும் மரபு இருக்கிறது. இன்று காலையிலே முதலமைச்சர் அவர்கள் தொடர்பு கொண்டு நம்முடைய மன்றத்திற்கு அறிவிக்குமாறு கூறியிருக்கிறார்கள். அதை நான் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

## (5) தகவல் கோரல்

### 82-வது விதியின்கீழ் அமைச்சர் ஆற்றிய உரைமீது விளக்கம் கோர எதிர்க்கட்சித் தலைவரின் உரிமை.

THIRU K. VINAYAKAM : Sir, arising out of the statement made by the Hon. Minister. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது பேசுவதற்கு ஒன்றுமில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, may I request the Government to be kind enough to consult the Members representing the drought stricken area—irrespective of political considerations—and then draw up a tour programme so that it would facilitate the Prime Minister and her retinue to visit the entire drought-affected area of the State and have first-hand information about the whole area?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பசி, பஞ்சம், பட்டினியில் எந்த அரசியல் கட்சியும் இல்லை, கண்டிப்பாக நல்ல யோசனைதான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகிறார்கள். அதற்குத்தான், அந்த காரியத்திற்காகத்தான் இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது. கண்டிப்பாக அந்த ஒத்துழைப்பையெல்லாம் பெற்றுத்தான் செய்யப்படும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதிமுறைகள்......

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** விதிமுறைபற்றித்தான் சொல்லுகிறேன். 82-வது விதிமுறையில் எனக்கும் உரிமையிருக்கிறது. பிரதம மந்திரி அவர்கள் வருவதற்கு முன்பு . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய விதிமுறை

" 82 (1) A statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker என்றிருக்கிறது. அதற்கு அடுத்த உள் விதி

(2) There shall be no debate on such statement at the time it is made. என்று இருக்கிறது.

THIRU P. G KARUTHIRUMAN : There is no debate. நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டு கூறுங்கள். எதிர்க்கட்சித் தலைவ ...க்கும் பொறுப்பிருக்கிறது. நான் சொல்வதைத் தயவுசெய்து கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொஞ்சம் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு மரபு தெரிந்திருக்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உட்கார், உட்கார் என்று மிரட்ட முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு மரபு தெரிந்திருக்க வேண்டும். பேரவைத் தலைவர் எழுந்து நிற்கும்பொழுது உறுப்பினர்கள் அமர்ந்துவிடவேண்டும். ...ன்று மரபிருக்கிறது. அந்த மரபை எதிர்க்கட்சித் தலைவரவர்கள் உணரா ...ருக்கும் நேரத்தில் அதைச் சுட்டிக்காட்ட வேண்டியதாகத்தான் ...ருக்கிறது. அந்த மரபைக் காப்பாற்றுவதற்கு எதிர்க்கட்சித் தலைவ...வர்கள் எப்படி பொறுப்பற்ற நிலையிலிருக்கிறார்கள் என்பதை ...ன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 'உட்காருங்கள்' என்று சொல்லலாம், 'உட்கார்' என்று சொல்வதற்கு மரபு இருக்கிறதா? நீங்களே சொல்லீர்களே, இனிமையாகப் பேசவேண்டுமென்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'கொஞ்சம் உட்காருங்கள்' என்றுதான் சொன்னேன். பேரவைத் தலைவருக்கு, மரபைக் காப்பாற்றுவதில் கஷ்டம் கொடுக்காமல், மரபைக் காப்பாற்ற வேண்டும்.

" ஏதிலார்க் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும உயிர்க்கு."

என்ற குறளெல்லாம் படித்திருக்கிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் ஒரு விளக்கம் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் கேட்பதற்கு இதுநேரம் இல்லை என்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நிதியமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு ஆதரவாகத்தான் பேசப்போகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிப்பட்ட மரபு கிடையாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மரபு என்னவென்று தெரிய வேண்டும். எதிர்க்கட்சித் தலைவருக்கு சில மரபுகள் உண்டா, இல்லையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த பிரச்சினைக்கு தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அதற்குப் பிறகு தீர்ப்பு அளிக்கிறேன்.

• **திரு. பி. ஜி. கருத்திருமன் :** மரபு இருக்கிறதா ? மரபு இல்லையா ? நிதியமைச்சரவர்கள் ஒரு தகவலை சட்டசபையில் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு எங்கள் கருத்தைக் கூற இடம் உண்டா, இல்லையா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** விளக்கம்தான் சொல்ல விரும்புகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய விதிமுறைகளின்படி 82-வது விதியின்படி கொடுக்கப்படும் ஸ்டேட்மெண்டின் மேல் எதையும் கேட்கக் கூடாது என்று விதிமுறைகள் இருக்கின்றன.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மரபு உண்டா இல்லையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதிமுறையை ஒட்டியதுதான் மரபு என்பது. மரபு வேறு, விதிமுறை வேறு என்று சொல்ல முடியாது. ஆகவே, அமைச்சரவர்கள் 82-வது விதியின்கீழ் ஒரு அறிக்கையைக் கொடுக்கும் அந்த நேரத்தில், அதைப்பற்றி எந்த விவாதமும் இருக்கக்கூடாது, அது விதிமுறைகளிலே இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** விவாதம் என்பது வேறு. நாங்கள் சொல்லுவது ஆதரவாகச் சொல்ல வேண்டுமென்றுதான். சர்க்கார் சொல்லும் காரியங்களை நல்லமுறையில் நடத்தச் சொல்வதற்குக்கூட உரிமை கிடையாதா ? சர்க்கார் சொன்னாலும் சபாநாயகர் விட மாட்டார் போலிருக்கிறதே.

**மாண்புமிகு திரு. கே ஏ. மதியழகன் :** சபாநாயகர் அவர்கள் குறிப்பிட்டபடி கேள்வியோ, அல்லது வேறு விவாதமோ நடத்த 82-வது விதியில் இடமில்லை. அதைத்தான் சபாநாயகரவர்கள் சொல்கிறார்கள். அதை எதிர்க்கட்சித் தலைவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், எதிர்க்கட்சித்தலைவரவர்கள், திரு. விநயகம் அவர்கள் சொன்னதைப்போல், இந்தக் கருத்தில் பிரதம மந்திரி அவர்கள் வரும்பொழுது அதை வெற்றிகரமாக ஆக்குவதற்காக, தமிழ்நாட்டில் வறட்சிப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதற்கு விளக்கம் சொல்ல வந்தார்கள். அதை அனுமதிக்கலாம் என்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர்கள் விரும்பினாலும் மறுப்பதற்கு பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. அதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. அது, நாமெல்லாம் சேர்ந்து செய்து கொண்டதுதான். பேரவைத் தலைவர் மறுக்கிறார் என்றால் அதற்கு விதிமுறை இருக்கிறது, அமைச்சர் விரும்பினாலும் மறுப்பதற்கு சட்டமன்ற விதிமுறைகள் அதிகாரம் கொடுத்திருக்கிறது. நாமெல்லாம், நீங்களெல்லாம், சேர்ந்து செய்த விதிமுறைகளில் இருக்கும் அதிகாரம் அது, பேரவைத் தலைவர் தனியாகப் பெற்றுக்கொண்ட அதிகாரம் அல்ல.

**திரு பி. ஜி கருத்திருமன்:** சட்டதிட்டங்கள் இருந்தாலும் ஒரு மரபைக் காப்பாற்றுவது நல்லதாக இருக்கவேண்டும். மாறிமாறி இதே பிரச்சினை வருகிறது. நான் எதையும் எடுத்துச்சொல்ல வாய்ப்பில்லாமல் இருக்கிறது. தயவு செய்து இதை வரையறுத்துவிட வேண்டும். வரையறுக்கப்படா

விட்டால் நாங்கள் அவமானப்பட வேண்டியிருக்கும். முன்னாலே ஒரு முறை அவமானப்படுத்தப்பட்டோம். முன்பு எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றிப் பேசி அதற்கு அமைச்சரவர்கள் வருத்தம்கூடத் தெரிவிக்கவில்லை, அது அவர்களுடைய இஷ்டம் என்று தீர்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவர் என்றால் அதற்கு ஒரு முறை வகுத்து சட்டத்தைப் போட வேண்டுமென்று ஆலோசனை சொல்லிக்கொள்ளுகின்றேன்.

பிரதம மந்திரி அவர்கள் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட வருகிறார்கள் என்பதை அறிந்து வரவேற்கிறேன். நன்றி தெரிவித்துக்கொள்ளுகின்றேன். முதலமைச்சரவர்கள் போய், மத்திய சர்க்காரைக் குறை சொன்னாலும்கூட, நாங்கள் மக்களுக்காக, இந்த அரசாங்கத்திற்கு நாங்கள் ஒத்துழைக்கிறோம் என்று சொன்னதை முதலமைச்சரவர்கள் இந்தச் சபைக்குச் சொல்ல வேண்டுமென்று கூறியதற்கு நன்றி. நாங்கள் விரும்புவது என்னவென்றால், பிரதம மந்திரி அவர்கள் வருவதற்கு முன்னாலே நாட்டின் பஞ்ச நிலையை ஒரு நாள் விவாதித்தால், எந்தெந்த இடத்தில் எப்படியெப்படி இருக்கும் என்பது தெரியும். பிரதம மந்திரியவர்கள் எல்லா இடங்களையும் சுற்றிப் பார்க்க முடியாது. ஒருநாள் விவாதித்தால் எந்தெந்த இடங்கள் எப்படியெப்படியிருக்கிறது என்று அறிந்து, பிரதம மந்திரி அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்பதற்காக, சர்க்கார் முன்வந்து, இந்தச் சட்டசபை முடிவதற்கு முன்னாலே, பிரதம மந்திரியவர்கள் வருவதற்கு முன்னாலே ஒரு நாள் விவாதிக்கலாம் என்ற ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அதிலேயுள்ள அக்கறையைப் பாராட்டுகிறேன். ஆனால், வறட்சியைப்பற்றி தனியாக விவாதிப்பது என்பது கூடாது என்பதற்காகச் சொல்லவில்லை, தினந்தோறும் விவாதிக்கிறோம். காலையில் எழுந்தால் கவன ஈர்ப்புத் தீர்மானம் ரெவின்யூ அமைச்சருக்கு அதிகமாக இருக்கின்றது, மேலும் ரெவின்யூ டிமாண்டிலே விவாதிக்கிறோம். இன்று விவசாய டிமாண்டிலே விவாதிக்கப்போகிறோம், நாளை உணவு டிமாண்டிலே விவாதிக்கப்போகிறோம், டிஸ்டிரிக்ட் அட்மினிஸ்டிரேஷனில், பொது விவாதத்தில் என்று இப்படி இந்த மாதம் முழுவதும் விவாதிக்கிறோம். பெரிய பிரச்சினைகளில் இரண்டு மூன்று பிரச்சினைகளில் வரிசையாக வரும் தன்மையிருக்கிறது. உணவு நிலைமைகள், பஞ்சாலைத் தொழிலாளர் சம்பந்தமாக பிரச்சினை, விவசாயத் தொழிலாளர் பிரச்சினை, சட்டம், ஒழுங்கு என்று ஐந்தாறு தலைப்புகள் வரும். பிரதான தலைப்புகளாக விவாதிக்கிறோம் ஒரு நாளைக்குத் தனியாக வைக்கவேண்டுமென்றுசொல்வதில் ஆட்சேபனை இல்லை. ஆனால், தலைவர்களெல்லாம், கட்சி சார்பிலே, என்ன செய்யவேண்டுமென்பதற்குச் சொல்லி, அந்த வகையிலே செய்வது நல்லது என்று கருதுகிறேன். முக்கியக் கட்சித் தலைவர்கள் அமைச்சர்கள் மட்டத்திலே கலந்து, என்ன செய்யலாம் என்று கூறுவது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஏற்றுக்கொள்வதைப்பற்றி ஆட்சேபனை இல்லை. இலலையென்றால், தீர்மானம் வைத்து, தமிழகம் முழுவதும் உள்ள பஞ்ச நிலைமை, தொழில் நிலைமை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றைக் கணக்கெடுத்து. அவைகளை மத்திய அரசாங்கத்தின் மூலம் தீர்ப்பதற்குத் தீர்மானம் போட்டுச் சொல்வார்களானால், மத்திய சர்க்காரிலிருந்து பணம் வாங்க வாய்ப்பாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த நிலைமைகளையெல்லாம் விவாதிக்க நமக்கு நிரம்ப வாய்ப்பிருக்கிறது. மானியத்திலே விவாதிக்க இருக்கிறோம், 'அப்ரோப்ரியேஷன் பில்'லில் கடைசியாகப் பேசப்போகிறோம் இப்படிப்பல கட்டங்கள் இருக்கிற காரணத்தினாலே அந்தக் கட்டங்களில் இப்படிப்பட்ட நிலைமைகளை விவாதிக்கிறோம். இந்நில் கட்சியைப்பார்க்கவில்லை அரசாங்கம், ஒருபெரிய நெருக்கடியைச் சமாளிப்பதற்காக, சகல கட்சியினரும், [illegible] எதிர்க்கட்சி மட்டுமல்லாமல் (குறுக்கீடு) கூட்டுச் சக்தி என்கிறார்கள்,



கூட்டிலே தப்பில்லை, கூட்டிலே நம்பிக்கையோடு இருப்பவர்கள். தனி மரம் தோப்பாகாது, தென்னந்தோப்பு என்றால் 10 மரங்கள் இருந்தால் தான் தோப்புத்தானே தவிர, தனிமரம் இருந்தால ஆகாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஒரே ஜாதியாக இருந்தால்தான். பல ஜாதிகள் இருந்தால் அல்ல.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பல ஜாதிகள் என்கிறார்கள். ஒரு ஜாதியோ, பல ஜாதியோ. மற்றைய சகோதரக் கட்சிகளும், எல்லாக் கட்சியினருடைய ஒத்துழைப்பையும் கொண்டு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இதற்குப் பரிகாரம் தேடுவதிலே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நல்ல ஒத்துழைப்பை அளிப்பார்கள் என்று கருதி, என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் முற்ட அவர்கள், தங்களுக்கு உரிமைகள் எல்லாம் வேண்டுமென்று சொல்கிறார் 10-3 கள். உரிமைகள் எல்லாம் நான் பலமுறை சொன்னதுபோல, நாமெல்லாம் கூடி தயாரித்த சட்டமன்ற விதிகளிலே இருப்பவைதான். 41-வது விதியின்கீழ் அறிக்கை கொடுத்தால், அந்த அறிக்கைமேல் விவாதம் நடத்தலாமா என்பதற்கு விளக்கம் கொடுத்துள்ளார்கள்.

There shall be no debate on such statement at the time it is made என்று சொல்லிவிட்டார்கள். அது மட்டுமல்ல, 41-வது விதியின்கீழ் தொடர்ந்து But the Speaker may at his discretion permit one or two questions by the same member by way of elucidation என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இது 41-வது விதியின்கீழ் அளிக்கப்படும் அறிக்கை சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 82-வது விதியின்கீழ அமைச்சர் அறிக்கை வருகிறநேரத்திலே, A statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker என்று இருக்கிறது. அதற்கடுத்து, There shall be no debate on such statement at the time it is made என்றுதான் இருக்கிறது. அதற்குப் பிறகு பேரவைத் தலைவர் விரும்பினால் கேட்ட உறுப்பினர்களுக்கு விளக்கம் பெறுவதற்கு இரண்டொரு கேள்விகள் அனுமதிக்கப்படலாம் என்று சேர்க்கப்படவில்லை. (குறுக்கீடு) அது வேறு. கொடுக்கப்பட்டிருக்கிற விதிகளில் அப்படி சேர்க்கப்படவில்லை. என்னிடத்திலே கொடுத்திருக்கின்ற விதிமுறைகளிலே இல்லை. மன்ற உறுப்பினர்கள் எல்லாம், இப்படி நடத்துங்கள் என்று சேர்ந்து எழுதிக் கொடுத்திருக்கிற விதிமுறைகளின்படி நான் மன்றத்தை நடத்தக் கடமைப் பட்டிருக்கிறேனா, இல்லையா ? எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதற்கு விளக்கம் தரவேண்டும், எல்லோருமாக சேர்ந்து பேரவைத் தலைவருக்கு ஒரு பொறுப்பைத் தந்திருக்கிறார்களே, அந்த பொறுப்பை நல்லமுறையிலே பேரவைத் தலைவர் நிறைவேற்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் துணை புரியவேண்டாமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகருக்குத் துணை புரிவதிலே என்னைவிட பொறுப்புள்ளவர்கள் இருக்க முடியாது என்பதை மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்திலே அன்று முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதி, இந்த சட்டசபையிலே எதிர்க் கட்சித்தலைவர்அவர்களுக்கு எல்லா மரபுகளும்,உரிமைகளும் உண்டு என்பது. எதிர்க்கட்சித் தலைவரைப்பற்றி அவர் சொல்லியதை சபாநாயகர் அவர்கள் தயவுசெய்து யோசித்துப் பார்க்கவேண்டுமென்பது மட்டுமல்ல, இன்னொரு விஷயத்தைச் சொல்லுகிறேன், சபாநாயகர் கோபித்துக்கொள்ளக்கூடாது. நான் பாராளுமன்றத்திலே உறுப்பினராக இருந்திருக்கிறேன். அப்பொழுது 82-வது விதியின்கீழ் அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப்பின் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. இலண்டனிலே பாராளுமன்ற சபையைப்

பார்க்கும்படியான பாக்கியத்தைப் பெற்றிருக்கிறேன். உலகத்திலே இருக்கும்படியான எல்லா சபைகளையும் பார்க்கும்படியான சந்தர்ப்பம் இந்த துரதிருஷ்டசாலிக்குக் கிடைத்திருக்கிறது. அங்கெல்லாம்கூட, சட்டம் ஒழுங்கு எல்லாம் இருந்தாலும்கூட, இதெல்லாம் ஒரு மரபுதான். நான் ஒன்று சொல்கிறேன், தயவு செய்து கோபித்துக் கொள்ளக் கூடாது. சபாநாயகர் வந்தால் எழுந்துகொள்ள வேண்டுமென்று விதியிலே இருக்கிறதா ? தயவு செய்து கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எல்லோரும் என் எழுந்து கொள்ளவேண்டும் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எழுந்துகொள்ள வேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படியென்றால் சரி. ஒரு மரபு, ஒழுக்கம், கட்டுப்பாடு, மனிதாபிமானம்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் உட்காருங்கள், உட்காருங்கள் என்று சொன்னால்கூட கோபம் வரும். மரபு என்று சொல்வது நடைமுறையிலே நல்ல வழககத்தாலே வருவது, நாளாவட்டத்திலே வருவது பிறகு சட்டமாகிறது. இப்படி அறிக்கை கொடுத்து பிறகு விளககம் பெறுவது எந்த நாளிலே இருந்து வழக்கமாக வந்திருக்கிறது ? பலமுறை வழக்கமாகி வந்தால் மரபாகி விடும். எதிர்க்கடசித் தலைவர் அவர்கள் பாராளுமன்றத்தைப் பார்த்தார் கள். உலக பேரவைகளையெல்லாம் பார்த்தார்கள், எனக்கு அப்படிப்பட்ட வாய்ப்பெல்லாம் இல்லை. நமது 250 சட்டபேரவை விதிகளுக்குள்ளே தான் நான் சுற்றிச்சுற்றி வரவேண்டியிருக்கறது. இதை விரிவாகக் கொடுத்தால், பிறகு கேள்வியே இல்லை. என்னிடத்திலே கொடுத்த கடமையை நான் நிறைவேற்ற வேண்டும். எதிர்ககட்சித் தலைவர் அவர்களுக்கு நிறைய வாய்ப்பிருக்கிறது. அந்த வாய்ப்பான நேரத்திலே எழுந்து கேட்கலாம். ஆனால், 82-வது விதியின் கீழே அமைச்சர் அறிக்கை அளித்த பின்னர் அதன்மேல் ஒரு பிரச்சினையைக் கொண்டு வருவாரானால் தவறான பழக்கமாகி, அப்படி அமைச்சர்கள் அறிக்கை கொடுக்கின்ற நேரத்திலே உறுப்பினர்கள் எழுந்து விளக்கம் கேட்கின்ற முறை வந்தால் நன்றாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொளகிறேன்.

**திரு. இல. பலராமன்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார், நான் விதி 41-ன் கீழ் 1969-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22-ம் தேதி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் தலைவர் அவர்கள் மூலமாகக் கொடுத்தேன். அதற்கு இது வரையில் பதில் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயிண்ட் ஆப் ஆர்டரின்கீழ் வராது. பேரவைத் தலைவா அறையில் வந்து கேட்கவேண்டும். நீங்கள் கொடுத்ததைப்பற்றிக் கேள்வி கேட்பதற்கு......

**திரு. இல. பலராமன்:** அதை 17-ம் தேதி, நேற்று கொண்டுவருவதாகச் சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நான் வாயால் சொன்னேன்.

**திரு. இல. பலராமன்:** வாயால்தான் சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது நான் வாயால் சொன்னது, எழுத்து மூலமாக இன்னும் கொடுக்கவில்லை.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே நீங்கள் இந்த சட்டமன்றத்தை நடத்துவதற்கு எங்களுக்கு ஒரு விதியை அச்சடித்துக் கொடுத்திருக்கிறீர்கள். நான் இந்த ஒரு வாரமாகவே இந்த சட்டமன்றத்தில் பார்க்கின்ற நிகழ்ச்சிகள், சில சமயங்களிலே மரபுகள் என்று





அனுமதிக்கிறீர்கள். என்னென்ன மரபுகள் என்று தெரிந்தால் எங்களுக்கும் அதிலே புகுந்துக்கொள்வதற்கு வாய்ப்பிருக்கும். ஆகவே, மரபுகளுக்கும் ஒரு விதியைச் செய்யப்போகிறீர்களா ? அல்லது எங்களுக்கு ஒரு விதியைக் கொடுத்துவிட்டு, மரபுகள் என்று சொல்லி வேறு ஒரு விதியைக் கொடுக்கப்போகிறீர்களா ? என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. டி. மார்டின் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைக்கு 27 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். நாள்தோறும் இப்படியே பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பினால் காலம் போகிறது.

THIRU T. MARTIN : I will be brief.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி, சொல்லுங்கள்.

THIRU T. MARTIN : In the set up we have so far been following the Leader of the Opposition is here and the Leader of the Opposition is also having certain rights even though they are not mentioned in these rules. He is having certain rights by convention. I want to know whether the Leader of the Opposition has got a right, whether by written rule or convention to intervene at any stage of the proceedings of this House to elicit information from the Ministry. I want your ruling on the same.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு மார்டின் அவர்கள் சட்டம் படித்தவர். நான் பல முறை சொல்லியிருக்கிறேன். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால், இந்த விதிமுறைகளிலே மாறுபாடிருந்தால் அதற்காக ஒழுங்குப் பிரச்சினை எழுப்புங்கள். மார்டின் அவர்கள் விளக்கம் கேட்கிறார். அது எப்படி ஒழுங்கு பிரச்சினையின் கீழே வரும்? பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து எதையாவது பேசுவதை உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## (3) 1969--70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீதான வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் மிக முக்கியமான, மனிதன் உயிர் வாழ்வதற்குப் பிரதானமான வேளாண்மை, அதனுடைய தொடர்பான மீனளம், கால்நடை வளர்ப்பு, காட்டு வளத்துறை, சிங்கோனா போன்ற முக்கியமான பொருள்களைப் பற்றி இங்கே விவாதிக்க இருக்கிறோம். அதனுடைய தொடர்பான வேளாண்மை மூலதனச் செலவு குறித்தும், காட்டுவள மூலதனச் செலவு குறித்தும் இங்கே கனம் அங்கத்தினர்கள் தங்களுடைய சீரிய கருத்துக் களைக் கூற இருக்கிற நல்ல நேரத்தில் அவர்களுடைய பொன்னான நேரத்தை நான் எடுத்துக்கொள்ளாமல், எதிர்க்கட்சித் தலைவர் அவர் களுக்கும் இந்த விவாதத்திலே கலந்துகொள்ள இருக்கிற ஏனைய அங்கத்தினர்களுக்கும் நல்ல சந்தர்ப்பம் ஏற்படுத்த வேண்டுமென்ற நிலையில் என்னுடைய உரையை* சுருக்கமாக 5 புத்தகங்களில் வெளியிட்டு இருக் கிறேன். அவைகளை நான் பேசியதாக சட்டமன்ற நடவடிக்கைகளில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நாளில், குறிப்பாக, இது கட்சிகளுக்கு அப்பாற்பட்ட பிரச்சினை என்று எடுத்துக்கொண்டு, தங்களுடைய அரிய கருத்துக்களைக் கனம் அங்கத்தினர்கள் தெரிவிக்க வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக

---

* 131–196-ம் பக்கங்களில் 1 முதல் 5 இணைப்புக்களாக அச்சிடப்பட்டிருக் [illegible]

நான் பதில் அளிப்பதற்குக் குறைந்தது ஒரு மணி நேரமாவது ஒதுக்க வேண்டும். கனம் அங்கத்தினர்கள் நிறைய பேசினால் இன்று மாலையிலும் இந்த நிகழ்ச்சியை வைத்துக்கொள்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஒத்துழைப்பு தருவாரானால், சட்டமன்றத் தலைவருடைய அனுமதியின்பேரில் நீங்கள் முறைப்படி என்ன முடிவு எடுத்தாலும் கட்டுப்பட்டு, இந்த விவாதத்திற்கு பதில் அளிக்க இருக்கிறேன் கடைசியாக என்று கூறி, இப்பொழுது கனம் அங்கத்தினர்கள் தங்களுடைய சிரிய கருத்துக்களை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார். நமது பட்ஜெட் விவாதத்தைத் துவக்கியது முதல் இதுவரையில் ஒவ்வொரு டிமாண்டாக நாம் விவாதித்து வந்தோம். எல்லா அமைச்சர்களும் அவரவர்களுடைய உரைகளை ஆங்கிலத்திலும், தமிழிலும், இரண்டிலும் கொடுத்தார்கள். இப்பொழுது விவசாய அமைச்சர் மாத்திரம் ஆங்கிலத்தில் இந்த பிரோஷர்களை (ஸ்பீச்சஸ்) கொடுக்கவில்லை. (They were not supplied to us) ஏன் கொடுக்கவில்லை ? இனியாகிலும் அப்படி ஆங்கிலத்திலும் கொடுப்பதற்கு முயற்சிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திரு. விநாயகம் அவர்கள் தமிழர் என்ற காரணத்தினால், தமிழில் படித்துப் புரிந்துகொள்வார்கள் என்ற காரணத்தினால், இங்கு தமிழில் கொடுத்தேன். தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்பதில் திரு. விநாயகம் அவர்கள் மாறுபட்ட கருத்து கொண்டவர் அல்ல என்பது எனக்குத் தெரியும். கனம் அங்கத்தினர் அவர்கள் ஆங்கிலத்திலும் வேண்டும், ஆங்கிலத்தில் வருவதைப் படித்துவிட்டு வந்துதான் இதிலே பேசவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்குமானால், அவர்களுக்கு வேண்டுமானால், நான் ஆங்கிலத்தில் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். எந்த அங்கத்தினரும் ஆங்கிலத்தில்

(THIRU K. VINAYAKAM : It is the privilege of a member )

கொடுக்கவேண்டுமென்று விரும்பவில்லை. சட்டமன்றத்தில் தமிழ் தான் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்லுகிறபொழுது ஆங்கிலத்தில் கொடுக்கவேண்டும் என்று எந்த அங்கத்தினரும் வற்புறுத்துவதாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** திரு. விநாயகம் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு தமிழில் ஏன் கொண்டுவரவில்லை என்று கேட்டார்கள். ஆகவே, நல்ல வகையில் எடுத்துக்காட்டாக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மற்ற அமைச்சர்களுக்கும் முன்னோடியாக தமிழிலே கொண்டு வந்ததற்காக அவர்களைப் பாராட்டவேண்டும். இதிலே ஒழுங்குப் பிரச்சினை ஒன்றுமில்லை. இது வரவேற்கக்கூடிய பிரச்சினை தான். இரண்டு நாட்களுக்கு முன்பு, 'ஏன் தமிழிலே வரவில்லை?' என்று கேட்டார்கள். இன்று 'ஆங்கிலத்தில் ஏன் கொண்டு வரவில்லை?' என்று கேட்கிறார்கள். நாளைக்கு ஒன்று, வேளைக்கு ஒன்று சொல்வது என்பது கூடாது. (ஆளும் கட்சியினர் ஆரவாரம்). சில அடிப்படையான, உறுதியான கொள்கைகளை வைத்திருக்கிறோம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் விவசாயத் துறையில் தமிழ் எளிதாக வரமுடியும், மிக எளிதான சில சொற்களைக் கையாளக்கூடிய தமிழினுடைய வளர்ச்சிக்கு ஒரு நல்ல வளர் நிலமாக இருக்கும் வகையிலே இதைத் தமிழிலே கொடுத்திருக்கிறார். ஆகவே அவர் நமது பாராட்டுதலுக்குரியவர். அந்தப் பாராட்டுடன் நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் இதைத் துவங்கலாம்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சட்டமன்ற விதி 61-வது விதியின்படி இங்கே நடவடிக்கை ஆங்கிலத்தில் அல்லது தமிழில் நடக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.



ஆகவே, தமிழோடு ஆங்கிலத்திலும் இருந்தாகவேண்டும் என்று கேட்பதற்கு விதி ஒன்றும் இங்கு இடையாது. ஆங்கிலம் அல்லது தமிழ் என்றால், தமிழில் பேசக்கூடிய, கேள்விகள் போடக்கூடிய அனுபவம் படைத்த ஒருவர் ஆங்கிலத்தில் வேண்டும் என்று கேட்பதற்கு உரிமை உண்டா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவர் யோசனையில் அது தான் இருக்கிறது. தமிழிலும் இருக்கலாம், ஆங்கிலத்திலும் இருக்கலாம். அது உரிமை. அந்த உரிமை திரு. விநாயகத்திற்கு இருப்பதை நாம் தடை செய்ய முடியாது. ஆங்கிலம் அல்லது தமிழ் என்றாலே எப்படி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழிலே சொல்வதை அவர்கள் தடை செய்ய முடியாதோ, அதேமாதிரி ஆங்கிலத்தில் வேண்டும் என்று திரு. விநாயகம் கேட்பதையும் தடை செய்ய முடியாது. இரண்டும் இருக்கிறது நமது விதிமுறையின்படி.

**திரு. ம. பொ. சிவஞானம் :** ஆங்கிலம் அல்லது தமிழ் என்று இருப்பதால் இரண்டில் ஒரு மொழியில் வரலாம் என்று தான் அந்த விதி என்பதற்கு ஒரு தீர்ப்பு இருந்தால் நலலது.

**திரு. கே. விநாயகம் :** நான் தமிழுக்கு விரோதி அல்ல. தமிழில் பேசத்தான் விரும்புகிறேன. தமிழில்தான் இருக்கவேண்டும். தமிழ் தான் ஆட்சி மொழி. ஆனால் நம்முடைய விதிகளில் என்ன கூறப் பட்டிருக்கிறது என்றால்,

**The business of the Assembly shall be transacted in English or in Tamil.**

ஆகவே, அப்படி இருப்பதினாலே ஆங்கிலத்திலும் நாம் நடவடிக்கை நடத்தலாம் என்ற உரிமை இருக்கிறது. ஆதலால் தான் ஆங்கிலத்திலும் புத்தகங்கள் தரக்கூடாதா என்று கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. விநாயகம் அவர்களுக்கு தமிழை விட ஆங்கிலத்தில் நல்ல பயிற்சி உண்டு. **English or Tamil** என்று கூறுகிற நேரத்தில், ஆங்கிலத்திலும் இருந்தாகவேண்டும் என்று கூறுவது ஆகாது.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : **It is not obligatory.**

MR. SPEAKER : English or Tamil. என்பதற்குப் பொருள் ஆங்கிலம் அல்லது தமிழ். அப்படிச் சொல்கின்ற நேரத்தில் ஆங்கிலத்திலும் இருந்தாகவேண்டும் என்று சொல்ல முடியாது. ஆகவே, இதில் ஒன்றும் ஒழுங்குப் பிரச்சினை இல்லை.

இப்பொழுது திரு. நல்லசாமி அவர்கள் பேசலாம். 28 உறுப்பினர்கள் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாலையிலும் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெளி ஊருக்கு $4\frac{1}{2}$ மணிக்குப் போகவேண்டிய நிலைமை இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களும் $4\frac{1}{2}$ மணிக்குப் போகவேண்டிய நிலைமை இருக்கிறது. பேரவைத் தலைவர், துணைத் தலைவரை வைத்துவிட்டுப் போகலாம். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாலையில் வெளி ஊருக்குப் போக இருப்பதையொட்டி......

[1969 மார்ச் 18

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேளாண்மையில் மிகுந்த அக்கறை உள்ளவர்கள் என்று இது நாள் வரையில் கருதிக்கொண்டிருந்தேன். நாங்கள் மாலையிலே வைத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். அவர்கள் வெளி ஊருக்குப் போகவேண்டும் என்று விரும்புவதாகச் சொல்லப்படுகிறது. உண்மையில் இந்த விவாதம் மாலையிலும் நடந்தால் ஒரு நல்ல பயனுள்ள விவாதமாக இருக்கும் என்று கருதினால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாலை வரையிலும் இருந்து இந்த விவாதத்தை நடத்துவார்கள் என்று நம்புகிறேன். அது அனைவருக்கும், இந்த நாட்டிற்கும் பெரிய உதவியாக இருக்கும். ஆகவே தான் மாலையிலும் விவாதம் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் இந்த விஷயத்தில் உங்களோடு ஒத்துழைக்கிறார்கள் போலும் !

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் பூரணமாக என்னுடைய ஒத்துழைப்பைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். நான் கடைசியிலே பேசுவதற்குப் பதிலாக, இடையிலே குறுக்கிட்டுப் பேசிவிடுகிறேன். பிறகு என்னுடைய கட்சி அங்கத்தினர் 'வைண்டு அப்' பண்ணுவார்கள். ஒரு நாள் அல்ல, இரண்டு நாட்களுக்குக் கூட விவாதம் வைத்துக் கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். இதற்கு மட்டும் அமைச்சர் அவர்கள் தாராளமாக இருப்பதுபோல், விவசாயிகளுக்குச் சலுகைகள் கொடுப்பதிலும், விலையை அதிகரித்துக் கொடுப்பதிலும் தாராளமாக இருந்தால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆகவே, இப்பொழுது திரு. நல்லசாமி அவர்கள் பேசத் தேவையில்லை. 28 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஒவ்வொரு உறுப்பினரும் ஐந்து நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ளவேண்டாம்.

**திரு. எ. பட்டாபி நாயுடு :** சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே என் கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல இருக்கிறேன். இந்த நாடு ஒரு விவசாய நாடு. இந்த நாட்டிலே ஏராளமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் இருக்கின்றன. ஏராளமான ஆறுகள் இருக்கின்றன, ஏரிகள் இருக்கின்றன. பருவ மழை இருக்கிறது. உழைப்பதற்கு ஏராளமான விவசாயிகள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். இவ்வளவும் ஒருங்கே அமையப்பெற்ற இந்த நாட்டிலே இந்த நாட்டு மக்களுக்கு உணவு அளிக்க இயலாத நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதை அறிந்தது, காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபொழுது, வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டைவிட்டுச் சென்ற காலத்தில் நாம் அன்னிய நாடுகளை எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம், உணவுப் பொருள்களை இறக்குமதி செய்துகொண்டிருந்தோம், ஆனால், அந்த நிலையிலே போய்க்கொண்டிருந்தால், நம் நாடு வாழ முடியாது, நம்மை நாமே காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்கின்ற ஒரு எண்ணத்தில், அன்றைய காங்கிரஸ் அரசாங்கம் திட்டமிட்டது. இதற்கு ஒரு நீண்டகால திட்டத்தை வகுத்து, நாம் இந்த நாட்டில் முன்னேறவேண்டுமானால், விவசாயம் முன்னேறவேண்டும், கிராம மக்கள் முன்னேறவேண்டும் என்கின்ற அடிப்படையில் நீண்ட கால திட்டத்தை தீட்டியது. அதன் அடிப்படையிலே அன்று நம்முடைய காங்கிரஸ் ஆட்சியானது 20 ஆண்டு காலத்தில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி, விவசாயிகளுக்குப் பல நன்மைகளைச் செய்து இருக்கிறது. முதலாவதாக பல அணைகளைக் கட்டி, பல ஏரிகளைக் கட்டி, புஞ்சை நிலங்களையெல்லாம் நஞ்சை நிலமாக மாற்றியது. அதுமட்டுமன்றி, எங்கெங்கு வசதிகள் இல்லாமல் இருந்ததோ, அங்கெல்லாம், உணவுப் பொருள்களை விளைவிப்பதற்கு ஏரிகள் வெட்டுவதற்கு வாய்ப்புகள் இல்லாத இடங்களிலெல்லாம், விவசாயிகளுக்குப் பண உதவி செய்து, அவர்களை முன்னேற்றம் அடையச் செய்திருக்கிறது.



1969 மார்ச் 18] [திரு. எ. பட்டாபி நாயுடு]

அந்த முறையில் கிணறுகளை வெட்டுவதற்காக இலவசமாக பண
உதவி கொடுக்கப்பட்டது, கிணறுகளை வெட்டுவதற்காக கடன் வசதி அளிக்கப்
பட்டது, கிணறுகள் வெட்டுவதற்கு மின்சார வசதி செய்து தரப்பட்டது,
மின்சாரவசதி செய்ததுமட்டுமின்றி, மின்சார இயந்திரங்களை வாங்குவதற்
காக அந்த அரசாங்கம் பண உதவி செய்துவந்தது. இத்தகைய
முறையில் இந்த 20 ஆண்டு காலத்தில் காங்கிரஸ் ஆட்சி பல நல்ல
பணிகளைச் செய்ததால், இந்த நாடு உணவு விஷயத்தில் ஓரளவுக்கு
முன்னேற்றம் அடைந்துகொண்டு வந்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், விவசாயிகளுக்கு வேண்டிய உரத்தையும்
அரசாங்கம் அளித்துவந்தது. விவசாயிகளுக்குத் தேவையான நூதன
முறையில் விவசாயம் செய்வதற்காக டிராக்டர்கள், புல்டோசர்கள்
இவைகளை விவசாய மக்களுக்குக் கொடுத்துவந்தது. சிறிய விவசாயிகள்
தங்களுடைய நிலத்தை உழுவதற்கு டிராக்டர்கள், புல்டோசர்கள்
வாங்குவதற்கு சக்தியற்றவர்களாக இருந்தால், அரசாங்கமே இவற்றை
வாங்கி மக்களுக்கு வாடகைக்குக் கொடுத்து வந்தது. இத்தகைய
முறைகளில் இந்த 20 ஆண்டு காலத்தில் நாட்டிலே பல முன்னேற்
றங்களுக்கு காங்கிரஸ் அரசாங்கம் வழிவகை செய்து வந்திருக்கிறது.

அது மாத்திரமல்ல. இந்த நாட்டில் உள்ள கிராமங்கள் முன்னேற
வேண்டுமென்றால், கிராமங்களுக்கு ரோடுகள் மிக மிக அவசியமானவை.
அதற்கு, அன்றைய காங்கிரஸ் அரசாங்கம் ஒவ்வொரு கிராமத்திற்கும்,
ரோடுகள் அமைத்து விவசாயக் கருவிகளையும், உற்பத்தியான தானியங்
களையும் விற்கவும் வேறு வழிகளில் எடுத்துச் செல்லவும், வாய்ப்பு
செய்து கொடுத்திருந்தார்கள். கிராம மக்களிடத்தில் உள்ள குழந்தை
கள் படிக்க வேண்டும் என்று, மூன்று நான்கு மைல்கள் நடந்து
போய்ப் படிக்க இயலாது என்று, ஐந்து வயதுக் குழந்தைகள், கண்ணி
ருந்தும் விவசாயிகள் குருடர்களாக இருக்கிறார்கள் என்று அந்தக்
காரணத்தை அடிப்படையாகக் கொண்டு, 300 ஜனத்தொகை உள்ள
கிராமந்தோறும் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி, மக்களுக்கு ஓரளவிற்கு,
கண்ணில்லாதவர்களை கண்ணுள்ளவர்களாக ஆக்கிவைத்தார்கள். ஆனால்
இந்த அரசாங்கம், இன்றைக்கு வந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக
அரசாங்கம், என்ன செய்தது என்றால் பள்ளிக்கூடங்களுக்கு மூடுவிழா
செய்தார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. அது மாத்திரமல்ல.
ரோடுகளை என்ன செய்தார்கள்? கிராமப் பகுதி ரோடுகளையெல்லாம்,
காங்கிரஸ்காரர் காலத்தில் போட்ட ரோடுகளையெல்லாம், திராவிட முன்
னேற்றக் கழக அரசாங்கத்தின் காலத்தில் ரோடுகள் போடாவிட்டாலும்
அதைப் பற்றிக் கவலையில்லை, போட்டிருந்த ரோடுகளையெல்லாம் பழு
காரணமாக அறுபட்டுப் போய் கிராமங்களுக்குச் செல்ல முடியாத
அவலநிலை ஏற்பட்டிருப்பதை, சரிப்படுத்தாத நிலை ஏற்பட்டு, இன்றைய
அரசாங்கம் அதைச் செய்ய இருப்பதாகத் தோன்றவில்லை. ஆகவே,
இந்தக் கிராம மக்களுடைய முன்னேற்றம் தடைபட்டிருக்கிறது. கிராம
மக்களுடைய முன்னேற்றத்தைத் தடைப்படுத்த இந்த அரசாங்கம்
பாடுபடுகிறது. உண்மையிலேயே, கிராம மக்கள் முன்னேற்றத்தில்
அக்கறை கொள்ளவில்லை இவர்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

அது மாத்திரமல்ல. இந்த மன்றத்திலேயே அடிக்கடி நம்முடைய
கனம் அங்கத்தினர்கள், திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள்,
பேசுகின்ற நேரத்தில், என்ன சொல்லுகிறார்கள்? காங்கிரஸ் கட்சிக்கு
என்ன அடிப்படைக் கொள்கை இருக்கிறது? என்ன அடிப்படைத்
திட்டம் இருக்கிறது? என்று கேட்கிறார்கள். அவர்களிடம் ஒரு திட்டமும்
இல்லை, ஒரு கொள்கையும் இல்லை என்று சொல்லுகிறார்கள். யார்
சொல்லுகிறார்கள்? எந்தக் கொள்கையும் இல்லாத, எந்தத் திட்டமும்
இல்லாத, திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரஸைப் பார்த்துச்
சொல்லுகிறது. இந்த திராவிட முன்னேற்றக் கழகம் எந்தக் கொள்
கையை வைத்துக்கொண்டிருக்கிறது? நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்
தைச் செயல்படுத்த இருக்கிறார்கள். ஒவ்வொரு அங்கத்தினரும்
சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அன்றையதினம், நிதி அமைச்சர் 1969-70-ம் ஆண்டு நிதி நிலே அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசியபோது, இங்கே உள்ள திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கைநோக மேசையைத் தட்டினுர்கள். எதற்குத் தட்டினுர்கள்? சேலத்தில் இரும்பு உருக்காலேயை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருககிறது என்பதற்காக.

**மாண்புமிகு பேரவைத் தலேவர் :** விவசாயத்தைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு. எ. பட்டாபி நாயுடு :** இதுவும் அதில் வருவதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலேவர் :** இல்லே, இல்லே. விவசாயம், கால்நடை—இவை பற்றிப் பேசுங்கள்.

**திரு. எ. பட்டாபி நாயுடு :** அதிலேயும் பேசுகிறேன். தட்டப்பட்டது. எதற்காகத் தட்டப்பட்டது? காங்கிரஸ்காரர்கள் நான்காவது திட்டத்திற்கு என்று போட்டு வைத்திருந்ததை, இந்த அரசாங்கம் செயல்படுத்துகிறதே அல்லாது, இந்த அரசாங்கம் தாஞக அதைக் கொண்டு வரவில்லே. அது மாத்திரமா? தூத்துக்குடி விஸ்தரிப்புப் பற்றிச் சொல்லும்போதும் மேசையைத் தட்டினுர்கள். அதுவும் நான்காவது திட்டத்தில் இருப்பதற்காக. அதுவும் காங்கிரஸ் செய்தது. இவற்றை நான் என் சொல்லுகிறேன் என்ருல், காங்கிரஸிடம் எந்த விதமான திட்டமும் இல்லே, எந்த விதமான கொள்கையும் இல்லே என்று சொல்லுகிருர்களே, அதற்காக. அவற்றிற்கு விளக்கம் சொல்லுவதற்காக இதையெல்லாம் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. வேறென்றும் இல்லே.

இன்றைக்கு ஒருபோகத்தை இரு போகம் ஆக்கிவிட்டோம் என்கிருர்கள். சற்று சிந்தித்துப்பார்க்க வேண்டும். எப்படி இரு போகம் ஆக்கினுர்கள்? அன்றைக்குக் கட்டப்பட்ட அணைக்கட்டுகள் 50 அடியிலிருந்து 60 அடிக்கு உயர்த்திவிட்ட பிறகு இருபோகம் ஆக்கினுர்களா? தடுப்பு அணைகள் அமைத்து அதன் பிறகு இருபோகம் நெல்லாக்கினுர்களா? நன்ருகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பழைய அணைகளே காங்கிரஸ்காரர்கள் கட்டியிருந்தார்கள். அவற்றை வைத்துக் கொண்டு, இரு போகத்தை செயதிருக்கிருர்கள். அதிலே நம்முடைய காவேரிப்பாக்கம் (கே. ஆர். பி.) கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தில் இருபோகம் பாழ் அடையும் நிலேயில் இன்றைக்கு அவல நிலேயாக்கப்பட்டிருக்கிறது. சென்ற போகத்தில் இருபோகத்திற்குத் தண்ணீர் விட்டார்கள். தண்ணீரானது திட்டமிட்டு விடப்பட்டது. என்ன சொன்னுர்கள்? எவ்வளவு தண்ணீர் தேவையோ அத்தனே நாளுக்கு வினியோகிக்க முடியும். மேற்கொணடு முடியாது என்று சொன்னுர்கள். ஆனுல் அரசாங்கம் வற்புறுத்தியதன் பேரில், எப்படியும் தண்ணீர் விடவேண்டும், இரு போகம் ஆக்கியே ஆகவேண்டும் என்று சொன்னதன் பேரில், விட்டார்கள் என்ற நிலே இருந்தது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 250 செலவான பிறகு மூன்று மாதங்கள் கூட இல்லே, ஒரே மாதத்தில் வாய்க்காலுக்குக் கீழே தண்ணீர் போய்விட்டது. அதன் பிறகு இந்த நஞ்சை நிலங்களுக்குத் தண்ணீர் இல்லாமல், நாற்று உலர்ந்து, அந்த விளேச்சலும் பாழாகிப் போய்விட்டது. ஒரு ஏக்கருக்கு ரூ. 250 செலவாகியிருக்கிறது. 7,500 ஏக்கர் மிக மிக மோசமாகப் போய், விவசாயிகள் அல்லல்படுகிருர்கள். அது போனுலும், தண்ணீர் எப்படி விடப்படுகிறது? இன்றைக்குக் கூட பற்ருக்குறை தண்ணீராகத்தான் அமைந்திருக்கிறது. பற்ருக்குறை தண்ணீராலுல், இன்றைக்கு இருக்கிற நெற்பயிர்கள்கூட நாசம் அடையும் நிலேதான் இருக்கிறது. அதைப் பார்த்து அதிகாரியிடத்தில் சென்று, எஞ்ஜினியரைக் கேட்டேன், "ஏன் நீங்கள் விட்டீர்கள், நிலம் பாழாகிப் போகிறதே, போன போகத்திலேயே நெல் பாழாகி விவசாயிகள் நஷ்டம் அடைந்தார்களே, இப்பொழுதும் அப்படிப்பட்ட நிலேயை உண்டாக்கப் போகிறீர்களா?" என்று. அவர் சொன்னுர், "நான் என்ன செய்வேன், விடு என்று சொன்னதால் நான் விட்டேன். விடச் சொன்னபோது விட்டோம்" என்று. "தண்ணீர் எவ்வளவு இருக்கிறது?" என்று கேட்டேன். "இன்னும் 25-ம் தேதி வரையில் இந்தத்



தண்ணீர் வரும், அதன் மேற்கொண்டு முறை ஸிஸ்டமாகத்தான் விடவேண்டிய நிலே இருக்கிறது, 15, 20 நாட்களுககு தாங்கும்" என்ருர்கள். "முறை ஸிஸ்டத்தில் விட்டால், இன்றைக்கு இருக்கும் நெற் பயிர்கள் அத்தனேயும் உலர்ந்து பயிர்கள் நாசமாகும், விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படும். ஆகையினுல் தான் முறை தவருது, ரெகுலராக அன்ருடம் விட்டு அந்த வகையில் செயல் படவேண்டும், அந்த முறையைக் கையாளவேண்டும்," என்று சொன்னேன். அவர் சொன்னுர், நாங்கள் வேண்டுமெனருல் இப்பொழுது போல 110 ட்யூடியில் தண்ணீர் விட்டு, 25-ந் தேதிக்குப் பிறகு 75 ட்யூடியில் தண்ணீர் விட்டால், ஏப்ரல் கடைசி வரையில் தண்ணீர் வரும், இந்தப் பயிர்களே ஓரளவிற்குக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்கிற எண்ணத்தைக் கொடுத்த பிறகு, அதை சீப் எஞ்சினியரிடம் தெரிவித்தபோது, அவரும் அப்படிப்பட்ட நிலேதான் இருக்கிறது என்ருர். ஆகவே, இந்தப் பயிர்களே பாதுகாக்க, 75 ட்யூடியிலே ஏப்ரல் கடைசிவரை தண்ணீர் விட்டாக வேண்டும் என்று அவரிடம் கேட்டதற்கு, அவரும் ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிருர்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலேவர் :** 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. எ. பட்டாபி நாயுடு :** இன்னும் முக்கியமான விஷயத்திற்கே வரவில்லேயே.

**மாண்புமிகு பேரவைத் தலேவர் :** நேரம் ஆகிவிட்டதே.

**திரு. எ. பட்டாபி நாயுடு :** இன்னும் ஏராளமான விஷயம் இருக்கிறதே, இது முக்கியமானது, விவசாயம்.

**மாண்புமிகு பேரவைத் தலேவர் :** விவசாயத்தை விட்டு விட்டு, வேறு எதையாவது பேசினுல் நான் என்ன செய்ய முடியும்? இரண்டு நிமிஷத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. எ. பட்டாபி நாயுடு:** சரி, உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. எஸ். ஜே. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலேவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள வேளாண்மைக் கோரிக்கையை ஆதரித்து, எனது கருத்துக்களேச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சரவர்கள் முன்பு கொண்டு வந்ததை விட, இந்த ஆண்டு ஏறக் குறைய மூன்று கோடி ரூபாய் அதிகமாகக் கொண்டு வந்திருக்கிருர்கள். அதற்காக என்னுடைய மனமார்ந்த பாராட்டுதலேயும், நன்றியையும் தெரிவிக்கிறேன். விவசாயத்தில் அவர்கள் ஆக்கமும், ஊக்கமும் கொண்டு நல்ல வழியில் இந்த இலாகாவை நிர்வகித்து வருகிருர்கள். இப்படிப் பட்ட நல்ல சாதனேகளுக்காக அமைச்சரவர்களேப் பாராட்டி, விவசாயிகளின் சார்பாக என்னுடைய நன்றியையும், பாராட்டுதலேயும் தெரிவித்துக்கொள்ளுறேன்.

முதலாவதாக, நேற்றைய தினம் பேசிய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ரெவின்யூ போர்டைப்பற்றி ஒரு விளக்கத்தைச் சொன்னுர்கள். முற்பகல் 11-00
அது வரவேற்கக்கூடிய அம்சமாகும். ஒரு விவசாயி ஒரு மனுவை அனுப்பினுலும், தாசில்தாருக்குப் போய், பின்னர் கலெக்டருக்குபோய், பின்னர் ரெவின்யூ போர்டுக்குப்போய் திரும்பிவர பல மாதங்கள் ஆகின்றன. முடிவு எடுப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. அப்படியின்றி, தாசில்தாருக்கோ கலெக்டருக்கோ அந்த மனுவின்மீது முடிவு எடுக்கப்படவேண்டிய பொறுப்பு இருக்கவேண்டும். இதனுல் நீண்ட கால தாமதத்தைத் தவிர்க்கலாம். ரெவின்யூ போர்டானது ஒரு காலத்தில் திறமையாகச் செயல்பட்டு வந்திருக்கலாம். இப்போதும் திறமையாக இயங்கி வருகிறது. ஆனுல் காலதாமதம் அதிகமாகிறது. ஆகவே நிதியமைச்சர் அவர்கள் ரெவின்யூ போர்டைக் கலேத்துவிடுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதற்காக அவருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ரெவின்யூ [illegible] கலேப்பதை வரவேற்கிறேன்.

[திரு. எஸ். ஜே. ராமசாமி] [1969 மார்ச் 18

இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தற்பொழுது நம் நாட்டில் விவசாயம் விஞ்ஞான முறையில் செய்யப்பட வேண்டும் என்பதாகும். படித்த வாலிபர்கள், கல்லூரியில் படித்த மாணவர்கள் மாட்டைக் கட்டி, ஏரைப் பிடித்து வயலில் உழுவதற்கு விரும்பமாட்டார்கள். படித்த மாணவர்களும் விரும்பி விவசாயத்தில் ஈடுபடக்கூடிய சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். படித்த வாலிபர்கள் பெரும்பாலும் உத்தியோகத்தை நாடிச் செல்கிறார்கள். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும்கூட தங்களுடைய பிள்ளைகளை விவசாயத்தில் ஈடுபடுத்தாமல் மெடிகல் காலேஜ் போன்ற வேறு துறைகளில் சேர்க்கிறார்கள். இந்த நிலைமையை நாம் மாற்றவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் தம்முடைய பிள்ளையை எங்கே அனுப்பியிருக்கிறார்?

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவர் அவர்களே, நவீன இயந்திரங்களை ஈடுபடுத்தி விவசாயத்தில் படித்த இளைஞர்கள் ஈடுபடவேண்டும். அப்பொழுது உற்பத்தியும் பெருகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தற்போது இருக்கும் உச்ச வரம்பு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இருப்பதைக் கொஞ்சம் குறைக்கவேண்டுமென்று நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதன் காரணமாக நடைமுறையில் நல்ல பலன் ஏற்படுமா என்பதைப் பார்க்கவேண்டும். ஆனால் நிலம் சிறு சிறு துண்டுகளாகப் போகக் கூடாது. உதாரணமாக ஒரு வீட்டில் நான்கு பேர் இருந்தால் அவர்களுக்கு இருக்கும் சிறு நிலத்தை நான்காகப் பிரிவினை செய்யக்கூடாது. ஒரு ஏக்கருக்கு குறைந்து பாகப்பிரிவினையே இருக்கக் கூடாது. நிலம் சிறுசிறு துண்டுகளாகப் போய்விட்டால் சாகுபடியும் குறையும். மேலும் சிறுசிறு துண்டு நிலங்களாக இருப்பதால் தகராறுகளும் உண்டாகக்கூடும்.

அடுத்தபடியாக, வட ஆர்க்காடு மாவட்டம் மிகவும் காய்ந்து போய் இருக்கக்கூடிய இந்த நேரத்தில் அதிகமாக பவர் டிரில்களை உபயோகித்து பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரை மேலுக்குக் கொண்டுவர வேண்டும். அப்பொழுதுதான் விவசாயம் செய்யமுடியும். ஆந்திர மாநிலத்தில், ஹைதராபாத்தில் இம்மாதிரியான பவர் டிரில்களை வைத்து தண்ணீரை வெளியே எடுக்கிறார்கள். காலை எட்டு மணிக்குப் போய் பொத்தானை அழுத்திவிட்டு வந்தால் மூன்றுமணி நேரத்திற்குள் பூமியைக் குடைந்து தண்ணீரை வெளியே கொண்டுவந்து விடுகிறது. இம்மாதிரியான பவர் டிரில், கட்டிரில், போன்றவைகளையும் நாம் உபயோகிக்க வேண்டும். இவைகளினால் அன்னியச் செலாவணி அதிகமாக ஆகும் என்று நினைப்பது தவறு. உடனடியாக இந்த அரசு, இத்தனை நாட்களில், இதைக் கொண்டுவரவேண்டும் என்று ஒரு காலகட்டத்தை நிர்ணயித்துக்கொண்டு ஒரு திட்டத்தைப் போட்டு, இந்தமாதிரியான மிஷின்களையெல்லாம் வாங்கிக் கொடுத்தால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். சென்னையில் "வில்லியம் ஜேக்"கம்பெனியிலும், "கேர்லிக்" கம்பெனியிலும் இம்மாதிரியான மெஷின்கள் இருக்கின்றன, ஆனால் அவற்றின் விலையோ ரூ. 25 ஆயிரம் என்று சொல்லப்படுகிறது. சாதாரண விவசாயியினால் அவ்வளவு விலைகொடுத்து அந்த மிஷினை வாங்கமுடியாது. ஒருவேளை நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அவ்வளவு விலை கொடுத்து அந்தமாதிரியான மெஷினை வாங்கலாம். என்னைப்போன்ற விவசாயி அதை வாங்க முடியாது. ஆகவே, அரசாங்கமே அதை வாங்கி வைத்துக்கொண்டு, விவசாயிகளுக்குக் கொடுத்து உதவ வேண்டும். இந்த மெஷின் மூலமாக ஊற்றுத் தண்ணீரை நாம் உபயோகிக்க முடியும். ஆகவே, இதை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜப்பான் நாட்டிலேகூட நல்ல சாகுபடி நடக்கிறது. ஒரு நபருக்கு 3 முதல் 5 ஏக்கர் வரை நிலம் இருக்கிறது. அவர்கள் விவசாயத்தில் [illegible] நவீன இயந்திரங்களைக்கொண்டு விவசாயத்தை நடத்துகிறார்கள். ஜப்பான்



1969 மார்ச் 18] [திரு. எஸ். ஜே. ராமசாமி]

நாட்டு அரசாங்கம் விவசாயிகளுக்குச் செய்யக் கூடிய எல்லா உதவிகளையும் சிபாரிசுகளையும் நம்முடைய அரசாங்கமும் ஏற்று நடத்தித் தர வேண்டும். அங்கே ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு பவர் டிரில் இருக்கிறது. இங்கே 30 ஏக்கர் நிலம் வைத்திருக்கக்கூடியவர்களிடத்தில்கூட ஒரு பவர் டிரில் இல்லையென்ற நிலைமை இருக்கிறது. அங்கே அறுவடை செய்வதற்கு இயந்திரங்கள் இருக்கின்றன. நடவு நடுவதற்கு இயந்திரங்கள் இருக்கின்றன. இம்மாதிரி ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொருவகையான இயந்திரங்கள் இருக்கின்றன. அந்தநாடு ஒரே இயந்திரமயமாக ஆகிவிட்டது. நாம் அப்படிச்செய்தால் இங்கே மனிதர்களுக்கு வேலையில்லையென்ற நிலைமை ஏற்பட்டு, வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது. நாம் விஞ்ஞான ரீதியில் விவசாயத்தை நடத்திச் சென்றால்தான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். உச்ச வரம்பு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இருப்பதைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ளலாம். நாம் அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். ஜப்பானிலே ஒரு ஏக்கருக்கு 40 மூட்டை நெல் விளைகிறது. இங்கே கூட ஐ. ஆர். 8 என்ற ரகம் ஏக்கருக்கு 40 மூட்டைகள் கிடைக்கின்றன. (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் இன்னும் இரண்டு நிமிடங்களில் தம்முடைய உரையை முடித்துக்கொள்ள வேண்டும். இன்னும் பேசுவதற்கு நிறைய உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவர் அவர்களே, விவசாயப் பயிர்களை அழிக்கும் பூச்சிகளைக் கொல்வதற்கு பூச்சி மருந்து விமானம் மூலம் தெளிக்கப்படுகிறது. ஆனால் இதில் தாமதம் அதிகம் ஏற்படுகிறது. வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் இதை நல்ல முறையில் செய்வார்கள் என்று நம்புகிறேன். பூச்சி மருந்து விமானம் மூலம் தெளிக்கப்படும்போது சில சமயங்களில் பக்கத்திலுள்ள புல் பூண்டுகளின் மீதும் படுகிறது. அந்தப் புல் பூண்டுகளை ஆடு மாடுகள் தின்றால் அவை இறந்து போகக்கூடிய நிலைமையும் உண்டாகிறது. பஞ்சாயத்து யூனியனில் இருக்கக்கூடியவர்களையும், விவசாய இலாக்காவில் இருக்கக் கூடியவர்களை இந்தத்துறையில் பயன்படுத்தவேண்டும். ரெவின்யூ போர்டை ஒழிப்பதைவிட முதலில் கிராமசேவக்குகளை ஒழிக்கவேண்டும்.

ஜப்பானில் விவசாயிகளுக்கு நாணய மதிப்பு கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் ஒன்று இருக்கிறது. அந்த நிறுவனம் எல்லா விவசாயிகளுக்கும் ஒரு ரிஜிஸ்ட்ரேஷன் அட்டையைக் கொடுத்துவிடுகிறது. அந்த அட்டையை வைத்துக்கொண்டு விவசாயி தனக்கு வேண்டிய பணத்தை கல்யாணம் போன்ற காரியங்களுக்கும், பிள்ளைகளைக் கல்லூரிகளில் படிக்கவைக்கும் காரியங்களுக்கும் வாங்கிக்கொள்ளலாம். நமது நாட்டில் பொதுவாக ஒருவருக்கு இருக்கின்ற சொத்தின்மீதுதான் மதிப்பு போடுவார்கள். ஜப்பான் நாட்டிலே ஒருவனுக்கு இருக்கவேண்டிய சொத்தின்மீது மதிப்பு போடுவதில்லை. அவனுடைய நிலத்தில் விளையும் தானியங்களின்மீதுதான் மதிப்பு போடுகிறார்கள். ரிஜிஸ்ட்ரேஷன் அட்டையில் விவசாயியின் நிலத்தில் விளையக் கூடிய தானியங்களின்மீது மதிப்பு போட்டிருக்கும் தனக்குத் தேவையான பணத்தை அந்த அட்டையைக் கொண்டு விவசாயி பெற்றுக் கொள்கிறான். நமது நாட்டில் சொத்தின்மீது கடன் கொடுக்கிறார்கள். அங்கே நிலத்தில் விளையும் தானியத்தின்மீதுதான் மதிப்பு போடுகிறார்கள். அதை வைத்துக்கொண்டு எந்தக் காரியத்திற்கு வேண்டுமானாலும் பணத்தை வாங்கிக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்து நிமிடங்கள் ஆகிவிட்டன. 30 பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இன்னும் ஒரு நிமிடத்தில் கனம் உறுப்பினர் முடித்துக்கொள்ளவேண்டும்.

(திரு. எஸ். ஜே. ராமசாமி தொடர்ந்து பேசவில்லை)

(அடுத்து, திரு. பி. வெங்கடசாமி தெலுங்கில் பேசினார்)

[1969 மார்ச் 18

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

THIRU T. MARTIN : Sir, on a point of order. The hon. Member (Thiru B. Venkataswamy) has spoken in a language which is not commonly understood by so many members of this House. So will the Chair provide simultaneous translation of his speech as and when he speaks in the Assembly as in vogue in the Parliament.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கு முன்னாலேயே இது பற்றி பேரவையில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. தெலுங்கில் பேசுவதற்கு இந்த உறுப்பினருக்கு உரிமையும் பேரவைத்தலைவரால் வழங்கப்பட்டிருகிறது. அப்போதே எழுப்பியிருக்கவேண்டிய பிரச்சினையை இப்போது எழுப்புவதில் பொருள் இல்லை.

***திரு. வ. க. இராமராசன்:** உதவி சபாநாயகர் அவர்களே, மாதவியுடன் இருந்து பிரிந்த கோவலனை தம் வாழ்வை வளப்படுத்திக்கொள்ள மதுரைக்கு அழைத்துச் சென்ற கண்ணகி அங்கே அவனை இழந்து புலம்பியதைப்போல, நாம் இன்றைக்கு பெரியாரிடம் இருந்து பிரிந்த அறிஞர் அண்ணா அவர்களை சட்ட மன்றத்திற்கு நம்முடன் அழைத்து வந்து, வங்கவிரிகுடாவிலே இழந்து, புலம்பிக் குழம்பிக்கொண்டிருக்கிறோம். அறிஞர் அண்ணா அவர்களுக்கு என் வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

விவசாய அமைச்சர் கொண்டுவந்த மானியக்கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல் லமுற்படுகிறேன். தண்ணீர் இல்லாத ஆறுகளுக்கு அணைகட்டிவிட்டு "அணைக்கட்டிவிட்டோம் பார்" என்று வாய்கிழிய பேசுகிறார்கள் அதைப்போலவே அஸ்திவாரம் இல்லாது வீடுகளைக் கட்டிவிட்டு, வீடுகள் கட்டிவிட்டோம் என்கிறார்கள். ஒரு மழை பெய்தவுடன் வீடுகள் உட்கார்ந்துவிடுகின்றன. உருத்தெரியாமல் போகின்றன. மக்கள் பார்த்து எங்களைச் சிரிப்பதாக சொல்கிறார்கள். மக்கள் யாரைப் பார்த்துச் சிரிக்கிறார்கள் என்று கேட்கிறேன்.

யாரைப் பார்த்து மக்கள் சிரிக்கிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும். என்னுடைய தொகுதியில் நம்பியூர் புஞ்சை புளியம் பட்டி போன்ற பகுதிகளில் மழையில்லாமல் பஞ்ச நிலைமை ஏற்பட்டு உள்ளது. அங்கே விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட கடன்களையும், கூட்டுறவு வங்கிகளின் மூலமாக அளிக்கப்பட்ட கடன்களையும் வசூலிப்பதை இந்த ஆண்டு ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பவானிசாகர் நீர்தேக்கப்பகுதியில் 2,500 ஏழைகளுக்கு நிலம் கொடுக்கப்பட்டதால் இந்த ஆண்டு 30 ஆயிரம் மூட்டை உணவு உற்பத்தி செய்திருக்கிறார்கள். செம்பாம்புதூர், பனையம்பளி, உக்காரம் போன்ற இடங்களில் காட்டிலாகா நிலங்கள் மரம் செடி, கொடி இன்றி இருக்கின்றன அந்த நிலங்களையும் ஏழை மக்களுக்குக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்பதால், அதைக் கொடுப்பதற்கு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக மைசூர் மலையோரத்திலே மங்களப்பட்டியிலும் காட்டிலாகா நிலம் இருக்கிறது. நீலகிரியில் தெங்கு மராட்டா என்ற நிலையில் விவசாயிகளுக்கு ஒரு சொஸைட்டி இருப்பதைப்போல, அங்கேயும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்பியூர், புஞ்சைப் புளியம்பட்டி, பவானி சாகர், தாளவாடி போன்ற இடங்களிலும் பஞ்ச நிலைமை இருப்பதால் இந்த ஆண்டு கடன்களை வசூல் செய்கின்ற நிலைமையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தண்ணீர் இல்லாத ஆற்றிலே அணைகட்டி, இன்றைக்கு விவசாயிகள் துன்பப்படுகிறார்கள். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அங்கே தண்ணீர் வருகிறது. கொஞ்சம் விளைச்சல் ஏற்பட்டாலும் அதை



1969 மார்ச் 18] [திரு. வ. க. இராமராசன்]

நிலைமையில் அங்கே உள்ளவர்கள்
அரசாங்கத்திற்குக் கொடுத்துவிடுகின்ற நிலையில் உள்ள அந்த
மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே இந்த நிறுத்த வேண்டு
விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதை
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சொந்தக்காரர்களாக இருக்கிறவர்கள்
40 ஏக்கர், 50 ஏக்கருக்குச் 10, 15 ஏக்கர் நிலங்களை சேர்த்துக்
பக்கத்தில் உள்ள சர்க்கார் நிலங்களை அதன் மூலம் அப்படிப்பட்ட
கொள்கிறார்கள். சர்க்கார் ரீசர்வே செய்து கொடுக்க வேண்டுமென்று
நிலங்களையெல்லாம் பிரித்து ஏழைமக்களுக்குக் அளித்ததற்காக தலைவர்
கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு என்னுடைய உரையை
அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு,
முடித்துக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின்
***திரு. கோ. பாரதி மோகன்:** வெட்டுப்பிரேரணைகளை ஆதரித்து
சார்பிலே முன்மொழியப்பட்டிருக்கின்ற விவசாய அபிவிருத்திக்காக
இப்பொழுது பேசுகிறேன். முதலாவதாக கால்நடைத் துறையைப்பற்றிச்
இருக்கக்கூடிய முக்கியமான பிரச்சினையான அபிவிருத்திக்காக ஏற்
சொல்ல விரும்புகிறேன். கால்நடைத் துறையின் திட்டத்தின்கீழ் சென்னை
படுத்தப்பட்டுள்ள கால்நடை தீவிர அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்
கோவை, மதுரை போன்ற இடங்களில் இந்தத் எல்லாம் நீண்ட
பட்டிருக்கிறது. இங்கே உள்ள கால்நடை பணியாளர்கள் நிரந்தரமாக்கவே
காலமாகவே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை அதிகமான
யில்லை. அவர்களை நிரந்தரமாக்குவதற்கும், அவர்களுக்கு கேட்டுக்
ஊதியம் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று
கொள்கிறேன்.

என்று 3000-க்கும் அதிகமானவர்கள்
கால்நடை உதவியாளர்கள் அவர்கள் 8 ஆண்டுகளுக்கு மேலாகப்
பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டாவது கிரேடிலேயே இருக்கிறார்கள்.
பணிபுரிந்தும் இன்னும் முதலாவது கிரேடிலே இன்னும்
இரண்டாவது கிரேடிலே உள்ளவர்களுக்கு எனவே அவர்களுக்கு அந்தப்
பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை. உயர்த்தியும் கொடுப்பதற்கு
பதவி உயர்வும், மேலும் சம்பளத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்த
அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கால்நடை இன்ஸ்பெக்
நேரத்தில் இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். மாதிரியான வேலையைத்தான்
டர்களாக பணிபுரியக்கூடியவர்களுடைய அதே அடிப்படைச் சம்பளத்தை
அவர்களும் செய்கிறார்கள். எனவே அவர்களுடைய உயர்த்த வேண்டுமென்று
உயர்த்த வேண்டுமென்று. ரூபாய் 150 ஆக
கேட்டுக்கொள்கிறேன்.

பராமரிப்பு சம்பந்தமாக ஏராள
இன்றைய தினம் கால் நடைப் அமைச்சர் அவர்கள் அறிவார்
மான புகார்கள் வந்துகொண்டிருப்பதை ஊழல்கள் நடந்து இருக்
கள். ஹோசூர் பண்ணையிலே ஏராளமான தவறுகள் நடந்திருக்கின்றன.
இன்றன, வேறு பல நிறுவனங்களிலும் கண்காணிக்க ஏற்பாடு செய்ய
இவற்றையெல்லாம் திருத்தி சீராகக்
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விஷயங்களிலும் அரசாங்கம் அதிகமான
கோழிப் பண்ணை போன்ற ஏராளமான புகார்கள், ஊழல்கள்
கவனம் செலுத்தவேண்டும். அதிலும் கவனத்திற்குக் கொண்டுவரப்
இருக்கின்றன என்று சட்ட மன்றத்தின் கவனம் செலுத்தி ஆவன
பட்டிருக்கிறது. எனவே அதிலும் தீவிர
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விரும்புகிறேன். காடுகளிலே
அடுத்ததாக, வனத்துறையைப்பற்றிக் கூற எப்படி ஊழல்கள்
இருக்கக்கூடிய சந்தன மரங்கள் சம்பந்தமாக அறிந்திருக்கிறோம். ஆகவே
ஏற்படுகின்றன என்பதுபற்றித் தகவல்களை போதுமான அளவுக்கு
நல்ல செல்வாதாரம் கொடுக்கக்கூடிய மரங்களைப் அரசாங்கத்திற்கு அதிகமான
பராமரிப்புச் செய்வதிலே கவனம் செலுத்தி, கேட்டுக்கொள்கிறேன்.
வருவாயை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று

காடுகளிலே இருக்கக்கூடிய நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவரமுடியும். தஞ்சாவூரிலே உள்ள தலைஞாயிற்றிலே 4,500 எக்கர்கள் இருக்கின்றன. அதிலே 300 எக்கர்கள்தான் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன, எல்லா நிலத்தையும் சாகுபடிக்குக் கொண்டுவரவேண்டும். காடுகளில் வாழ்கின்ற பூர்வகுடி மக்களுடைய சக்தியைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டு, அதே சமயத்தில் அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். அதற்கான திட்டங்களைத் தீட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், மீனளத் துறையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறைக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய முறையிலே கூட்டுறவு சொஸைடிகளை அதிகப்படுத்தவேண்டும். தனியார் துறைக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய முறை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மூன்றரை லட்சம் மீனவர்களுக்கு கூட்டுறவு முறையிலே உதவிகள் அளிக்க வேண்டும். தனியார் துறைக்கு ஊக்கம் அளிக்கக்கூடாது. கூட்டுறவுத் துறைக்கு ஆதரவு அளிப்பதன்மூலம் ஏழை மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்வதற்கும், அதோடு மறுமலர்ச்சி ஏற்படுவதற்கும் சந்தர்ப்பம் இருக்கும். தனியார் துறையில் சர்க்காருடைய பணத்தை மூலதனமாகப் பயன்படுத்தினால், மீனளத் துறையிலே பெரும் முதலாளித்துவம், பணக்கார வர்க்கம் புகுந்துவிடும், அப்படி ஒரு அஸ்திவாரம் ஏற்படுவதற்கு அரசாங்கத்தின் பணத்தை ஈடுபடுத்தக்கூடாது என்பது எங்களுடைய கட்சியின் அபிப்ராயம். எனவே தனியார் துறை மூலம் அந்தப் பிரச்னையை அணுகக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கடலோரப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்குக் குடிநீர் வசதி கிடையாது. குடிதண்ணீருக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களுக்குக் கடன்கள் மூலம் உதவி செய்ய அரசாங்கம் சொஸைடிகளின் மூலம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் தஞ்சாவூர் மாவட்டத்திலே இந்தப் பசலியில் ஐ. ஆர். 8 நெல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஐ. ஆர். 8 என்ற நெல் சாகுபடியிலே பரிபூரணமாகத் தோல்வி ஏற்பட்டிருக்கிறது. விவசாய அதிகாரிகள், உயர்ந்த மாநில விவசாய அதிகாரிகள் இருந்தும் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விவசாய ஆபீஸர்கள், விவசாய ஃபீல்ட் ஆபீஸர்கள் இருந்தும் கூட நிலைமை என்னவென்றால், சரியான முறையில் பரிசோதனை செய்து அன்றாடம் விவசாய மக்களோடு தொடர்பு இல்லாத காரணத்தாலே, இன்ஜினியர் ஆற்றின் ஆழத்தை சராசரி கணக்கு போட்டு கணக்கிட்டது போல, பருவகாலம், சாகுபடிக்கான நீர் நிலவரம் இவைகளை அறியாமல் பணிபுரிவதைக் காணமுடிகிறது.

சம்பா மகசூல் வெற்றியாக இருந்தும்கூட, தாளடியைப் பொறுத்த வரையில் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு விவசாயத் துறையிலே இருக்கக்கூடிய ஆராய்ச்சியாளர்களுடைய கவனமின்மைதான் காரணம். ஆராய்ச்சியாளர்கள், விவசாய அதிகாரிகள் நேரடியாக மக்களிடத்திலே தொடர்பு கொள்ளவேண்டும். விவசாயத்தைப் பார்க்கவேண்டும். எப்படிப் பரம்படிக்கிறார்கள், எப்படி ஏர் பிடிக்கிறார்கள், அந்த அந்த நிலத்தினுடைய பதத் தன்மையைப் பார்த்து, பருவ மழையைப் பார்த்து நேரடியாக அவர்கள் விவசாயிகளோடு ஒத்துழைப்பார்களானால், விவசாய உற்பத்தி ஏற்படும். கடன்கள் என்று சொல்லும்பொழுது நான் அடிக்கடி வற்புறுத்தி வருகிறேன். சிறு மிராசுதார்களுக்குத்தான் கடன் அதிகமாகத் தரவேண்டும் உதாரணமாகச் சொல்கிறேன். வடபாதிமங்கலம் திரு தியாகராஜ முதலியார் ஏராளமான நிலத்திற்குச் சொந்தக்காரர் கரும்பு ஆலை வைத்திருக்கிறார். கரும்பு உற்பத்தி செய்கிறார். பெரிய கேட்டர்பில்லர் வைத்து கொஞ்ச நேரத்தில் நூற்றுக்கணக்கான எக்கர் நிலத்தினைச் சாகுபடி செய்து விடுகிறார்கள். அதே கேடர்பில்லர்களைக் கொண்டுவந்து ஐந்து எக்கர், இரண்டு எக்கர், ஒரு எக்கர் உள்ள இடத்தில் பயன்படுத்தினால் செலவு அதிக





மாகும், வாடகை அதிகம் ஏற்படும். இரண்டொரு எக்கர் உள்ளவர்கள் கரும்புச் சாகுபடி செய்தால் கட்டுபடியாகாது வடபாதிமங்கலத்தைப் பார்த்து நாமும் ஏன் அப்படிச் செய்யக்கூடாது என்று கேட்கிறார்கள். எனவே கேடர்பில்லர்களை எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய முறையில் பஞ்சாயத்து யூனியனுக்கு ஒன்று என்றோ, அல்லது ஊராட்சி எல்லைகளை நிர்ணயித்து அவற்றிற்குப் பொதுவாக என்று வழங்கி, அவர்களுக்கு நெல் உற்பத்தி செய்ய உதவி செய்யவேண்டும்

அது மட்டுமல்ல; தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய இரண்டு டிவிஷனான வெண்ணாறு டிவிஷன், காவேரி டிவிஷன் ஆகியவற்றுக்குத் தண்ணீர் விடக்கூடிய காலத்திலே, பருவ காலத்திலே வித்தியாசமாகப் பாரபட்சமாக அங்கே தண்ணீர் விடப்படுகிறது என்பது தஞ்சை மாவட்டத்தில் பொதுவாகப் பேசப்படக்கூடிய விஷயமாக இருக்கிறது. முற்பகல் 11-30
தண்ணீர் விடக்கூடிய காலத்திலே வெண்ணாறு டிவிஷன், காவேரி டிவிஷன் இரண்டுக்கும் சமநிலையில் பார்த்து. விவசாயம் இரண்டு பகுதிகளிலும் பாதிக்காத அளவுக்குத் தண்ணீர் விடப்படுகிறதா என்பதைப் பற்றித் தமிழக அரசு போதுமான கண்காணிப்புடன் இருக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

கிராமப் பஞ்சாயத்துக்களை எடுத்துக் கொண்டால் எல்லா இடங்களிலும் பொதுவான பம்ப் செட்டுகள் தேவை. வசதி இருக்கக்கூடியவர்கள் சர்க்கார் கடனை உபயோகித்து நாற்று நட்டு விடுகிறார்கள் சாதாரண சிறு நிலச்சுவான்தார்கள், சாகுபடிதாரர்கள், பின்தங்கி விடுகிறார்கள். விதை விடும் நிலைமை இருந்தாலும், விதை விட முடியவில்லை. ஆகவே, விதை விட்டு, நாற்று நட ஏற்பாடு செய்யக்கூடிய முறையில் கிராமப் பொதுவில் பம்ப் செட்டுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். தஞ்சை மாவட்டத்தில் திரு. கனகசபைபிள்ளை 30 எக்கர் நிலம், நல்ல நிலம் நாகப்பட்டினம் தாலுகாவில் கிள்ளுக்குடி—காரிமங்கலத்தில் தரிசாகப் போட்டு வைத்திருக்கிறார். அங்கு கடந்த நான்கு ஆண்டுகளாகப் போட்டு வைத்திருக்கிறார். அங்கு நஞ்சை வாய்க்கால் வசதி இருக்கிறது, வடிகால் வசதி இருக்கிறது, நஞ்சை நிலம். அதைப் பற்றிக் கேட்டால் 'என்னுடைய நிலத்தை நான் தரிசாகப் போட்டிருக்கிறேன்' என்று கூறிவிடுகிறார். இப்படி தனிப்பட்ட நிலச்சுவான்தார்கள் நிலங்களைத் தரிசாகப் போட்டால் அது தனிப்பட்டவருக்குச் சொந்தமாக இருந்தாலும், ஊரில் உள்ள விவசாயத் தொழிலாளர்களை அழைத்து கூட்டுறவு ஸ்தாபனமாக அமைத்து, அந்த கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலமாக அத்தகைய நிலங்களில் சாகுபடிக்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அதற்குப் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். (மணி அடிக்கப்பட்டது)

திரு. சி. வி எம். அண்ணாமலை : சட்ட மன்ற பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறைக்காகக் கொண்டு வந்திருக்கக்கூடிய நிதிக் கோரிக்கையை ஆதரிக்கின்ற வகையில் என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகக் கூற விழைகின்றேன். இந்த மாமன்றத்திலே, பல ஆண்டு காலமாகவே வேளாண்மைத் துறையில் பெரும் சாதனைகளை ஏற்று நடத்தி வந்ததாக முன்னைய அரசில் சொல்லப்பட்டு வந்தாலும், திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழகத்தில் உதயமான பிறகு, ஒரு போகம் இரு போகமாகவும், இரு போகம் முப்போகமாகவும் மாறி, விவசாயத் துறையில் ஒரு மறுமலர்ச்சியை விவசாய மக்கள் பெற்று, குறைந்த செலவிலே நிறைந்த பலனைப் பெறுவதற்கு விவசாய பாட்டாளி மக்களுக்கு ஒரு வழியினை ஏற்படுத்தி ஒரு திருப்பத்தை, உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொன்னால், அவற்றை நன் மதிப்பைப் படுத்திக் கூறியதாக மாறுபட்ட காங்கிரசு நண்பர்கள் கூடக் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

உண்மையாகவே, இந்த நாட்டிலே விவசாயத் துறையானது ஒரு காலத்திலே இழிந்த தொழிலாக, நாலாம் தர, ஐந்தாம் தரத் தொழிலாக மதிக்கத்தக்க அளவுக்கு இருந்த நிலை போய், தமிழகத்திலே [illegible] பாமர மக்கள் மட்டுமல்ல, படித்த [illegible] துறையில் ஈடுபடும் [illegible]

மக்கள் என்று கூறத்தக்கவர்களும் ஈடுபடும் அளவுக்கு ஒரு புதிய திருப்பத்தைத் தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதன் மூலம் நல்ல கண்டுமுதலை அடையக்கூடிய நல்ல விதைகளை உருவாக்கி, திட்டமிட்ட அளவை எட்டிப் பிடிக்கும் அளவில் வகை செய்யப்பட்டது. அதனால் உள்ளத்தே ஏற்பட்ட பொறுமையின் காரணமாகவோ என்னவோ தெரியவில்லை—வானம் பொய்த்துவிட்டது. சென்ற முறை வானம் பொய்த்துவிட்ட காரணத்தால் செங்கற்பட்டு மாவட்டமும், வறட்சியால் தடுமாறிக் கொண்டிருந்த வட ஆற்காடு மாவட்டமும் பெருமளவு பாதிக்கப்பட்டு, அந்தப் பேரிழப்பை ஈடுசெய்ய முடியாத அளவுக்கு விவசாய மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளார்கள் என்பதை நாடும் அறியும், தாங்களும் நன்றாக அறிவீர்கள்.

துணைத் தலைவர் அவர்களே, உண்மையாகவே உள்ள இந்த இக்கட்டான நிலையை மாண்புமிகு (கலைஞர்) முதலமைச்சர் அவர்கள் மத்திய தலைமைப் பிரதமர் அவர்களிடத்தில் எடுத்துக் கூறி, இந்தப் பகுதியிலே பஞ்சம் தலை விரித்தாடுகிறது, மழை வராத இந்தப் பகுதிகளுக்கு இந்திராகாந்தியம்மையார் அவர்கள் வந்து பார்த்து தாராளமாக நிதி வசதிகளைப் பொழியுங்கள்—அதன் மூலம் வாடிக் கிடக்கின்ற ஏழை விவசாயிகளுக்கு வளத்தை உண்டாக்குவதற்கு வகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கேற்ப, அவர்கள் வர இருக்கிறார்கள் என்று காலையிலே நிதியமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.

வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு உங்கள் சார்பாக தெரிவித்துக் கொள்ள விரும்புவது எல்லாம்—வேளாண்மை என்றால் தமிழகத்திலே தஞ்சை மாவட்டம் ஒன்றுதான் என்று கருதப்படுகின்ற அளவுக்கு மக்களுடைய சக்திகளும், அரசியல் கட்சித் தலைவர்களுடைய எண்ணங்களும், தமிழகத்திலே பொறுப்பேற்றுக் கொண்டிருப்பவர்களுடைய நினைப்பும் நேரமும் அதுவாகவே இருக்கிறது. இந்த நிலையை மேலும் நீடிக்க விடுவது எதிர்காலத்திலே தமிழகத்திற்கு வளர்ச்சியை ஊட்டுவதாக ஆகாது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆழக் கிணறுகள் மூலமாக பஞ்சப் பிரதேசங்களிலே நீர் ஏற்றத்தை உண்டாக்கி, நீரைக் கண்டு பிடிக்கும் முயற்சியை மேற்கொண்டு, பற்றாக்குறை இருக்கும் மாவட்டங்களில் எல்லாம் நிறைவு ஏற்படுகின்ற அளவுக்கு வேளாண்மைத் துறையைப் பெருக்குவதற்கு முற்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் செங்கற்பட்டு மாவட்டம் தன்னிறைவு பெற்ற மாவட்டம் மட்டுமல்ல; பஞ்சத்தால் அடிபட்ட மாவட்டங்களுக்கும் தானியத்தை வழங்கிய மாவட்டம். அந்த அளவுக்கு வளம் பெற்ற மாவட்டமாக அது இருந்த நிலையில் இப்போது இயற்கையின் சதி காரணமாக, மழை தவறியதால், செங்கற்பட்டு மாவட்டம் பஞ்சத்தால் அடிபட்டு விவசாயிகள் பஞ்சைகளாயிருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், ஆந்திரமும், தமிழகமும் ஒன்றாக இருந்த காலத்தில், திருத்தணி வட்டத்தைச் சேர்ந்த ஒரு பகுதி தமிழகத்தோடு இணைக்கப்படுவதற்கு முன்பு தேசாபுரம் என்ற அணைக்கட்டு இருக்கிறது. வட ஆற்காட்டில் இருந்து வருகிற கொட்டலை ஆற்றில் தடுப்பு அணை கட்டி அதிலுள்ள ஒரு பகுதி தண்ணீரை செம்பரம்பாக்கம் ஏரிக்கு எடுத்துச் செல்லவும், மீதியைக் கூவம் நதிக்கும் அனுப்புகிற நிலையும் இருந்தது. கூவம் நதிக்கு அனுப்ப கிழக்குப் பகுதியில் மண்ணால் அணை கட்டி தண்ணீரை மடக்கி பல கிராமங்களுக்கு எடுத்துச் செல்லுகிறார்கள். ஆனால் வெள்ளம் பெருகி வருகின்றபோது மண்ணால் கட்டப்பட்ட அந்த அணை கரைந்து விடுகிறது. பதினொரு கிராமங்கள் பயன்பெறுகிற, ஐயாயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகிற நல்ல திட்டத்தைப் பதினைந்து ஆண்டு காலமாகக் காங்கிரஸ் ஆட்சியினர் கடப்பிலே போட்டு வைத்தார்கள். அந்த நிலையை மாற்றுமாறு சென்ற ஆண்டு தலைமைப் பொறியாளரிடத்திலும் கூறினேன். அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள மனம் இருந்தால்





எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். அவர்களும் அது பற்றிக் கவனிப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பு வாய்ந்த உணவுத் துறை பொறுப்பையும், வேளாண்மைத் துறைப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில், அங்குள்ள ஏழைப் பாட்டாளி மக்களிடத்தில் இரக்கம் காட்டுவதன் காரணமாக அந்தப் பகுதி மக்கள் மட்டும் பலனை பெறுகிறார்கள் என்பதல்லாமல் தமிழக மக்களுக்கு உணவு அளிக்கும் திட்டத்திற்குப் பயன் கிடைக்கும் என்ற முறையில் அந்தச் சிறு நீர்த்தேக்க அணையைக் கட்டித் தர வழிசெய்யவேண்டும். ஏழு எட்டு லட்சம் ரூபாயிலே அந்த அணைக்கட்டு கட்டி முடிக்கப்படுமானால் அது பயனுள்ள திட்டமாக இருக்கும், ஐயாயிரத்துக்கு மேற்பட்ட நிலங்கள் பயன் பெறும். அந்தத் திட்டத்தை நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துணைத் தலைவர் அவர்கள் நேரமாகிவிட்டது என்பதைக் காட்ட கடிகாரத்தைக் காட்டுகிறார்கள். கடந்த 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் தலைவர்களால் செய்யப்பட்ட சாதனைகளால் ஏற்பட்ட வேதனைகளைப் பற்றிய விளக்கங்களை எடுத்துக் கூற நேரம் இல்லாத வகையில், இந்த மானியத்தை உளமார ஆதரித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. க. ர. நல்லசிவன் :** மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையிலே எனக்கு மிகப் பிடித்த இலாகா இது. சமீப காலத்தில் மிகப் பயன் தரும் விதைகளைப் பொறுத்தவரையில் இந்த இலாகா சரியான முறையில் அதை இந்த மாநிலத்தின் பரப்பியிருக்கிறது. பொது மக்களை அணுகும் முயற்சியிலும் இந்த இலாகா வேகமாகச் செல்கிறது. ஆகவே, இந்த இலாகாவை நான் உண்மையிலேயே பாராட்ட விரும்புகிறேன். அதே சமயத்தில் சில உண்மைகளையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது நிலம் ஓரளவிற்கு அதிகமாக உள்ளவர்கள்தான் புதிய பயிர்களை அல்லது வீரிய வித்துக்களை எல்லாம் போடுவதற்கு வசதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அதிகாரிகளைப் பொறுத்த வரையில் அவர்களிடத்தில்தான் இவர்கள் அதிகமாக அணுகுவதற்கு சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இருக்கின்றன. கொஞ்சம் நிலம் உள்ளவர்களிடம் முதலில் அவர்கள் உள்ளத்திலும் பெரும் மாறுதல் ஏற்படவில்லை, அவர்கள் இந்தப் புது விதைகளைப் போட்டுச் செய்யவேண்டுமென்று எதிர்பார்த்தாலும் அவர்கள் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே இப்போது ஒரு புதிய மாற்றம் தேவை. சிறு விவசாயிகளிடம், 25 செண்ட், 50 செண்ட் என்று வைத்திருக்கக் கூடியவர்களிடம் சென்று புதுவிதைகளை அவர்கள் சாகுபடி செய்து பார்க்கவேண்டுமென்று நினைக்கிற ஒரு வேகத்தை அவர்களிடையே சர்க்கார் உண்டு பண்ண வேண்டும்.

அடுத்தபடியாக, வீரிய வித்துக்களைப் பொறுத்தவரையில் அவற்றைப் பயிரிடும்போது எவ்வளவு உரம் போடவேண்டும், அவற்றில் எப்படிப் பாசனம் செய்யவேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் பிரசாரம் போதுமானதாக இல்லை. எந்த அளவிற்கு உரம் போட வேண்டும், எப்படி மருந்துகள் அடிக்கவேண்டும், எப்படிப் பயிர்ப் பாதுகாப்பு செய்ய வேண்டும், எப்படித் தண்ணீர் பாய்ச்சப்படவேண்டும் என்ற கருத்துக்களை விவசாயிகளிடம், அவர்கள் மனதில் பதிய வைக்கவேண்டும். வீரியவிதைகளுக்கு எந்தளவிற்குக் குறைத்து தண்ணீர் பாய்ச்சுகிறோமோ அந்தளவிற்குத்தான் அதிகமான அளவிற்குப் பலன் கிடைக்கிறது. தண்ணீர் அதிகமாகவுள்ள இடங்களில் இந்த விதைகள் அதிகப் பயன் தருவதில்லை. அப்படித் தண்ணீரைக் குறைந்த அளவிற்குப் பாய்ச்சுவதினால் அந்த அளவிற்கு மிச்சப்படும் தண்ணீரைப் புது நிலங்களுக்கு சாகுபடி செய்யக் கொடுக்க முடியும். அதன் காரணமாக அதிகமான போகம் பயிர் செய்ய முடியும். ஆகவே, குறிப்பாக விவசாயிகளிடம் எந்த அளவிற்குத் தண்ணீர் பாய்ச்சப்பட வேண்டும் என்பது பற்றி பிரசாரம் செய்யவேண்டும். எந்த அளவிற்கு அதிகப்படியாக

மக்கள் என்று கூறத்தக்கவர்களும் ஈடுபடும் அளவுக்கு ஒரு புதிய திருப்பத்தைத் தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதன் மூலம் நல்ல கண்டுமுதலை அடைய டிதுரக நெல் வகைகளை உருவாக்கி, திட்டமிட்ட அளவை எட்டிப் பிடிக்கும் அளவில் வகை செய்யப்பட்டது. அதனுல் உள்ளத்தே ஏற்பட்ட பொருமையின் காரணமாகவோ என்னவோ தெரியவில்லை—வானம் பொய்த்துவிட்டது. சென்ற முறை வானம் பொய்த்துவிட்ட காரணத்தால் செங்கற்பட்டு மாவட்டமும், வறட்சியால் தடுமாறிக் கொண்டிருந்த வட ஆற்காடு மாவட்டமும் பெருமளவு பாதிக்கப்பட்டு, அந்தப் பேரிழப்பை ஈடுசெய்ய முடியாத அளவுக்கு விவசாய மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளார்கள் என்பதை நாடும் அறியும், தாங்களும் நன்றாக அறிவீர்கள்.

துணைத் தலைவர் அவர்களே, உண்மையாகவே உள்ள இந்த இக்கட்டான நிலையை மாண்புமிகு (கலைஞர்) முதலமைச்சர் அவர்கள் மத்திய தலைமைப் பிரதமர் அவர்களிடத்தில் எடுத்துக் கூறி, இந்தப் பகுதியிலே பஞ்சம் தலை விரித்தாடுகிறது, மழை வராத இந்தப் பகுதிகளுக்கு இந்திராகாந்தியம்மையார் அவர்கள் வந்து பார்த்து தாராளமாக நிதி வசதிகளைப் பொழியுங்கள்—அதன் மூலம் வாடிக் கிடக்கின்ற ஏழை விவசாயிகளுக்கு வளத்தை உண்டாக்குவதற்கு வகை செய்யவே மென்று கேட்டுக் கொண்டதற்கேற்ப, அவர்கள் வர இருக்கிறுர் என்று காலையிலே நிதியமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறி இருக்கிறுர்கள்.

வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு உங்கள் சார்பாக தெரிவித்துக் கொள்ள விரும்புவது எல்லாம்—வேளாண்மை என்ருல் தமிழகத்திலே தஞ்சை மாவட்டம் ஒன்றுதான் என்று கருதப்படுகின்ற அளவுக்கு மக்களுடைய சக்திகளும், அரசியல் கட்சித் தலைவர்களுடைய எண்ணங்களும், தமிழகத்திலே பொறுப்பேற்றுக் கொண்டிருப்பவர்களுடைய நினைப்பும் நோக்கும் அதுவாகவே இருக்கிறது. இந்த நிலையை மேலும் நீடிக்க விடுவது எதிர்காலத்திலே தமிழகத்திற்கு வளர்ச்சியை ஊட்டுவதாக ஆகாது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆழக் கிணறுகள் மூலமாக பஞ்சப் பிரதேசங்களிலே நீர் ஏற்றத்தை உண்டாக்கி, நீரைக் கண்டு பிடிக்கும் முயற்சியை மேற்கொண்டு, பற்ருக்குறை இருக்கும் மாவட்டங்களில் எல்லாம் நிறைவு ஏற்படுகின்ற அளவுக்கு வேளாண்மைத் துறையைப் பெருக்குவதற்கு முற்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் செங்கற்பட்டு மாவட்டம் தன்னிறைவு பெற்ற மாவட்டம் மட்டுமல்ல; பஞ்சத்தால் அடிபட்ட மாவட்டங்களுக்கும் தானியத்தை வழங்கிய மாவட்டம். அந்த அளவுக்கு வளம் பெற்ற மாவட்டமாக அது இருந்த நிலையில் இப்போது இயற்கையின் சதி காரணமாக, மழை தவறியதால், செங்கற்பட்டு மாவட்டம் பஞ்சத்தால் அடிபட்டு விவசாயிகள் பஞ்சைகளாயிருக்கிறுர்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், ஆந்திரமும், தமிழகமும் ஒன்ருக இருந்த காலத்தில், திருத்தணி வட்டத்தைச் சேர்ந்த ஒரு பகுதி தமிழகத்தோடு இணைக்கப்படுவதற்கு முன்பு தேசாபுரம் என்ற அணைக்கட்டு இருக்கிறது. வட ஆற்காட்டில் இருந்து வருகிற கொட்டலை ஆற்றில் தடுப்பு அணை கட்டி அதிலுள்ள ஒரு பகுதி தண்ணீரை செம்பரம்பாக்கம் ஏரிக்கு எடுத்துச் செல்லவும், மீதியைக் கூவம் நதிக்கும் அனுப்புகிற நிலையும் இருந்தது. கூவம் நதிக்கு அனுப்ப கிழக்குப் பகுதியில் மண்ணுல் அணை கட்டி தண்ணீரை மடக்கி பல கிராமங்களுக்கு எடுத்துச் செல்லுகிறுர்கள். ஆனுல் வெள்ளம் பெருகி வருகின்றபோது மண்ணுல் கட்டப்பட்ட அந்த அணை கரைந்து விடுகிறது. பதினேரு கிராமங்கள் பயன்பெறுகிற, ஐயாயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகிற நல்ல திட்டத்தைப் பதினைந்து ஆண்டு காலமாகக் காங்கிரஸ் ஆட்சியினர் கடப்பிலே போட்டு வைத்தார்கள். அந்த நிலையை மாற்றுமாறு சென்ற ஆண்டு தலைமைப் பொறியாளரிடத்திலும் கூறினேன். அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள மனம் இருந்தால்



எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். அவர்களும் அது பற்றிக் கவனிப்பதாகச் சொன்னுர்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பு வாய்ந்த உணவுத் துறை பொறுப்பையும், வேளாண்மைத் துறைப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில், அங்குள்ள ஏழைப் பாட்டாளி மக்களிடத்தில் இரக்கம் காட்டுவதன் காரணமாக அந்தப் பகுதி மக்கள் மட்டும் பலனை பெறுகிறுர்கள் என்பதல்லாமல் தமிழக மக்களுக்கு உணவு அளிக்கும் திட்டத்திற்குப் பயன் கிடைக்கும் என்ற முறையில் அந்தச் சிறு நீர்த்தேக்க அணையைக் கட்டித் தர வழிசெய்யவேண்டும். ஏழு எட்டு லட்சம் ரூபாயிலே அந்த அணைக்கட்டு கட்டி முடிக்கப்படுமானுல் அது பயனுள்ள திட்டமாக இருக்கும், ஐயாயிரத்துக்கு மேற்பட்ட நிலங்கள் பயன் பெறும். அந்தத் திட்டத்தை நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துணைத் தலைவர் அவக்கள் நேரமாகிவிட்டது என்பதைக் காட்ட கடிகாரத்தைக் காட்டுகிறுர்கள். கடந்த 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் தலைவர்களால் செய்யப்பட்ட சாதனைகளால் ஏற்பட்ட வேதனைகளைப் பற்றிய விளக்கங்களை எடுத்துக் கூற நேரம் இல்லாத வகையில், இந்த மானியத்தை உளமாற ஆதரித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. க. ர. நல்லசிவன்** : மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையிலே எனக்கு மிகப் பிடித்த இலாகா இது. சமீப காலத்தில் மிகப் பயன் தரும் விதைகளைப் பொறுத்தவரையில் இந்த இலாகா சரியான முறையில் அதை இந்த மாநிலத்தின் பரப்பியிருக்கிறது. பொது மக்களை அணுகும் முயற்சியிலும் இந்த இலாகா வேகமாகச் செல்கிறது. ஆகவே, இந்த இலாகாவை நான் உண்மையிலேயே பாராட்ட விரும்புகிறேன். அதே சமயத்தில் சில உண்மைகளையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது நிலம் ஓரளவிற்கு அதிகமாக உள்ளவர்கள்தான் புதிய பயிர்களை அல்லது வீரிய வித்துக்களை எல்லாம் போடுவதற்கு வசதியுள்ளவர்களாக இருக்கிறுர்கள். ஆகவே அதிகாரிகளைப் பொறுத்த வரையில் அவர்களிடத்தில்தான் இவர்கள் அதிகமாக அணுகுவதற்கு சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இருக்கின்றன. கொஞ்சம் நிலம் உள்ளவர்களிடம் முதலில் அவர்கள் உள்ளத்திலும் பெரும் மாறுதல் ஏற்படவில்லை, அவர்கள் இந்தப் புது விதைகளைப் போட்டுச் செய்யவேண்டுமென்று எதிர்பார்த்தாலும் அவர்கள் செய்ய முடியாத நிலையில் இருக்கிறுர்கள். ஆகவே இப்போது ஒரு புதிய மாற்றம் தேவை. சிறு விவசாயிகளிடம். 25 செண்ட், 50 செண்ட் என்று வைத்திருக்கக் கூடியவர்களிடம் சென்று புதுவிதைகளை அவர்கள் சாகுபடி செய்து பார்க்கவேண்டுமென்று நினைக்கிற ஒரு வேகத்தை அவர்களிடையே சர்க்கார் உண்டு பண்ண வேண்டும்.

அடுத்தபடியாக, வீரிய வித்துக்களைப் பொறுத்தவரையில் அவற்றைப் பயிரிடும்போது எவ்வளவு உரம் போடவேண்டும், அவற்றில் எப்படிப் பாசனம் செய்யவேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் பிரசாரம் போதுமானதாக இல்லை. எந்த அளவிற்கு உரம் போட வேண்டும், எப்படி மருந்துகள் அடிக்கவேண்டும், எப்படிப் பயிர்ப் பாதுகாப்பு செய்ய வேண்டும், எப்படித் தண்ணீர் பாய்ச்சப்படவேண்டும் என்ற கருத்துக்களை விவசாயிகளிடம், அவர்கள் மனதில் பதிய வைக்கவேண்டும். வீரியவிதைகளுக்கு எந்தளவிற்குக் குறைத்து தண்ணீர் பாய்ச்சுகிறுேமோ அந்தளவிற்குத்தான் அதிகமான அளவிற்குப் பலன் கிடைக்கிறது. தண்ணீர் அதிகமாகவுள்ள இடங்களில் இந்த விதைகள் அதிகப் பயன் தருவதில்லை. அப்படித் தண்ணீரைக் குறைந்த அளவிற்குப் பாய்ச்சுவதினுல் அந்த அளவிற்கு மிச்சப்படும் தண்ணீரைப் புது நிலங்களுக்கு சாகுபடி செய்யக் கொடுக்க முடியும். அதன் காரணமாக அதிகமான போகம் பயிர் செய்ய முடியும். ஆகவே, குறிப்பாக விவசாயிகளிடம் எந்த அளவிற்குத் தண்ணீர் பாய்ச்சப்பட வேண்டும் என்பது பற்றி பிரசாரம் செய்யவேண்டும். எந்த அளவிற்கு அதிகப்படியாக

சாகுபடி செய்யமுடியும் என்பதுபற்றி ஆராய்ச்சி செய்யப்படுகிறதோ அந்தளவிற்கு எந்தளவிற்கு எப்படி தண்ணீர் குறைவாகப் பாய்ச்ச முடியும் என்பது பற்றியும் ஆராய்ச்சித் துறையினர் நல்லமுறையில் பரிசீலிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, கம்பு, சோளம், ராகி, வரகு, தினை போன்ற புன்செய்ப் பயிர்கள் இருக்கின்றன. எப்படி அவைகளுக்கு வாரத்திற்கு ஒரு தடவை தண்ணீர் விட்டு பயிர் செய்ய முடிகிறதோ, அதேபோல் நெல் சாகுபடி செய்யமுடியுமா என்பதுபற்றி பரிசீலனை செய்ய ஆராய்ச்சிக் கூடங்கள் பயன்படுத்தப்படவேண்டும், திரு. சுப்பையா முதலியார் அவர்கள் என்னிடம் ஒரு விதையைக் கொடுத்தார்கள். அதற்கு வாரத்திற்கு இரண்டு நாட்கள் தண்ணீர் விட்டால் போதும், நான்கு மாதங்கள் பயிர் செய்தால் நல்ல விளைச்சலைத் தரும் என்று சொல்லி அவர்கள் என்னிடம் கொடுத்தார்கள். நான் அதை விவசாயிகளிடம் கொடுத்தேன். அதற்கான விளக்கங்கள் இன்னும் வந்து சேரவில்லை. அந்த விதையைப் பொறுத்தவரையில் வாரத்திற்கு இரண்டு நாட்கள் தண்ணீர் விட்டால் போதும், நான்கு மாத காலத்தில் ஒரு ஏக்கரில் சுமார் 1,500 பவுண்டு கிடைக்கும் என்று சொன்னார்கள். அதுபோன்ற விதைகளை நாம் விளம்பரப்படுத்த வேண்டும். அவற்றை வீரிய விதை களாக மாற்றுவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, வேளாண்மைப் பல்கலைக் கழகம் நம் தமிழ் நாட்டில் அவசியமானது. பலவேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து அதைச் செய்யப்போவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து நல்லமுறையில் பரிசிலனை செய்து நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். நம் மாநிலத்தில் அப்படிப்பட்ட ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அவசியமானது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வேளாண்மைக் கல்வி படித்துப் பட்டம் பெறுகிற வர்கள் சர்க்காரில் போய் ஒட்டவேண்டும் என்ற மனோபாவத்தில் இருக்கிறார்கள். வேளாண்மைத் துறையில் பட்டம் பெறுகிறவர்கள் கொஞ்சமாக இருந்தாலும் தங்கள் நிலத்தில் பாடுபடவேண்டும், அப்படிச் செய்வதன் மூலம் லாபம் சம்பாதிக்க முடியும் என்ற உணர்ச்சியை அவர்களிடையே ஏற்படுத்த வேண்டும். ஒரு பட்டம் பெற்ற வாலிபன் வேலைக்கு அமர்ந்தால் மேலே போனதற்குப் பின்னால் உயர்ந்தபட்சமாக மாதம் ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்க முடியும். ஆனால் நீர்ப்பாசன வசதியுள்ள ஒரு ஐந்து ஏக்கர் நிலம் இருந்தால் நிச்சயமாக மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் சம்பாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை அவர்களிடம் ஏற்படுத்தி, வேளாண்மைப் பட்டப் படிப்பு படிக்க வருகிறவர்களிடம் குறிப்பிட்ட அளவிற்குள்ளவர்களி மாவது 'எங்களுக்கு வேலை தேவை இல்லை. நாங்கள் படித்துவிட்டு எங்கள் பண்ணைக்குப் போகப்போகிறோம்' என்ற வாக்குறுதியை வாங்கி, அவர்களை கல்லூரியில் சேரும்படிச் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, இப்போது கரும்புக்கு விலை 90, 95 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. குறைந்தபட்சம் டன்னுக்கு ரூ. 100 ஆவது கிடைக்கவேண்டும். சராசரியாக முப்பது முதல் ஐம்பது டன்னுக்குள்ளாக எடுக்கிறார்கள். டன்னுக்கு 100 ரூபாய் கிடைத்தால் அது கட்டி வரும். கடலை விவசாயத்தில் இப்போது புதியவிதைகளைக் கொண்டுவந்திருக்கிறார்கள். நான்கூட அதைசாகுபடி செய்திருக்கிறேன். கடலைக்கு நியாயமான அளவில் விலை நிர்ணயம் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அடுத்த படியாக, வாழைப் பயிர். ஒரு ஏக்கரில் சுமார் ஆயிரம் வாழை பயிர் செய்யமுடியும். ஜப்பான் போன்ற நாடுகளுக்கு அதை ஏற்றுமதி செய்வது என்று வந்தால் ஏக்கருக்கு ரூ. 5,000-ம் கிடைக்கும், ஆகவே வாழைப் பயிர் செய்யுங்கள் என்று விவசாயிகளிடம் கூறினேன். ஆனால் விவசாயிகள் சுலபத்தில் நம்புவதில்லை. ஒரு காரியத்தை விவசாயிகளிடம் பதிய வைப்பது என்றால் கஷ்டமான காரியம். அந்த முயற்சியை எடுத்துக் கொள்வதினால்தான் நான் இந்த இலாகாவைப் பாராட்டு



கிறேன். விவசாயிகளின் சிந்தனைப்போக்கே பழைய மாதிரி இருக்கிறது. அதிர்ச்சி செய்யக்கூடிய வகையில் ஏதாவது செய்தால்தான் அவர்கள் உள்ளத்தில் ஒரு மாறுதலை ஏற்படுத்த முடியும். ஆகவே, வாழை ஜப்பானுக்கு ஏற்றுமதியாகிறது. ஏக்கருக்கு ஆறுயிரம் ரூபாய் சம்பாதிக்கிறேன் என்று இதே மன்றத்தில் அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். ஆகவே வாழைப் பயிரை அபிவிருத்தி செய்து ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும். அடுத்தபடியாக, கால்நடை இலாகாவில் ஓய்வு பெறவேண்டியவர்கள் சிலர் இன்னும் இருக்கிறார்கள், மற்ற இலாகாக்களைப் போல், தயவுசெய்து அவர்களையெல்லாம் கொஞ்சம் அனுப்பிவிட்டு அங்குள்ள வாலிபர்களுக்கு பதவி உயர்வு கொடுத்து அவர்கள் உற்சாகமடையச் செய்யவேண்டும். கால்நடை உதவியாளர்கள் பற்றி திரு. பாரதிமோகன் அவர்கள் சொன்னார்கள். முதல் நிலை அடையவேண்டிய நிலையில் இருக்கும் நானூறுக்கு மேற்பட்டவர்களுக்கு முதல் நிலை உயர்வு அளிக்கவேண்டும். கடைசியாக, காடுகள் எல்லாம் அழிந்து கொண் டிருக்கிறது, காடுகள் அழிந்தால் நிச்சயம் நாடும் அழிந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. ஒரு காலத்தில் வன மஹோற்சவத்தைப் பற்றி நான் உட்பட நையாண்டி செய்து கொண்டிருந்தோம். இன்று மக்கள் மத்தியில் புது மரங்கள், கூடுதல் மரங்கள் நடும்படியான உணர்ச்சியை நாம் ஏற்படுத்த வேண்டும். நாட்டில் அதிகப்படியான மரங்களை நடும் உணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்தவேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஜெ. பெள்ளி கௌடர்:** வணக்கத்திற்குரிய துணைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் இறுதியாகச் சென்ற திசையை நோக்கி நான் தண்டனிட்டு அஞ்சலி செலுத்துகிறேன். அவர்களின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு ஊர் திரும்பி வந்த என் தொகுதி மக்களில் சிலர் சேலத்தின் அருகில் விபத்துக்குள்ளாகி உயிரிழந்தார்கள். அவர்களுக்கு என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புது அமைச்சரவையையும், அதில் இடம் பெற்றுள்ள அமைச்சர்களையும் நான் பாராட்டி, வரவேற்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட் டிருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த் தைகள் கூற விரும்புகிறேன். நீலகிரி மாவட்டத்திலுள்ள ஆனைகட்டி கல்லம்பாளயம் இடங்களிலுள்ள நிலங்களை விவசாயத்திற்கு விட்டு விடவேண்டுமென்று கடந்த இரண்டாண்டுகளாகக் கேட்டு கலெக்டர் அவர்கள் அதை வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். ஒரு வருடமாயிற்று நிலைமை எப்படியிருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே அதை விரைவில் செய்து முடித்து அந்த நிலங்களை விவசாயிகளுக்குத் தந்தால் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மேய்ச்சல் பூமிகள் என்று நிறைய ஒதுக்கியிருக்கிறார்கள். கால்நடைகள் எவ்வளவு இருக்கின்றன என்பதைக் கணக்கெடுத்து, கிராமவாரியாக எவ்வளவு இருக்கின்றன, மேய்ச்சல் நிலங்கள் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். யுத்த காலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்பட்ட நேரத்தில், நீலகிரி மாவட்டத்தில் சர்க்கார் பூமிகளை விவசாயம் செய்யச் சொல்லும் நேரத்தில் ஊக்கத்தோடு அதில் ஈடுபட்டிருந் தார்கள். அப்படி ஈடுபட்டிருந்த நேரத்தில் நல்லமுறையில் விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபட்டார்கள். அப்படி ஈடுபட்டதால் நல்ல முறையில் விளைந்தது. அந்தப் புள்ளிவிவரங்களைப் பார்க்கும்பொழுது, இப்பொழுது சர்க்காருக்குள்ள தரிசு நிலங்களும், மரம் இல்லாத காடுகளாகச் சிலவிடங்களும் இருக்கின்றன. அவைகளையெல்லாம் விவசாயத்திற்கு குத்தகைக்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கடந்த ஆண்டு நீலகிரியில் மழையில்லாத காரணத்தினால், கிழங்கு விவசாயத்தில் பூஷன் நோய் விழுந்து விட்டது. அதனால் அவர்கள் சர்க்காரிடமிருந்து வாங்கிய கடனை அடைக்க முடியாமல் சஞ்சலப்பட்டுக்

கொண்டிருக்கிறார்கள். அந்தக் கஷ்டத்திலிருந்து நீக்கத் தக்க வகையில் அந்தக் கடன் வசூலைச் சற்றுத் தள்ளிப்போட வேண்டு மென்று பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகின்றேன். நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கு நெல் விளையாத பகுதி. அங்கு உருளைக்கிழங்கு, காப்பி, தேயிலைதான் விளைகின்றன. ஆகவே, அங்குள்ளவர்களுக்கு அரிசி கிடைப்பது சற்றுக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. குடும்பக் கார்டு முறையில் அரிசி வழங்கப்படுகிறது என்றாலும் வெளி மார்க்கெட்டிலும் அரிசி இருந்தால் சற்று நல்ல முறையில் பயன்படும். மேட்டுப்பாளையத்தில் ஒரு சவுக்கி இருக்கிறது. அது இல்லாவிட்டால் நீலகிரி மாவட்டத்திற்கு அரிசி வந்து கோவை மாவட்டத்திற்குக் குறைவாகப் போய்விடும் என்று சொன்னாலும், நீலகிரி மாவட்டத்தின் நிலைமைகளையொட்டி, அந்தச் சவுக்கியை அகற்றிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன் கூடலூர் பகுதியில் வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். ஆனால் மேட்டுப் பாளையத்தில் இருப்பதால் அரிசி விலை உயர்ந்திருக்கின்றது. மேட்டுப் பாளையத்தில் சவுக்கி இருக்கிறது. எனக்குச் சில தகவல்கள் கிடைத்தி ருக்கின்றன, அங்கே ஓரளவு லஞ்ச ஊழலாக இருந்துகொண்டிருக் கிறது என்று. எனவே தயவு செய்து அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நீலகிரி மாவட்டத்தில், ஏராளமான தொழிலாளர்களும், நகர மக்களும் நீங்கலாக அடுத்திருப்பவர்கள் விவசாய மக்கள்தான். அவர் களுக்கு, இந்தச் சர்க்காருக்கு நல்ல நிலைமை ஏற்படுகின்றபொழுது, படியரிசித் திட்டத்தை விஸ்தரிக்கலாம் என்ற நிலை வரும்பொழுது நீலகிரி மாவட்டத்திற்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்று தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

நீலகிரி மாவட்டத்திலே கற்பூர மரங்கள் நடப்பட்டு வருகின்றன. அந்தக் காரணத்தினாலே நன்றாக மழைபெய்வதற்கு இடையூறாக இருக்குமோ என்ற நிலையிருக்கிறது, செய்தியைக் கேள்விப்பட்டேன். பஞ்சாப் மாநிலத்தில்கூட சதுப்பு நிலத்தில் கற்பூர மரங்களைப் பயிரிட்டு தண்ணீர் வற்றச் செய்கிறார்கள். பூமியில் ஈரமில்லாததால், மழை நீரை இழுக்கும் சக்தியில்லாமல், மழையில்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. இதை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

உருளைக்கிழங்கு, தேயிலை, காப்பி முதலியவற்றைப் பயிரிடும் விவசாயி கள் உற்சாகமிழந்து, மனம் நொந்து இருக்கும்வகையில் டெல்லி சர்க்கார் போட்டிருக்கும் உர வரி மக்களைச் சித்திரவதை செய்யக் கூடியதாக இருக்கிறது. அவர்கள் உள்ளம் உடைந்து மனம் கலங்கிப் போயிருக்கிறார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கூட்டம் போட்டு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை மாறவேண்டும், அதற்கு நம்முடைய அரசும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த மன்றத்திலே பேசிய காங்கிரஸ் தோழர்கள் பலரும் பலவித மாகப் பேசினார்கள், நாம் கேட்டுக்கொண்டிருந்தோம். அதேநேரத்தில், கூட்டுறவு அமைச்சராக இருக்கும் மாண்புமிகு சி. பா. ஆதித்தனார் அவர்கள் பணக்காரர் என்று சொன்னார்கள். டெல்லியில் நேருவின் மகள் இந்திராகாந்தி ஆளும் அந்த அரசில் அவர்களுக்குப் பக்கபலமாகப் பல அரசர்கள் இருக்கிறார்கள். அந்த அரசர்களின் கணக்குத் தெரியாத காரணத்தினாலோ என்னவோ இவரைப் பற்றிச் சொன்னார்கள் என்று கருதுகிறேன், அவர் அதிகம் படித்தவர், பேராற்றல் பெற்றவர், அவர் மூலம் தமிழைப்பரப்புவதற்கு வாய்ப்பு பெற்றிருக்கிறோம். அவரை நல்லமுறையிலே பயன்படுத்திக்கொள்வதை விட்டுவிட்டு அவரைப் பற்றிச் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அவ்வாறு சொல்வது தவறு. அவருக்கு நல்லமுறையில் வாய்ப்பு கொடுத்திருக்கிறோம். அதை நாம மேலும் ஊக்குவிக்க வேண்டும். படித்தவர், நல்லவர், அவர்களுடைய



கருத்துக்களையும், உழைப்பையும் பெற வாய்ப்புக் கிடைத்திருப்பது நம்முடைய பாக்கியம் என்றே கருதுகிறேன். (மணியடிக்கப்பட்டது) நேரம் இல்லாத காரணத்தினால் என்னுடைய உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**திரு. இல. பலராமன்:** தலைவரவர்களே, இந்த நாட்டில், வேளாண்மை தொழில் செய்யக்கூடியவர்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்ப தற்குக் காரணம், இந்த அரசாங்கம் அவர்களை நல்லமுறையில் கவனிக்கவில்லை, அரசாங்கம் மற்றத் துறைகளில் செலுத்திய அக்கறை யைப்போல இந்தத் துறையில் அதிகமாக அக்கறை செலுத்தவில்லை என்று கூடக் குற்றம் சாட்டலாம். ஆனால், விவசாயத்துறையை விஸ்தரிப்பதற்கு யார் பொறுப்பாளிகளாக இருக்கிறார்களோ அவர்கள் செய்யும் பணி நேர்மையாகவும், விவசாயிகள் அணுகுகின்ற முறையிலும் இருக்கிறதா என்று பார்த்தால் அது மிகமிகக் குறைவுதான் என்று கூறமுடியும். குறிப்பாக, உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்க வேண்டுமென்றால், மண்வளமான நீர், தரமான நிலம், உயர்தர விதை, பயிர்ப் பாதுகாப்பு முதலியன முக்கியமானவை.

மண் என்று பார்க்கும்பொழுது, இன்று நம்முடைய படிப்பறி வில்லாத மக்கள், அதிகம் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள், உரம்மண்ணின் தரம் தெரியாமல் ரசாயன உரம் என்று எத்தனையோ களைப்போட்டு, அந்த மண்ணின் தரம் குறைந்துகொண்டிருக்கிறது. அதனால் களர் நிலமாக ஆகக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுகிறது. அந்த மண்ணின் தரம் என்ன, எந்த எருவைப் போடுவது, எந்த முறையில் போட வேண்டும் என்று அந்தப் பயிற்சியை நல்ல முறையில் விவசாயி களுக்குக் கொடுக்க, அறிவுரை கூற இன்று விவசாயத்துறை நல்ல முறையில் இயங்குகிறதா என்று கேட்டால் இல்லையென்று சொல்ல முடியும். அதற்காக ஒரு 'மொபைல் யூனிட்', அதாவது நடமாடும் மண் ஆராய்ச்சி செய்யும் நிலையம் என்று ஏற்படுத்தினால நலமாக இருக்கும் என்று இந்த அவையில் பலமுறை வற்புறுத்தியிருக்கிறார்கள். அதற்கு இந்த அரசு எந்தவிதமான ஒதுக்கீடும் செய்யவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அதிலும், இன்றைக்குப் பல கம்பெனிகள், தனிப் பட்ட நபர்கள் ரசாயன உரங்களை உற்பத்தி செய்கிறார்கள். அதில் தரம் இருக்கிறதா, நல்லமுறையில் இருக்கிறதா என்று பார்க்காமல் ஏதோ விவசாயிகளுக்கு அரசாங்கம் நிர்ணயிக்கும் விலையில் கொடுத்து வருகிறார்களே தவிர, ஒழுங்காகப் பங்கீடான முறையில் ரசாயனக் கலவை செய்யப்படுகிறதா என்று பார்க்க அதிகாரிகள் இல்லை. ஏதோ மிக்சர் என்று, 4, 5 என்று எண்களைச் சொல்லுகிறார்களே தவிர, அதனுடைய தரத்தைப் பார்க்கக்கூடிய அளவிற்கு அதிகாரிகள் இல்லை என்று திட்டவட்டமாகக் கூற முடியும். 'சாயில் கன்சர்வேஷன்' என்று ஒரு திட்டம் வைத்து, அதிகப்படியான விவசாயிகள் தொல்லைப்படு கிறார்கள், அதனால் பெருவாரியான செலவு ஏற்படுகிறது. இதை மிகவும் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வளமான நீர் என்ற முறையில், குறிப்பாக மழைநீரில் வேளாண்மை செய்வதைக்காட்டிலும், ஊற்று நீரினால்தான் அதிகப்படியான உற்பத் தியைத் தமிழ்நாட்டிலே செய்கிறார்கள். குறிப்பாக வடார்க்காடு மாவட் டத்தில் பூமியின் அடியிலிருந்து நீரை எடுத்து அது நல்ல தரமான விளைச்சலைத் தருகிறது என்று சொல்கிறார்கள். அந்த முறையில் ஊற்று இருக்கிறதா, இல்லையா என்று பார்க்கக்கூட முடியாத அளவுக்கு விவசாயிகள் இருக்கிறார்கள். 100 அடி, 150 அடி என்று வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். போரிங் போடுவதற்குச் சாத்தியக்கூறு இல்லை. அப்படியே கஷ்டப்பட்டுத் தோண்டினாலும் தண்ணீர் இருக்கிறதா என்று பார்த்தால் சில இடங்களில் இருப்பதில்லை, அதனால் அரசாங்கம் ஆராய்ச்சி நடத்தி, தண்ணீர் இருக்கிறதா இல்லையா என்று தெரிவித்தால் விவசாயிகளுக்கு நலமாக இருக்கும். அதற்கு வேண்டிய வழிமுறைகளை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

[திரு இல. பலராமன்] [1969 மார்ச் 18

இன்றைய தினம் இலாக்கா மூலம் வழங்கப்படும் டிபாரி செட் பற்றாக்குறையாக இருக்கிறது. 'ஃப்ளாஸ்டிங் யூனிட்' இன்ஜினியர் பகுதியில் குறைவு. வடார்க்காடு மாவட்டத்திலிருந்து அதிகப்படியான கோரிக்கைகள் வந்தும் நிவர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக் கிறது. அந்தப் பஞ்ச காலத்தில்கூட அந்தக் கோரிக்கைகள் நிவர்த்தி செய்யப்படாத நிலையில், அந்தப் பகுதியிலுள்ளவர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தரமான உரத்தை எடுத்துக்கொண்டால், முனிசிபல் கம்போஸ்டைப் பயன்படுத்துகிறார்கள். கண்ணடி போன்ற வகையில் இல்லாமல் முனிசிபல அறிவுரை கூறி, தரமான உரத்தை வழங்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விதைகள் என்ற முறையில் எடுத்துக்கொண்டால், எவ்வளவோ நஷ்டம் ஏற்படுகிறது. இவ்வளவு அதிகம் நஷ்டம் ஏற்பட்டும் நல்ல தரமான விதை கிடைத்திருக்கிறதா என்றால் கிடைக்கவில்லை, பத்திரிகை வாயிலாகப் பார்க்கிறோம். போட்ட விதைகள் முளைக்கவில்லை என்று புகார். வடார்க்காடு மாவட்டத்திற்கு, 'குவாலியர்' துவரை என்று கொடுத்திருக்கிறார்கள். இது இந்தக் காலத்திலே விளையவே விளையாது என்று கூறக்கூடிய ஒரு நிலைமை. இதனால் பெருவாரியான நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. நானே அதனால் பெருவாரியான நஷ்டம் அடைந்து, டைரக்டர் ஆஃப் அக்ரிகல்சருக்கு, ஒரு வழக்கறிஞரைக்கொண்டு, நஷ்ட ஈட்டைக்கோரி நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். அந்த முறையில் விவசாய இலாக்கா நடந்துகொண்டு, நல்ல தரமான விதைகளை உற்பத்தி செய்வதில்லை, விதைகள் தரமானதாக இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாவட்டம்தோறும் விவசாய விதைப் பண்ணைகளை ஆரம்பித்து நல்ல தரமான விதைகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நண்பகல் 12-00 பூச்சி மருந்து என்ற முறையில், பூச்சி மருந்தை விவசாயிகள் எப்படிப் போடுவது என்ற முறைகூடத் தெரியாத நிலையில் இருக் கிறார்கள். அதற்கான சப்சிடி ரேட்டைக் குறைத்திருக்கிறார்கள், மேலும் அதிகமாகக் குறைக்க அரசாங்கம் முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். கம்பெனிகள் தயாரிக்கும் பூச்சி மருந்து அதிக விலைக்கு விற்கப்படுகிறது.

இதை அரசாங்கம் நிர்ணயிக்கிறதா, அல்லது மத்திய சர்க்கார் நிர்ண யிக்கிறதா; யார் நிர்ணயித்தாலும் சரி. அதை மொத்தமான விலையில் குறைவாக நிர்ணயிக்க வேண்டும். உற்பத்தி என்ன விகிதத்தில் இருக் கிறது ? அதற்கு இன்ன விலைதான் நிர்ணயிக்க வேண்டுமென்ற நிலையை இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மேலும்..........

(மணி அடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்)

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்திலே இடையிலே நான் சில கருத்துக்களை சொல்வதற்கு சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நான் மிகவும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன், இந்த மானியத்திற்கு அதிகமாக நேரம் ஒதுக்குவதற்கு நான் என்னவோ இடைஞ்சலாக இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இரண்டு நாள் நடத்துவதற்கும் நான் தயாராக இருக்கிறேன். என் கவலை எல்லாம் என்னவென்றால் பேச்சிலே மட்டும் அதிகமாக நீடித்துப் போய், காரியத்திலே ஒன்றும் இல்லை என்று செய்யவேண்டாம் என்பதுதான். நான் இதிலே கலந்து கொள்ளாமல் போகலாம் என்ற நிலைமை கூட இருந்தது. விவசாய மானியத்திலே பேசுவதிலே எல்லோரும் சிறந்தவர்கள். எல்லோரும் என்றால், முன்னால் இருந்த காங்கிரஸ்காரர்களும் அப்படித்தான். அவர்களும் கூட வாயாலேதான் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுதும் தவறுகளை எல்லாம் சொல்லிக்கொண்டுதான் இருந்தேன்.



1969 மார்ச் 18] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

விவசாயம் என்றால், விவசாயத் தொழில், விவசாயத்துறை, விவசாயி என்று மூன்று பிரிவுகளாக பிரித்துக்கொள்ளுகிறேன். இது விவசாய தேசம், விவசாய நாடு, இங்கே 100-க்கு 70 பேர் விவசா யத்தில் ஈடுபட்டிருந்தாலும், இந்த நாட்டிலே விவசாய உற்பத்தியை பெருக்கி, இப்பொழுது மக்களுக்கு வேண்டிய உணவைக் கூட கொடுக்க முடியாத நிலையில் இருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம் என்று வருத்தப்படுகிறேன்.

நானும் விவசாயிதான். நானும் உற்பத்தி செய்கிறேன் மக்களுக்கு வேண்டிய அளவு உற்பத்தி செய்ய முடியாத நிலையிலே இருக்கிறேன். அதற்கு பலவிதமான காரணங்கள். 300 வருடங்கள் இந்த நாட்டை வெள்ளைக்காரர்கள் ஆண்டார்கள். சுதந்திரம் வந்து 20 வருடங்கள் ஆகின்றன. திட்டங்களையெல்லாம் போட்டோம். திட்டங்களாலே முன் னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இவர்களும் தொடர்ந்து அந்த திட்டங் களைத்தான் கைப்பற்றிக்கொண்டு வருகிறார்கள், அதை மறுக்கமாட் டார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். அப்படி இருந்தாலும் கூட இந்த நிலைக்கு என்ன காரணம்? விவசாயியை யாரும் மனித னாகக்கூட நினைப்பது கிடையாது. அரசாங்கத்திலே விவசாயத்தை எடுத்துப் பார்த்தாலும், ரெவினியூ டிபார்ட்மெண்டுக்கு இருக்கிற மதிப்பு விவசாயத்துறைக்கு கிடையாது. 1-ம் தரம், 2-ம் தரம், 3-ம் தரம், 4-ம் தரம் என்று வந்தது. இப்பொழுது சாப்பாடு கிடையாது என்ற நிலைமை வந்ததற்குப் பின்னாலே, விவசாயி என்று ஒருவன் கிராமத் திலே இருக்கிறான் என்று சர்க்காருக்கு ஞாபகம் வந்தது. முந்தைய சர்க்காருக்கும் அப்பொழுதுதான் ஞாபகம் வந்தது. பற்றாக்குறை இல்லாமலிருந்தால் யாரும் கவனித்திருக்கமாட்டார்கள் இன்னும் அவர்களை அடித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள் அதுதான் பெரிய பிரச்சினை. விவசாயம் கௌரவமுள்ள தொழிலாக நல்ல தொழிலாக இருக்கிறது என்று இந்த பற்றாக்குறை வந்ததற்குப் பின்னால்தான் தெரியவந்தது. அதற்குப் பிறகு அவனை தாஜா பண்ணி விவசாயி இல்லாமல் ஒன்றுமில்லை என்றெல்லாம் சொல்கிறார்கள்.

'சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை,'

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். இப்பொழுதுதான் அவனுடைய நிலைமையைக் கவனிக்கிறார்கள். அவர்கள் சத்தம் போட்டால் தகராறாகப் போய்விடும், அவர்கள் நன்றாக இருக்கட்டும், எப்படியோ தொலைந்து போகட்டும் என்ற நிலையிலே இப்பொழுது இருக்கிறோம். வேறு நாட்டிலே, அமெரிக்காவிலே 7 சதவிகிதத்தினர்தான் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த நாட்டினுடைய பிரச்னையும் தீர்ந்தநிலையில், இந்த பி. எல் 480 மூலம் பெற்றுக்கொண்டிருக்கிறோம். அதற்கு அடிப்படை காரணம் என்ன? அங்கே இருக்கிற விவசாயி கௌரவமாக கவனிக்கப்படுவது மட்டுமல்ல, அவனுக்கு வேண்டிய உதவிகளை, அவனுக்கு வேண்டிய விலைகளை, அவனுக்கு கட்டுபடியாகக்கூடிய விலையை சர்க்கார் கொடுக்க உத்தரவாதம் செய்திருக்கிறார்கள். இதைத்தான் இப்பொழுது மட்டுமல்ல, எப்பொழுதும் சொல்லிக் கொண்டு வருகிறேன்.

விவசாயி, விவசாயத் தொழிலில் ஈடுபடவேண்டுமென்றால் அவனுக்கு வசதி இருக்கவேண்டும். எத்தனையோ பேர் இன்றைக்கு பட்டம் பெற்றுக் கொண்டு வருகிறார்கள், மாணவர்கள் எல்லாம், குழந்தைகள் எல்லாம். இந்த தொழில் லாபகரமாக இருந்தால்தான் அவர்கள் ஈடுபடு வார்கள். இது கௌரவமாயுள்ள தொழிலாக இருக்கவேண்டும், அதிலே ஈடுபட்டால், அவர்களுக்கு அதிலே வேண்டிய வசதிகள் கிடைக்க வேண்டும். அப்பொழுதுதானே அதிலே ஈடுபட முடியும்? ஒரு கொள்கையை திட்டவட்டமாக வைத்து நாம் செய்யவேண்டும். செய்வதோடு மட்டுமல்ல, மதிக்கத்தகுந்ததாகவும் செய்யவேண்டும். அது

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 மார்ச் 18

மத்திய சர்க்காராக இருந்தாலும் சரி, மாநில சர்க்காராக இருந் தாலும் சரி. கட்டுப்பாடு என்றால் என்ன? ஒருவன் 5 ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறான். 65 சதவிகிதம் அவன் அந்த நிலத்திற்காக பாடு படுகிறான். அவனுடைய வருமப்படியை எடுத்துப் பார்ப்போமானால், நம்முடைய செக்ரட்டேரியட்டிலே கடைநிலையிலே இருப்பவரைவிட மிகவும் மோசமான நிலைமை இருக்கிறது, அவன் இருக்கிறான். அந்த மிராசு தார், இந்த மிராசுதார் என்று தான் பேசுகிறார்கள். 10 ஏக்கர் உள்ள பெரிய மிராசுதாரை, ஜமீன்தாரை எடுத்துக்கொள்வோம். இவர்கள் கொடுக்கும்படியான விலை எப்படி கணிக்கப்படுகிறது? ரூ. 48 கொடுப் பதாக வைத்துக்கொள்வோம், 10 ஏக்கருக்கு ரூ. 1,000 அல்லது ரூ. 2,000 வரலாம். மாதத்திற்கு ரூ. 200 கூடக் கிடையாது, அந்த கணக்குப்படி. இங்கே லோயர் டிவிஷன் கிளார்க்—எழுத்தச்சர்—அவரை இழிவாகச் சொல்லவில்லை—எடுத்துப் பார்த்தால், அவருக்கு என்ன சம்பளம்? அவர்கள் முதலீடு போடுகிறார்களா? ரூ. 2,000 வருவாய்க்கு ரூ. 3,000 முதலீடு போட்டு, அந்த நிலையில் பார்த்தால், நடுத்தர விவசாயி இங்கே செக்ரட்டேரியட்டிலே வேலை செய்யும்படியான லோயர் டிவிஷன் கிளார்க்கினுடைய நிலையைவிட மிகவும் கீழ்நிலையிலே இருக் கிறான். இதை நாம் உணர வேண்டும். இதை யாரும் உணரவில்லை.

அந்த நிலையிலே பார்ப்போமானால், கொடுக்கும்படியான விலை கட்டு படியாகக்கூடியதா? கணக்கு போடுகிறார்கள், எப்படி? அண்மையிலே சேலத்திலே இருந்து ஒரு விவசாயி என்னிடத்திலே வந்தான், வருமான வரியைக் கொண்டு வந்து காட்டினான். 12 ஏக்கர் 70 சென்ட் தான் அவனுக்கு இருக்கிறது. இதோடு சம்பந்தப்படாதது என்றாலும் அவர்கள் கஷ்டபடுகிறார்கள் என்ற நிலைக்காகச் சொல்கிறேன். கம்பவுண்டிங்குக்கு நோட்டீஸ் கொடுக்கவில்லை. இப்பொழுது ரூ. 15,000 கொடுக்க வேண்டு மென்று நோட்டீஸ் வந்திருக்கிறது. கம்பவுண்டிங், ஏதோ ஏழை விவசாயி செய்திருக்க மாட்டான். கம்பவுண்டிங் ரூ. 50 நான் வந்திருக்கும். ரூ. 150 தான் ஏக்கருக்கு உற்பத்திச் செலவு என்று விவசாயத்துறையிலே கணக்கு சொல்கிறார்கள், விவசாயிக்கு உற்பத்தி செலவு ரூ. 250, ரூ. 300 என்று வேறு இடத்திலே புள்ளி விவரத்திற்காகச் சொல் கிறார்கள். விவசாய ஆராய்ச்சிப் பண்ணையிலே ரூ. 450 என்று கணக்கு எடுத்து வருகிறார்கள். விவசாய வருமான வரி என்று கணக்கு போடும் போது ரூ. 150 வேறு புள்ளி விவரத்திற்காக ரூ. 250 ஆகிறது, விவசாய ஆராய்ச்சிப் பண்ணையிலே ரூ. 450 ஆகிறது. ஏதோ விவசாயி, வாயில்லா பூச்சி என்று இப்படி போடும்படியான நிலை இருக்கிறது. எந்த கணக்கு போட்டாலும் பேசாமல் இருக்கும் படியான நிலை இருக்கிறது. 12 ஏக்கர் 70 சென்ட்டுக்கு ரூ. 15,000-க்கு நோட்டீஸ் வந்து, ஜப்தி, வாரண்ட் எல்லாம் வந்திருக்கிறது. விவசாய வருமானத் துறையிலே இருந்து, கம்பவுண்டிங்கில் ரூ. 200 கூட வந்திருக்காது. 1962-ம் வருஷத்திலே இருந்து அதிகாரிகள் இப்படி போட்டு, விவசாயிகள் தொல்லைப்படுகிற நிலையிலே இருக்கிறார்கள்.

ஒரு கருத்தரங்கு நடந்தது, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் வந்திருந் தார்கள். அந்த டைரக்டர் ஆப் அக்ரிகல்ச்சர் வந்திருந்தார்கள். எல்லோரும் பேசவேண்டுமென்று சொன்னார்கள், நானும் பேசினேன், அது விளம்பரத்திற்காக ஏற்படுத்தப்பட்ட கருத்தரங்காக இருந்ததே தவிர, சட்டசபையிலே பதில் சொல்லுகிற மாதிரி எனக்கு—தப்பாக இருக்கலாம்—அவர் பேசிய பேச்சு இருந்ததே தவிர, நல்ல பேச்சாக எனக்குத் தெரியவில்லை. எப்பொழுதும் பேசுகிறமாதிரி பேசினேன். 'ஐயா விலைவாசி, இது கன்ஸ்யூமர் ஓரியண்டட் பாலிசியா, அல்லது புரட்யூசர் ஓரியண்ட் பாலிசியா'? என்றேன். விவசாய உற்பத்தி செய்பவ னுடைய நிலையை வைத்து விலையை நிர்ணயிக்கப் போகிறோமா, அல்லது உழுபவனுடைய நிலையை வைத்து நாம் விலையை நிர்ணயிக்கப் போகிறோமா என்று சொல்லி, அவனுடைய கஷ்டத்தை எல்லோரும் சேர்ந்து போக்கவேண்டுமென்று சொன்னேன். உடனே அதிகாரி எழுந்தார், அமைச்சரை திருப்திப் படுத்த வேண்டுமல்லவா?....



1969 மார்ச் 18]

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஏற்கனவே விவசாய டைரக்டராக இருந்த அதிகாரியைப் பற்றி இங்கே குறிப்பிட்டுப் பேசுகின்றார்கள். அவர் அதை எதிர்த்து விளக்கம் கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பு உரிமை இந்த மன்றத்திலே அவருக்கு இல்லாத காரணத்தாலே அவரைப் பற்றி தனிப்பட்ட முறையிலே தாக்கிப் பேசாமல் இருக்க வேண்டும். ஒருவேளை, நம்மை ஆதரிக்கவேண்டியவர், சர்க்கார் துறையிலே ஒழுங்காக நடக்கிறாரே என்ற வருத்தத்திலே எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறாரா என்று அறிய விரும்பு கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பேசுவதற்கு முன்னாலே அவர் முந்தி விட்டார். அன்று பேசியதை அப்படியே சொல்லியிருக்கிறேன். இந்த முறையை ஆராயவேண்டுமென்று சொல்கிறேன். வானொலியிலே பிரசங்கம் செய்யவேண்டுமென்ற சமயத்திலே, பொறுப்புள்ள விவசாயி என்ற முறையிலே சொல்லுகிறேன். என்னைவிட விவசாயத்தில் அவருக்கு அனுபவம் இருப்பதாக மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறேன். பேசின பேச்சைத்தான் சொல்லுகிறேன். அவர்கள் சொன் னது இதுதான். என்ன சொன்னார்கள் என்றால் கன்ஸ்யூமர் ஓரியன்டெட் பாலிஸியும் கிடையாது, ப்ரொட்யூஸர் ஓரியன்டெட் பாலிஸியும் கிடையாது It is people's oriented policy என்று சொன்னார்கள். மக்களுடைய நிலையைப் பொறுத்த பாலிஸி என்று சொன்னார்கள். மனதிற்குக் கஷ்டமாக இருக்கிறது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேனே தவிர, வேறு அல்ல.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** அண்மையிலே மத்திய அமைச்சர் அவர்கள் சென்னையிலே பேசுகிறபொழுது அவர்களுடைய கருத்தை பிரதிபலிக்கிற அளவிலே சொன்னார்கள். மக்களுடைய பிரச்னை என்று சொல்லும்பொழுது, விவசாயிகளையும் குறிக்கும். வாங்கிச் சாப்பிடுகிறவா களையும் குறிக்கும். மக்கள் என்று சொல்லும்பொழுது விவசாயிகள் விலக்கு ஆகமாட்டார்கள். வாங்கிச் சாப்பிடுகிறவர்களும் விலக்கு ஆகமாட் டார்கள். பொதுவாக மக்களுடைய, மனிதாபிமானத்தை ஒட்டிய பிரச்னை என்றுதான் குறிப்பிட்டார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** 100-க்கு 75 பேர்கள் கஷ்டப்பட்டு உழைத்து, வயிறு காய்ந்துகொண்டு, 25 பேர்களுக்கு சாப்பாடு போடு கிறார்கள் என்றால் பீபிள்ஸ் ஓரியண்டெட் பாலிஸி என்று சொல்வதற் கில்லை. அவர்களுக்கு மக்களிடம் எவ்வளவு அக்கறை இருக்கிறதோ, அனுதாபம் இருக்கிறதோ, அதைவிட எனக்கு அனுதாபமும், அக்கறையும் உண்டு, இதெல்லாம் விளம்பரத்திற்காகச் சொல்வதல்ல. திடீரென்று பீபிள்ஸ் ஓரியண்டெட் பாலிஸி என்று சொன்ன காரணத்தினால்தான் நான் இதைச் சொல்கிறேன். எதையும் கொஞ்சம் யோசித்துப் பார்த்துச் சொல்லவேண்டும். கன்ஸ்யூமர்ஸ் என்றால் பீபிள் இல்லையா, ப்ரொட் யூஸர்ஸ் என்றால் பீபிள் இல்லையா. (மாண்புமிகு திரு. ஏ. கோவிந்த சாமி: நான் அதைத்தான் சொன்னேன்) அமைச்சரை திருப்திப்படுத்து வதற்காக அப்படிச் சொன்னார் என்று நான் ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது. எனக்கு அதற்கு உரிமை இருக்கிறது. People's oriented policy—Who are those people? நான் அப்படி உடனே கேட்டிருக்கக் கூடாதா? இதை மன்றத்தில் ஏன் சொல்கிறேன் என்றால் சர்க்கார் கொள்கைகளை அதிகாரிகள் அமல் நடத்துவதிலே விசுவாசம் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதில் எந்தவிதமான ஆட்சேபனை இல்லை. கொள்கையின் அடிப்படையிலே சொல்கிறேன், பீபிள்ஸ் ஓரியண்டெட் பாலிஸி என்றால் எங்கிருந்து ஜனங்கள் வந்தார்கள்? என்ன காரணம் என்றால், விவசாயிகள் எழுந்து இதை எதிர்த்துப் போராடும்படியான சக்தி, ஒற்றுமை இருக்குமானால் அதுமாதிரி சொல் லும்படியான நிலை இருக்காது. விவசாயிகளுக்குள் ஒற்றுமை கிடையாது. காலையிலிருந்து மாலை வரையில் உழைத்துக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக் கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கனம் அங்கத்தினர் அவர் களுக்கு பிடிக்காத ஒரு கருத்தை ஒரு அதிகாரி சொல்வார்களேயானால், அப்படிப்பட்டவரை பொதுஜனங்கள் பார்த்துக்கொள்ளட்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தூண்டிவிடுகிறார்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பொதுமக்கள் அதை உணர்வார்கள். மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எந்தவகையிலும் சொல்ல முடியாமல்' அவர்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தூண்டிவிடுகின்ற நிலை ஒன்றும் கிடையாது. 15 வருஷ காலமாகத்தான் இதிலே நான் அழுதுகொண்டிருக்கிறேனே, கத்திக்கொண்டிருக்கிறேனே? அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்று சொல்வார்கள். ஆனால் நான் அழுதுகொண்டிருந்தும் எனக்குப் பால் கிடைக்கவில்லை. பிரத்தியட்சமான காரியங்களிலே ஈடுபட வேண்டும். விளம்பரத்திற்காக கருத்தரங்கு என்ற நிலையில் செல்லக்கூடாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென்றால், அதிலே ஈடுபாடு கொண்டு, அதை எல்லா வகைகளிலும் அணுகவேண்டும்.

ஒரு விஷயத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ப்ரொட் யூஸர் ஓரியண்டெட் பாலிஸி என்று எடுத்துக்கொண்டால், 1951-52-ல் உற்பத்திச் செலவு என்ன? நான் எத்தனையோ வருஷமாக இதைச் சொல்லி வருகிறேன். இந்தச் சர்க்காருக்கு மட்டுமல்ல. எந்தச் சர்க் காராக இருந்தாலும் சரியே, நான் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்ல தயாராக இருக்கிறேன். யாராக இருந்தாலும் தவறு இருந்தால் தவறு என்று நான் சொல்வேன். அதற்கு நான் பயப்படுவது கிடையாது. அப்பொழுது இருந்த உற்பத்திச் செலவைவிட இப்பொழுது 10 பங்கு உற்பத்திச் செலவு அதிகமாகியிருக்கிறது. அப்பொழுதிருந்த விலைவாசியை விட இப்பொழுது விலைவாசி 10 பங்கு அதிகரித்திருக்கிறதா? அதாவது லிவ்விங் இண்டெக்ஸ் என்று மட்டும் சொல்கிறார்கள். பட்டணத்திலே இருக்கிற புள்ளிவிவரங்களை வைத்துச் சொல்கிறார்கள். புள்ளி ஏறி விட்டது, 100 லிருந்து 575 புள்ளி ஏறிவிட்டது என்று சொல்கிறார்கள். அது மாதிரி விவசாயிகள் உற்பத்தி செய்வதற்கு ஆகக்கூடிய செலவின் புள்ளி விவரங்களைப் பார்த்தோமானால், அப்பொழுதிருந்த புள்ளி 100 என்று வைத்துக்கொண்டால், இப்பொழுது 1000 புள்ளியாக உயர்ந்திருக்கிறது. இதை என்னால் நிரூபிக்க முடியும். எத்தனையோ வகைகளில் நிரூபிக்க முடியும். ஆகவே விவசாயிகள் வாங்கும்படியான பொருள்களின் விலைகளை எடுத்துக்கொண்டு பார்க்காமல், அவர்கள் விற்கும்படியான நெல்லை மட்டும் எடுத்துக்கொண்டு பார்ப்பது என்? பிரத்தியட்சமான நிலையில் பார்க்கவேண்டும், பருத்திக்கொட்டையை எடுத்துக்கொண்டால், அது ரொம்பவும் முக்கியம் மாடுகளுக்கு பருத்தி விதை இல்லையென்றால் அவைகளை ஏரில் கட்டமுடியாது. முன்பு ஒரு மூட்டை பருத்திக்கொட்டை ரூ. 2 தான். நான் வாங்கியிருக்கிறேன், இப்பொழுது ரூ. 35. 17½ மடங்கு விலை அதிகமாகியிருக்கிறது. 1700 புள்ளி அதிகமாகியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** பருத்தி சாகுபடியாளர்களுக்கு கூடுதலான விலை கிடைக்கக்கூடாது என்பது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய வாதமா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அமைச்சர் அவர்கள் குறுக்கே பேசுவார் என்பது எனக்குத் தெரியும். கொஞ்சம் அவர் பொறுத்திருந்து பார்த்து, பிறகு வேண்டுமென்றால் கேட்கலாம். விவசாயிகளுக்கும் அந்த விலை கிடைப்பதில்லை. பருத்தி உற்பத்தியாளர்களுக்கும் கிடைப்பதில்லை, இடையிலே இருக்கக்கூடிய மில்களுக்குத்தான் அந்தப் பணம் போகிறது. புண்ணாக்கு முன்பு ஒரு மூட்டை ரூ. 3 விலை, 162 டன். இன்றைக்கு அதே புண்ணாக்கு ரூ. 37. விவசாயத் தொழிலுக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் எடுத்துக்கொண்டால், விவசாயிகள் வாங்குகிற பொருள்களை எடுத்துக்கொண்டு பார்த்தால், ஒன்றுக்கு 10 மடங்கு விலை அதிகமாகியிருக்கிறது.





**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** எதிர்க்கட்சித் தலைவர் அவர் களுடைய கருத்து மணிலா, பருத்தி சாகுபடியாளர்களுக்கு அதிக விலை கிடைக்கக்கூடாது என்பதா? அல்லது பருத்தி, மணிலா சாகுபடி செய்யக் கூடாது என்பதா? திரு. பலராமன் அவர்கள் தலையை ஆட்டுகிறார்கள். அவர்கள் பகுதி மணிலா பகுதி. மணிலா சாகுபடி செய்யும் விவசாயி கள் இதை ஒத்துக்கொள்வார்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நானும் ஒரு விவசாயிதான். எல்லா விவசாயிகளையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். நான் சொல்வது என்னவென்றால் 'பாரிடி இன் பிரைஸஸ்' வேண்டும். அது அமைச்சர் அவர்களுக்குப் புரியவில்லை என்று நான் கருதுகிறேன். மணிலா, பருத்திக்கொட்டையைப் பற்றி நான் சொன்னவுடன், அமைச்சர் அவர்கள் அவசரப்பட்டுக்கொண்டு உடனே இப்படிக் கேட்கிறார்கள். தயவு செய்து ஆத்திரப்படவேண்டாம், பொறுத்திருந்து பார்த்து, பிறகு கேளுங்கள் என்றுதான் சொல்லிக்கொள்கிறேன. கரும்பு விவசா யத்தைப் பொறுத்தமட்டில்—உடனே நல்லசாமி அவர்கள் கரும்பு விவசாயம் செய்கிறார்களே கரும்பு விவசாயத்தை நீங்கள் எதிர்க் கிறீர்களா—என்று அமைச்சர் அவர்கள் கேட்பார்கள். எதையும் யோசனை செய்து செய்யவேண்டும். ஒரு ஏக்கரில் 30 டன் கரும்பு விளைவதாக வைத்துக்கொள்வோம். 50 டன் என்றுகூட வேண்டிய தில்லை. உடனே தூண்டிவிடுவார்கள்—நான் அதை வேண்டாம் என்று சொல்லவில்லை. ஒரு ஏக்கருக்கு ரூ. 3,000 கிடைக்கும். செலவு ரூ. 2,000 போக மீதி ரூ. 1,000 கிடைக்கும். ஒரு ஏக்கர் நெல் விளைவித்தால், அந்த விவசாயிக்கு' என்ன வருகிறது? ரூ. 200, 300 கூட வருவதில்லை. அதைத்தான் நான் சொல்கிறேன். ஒரு ஏக்கரா பருத்தி விளைவித்தால், இப்பொழுது இருக்கும்படியான விலையை எடுத்துக்கொண்டால் அந்த விவசாயிக்கு ரூ. 1,000, 1,500 கிடைக்கும். செலவு ரூ. 1000 என்று வைத்துக்கொண்டால்கூட, ரூ. 500 கிடைக்கும். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஒரு விவசாயி எந்தப் பொருளை உற்பத்தி செய்தாலும்கூட, ஒரு ஏக்கருக்கு வரும்படியான வருமானம் ஒரேமாதிரி யான வருமானமாக இருக்கவேண்டும். அதற்குத்தான் திட்டத்தைப் போடுங்கள் என்று நான் சொல்கிறேன். யாராக இருந்தாலும் அதைத் தான் நான் சொல்வேன். நீங்கள் கரும்பு போடக்கூடாதா என்று அவர்கள் கேட்கலாம். நிச்சயம் சொல்கிறேன். எனக்கு அதற்கு சௌகரியம் இருக்கிறது. என்னுடைய பூமி பூராவும் கரும்பு போடலாம். கரும்பு போடுங்கள் என்று காங்கிரஸ்காரர்கள் பிரசாரம் செய்கிறார்கள் என்றெல்லாம் யாரைப்பற்றியெல்லாமோ சொன்னார்கள். இங்கு நான் சொல்கிறேன். இந்த நாட்டிலே உணவுப் பஞ்சம் தீருகிற வரையில் என்னுடைய பூமியிலே ஒரு சதுர அடி கூட கரும்பு போடமாட்டேன் என்று நான் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** அதற்காக இந்த அரசாங்கத்தின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பிரசாரத்தில் அவர்கள் தொடர்ந்து ஈடுபடு வார்கள் வெளியிலும், இங்கு மட்டுமல்லாமல் என்று நான் நம்பு கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நான், கருத்திருமன் சொல்கிறேன் என்றால், பாக்கியிருக்கக்கூடியவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும், நான் நிர்தாட்சண்யமாகச் சொல்கிறேன். நான் ஒரு கரும்பு ஆலையோடு தொடர்பு உள்ளவன். அவர்கள் பாய்ந்தார்கள் கரும்பு போடுங்கள் என்று. நான், வேண்டாம், நாட்டு மக்களுடைய உணவுப் பிரச்னை தான் எனக்கு முக்கியம் என்று சொன்னேன். எவ்வளவு தூரம் உணவு உற்பத்தியை நான் செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செய்வேன். இந்த உணவுப் பிரச்னை தீரும் வரையில் ஒரு சதுர அடி பூமியில் கூட கரும்பு போடமாட்டேன் என்ற சபதத்தை நான் எடுத் துக்கொண்டிருக்கிறேன். கரும்பு, அல்லது வேறு பணப்பயிர் போட்டால், பல லட்சக்கணக்கான ரூபாய் கிடைக்கும், அதற்கு எனக்கு

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 மார்ச் 18

சக்தி இருக்கிறது. ஆனால் நான் அதைச் செய்யவில்லை. காரணம் என்ன? கொள்கை பிடிப்புத்தான். ஒரு போகத்தை இருபோகமாகச் செய்வதிலும், இரு போகத்தை மூன்று போகமாகச் செய்வதிலும் அதிலே ஈடுபாடு அப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதிலே நான் பாடுபட்டுக்கொண்டிருக்கிறேன். அப்படித்தான் காங்கிரஸில் பற்றுள்ளவர்கள் அனைவரும் செய்துகொண்டிருக்கிறார்கள். இதிலே ஒரு முக்கியமான பிரச்னை என்னவென்றால், அந்த இடத்தில் என்ன பயிர் செய்ய முடியும் என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். நான் எதிர்ப்புக்காகச் சொல்லவில்லை. இதையெல்லாம் உணர்ந்து செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். நான் கரும்பு சாகுபடி செய்யாமல் இருக்கிறேன் என்பதற்காக எனக்கு ஒரு பெருமை வேண்டியதில்லை. இன்னொருவர் அப்படிச் செய்கிறார் என்று நான் குறை கூறவும் இல்லை. நான் சொல்வதெல்லாம், விவசாயி எதை உற்பத்தி செய்தாலும், அவனுக்கு 'பாரிடி இன் பிரைஸஸ்' வேண்டும். கடலை போட்டால் லாபம் வராதா, வாழை போட்டால் லாபம் வராதா, கரும்பு போட்டால் லாபம் வராதா? நான் லாபத்தை வேண்டாம் என்று சொல்லவில்லை. உணவுப் பிரச்னை தீரவேண்டும். ஒரே சமயத்தில் எல்லோரும் கரும்பு போட்டால், எப்படி அதிகமான விலை வரும்? வெல்லத்திற்கு வெளி மார்க்கெட்டில் விலை குறைந்துவிட்டது. பாக்டரியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தவர்கள் 'ஆகா' என்று வாயைப் பிளந்துகொண்டிருக்கிறார்கள்.—

ஆகவே, சர்க்கார் ஒரு தெளிவான கொள்கையை எடுத்துக்கொண்டு, எல்லா விவசாயிகளையும் ஒட்டுமொத்தமாகக் கவனிக்க வேண்டும். இல்லையென்றால், எல்லோரும் பணப்பயிர் செய்யப் போய்விடுகிறார்கள். விவசாயிகளுக்கு கட்டுபடியாகும் விலையைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். (குறுக்கீடு) ஃபுட் டிபேட்டில் பேச இருக்கிறது. ஒரு திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் பழைய கதையை ஆரம்பித்தார்கள். காங்கிரஸ்காரர்கள் குட்டிச்சுவர் செய்துவிட்டுப் போய்விட்டார்கள். நாங்கள் இந்த இரண்டு வருஷ காலத்தில், உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம், என்று அதையும் அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்கள். ஏதோ மழை பெய்யவில்லை என்றால் அதற்கு வருணஜபம் செய்ய வேண்டாமா என்ற நிலையில் இருக்கிறது. இதிலே சொல்லியிருக்கிறார்கள், 63 லட்சம் டன் எதிர்பார்த்தோம், அதற்குப் பதிலாக 54 லட்சம் டன்தான் கிடைத்திருக்கிறது என்கிறார்கள். பாழாய்ப்போன காங்கிரஸ் சர்க்கார், அதிக உற்பத்தியைச் செய்யவேண்டும் என்று முன்னதாகவே திட்டம் போட்டிருந்தார்கள். அப்படிப்பட்ட நிலையில், மழை பெய்யாதபோது, 'ஸிஸனல் கண்டிஷன்ஸ் சரியாக இல்லை என்றபோது, எதிர்க்கட்சியிலிருந்த போது, தாவினார்கள், ஆகா, எப்படிச் சொல்லலாம், உங்களுக்கு புத்தி கிடையாது, அறிவு கிடையாது, மழை பெய்யக்கூடிய வழிகளை ஏன் செய்யவில்லை என்றார்கள். என்ன என்னவோ செய்வோம் என்றார்கள். அப்படிப்பட்டதையெல்லாம் இப்பொழுது செய்து இருந்தால், இந்தப் புள்ளிவிவரங்களை, வெகு சிரமப்பட்டுத் தேடிக் கண்டுபிடித்திருக்க வேண்டாம், 48 முதல் 51 பர்செண்ட், 23 பர்செண்ட் குறைவு என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம். ஆகவே, 63 லட்சம் டன் எதிர்பார்த்ததில் 54 லட்சம் டன்தான் கிடைத்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** எதிர்க் கட்சியில் இருந்தவர்கள் அப்படி ஆளும் கட்சியைச் சுட்டிக்காட்டி, உங்களுக்கு புத்தியில்லை என்று சொன்னதாகச் சொல்கிறார்கள். அதைச் சகித்துக் கொண்டு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இருந்தார்களா? சட்டசபை நடவடிக்கைகளில் அப்படி ஒரு வார்த்தை இருப்பதை நிரூபிக்க முடியுமா? தானாக ஒரு வார்த்தையைக் கற்பனை செய்துகொண்டு, அதை ஒரு குற்றச்சாட்டாக எங்கள் மீது சுமத்துவதாக இருக்கிறது அவர்களுடைய வாதம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** புத்தியில்லை என்பதைவிட, பேசி இருக்கலாம் அதிகமாகவே. அவர்கள் பேசின பேச்செல்லாம், இதைவிட



1969 மார்ச் 18] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

அதிகமாகத்தான் இருந்தது. புத்தியில்லை என்றிருந்தால் ஒரே வார்த்தையில் போயிருக்குமே. அன்றைக்கு நிதி அமைச்சர் என்னென்னமோ சொன்னார்கள். எதிர்க் கட்சி என்றால் குற்றச்சாட்டு சாட்ட வேண்டியதுதான். அதற்குப் பாராட்டுகிறேன், ரொம்பக் கெட்டிக்காரத்தனமாகச் சாட்டினீர்கள். அலங்காரமாகச் சொன்னீர்கள், பாலிஷ் போட்டுச் சொன்னீர்கள் என்றால் அதை நான் ஏற்றுக்கொள்ளுவேன். இந்த சர்க்காரும் மழை பெய்வதற்கு என்ன திட்டத்தைப் போட்டார்கள்? ஏன் போடவில்லை? உங்களுக்கு அனுகூலமாகத்தான் சொல்லுகிறேன். இயற்கை பொய்த்துவிட்டது. அதனால்தான் நினைத்ததைச் செய்ய முடியவில்லை. மனிதன் மாடாக உழைக்கிறான். அவனுடைய ஒத்துழைப்பு வேண்டும், விவசாயியை மனிதனாக நினைக்க வேண்டும், உணர வேண்டும். நான் சொல்வதெல்லாம் விவசாயி விலை கேட்டால், அவர்கள் சொன்ன பதிலை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் கொடுத்த விலைதானே என்று நீங்கள் அரசியல் காரணத்திற்காக உபயோகப்படுத்திக்கொள்கிறீர்கள். தாராளமாகச் சொல்லுங்களேன். (குறுக்கீடு) நேரம் அதிகமாகும். நான் சொல்வதெல்லாம் விவசாயி எந்த உற்பத்தி செய்தாலும், சரிசமமான விலை, "பாரிடி இன் ப்ரைஸஸ்" கொடுக்க இந்த சர்க்கார் முயற்சிக்கவில்லை.

நஷ்டப்படும் விவசாயிகளுக்கு இன்ஷூரன்ஸ் வேண்டும். விவசாயத் துறையைப் பொருத்த வரையில், தமிழ் நாட்டில், விவசாயத்துறையில் பணிபுரியும் ஆராய்ச்சியாளர்கள் நல்ல பணி புரிகிறார்கள். கோயம்புத்தூரில் தயார் செய்த கரும்பு உலகத்திலேயே மிகச் சிறந்த கரும்பாக இருக்கிறது. பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கும் வேறு பல நாடுகளுக்கும் போயிருக்கின்றன. அந்த வகையில் அவர்கள் நல்ல பணி புரிந்து வருகிறார்கள். இந்த ஆராய்ச்சிகள் மக்களிடத்தில் சேருவதற்கு திட்டங்களை விரிவாகவும், அதிக அளவிலும் செய்யவேண்டும்.

இந்த சர்க்காரிலே செய்திருக்கிற, இரண்டு வருஷகாலத்தில் செய்திருக்கிற ஒரு காரியத்தை பாராட்டியே தீரவேண்டும். அதைப் பல இடங்களிலும் பாராட்டியிருக்கிறேன். அதாவது, ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளித்திருப்பது. விமானம் மூலம் இந்தப் பூச்சி மருந்துகளை தெளித்ததன் விளைவாக நெற்பயிருக்கு நல்ல முறையில் நன்மை ஏற்பட்டிருக்கிறது. இரண்டு ஆண்டு காலமாக தொடர்ந்து தெளித்ததன் காரணமாக வேளாண்மையில் அதிக உற்பத்தி கண்டு இருப்பதோடு மட்டுமல்லாமல், பூச்சி அழிவதற்கும் அது வழியாக இருக்கிறது என்பதால் அந்தக் காரியத்தை நான் பாராட்டுகிறேன். நிச்சயமாகத் தெரிவிக்கிறேன், இதை எல்லா இடங்களிலும் செய்யவேண்டும். ரூ. 12 லட்சம் செலவாகும் என்றார்கள். எத்தனை லட்சம் செலவானாலும் பரவாயில்லை; இதனால் பின்னால் வரப்போகும் பயிர்களையும் பூச்சி தாக்காது. விவசாயிகளுக்கு நல்ல முறையில் இது பலன் தருவதாக இருக்கிறது.

ஒரு அதிகாரியைப் பற்றிச் சொன்னார்கள். ஒரு மாவட்டக் கலெக்டர் இருந்தார். அப்பொழுது அவர் அங்கே விவசாயத் துறையில், ஆராய்ச்சித் துறையில் தீவிரமாக இருந்தார்கள். என்னுடைய ஆட்சேபணைகளைக் கூட சமாதானப்படுத்தி காரியங்கள் செய்ததால், நல்ல முறையில் மக்கள் அனுபவித்திருக்கிறார்கள். ஆகவே, விமானத்தின் மூலம் மருந்து தெளிப்பதைத் தீவிரமாக்கி செய்தார்களானால், நல்ல முன்னேற்றம் இருக்கும் என்று சொல்லி, அந்தக் காரியத்திற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன்.

அதிகாரிகளில் சில பேர்கள் விவசாயத் தொடர்பு இல்லாமல் இருக்கக்கூடிய குடும்பத்திலிருந்து வரலாம். டெக்னிகல் பீபிளுக்கு டிஸ்ட்ரிக்டு கலெக்டருக்குக் கொடுக்கும் மரியாதையும் அந்தஸ்தும் கொடுக்கப்பட வேண்டும். டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்சுரல் ஆபீசருக்கு, அவர் எந்தத் தரத்தில் இருந்தாலும், மரியாதை, அந்தஸ்து கொடுத்தால் ஊக்கம் ஏற்படும்.

அவர்களுடைய சம்பளம் பற்றிச் சொல்ல வரவில்லை; அந்தஸ்து மரியாதை இவை பற்றித்தான் சொல்லுகிறேன். இந்தத் துறையில் இருக்கும் அதிகாரிகளுக்கு கௌரவம், அந்தஸ்து ஏற்படும் வகையில் செய்யப்படவேண்டும்.

அடுத்து, வெடரினரி, கால்நடை அபிவிருத்தியில் இப்பொழுது இருக்கும் அபிவிருத்தி போதாது. நம் நாட்டில் இருக்கும் நிலை என்னவென்றால், எல்லோரும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள், தானியத்தை மாத்திரம் உற்பத்தி செய்தால் போதும் என்று. அந்த நினைப்பு தவறு. எத்தனையோ உற்பத்தியெல்லாம் பெருக வேண்டும். கால் நடை மட்டுமல்ல, அதைத் தொடர்ந்து இருக்கும், கோழி, வளர்ப்பு, பால் அபிவிருத்தி இவையெல்லாம் செய்யப்பட வேண்டும். பால் இனப் பசுக்களை அதிகமாக விருத்தி செய்ய வேண்டும். அப்பொழுது தான் கிராம மக்களுக்கு சத்துள்ள உணவைக் கொடுக்க முடியும். மீன் துறையும் அப்படித்தான். அதையும் நல்ல முறையில் அபிவிருத்தி செய்யவேண்டும். அண்மையில் மத்திய அமைச்சர் அஸ்திவாரக்கல் போட்டார்கள் என்று நினைக்கிறேன். மீனைப் பிடித்து, உணவு உற்பத்தியைப் பெருக்கலாம். சைவர்கள் கோபிக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். உணவுப் பிரச்சினையே, இந்தக் கஷ்டமே சைவர்களால்தான் ஏற்பட்டது என்பேன். சாப்பாடு அதிகமாகி, அதைக் கணக்குப்போட்டு பார்த்தால், ரொம்ப அதிகமாக இருக்கிறது. என்பேரில் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். சபாநாயகர் அவர்கள் எனக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். சைவ உணவால்தான் இந்தப் பிரச்சினையே வந்திருக்கிறதோ என்கிற சந்தேகம் இருக்கிறது. ஆகவே அசைவ உணவு சரியாக இருந்தால், சத்துள்ள உணவாக மக்களுக்குக் கொடுக்க முடியும். (திரு. பூவராகவன் பக்கம் திரும்பி) கோபிக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். (திரு. கோ. பூவராகவன்: I strongly object.) நீங்களும் பழகிக் கொள்ளலாம்.

எல்லா இடங்களுக்கும் 'ஆர்டிபிஷல் இன்செமினேஷன்' கொண்டு வந்தால் தரமுள்ள மாடுகள் வந்தால், பயன் உள்ள மாடுகள், பால் கொடுக்கும் மாடுகள் இருந்தால், அது பொருளாதாரத்தில் உயர்வைக் கொடுக்கும். விவசாயிகளுடைய நிலையில், நல்ல மாடு மட்டுமின்றி கோழி முதலியவைகளும் மல்டிபர்பஸ் ஆக இருந்தால் தான், ஒன்றில் நஷ்டம் இருந்தாலும், மற்றதில் ஈடு செய்து கொள்ள முடியும்.

கடைசியாக வனத்துறை; அதைப் பற்றி யாரும் கவனிக்கவில்லை. காடு என்றால், அந்தக் காட்டிலாகாவில் நடக்கும காரியங்களை என்றால் சகிக்க முடியவில்லை. காட்டிலாகா காட்டைக் காப்பதற்குப் பதிலாக, அழிப்பதற்குத்தான் பெரும்பாலான அதிகாரிகள் வேலை செய்கிறார்கள் என்கிற சந்தேகம் இருக்கிறது. இதைச் சொன்னவுடனே, எந்த இடத்தில் நடந்தது, நிரூபித்துக் காட்டு என்று சொன்னால் முடியாது. இதெல்லாம் பொதுப்படையான கருத்துக்கள். என்ன "கார்டு"? மரத்தை வெட்டி எடுத்துப் போகத்தான் "கார்டு". தற்போது வெட்டாமல் இருப்பதற்காக 'கார்டு' நியமிக்கப்படவில்லை. காடுகளிலுள்ள மரத்தை வெட்டி எடுத்துக்கொண்டு போவதற்காகத்தான் அவன் 'கார்டு' ஆக நியமிக்கப்பட்டிருக்கிறான். காடு செழித்திருந்தால் மழை பெய்யும் மழை பெய்தால்தான் சுபிட்சம் பெருகும். நீலகிரியை எடுத்துக் கொள்ளுங்கள். சுமார் 25 வருஷத்திற்கு முன்னாலே பார்த்தால் அங்கு மரங்கள் எல்லாம் கொழு கொழு என்று இருக்கும். இன்று உருளைக் கிழங்கு போடுகிறோம் என்று சொல்லி, எல்லாவற்றையும் வெட்டவெளியாக்கிவிட்டார்கள். மழையும் இல்லை, உருளைக் கிழங்கு சரியாகக் கிடைக்கவில்லை. ஏதோ கிராமத்தில் 'இரண்டையும் கெடுத்தான் கிழட்டு அப்பன்' என்று பழமொழி சொல்வார்களே அதுபோல, இருக்கிற மரங்களையெல்லாம் அழித்து உருளைக் கிழங்கு பயிர் செய்தார்கள். உருளைக் கிழங்கும் சரியாகக் கிடைக்கவில்லை. மரம் அழிந்ததனால் மழையும் பெய்யவில்லை. ஆகவே, எந்தக் காரணத்திற்காகவும் நாம் வனத்தை அழிக்கக் கூடாது. வனச் செல்வத்தினால்தான் நாட்டின் சுபிட்சம் பெருகும். முன்பு வனத்தில்



எத்தனையோ வகையான மரங்கள் இருந்தன. இப்பொழுது நாளுக்குநாள் மரம் அழிந்துகொண்டே வருகிறது. ஆகவே, நாம் வனத்தை நல்ல முறையில் காக்க வேண்டும். நல்ல முறையில் சட்டத்தை அமல்படுத்தி, மரத்தை அழிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு மரம் வளர வேண்டுமென்று சொன்னால் அதற்குக் குறைந்தது பத்து வருட காலம் தேவைப்படுகிறது. மரத்தினால் கிடைக்கும்படியான பலன்கள் எவ்வளவோ இருக்கின்றன. மரத்தை வெட்டுவது என்று சொன்னால் நமக்குப் பிறந்த குழந்தையை நாமே வெட்டுவது என்பதுதான் பொருள் ஆகும். பிறந்த குழந்தையை வெட்டுவதற்குச் சமமாகும். மரத்தை வெட்டுபவர்கள் பாதகர்கள், சண்டாளர்கள். அவர்கள்மீது எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மரம் வெட்டி எடுத்துச்செல்வதை நிரூபிக்க முடியுமா என்று அமைச்சர்கள் கேட்கக் கூடாது.

மரத்தை வெட்டுபவர்கள் சமூகத்தில் எவ்வளவு செல்வாக்கு பெற்றவர்களாக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாய மானியங்களில் எவ்வளவோ பல திட்டங்கள் இருந்தாலும்கூட, இப்போது நான் பேசிய விஷயங்களிலும் கவனத்தைச் செலுத்த வேண்டும். அதற்கான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அதிகாரிகளுக்குக் கொடுக்க வேண்டும். அமைச்சர்களிலே அதிகமான வயது உடையவர் நம்முடைய விவசாய அமைச்சர் அவர்கள்தான் என்று கருதுகிறேன். அவர் என்னுடைய நண்பரும்கூட. நீண்ட காலமாக இந்த அவையிலும் நண்பராக இருந்து வந்தவர். அவர் உடல்நலக் குறைவாக இருந்தபோதிலும் விவசாயத் துறையினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார். அவர் தன்னுடைய உடல்நலனைக் கவனித்துக்கொள்ள வேண்டும். உடல்நலக் குறைவிலும் தன்னுடைய பொறுப்பை ஆற்றுவதற்காக அவரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதில் இன்னொரு இடைஞ்சல், 'ஆகா! அந்த அமைச்சரைப் பாராட்டிவிட்டாரே' என்று மற்றவர்கள் கோபித்துக்கொள்வார்கள். விவசாய அமைச்சர் அவர்கள் பதில் செல்லும்போது, நாம் சொன்ன கருத்துக்களையும் சிந்திக்க வேண்டும். உரம் உற்பத்தி செய்யவேண்டும், விவசாயம் பெருக வேண்டும் என்று நாம் எவ்வளவோ எடுத்துச் சொன்னோம். "ஆகா! நம்முடைய கருத்திருமன் இவ்வளவு தூரம் நம்மைப் புகழ்ந்திருக்கிறாரே, அதற்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டாவது விவசாயிகளுக்கு நெல் விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டும்" என்ற ஒரு வார்த்தையாவது சொல்ல வேண்டும். அப்படி அவர் சொன்னால் ஒவ்வொரு உழவனும் தான் சாப்பிடும்போது இந்த அமைச்சரைப் பாராட்டி, நினைத்துக்கொள்வான். விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய முறையில் நெல் விலையை உயர்த்திக் கொடுத்தால் அதுவே எனக்கும் பாராட்டாக அமையும். எதிர்க்கட்சித் தலைவர்கள் சொல்லும் நியாயமான கோரிக்கையை ஏற்றிருக்கும்படியான நிலையை நிச்சயமாக அவர் உணருவார்கள் என்று நான் கருதுகிறேன். இந்த மானியத்தில் வெட்டுதல்கள் இருந்தாலும் அதிகமான பணத்தைச் செலவு செய்து எவ்வளவு ரூபாய் தேவையென்றாலும் செலவழித்து விவசாயத் துறையை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் துறையிலுள்ள இன்னல்கள் இன்னும் இரண்டொரு வருஷங்களில் தீர்க்கப்பட வேண்டுமென்ற உறுதியை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்வார்களானால் தமிழ்நாட்டிலுள்ள விவசாயம் பெருகும் என்று கருத இடம் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இந்த உறுதியை எடுத்துக் கொள்வார்கள், என்னுடைய மனதிலுள்ள குறைகளையும் அகற்றுவதற்குப் பாடுபடுவார்கள், என்று கருதுகிறேன். அரசாங்கம் செய்யும் நியாயமான காரியங்களுக்குப் போதிய ஆதரவு கொடுத்து, என் கட்சியின் சார்பாக கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** தலைவர் அவர்களே, நான் பதிலளிக்கிற நேரத்திலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையில் இருக்கமாட்டார்கள். அவர் ஒரு விருந்துக்குப் போகிறார்கள். போகிற

இடத்தில் மாலையில் அவர் பேச வேண்டிய சந்தர்ப்பம் இருக்கிறது. நெல் விலையை உயர்த்த வேண்டும் என்று அவர்கள் அங்கு சொல்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது. நெல் விலையை உயர்த்த வேண்டுமென்று சுமார் அரை மணி நேரம் வரையில் பேசினார்கள். மற்ற விஷயங்களை இரண்டொரு நிமிடங்களில் முடித்துவிட்டார்கள். நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடமிருந்து நிறைய எதிர்பார்த்தேன். வழக்கமாகச் சொல்வது மாதிரி அவர் 'நெல் விலையை உயர்த்தித் தர வேண்டும்' என்று கூறி முடித்துவிட்டார்கள். காட்டு வளத்தைப் பாதுகாக்க வேண்டும், கால்நடை வளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று நானும் கருதுகிறேன். அதற்காக அவரைப் போல் நானும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். காட்டை அழிக்கக்கூடியவர்கள் இருந்தால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும். அதை நிரூபிக்க வேண்டுமென்று கேட்பது குற்றச்சாட்டுக்கு எதிர்க் குற்றச்சாட்டாக இல்லாமல், சொல்லும் போதே ஆணித்தரமாக ஆதாரப்பூர்வமாக எடுத்துச் சொன்னால் சொல்வது, எதிர்க்கட்சித் தலைவர் குறைசொன்னால் ஆளும் கட்சி அதை எடுத்துச் செயல்படவேண்டும் என்ற நியதி இருக்கிறது. ஆனால் அதிகாரப்பூர்வமாக எடுத்துச்சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் ஆளும் கட்சியில் இருந்தபோதும் என்னை அப்படித்தான் பேசினார்கள். அவர்கள் என்னை ஊக்குவிப்பதற்காகச் சொன்னதாக எடுத்துக்கொள்கிறேன். 'வாங்கிச் சாப்பிடுபவர்களும் கருத்திருமனை வாழ்த்தும் நிலையில் இருக்க வேண்டும்' என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, அரிய பெரிய கருத்துக்களை எப்போதுமே அமைச்சர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நான் இதுவரையில் பேசியதெல்லாம் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. நான் சொன்ன கருத்துக்களைப் படித்துப் பார்க்க நேரம் இல்லையென்று கருதுகிறேன். மீண்டும் சொன்னதையே பழைய இராமாயணத்தையே சொல்ல வேண்டியிருக்கிறது. நெல்லுக்கு விலை உயர்த்திக் கொடுங்கள் என்று கேட்கிறேன். ஆனால் உங்களுடைய நிலையோ, பொன்முட்டை இடுகின்ற வாத்தையே அறுக்க வேண்டிய நிலையாக இருக்கிறது. என்னுடைய கருத்துக்களினால் விவசாயத் துறை மேலும் பலமடையும் என்று கருதுகிறேன். விவசாயத் துறையிலுள்ள எல்லோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் திட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள், 'இவைகள் எல்லாம் ஏற்கெனவே போடப்பட்ட திட்டங்களின் விஸ்தரிப்பு' என்று சொல்லிவிடுவதால் இவர்களுக்கு ஒன்றும் குறைந்துபோய்விடாது. இதற்கு இத்தனை லட்சம், அதற்கு இத்தனை லட்சம் என்று சொல்லிவிடுகிறார்கள். இந்தத் திட்டங்கள் எல்லாம் முன்பு போடப்பட்ட திட்டங்களின் விஸ்தரிப்புதான். அப்ரோப்ரியேஷன் பில் வருகிறது; ஆலோசனைக் கமிட்டியில் நானும் இருக்கிறேன். அங்கு சொல்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது. சட்டசபையில் இல்லாவிட்டாலும் தனிப்பட்ட முறையில் சொல்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது. சட்டசபையில் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் போது சொல்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கம் இருக்குமானால், அவர் மத்திய சர்க்கார் அண்மையில் விதித்திருக்கிற வரிகளைக் குறித்து ஒரு வார்த்தையாவது பேசி, தன் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கக்கூடாதா? மத்திய சர்க்கார் விதித்திருக்கும் வரிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் போட்டு அனுப்பலாம் என்றாவது சொல்வார் என்று எதிர்பார்த்தோம். நாடாளுமன்றத்தில் இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்கூட தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் மத்திய சர்க்கார் உரத்தின் மீதும் மற்றவற்றின்மீதும் விதித்திருக்கும் வரியானது விவசாயிகளைப் பாதிக்கும் என்று சொல்லவில்லை. இந்த வரிகளினால் விவசாயிகள் எவ்வளவுதூரம் பாதிக்கப்படுகிறார்கள் என்பது அவருக்குத் தெரியும். அதைப் பற்றி ஒரு வார்த்தையாவது சொல்லாததன் மர்மம் என்ன?



**திரு. பி. ஜி. கருத்திருமன்:** விவாதத்தில் என்னை அதிகமாக இழுத்துக்கொண்டேயிருக்கிறீர்கள். மத்திய சர்க்கார் விதித்திருக்கும் வரிகளையெல்லாம் ஆதரிக்கிறேன் என்று சொல்லிவிட்டால் உடனே நீங்கள் "ஆகா! பார்த்தீர்களா, மத்திய சர்க்கார் விதித்திருக்கின்ற வரிகள் சரியானவை என்று கருத்திருமன் சொல்கிறார்' என்று விவசாயிகளிடத்தில் போய்ச் சொல்வீர்கள். வரிகளை ஆதரிக்கவில்லையென்றால், "ஆகா! பார்த்தீர்களா, மத்தியில் இருக்கும் காங்கிரஸ் சர்க்கார் போட்ட வரிகளையே இங்கிருக்கும் காங்கிரஸ்காரர் எதிர்க்கிறார்" என்று சொல்வீர்கள். ஆக, நீங்கள் இப்படியும் பேசுவீர்கள், அப்படியும் பேசுவீர்கள். மத்திய சர்க்கார் வரிகளைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். உரத்தின் விலை அதிகமாகியிருப்பதை எந்த விவசாயியும் ஏற்றுக்கொள்ளமாட்டான். 'விவசாயிகளுடைய நன்மைக்காக இந்த அரசு பாடுபடும்' என்று சொல்கிறீர்களே, விவசாயிகளுக்கு நெல் விலை கட்டுபடியாகவில்லையென்று நாங்கள் சொல்லும்போது மட்டும் அதை ஏன் நீங்கள் ஏற்றுக்கொள்ள முடியவில்லை? விவசாயிகளைப் புகழ்வதாகச் சொல்லிக்கொண்டே அவனுடைய அடிமடியிலேயே கைவைக்கிறீர்கள். நீங்கள் முன்பு என்ன சொன்னீர்கள்? 'வரியைக் குறைப்போம், வசதிகளைப் பெருக்குவோம்' என்று சொன்னீர்களே, ஏதாவது செய்தீர்களா? என்பதை யோசிக்கவேண்டும்.

அடுத்து, இன்றைய பேப்பரிலேகூட பார்த்தேன். தமிழ்நாடு அரசாங்கம் 23 கோடி ரூபாய்க்கு ஓவர் டிராப்ட் வாங்கியிருக்கிறது. 285 கோடி ரூபாய் பட்ஜெட்டிலே 16 கோடி ரூபாய் பற்றுக்குறை வேறு இருக்கிறது. இந்த 23 கோடி ரூபாய் யார் தலையில் விழுமோ? தெரியவில்லை. ராஜஸ்தானம் தான் வறண்ட பிரதேசம். அங்கு இந்த நிலைமை ஏற்பட வாய்ப்பு உண்டு. இப்பொழுது தமிழ்நாடு அரசாங்கம் ரிசர்வ் வங்கியிலிருந்து 23 கோடி ரூபாய்க்கு ஓவர் டிராப்ட் வாங்கியிருக்கிறது. அந்தப் பிரச்னைகளையெல்லாம் கிளறினால் அவர்களுக்கு வேதனையாக இருக்கும். இந்த நிலையில் விவசாயிகள் மட்டும் ஏன் வயிற்றைக் காயப்போட வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன். ஏதோ சொல்வார்களே, கடன்வாங்கியும் பட்டினி என்று சொல்லும்படியான நிலைமை இருக்கிறது. ஆகவேதான் வரிபோடும்படியான கருத்துக்கள், உங்களுடைய கருத்துக்கள், விவசாயிகளுடைய கருத்துக்கள் எல்லாவற்றையும் சேர்த்து வைத்துப் பார்க்கவேண்டிய நிலை இருக்கிறது. அப்ரோப்ரியேஷன் பில்லில் அதைக் கவனிக்கலாம். நெல் விலையைக் குவிண்டாலுக்கு 10 ரூபாய் உயர்த்திக்கொடுங்கள், எல்லாமே சரியாகப் போய்விடும் என்று சொல்கிறேன். நாலரை கோடி மக்களில் 75% விவசாயிகள். அவர்கள் படுகிற கஷ்டங்களை நீங்கள் உணர்ந்துகொள்ளவில்லை, உண்மையிலேயே இன்றைக்கு வாங்கிச் சாப்பிடுகிற இந்த நகரத்தவர்கள் கஷ்டப்பட்டால் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன். சினிமா என்ன, டர்லின் சட்டை என்ன-மற்ற வாழ்க்கைத் தரத்திலும் குறைந்திருந்தால் நான் எனது நெல்லை சும்மா கொடுக்கத் தயாராய் இருக்கிறேன். கட்டிட வசதி, கேளிக்கை வசதி, உடைவசதி எல்லாம் உடையவர்களுக்கு படி அரிசி வாங்கிச் சாப்பிட கிராமத்தில் உள்ளவர்களை கஷ்டப்படுத்தப்படவேண்டாம். 60 ரூபாய்க்குச் சட்டை வாங்கிப்போட வசதி உள்ள இடத்தில் 2 ரூபாய்க்குக் கூடச் சட்டை வாங்கிப்போட முடியாத நிலையில் உள்ள விவசாயிகளைத் துன்பத்திற்கு உள்ளாக்கி படி அரிசி போடவேண்டாம். 10 ரூபாய்தான் உயர்வு கேட்கிறோம். இதை இங்குள்ளவர்களால் கொடுக்க முடியாது என்பதை என்னால் உணர முடியவில்லை.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** படி அரிசி வேண்டாம் என்று விட்டுப் பின் எதற்காக பானையைக் காட்டிக்கொண்டு நிற்கிறீர்கள்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இங்கே போடுகிறீர்களே, அங்கேயும் போடுங்கள் என்றுதான் கேட்கிறோம். அவர்களும் நமது குழந்தைகள் தான். பானையைக் காட்டினால் அரிசியா வந்துவிட்டது? அரிசி இல்லாத பானை என்பதைத்தான் காட்டுகிறோம். இதுபற்றி இன்னும் எத்தனை நேரம் வேண்டுமானாலும் பேசத் தைரியமாக இருக்கிறேன். அதிகமான

ம்பர்கள் பேச இருப்பதனால் உண்மையான பிரச்சினை என்ன என்பதை உணர்ந்து விவசாயிகளுக்கு உதவ முன்வாருங்கள் என்று சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மத்திய சர்க்கார் போட்டிருக்கும் வரிகளைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் கருத்து என்ன? அதை ஆதரிக்கின்றாரா அல்லது எதிர்க்கின்றாரா என்பதை விளக்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வரிகளைக் குறைத்து வசதிகளைப் பெருக்குவோம் என்று சொன்னீர்களே, செய்தீர்களா? வரியையும் வந்தவுடன் போட்டு 23 கோடிக்கு ஓவர் டிராப்ட் வைத்திருக்கிறீர்களே, இதுவரை உங்களை நல்லவர்கள் என்று நினைத்தோம். இன்று காலை பேப்பரிலே வந்த பிறகுதானே உங்களைப் பற்றித் தெரிகிறது. நீங்கள் வந்தவுடனேயே நான் சொன்னேன். இனி இன்சால்வெண்ட் செய்துவிட்டுத்தான் போகப்போகிறீர்கள் என்பதாக. இன்சால்வெண்ட் என்று சொன்னார் என்றீர்கள். இப்போது நிதி அமைச்சர் சிரிக்கிறார். உங்களுக்கே தெரியாது வாங்கிவிட்டீர்கள் போல இருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ஒன்றைச் சொன்னார்கள், எனக்கே தெரியாதிருக்கும் என்றார்கள், அது உண்மையான நிலை அல்ல. நமது மொத்த ஆஸ்திகள்—சொத்துக்களின் மதிப்பே 500 கோடி. இவர்களது 18 வருஷ ஆட்சியில் என்ன செய்தார்கள்? 400 கோடியை கரைத்துவிட்டு வெளியே போனார்கள். அல்லது மக்கள் போகச் செய்தார்கள். இதை எல்லாம் பற்றி சொல்ல முடியும். அந்தக் கருத்துக்கள் அவர்களுக்கே அனுகூலமாக இருக்கும் என்று கருத வேண்டாம். இதுபற்றி சொல்ல நிதி ஒதுக்கீடு மசோதாவில் சந்தர்ப்பம் இருப்பதால் இப்போது வேளாண்மைத்துறை மானியத்தின் மீது பேசி முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பேசி முடித்தாகிவிட்டது.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** தலைவர் அவர்களே, இந்த மன்றத்தினுடைய மரபு ஒரு மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தை ஒரு எதிர்க்கட்சி உறுப்பினர் ஆரம்பித்து வைக்க மற்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசிய பிற்பாடு எதிர்க் கட்சித் தலைவர் பேசுவார்கள். அவர் பேசிய பிறகு அமைச்சர் பேசி முடிப்பதோடு விவாதத்தை முடிக்கிற மரபு இருந்து வந்திருக்கிறது. இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவர் பேசி முடித்துவிட்டார்களே, மற்ற உறுப்பினர்கள் பேச இடம் இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மன்றத்தின் மரபு எதுவாக இருந்தாலும் அதை மாற்றி அமைத்துக் கொள்ளும் அதிகாரம் மன்றத் தலைவருக்கு இருக்கிறது. இந்த விவாதம் மாலையிலும் தொடர்ந்து நடக்கும். எதிர்க் கட்சித் தலைவர் மாலையில் வேறு ஓர் நிகழ்ச்சிக்குப் போக வேண்டியிருப்பதால் மன்றத் தலைவர் அனுமதியுடன் தான் இப்போது பேசினார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எல்லோரும்பேசிய பிறகு எதிர்க்கட்சித் தலைவர்தான் அதை முடிக்க வேண்டும் என்பது இல்லை. என் கட்சியைச் சேர்ந்த வேறு ஒருவர் முடிப்பார்கள். இது பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் உண்டு. அநேகமாக எங்கள் கருத்துக்கள் பயன் உள்ளதாகவே இருக்கும் என்று நினைக்கிறேன்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது விவசாயிகள் மீது மத்திய சர்க்கார் போட்டிருக்கிற வரிகளை ஆதரிப்பதாகத் தோன்றுகிறதே, அதை அவர்கள் ஆதரிக்கிறார்களா என்று தெரிந்து கொள்ளவிரும்புகிறேன். (திரு. பி. ஜி. கருத்திருமன் பதில் அளிக்கவில்லை)





**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அவர் என் வாயைத் திறக்கிறார்.

*** திரு. கே. போஜன்:** தலைவர் அவர்களே, வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, காட்டு இலாக்கா மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூறிக்கொள்ளவிரும்புகிறேன். 1968–69-ஆம் ஆண்டு பட்ஜெட் பொது விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டு வேளாண்மை உற்பத்தியை அதிகப்படுத்த விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளையும் சலுகைகளையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவற்றையே மீண்டும் வலியுறுத்திக்கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் நோய்கொல்லி பூச்சி மருந்துகளுக்கு முன்பு கொடுக்கப்பட்டதைப்போலவே மானியம் கொடுக்கவேண்டும்.

நீலகிரியில் உள்ள காப்பி, தேயிலை தோட்ட விவசாயிகளுக்கு அடிப்படை புஞ்சை நில வரியை எடுத்துவிடுமாறு நான் வலியுறுத்துகிறேன்.

நீலகிரியில் தற்சமயம் கிழங்கு விவசாயம் அழிந்துவிடும் நிலைமையில் இருக்கிறது. அதை உணர்ந்து அறிக்கையிலும் கொடுத்திருக்கிறார்கள். இதனால் கிழங்கு விவசாயிகள் மிகவும் கஷ்டம் அடைவார்கள். கிழங்கு விவசாயம் அழியாமல் இருக்க, கிழங்குச் செடிகளுக்கு ஏற்படும் நோயைத் தடுக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு நீலகிரி கிழங்கு பயிரிடும் விவசாயிகளுக்கு நோய்கொல்லி மருந்துக்கு 50·/. மானியம் கொடுக்கப்பட்டது. அதை 35·/. ஆக்கி இப்போது 30·/. ஆக்கியிருக்கிறார்கள். ஏற்கனவே இருந்ததுபோல அதை 50·/. ஆகவே உயர்த்திக்கொடுத்தால் நலம் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்சமயம் இண்டோ ஜெர்மன் நீலகிரி டெவலப்மெண்ட் பிராஜெக்ட் வல்லுனர்களால் பூச்சி நோய் தொல்லையைத் தடுப்பதற்கு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதால் நிச்சயம் பரிகாரம் கிடைக்கும் என்று நம்புகிறேன். அதற்காக இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக கால்நடை வளர்ச்சி, வேளாண்மைக்கு அடுத்தபடியாக முக்கியமானது. வேளாண்மைக்கு உறுதுணையாக இருப்பது கால்நடை; தம் உழைப்பைக் கொடுத்து நமக்கு வேளாண்மைக்கு உறுதுணையாக இருப்பதோடு, உரம், பால் கொடுத்து உதவும் கால்நடை நமக்கு உணவாகவும் ஆகிறது. ஆகவே இந்தக் கால்நடை வளர்ப்பை அதிகரிப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். இப்போது இத்துறையில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே கால்நடை பராமரிப்புக்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது கால்நடை வளர்ச்சியிலே முன்னேற்றம் ஏற்பட்டுக்கொண்டிருப்பதால்—இந்த மாநிலத்திலே இப்பொழுது ஒரு கால்நடைக் கல்லூரி தான் இருக்கிறது—இன்னொரு கால்நடைக் கல்லூரியை நிறுவினால் நன்றாக இருக்கும். விவசாய மக்கள் அதிகமாகப் படிக்க முன்வருகிறார்கள், அவர்களுக்கு வசதியாக இருக்கும். எனவே இந்த ஆலோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, மாநிலத்தில் வேறு ஒரு இடத்திலேயும் ஒரு கால்நடைக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி ஜில்லா கால்நடை அபிவிருத்திக்கு நல்ல இயற்கையுடன் அமைந்திருக்கிறது. தற்சமயம் போதிய வசதிகள் வளர்ப்பதற்குக் கிடையாது. இப்பொழுதுள்ள ரெவின்யூ டிபார்ட்மெண்டில் உள்ள மேய்ச்சல் நிலங்கள் எல்லாம் மற்ற விவசாயிகளால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டிருப்பதாலும் காட்டு இலாகாவினர் மேய்ச்சல் நிலங்களில் மரங்களை நட்டு வருவதாலும், கால்நடைகளின் மேய்ச்சலுக்கு நிலம் இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே அந்த நிலைமையை மாற்றவேண்டும். ஏற்கனவே

மேய்ச்சல் நிலமாக இருந்தால் மரங்கள் நடக்கூடாது என்று இருந்தும் இப்பொழுது மரத்தை நடுவதால் கால்நடை அபிவிருத்தி தடைப்பட்டிருக்கிறது. அதையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு ஸ்மால் ஸ்கேலிலே டெய்ரிகள் ஏற்பட்டிருக்கின்றன, அதன் மூலம் பால் உற்பத்தி நல்ல முறையில் செய்யப்படுகிறது. அவ்விதம் ஆரம்பிக்க முன்வருகிறவர்களுக்கு அரசாங்கம் கடன் அல்லது மானியம் கொடுத்து உதவி செய்ய வேண்டும்.

நீலகிரியிலே குழந்தைகள் உணவு தயாரிப்பதற்காக ஒரு தனிப்பட்ட நபர் அயல்நாட்டு உதவியுடன் இரண்டு கோடி ரூபாய் மூலதனத்துடன் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறார். அதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அரசாங்கம் செய்துகொடுத்தால் குழந்தைகள் உணவு உற்பத்தி பெருகி, தட்டுப்பாடு தீரும். பால் உற்பத்தியும் அதிகமாக ஆகும். உரமும் அதிகமாகக் கிடைக்கும். எனவே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக காட்டு வளத் துறையில் ஏராளமான பூமி தரிசாகக் கிடக்கின்றன. விவசாயத்திற்கு லாயக்கான பூமிகள் காட்டு வனத் துறையில் இருக்கின்றன. அவற்றை விவசாயத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூடலூரிலே எரமாடுப் பகுதியிலே 3000 ஏக்கர் நிலம் இலங்கையிலிருந்து வருகின்ற நம்முடைய தமிழர்களுக்கு உதவியாக தேயிலை உற்பத்தி செய்வதற்காக சர்க்கார் ஒதுக்கியிருக்கிறது. நீலகிரியிலே எப்பநாடு கிராமத்திலே ஆனைகட்டியில் 10 ஆயிரம் ஏக்கர் நிலம் காட்டு இலாகா துறையில் இருக்கிறது, அன்சர்வேய்ட் ஆக இருக்கிறது, அங்கே நீர்ப்பாசனத்திற்கு நல்ல வசதியும் இருக்கிறது. அங்கே நெல் விவசாயம் செய்வதற்கு லாயக்காகவும் இருக்கிறது. எனவே அந்த இடத்திலே கூட்டுறவு முறையிலே எடுத்து விவசாயத்தை நடத்துவதற்கு 500 ஏக்கர் நிலத்தை விவசாயத்திற்குக் கொண்டுவருவதற்காக அங்குள்ள விவசாயிகள் அதற்காக அரசாங்கத்திடம் 1 லட்சம் ரூபாய் முன்தொகையாகக் கட்டியிருக்கிறார்கள். இதற்கு வனத்துறையினர் ஆதரவு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. பு. செ. முத்துச்செல்வன்—தலைமை.)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் கூறினார்கள்—நீலகிரி மலையிலே மரங்களை அழித்துவிட்டார்கள், அதனால்தான் மழையில்லை என்று சொன்னார்கள். ஆனால், நான் அதற்கு நேர்மாறாகச் சொல்லப்போகிறேன், நீங்கள் எல்லாம் ஆச்சரியப்படப்போகிறீர்கள். நீலகிரி மலையிலே மழையில்லை என்றால் அதற்குக் காரணம் அங்கே கற்பூரம், வேட்டில் (Wattle) என்ற மரங்கள் அதிகமாகப் பயிரிடப்பட்டிருப்பதுதான் வனத்துறையினர் அதைப் பயிரிட்டு இருக்கிறார்கள். அந்த காலத்தில் கற்பூர மரம் ஆஸ்திரேலியாவிலிருந்து நீலகிரிச் சதுப்பு நிலங்களில் உள்ள தண்ணீரை வற்றச்செய்வதற்காகக் கொண்டு வரப்பட்டது. ஒரு முதிர்ந்த மரம் ஒரு நாளைக்கு 5 டன் தண்ணீரை பூமிக்கு அடியில் இருந்து இழுத்துக்கொள்கிறது என்று அபிசீனியாவில் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. இயற்கையான சோலைகளாக இருந்தால் அங்கே புல் இருக்கும். புதர் இருக்கும். கற்பூரம், வேட்டில் மரங்களுக்கு அடியில் புல்லும் முளைக்காது. கற்பூரமரக் காடுகளிலே தரையைப் பார்த்தால் கட்டாந்தரைதான் இருக்கும். சோலை என்று நினைத்துக் கொண்டு சென்றால் ஈரமில்லாத பாலைவனமாகத்தான் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. இதற்கான ஆராய்ச்சியில் வனத்துறை ஈடுபட வேண்டும். அந்த முறையில் நடவடிக்கைகள் எடுக்க முயற்சி செய்ய வேண்டும். மேற்கொண்டு நீலகிரியில் கற்பூரம், வேட்டில் முதலியனவற்றைப் பயிரிடாமல், வேறு பயனுடைய நல்ல மரங்களை நடவேண்டும்.





மரத்தை வெட்டுவதிலே மற்றவர்கள் மரத்தை வெட்டுவதைத் தவிர, வனத் துறையினரே 6, 7 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெட்டி விடுகிறார்கள். இதனால் மரங்கள் மீண்டும் தளிர்ப்பதற்கு 2, 3 ஆண்டுகள் ஆகிறது. அதையும் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

The Madras Hill Stations (Preservation of Trees) Act என்ற சட்டம் இருக்கிறது. ஒருவன் மரத்தை வெட்டவேண்டுமென்றால் சர்க்காருக்கு எழுதி அனுமதிபெற்றுத்தான் வெட்டவேண்டும். கால் ஏக்கர், அரை ஏக்கர் என்ற அளவில் உள்ளவர்கள் மரத்தை சொந்த உபயோகத்திற்காக வெட்டவேண்டுமென்றால் உத்தரவு பெறவேண்டிய நிலைமை இருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. இதற்காக ரெவின்யூ டிபார்ட்மெண்ட், ஃபாரஸ்ட்டிபார்ட்மெண்ட் எல்லாம் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தச் சட்டத்திலே அரை ஏக்கர் உள்ளவர்கள் சொந்த உபயோகத்திற்காக உத்தரவு இல்லாமல் வெட்டிக்கொள்ளலாம் என்று விதிவிலக்கு செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு எனக்கு இந்த வாய்ப்பை அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். பன்னீர்செல்வம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை நிதி மானியக் கோரிக்கையினை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்பட்டு அங்கு அரசு செலவழிப்பதற்காக 35 லட்சம் ரூபாய் ஒதுக்கி மக்களுக்குப் பயன்படக் கூடிய முறையில் அறிக்கைவிட்டு செயல்பட்டுக் கொண்டுவருகிறது என்பதைப் பார்க்கும்பொழுது இந்த அரசைப் பாராட்டுவதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப் பற்றி ஒன்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இங்கு பேசுவதால் மட்டும்ஒன்றும் ஆகிவிடாது, செயல்முறையிலே காட்டவேண்டுமென்று சொன்னார்கள். ஆளுங் கட்சியான திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிறவர்கள். அது மட்டுமல்ல. விவசாயத்திலே நேரடித் தொடர்புள்ளவர்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டம் குறிப்பாக பற்றாக்குறை மாவட்டமாகக் கருதப்பட்டு வருகிற நிலையிலே அதை ஒரு நல்ல உபரி மாவட்டமாக ஆக்க வேண்டுமென்றால் என்னுடைய தொகுதியிலே மேலரசம்பட்டி என்ற கிராமத்திலே ஒரு அணை கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று நான் கடந்த பட்ஜெட்டின்போதே சொன்னேன். அதைப்பற்றி வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாகப் பார்த்து ஏறத்தாழ ஒரு கோடி ரூபாயில் கட்டப்பட்டால் இரண்டாயிரம் ஏக்கர்களுக்குத் தண்ணீர் வசதி கிடைப்பதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கமுடியும் என்று குறிப்பெழுதி அனுப்பியிருக்கிறார்கள். இரண்டாயிரம் ஏக்கர்கள் நிலத்திற்குத் தண்ணீர் பாய்ந்து உணவு உற்பத்தி ஏற்படுமானால் அந்த உணவு சென்னை மாநகரத்திற்குப் போதுமான அளவுக்கு இருக்கும் என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆம்பூர் நகரத்திலே குடிநீர்ப் பிரச்னையைப் போக்குவதற்காக ரூ. 40 லட்சத்திற்குத் திட்டத்தைத் தீட்டி அதிலே 13 லட்சம் ரூபாயிலே அத்திட்டம் உருவாக்கப்பட்டு கால்கோள் விழா நடத்திவிட்டு மறைந்துவிட்டார்கள். அந்த மாமேதையினுடைய திட்டத்தைச் செயல்படுத்தி அதை அவர்களுடைய நினைவுநாளாக ஏற்படுத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

விண்ணமங்கலம் என்ற கிராமத்தில் 1,500 ஏக்கர் நிலத்திலே ஏழை மக்களும், அரிசன தாழ்த்தப்பட்ட மக்களும் பயிர்செய்து வருகிறார்கள். என்ன காரணத்தாலே காட்டு இலாகா அதை எடுத்துக்கொண்டிருக்கிறது? மறைந்த முதலமைச்சர் அவர்களிடம் இதைப்பற்றி அந்த விவசாயிகள் எல்லாம் ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது வேளாண்மைத் துறை அமைச்சராக இருக்கின்றவர்களிடம் அவர்கள் ஒரு மகஜர் கொடுத்

திருக்கிறார்கள். அதை உடனடியாக ரெவின்யூ புறம்போக்காக மாற்றி ஏழை விவசாயிகளுக்கும், அரிசன மக்களுக்கும் கொடுத்தால் இரண்டாயிரம் ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யக்கூடிய நிலமாக அது காட்சியளிக்கும். அதற்காக இந்த சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1·00 டி. சி. புறம்போக்கு நிலங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், அரிசன மக்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்று கூட்டுறவு சொசைடி மூலம் கடன் கேட்டால் கொடுக்க மறுக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இந்தச் சர்க்கார் அரிசன மக்களுக்கு எல். எம். பாங்குகள் மூலமாகக் கொடுக்க வேண்டிய கடனைக் கொடுப்பதற்கு உடனடியாக உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீட்டுமனைப் பிரச்சினையைப் பொருத்தவரை கடந்த 20 ஆண்டு காலம், 30 ஆண்டு காலமாகக் கேட்டுக்கொண்டு வந்தும் வெல்பேர் டிப்பார்ட்மெண்ட் அதிகாரிகள் சரியாகச் செயல்படாத காரணத்தால் அதிலே குறைகள் இருக்கின்றன என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆம்பூர் தொகுதியில் எந்த கிராமத்தை எடுத்துக் கொண்டாலும் ஒரு வீட்டிலே நான்கு குடும்பங்களுக்கு மேல் வாழ்கின்ற நிலை இருக்கிறது. அதிகாரிகள் செய்கின்ற சூழ்ச்சியின் காரணமாக அந்தப் பகுதி மக்கள் ஆளுகிற சர்க்காரைக் குறை சொல்லும் அளவுக்கு நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு உடனடியாக வீட்டு மனைகள் கொடுக்கும் வகையில் அதிகாரிகளுக்குச் சர்க்கார் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக,...............(மணி அடிக்கப்பட்டது) அத்துடன் என் சிற்றுரையை முடித்துககொள்கிறேன்.

* திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, விவசாய மானியக் கோரிக்கையின் பேரில் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருககிறேன். தமிழகத்திலே விவசாயத் துறையிலே 60 சதவிகிதம் மக்கள் ஈடுபட்டு பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த 60 சத விகிதம் மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதிலும், நம்முடைய உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதிலும் மிக வேகமாகச் செயல்பட வேண்டுமென்பதுதான் வேளாண்மைத் துறையினருடைய முக்கியமான அம்சமாக இருக்கவேண்டும். நான்காவது திட்டத்தின் மூலமாக தேசத்தினுடைய மொத்த அபிவிருத்தியை ஐந்தாறு சதவிகிதத்திற்கு உயர்த்த முடியும் என்று மத்திய அரசு நினைத்துக் கொண்டிருக்கிறது. மாநிலத்திலே 42 சதவிகிதம் வருமானம் உள்ள இந்தத் தொழிலிலே, சரியான முறையில் கண்காணித்து ஆக்கபூர்வமான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினால்தான், அதற்கு அரசாங்கமும், அதிகாரிகளும், மககளும் ஒத்துழைத்தால்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அதற்கு விவசாயத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று சொன்னால் மண் வளம் உள்ள பூமியாக இருக்கவேண்டும். நீர் நிலை எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவையும் பாசனத்திற்குப் பயன்படுத்துவதற்கு முயற்சிக்கவேண்டும். தமிழ் நாட்டில் இருக்கும் நீர் ஆதாரங்களில் 90 சத விகிதத்தைப் பயன்படுத்தி விட்டதாகவும், இனி மற்ற மாநிலங்களை எதிர்நோக்கியிருப்பதாகவும் அரசாங்க அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. உண்மைதான். மேற்கொண்டு திட்டங்களைச் செய்ய வழி இருக்கிறது. மற்ற மாநிலங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரை எடுத்துக் கொள்ளுவதற்கோ, கொடுப்பதற்கோ மத்திய அரசு மூலமாகத் தீர்வு காணவேண்டும். அந்த அடிப்படையில் முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுகிறோம். தேசிய ஒருமைப்பாடு என்பது பொருளாதாரத் துறையில் இல்லாமல் வாய் அளவில் பேசிக்கொண்டிருந்தால் அதனால் நாட்டிலே பாதகமான நிலைமை





தான் ஏற்படும். ஆகவே, மற்ற மாநில அரசுகளும் அந்த அளவுக்குத் தங்களுடைய குறுகிய நோக்கத்தை விட்டு பெருந்தன்மையுடன் இந்தப் பிரச்சினைகளை அணுகினால்தான் இவற்றைத் தீர்க்க முடியும்.

விளைநிலங்களை அதிகமாக்குவதன் மூலமும், இரண்டு போகமாக ஆக்குவதன் மூலமும் ஓரளவு பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று அரசாங்கம் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். வாஸ்தவந்தான். அதே நேரத்தில் தண்ணீர் இல்லாமல் இரண்டு போகம், மூன்று போகம் என்று அதிகப்படுத்துவதிலே தடைகள் ஏற்படும். தண்ணீர் வேஸ்ட் ஆகாமல் எப்படி உபயோகப்படுத்துவது என்பதற்கான வழிவகைகளைக் காணவேண்டும். அந்த வகையில் செய்தால் இரண்டு போகமாக்க முடியும். கால்வாய் உடைந்துவிட்டால் சரிப்படுத்துவது, சிமெண்ட் பூசுவது போன்றவற்றின் மூலமும் தண்ணீர் வேஸ்ட் ஆவதைத் தடுத்து உபயோகப்படுத்த வேண்டும்.

பாசன வசதிகளைப் பற்றிப் பேசுகிறபோது பிரதேசத்திற்குள்ளேயே குறுகிய நோக்கம் இருக்கக்கூடாது. எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் நேற்று பொதுப்பணிகள் மானியத்தின்மீது பேசும்போது ஒரு விஷயத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். குந்தாத் திட்டத்திலிருந்து பவானி ஆற்றுக்குத்தானே தண்ணீர் போகிறது; அங்கேயே தண்ணீர் குறைந்து விடுகின்ற நேரத்தில் எப்படித் தண்ணீரைக் கொடுப்பது என்ற முறையிலே பேசினார்கள். அது மிகவும் வேதனைப்படக் கூடிய விஷயமாக இருக்கிறது. கோவை மாவட்டத்தில் அந்தத் திட்டத்திலிருந்து எல்லாப் பகுதிகளுக்கும் விவசாயத்திற்கான தண்ணீர் கொடுப்பதற்கு திட்டமிடப்பட வேண்டுமென்று கட்சிவேறுபாடு இல்லாது கூறியிருக்கிறார்கள். ஆனால் திரு. கருத்திருமன் சொல்லுவதில் ஏமாற்றம் அளிக்கும் நிலைமையைப் பார்க்கிறேன்.

இதற்கு முன்னால் இருந்த காங்கிரஸ் அரசாங்கம் 1965-ம் ஆண்டில் நான்காவது ஐந்தாண்டுத திட்டத்தைத் தீட்டிய நேரத்திலே, குந்தா ஸ்கீமிலிருந்து ஒரு லட்சத்து எட்டாயிரம் ஏக்கருக்குத் தண்ணீர் எடுக்க முடியும், 27,000 டன் உணவு உற்பத்தியை உண்டாக்க முடியும் என்ற திட்டத்தைத் தீட்டினார்கள். இப்போது அப்படிப்பட்ட நிலைமை கிடையாது என்று சொல்லுகிறார்கள். பருவமழைக் கோளாறு காரணமாக இப்போது தண்ணீர் குறைந்திருக்கலாம். மழை பெய்கின்ற காலத்தில் அந்தத் தண்ணீரைக் கொடுக்கவேண்டுமென்பது முடிவு செய்யப்பட்ட பிரச்சினை. அவனாசி திட்டத்தை $4\frac{1}{2}$ கோடி ரூபாயில் போட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் இருந்து அந்தத் திட்டத்திற்கும் தண்ணீர் கொண்டுவர வேண்டும்.

விவசாயிகள் ஒற்றுமையாக இல்லை, அதனால்தான் நெல் விலையை ஏற்றுவதற்கு ஒத்துக் கொள்ள மறுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். அன்றைக்கு அந்தப் பிரதேசத்தில் ஒன்றுபட்டு இருந்திருப்பார்களேயானால் பி.ஏ.பி. வாய்க்கால் 95 மைல் போய் பாய்கிறது. ஆனால், 35-வது மைலில் உள்ள பல்லடத்தின் மேற்குப் பகுதிக்குத் தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்காது. பவானி வாய்க்கால் 120 மைல் போகிறது, 30-வது மைலில் உள்ள பல்லடம் தாலுகாவுக்குத் தண்ணீர் இல்லை. பல்லடம் தாலுகாவில் அருமையான பூமிகள், மண்வளம் பொருந்திய பூமிகள், ஒரு ஏக்கருக்கு நல்ல அளவு விளைச்சல் காணக் கூடிய பூமிகள் இருக்கின்றன. ஆனால் தற்போது தண்ணீர் கொடுக்கப்படக்கூடிய பூமிகள் இன்னும் பத்து வருஷம் ஆனாலும் விவசாயத்திற்கு லாயக்கற்ற பூமிகளாகவும் இருக்கிறது. சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டு இப்படி எல்லாம் செய்துவிட்டார்கள். இருக்கிற நிலைமையில் என்ன செய்ய முடியும் என்று சிந்திக்கவேண்டும். விலைவாசி உயராது தடுக்கவேண்டும். சாதாரண மக்கள், வாங்கிச் சாப்பிடுகிற மக்கள் வாங்கக்கூடிய அளவுக்கு விலைவாசி நிலை மாறவேண்டும்; விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவைக் குறைக்கவேண்டும் என்று கூறுகிறார்கள். ஆனால், மத்திய சர்க்கார்

பம்ப் செட்டுக்கு 20 சதவிகிதம் வரி போட்டிருக்கிறார்கள் ; 200 ரூபாய் இன்னும் அதிகமாக ஒரு பம்ப் செட்டுக்கு விவசாயிகள் கொடுக்க வேண்டி யிருக்கிறது. இதனால் அவர்கள் பழையபடி கவலையை வைத்தே ஓட்டு கின்ற நிலை ஏற்படுகிறது. உரத்திலே பத்து சதவிகிதம் வரியை உயர்த்தி விட்டார்கள். எந்த விவசாயி உரத்தை வாங்கிப் போடுவான் ? உரத்தை வாங்கிப்போட்டு விளையாத நிலை ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்ற நிலையில், பாதுகாப்பாக அச்சத்துடன் உரத்தை வாங்காமலே இருந்து விடுவான். உற்பத்திச் செலவைக் குறைப்பதன் மூலந்தான் விவசாயி களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்த முடியும். ஆனால், மத்திய சர்க்கார் விவசாயிகளுக்கு ஊக்கமூட்டுகிற முறையில், உற்சாகத்தைத் தருகின்ற முறையில் காரியங்களைச் செய்யவில்லை.

மத்திய அரசு சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தால் உணவு உற்பத்தி பாதிக்கப்படும். நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் மிச்சம் வருகிற நிலத்தை ஒன்று சேர்த்து விவசாயத் தொழிலாளர்களையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு உழவர் படையைத் தயார் செய்து அவர்களுக்கு வேண்டிய கருவிகள் போன்ற சாதனங்களைக் கொடுத்து, அதற்கானதொரு நிர் வாகத்தை ஏற்படுத்தி அந்த நிலங்களைக் கூட்டாகப் பயன்படுத்தினால் அதிக விளைச்சல் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. கோவை மாவட் டத்தில் கிணறுகளை அதிகப்படுத்தவேண்டும். நில அடைமான பாங்குகள் மூலம் நபர் ஒன்றுக்கு 10,000 ரூபாய் சாங்க்ஷன் செய்கிறார்கள். அங்கு ரூ. 30,000 இல்லாமல் ஒரு கிணறு எடுக்க முடியாது. பத்தாயிரம் ரூபாய் செலவு செய்தால் தண்ணீர் கிடைக்காது. ஆகவே கிணறுகள் வெட்டுவதற்காகக் கொடுக்கப்படும் தொகையை குறைந்தபட்சம் 20,000 ரூபாய் என்றாவது அதிகப்படுத்தவேண்டும். 10,000 ரூபாய்க்கு கிணறு வெட்ட அங்கு யாரும் தயாராகயில்லை.

அடுத்தபடியாக, குளம் குட்டைகள். இப்போது மழை இல்லை. மழைக் காலத்தில் காட்டாறு (பள்ளத்தில் வருகின்ற), தண்ணீரைத் தடுத்து நிறுத்த குளம் குட்டைகளை அதிகமாக ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி குளம் குட்டைகளை அதிகமாக்கி தண்ணீரைத் தேக்கவேண்டும். அப்படிச் செய் தால்தான் கிணறுகளுக்குப் பயன்படும் ஒரு குளம் வெட்ட மனு போட்டால் இரண்டு மூன்று வருடங்களாகின்றன. கேட்டால் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். எங்கள் பகுதியில் உள்ள விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு தயாராயிருக்கிறார்கள். ஆகவே குளங்கள் குட்டைகளை அதிகப்படுத்தி தண்ணீரை தேக்கி வைப்பதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் கிணறுகளில் தண்ணீர் வரமுடியும். அதைச் செய்வதற்கு அதிகப்படியான பணத்தை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம். (மணியடிக்கப்பட்டது.) கார்கள் இன்ஷூரன்ஸ் திட்டம், மனிதனுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் என்றெல்லாம் வைத்திருக்கிறோம். விவசாயிகளின் நிலை என்னவென்றால் அவர்களுக்கு ஒரு போகம் கெட்டு விட்டால் அவர்களுக்கு வேறு வழியில்லை. அவர்கள் மறுபடியும் கடன் வாங்கித்தான் விவசாயம் செய்யவேண்டும். அப்படி கடன் வாங்கிக் கடன் வாங்கி இன்றைய தினம் அவர்கள் அழிந்துபோய்க் கொண்டிருக்கிறார்கள், ஆகவே விவசாயிகளுக்கு ரிலீஃப் கிடைக்கும் விதத்தில் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைக்கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேல்நாடுகளில் எல்லாம் இப்படிப்பட்ட இன்ஷூரன்ஸ் திட்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அங்கு போயிருப்பவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, பயிர் அழியும் போது, வறட்சி அல்லது பூச்சியால் அழிக்கப்பட்டுப் போய்விட்டால் அதற் குண்டான நஷ்டயீடு விவசாயிகளுக்குக் கிடைக்கும்படியானதொரு இன்ஷூ ரன்ஸ் திட்டத்தை நாம் உருவாக்கவேண்டும். அதைப்பற்றி சிந்திக்க வேண்டும். கடைசியாக, மரங்கள் அடர்ந்திருக்கும் ஃபாரஸ்ட் நிலங்களை நாம் எடுக்கக்கூடாது. அவற்றை நாம் வளர்க்கவேண்டும். சிறுமலைப் பகுதி, மேட்டுநில ஒரு பகுதி இங்கெல்லாம் மரங்கள் வளரமுடியாத





ஒரு நிலை இருக்கிறது. அங்கு மரங்கள் நட்டால் வளராது என்று சொல் கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களில் பழ மரங்களை வைத்து விவசாயம் செய்தால் அவை சோலைகள் மாதிரி வளர்வதற்கான ஒரு நிலையும் ஏற்படும், அங்கு விவசாயம் செய்பவர்கள் வெளியேற்றப் படாமல் இருக்கவும் ஒரு வாய்ப்பு ஏற்படும். பாரஸ்டை சரியாகப் பாது காக்க வேண்டுமென்று சொன்னால் அதில் விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கு வேறு நிலம் கொடுத்துவிட்டு பாரஸ்டை பாதுகாக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது)

**திரு. எம். சி. பாலன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இம்மாமன்றத்தில் நம் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விழைகின்றேன். பெருமதிப்பிற்குரிய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்தில் பல மானியக் கோரிக் கைகள் வைக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் அவர்கள் விவசாய மானியக் கோரிக்கை குறித்து சில கருத்துக்களைத் தெரிவித்துவிட்டு இங்கிருந்து சென்றிருக்கிறார்கள். அதிலிருந்து மற்ற எல்லா மானியக் கோரிக்கைகளையும் அவர்கள் ஆதரித்திருக்கிறார்கள் என்பதுதான் பொருள். அவர்கள் எப்போதும் பேசுவதுபோல் இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசும்போதும் கொள்முதல் விலையைக் கூட்டவேண்டும் என்று சொல்லிவிட்டு சென்றிருக்கிறார்கள்.

இங்குள்ள மன்ற உறுப்பினர்கள் பலரும் நல்ல பல கருத்துக் களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் மீனளம் குறித்து அருமை நண்பர்கள் யாரும் கருத்து தெரிவிக்கவில்லை. என்னைப் பொறுத்த வரையில் 620 சதுரமைல்கள் கொண்ட சின்னஞ் சிறிய மாவட்டமாகிய குமரி மாவட்டத்தில் ஐந்தில் ஒரு பங்கு பகுதியினர் மீனவர்களா வார்கள். அவர்களைக் குறித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கிட்டத்தட்ட 42 கிராமங்களில் மூன்று லட்சம் மீனவர் கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்த மீனவர்கள் இன்று பரிதாப கரமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வருடத்தில் இரண்டு மாதங்கள் அவர்கள் கடல் கொந்தளிப்பு காரணமாக கடலுக்குள் போக முடியாத நிலையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். கீழமணக்குடி மேல் மணக்குடி, இலமந்துறை, கீழ் மிடாலம், மேல் மிடாலம் போன்ற யிடங்களில் கடலரிப்பு ஏற்பட்டு பதினைந்து ஆண்டுகளாக அந்த ஊர்களே இல்லாமல் அடிக்கடி அவர்கள் கரையேறி, கரையேறி தனியார் நிலங் களில் புகவேண்டிய நிலையில் அவர்கள் வீடிழந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டும் இதேபோல் கடலரிப்பு ஏற்பட்டு கீழ் மிடாலம், மேல் மிடாலம் ஊர்களில் சுமார் 300-க்கு மேற்பட்ட குடும்பத்தினர் வீடிழந்துகிடந்த நேரத்தில் நான் இங்குவந்து அமைச்சர் அவர்களைச் சந்தித்து அவர் களின் நிலைபற்றி விளக்கினேன். கிட்டத்தட்ட ஒரு மாத காலமாக அந்த மீனவர்கள் கடலுக்குப் போகவில்லை. அதுமாத்திரமல்ல, அவர் கள் வீடிழந்த நிலையில் தனியார் தென்னந்தோப்புகளில் சென்று குடிசைகள் கட்டிக்கொள்ள முன்வந்தபோது போலீஸார் தடுத்தார்கள் என்றும், ஒருபக்கத்தில் சீறுகிற கடல், இன்னொரு பக்கத்தில் துப்பாக்கி ஏந்திய போலீஸார் என்ற நிலையில் இருக்கிறார்கள் என்றும், அவர் களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்கவேண்டும் என்றும் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொண்டேன். அவர்கள் மருத்துவ மனையில் படுத்த படுக்கையில் இருந்தபோதே மீன் இலாகா இயக்குனர் அவர் களை எங்கள் மாவட்டத்திற்கு அனுப்பிவைத்தார்கள். நான் சென்னை யிலிருந்து அங்கு போவதற்கு முன்னமேயே இயக்குனர் அவர்கள் சென்று அங்கு காரியங்களைக் கவனித்தார்கள். பஞ்ச நிவாரணமும் வழங்கப்பட்டது.

இருந்தபோதிலும் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வீடு இழந்தவர்களுக்கு நாற்பது ரூபாய் என்றும், அதோடு அவர் களுக்கு இரண்டு மூன்று தினங்கள் வயிறார உணவும் கொடுத்து

விடுவதால் மட்டும் அவர்களுக்கு நிரந்தரமான பரிகாரம் ஏற்பட்டுவிடும் என்றும் நான் கருதவில்லை. கேரள கடற்கரையோரங்களில் கடலரிப்பால் கடற்கரையோரங்கள் அழியாமல் இருக்க ஜல்லிக்கற்களை அடுக்கியிருக்கிறார்கள். அதேபோன்று இங்கும் ஒரு திட்டத்தைக் கொண்டு வரவேண்டும். பல பகுதிகளிலும் பூமிகளை அக்வயர் செய்து மீனவர்களுக்கு காலனி உருவாக்கிக் கொடுக்கும் நிலையில் இருக்கிறோம். கீழ் மணக்குடி, மேல் மணக்குடி, இலமந்துறை போன்றயிடங்களில் தடுப்புச் சுவர்கள் கட்டப்படவேண்டும். அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுப்பியுள்ள குறிப்பையும் கணக்கிலெடுத்துக் கொண்டு தடுப்புச் சுவர்கள் கட்டப்படவேண்டும். ஒரு வருடத்தில் இரண்டு மாதங்களிலாவது கடலரிப்பு ஏற்படுகிறது. அப்படி தடுப்புச் சுவர்கள் கட்டுவதோடு கூட எப்போது கடலரிப்பு, கடல் கொந்தளிப்பு ஏற்படுகிறதோ அப்போது மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கும் ஒரு நிலையையும் மேற்கொள்ளவேண்டும். அப்படிப்பட்டதொரு நிலையை ஏற்படுத்தித்தரவேண்டும்.

1961-ம் ஆண்டில் திரு. காமராஜ் அவர்கள் தமிழ்நாடு முதல் அமைச்சராக இருந்தநேரத்தில், கன்னியாகுமரியில் இருந்து கொல்லங்கோடுவரை உள்ள நாற்பதுமைல் தூரத்திற்கு மீனவர்கள் கிராமங்களை இணைக்கக்கூடிய ஒரு ரோட்டை அமைப்பதற்காக அப்போதிருந்த மீனள இலாகா அமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை உருவாக்கி தலைமைப் பொறியாளர் அவர்களும் சம்மதம் தெரிவித்த பிறகு அதற்கு செலவு முப்பது லட்சம் ரூபாய் ஆகிறது என்ற காரணத்தினால் அது கைவிடப்பட்டிருக்கிறது. அந்த திட்டத்தை இந்த அமைச்சரவை மீண்டும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று மீனவர்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் உள்ள கிணறுகளில் தண்ணீர் உப்புத் தண்ணீராக இருக்கிறது. ஆகவே அந்த மக்களுக்கு நல்ல குடிதண்ணீர் கிடைப்பதற்கான ஒரு திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன. கேசவன்புத்தன் துறை, பெரியகாட்டுத் துறை போன்றயிடங்களிலுள்ள பஞ்சாயத்துக்களில் குடிதண்ணீர் பற்றி என்ன சொல்கிறார்கள் என்றால், குடிதண்ணீர் வசதிக்காக 40,000 ரூபாய் செலவு ஆகுமென்றால் 10,000 ரூபாய் காண்ட்ரிப்யூஷன் தரவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த அளவிற்கு மக்களால் தர முடியவில்லை. ஆகவே அந்தப் பணத்தை மீன் இலாகாவிலிருந்து ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து ஒரு குறிப்பு வந்திருக்கிறது. அதை ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கீழமணக்குடி, மேல் மணக்குடி இவற்றிற்கிடையில் ஒரு பெரிய காயல் இருக்கிறது. அந்தக்காயலில் உள்ள இரு மீன்களை, கொல்லங்கோட்டிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் வாழும் மீனவர்கள், அந்தப் பெரிய மீன்களைப் பிடிக்கிறார்கள். ஆனால் இன்று அங்கிருப்பவர்கள் கதம்பல்கவுரி ஊறப்போட்டிருப்பதால் இருமீன்கள் செத்துவிடுகின்றன. நான் சென்று தடுக்கப்போனபொழுது என்னைக் கைது செய்து வழக்குப்போட்டார்கள். இப்படி இருபுறங்களிலும் ஆக்கிரமிப்பு செய்து, கடலுக்கு இரை கொண்டு போக முடியாத நிலைமையிருக்கிறது. இங்கே அமர்ந்திருக்கின்ற நிதியமைச்சரவர்களையும், இங்கே அமர்ந்திருக்கின்ற உணவுத்துறை அமைச்சரவர்களையும் அந்த இடத்திற்கு அழைத்துப்போய்க் காட்டியிருக்கிறேன். அந்தப் புறம்போக்குப் பகுதிகளை நாடார்களுக்குத் தந்திருக்கிறார்கள். கடலிலே சென்றுவரும் மீனவர்களுக்கு அதை வைத்துக் குடிசை கட்டச் செய்யலாம். அதை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

விசைப்படகுகளைப்பற்றி ஒருசில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். 1963-லே விசைப்படகுகளுக்காகத் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொண்டவர்களுக்கு விசைப்படகுகள் தராத நிலையிலே 1966 டிசம்பர் மாதத்திலே விசைப்படகுகளுக்காக பதிவு செய்து கொண்டவர்களுக்கு 1967-ஆம் ஆண்டிலே, முன்னாள் அமைச்சராக இருந்த திரு. பூவராகன் அவர்கள் போட்டுத்தந்தார்கள். புதிய அமைச்சரவை பொறுப்



பேற்றுக்கொண்ட பிறகு யார் யார் எந்த எந்த மாதங்களில் பதிவு செய்து கொண்டிருக்கிறார்களோ, அந்த நியாயத்தின் அடிப்படையிலே, அமைச்சருக்கு வேண்டியவர்களாகயிருந்தாலும் சரி, அல்லது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டியவர்களாகயிருந்தாலும் சரி, நியாயமான முறையில் விசைப்படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்காக இந்த அமைச்சரவையைப் பாராட்டுகிறேன்.

இன்னொன்றைக்கூற விரும்புகிறேன். ஒருகாலத்தில் அமைச்சர்களுக்கு வேண்டியவர்களாகவோ அல்லது மண்டல காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவோ இருந்தால் அன்று எப்படி விசைப்படகுகள் வழங்கினார்கள் என்றால் அவர்களுக்கு யான் மார்க் படகுகளும், மற்றவர்களுக்கு ரஸ்ட் நாய் போன்றவைகளையும் தந்தார்கள். ஆனால் இன்று, திருவுளச் சீட்டுப் போட்டு, யாருக்கு வருகிறதோ அவர்கள் பெற்றுக்கொள்ளுங்கள் என்ற முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்காக நான் புதிய அமைச்சரவையை மீண்டும் ஒருமுறை பாராட்டுகிறேன்.

விசைப்படகுகளை வைத்திருக்கக்கூடிய மீனவர்கள் இன்ஷ்யூரன்ஸ் செய்ய வேண்டுமென்றால் எல். ஐ. சி.யில்தான் செய்யவேண்டுமென்ற குறிப்பைத் தமிழக சர்க்கார் அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், கன்னியாகுமரியிலுள்ள விசைப்படகுச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் முறையிட்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்வது எல். ஐ. சி.யில் செய்தால் கொடுக்க வேண்டியது ரூ. 1,050, ஆனால் வேறு இடங்களில் செய்தால் 600 ரூபாய்தான் தரவேண்டியிருக்கிறது. ஆகவே, அதை மாற்றித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் இதுபற்றித் தங்களுடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

குமரி மாவட்டம் கடலளவும், மலையளவும் கொண்டது. மலையளவைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். குமரி மாவட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு காட்டு வளம் கொண்ட பகுதியாக இருக்கிறது. அவை ஒருகாலத்தில் கேரளாவில் அங்கிருந்த மன்னர்களுக்கு 10 ஏக்கர், 100 ஏக்கர் என்று கொடுக்கப்பட்டது. அதை வாங்கிக்கொண்டு 100 ஏக்கர்கள் வைத்திருந்தவர்களிடத்தில் இன்று 1,000 ஏக்கர் அளவில் வைத்திருக்கிறார்கள். 90 ஏக்கர் வைத்திருந்தவர்கள் இன்று 900 ஏக்கர் என்ற அளவில் வைத்துக்கொண்டு, விலை பத்திரத்தையும் 900 ஆக மாற்றி வைத்திருக்கிறார்கள் காங்கிரஸ் சர்க்கார் காலத்திலே. இப்பொழுது தி. மு. க. பதவிக்கு வந்தபிறகு அவர்கள்மீது வழக்குப் போட்டு வெற்றிபெற்ற, அவர்கள் அப்பீலுக்குச் சென்றிருக்கிறார்கள். எந்தக் கட்சியாகயிருந்தாலும் சரி, தி. மு. க. வாக இருந்தாலும் சரி, சுதந்திராக்கட்சியாகயிருந்தாலும் சரி, அல்லது காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, குமரி மாவட்டத்திலுள்ள மலைகள் பலருக்குச் சொந்தமாக காடுகள் வெட்டி அழிக்கப்பட அனுமதிக்கப்பட்டிருக்கிறது. நான் இந்தச் சர்க்காரைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன், பலமுறை இதைக்குறித்து அமைச்சரவர்களிடத்தில் பேசியிருக்கிறேன். ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டு, யார் யாருக்கு எத்தனை ஏக்கர் சொந்தமாக இருக்கிறது என்று அவர்களுடைய டாகுமெண்டைப் பார்த்து அந்த அளவில் அளந்து கொடுத்துவிட்டு, எஞ்சிய நிலங்களை இலங்கையிலிருந்து வருகின்றவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் கூட்டுறவுத் துறையிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கோதையாற்றில், அப்பர், லோயர் இரண்டிலும் எலக்ட்ரிசிட்டிக்காகவும், சித்தாறு-பட்டணங்கால் திட்டத்திற்காக 15,000 ஏக்கராவும் காடுகள் அழிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் ரப்பர் ப்ளாண்டேஷனுக்காக மீண்டும் விரிவு செய்யவேண்டுமென்று எண்ணினால், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைக்கட்டுகள், அணைக்கட்டுகளாக இருக்காது, பந்தாடும் களங்களாகத்தான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்லாமல் விட்டேனென்றால் நான் என்னுடைய கடமையிலிருந்து தவறியவன் ஆவேன். அதாவது, கடந்த இருபதாண்டுக் காலமாக மலைகளை வெட்டி அழித்திருக்கிறார்கள். காடுகளில் காடே இல்லை. 10 எக்கர்களுக்குச் சொந்தக்காரராக இருந்தவர் 10,000 எக்கர்களுக்குச் சொந்தக்காரர்களாகயிருக்கிறார்கள். இதெல்லாம் 'சீஃப் கன்சர்வேட்டர் ஆஃப் ஃபாரஸ்ட்க்குத் தெரியாதா ? அல்லது தெரிந்துதான் அனுமதித்துக்கொண்டிருக்கிறார்களா ? தெரிந்துகொள்ள திறமையில்லை என்று அர்த்தமா ? இதைக் குற்றச்சாட்டாகச் சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. தவறு செய்து கொண்டேயிருக்கிறார்கள். அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்குச் சட்டம் இல்லையா ? நடவடிக்கை எடுப்பதற்கு ஏன் தயங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

***திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, விவசாய அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய மாணியத்தின்மீது என்னுடைய வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்வருகிறேன். இன்றையத்தினம் நம்முடைய தமிழகத்தில் வறட்சியின் காரணமாக தமிழக மக்கள் கொடிய நெருக்கடியை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறார்கள். விவசாய இலாக்காவில் மிகத் தீவிரமாகப் பெருமுயற்சி செய்து 63 லட்சம் டன்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்று திட்டத்தைத் தயாரித்து, ஆனால், 54 லட்சம் டன்கள்தான் உற்பத்தி செய்ய முடியுமென்று கூறப்பட்டிருக்கிறது. இம்மாதிரி அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில், இன்றையத்தினம் பிரதானமாக நிலத்திலே பாடுபட்டுக்கொண்டிருக்கக்கூடிய, நிலத்திலே வேலை செய்து உணவு உற்பத்தியிலே ஈடுபட்டிருக்கக்கூடிய ஜனங்களுக்கும், அந்த நிலத்திற்கும் ஒரு நெருக்கமான உறவை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். நில உறவுமுறை அடிப்படையிலே மாற்றி அமைப்பதன் மூலமாகத்தான் அரசு போடுகின்ற திட்டங்களை நடைமுறையிலே நிறைவேற்றுவதற்கும், அதிகமான அளவில் உணவு உற்பத்தியைச் செய்வதற்கும் உதவியாக இருக்க முடியும்.

விவசாயக் கூலிகள், நமது ராஜ்யத்தில் 13 லட்சம் குடும்பங்கள் அதே தொழிலிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிகக் குறைவான வருவாயைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். நிலத்தில் பாடுபடாதவர்கள் ஒரு பகுதியினர் நிலத்தைச் சொந்தமாக வைத்துக் கொண்டு எந்த விதமான வேலையும் செய்யாமல் பெயருக்கு நிலத்தை வைத்து, விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்திலிருந்து கிடைக்கக்கூடிய சலுகைகள் அத்தனையையும் நிலத்திலே போடாமல் அந்தச் சலுகைகளைப் பெற்று வேறு வகையில் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, 13 லட்சம் குடும்பங்களின் வாழ்க்கையைக் கருதி, அவர்கள் முன்னேறுவதற்குப் போதுமான பாதுகாப்புகள் அவர்கள் செய்யக்கூடிய வேலைகளுக்கு நியாயமான ஒரு கூலியை நிர்ணயம் செய்யக் கூடிய சட்டங்கள் போன்றவைகளைச் செய்து நிலத்திற்கும் அவர்களுக்கும் நெருக்கமான உறவு முறை ஏற்படுத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தாகவேண்டும்.

அடுத்து, இன்றையத்தினம் நல்ல புது ரக விதைகளையெல்லாம் கண்டறிந்து அதைக் கொண்டு விவசாயம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது. அது நல்ல பலன்களை அளித்துக் கொண்டுவருகிறது. இம்மாதிரி சமயத்தில் இன்று பல விதமான பூச்சிகளால், விதம், விதமான நோய்கள்வந்து பயிர்கள் நாசம் ஆகின்றன. அதைத் தடுப்பதற்கு உரிய முறையிலே சிறந்த மருந்துகளைக் கண்டறிய வேண்டும். பூச்சிநாசினி மருந்துகளைக் கண்டுபிடித்து, பயிர்களைப் பாதுகாக்கவேண்டும். இந்த ஆண்டு 2, 2½ லட்சம் எக்கர் நிலங்களில் விமான மூலம் தெளித்து, பாதுகாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அம்மாதிரி தெளிக்கும்பொழுது விவசாயிகளிடமிருந்து எதையும் எதிர்பார்க்





காமல் அரசாங்கத்தின் செலவிலேயே இந்தப் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளித்து பூச்சி விபத்திலிருந்து பயிர்களைப் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மற்றொன்று, கடன்பெற்றால்தான் விவசாயம் செய்ய முடியுமென்ற நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. விவசாயிகள் கடன் வாங்குவது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு கடன் கொடுத்த ரூபாய் 55 கோடி என்றால் இந்த ஆண்டு 76 கோடி ரூபாய் கடன் கொடுக்க வேண்டுமென்று உத்தேசித்துக் கொண்டிராமல் கடன் உயருவதற்குக் காரணம் என்ன என்று ஆராயவேண்டும். நல்ல விவசாயம் செய்யக் கூடிய விவசாயிகள் ஏன் கடன் வாங்கக்கூடிய நிலை இருக்கிறது, கடன் தொகை மேலும் மேலும் ஏன் அதிகரித்துக் கொண்டே போகிறது என்று அரசு கண்டறியவேண்டும். அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். கடன் கொடுப்பது என்று சொன்னால், இன்றையத்தினம் நான் முன்னால் சொன்னதைப்போல், நிலம் வைத்திருப்பவர்களுக்கு அல்லது குத்தகைக்குப் பெற்று குத்தகைப் பத்திரங்களை வைத்திருப்பவர்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. இன்று நிலத்திலே நேரடியாக விவசாயம் செய்துகொண்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு அந்தக் கடன் கிடைக்காத காரணத்தால் உற்சாகமில்லாமல், அதற்கு வேண்டிய செலவுகள் செய்ய கையிலே போதுமான சக்தியில்லாமல் விவசாயம் பாதிக்கப்படக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

தஞ்சை மாவட்ட தீவிர சாகுபடி திட்டத்தை ஆராய்வதற்காக வந்த ஃபோர்ட் பௌண்டேஷனைச் சேர்ந்தவர்கள்கூட அரசாங்கத்திற்கு அறிக்கை ஒன்று அனுப்பியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நேரடியாக சாகுபடி செய்யாதவர்கள் அதனுடைய பலன்களையெல்லாம் பெறுகிறார்கள். அதன் காரணமாகத்தான் இன்றையதினம் எதிர்பார்த்த அளவுக்கு பலன் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். ஐ. ஆர். 5, 8 இந்த வகை நெல் அதிக விளைவைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அதிகமாக மகசூலைக் கொடுக்கக்கூடிய இந்த தானியத்தை தஞ்சாவூர் ஜில்லாவில், சி. எம். பி. ஏரியாவில் பயன்படுத்தவேண்டும். பள்ளப் பிரதேசங்களுக்கு அவசியம் இல்லை. சி. எம். பி. ஏரியா ஒரு லட்சம் ஏக்கர் இருக்கிறது. அங்கு இந்த ஐ. ஆர். 5, 8 வகை தானியத்தைக் கொண்டு விவசாயம் செய்வதற்கு ஏற்பாடு செய்தால், இன்னும் அதிக தானியத்தை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முடியும். ஆடுதுறை 27 நன்றாக விளைகிறது. ஆனால், மழை பெய்தால் முளைத்து விடுகிறது. ஏன் முளைத்துவிடுகிறது என்று இன்னும் அறிய முடியவில்லை. அதற்குக் காரணம் என்ன என்றும் ஆராய்ச்சி செய்து, முளைக்காமல் இருக்க வழி செய்யவேண்டும். மழைக்காலங்களிலே தண்ணீரிலே கதிர்கள் கீழே விழாமல் இருந்தால் கூட, மழைத் தண்ணீர் பட்டு முளை வந்துவிடுகிறது. ஆகவே அதைக் கண்டறியவும் ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, கால்நடை வளர்ப்புகளைக் குறித்து ஒரு தலைய சர்க்கா
தைகள் சொல்ல விரும்புகிறேன். கால்நடைகள் விவசாயச்சரா டவேண்டும்
மிகத் தேவையானது. விவசாயத்திற்காக அவைகளை பாண்புமி
யிருக்கிறது. கால்நடைகளை கிராமங்களிலே அபிவிருத்திசெய்யப்பட்
தீவிரமான ஏற்பாடுகள் செய்யவேண்டும். இன்றைறர்கள். இந் அவர்களே,
ஏற்பாடுகள் போதுமானது அல்ல, எல்லாவற்ற அந்தத் களைச் சொல்ல
தான் செய்கிறார்கள். கறவை மாடானாலும் ச மின்சார நிலை ஜீவநாடியாக
களானாலும் சரி, எல்லாவற்றையும் நகரங்கவர்களுக்கும் அதேபோல
ஆகவே, கிராமப்புறங்களிலே விவசாயிகளுக்குவதற்கும், வேளாண்மைத்
விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய, அவர் இருக்கும். அந்த தில் பிறந்த
வாங்கிக்கொடுக்க, காளைகளை வாங்கிக்கொடும் என்று வே றேன்.
கால்நடைகளுக்கு வரக்கூடிய வியாதிகள்

[திரு. ஆ. கு. சுப்பையா] [1969 மார்ச் 18

அளவுக்கு மருத்துவ நிலையங்கள் கிராமத்திலே இடையாது. ஏதோ தத்துவம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு யூனியனுக்கு ஒரு மருத்துவ நிலையம் தான் வைக்கமுடியும், ஒரு உதவி நிலையம்தான் வைக்க முடியும் என்று. அது சரியாக இருக்கமுடியாது. ஆகவே, கிராமப் புறங்களிலே கால்நடைகள் நோய்களினால் மாளுவதை மீட்கவேண்டு மென்று சொன்னால் நிறைய நிலையங்களை ஆரம்பிக்கவேண்டும். வரக்கூடிய வியாதிகளைத் தடுப்பதற்கு வேண்டிய முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்தத் துறைகளிலே பணிபுரியக்கூடிய கால்நடை உதவியாளர்கள் தங்களுடைய குறைகளை அரசாங்கத்திற்கு அனுப்பி இருக்கிறார்கள். அதையெல்லாம் பரிசீலனை செய்து, எதை எதையெல்லாம் ஏற்றுக் கொள்ளவேண்டுமோ, அவைகளை ஏற்றுக்கொண்டு, அவர்களை ஊக்குவிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, எலியால் ஏற்படக்கூடிய தானியங்களின் சேதத்திற்கு கணக்கு சொல்லமுடியாது. ஏதோ, ஆங்காங்கு எலி பிடிப்பதாகச் சொல்கிறார்கள். அதை பஞ்சாயத்து போர்டிலோ, அல்லது பஞ்சாயத்து யூனியனிலோ ஒப்படைத்து, அல்லது விவசாய இலாகாவிடம் ஒப்படைத்து 4, 5 கிராமங்களுக்கு ஒரு விவசாய டெபோ வைத்திருக்கிறோம். (மணி அடிக்கப்பட்டது) அந்த விவசாய அதிகாரியிடம் அந்த பொறுப்பை கொடுத்து, அந்த எலிகளைப் பிடித்துக்கொண்டு வந்தால், எலி ஒன்றுக்கு இவ்வளவு காசு தருகிறோம் என்று சொன்னால், ஊரிலே இருக்கக்கூடிய வேலை இல்லாமல் திரிந்து கொண்டிருக்கிறவர்கள் எல்லாம் அந்த எலிகளைப் பிடித்துக்கொடுப்பார்கள். இல்லையென்றால், இதனால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள், கஷ்டங்கள் பெரிய அளவுக்கு இருக்கும் என்று சொல்கிறேன். இதனால் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள தானியங்கள் எல்லாம் சேதமாகிவிடுகிறது. அது மிகப் பெரிய ஆபத்தாக இருந்துகொண்டிருக்கிறது. அந்த முறையில், எலிகளைப் பிடித்து, உடனே தொல்லைகளைப் போக்குவதற்கு வேண்டிய முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

மீனவர்கள்பற்றி அதிக அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். மீன வர்கள் மிகமிக கஷ்டமான வாழ்க்கையைக் கடலோரப் பகுதியிலே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையிலே முன்னேறு வதற்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும். அரசு உதவிகளெல்லாம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இடையிலே சில செல்வாக்குள்ள நபர்கள், அவர்களுக்கு அளிக்கக்கூடிய படகுகள், மற்ற வலைகள் போன்ற வைகளைப் பெற்று, அவர்களைக் கூலியாக வைத்திருக்கிறார்கள். இந்த இடைத் தரகர்களை அகற்றி, அரசாங்கம் கொடுக்கக்கூடிய நல்ல பலன்களை மீனவர்கள் நேரடியாகப் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பு. செ. முத்துச்செல்வன்):** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் பிற்பகல் 3-30-க்குக் கூடும் என்று அறிவிக்கிறேன்.

வேண்டிய ஏற்பாடு... பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

அடுத்து, இன்... உணவு வேளைக்குப் பின்—பிற்பகல் 3·30)

கண்டறிந்து அதைக் ... வைத் துணைத் தலைவர் (திரு. எட்மண்ட்

ஏற்பாடுகள் செய்யப்பட்டு ... தலைமையில் பேரவை மீண்டும் பிற்பகல்

கொண்டுவருகிறது. இம்மாதிரி ...யது.

'களால், விதம், விதமான ...

அதைத் தடுப்பதற்கு உரிய முத... திப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே,

வேண்டும். பூச்சிநாசினி மருந்துசப்ளை துறை அமைச்சர் அவர்களால் கொண்டு

காக்கவேண்டும். இந்த ஆண்டு... யை ஆதரித்து என்னுடைய கருத்துக்

விமான மூலம் தெளித்து, பாத்துகாத்துவருகிறேன். சென்ற பட்ஜெட்டை...

மாதிரி தெளிக்கும்பொழுது விவசா



1969 மார்ச் 18] [திரு. ஜி. நடராஜன்]

வேளாண்மைத் துறைக்கு இந்த பட்ஜெட்டில் அதிக முக்கியத்துவம் கொடுத்து, விவசாய வளர்ச்சிக்கு, கால்நடை வளர்ச்சிக்குப் பயன்படும் படியான நல்ல முறையிலே இந்த பட்ஜெட்டைத் தயார் செய்து, இந்த மானியக் கோரிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள். இதை நான் வரவேற்கிறேன். விவசாயத்தில் முக்கியத்துவம் வாய்ந்த வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள காட்பாடித் தொகுதி பெரும் பாலும் பாறை நிறைந்த தொகுதியாக இருக்கிறது. அங்கே விவசாயிகள் கிணறுகள் வெட்டவேண்டுமென்றால், 100 அடி ஆழத்திற்குக் கிணறு வெட்டி, விவசாயத்தை வளர்ச்சி அடையச் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதையொட்டி விவசாயிகளுக்குப் பாங்குகள் மூலம் கொடுக் கக்கூடிய கடன் தொகையை அதிகப்படுத்தித் தரவேண்டும், தவணை யையும் அதிகப்படுத்தித் தரவேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

காட்பாடித் தொகுதியில் சேனூர் என்ற கிராமம் பெரும்பாலும் அரிசனங்கள் இருக்கக்கூடிய கிராமம். அரிசனங்கள் இருக்கக்கூடிய அந்தக் கிராமத்தில் 300 எக்கர் நஞ்சை நிலம் இருக்கிறது. அதற்கு ஆற்றுக் கால்வாய் இல்லை. கசர் கால்வாய்தான் இருக்கிறது. அங்கு தண்ணீர் வருவதே கிடையாது. பல ஆண்டுகளாக பயிர் வளர்ச்சியும் கிடையாது. அதைப் பாலாற்றுக் கால்வாயாக மாற்றவேண்டும். அப்படி யில்லை என்றால், அங்கு சமுதாயக் கிணறுகள் வெட்டிக்கொடுத்து, விவசாயம் வளர்ச்சி அடைவதற்கு வழிவகை செய்யலாம். அப்படிச் செய்தால் அங்குள்ள விவசாயிகள் நல்ல சுபிட்சமாக வாழ அரசு வகை செய்ததாகும்.

அதேபோல், காட்பாடித் தொகுதியில் செஞ்சி என்ற கிராமம் இருக் கிறது. ராஜா தோப்பு என்ற இடம் இருக்கிறது. நான் சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின் மீது பேசுகிற பொழுது இதைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கிறேன். சுமார் 500 எக்கர் பரப்புள்ள நிலங்கள் இருந் தும், அந்த ராஜா தோப்பு பக்கத்தில் பெரிய மலைப்பகுதியாக இருக்கிறது. மழைக் காலத்தில் மலைப்பகுதியிலே பெய்யக்கூடிய மழை வீணாகப்போகிறது. அங்கு ஒரு நீர்த்தேக்கம் ஏற்படுத்தினால் 500 எக்கர் நிலம் லாபகரமாக விவசாயம் செய்யப்படக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அரசு இந் நீர்த்தேக்கத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொ கிறேன்.

காட்பாடித் தொகுதியில் சில கிராமங்களில் மேய்க்கால், கா... வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களைத் தனியார், வாக்கு உடையவர்கள், ஆக்கிரமிப்பு செய்ய முன்வருகிறார்கள். தடுத்து கால்நடைகளுக்கு மேய்ச்சலுக்காக புறம்போக்கு நிலங்களை படுத்தித் தரவேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

காட்பாடித் தொகுதியில் தண்ணீர்ப் பிரச்னை அதிகமாக வருகிறது. 5 பஞ்சாயத்துகள் அடங்கிய ஊராட்சி ஒன்றிய கிராமங்களில் குடிதண்ணீர் இல்லாமல் அதிகக் கஷ்டப்பட் டிருக்கிறார்கள் மக்கள். சென்ற ஆண்டு மாவட்ட ஆட்சித் தலை அதற்கு சிபார்சு செய்து, நமது சுகாதார அமைச்சரா திரு. சாதிக்பாட்சா அவர்களிடமும் மறைந்த மாண்புமி அமைச்சர் அவர்களிடமும் அந்தத் திட்டம் கொடுக்கப்பட் இந்த ஆண்டில் சேர்த்துக்கொள்வதாகச் சொன்னார்கள். இந் அந்தத் திட்டம் வரவில்லை. கூடியவிரைவிலே அந்தத் நிறைவேற்றினால்—காட்பாடித் தொகுதியில் மின்சார நிலை இருக்கிறது—அங்கே வேலை செய்யக்கூடியவர்களுக்கும் கஷ்டமாக இருக்கிறது—அதைப் போக்குவதற்கும், பிரச்னையைத் தீர்ப்பதற்கும் ஏதுவாக இருக்கும். அந்த உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வே கொள்கிறேன்.

ட்டு
ன்ற
ளுக்கு
என்று
பிடிக்கப்
கையிலி
கொண்டு,
இருக்கும்
ஆழ்கடலில்
வலைகளை
சர்க்கா
டவேண்டும்
அவர்களே,
களைச் சொல்ல
ஜீவநாடியாக
அதேபோல
வேளாண்மைத்
தில் பிறந்த
றேன்.

அதே போல் காட்பாடிக்கும் வேலூருக்கும் போகும் வழியிலே ஒரு பாலம் இருக்கிறது. அந்தப் பாலம் குறுகி இருப்பதால், ஆண்டு தோறும் வண்டிகள் மோதி ஜனங்கள் சேதமடைகிறார்கள். அந்தப் பாலத்தை விரிவுபடுத்தினால், வசதியாக இருக்கும். ஆகவே, அந்தப் பாலத்தை விரிவுபடுத்திக்கொடுக்குமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காட்பாடித் தொகுதி பெரும்பாலும் தொழிலாளர்கள், விவசாயிகள் நிறைந்த பகுதி. அங்கு மக்கள் மிகவும் ஏழை எளியவர்களாக இருப்பதால், அவர்களுக்குக் குடும்பக் கார்டு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த மேற்பாடி என்ற ஒரு கிராமத்தில் ஒரு கால்வாய் இருக்கிறது. அந்தக் கால்வாய் மூலம் பல கிராமங்களுக்குத் தண்ணீர் போவதற்கு வசதி இருக்கிறது. அந்தக் கால்வாயில் ஒரு அணையை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதே மேற்பாடி என்ற கிராமத்தில் பொன்னையாறு என்ற ஒரு ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் இருக்கிறது. அது தரைமட்டத்தில் இருப்பதால், தண்ணீர் வந்துவிட்டால், அந்தப் பக்கத்துக் கரையிலிருந்து அதைத் தாண்டுவதற்கு இடையூறாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பாலத்தை உயர்த்திக் கொடுத்தால், போக்குவரத்து வசதிக்கு ஏதுவாக இருக்கும். அந்தப் பாலத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.





வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதில் அக்கறை காட்டுகிறார்கள். அண்மைக்காலங்களில் வறட்சி நிலை இருந்தும், உரத்தை அதிகமாகப் பயன்படுத்தி ஏழை எளிய விவசாயிகள் நல்ல பயன் அடைந்திருக்கிறார்கள். உரங்களின் விற்பனை ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டு வந்திருக்கிறது. நம்முடைய வேளாண்மைக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் ரசாயன உரத்தைக் குறைந்த விலையில் கொடுக்க வேண்டும் என்று நமது அரசு நினைத்தால், அது சம்பந்தமாக மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டு இருந்தும், மத்திய சர்க்கார் இந்த ஆண்டு தன்னுடைய நிதிநிலை அறிக்கையில் உரங்களின் மீது 10 விழுக்காடு எக்ஸைஸ் வரியும், இறக்குமதியின் பேரில் வரியும் விதிக்க இருக்கிறது. அது மிகவும் வருந்தத்தக்கதாகும். தஞ்சை மாவட்டத்தில் மாயூரம் பகுதியில் ஏடிடி. 27 விதையை அதிகமாகச் செயல்படுத்தியிருக்கிறார்கள். உள்ளபடியே காலத்தோடு மேட்டூர் தண்ணீர் கொடுத்தால் விவசாயிகள் அதை வரவேற்றுப் பயிரிடத் தயாராக இருக்கிறார்கள். மாயூரம், சீர்காழிப் பகுதியில் நிலங்கள் பெரும்பாலும் கோவில்களுக்கும் மடாலயங்களுக்கும் சொந்தமாகத்தான் இருக்கின்றன. சிறு சிறு குத்தகைக்காரர்கள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என்ற அளவில்தான் குத்தகைக்கு எடுத்துப் பயிர் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள், சொந்தத்தில் வடிமுனைக் குழாய்கள், கிணறுகள் வைத்துக்கொள்ள இயலவில்லை; விவசாயத்தைத் தீவிரப்படுத்த முடியவில்லை. அவர்களுக்கு வசதிக் குறைவாக இருப்பதால், ஆயில் எஞ்சின், மற்ற உபகரணங்களான பம்ப் செட் போன்றவைகளை இப்படிப்பட்ட குத்தகைக்காரர்களால் பயன்படுத்த முடியவில்லை. சென்ற ஆண்டு கோவில்களில் இருக்கின்ற உபரி நிதியைச் செலவுசெய்து, சிறு விவசாயிகள் கோவில் நிலக் குத்தகைதாரர்கள் கோவில் பணத்தை முதலீடு செய்து ஆயில் எஞ்சின், வடிமுனைக் குழாய் கிணறு போன்றவைகளை அமைத்துக்கொள்ள விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்க வழி செய்ய வேண்டும் என்று அரசு குறிப்பிட்டிருந்தும், அது சரியான முறையில் செயல்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் மடாலயங்கள், கோவில்கள் இவற்றில் இருக்கும் நிலங்களை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு உற்பத்திக்குப் பயன்படவேண்டும் என்ற முறையில் அமைச்சர் ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மீனவர் பகுதியில் மின் விளக்குகள் ஓரளவுக்குப் போடப்பட்டு இருந்தாலும், சாலை வசதி, மின் விளக்குகள், குடிநீர் வசதி போன்ற வசதிகள் இல்லாமல் அவர்கள் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு இந்த வசதிகளைச் செய்து கொடுப்பதில் தீவிரம் வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக, கடற்கரை ஓரத்தில் 14 மைல்களுக்கு மீன் பிடிக்கப் போகலாம் என்றிருக்கிறது. ஆனால், அந்தப் பகுதியில், இலங்கையிலிருந்து ஆழ்கடலில் சென்று, உபகரணங்களை வைத்துக்கொண்டு, இலங்கைவாசிகள் நம் பகுதிக்கு வந்து நமக்குக் கிடைக்க இருக்கும் மீன்களை அவர்கள் பிடித்துக் கொண்டு, அவர்களுடைய ஆழ்கடலில் செல்லும் படகுகளைக் கொண்டு நம்முடைய மீனவர்களின் வலைகளை அறுத்து பாழ்படுத்தும் நிலை இருக்கிறது. நம் அரசு மத்திய சர்க்காருக்கு எழுதி, இதுபோன்ற நிலைமைகளை அகற்றுவதற்கு முற்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

***திரு. மு. முத்தையா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வேளாண்மை, இந்த நாட்டின் ஜீவநாடியாக இருக்கிறது. எப்படி உயிர்களுக்கு ஜீவன் இருக்கிறதோ அதேபோல மனித வாழ்க்கைக்கு உணவு ஜீவன். அப்பேர்ப்பட்ட வேளாண்மைத் துறையைப்பற்றி பேசுகிறேன். விவசாயக் குடும்பத்தில் பிறந்த நான், சில முக்கியக் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயம் என்ருல், விவசாய உற்பத்தியில் விவசாயிக்கு ஊக்கம் ஏற்படும். பருவம் தவறினாலும், பருவ மழை தவறினாலும், பருவக் காற்று தவறினாலும், மாறினாலும், தண்ணீர்ப் பற்ருக்குறை ஏற்பட்டாலும், விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஆகவே விவசாயிக்கு பயிர் பாதுகாப்புத் திட்டம் தேவை. விவசாயத்திற்கு வருமானவரி என்றும், ஆண்டார்டு ஏக்கர் என்றும் பல தொந்தரவுகள் இருக்கின்றன. இன்றைக்கு விவசாயம் இருக்கும் நிலையைப் பார்த்தால், விவசாயத்தைவிட பட்டணத்தின் வாழ்க்கையே தேவலே என்று தோன்றுகிறது. ஆகையால் இன்றைக்கு கிராம மக்கள், கெட்டாலும் பட்டணம் போவோம் என்றுதான நினைக்கிருர்கள். பட்டணத்தில் பத்து வீடுகளைக் கட்டி வைத்துக் கொண்டால், போதும் அந்த வீட்டு வாடகையே. சுகபோகமாக வாழலாம். ஆகவே தான் சொன்னார், 'கெட்டும் பட்டணம் போ' என்று. ஆகவே, யாதொரு வருமானமும் இல்லாமல் இருப்பதால் அவர்களுக்கு ஊக்கம் இருந்தாலும் சோர்ந்து போகும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயத்தை ஊக்குவித்தால்தான், உணவுப் பற்ருக்குறையைத் தீர்க்க முடியும். அதே நேரத்தில் என்னுடைய தொகுதியில் யாதொரு பாசன வசதியும் இல்லாமல் இருக்கிறது. மானாவாரிக்காடாக இருக்கிறது. இந்தப் பட்ஜெட்டிலும் யாதொரு திட்டமும் இல்லை. மராமத்து செய்யவும் திட்டம் எதுவும் இல்லை. புதிய குளங்கள் வெட்டுவது போன்ற காரியங்கள் செய்யப்படும் என்று நினைத்து இருந்தேன், ஒன்றையும் காணோம். என்னுடைய தொகுதியில் எப்போது வென்ருன் கல்லாறு என்ற இடத்தில் தடுப்பு அணை கட்டி ஒரு குளம் ஏற்படுத்தலாம். அதற்கான யோசனை அரசின் பரிசீலனையில் இருந்தது. அதைப்பற்றியொன்றுமில்லை. கயத்தாறு பணிக்கர் குளம், எலந்தைக்குளம் என்று ஏழு குளங்கள் சம்பந்தமாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், அப்பொழுது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு முதல் அமைச்சர், இவர்களுக்குத் தெரிவித்து விவசாயக் கருத்தரங்கிலும், பொதுப்பணித்துறைக் கருத்தரங்கிலும் மனுக் கொடுத்தேன், பேசினேன். அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னவென்று தெரியவில்லை. கயத்தாறு பகுதியில் உள்ள உப்பு ஓடையில் தடுப்புச்சுவர் கட்டி பெரியகுளம் என்ற தலையால் நடந்தான் குளம் மற்றும் குளங்களுக்கும் இந்தக் கால்வாய் மராமத்து செய்யவேண்டும் என்றும் சொன்னேன். அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் தெரியவில்லை. ஒன்றும் செய்யப்படவில்லை.

மேலும் எனது தொகுதியாகிய ஒட்டப்பிடாரம் வட்டம் உழுதுண்டு வாழும் மக்கள் நிறைந்தது. ஆகவே "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்று என் வட்டத்தைச் சேர்ந்த பாரதியார் பாடினார். பயனென்ன? அந்தப் பகுதிக்கு யாதொரு மராமத்தும் செய்யப்படவில்லை. ஆனால் இதற்குக் காரணம் அந்தப்பகுதி ஜமீன் பகுதியாக இருந்தது. (மணியடிக்கப்பட்டது) தயவு செய்து, இன்னும் ஐந்து நிமிஷம் கொடுக்கவேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். என் பகுதி அந்த நிலையில் இருக்கிறது. அதைச் சீர்திருத்த அமைச்சரவை ஆவன செய்யவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். மேலும் அங்குள்ள குளங்களை எல்லாம் மராமத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தால்தான் இந்த நாட்டினுடைய உணவுப் பிரச்னை தீரும். அன்றுதான் நம்முடைய நாடும் நாமும் முன்னேறியதாக அர்த்தம். தேவஸ்தானங்களில் இந்து சாஸ்திரப்படி பட்டர்கூட சாதத்தைப் பிரசாதமாக தெய்வத்திற்குக் கொண்டு வந்து வைத்தாலும் கூட சுவாமிகள் அதை ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை. ஏன்? நம்முடைய நாட்டினுடைய உணவுப் பஞ்சம் என்றைக்குத் தீருகிறதோ அன்றைக்குத்தான் நான் ஏற்றுக்கொள்வேன்



என்று தெய்வங்கள்கூட விரதம் எடுத்துக் கொண்டிருப்பதாக நான் நினைக்கிறேன். விவசாயி இறவைக் கிணறுகளுக்கு, பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருப்பதால் மிகவும் சங்கடப்படுகிருர்கள். விவசாயிகள் பின்தங்கியவர்களாக இருக்கிருர்கள். அவர்களுடைய பம்பு செட்டுகளுககு மின்சார வசதி கிடைக்க வேண்டும். தேவஸ்தானங்களில் உள்ள மூல ஸ்தானத்தில் லைட் இல்லாததற்குக் கூட காரணம் உண்டு. அதாவது எங்கே வேண்டுமானாலும் மின்சார விளக்கு இருக்கட்டும், என் இடத்தில் வேண்டாம், எல்லோருக்கும் விவசாயத்திற்கு மின்சார வசதி கிடைக்கட்டும், விவசாயத்தைப் பெருக்கட்டும் என்றுதான் சுவாமி கூட நினைக்கிறது என்றுதான் நான் நினைக்கிறேன். அதைப் பற்றி மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்களுக்கும் கனவில் வந்து தெரிவித்திருக்கும் என்று நினைக்கிறேன். எனவே, இவற்றையெல்லாம் தீர்ப்பதற்கு அதிகாரிகள் முயற்சிக்க வேண்டும்.

ஒட்டப்பிடாரம் தொகுதி ஜமீன் ஆக இருந்ததால் அதைப்பற்றிச் சில விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன். ஜமீனாக இருந்து அயனாக மாற்றியபொழுது சர்வே செய்தார்கள். பட்டாக் கொடுப்பதில் தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அதிகாரிகள் கிராம அதிகாரிகளைக் கலந்து செய்யாமல் எங்கோ ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டு ஆடு மேய்க்கிறவன், மாடு மேய்க்கிறவன் இவர்களைக் கூப்பிட்டு ஒருவர் பெயரையும், நம்பரையும் மாற்றி இன்னொருவருக்குப் பட்டா போட்டுக் கொடுத்திருக்கிருர்கள். இதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

மேலும் மண்வளப் பரிசோதனையாளர்கள் வந்தார்கள். இங்குள்ள தலையாரிகளைக் கூப்பிட்டு மண்ணைக் கொண்டுவரச் சொல்லி அதைப் பாட்டிலில் அடைத்துக் கொண்டுபோய் ஒரு ரூபாய் ஆக இருந்ததை இரண்டு ரூபாயாகவும். இரண்டு ரூபாயாக இருந்ததை மூன்று ரூபாயாகவும் புஞ்சை, நஞ்சைகளுக்குக் கூட்டிவிட்டார்கள். இதையெல்லாம் திருத்தி உடனே ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதிகாரிகள் இப்படிப்பட்ட விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உடனுக்குடன் செய்தால்தான் இந்த அரசுக்கும் நல்ல பெயர் இருக்கும். எல்லாம் பரிசீலனை செய்யப்படாமல் அப்படியே இருந்துவிடக் கூடாது. சில அதிகாரிகள்கூட நினைக்கலாம். இதைமாற்ற கஷ்டம் என்று நினைக்கலாம். ஏன் முடியாது? பிரம்மாவுக்கும் எமனுக்கும் செக்ரட்டரியாக சித்திரபுத்திரன் இருந்தான். அவனுடைய கணக்குக்கூட மாற்றப்பட்டுவிட்டது, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தால். எனவே எதையும் மாற்றிவிட முடியும். விவசாயிக்கு எவ்வளவு தொந்தரவுகள் இருந்தாலும் உடனுக்குடன் அதையெல்லாம் பரிசீலனை செய்து மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **ஹாஜி ம.மு. பீர் முஹம்மது:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை, மீனளத் துறை, வனத் துறை மானியக் கோரிக்கைகளின் மீது இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு எனக்கு அனுமதி அளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழிலேயே தங்களுடைய ஆய்வுக் குறிப்புகளையும், கோரிக்கைகளையும் தந்துள்ளதை மனமார வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

நம்முடைய மாநிலத்திலே உள்ள ஏழு மாவட்டங்கள் கடற்கரைப் பகுதிகளைக் கொண்டுள்ளன. வங்காள விரிகுடா, இந்துப் பெருங் கடல், அரபிக் கடல் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட ஆயிரம் கிலோ

மீட்டர் நீளமுள்ள கடற்கரையுள்ளது. 7,90,000 எக்கர் பரப்புள்ள உள்நாட்டு நீர்நிலைகள் குளங்களாகவும், குட்டைகளாகவும், ஏரிகளாகவும் இருக்கின்றன.

கட்டுமரத்தின் மூலமாகவும், நாட்டுப் படகு வழியாகவும், இயந்திரப்படகுகள் மூலமாகவும் 2,05,000 டன் மீன் பிடிக்கப்படுகின்றது என்று இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரங்களின் மூலம் அறியப்படுகின்றது. 3,50,000 மீனவர்கள், 463 உள்நாட்டுக் கிராமங்களிலும், 308 கடலோரக் கிராமங்களிலும் பரவியுள்ளனர். நமது மாநில அரசு இவர்களுடைய வாழ்விலும் வளத்திலும் மிகவும் அக்கறையுடன் உள்ளதைப் பாராட்டுகிறேன்.

எண்ணூரிலே ஜப்பானிய அரசினுடன் கூட்டுச் சேர்ந்து ஆரம்பிக்க இருக்கும் இயந்திரப் படகு கட்டும் தொழிற்சாலையை மத்திய அரசோடு தொடர்புகொண்டு மாநில அரசு விரைவிலே துவக்குவதற்கு ஈடுபடுமானல் இன்னும் அதிகமாக இயந்திரப் படகுகளின் மூலம் மீன் பிடிக்க மீனவர்களை ஊக்குவிக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மீனவர்களுக்கு முன்பு கிடைத்த விசைப் படகுகளின் எண்ணிக்கையைவிட இப்பொழுது குறைவாகத்தான் கிடைக்கின்றன. விலையும் கூடுதலாக இருக்கின்றது என்ற குறைபாடு மீனவர்களுக்கு இருந்துகொண்டு இருக்கிறது. இத்துறையில் அரசு கவனம் செலுத்தி குறைந்த விலையில், கூடுதலான இயந்திரப் படகுகளைக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வப்பொழுது மீனவர்களுக்கு நைலான் நூலும் வலையும் கிடைத்துக் கொண்டிருப்பது உண்மையாக இருந்தாலும் கூட இன்னும் குறைந்த விலையில் நைலான் நூலும், வலையும் கூடுதலாகக் கொடுக்க அரசு முயற்சிக்க வேண்டுகிறேன்.

தமிழகத்தில் உள்ள குளங்களிலும் ஏரிகளிலும் மீன் பிடிக்கும் உரிமையைக் கட்டணமின்றி அவர்கள் பெற்றுக்கொள்ள அனுமதிக்க வேண்டுகிறேன். அப்படிச் செய்வதின் மூலம் ஏழை மீனவர்களுக்கு உதவி செய்ய வேண்டுகின்றேன்.

மலிவு விலையில் மீனவர்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்க கடலோரப் பகுதியில் கூட்டுறவுப் பண்டகசாலைகள் இல்லாத இடங்களில் புதிதாக ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடு அற்ற மீனவர்கள் சங்கடப்படக்கூடிய காட்சியைக் கடலோரப் பகுதிகளில் பார்க்கிறோம். அலைகடலுக்கு மத்தியில் சென்று உணவுப் பொருள் தேவைக்கு உறுதுணையாக இருக்கின்ற மீனவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டும்.

கட்டுமரங்களில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் முறையில் விசைப் படகில் சென்று மீன் பிடிப்போர் ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்கச் செய்ய வேண்டும்.

விசைப்படகு இயந்திரங்கள் பழுதடைவது காரணமாக மீன் பிடிப்பு பாதிக்கப்படுகின்றது. அவற்றைச் செப்பனிடவோ எழுபது மைல் தூரம் வரவேண்டியிருக்கிறது. அதனால் கடற்கரைப் பகுதிகளிலேயே இயந்திரப் படகு இயந்திரங்களை செப்பனிடும் வகையில் சேவா நிலையங்களைத் துவக்கவேண்டும்.

நம்முடைய விவசாயத் துறை வளர்வதற்கேற்ற முறையில் ஹெலிகாப்டர் மூலம், விமானத்தின் மூலம் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கச் செய்வது மிகவும் பயனுள்ள பணி. அதைத் தொடர்ந்து அரசு செய்து வருவதால் சிறப்பாகப் பயிர் பாதுகாப்பு செய்து தரப்படுகிறது. இது பாராட்டத்தக்கது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



மீன்களை உலர வைப்பதற்கு மீனவர்கள் மணலிலே போடுகிறார்கள். நவீன சாதனங்களைக் கொண்டு காய்ந்த மீன்களை உருவாக்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு நம்முடைய அரசு இயந்திர முறையை அறிமுகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்திலே கடானா நதி, ராம நதித் திட்டங்கள் சிறப்பாக நடந்துகொண்டிருக்கின்றன. போதுமான அளவு அரசு அதற்காக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிற நிலையைப் பாராட்டுகிறேன். அதைப்போலவே ஒரு புதிய திட்டமான கருப்பா நதித் திட்டத்திற்கும் 10 லட்ச ரூபாய் ஒதுக்கியிருப்பதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கின்ற பச்சையாறுத் திட்டத்தையும் அரசு அமல்படுத்த வேண்டும். விரைவில் அத்திட்டத்திற்கு உருக்கொடுப்பதின் மூலம் 10 ஆயிரம் எக்கர் நிலம் இருபோக நிலமாக மாற்றப்பட்டு, பிற நிலங்களிலும் இரண்டு போகச் சாகுபடியாக இருப்பது மூன்று போகச் சாகுபடியாக மாற்றக்கூடிய நிலையும் இருக்கின்றது. நாங்குனேரித் தாலுகா பின்தங்கிய பகுதி, அதைப் போக்குவதற்கு இந்தப் பச்சையாறுத் திட்டம் உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உணவுப் பொருள் சுயதேவைப் பூர்த்தி வேண்டுமென்று கூறுகின்ற நமது மத்திய அரசு இந்திய மக்களின் வயிற்றை நிரந்தரமாக அமெரிக்கக் கோதுமைக்கு விட்டுவிடக்கூடிய திட்டம்தான் உரங்களுக்கு அதிக வரி போட்டுள்ளதும், பம்பு செட்டுகளுக்கும் அதிக வரியைப் போட்டிருப்பதும் ஆகும். உணவுப் பொருள்களை அதிகம் உற்பத்தி செய்ய வேண்டும். அன்னிய நாட்டிலே இருந்து இறக்குமதியை நிறுத்த வேண்டும். நம்முடைய மானமும் மரியாதையும் மற்றைய நாட்டவர்களால் பாராட்டவேண்டிய நிலைமையை உறுதிப்படுத்தவேண்டுமானால் விவசாயத் துறையிலே உள்ள உரப் பொருள்களுக்கு வரியை ரத்து செய்து, விவசாயத் தேவையை, உணவுப் பொருள் தேவையைப் பூர்த்தியடையச் செய்ய மத்திய அரசு முயற்சிக்கவேண்டும். இந்த விஷயத்தில் நம்முடைய மாநில விவசாய அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று வரிப்புலி மொரார்ஜி தேசாய் அவர்களைக் கண்டு சட்டமன்ற உறுப்பினர்களுடைய குரலை எடுத்துக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-00

விவசாயத்திற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய பம்ப் செட்டுகளுக்கு வரி விதித்திருக்கிறார்கள். இந்தியாவில் உற்பத்தி செய்கின்ற பம்ப் செட்டுகளில் ஒரு பாதியளவு கோவை மாவட்டத்தில் உற்பத்தியாகிறது. பம்ப் செட்டுகளுக்கு அதிகமான வரி விதித்திருப்பதன் மூலம் தொழில் துறை வாய்ப்புக்கு ஊறு விளைவிப்பதோடு, விவசாயத் துறைக்கும் ஊறு விளைவிக்கிற நிலைமை இருக்கிறது. இதன் காரணமாக மத்திய அரசு, விவசாயிகளுக்கும் நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும் நெருக்கடி நிலையை உண்டுபண்ணியிருக்கிறது. ஆகவே, பம்ப் செட்டுகளுக்குப் போட்டுள்ள வரி நீக்கத்திற்கு நம் அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது விஷயமாக மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு வரி நீக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொதிகைமலைக் காடுகளில் சந்தன மரங்கள் நன்றாக வளர்கின்றன. இவை இயற்கைக் காடுகளாக இருக்கின்றன. செயற்கை முறையில் சந்தன மரக்காடுகளைத் தோற்றுவித்து, மணக்கும் சந்தன மரங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அதன் மூலம் அன்னிய நாட்டுச் செலாவணியைப் பெருக்க முயற்சி எடுத்துக்கொள்ளலாம். அரசு இது விஷயத்தில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளும் விதைப் பண்ணைகளும் சிறப்பாகச் செயல்படுவதன் காரணமாக ஏ.டி.டி—27, ஐ.ஆர்.8, சி.ஏ.எச்.1, எச்.பி.1 ஆகிய ரக விதைகள் மூலமும் நமது விவசாயப்

பொருள் உற்பத்தி உண்மையாகப் பெருகியிருக்கிறது என்பதை மனப் பூர்வமாகப் பாராட்டுகிறேன். உரிய காலத்தில் விவசாயிகளுக்கு அமோக விளைச்சலைத் தரும் வித்துக்களைக் கிடைக்கச் செய்தால் இன்னும் அதிகமான விளைச்சலை நமது விவசாயிகள் தருவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது கால்நடை இனப்பெருக்கத்திற்கு உறுதுணையாக இருக்கவும், விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்கும் உகந்த வகையில் செயற்கை இனவிருத்தி நிலையங்கள் ஆங்காங்கு இருக்கின்றன. அந்த நிலையங்கள் ஆங்காங்கு இருக்கின்றனவே தவிர, எந்தெந்தக் கிராமங்களில் அவை சரியான முறையில் செயல்படுகின்றன என்பது தெரியவில்லை. அங்குள்ள அதிகாரிகள் கிராம மக்களுடைய ஒவ்வொரு இல்லத்திற்கும் சென்று அங்குள்ள பசுக்கள் கரு கொள்வதற்கு உறுதுணையாக இருக்கிற நிலையில் செயல்பட்டு, இனப்பெருக்கத்தை அதிகரிக்க வேண்டும். இதுபோன்ற திட்டங்களை அரசாங்கம் தீவிரப்படுத்த வேண்டும்.

அடுத்து, கோழிப் பண்ணைகளுக்கு அரசு உதவி செய்து, நல்ல ஜாதிக் கோழிகளைக் கொடுத்து அதன் வளர்ச்சிக்குப் பாடுபடுகிறது. கோழிப் பண்ணை மக்களுடைய தேவைக்கு உறுதுணையாகவும் இருக்கிறது என்பதை நான் உணருகிறேன். ஆனால் கோழிக்கு நோய் வந்தால் எப்படித் தடுப்பது என்ற முறை கிராமத்திலுள்ள மக்களுக்குத் தெரிய வில்லை. கோழியை அதிகமாக உபயோகிக்கக்கூடிய, கோழி முட்டைகளை அதிகமாக உபயோகிக்கக்கூடிய, மக்கள் எங்கெங்கு இருக்கின்றார்களோ அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு கோழிக்கு வருகின்ற நோயை எப்படித் தடுப்பது, எந்த முறையில் அதிக முட்டைகளைப் பெறுவது, எந்த முறையில் கோழிகளைப் பாதுகாப்பது என்பதைச் சொல்லிக் கொடுக்கும் பயிற்சி நிலையங்களை அரசு ஏற்படுத்தித் தரவேண்டும். இந்தப் பயிற்சிக் கூடங்கள் பலவகையிலும் நல்ல பலன் உள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களது மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. அந்தோணி ஐ. ஏ. எஸ்., அவர்கள் நம்முடைய வீட்டுத் தோட்டங் களில் முருங்கை, கொய்யா, தென்னை, காய்கறிச் செடிகள் ஆகியவற்றை வைத்து வளர்ப்பதன்மூலம் உணவுப் பொருள் பெருக்கத்தையும், வருவாயையும் பெருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கினார்கள். அவர்களுடைய குறுகிய பதவிக் காலத்தில் முருங்கை, கொய்யா, பப்பாளி, மற்றும் காய்கறிச் செடிகளை தம்முடைய வீட்டுத் தோட்டங்களில் பயிராக் குவதற்கு ஊக்குவித்தார்கள். இதுபோன்ற திட்டத்தை பிற மாவட்டத் திலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கைக்கொண்டு நிறைவேற்றினால் பயனுடையதாக இருக்கும்.

கிணறு தோண்டப்படும் இடங்களில் பாறை வந்தால், அந்தப் பாறையை அகற்றுவதற்கு கரு மருந்து தேவைப்படுகிறது. அந்த கரு மருந்து வைத்துப் பாறைகளை உடைப்பதில் சிரமம் ஏற்படுகிறது. அப் படிப்பட்ட இடங்களில் கரு மருந்து உபயோகிப்பதற்குப் பதிலாக டைனமைட் கொடுத்து பாறைகளை உடைக்கலாம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

சமுதாயக் கிணறுகள் என்று இருப்பதைப் போல சமுதாய நாற்றங்காலையும் அரசு உருவாக்கித் தந்தால் தண்ணீர் கிடைத்தவுடனே நாற்றை நட்டு, குறுகிய காலப் பயிரை விளைவித்து, உணவுப் பெருக் கத்தை அதிகப்படுத்த முடியும் என்பதையும் கூறிக் கொள்கிறேன். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய திறமையான நிர்வா கத்தினால் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் மழைப் பஞ்சத்திலும் உணவுப் பஞ்சம் ஏற்படாத நிலை இருக்கிறது. அந்த நிலையை இறைவன் என் றென்றும் பாதுகாத்து, கடல் வளமும், மலை வளமும், நீர்வளமும் பெருகி, இந்நாட்டு மக்கள் நல்வாழ்வு பெற அருள்புரிய வேண்டு மென்று பிரார்த்தித்து, என்னுடைய உரையை நிறைவுபடுத்தி அமர்கிறேன்.





* **திரு. ஆ. கோவிந்தராசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழக அரசு செய்துவரும் சாதனை என்னவென்று எண்ணிப்பார்த்தால், விவசாயிகளுக்கு எந்த நேரத்தில் உரம் தேவைப்படுகிறதோ, அந்த நேரத்தில் விவசாயிக்குத் தேவையான உரம் விவசாயியைத் தேடிக்கொண்டு அவனுடைய நிலத்திலே வந்து விழுகிறது. இந்த முறையைத்தான் தமிழக அரசு கடைப்பிடித்து வருகிறது. இதன் காரணமாக உற்பத்திப் பெருக்கம் அதிகமாக ஏற்பட் டிருக்கிறது.

அடுத்தப்படியாக, விவசாயிகள் கிணறு தோண்டுவதற்காகக் கடன்கள் தரப்படுகின்றன. விவசாயிகள் 5 எக்கர், பத்து எக்கர் நிலம் வைத் திருந்தால் அவர்கள் கிணறு தோண்டுவதற்கான கடன்கள் கொடுக்கப் படுகின்றன. ஆனால் கால் எக்கர், அரை எக்கர் நிலம் வைத்திருப்ப வர்களுக்கு இந்த கடன் தொகை வழங்கப்படுவதில்லை, சலுகை அளிக்கப் படுவதில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு இதழில் இதைப்பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். "5 எக்கர், 10 எக்கர் நிலம் இருக்கும் இடத்திலே கட்டாயமாக ஒரு கிணறு அமைக்கப் படவேண்டும்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள். பூச்சிகளை அழிப்பதற்காக அரசாங்கமே முன்வந்து மருந்தை தெளிப்பதுபோல, அரசாங்கமே விவசாயிகளுக்குக கிணறு வெட்டிக் கொடுத்து, அந்தக் கிணற்றுக்குக் கொடுக்கவேண்டிய கடன் தொகையை எக்கருக்கு இவ்வளவு என்று சர்க்காரே வசூல் செய்துகொள்ளலாம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதைச் செய்தால் விவசாயிகள் மேட்டூர்த் தண்ணீரையும், வானத்திலிருந்து பெய்யும் மழையையும் எதிர்பார்க்காமல் விவசாயத்தைச் செய்துகொள்ளமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிதம்பரம் வட்டத்தில் இரு போகம், மூன்று போகம், நான்கு போகம் என்று சொல்லக்கூடிய அளவில் விவசாயிகள் நல்ல ஊக்கத் தோடு செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகளுக்கு, இரண்டு போகம், மூன்று போகம் என்று விளைவிக்கக்கூடிய விவசாயி களுக்கு வரிவஜா செய்துகொடுத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கால்நடை அபிவிருத்தி அலுவலர்கள் முதல் நிலை, இரண்டாம் நிலை என்ற தகுதியில் வேலைசெய்து வருகிறார்கள். இரண்டாம் நிலை தகுதியில் உள்ளவர்கள் சுமார் எட்டு ஆண்டுக் காலம் பதவி வகித்து, அனுபவம் பெற்றவுடன் அவர்களுக்குத் தகுந்த முறையில் பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டும். அவர்கள் முதல் நிலை அலுவலர்களாக மாற்றப்பட வேண்டும். நீண்டகாலமாக இந்தக் கோரிக்கை சொல்லப்பட்டு வருகிறது. எட்டு ஆண்டுக் காலம் வேலைசெய்து அனுபவம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட வேண்டும். அரசாங்கம் இவர் களுடைய பதவி உயர்வு கோரிக்கை விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, கூட்டுமன்றத்திலே இருக்கின்ற விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் அலுவலகத்தில் இருந்துகொண்டு, கிராம நல ஊழியர்களைக் கொண்டு விவசாய வேலைகளைக் கவனித்துக்கொண்டு வருகிறார்களே தவிர, தான் கிராமம் கிராமமாகச் சென்று நேரடியாக வேலைகளைப் பார்வையிடுவது இல்லை. எந்த நேரத்தில் பூச்சி மருந்து தெளிக்க வேண்டும், எந்த நேரத்தில் பயிருக்கு உரமிட வேண்டும் என்ற நிலைமைகள் எல்லாம் கிராமங்களிலே இருக்கும் விவசாயிகளுக்குத் தெரியாது. விவசாய அபிவிருத்தி அதிகாரி கிராமங்களுக்கு நேரடி யாகச் சென்று நிலத்தைப் பார்வையிட்டு, அந்த நிலத்திற்கு இன்னது செய்யவேண்டுமென்று சொன்னால், விவசாயிகள் நல்ல முறையில் பயிரிட்டு, நமது அரசுக்கு வேண்டிய உணவைக் கொடுப்பதற்குக் காத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தம்மை ஒரு விவசாயி என்று சொல்லிக்கொண்டார். இந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற அத்தனை பேர்களும் விவசாயிகள்தான். நேரிடையாக விவசாயம் செய்கிறவர்கள். ஆகவேதான் வாங்கிச் சாப்பிடுகிறவர்களின் நிலையைக் கருதாமல் விலையை அதிகப்படுத்துவது கூடாது என்று நாங்கள் சொல்கிறோம். உணவுப் பொருள் எல்லோருக்கும் தேவைப்படுகிறது. ஆகையால்தான் விலையை ஏற்றக் கூடாது என்று நாங்கள் சொல்லுகிறோம். விவசாயிகள் என்று சொல்லிக்கொண்டு நேரிடையாக விவசாயத்தில் ஈடுபடாதவர்கள் விவசாயிகள் அல்ல. நேரிடையாக விவசாயத்தில் ஈடுபடுகிற விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக ஆக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் கேட்ட உணவுப்பொருளைத் தரத் தயாராக இருக்கிறார்கள் என்று கூறி விவசாயத்திற்கு அதிகப் பணம் ஒதுக்கித் தந்த தமிழக அரசைப் பாராட்டி இன்னும் அதிகமாக ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன் வணக்கம்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். பொதுவாக விவசாயிகளுடைய நிலை என்ன, அதிலே சிறுநிலக்காரர்களுடைய நிலை என்ன என்பதை பிற்காலத்தை மனதில் கொண்டு நிர்மாணிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இன்றைக்கு கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் வரைக்கும் நாம் விவசாயிகளுக்கென்று பற்பல நிறுவனங்களின் மூலமாகக் கொடுக்கிறோம். இந்த 20 கோடி ரூபாய்க்கு ஏற்ற பயன் கிடைக்கிறதா என்பதை நாம் பார்க்க வேண்டும். அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாகக் கொடுக்கப்படுகிற கடன் சாதாரண சிறு நிலச்சுவான்தார்கள் வாங்கக் கூடியது அல்ல. ஐந்து ஏக்கர், பத்து ஏக்கருக்கு மேல் நிலம் உள்ளவர்களால்தான் வாங்க முடியும். இது ஒரு பக்கம் இருந்தாலும் கிணறு வெட்டுவதற்காகவும், ஆழப்படுத்துவதற்காகவும் அதிகாரிகளைக் கொண்டு கடன் கொடுக்கிறார்கள். கிணறு வெட்டுவதற்கோ, ஆழப்படுத்துவதற்கோ கொடுக்கப்படுகிற பணம் போதுமானதாக இருக்கிறதா என்றால் கிடையாது. நாம் இந்த ஆண்டு இந்த மாவட்டத்திற்கு இவ்வளவு கிணறுகள் வெட்டப் பணம் கொடுப்பது என்று தீர்மானித்து விடுகிறோம். அதிகாரிகள் தங்களுக்கு வேண்டியவர்களை எல்லாம் கூப்பிட்டு கிணறு வெட்டக் கடன் தருகிறோம், பெற்றுக்கொள்ளுங்கள் என்கிறார்கள். அடுத்த வருஷம் பெண் கல்யாணம் பண்ணவேண்டுமென்று இருப்பான் அல்லது வேறு செலவுக்கான காரியம் இருக்கும், அவனும் வாங்கி விடுவான். யார் மீதும் தப்பு சொல்வதற்காகச் சொல்லவில்லை. சூழ்நிலை எப்படி இருக்கிறது என்பதைத்தான் சொல்கிறேன். அதற்கு இதற்கு என்பதாகக் கடன் வாங்கிவிடுகிறான். கடைசியில் என்ன நடக்கிறது என்றால் கிணறு வெட்டவோ, ஆழப்படுத்தவோ இந்த இரண்டாயிரம், மூவாயிரம் போதுவதில்லை. முன்னாள் முதல் அமைச்சர் அவர்களே சொன்னார்கள். கோயம்புத்தூர் மாவட்டத்தில் எண்பது அடி, தொண்ணூறு அடி என்று கிணறு எடுக்கவேண்டும். மேல் மண்ணை எடுப்பதற்கே இந்தப் பணம் போதாது. அதுவும் மூன்று வருடங்களாக மழை கிடையாது. என்ன செய்வது? கொடுத்த கடனைத் திரும்ப வசூல் செய்ய முற்படுகிறபோது விவசாயிகள் நிலத்தை விட்டே ஓடவேண்டிய நிலை இருக்கிறது. கிராமத்தில் வேலை இல்லை என்று பட்டணத்திற்குச் சென்று விடுகிறார்கள். ஒரு பக்கம் தொழிற்சாலைகள் வளருகின்றன. இப்படி சிறுநிலக்காரர்கள் நிலத்தை விட்டு ஓடுகின்ற நிலைதான் இருக்கிறது. பெரிய மிராசுதார்கள் என்றால் டிராக்டர்கள் வாங்கி வைத்துக்கொள்கிறார்கள். நவீன இயந்திரக் கருவிகளைப் பயன்படுத்தி ஓரளவுக்கு வெற்றிகரமாக நிற்கிறார்கள். நிலத்தை விட்டு ஓடாதிருக்க சிறுநிலக்காரர்கள் பெரிய மிராசுதார்களையே அண்டி இருக்க வேண்டியிருக்கிறது. விவசாயத்திற்கு கிராமங்களில் ஆள் கிடைப்பதில்லை. ஆக பெரிய நிலக்காரர்களையே சிறுநிலக்காரர்கள் அண்டியிருக்கவேண்டியதாக இருக்கிறது.



இதை எல்லாம் அரசாங்கம் உணர்ந்து நாம் இதற்காக ஒதுக்குகிற 20 கோடி ரூபாய் முழுமையும் பயன்படக்கூடிய அளவில் அக்ரோ சர்வீஸ் கார்ப்பரேஷன் என்று வைத்து அதன் மூலமே கிணறு வெட்டிக் கொடுப்பது, டிராக்டர் வாங்கி வாடகைக்கு விடுவது, உரம் கொடுப்பது போன்ற காரியங்களைச் செய்யவேண்டும். சமுதாயக் கிணறுகளையும் இந்த அக்ரோ சர்வீஸ் கார்ப்பரேஷன் மூலம் வெட்டிக் கொடுக்கவேண்டும். இப்படிச் செய்தால் எல்லா விவசாயிகளுக்கும் நன்மை ஏற்படாதா என்பதைக் கருதி இதில் ஆழ்ந்த பரிசீலனை செய்யவேண்டுமென்பது என் கருத்து.

இன்னும் குளங்கள், மலைகள் போக மாநிலத்தில் உள்ள நஞ்சை நிலங்கள் எவ்வளவு, புஞ்சை நிலங்கள் எவ்வளவு, எந்த எந்த இடங்களில் என்ன என்ன பயிர் வைக்கவேண்டும் என்பது பற்றி விரிவான படமே தயார் செய்துவிடவேண்டும். அந்த சார்ட்டைப் பார்த்தே எந்த இடத்தில் கரும்பு, எந்த இடத்தில் புகையிலை, எந்த இடத்தில் நெல் பயிரிடப்படவேண்டும், பயிரிடப்படுகிறது என்பதை உணர்ந்துகொள்ளலாம். எகிப்தில் இப்படித் தயாரித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இத்துறையிலும் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. இ. பழனி:** தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நானும், எனது தொகுதி மக்களும் பாதாரவிந்த அஞ்சலியைச் செலுத்தி என் தொகுதிபற்றிய இரண்டொரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம் ஓமலூர் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. இரண்டு பருவ மழை தவறிவிட்டதன் காரணமாக மக்கள் தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே நமது அரசு உடனடியாகத் தண்ணீர் வசதியை அந்தப் பகுதியில் ஏற்படுத்திக்கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய ஓமலூர் தொகுதியில் தொப்பையாறு அணை கட்டி ஓமலூர் பகுதியில் 1,500 ஏக்கரா நிலங்களுக்கும், தர்மபுரி மாவட்டத்தில் 500 ஏக்கரா நிலங்களுக்கும் பாசன வசதி கொடுத்து ஏழை விவசாயிகளுக்கு பயன் அளிக்குமாறு நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய ஓமலூர் தொகுதியில் உள்ள ஏழை விவசாய மக்கள் பருவ மழை இல்லாததன் காரணமாக மாடு, கன்றுகளை எல்லாம் விற்கும் நிலைமை ஏற்பட்டு அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். நம்முடைய அரசு அவர்களுடைய நிலையைக் கருதி கடன்களை வசூல் செய்வதைத் தள்ளிப் போட வேண்டுமென்றும், நிலவரி வசூலிப்பதை ரத்து செய்யவேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன். 19-12-1968 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களிடம் என்னுடைய தொகுதி நிலைமையைப் பற்றி எடுத்துச் சொன்னேன். 29-12-1968-ல் நான் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு என்னுடைய தொகுதியைச் சுற்றிக் காண்பித்தேன். அவரும் ஏரிகள், குளங்கள் எல்லாம் தண்ணீர் இல்லாமல் வற்றிக் கிடக்கின்ற நிலைமையை நன்றாகப் பார்த்தார். ஆகவே, அந்தப் பகுதியைப் பஞ்சப் பிரதேசமாக அறிவித்து நியாய விலைக் கடைகளை எல்லாம் திறந்து ஏழை மக்களுடைய கண்ணீரைத் துடைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி காட்டுப் பகுதியில், மலைப் பகுதியில் இருக்கிறது. ஏழை விவசாயிகள் செல்வதற்கு ரோடு வசதி இல்லை. மருத்துவமனைக்கு அவசரமாகச் செல்ல வேண்டுமென்றாலும் ரோடு வசதி இல்லாது அந்த மக்கள் தவிக்கிறார்கள். டேனிஷ்பேட்டையிலிருந்து மோலூருக்கு ஒரு ரோடு பாதை அமைத்துத்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கேதநாயக்கன்புதூர், ராமகிருஷ்ணநகர், கணவாய்புதூர், வடவம்பட்டி, வேப்பிலை கிராமம், காடையாம்பட்டி, தேக்கம்பட்டி, வெள்ளாளப்பட்டி ஆகியவை வறண்ட பகுதிகள். மழை இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். அவர்களுடைய கண்ணீரைத் துடைக்க நம்முடைய அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள மக்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள். அங்கு இன்னும் பலருக்கு வீட்டு மனை வழங்கப்படாத நிலைமை இருக்கிறது. பசினம்பட்டியில் 1952-ல் சர்வே செய்யப்பட்டது தடைப்பட்டு நின்று விட்டது. நம்முடைய அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து அந்த மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஓமலூர் டவுனில் தண்ணீர் இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். தாய்மார்கள் பல மைல்கள் நடந்து சென்றாலும் தண்ணீர் கிடைக்காத நிலைமைதான் இருக்கிறது. ஓமலூர் குடிதண்ணீர்த் திட்டத் திற்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தார்கள். அது பற்றாக்குறையாக இருக்கிறது. ஆகவே, மேலும் இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கி தண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஓமலூர் மருத்துவ மனையில் தற்போது 10 படுக்கைகள்தான் இருக்கின்றன. அதை விரிவுபடுத்த வேண்டுமென்று கடந்த இரண்டு ஆண்டுகளாக கேட்டுக் கொண்டு வருகிறோம். அதை விரிவாகக் கட்டி 20 படுக்கைகளையாவது அதிகப்படியாகச் சேர்த்து நோயாளிகளின் கஷ்டத்தைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டது).

* **திரு. அ. மாரிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தனை நாட்களாக இந்த அவையிலே விவாதத்திற்கு வந்த எல்லா மானியங்களையும் விட மிகச் சிறந்த வேளாண்மை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இதிலே, வேளாண்மைத் துறையிலே அக்கறை கொண்ட உறுப்பினர்கள் அதிகமாகப் பேசியிருக்கிறார்கள். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரை உணவு நெருக்கடி நம்மை நாடிக் கொண்டி ருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். விவசாய உற்பத்தியாளர்களுடைய பொருளாதாரத் துறையை எந்த முறையிலே ஆய்வு செய்து பார்த்தாலும் அவர்கள் பொருளாதாரத் துறையிலே கீழ்நிலையிலேயேதான், குறைவான நிலையில்தான் இருந்து கொண்டிருக் கிறார்கள் என்பது உண்மையாகும். அதைப் போன்றுதான் இந்த வேளாண்மைத் துறை மானியத்தின் மீது பேசுவதற்குக்கூட அங்கத் தினர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றேன். இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால் இந்த அவையிலே காவல் துறை மானியத்தின் மீது அத்தனை அங்கத்தினர்களும் எந்த அளவுக்குப் பங்கு கொண்டு மிக மிகப் பரபரப்பாகவும், ஆர்வமாகவும் இருந்தார்களோ அந்த அளவுக்கு விவசாயத் துறையிலே பங்கு கொள்ளவில்லை. இந்த அவை கூடுமுன்னே மணியடித்துத்தான் அங்கத்தினர்களை அழைக்கக் கூடிய நிலை இருந்தது. அந்த அளவுக்குத்தான் விவசாயிகள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை நமது மாநில அரசு அதிகமான சலுகைகளைக் காட்டி வருகிறார்கள் என்று ஒரு சில அங்கத்தினர்கள் பேசியதை நான் கண்ணுற்றேன். நமது தமிழ்நாடு இன்று இருக்கக்கூடிய நிலைமையில் ஓரளவு தஞ்சை மாவட்டந்தான் உணவு உற்பத்தியிலே ஏற்பட்ட குறைவை ஈடு செய்திருக்கிறது என்பதை இங்குள்ள அத்தனை உறுப்பினர்களும், குறிப்பாக அமைச்சர்களும் அறி வார்கள். அதற்காக அந்தப் பகுதி விவசாயிகளுக்கு நன்றி கூறுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். வேளாண்மைத்துறை அமைச்சர் தஞ்சைப் பகுதியில் சுற்றிப் பார்த்தவண்ணமாக இருக்கிறார்கள். நான் ஒருசில விஷயத்தை இந்த அவையிலே சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதி தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்காக எவ்வளவோ சலுகைகள் வழங்கப்படுகின்றன என்றெல்லாம் பேசியிருக் கிறார்கள். இன்னும் அங்கத்தினர்கள பேச இருக்கிறார்கள்.



சென்ற ஆண்டில் டிராக்டர்கள் வழங்கி இருக்கிறார்கள். அந்த டிராக்டர்கள் எத்தகைய விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டன என்பதை இந்த அவையிலே இருப்போர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 'தின்ற வயிற்றுக்குச் சோறு, மொட்டைத் தலைக்கு எண்ணெய்,' என்ற பழமொழிதான் எனக்கு நினைவுக்கு வருகிறது. பணம் படைத்தவர் களுக்குத்தான் டிராக்டர்கள் எல்லாம் கிடைத்திருக்கின்றனவே தவிர, ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன். அதி தீவிர சாகுபடித் திட்டத்திற்கு நிறைய உரம் தேவைப்பட்டநேரத்தில் கிடைக்கவில்லை என்று கூறிய நேரத்தில் நிறைய உரம் தேவையான அளவுக்கு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

அதற்கு ஒரு காரணம் உண்டு. சென்ற நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் வானம் பொய்த்து மேட்டூர் நீர்த்தேக்கம் நிறையாததால் உள்ளபடியே தஞ்சை மாவட்டத்தில்கூட சரியானபடி நெல் விளையவில்லை. அதையொட்டி நாணய சங்கங்கள் மூலம் விவசாயிகள் வாங்கிய கடன் களைத் திருப்பித் தரமுடியாத நிலைபற்றி நாம் எல்லோரும் அறிவோம். அந்த கடன்களை திருப்பித் தரமுடியாத விவசாயிகள் அத்தனைபேர்களும் இன்று கடன் பெறக்கூடிய சலுகையை இழந்திருக்கிறார்கள். அந்த முறை நீடித்தால் தஞ்சை மாவட்டத்தில்கூட அதி தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் அபிவிருத்தியை நாம் அடையமுடியாது. பற்றாக்குறை காரணமாக பாதாள நீரை பம்ப் செட்ஸ் மூலம் எடுதது பயிர் விளைவிக்க நிறைய வடிமுனைக் குழாய்கள் அமைத்துத் தரப்பட்டன. நிலம் படைத்தவர்களுக்குத்தான் அந்தச் சலுகை கிடைத்தது. 15% உள்ள வர்களுக்குத்தான் அந்தச் சலுகை கிடைத்தது. 85% உள்ளவர்களுக்கு அந்தச் சலுகை கிடைக்கவில்லை. அதி தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் 15% அளவில்தான் அபிவிருத்தி செய்ய எண்ணியிருக்கிறார்களா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அதி தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் அங்குள்ள விவசாயிகளுக்கு, குத்தகை சாகுபடிதாரர்களுக்கு 250 ரூபாய் கடன் வழங்குகிறார்கள். ஒரு சாகுபடிதாரரை நம்பி வடிமுனைக்குழாய்கள் அமைத்துத் தருவதற்கில்லை என்றால் கூட்டுறவு முறையில் கூட்டுப் பண்ணையாக ஐந்தாறு விவசாயிகளுக்கு சேர்ந்து ஒரு வடிமுனைக்குழாய் அமைத்துக் கொடுக்க முன்வந்தால் அது சாலச்சிறந்ததாக இருக்கும்.

* **திரு. வி. எஸ். இளஞ்செழியன்:** துணைத் தலைவர் அவர்களே, 1969–70-ம் ஆண்டுக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இயற்கை நமக்குப் பெரிய அளவில் பாதகமாக இருந்துவந்திருக்கிறது. அப்படி இயற்கை நமக்குப் பாதகமாக இருந்திருந்தும்கூட அமைச்சர் அவர்களும், அந்த இலாகாவினரும் எடுத்துக்கொண்ட பெரு முயற்சிகளின் காரணமாக நாம இயற்கையை வெல்லுகிற வகையில் ஓரளவிற்கு திங்கட்கிழமை விரதத்தையும், வியாழக் கிழமை விரதத்தையும்கூட மாற்றியிருக்கிறோம். அந்த இலாகாவினர் சென்ற இரண்டு ஆண்டுகளாக நல்லமுறையில் பணியாற்றி வந்திருக்கி றார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

அப்படி இயற்கையை எதிர்த்துப் போராடியிருக்கும் இந்த அரசைப் புறக்காட்டச் செய்கிற வகையில் மத்தியப் பேரரசு. இன்றையதினம் உரத்தின் பேரில் 10% வரி விதித்திருக்கிறார்கள். உணவுத் தானியத்தின் விலையை ஏற்றவேண்டுமென்று கேட்கிற பெரியவர்கள், விவசாயிகளின் பேரில் அக்கறை இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் பெரியவர்கள், விவ சாயிகளுக்காக அரசியலுக்கு அப்பாற்பட்டுகூட இயங்கத் தயார் என்று கூறும் பெரியவர்கள், அக்டோபர் 2-ம் தேதி சட்டம், அமைதி, ஒழுங்கிற் காக அவற்றை நிலைநிறுத்துவதற்காக போராட்டம் நடத்தப்போகிறோம் என்று சொன்னார்கள். அப்போராட்டத்திற்கு நிச்சயமாக பொதுமக்களின்

ஆதரவு இருக்காது. இன்றையதினத்தில் லட்சோபலட்சம் விவசாயப் பெருமக்களின் உள்ளங்களில் இடம் பெறவேண்டுமென்றால், உண்மையாகவே விவசாய பெருங்குடி மக்களுக்காக வேண்டிப் போராடுகிறார்கள் என்றால் அப்படி நடத்த இருக்கும் போராட்டத்தை மத்தியப் பேரரசை எதிர்த்து நடத்தினால் தமிழகத்தில் அவர்களுக்குப் பிற்காலத்திலாவது ஒரு நல்ல காலம் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு, ஒரு போகத்தை இருபோகமாக்கியும், இருபோகத்தை முப்போகமாகவும் ஆக்கி, மழை குறைந்திருந்தும்கூட விரதங்களை எல்லாம் ஓரளவிற்கு நீக்கியிருக்கிறது. நம்மை புறங்காணச் செய்கிற வகையில் இன்றையதினம் மத்தியப் பேரரசு பெரிய அளவில் வரிகளை விதித்திருக்கிறார்கள். இன்றையதினம் விவசாய மக்கள் உரம் இல்லாமல், உரங்களைப் பயன்படுத்தாமல் விவசாயம் செய்யமுடியும் என்பதில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு விவசாயிக்கும் இன்று உரங்கள் தேவைப்படுகின்றன. இந்த உரத்தின்மீது போடும் வரி உயர்வு விவசாயிகளுக்கு ஒரு பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனக்கு முன் பேசியவர்கள் பம்ப் செட்களுக்கு போடப்பட்டிருக்கும் வரிபற்றி குறிப்பிட்டார்கள். முதலில் மழையை நம்புகிறோம். அது பொய்த்துவிட்டால் பம்ப் செட்களை நம்புகிறோம். ஆக உரத்திற்கும், பம்ப் செட்களின்மீதும் இன்று அதிகப்படியாக வரிகள் திரு மொரார்ஜிதேசாய் அவர்களால் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, நம் விவசாய மக்களின் உள்ளங்களில் நீங்கள் இடம் பெறவேண்டுமென்றால் உங்கள் போராட்டம் நிச்சயமாக இருக்கட்டும், ஆனால் அப்போராட்டம் விவசாயிகளுக்காக என்று இருக்கட்டும்.

அடுத்து, போன தடவை கூட இந்த விவசாய மானியக் கோரிக்கையின் மீது பேசியபோது குறிப்பிட்டிருக்கிறேன். கோவை ஜில்லாவில் இருக்கிற தாளவாடி பிர்க்காவிற்கு மிகப் பெரிய அளவில் சலுகை செய்கிறார்கள். அதை வேண்டாம் என்று சொல்லவில்லை. இந்த அரசால் பரிந்துரைக்கப்பட்டு மத்தியப் பேரரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பின்தங்கிய பிரதேசமாகிய புதுக்கோட்டைக்கும் அந்தச் சலுகையைச் செய்யுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டையும் பக்கத்திலுள்ள மணப்பாறை தாலுகாவும் வறண்ட பிரதேசங்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். தாளவாடி பிர்க்காவிற்கு அதிகபட்ச மானியமாக ரூ. 1,500 கொடுப்பதுபோல் எங்களுக்கும் அதிகபட்ச மானியமாக ரூ. 1,500 கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கால்வாய்ப் பிரச்னை. ஒன்று காவிரியில் இருந்து தண்ணீர் விடுங்கள் அல்லது அமராவதியில் இருந்து கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இது 1962-ல், 1957-ல். ஏன் 1952-ல் கூடப் பாராளுமன்றத்தில் மதிப்பிற்குரிய திரு. வல்லத்தரசு அவர்களால் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. கால்வாய் பிரச்னை புதுக்கோட்டை மக்களின் உயிர்ப்பிரச்னையாகும். அதைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செம்மறி ஆடுகளை விருத்தி செய்யும் விஷயத்தில் கொடுக்கப்படும் மானியம் எங்கள் பகுதிக்கும் தரப்படவேண்டும்.

அடுத்து, என் தொகுதியைப் பொறுத்தவரையில் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பாகவே மின் இணைப்பு கேட்டவர்களுக்குக் கூட இன்று மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருக்கிறது. 100 வீடுகளுக்கு மின்சாரம் கொடுக்கவில்லை என்றால் கூடப் பரவாயில்லை, ஒரு கிணறுக்கு மின் கனெக்ஷன் கொடுக்கப்படவேண்டும். எங்கள் பகுதியைப் பொறுத்த வரையில் மின் இணைப்பு கொடுக்காமல் காலம் தாழ்த்தி இருக்கிறார்கள். மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கிருப்பதால் அதைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். எங்கள் பகுதிக்கு விரைவில் தக்கவிதத்தில் மின்சார இணைப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையில் களர் நிலங்களைக்கூட மேய்ச்சல் நிலங்கள் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். களர் நிலம் என்றால் அங்கு புல் கூட முளைக்காது. இரண்டொரு இடங்களில் மரங்கள் இல்லாத முள் செடிகள் உள்ளன.



இடங்கள் கூட காட்டு இலாகாவினிடம் இருக்கிறது. கொளத்தூர் தாலுகாவில் ஆம்பூர்பட்டி என்ற இடத்தில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் ஒப்படிப்பட்ட பூமி இருக்கிறது. அங்குள்ள மக்கள் பர்மா அகதிகளை விட மோசமானதொரு நிலையில் இருக்கிறார்கள். அந்த மக்களுக்கு அந்த நிலங்களைக் கொடுத்து உணவு உற்பத்தி செய்ய முயற்சிக்கலாம். ஆக கோவையில் உள்ள தாளவாடி பிர்க்காவிற்குக் கொடுக்கப்படும் சப்ஸிடியைப்போல் புதுக்கோட்டைக்கும், மணப்பாறைக்கும் தரவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

**திரு. ஏ. ஆர். கப்பையா முதலியார்** : தலைவரவர்களே, வேளாண்மைத்துறை மானியத்தின் மீது சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு, வேளாண்மைத் துறை நிர்வாகத்தை சீரமைப்பு செய்வதாகத் தெரிகிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதில் மேலதிகாரிகளை அதிகப்படுத்துவது அவ்வளவு உசிதம் அல்ல என்று தெரிவித்துக்கொள்கின்றேன். அதிகப்படியான 'ஃபீல்ட் ஒர்க்கர்ஸ்' தான் தேவை. ஆனால் அது இன்று இல்லை. அதற்குமேல் இன்ஸ்பெக்ஷன் ஆபீசர்ஸ் தேவை. அவர்கள் இருந்தால்தான் விவசாயம் அபிவிருத்தி அடைய வழியேற்படும். மற்ற இலாகாக்களின் நிர்வாகம் தனித்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த இலாகா தனித்துச் செயல்படாத காரணத்தினால் சங்கடங்கள் இருக்கின்றன. இந்த இலாகாவையும் தனித்துச் செயல்படுத்தினால் அதிக உற்பத்திக்கு வழியேற்படும் என்பதை என்னுடைய சிறிய அனுபவத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். பஞ்சாயத்து யூனியன்கள் ஆரம்பித்து பத்து வருஷங்கள் ஆகின்றன. இது இணைக்கப்பட்டு, 'ட்யூவல் கன்ட்ரோல்', இரண்டு அதிகாரிகளின் பொறுப்பில் இருப்பதால் யாரிடம் பொறுப்பிருக்கிறது என்று தெரியாமல் அதைச் செயல்படுத்தக் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால், மற்ற இலாக்காமாதிரி இதையும் தனித்து இயங்கக்கூடிய நிலையில் செய்தால் அபிவிருத்தி அடையும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இதை சிந்திக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. ஏனென்றால் ஆரம்பித்து 10 வருஷங்களாகியும் செயல்படக்கூடிய நிலை இல்லை. நிர்வாக இணைப்புச் சரியாக இல்லாததால் அந்த இலாகா அதிகாரிகள் உற்சாகக் குறைவாக இருப்பதாக தெரிகின்றது. அனுபவத்திலும் அம்மாதிரியே இருக்கிறது.

இதுபோக, பொறுக்கு விதை சம்பந்தமாக நன்றாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏ.டி.டி. 27, ஐ.ஆர். 8, ஐ.ஆர். 5 எல்லாம் நல்ல அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. ஆனால், இப்பொழுது வேறு வழியில் நம் எண்ணத்தைத் திருப்ப வேண்டியதாயிருக்கிறது. தண்ணீர்த் தட்டுப்பாடு, மழைக் குறைவு முதலிய நிலைமைகள் இருக்கின்றன. இதற்குத் தகுந்தாற்போல் வித்தை நாம் தயார் செய்யவேண்டும். இன்று குறைந்த தண்ணீர் வைத்து விளையக்கூடிய 'செமி ட்ரை பேடி வகைகள்', பொறுக்கு விதைகளை, மொழி கருப்பு, வங்கி, பவழச்சா, மூங்கில்சம்பா, புனுகு விரட்டி போன்ற பல வித்துக்கள் இருக்கின்றன. ஐந்துவருஷம் மழையில்லாவிட்டாலும் நாங்கள் உற்பத்தி செய்கிறோம், குறைந்த தண்ணீரை வைத்து. செமி ட்ரை பேடி வைத்து உற்பத்தி செய்கிறோம். அதற்கு பொறுக்கு வித்துக்களைத் தயார் செய்யத் திட்டம் தேவை. இன்று பருவ மழை மறுபடியும் வரும் என்று எதிர்பார்க்கிறோம். உலகம் பூராவும் பருவமழை குறைந்து வரும் நிலை வந்துவிட்டது. ஆகவே, குறைந்த தண்ணீரில், அதிக விளைச்சல் வரக்கூடிய ஒரு நெல் உற்பத்தி செய்வதற்கு பொறுக்கு விதை தயார் செய்ய வேண்டும். அதற்கு நாம் திட்டங்கள் வகுத்தால் தான் வாழ முடியும் என்று நான் நினைக்கிறேன். ஐ.ஆர்.8கூட நேற்று அறுப்பு ஆகியிருப்பதாகத் தெரிகிறது. மேனி தெரியவில்லை. ஐ.ஆர்.8 மேனி வரக்கூடிய நிலைமை இருக்கிறது. தண்ணீர் குறைவாகயிருந்தால் புதிய நெல்லில் விளைச்சல் வருமா என்று கவனிக்க வேண்டும். இதற்காகத் தீவிரமாக, வேகமாகச் செயல்பட்டால்தான் நாம் வாழ முடியும். ஒரு போகத்தை இரு போகத்திற்குக் கொண்டு வரலாம். எப்படியென்றால், பொறுக்கு விதையில்,

சாமித்தேட்டை, தண்ணீர் குறைவாகயிருந்தாலும் பலன்தரக்கூடிய விதை. அத்தகைய வித்துக்களைத் தயார் செய்ய இலாக்கா முனைய வேண்டும். நானும் 10 வருஷங்களாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். பொறுக்குவிதையைத் தயார் செய்ய வழியெடுக்கவில்லை. சாமித்தேட்டை உடனடியாக இதுசம்பந்தமாக முயற்சி எடுக்க வழிவகை காணவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, விதை விநியோகம். விதையினுடைய தொகையிலும் இடத் திற்குத் தகுந்தாற்போல் மாறுதல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. காரணம், விதைப்பண்ணையில் வாங்கப்படுகிறது, விவசாயிகளிடமிருந்து வாங்கப் படுகிறது. ஆனால் அது போக்குவரத்தில் மாறி மாறி வருவதால் விலை கூடிக்கொண்டே இருக்கிறது. அதைக் கவனித்துக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென்காசியிலிருந்து வாங்கி திருநெல்வேலிக்குக் கொண்டு வந்தால், தென்காசியிலிருந்து திருநெல்வேலிக்கு ஆகும் சத்தத்தையும் சேர்த்து அதிகமாக விற்கிறார்கள். இதை ஒருமுகமாக வைத்து, சப்ஸிடி கொடுத்து, எல்லாயிடத்திலும் ஒரே தொகை என்று வைத்தால் எல்லோரும் விதை வாங்க நல்ல உற்சாகத்துடன் வருவார்கள்.

விதைகளைப் பதனப்படுத்த ஆராய்ச்சி செய்வதற்குத் திட்டங்கள் போடப் படுகின்றன என்று இந்த அறிக்கையிலிருந்து தெரிகிறது. நன்றாகக் கவனித்துப் பாருங்கள். ரொம்ப முக்கியம். விதையை உலர வைக்க முடியாமல், நல்ல விதை கிடைக்காமல் தவிக்கிறார்கள். ஆனால் இன்றுவரை ஆராய்ச்சி நிலையத்திற்கு திட்டம் வகுக்கப்பட்டதாகத்தான் தெரிய வருகிறது. அதை இவ்வருஷமாவது எடுத்து நடத்த முன் வரவேண்டும். மிளகாய், வேர்க்கடலை போன்றவைகளை உலர வைக்க முடியாமல் குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்கள். உலர வைக்கக்கூடிய இயந்திரங்கள் இருந்தால் உற்பத்தியும் அதிகமாகக் கிடைக்கும். அதற்கும் திட்டம் வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விதைகளைத் தனிப்பட்டவர்களும் விநியோகம் செய்து வருகிறார்கள். அதை வரவேற்கிறேன். அதற்கு, "ஸீட் ஆக்டை" உறுதி யாக அமல் நடத்தினால் நல்ல விதைகள் கிடைக்கும். அதை அமல்படுத்தினால் நல்ல விதைகள் விற்பதற்கு தயாராக இருப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

'ஏரியல் ஸ்பிரேயரை' பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அது வரவேற்கக் கூடியதுதான். ஆனால், பரந்த இடங்களில், 500 ஏக்கர், 1,000 ஏக்கர் இடங்களுக்கும் அது பெரிதும் பயன்படும். ஆனால், இப்பொழுது இருக்கும் திட்டம், மக்களுக்குக் குறைந்த இடங்கள்தான் கிடைக்கும் என்ற நிலையில் வைத்துக் கொண்டிருக்கிறோம். 30 ஏக்கருக்குமேல் ஒருவருக்கு இருக்கக் கூடாது என்ற நிலைமை இருக்கிறது. ஆகையால் அதிக வரப்பு ஏற்படுகிறது. அந்த மாதிரி இடங்களில் 'பவர் ஸ்ப்ரேயர்' நல்லது. ஏரியல் ஸ்ப்ரேயரில் ஒரே நேரத்தில், வேண்டிய நேரத்தில், எல்லோருக்கும் செயல்படுத்தலாம். ஆனால் குறைந்த இடம் உள்ளவர்கள் ஏரியல் ஸ்ப்ரேயரை செயல்படுத்த முடியாது. இதற்காக 3½ லட்சம் ஏக்கர்களுக்கு திட்டம் வகுத்திருக்கிறது. 35 லட்சம் செலவாகப்போகிறது. அந்தத் தொகை பூராவும் அடுத்தவர்களுக்குத்தான் போகிறது. தனிப்பட்ட 5, 6 ஏக்கர் பூமி வைத்திருப்பவர்களுக்குப் போகிறதா என்றால் கிடையாது. ஏனென்றால், ஏரியல் ஸ்ப்ரேயர் வேண்டாமென்று சொல்லவில்லை, அதைப் பரந்த இடங்களுக்கு வைத்துவிட்டு, மற்ற இடங்களுக்கு பவர் ஸ்ப்ரேயரைக் கொடுத்தால் நலமாக இருக்கும்.

மண் பரிசோதனை பற்றிக் கூற விரும்புகிறேன். சோதனைச்சாலைகளை விரிவுபடுத்துவதாகத் தெரிகிறது. அதில் முக்கியமானது, மொபைல் வேன்களைக் கொண்டு ஆங்காங்கு சோதனை செய்துவிட்டால் மண்ணுக்குத் தகுந்த உரம் இடவும், பூச்சி மருந்து அடிப்பதற்கும், மண்ணுக்குத் தேவையானவற்றைக் கவனிப்பதற்கும் வழியேற்படும். அதற்குத் தயார் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.





உழவர் பயிற்சித் திட்டம் வரவேற்கத் தக்கது. அதை விரிவுபடுத்த வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

நான் அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன், 'சென்ட்ரல் ஃபார்ம்' நம்முடைய மாநிலத்தின் முக்கியமான தேவை. மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வந்திருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கும் சென்ட்ரல் ஃபார்ம் இருந்தால் பணம் அங்கிருந்து வரும். அதைக் கேட்பதற்கு இந்த நேரம் நல்ல நேரம் என்று நினைக்கிறேன். அதை வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். 'அக்ரிகல்ச்சரல் ஃபைனான்ஸ் கார்ப்பொரேஷன்' மூலமாக கோகனட் டெவலப் மெண்டிற்கும் பணம் வாங்கலாம். இராமநாதபுரம் பகுதியில் இருப்பது மாதிரி மற்ற பகுதிகளுக்கும் தேவை. செங்கோட்டை பகுதிக்கு முக்கியம் தேவை. அதற்கு 'அக்ரிகல்ச்சரல் ஃபைனான்ஸ் கார்ப்பொரேஷன்' மூலம் வழியேற்படும் என்று கருதுகிறேன்.

அக்ரிகல்ச்சரல் இண்டஸ்டரீஸ் கார்ப்பொரேஷன் ஆரம்பிக்கப்பட் டிருக்கிறது. அதை ஆரம்பித்ததன் நோக்கம், விவசாய சம்பந்தமான கருவிகள், இயந்திரங்கள், உற்பத்தி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம். ஆனால் அது இன்று செயல்படவில்லை. அதை அந்த வழியில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கால்நடைகளைப் பற்றி ஒரேயொரு வார்த்தை கூற விரும்புகிறேன். கோசாலா ஸ்கீம் கோயிலில் வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை அனுசரிக்கப் பல இடங்களில் வழியில்லாமல் இருக்கிறது. அதை அதிகரித்து அனுப்பி அந்த மாதிரி நிலைமையில் இல்லாது 'கோசாலா ஸ்கீம்' கோயில் பணிகளில் ஒன்றாக இருந்தால் அதை உடனடியாக எடுக்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நல்ல மாடுகள் அபிவிருத்தியில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, கோசாலா ஸ்கீமை எடுக்க வழி செய்யவேண்டும்.

கால்நடை தீவன உற்பத்திபற்றி உழவர்களுக்கு கற்பிக்கப்படுவதாக அறிக்கையில் இருக்கிறது. அது சரிவர இல்லை. ஏன் என்று தெரிய வில்லை. அதை விரிவுபடுத்தி, கால்நடைத் தீவன உற்பத்தியை அதிக அளவில் உருவாக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

* THIRU K. S. KOTHANDARAMIAH : Hon. Deputy Speaker, Sir, while supporting the Demand on Agriculture which has been presented to the House by the Hon. Minister for Agriculture, I wish to say a few words about the grievous calamity that is prevailing in the entire taluk of Hosur in Dharmapuri district due to chronic drought effects, during the last four years. Before that I wish to state one word to draw the attention of the Hon. Minister. We know that five districts are affected by drought in our State, i.e., Chingleput, Coimbatore, North Arcot, South Arcot and Dharmapuri district. But unfortunately the name of Dharmapuri District is being omitted in all the records; in the Governor's address, it was omitted. Subsequently in the budget speech, it was omitted. In all the other brochures that have been given to us so far during the different Demands, it has been omitted. In the Irrigation Demand while giving the list, it is said that the Government had decided to extend drought relief works to the following districts of Tamil Nadu, viz., Ramanathapuram, South Arcot, etc. I do not know what is the meaning of this 'etc'. I want to add one word more. What is the result of this omission? I do not think it is an ordinary matter. Result

[Thiru K. S. Kothandaramiah] [1969 மார்ச் 18

of this omission is found not only here, but in Delhi also. I will read from a newspaper. The Chief Minister Thiru Karunanidhi who has gone to Delhi met the Hon. Prime Minister. While requesting the Prime Minister, to send a team to investigate drought in Tamil Nadu, Thiru Karunanidhi said "because of failure of monsoon in four districts there is drought in Tamil Nadu". He has mentioned four districts only. What about the district? It is not Chingleput; it cannot be. It is not Coimbatore; it cannot be. It is not South Arcot or North Arcot. It is Dharmapuri district alone. The Chief Minister is an intelligent man; he remembers everything. Then what is the reason for this omission. It is because it is omitted in all the brochures, the omission therefore has become natural. When the Central team comes, they will not go to the fifth district. That is the difficulty. So I request the Hon. Minister for Agriculture to note this and at least hereafter instruct the officers in the Secretariat and District Collector. Once the Collector of Dharmapuri told me 'The name of the district is omitted. Why can't you tell the Hon. Ministers in the Assembly?'. Therefore I again humbly request the Hon. Minister, to note that the entire Hosur taluk has been suffering from drought since the last four years. Government has not noted it. There are two monsoons; one is South-West Monsoon and another is North-East Monsoon. The majority of areas in Madras State is dependent on North-East monsoon. Only Dharmapuri depends on South-West monsoon. Unless North-East monsoon fails, Government will not open their eyes. In Hosur taluk rains failed in June and July. We expected drought relief measures being taken. We wrote to the Hon. Ministers.

We requested the Hon. Ministers to come. They promised to come there. But they could not come. Rains failed, we lost about Rs. 8 crores in the entire taluk in 1965. Over 3 lakhs acres, which had been cultivated hitherto, withered away. The District Collector had written "poor rain in Hosur had affected the ragi crop, the principal area of ragi in Madras State." We submitted a memorandum to the Government of Madras. We requested the Hon. Thiru V. Ramiah the then Minister for Revenue to come to Hosur. He came. We told him that because of failure of rain, people had suffered, and if rains failed again, the entire taluk would become a desert and people would be forced to starvation and untold difficulties. Next year, the same thing happened. Rains failed. Therefore I request the Hon. Minister to pay special attention to Hosur. We do not have irrigation facilities. Unless the small dams we have requested are constructed, we cannot have good crops.

My friend Thiru B. Venkataswami has said about cattle farm. I do not want to add more. Last year the Hon. Minister for Agriculture came to Hosur. The Secretary to Agriculture Department, Madras also came. There was a proposal to request the Central Government to start a "Jersey Cattle Farm" in Hosur taluk. One thousand acres of land, previously belonging to a zamindari, are available free. Government investigated the



1969 மார்ச் 18] [Thiru K. S. Kothandaramiah]

matter. The Sub-Collector, the Superintendent of the Cattle Farm came and the Deputy Director, Animal Husbandry also inspected. In the month of August, on 24th August, the Secretary to Agriculture Department (New Delhi) Mr. Sivaraman came to visit the farm. The day previous to his visit, the Director of Animal Husbandry came to Hosur. I also met him. One Tahsildar of Mysore State and two law graduates were there. The site was inspected. The Director found the level of water high and said that the area was good and could be developed. We then returned. On 25th August Mr. Sivaraman had discussions with the Director. He said that a central team would be sent. But so far it has not come. In the meanwhile I understand that the Director of Animal Husbandry had asked the Conservator of Forests to select an alternate site. I do not know why it has been [illegible]. I suspect some politics there. If we get a Jersey farm, we can develop it. It can also supplement the cattle farm there. Therefore I request the Hon. Minister for Agriculture to write to the Government of India to send a team to test the site so that our State can have one more farm. Thank you.

*திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். நமது சமூகத்தில் மீனவர்கள் நிலை [illegible] நிலையில் இருக்கிறது என்பதனை நமது அமைச்சரவர்கள் நன்கு அறிவார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும் நன்றாக அறிவார்கள். இருந்தாலும் கூட, கழிந்த பல்லாண்டுகளாக அவர்களின் சமூக நிலையிலோ, பொருளாதார நிலையிலோ எந்த விதமான முன்னேற்றமும் அரசினரால் காண முடியவில்லை என்பதனை நினைக்கும்போது மிகவும் வேதனைப்பட வேண்டியிருக்கிறது. மீனவர்கள் என்று சொன்னால் அவர்கள் பகலானாலும் இரவானாலும் கடலிலே காற்றிலும் மழையிலும் சில வேளைகளில் புயலிலும் கூட தங்கள் வாழ்க்கையை கழித்துக் கொண்டிருக்கிறார்கள். சில வேளைகளில் புயலுக்கு, கடலில் தங்களுடைய உயிரையும் கூட பலி செலுத்தவேண்டிய அவ்வளவு அவல நிலையில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அரசால் இத்தனை ஆண்டுகளாகியும் பொருளாதார நிலையிலே சமூகத்தில் அவர்களுக்கு ஒரு மாறுதல் ஏற்படுத்த ஏன் முடியவில்லையென்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். இந்த மாதிரி நிலையில் இந்த சமூகம் எத்தனை நாட்கள் தான், எத்தனை ஆண்டுகள் தான் இருப்பார்கள் என்பதையும் நாம் சற்று சிந்திக்கவேண்டும். அவர்களுக்கு இருப்பதற்கு இடம் இல்லை, வாழ்வதற்கு வீடு இல்லை. நீங்கள் அறிவீர்கள், நமது மாநிலத்தில் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் அவர்கள் இருக்கிற இடத்தைப் பார்த்தால் கடலோரத்தை ஒட்டித்தான் அவர்கள் இருக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்கள் மிகவும் மோசமான கொடுமைகளுக்கிடையில் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள். புயல் வரும்போது அவர்கள் வீடுகளே காணாமல் போகின்ற நிலை இருக்கிறது. அதற்காக அரசாங்கம் கொடுக்கின்ற மானியம் என்னவென்றால் ரூ. 60 அல்லது ரூ. 80. அதில் அவர்கள் வாழ்க்கையை எப்படி நடத்தமுடியும்? தற்போது அவர்கள் வாழ்வதற்கு வாய்ப்பு எம்மாதிரி அமைக்கமுடியும் என்று அறிய விரும்புகிறேன். தொழிலை எடுத்துக்கொண்டாலும் சரி, ஓராண்டில் சில மாதங்களில் தொழில் இருக்கிறது. மற்ற நாட்களில் அவர்களுக்கு என்ன தொழில் இருக்கிறது? அந்த நாட்களில் அவர்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு அரசாங்கம் என்ன திட்டத்தை வைத்திருக்கிறது என்பதனைத்தான் நான் அறிய விரும்புகிறேன். நாம் இந்த பட்ஜெட்டை பார்க்கும்போது, முந்திய அரசாங்கம் செய்துகொண்டிருந்த போட்களானாலும் சரி, நெட்களானாலும் சரி,

எதையும் கோவாப்பரேடிவ் சொஸைட்டிகள் வழியாகக் கடன்களையும் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். இம்மாதிரி நிலையில் நாம் அவர்களை வைத்துக்கொண்டு போவோமானால் நிச்சயமாக அவர்கள் வாழ்க்கை தரத்தில் மாறுதல் ஏற்படுத்த முடியாது. ஆகவே, இந்த அரசாங்கம் ஏதாவது ஒரு புதிய திட்டத்தை வகுத்தாக வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்ததாக கன்யாகுமரி மாவட்டத்தில் கடலோரத்தில் இருக்கிற மீனவர்களுக்கு ஒரு சில சங்கடங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அடிக்கடி சிலோன் நாட்டிலிருந்து விசைப் படகுகளில் மீன் பிடிப்பவர்கள் இந்த மாநிலத்தை ஒட்டிய டெரிடோரியல் வாட்டர்ஸ் என்று கூறுகிற அளவுக்கு உள்ளே வந்து மீன்களைப் பிடித்துக் கொண்டு செல்வதால், இங்குள்ள மீனவர்கள் மீன் பிடிக்க வாய்ப்பு, வழிகள் இல்லாமல் இருக்கிறது. மேலும், அவர்கள் தங்கள் போட்களில் வந்து இங்கு மீன் பிடிப்பவர்கள் அமைத்திருக்கிற வலை முதலியவற்றை அழித்துவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். ஆகவே, இம்மாதிரியான துன்பங்கள் அவர்களுக்கு ஏற்படுகின்ற காரணத்தினால், நமது அரசு மத்திய அரசாங்கத்தை அணுகி, இம்மாதிரியான துன்பங்களிலிருந்து மீனவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடுகூட, கடந்த பட்ஜெட்டில் கூட குளச்சலில் ஒரு ஐஸ் பிளாண்டு அமைப்பதற்கான திட்டம் இருந்தது. அதற்காக மானியமும் ஒதுக்கப் பட்டிருந்தது. ஆனால் இதுகாறும் அங்கே அந்த ஐஸ் பிளாண்டு அமைக்கப்படவில்லை என்பதைப் பார்க்கிறபொழுது வேதனைப்படவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தக் குறைபாடுகளை நீக்கி மீனவர்களுக்கு நல் வாழ்வு அளிக்க, புதிய திட்டங்களை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு நீண்ட நெடுங்காலமாகக் கூறிக்கொண்டு வந்திருக்கிறது. இந்த அரசு அதிகாரத்திற்கு வந்தால் புயலால் பாதிக்கப்பட்டு கடல் கொந்தளிப்பைத் தடுப்பதற்கு நீண்ட மதில் சுவர்களைக் கடலோரத்தில் அமைப்பதாகக் கூறியிருந்தார்கள். இதுவரையில் அதற்கு எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை.

அடுத்தபடியாக, வன இலாகாவை எடுத்துக்கொண்டால், சில தினங்களுக்கு முன்பு நம்முடைய மாநிலத்தில் ஒரு மலைப்பிரதேசத்திலிருந்து ரூ. 2 கோடி பெறுமானமுள்ள சந்தனக் கட்டைகள் திருட்டு போய் இருந்ததாக பத்திரிகையில் செய்தி வந்ததை நாம் பார்த்தோம் அதுமட்டுமல்ல. ஆங்காங்கு பல இடங்களிலும் வனப் பிராந்தியங்களிலிருந்து ஏராளமான தடிகள் திருட்டுப் போய்க்கொண்டிருக்கின்றன. வன இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால் இவற்றையெல்லாம் விட்டுவிட்டு ஏழை எளியவர்கள் வாழ்வதற்கு வழியற்றவர்கள், ஒரு வேளை அன்றாடம் வாழ்க்கைக்காக சிறு சிறு சுள்ளிகளை, விறகாக உபயோகப்படுத்துவதற்கு காடுகளிலிருந்து எடுத்துச் சென்றால், அவர்களை அடித்துத் துன்புறுத்தி வழக்குப் போடுகிறார்கள். சந்தனக்கட்டை திருட்டுப்போவது, தடிகள் திருட்டுப்போவது இவைகளுக்காக வழக்குப் போடாமல், சுள்ளிகளை எடுத்துக்கொண்டு போகும் ஏழை எளியவர்களின்மீது வழக்குகள் போடுகிறார்கள். விறகுக்காக ஏழைகள் வனத்திலிருந்து சுள்ளி எடுப்பதை அரசு தடுக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : உறுப்பினர் அவர்கள் 7 நிமிடங்கள் பேசியாகிவிட்டது.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : இன்னும் மூன்று நிமிடம் கொடுங்கள். முடித்து விடுகிறேன். அடுத்தபடியாக, வன இலாகாவின்கீழ் செயல்படுகின்ற எங்கள் பகுதியில் இருக்கிற ரப்பர் தோட்டம் பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 1957-ம்



ஆண்டு என்று நினைக்கிறேன், அப்பொழுது அந்தப் பகுதியில் ஒரு ரப்பர் தோட்டத்தை அமைக்க ஏற்பாடு செய்ய முன்வந்தது, அன்றிருந்த அரசாங்கம். அந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு தொழில் வாய்ப்பு அளிக்கவேண்டும். அங்கே பெரிய தொழில் வாய்ப்புகள், பாக்டரிகள், தொழிற்சாலைகள் இல்லாத காரணத்தினால், அங்கே இருக்கிற ஏழைகளுக்கு தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற காரணத்தினால் அப்பொழுதிருந்த அரசாங்கம் ரப்பர் தோட்டத்தை அங்கே தொடங்கியது. ஆனால், இன்று அங்கே இருக்கிற நிலையைப் பார்த்தால், எந்த நோக்கத்திற்காக அந்தத் தோட்டம் ஏற்படுத்தப் பட்டதோ. அது அறவே அகற்றப்பட்டு, ஏதோ முதலாளிகளால் நடத்தப்படும் தோட்டம் போலத்தான் அதை அரசாங்கம் நடத்திவருகிறது. சாதாரண ஏழைத் தொழிலாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய நன்மைகளைக் கொடுக்க மறுக்கிறார்கள் அரசினர். இந்தத் தருணத்தில் இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். அங்கே இம்மாதிரியான பல சிக்கல்கள் இருந்தன. இந்த இலாகாவில் மேல்மட்டத்தில் செயலாற்றுகின்ற அதிகாரிகள் இந்தப்பிரச்னைகளில் மிகவும் அக்கறை எடுத்துக்கொண்டு, அவைகளைத் தீர்த்துக்கொடுத்தமைக்கு அந்த அதிகாரிகளுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடுகூட அங்கு இருக்கும்படியான பிரச்னை என்னவென்று சொன்னால் எல்லாத் தொழிலாளர்களுக்கும் நிரந்தரமாக வேலை கொடுப்பதற்கு மாறாக, தொழிலாளிகள் 2, 3 மாதங்களுக்கு ஒரு முறை பிரித்துவிடப்படுகிறார்கள். சில வேலைகளை காண்டிராக்ட் மூலம் செய்வதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். ஆகவே, அந்தத் தொழிலாளிகளுக்கு ஓரளவுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போகின்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு மூல காரணம் என்னவென்று சொன்னால், 1957-ம் ஆண்டில் இந்த வேலைகளுக்கு போட்ட எஸ்டிமேட்களை வைத்துக்கொண்டு அங்கே செயலாற்றுகின்ற அதிகாரிகள் அந்த வேலைகளைச் செய்யவேண்டும் என்று அரசு எண்ணுகிற காரணத்தினால்தான், அந்த அதிகாரிகளால் அந்த வேலைகளைச் செய்துமுடிக்க முடியவில்லை. ஆகவே, அவர்கள் மிகவும் அவலநிலைக்கு ஆளாகிறார்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் தொகை தீர்ந்துவிட்டவுடன் அவர்கள் வேலையை நிறுத்திவிடுகிறார்கள். இதனால் அந்தத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். இந்தக் குறைகளை நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் ஏகதேசம் 10,000 ஏக்கர் அளவுக்கு ரப்பர் தோட்டத்தை அமைப்பதற்கான ஒரு திட்டம் அரசாங்கத்தில் இருக்கிறது. அதைத் தவிர தனியார் துறையில் 10,000 ஏக்கருக்கும் அதிகமான தோட்டங்கள் இருக்கின்றன. இப்பொழுது அரசாங்க ரப்பர் தோட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகிற ரப்பர், கேரளப் பிரதேசத்திற்குக் கொண்டுபோய் விற்கப்படுகிறது. அதைப்போலவே தனியார் தோட்டங்களிலும் உற்பத்தியாகக்கூடிய ரப்பரை கேரளத்தில் தான் விற்பனை செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, அங்கே ஒரு ரப்பர் பாக்டரி அமைத்துக் கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உரையை முடித்துக்கொள்கிறேன்.

*__திரு. ஏ. வெள்ளாத்துரை__ : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக்கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த விவசாய மானியக் கோரிக்கையைப் பற்றி காங்கிரஸ் உறுப்பினர்கள் பல குறைகளைச் எடுத்து சொன்னார்கள். அவர்கள் இந்த மாநிலத்திலுள்ள விவசாய மானியக்கோரிக்கையிலுள்ள குறைகளைப் பற்றி பேசுகிறார்களே தவிர, மத்திய அரசு மானியக்கோரிக்கையில் விவசாயிகளுக்குப் போடப்பட்ட வரிகளைப்பற்றி எதுவுமே இங்கே அவர்கள் பேசவில்லை. மத்திய சர்க்கார் ஏழை எளிய விவசாயிகள் மீது போட்ட வரிகளைப்பற்றி, தமிழ் நாட்டிலுள்ள ஏழை விவசாய மக்கள் அத்தனை பேர்களும் பேசிப் பேசி மத்திய சர்க்கார் மீது வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உரத்திற்கு போடப்பட்ட வரி, பம்பு செட்டுகளுக்குப்

போடப்பட்டவரி, இவைகளைப்பற்றி கிராமங்களிலுள்ள மக்களும், நகரத்திலுள்ள மக்களும் பேசி, மத்திய சர்க்கார் மீது ரொம்பவும் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி காங்கிரஸ் அங்கத்தினர்கள் ஒரு வார்த்தை கூட இங்கே பேசவில்லை. விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று சொல்லி இங்குள்ள மானியக் கோரிக்கையைப்பற்றி குறை கூறுகிறார்களே தவிர, விவசாய அபிவிருத்திக்கு என்ன வகை செய்யவேண்டும் என்பதற்கான நல்ல கருத்துக்களை அவர்கள் இங்கே சொல்லவில்லை.

மேலும், என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், வாசுதேவ நல்லூர் தொகுதி மேற்குத் தொடர்ச்சி மலைக்கு அருகாமையில் இருக்கிறது. தென்காசியிலிருந்து ராஜபாளையம் வரையில் மேற்குத் தொடர்ச்சி மலையில் 2, 3 ஆறுகள் இருக்கின்றன. 1962-ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் இருந்த காலத்தில் கீரியாறு அணைத்திட்டம் என்ற ஒரு திட்டம் இருந்தது. அந்த அணைத் திட்டத்தைப் பற்றி பலமுறை எடுத்துச் சொல்லியும் அன்றைய காங்கிரஸ் ஆட்சியிலுள்ளவர்கள் அதைப் பற்றி எதுவும் கவலைப்படவில்லை. சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பையா முதலியார் அவர்கள் காங்கிரஸ் கட்சியில் இருக்கும் சமயத்தில் கீரியாறு அணைத் திட்டத்தைப்பற்றி பல முறை பேசியிருக்கிறார்கள். அப்பொழுதிருந்த அமைச்சர்கள் அதைப்பற்றிக்கூட கவனிக்கவில்லை. கீரியாறு அணைத் திட்டம், செண்பகவல்லி அணைத் திட்டம் என்று இரண்டு திட்டங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையில் இருக்கின்றன. நம்முடைய அமைச்சர்கள் இந்த இரண்டு அணைத்திட்டங்களையும் நல்ல முறையில் செவ்வனே நிறைவேற்றிக்கொடுத்தால், கோவில்பட்டி, சங்கரன்கோயில் தாலூகாக்களில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்யலாம். நல்ல முறையில் உணவு உற்பத்தியை அதிகரிக்கக் கூடிய நிலைமை ஏற்படும். எனது தொகுதியில் இப்பொழுது ஒரு போகம் நல்ல முறையில் விளைந்து கொண்டிருக்கிறது. அதே மாதிரி பி.டபிள்யூ. டி.யைச் சேர்ந்த குளங்கள் எனனுடைய தொகுதியில் 13 குளங்கள் இருக்கின்றன, பல ஆண்டுகளாக அவை செப்பனிடப்படாமல் இருக்கின்றன. இப்பொழுது ஒரு போகம் விளைந்துகொண்டிருக்கிறது. இந்தக் குளங்களை மராமத்து செய்துகொடுத்தால், நிச்சயம் தண்ணீர் கட்டி நிற்கும். இரண்டு போகங்கள் நிச்சயமாக விளைவிக்க முடியும். உணவுப் பிரச்னையை நாம் அதிக விரைவில் தீர்க்க முடியும். மேலும் அங்கு ஏராளமான நீர்ப்பாசன வசதி இருக்கக்கூடிய கால்வாய்கள், மற்றும், குளங்களிலுள்ள கால்வாய், கண்மாய்கள் செப்பனிடப்படவில்லை. அதையும் நம்முடைய அமைச்சர் அவர்கள், பி. டபிள்யூ. டி அமைச்சரிடம் சொல்லி, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கீரியாறுத் திட்டத்தை வெகு விரைவில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. தோ. மு. நல்லசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1969-70-ம் ஆண்டுக்கான, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகளான 16, 17, 18, 21, 35, 39, 44 என்ற எண்களுள்ள கோரிக்கைகள் மீது எனது கட்சியினர் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரேபணைகளை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

இது வரைக்கும் காலையிலிருந்து பேசிய உறுப்பினர்களில், குறிப்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள், இதற்கு முன்பு இருந்த அரசு, காங்கிரஸ் அரசாங்கமானது, எதுவுமே செய்யவில்லை என்று கருத்துப்படப் பேசினார்கள். அந்தக் குற்றச்சாட்டைத் தவிர்க்கும் வகையில் ஒரு புள்ளிவிவரத்தை உங்கள் மூலம் இந்தச் சபைக்குக் கொடுக்க விரும்புகிறேன். நான்காவது ஐந்தாண்டு திட்ட ட்ராஃப்ட் அவுட்லைனில் கொடுத்திருக்கும் புள்ளிவிவரப்படி, 1950-51-ல் நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியான உணவு தானியங்கள் 31,63,000 டன்கள், 1968-69-ல் எதிர்பார்த்தது 63.7 லட்சம் டன்கள். அதே மாதிரி



பருத்தி வகைகள், கரும்பு, எண்ணெய் வித்துக்கள் எல்லாம் சேர்த்து 1950-51-ல் பார்க்கும்போது, 43,33 000 டன்கள். அதுவே 1969-ல 84,73,000 உற்பத்தியாகும் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதேமாதிரி விவசாயத்தை விருத்திசெய்ய தவிர்க்க முடியாதது உரம் என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொண்டிருக்கும் விஷயம். நம்முடைய நாட்டில். 1950-51-ல் சுமார் 55,000 டன்கள் நைட்ரஜன் உரமும், 4000 டன்கள் பாஸ்பேட், பொட்டாஷியம் உரங்களும் உற்பத்தியானது என்ற நிலை போய், 1967-68-ல் 10,00,000 டன் நைட்ரஜன் உரமும் 6 லட்சம் டன் பொட்டாஷியம், பாஸ்பேட் உரங்களும் உற்பத்தியாகும் அளவிற்கு நாட்டில் விவசாயம் விருத்தி அடைந்து வந்திருக்கிறது, கடந்த காலத்தில் என்பதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆக, இன்றைக்கு நாம் அடைந்திருக்கும் வெற்றிக்குக் கடந்த காலத்திலிருந்த காங்கிரஸ் அரசாங்கமானது வழி வகுத்திருக்கிறது. அவர்கள் போட்ட அஸ்திவாரத்தின் மேல் இன்றைய மாநில சார்க்கார் எடுக்கும் முயற்சியின் காரணமாகவும் நம்முடைய இலக்கை அடைந்திருக்கிறோம் என்று சொன்னால் அது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. அந்த அடிப்படையில்தான் நாம் இன்றைக்குப் "பசுமைப் புரட்சி" ஏற்பட்டிருக்கிறது என்று பெருமைப்படுகிறோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அந்த பசுமைப் புரட்சி காரணமாக பல வெற்றிகளைக் கண்டு இருக்கிறோம் என்று சொன்னால் அது மிகையாகாது. ஆனாலும், ஓய்வு எடுக்கும் நிலையில் நாம் இல்லை. அதற்கு மாறாக நாம் முறையாக, தீவிரமாகச் செயல்படவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்னும் ஒவ்வொரு துறையிலும் எவ்வளவோ செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைத் தொடர்ந்து காண்கிறோம். ஒரு ஆண்டு உபரியாக இருக்கிறது; அடுத்த ஆண்டு பற்றாக்குறை ஏற்படுகிறது. ஒரு தடவை 'இன்ப்ளேஷன், என்ற நிலையும், மற்றொரு தடவை பற்றாக்குறை என்ற நிலையும் அதே சமயத்தில் வேலையில்லாத் திண்டாட்டமும் மாறி மாறி வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, விவசாயத் துறையில் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த மாநிலத்தை எடுத்துக் கொண்டால். 40 அல்லது 41 சதவிகிதம் வருமானம் விவசாயத்தைத்தான் நம்பி இருக்கிறது. அதேமாதிரி, இந்த மாநிலத்திலுள்ள கிட்டத்தட்ட நாலு கோடி மக்களில், 60 சதவிகிதம் பேர் விவசாயத் தொழிலை நம்பிக் கொண்டிருப்பவர்களாகவே இருக்கிறார்கள். ஆகையினால், இந்தத் தொழிலில் அதிகப்படியாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று விரும்புகிறோம். அந்த அடிப்படையில், விவசாயத்தை விருத்திசெய்ய, முயற்சிகள் மேற்கொண்டு இருக்கிறோம். பல அம்சங்கள் பாராட்டத் தக்கதாக இருக்கின்றன. என்னுடைய கருத்துக்களின்படி, விவசாயத்தை விருத்தி செய்ய நான் எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன்.

விவசாயம் நல்லபடியாக நடக்க, கடந்த காலத்தில் இதே மன்றத்தில் நான் பேசியபோது, பத்து அம்சங்களைக் குறிப்பிட்டேன், அவை தவறினால், விவசாயம் நல்லபடியாக நடக்காது என்று கூறியிருக்கிறேன். அதையே மீண்டும், இந்தக் காலகட்டத்தை ஒட்டிச் சில ஆலோசனைகளைக் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக, விவசாயம் நல்லபடியாக நடக்கவேண்டுமானால், ஒவ்வொரு குடியானவனுக்கும் அவசியமானது நிதி. நிதி இல்லாத காரணத்தால், கடந்த காலத்தில் ஏதோ இருக்கும் வசதிகளை வைத்துக் கொண்டு, தேவையான அளவிற்கு விவசாயம் செய்துகொண்டிருந்தார்கள். ஆனால், பிற்காலத்தில் பல முன்னேற்றமான திட்டங்கள் போட்டதால், விவசாயத்தை நல்லபடியாகப் பெருக்கவேண்டும் என்றால் அதிகப்படியான நிதி தேவைப்படுகிறது. அதை உணர்ந்து அந்த அந்தக் காலகட்டத்தில் அரசாங்கம் எடுத்த முயற்சிகளின் பலனாக, கூட்டுறவு

[திரு. தோ. மு. நல்லசாமி] [1969 மார்ச் 18

நாணயச் சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள், போன்றவை பண உதவி கொடுத்தாகள். சமீப காலத்தில், பணம் தரக்கூடிய நிறுவனங்கள் அரசாங்கத்தின் ஆதரவில் பணம்கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். அரசாங்கத் தொடர்புள்ள நிறுவனங்கள் கொடுத்ததோடுகூட, தனியார் வங்கிகளும் பணம் கொடுக்க முன்வருவது பாராட்டத் தக்கதாக அமைகிறது. அதே சமயத்தில், நிலம் உள்ளவர்களுக்குத்தான் இந்தப் பணங்கள் கிடைக்கின்றன. இப்படிக் கிடைக்கும் உதவிகள் நடுத்தரத்திற்கு மேலே உள்ளவர்களுக்குத்தான் கிடைக்க வழி இருக்கிறது இந்தக் காலகட்டத்தில் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நிதி வசதி இல்லாதவர்களுக்கு வழி இல்லை. அவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தால், நிதி கிடைக்க வழி வகைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக, நீர்ப் பாசனம். நல்லவிதமாக நீர்ப்பாசனம் இல்லாவிட்டால் விவசாயம் நல்லபடியாக நடக்காது. பயிரிடும் விஸ்தீரணத்தில் இப்பொழுது கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பாகம் தான் நீர்ப்பாசனம் பெறுகிறது என்று புள்ளி விவரங்கள் இருக்கின்றன. 1/5 விஸ்தீரணத்தில் பாசனம் இருக்கிறதுஎன்ற காரணத்தால், ஒரு ஆண்டு மழை இல்லாத நிலை ஏற்பட்டால் உறுதியாக விளைச்சல் இல்லாத நிலை ஏற்படுகிறது. அந்தமாதிரி, 'அன்-ஈவன் அண்ட் அன்ஸர்டன்' என்ற நிலை ஏற்படுகிறது அதைத் தவிர்க்கும் பொருட்டு நம் மாநிலத்திலுள்ள மூன்றில் ஒரு பங்கு விஸ்தீரணத்தில் பயிர் செய்யக் கூடிய நிலையில் உறுதியாகத் தண்ணீர் கொடுக்கும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். பெரிய நதிகளில் கிடைக்கும் தண்ணீரைப் பாசனத்திற்குக் கொடுத்துவிட்டோம் என்று சொல்லலாம். தண்ணீருக்கு எங்கே போவது என்று கேட்கலாம். அந்தப் பிரச்சினை வரும். அதைத் தவிர்க்க நதிகளில் மழை காலங்களில் ஏராளமாகப் பிரவாகம் போய் சமுத்திரத்தில் விழுகிறது. நம்மிடம் மின்சாரம் இருக்கிறது. மழை காலத்தில், வசதி இல்லாத பகுதிகளுக்குத் தண்ணீரைப் பம்பு செய்து, தண்ணீரைத் தேக்கி, கிரௌண்ட் வாட்டர் சப்ளையைப் பெருக்குவதன் மூலமாகத் தண்ணீர் கொடுக்க சாத்தியமா என்பதை அரசாங்கம் ஆராயவேண்டும் என்பதை அமைச்சரவைக்குச் சொல்ல விரும்புகிறேன்.

ஆழமான ட்யூப் வெல்கள், 1000 அடி, 500 அடி, 400 அடி என்று இருக்கமுடியும். தற்பொழுது கொடுக்கக்கூடிய தொகைகள், 'பர்தர் டீபனிங்' என்ற முறையில் ஏற்கெனவே இருக்கக்கூடிய கிணறுகளை ஆழப்படுத்தக் கொடுக்கப்படும் தொகைகள் பெரும்பாலும் வீணாகப் போகின்றன என்பது என்னுடைய கருத்து. 40, 50, 60, 70 அடியில் தண்ணீர் இல்லை. வெகு ஆழமான கிணறுகள், 500, 600, 700 அடி ஆழம் போனால்தான் தண்ணீர் இருக்கும்போது, நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி, ஆழமான குழாய்க் கிணறுகளின்மூலம் தண்ணீர் கிடைக்கும வழியைச் செய்யவேண்டும். இதனை நிலச் சட்டங்களைக் கொண்டு வந்தபின் நிலங்கள் பிட் பிட்டாகப் பிரிக்கப்பட்டு விட்டதால், தனிப்பட்ட விவசாயிகள் மேற்கொள்ள முடியாது. ஆகையினால், அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும். அரசாங்க நிதியிலிருந்து செய்து கொடுத்துவிட்டு, அதிலிருந்து கிடைக்கக்கூடிய தண்ணீரைப் பாசனத்திற்குக் கொடுத்து, விவசாயிகளிடமிருந்து நீர் வரியாக வசூல்செய்து கொள்ள வேண்டும் என்றால் தவறு இல்லை. ஆழமான கிணறுகள்பற்றி ஆராய, நண்பர் ஒருவர் குறிப்பிட்டதுபோல, ஒருவரை அனுப்பவேண்டும்; மாநிலத்தில் உள்ள தண்ணீர் வினியோகத்தை அதிகப்படுத்தும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்று பார்த்து, அதைப் பயன் படுத்துவதோடு ஆழமான கிணறுகள் வெட்டவும் முயற்சிகள் எடுக்க வேண்டும். வேறு மார்க்கம் இல்லை. எப்படியாகிலும் பாசன விஸ்தீரணத்தில் மூன்றில் ஒரு பாகம் பாசனத்திற்குக் கொடுத்தால்தான், விவசாயத்தை உறுதியானதாகச் செய்து உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். அப்பொழுதுதான் ஒரு மகத்தான நிலையில் மக்களுக்குத் தேவையான பொருள்கள் கிடைப்பதோடு மட்டுமல்லாமல், மாநிலத்தி



1969 மார்ச் 18] [திரு. தோ. மு. நல்லசாமி]

லுள்ள, அக்ரோபேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ் சரியான முறையில் இயங்க வாய்ப்பு இருக்கும். பெரும்பாலாக வேலைவாய்ப்பு ஏற்படுத்தி, உற்பத்தியான பண்டங்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி, அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்க வழி ஏற்படும். ஆகையினால் நீர்ப் பாசனத் துறையில் அதிகப்படியான கவனம் செலுத்தவேண்டும என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

I have been asked by my Party Leader to wind up the debate by covering certain points. Therefore I think the Deputy Speaker will allow me some more time.

விவசாயத்திற்குத் தேவையான உபகரணங்கள்—இம்ப்ளிமெண்ட்ஸ்—டிராக்டரிலிருந்து சிறிய கருவிகள் வரைக்கும் எடுத்துக்கொண்டால் நாம் போதிய அளவிற்கு கவனம் செலுத்தத் தவறிவிட்டோம் என்று சொன்னால் அது மிகையாகாது. விவசாயம் தீவிரமாக நடைபெற வேண்டுமானால் நவீன முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். பழைய முறைகளை அனுசரித்து, மாடுகளையும் சாதாரணக் கலப்பைகளையும் பயன்படுத்தி விவசாயம் செய்வது என்று ஆரம்பித்தால் நாம் பின்னோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம் என்பதையே எடுத்துக் காட்டும். நவீன இயந்திரங்களைக்கொண்டு நவீன முறையில் நம் நாட்டிலே இதரப் பகுதிகளில் விவசாயம் செய்வதன் காரணமாக அதிகமான உற்பத்தியை அவர்கள் பெற்றுக் கொண்டிருக் கிறார்கள் என்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். விவசாயத்தை மேலும் உற்சாகமாகச் செய்வதற்கு இது உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

சமீபத்தில் அரியானா மாநிலத்திலுள்ள விவசாயிகள் அடையக்கூடிய பலாபலன்களை நாம் அறிய முற்பட வேண்டும். அங்கிருக்கக்கூடிய விவசாயிகள் தமிழ்நாட்டிற்கு வந்து, செகண்ட் ஹாண்ட் டிராக்டர்களை வாங்கி, அவர்களுடைய மாநிலத்திற்குக் கொண்டுபோய்க் கொண்டிருக் கிறார்கள். டிராக்டர்களின் அவசியத்தை, தவிர்க்க முடியாத நிலைமையை அவர்கள் பரிபூரணமாக உணர்ந்ததன் காரணமாக இதை வாங்கிச் செல்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலிருந்து இயந்திரம் அங்கே போய்க்கொண்டிருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி வரியை அதிகமாகப் போடுகிறார்கள். 'ஸேல்ஸ்-டாக்ஸ்' போன்ற வரியை மாநில அரசு போடுகிறது. மத்திய அரசு 'எக்சைஸ் டூட்டி' என்பதாக வரியை விதித்துக் கொண்டிருக்கிறது. வரியை மேலும் மேலும் அதிகப்படுத்திக்கொண்டே வந்திருக்கிறார்கள். டிராக்டர் என்று சொன்னால் டீசல் எண்ணெய் வரி அதிகமாகப் போகிறது. இந்த ஆண்டு பம்ப் செட்டுக்குக்கூட வரிப் போட்டிருக்கிறார்கள். விவசாய அமைச்சர் அவர்கள் காலையில் எங்கள் கட்சித் தலைவரான திரு. கருத்திருமனை, "மத்திய அரசாங்கம் பம்ப் செட்டுமீது வரி போட்டது சரியா, உரத்தின்மீது வரி போட்டது சரியா?" என்று கேட்டார்கள். மத்திய அரசாங்கம் உரத்தின்மீதும், பம்ப் செட்டின் மீதும் வரி போட்டது சரியல்ல என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நமக்குத் தண்ணீர் தேவை. அது நதிகளிலிருந்து பெறுகின்ற தண்ணீர் ஆக இருக்கவேண்டும். நதிகளுக்கு அடுத்தபடியாக பம்ப் செட்டுமூலம் தான் நாம் தண்ணீரைப் பெற முடியும். அப்படி இருக்க, பம்ப் செட்டுக்குப் புதிய வரிகள் இருப்பது விவசாயத்திற்குச் சாதகமானது அல்ல என்பதைத்தான் தெரிவித்துக் கொள்கிறேன். நான் சொல்ல விரும்புவதெல்லாம், டிராக்டர், பம்ப் செட், மற்ற இயந்திரங் களுடைய உள்ளூர் விலையில்கூட ஸேல்ஸ் டாக்ஸ் அதிகமாகப் போடு கிறார்கள். ஸேல்ஸ் டாக்ஸ் 3 பர்சென்டாக இருப்பதை இந்தப் பொருள் களுக்குச் சில இடங்களில் 7 பர்சென்ட் என்று வசூலிக்கிறார்கள். இந்த விலை விவரங்கள் எல்லாம் விவசாயிகளுக்குத்தான் தெரியும். விவசாயி ரூபாய் நாலாயிரம், ஐந்தாயிரம் என்று விலைகொடுத்து இயந்திரங்களை வாங்கும்போது 3 பர்சென்ட் என்று கொடுப்பதற்குப் பதிலாக 7 பர்சென்ட் என்று போட்டு விடுகிறார்கள். அது எவ்வளவு பெரிய தொகையாக அமைகிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு

[திரு. தோ. மு. நல்லசாமி] [1969 மார்ச் 18

வருகிறேன். இப்போது இருக்கக்கூடிய வரிவிதிப்புகள் மத்திய அரசின் பொறுப்பாக இருந்தாலும், மாநில அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்தாலும் வரியிலிருந்து விலக்குப் பெற இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி வரி விலக்கு இருந்தால்தான் இந்தக் கருவிகளையெல்லாம் விவசாயிகள் பெருமளவில் பயன்படுத்திக் கொள்ள சாதகமாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இம்ப்ளிமெண்ட்ஸ் இல்லாமல், நவீன இயந்திரங்கள் இல்லாமல் விவசாயத்தை அதிகமாக விருத்தி செய்கிறோம் என்று சொல்வதில் எந்தவிதப் பயனும் இல்லை. தீவிரச் சாகுபடி என்று சொன்னால் டிராக்டரைப் பயன்படுத்தித்தான் செய்ய முடியும். ஆழமான கிணறு என்றால் நவீன இயந்திரங்களைக் கொண்டுதான் கிணற்றை ஆழப்படுத்த முடியும். அரசாங்கம் இந்த விஷயங்களில் தீவிரமான, அதிகப்படியான கவனத்தைச் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உரம் (ஃபெர்டிலைசர்ஸ்). உரம் இல்லாமல் சாகுபடி செய்ய முடியாது என்ற நிலைமையை நாடு பூராவிலும் உள்ள விவசாயிகள் உணர்ந்திருக்கிறார்கள். நாடு பூராவிலும் உர உற்பத்தித் தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இருபது மடங்கு உரத்தை நம்முடைய நாட்டிலே பயன்படுத்த நாம் பழகியிருக்கிறோம். 'ஹைஈல்டிங் வெரைட்டி' யைப்பற்றி நாம் பெருமையாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். நாம் அதிகப்படியான உரத்தை உற்பத்தி செய்வதோடு, அதனுடைய வினியோகத் தன்மையிலும் அதிகக் கவனத்தைச் செலுத்த வேண்டும். தனியார் துறையில் ஆரம்பிக்கப்பட்ட உர ஆலைகள் கட்டுப்பாடு இல்லாமல் உரத்தை விற்றுக் கொள்ளலாம் என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். உரமும் விவசாயமும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள விஷயமாக இருப்பதால் தான் இதைச் சொல்கிறேன். தனியார் துறை உர உற்பத்தியாளர்கள் தங்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலையில் விவசாய உற்பத்தியாளர் களுக்கும், விற்பனையாளர்களுக்கும் ஒரு விலையை ஏற்படுத்தி வைத்துக் கொள்கிறார்கள். விவசாயிகள் அவர்கள் சொல்கிற விலையைக் கொடுத்து உரத்தை வாங்க வேண்டியிருக்கிறது. இன்று காலை விவசாய அமைச்சர் அவர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் இந்த விஷயத்தில் வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த விலை உயர்வுக்கு என்ன காரணம் என்பதை நாம் தீவிரமாகச் சிந்திக்கவேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய—இம்ப்ளிமெண்ட்ஸ் உபகரணங்களுக்கு விலை அதிகம், உரத்திற்கு விலை அதிகம், கொடுக்கக் கூடிய கூலி அதிகம், மாட்டுத் தீவனத்தின் விலை அதிகம், இப்படியே விலை உயர்ந்துகொண்டே போய்க்கொண்டிருந்தால், விவசாயத்தை கன்ஸ்யூமர்ஸ பயன் நுகர்வோர் அனுபவிக்கக்கூடிய அளவுக்கு விவசாயி உற்பத்திசெய்து கொடுக்க முடியாத நிலை எற்படுகிறது. அதனால் தான் விவசாயியின் உற்பத்திக்குத் தக்க விலையைக் கொடுக்க வேண்டு மென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள்.

இரண்டாவதாக, விவசாயத்திற்குத் தேவையான உரம் போதிய அளவில் கொடுக்கப்படவில்லையென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தவிர, நைட்ரஜன், பாஸ்பேட், பொட்டாசியம் போன்ற உப்புக்கள் எந்தெந்த நிலத்தில், எந்த விகிதாச்சாரத்தில் போடப்பட வேண்டுமென்ற நிலவரத்தை விவசாய இலாகாவிலே உள்ளவர்கள் விவசாயிகளுக்குச் சரியான முறையில் சொல்வதில்லை. அதனால் விவசாயி பக்கத்து நிலத்துக்காரர் என்ன உரம் வாங்கிப் போடுகிறாரோ அதையே தானும் வாங்கித் தன்னுடைய நிலத்திற் குப் போடுகிறார். நிலத்தின் தன்மை, மண்வளம் இவற்றைக் கவனித்து அதற்கேற்றாற்போல உரமிட்டால் நல்ல மகசூல் கிடைக்கும். ஒரு தாலுகா பூராவிற்கும் ஒரே மாதிரியான மண்வளம் அமைந்திருக்காது. ஒரு பிர்க்கா வில்கூட ஒரே மாதிரியான நிலம் அமையாது. சுமார் 100 ஏக்கரா நிலம் என்றால் அதில் கிட்டத்தட்ட 20 ஏக்கர் நிலம் தனித் தன்மை வாய்ந்த தாக இருக்கும். ஒரு பதினைந்து ஏக்கர் மணல் கலந்த நிலமாக இருக்கும். ஒரு பதினைந்து ஏக்கர் களர் பிடிப்பு நிலமாக இருக்கும். இம்மாதிரியாக



1969 மார்ச் 18] [திரு தோ. மு. நல்லசாமி]

நிலம் ஒரே சீராக அமைந்திருக்காது. ஆகவே, நிலத்தினுடைய தன்மை, அதன் மண்வளம், இவற்றைச் சோதித்து அதற்கேற்றாற்போல அந்த நிலத்திற்குத் தகுந்த, விவசாய உரங்களை வாங்கிப் போடவேண்டும். மேடாக இருக்கும் பகுதிகளிலுள்ள நிலத்திற்குத் தனிரக உரம் வேண்டும். பள்ளமான இடத்தில் ஈரக்கசிவு உள்ள இடத்தில் வேறு தனிரக உப்பை உரமாகப் பயன்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அந்த நிலம் எதிர் பார்க்கக்கூடிய பலனைத் தரும். ஒரு நிலத்தின் மண்வளத்தைப் பரீட்சை செய்து பார்த்து அதற்குத் தேவையான உரத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். ஆகவே 'சாயில் டெஸ்ட்' செய்யவேண்டும் என்பதை விவசாயிகள் உணருமாறு செய்யவேண்டும். ஆகவே, மண்வளப் பரிசோதனை நிலையங்களை அமைத்து, விவசாயிகளுக்கு நல்ல ஆலோசனை களைச் சொல்லிக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பயிர் பாதுகாப்பைப் (பெஸ்டிஸைட்ஸ்) பற்றியது. நாம் நல்ல ரக வித்துக்களைப் பயன்படுத்தி, நல்ல உரம் போட்டு எல்லாம் செய்த பிறகு தக்க பருவத்தில் பூச்சிகள் வந்து பயிரை அழித்துவிடுகின்றன. பயிர்களை அழிப்பதில் பலவிதமான பூச்சிகள் ஈடுபட்டிருக்கின்றன. அரசாங்கம் பூராவாக இவற்றை அழிப்பதற்கு முயற்சியே எடுக்கவில்லை யென்று நான் சொல்லவில்லை. அரசாங்கமும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அரசாங்கத்தின் வெற்றி கணிசமாக இருந்த போதிலும், இன்னும் அதிகமான அளவில் செய்யவேண்டும். திரு. எ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் கூறியபடி 'ஏரியல் ஸ்ப்ரேயிங்' செய்வதில் சில கருத்துவேறுபாடுகள் இருக்கின்றன. நன்றாகப் படித்தவர்கள் இப்படிச் செய்வதில் டிஃபெக்ட் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். பெரிய நிலப் பரப்பாக (வாஸ்ட் ஏரியா) இருந்தால் இதைச் செய்வது சாதகமாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. மற்ற இடங்களில் பவர் ஸ்ப்ரேயிங் மாலை 5-30
மூலமாகப் பூச்சி மருந்துகளைத் தெளிக்கவேண்டும். விவசாயிகளுக்குத் தொடர்ந்து பூச்சி மருந்துகளைத் தெளிப்பதில் நல்ல சலுகை காட்ட வேண்டும். இல்லையானால் அவற்றை வாங்கித் தனிப்பட்ட விவசாயிகள் பயன்படுத்த முடியாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பயிருக்கு நலம் செய்கின்ற பூச்சிகள் பாதுகாப்பு (என்டமாலஜி) பற்றி வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாம் பயிர் பாதுகாப்புக்காக பெஸ்டிஸைட்-பூச்சிக்கொல்லி மருந்துகளை விமானத்தின் மூலமோ, பவர் ஸ்ப்ரேயர் மூலமோ உபயோகப்படுத்துகிற போது பயிர்களுக்கு நலம் செய்கின்ற பூச்சிகளும் இறந்துபோகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சிறிய நிகழ்ச்சியைச் சொல்ல விரும்பு றேன். எங்கள் பகுதியில் விவசாயிகளுக்கு மிகவும் நல்ல பலன் தரக்கூடிய சி. ஓ. 419 என்கிற கரும்பு ரகம் அழிந்தே போய்விடக்கூடிய அபாயம் ஏற்பட்டது. அதற்குக் காரணம் என்ன என்பதை ஆழ்ந்து ஆராய்கிறபோது, அந்த வட்டாரத்தில் இருந்த சி. ஓ. 419 ரக கரும்பு அனைத்துக்கும் கணுக்குக் கணு "போரா" என்ற புழு வந்திருப்பது தெரிந்தது. அப்போதுதான் என்டமாலஜி செக்ஷனைத் தேர்ந்த, பயிர்களுக்கு நலம் செய்கின்ற பூச்சி களின் மூலம் அந்த வட்டாரக் கரும்புப் பயிர் பாதுகாக்கப்பட்டதை நான் அறிவேன். இந்த என்டமாலஜி விஷயத்தில் இப்போது நமது அரசாங்கம் செலுத்துகின்ற கவனம் போதாது என்று தெரிவித்துக்கொள்ளகிறேன். அதுமட்டுமல்ல. கடலூர் பகுதியில் கடலைப் பயிருக்கு ஏராளமான புழு விழுந்து பயிர்கள் நாசமாகி வருவதைப் பார்க்கிறோம். இதற்குக் காரணமே ஏரியல் ஸ்ப்ரேயிங் மூலமாக பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தெளிப்பதன் காரணமாக பயிர்களுக்கு நலம் செய்கின்ற பூச்சிகளும் கொல்லப்படுவது தான். இதன் காரணமாக வேறுவிதமான புழுக்கள் வளர்ந்து பயிரை நாசம் செய்துவிடுகின்றன. ஆகவே அரசாங்கம்—என்டமாலஜி பகுதியை வளர்த்து—பயிர்களுக்கு நலம் செய்கின்ற பூச்சிகளை அதிகப்படி வளர்க்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். பரீட்சார்த்தமாக முதலில் சில பகுதிகளிலாவது இத்திட்டத்தைக் கொண்டுவந்தால் அப்புறம் அதை விஸ்தரிக்கலாம். இதனால் பெரிய நன்மை இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக விவசாயத் துறையில் காஸ்ட் ஆப் கல்டிவேஷனைக் குறைக்க வேண்டுமென்பதில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை. ஆனால் விவசாயத் துறையில் பலகாலமாக ஈடுபட்டு வருகிற என்னால் சொல்ல முடியும். நாளுக்கு நாள் காஸ்ட் ஆப் கல்டிவேஷன் அதிகரித்தே வருகிறது. அதுவும் பயிர்களுக்கு வைக்கிற உரம் 'களை'க்குப் போகிறது. எந்தப் பயிருக்கும் 'களை' ஏற்படுவது மிகவும் கெடுதல். 'களை' உண்டாவதைத் தடுக்கவேண்டும். இதற்கு "வீடிசைடிஸ்" (Weedicides) வாங்கி உபயோகிப்பது அவசியம். இவற்றை ஏன் அதிகம் இறக்குமதி செய்வதில்லை என்றால் அந்நியச் செலாவணி அடிபட்டுப் போகிறது என்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் நாம் எந்தப் பயிரை வைக்கிறோமோ அந்தப் பயிரைத்தவிர வேறு 'களை' வராதிருக்க நிச்சயமாக இதைப் பயன்படுத்த தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். இதனால் எவ்வளவோ நன்மை. குறிப்பாக, நாம் உபயோகப்படுத்தும் ரசாயன உரம் அதிக அளவில் மிச்சமாகும். பயிர்கள் நன்றாக வருவதற்கு வாய்ப்பு ஏற்படும். இதில் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் அனைவருமே விவசாயம் நல்லபடியாக நடக்கவேண்டுமென்று விரும்புகிறோம். விதை இருக்கலாம், எரு இருக்கலாம், தண்ணீர் இருக்கலாம், போக்குவரத்துப் பாதை இருக்கலாம். எனினும், "செய்வாரும் சொல் கேட்டால் என்றும் உழவே இனிது" என்றாள் அவ்வை. ஆகவே, நிலத்தை உடையவர்களுக்கும், நிலத்தில் வேலை செய்கிறவர்களுக்கும் ஓர் இணக்கமான நல்லுறவு இருந்தாலொழிய, விவசாயத் தொழில் நல்ல முறையில் நடக்காது. இந்த உறவுதான் சீரழிந்து வருகிறது என்பதை தஞ்சை கீழ்வெண்மணிச் சம்பவம் நமக்கு அறிவுறுத்துகிறது. இந்த நிலை தவிர்க்கப்படவேண்டும். இன்று தொழிற்சாலை வைக்கிறோம். அதில் பல தகராறுகள் ஏற்படுவதில்லையா? சட்டப்படி அந்தத் தகராறுகளைத் தீர்க்க என்ன என்ன முறைகளைக் கையாளுகிறோமோ அதுபோல நடவுக் காலத்தில், களையெடுக்கிற காலத்தில், அறுவடைக் காலத்தில் ஏற்படுகிற தகராறுகளை ஆங்காங்கே தீர்த்துவைக்க வழிவகை ஏற்படுத்த வேண்டும். 1942-இல் இருந்து நானும் 26 வருஷங்களாக ஒரு சிறு பண்ணையை வைத்து நடத்துகிறேன். அதுவும் ஏ.டி.டி. 27 என்பது குறிப்பிட்ட காலத்தில் சாகுபடி செய்யவேண்டிய விதை. உழவுக் காலத்தில், நடவுக் காலத்தில் தகராறு என்றால் காலம் தள்ளிப் போகும் மகசூல் பாதிக்கப்படும். ஆகவேதான் விவசாயத் தொழில்துறையில் ஓர் அமைதி ஏற்பட நாம் முழு கவனத்தைச் செலுத்தவேண்டும்.

அடுத்தபடியாக, விவசாய அமைச்சர் பேசும்போது பன்னிரண்டே முக்கால் லட்சம் டன் அதிகமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம், எட்டு லட்சம் டன் தான் கிடைத்தது. நமக்குக் குறைவு 4 லட்சம் டன் என்பதாக உற்பத்தியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிக அளவு மகசூல் தரக்கூடிய விதை இனங்களைப் பெருக்கியதுதான் இதற்குக் காரணம். ஆகவே, இதுபற்றிய ஆராய்ச்சியை இன்னும் விரிவுபடுத்தி அதை எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும். அதோடு நெல்லுக்கு மட்டுமின்றி கரும்பு, கடலை, பருத்தி போன்ற இதர தானியப் பயிர்களுக்கும் இந்த ஆராய்ச்சியை நடத்தவேண்டும்.

இன்னும் குறைந்த அளவு நீரைக்கொண்டு பயிரிடக்கூடிய ஏற்பாட்டை அமலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று திரு. நல்லசிவம் குறிப்பிட்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். வறட்சி நிறைந்த நம் மாநிலத்திற்கு அதனால் அதிகப் பயன் கிடைக்கும்.

அடுத்தபடியாக, உற்பத்தியைப் பெருக்குங்கள் என்பதாக அமைச்சர்கள் சொன்னால் போதாது. டைரக்டர்கள் அறிக்கை கொடுத்தால் போதாது, விவசாயிகளுக்கு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற உற்சாகம் தானே வரக்கூடிய அளவுக்கு ஒரு இன்சென்டிவ் இருக்கவேண்டும். நம்முடைய உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கிறது என்கிற எண்ணம் இருந்தால்தான் அவர்கள் நிச்சயமாக இன்னும் அதிக உற்சாகத்தோடு அத்துறையில் ஈடுபடுவார்கள். அப்படிச்சொல்லும்பொழுது உற்பத்தியாளர்களின் நலனை மட்டும்





கவனித்தால் போதாது. கன்ஸ்யூமர்ஸ் நலன்களையும் கவனிக்க வேண்டாமா என்று கேட்கக்கூடும். அதனால் நஷ்டம் ஏற்படாதா என்று கேட்கலாம். நஷ்டம் ஏற்பட்டால் அதை எப்படி ஈடு கட்டுவது என்று அரசாங்கம் சிந்திக்கவேண்டும். ஆனால் அதை உற்பத்தியாளர்களின் தலையில் போட வேண்டாம். நம் நாட்டில் நெல் உற்பத்தியாகிறது என்றால் எப்படி உற்பத்தியாகிறது என்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கண்ட்ரோல் விலைக்கு, விவசாயிகள் அரசாங்கத்திற்கு ஓர் அளவு நெல்லைக் கொடுத்து விட்டு, மீதியை உள்ளூர் மார்க்கெட் நிலவரத்திலே விற்கிறார்கள். இது தான் நடைமுறையில் சாதாரணமாக உள்ள நிலை. இது தவிர்க்கப்பட வேண்டும். இதை எப்படித் தவிர்க்கலாம் என்று கேட்டால், கரும்பு ஆலைக்கு டன் ஒன்றுக்கு 85 ரூபாய் என்று நிர்ணயம் செய்து கொடுக்கப் படுகிறது, அதுகூட இன்னும் கொடுக்கப்படவில்லை. அப்படி நிர்ணயித்ததை விட மேற்கொண்டு 5 ரூபாயும் கிடைக்கின்ற சூத்திரத்தை அரசாங்கம் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, நெல் உற்பத்தி யாகக்கூடிய நிலையிலே, எல்லாவற்றையும் கணக்குக்கு எடுத்துக்கொண்டு, சாப்பாட்டுக்குப் போக மீதியை எடுத்துக்கொள்ளலாம். ஆனால் நியாயமான விலை என்ன என்பதை நீங்கள் தைரியமாக நிர்ணயிக்கவேண்டும். அந்தப் பணியில் ஈடுபட, மத்திய அரசின் உதவியையும், விவசாயிகளின் உதவியையும் இப்படி யாருடைய உதவியை வேண்டுமானாலும் நீங்கள் பெற்றுக்கொள்ளமுடியும். அவ்வாறு பெற்றுக்கொள்ளக்கூடிய கேந்திர ஸ்தானத்தில் இருக்கிறீர்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலை நீடிப்பதனால் விவசாயிகளிடையே உற்சாகமில்லாத நிலை ஏற்படும். குறைந்த விலைக்குக் கொடுத்தால் கட்டுப்படியாகாத நிலை ஏற்படுகின்றது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. இதை என்னுடைய சொந்த அனுபவத்தின் வாயிலாகவும் அறிகிறேன். இப்படிச் செய்தால் விவசாயி நெல் பயிர் செய்வதைவிட்டு, வேறு பணப்பயிருக்குப் போகக்கூடிய நிலை ஏற்பட்டு அதிகப் படியான விஸ்தீரணம் வேறுபயிர்களுக்குப் போய்விடும், ஏற்கனவே போய்விட்டது. இந்த நிலை சரியா என்பதைச் சிந்தித்து பார்க்கவேண்டும். அமைச்சரவர்கள் யோசித்துப் பார்த்து, நியாயமான தீர்வுகாண வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

விற்பனைக்கு முன்னால் தானியங்களை வைக்கக்கூடிய வகையில் கிடங்குகள் சரியாக அமைக்கப்படாத காரணத்தினாலே உற்பத்தி செய்யும் தானிய அளவிலே 10 சதவிகிதம் வீணாகிறது என்ற புகார் இருக்கிறது. இது தவிர்க்கப்படவேண்டும். 'வேர்ஹவுஸ்' வசதிகள் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, கால்நடையைப்பற்றிக் கூறிவிட்டு முடித்துவிடுகிறேன். நமக்கெல்லாம் பால் இன்றியமையாதது, என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. பாலை, பாலாகவோ, தயிராகவோ, வெண்ணெயாகவோ, நெய்யாகவோ பருகாத மனிதர்கள் இருக்கமுடியாது. அது அவ்வளவு மிகவும் அத்தியாவசியமான தவிர்க்க முடியாத ஒரு பொருளாகும். அந்தப் பொருளை நாம் உற்பத்தி பண்ணுவதில் போதிய கவனம் செலுத்தவில்லை என்றுதான் சொல்லுகிறேன். இதைப் புத்தகத்தைப் படித்துவிட்டுச் சொல்லவில்லை. சிறிய பால்பண்ணை ஒன்றை நடத்துகின்ற காரணத்தால் சொல்லுகிறேன். தொடர்ந்து கஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை இந்த அவையில் சொல்ல விரும்புகிறேன். போதிய அளவுக்குக் குறைந்த விலையில் மாட்டுத் தீவனம் கிடைப்பதில்லை. இந்த நிலையைத் தவிர்க்க என்ன முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாம் சிந்திக்கவேண்டும். ஏதோ கேள்விநேரத்தின்போது, கால்நடைப் பராமரிப்பு விஷயத்தில், நல்ல உழைக்கக்கூடிய, உழவுக்கு வேண்டிய மாடுகள் வேண்டுமென்று சொன்னார்கள். அதேபோல், பாலையும் அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய ரகங்களையும் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும். காங்கேயம், உம்பளாச்சேரி, சிந்தி போன்ற குறிப்பிட்ட காலத்தில் பால் தரக்கூடியவை. இவற்றை வெளிநாட்டு கொ

களோடு கிராஸ் செய்து நாம் பாலைப் பெருக்குவதற்குத் திட்டவட்டமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதே சமயத்தில், காளைக் கன்றுகளையும் விவசாயத்திற்குப் பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். பால் பண்ணைகள் நடத்துவதிலே உள்ள சிரமங்கள் என்னவென்றால், பட்டணத்தில் பால் விற்றால் நல்ல விலை கிடைக்கிறது. ஆனால் கிராமங்களில் நல்ல விலை கிடைப்பது இல்லை. அரசாங்கம் சில ஏஜன்சிகளை நியமித்து பெரிய நகரங்களுக்குக் கொண்டுவரும் முயற்சிகளை எடுத்திருந்தாலும் அது போதாது. கிராமத்தில் ஒரு லிட்டர் பால் விலை 67 பைசா என்றால், சென்னையிலே ஒரு லிட்டர் விலை $1\frac{1}{4}$ ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருக்கிறது. அதுவும் எருமைப் பால் அங்கே 70 பைசா என்றால் இங்கே $1\frac{1}{2}$ ரூபாய்க்குக் மேல் விற்கப்படுகிறது. எனவே, கால்நடை விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்தினால் எங்களுக்கும் நஷ்டம் ஏற்படாது, பட்டணத்திலுள்ளவர்களும் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்காது. எனவே, கால்நடை விஷயத்தில் முழுக் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். நான் இவ்வளவும் சொல்வதற்கும் அவகாசம் கொடுத்த துணைத் தலைவரவர்களுக்கும், அதற்குச் சிபார்சு செய்த அமைச்சரவர்களுக்கும் நன்றி கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையிலே நாம் நல்ல முன்னேற்றம் கண்டு வர வேண்டும், உரபத்தியைப் பெருக்க வேண்டுமென்று நல்ல பல திட்டங்களை நமது போறிஞர் அண்ணா அவர்கள் நமக்குத் தேடித்தந்தார்கள். இன்று அவர்கள் இல்லாத நேரத்தில், இங்கு பேசுகின்ற நேரத்தில், எனக்குப் பெரிய ஏமாற்றமும், கவலையும் ஏற்படுகிறது. இந்த நல்ல நேரத்தில் அவர்கள் எடுத்த முயற்சிகளுக்கெல்லாம் நன்றி தெரிவிக்கும் முறையில் என் வணக்கத்தை முதலில் அவர்களுக்குத் தெரிவித்துவிட்டுப் பேசத் தொடங்குகின்றேன்.

வேளாண்மை, கால்நடை துறை, மீனளம், வனத்துறை, சின்கோனு ஆகியவற்றிற்கு இந்த ஆண்டில் முறையே, விவசாயத்திற்காக 1 கோடியே 54 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் கூடுதலாகவும், கால்நடைத் துறையில் 47 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் கூடுதலாகவும், மீனளத்திற்கு 28 லட்சத்து 6 ஆயிரம் ரூபாய் கூடுதலாகவும், வனத்துறைக்கு 26 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் கூடுதலாகவும், சின்கோனு துறைக்கு 9 லட்சத்து 69 ஆயிரம் ரூபாய் கூடுதலாகவும் ஒதுக்கி வேளாண்மையை நல்ல நிலைக்குக் கொண்டு வரவேண்டும், விவசாயத்தை நல்லமுறையிலே பெருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, அதோடு தொடர்புடைய ஏனைய இனங்களுக்கும் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த விவாதத்தில் 29 உறுப் பினர்கள் கலந்துகொண்டு நல்ல பல கருத்துக்களைத் தெரிவித்திருக் கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

என்னுடைய விளக்க உரையிலே குறிப்பிட்டிருக்கின்ற கருத்துக்களுக்கு மேலாக சில கருத்துக்களை முதலில் சொல்லிவிட்டு, கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டுப் பேசிய சில குறைபாடுகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் கடைசியில் சொல்லலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக விவசாயம் முன்னேறுவதற்கு, விவசாயிகள் இன்றைய தினம் கூடுதலாக உற்பத்தி செய்ய அமோக விளைச்சல் தரக்கூடிய ரகங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வரும் நேரத்தில் அவர்களுக்கு உரம் கூடுதலாகத் தேவைப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உரத் தட்டுப்பாடு இருந்தது. அந்த உரத்தட்டுப்பாட்டை நீக்கி நமக்குத் தேவையான உரத்தைப் பெற்றோம். பெற்ற உரத்தை முறையாகப் பரவலாக விவசாயிகளுக்குக் கிடைக்கும்படியான ஏற்பாடுகளெல்லாம் செய்துகொடுத்தோம். இன்றைய தினம், விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு அதிகரித்து வருகிறது என்று ஒரு கோரிக்கையை, விவசாயிகள் குறையை எடுத்துச் சொல்லப்படும் நேரத்தில், விவசாயிகள் மீது மேலும் சுமையை ஏற்றும் அளவில்



மத்திய அரசு வரவு-செலவுத் திட்டத்திலே உரங்கள் மீது ஆயத் தீர்வையும், மின் விசை, பம்பு செட்டுகள் மீது ஆயத் தீர்வைகளும், வேளாண்மை சொத்து வரிகளும் விதிக்க மத்திய அரசு தீர்மானித்தது. அந்தச் செய்தியைப் பத்திரிகையிலே படித்ததும், தமிழகத்திலுள்ள விவசாயிகள் அனைவருமே திடுக்கிட்டார்கள். நமது தமிழக அரசும், கவலையோடு அந்தச் செய்தியை அறிந்து அந்தக் குறைகளை நீக்குவதற்குச் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் அதிர்ஷ்டவசமாக மத்திய உணவு வேளாண்மை அமைச்சரவர்கள் தமிழகத்திற்கு வந்தார்கள். உர சம்பந்த மாக ஒரு மாநாட்டிலே பேசினார்கள். அதையடுத்து, நமது மாண்புமிகு முதல் அமைச்சரவர்களும், நிதி அமைச்சரவர்களும், நானும், திரு. ஜெகஜீவன்ராம் அவர்களைச் சந்தித்து மத்திய அரசு அண்மையிலே விதித்த புதிய வரிகளாலே தமிழக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள், அந்தக் குறையை நீக்கும் முறையில் உங்களுடைய நல்லெண்ணத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று அவர்களை வேண்டிக் கேட்டுக்கொண்டோம்.

தமிழகத்து விவசாயிகளுடைய குறையை ஆணித்தரமாக அவர் களிடத்தில் எடுத்து வாதிட்ட பிறகு அவர்களும் 'உங்களுடைய கோரிக்கை நியாயமானதுதான், என்னுடைய நல்லெண்ணம் உங்கள்பால் உள்ளது, அதற்காக வாதாடுவேன்' என்று சொன்னார்கள். அவ்வாறே அவர்கள் அதற்குத் தகுந்த முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள். எங்களுடைய கோரிக்கை வெற்றி பெற்றுவிட்டது என்பதற்கு ஆதாரமாக உதவிப் பிரதமர் அவர்கள் இதற்கு விதிக்கப்பட்ட புதிய வரிகளைப் பற்றி மறு பரிசீலனை செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். தமிழக மக்கள் சார்பில் முதலமைச்சர் அவர்களும் நிதியமைச்சர் அவர்களும், நானும் எடுத்துக் கூறிய கருத்துக்கு திரு ஜகஜீவன்ராம அவர்கள் ஆதரவு தந்து அதைப் பற்றி மறுபரிசீலனை செய்யக்கூடிய சூழ்நிலை உருவாக்கியதற்காக உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன். கடைசியாகப் பேசிய நண்பர் நல்லசாமி அவர்களுடைய தலைவர் இந்தப் புதிய வரிவிதிப்பைக் கண்டித்துப் பேசாவிட்டாலும், அவர்கள் பேசுகின்றபோது இந்த வரியை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பேசியதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் புதிய வரி விதிப்பின் காரணமாக 1—3—69-ல் இருந்து மத்திய அரசின் 'பூல் பிரைஸ்' ஏறியுள்ளது. வரியின் காரணமாக 'பூல் பிரைஸை' ஏற்றுகிறோம் என்று சொல்லி திடீரென்று ஏற்றுகிறார்கள். நம்முடைய தமிழக அரசு வசம் இன்றைய தினம் 83,000 டன் நைட்ரஜன் உரம் தேங்கியிருக்கின்றது. இதன் மதிப்பு சற்றேறக்குறைய 23 கோடி ரூபாய் ஆகும். இந்தப் புதிய வரிப் பிரகாரம் நாம் விவசாயிகளுக்கு விற்க நேர்ந்தால் மேலும் $2\frac{1}{2}$ கோடி ரூபாய் விவசாயிகள் சார்பில அவர்கள் மீது சுமத்த வேண்டியிருக்கும். ஒரு வரியின் மூலமாக தமிழக விவசாயிகள் அந்த அளவுக்குப் பாதிக்கப்படுவார்கள் என்பதை இந்தச் சபை உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளுவது நல்லது. உரத்தை அவ்வாறு அதிக விலைக்கு விற்கின்ற காரணத்தால் விவசாயிகள் உரத்தை வாங்கா விட்டால் ஒரு நாளைக்கு 35,000 ரூபாய் இதற்காக வட்டிக் கட்ட வேண்டி யிருக்கும். ஆண்டு ஒன்றுக்கு 82 லட்சம் ரூபாயை வட்டியாக மட்டும் தமிழக அரசு மத்திய அரசுக்குக் கட்ட வேண்டிய இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருக்கும். இதைத் தவிர்க்கும் முறையில் மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொண்டோம். 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ந் தேதிக்கு முன்னால் அரசுக் கிடங்கில் தேங்கி யிருக்கும் உரத்தைப் பழைய விலைக்கே விற்க அனுமதி தரவேண்டு மென்று கேட்டுக் கொண்டதற்கு, 'எழுதி அனுப்புங்கள், அனுதாபத்தோடு கவனிக்கிறேன்' என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன வார்த்தையிலே எங்களுக்குப் பெருநம்பிக்கை இருக்கும் காரணத்தால் அரசாங்கத்தில் இருந்து மொத்த வியாபாரிகளிடமும், சில்லரை வியாபாரிகளிடமும் கொடுக்கப்பட்ட 7,000 டன் நைட்ரஜன் உரம் விற்காமல் தேங்கியிருப்பதை கூடுதலான விலைக்கு விற்பதன் காரணமாக 20 லட்சம் ரூபாய் தமிழக

அரசுக்குக் கிடைக்கும் என்றாலும், அதனால் விவசாயிகள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுவார்கள் என்பதைக் கருதி, பழைய விலைக்கே விற்றுவிடுங்கள் என்று அந்த வியாபாரிகளிடத்தில் சொல்லியிருக்கிறோம். அது நீங்கலாக 83,000 டன் உரம் நம் வசம் இருக்கிறது. அவர்கள் இந்த வரியை பற்றி மறுபரிசீலனை செய்து நிச்சயமாக வரியை எடுப்பார்கள் என்ற நல்ல நம்பிக்கையில்தான் கொஞ்சம் தைரியத்தோடு பேசிக்கொண்டிருக்கிறோம். அவர்கள் அந்த வரியை எடுக்காவிட்டால் நம்முடைய கதி என்ன ஆகும் என்று சொல்லமுடியாது. நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர்களே இந்த வரியை அதிகமாகக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பம்ப் செட்டுக்கு வரியைக் கூட்டியதைப் பற்றிக்கூட கண்டித்துச் சொல்லவில்லை. இந்த வரியால் கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய உற்பத்தியாளர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுவார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறந்துவிட்டுப் பேசியிருக்கிறார்கள். அந்த வரியை எதிர்த்துப் பேசினால் கட்சியில் என்ன ஆகுமோ என்று பயந்து போயிருக்கிறார்கள். திரு. நல்லசாமி அவர்கள் சிறந்த விவசாயி என்ற அடிப்படையில் என்ன வந்தாலும் வரட்டும், கட்சியில் என்ன நடவடிக்கை எடுத்தாலும் எடுக்கட்டும் என்ற முறையில் 'நான் எதிர்க்கிறேன்' என்று பேசிய அவர்களுடைய தைரியத்தை நான் பாராட்டுகிறேன்.

பூச்சி கொல்லி மருந்துக்காகக் கொடுத்து வந்த ஆதரவுத் தொகையை நிறுத்திவிடும்படியாக மத்திய அரசு தமிழக அரசுக்குத் தாக்கீது அனுப்பியிருக்கிறது. ஆனால் தமிழக அரசு அந்தக் காரியத்தைத் துணிந்து செய்ய விரும்பவில்லை. இந்தத் தொகை ஏற்கனவே பணப் பயிருக்கு 50 சதவிகிதமும், உணவு தானியத்திற்கு 25 சதவிகிதமும் என்று இருந்ததை மறைந்த மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்கள்தான் உணவு உற்பத்தி செய்கின்றவர்களுக்குக் கொஞ்சம் கூடுதலாக சப்ஸிடி கொடுக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்து, 25 சதவிகிதமாக இருந்ததை 35 சதவிகிதம் என்ற அளவுக்கு உயர்த்தியும், 50 சதவிகிதமாக இருந்ததை 35 சதவிகிதம் என்று குறைத்தும் உதவித் தொகை கொடுக்க முடிவு செய்து அதன் மூலம் 10 லட்சம் கூடுதல் செலவை ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் எடுத்த நல்ல முடிவை நாம் அறவே நீக்கிவிடுவதன் மூலமாக விவசாயிகள் 'கொடுப்பதுபோல் கொடுத்து நிறுத்திவிட்டார்களே' என்று குறையைச் சொல்லத்தான் நேரும் என்ற காரணத்தால அந்த அளவுக்குத் துணியவில்லை. ஆனால் காங்கிரஸ் ஆட்சி செய்யும் மாநிலங்களில், இந்திரா காந்தி பிறந்த உத்தரப் பிரதேசத்தில், குஜராத்தில், மத்தியப்பிரதேசத்தில், ஒரிஸ்ஸாவில், பஞ்சாபில், ஹரியானாவில், ஆந்திராவில் இந்த சப்ஸிடியை அறவே நிறுத்தி இருக்கிறார்கள். ஏழு மாநிலங்களில் இந்த சப்ஸிடி அறவே நிறுத்தப்பட்டிருக்கிறது. நாம் அந்தக் காரியத்தைச் செய்யாமல் படிப்படியாக அதைக் குறைக்க வேண்டுமென்ற அளவிலே இந்த ஆண்டு ஐந்து சதவிகிதத்தைத்தான் குறைத்திருக்கிறோம். அடுத்த ஆண்டு ஐந்து சதவிகிதம் என்று குறைக்கும்போது அறவே நீக்கிவிடுவது என்பதல்லாமல் கடைசியாக 10 சதவிகிதத்தில் நிற்கலாம் என்ற அளவிலே முடிவு எடுத்திருக்கிறோம், பூச்சி மருந்தைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த சப்ஸிடி கொடுக்கப்பட்டது என்றும், இப்போது விவசாயிகள் விரும்பி பூச்சி மருந்தைப் பயன்படுத்துகின்ற நிலை ஏற்பட்டுவிட்ட காரணத்தால் நிறுத்திவிடலாம் என்ற கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தை நாம் ஏற்றுக் கொள்ளாத நிலையில் விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற முறையில் முடிவு எடுத்திருக்கிறோம்.

இந்தச் சர்க்கார் விவசாயிகளுக்கு என்ன செய்கிறது என்று கேட்கிறார்கள். இவையெல்லாம் விவசாயிகளுக்குக் காட்டப்படும் சிறுசிறு சலுகைகளாகும். இந்தச் சலுகைகளை எல்லாம் செய்து கொடுப்பதன் மூலம் விவசாயிகளைத் திருப்திசெய்து உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்ற தைரியத்தில் இதையெல்லாம் செய்து வருகிறோம்.



இந்த ஆண்டு வழக்கத்திற்கு மாறாக இயற்கை நமக்குத் துணை செய்யாத நேரத்திலும் தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைத் திட்டம் வெகுவாக முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்காக பாடுபட்ட வேளாண்மைத் துறையில் பணியாற்றுகின்ற உணவு உற்பத்தி கமிஷனர் அவர்களுக்கும், அலுவலகத்திலிருந்து பணியாற்றுகின்ற செயலாளருக்கும், டைரெக்டர் அவர்களுக்கும், அவருக்குக் கீழே துணையாக இருக்கின்ற ஏனைய அதிகாரிகளுக்கும், தஞ்சை மாவட்டத்தில் வேலை செய்கிற விவசாயத்துறை மாவட்ட அதிகாரிகளுக்கும், கிராம சேவக்குகளுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதற்கெல்லாம் மேலாக தஞ்சையிலுள்ள விவசாயத் தொழிலாளர்கள் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் தந்து உணவு உற்பத்தியிலே தஞ்சை மாவட்டத்தில் கூடுதலாக உற்பத்தி ஆன காரணத்தாலே பெரும் அளவுக்கும் பஞ்சத்தைத் தவிர்க்கும் முறையில் அவர்கள் அரும்பாடுபட்டிருக்கிறார்கள்—அப்படிப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிலவுடைமையாளர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். சிலபேர் உற்பத்தியைக் குறைக்கவேண்டும், அதற்காகவே கரும்பு சாகுபடி செய்து வரவேண்டுமென்ற நோக்கத்தில் போகிற நேரத்திலே கூட தஞ்சையிலுள்ளவர்கள் இந்த அளவுக்கு அரசாங்கத்தோடு ஒத்துழைப்புத் தந்ததற்காக அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து பாராட்டுகின்ற நேரத்தில் கீழ்வெண்மணி மாலை
யில் உயிரிழந்த அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு என்னுடைய 6-00
வணக்கத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய வேண்டுகோள் எல்லாம் இம்மாதிரி சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். திரு. நல்லசாமி அவர்கள், நிலத்திற்கு உரியவர்களும், நிலத்தில் பாடுபடக்கூடியவர்களும் இதை முழுமையாக உணரக்கூடிய நிலை உருவாகவேண்டுமென்ற நல்லெண்ணத்தைத் தெரிவித்தார்கள். அதுதான் நம் பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ணமுமாக இருந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கிற நேரத்தில் இந்த கீழ்வெண்மணி சம்பவத்தைப் பற்றி அறிந்ததும் அதுவே அவருக்கு பெரிய காய்ச்சலாக மாறிவிட்டது. அதனால் அவர்கள் பாதிக்கப்பட்டு அதற்கு மேல் அவர்கள் குணம் அடையவில்லை என்று சொல்லவேண்டும். ஒவ்வொரு நிமிடமும் தஞ்சைக்கு தொலைபேசி மூலம் பேசி இந்தச் சம்பவத்தைக் குறித்த செய்தி அறிந்து அவர்கள் திடுக்கிட்டுப் போனார்கள். கீழ்வெண்மணிச் சம்பவம் மாதிரி இனி எந்தக் காலத்திலும் நடக்கக்கூடாது. அந்த அளவிற்குப் பார்த்துக்கொள்ள வேண்டியது நிலவுடைமையாளர்களுக்கும் பொருந்தும் மற்றவர்களுக்கும் பொருந்தும். குறிப்பிட்டவர்களை மட்டும் குற்றம்சாட்டிவிடக்கூடாது. கீழ்வெண்மணியில் ஏற்பட்ட சம்பவம்போல் இனி எங்குமே நடைபெறாத அளவிற்குப் பார்த்துக்கொள்ள அரசாங்கமும், நிலவுடைமையாளர்களும், தொழிலாளர்களும் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்ற என் வேண்டுகோளை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

விமானம் மூலம் மருந்து தெளிக்கிற விஷயத்தில் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம். பருவ நேரத்தில் கோளாறு ஏற்படுகிற நேரத்தில் இந்த பூச்சி மருந்து தெளிப்பதில் கொஞ்சம் பாதிக்கப்படுகிறது. பருவ நிலை சரியாகயிருந்திருக்குமானால் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டிருக்கமுடியும். 1968—69-ல் நெல் பயிருக்காக 2,38,000 ஏக்கர்களில் நாம் பூச்சிக்கொல்லி மருந்தை ஆகாய விமானம் மூலம் தெளித்திருக்கிறோம். நிலக்கடலை பொறுத்தவரையில் 43,173 ஏக்கர்களிலும், பஞ்சுக்கு 6,100 ஏக்கர்களிலும், ராகிக்கு 2,702 ஏக்கர்களிலும் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிப்பதால் பயிரில் படாமல் பக்கத்திலுள்ள புல்வெளிகளில் பட்டு அதனால் கால்நடைகள் பாதிக்கப்படும் நிலை ஏற்படுகிறது என்று திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் சொன்னார்கள். அப்படி கால்நடைகள் பாதிக்கப்பட்டதாக அரசாங்கத்தின்

கவனத்திற்கு வரவில்லை. பூச்சி மருந்து தெளிப்பதில் சர்வ ஜாக்கிரதையாக நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். மூன்று வகையான கொடி பிடித்து அந்தக் காரியத்தை செய்கிறார்கள். வெள்ளைக்கொடி பிடிக்கும்போது மருந்து அடித்துக்கொண்டு போவார்கள். நீலக்கொடி காட்டும்போது ஆரம்பிப்பார்கள். சிகப்புக் கொடி தெரிகிற இடத்தில் அங்கு அடிக்காமல் நிறுத்திவிடுவார்கள். சிகப்புக் கொடி காண்பித்து மலை, மரங்கள்; நீர்த் தேக்கங்கள், பெரிய வாய்க்கால்கள் ஓடுகிற பகுதிகள் இங்கெல்லாம் நிறுத்தப்படுகிறது.

தஞ்சையில்தான் பூச்சி மருந்துக்கு ஒரு எதிர்ப்பு பரவலாக இருந்தது. ஆனால் தஞ்சையில் உள்ள விவசாயிகள் கூட இன்றையதினம் விரும்பி அதை அடிக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த பைலட் ஸ்கீம் 1968–69-ல் சீர்காழியில் 1,860 எக்கர்களிலும், திருவையாற்றில் 4,000 எக்கர்களிலும் செயல்படுத்தப்பட்டது. 1969–70-ல் இன்னும் விரிவு படுத்தலாம். பஞ்சாயத்து யூனியன்களைக் கலந்துகொண்டு இந்தக் காரியத்தில் இறங்குகிறோம்.

பவர் ஸ்ப்ரேயர்ஸ் பயன்படுத்தப்படவேண்டுமென்று திரு. சுப்பையா முதலியார் அவர்கள் சொன்னார்கள். ஏழை விவசாயிகள் தனிப்பட்ட முறையில் பவர் ஸ்ப்ரேயர்ஸ் வாங்கி வைத்திருப்பது என்பது கடினமான காரியம். ஆகாய விமானம் மூலம் தெளிக்கும்போது சில பகுதிகளில் தெளிக்கவில்லையென்றால் அந்தப் பகுதிகளில் பஞ்சாயத்து யூனியனிலிருந்து வாடகைக்கு எடுத்து தெளிக்காத பகுதிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆகாயவிமானம்மூலம் தெளிப்பதால் பம்பாயிலுள்ள நான்கு கம்பெனிகள் வசதியடைகிறார்கள் என்றார்கள். பம்பாய்க்காரர்கள் பிழைக்க வேண்டும் என்பதற்காக அந்தக் காரியம் நிச்சயமாக நிறைவேற்றப்படவில்லை யென்பதை திரு. சுப்பையா முதலியார் அவர்கள் அனுதாபத்தோடு எடுத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். யாரோ நான்கு பம்பாய்க்காரர்கள் பிழைக்க இந்தத் திட்டம் என்றார்கள் அவர்கள். நெல்லுக்கு மட்டும் 2,38,000 எக்கர்களில் அடிக்கப்பட்டிருக்கிறது. பவர் ஸ்ப்ரேயர்ஸ் மூலம் இதைச் செய்ய முடியுமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகாய விமானத்திற்காக மத்திய சர்க்கார் சப்ஸிடி தருகிறார்கள். அதிலும் கூட 25% குறைத்திருக்கிறார்கள். அதன் காரணத்தால் இன்றையதினம் விவசாயிகள் கொஞ்சம்கூட தொகை கட்டவேண்டியிருக்கிறது. 10 அல்லது 11 வரையில் ஒரு எக்கருக்கு கட்டவேண்டியிருக்கும்.

தென்காசிப் பகுதியில் இதற்கு ஒரு எதிர்ப்பு வந்தது. அதுமட்டுமல்ல. எங்கள் மாவட்டத்தில் கூட நான்கு பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மறுத்தார்கள். ஆனால் விவரங்களை எடுத்துச் சொன்ன பிறகு அந்தப் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் நீங்கள் சொன்னது சரியாகிவிட்டது, அதனால் பலன் அடைந்திருக்கிறோம் என்று இப்போது ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல் திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் தொகுதியிலும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

ஒரு பெரிய விவசாயி ஒரு தந்திரத்தைக் கையாண்டார்கள். ஒரு விண்ணப்பத்தை எழுதி அதில் கையொப்பம் வாங்கினார்கள். விவசாயிகளும் தெரியாமல் கையொப்பம் இட்டு விட்டார்கள். மருந்து தெளிக்கக் கூடியதற்கு முதல் நாள் விவரம் தெரிவிக்கப்பட்டது. ஆகாய விமானம் நாளை காலை உங்கள் ஊருக்கு வர இருக்கிறது, பூச்சி மருந்து அடிக்கவேண்டாம் என்று எழுதிக் கொடுத்திருக்கிறீர்களே. அதனால் இன்னின்ன நன்மைகள் ஏற்பட இருக்கிறது என்று சொன்னதற்குப் பிறகு நாங்கள் விவரம் தெரியாமல் கையொப்பம் போட்டுக் கொடுத்துவிட்டோம். அந்த பெரிய விவசாயி முன் கூட்டியே தன் சொந்த நிலத்திற்கு பூச்சி மருந்து அடித்துவிட்டார்கள். நாங்கள் மீண்டும் அடித்தால் இரண்டாவது முறையாக அவர்கள் பணம் கட்டவேண்டி வரும் என்று ஏமாற்றியிருக்கிறார்கள். இப்போது அடிக்க நாங்கள் ஒத்துக்கொள்கிறோம் என்று மறுபடியும் எழுதி கையொப்பம் போட்டுக் கொடுத்தார்கள். நெமிலி பகுதியில் அப்படி அடிக்கப்பட்டது.





இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன என்று சொன்னால் பெருவாரி யானவர்கள் ஒத்துக்கொள்கிற கருத்தைத்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற அளவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சிறுபான்மையினர் ஓரிருவர் சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளக்கூடாதா என்று திரு. சுப்பைய்யா முதலியார் அவர்கள் கேட்கமாட்டார்கள். அவர்கள் சொல்லும் பல கருத்துக்களை ஒத்துக்கொள்ளும் நிலை இருந்தாலும் இதுவிஷயத்தில் மாறுபடுவதை அவர்கள் தவறாக நினைக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

விவசாய இயந்திரக் கருவிகள் நிறைய வேண்டுமென்று திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் கேட்டுக்கொண்டார்கள், மற்ற பல உறுப்பினர்களும் அந்தக் கருத்தைத்தெரிவித்தார்கள். 1969-70-ல் கிணறுகள்தோண்டுவதும், அதை ஆழப்படுத்துவதற்குமான ஒரு முற்போக்கு திட்டத்தைமேற்கொண்டுள் ளோம். அதை விரைவில் செயலாற்றினால் விவசாயிகளுக்கு பெரிய பலன் ஏற்படும். 23 லட்சம் ரூபாய் செலவில் Down-the-hole rotary power drill. இறக்குமதி செய்ய தமிழக அரசு மத்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. அந்தக் கருவிகள் அயல் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகிவிட்டன, விரைவில் அவை இங்கு வந்து சேரும் என்ற நல்ல செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் ஒரு கிணறு வெட்டக் கூடியநேரத்தில் பத்து கிணறுகளைத் தோண்ட இந்தக் கருவிகள் பயன்படும். இரண்டு கருவிகள்தானா என்று கேட்டார்கள். இதைப் பெறுவதிலேயே பல சங்கடங்கள், கஷ்டங்கள் இருக்கின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் திட்டத்தை ஒத்துக்கொண்டு அதற்காக மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி செயல்படுத்துகிற முயற்சியை எடுத்தார்கள். அந்தத் திட்டம் வெற்றி பெறும்போது அவர்கள் இல்லாதது எனக்கு பெரும் வருத் தத்தைத் தருகிறது. பெர்கூஸன் பவர் ட்ரில்ஸ் தயாரிக்க முற்பட்டிருக் கிறது. இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்றில்தான் இந்தக் கருவி தயா ரிப்பது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயக் கருவிகள், குறிப்பாக ட்ராக்டர்கள் தேவையான அளவிற்கு கிடைப்பதில்லை என்று சொல்கிறார்கள். நில அடமான பாங்க்ஸ் மூல மாகவும், அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும் நிறைய கடன்கள் சாங்க்ஷன் செய்திருக்கிறோம். சாங்க்ஷன் செய்திருக்கிற அளவிற்கு விவசாயிகளுக்கு ட்ராக்டர்கள் கிடைப்பதில்லை என்ற குறை பாடு இருக்கிறது. குறிப்பாக ட்ராக்டர்கள் வேண்டுவோர் அனைவரும் ஃபெர்கூஸன் ட்ராக்டர்ஸ் வேண்டுமென்று கேட்கிறார்கள். திரு எஸ். ஜே. ராமசாமி அவர்கள் சிரிக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினராக இருந்தும்கூட வாங்க முடியவில்லையே என்ற கவலை கூட அவருக்கு உண்டு. விவசாய அமைச்சர் அவர்கள் சொன்னால் கொடுப்பார்களாமே என்று சொன்னார்கள்.

ஆனால் மாதத்திலே இரண்டு டிராக்டர்கள்தான் தயாராகின்றன என்று உற்பத்தியாளர்கள் சொல்லுகிறார்கள். டி.வி.எஸ். உரிமையாளர் சொன்னார்கள், என்னுடைய சொந்தத்திற்குக்கூட கிடைக்கவில்லை என்று அவருடைய கஷ்டத்தைச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே ஒரேஒரு உற்பத்திசாலை இருப்பதாலேதான் இந்தக் கஷ்டங்கள் இருக்கின்றன. இதை அமைச்சரவர்களிடத்தில் வலியுறுத்திச் சொன்னோம். அண்மையிலே இங்கே வந்த வேளாண்மை அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்கள் உதவி செய்யும் முறையிலே, 650 வெளிநாட்டு டிராக்டர்களை வழங்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதனால் விலையும் குறையும், குதிரை ஓட்டமும் அதிகமாக இருக்கும். வேலையும் திறமையாக நடக்கும். எந்தெந்தப் பகுதி களுக்கு எந்தெந்த டிராக்டர்கள் வரும் என்று என்னுடைய குறிப்பிலே தெரிவித்திருக்கிறேன். டிராக்டர்கள் சேங்ஷனாகி கிடைக்காமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு, இந்த நல்ல செய்தி திருப்தி யளிக்கும் என்று கருதுகிறேன். மேலும் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொ ரேஷன் மூலமாக டிராக்டர்களை வழங்கும் காரியத்தை மேற்கொண்டு இருக்கிறோம். அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் மூலமாக வழங்கப் படும் டிராக்டர்களை வேறு காரியத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்ற

செய்தியைச் சொன்னார்கள். அந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தொழில் துறையில் அனுபவம் உள்ள ஒருவரை உறுப்பினராகவும், உத்தியோகப்பற்றற்ற உறுப்பினராகவும், விவசாயத்துறையில் அனுபவமுள்ள இரண்டு பேர்களையும் போட்டிருக்கிறது.

திருச்சிராப்பள்ளியிலும், வேலூரிலும் 1969-70-ல் டிராக்டர் பட்டறைகளைத் திறக்க 7 லட்சம் ரூபாய்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். டிராக்டர்களுக்குத் தேவையான ஸ்பேர் பார்ட்களும், டயர்களும் கிடைப்பதில்லை என்று அடிக்கடி இந்த மன்றத்தில் கூறிவருகிறார்கள். அந்தக் குறையை நீக்கும் வகையிலே வேளாண்மை தொழிற்கழகம் மத்திய அரசைத் தீவிரமாக அணுகியுள்ளது. டயர் கம்பெனிகளில் வேலை நிறுத்தம் இருந்ததால் டயர் கிடைக்காமல் இருந்தது. இங்கு பேசிய உறுப்பினர்களில் சிலர், செங்கல்பட்டு மாவட்டத்தில் டயர் கிடைக்காததால் ஆங்காங்கு டிராக்டர்கள் தேங்கியிருப்பதாகச் சொன்னார்கள். சர்க்கார் பண்ணையிலே வேலை செய்யும் டிராக்டர்களும், தனிப்பட்டவர்களிடம் இருப்பதும், வேலையில்லாமல் இருக்கக்கூடிய கஷ்டம் இருக்கிறது. அதெல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டது. அதற்குப் பரிகாரம் காணும் வகையில் இந்தத் திட்டத்தை விரிவு படுத்தி இருக்கிறோம்

அரசுக்கு ஏற்படும் நிதிநிலை சங்கடத்தினால் வேளாண்மை வளர்ச்சி பாதிக்கப்படக்கூடாது என்ற கருத்தில் நில அடைமான வங்கிகளின் மூலமாகவும் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் மூலமாகவும். தனிப்பட்ட வங்கிகளின் மூலமாகவும் கடன் வாய்ப்பு பெறுவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்ததாலும் நல்ல சாதனைகளை நாம் அடைந்திருக்கிறோம். ஏறக்குறைய 2 கோடியே 60 லட்சம் ரூபாய், தனிப்பட்ட பேங்குகள் நமது விவசாயிகளுக்குக் கடன் உதவி செய்ய, மாவட்டத்திற்கு ஒரு பேங்க்மூலம் உதவிசெய்ய முன்வருகிறார்கள். நில அடைமான வங்கிகள் மூலமாகவும், அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் மூலமாகவும் கடன் கொடுப்பது வேண்டியதில்லை, அதனாலே விவசாயிகள் கெட்டுவிடுகிறார்கள். அந்தப் பணத்தை வேறு காரியங்களுக்கு, கல்யாணம் போன்றவைகளுக்குச் செலவு செய்து விடுகிறார்கள் என்று திரு. சுப்பராஜா அவர்கள் சொன்னார்கள். அவர்கள் இந்த நேரத்தில் இங்கு இல்லை. விவசாயிகளுக்குப் பணமாகக் கொடுப்பதில்லை, பொருளாகக் கொடுக்கப்படுகிறது என்ற அந்த விவரம் தெரியாமல் சொல்லி விட்டார்கள் என்று கருதுகிறேன்.

சர்வீஸ் ஸ்டேஷன் வைக்க வேண்டுமென்றும், அரசாங்கமே அதைச் செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள். அரசாங்கமே நெல்லை உற்பத்தி செய்து, மூட்டை கட்டி, அதை விற்று, பணத்தையும் கொண்டு போய்ப் பெட்டியில் வைத்து விட்டு வரவேண்டுமென்ற முறையில் அவர்கள் சொல்வது இருக்கிறது. அருமையான யோசனைகளைச் சொல்லாமல் சாத்தியக்கூறு இல்லாதவகையில் கூறுகிறார்கள். இருபதாண்டுக் காலமாக கடன் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறதுஎன்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது கடன் வாய்ப்பிலே சீர்திருத்தம் செய்து, கிணற்றுக்கு பம்பு செட்டுகள் வைத்துக் கொள்வதற்கு வசதி செய்திருக்கிறது. இதிலே சூழ்ச்சி இருக்கிறது என்றுகூட பிரச்சாரம் செய்தார்கள். ஆடுதுறை 27 சாகுபடி செய்தால் 10 மூட்டைகூட விளையாது என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது ஆடுதுறை 27-ஐக் கொண்டு விவசாயம் செய்ய வேண்டும். அதைப் பயன்படுத்தவேண்டுமென்று முன்னுக்கு வருகிறார்கள். வேண்டிய வசதிகளை அரசாங்கம் செய்கிறது என்று விவசாயிகள் உணரும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

ரிசர்வ் வங்கியின் உறுப்பான அக்ரிகல்சரல் ரீஃபைனான்ஸ் கார்ப்பொரேஷன் மூலமாக 10 கோடியே 18 லட்சம் ரூபாய் பல திட்டங்களுக்கு கிடைக்கவிருக்கிறது. அதன்மூலமாக, சிறு பாசனம், கால்நடை வளர்ச்சி, பால் பண்ணை அபிவிருத்தி, மீன் வளர்ச்சி ஆகிய பல துறைகளில்



விவசாய மறு நிதி கழகத்தின் நிதி உதவியுடன் பல திட்டங்கள் நிறைவேற இருக்கிறது என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விவசாயப் பல்கலைக் கழகம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வேறு பல மாநிலங்களிலே அந்த யூனிவர்சிட்டி திறக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தை நமது மறைந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அப்படி நம்முடைய மாநிலத்தில் பல்கலைக் கழகத்திலே, ஒரு கல்லூரி நிறுவ வாய்ப்பு வசதி இருக்கிறது, மற்ற மாநிலங்களில் பல்கலைக் கழகம் நிறுவியவர்கள் சில இடையூறுகள் குறுக்கிட்டிருப்பதாகச் சொல்கின்றார்கள், அதையும் கவனிக்க வேண்டுமென்று சொல்லி, அதற்காக உயர் மட்டக் குழு ஒன்றை நியமித்து அதில் விவசாய இலாக்கா டைரக்டர், கோயம்புத்தூர் அக்ரிகல்சரல் கல்லூரி பிரின்ஸ்பால் இருக்கிறார்கள். குழுடன், மதுரை அக்ரிகல்சரல் காலேஜ் இதர மாநிலங்களுக்குச் சென்று அந்தப் பல்கலைக் கழகம் எந்த அளவிலே செயல்படுகிறது, மத்திய அரசின் சகாய உதவி எவ்வளவு இருக்கிறது என்று குழு தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பித்த பிறகு அதற்கு வேண்டிய நடைமுறைகளை மேற்கொள்ளலாம் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

விவசாய ஆராய்ச்சியின் மூலம், எம்.சி.யு. 5 என்ற புதிய ரக பருத்தி உருவாக்கப்பட்டுள்ளது. இதைக்கொண்டு 70-ம் நெம்பர் நூல் வரை நூற்கலாம். அந்தப் பருத்தியின் மூலம் அந்நிய செலாவணி ஆண்டொன்றுக்கு சுமார் 20 கோடி ரூபாய் கிடைக்கும் சூழ்நிலை இருக்கிறது. இதைத் தவிர, நிலக் கடலையில் 2 புதிய ரகங்களும், காய்கறி வகைகளில் 4 புதிய ரகங்களும், இப்பொழுது பரவலாக விளையக்கூடிய அளவில், நடைமுறைக்குக் கொண்டு வரும் அளவில் இந்தத் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறோம் பருப்பு வகைகள் இரண்டும் உருவாக்கப்பட்டுள்ளன.

திரு. பலராமன் அவர்கள் சொன்னார்கள், அதற்குத் தனிப்பட்ட விவரத்திலே சொல்லும்பொழுது பதில் சொல்லலாம் என்று கருதுகிறேன். கொடுக்க வேண்டிய விதைகளை தமிழக அரசே உருவாக்கத் திட்டம் தீட்டி அதற்கு வேண்டிய முறைகளுக்காக, 1969-70-ஆம் ஆண்டில் 16,000 ஏக்கர்களில் உற்பத்தியாகும் விதைகளைப் பரிசீலனை செய்து சான்றிதழ் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. சர்க்கார் துறையிலே இயங்கும் விதைப் பண்ணை நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருந்தது. அதற்குக் காரணம் அந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு நிதி உதவி கொடுத்தார்கள் என்ற காரணத்தினாலே, விளைச்சல் இல்லாத, தண்ணீர் வசதியில்லாத நிலங்களை எடுத்துக்கொண்டு, அவசரம் அவசரமாக எடுத்தார்கள். இப்பொழுது அந்த வேகம் குறைந்துகொண்டு வரும் சூழ்நிலை இருக்கிறது. இப்பொழுது இருப்பது 64 ஃபார்ம்ஸ். இந்த 64 ஃபார்மில் 26 நஷ்டத்தில் இயங்கி வருகின்றன. ஆயினும் 1967-68-ல் மொத்தத்தில் 4,25,189 ரூபாய் லாபம் கிடைத்து இருக்கிறது. இன்னும் நல்லமுறையிலே இயங்க, விதைப்பண்ணைகளை மேம்படுத்துவதிலே அரசாங்கம் தயங்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தைப்பற்றி, கிராப் இன்ஷ்யூரன்ஸ் வேண்டுமென்று கருத்து தெரிவிக்கப்பட்டது. அதற்கு வேண்டிய திட்டங்களை மேற்கொள்வதற்கு ஒரு குறிப்பு மத்திய அமைச்சரவையிலிருந்து நமக்குக் கிடைத்து இருக்கிறது. அந்த அடிப்படையிலே விவசாயிகள் எந்த அளவுக்கு ப்ரிமியம் ரேட் கட்ட வேண்டுமென்று கவனிக்க வேண்டிய நிலைகளை நிர்ணயிக்க, கோயம்புத்தூர் மாவட்டத்திலே காங்கேயம், கோபி, தாராபுரம் தாலூக்காக்களில் பரீட்சார்த்தமாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு வேண்டிய குறிப்புகளை ஆய்ந்து, பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்த பரீட்சார்த்தமாக முயற்சிகளை எடுக்க முற்பட்

டிருக்கிறது என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அளவில் விவசாயத் துறையைப்பற்றி நான் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லியிருக்கிறேன்.

அடுத்து, கால்நடை விஷயத்திலே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு மருந்தகம் தேவை என்ற அளவிலே 374 பஞ்சாயத்து யூனியன்களில் 314 பஞ்சாயத்து யூனியன்களுக்குத்தான் இதுவரையில் மருந்தகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டிலே 35 புதிய மருந்தகங்களை நிறுவவேண்டுமென்று முடிவு எடுத்து இருக்கிறோம். அந்த அடிப்படையிலே கால்நடை அபிவிருத்தி, கோழி அபிவிருத்தி விஷயத்திலே அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. இந்த திட்டங்களை நிறைவேற்றுகின்றபொழுது, சில குறைபாடுகள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்ததால் 'பவுல்ட்ரி கமிட்டி' இன்னும் 'கேட்டில் கமிட்டி' என்று இரண்டு கமிட்டிகள் போட்டு, அதற்கு வேண்டிய குறிப்புகளை தயார் செய்யும்படி கேட்டுக்கொண்டோம். கோழி அபிவிருத்திக்கு அந்த கமிட்டி கொடுத்திருக்கின்ற பல சிபாரிசுகளில், 27 பரிந்துரைகளில், 18 பரிந்துரைகள் மீது அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. நமது மாநிலத்தில் 6 கால்நடை பண்ணைகள் இருக்கின்றன. அதிலே ஒன்று ஹோசூரில் இருக்கிறது, மற்றொன்று புதுக்கோட்டையில் இருக்கிறது, மற்றொன்று ஒரத்தநாட்டில் இருக்கிறது, ஒன்று அபிஷேகப் பட்டியில் இருக்கின்றது.

இது போன்ற பண்ணைகளிலே சில குறைபாடுகள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்து, குறிப்பாக ஏற்கனவே இந்த கால்நடைத் துறையிலே பணியாற்றியிருக்கிற மந்திரமூர்த்தி அவர்கள் ஹோசூருக்குச் சென்றார்கள். தவறுகளைக் கண்டு பிடித்தார்கள். சில அதிகாரிகளின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. இன்னும் சில அதிகாரிகளின் மீது குறை சொல்லப்பட்டது. முழுமையாக விசாரணை நடத்தும்படி கூறி அதன்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். எந்த அதிகாரியும் நிச்சயமாக தவறு இழைத்திருந்தால், அதிலிருந்து தப்ப முடியாது. குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள், நடவடிக்கை எடுக்கப்படும். இது விஜிலென்ஸிலே இருப்பதனாலே மேற்கொண்டு தகவல் சொல்லவில்லை. மாடுகளுக்கு தீவனம் வழங்குவதிலே குறை இருக்கிறது என்று, நான் பொறுப்பேற்றப் பிறகு அறிந்து, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சென்ட்ரல் கமிட்டி போட்டதனாலே சென்ற ஆண்டு மட்டும் 10 இலட்சத்திற்கு அரசாங்கத்திற்கு ஆதாயம் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு பண்ணையிலும் இலாபம் வந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது ஹோசூரிலே இலாபம் இருக்கிறது, புதுக்கோட்டையிலே இலாபம் இருக்கிறது, ஒரத்த நாட்டிலே இலாபம் இருக்கிறது, அங்கே போட்டிருக்கிற புதிய அதிகாரிகள் நல்லமுறையிலே செயல்படுகிறார்கள். பால் உற்பத்தி அதிகமாகி இருக்கிறது. கால்நடை விஷயத்திலே கவனம் செலுத்தியதனாலே நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசு துணையோடு சென்னைக்கு 10, 15 மைல் தூரத்திலுள்ள அலமாதியிலே மத்திய எருமை இனவளர்ச்சி பண்ணை ஒன்று ஏற்படுத்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு கமிட்டியும் போட்டிருக்கிறார்கள். விரைவிலே அது கிடைக்கும் என்ற நம்பிக்கையும் நமக்கிருக்கிறது.

வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத்தின் மூலமாக 13 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் கோழி வளர்ச்சிக்கான திட்டங்கள் இரண்டும் 6 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவில் செம்மறி ஆடுகள் வளர்ச்சித் திட்டத்தையும் மேற்கொண்டிருக்கிறோம். அது மாத்திரமல்ல, புதிதாக சேலம் மாவட்டம் மேசேரியிலே ஒரு புதிய ஆட்டு பண்ணை நிறுவுவதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். தென் ஆற்காடு, நீலகிரி மாவட்டங்களில் இரண்டு ஆவினக்காப்பகங்கள் ஆரம்பிக்கப்படும். தென் ஆற்காடு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களை கால்நடையைப் பொறுத்த வரையில் இரண்டு மாவட்டங்களாகப் பிரித்து, அதற்குவேண்டிய வேலைகளை மேற்கொள்ள இருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.





கால்நடை தீவனங்களுக்கு புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்து நிறுவனங்கள் கொடுத்து உதவவேண்டும். சில பேர் ஆக்கிரமிப்பு செய்கிறார்கள். ஆக்கிரமிப்பு செய்கிறவர்கள் அதிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டால் நன்மை ஏற்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டு வளத்தைப் பொறுத்த வரையிலும் நம்முடைய நாட்டில் காடுகள் அதிகமில்லை. ஒரு நாடு வளமாக இருக்கவேண்டுமானால் மூன்றிலே ஒரு பகுதி காடாக இருக்கவேண்டும். ஆனால் நமக்கு 16 சதவிகிதம் தான் இருக்கிறது. ஏற்கனவே உள்ள வளமான காடுகளை அழித்திருக்கிறார்கள். விபரம் தெரியாத அளவிலே, சந்தனக் காடுகளைக்கூட திடீரென்று கொளுத்தி விடுகிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே எரிந்த காடுகளை நேரில் பார்க்கும்படியான நிலைமை எனக்கு இருந்தது. ஆனால், இப்பொழுது காட்டுப் பகுதிகளில், வெறும் கரம்பாக இருக்கிற பகுதிகளை காடாக இல்லாமலிருக்கிற பகுதிகளை விவசாயத்திற்குத் தர வேண்டுமென்ற அடிப்படையிலே மதுரை மாவட்டத்திலேயும் கண்டமநாயக்கனூர், பக்க நாடு வனவாசி, பவானிசாகர் ஆகிய பகுதிகளில் நிலம் பார்த்துள்ளோம். கோவை மாவட்டத்திலே பவானிசாகர் பகுதியிலே கிட்டதட்ட 50,000 எக்கர் விவசாயததிற்கு கொடுக்கவேண்டுமென்று முடிவு எடுத்தோம். ஆனால், கண்டமநாயக்கனூர் பகுதியிலே சர்வே எல்லாம் முடிந்துவிட்டது. சர்க்கார் 5 வருஷத்திற்கு குத்தகைக்கு கொடுக்கிறோம் என்று கூறினால், குத்தகைக்கு வேண்டாம், எங்களுக்கு பட்டா தான் செய்ய வேண்டுமென்று பிடிவாதம் செய்திருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த சர்க்கார் அந்த நிலத்திலுள்ளவர்களை அப்புறப்படுத்துவதற்கு வேண்டிய முயற்சி எடுத்தது. நாம் அடைமானம் செய்வதற்கு, நீண்ட காலம் குத்தகைக்கு தருகிறோம் என்று சொன்னால் அதைப் பயன்படுத்தாமல் அதை ஆர்ஜிதம்தான் செய்யவேண்டுமென்று விடாப்பிடியாக இருந்துகொண்டு சர்க்காரோடு ஒத்துழைக்காமல் இருக்கிறார்கள். சர்க்காருக்கு அவர்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். 5 ஆண்டோடு, குத்தகை நின்று விடாது. 5 ஆண்டு 10 ஆண்டாக மாறும், 10 ஆண்டு தொடர்ந்து அவர்களே உபயோகப்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்படும். ஆனால் அவர்கள் அதற்கு முன்வராத சங்கடமான நிலைமையை உருவாக்கி இருக்கிறார்கள். அந்த நிலையை விவசாயிகள் உணர்ந்து அரசாங்கத்துடன் ஒத்துழைப்பு செய்வதன் மூலம் அந்த நிலத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள முயலவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இல்லையென்றால், அதிகாரிகள் அவர்களை அப்புறப்படுத்துகின்ற நிலைமை ஏற்பட்டால், பார்த்தீர்களா, காட்டிலே விவசாயம் செய்கின்ற விவசாயிகளை அப்புறப்படுத்துகிறார்கள் என்று கிளர்ச்சி செய்கின்ற சூழ்நிலைகூட உருவாகலாம். சிலபேர் ஆக்கிரமிப்பு செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படி ஆக்கிரமிப்பு செய்வதை ஒருக்காலும் அரசாங்கம் அனுமதிக்காது. அவசியமான காடுகளை விவசாயத்திற்கு கொடுக்க இயலாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பவானி என்ற பகுதியிலே விவசாயிகள் அந்த நிலத்தை வாங்கிக் கொண்டு சாகுபடி செய்கின்ற அளவுக்கு, 2 எக்கர், ஒரு எக்கர் அளவுக்கு சாகுபடி செய்கின்ற அளவுக்கு இருக்கிறது. பக்கநாடு, வனவாசி ஆகிய பகுதிகளெல்லாம் 10 ஆண்டுகளுக்கு இருக்கிற அரசுத் திட்டம். அதற்கு வேண்டிய சர்வே எல்லாம் முடிந்து விட்டது. அவர்களுக்கு அது வழங்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

துறையூர் காட்டுப் பகுதியில் சுமார் 3,612 சந்தன மரங்கள் காடுகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டு, பட்டா நிலங்களில் நடப்பட்ட சம்பவம் பற்றி இங்கே நான் சொல்லியிருக்கிறேன். அது சம்பந்தமான காரியத்தில் நான் குறிப்பிட்டு 2 கோடி என்று சொன்னதிலே கொஞ்சம் வித்தியாசம் இருக்கிறது. கொஞ்சம் அல்ல, நிறைய வித்தியாசம் இருக்கிறது. பூரணமாக விசாரித்தபிறகு தகவல் கிடைக்கும். முன்னாலே வந்த

தகவலை வைத்துக் கூறிவிட்டேன். எப்படியானாலும் திருட்டுப்போனது பெறும் அளவிலே வளர்ச்சியைக் கெடுக்கக்கூடியது. இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் அதிலே ஈடுபட்ட விவசாயிகள் மீதும் நடவடிக்கை எடுக்க அரசு முனைந்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும். எதிர் காலத்திலே இதைத் தடுக்கிற முறையிலே தனிப்பட்டவர்கள் சந்தன மரங்கள் வெட்டுவதை தடுக்கக்கூடிய அந்த முயற்சிகளை அரசாங்கமே எடுக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கையிலிருந்து திரும்பக்கூடிய தமிழ் மக்கள் நீலகிரி மாவட்டத்தில் 3,750 எக்கர் நிலத்தில் தேயிலைத் தோட்டங்களில் ஈடுபடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் மூலமாக 1,700 குடும்பங்கள் குடியேறுவார்கள். அதே போல் ரப்பர் தோட்டங்களில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப் படும் 333 குடும்பங் களுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் 81 இலட்சகது 49 ஆயிரம் ரூபாய் செலவிலே 2,000 எக்கரில் ரப்பர் தோட்டங்களில் வேலை வாய்ப்பு தரப்படும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலே விவசாயிகளுக்கு 3,000 எக்கர் பரப்பளவு காட்டுப் பகுதியிலுள்ள நிலங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படும். மேலும், தென்னை வளர்ச்சி திட்டத்திலே இராமநாத புரம் பகுதியிலே திருவாடானை, முதுகுளத்தூர் வட்டங்களில் இந்த இலங்கையிலிருந்து வருகின்ற அகதிகளுக்கு நிலம் ஒதுக்க இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இங்கே பேசிய உறுப்பினர்கள் ரப்பர் தோட்டங்களிலே வேலை செய்கின்ற தொழிலாளிகளுக்கு வேண்டிய உதவிகள் செய்யவில்லை என்று சொன்னார்கள். பல உதவிகள் அரசு செய்திருக்கிறது. அவர் களுக்கு வேண்டிய கம்பளிகள், ஊதியத்துடன் ஓய்வு, வீட்டு வசதி, கல்வி வசதி, குழந்தைகள் பராமரிப்பு விடுதி இவைகளை எல்லாம் அரசு செய்திருக்கிறது. இன்னும் குறை இருக்குமானால் அதையும் தீர்க்க நான் முயற்சி எடுப்பேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள் கிறேன்.

மீன் வளத்தைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டில் 175 விசைப் படகுகளை மீனவர்களுக்குக் கொடுப்பது என்று முடிவு எடுத் திருக்கிறோம். ஏற்கனவே கொடுத்த படகுகளின் எண்ணிக்கை கிட்ட தட்ட 722 படகுகள் கொடுத்திருப்பதாகத் தகவல் இருக்கிறது. இந்த ஆண்டு மட்டும் 175 விசைப் படகுகள் கொடுக்கிறோம். சென்ற ஆண்டில் 111 படகுகள், அதற்கு முந்தைய ஆண்டில் 117 படகுகள் கொடுக் கப்பட்டிருக்கின்றன. 1966-67-ல் அப்பொழுது ஆட்சியிலிருந்தவர்கள் கொடுத்துவிட்டுப் போனபிறகு, நாங்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு 34 படகுகளை கொடுத்திருக்கிறோம். இந்த அளவில் சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் மீனவர்களுக்கு கூடுதலாக விசைப்படகுகள் வழங்கியிருக்கிறோம். வருஷத்தில் அவர்கள் 3, 4 முறை போட்டுகள் வழங்கியதாக கன்யாகுமரி தேர்தல் பிரசாரத்தில் பேசுகிறபொழுது முன்னாள் மீன்துறை அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. பூவராகன் அவர்கள் சொன்னதாக பத்திரிகையில் செய்தி வந்திருந்தது. நான் நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் இருந்தபொழுது நான் பத்திரிகையில் செய்தியைப் பார்த்தேன். காங்கிரஸ் சார்புள்ள பத்திரிகையில்தான் அம் மாதிரி செய்தி வந்திருந்தது. தி.மு.க. சர்க்கார் வந்து 12 கோடி ரூபாய் மீனவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பணத்தை எப்படியும் விட்டுவிட்டார்கள் என்றெல்லாம் கொட்டை எழுத்தில் செய்தி போடப்பட்டிருந்தது. அதற்கு நான் விளக்கமும் கொடுத்திருந்தேன். அவர்கள் ஆட்சியில் ஆண்டுக்கு நான்கு முறை போட்டுகள் கொடுத்ததாகவும், தி.மு.க. சர்க்கார் ஆண்டுக்கு ஒரு முறைதான் கொடுப்பதாகவும் பிரசாரம் செய்தார்கள். அதில் கொஞ்சம்கூட உண்மை கிடையாது. வேண்டிய வர்களுக்கு போட்டு கொடுத்தார்கள் என்றெல்லாம் பேசப்பட்டது. எனக்கு வேண்டியவர் ஒருவருக்குக்கூட போட்டு கொடுத்தேன் என்று



நிரூபிப்பார்களேயானால், அதற்கு எத்தகைய தண்டனையை வேண்டு மானாலும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். வேண்டிய வர்கள், வேண்டாதவர்கள் என்று பாராமல், அதற்காக ஒரு முறை வகுத்து, பயிற்சி பெற்றவர்கள், பயிற்சி பெறாதவர்கள் என்று இரண்டாகப் பிரித்து, ஏற்கனவே கிடைத்த கிராமங்கள், ஏற்கனவே கிடைக்காத கிராமங்கள் என்றெல்லாம் பிரித்து, எந்தவிதமான பாகு பாடும் இல்லாத முறையில், அவரவர்கள ஸீனியாரிடி பிரகாரம் யார் யாருக்கு போட்டு வழங்கவேண்டும் என்று முடிவு எடுத்துக்கொண்டு, அந்த முறையில் போட்கள் வழங்கப்படுகின்றன

யான்மார் என்ஜின்களைத் தான் எல்லா மீனவர்களும் விரும்பு கிறார்கள். அது வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய என்ஜின். சீட்டுப் போட்டு அந்த என்ஜின் யாருக்கு வருகிறதோ, அவர்களுடைய அதிருஷ்டத்தைப் பொறுத்து அந்த என்ஜின் அவர்களுக்கு வழங்கப் படுகிறது. இதற்கென்று ஒரு குழு இருக்கிறது. அதில் மீனவர் குழு உறுப்பினர்கள் இருக்கிறார்கள், அதிகாரிகள் இருக்கிறார்கள். யாருக்கு போட் வழங்கப்படுகிறதோ, அவர்களே நேரில் வந்து சீட்டை எடுத்து எந்த என்ஜின் வருகிறதோ அதை எடுத்துக்கொண்டு போகிறார்கள். சர்வ கட்சி உறுப்பினர்களும் அதில் அங்கம் வகிக்கிறார்கள். வேண்டிய வர்கள் என்ற காரணத்திற்காக ஒருவருக்குக்கூட போட் கொடுக்கப் படவில்லை என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன் பிரசாரத்திற்கு எதைவேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் ஒன்றுகூட யாரும் நம்பமுடியாது. திரு. பூவராகன் அவர்கள் பேசுவார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். நாகர்கோவில் தேர்தலில் பிரசாரத்தின்போது பேசினார்கள். இங்கே பேசாமல் போய்விட்டார்கள். உண்மை என்றைக்கும் நிலைத்திருக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையிலும், தூத்துக்குடியிலும் மீன்பிடி துறைமுகங்களைக் கட்டு வதற்கு கிட்டத்தட்ட ரூ. 6 கோடி செலவு செய்ய திட்டமிட்டிருக்கிறோம். இரண்டு திட்டங்கள், 388 லட்சம் ரூபாயில் ராயபுரத்திலும், 208 லட்ச ரூபாயில் தூத்துக்குடியிலும் மீன் பிடித் துறைமுகத்தைக் கட்ட இருக் கிறோம். அதன் மூலம் மீன்பிடித் தொழில் அபிவிருத்தியாவதற்கும் மீன் பிடிக்கக்கூடியவர்கள் அது சம்பந்தமாக பல தொழில்களில் ஈடு படுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. இதைத் தவிர மண்டபத்தில் ரூ. 10,90,00,000 செலவில் ஒரு தோணித் துறைமுகம் கட்ட இருக்கிறோம். திரு. தங்கப்பன் அவர்கள் இந்தச் செய்தியைக் கேட்டதும், அவர்கள் பகுதி புறக்கணிக்கப்பட்டதாகக் கருதமாட்டார்கள் என்று கருதுகிறேன். இராமேசுவரத்தில் ரூ. 9,90,000 செலவில் ஒரு தோணித்துறைமுகம் கட்டுவதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கிறது. பெரிய மீன்பிடிப்புத் துறைமுகம் அமைத்த பிறகு ஆழ்கடலில் சென்று மீன் பிடிப்பதற்கு டிராலர்ஸ் வழங்குவதற்கான ஒரு திட்டமும் மீன் வளர்ச்சித்துறையில் இருக்கிறது. அதற்காக ரூ. 36 லட்சம் செலவில் 4 டிராலர்ஸ் வாங்கு வதற்கு முடிவு எடுத்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மீன்வளத்துறையில் கூட்டுறவுத் துறைக்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். கூட்டுறவுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறோம். கூட்டுறவுத்துறை இல்லாத இடங்களில் தனிப்பட்டவர்கள் வந்தாலும், அவர் களையும் எடுத்துக்கொள்ளவேண்டிய சூழ்நிலையும் இருக்கிறது. இப்பொழுது தனிப்பட்டவர்தான் எண்ணூரில் எறு ஏற்றுமதி செய்கின்ற காரியங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட சில மாதங்களில் ரூ. 35 லட்சம் பெறுமான எறுவை தமிழகத்திலிருந்து ஜப்பான் நாட்டிற்கும், அமெரிக்க நாட்டிற்கும் ஏற்றுமதி செய்திருக்கிறார்கள். அதன் மூலம் ரூ. 35 லட்சத்திற்கு அந்நியச் செலாவணி நமக்குக் கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகி யிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரையில் கொச்சி னுக்கு எறு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து ஏற்றுமதி செய்யப் பட்டது. அறிஞர் அண்ணா அவர்கள் இதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு

அதை இங்கே நிறுவினார்கள். அறிஞர் அண்ணா ஜப்பான் நாட்டிற்குச் சென்றிருந்தபொழுது யான்மார் என்ஜின் தொழிற்சாலையைப் பார்வையிட்டார்கள். அந்த யான்மார் என்ஜின் கட்டுவதற்கான தொழிற்சாலை ஒன்றை எண்ணூரில் அமைப்பதற்கு வேண்டிய ஒரு திட்டத்தையும் வகுத்து, அது சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளையும் நடத்தினார்கள். திரு. ஜெகஜீவன்ராம் அவர்களும் அதற்கு அதரவு கொடுக்கத் தயாராக இருந்தார்கள். ஆனால், மத்திய அரசு அதற்குத் தடையாக இருக்கிறது. அந்தத் தடையை நீக்கிவிட்டால், இங்கே மீனவர்களுக்கெல்லாம் யான்மார் என்ஜின் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தூத்துக்குடியில் பிஷ் கானிங் பிளாண்டு, பிஷ் மீட் பிளாண்டு ஆகிய இரண்டையும் நிறுவ இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கு பேசுகிறபொழுது பீர் முகம்மது அவர்கள் ஒன்று சொன்னார்கள். விசைப் படகுக்காரர்களுக்கும் கட்டு மரக்காரர்களுக்கும் அடிக்கடி தகராறு ஏற்படுகிறது என்று சொன்னார்கள். இவர்களுக்கிடையே ஏற்படக்கூடிய தகராறுகளைத் தீர்ப்பதற்கு, மீன்வளத்துறை டைரக்டர், போட்டு ஓட்டுகிறவர்கள், கட்டு மரக்காரர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். அந்தப் பகுதியில் இருக்கின்ற சட்ட மன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், இதிலே இடம் பெறுகிறார்கள். அவர்களிடையே தகராறுகள் வந்தால், அதைத் தீர்த்து வைப்பதற்கு இந்தக் கமிட்டி இயங்கி வருகிறது. சில சந்தர்ப்பங்களில் எதிர்பாராத நிலையில் தகராறு வந்துவிடுகிறது. இரு தரப்பினரும் என்னை வந்து அணுகினால் சம்பந்தப்பட்ட கமிட்டிக்கு அவர்களை அனுப்பி, அந்தத் தகராறைத் தீர்த்துவைக்கச் சொல்கிறேன்.

சின்கோனாத் துறை ஏற்கனவே நாங்கள் பொறுப்பேற்றுக்கொள்வதற்கு முன்பு பெரும் நஷ்டத்தில் போய்க்கொண்டிருந்தது. இப்பொழுது அதில் நல்ல ஆதாயம் கிடைக்கிறது. இதனால் நமக்கு அன்னியச் செலாவணி கிடைக்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. சின்கோனா நிலப்பரப்பை இப்பொழுது நல்ல முறையில் கண்காணிக்கிற காரணத்தினால், ஆண்டுதோறும் அதை அதிகப்படுத்துவதற்குரிய முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். இரண்டு ஆண்டு காலத்தில் எண்ணெய் விற்பனை மூலம் நமக்கு ரூ. $4\frac{1}{2}$ லட்சம் கிடைத்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் சின்கோனா மருந்தை பலரும் விரும்பி வாங்கி, அதனால் வியாதிகள் தீரக்கூடிய ஒரு சூழ்நிலையும் உருவாகியிருக்கிறது. தைலங்களும், நல்லவிதமான மருந்துக்கான மூலிகைகளும் கிடைக்கக்கூடியகாரணத்தினால் சின்கோனாத் துறையில் விளையக்கூடிய நிலப்பரப்பை அதிகமாக்குவதற்குத் தான் அரசாங்கம் முயற்சி எடுத்துவருகிறது. சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கும் நல்ல ஊக்கம் கொடுத்து வருகிறோம். 1969-70-ல் சுமார் 200 ஏக்கரா நிலத்தில் சாகுபடியை கூடுதலாக்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம். ஆனைமலைக்குப் போகிறவர்கள் இந்தத் தொழிற்சாலையை முக்கியமாகப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி நீலகிரிக்குப் போகும்பொழுது சின்கோனாத் தோட்டத்தைப் போய் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே எந்த அளவுக்கு தொழிலாளர்கள் கஷ்டப்பட்டு இந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் தெரிந்துகொள்வதற்கு அது ஒரு வாய்ப்பாக இருக்கும்.

நான் கொண்டுவந்திருக்கிற மானியக்கோரிக்கைகளின்மீது நான் சொல்லவேண்டும் என்று நினைத்ததையெல்லாம் ஓரளவுக்கு இங்கு சொல்லிவிட்டேன் என்று கருதுகிறேன். அங்கத்தினர்கள் பேசிய பேச்சுக்களைப்பற்றி நான் நிறைய குறிப்பு வைத்திருக்கிறேன். சில அங்கத்தினர்கள் பேசியதற்கு முழுமையாகப் பதில் சொல்லமுடியாத நிலைமை ஏற்படலாம். அதனால் யாருடைய கருத்தையும் நான் அலட்சியம் செய்ததாக யாரும் தவறாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்த ஆண்டு விவசாயத்துறை



அதிகாரிகளையும், மற்ற துறை அதிகாரிகளையும் நான் ஒன்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். அங்கத்தினர்கள் கட்மோஷன்களில் கொடுத்திருக்கிற கருத்துக்களையெல்லாம், அவைகளில் எந்தெந்தக் காரியங்களைச் செயல்படுத்த முடியும், எதெதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன, சாத்தியம் இல்லாதவை எவை எவை என்பதையெல்லாம் அதிகாரிகள் மூலமாகவும் டிபார்ட்மெண்டுகள் மூலமாகவும் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும் என்று கூறியிருக்கிறேன். இந்த நான்கு இலாக்காக்களின் மூலமாகவும், அங்கத்தினர்களுக்கு விரைவிலே, 3 மாத கால அளவிலே, பதில் கிடைக்கக்கூடிய நிலைமையை உருவாக்கச் செய்வேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கட்மோஷன்களைக் கொடுத்திருக்கக்கூடிய அங்கத்தினர்களில் சிலர் பேச முடியாத நிலையில் இருக்கிறார்கள். கட்மோஷன்கள் அத்தனையையும் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். அதிகாரிகள் பெரும் ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் ஒத்துழைப்பின் மூலம் எதை எதை செயல்படுத்த முடியும், எதை எதை செயல்படுத்த முடியாத நிலையில் இருக்கிறோம் என்பதைப் பரிசீலனை செய்து, அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துவிடுவோம் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே அங்கத்தினர்கள் சிலர் பேசிய சில கருத்துக்களைப்பற்றி மட்டும் நான் பதில் சொல்லலாம் என்று கருதுகிறேன். திரு. ஜேம்ஸ் அவர்கள் கன்யாகுமாரி மீனவர்கள் சமுதாயத்திற்கு இந்த அரசாங்கம் சில நன்மைகளைச் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். திரு. எம். சி. பாலன் அவர்கள் கடலோரப் பகுதியிலே கடல் அரிப்பைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று கேட்டார்கள். 1969-70-ல் பள்ளந்துறையில் பாதுகாப்புச் சுவர் கட்டுவதற்கு ரூபாய் ஒரு லட்சம் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை திரு. ஜேம்ஸ் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். தேர்தல் முடிந்த பிறகுதான் இந்த நிலையை நான் வெளியிடுகிறேன். எங்களுக்கு மக்கள் வாக்கு அளிக்காவிட்டாலும் அதைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. அங்கு இருக்கிற மீனவர்களைப் பற்றி எங்களுக்குக் கவலை இருக்கிறது. பள்ளந்துறையை நான் நேரில் போய் பார்த்தேன். அது பாதிக்கப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறது. ஆகவே, அங்கு தடுப்புச் சுவர் கட்டுவதற்கு ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிடாளத்தில் மீனவர்களுக்கு வீட்டு மனை அளிப்பதற்கு 5 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய ரூ. 1,08,000 செலவிட இருக்கிறோம். இம்மிடாளத்தில் திரு. ஜேம்ஸ் அவர்களின் நல்லெண்ணத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஒருவர் ஒரு நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், அந்தப்பகுதியிலிருந்து அவரை அப்புறப்படுத்துவதற்கு ஒத்துழைக்கவேண்டும். அவர் பெரிய பணக்காரர். ஏழைகள் இருந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார். தேங்காய் மட்டை ஊறப்போடுவதற்கு ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட ஆக்கிரமிப்பையெல்லாம் அப்புறப்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டால், உண்மையிலேயே அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை செய்தவர்களாவோம். கன்யாகுமாரிப் பகுதியில் கடலோரத்தில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு நிச்சயம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

கொண்டால், அதில் வசதி இருக்கிறது என்கிற கருத்தைச் சொல்லு கிறோம். அதிலிருக்கும் சாதக பாதகங்களை ஆராய்ந்து பார்த்தால், எல். ஐ. சி.-யே மேல் என்று மீனவர்களுக்குச் சொல்லவேண்டும். இப்பொழுது பாதகம் என்றாலும், பின்னால் சாதகம் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லவேண்டும்.

திரு. பலராமன் அவர்கள் ஒரு பெரிய குற்றச் சாட்டைச் சொன்னார்கள். எல்லாம் காங்கிரஸ் செய்தது. உங்களை நம்பி குவாலியர் துவரையைச் சொந்த நிலத்தில் 3 ஏக்கரில் போட்டு நஷ்டம் ஏற்பட்டது என்கிற தகவலைக் கொடுத்தார்கள். வக்கீல் நோட்டீஸ் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். கையில் பணம் அதிகமாக இருக்கிறது போலும். அவர் சட்டமன்ற உறுப்பினர் நேரிடையாக இங்கே சொல்லலாம் அல்லது அதிகாரிகளைப் பார்த்துச் சொல்லலாம். வக்கீல் நோட்டீஸ் ஏன் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. இது நீண்ட காலப் பயிர். மூன்று ஏக்கரில் 600 கிலோ வரையில் விளையக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதை அவர்களுடைய கட்சி உறுப்பினர்கள் திரு. பலராமனுக்குத் தெரிவிக்கவேண்டும்.

ராக் ப்ளாஸ்டிங் யூனிட் வேண்டும் என்று கேட்டார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒன்று கேட்டால், அது சாத்தியம் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமியும் கேட்டார்கள். வேலூரில் பவர் டீரில் பட்டறை நிறுவ இருக்கிறோம்.

விமானம் மூலம் மருந்து தெளிப்பதை வரவேற்றார்கள். நிலம் சம்பந்தமாகவும் சொன்னார்கள். பெரு. நிலக்காரர்களுக்கெல்லாம் ஒரே கருத்துத்தான் இருக்கும்போல இருக்கிறது.

திரு. வெங்கடசாமி அவர்கள் ஹோசூரில் உருளைக்கிழங்குக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். உருளைக் கிழங்குக்கு 500 ஏக்கரிலும், காய்கறிகள் 1,000 ஏக்கரிலும் போடத் திட்டம் உருவாக்கியிருக்கிறோம். ஹோசூர் பண்ணையில் ஏற்பட்ட குறைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதுவும் கவனிக்கப்படும்.

திரு. பாரதிமோகன் பேசும்போது, சிறு நிலக்கிழார்களுக்கு உதவி யாக ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் கேடர் பில்லர் புல்டோஸர் இருக்கவேண்டும் என்று கேட்டார்கள். அது சாத்தியம் இல்லாத காரியம். பொதுவாக மீனவர் கூட்டுறவுக்கு பூரணமான உதவி அளிக்கப்படுகிறது. பஞ்சாயத்து யூனியனுக்கு வேண்டுமென்றால் சாத்தியம் இல்லாத யோசனை. பேரளத்தில் கூட்டுறவு மூலமாகச் செய்கிறார்கள். கூட்டுறவுத் துறை மூலம் செய்ய முடியாத இடத்தில் தனிப்பட்டவர்களுக்கு, பயிற்சி பெற்றவர்களுக்கும், பயிற்சி இல்லாதவர்களுக்கும் உதவிகள் செய்கிறோம். போட் உள்ளவர்கள், தங்கள் வசம் வைத்துக்கொள் ளாமல், வெளியிலிருந்து வரும் முதலாளிகளிடம் பொறுப்பைக் கொடுத்துவிடுகிறார்கள். அரசாங்கம் ஏழைகளுக்கு உதவிசெய்யவேண்டும் என்று செய்கிறது. இடையிலே வருகிறவர்களுக்கு சாதகமாகச் செய்வதை நாம் கண்காணிக்கிறோம். கூட்டுறவுத் துறை மூலமாகத் திருப்பித் தரவேண்டிய தொகை கூடுதலாக இருக்கிறது. அது சம்பந்தமாக முயற்சி செய்கிறோம்.



தலைஞாயர் பகுதியில் ஐ. ஆர். 8 சாகுபடி செய்ததில் பாதகம் ஏற்பட்டது என்று சொன்னார்கள். தாளடிக்கு ஐ. ஆர். 8 சரியான தில்லை. அந்த அளவில் செய்திருந்தால், அரசாங்கம் பொறுப்பு ஏற்க முடியாது. விவசாய அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். வடிகால் வசதியில்லாத இடங்களில் இதைப் பயிர் செய்யவேண்டாம் என்கிறார்கள். அந்த வகையில் அறிக்கை வெளியிட்டிருக்கிறோம். கோயம்புத்தூர், அண்ணாமலை பல்கலைக்கழகம் இன்னும் மற்ற விவசாயக் கல்லூரிகளில் ஆராய்ச்சி செய்து முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அது பற்றி அறிவிக்கவும் செய்திருக்கிறோம். ஐ. ஆர். 8 வடாற்காடு, கோயம்புத்தூர், செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களில் கூடுதலாக விளைந்திருக்கிறது. திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் குறைவாகச் சொன்னார்கள். 40 மூட்டைகள் என்று குறைவாகச் சொன்னார்கள். அதிகமாகச் சொன்னால் எங்கே கொள்முதலுக்குக் கேட்பார்களோ என்ற அச்சத்தில் அப்படிச் சொன்னாரோ என்னவோ. அவர்கள் இங்கே சொல்வதைக் கொண்டு யாரும் எந்த அதிகாரியும் கேட்கமாட்டார்கள்.

சமுதாயக் கிணறுகள் பற்றிச் சொன்னார்கள். சிறு நிலக்காரர்களுக்கு உதவி செய்யும் முறையில் பஞ்சாயத்து யூனியன் ஒத்துக்கொள்ளும் இடத்தில் செய்யப்பட்டிருக்கிறது. திரு. முருகையன் தொகுதியில் செய்திருக்கிறது. ஏழை விவசாயிகள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு உதவியாக செய்யப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் முயற்சி எடுத்து. பஞ்சாயத்து யூனியன்கள் முன்வந்தால் அரசாங்கங்கள் சமுதாயக் கிணறுகள் எங்கெல்லாம் சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அமைக்க பின்தங்காது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. நல்லசிவன் அவர்கள் மிகுபயன் வித்துக்கள் திட்டம் பெரு நிலக்காரர்களுக்குத்தான் பயன் கொடுக்கும் என்று சொன்னார்கள். சிறிய நிலக்காரர்களுக்குப் பயன்படவேண்டும் என்றுதான் அரசு செய் திருக்கிறது. அவர்கள் சொல்வதுபோல பெரு நிலம் வைத்திருப்ப வர்கள் ஒத்துக்கொள்வதில்லை. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏ.டி.டி. 27, கோ. 25 முதலிய வித்துக்கள் ஆறு லட்சம் ஏக்கரா பரப்பளவில் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. இலாகா 2·5 லட்சத்திற்கும் மேற்கொண்ட விவசாயிகளோடு தொடர்பு கொண்டிருக்கிறது. அத்தனை பேர்களும் பெரிய நிலச் சொந்தக்காரர்கள் இல்லை. சிறு நிலச் சொந்தக்காரர் களுக்கும் வசதிகள் செய்யவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

தண்ணீரைச் சிக்கனமாகச் செலவிடவேண்டும், அதற்கான திட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். திரு எ.ஆர்.எஸ். அவர்கள் வாட்டர் மேனேஜ்மெண்ட் பற்றிக் குறிப்பிட்டார்கள். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் மண்வளப்பாதுகாப்பு–தண்ணீரின் உபயோகம் குறித்து ஒரு சிறப்பான திட்டம் பயன்படுத்தப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் சித்தமல்லி கிராமத்தில் 350 ஏக்கர் பரப்பளவில் இத்திட்டம் அமல் செய்யப்படுகிறது. வாய்க்கால்களைச் சீராக அமைத்து, வாய்ப்புக்களை செம்மைப்படுத்தி, முறையாகத் தண்ணீர் விட்டால், நல்ல பயன் கிடைக் கிறது. அந்தத் திட்டத்தை மேலும் 25,000 ஏக்கர் நிலப் பரப்பில் மேற்கொள்ளத் திட்டம் வைத்திருக்கிறோம்.

ஸெமி–ட்ரை கண்டிஷனில் நெல் சாகுபடி செய்யவேண்டியதற் கேற்ப ஆராய்ச்சி செய்யப்படவேண்டும் என்று திரு. நல்லசிவன் அவர் களும், திரு சுப்பையா முதலியார் அவர்களும் குறிப்பிட்டார்கள். இம் மாதிரியான திட்டத்தில் அரசாங்கம் ஏற்கனவே கவனம் செலுத்தி வருகிறது. கோவை மாவட்டத்தில் சாகுபடி செய்வதற்கு இணங்க கோ. 31 என்கிற புதிய ரக நெல் பயன்படுத்தப்படலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

வாழைப்பழம் ஏற்றுமதி பற்றி திரு. நல்லசிவன் சொன்னார்கள். 1,500 டன் ஏககாலத்தில் அனுப்பக்கூடிய சூழ்நிலை இருந்தால்தான் ஜப்பான் போன்ற நாடுகளுக்கும் மற்ற நாடுகளுக்கும் அனுப்பமுடியும். தூத்துக்குடிப் பக்கத்திலே வாழையைக் கூடுதலாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று பழன ஃப்ரூட் டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷன் நினைவி, வாழை இன்னும் ஏனைய பழ வகைகளை உற்பத்தி செய்ய 5,000 ஏக்கரில், அதற்கு வேண்டிய 'மாரிஸ்' போன்ற வகைகளைப் பயன்படுத்தலாம் என்று நினைத்திருக்கிறோம்.

ஆடுதுறையை எடுத்துக்கொண்டால் அங்கும் வாழை இருக்கிறது. கோவை மாவட்டத்தில் திரு. ஆர். கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்களுடைய தொகுதியிலும் வாழைத் தோட்டம் இருக்கிறது. இவைகள் எல்லாம் ஆண்டு ஒன்றுக்கு 1,500 டன் அளவுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய சூழ்நிலை இருக்கிறதா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். அந்த வகையில் ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமை இருக்குமானால், இந்தத் திட்டத்தையெல்லாம் மேற்கொள்ள வசதியாக இருக்கும். இதற்கு வேண்டிய ஆலோசனைகளை அங்கத்தினர்கள் கூறுவார்களானால் அரசாங்கம் தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பேசிய உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் டி.சி. பட்டா பெற்றுள்ள தாழ்த்தப்பட்டோருக்கு நில அடைமான வங்கிகளிடமிருந்து கடன் வசதிகள் கிடைப்பதில்லையென்ற கருத்தைச் சொன்னார்கள். அவைகள் எல்லாம் ஏற்கெனவே இருந்து வந்த நிலைமை. இப்பொழுது விதிமுறைகள் மாற்றப்பட்டிருக்கின்றன. இது குறித்து ரெவின்யூ போர்டு தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள முயற்சி செய்து வருகிறது.

அடுத்து, திரு. பாரதிமோகன் அவர்கள், கால்நடைத் துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்குப் பதவி உயர்வு வசதிகள் செய்துதரப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். கால்நடைத் துறை ஊழியர்களின் குறைகளை அரசாங்கம் நிச்சயமாகக் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து மீனவர் சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மீனவர் சமுதாய வளர்ச்சிக்காக 428 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், எட்டு கூட்டுறவுச் சம்மேளனங்களும், ஒன்பது கூட்டுறவு மார்க்கெட்டிங் யூனியன்களும் நடைபெற்று வருகின்றன. மீனள வளர்ச்சியில் பல திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும். எல்லாத் திட்டங்களையும் அரசாங்கமே நடத்திவிடமுடியாது. சில தனிப்பட்ட தொழிலதிபர்கள் நடத்துவதற்கும் நல்ல வாய்ப்பு இருக்கிறது. அப்படி வந்தால் அதற்கு அரசாங்கம் தக்க உதவிகளைச் செய்யும்.

காலையில் எதிர்க்கட்சியினர் சொல்லியபோது ஒரு பக்கத்தை மட்டும் படித்துவிட்டு கருத்தைச் சொன்னார்கள். அடுத்த பக்கத்தைப் படிக்கும் நிலைமை ஏற்படவில்லை. அவருக்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் மூலமாகவும், திரு. சிவசுப்பிரமணியன் அவர்கள் மூலமாகவும் சொல்லிக்கொள்கிறேன். 1967-68ம் ஆண்டு விளைச்சல் அளவின்படி, பயிரிடும் நிலப்பரப்பில் 1968-69-க்கு 21 லட்சம் ஏக்கர் குறைந்துவிட்டபடியால் கிரமமாக 12·75 லட்சம் டன்கள் விளைச்சல் குறைவு ஏற்பட்டிருக்கவேண்டும். ஆயினும் நாம் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டதன் காரணமாக 8·72 லட்சம் டன்கள்தான் உண்மையிலேயே குறைந்திருக்கிறது. நாம் 12 லட்சம் குறையும் என்று எதிர்பார்த்ததற்கு 8 லட்சம்தான் குறையக்கூடிய சூழ்நிலை வந்திருக்கிறது. நாம் 4 லட்சம் டன் அளவைச் சரிக்கட்டியிருக்கிறோம். காலையில் திரு. கருத்திருமன் அவர்கள், பேசவேண்டுமென்ற நோக்கத்தோடு வராததால் அவசர அவசரமாக கொள்முதல் விலையைஉயர்த்தித் தர வேண்டுமென்று மட்டும் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். முதலில் கொள்முதல் உற்பத்தியைப் பற்றி பேசவேண்டும். கொள்முதல் உற்பத்தி ான பிறகு, உற்பத்தி செய்த நெல்லுக்கு எவ்வளவு விலை என்பதைப்



பற்றி பேசிக்கொள்ளலாம். முதல் பிரச்சினை கொள்முதல் உற்பத்தியை எப்படி அதிகரிப்பது என்பதுதான். நெல் உற்பத்தி செய்யக்கூடியவனுக்கு எந்த நிலைமையோ அதே நிலைமைதான் ஜாங்கிரி சாப்பிடுபவனுக்கும் இருக்கும். இதையேதான் மத்திய உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் சென்னைக்கு வந்தபோதுகூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். "நெல் உற்பத்தியாளர்களுடைய உற்பத்திச் செலவையும் கவனிக்க வேண்டும். அதே சமயத்தில் வாங்கிச்சாப்பிடுபவனுடைய நிலைமையையும் கவனிக்கவேண்டும்" என்று குறிப்பாகச் சொன்னார்கள். வாங்கும் சக்தி இன்றைய நிலையில் பாதிக்கப்பட்டிருப்பதால் ஒரு அனுதாப உணர்ச்சியோடுதான் இதைச் சொன்னார்கள். தமிழக அரசு நெல்லுக்குக் கொடுக்கும் விலை நியாயமானது என்பதைத்தான் மத்திய அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். திரு. கோத்தாரி அவர்கள் கூட்டிய மாநாட்டிலும் அந்தக் கருத்தையே தெரிவித்துவிட்டுப் போயிருக்கிறார்கள். பத்திரிக்கையாளர்களும் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் சொன்ன கருத்தையே பிரதிபலித்தார்கள்.

காலையில் எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றரை, இரண்டு வருஷ காலத்திற்கு முன்னால் சொல்லப்பட்ட கருத்தைச் சொன்னார். "இது மக்களுடைய பிரச்சினையாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும்" என்ற கருத்தைச் சொன்ன அதிகாரியின்மீது குற்றம் சாட்டியிருக்கிறார்கள். 'நெல் விலையை கூட்டித் தரவேண்டும்' என்று இவர் சொன்ன கருத்துக்கு அதிகாரி எப்படிப் பதில் சொல்லமுடியும்? "இது அரசாங்கம் செய்ய வேண்டிய முடிவு, அப்படியிருக்க என்னை எப்படிச் சொல்லச் சொல்கிறீர்கள்? உற்பத்தி செய்பவனுக்கு நியாயம் கிடைக்கவேண்டாமா என்பதைப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கவேண்டியது அரசாங்கம்" என்பதை அந்த அதிகாரி, திரு. கருத்திருமன் அவர்களிடம் சொல்லியிருக்கிறார். அப்பொழுது விவசாயத்துறை டைரக்டராக இருந்தவர் திரு. திரவியம் அவர்கள். அவர் உடை கதராகப் போட்டிருப்பதாலேயே, அதிகாரி அந்தக் கட்சிக்கு ஆதரவாகச் சொல்லவேண்டுமென்று திரு. கருத்திருமன் அவர்கள் எதிர்பார்த்தால், அது தப்பு. அவர் மாணவர் பருவத்தில் காங்கிரஸ்காரராக இருந்திருக்கலாம். அவர் என்றைக்கு உத்தியோகத்திற்கு வந்தாரோ அன்றே அந்தக்கட்சியிலிருந்து விலகிக்கொண்டவர். எந்தக் கட்சிக்கும் அவர் கட்டுப்பட்டவர் அல்ல. அரசாங்கத்தின் நோக்கம், கொள்கை இவற்றையெல்லாம் பிரதிபலிப்பவர்தான். அவர் அனுபவம் இல்லாதவர், விஷயம் தெரியாதவர் என்று யாரும் சொல்லிவிட முடியாது. திரு. கருத்திருமன் அவர்கள், திரு. திரவியத்திடம் சொன்னால் நெல் விலையை அவர் உயர்த்திவிடுவார் என்று எதிர்பார்த்தார்கள். திரு. திரவியம் அவர்கள் அரசாங்கத்தினுடைய, மற்றவர்களுடைய உள்ளக்கிடக்கையை வெளியிட்டார்கள். ஒன்றரை வருஷம், இரண்டு வருஷத்திற்குப் பிறகு மீண்டும் இது சம்பந்தமாக மேலெழுந்தவாரியாக சொல்ல வேண்டியதாக இருந்தது. இன்னும் எவ்வளவோ சொல்லவேண்டியிருக்கிறது. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இல்லாத நேரத்தில் அவைகள் எல்லாம் வேண்டாம் என்று விட்டுவிடுகிறேன்.

அடுத்து திரு. போஜன் அவர்கள் பேசும்போது கால்நடை துறைக்கு அதிக முக்கியத்துவம் தரப்படவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். தற்போது கால்நடை துறைக்கு தக்க முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

இரண்டாவதாக, கால்நடை மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று பேசினார்கள். தற்போது கால்நடை மருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெற்ற நூற்றுக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு உத்தியோக வாய்ப்பைத் தேடிக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. மேலும், இரண்டாவது மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்து பயிற்சிப் பெற்று பட்டம் பெற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தேடிக் கொடுக்க முடியாத நிலை ஏற்படக்கூடாது. ஆகவே, புதிதாகக் கல்லூரியைத் துவக்குவதற்கு அவசியமில்லையென்பதைக் கூறிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடைகளுக்குப் போதுமான மேய்ச்சல் நிலம் இல்லையென்று குறிப்பிட்டார்கள். காடுகளில் எங்கெங்கே மேய்ச்சல் நிலம் ஒதுக்கித் தர முடியுமோ அவ்விடங்களில் மேய்ச்சல் நிலத்தை ஒதுக்கிக் கொடுக்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தவிர, கற்பூர மரம் நடுகிற காரணத்தால் மழை பெய்யவில்லையென்று சொன்னார்கள். அது உண்மையல்ல. கற்பூர மரங்களை சதுப்பு நிலத்தில்தான் பயிரிடுகிறார்கள். காட்டு இலாக்காவில் அனுபவம் உள்ளவர்கள்தான் இதைப்பயிரிடுகிறார்கள். இந்த விஷயத்தில் அவர்களைவிட கருத்துச் சொல்லக்கூடியவர்கள் யாரும் இல்லையென்று கருதுகிறேன். கற்பூர மரத்தை வேண்டுமென்றே நட்டு. மழை பெய்யாமல் இருக்கும்படியான நிலைமையை உண்டாக்கவேண்டுமென்ற நிலைமை இல்லை. இந்த ஆண்டு எதிர்பாராத காரணங்களினால் மழை பெய்யாதகால், கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லையென்பதை அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும். கற்பூர மரத்தை நடுவதால்தான் மழை பெய்யவில்லையென்ற குற்றச்சாட்டு செய்யக்கூடாது. தவிர, செங்கற்பட்டு, வடஆர்க்காடு போன்ற மாவட்டங்களிலும் சரியான மழை பெய்யவில்லையே, அந்தஇடங்களில் எந்த மரத்தை நட்டார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்து, திரு. ஆ. கோவிந்தராசன் அவர்கள் பேசும்போது, கால் நடைத் துறையில் முதல் கிரேடு, இரண்டாம் கிரேடு ஊழியர்கள் இருப்பதைப் பற்றியும், அவர்களுடைய பதவி உயர்வைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். இரண்டாம் நிலை ஊழியர்களுக்குப் பதவி உயர்வுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இப்பொழுது உள்ள மொத்த ஊழியர்களில் சுமார் 20 சதவிகிதத்தினர் முதல் கிரேடு ஊழியர்கள். இந்த எண்ணிக்கையின் சதவிகிதத்தை உயர்த்தவேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திரு. கோதண்டராமய்யா அவர்கள் பேசும்போது, "சென்ட்ரல் ஜெர்ஸி ஃபார்ம்" ஒசூரில் அமைப்பதுபற்றி குறிப்பிட்டார்கள். இது அரசியல் காரணங்களுக்காக அமைக்கப்படவில்லையென்பதாகக் குற்றம் சாட்டினார்கள். அரசியல் காரணங்களுக்காக அமைக்கப்படுவதில் தாமதம் ஏற்படவில்லை. ஒசூர் தாலுகாவில் இரண்டு அல்லது மூன்று இடங்களைத் தேர்ந்தெடுத்து மத்திய அரசுக்குத் தெரிவிக்கும்படி அறிக்கை வந்தது. மூன்று இடங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியும், அவை தகுதியற்றவை என்று சொல்லப்பட்டது. இதற்கிடையில் வேறு மாநிலங்களில் இதை அமைக்கலாமா என்ற கருத்தை மத்திய அரசு தெரிவித்தபோது, இந்த ஃபார்ம் தமிழகத்தில்தான் நிறுவப்பட வேண்டுமென்று இந்த அரசு சொல்லி, வேறு மூன்று இடங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. மத்திய அரசு இடத்தைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

எந்த அரசியல் காரணமும் குறிக்கிடாது. தருமபுரி மாவட்டத்தை மறந்துவிட்டார்களோ, முதலமைச்சர் அவர்கள்கூட அந்த மாவட்டத்தைப் பற்றி டில்லியில் சொல்லவில்லையே என்று கேட்டார்கள். தருமபுரி மாவட்டமும், இராமநாதபுரம் மாவட்டமும் வழக்கமாகப் பஞ்சத்தில் பாதிக்கப்படும் மாவட்டங்கள். செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்கள் புதிதாக பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள். தருமபுரியைப் பற்றியும் இந்த அரசு நிச்சயமாக அனுதாபத்தோடு கவனித்து வருகிறது, அங்கு கால்நடைகளை வைத்துத்தான் வாழ வேண்டிய நிலை இருப்பதால் அங்குள்ள காட்டு நிலங்களை எவ்வளவு ஆயிரம் ஏக்கர் கேட்டாலும் ஒதுக்கிக் கொடுக்கவேண்டுமென்று கூறப்பட்டு அந்த வகையில் 15.000 ஏக்கர் வரை கால்நடைகளுக்காகவே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிக்கு அரிசி வேண்டும், புஞ்சை தானியங்கள் வேண்டும் என்றெல்லாம் கேட்டார்கள். அங்கே கேழ்வரகு அதிகமாகக் கிடைக்கிறது. ஹோசூர் பகுதியில் அதிகமாக இருக்கிறது. பிரதமர் தமிழகத்திற்கு



வரும்போது அந்த மாவட்டத்திற்கும் அழைத்துச் சென்று காட்டுவதற்கு நிதி அமைச்சர் அவர்கள் வழி செய்வார்கள் இந்த அரசு செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யும் என்று அந்த மாவட்டத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் திரு சுப்பிரமணிய கவுண்டர் அவர்களுக்கும் மற்றவர்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சுப்பையா முதலியார் அவர்கள் சொன்ன கருத்துக்களையும் அரசு கவனிக்கும். கடைசியாகப் பேசிய திரு. நல்லசாமி அவர்கள் பத்து அம்சத் திட்டத்தைச் சொன்னார்கள். அந்தப் பத்து அம்சத் திட்டத்திலே ஏற்கனவே இந்த அரசு எட்டு அம்சங்களைச் செயல்படுத்தி வருகிறது என்பதை மறுக்கமாட்டார்கள். இங்குமங்குமாக ஏதாவது குறைபாடு இருந்தால் நிவர்த்திக்கலாம். யார் சொன்ன கருத்துக்களாக இருந்தாலும் சொல்லப்பட்ட கருத்துக்கள் நல்ல கருத்துக்களாக இருந்தால் அதையெல்லாம் செயல்படுத்த இந்த அரசு நிச்சயமாக முனவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை எளிய விவசாயிகளுக்கும், சில நிலச் சுவான்தார்களுக்கும் வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று திரு சுப்பையா அவர்களும, திரு பாரதி மோகன் அவர்களும் கூறினார்கள். பணக்காரர்களை ஊக்குவிக்கும் முறையில் இந்தச் சர்க்கார் இல்லை. ஏழை எளியவர்களை நிச்சயமாக இந்த அரசு கவனிக்கும். நாங்கள் ஏழை எளியவர்களுடைய பிரச்சினையைக் கவனிக்கின்ற காரணத்தால்தான் சில குற்றச்சாட்டுகளுக்குக் கூட ஆளாக வேண்டியிருக்கிறது. நெல் விலையை உயர்த்தவேண்டுமென்று திரு. நல்லசாமி அவர்கள் கூறினார்கள். வாங்கிச் சாப்பிடுகின்றவர்களுடைய நிலையைக் கவனித்தால் அவர்களும் நான் சொன்ன கருத்தை ஏற்றுக் கொள்ளுவார்கள். விவசாய மானியத்திலே வெட்டவேண்டுமென்று அவர்கள் தீர்மானங்கள் கொடுத்திருப்பது உண்மையிலேயே அந்த நோக்கத்தோடு அல்ல; ஒட்ட வேண்டுமென்றுதான் எல்லோரும் கருதுகிறார்கள். ஆகவே, வெட்டுத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுவார்கள் என்று கருதுகிறேன்.

நீண்ட நேரம் ஆகிவிட்டது. நான் அதிகமாக நேரத்தை எடுத்துக் கொண்டதற்காகத் தலைவர் அவர்கள் பொறுத்தருள வேண்டும். அத்தனை பேருக்கும் பதில் சொல்லாவிட்டால் என்னுடைய கடமையைச் சரியாகச் செய்ததாகாது என்ற முறையில்தான் பல விஷயங்களைச் சொன்னேன். ஏதேனும் விடபட்டிருந்தாலும் அலட்சியப்படுத்தி விட்டதாக யாரும் கருத வேண்டாம். இங்கே எடுத்துச் சொன்ன பிரச்சினைகள் எல்லாம் எது எது நடக்கும், நடக்காது என்பதைப்பற்றிப் பரிசீலித்து மூன்று மாதத்திற்குள் பதில் எழுதுமாறு அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறேன். அந்த வகையிலே அதிகாரிகளும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். நான் உடல் நலக்குறைவாக இருக்கும் நேரத்தில் என்னை ஊக்குவிக்கும் முறையில் பணியாற்றி வருகிற அதிகாரிகளுக்கும், அன்னு ஜார்ஜ் அவர்களுக்கும், உணவுக் கமிஷனராகப் பணியாற்றுகின்ற சிவ சுப்பிரமணியம் அவர்களுக்கும், டைரக்டர் அம்புரோஸ் அவர்களுக்கும், இலாகா அதிகாரிகளுக்கும், அந்த இலாகாவில் பணியாற்றுகின்ற கடைசி மட்ட ஊழியருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவிக்கும் நேரத்தில் இந்த கஷ்டமான நேரத்திலும் கடும் உழைப்பைத் தந்த விவசாயத் தொழிலாளர்களுக்கும் மீண்டும் நன்றி கலந்த வணக்கத்தைக் கூறி விடைபெறுகிறேன். வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[திரு க. ர. நல்லசிவன்] [1969 மார்ச் 18

ணமாக அதிகாரிகள் வசதியுள்ளவர்களை நோக்கிப் போகவேண்டியிருக்கிறது. அதையும் மீறி சிறிய விவசாயிகளிடம் போய் வீரிய விதைகளைச் சாகுபடி செய்வதை அவர்கள் மேற்கொள்ள வழி செய்யவேண்டும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** நான் பொறுப்பேற்ற நாளில் இருந்து மாவட்ட கருத்தரங்கு நடக்கும்போதும் சரி, அல்லது சுற்றுப் பயணம் செல்லுகிற நேரத்திலும் சரி, அதிகாரிகளை அழைத்து குறிப்பாக விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளை அழைத்து 'நீங்கள் கிராமங்களுக்கு நேரடியாகச் செல்லவேண்டும்; இதுவரை அலுவலகத்தில் இருந்து கொண்டு வெறும் கோடவுன் கீப்பர் மாதிரி இருக்கும் நிலையைத் தவிர்க்க வேண்டும்; படித்துப் பட்டம் பெற்றதைப் பயன்படுத்த வேண்டுமென்ற அளவில் நேரடியாக விவசாயிகளிடத்தில் தொடர்பு கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். இதற்கிணங்க பலரும் வேலை செய்து வருவதாகத் தகவல் இருக்கிறது. அப்படி யாராவது அதிகாரிகள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவில்லை என்ற நிலை இருந்தால் அது கவனிக்கப்படவேண்டிய விஷயம். திரு. நல்லசிவன் அவர்கள் அரசாங்கத்தைக் குறைகூற வேண்டுமென்ற முறையில் சொல்லவில்லை, நல்ல கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் சொன்ன கருத்து ஏற்கனவே நடைமுறையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோரிக்கை எண் 16-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர்கள் திரு ஆர். கிருஷ்ணசாமி கவுண்டர், திரு கே. என். குமாரசாமி, திரு இல. பலராமன், திரு ஆ. கு. சுப்பையா, திருமதி கே. பி. ஜானகி அம்மாள் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லையாதலால் அவர்களது வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டனவாகக் கருதப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 16-வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,99,88,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்"

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் 17-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்த டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் இருப்பிடத்தில் இல்லையாதலால் அவரது வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

கோரிக்கை எண் 17-க்கு திரு ஜே. ஜேம்ஸ், திரு கொ. இர. ஞானசம்பந்தன் ஆகியோர் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி : "கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,70,57 500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 18-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த திரு ஆ. கு. சுப்பையா, திரு க. இராமமூர்த்தி, திரு கே. என். குமாரசாமி ஆகியோர் இருப்பிடத்தில் இல்லையாதலால் அவர்களது தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டனவாகக் கருதப்பட்டன.



1969 மார்ச் 18]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி : "கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,12,21,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் 21-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த திரு. க. இராமமூர்த்தி, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகிய இருவரும் இருப்பிடத்தில் இல்லையாதலால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி : "கோரிக்கை எண் 21-சிறைகோறு என்ற தலைப்பின்கீழ் ரூ. 56,[illegible]0,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 35-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. பி எஸ். தனுஷ்கோடி, திரு. ஏ. அ. சுப்பராஜா ஆகியோர் இருப்பிடத்தில இல்லையாதலால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் ட்டனவாகக் கருதப்படும்.

திரு. ஜே ஜேம்ஸ் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி: "கோரிக்கை எண். 35-காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ 2,09,77,600-கது மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் 39-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த டாக்டர் எச். வி. ஹாண்டே திரு. இல. பலராமன் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லையாதலால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி : "கோரிக்கை எண் 39-வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 30,10,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

கோரிக்கை எண் 44-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. வை. சுவாமிநாதன் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லையாதலால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்

திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி: "கோரிக்கை எண். 44—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,13,39,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, 20—3—1969 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

இரவு 7·12 பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## (6) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

Nil.

B. *Reports, Notifications and other papers.*

* 87. A Review on Road Development and Building Programme in Tamil Nadu 1968-69 (English and Tamil).

* 88. A Review on Irrigation in Tamil Nadu 1968-69 (English and Tamil).

* 89. A Review on Working of Minor Ports in Tamil Nadu 1968-69 (English and Tamil).

† 90. Speech by Hon. Thiru S. J. Sadiq Pasha, Minister for Public Works on Demands for Irrigation Grants, 1969-70 (English and Tamil).

‡ 91. A Note on the Tamil Nadu Cinchona Department (Tamil).

‡ 92. Policy Note on Fisheries (Tamil).

* 93. Annexure to the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1969 (L.A. Bill No. 8 of 1969).

---

* Despatched to Members on 15—3—1969.

† Placed on the Table of the House on 17—3—1969.

‡ Despatched to Members on 16—3—1969.



## இணைப்பு 1.

[35-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## 16. வேளாண்மை.

## 39. வேளாண்மை மூலதன முதலீடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் உணவு உற்பத்தி, வாணிபப் பயிர்கள், வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி உள்ளிட்ட வேளாண்மை மேம்பாட்டு வேலைகளில் ஏற் பட்டுள்ள முன்னேற்றம் பற்றியும், 1969–70-க்கான வேலைத் திட்டம் பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

### முகப்புரை.

1968-69-ம் ஆண்டில் அரசு பொதுவாக வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திலும் குறிப்பாக உணவு உறபத்திப் பெருக்கத்திலும் முனைப் பான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டது, நாடு நெடுகிலும் வேளாண்மைப் பெருக்கம் காணவும் அது தொடர்ந்து முயன்றது. 1966-67-ல் கண்ட சாதனைகளாலும், 1967-68-ல் பெற்ற ஓரளவு வெற்றி யாலும் உற்சாகம் பெற்று (வடகிழக்குப் பருவ மழை குறைவாகப் பெய்த போதிலும்) கூடுதல் உணவு உற்பத்திக்கான ஒரு பேராவல் திட்டம் தீட்டப் பெற்றது. 1967-68-ல் எதிர்பார்த்த 60 லட்சம் டன் உணவு உற்பத்தியை விட 1968-69-ல் 63 லட்சம் டன் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதே இத் திட்டமாகும். இவ்விலக்கு நோக்கி இத்துறை விரைந்து செயல்பட்டது 10 லட்சம் ஏக்கரில் பல்வகைப் பயிர் முறைத் திட்டத்தையும், 25 லட்சம் ஏக்கருக்கு மேலாக மிகு விளைச்சல் தரும் ரகத்தைச் சேர்ந்த நெல், சிறு தானியங்கள் பயிரிடும் திட்டத்தையும் தொடங்குவதற்கு ஏற்ற இடங்களைத் தேர்ந்தெடுத்தது. விதைகள், பூச்சி நாசினி, உரங்கள் ஆகியவை சில்லறை விநியோகத்திற்குப் போதிய அளவு கையிருப்பில் இருக்க வகை செய்யப் பட்டது. சிறு பாசனத் திட்டங்களும் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களும் தீட்டப்பெற்றுப் பெருமளவில் செயல்படுத்தப்பட்டன. நிறுவன நிதி கொண்டு வேளாண்மைக் கடன்கள் முதன் முறையாக மிகப் பெரிய அளவில் வழங்கப்பட்டன. வேளாண்மை தொழில் நிறுவனம், நில அட மான வங்கிகள், குறிப்பு செய்யப்பெற்ற வங்கிகள் ஆகியவை வாயிலாகக் கடந்த ஆண்டில் குடியானவர்களுக்கு ரூ. 10·50 கோடிக்கு நடுத்தர, நீண்டகாலக் கடன்கள் தரப்பட்டன. இவ்வாண்டில் ரூ. 28 கோடிக்கும் அதிகமாக அத்தகு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதைச் சிறப்பாக ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன். கடந்த ஆண்டில் ரூ.45 கோடிக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் தரப்பட்ட குறுகிய காலக் கடன்கள் கூட இவ்வாண்டு ரூ. 48 கோடியாக உயர்ந்திருக்கிறது.

வரவு-செலவுத் திட்டத்தின் புள்ளிகளை ஒப்பு நோக்கின் வேளாண்மைத் துறையில் போடும் முதலீடு நிதானமாக உயர்ந்து கொண்டு வருவதைக் காணலாம். 1967-68-ன் நிலைப் புள்ளிகள் ரூ. 12·88 கோடியாகும். 1968-69-ன் திருந்திய மதிப்பீடு ரூ. 13·20 கோடியாகும். 1969–70-க்கான வரவு-செலவு அறிக்கை மதிப்பீடு ரூ. 15·99 கோடியாக இருக்கிறது.

மேட்டூர் நீர்த்தேக்கத்தினின்றும் காலம் கடந்து நீர் வழங்கப்பட்டது முதலாம் ஏமாற்றமாகும். அதனை அடுத்து, தென்மேற்குப் பருவ மழை வழக்கமாகப் பொழிவதில் 23 விழுக்காடு குறைவாகப் பெய்ததாகும்.

[1969 மார்ச் 18

ஆனால் வடகிழக்குப் பருவ மழை முற்றிலும் பொய்த்துப் போனது ஒரு பேரிடியாகும். இதனால் நாடு நெடுக 31 விழுக்காடு மழைக் குறைவு ஏற்பட்டது. வானம் மிகுதியும் வழங்கும் வட ஆர்க்காடு, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்களில் கூட 48 முதல் 51 விழுக்காடு வரை வழக்கத்திற்கும் குறைவான மழை நீரைப் பெற நேர்ந்தது. இத்தகு கொடிய வரட்சி நிலை, குறிப்பாக மேற் கூறிய மாவட்டங்கள் அடங்கிய தமிழகப் பகுதியில் இதுவரையும் காணப்படாததொன்றாகும்.

மாட்சிமை தங்கிய மாநில ஆளுநர் தமது உரையிலும், மாண்புமிகு நிதி அமைச்சர் தனது வரவு-செலவுப் பட்டியலிலும் 1968–69-ல் ஏற்பட்டுள்ள வேதனைக்குரிய இப்பருவக் கோளாறு குறித்தும் அதனால் விளைச்சலைப் பெருக்க நாம் மேற்கொண்ட பெருமுயற்சிகள் பாதிக்கப்பட்டிருப்பது பற்றியும் குறிப்பிட்டுள்ளனர்.

புள்ளி விவர இயக்குநர் இறுதியாகத் தந்துள்ள முன்னறிவிப்புப் புள்ளிகளின்படி, நடப்பு ஆண்டின் இலக்காகிய 63 லட்சம் டன்களுக்குப் பதிலாக 54·28 லட்சம்தான் உணவு தானியங்களை உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவை பின் வரும் வரிசைப்படி அமையும், எனவே உணவு தானிய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி 8·72 லட்சம் டன்கள் ஆகும்.

| | (லட்சம் டன்கள்.) |
|---|---|
| அரிசி .. .. .. | 39·33 |
| ஏனைய நவதானியங்கள், தினை வகைகள் .. .. | 14·00 |
| பருப்பு வகை தானியங்கள் .. .. .. | 0·95 |
| மொத்தம் | 54·28 |

இத்தகைய கொடிய பின்னடைவுகள் ஏற்பட்ட போதிலும் இத்துறை தனது உழைப்பு முயற்சியால் 5 லட்சம் ஏக்கர் பரப்பில் குறுவை பயிரிடும் தஞ்சை திட்டத்தை அதே அளவில் நிலைபெறச் செய்தும், கடந்த ஆண்டைக் காட்டிலும் ஏறத்தாழ ஒரு லட்சம் ஏக்கர் சம்பா, தாளடி அதிக அளவில் பயிரிட்டும் காட்டியுள்ளது. மாவட்ட அதிகாரிகள் அறிவித்திருக்கிறபடி பின் வரும் பகுதிகள் முற்றிலும் பயிரிடப்படாமலோ அன்றி பாசன வசதியின்றி பயிர்கள் சாவியாகிவிட்டதாலோ பயனற்றுப் போய்விட்டன.

| | | அப்பகுதியில் பயிரிடும் பரப்பில் ஏற்பட்ட குறைவு. (லட்சம் ஏக்கர்கள்) | 1967-68 விளைச்சல் அளவின் படி எதிர் பார்க்கப்படும் விளைச்சல் குறைவு. (லட்சம் டன்கள்.) |
|---|---|---|---|
| 1. | நெல் .. .. .. .. .. | 9.48 | 8·98 |
| 2. | சோளம் .. .. .. .. .. | 5·34 | 1·60 |
| 3. | கம்பு .. .. .. .. .. | 1·83 | 0·49 |
| 4. | கேழ்வரகு .. .. .. .. .. | 1·86 | 0·75 |
| 5. | ஏனைய நவதானியங்களும் தினை வகைகளும் .. .. .. .. | 2·97 | 0·92 |
| 6. | பருப்பு வகை .. .. .. .. | 0·11 | 0·01 |
| | | 21·59 | 12·75 |



1969 மார்ச் 18]

1967–68 விளைச்சல் அளவின்படி, பயிரிடும் நிலப் பரப்பில் 1968–69-க்கு 21 லட்சம் ஏக்கர் குறைந்துவிட்டபடியால் சிரமமாக 12·75 லட்சம் டன்கள் விளைச்சல் குறைவு ஏற்பட்டிருக்க வேண்டும். ஆயினும் மேற் கூறியவாறு 8·72 லட்சம் டன்கள்தான் உண்மையிலேயே வரிசைப்படி விளைச்சலில் குன்றியுள்ளது. விளைச்சலில் குன்றியிருக்க வேண்டிய அளவுக்கும் உண்மையில் குன்றியுள்ள அளவிற்கும் உள்ள வித்தியாசம் 4·03 லட்சம் டன்கள் ஆகும். 1968–69-ல் பயிரிடப்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்டவாறு மிகு விளைச்சல் தரும் இனங்களின் உயர்ந்தபட்ச சராசரி விளைச்சலே இதற்குக் காரணம் எனலாம்.

| | இனம். | பயிரிடப் பட்ட பரப்பு. ஏக்கர் (லட்சங்களில்.) | 1967–68 விளைச்சல அளவின் படி கூடுதல் விளைச்சல். (ஒரு ஏக்கரில்) | எதிர் பார்க்கப் படும் உபரி உற்பத்தி. (டன்) |
|---|---|---|---|---|
| 1. | A.D.T. 27 | 8·53 | 150 கிலோ | 1·28 |
| 2. | C.O. 29 | 2·63 | 50 ,, | 0·13 |
| 3. | C.O. 25 | 3·31 | 50 ,, | 0·17 |
| 4. | I.R. 8 | 1·65 | 800 ,, | 1·32 |
| 5. | C.S.H. 1 | 0·34 | 750 ,, | 0·28 |
| 6. | H.B. 1 | 0·99 | 750 ,, | 0·66 |
| 7. | மக்காசோளம். | 0·20 | 1,000 ,, | 0·20 |
| | | | | 4·04 |

சுருங்கச் சொன்னால் மிகு விளைச்சல் தரும் இனங்கள் பயிரிடும் திட்டத்தை நிலைபெறச் செய்வதிலும் விரிவுபடுத்துவதிலும் இத்துறை உழைப்பு முயற்சி மேற்கொள்ளாவிடில் 1968–69-ல் மொத்த உற்பத்தியில் ஏற்படும் குறைவு மெத்த அதிகமாகவே இருந்திருக்கும். இது குறித்து, வேளாண்மை உற்பத்திக்குழு சுட்டிக்காட்டிய வாசகங்களை இங்கு குறிப்பிட விழைகிறேன். "ஏதேனும் ஓராண்டில் பருவ நிலை முரண்பட்டுப் போனால், அவ்வாண்டில் பத்து லட்சம் டன்களுக்கும் மேலாக விளைச்சலில் வீழ்ச்சி ஏற்பட்டுப்போகும்" என்று அக்குழு எடுத்துக் கூறியுள்ளது. இத்தகைய பருவக் கோளாறுகளுக்கிடையிலும் தமிழக விளை நிலங்களில் ஒரு யூனிட்டுக்குரிய உணவு தானிய விளைச்சல் உயர்ந்துகொண்டே போகிறது என்பதை இங்குக் கவனப்படுத்த விரும்புகிறேன். 1967–68-ல ஒரு ஹெக்டேரில் 1,451 கி. கிராம்கள் அரிசி உற்பத்தி செய்யப் பெற்றது. பொதுவாக ஏனைய உணவு தானியங்களும் ஒரு ஹெக்டேரில் 1,150 கி. கிராம்கள் உற்பத்தி செய்யப் பெற்றன. இந்தப் புள்ளிகளே கூட அகில இந்திய விளைச்சல் புள்ளிகளைவிட அதிகமானவை. அந்தப் புள்ளிகளின்படி ஒரு ஹெக்டேரில் 1,031 கி. கிராம்கள் அரிசியும், 787 கி. கிராம்கள் ஏனைய உணவு தானியங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1968–69-ல் ஒரு ஹெக்டேரில் 1,489 கி. கிராம்கள் அரிசியும், 1,103 கி. கிராம்கள் ஏனைய உணவு தானியங்களும் கிடைக்குமென்று நாம் எதிர்பார்க்கிறோம்.

உண்மையில் பயிர் வளர்ச்சிக்கு தேவையான நீர் உள்ள இடங்களில் குறிப்பாகப் பாசனத் திட்டப் பகுதிகளில் முந்தைய ஆண்டுகளை விட விளைச்சலில் ஏற்றம் காணமுடிகிறது. ஆனால், பெரும் அளவில் விளை நிலங்கள்—மொத்தம் 9 லட்சம் ஏக்கருக்கு மேலாக நெல் விளையும் கழனிகள், ஏறத்தாழ 12 லட்சம் ஏக்கர் தானியங்கள் விளையும் நிலங்கள் 0·11 லட்சம் ஏக்கர் பருப்பு வகை பயிராகும் பகுதிகள்— முற்றிலும் பயிரிடப்படாமலும், காலத்தால் மழையின்றி, போதிய நீரின்றிக்காய்ந்தும், தேய்ந்தும் பாழ்பட்டுப் போயின. இவ்வாண்டிற்கு நாம் திட்டமிட்ட உற்பத்தி இலக்கான 63 லட்சம் டன்களில் நாடு நெடுக எதிர்பார்க்கப்படும் ஏறத்தாழ

[1969 மார்ச் 18

8·72 லட்சம் டன்கள் விளைச்சல் குறைவுக்கு இதுவே முக்கிய காரணம். இவ்வாறு முரண்பட்ட பருவ நிலைகளால் நமது சாதனைகள் பெரிதும் பாதிக்கப்படுவதால் புதிய நான்காம் திட்டத்தை உருவாக்கும்போது, பருவ நிலை சாதகமாய் அமைகின்ற ஆண்டுகளுக்கும், பருவ நிலையில் கோளாறுகள் ஏற்படுகிற ஆண்டுகளுக்கும் இடையில் உற்பத்தியில் குறைந்துபோகும் அந்தப் பத்து லட்சம் டன்களைச் சரி செய்து கொள்ள ஒரு தாராள இடைவெளி தரப்பட்டிருக்கிறது.

மேற்கூறிய அறிக்கையினின்றும் வாடிக்கையான பாசன வசதிகளோடும் வான் மழையோடும், பூமிக்கடியில் உள்ள நீரூற்றுக்களை அகழ்ந்தெடுத்து மேலும் பயன்படுத்துவது தமிழகத்தின் அதி விரைவான தேவை என்பது தெளிவாகும். எனவே பொதுவாக, நான்காம் திட்டத்தில், நீர் வளம் மிக்க பகுதிகளில் நெடிய பரப்பளவில், குழாய்க் கிணறுகள், இறை கேணிகள், வடிமுனைக் குழாய்கள் ஆகியவற்றை அகழ்வதற்குக் கணிசமான முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், பூமிக்கடியில் நீரூற்றுக்கள் இருக்கும் இடங்களைக் கண்டறிய U.N.D.P. மேற்கொள்ளப்படுகிறது. விதைகள், உரங்கள், பூச்சி நாசினி, போன்ற ஏனைய தேவைகளைப் பொருத்தமட்டில், வருகிற 1969–70-ம் ஆண்டில் எவ்வித சிரமும் இல்லை. மிகு விளைச்சல் தரும் இனத் திட்டத்தின் கீழ் பல்வகைப் பயிர் வரிசை வகைத் திட்டத்தை இணைத்து மேலும் விரிந்த பரப்பளவில் பயிரிட்டு விளைச்சலைப் பெருக்குவது ஒன்றே 1969-70-ல் கூடுதல் உற்பத்திக்கென நாம் கையாள வேண்டிய உத்தியாகும். குறிப்பாக, 1968–69-ல் 1.65 லட்சம் ஏக்கரில் உற்பத்தி செய்ததைவிட வருகிற 1969–70-ல் I.R. 5 என்னும் இனத்தை 30,000 ஏக்கரிலும், I. R. 8. என்னும் இனத்தை விளைவு கொழிக்கும் பகுதிகளிலும் ஆக 5.29 லட்சம் ஏக்கர் அடங்கிய பெரிய பரப்பில் பயிரிடும் திட்டத்தை இத்துறை செயல்படுத்தவிருக்கிறது. புதிய வேளாண்மைச் செயல் முறைகளையும், திட்டங்களையும், சக்தி வாய்ந்த முறையில் செயல்படுத்த, வேளாண்மைத் துறையின் நிர்வாகத்தை சீரமைப்புச் செய்வது மிகவும் இன்றியமையாத ஒன்றெனக் கருதப்படுகிறது. மண்டல கூட்டு இயக்குநர்களை நியமித்தும், மாவட்ட வேளாண்மை அதிகாரிகளின் வரம்பினை குறைத்தும் திருத்தி வகுத்தும் இத்துறையைச் சீரமைப்பு செய்யும் கருத்தை அரசு பரிசீலித்து வருகிறது.

தமிழகத்தில் ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் நிறுவ வேண்டும் எனப் பல கோரிக்கைகள் வந்துள்ளன. ஏற்கனவே வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் உள்ள பிற மாநிலங்கள் அனைத்தும் ஒரு சேர உவகை பெற்று விளங்கவில்லை. இத்தகு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை இங்கு அமைப்பதனால் ஏற்படும் அனுகூலங்களும் நிலையானவை அல்ல. பிற மாநிலங்களில் உள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் செயல்படும் விதத்தை ஆய்ந்து இம்மாநிலத்திலும் ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைவதால் பயன்விளையுமா என்பது குறித்துப் பரிவுரை வழங்குமாறு ஒரு நுண்கலைக் குழுவை அரசு ஏற்படுத்தியுள்ளது.

1969–70-ல் முதன் முதலாக மதுரை வேளாண்மைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு பாடமுறையை அமல்படுத்த உத்தேசித்திருக்கிறோம்.

1969–70-ல், பணியாளர்களின் திறமை நுட்பம் பெருகும் வகையில், விரிவான பயிற்சித் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளன.

தனியார் அல்லது கூட்டுறவுத் துறையில் வேளாண்மை வளப் பெருக்க நிறுவனம் ஒன்றைக் கோவையில் அமைக்க வேளாண்மை நிதி இயக்குநர் சமர்ப்பித்த தேவைக் கோரிக்கையை வேளாண்மை நிதி நிறுவனம் ஆய்ந்து வருகிறது. அத்தகு நிறுவனங்களின் வாயிலாக பண்ணைத் தேவைகள் வழங்குவதில், கடன் தருதல்போன்ற விவசாயிகளின் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றிக்கொள்ள முடியும். நிர்வாகத் துறை யோசனைகள் வழங்குவதிலும் வேலை முறையைச் சீர்செய்வதிலும் நிறுவனம் சேவைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1969 மார்ச் 18]

1969–70-ல வேளாண்மை, மாவட்ட மும்முரத் திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்திற்கென்று 250 துடைப்பான்களுடன் கூடிய மின் தெளிப்பான்கள் ரூ. 2·28 லட்சம் செலவு மதிப்பீட்டில் வாங்கி காலத்தில் பயிர் பாதுகாப்பு முன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதால் ஏற்படும் நன்மைகளை விவசாயிகளின் விளை நிலங்களில் நேர் விளக்கம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. நேர் விளக்கம் செய்யப் பொறுப்பேற்றுள்ள ஒவ்வொரு விஸ்தரிப்பு அலுவலருக்கும் அதற்குத் தேவையான கருவிகள் வழங்கப் பெறும். இத்தகைய உபகரணங்கள் விவசாயிகளுக்கும் வாடகைக்குத் தரப்படும்.

பருவ நிலை மட்டும் சரியாக அமையுமானால், 1969–70-ல் நடப்பு ஆண்டில் உள்ள உற்பத்திக் குறைவை நிறைவு செய்து கணிசமான அளவில் பெருக்கத்தைக் காட்ட முடியும் என அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

பின்வரும் பத்திகளில் இத்துறையின் முக்கிய திட்டங்களை விரித்துரைக்கிறோம்.

## I. சிறப்புத் திட்டங்கள்.

### (அ) மிகுபயன் தரும் தானியவகைத் திட்டம்.

மிகுபயன் தரும் நெல் வகையில் நான்கு வகை நெல்லினை 25 லட்சம் ஏக்கர் பரப்பிலும், கலப்பு வகை சிறு தானியங்கள், கலப்பு வகை சோளம் ஆகியவற்றை 1 69 லடசம் ஏக்கர் பரப்பிலும் 1968-69-ம் ஆண்டில் விளைவிக்க, திட்டமிடப்பட்டது. மிகு பயன்தரும் நெல் வகையைப் பொறுத்தமட்டில், ஆடுதுறை 27 வகை நெல் விளைவு முதலிடத்தைத் தொடர்ந்து பெற்று வருகிறது. இருப்பினும், ஆடுதுறை 27 வகை நெல்லினை 16·91 லட்சம் ஏக்கரில் பயிரிடத் திட்டமிட்ட போதிலும் இவ்வகை நெல் 8·53 லட்சம் ஏக்கரில் மட்டுமே தற்போது பயிரிடப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் இக்குறைவு கணிசமான அளவு காணப்பட்டது. காரணம், மேட்டூர் கால்வாயில் தண்ணீர் காலதாமதமாக திறந்துவிடப்பட்டமை, அதனால் இவ்வகை நெல்லினை விவசாயிகள் பயிரிட முன்வராமை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் நிலவிய பருவ நிலைக் கோளாறுகள் ஆகியவை ஆகும். 1968–69-ம் ஆண்டிற்கான மிகுபயன்தரும் நெல் வகைத் திட்டத்தைப் பொறுத்தமட்டில், குறிக்கோள்ளளவாக எதிர்பார்த்த 25 லட்சம் ஏக்கர் பரப்பளவில் 16·12 லட்சம் ஏக்கர் பரப்பளவு மட்டுமே பயன்படுத்தப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. கலப்பு வகை சிறு தானியங்களை பொறுத்தமட்டில், HB 1 என்ற கம்பு வகை மிகப் பிரபலமான வகையாக அமைந்துவிட்டது. எதிர்பார்த்த குறிக்கோளளவு 0·97 ஏக்கர் பரப்பிற்கு மேல் 1,600 ஏக்கர் பரப்பளவுமேற்கொண்டு பயன்படுத்தப்பெற்றுள்ளது. C.S.H.1 என்ற சோளம், நல்ல விளைச்சலைத் தருவதானாலும், இதைப் பயிரிட விவசாயிகள் பெருவாரியாக முன்வரவில்லை. ஏனெனில் இந்தப் பயிருக்கு தீவிரப் பயிர்பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பது தான் காரணம். இதன் விளைவாக, எதிர்பார்த்த குறிக்கோள்ளளவான 51,000 ஏக்கர் பரப்பில் 17,000 ஏக்கர் பயன்படுத்தப்படாமல் போகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. கலப்பு வகை சோளம் 1968–69-ம் ஆண்டில் மிகப் பிரபலமாகியது. இதனை, பருவ நிலைக் கோளாறுகள் நிலவியபோதும் 19,600 ஏக்கர் பரப்பில், அதாவது 1967–68-ல் பயிரிடப்பட்ட 4,000 ஏக்கர் பரப்பளவிற்கு மாறாக, இவ்வகை சோளம் பயிரிடப் பெற்றதிலிருந்து அறியலாம்.

உள்ளூர் வகை தானியங்களையே பயிரிட்டுக் கொண்டிருப்பதை மாற்றி மிகுபயன் தரும் வகைகளைப் பயிரிடுமாறு விவசாயிகளை ஊக்குவிப்பான் வேண்டி, 1968-69-ம் ஆண்டில் முன்னோடி விளக்கத் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. பல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வண்ணம் எட்டு மைய நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஒவ்வொரு மைய நிலையத்திலும் 100 ஏக்கர் பகுதி ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு, அதில் தக்க

மாற்றுப் பயிர் முறையைக் கையாண்டும், முன்னேற்றப் பணி முறைகளைக் கைக் கொண்டும் மிகுபயன் தரும் வகைகள் யாவற்றையும் பயிரிடத் திட்டமிடப்பட்டது. இதுவரை கண்ட பலனால் இந்த விளக்கத் திட்டம் விவசாயிகளுக்குப் புது வகை பயிர்களின் மேம்பாட்டை விளக்கிக் காட்டும் வகையில் நல்ல பயனை அளித்துள்ளது.

1969-70-ம் ஆண்டில், மிகு பயன் தரும் தானிய வகைத் திட்டப் கணிசமான முன்னேற்றத்தைப் பெற இருக்கிறது. ஏனெனில், I.R. 8 என்ற வகை நெல்லினை 5.29 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடத் திட்டமிடப் பெற்றுள்ளது. இது 1968-69-ம் ஆண்டில் பயிரான 1.65 லட்சம் ஏக்கர் பரப்பளவைவிட கூடுதலாகும். இன்னொரு அதிகப்படியான சீரமைப் பாக, 1969-70-ஆம் ஆண்டில் நம்பிக்கையூட்டும், I.R. 5 என்ற வகை நெல், 30,000 ஏக்கரில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் பெரும் பகுதி, தஞ்சாவூர் மாவட்டப் படுகைப் பகுதிகளில் சம்பா, தாளடி பருவங் களில் பயிரிடப்படும். வருகிற ஆண்டில், "ஜயா" "பத்மா" என்ற புதுவகை மிகுபயன் தரும் நெல் வகைகளைப் பயிரிட்டு விரிவாக ஆராய்ச்சிச் செய்யவும் திட்டமிடப்பெற்றுள்ளது. இந்த இருவகை நெல்லும் I.R. 8 வகை நெல்லைவிடப் பலவிதத்திலும் மேன்மையுடையன என்று கருதப் படுகிறது. ஏனெனில், அவை குறுகிய காலத்தில் பயன் தருவதாலும், பூச்சிகளால் வரும் நோயினை எதிர்த்து நிற்கும் ஆற்றலாலும் இவ்வாறு கருதப்படுகிறது. முன்னோடி விளக்கத் திட்டங்கள் 1969-70-ம் ஆண்டி லும் தொடர்ந்து வெவ்வேறு மைய நிலையங்களில் கையாளப்படும்.

### (ஆ) பல்வகைப் பயிர் முறைத் திட்டம்.

வழக்கமாகப் பயிரிடப்படும் பயிர்களுக்குப் பதிலாக குறுகிய காலப் பயிர்களைப் பயிரிட்டு, நிரந்தரமான நீர்ப்பாசன வசதி உள்ள பகுதிகளில் ஒருபோக விளைச்சலை இருபோக விளைச்சலாக்கியும், இருபோக விளைச்சல் உள்ள பகுதிகளில் முப்போக விளைச்சலாக்கியும் முன்னேற்றுவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் பயறுவகை ஒன்றை அறிமுகப்படுத்துவதும் ஒரு முக்கிய மாறுதல் ஆகும். இம் முறையினால் தமிழ் நாட்டில் பயறுவகை உற்பத்தி பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது பல்வகைப் பயிர்முறைத் திட்டத்தின் பெரும் பகுதி, தஞ்சாவூர் மாவட்டத்தில், ஒருபோக சாகுபடி நிலங்களை இரு போக சாகுபடி நிலங்களாக மாற்றுவதின் மூலம் செயல்படுத்தப்பெற்றது. முதலில் ஆடுதுறை 27 வகை நெல் பயிரிடப்பட்டது. தொடர்ந்து இரண் டாம் போகமாக நெல் அல்லது வேர்க்கடலை அல்லது மற்ற பருப்பு வகைப் பயிர் பயிரிடப்பட்டது. 1968-69-ல், இத்திட்டத்தின் கீழ், குறிக் கோள்ளவான 10 லட்சம் ஏக்கரில், சுமார் 4 லட்சம் ஏக்கரில் மட்டும் இம்முறை வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் குறைவுக்குக் காரணமாக, தஞ்சாவூர் மாவட்டம் அமைந்துவிட்டது. ஏனெ னில், மேட்டூர் கால்வாய் காலந்தாழ்த்தித் திறக்கப்பட்டதால் ஆடுதுறை 27 பயிர் அறுவடையில் தாமதமேற்பட்டு, மீண்டும் மேட்டூர் கால்வாய் மூடப்படுமுன் இன்னொரு போகம் சாகுபடி செய்ய விவசாயிகளால் இயலா மல் போய்விட்டது. இத் திட்டத்தை, நிரந்தரமான நீர்ப்பாசன வசதிகள் உள்ள செங்கற்பட்டு, வடஆற்காடு போன்ற மாவட்டங்களில் செயல்படுத்த முடியாமல் போய்விட்டது. காரணம் அப்பகுதிகளில், நிலவிய பருவநிலைக் கோளாறுகள்தான். எனவே, குறிக்கோள்ளவின் வீழ்ச்சி கணிசமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மற்றையப் பாசனத் திட்டப்பகுதிகளில், 1968-69-ம் ஆண்டில் 51,000 ஏக்கர் பரப்பளவில் ஒருபோக சாகுபடி நிலங்களில் இன்னுமொரு அதிகப்படியான பயிர் விளைவிக்க இயன்றது. இத் திட்டத்தின் கீழ் சாத்தனூர், கிருஷ்ண கிரி, வீராணம் ஏரி, அமராவதி, திருச்சிராப்பள்ளி மாவட்டப் பாசனத் திட்டங்கள் அடங்கும். 1969-70-ம் ஆண்டில், பல்வகைப் பயிர் முறைத் திட்டத்தின் குறிக்கோள்ளவு 5 லட்சம் ஏக்கருக்கு குறைக்கப்பெற்றுள்ளது. பருவ நிலை சரியாக இருந்தால், இக்குறிக்கோள்ளவிற்கு மேலேயே விளைவு இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



### (இ) ஏற்றுமதி குறித்த பயிர்கள் திட்டம்.

வேர்க்கடலையும் வாழையும் இத் திட்டத்தின் கீழ் அமையும். வேர்க் கடலை உற்பத்தியை உயர்ந்த அளவுக்கு உயர்த்துவது குறிக்கோளாகக் கொண்டு, வடஆற்காடு, செங்கற்பட்டு, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் 1.40 ஏக்கர் பரப்பளவில் ஏழு முழுமுனை அணிகள் செயல்பட்டு வருகின்றன. இதன் காரணமாக இப் பகுதிகளில், நீர்ப்பாசன வசதியுள்ள பயிர்களின் சராசரி விளைவு 53 விழுக்காடும், மானாவாரி நிலத்து வேர்க் கடலை விளைச்சல் 43 விழுக்காடும் அதிகமாகியிருக்கின்றன. 1969-70-ம் ஆண்டில், இன்னும் 2·85 லட்சம் ஏக்கர் பரப்பளவைப் பயனபடுத்தி, ஏழு அதிகப்படியான முழுமுனை அணிகள் செயல்படுத்தத் திட்டமிடப் பெற்றுள்ளது.

தற்போது, செங்கற்பட்டு, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயமுத்தூர் மாவட்டங்களில் வாழை முனைப்புத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. சாதாரண விளைச்சலைவிட 60,000 டன் அதிகப்படியான விளைச்சல் எதிர்பார்க்கப்படுகிறது. 1969-70-ம் ஆண்டில் செங்கற்பட்டு, தூத்துக்குடி பகுதிகளில் இன்னும் அதிகப்படியாக 5,000 ஏக்கர் பரப்பளவு இத் திட்டத்தின் கீழ் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநில வங்கி, வாழை, மற்றும் பழ உற்பத்தி வாரியம் மூலமாக, தூத்துக்குடி பகுதியில் வாழை சாகுபடிக்காக 60 லட்சம் ரூபாய் வழங்க இருக்கின்றது.

### (ஈ) வேளாண்மை மாவட்ட மும்முரத் திட்டம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1960-ம் ஆண்டு முதற்கொண்டு, வேளாண்மை மாவட்ட மும்முரத் திட்டம் செயல்பட்டுவருகிறது. இத் திட்டம் இம் மாவட் டத்தைச் சேர்ந்த 36 வட்டாரங்களில் 13·02 லட்சம் ஏக்கரில் செயல்பட்டு வருகிறது.

ஒரு போக நிலங்களை இருபோக நிலங்களாக மாற்றி, வழக்கமாகக் கையாளப்பட்டுவந்த பயிர் முறையில் ஒரு மாறுதல் இத்திட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ளது. 1968-69-ம் ஆண்டில், 5 லட்சம் சம்பா பயிரிடும் நிலங்களை மாற்றியமைக்க ஒரு தொடக்க முயற்சி செய்யப்பட்டது. ஆயினும், மேட்டூர் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் காலந்தாழ்த்தி திறந்து விடப்பட்டமையால், 2,003 லட்சம் சம்பா நிலங்களில் மட்டும் குறுகிய பயிர்களைச் சாகுபடி செய்ய முடிந்தது. மேட்டூர் நீர்த் தேக்கத்தில் நீர் காலாகாலத்தில் கிடைத்திருந்தால், சாதனை இன்னும் பெருத்த ...ல் இருந்திருக்கும். 1969-70-ம் ஆண்டில், ஒரு போக நிலங்களை, ...போக நிலங்களாக மாற்றும் முறை இன்னும் 3 லட்சம் ஏக்கர் ...ளவிற்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. பண்ணைத் திட்டங்கள் ...ாக, இத்திட்டத்தில் பெருவாரியான விவசாயிகளைப் பங்குபெறுமாறு முயற்சிகள் மேற்கொள்ளப்பெறும். 1968-69-ம் ஆண்டில், ஒரு ...பிடத்தக்க அம்சம் என்னவென்றால், முந்தைய ஆண்டில் பயிரான ... லட்சம் ஏக்கர் பரப்பளவிற்கெதிராக 4 லட்சம் ஏக்கர் பரப்பளவு இரண்டாம் போக நெல் சாகுபடியின்கீழ் கொண்டுவரப்பட்டதாகும். எஞ்சியுள்ள மாற்றப்பட்ட பகுதியில் வேர்க்கடலையும், மற்ற பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டன. 1968-69-ம் ஆண்டில், தஞ்சாவூர் மாவட்டத்தில் துணிவுள்ள விவசாயிகள் பலர் IR-8, IR-5 என்ற வகை நெல்லினை பயிர் செய்தனர். தக்க நிலத்தைத் தேர்ந்தெடுத்து இவ்விரண்டு வகை நெல்லையும் பயிர் செய்தால், படுகைப் பகுதியிலும் நல்ல பயனைப் பெற லாம் என்று தெரிய வந்தது. 1968-69-ம் ஆண்டில், சம்பா, தாளடி கடைசிப் பருவத்தில், IR-5, என்ற வகை நெல் சராசரி 2 டன்கள் விளைச்சலைக் காட்டியிருக்கிறது. எனவே 1969-70-ல் ஆடுதுறை-8, கோய முத்தூர் 25 என்ற வகை சம்பா நெல்லுக்குப் பதிலாக IR-5 வகை நெல்லைப் பயிரிட ஏராளமான விவசாயிகள் ஆவலாக இருக்கின்றனர். எனவே, 1969-70-ல் தஞ்சாவூர் மாவட்டத்தில் 0.17 லட்சம் ஏக்கர் பரப்பளவில் IR-5 என்ற நெல்லினைப் பயிரிடத் திட்டமிடப்பட் டுள்ளது. 1968-69-ல் 2·34 லட்சம் பண்ணைத் திட்டங்கள் தயாரிக்கப்

பெற்றன. இப் பணியை 1969-70-ல் தீவிரப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
தஞ்சாவூர் மாவட்டத்தில், பல மைய நிலையங்களில் புது வகை
நெல்லான "ஜயா", "பத்மா" ஆகியவற்றைப் பயிரிட முயற்சிகள் மேற்
கொள்ளப்பெறும். அதனால் ஏற்படும் பயன் ஊக்கமளிப்பதாக இருந்தால்,
இவ்வகை நெல்லினைப் பயிரிடும் பகுதிகளை விஸ்தரிக்க ஒரு தனித் திட்டமே
வகுக்கப்படும். இந்த மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 6,171 வடி
முனைக்குழாய்க் கிணறுகளின் பயன் காரணமாக, ஏராளமான விவசாயிகள்
கலப்பு வகை சோளம், கலப்பு வகை மக்காச்சோளத்தையும் கோடைப்
பயிராகச் சாகுபடி செய்ய முனைந்துள்ளனர். வடிமுனைக் குழாய்க்கிணறுகள்
தோண்டும் விரைவுத் திட்டம் 1968-69-லும் தொடர்ந்து செயல்
படுத்தப்பட்டு, 1,304 வடிமுனைக் குழாய்க்கிணறுகள் இவ்வாண்டு தோண்டப்
பட்டன. 1969-70-ல் இன்னும் 1,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள்
தஞ்சாவூர் மாவட்டத்தில அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற் சொன்ன
6,171 வடிமுனைக் குழாய்க் கிணறுகளில், 1968-69-ல் 3,876 வடிமுனைக்
குழாய்க் கிணறுகளுக்கு. மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பகுதி
களுக்கு 1969-70-ல் இத்திட்டம் தீவிரப்படுத்தப்படும். நெற்பயிரை வெற்றி
கரமாகச் சாகுபடி செய்யும் நோக்கோடு, குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில்
கையாளப்படும் மிகுபயன் தரும் நெல்வகை உட்பட, ஒரு திட்டம்
மேற்கொள்ளப்பட்டது. இத் திட்டத்தின்படி, 1968-69-ம் ஆண்டில்,
மண்வளப் பாதுகாப்பு, பாசன நீர் சமாளிப்புத் திட்டத்தின் கீழ் 2,500
எக்கர் பரப்பளவில், பாசன, வடிகால் வசதிகள் பெருக்கப்பட்டன.
இத்திட்டம் 1969-70-லும் கையாளப்பட்டு 20,000 எக்கர் பரப்பளவிற்குப்
பயன்படுத்தப்படும். மிகு பயன்தரும் பயிர்வகைத் திட்டத்தைச் செயல்
படுத்தும் பணியில் உதவி செய்ய 1969-ம் ஆண்டு ஜூன் திங்கள் தொடக்கம்
முதல் வேளாண்மை மாவட்ட மும்முர திட்டத்தின்கீழ் தஞ்சாவூர்
மாவட்டத்தில் முப்பது அமெரிக்க அமைதிப் படைத் தொண்டர்கள் பணி
புரிவார்கள்.

### (உ) இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டம்.

நம் நாட்டில் இயங்கிவரும் இத்தகைய திட்டங்களில் இது இரண்டாவ
தாகும். இம்மாநிலத்தில் 1967-ம் ஆண்டு, ஜனவரி மாதம் 8-ம் தேதி
முதல் நீலகிரி மாவட்டத்தில், ஜெர்மனி நாட்டு பண உதவியுடன் இத்
திட்டம் செயல்பட்டு வருகிறது. இமாசலப் பிரதேசத்தில் உள்ள மண்டி எனும்
திட்டத்தின் அடிப்படையில் இது செயல்படுகிறது. 1967-68-ல் பருவகாலத்
தின் இறுதியில், கோதுமை, உருளைக் கிழங்கு ஆகியவற்றில் நூற்றி
நாற்பத்தேழு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. இதன் விளைவாக, கோடை
காலத்தில், உருளைக்கிழங்கு பயிரோடு, கோதுமையை மாற்றுப் பயிராக
வெற்றிகரமாகச் சாகுபடி செய்யலாம் என்று தெரியவந்தது. இம் முறை
யில் சாதாரணமாக ஒரு ஹெக்டேருக்கு அரை டன் விளைச்சல் கொடுத்ததற்கு
மாறாக 5 டன் விளைச்சலைக் கொடுத்தது. சரியான சாகுபடி முறைகளைக்
கையாள்வதன் மூலமும், தர விதைகளைப் பயன்படுத்தியதனாலும் உருளைக்
கிழங்கின் விளைச்சல் இரு மடங்காகியுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் சாதாரண
மாக ஒரு ஹெக்டேருக்கு 7 டன் விளைச்சலைக் கொடுத்த உருளைக்
கிழங்கு, தற்போது 14 டன்கள் விளைச்சலைக் கொடுத்துள்ளது. உருளைக்
கிழங்கு பயிரில் பரவிவரும் நெமடோட் (Nematode) என்ற பூச்சி ஒழிப்புப்
பரிசோதனையாலும் நல்ல பலன் காணப்பட்டுள்ளது. விவசாயிகளின் செல
வைக் குறைப்பதற்காக நெமடோட் பூச்சி கொல்லிமருந்தில் "டெர்ராகர் பி"
(Terracur P) என்ற மருந்தின் அளவைக் குறைக்கலாமா என்பது
பற்றியும் ஆராயப்பட்டு வருகிறது. நல்ல தரமான, நோய் நொடி
யற்ற விதைகள் விவசாயிகளுக்கு கிடைக்கும்படியான காரியங்களும் நடை
பெற்று வருகின்றன. தொடர்ந்து நடத்தப்பட்டு வந்த ஆராய்சிகளின்
விளைவாக, சீரான பாதுகாப்பு முறைகள் கொண்ட ஒரு திட்டம் கண்டு
பிடிக்கப்பட்டு, 1969-70-ல் விவசாயிகளின் நலனுக்காகச் செயல்படுத்தப்
பட இருக்கிறது. 1970-ம் ஆண்டு ஜூன் திங்கள் முதல், மூன்றுண்டு
களுக்கு செயல்படும். 1969-70-ல், நீலகிரி மாவட்டத்து நான்கு வளர்ச்சி வட்
டாரங்களிலும் விஸ்தரிப்புப் பணி இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.



### (ஊ) பயறுகள் உற்பத்தித் திட்டம்.

1968-69-ம் ஆண்டில், குவாலியர்-3 என்ற வகை கானப்பயறு விதை
கொள்முதல் செய்து விநியோகம் செய்யப்பட்டு, நில ஓரப் பயிராகவும்,
கரைப் பயிராகவும், கலப்புப் பயிராகவும், 1.26 லட்சம் எக்கர் பரப்பில் இது
பயிர் செய்யப்பட்டது. மேலும், நம் மாநிலத்திலேயே, 500 டன் கானப்
பயிறுவிதை கொள்முதல் செய்து 1969-70-ல் விநியோகிக்கப்பட இருக்
கிறது. இதனால் 2·5 லட்சம் எக்கர் நிலத்தில் கலப்புப் பயிராக இது
சாகுபடியாகும். தற்போது, விதைகள் பூச்சிகள் நீக்கப்பட்டு, பயிர்
பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன
மேலும், பயறுவகைச் சாகுபடியில், உரங்களைப் பயன்படுத்த வேண்டும்
என்பதை விவசாயிகளுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கோடு, 1969-70-ல்
150 முன்னோடி நேர் விளக்க நிகழ்ச்சிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
பயறு வகை உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கோடு, பல்வகை பயிர்
முறைத் திட்டத்தின்கீழ் பயறு வகைகளை மாற்றுப் பயிராகச் சாகுபடி
செய்ய யோசனை கூறப்பட்டுள்ளது.

## II. வேளாண்மை நேர் விளக்கப் பணி.

### (அ) தேசிய வேளாண்மை நேர் விளக்கப் பணிகள்.

தேசிய வேளாண்மை நேர் விளக்கப் பணிகள் திட்டம் என்பது,
ஆராய்ச்சி மூலம் கிடைத்த கண்டுபிடிப்புகளை, விவசாயிகளின் பயனுக்குக்
கொண்டு செல்ல காலதாமதம் இருக்கக்கூடாதென்பதற்காக இந்திய
அரசால் ஏற்படுத்தப்பட்டதாகும். மிகு பயன் தரும் வகை பயிர்த்
திட்டத்திற்கு, இந்த நேர் விளக்கப் பணித் திட்டம் மிக்க பேருதவியாக
இருக்கிறது. இத் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் என்னவெனில்,
இத் திட்டத்தை விளக்கும் பணியில், சம்பந்தப்பட்ட விஞ்ஞானிகளே
முன்னின்று நடத்திக்காட்டுவதாகும். இந்தத் தேசிய நேர் விளக்கப்
பணி நிகழ்ச்சிகளில், பல்வகைப் பயிர் வகைத் திட்டத்தின் கருத்தை
விளக்கிக் காட்டவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம்,
ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு பகுதியிலும் கிடைத்த உச்ச
உற்பத்தி என்ன என்பது தெளிவாக்கப்படும். தேசிய நேர் விளக்கப்
பணி நிகழ்ச்சிகள் 1968-69-ல் தொடர்ந்து நடத்தப்பட்டு, 65 நேர்
விளக்கங்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றில் 25 நேர் விளக்கங்கள்
ஆராய்ச்சி ஊழியர்களிடமும், எஞ்சிய 40 நேர் விளக்கங்கள் மாவட்ட
வேளாண்மை அதிகாரிகளிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 1969-70-ம்
ஆண்டில், எந்தெந்த மாவட்டங்களில், விவசாயிகள் பயிற்சி நிலையங்கள்
உள்ளனவோ, அங்கேயுள்ள ஆராய்ச்சி ஊழியர்களிடமே இந்த நேர்
விளக்கப் பணி நிகழ்ச்சிகளை ஒப்படைக்க இந்திய அரசு முடிவெடுத்துள்ளது.
தமிழ் நாட்டில் இத்தகையப் பணி, ஆராய்ச்சிப் பகுதியைச் சேர்ந்தவர்
களால் கோயமுத்தூர், வட ஆர்க்காடு, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்
களில். மாவட்டம் ஒன்றுக்கு 15 நேர் விளக்க நிகழ்ச்சிகள் வீதம் மொத்தம்
45 நடத்தப்படும். தவிர, மற்றைய மாவட்டங்களில், மாவட்டம் ஒன்றுக்கு
5 நேர் விளக்க நிகழ்ச்சிகளாக 20 முதல் 25 விளக்க நிகழ்ச்சிகள்
மாவட்ட வேளாண்மை அதிகாரிகளால் நடத்தப்படும். இதில் உள்ள
ஒரு முக்கிய அம்சம் என்னவெனில் ஒரு ஹெக்டேக்கருக்கு, மூன்று போக
சாகுபடியானல் 13 டன்னும், இரு போக சாகுபடியானல் 11 டன்னும்,
குறிக்கோளளவாக நிர்ணயிக்கப்படும். இதுவரை நடத்தப்பட்ட நேர்
விளக்க நிகழ்ச்சிகளில் 90 விழுக்காடு அளவிற்கு விளைச்சல் குறிக்கோள்
எல்லையைத் தாண்டியிருக்கிறது.

### (ஆ) முன்னோடித் திட்ட நேர் விளக்கம்.

1968-69-ல், மிகுபயன்தரும் பயிர் வகைச் சாகுபடியை 100 எக்கர்
பரப்பளவில் விவசாயிகளுக்கு நேரில் விளக்கிக் காட்டுவதற்காக மத்திய
அரசின் உதவியோடு ஒரு புது நேர் விளக்கத் திட்டம் தமிழ் நாட்டில்
கொண்டுவரப்பட்டது. இதுபோன்ற எட்டு 100 எக்கர் பகுதிகள்

ஈரோடு, பொள்ளாச்சி, திருவள்ளூர், காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, மதுரை, பெரியகுளம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள வேளாண்மைக் கோட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இங்கு, மூன்று போக சாகுபடி பற்றிய நேர் விளக்கப்பணி நிகழ்த்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய நேர் விளக்கங்கள் விவசாயிகளின் நிலங்களிலேயே நடத்திக் காட்டப்படுகின்றன. இதற்கு மத்திய அரசில் மானியம் உண்டு. வேளாண்மைத் துறையினர் கூறும் விதிமுறைகளை விவசாயிகள் கடைபிடிக்கச் செய்வதற்கும் இது அனுகூலமாக இருக்கிறது. 1969–70-ம் ஆண்டிலும், இந்தத் திட்டம் வேறு எட்டு மைய நிலையங்களில் தொடர்ந்து கடைபிடிக்கப்படும். இதற்கென 1·4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (இ) பல்வகைப் பயிர் முறை நேர் விளக்கம்.

1968–69-ம் ஆண்டில், மத்திய அரசின் உதவியோடு, "பல்வகைப் பயிர் முறை நேர் விளக்கம்" என்ற புதுவிதமான நேர் விளக்கத் தொடர் ஒன்று செங்கற்பட்டு, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் 30 வளர்ச்சி வட்டாரங்களில் கொண்டுவரப்பட்டது. இந்த நேர் விளக்கத் திட்டங்கள், நிரந்தரமான நீர்ப்பாசன வசதி கொண்ட 5 ஏக்கர் நிலப்பரப்புகளில் நடத்திக் காட்டப்படுகின்றன. இதுவன்றி, இத்தகைய நிலத்தைச் சுற்றியுள்ள மற்ற விவசாய நிலங்களின் பயிரும் கண்காணிக்கப்படுகின்றது. தக்க மாற்றுப் பயிர்களைப் பயிரிட்டு, பயிர் சாகுபடியை தீவிரப்படுத்தும் நோக்கோடு இந்த நேர் விளக்கத் திட்டங்களில், இரு போகம் அல்லது முப்போக சாகுபடி முறை விளக்கிக் காட்டப்படுகின்றது. 1969–70-ம் ஆண்டில், இத்தகைய நேர் விளக்கத் திட்டங்கள் மற்றைய மாவட்டங்களிலும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென 1·42 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஈ) மண் பக்குவம் செய் நேர் விளக்கத் திட்டம்.

1968–69-ம் ஆண்டில் மண் பக்குவம் செய் நேர் விளக்கத் திட்டம் ஒன்று இந்திய அரசினரால் கீழ்க்கண்ட எட்டு மைய நிலையங்களில், நிலையம் ஒன்றுக்கு ரூ. 15,000 செலவில், 100 ஏக்கர் கொண்ட பரப்பளவில் செயல்பட ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது:—

(1) கும்பகோணம்.

(2) கிருஷ்ணகிரி.

(3) இராணிப்பேட்டை.

(4) கள்ளக்குறிச்சி.

(5) ஈரோடு.

(6) காஞ்சிபுரம்.

(7) இராமநாதபுரம்.

(8) தென்காசி.

இத் திட்டத்தின்கீழ் மண் பக்குவம் செய்யும் கனிப்பொருளான ஜிப்சம் என்ற கள்க்கற்கள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு, நிலத்தைப் பண்படுத்தவும், விளைச்சலைப் பெருக்கவும் வழிகோலப் பட்டுள்ளது. இதுபற்றிய முன்னோடி நேர் விளக்கத் திட்டத்தையும் மண் பக்குவம் செய் நேர் விளக்கத் திட்டத்தையும் மேற்பார்வை யிடுவதற்கென தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மத்திய அரசின் ஆதரவோடு இத்திட்டம் வேறு எட்டு மைய நிலையங்களில் செயல்பட்டு வருகிறது. 1969–70-ம் ஆண்டில் இத்தகைய நேர் விளக்கத் திட்டங்கள் வேறு பல மைய நிலையங்களில் நடத்தப்படும். இதற்கென 1·40 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பெற்றுள்ளது.





### (உ) வளர்ச்சி வட்டார அளவில் நேர் விளக்கங்கள்.

அமெரிக்க உதவித் திட்டத்தைச் சார்ந்த வளர்ச்சிப் பணி, வேளாண்மைப் பொருளாதாரம், பண்ணை இயந்திர கருவிகள், மண் நீர் பயன் மேற்பார்வை, பயிர் பாதுகாப்பு பற்றிய வல்லுநர்கள், நமது வேளாண்மைத் துறை அலுவலர்களுடன் தொடர்புகொண்டு கோயமுத்தூர், வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு சமுதாய வளர்ச்சி வட்டாரத்திலும் 5 நேர் விளக்க நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர். தவிர, இவர்கள் தேசிய நேர் விளக்கத் திட்டத்திலும் பங்கு கொண்டுள்ளனர். அண்மையில், களர் நிலம் உவர் நிலம் பற்றிய மற்றொரு அமெரிக்க உதவித் திட்டத்தைச் சேர்ந்த வல்லுநர் ஒருவர் இங்கு வந்துள்ளார். இத்தகைய நிலங்களின் தன்மை பற்றி அவர் ஆராய்ச்சிகள் நடத்திக் கொண்டிருக்கின்றார்.

## III. விதைப் பெருக்கமும், சான்று வழங்கலும், சோதனை மேற்கொள்ளலும்.

விவசாய உற்பத்தித் திட்டத்தில், விதை ஒரு தலையாய பங்கினை வகிக்கிறது. எனவே, விவசாயிகளுக்குத் தரமான விதைகளை வழங்க, வேளாண்மைத் துறையினர் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளனர் :—

கிராம "சகாயக்குகள்" திட்டத்திற்குப் பதிலாக வேளாண்மைத் துறையினர் மூலமாக தர விதைகளைக் கொள்முதல் செய்து பங்கீடு செய்யும் மாற்றுத் திட்டம்.

எல்லாவித உணவுப் பயிர், தானியப் பயிர் இவற்றிற்கான தர விதைகளைப் பங்கீடு செய்யும் பணிக்கு வழங்கிவந்த உதவித் தொகையை இந்திய அரசு 1967–68-ம் நிதியாண்டுடன் நிறுத்திவிட்டது. இதன் விளைவாக, மேற்கொண்டு இந்த கிராம "சகாயக்குகள்" திட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமா என்பதுபற்றி இந்த அரசு ஆராய்ந்து முடிவில் அத் திட்டத்தைக் கைவிடுவதென முடிவு செய்யப்பெற்றுள்ளது. இத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக, இலாபம் நட்டம் இல்லாத அடிப்படையில், தர விதைகளைக் கொள்முதல் செய்து, வேளாண்மைத் துறை மூலமாகப் பங்கீடு செய்யும் ஒரு திட்டத்தை இந்த அரசு உருவாக்கியுள்ளது. இத் திட்டத்தின்கீழ், அரசாங்க விதைப் பண்ணையிலிருந்து பெறப்பட்ட ஆரம்ப நிலை விதைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கிராமங்களில் குறிப்பிடப்பட்ட சில விவசாயிகளுக்கு வழங்கப்படும். இவ் விதைகளின் உச்ச விலைக்குமேல் 10 முதல் 15 விழுக்காடு, உதவித் தொகையாக, குறிப்பிடப்பட்ட சில விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, பின்னர் இத்தொகை விற்பனை பணத்திலிருந்து வசூலிக்கப்படும். இரண்டாந் தர விதைகளின் கொள்முதலுக்கான குறிக்கோளளவு 1969–70-ம் ஆண்டிற்கு 16,000 டன்கள் என்றும், இதை சுமார் 24,000 ஏக்கர் பரப்பளவில் பெறுவதெனவும் முடிவாகியுள்ளது.

**விதை பதனப்படுத்தும்பகுதிகள்.**—நான்காவது திட்டகாலத்தில், 4 விதை பதனப்படுத்தும் பகுதிகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதல் நடவடிக்கையாக, கோயமுத்தூரில், 1969–70-ம் ஆண்டில் விதை பதனப் படுத்தும் இயந்திர வார்ப்புப் பகுதி ஒன்று நிறுவப்படும். இத் திட்டத்தின் நோக்கம், விதைகளை உலர வைக்கும் இயந்திரம் ஒன்றை மின் விசை மூலமோ அல்லது எண்ணெய் சக்தி மூலமோ இயங்கக்கூடியதாக உருவாக்குதலாகும். இது நிலங்களிலோ, அல்லது களங்களிலோ இயக்கப்படும். நெல், மிளகாய், வேர்க்கடலை, சோளம் முதலியவற்றை வெயிலில் உலரவைப்பதில் சிரமங்கள் இருப்பதால், உணவு தானியங்களையும் வாணிபப் பயிர்களையும் உலர வைக்கும் இயந்திரம் ஒன்றை உருவாக்கல் இன்றியமையாததாகிறது. விவசாய பொறியியல் ஆராய்ச்சி நிலையமும், இதுபோலவே விதை உலரவைக்கும் பணிகளில் அக்கறை கொள்ளுமாறு ஊக்குவிக்கப்படும்.

**விதைச் சட்டம்.**—1968-ம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் இரண்டாம் நாள் முதல், 1966-ம் ஆண்டின் விதைகள், சட்டத்தின் சில பகுதிகளை நடைமுறைக்கு இந்திய அரசு கொணர்ந்துள்ளது. 1968-ம் ஆண்டின் விதைகள்பற்றிய விதிமுறைகளும், இந்திய அரசாங்கத்தின் தனி அரசிதழில் 1968-ம் ஆண்டில் செப்டம்பர் திங்கள் 2-ம் நாள் பிரசுரிக்கப் பட்டுள்ளன. மேற்கூறிய அறிக்கை பிரசுரமான தேதியிலிருந்து, விதைகள் சட்டம் செயல்படத் தொடங்கியுள்ளது. இந்தச் சட்டத்தின்படி மாநில அரசு சில முன் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது. அதுபற்றி கவனிக்கப்பட்டு வருகிறது.

**விதைகளின் தரஒப்புத் திட்டம்.**—விதைகள் சட்டப்படி, அச்சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள தரங்களுக்கு ஒப்ப இருக்கும் விதைகள் மட்டுமே விவசாயி களுக்கு வழங்கப்படல் வேண்டும். மாறாக, அவ்விதைகள் குறிப்பிட்ட தரத்திற்கு மாறாக இருந்து, அத்தகைய தரமில்லா விதைகளை யாரேனும் வழங்கினால், அவர்கள் தண்டனைக்குள்ளாவர்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், தனியார்களும் விதை விற்பனையில் ஈடுபடுவதை ஊக்குவிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால் அரசாங்கமே விதைகளைச் சேமித்து வைத்து விற்பனை செய்ய வேண்டிய தேவை இல்லாமற்போகும். தற்போது பாரி கம்பெனியாரும், திருவாரூர் விற்பனைச் சந்தை சங்கமும் விதைகள் உற்பத்தி, விற்பனையில் ஈடுபட்டுள்ளன. இதே போல் பருத்தி, வேர்க்கடலை போன்ற பயிர்களின் விதை உற்பத்தி விற்பனையில் மற்றும் சில தனியார்கள் ஈடுபட வாய்ப் பிருக்கிறது. விதைகளின் தரம் பற்றிய சான்று வழங்கல், விதைகளின் தரத்தை ஒரே சீராக வைக்க இன்றியமையாததாகின்றது. இதற்காக, விதை தரஒப்புச் சான்று வழங்கும் நிலையம் ஒன்றை நிறுவ, இந்த அரசு திட்டமிட்டுள்ளது. தேசிய விதைகள் கழகம், நெல்லைப் பற்றி தரஒப்புச் சான்று வழங்குவதில்லை என்பதையும் இச்சமயத்தில் சுட்டிக் காட்ட வேண்டும். விதைகள் தரஒப்புச் சான்று வழங்குமுன், சம்பந்தப் பட்ட நிலத்தை, விதை விதைத்த நாள் முதல், அறுவடையாகும் வரை குறைந்தபட்சம், நான்கு முறையாவது நேரில் போய்ப் பார்க்க வேண்டும். இவ்வாறு அவ்வப்போது நிலங்களைப் பார்வையிடுவதால், விதைப் பண்ணை உடைமையாளர்கள் நவீன முறைகளைக் கையாளத் தூண்டுகோலாக இருக்கும். இதன் விளைவாக, அதிக விதை உற்பத்தியாவதோடு, நல்ல தரமான விதைகளும் கிடைக்க ஏதுவாகிறது. வேண்டாத மற்ற வகைப் பயிர்களை களையெடுத்தல் வேண்டும். அறுவடை சமயத்திலும், மாதிரிக்காக விதை பொறுக்கும்போதும் வேளாண்மைத் துறையினர் உடனிருந்து உதவி, விதையில் கலப்பு ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்வர். மாதிரிக்காக எடுக்கப்பட்ட விதைகள் விதைச் சோதனைச் சாலைக்கு அனுப்பப் பட்டு, அங்கு குறிப்பிடப்பட்ட தரத்திற்கு ஒப்ப அவ்விதைகள் உள்ளனவா என்பது பற்றி ஆராய்ச்சி செய்யப்படும்.

ஆண்டுதோறும், 16,000 எக்கர் நிலப்பரப்புள்ள விதைப் பண்ணை களில் 6,000 முதல் 8,000 டன்கள் வரை விதை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## IV. பயிர் ஊட்டம்

### மண்வள ஆராய்ச்சி

மண்வள ஆராய்ச்சி நிலையங்கள் ஏழு—கோயமுத்தூர், ஆடுதுறை, கோவில்பட்டி, கடலூர், மதுரை, காஞ்சிபுரம், குடியாத்தம் ஆகிய ஊர்களில் தற்போது செயல்பட்டு வருகின்றன. 1969-70-ம் ஆண்டில், ரூ. 75,600 செலவில் இன்னுமொரு மண்வள ஆராய்ச்சி நிலையம் சேலத்தில் தொடங்கப்பெறவிருக்கின்றது. இந்த ஆராய்ச்சி நிலையங்கள் யாவும், மண்வள ஆராய்ச்சியை இலவசமாக நடத்தித் தருகின்றன. மேலும் விவசாயிகள் கைக்கொள்ளவேண்டிய உரமாற்று முறைகளைப் பற்றியும் அரிய யோசனைகள் கூறப்படுகின்றன. ஆடுதுறையில் உள்ள





ஆராய்ச்சி நிலையம் தவிர, மற்ற நிலையங்கள், மாதமொன்றுக்கு 1,250 மண்வள சோதனை செய்யும் தகுதி படைத்தவை, ஆடுதுறையில் உள்ள நிலையத்தில் மாதமொன்றிற்கு 4,000 மண்வள சோதனை செய்யும் வசதியுள்ளது.

### இரசாயன உரங்கள்

(i) 1968-69-ம் ஆண்டில், என்றுமில்லா அளவிற்கு, வறட்சி நிலை நிலவியபோதும், முந்தைய ஆண்டுகளை விட இந்த ஆண்டு நைட்ரஜன் உர விற்பனை அதிகமாக இருந்து மகிழ்ச்சியூட்டுவதாக அமைந்தது. 1968-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதிவரை 92,000 டன்கள் நைட்ரஜன் உரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், 1966-67-ம் ஆண்டில் 85,000 டன்களும், 1967-68-ம் ஆண்டில் 89,000 டன்கள் மட்டும்தான் பயன்படுத்தப்பட்டன. $P_2O_5$, $K_2O$ என்ற பாஸ்பேட் பொட்டாசியம் உர வகைகளைப் பொறுத்தவரை, முந்தைய ஆண்டைவிட இந்த ஆண்டு, சோதனைப் புள்ளி விவரங்கள் முன்னேறி உள்ளன. 1968-69-ம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட இரசாயன உரங்களின் புள்ளி விவரம், 1966-67, 1967-68-ம் ஆண்டுகளின் புள்ளி விவரத்தோடு ஒப்பிடப்பட்டுக் கீழே தரப்பட்டுள்ளது :—

**தமிழ்நாட்டில் இரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்டவை**

(அளவு—லட்சம் டன்கள்.)

| ஆண்டு. | நைட்ரஜன். | பாஸ்பேட். | பொட்டாசியம். |
|---|---|---|---|
| 1966-67 | 0·85 | 0·44 | 0·32 |
| 1967-68 | 0·89 | 0·30 | 0·30 |
| 1968-69 (1968-ம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை சாதனை). | 0·92 | 0·31 | 0·26 |

1969-70-ம் ஆண்டிற்கான நமது தேவைகள், 1·75 லட்சம் டன் நைட்ரஜன் உரமும், 0·80 லட்சம் டன் பாஸ்பேட் உரமும், 0·70 லட்சம் டன் பொட்டாசியம் உரமும் ஆகும்.

(ii) 1968-69-ம் ஆண்டில் இரசாயன உரம் வழங்கப்பட்ட நிலை திருப்திகரமாக இருந்தது. மத்திய உரக்குழுவிடம் நாம் கேட்ட அளவிற்கு கொடுக்க இந்திய அரசு முன்வந்தது. 1969-70-ம் ஆண்டிலும் உர வழங்கு முறை திருப்தியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கமும் தனியாரும் நிறைய இருப்பு வைத்துள்ளனர். 1969-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதலாம் நாள் முதல் உள்ளூர் உற்பத்தி யாளர்கள் தங்களின் உற்பத்தி முழுவதையும் பொதுச் சந்தையில் விற்பதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாறு உள்ளூரில் உற்பத்தியாகும் உரங்கள் யாவும், விற்பனைக்கு வருவதால், உரங்களைப் பெறுவதில் எந்தவிதச் சிக்கலும் ஏற்படாது என எதிர்பார்க்கப்படுகிறது.

(iii) உரங்கள் வழங்கும் பணியானது, தொடர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள், தனி வியாபாரிகள் மூலம் நடைபெற்று வந்தது. இந்த உரம் வழங்கும் திட்டத்தில் ஒரு முக்கிய அம்சம் என்னவெனில், சில்லரை வியாபார அளவில் மறுபடியும் தனியார் வியாபாரத்தை பரீட்சார்த்தமாக, தஞ்சாவூர், கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, செங்கற்பட்டு ஆகிய குறிப்பிட்ட மாவட்டங்களில் மறுபடியும் அனுமதித்ததாகும். உள்ளூர் தயாரிப்பு உரங்களை வழங்கலில் உள்ள கட்டுப்பாட்டைச் சிறிது சிறிதாகத் தளர்த்துவதென்று இந்திய அரசின் கொள்கையையொட்டி, உரங்கள் வழங்கும் வகையினை மறு ஆய்வு இந்த அரசு மிக்கக் கவனத்துடன் செய்தது. இதன் விளைவாக, எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ, அங்கெல்லாம் கூட்டுறவுத் துறையோடு, தனிப்பட்ட வியாபாரிகளும்

உர விற்பனை செய்ய அனுமதி அளிக்குமாறு மாவட்ட ஆட்சியருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், கூட்டுறவுத் துறையினருக்கும், நிலைமை வசதியாக இருப்பதோடு, இருப்பு வைக்கும் இடங்களும் பெருகி, விவசாயிகளுக்கு உரங்கள் தாராளமாகக் கிடைக்க வாய்ப்பேற்படும்.

(iv) இரசாயன உரங்களின் விலைகளைப் பொறுத்தவரை, நாணய மதிப்புக் குறைவுக்கு முன்னர் எந்த விலைவாசி நிலவியதோ, அந்த அளவிற்குத் தற்போதும் விலைகளை மாற்றியமைக்க வேண்டும் என்று இந்திய அரசை 1967-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர் மாநாட்டின்போது கேட்டுக்கொள்ளப்பட்டது. நைட்ரஜன் வகை உரங்களின் விலை உயர்ந்தால், நமது விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்ற நமது அச்சத்தை இந்தியப் பேரரசுக்கு ஏற்கனவே பன்முறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். எனவேதான், உரங்களின் மீது 10 விழுக்காடு எக்சைஸ் வரியும், இறக்குமதி செய்யப்படும் உரங்களின் மீது வரியும் போடப்படும் என்று இந்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அரசினருக்கு முழு வியப்பைத் தருகிறது. இதைத் தொடர்ந்து, 1969-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முதல் நாளுக்கு முந்தைய இருப்பு உள்பட, இந்திய அரசாங்க உரக் குழுவிடம் வாங்கப்படும் உரங்களின் விலைகள் உயர்த்தப்படும் என்ற அறிவிப்பும் இந்திய அரசிடமிருந்து வந்துள்ளது. இத்தகைய விலை உயர்வு, இந்தச் சமயத்தில் முக்கியமானதும், இன்றியமையாததுமான ஒரு பொருளுக்கு விதிப்பது, நமது வேளாண்மைத் திட்டங்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. தங்கள் முடிவினை புனராலோசனை செய்ய வேண்டுமென்று இந்திய அரசை இந்த அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

(v) உரங்களை வாங்குவதற்காகக் கடன் வசதியளிப்பது பொறுத்த மட்டில், கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பகுதி இத்தகைய வசதியையளிக்கின்றன. இந்த முயற்சிக்கு உதவியாக இருக்கும் அளவிற்கு அரசாங்கம் முன்வருகிறது. 1967-68-ம் ஆண்டில் தீவிர உரமிடு திட்டத்தின்கீழ் 207·51 லட்சம் ரூபாய் விவசாயிகளுக்குக் கடனாக வழங்கப்பட்டது. 1968-69-ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக, 150 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின்னர் அது 300 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. 1969-70-ம் ஆண்டிற்காக, 250 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மிகு பயன் தரும் பயிர்வகைத் திட்டத்தின்கீழ் பங்கு பெறும் விவசாயிகளும், கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராயுமில்லாத விவசாயிகள் இந்தத் தீவிர உரத்திட்டத்தின்கீழ் கடன் வசதி பெறத் தகுதி பெற்றவர்கள்.

(vi) இரசாயன உரங்கள் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை விவசாயிகள் நல்ல முறையில் புரிந்துகொண்டு வரும் இந்தச் சமயத்தில், அவர்களுக்கு நல்ல தரமான உரங்கள் வழங்கப்படல் வேண்டும் என்பது அவசியமாகிறது. இதற்கெனத் தனியாக ஒரு உரத் தலைமை ஆய்வாளர் அலுவலகம் அனுமதிக்கப்பட்டு, வேளாண்மைத் துணை இயக்குநர் அளவில் ஒரு அதிகாரியும் செயல்பட்டு வருகிறார்கள். இவ்வலுவலகம், வேளாண்மைத் துறை இயக்குநரின் நேர் பார்வையில் இருந்து வரும். நமது மாநிலத்தில் தரமான இரசாயன உரங்கள் வழங்கப்படும் பொறுப்பு இவர்களுக்கு உண்டு.

பயிர் வளர்ச்சியில் இரசாயன உரங்கள் விரைவான பயனைத் தர பயன்படுகிறது என்றாலும், மண் மூலமாக இயற்கையில் கிடைக்கும் உரங்களின் மேன்மை மிக முக்கியமானதாகும். இந்த வகையில், பசுந்தழை உரம், கிராமக் கலவை எரு, மண் பக்குவம் செய்தல் ஆகியவை முதலிடமாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன. கீழ்க்கண்ட சில திட்டங்கள் நடைமுறையில் இருந்து வருகின்றன :—



(3) நகர்ப்புறக் கலவை எரு.

(4) நலம் விளைக்கும் கிருமி வளர்ப்பு.

(5) மண் பக்குவஞ் செய்தல்.

(அ) **பஞ்சாயத்துக்கள் பசுந் தழை விதை உற்பத்தி செய்யும் முன்னோடித் திட்டம்.**—1963-64 முதல் 1966-67 வரை, பசுந்தழை உர உற்பத்திக்கென 125 பஞ்சாயத்துக்களுக்கு 7·81 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. புதுப் பஞ்சாயத்துக்களுக்குக் கடன் வழங்கும் யோசனை கைவிடப்பட்டுவிட்டது. ஏற்கனவே கடன் வழங்கப்பட்டுள்ள பஞ்சாயத்துக்களில் பசுந்தழை உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் முழுக் கவனமும் செலுத்தப்படத் திட்டமிடப்பெற்றுள்ளது.

(ஆ) **கழிவு எரு.**—மூன்றாவது திட்டக் கால இறுதியில், கழிவு எரு உற்பத்தியின் அளவு 1·24 லட்சம் டன்களாக இருந்தது. 1966-67-ம் ஆண்டில் உற்பத்தியின் அளவு 1·51 லட்சம் டன்களாக இருந்தது. 1968-69-ம் ஆண்டில் இது 2·20 லட்சம் டன்களாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. நான்காவது திட்டக்கால இறுதியில் இது 3 லட்சம் டன்களாக உயரத் திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) **நகர்ப்புறக் கலவை எரு.**—கழிவுப் பொருள்களை உரமாக மாற்றி' விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டு, உள்ளாட்சி மன்றங்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 1968-69-ம் ஆண்டில், இதுவரை மொத்தம் 6·54 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதனால், 4·36 லட்சம் டன் தரமான உரம் உள்ளாட்சி மன்றங்களால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1969-70-ம் ஆண்டிலும் கடன்கள் தொடர்ந்து உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுக்கப்படும். இவ்வாண்டுக்கென 6 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உர உற்பத்தி அளவில் நட்டம் ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றத்திற்கு, அதற்கான செலவில் 25 விழுக்காட்டிற்கு மேற்படாத அளவிற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. 1969-70-ம் ஆண்டிற்கென, இத்தகைய உதவித் தொகைக்காக 1 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) **நலஞ்செய் கிருமி வளர்ப்பு.**—1968-69-ம் ஆண்டில், 11,000 எண்ணிக்கையுள்ள கிருமி வளர்ப்புக் குடுவைகள் பசுந்தழை போன்ற மூடுவிதை பயிர்களின் விதைகள் பாதுகாப்பிற்காக, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. 1969-70-ம் ஆண்டிலும் இத்தகைய குடுவைகள் 20,000 தயாரிக்கப்பட்டு வழங்கப்பட இருக்கிறது.

(உ) **மண் பக்குவஞ் செய்தல்.**—ஜிப்ஸம் என்ற களிக்கற்களைப் பயன்படுத்தி, களர் நிலங்களையும், உவர் நிலங்களையும், பண்படுத்த முயற்சிகள் நடந்து வருகின்றன. இதற்கென ஜிப்ஸம் என்ற களிக் கற்களின் விலையில் பாதியை உதவிப் பணமாகத் தள்ளப்பட்டு வழங்கப் படுகின்றது. இந்த உதவிப் பணத்திற்காகும் செலவை மாநில அரசும், மத்திய அரசும் சரிசமமாக ஏற்கின்றன. இதைப் போலவே நிலத்தில் உள்ள அமிலத் தன்மையைப் போக்க, சுண்ணாம்புக் கற்களைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1,000 ஏக்கர் நிலங்களைப் பண்படுத்திச் சீரமைக்க 2,000 டன் களிக் கற்கள் வழங்கும் குறிக்கோள் அளவுடன் இத் திட்டம் 1966-67-ம் ஆண்டில் தொடங்கப் பெற்றது. 1967-68-ம் ஆண்டில் 1,490 டன் களிக் கற்கள் வழங்கப் பெற்றன. 1968-69-ம் ஆண்டு (1968-ம் ஆண்டு டிசம்பர் இறுதி வரை) 1,300 டன்கள் வழங்கப்பெற்றன. 1969-70-ம் ஆண்டில் வழங்குவதற்கென, 5,000 டன் களிக் கற்களும் 1,000 டன் சுண்ணாம்புக் கற்களும் வாங்குவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

[1969 மார்ச் 18

1967-68-ல் 2·99 லட்சம் ஏக்கரிலும் இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. ஆனால், 1968-69-ல் 2·38 லட்சம் ஏக்கரில் மட்டும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இக்குறைவுக்குக் காரணம், பயிர் செய்யப்பட்ட நிலத்தின் பரப்பு. செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்களில் குறைந்து விட்டதுதான். இதைப் போன்று வேர்கடலையைப் பொறுத்தவரை குறிக் கோளளவான 0·67 லட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு மாறாக 0·43 லட்சம் ஏக்கர் பரப்பளவில் மட்டும், விமான மூலம் மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. குறைவுக்குக் காரணம், அது சமயம் நிலவிய பருவநிலைக் கோளாறுதான். இந்த இரு பெரும் பயிர்கள் தவிர, 6,000 ஏக்கர் பருத்தியும், 3,000 ஏக்கர் கேழ்வரகும், விமானத்திலிருந்து தெளிக்கப்பட்ட மருந்து மூலம் பாதுகாக்கப்பட்டன. 1969-70-ம் ஆண்டில், இத் திட்டத்தை விரிவுபடுத்தி சுமார் 3·50 லட்சம் ஏக்கருக்குப் பயன ளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1969-70-ம் ஆண்டின்போது, 500 மின் விசை மருந்து தெளிப்பான்கள் வாங்கி, விவசாயிகளுக்கு வாடகைக்கு விடத் திட்டமிடப்பட்டுள்ளது.

1968-69-ம் ஆண்டில், எலித் தொல்லையை ஒழிக்க இந்திய அரசால் ஒருத் திட்டம் கொண்டுவரப்பட்டு, இத திட்டத்தின்படி ஏக்கர் ஒன் றுக்கு 50 காசுகளுக்கு மேற்படாத வகையில் எலி கொல்லும் மருந்துகள் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது. இத் திட்டம் 2·50 லட்ச ரூபாய் செலவில், 5 லட்சம் ஏக்கர் பரப்பளவிற்குப் பயன்படும் 1969-70-ம் ஆண்டிலும் இத திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளின் தரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, மூன்று பூச்சி கொல்லி மருந்து ஆய்வகங்கள் ஏற்கனவே, கோயமுத்தூர், ஆடுதுறை, கோவில்பட்டி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இதுபோன்ற மற்றொரு ஆய்வகம் காஞ்சிபுரத்திலும் நிறுவப்படும். விவசாயக் கிடங்குகளில் இருக்கும் மருந்துகளிலிருந்து மாதிரிகள் வருவித்து, இவ்வாய்வகங்களுக்கு அவ்வப் போது அனுப்பப்பட்டு, இந்தியத் தரக் கழகம் விதித்த தரங்களுக்கு ஏற்ப இம்மருந்துகள் இருக்கின்றனவா என ஆராயப்படுகிறது.

தற்போது, பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் உரிய விலையில் 65 விழுக்காடு அளவில் விவசாயிகளுக்கு விற்கப்படுகின்றன. எஞ்சிய 35 விழுக்காடு உதவிப் பணமாக அரசு ஏற்றுக்கொள்கிறது. இந்த உதவிப் பணத்தை அடியோடு நிறுத்திவிட வேண்டுமென்று திட்டக் குழுவும், இந்திய அரசும் நமது அரசை வற்புறுத்திய போதிலும், இந்த அரசு இந்த உதவித் தொகையை ஆண்டொன்றுக்கு 5 விழுக்காடு வீதம் படிப்படியாகக் குறைக்கத் திட்டமிட்டிருக்கிறது. இக குறைவு, நான்காம் திட்டக்கால இறுதியில் பத்து விழுக்காடாக இருக்கும்.



1969 மார்ச் 18]

தற்போது கிடைக்கும் TMV 2 என்ற வகையைவிட TMV 7 என்ற ஒரு புதுக் கொத்து வகையை, அது குறுகிய காலத்தில் அதிகப் பயன் தரும் தன்மையைக் கருதி, முனைப்புத் திட்டப் பகுதிகளில், அவ்வகைப் பயிரைப் பிரபலப் படுத்தப்படுகிறது

பருத்தி.— நமது மாநிலத்தில் சுமார் 10 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பருத்தி தற்போது பயிரிடப்படுகிறது. 1967-68-ம் ஆண்டில், 8,99,675 ஏக்கர் நிலத்திலும், 1968-69-ம் ஆண்டில் ஜனவரித் திங்கள் முடிய 7,76,450 ஏக்கரிலும் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. நிலையான பாசன வசதியுள்ள பகுதிகளில் மேற்கொண்டு பருத்தி சாகுபடியை விரிவுபடுத்த இயலாத காரணத்தால் நான்காவது திட்ட காலத்தில், பருத்தி சாகுபடி யைத் தீவிரப்படுத்தி, உற்பத்தியை நான்காவது திட்டகால இறுதியில் 4·50 லட்சம் டன் பேல் கட்டுகளிலிருந்து 5·50 லட்சம் பேல் கட்டுகளுக்கு உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முனைப்படித் திட்டம் பகுதிகளில், நிலை யான பாசன வசதி பெற்ற பருத்தி சாகுபடி முனைப்புத் திட்டமல்லாத பகுதிகளில் கிடைப்பதை விட 80 முதல் 100 விழுக்காடு அதிக பலனைத் தந்துள்ளது. இதுவரை, நிலையான பாசனப் பருத்திப் பகுதிகள் பெறும் பான்மையாக, முனைப்புத் திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டுவிட்டன. எனவே, 1969-70-ம் ஆண்டிலிருந்து, மானாவாரி நிலப் பருத்திச் சாகுபடி யையும் முனைப்புத் திட்டத்தின் கீழ்க் கொண்டுவரத் திட்டமிடப் பெற் றுள்ளது. பருத்தி உற்பத்தித் துறையில் உள்ள ஒரு முக்கியமான அம்சம் என்னவெனில், MCU 5 என்ற வகைப் பருத்து வெளியீடு தான். இந்த ரகப் பருத்தி எல்லா சோதனைகளிலும் வெற்றி பெற்று இருக்கிறது. தரத்தையும், நூற்புக் கொள்ளளவையும் பொறுத்தமட்டில், இந்த நாட்டிலேயே மிக உயர்ந்த ரகப் பருத்தி இதுதான்.

உருளைக்கிழங்கு.—உருளைக்கிழங்கு சாகுபடியாகும் மொத்தம் 31,000 ஏக்கர்களில், 19,000 ஏக்கர் நிலப்பரப்பு, நீலகிரி மாவட்டத்தைச் சார்ந் துள்ளது. 1967-68-ம் ஆண்டில், 1,149 ஏக்கர் பரப்பளவு பயன்படுத்தப் பட்டது. 1968-69-ம் ஆண்டில், 4,902 ஏக்கர் பரப்பளவு உருளைக்கிழங்கு சாகுபடியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. பயிர் முற்றுங்காலத்து நேர்ந்த நோய் காரணமாகவும், பூச்சி அரிப்பு காரணமாகவும், இந்தச் சாகுபடி நீலகிரி மாவட்டத்தில் அழியும் தருணத்தில் இருக்கின்றது எனவே, கொடைக்கானலிலும், ஓசூர் பகுதிகளிலும் மாற்று நிலங்கள் திருத்தப் படுகின்றன. இந்தத் திருத்தப் பணி காரணமாக, கொடைக்கானல பகுதியில், 2,000 ஏக்கரில் இருந்து 12,000 ஏக்கர் பரப்பாக உயர்ந்து உள்ளது. இதேபோல், ஓசூர் சுற்றியுள்ள பகுதியிலும் உருளைக்கிழங்குச் சாகுபடியாகும் நிலப்பரப்பு படிப்படியாக அதிகமாகிக் கொண்டிருக்கிறது.

தென்னை.—தற்போது தென்னை சாகுபடியாகும் நிலப்பரப்பு 1·30 லட்சம் ஏக்கராகும். 1967-68-ம் ஆண்டில் 7,970 ஏக்கர் பரப்பளவும் 1968-69-ல் 6,941 ஏக்கர் நிலமும் தென்னை சாகுபடியின் கீழ்க் கொண்டு வரப்பட்டது.

இலங்கை, பர்மா அகதிகள் மற்றும், நிலமற்ற ஏழைக் குடும்பத் தாருக்கு புனர் வாழ்வளிக்கும் நோக்கத்தில், கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் தென்னை சாகுபடியைப் பெருக்க ஒரு திட்டம் வகுக்கப்பட் டுள்ளது. ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் 5 ஏக்கர் நிலமும், தேவைப் படும் நிதியுதவியும் அளிக்கப்படுகின்றன.

நமது மாநிலத்தில், தென்னை உற்பத்திப் பெருக்கத்திற்காக எடுக்கப் பட்டுள்ள மற்றொரு முக்கிய நடவடிக்கை, கலப்பு தென்னைப் பயிர் வளர்ப் புக்கான திட்டமாகும். உயரமாக வளரும் தென்னை வகையோடு, குள்ள மாக வளரும் வகையைச் சேர்த்து, கலப்புத் தென்னை உருவாக்கப் படுகிறது. இதனால் இளஞ்செடியில் உள்ள கலப்பு வீரியத்தைப் பயன் படுத்த முடிகிறது. இத்தகைய கலப்புத் தென்னைப் பயிரைச் சோதனை சாகுபடி செய்து பார்த்ததில், வளர்ப்பு முறையிலும் சரி, பலனளிப்பதிலும்

[1969 மார்ச் 18

சரி, மிகக் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் காணப்படுகிறது. இந்தத் திட்டப் படி, தொடக்கத்தில் ஆண்டொன்றிற்கு 5,000 கலப்புத் தென்னை வீதம் உற்பத்தி செய்யப்படும். இந்த உற்பத்தி படிப்படியாக அதிகரிக் கப்படும்.

1969-70-ம் ஆண்டில், 78,000 ரூபாய் செலவில், இராமநாதபுரம் மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவத் திட்டமிடப் பட்டுள்ளது.

முந்திரி.—ஆண்டொன்றிற்கு 5,000 எக்கர் பரப்பளவிற்கு முந்திரிச் சாகுபடியை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1967-68-ம் ஆண்டில் 7,000 எக்கர் பரப்பளவும், 1968-69-ம் ஆண்டில் 6,693 எக்கர் பரப்பளவும் முந்திரிச் சாகுபடியின்கீழ் கொண்டுவரப்பட்டது. தென்னார்க்காடு மாவட் டத்தில் முனைப்புத்திட்ட அடிப்படையில், சுமார் 2,500 எக்கர் நிலத்தில் முந்திரிச் சாகுபடியைத் தீவிரப்படுத்த இந்திய அரசால் கொண்டுவரப்பட்ட திட்டம் ஒன்று இருக்கின்றது. 1969-70-ம் ஆண்டில், இத் திட்டத்தின் கீழ், 5,000 எக்கர் நிலப்பரப்பைக் கொணரத் திட்டமிடப்பட்டுள்ளது. நான்காம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டத் தில், தீவிரச் சாகுபடித் திட்டத்தின்கீழ் இன்னும் 5,000 எக்கர் நிலப் பரப்பில், தென்னைச் சாகுபடியைத் தீவிரப்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

கரும்பு.—கரும்பு சாகுபடியாகும் நிலப் பரப்பும் உற்பத்தியும் 1966-67 1967-68-ம் ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு அமைந்தன :—

| ஆண்டு. | சாகுபடியான நிலப் பரப்பு. | கரும்பு உற்பத்தி. |
|---|---|---|
| | (லட்சம் எக்கர்.) | (லட்சம் டன்.) |
| 1966-67 .. .. .. | 2·18 | 68·97 |
| 1967-68 .. .. .. | 2·35 | 75·59 |

1968-69-ம் ஆண்டிற்கும், 1969-70-ம் ஆண்டிற்கும் உற்பத்திக் குறிக் கோளளவு முறையே 88·50 லட்சம் டன்களும், 91·1 லட்சம் டன்களும் ஆகும். பருவநிலைக் கோளாறுகள் நிலவியபோதும், 1968-69-ம் ஆண்டில் எதிர்பார்த்த குறிகோளளவை அடைந்துவிடலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இதற்குக் காரணம், கரும்பு சாகுபடியாளர்களுக்கு அளிக்கப் பட்டுள்ள விலைச் சலுகையும், கரும்பாலை உள்ள பகுதிகளில் கடைப்பிடிக்கப் படும் முனைப்புத் திட்டமும்தான்.

தற்போது மாநிலத்தில், 37 கரும்பு உற்பத்தி நிலையங்களும், 5 முனைப்புத் திட்டங்களும செயல்பட்டு வருகின்றன. 1969-70-ம் ஆண்டில் இந்த முனைப்புத் திட்டத்தை, புகளூர், வடபாதிமங்கலம், அலங்காநல்லூர் ஆகிய மூன்று கரும்பாலைப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தத் திட்டமிடப்பட் டுள்ளது. 1969-70-ல் இன்னும் இரு உற்பத்தி நிலையங்கள் கிருஷ்ணகிரி பெரம்பலூர் ஆகிய இடங்களில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. மேம் படுத்தப்பட்ட சாகுபடி முறை மூலமும் ரசாயன உரங்கள் இயன்ற அளவு காலத்தே பயன்படுத்தியும் எக்கர் ஒன்றுக்கான கரும்பு விளைச்சலை அதிகப் படுத்துவதே இச் செயல்முறையின் நோக்கம் ஆகும். மேலும், கரும்பு சாகுபடியில் மேம்படுத்தப்பட்ட முறைகளைக் கையாளுவதன் அவசியத்தை விவசாயிகளுக்கு அறிவுறுத்தும் பொருட்டு முன்னேற்றமடையாத பேட்டை- வாய்த்தலை கரும்பாலைப் பகுதியில் முன்னோடித் திட்டம் ஒன்றைச் செயல் படுத்தவும் திட்டமிடப்படுள்ளது. 1966-67, 1967-68 ஆண்டுகளில் கரும்பு உற்பத்திக்காகவும் சாலை அமைப்புக்காகவும் ஆன செலவு கீழ்க்கண்டவாறு ஆகும் :—

| | (ரூ. லட்சம்.) |
|---|---|
| 1966-67 .. .. .. .. .. | 26·01 |
| 1967-68 .. .. .. .. .. | 18·40 |



1969 மார்ச் 18]

1968-69-ம் ஆண்டிற்கு செலவு ரூ. 31·54 லட்சம் எனப் மதிப்பிடப் பட்டுள்ளது. 1969-70-ம் ஆண்டிற்கு கரும்பு உற்பத்தித் திட்டங்களுக்காக ரூ. 33·90 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1966-67-ம் ஆண்டு சாலை அமைப்புப் பணியிற் கண்ட சாதனை 16 கிலோ மீட்டர்கள் ஆகும். 1967-68-ம் ஆண்டில் இச்சாதனை கற்களைப் பரப்பித் தார் போடும் பணி உட்பட 124 கிலோ மீட்டர்களாகும். 1968-69-ல் 60 லட்ச ரூபாய் செலவில் 19 புதிய சாலை அமைப்புப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 1968-69-ல் இந்தப் பணிகளுக்காகவும் முந்தையாண்டுகளில் நிறைவேறாது எஞ்சி நிற்கும் பணிகளை முடிப்பதற் காகவும் சுமார் 30 லட்சம் ரூபாய் செலவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1969-70-ம் ஆண்டிலும் வேலையின் வேகத்தை முடுக்கிவிடத் திட்டமிடப் பட்டுள்ளது.

பாசன வசதிகளைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டு 1969-70-ம் ஆண்டில் சர்க்கரை ஆலைப் பகுதிகளில் கிணறு தோண்டும் திட்டம செயல்படுத்தப்படும். இத் திட்டத்தின்கீழ் முதன்முதலாக சேலம் கோயம் புத்தூர், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள ஆலைப் பகுதிகளில் 150 கிணறுகள் தோண்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

கரும்பு சாகுபடியாளர் விற்பனை செய்கின்ற கரும்புக்கு சர்க்கரை ஆலைகள் தர வேண்டிய குறைந்தபட்ச விலையை ஆண்டுதோறும் இந்தியப் பேரரசு நிர்ணயிக்கிறது. இந்திய அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச விலையை மாற்றியமைக்க மாநில அரசுக்குச் சட்ட பூர்வமான அதிகாரம் இல்லை. இருப்பினும் 1968-ம் ஆண்டு நவம்பர் திங்கள் இருபத்து மூன்றும் நாள் அன்று இந்திய அரசின் உணவு வேளாண்மைத் துறை அமைச்சர் கரும்பு சாகுபடியாளர் சங்கத்தின் பிரதிநிதிகளையும் சர்க்கரை உற்பத்தியாளர் சங்கத்தின் பிரநிதிகளையும் அழைத்து ஒரு கூட்டம் நடத்தினர். மேலும் 1969 பிப்ரவரி திங்கள் 20-ம் நாள் மேற்கூறிய இரு சங்கங்களின் பிரதிநிதிகளோடு பேச்சு வார்த்தை நடத்திய பின்னர் தனது நன்முயற்சியால் கரும்பு சாகுபடியாளருக்கும் சர்க்கரை ஆலை அதிபர்களுக்கும் இடையே ஒரு சமரச முடிவை எற்படுத்தினர். இதன்படி கரும்பு சாகுபடியாளர் 1968-69-ல் வழங்கிய கரும்பிற்காக ஒரு நியாயமான விலை கிடைப்பதற்கு உறுதுணையாக இருந்தார்.

கோகோ.—சுவை நீராயும் உணவாயும் பயன்பெறும் பயிராதலின் கோகோ தனி முக்கியத்துவம் வாய்ந்தது. 1967-68-ல் 60 எக்கர் பரப்பளவில் இது பயிரிடப்பெற்றது. 1968-69-ல் மேலும் 27 எக்கரில் விஸ்தரிக்கப் பெற்றது. வெளிநாட்டுச் சந்தையில் மிகுந்த கிராக்கி இருப்பதாலும், உள் நாட்டிலும் உட்கொள்வோர் தொகை பெருகி வருவதாலும் இப் பயிரின் வளர்ச்சி அன்னியச் செலவாணியை ஈட்டவும் சேர்க்கவும் பெரும் அளவு பயன்படும். இத்தகு வளர்ச்சிக்கான முன்னோடித் திட்டமாக மங்கலம்கோட்டு, பேச்சிப்பாறை, பாபநாசம் ஆகிய மூன்று வழிகாட்டி மைய நிலையங்களில் கோகோ தயாராகிறது.

கனிகள்.—கனி ஈட்டத்தைப் பெருக்க, 7,600 எக்கர் நிலப் பரப்புக்கும் மேலாக பழத்தோட்டங்கள் உருவாக்கப்படும். இந்நாட்டுத் திராட்சைப் பயிரிடு வோர் காட்டியுள்ள விழுமிய விளைச்சல், கனி ஈட்டத் திட்டத்தில் ஊக்கந் தரத் தக்க ஓர் அறிகுறியாகும். கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர் பகுதிகளில் எக்கர் ஒன்றுக்கு ரூ. 20,000 மதிப்பிடத்தக்க வருவாயைத் தரும் அளவுக்கு 25,000 கிலோ கிராம்கள் உச்ச அளவு விளைச்சல் 1968-ல் செய்ய பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், நேரில் கண்டு விளக்கம் பெறும் மைய நிலையங்களாயும் நாற்று பயிரிடும் பகுதிகளாயும் உதவும் வகையில் மேலும் நான்கு மாதிரி பழத் தோட்டங்கள்-பூந்தோட்டங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**காய்கறிகள்.**

வேளாண்மைத்துறை வாயிலாகவே காய்கறிகளைப் பயிரிட்டு நியாய விலையில் அவற்றைக் கருக்கழியாத நிலையில் மக்களுக்கு வழங்கவேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம். வண்டலூர் கிராமத்தில் 58 ஏக்கரும் மலைச்சாலை நிலவுடைமைப் பகுதியில் 15 ஏக்கரும் மன்னூர் கிராமத்தில் 100 ஏக்கரும் உள்ளிட்ட மூன்று பகுதிகளை இதற்கென தேர்ந்தெடுத் திருக்கிறோம். மலைச்சாலை பண்ணையில் காய்கறி பயிர்ச்செலவு முறை தொடங்கியாகிவிட்டது. ஆனால் மன்னூர் பகுதியில் போதிய பாசன வசதி களுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்துடன் கூடவே பயிரிடு வோரும் பயன் கொள்வோரும் பங்கேற்றுள்ள ஒரு தனிச் சங்கம் அமைத்து அதன் மூலம் சென்னை நகரில் காய்கறிகளை விற்பதற்கான திட்டம் ஒன்றும் முடிவாகியுள்ளது. இதற்காக 1969–70 வரவு-செலவுப் பட்டியலில் ரூ. 1 லட்சத்திற்கு வகை செய்யப்பட்டுள்ளது. பயிரிடும் கொல்லையி லிருந்து நேரடியாகப் புத்தம் புதிய காய்கறிகளைச் சேகரித்து காய்கறி வண்டி மூலம் அவற்றைச் சென்னை நகருக்குக் கொண்டு வர உத்தேசிக்கப் பட்டுள்ளது.

## VII. நிலத் திருத்தம்.

### மண்வளப் பாதுகாப்பு.

**(அ) மானாவாரி பகுதிகளில், சமவெளிகளில், குன்றுகளில் உள்ள விளைச்சல் நிலங்களில் மண், நீர்வளப் பாதுகாப்புப் பயிற்சிகள்.**

மண், நீர்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள், மண் அரிப்பைப் பலமாகத் தடுத்து ஈரத்தைப் பக்குவமாய்க் காத்துப் பயிர் வளர்ச்சிக்கு நன்முறையில் நீர் பாய உறுதுணை புரிகிறது. 1966–67-ல் குன்றுகளிலும், சமவெளி களிலும் 92,000 ஏக்கர் பரப்பளவிலும் 1967–68-ல் 93,000 ஏக்கர் பரப்பளவிலும் இது கையாளப்பெற்றது. 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதிக்குள் 65,000 ஏக்கர் குன்றுகளிலும் சமவெளி களிலும் இப்பாதுகாப்பு முறை மேற்கொள்ளப்பட்டது. எனினும், 1968–69-க்கான இலக்கு 95,000 ஏக்கர் ஆகும். 1969–70-ல் மண், நீர் வளப் பாதுகாப்பு முறைகளை 96,350 ஏக்கரில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. 1969–70-ல் குன்றுகளில் 1,560 ஏக்கரும், சமவெளிகளில் 94,800 ஏக்கரும் தமிழகம் முழுவதிலும் 23 துணைப் பிரிவுகளாக்கி ரூ. 87 லட்சம் செலவு மதிப்பீட்டில் இதனை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

**(ஆ) பெரிய, நடுத்தர, சிறு பாசனங்கள் நடைபெறும் பகுதிகளில் மண், நீர்வளப் பாதுகாப்பு முறைகள்.**

1969–70-ல் ரூ. 1·43 லட்சம் செலவு மதிப்பீட்டில் சாத்தனூர் அணைத் திட்டப்பகுதிகளில், பாசன வடிகால் கால்வாய்களில் சரிவு சிதையாமலும் கழனிகளின் சமனம் கெடாமலும் தேர்ந்தெடுத்த சில இடங்களில் இந்தப் புதிய திட்டத்தைப் அமல்படுத்த இருக்கிறோம்.

உவரும் களரும் மிகுந்த நிலங்களைப் பண்படுத்தும் பணியும் மேற் கொள்ளப்படும். 1969–70-ல் விரிவான மண்சோதனை வேலை நடைபெறும். 100 ஏக்கரில் நிலத்தைச் சமனப்படுத்தும் பணியும் 100 ஏக்கரில் வடி காலும் மடைப்புனலும் ஏற்படுத்தும் வேலையும் நடைபெறும்.

**(இ) கணவாய்க் கட்டுப்பாடும் அதைப் பண்படுத்தலும்.**

பாதுகாப்புப் பகுதிகளில் மேலும் சரிவுகள் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்வதும் முன்னரே சரிந்து போன மலைப் பகுதிகளைச் சரிசெய்வது பயன் பெறும் வண்ணம் மாற்றி அமைப்பதும் கணவாய் பண்படுத்தும் திட்டத்தின் நோக்கமாகும். மலைச் சரிவுகளைப் பண்படுத்தும் இத்திட்டத்தை தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 390 ஏக்கர் பரப்பளவில் நிறைவேற்ற அரசு



ஒப்பம் அளித்திருக்கிறது. இயந்திர உதவிகள் கொண்டு நடைபெறும் பணிகளைத் தவிர்த்து பல்வகைத் தருக்களையும் செடிகளையும் மண் வளத் திற்கேற்ப வளர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். 1968–69-ல் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் அரசு அங்கீகரித்த திட்டப் பணிகளில், எஞ்சிய 370 ஏக்கரிலும் 1969–70-ல் வேலைகளை இயற்றி முடிக்கப்படும். 73 ஏக்கர் பரப்பளவில் ஏற்கனவே நட்டு வைத்துள்ள கன்றுகளையும் தருக்களையும் 1969–70-ல் பாதுகாத்து நீரூற்றி வளர்த்தாக வேண்டும்.

இத்தகைய திட்டம ஒன்றை வட ஆர்க்காடு மாவட்டத்துக்கும் விஸ்தரிக்க இருக்கிறோம். சுமார் 638 ஏக்கர் பரப்பளவைப் பண்படுத்த உத்தேசித் திருக்கிறோம். 1969–70-ம் ஆண்டில் இதற்கென்று 2·00 லட்ச ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

**(ஈ) சேலம் மாவட்டத்தின்கண் உள்ள நீர் பிடிப்புப் பகுதிகள் உவர் நிலங்கள், களர் நிலங்கள் ஆகியவற்றைச் செப்பனிடுதல்.**

சேலம் மாவட்டத்திலுள்ள உவர் நிலங்களை, களர் நிலங்களை, நீர்பிடிப் புள்ள நிலங்களைப் பண்படுத்த ஒரு முன்னோடித் திட்டம் இருக்கிறது. (இனி செயல்படுத்தப்படும்.) தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி தாலுகாவில் சந்தகுப்பம், திம்மாபுரம் என்னும் கிராமங்களில் 312 ஏக்கர் பரப் பளவில் இத்தகைய நிலங்களைப் பண்படுத்தவிருக்கிறோம். விவசாயிகளுக்கு உவர், களர் நிலங்களின் தரமும் மண்ணைத் திருத்தும் விதமும் நேரில் விளக்கப்பெறும். 1969–70-ல் 100 ஏக்கர் பரப்புள்ள களர் நிலமும் உவர் நிலமும் பண்படுத்தப்படும். நீர்பிடிப்புள்ள களர் நிலங் களைத் திருத்துவதன் முக்கியத்துவத்தை அப் பகுதிவாழ் விவசாயிகளுக்கு நேரில் விளக்கப்பெறும். 1969–70-ல் 0·65 லட்ச ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**(உ) மண்வள அளவைத் திட்டம்.**

இத் திட்டத்தின்கீழ் பல்வேறு மாவட்டங்களிலும் மண்வள அளவு மறு ஆய்வு நடைபெற்ற வண்ணம் இருக்கும். இதனால் மண்ணின் தன்மை கண்டறியவும், அவைகளுக்கேற்ப வரிசை தரம், ரகம் இவற்றை ஏற்படுத்தி நானாவகையான மண்வகை வரம்புகளைத் தொடர்புபடுத்திப் பல்வேறு பண்ணைப் பயிற்சிகளுக்கான நிலத்தின் தகுதியை நிர்ணயிக்க முடியும். 1968–69-க்கான இலக்காகிய 10 லட்சம் ஏக்கரில், 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி முடிய 7,38,700 ஏக்கரில் இவ்வேலை நடந்தேறியிருக்கிறது. 1969–70-ல் 10 லட்சம் ஏக்கரில் மண்வள மறு ஆய்வு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 1·65 லட்சம் 1969–70, வரவு-செலவுப் பட்டியலில் வகை செய்யப்பெற்றுள்ளது.

**(ஊ) குன்றுகள், சமவெளிகள் ஆகியவற்றில் அமைந்துள்ள விளை நிலங்களின் மண், நீர்வளப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள ஆராய்ச்சியும், திட்டமும்.**

மண், நீர்வளப் பாதுகாப்பு முறைகளைக் கையாளத்தக்க இடங்களைத் தேர்ந்தெடுப்போம். அதன் வரைபடம், மண்ணின் தரம் முதலியவற்றை ஆய்ந்து மண்வளப் பாதுகாப்பான மதிப்பீட்டை உருவாக்குவோம். 1969–70-ல் சமவெளியில் 95,880 ஏக்கர் பரப்பளவிலும், குன்றங்களில் 1,560 ஏக்கர் பரப்பளவிலும், புலனாய்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 3·38 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(எ) மாநிலப் பயிற்சி மைய நிலையங்கள் நிறுவனங்கள் ஆகியவற்றின் ஆதரவுத் திட்டம்.**

அதிகாரிகள், உதவியாளர்கள் ஆகியோருக்கு மண்வளப் பாதுகாப்பும் அதை ஒட்டிய பொருள்களிலும் பயிற்சி தரப்படும். 1969–70-ல் நான்கு அதிகாரிகளுக்கும் 60 உதவியாளர்களுக்கும் பயிற்சி வழங்கத் திட்டமிட்டுள்ளோம். இதற்கென ரூ. [illegible] லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1969 மார்ச் 18

## VIII. சிறு பாசனம்.

இம் மாநிலத்தில் சிறுபாசனத் திட்டங்களை செயல்படுத்தும் வாய்ப்பு பெரிதும் இல்லை. எனவே வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவான் வேண்டி 1969-70-ல் பின்வரும் சிறுபாசன செயல் திட்டங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

1. புதுக் கிணறு மானியம்.
2. தனியார் குழாய்க் கிணறுகள்.
3. கிணறுகளில் துளை போடுதல்.
4. வடிமுனைக் குழாய்க் கிணறுகள்.
5. கிணறுகளை ஆழப்படுத்துதல்.
6. சமுதாயக் கிணறுகள்.

### (1) புதுக் கிணறு மானியத் திட்டம்.

ஒரு புதுக் கிணறு அமைக்க, ஏற்படும் அமைப்புச் செலவில் 25 விழுக்காடு உதவித் தொகையாகக் கிடைக்கும். இவ்வுதவித் தொகை கிணறு ஒன்றுக்கு அதிக அளவாக ரூ. 500 வரையில் வழங்கப்படும். கோவை மாவட்டத்தில் தளவாடி பிர்க்காவைப் பொறுத்தவரை, அமைப்புச் செல வில் 50 விழுக்காடு தரப்படும். உதவித் தொகையின் அதிக அளவு கிணறு ஒன்றுக்கு ரூ. 1,500 வரையில் இருக்கும்.

1—4—1968 முதல் தரைக் கிணறு தோண்டுவதற்கு அரசு தந்துதவிய நேரடிக் கடன்கள் நிறுத்தப்பட்டுவிட்டன. அந்தக் கடன்களை நில அடமான வங்கிகள் இப்போது வழங்கி வருகின்றன. வேளாண்மைக் கென்று 1968-69-ல் நில அடமான வங்கிகள் வாயிலாகத் தரவிருக்கும் கடன் தொகையின் மதிப்பீடு ரூ. 12 கோடியாகும்.

### (2) தனியார் குழாய்க் கிணறுகள்.

நீர் வளம் மிக்கப் பகுதிகளான செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களில் இந்த சிறப்பு வளப் பெருக்கத் திட்டம் தற்போது செயல்படுத்தப்படுகிறது. இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டங்கள் போன்ற ஏனைய பகுதிகளுக்குப் புதிய சிறப்பு வளப்பெருக்கத் திட்டங்கள் யோசனையில் இருந்து வருகின்றன.

1967-68-ல் 1,286 தனியார் குழாய்க் கிணறுகள் தோண்டப் பெற்றுள் ளன. 1968-69-க்கு 1,600 குழாய்க் கிணறுகள் அகழ முடியும் என எதிர் பார்க்கப்படுகிறது. 1969-70-ல் குறிக்கோள் அளவு 2,500 கிணறுகள் ஆகும். இக் குறிக்கோள் அளவை நிறைவேற்றுவதற்கு உள்நாட்டு, அயல் நாட்டு புதுத்துளைக் கருவிகளை வாங்க இத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

### (3) கிணறுகளில் துளை போடுதல்.

இருக்கும் கிணறுகளிலேயே உட்புறங்களில் துளையிட்டுக் குடியானவர்கள் அதிக அளவில் நீரைப் பெற இத் திட்டம் உதவுகிறது. 1967-68-ல் 680 கிணறுகளில் துளைபோடப்பட்டுள்ளன. 1968-69-ல் 500 கிணறு களில் இம்முறை கையாளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1969-70-ல் மேலும் 600 கிணறுகளில் இம் முறையை மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டிருக்கிறது.



1969 மார்ச் 18]

தோண்டப்பட்டன. 1968-69-ல் 2,200 கிணறுகள் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1969-70-ல் நடப்பு குறிக்கோள் அளவு 3,000 கிணறுகள் ஆகும்.

### (5) கிணறுகளை ஆழப்படுத்துதல்.

கிணறுகளில் துளை போடுவதோடுகூட, இருக்கும் கிணறுகளை ஆழப் படுத்தி நீர் நிறையக் கொள்ளுமாறு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. பாறைப் பகுதிகளில் உள்ள கிணறுகளின் உட்கொள்ளும் அளவைப் பெரிதாக்க, இத் திட்டத்தின் மூலம் கடன்—உதவித் தொகை அடிப் படையில் வேளாண்மைத் துறையைச் சார்ந்த R.B. பிரிவுகளில் உதவி கிடைக்கும். குடியானவர்கள் வெடிமருந்துகள் கிடைக்காமல் தவிப்பதை அகற்றும் பொருட்டு விவசாயிகளுக்குத் தேவையான வெடிமருந்துகளை துறையினரே தமது வசம் கையிருப்பில் வைத்திருக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. இதற்கென முக்கியமான மைய நிலையங்களில் வெடி மருந்துச் சாலைகள் கட்டப்பட்டு வருகின்றன. 1967-68-ல் 463 கிணறுகள் ஆழப்படுத்தப் பட்டன. 1968-69-ல் 700 கிணறுகள் எதிர்ப்பார்க்கப்படுகின்றன. 1969-70-ல் 550 கிணறுகளை ஆழப்படுத்த உத்தேசித்துள்ளோம்.

### (6) சமுதாயக் கிணறுகள்.

சிறு நிலங்களை உரிமையாகக் கொண்ட ஏழைக் குடியானவர்களுக்குப் பாசன வசதிகளை உறுதிப்படுத்தவே இத்திட்டம் முக்கியமாகத் தீட்டப் பெற்றது. இக் குடியானவர்கள் ஒன்றுகூடி பாசன சங்கம் அமைத்து அதன் வாயிலாக ஒரு சமுதாயக் கிணற்றைத் தோண்டிக்கொள்ள முடியும். கிணறு கட்டும் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும். பாசன சங்கங்களுக்கு இறைவைக் குழாய்க் கருவிகள் வாங்குவதற்குப் போதிய கடன் வழங்கப்படும். இதற்கு மாற்றுத் திட்டமாக, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து ஒன்றியமே இத் திட்டத்தை ஏற்று நடத்தலாம். அமைப்புச் செலவுகளை பஞ்சாயத்து கூட்டு மன்றமோ அன்றி கூட்டுறவு சங்கமோ ஏற்றுக்கொள்ளும். 1969-70-க்கான குறிக்கோள் அளவு 30 சமுதாயக் கிணறுகள் ஆகும். இதுகாறும் இத் திட்டத்தின் கீழ் 11 கிணறுகளுக்கு உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது.

## IX. ஆயக்கட்டு வளர்ச்சி.

ஆயக்கட்டு வளர்ச்சித் திட்டத்தில் பெரும் பாசனத் திட்டங்களில் நேர் விளக்கப் பண்ணைகள் தொடங்கப் பெற்றுள்ளன. இவற்றின் மூலம் பாயும் நீரைக்கொண்டு கழனிகளின் பெரும் பகுதி விளைவைக் கண்டு முதல் செய்யும் வகையில் பயிர் வளத்திற்கான பயிற்சிகளைச் செய்து காட்டமுடியும். 1968-69-ல் 206 நேர் விளக்கப் பண்ணைகளை பரம்பி குளம்-அலியார் பாசனத் திட்டப் பகுதிகளிலும், சித்தார்-பட்டணங்கால் பகுதியில் 23 பண்ணைகளையும் தொடங்க அரசு அனுமதி தந்துள்ளது.

| 1968-69. | குறியீடு அளவு. | நிறைவேறிய அளவு. |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |

## X. பண்ணைக் கருவிகள்.

### (i) டிராக்டர் வாடகைக்கு விடும் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ், ஊர்ந்து செல்லும் டிராக்டர்களையும் உருள் ரக டிராக்டர்களையும் குடியானவர்களுக்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன. தற்போது இத்துறை 136 ஊர்ந்து செல்லும் டிராக்டர்களையும் 50 உருள் ரக டிராக்டர்களையும் வைத்திருக்கிறது. இவற்றிற்கான வாடகைத்தொகை பல ஆண்டுகளுக்கு முன்பே குறிக்கப்பெற்றன. இப்போது அவற்றின் ஓட்டும் செலவு உயர்ந்திருப்பதால் வாடகைக்கு விடுவது கட்டுப்படியாக வில்லை. எனவே அண்மையில் அரசு, டிராக்டர்களுக்கும், புல்டோசர்களுக்கும் ஆன வாடகைத் தொகையை 1—3—1969 முதல் மாற்றி யமைத்துள்ளது.

1967–68-ல் 6,835 எக்கர் புதிய நிலங்களையும், 13,202 எக்கர் தரிசு நிலங்களையும் இத் திட்டத்தின் மூலம் பயிரிட ஏற்றவையாக மாற்றப் பெற்றன. 1968–69-ல் 7,610 எக்கர் பரப்பளவை சமனப்படுத்தவும் 20,300 எக்கர் பரப்பளவில் இயந்திர சாகுபடி செய்யவும் சாத்தியக் கூறுகள் இருப்பதாக எதிர்ப்பார்க்கப்படுகின்றது. 1969–70-ல் 7,203 எக்கர் பரப்பளவைச் சமன் செய்யவும், 23,800 எக்கர் பரப்பளவில் இயந்திர சாகுபடி செய்யவும் வேண்டும் எனக் குறியீடு அளவாகக் கொண்டுள்ளோம். இதற்காகும் செலவு ரூ. 44 லட்சங்கள்.

1968–69-ல் ருஷ்யாவிலிருந்து 15·75 லட்சம் செலவில் 9 ஊர்ந்து செல்லும் டிராக்டர்களும், அமெரிக்காவிலிருந்து ரூ. 48 லட்சம் செலவில் 40 டிராக்டர்களும் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டன. இவற்றில் ருஷ்யாவிலிருந்து 9 டிராக்டர்கள் வரப்பெற்றன. முப்பது டிராக்டர்கள் அமெரிக்காவிலிருந்து விரைவில் வந்து சேரும் எனத் தெரிகிறது.

1969–70-ல் 10 ஊர்ந்து செல்லும் டிராக்டர்களையும் 10 உருள் ரக டிராக்டர்களையும் வாங்குவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### (ii) டிராக்டர் தொழிற்கூடங்கள்.

1969–70-ல் இரு டிராக்டர் தொழிற்கூடங்கள் 7 லட்ச ரூபாய் செலவில் தொடங்கப்படும். டிராக்டர்களை நிறுத்தவும், துளைக்கருவிகள், காற்று அமுக்கக் கருவிகள், கையால் துளைபோடும் கருவிகள் இவற்றை வைக்கவும் விதானத்தோடு கூடிய நான்கு கொட்டில்கள் ரூ. 6·44 லட்சம் செலவில் கட்டப்படும்.

### (iii) டிராக்டர் வாடகை-உடைமைத் திட்டம்.

1968–69 கோரிக்கை விளக்கக் குறிப்பில் கூறியுள்ளவாறு, 1—4—69 முதல் விவசாயிகளுக்கு வாடகை உடைமைத் திட்டத்தின்கீழ் டிராக்டர்களை வழங்கும் பொறுப்பை வேளாண்மைத் தொழில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பின்வரும் பத்திகளில் அந் நிறுவனத்தின் வேலை முறைகள் விளக்கப்பட்டுள்ளன.

### வேளாண்மைத் தொழில் நிறுவனம்.

1968–69-ல் வேளாண்மைத் தொழில் நிறுவனம் டிராக்டர்கள், ஏனைய வேளாண்மைக் கருவிகள் ஆகியவற்றின் வாடகை உடைமை யிலேயே கவனம் செலுத்தி வந்தது. அத்துடன் வேளாண்மைத் தொடர்புடைய தொழில்களையும் வேளாண்மைத் துறை பொறியியல் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில் நாட்டம் செலுத்திற்று. 1968–69-ல் அந்நிறுவனத்தின் உண்மையான சாதனைகள் பின்வருமாறு :—



### டிராக்டர்கள்.

| | |
|---|---|
| டிராக்டர்களுக்காக வழங்கிய கடன்களின் மொத்த எண்ணிக்கை. | 287 |
| | ரூபாய் |
| டிராக்டர்களுக்கு அங்கீகரித்த மொத்த தொகை .. | 71·75 லட்சம் |
| நிறுவனம் சமர்ப்பித்த வழங்கக்கோரும் உத்தரவுகள் .. | 287 |
| வழங்கிய பிரிவுகள் .. .. .. .. | 61 |

### பம்பு செட்டுகள்.

| | |
|---|---|
| பம்பு செட்டுகளுக்காக வழங்கிய கடன்களின் மொத்த எண்ணிக்கை. | 6,154 |
| | ரூபாய் |
| பம்பு செட்டுகளுக்கு அங்கீகரித்த மொத்த தொகை .. | 184·62 லட்சம். |
| நிறுவனம் சமர்ப்பித்த வழங்கக்கோரும் உத்தரவுகள். | 6,154 |
| வழங்கிய பிரிவுகள் .. .. .. .. | 2,668 |

1968–69-ல் இந்தியப் பேரரசு பின்வரும் டிராக்டர் தயாரிப்புகளை இம் மாநில குடியானவர்களுக்கு வழங்குமாறு ஒதுக்கீடு செய்தது.

| | பிரிவுகள். |
|---|---|
| ருஷ்யா டீ. டி. 14 தயாரிப்பு .. .. .. .. | 100 |
| ருமேனியா தயாரிப்பு .. .. .. .. | 50 |
| ஜீட்டர் தயாரிப்பு .. .. .. .. | 400 |
| ஆர். எஸ். 09 ஜெர்மன் தயாரிப்பு .. .. .. | 100 |
| | 650 |

1969–70-ல், இந்நிறுவனம் 1,000 இறக்குமதியான டிராக்டர்களையும் 300 உள்நாட்டு டிராக்டர்களையும் விநியோகிக்க உத்தேசித்துள்ளது. ஆயிரம்செட்டு டிராக்டர் டயர்களையும் டியூப்களையும் இறக்குமதி செய்து, தட்டுப்பாட்டை நீக்கி குடியானவர்களுக்கு உதவி செய்யவும் அது ஏற்பாடு செய்துள்ளது.

## XI. குடியானவர்களுக்குப் பயிற்சியும், கல்வியும்.

இது மத்திய அரசின் ஆதரவில் நடைபெறும் திட்டம். பொதுவாக விவசாயிகளுக்குக் குறிப்பாக மிகு விளைச்சல் தரும் இனங்களைப் பயிரிடு வோருக்குப் பயிற்சி தருவதே இத் திட்டத்தின் குறிக்கோள் ஆகும். விவசாயி நிறுவனப் பயிற்சி திட்டத்தோடு தேர்ந்தெடுத்த முற்போக்கு விவசாயி களின் பண்ணைகளில் உற்பத்தி முறைகளை நேர் விளக்கம் செய்து காட்டு வதும் இதில் அடங்கும். திருந்திய வேளாண்மை முறைகளை மேற் கொள்ளுமாறு குடியானவர்களை உந்தும் சாதனங்களே, இத்தகு

நேர்விளக்கங்கள் ஆகும். மூன்று உழவர் பயிற்சி நிலையங்கள் இந் நாட்டில் இயங்கி வருகின்றன. கோவை மாவட்டத்தில் பவானிசாகரில் ஒன்றும், வட ஆர்க்காட்டில் நவ்லாக்கில் ஒன்றும், தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறையில் ஒன்றும் ஆகும். நான்காவது திட்டத்தில் முதல் மூன்று ஆண்டுகளில் ஆண்டுக்கு ஒன்றாக மேலும் மூன்று நிலையங்களைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்குத் தொடக்கமாக 1969-70-ல் ஒரு கூடுதலான நிலையத்தை திருநெல்வேலியில் நிறுவ உத்தேசிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் 22,675 உழவர்கள், பெண்கள், இளங்குடியானவர்கள் ஆகியவர்களுக்கு ஒரு மாவட்டத்தில் பயிற்சி தர முடியும் எனக் கருதப்படுகிறது.

## வேளாண்மை ஆராய்ச்சியும், கல்வியும்.

1968–69-ல், 13·48 லட்சம் ரூபாய் செலவு மதிப்பீட்டில் (சோதனை பண்ணைகளின் செலவு உட்பட) பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. உணவு மானிய திட்டத்தைப் பரப்பும் அவசியத்தை உணர்ந்து தேர்ந்த காய்கறி இனங்களை, கிழங்குப் பயிர்களை வளர்ச்சி செய்வதில் தனி கவனம் செலுத்துகிறது. இவ்வாண்டு நடப்பில் காய்கறி விதைகள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் சாகுபடி செய்வதற்காக பெரும் அளவில் விநியோகிக்கப்பெற்றன. இதுகாறும் பயிரிட வழங்கப்பெற்ற விதைகளை விட இவை தரத்தில் உயர்ந்தவை; மொத்த விளைச்சல் தரத் தக்கவை. இத்துறை விநியோகித்துள்ள விதைகள். சமவெளி களில் பயிரிடபப்டும் CO. 1 உருளைக்கிழங்கு, CO. 1 தக்காளி, CO. 1 அமராந்தஸ், டெல்கோஸ் லாப் லாப் CO. 2, CO. 3, CO. 4, CO.5, CO. 1 உளுந்து, MCU 5 என்னும் பருத்தி இன விதை முதலியன.

CO. 1 உருளைக்கிழங்கு (சிம்லா) H.B. 1969-ல் இருந்து கடுமையற்ற சீதோஷ்ணமுள்ள சமவெளிகளில் பயிரிட ஏற்ற வளமுள்ள விதையாகத் தயாரிக்கப்பெற்றது. நாடு முழுவதும் பயிரிடுவதற்கு CO. 1 தக்காளி மிகவும் தகுதி வாய்ந்தது. CO. 1 அமராந்தஸ் சமையல், கொல்லைத் தோட்டங்களிலும், கோடை காலங்களில் குளக்கரை ஓரங்களிலும் கூட பயிரிடக்கூடியவை. தேர்ந்த வகையுள்ள நான்கு பருப்பு இனங்கள் (அவரை CO. 2, CO. 3, CO. 4. CO. 5) நாடு முழுவதும் பயிரிட மிகவும் உகந்தவையாகும். மேலும் CO. 1 உளுந்து ஒரு புதிய விதை (புஞ்சை இனம்) வடகிழக்குப் பருவக்காற்று வீசும் காலங்களில் விதைக்கப்பெறும் பாசனம் தேவைப்படாத பயிராகும்.

T.M.V. 8, P.O.L. 1 என்ற இரு புதிய விதைகளை வேர்க் கடலையில் தயாரித்துள்ளோம். T.M. 8 என்பது கிளைவிட்டுச் சற்றே பரவும் தன்மையுடையது. மற்றொரு விதை P.O.L. வேர்க்கடலை. அது ஒரு ஹெக்டேரில் 1,480 கி. கிராம் கொத்துக்கள் (தோலுடன்) சராசரி விளைச்சலையும் தோலுரித்தபின் 79·9 விழுக்காடு ஒரு செண்டுக்கு விளைச்சலையும் 107 நாட்கள் கால அளவில் தரும்.

இது தவிர முதன் முதலாக கரிசல் மண் பகுதிகளில் பயிரிட ஏற்ற வகையில் சாப்பிளவர் (Safflower) என்னும் புதிய மேம்படுத்திய விதை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விதை பயிரிட ஏற்ற இடங்கள் மதுரை, ராமநாதபுரம், கோயம்புத்தூர், திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள கரிசல் நிலப் பகுதியாகும்.

தகுதி வாய்ந்ததும் பெரிதும் பயன்படுத்தப்படுகிற பருத்தி விதை களை, வலிவுள்ள வகையாக்கி, தயாரித்து, மேம்படுத்த இத்துறை எடுத்துக் கொண்ட முயற்சிகள் மன நிறைவைத் தருவதாகும். 1968–69-ல் விளைநிலங்களில் 165 நாட்களில் வளர்ச்சிபெற்று ஒரு ஹெக்டரில் 1,910 கி. கிராம் கபாஸ் (Kapas) விளைச்சலைத் தரத்தக்க MCU. 5 என்ற புது விதை பருத்தி ரகம் விநியோகிக்கப்படுகிறது.



இந்தியாவின் பல்வேறு மைய நிலையங்களிலும் முன்னேறி வரும் ஆராய்ச்சிப் பணியினை இணைக்கவும் ஒன்று கூட்டவும் எடுக்கும் முயற்சியில், அரிசி, சிறு தானியங்கள், சோளம், எண்ணெய் வித்துக்கள் பற்றிய அகில இந்திய—ஒருங்கிணைந்த திட்டங்கள் உருவாக்கப் பெற்றுள்ளன.

இத்தகைய அகில இந்திய திட்டத்தை மேற்கொண்டதால் ஏகோபித்து செயல்பட்டு ஒருங்கிணைந்த வகையில் அரிசி, சிறு தானியங்கள், சோளம், எண்ணெய் வித்துக்கள் ஆகியவை பற்றிய பெரும்பிரச்னைகளை சமாளிக்க முடிகிறது.

மண்ணியலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்ந்து குறிப்பிடத் தக்கதாகவே இருக்கிறது. (i) மண் பயிர் உறவும் பயிர் வளர்ச்சி (ii) மண் தரத்தில் நுண் அணுக்கள் ஊட்டம் பயிலல் (iii) மண் அடிப்படையைக் கண்டறிதல் இவை பற்றி ஒருங்கிணைந்த திட்டங்களாகவே நிறைவேறின. இப்போது தான் இத்திட்டங்கள் தொடங்கப்பட்டிருப்பதால் 1969-70-ல் தீவிர ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

கிழங்குப்பயிர்கள் பற்றிய மற்றுமொரு அனைத்திந்திய திட்டம் கோவை யில் தொடங்கப் பெற்றுள்ளது. மேலும் இந்திய வேளாண்மை ஆய்வுக் கழகம், பருப்பு, உருளை, காய்கறிகள், பழங்கள், முந்திரி, தென்னை, கமுகு, கால்நடைத் தீவனம், களர் நிலப் பாங்கு பற்றியும் அனைத்திந்திய திட்டங்களைத் தீட்டியுள்ளது. இத்திட்டங்கள் புதிய நான்காவது திட்டத்தில் இணைக்கப் பெற்றுள்ளன. இந்திய வேளாண்மை ஆய்வுக் கழகத்தின் ஒப்புதல் பெறும்போது 1969–70-ல் இத்திட்டங்கள் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பெறும்.

முழுத் தேர்ச்சிப் பெற்ற துறைகள் சிலவற்றில் ஆராய்ச்சிக்கான செயல் முறைகள் விரிவு செய்யப்பட்டுள்ளன. அணி செய்யும் மலர்க்குலத்தை, நாட்டின் விழுந்தியாய் அமைந்த மலர் வன அமைப்புக்கலையை வகைப் படுத்துவது அவற்றில் ஒரு திட்டமாகும். இந்நோக்கத்தைக் கருத்திற் கொண்டு ஒரு மலர்க் குலப் பகுதியை நிறுவி ஊக்கமுடன் அத்துறையில் பணிகள் நடந்தேறி வருகின்றன. இதுகாறும் ஆர்வமூட்டும் அளவுக்கு முன்னோடியாக பலன்கள் அரும்பி நிற்கின்றன. ஆதாயம் தரும் வகையில் மலர்களைத் தீவிர முறையில் உற்பத்தி செய்து நறுமணமுள்ள அத்தர் தயாரிப்பில் ஆக்கம் பெற்று வருகிறது. நீலகிரியில் உள்ள கோட்டகிரி, தொட்டபெட்டா ஆகிய இரு நிலையங்களைத் தேர்ந்தெடுத்து அரசு செயற்கை மழை பற்றிய ஆய்வுச் சோதனைச் செய்ய அனுமதி வழங்கியுள்ளது. கோவை மாவட்டத்தில் பல்லடம், தாராபுரம் தாலூக்காக்களில் உள்ள சமவெளிகளிலும் இதுபோல சோதனை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## வேளாண்மைக் கல்வி.

1965 ஜூன் திங்களில் மதுரை வேளாண்மைக் கல்லூரியில் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இறுதி இளம் அறிவியல் (வேளாண்மை) வகுப்புகள் 1968–69-ல் தொடங்கப்பெற்றன. வேளாண்மை பட்டதாரி களின் முதல் அணி 1969 மே திங்களில் வெளிவரும் என எதிர் பார்க்கப்படுகிறது. முதலாம் நிரந்தர மாணவர் இல்லம், மதுரை வேளாண்மைக் கல்லூரியில் கட்டி முடிக்கப்பெற்றுள்ளது. மதுரை வேளாண்மைக் கல்லூரியில் இரண்டாம் நிரந்தர மாணவர் இல்லம் கட்டுவதற்கென ரூ. 13,10,000-க்கு அரசு ஒப்புதல் தந்திருக்கிறது. வரவு-செல்வுத் திட்டத்தில் மொத்தமாக ரூ. 69·16 லட்சம் இந்நிறு வனத்தின் வளர்ச்சிக்காக வகை செய்யப்பட்டுள்ளது.

இம் மாநிலத்தின் தென் மண்டலத்தின்கண் மதுரையில் அமைந்த வேளாண்மைக் கல்லூரியின் பயனாய் இம்மண்டலத்தின் ஆய்வுப் பணிகளை மண்டல வாரியாக்கவும் ஒருங்கிணைக்கவும் அப்பகுதிக்கான ஆய்வுகளை மதுரை வேளாண்மைக் கல்லூரியின் பொறுப்பிலேயே ஒப்படைத்துவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பயிர் வளர்க்கும் பணிகளைத் தொடங்குதலும்,

ஆராய்ச்சி நடத்துவதும் கோவில்பட்டி, கன்னியாகுமரி, அம்பாசமுத்திரம், கொடைக்கானல் ஆகிய இடங்களில் இயங்கும் பல்வேறு ஆய்வுக்கூடங்களின் பணிகளை ஒருங்கிணைப்பது ஆகிய வேலைகள் இத் திட்டத்தில் அடங் கியுள்ளன. 1969-70-ல் தேர்ந்தெடுத்த நான்கு கலைப்பிரிவுகளுக்கு மட்டும் பட்ட மேற்படிப்புப் பாடத் திட்டத்தைத் தொடங்க உத்தேசித் துள்ளதை அமுல் படுத்துவதன் மூலம் மதுரை வேளாண்மை கல்லூரியின் தரம் மேல் பட்டப்படிப்பு கல்வி நிறுவனமாக உயர்த்தப் படவிருக்கிறது. மதுரை வேளாண்மைக் கல்லூரியை மண்டல மைய நிலையமாக மட்டும் அதனை அங்கீகரிப்பதோடல்லாமல், ஆராய்ச்சித் துறையிலும், மேல்நிலைக் கல்வியிலும் அதனை வளர்ச்சி பெறச்செய்வதே அரசின் கருத்தாகும்.

1968-69-ல் இருந்து கோவை வேளாண்மைக் கல்லூரி ஆய்வுக்கூடத் தில் பொதுப்பணித்துறையில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு வேளாண்மை முறைகள் பற்றிய புதியதோர் பாடத் திட்டம் தொடங் கப்பட்டிருக்கிறது.

## இணைப்பு 2.

## மானியக் கோரிக்கை—17—மீனளம்

### கொள்கை விளக்க குறிப்பு

## தமிழ் நாட்டில் மீனள வளர்ச்சி.

நீண்ட கடற்கரையையும் பலப்பல நீர்த்தேக்கங்களையும் ஏரிகளையும் தன்னகத்தே கொண்டுள்ள தமிழ்நாட்டு மீன் வளமும் கடல் மீன் வளமும் கொண்டு திகழ்கிறது. நமது உள்நாட்டுமக்கட் தொகையில் ஒரு பகுதியினர் தங்கள் வாழ்க்கைக்கு முக்கியமாக இத்தொழிலையே நம்பி யுள்ளனர். இவர்களின் பொருளாதார, சமூக நிலையை மேம்படுத்தக் கல்வி-சமூக-பொருளாதார, நலத் திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டு வரு கின்றன. மீனள வளர்ச்சியில் இதுவரையில் எல்லா வகையாலும் முயற்சி மேற்கொண்ட மீனளத் துறையின் தொழில் நுட்ப உதவியின்கீழ் மீனள வளர்சசி படிப்படியாக அதிகரித்துள்ளது. கடந்த ஐந்தாண்டுத் திட்டங் களில் இத்தொழிலுக்கு ஊக்கமளிக்கப்பட்டது. கரை சேரும் வசதிகளும் தங்கும் வசதிகளும் செய்யப்பட்டு. மீனள வளர்ச்சிச்குப் பெரிதும் ஆக்கம் அளிக்கப்படும். எதிர்கால மேம்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தனியார். கூட்டுறவுத் துறைகள் மீனள வளர்ச்சியில் சிறப்பான பங்கேற்க வேண்டு மென்று தமிழ் நாடு அரசு விரும்புகிறது. இந்த நோக்குடன், தனியார் துறைக்கு ஊக்கம் அளிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. மீன்பிடி படகுகளைக் கட்டுதல், படகுகள், கருவிகள் இவற்றைப் பேணுதல், மீன் உற்பத்தி செய்தல், அவற்றைப் பதனப்படுத்துதல், சேமித்து வைத்தல், டப்பிகளில் அடைத்தல், விற்பனை செய்தல், வழங்குதல், ஏற்றுமதி செய் தல் ஆகிய துறைகளில் தனியார் துறையும் கூட்டுறவுத் துறையும் அதிக அளவு பங்கு கொள்ளவேண்டிய தருணம் இதுவே.

2. தமிழ்நாட்டிலுள்ள சென்னை மாநகர் உட்பட்ட பதினான்கு மாவட்டங் களில் ஏழு மாவட்டங்கள் கடற் பகுதிகளைக் கொண்டனவாகும். இவை வங்காள விரிகுடா, இந்து பெருங் கடல், அரபிக்கடல் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ளன. இங்கு ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையுள்ளது. 7,90,000 எக்கர் பரப்புள்ள உள்நாட்டு நீர் நிலை களும் உள்ளன. இந்த உள்நாட்டு நீர் நிலைகளில், பெரிய நீர்த்தேக்கங் களும், பாசன ஏரிகளும், பிற கிராம ஏரிகளும் அடங்கும். இவற்றில் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 1,16,000 டன் மீன் உற்பத்தி செய்யலாம். கடல் மீன் பிடிக்கும் பணி ஓரளவுக்கு மட்டும் நாட்டுப் படகுகள் மூலமும் சிறு இயந்திரப் படகுகள் மூலமும் செய்யப்பட்டு வந்த போதிலும் ஆண் டொன்றுக்குச் சுமார் 2,05,000 டன் கிடைக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள





3,50,000 மீனவர்கள் 463 உள்நாட்டுக் கிராமங்களிலும் 308 கடலோரக் கிராமங்களிலும் பரவியுள்ளனர். பெரும்பாலான மீனவர்கள் நாட்டுப் படகுகள், கட்டு மரங்கள் போன்ற படகுகளையே இன்னும் பயன் படுத்தி வருகின்றனர். அவற்றில் 32,000 கட்டு மரங்களும் நாட்டுப் படகுகளும் பயனிலுள்ளன. விசைப் படகுகள் பரவலாகப் பயன் படுத்தப்பட்டு வரு கின்றன. 1968 டிசம்பர் வரையில் 718 விசைப் படகுகள் மீனவர்களுக்கு இத்துறையால் வழங்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் 44,000 டன் மீன் கடலிலிருந்து பிடிபட்டிருக்க இப்போது ஆண்டொன்றுக் குப் பிடிபடும் மீன் அளவு 2,05,000 டன் அளவிற்கு உயர்ந்துள்ளதற்கு இதுவே முக்கியகாரணமாகும்.

3. மொத்தம் ரூ. 362·91 லட்சம் செலவில் நிறைவேற்றப்பட்ட முதல் மூன்று திட்டங்கள், மீன்பிடி விசைப் படகுகளை பயனுக்குக் கொண்டு வருதல், புது முறைகளைப் பயன் படுத்தல், மீனவர்களுக்குப் பயிற்சி யளித்தல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றின. கரை சேரும் வசதிகள் ஏற்படுத்த கடலூரிலும் நாகப்பட்டினத்திலும் இரண்டு மீன்பிடி துறை முகங்கள் கட்டி முடிக்கப்பட்டன. அதே சமயத்தில் மூன்றாவது திட்டக் காலத்தில் பெரும்பாலான கரை சேரும் இடங்கள் பனிக்கட்டி இயந்திரம் குளிர் பதன அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. 14 பனிக்கட்டி இயந்திரங் களும் உறைபனி அறைகளும் செயல்பட்டு வருகின்றன. மூன்றாவது திட்டக் காலத்தில், இம் மாநிலத்திலேயே முதன் முறையாக மீன்களை டப்பிகளில் அடைக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டது. விரைவுத் திட்டத் தின் கீழ், கடற்கரைப் பகுதியில் மேலும் பனிக்கட்டி இயந்திரங்கள் இரண் டும் மீனை உறையவைக்கும் சிறிய அளவு இயந்திரங்கள் எட்டும் அமைக் கப்பட்டன. இந்த எட்டு இயந்திரங்களில் மூன்று கடற்கரைப் பகுதியிலும் ஐந்து பொறிகள் உள்நாட்டு நீர்த் தேக்கங்கள், அங்காடிகளிலும் நிறுவப் பட்டன. விரைவுத் திட்டத்தின் கீழ், நைலான் நூலை, எல்லா நாட்டு படகுகளுக்கும் வழங்குதல், சாலைகள் அமைத்தல், மீனவர்களுக்குப் பயிற்சியளித்தல் போன்ற பல திட்டங்களும், மீன் உற்பத்தியை முனைப் பாகப் பெருக்கும் நோக்கத்தில் நிறைவேற்றப்பட்டன. இதற்குச் செய்த செலவு ரூ. 28·44 லட்சம் ஆகும்.

4. தொடர்ந்த இரண்டு ஆண்டுத் திட்டங்களிலும் (1966-67 1967-68) மீனள வளர்ச்சிக்காக முறையே ரூ, 127·51 லட்சமும் (மத்திய உதவி பெறும் திட்டங்களின்கீழ் ரூ. 125·26 லட்சமும், மத்திய அரசு ஊக்கு விக்கும் திட்டங்களின்கீழ் ரூ. 2·25 லட்சமும்), ரூ. 135·73 லட்சமும் (மத்திய உதவிபெறும் திட்டங்களின்கீழ் ரூ. 131·40 லட்சமும் மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டங்களின்கீழ் ரூ. 4·33. லட்சமும்) செல விடப்பட்டன. இவற்றில், விசைப் படகுகள் தயாரிப்பிற்கு முதலிடம் அளிக்கப்பட்டது. மீனவர்களுக்கு வழங்கப்பட்ட 281 படகுகள் கட்டப் பட்டன. ஆண்டுத் திட்டத்தில் (1968-69), 165 படகுகளைக் கட்டத் திட்ட மிடப்பட்டுள்ளது. 1968-69 க்கான திட்டச் செலவு மொத்தம் ரூ. 112·20 லட்சம். (மத்திய உதவிபெறும் திட்டங்களின்கீழ் ரூ. 102·67 லட்சமும் மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டங்களின்கீழ் ரூ. 9·53 லட்சமும்.) இக்கால அளவில் முட்டத்தில் பனிக்கட்டி இயந்திரம் ஒன்றும் எண்ணூரில் பனி உறை இயந்திரம் ஒன்றும் நிறுவப்பட்டன. மீன் பதப் படுத்தும் ஆறு தளங்களில் சிறு அளவு பனிக்கட்டி இயந்திரங்களை நிறுவும் பணியும், கன்னியாகுமரியிலும் இடிந்தகரையிலும் ஐந்து டன் பனிக்கட்டி இயந்திரங்கள் இரண்டினை நிறுவும் பணியும். தூத்துக்குடியில் மேற் கொண்டும் ஓர் பனி உறை இயந்திரத்தை நிறுவும் பணியும், பல நிலை களில் நிறைவேறி வருகின்றன.

5. இம்மாநிலத்தில் மிகப் பெரிய பனிக்கட்டி இயந்திரம், பனி உறைப் பிரிவு மண்டபத்தில் நிறுவப்பட்டு வருகிறது. 15 டன் பனிக்கட்டி உற் பத்தித்திறனும் 8 முதல் 10 டன் வரையில் மீன்களை உறையவைக்கும் திறனும் உறையவைக்கப்பட்ட 50 டன் மீன்களைப் பாதுகாக்கும் திறனும் 60-70 டன் பனிக்கட்டி சேமிப்பு அறை வசதியும் 50 டன் குளிர்ப்பதன அறை வசதியும் இதில் அடங்கியுள்ளது. நார்வே நாட்டு நிறுவனம் நன் கொடையாக அளித்த இயந்திரத்துடன் இது செயல்படத் தொடங்கி யுள்ளது.

6. பிடிப்பட்ட மீன்களைக் கரை சேர்க்கும் வசதிகளையும் படகுகள் தங்கும் வசதிகளையும் ஏற்படுத்துவதைப் பொறுத்த வரையில், 1968–69-ல் எய்தப் பட்ட பெரிய சாதனையாதெனில், சென்னையில் ரூ. 388·00 லட்சம் செலவில் பெரியமீன்பிடித் துறைமுகத்தைக் கட்டுவதற்கான திட்டத்திற்கும் தூத்துக் குடியில் ரூ. 208·00 லட்சம் செலவில் பெரிய மீன்பிடி துறைமுகத்தைக் கட்டுவதற்கான திட்டத்திற்கும ஒப்பளிப்பு வழங்கப்பட்டதுதான். சென்னை யில் மீன்பிடி துறைமுகம் கட்டும் பணி. சென்னைத் துறைமுகப் பொறுப்பு கழகத்திடமும். தூத்துக்குடியில் துறைமுகம் கட்டும் பணி அரசாங்கப் பொதுப் பணித்துறையிடமும், ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவைகள் முறையே மத்தியத் திட்டத்தின் கீழும் மத்திய அரசு ஆதரவுத் திட்டத்தின்கீழும் நிறைவேற்றப்படும். இத்துறைமுகங்களுக்கான செலவை மத்திய அரசு ஏற்கும். மண்டபத்தில் ரூ. 10·96 லட்சம் செலவில் ஒரு தோணித்துறை முகமும் ராமேஸ்வரத்தில் ரூ. 9·90 லட்சம் செலவில் ஒரு தோணித் துறைமுகமும் கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இப்பணி, பொதுப் பணித்துறையிடம் ஒப்படைககட்பட்டுள்ளது. இத்துறைமுகங்களும் தோணித் துறைகளும் மீனவர்களின் பயனுக்கு இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் கிடைக்கும். தயாரிப்பு வகை இயந்திரங்கள், வலம் போடு வதற்கான கூடம், சிப்பஞ்செய்யும் மண்டபம், செப்பனிடும் பணிக்களரிகள் முதலியவற்றைக் கொண்டுள்ள பெரிய துறைமுகங்கள், இத்தொழி லின் வளர்ந்து வரும் தேவைகளைப் நிறைவு செய்வதுடன் அந்நியச் செலாவணி ஈட்டும் வகையில் ஏற்றுமதி வாணிகத்தை உயர்த்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாநிலத்தில் முதல் முறையாக 1968–69-ல் எண்ணூரிலுள்ள தொழிற்சாலையில் மீன் உறைய வைக்கப்பட்டது. 1968 ஜூலை மாதத்திலிருந்து டிசம்பர் வரையில் 170 டன் கடல் இறால்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதனால் ரூ. 35·00 லட்சம் அந்நியச் செலாவணி கிட்டியது.

7. நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மீனள வளர்ச்சிக்காக சுமார் 20 கோடி ரூபாய் செலவிடத்திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதற் படியாக முதல் ஆண்டில் மத்திய உதவி பெறும் திட்டங்களை நிறைவேற்ற ரூ. 129·94 லட்சமும் மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டங்களின்கீழ் தூத்துக்குடி, ராமேஸ்வரம், மண்டபம் ஆகிய இடங்களில் மீன்பிடி துறை முகங்களையும் தோணித் துறைகளையும் அமைக்க ரூ. 48·87 லட்சமும் செலவிடப்படும். மத்தியத் திட்டங்களின்கீழ் முதலாண்டில் ராயபுரம் மீன்பிடி துறைமுகத்திற்காகச் சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகம் ரூ. 50·00 லட்சம் செலவிடவிருக்கிறது. 1970-ல் விசைப் படகுகள் திட்டத்திற்கு ரூ. 90 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி, ராமேஸ்வரம் மண்டபம் ஆகிய இடங்களிலுள்ள மீன்பிடி துறைமுகங்கள் தோணித் துறைகளுக்காகவும் ஆழ்கடல் மீன்பிடி வேலைத் திட்டத்திற்காகவும் ரூ. 62·37 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

8. 1969–70-ம் ஆண்டுத் திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் திட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன:—

**(1) விசைப்படகுகளைக் கட்டுவதும் அவற்றை வழங்குவதும்.**

இரண்டாம் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மீன்பிடி விசைப் படகுகள் திட்டம், தொடர்சியான எல்லாத் திட்டங்களிலும் மீனள வளர்சசித் திட்டததின் முக்கியத் திட்டமாக இருந்து வந்துள்ளது. இத் திட்டத்திற்காக திட்டச் செலவில் சுமார் 75 சத வீதம் முதலீடு செய்யப் பட்டுள்ளது. 1968 டிசம்பர் வரையில் 718 படகுகள் குறைந்த விலையில் மீனவர்களுக்கு வழங்கப்பட்டன. நான்காவது திட்டத்தில 1,000 படகுகள் கட்டவேண்டும் என்ற குறிக்கோள் அளவு முடிவு செய்யப் பட்டிருக்க 1969–70-ல் 175 படகுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. ரூ. 90·00 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. இதற்கு கனில் எட்டு படகுகள் (36′ 43′) நடுத்தர அளவுள்ளவைகள். இந்த 175 படகு படகுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு லட்சத்திற்கு மேல் செலவாகும். பெரிய இவற்றை மீன்பிடித் தொழிலில் ஆர்வமுள்ள தனிப்பட்ட தொழில் முனை வர்களுக்கு முழு விலையில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 32 அடிவரை நீளமுள்ள 167 விசைப் படகுகள், வாடகைக் கொள்முதல் அடிப்படையில்



மீனவர்களுக்கு வழங்கப்படும். இவையன்றி, சென்னை மீனவர் கூட் டுறவுக் கழகம், சென்னையில் ஐம்பது மீன்பிடி விசைப் படகுகள் இயக்கும் திட்டத்திற்கு வேளாண்மை மறு நிதி ஒதுக்கக் கழகத்திடமிருந்து மனு மதி பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 28·13 லட்சம் செலவாகும். முதல் ஆண்டில் இக்கூட்டுக் கழகம் 10 படகுகளைப் பெறத் திட்டமிட்டது. 1969–70-ல் கூடுதலாக இயக்கப்படவிருக்கும் 185 படகுகளும், ஆண் டொன்றுக்குத் தோராயமாக 9,700 டன் கூடுதல் உற்பத்தியைப் பெருக்க உதவும்.

1964-ல் பிறப்பிக்கப்பட்ட முந்தைய ஆணைகளின்கீழ், நாகப்பட்டினம் மெரினா, ராயபுரம் ஆகிய இடங்களிலுள்ள அரசாங்கப் படகு கட்டும் தளங் களில் கட்டப்பட்ட படகுகள், சென்னை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய கடலோர மாவட்டங் களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மீனவர்களின் சதவீத அடிப்படையில் ஒதுக்கப்பட்டன. இந்திய-நார்வே திட்டத்தின்கீழ் மண்டபத் திலுள்ள படகு கட்டும் தளத்தில் கட்டப்பட்ட படகுகள், இராமநாதபுரம் மாவட்ட மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத் திற்கும் அவ்வாறு ஒதுக்கப்பட்ட படகுகள், ஒவ்வொரு தொகுதியினருக் குள்ளும் விண்ணப்பதாரர்கள் முன் வரிசையையொட்டி கீழ்க்காணும் அடிப்படையில் பங்கிட்டு வழங்கப்பட்டு வந்தன:—

(அ) பயிற்சியாளர்களே அடங்கிய எல்லாத் தொகுதியினருக்கும் படகுகள் முழுமையாக ஒதுக்கப்படவேண்டும்.

(ஆ) எஞ்சிய படகுகளில் பயிற்சியாளர் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர் உள்ள தொகுதியினருக்கு 50 சதவீதம் ஒதுக்கப்படும்.

(இ) பயிற்சியாளர்கள் இல்லாத பொதுத் தொகுதியினருக்கு எஞ்சிய படகுகள் வழங்கப்படும்.

1968-ல் படகுகள் ஒதுக்கீடு குறித்து முன்னர் வகுக்கப்பட்ட அடிப் படையை அரசாங்கம் ஆராய்ந்தது. முன்னர் வகுத்த அடிப்படையை மாற்றம் செய்யவேண்டுமென்று அரசாங்கம் கருதியது. இதனால் சமமாகப் பங்கிட்டு வழங்குவதும் பரவலாக வழங்கப்படுவதும் முடியுமென்று அரசு கருதியது. நாட்டமுடன் ஆலோசித்த பின், ஒவ்வொரு கடலோர மாவட்டத் திற்கும் படகுகள் ஒதுக்கப்படுவது, ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள மீன வர் தொகையின் அடிப்படையில் மட்டுமின்றி, பதிவு செய்யப்பட்ட விண் ணப்பங்களின் எண்ணிக்கையையும் அவற்றில முடிவுறுமல் உள்ளவற்றை யும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட படகுகள் எண்ணிக்கையையும் அவற்றின் பயனையும் நோக்கியே அமைய வேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது. இதுவரையில், இலங்கை, பர்மா அகதிகள், வேலையிழந்த பொற்கொல்லர்கள் போன்ற சிறப்பு வகை யினருக்குப் படகுகள் ஒதுக்குவது சம்பந்தமாகச் சலுகை எதுவும் காட்டப் படவில்லை, மேலே சொன்ன சிறப்பு வகையினருக்கு 30 அடி, 32 அடிப் படகுகளில் 5 சதவீதம் ஒதுக்க இப்போது அரசு முடிவு செய்துள்ளது. இதற்கேற்ப, பல்வேறு மாவட்டங்களுக்குப் படகுகள் ஒதுக்கப்படத் திருத்தி யமைத்த சதவீதம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மண்டபத்தில் இந்திய-நார்வே திட்ட படகுகள் கட்டும் தளத்தில் கட்டப் பட்ட படகுகளைப் பொறுத்தவரையில், மண்டபத்தில் தற்போது அதிகப் படகுகள் கட்டப்பட்டு வருவதாலும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் அவை ஒதுக்கப்பட்டு வருவதாலும் மற்ற மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் இந்த மாவட்டத்திற்கு அதிக எண்ணிக்கையுள்ள படகுகள் ஒதுக்கப்படும் நிலை ஏற்படுகின்றது. எனவே, மண்டபத்தில் கட்டப்படும் சில படகுகளை (10 படகுகள்), தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய அண்டை மாவட்டங் களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கு 5 படகுகள் வீதம் அளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இப்படகுகள் இராமநாதபுரம் கடற்கரைக்கு ஏற்ற வாறு தயாரிக்கப்பட்டுள்ளமையால் அதேபோன்ற கடற்கரைப் பகுதியுள்ள அண்டை மாவட்டங்களான தஞ்சாவூர், திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் இவை பயன்படும்.

எல்லா பயிற்சியாளர் தொகுதியினருக்கும் இதுவரையில் விகிதாச்சார முறையில் அளிக்கப்பட்ட உயர்ந்த சலுகை இனி அவசியமில்லை யென்றும், பயிற்சியாளர் தொகுதியினரும் பயிற்சியாளர் ஒருவர் அல்லது பலருள்ள தொகுதியினரும் "பயிற்சியாளர் தொகுதியினர்" என்ற ஒரே வகையில் இணைக்கப்பட வேண்டும் என்றும்; ஒவ்வொரு மாவட்டத்திலும் வழங்கப்படுவதற்குள்ள படகுகளின் மொத்தம் எண்ணிக்கையில் 50 சதவீதம் பயிற்சியாளர் தொகுதியினருக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும் எஞ்சிய 50 சதவீதம் "பொதுத் தொகுதியினருக்கு" அதாவது பயிற்சியாளர் இல்லாத தொகுதியினருக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும் அரசு கருதியது. ஒவ்வொரு மாவட்டத்திலும் "பயிற்சியாளர் தொகுதியினருக்கும்", "பொதுத் தொகுதியினருக்கும்" ஒதுக்கப்பட்ட பங்கீட்டு எண்ணிக்கையில் 50 சதவீதம், முன்னர் படகுகள் பெறாத கிராமங்களிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கப்படவேண்டுமென்றும் ஏற்கெனவே படகுகள்ஒதுக்கப்பட்ட கிராமங்களிலுள்ள விண்ணப்பதாரர்களுக்குவிண்ணப்பதாரர்களின் முன் வரிசை அடிப்படையில் எஞ்சிய 50 சதவீதம் மட்டுமே வழங்கப்பட வேண்டுமென்றும் அரசாங்கம் முடிவெடுத்தது. இதுவரையில் ஒரு படகுகூட பெறாத மீன்பிடி கிராமங்கள் பல இருக்கின்றனவென்பது, இதுகாறும் வழங்கியுள்ள படகு புள்ளிவிவரங்களிலிருந்து தெரிய வருவதால் அரசு இவ்வாறு முடிவுசெய்துள்ளது. இயந்திரங்கள் ஒதுக்கீடு சம்பந்தமாகக் குறையீடுகள் வருவதைத் தவிர்க்கும் பொருட்டு ஒவ்வொரு சமயத்திலும் படகுகள் ஒதுக்கப்படுவதற்குத் தொகுதியினர் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர், இயந்திரம் ஒதுக்கப்படுவதற்காக சீட்டுக் குலுக்கல் நடைபெறவேண்டுமென்றும் ஒதுக்கப்பட்டுள்ளவர்களுக்கும் மீனள ஆலோசனை வாரியத்தின் உறுப்பினர்களுக்கும் அவர்கள் அந்த இடத்திற்கு வர விரும்பினால் அந்த நேரத்தில் அந்த இடத்திற்கு வருவதற்கு இயலும் வகையில் சீட்டுக் குலுக்கும் இடம், தேதி, நேரம் அறிவிக்கப்படவேண்டுமென்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இந்தியப் பசிப்பிணி அகற்றும் இயக்கக் குழு, கோட்டார் சமூகப் பணிச் சங்கம் ஆகியவற்றின் வேண்டுகோளின் பேரில் பெல்ஜியம் பசிப்பிணியகற்றும் இயக்கக்குழு கன்னியாகுமரி மாவட்டம், முட்டத்திலுள்ள நாட்டு மீன்பிடி படகுகளை (கட்டுமரங்களை) நவீனமாக்குவதற்கும், கடற்கரை வசதிகளை ஏற்படுத்தி தருவதற்கும் வகை செய்யும் திட்டத்தைச் செயல்படுத்த உதவ முன்வந்துள்ளது. 1969–70 முதல் தொடங்கும் இரண்டு ஆண்டுகளில் பசிப்பிணியகற்றும் இயக்கம், கட்டுமரங்களில் பொருத்துவதற்கு மீனவர்களுக்கு 100 பொறிகளை வழங்கும். பசிப்பிணியகற்றும் இயக்கத்திடமிருந்து பெறும் நிதி உதவியுடன் கோட்டார் சமூகப்பணிச் சங்கம் கரைசேர்க்கும் வசதிகளையும் ஏற்படுத்தும். இப் பொறிகள் வந்து சேர்ந்துள்ளன. இத் திட்டத்தின் முதல் நிலை விரைவில் தொடங்கும்.

## (2) ஆழ்கடல் மீன் பிடித்தல்

நமது மாநிலத்திற்காக நான்கு மீன்பிடி நாவாய்களை வழங்கும்படி இந்திய அரசு கேட்டுள்ளது. கல்கத்தாவில் இரண்டு படகு கட்டும் தளங்களில் இந்த நாவாய்கள் இப்போது கட்டப்பட்டுள்ளன. இவைகள் 1969–70-ல் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது; சென்னை துறைமுகத்தில் உள்ள வசதிகளைப் பயன்படுத்தி நீள் தொலைக் கடலில் மீன் பிடிக்கும் பணி தொடங்கப்படும். இந்த நான்கு நாவாய்களுக்காகவும் ரூ. 36.00 லட்சம் செலவாகும், இதனால் இம் மாநிலத்தில் முதன் முறையாக தொலை கடலிலும், ஆழ்கடலிலும் மீன்பிடிக்கும் முயற்சியை மேற்கொள்ள இத் துறைக்கு இயலும், இத்தகைய நாவாய்கள் செயலுக்கு வந்தால் மீன் பிடி தொழிலில் தனியார் தொழில் முனைவர்களுக்கு ஆர்வம் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. மீனளத் துறை ஏற்கெனவே மேம்படுத்தப்பட்டுள்ள கரை சேர்ப்பு வசதிகள் யாவும் இங்குள்ள நீர்ப்பரப்பில் மீன் பிடி நாவாய்களை இயக்கும் தனியார் தொழில் முனைவர்களுக்கும் அளிக்கப்படும். இந்திய ஸ்டேட் வங்கி, மீன்பிடிக்கும் தொழிலுக்கு வழங்கப்படும் கடனுக்காக மீண்டும் தள்ளுபடியளிக்கும் வசதிகளை அறிவிக்க[illegible]



மையால் தனியார் தொழில் முனைவர்களிடமிருந்து நிதி உதவி கேட்டு வரும் விண்ணப்பங்களையும் இறக்குமதி உரிமத்திற்கான விண்ணப்பங்களையும் மீனளத் துறை அனுமதிக்கத் தக்க அளவிற்கு அனுமதிக்கும்.

## (3) மீனவர்களுக்குத் தேவையான மீன்பிடி நைலான் நூலை வழங்குதல்

1969–70-ல் ரூ. 4·00 லட்சம் மொத்தச் செலவில் குறைந்த விலையில் விசைப் படகுகளுடன் நைலான் நூலையும் தொடர்ந்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உதவித் தொகை வீதம் 20 சத வீதமாகும்; குறைந்த விலை, 2 ஆண்டுகளில் 18 மாதத் தவணைகளில் வசூலிக்கப்படும். நைலான் வாங்கி, குறைந்த விலைக்கு அதன் உறுப்பினர்களுக்கு வழங்கும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூபாய் ஒரு லட்சம் அளவிற்கு உதவித் தொகை தொடர்ந்து வழங்கவும் கருதப்பட்டுள்ளது. இங்கும் உதவித்தொகை வீதம் 20 சத வீதமாகும். பருத்தி நூலை, 10 சத வீத உதவித் தொகையில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இக் காரியத்திற்காக ரூ. 15,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

## (4) கழிமுக மீன் பண்ணைகள்

நமது மாநிலத்திலுள்ள கழிமுகங்கள் அனைத்து குறித்த ஆய்வும் முடிவு பெற்றுள்ளது. பறங்கிப்பேட்டையில் ஆராய்ச்சிப் பண்ணை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## (5) உள்நாட்டு மீன் வளம்

இயற்கை நீர்நிலைகளிலிருந்து மீன்குஞ்சுகளைச் சேகரிக்கும் திட்டத்திலும் செயற்கை முறையில் உற்பத்தி செய்யும் மீன்குஞ்சு வகையிலும் மூன்றும் திட்டக் காலத்திலும் ஆண்டு திட்டத்தின் போதும் உள்நாட்டு நீர்நிலைகளிலிருந்து மீன் உற்பத்தி பெருகியுள்ளது. 1967–68-ம் ஆண்டின் இறுதியில் சுமார் 1,16,000 டன் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன. மேலும் நான்காம் திட்ட இறுதியில் சுமார் 2·00 லட்சம் டன் அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க, 6 கோடி மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யும் இலக்கையும் 10 கோடி மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும் இலக்கையும் எய்தத் திட்டமிடப்பட்டது. 1969–70-ல் 6·00 கோடி மீன்குஞ்சுகளையும் 8·00 கோடி மீன் முட்டைகளையும் சேகரித்து எல்லா உள்நாட்டு நீர்நிலைகளிலும். நேரடியாகவும் ஊராட்சி மன்றங்கள் மூலமும் விட்டு வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேவையான மீன் வளர்ப்பிடங்கள், மீன் வளர்ப்புக் குளங்கள் ஆகியவற்றைப் போதுமான அளவில் ஏற்படுத்தும் பொருட்டு திருமூர்த்தி நீர்த்தேக்கத்திலும், வைகை அணையிலும் மீன் பண்ணைகளையும் மீன் வளர்ப்பிடங்களையும் அமைக்கவும் நீலகிரியில் "டிரவுட்" என்னும் மலைத்தொகுதிக் கெண்டை (Trout) மீன் வகையை வளர்க்க அவலாஞ்சியில் "மலைத்தொகுதிக்கெண்டை" குளங்களைக் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. மணிமுத்தாறு, பவானிசாகர் ஆகிய இடங்களில் மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள் சட்டப்பட்டு வருகின்றனர். இவற்றில், செயற்கை முறையின் மீன் முட்டை பொறிக்கும் நிலையங்களிலிருந்து வரும் மீன்குஞ்சுகள் வளர்க்கப்படும். இவை கட்டி முடிக்கப்பட்டு 1969–70-ல் இயங்கும்.

இத்துடன் ஊராட்சிப் பகுதிகளில் மீனள வளர்ச்சிப் பணிகள் ரூ. 3·04 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், ஏரிகளைப் புதுப்பிப்பதற்காகும் செலவில் 66–2/3 சத வீதமும், மீன்குஞ்சுகள் வழங்குவதற்காகும் செலவில் 50 சத வீதமும், பணியாளர்களுக்காகும் செலவில் 100 சதவீதமும் அரசு இணைமானியம் வழங்கும். ஊராட்சிப் பகுதிகளில் இப் பணிகளைக் கவனிக்க வழி செய்யும் வகையில் 1969–70-ல் ஊர்ப்பணியாளர்களுக்கு மீன்வளர்ப்பு பற்றி பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### (6) மீனவர் கூட்டுறவுச் சங்கம்

மீனவர்களுக்கும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அளிக்கப்பட்டு வரும் நீண்டகால, இடைக்கால, குறுகியகாலக் கடன் வசதிகளுக்காக அளிக்கப்படும் நிதி உதவியாக, 1969-70-ல் ரூ. 3 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

ரூ. 28.13 லட்சம் செலவில் தமிழ்நாடு மீனவர் கூட்டுறவு கூட்டு நிறுவ னத்தினரால் செயல்படுத்தப்படவிருக்கும் திட்டம் ஒன்றுக்கு, வேளாண்மை மறுகடனுதவிக் கழகம் தனனுடைய இசைவை வழங்கியுள்ளது. இத் திட்டத்திற்கு, தமிழ்நாடு மத்தியக் கூட்டுறவு வங்கி கடனுதவியாக ரூ. 19·03 லட்சமும், 50 விசைப் படகுகள் வாங்குவதற்காகும் செலவில், மாநில அரசு உதவித் தொகையாக ரூ. 9·10 லட்சமும் வழங்கும். தமிழ்நாடு மீனவர் கூட்டுறவு கூட்டு நிறுவனத்தினரால், மேற்சொன்ன கடனுதவியுடனும், உதவித்தொகையுடனும் இத் திட்டங்கள் நிறைவேற்றப் படும். மீனவர் கூட்டு நிறுவனம் முதல் ஆண்டில் 10 விசைப் படகு களையும், இரண்டாவது, மூன்றுவது ஆண்டுகளில் 20 விசைப் படகுகளையும் தயாரித்து தனது உறுப்பினர்களுக்கு வழங்கும். இந் நிறுவனம முறுக கேற்றிய செயற்கை நைலான் வலைகளை வழங்குவதோடுமட்டுமல்லாமல் போக்குவரத்து வண்டிகளையும், விற்பனை அங்காடிகளையும் நடத்தும். இக் கூட்டு நிறுவனம் தம்முடைய சொந்த தேவைக்காக மட்டும் ஒரு பனிக் கட்டி யந்திரத்தையும், உறையவைக்கும் பிரிவையும் நிறுவும். இத் திட்டத்திற்கு 1968-69-ம் ஆண்டின் முடிவில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டதால் முதற்படியாகத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ள விசைப் படகுகள் 1969-70-ல் முழு அளவில் செயல்படத் தொடங்கும். மூன்று ஆண்டுத் திட்டக் காலத் தில் ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ. 1 லட்சம் பங்கிட்டு வழங்கும் வகையில் அரசு பங்கு மூலதனமாக ரூ. 3 லட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திருநெல்வேலி மாவட்ட மீனவர் கூட்டுறவுக் கூட்டு நிறுவனத்தினர் படகு கட்டும் தளத்துடன் கூடிய இதே போன்ற ஒரு திட்டத்தினை மேற் கொள்ள திட்டமிட்டுள்ளனர். இது அரசின் ஆய்வில் உள்ளது.

### (7) பயிற்சி

கடலோரப் பகுதியிலுள்ள மாவட்டங்களுக்கு, மாவட்டத்திற்கு ஒரு பயிற்சி நிலையமாக 6 மீனவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன. ஒரே நேரத்தில் 50 மீனவர்களுக்கு இப்பயிற்சி நிலையங்கள் ஏற்கனவே பயிற்சி அளித்து வருகின்றன. பயிற்சிக் கால அளவு 10 மாதங்களாகும். விசைப் படகுகள் இயக்குதல், மீன்பிடிப்பு நுணுக்கங்கள் ஆகியவைகளில் பயிற்சி பெறும் மீனவர்களுக்குப் பயிற்சி உதவித் தொகையாகத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 வழங்கப்படும். பயிற்சி உதவித் தொகை, மற்றபடிகள் வழங்குவதற்கான செலவுகள் ஆகியவை, 1969-70-ம் ஆண்டு நிதி ஒதுக்கத் திலிருந்து ஈடுசெய்யப்படும்.

பெரிய படகுகள், மின்விசைக் கருவிகள் ஆகியவைகள் இத்துறையில் செயல்முறைக்கு கொண்டுவரப்பட்டதால். துறைப் பணியாளர்களுக்கு, மத்திய மீனள இயக்கப் பயிற்சி நிலையத்தின் மூலம் தேவையானப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மீனவர் பயிற்சி நிலையங்களில், மீனவர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொறுப்பு இப் பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீனளத் திட்டத்தினை மேலும் மும்முரமாகச் செயல்படுத்த, இதே போன்று துறைப் பணியாளர்கள் பதப்படுத்துதல், விசைப் படகு இயக்குதல், வடி வமைத்தல், படகு கட்டுதல் முதலிய பணிகளில் பயிற்சி பெற 1969-70-ல் மத்திய நிலையத்திற்கு அனுப்பப்படுவார்கள்.

### (8) பதப்படுத்தும் பிரிவு

எண்ணூரில் உள்ள உறைபனிப் பிரிவு, மண்டபத்தில் நிறுவப்பட்டு வரும் உறை பனி பிரிவு ஆகியவைகளுடன் சேர்த்து, 29 உறைபனி பிரிவுகளும். குளிர்சாதனப் பிரிவுகளும் உள்ளன. இப்பொழுது உள்ள மீன்பதப்படுத்தும் கூடத்தில், ஆறு சிறிய உறைபனி பிரிவுகளை நிறுவும்



வேலை துவக்க நிலையில் உள்ளது. இவை 1969-70-க்குள் தயாராகி விடும். தூத்துக்குடியில், மேலும் ஓர் உறைபனிப் பிரிவு 1969-70-ல் தயாராகக் கூடும். நான்காம் திட்டத்தின், முதல் ஆண்டில் ஆக மொத்தம் 36 பிரிவுகள் செயல்படும். இடங்கள் தயாரானவுடன், மீன் துறைமுக வளவுக்குள் பெரிய பனிக்கட்டி யந்திரப் பிரிவுகளை நிறுவும் பணியைத் தனிப்பட்ட தொழிலதிபர்கள் மேற்கொள்வர்.

50 டன் மீனையும், மீன் கழிவையும் மீன் மாவாக மாற்றும் திறனுடைய மீன் மாவுத் தொழிற்சாலை மண்டபத்தில் நார்வே நாட்டின் உதவியுடன் நிறுவப்பட்டு வருகிறது. இது 1969-70-ல் முடிவடையும். இத்தொழிற் சாலை முடிவடைந்தபின் தமிழ்நாட்டில் மீனை அடிப்படையாகக்கொண்ட தொழில்களில் இது மிகச் சிறந்த மேம்பாட்டுப் பணியாக விளங்கும். இத்தொழிற்சாலையில் உற்பத்தியில் ஒரு கணிசமான சதவித உற்பத்தியை ஏற்றுமதி செய்து, அதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்ட முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### (9) படகுக் கட்டும் தளமும், பனிக் களரியும்

மீன்துறையைச் சார்ந்த, நான்கு படகு கட்டும் தளங்களும், ஐந்து பனி நிலையங்களும் உள்ளன. மேலும் ஒரு பனி நிலையம் கடலூரில் முடிவடை யும் தறுவாயில் உள்ளது. மண்டபத் திட்டத்திற்காக ஒரு பனி நிலையத்தை யும், ஒரு பனிக் களரியையும் நிறுவுவது, மண்டபத்தில் உள்ள ரயில்வே பனிக் களரியை வாங்கும் முடிவைப் பொருத்ததாகும். மெரினாவில் உள்ள படகு கட்டும் தளத்தை தற்காலிகமாக ராயபுரத்திற்கு மாற்றும் திட்டம் 1969-70-ல் முடிவடையும்.

### (10) நலப்பணித் திட்டங்கள்

1968-69-ல் வீடு ஒன்றுக்கு ரூ. 1,000 செலவில் மீனவர்களுக்காக 100 வீடுகள் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த 1,000 ரூபாயில் மீனவர் திருப்பித்தர வேண்டியத் தொகை ரூ. 250 ஆகும். மீதி ரூ. 750 உதவித் தொகையாகக் கருதப்படும். 1969-70-லும் இத் திட்டம் நீட்டிக்கப்பட்டு, ரூ. 1 லட்சம் செலவில் 100 வீடுகள் கட்டத் திட்ட மிடப்பட்டுள்ளது. ரூ. 4 லட்சம் செலவில், இரண்டு அணுகுச் சாலைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. மீனவர் குப்பங்களை இணைக்கும் எட்டு சிறிய இணைப்புச் சாலைகளை அமைக்க, சேதுபாவாசத்திர ஊராட்சி ஒன்றியத்துக்கு ரூ. 53,000 வழங்கப்படும்.

மத்திய அரசு உதவிபெறும் திட்டங்களின்கீழ், தூத்துக்குடியில் ரூ. 208 லட்சம் செலவில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம், மாநிலப் பொதுப்பணித் துறையினரால், நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 40 லட்சத்தைக் கொண்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்துறைமுகம் மூன்று ஆண்டுகளில் செயல்படத் தொடங்கலாம். ராமேஸ்வரத்தில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ள தோணித்துறை யும் மண்டபத்தில் பாக்விரிகுடா கரைப்பகுதியில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ள கப்பல்துறையும், இத்துடன் தொடங்கப்பட்டு, 1970-71-ல் செயல்படத் தயாராகும்.

இவைகளைத் தவிர, இந்திய அரசின் ஒப்புதலுக்காக, குளச்சல் மீன் பிடிக்கும் துறைமுகத்தின் வடிவமைப்பு முடிவுற்று இதற்கான தொடக்க வேலைகளும் முடிக்கப்படும். கடலூர் மீன்பிடி துறைமுகத்தின் இரண்டாம் நிலை வேலைகள் அனைத்தும் 1969-70-ல் முடிவடையும். மத்திய அரசு உதவிபெறும் திட்டங்களின்கீழ், சென்னை, ராயபுரம் மீன்பிடி துறைமுக வேலைகளைச் சென்னைத் துறைமுக பொறுப்பாண்மைக் கழகம் மேற் கொள்ளும். இத் துறைமுகத்திற்காக மொத்தம் ரூ. 388 லட்சம் செலவை மேற்கொள்ள ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைகளைச் செய்து முடிக்க 3 ஆண்டுகள் ஆகலாம். தொடக்க வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டுவிட்டன.

## 9. மீனளத் துறையின் பிற திட்டங்கள்.

(1). **இந்திய-நார்வே திட்டம்.**—இந்திய அரசுக்கும், நார்வே அரசிற்கு மிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் மண்டபத்தில் தொடங்கப்பட்ட திட்டப் பணிகள், 1967-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஏற்பட்ட புதிய ஒப்பந்தத் தின்படி, மேலும் 5 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து செயல்படுத்தப்படும். படகு கட்டும் தளமும், பயிற்சி நிலையமும் தொடர்ந்து செயலாற்றி, மீனளத் துறையின் பொதுத் திட்ட வேலைகளில் பங்குகொண்டன. பழைய ஒப்பந்தத்தின்கீழ், கட்டிமுடிக்கப்பெறாத நிலையில் இருந்த உறை பனி யந்திரப் பிரிவும், மீன் மாவுத் தொழிற்சாலையும், புதிய ஒப்பந் தத்தின்கீழ் நிறுவப்பட்டன. பனிக்கட்டி இயந்திரமும், உறைபனி இயந் திரமும் நார்வே நாட்டு பொறியியல் நிபுணர்களால் நிறுவப்பட்டு, வெள்ளோட்டம் மேற்கொள்ளப்பட்டது. 1968-ம் ஆண்டு மே திங்களில் தொடங்கப்பட்ட பனிக்கட்டி இயந்திரங்களின் வெள்ளோட்டம் மனநிறைவு தரும் பலன்களைத் தந்து பனிக்கட்டி மீனவர்களுக்கு விற்கப்படுகின்றது. உறைபனி இயந்திரம், இந்த ஆண்டு முடிவுக்குள், நார்வே நாட்டுப் பொறியியல் நிபுணர்களால், வணிக முறையில் செயல்படுத்தப்படும்.

நார்வே நாட்டு நிறுவனம், தட்டில் உறையவைக்கும் இயந்திரம் ஒன்றை இலவசமாக வழங்கவும் ஒப்புதல் தெரிவித்துள்ளது. இந்த இயந்திரம் அவர்களால் கப்பலில் அனுப்பிவைக்கப்பட்டு, இப்பொழுது இந்திய-நார்வே திட்டத் தலைமையிடத்தில் உள்ளது. இந்த இயந்திரமும் 1969–70-ல் நிறுவப்படும்.

மீன் மாவுத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், கட்டிடத்திற்காக அரசு ஏற்கனவே ரூ. 6·50 லட்சம் செலவை மேற்கொள்ள ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கட்டிடப் பணியை பொதுப்பணித் துறையினர் நிறைவேற்றி வருகின்றனர். இயந்திரத்தை நிறுவுதற்கான கட்டிடம் 1969-ம் ஆண்டு ஜூன் திங்களில் தயாராகிவிடும். இயந்திரங்கள் நார்வே நாட்டிலிருந்து, எர்ணாகுளத்திலுள்ள இந்திய–நார்வே திட்டத் தலைமையிடத்தில் வந்து சேர்ந்து, பின்னர் மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. கொதிகலன் ஒன்றும் உற்பத்தி செய்யப்பட்டு, அவ்விடத்திற்குக் கொண்டு செல்லப் பட்டது. மீன்மாவு தயாரிப்புத் தொழிற்சாலை 1969–70-ம் ஆண்டு முடிவிற்குள் செயல்படத் தொடங்கும்.

மண்டபத்திலுள்ள பாக் விரிகுடாவில், மீன்பிடி படகுகள் வந்து சேரும் துறையையும், தோணித் துறையையும் கட்டுவதே மிக முக்கியமான வேலைத் திட்டமாகும். தோணித் துறைமுகத்திற்குத் தேவையான, சுமார் 12 லட்சம் ரூபாய் மதிப்புள்ள உலோகப் பலகைகளை, நார்வே நாட்டு நிறுவனம் ஏற்கனவே அனுப்பி உள்ளது, இப் பலகைகள் கரைப்பகுதித் துறைகட்ட பயன்படுத்தப்படும். தூர்வாரும் வேலையை 1969–70-ல் முடிக்க, பாக் விரிகுடாவில் நார்வே நாட்டு தூர்வாரும் கப்பல் எதிர்பார்க்கப்படுகிறது. கரைப்பகுதிக் கப்பல் துறை 1970–71-ல் தயாராகிவிடும்.

மண்டபத்தில் உள்ள தென்இந்திய ரயில்வேயின் கடலோரப் பகுதிப் பணிக்களரியை வாங்குவதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது. மண்டபத்தில் பணிக்களரி ஒன்றையும், பணிநிலையம் ஒன்றையும் நிறுவுவது, மேற் சொன்ன பணிக்களரி வாங்குவது பற்றி அரசின் முடிவைப் பொறுத்த தாகும். பணிக்களரியும், பணி நிலையமும், நார்வே நிறுவனத்தினர் வழங்கும் குறிப்பிட்ட அளவு இயந்திரங்களுடனும் அரசினர் வழங்கும் குறிப்பிட்ட அளவு இயந்திரங்களுடனும் 1969–70-ல் நிறுவப்படும்.

(2) **முட்டத்தில் செயல்படும் திட்டம்—கட்டுமரங்களில் பொறிகளை அமைத்தல்.**—முட்டத்திலுள்ள கோட்டார் சமூக சேவை சங்கத்திற்கு 100 அவுட் போர்டு மோட்டார்களையும் (Out-bcard Motors) பிற சாதனங்களையும் வழங்குவதற்காக பெல்ஜிய நாட்டு பசிப்பிணி அகற்றும் இயக்கத்திடமிருந்து நிதி உதவி பெறுவதில் பசிப்பணி அகற்றம் இந்திய இயக்கம் வெற்றி அடைந்துள்ளது. இத் திட்டத்தின்கீழ், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முட்டம் கிராமத்தில் வசிக்கும் மீனவர்களுக்கு, 100 அவுட் போர்டு மோட்டார்கள், முதல்,





இரண்டு ஆண்டுகளில் வழங்கப்படும். ரூ, 15,73,000 மதிப்புள்ள யந்திரப் உதிரிப் பகுதிகள், ஒரு பெரிய பாரவண்டி, ஒரு ஜீப், இணைப்பு உறைபனி யந்திரம் ஒன்று ஆகியவைகளை வழங்குவதற்கு, பசிப்பிணி அகற்றும் பெல்ஜிய நாட்டு இயக்கம் ஒப்புக்கொண்டுள்ளது. கட்டுமரங்களில் பொறிகளை நிறுவும் திட்டம் வெற்றி பெற்றால், மேலும் மூன்று ஆண்டு களுக்கு "அவுட் போர்டு" மோட்டார்கள் வழங்கப்பட்டு, இத்திட்டம் மற்றப் பகுதிகளிலும் செயல்படுத்தப்படும். கோட்டார் சமூகசேவை சங்கத்தினர் மீனளத துறையின் தொழில் நுட்ப உதவியுடன், இத்திட்டத்தைச் செயல் படுத்துவர்.

(3) **உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் பிடிப்பதைக் குத்தகைக்கு விடுதலும், உரிமம் வழங்குதலும்.**—இம் மாநில அரசின்கீழ் உள்ள நீர்நிலைகளில் மீன் பிடிப்பதற்கான உரிமைகள் 1963-ம் ஆண்டிலும், 1964-ம் ஆண்டிலும் ஏலத்திற்கு விடப்பட்ட தொகையைக் காட்டிலும் 10 சத வீதம் அதிகக் தொகைக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு குத்தகைக்கு விடப்படுகின்றன. ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங் களிலுமுள்ள நீர்நிலைகளில் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடும் அதிகாரம் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வழங்கப் பட்டுள்ளது.

முட்டம், பூண்டி வீராணம், உதகமண்டலம் ஏரிகளில் உரிம ஏற் பாட்டின்கீழ் மீன்பிடிக்கும்பணி முறையாக நடந்து வருகிறது. மற்றைய மீனளத்துறையின் நீர்த் தேக்கங்களில் மீன்பிடிப்பணி அத்துறையின ராலேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(4) **முத்துக்குளித்தலும், சங்கெடுத்தலும்.**—இன்று உலகத்திலே நல்முத்துக் குளிக்கும் ஒரு சில இடங்களில் தூத்துக்குடி கடற்பகுதியும் ஒன்றாகும். முத்துக்குளித்தல் ஆண்டுதோறும் நடைபெறுவதில்லை. 1805-ஆம் ஆண்டு முதல் 1961-ம் ஆண்டு வரையில் 27 முறை முத்துக் குளிக்கப்பட்டுள்ளது. முத்துக் குளியலிலிருந்து மீனளத்துறை முத்துச்சிப்பிகளைப் பற்றிய புள்ளிவிவரங்களைத் திட்ட வட்டமாகச் சேகரித்து, ஆராய்ந்து வருகின்றது. 1961-ம் ஆண்டு நடத்தி யுள்ள முத்துச்சிப்பி ஆய்வுகளிலிருந்து, எடுக்கத்தக்க முத்துச்சிப்பிகள் மிகக் குறைவாகவே இருப்பதாகவும், சிறிய அளவில் முத்துக் குளிக்க கூட இது போதுமானதாக இல்லை என்றும் தெரியவந்தன.

தூத்துக்குடியில் சங்கெடுக்கும் பணியும், தஞ்சாவூர் மாவட்டத்தின் ஒரு பகுதியில் சங்கெடுக்கும் பணியும் மீனளத் துறையினால் நடத்தப்படு கின்றன. மற்றைய மாவட்டங்களில் சங்கெடுக்கும் பணி மூன்றாண்டுக் காலத்திற்குக் குத்தகைக்கு விடப்படுகிறது. இந்த ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் புதுக்கூடத்திலிருந்து கோடிக்கரை வரையுள்ள பகுதி களில் சங்கெடுக்கும் பணியை குத்தகைக்கு விட முடிவு செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி மீனளத் துறையில் சங்கெடுக்கும் பணியைப் பொறுத்த வரை, நீரில் மூழ்கிச் சங்கெடுக்கும் பணியாளர்களிடமிருந்து சங்குகளை ஒன்று திரட்டி வைப்பதும், ஒப்பந்தப் புள்ளி மூலம் வியாபாரிகளுக்கு விற்பதும் அல்லது உடன்படிக்கை வீதங்களில் மேற்கு வங்காளச் சிறு தொழில் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதும் இந்நிறுவனத்தின் வேலையாகும். சங்குகள் விற்பனை அரசின் தனி உரிமையாகும். மீனளத் துறைக்கு அதிக வருவாயினைத் தேடித் தருகிற இனங்களில் இதுவும் ஒன்றாகும்.

(5) **பதப்படுத்திய மீன்களை டப்பியில் அடைத்தலும், மீன்மாவும், கடற்கோரையிலிருந்து கூழ் தயாரிப்பதற்கான யந்திரங்களும்.**—தூத்துக்குடியில் சூடை மீனையும் (sardines), இறாலையும் பதப் படுத்தி டப்பிகளில் அடைக்கும் தொழிற்சாலை ஒன்று 1966 ஜூன் திங்களில் செயல்படத் தொடங்கியது. 1968 டிசம்பர் திங்கள் வரை 20,615 டப்பிகளில் பதப்படுத்திய இறால் மீன்களும் 3,86,086 டப்பிகளில் பதப்படுத்திய சூடை மீன்களும் அடைக்கப்பட்டன. அந்த சூடை மீன்கள் அடைக்கப்பட்ட டப்பி கள் யாவும் படை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன. 1969-70-ல் பதப் படுத்தி டப்பியில் அடைக்கும் தொழிற்சாலைகளைக் குத்தகைக்கு விட

எண்ணியுள்ளது. கழிவுப் பொருள்களைப் பயன் படுத்துவதற்காக, மீனைப் பதப்படுத்தி டப்பியில் அடைக்கும் அரசுத் தொழிற்சாலையின் துணை நிலையமாக மீன்மாவுத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. 1968 ஆம் ஆண்டு 29,000 கிலோ கிராம் எடையுள்ள மீன் மாவு தயாரிக்கப்பட வேண்டும் என்று இலக்கு முடிவு செய்யப்பட்டிருக்க 1968 டிசம்பர் வரையில் 23,973 கி. கி. எடையுள்ள மீன்மாவு உற்பத்தி செய்யப்பட்டு கால்நடைத் துறைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. கடற்கோரையிலிருந்து கூழ் தயாரிக்கும இயந்திரம் ஒன்று தூத்துக்குடியில் நிறுவப்பட்டு வருகிறது.

(6) **சுறு ஈரல் எண்ணெய் உற்பத்தி.**—சுறு ஈரல் எண்ணெய் எடுக்கும் நிலையங்கள், சுறு ஈரல்களை மீனவர்களிடமிருந்து பெற்று, எண்ணெய் எடுத்து, தூய்மை செய்யப்படாத எண்ணெயை கோழிக் கோட்டிலுள்ள கேரள அரசாங்க எண்ணெய்த் தொழிற்சாலைக்கு அனுப்புகிறது. 1968 டிசம்பர் வரையில் 12,080 கிலோ கிராம் தூய்மையற்ற எண்ணெய் கேரள மாநிலத்திற்கு வழங்கப்படுவதற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

(7) **அண்மைக் கடல் ஆய்வு.**—அண்மைக் கடல் பகுதிகளைப் பற்றி ஆய்வு செய்வதற்கு, சென்னை, கடலூர், இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் மூன்று ஆய்வுக் கூடங்கள் உள்ளன. மீனவர்களின் நன்மைக்காக ஆய்வுக் குறிப்புகள் பரிசீலிக்கப்படுகின்றன. அண்மைக் கடலுக்கு அப்பாலுள்ள பகுதிகளைப் பற்றி ஆய்வுப்பணிமண்டபம் மீன்பிடிப்புச் சோதனைக்குழுவில் உள்ள 43 அடி நீளமுள்ள இரண்டு படகுகளினால் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1969-70-ல் மீன்பிடி பருவத்தில் மன்னார் விரிகுடாவிலுள்ள புதிய மீன்பிடி இடங்களைக் கண்டறிய இந்திய-நார்வே திட்டத்தின் ஆய்வுக் கப்பலைப் பெறுவது பற்றி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(8) **மத்திய மீனளக் கழகம்.**—கல்கத்தாவிலுள்ள மத்திய மீனளக் கழகம் என்னும் நிறுவனத்தில் பங்கு மூலதனமாக இம்மாநில அரசாங்கம் ரூ. 3 லட்சம் முதலீடு செய்துள்ளது. மீன் உண்பவர்களுக்கு நியாயமான விலையில் மீன் கிடைக்க உதவி செய்வதும், மீனவர்களுக்கு நல்ல விலைக்கு மீன்களை விற்றுக் கொடுப்பதும் இக்கழகத்தின் முக்கிய குறிக்கோளாகும். 1967-68-ல் இக் கழகம் 3,14,967 கிலோ கிராம் மீன்களை அனுப்பியுள்ளது. இம் மாநிலத்தில் உள்ள நீர்த் தேக்கங்களில் பிடிபடும் மீன்களை மேற்கு வங்காள அங்காடிகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக மத்திய மீனளக் கழகத்திற்கு அனுப்புவதும் சென்னை மாநகரில் சில்லறை விற்பனைக்கு அனுப்புவதும் சாதாரணமான பணியாகிவிட்டது. இதனால் உள்நாட்டு மீனவர்களின் மீனுக்கு நல்ல விலை கிடைக்கின்றது.

(9) **மீனவர்களுக்கு அளிக்கப்படும் உதவியும் துயர் தணிப்பு நடவடிக்கைகளும்.**—மீனவர்களின் நலனுக்காக, அரசால் ஏற்படுத்தப்பட்ட துயர் தணிப்பு நிதிக் குழு ரூ. 1·41 லட்சம் வசூலித்துள்ளது. இதுவரை ஐந்து தீவிபத்துக்களும். கடல் அரிப்பால் 2 விபத்துகளும், புயலால் ஒரு விபத்தும் ஆக 8 விபத்துகள் நேர்ந்தன. இவ் விபத்துக்களில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடாக ரூ. 21,052·71 வழங்கப்பட்டது.

**10. தனியார் துறைத் தொழில் முனைவர்கள் மூலம் மீன்தொழில் வளர்ச்சி.**

தனியார் துறைத் தொழில் முனைவர்களின் மூலம் மீன் தொழிலை பெரும் அளவில் பெருக்குவதற்கான அரசின் கொள்கையை ஒட்டி, மீன் தொழில் முனைவர்கள் அனைவரையும், மத்திய அரசு, உணவு-வேளாண்மை அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் முன்னிலையில் நடந்த கூட்டமொன்றுக்கு, அரசு அழைத்தது. கடனுதவி அளிக்கும் நிறுவனங்களின் மூலம் கிடைக்கும் நிதி உதவி, உறைபனி இயந்திரம், மீன்பிடி படகுகள் ஆகியவைகள் வாங்குவதற்கு வேண்டிய நிதியுதவி, ஆகிய இவை [illegible]



அரசு அளிக்கும் உதவிகள் பற்றி தொழில் முனைவர்களுக்கு விளக்கப்பட்டது. மீன் பிடிக்கும் துறைமுகங்களில் மேம்பாடு செய்யப்பட்ட மனைகளை குத்தகைக்கு விடுவதற்கான வசதிகள் பற்றியும் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. மீன்பிடி படகுகள் வாங்குவதற்காக, நிதி உதவி அளிக்க. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி முன் வந்துள்ளது. கூட்டுறவுப் பகுதியிலும், கூட்டுறவு வசதியற்ற பகுதிகளிலும், கடலில் செல்லும் மீன்பிடி படகுகளை வாங்குவதற்காக, வேளாண்மை மறுகடனுதவிக் கழகமும், கடனுதவி அளித்து வருகிறது. தனியார் துறை தொழில் முனைவர்கள் மூலம் மீனள வளர்ச்சிக்காக பண உதவி அளிக்க சில வணிக வங்கிகள் விசாரித்துள்ளன. இது குறித்து தனியார் துறை காட்டும் ஆர்வம் மிகவும் ஊக்குவிப்பதாய் உள்ளது. தூத்துக்குடி, சென்னை மீன்பிடித் துறைமுகங்களின் வேலைகள் முடிவடைந்த பின், இங்கிருந்து, தனியார்த் துறைத் தொழில் முனைவர்களால் அதிக அளவில் மீன்பிடி படகுகள் விடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாள் ஒன்றுக்கு மூன்று டன் எடையுள்ள மீன்களை உறைய வைக்கும் திறனுடைய, எண்ணூரில் உள்ள உறைபனிப் பிரிவை, அரசு, தனியார்த்துறை நிறுவனம் ஒன்றுக்கு குத்தகைக்கு அளித்துள்ளது. இந் நிறுவனம் உறைய வைக்கும் வேலைகளைத் தொடங்கி, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுககு இறால் மீன்களை ஏற்றுமதி செய்கிறது. இவ் வாறாக இம் மாநிலத்திலிருந்து மீன்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது முதன் முறையாகத் தொடங்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் உள்ள மீன் பதப்படுத்தும் தொழிற்சாலையையும், மீன்மாவுத் தொழிற்சாலையையும், தனியார்த் துறைத் தொழில் முனைவர்களுக்குக் குத்தகைக்கு விட அரசு எண்ணியுள்ளது. பல்வேறு இடங்களில் உள்ள குளிர்ச் சாதனப் பிரிவுகளையும், பனிக்கட்டி தயாரிக்கும் பிரிவுகளையும், தனியார்த் துறைத் தொழில் முனைவர்களுக்குக் குத்தகைக்கு விடுதலும் அரசின் ஆய்வில் உள்ளது.

## 11. ஏற்றுமதி.

1967-68-ல் தமிழ்நாடு ரூ. 1·25 கோடி மதிப்புள்ள மீன்களை ஏற்றுமதி செய்தது. இதில், இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட உலர்ந்த மீன்களின் மூலம்தான ரூ. 1·22 கோடி வரவு கிடைத்தது. இம் மாநிலத்தின் தொலை கடல் பகுதிகளில், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படக்கூடிய தரமுள்ள பெரிய அளவு கூனிறால் மீன் வகை கிடைக்கின்றபோதிலும், இம் மாநிலத்தில் உறைய வைக்கும் இயந்திர வசதி இல்லாத காரணத்தால், இம் மீன்களை ஏற்றுமதி செய்யும் வகையில் வளர்ச்சி ஏதும் இல்லை. 1968-ல், 2½ முதல் 3 டன் அளவு உறைய வைக்கும் திறனுடைய உறைபனிப் பிரிவு ஒன்றை, அரசு எண்ணூரில் அமைத்து, அதை தனியார்த் துறைத் தொழில் முனைவர் ஒருவருக்குக் குத்தகைக்கு விட்டது. இந்த உறைய வைக்கும் பிரிவிலிருந்து, 1968 ஜூலை திங்கள் முதல் 1968 டிசம்பர் திங்கள் வரையில், அமெரிக்கா, ஜப்பான் நாடுகளுக்கு 170 டன் உறைய வைக்கப்பட்ட கூனிறால் மீன்வகை ஏற்றுமதி செய்து ரூ. 35 லட்சம் வெளிநாட்டு செலாவணி ஈட்டியது.

## 12. பொது.

சென்னை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களைத் தொடங்குதல், இத்தகைய இடங்களிலும் கடற்கரை நெடுகவும், மற்ற இடங்களிலும் மீனளத் தொழிற் பிரிவுகள் ஏற்படுத்துதல் ஆகியவற்றினால் தமிழகத்தில் மீனள வளர்ச்சி "ஆழ் கடல் மீன்பிடி நிலையை" அடையும். இதனால் மாநில மீனளத் துறையிடமிருந்து தொழில் நுட்ப உதவியும் அரசு ஆதரவு பெற்ற, வணிக நிதி நிறுவனங்களிலிருந்து நிதி உதவியும் பெற்று, மீனள வளர்ச்சியில் கூட்டுறவு, தனியார்த்துறைகள் மும்முரமாக ஈடுபட பெருவாரியான வாய்ப்புகள் ஏற்படும். இக் கூட்டுறவு முயற்சி, நம் மக்களுக்கு மிகவும் தேவைப்படுகிற புரதசத்து நிறைந்த மீன் உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதோடல்லாமல், நம் அன்னியச் செலாவணி வருவாயை கணிசமான அளவு அதிகரித்து, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெருமளவு உதவும்.

## இணைப்பு 3.

### கோரிக்கை எண் XVIII—கால்நடை வளர்ப்பு

[கொள்கை விளக்கக் குறிப்பு]

ஆவினம், செம்மறியாடு, கோழி இனங்கள், பன்றிகள் முதலிய கால்நடை களின் தரத்தை உயர்த்தும் முக்கியப் பணியினை விலங்கின வளர்ப்புத் துறை எப்பொழுதும்போல் நிறைவேற்றி வருகின்றது. இத்துடன் கால்நடைகளின் நோய்க்கட்டுப்பாடு, பொதுச் சுகாதார நடவடிக்கைகள், தொழில் நுட்பப் பணி யாளர்களுக்குப் பயிற்சி ஆகியவை அடங்கிய கால்நடை சுகாதாரப் பணியினை யும், கால்நடை மேம்பாடு, கால்நடை மருத்துவ உதவி குறித்த அறிவியல் ஆராய்ச்சி, தொழில் நுட்ப முயற்சிகள் போன்ற பணிகளையும் இத்துறை நிறைவேற்றி வருகின்றது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும், வெளிநாட்டி லிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டவையும். நமது மாநிலத்தில் உள்ள கால்நடைப் பண்ணைகளிலிருந்தும், மையக் கிராமப் பகுதிகளிலிருந்தும், பெற்றவையுமான உயர்ந்த இன ஆடுகள், மாடுகள், கோழி இனங்கள், பன்றிகள் ஆகியவற்றைக் கொண்டு உள்ளூர் இனங்களின் தரத்தை உயர்த்துவதன் மூலம் கால்நடை மேம்பாட்டுப் பணி நிறைவேறி வருகின் றது. மாவட்டங்களில் அமைந்துள்ள கால்நடை மருத்துவச் சிகிச்சை நிலை யப் பணியாளர்களும் கால்நடைகள் தொற்று நோயினால் பாதிக்கப்படு வதையும், நோய்கண்டு அவை இறப்பதையும் தடுப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள கால்நடை மருத்துவப் பணியாளர்கள் கால்நடைகளின் சுகாதாரத்தைப் பேணும் பணியையும், கால்நடை நோய்க்கட்டுப்பாட்டுப்பணியை யும் மேற்கொள்கின்றனர். கால்நடை மருத்துவத்திலும், கால்நடை உற்பத்தி முறைகளிலும் ஏற்பட்டுள்ள விரைந்த முன்னேற்ற வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு அறிவியல் வளர்ச்சியுடன் ஒத்திருக்கும்படியாகவும் மக்களுடைய பெருகிவரும் உணவுத் தேவைகளை நிறைவு செய்வ தற்காக இத்துறை பல்வேறு துறைகளில் தனது பணிகளை விரிவுபடுத்திக் கொண்டுள்ளது.

இத்தகைய மேம்பாட்டுப் பணிகள் அனைத்தையும் தொடங்கவும், அவற்றை நிறைவேற்றவும் தேவையான தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு, சென்னையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் பயிற்சி அளிக்கப் படுகின்றது. பட்ட மேற்படிப்புப் பயிற்சிக்கான தென் வட்டார நிலையமாக இக்கல்லூரி உயர்த்தப்பட்டுள்ளது. இந்தக் கல்லூரியில், ஒவ்வொரு ஆண்டும் சராசரி 80 பட்டதாரிகள் தேர்ச்சி பெறுகின்றனர். இராணிப்பேட்டையிலுள்ள நோய்த்தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையம் இந்த நாட்டில் நோய்த் தடுப்பு மருந்து தயாரிக்கும் தென் வட்டார நிலையமாகும். நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்பதற்குத் தேவையான உயிரியல் மருந்துப் பொருட்களை முக்கியமாக தமிழ்நாட்டிற்கு வேண்டியவற்றை இந்த நிலையம் தயாரிக் கின்றது. அருகிலுள்ள மாநிலங்களுக்குத் தேவையானவற்றையும் வழங்கு கின்றது. சிறந்தவகையான நோய்த் தடுப்பு மருந்துகளைத் தயாரிப்பதற் கான ஆராய்ச்சிப் பணியும், பல்வேறு நோய்த்தடுப்பு மருந்துகளின் நோய்த் தடுப்புத் திறனை ஒப்பிட்டு ஆராயும் பணியும் தொடர்ந்து நடை பெறுகின்றன. கால்நடை வளர்ப்புத் துறையின் பல சிக்கல்கள் குறித்தும், கால்நடை நோய் பற்றிய புலனாய்வுகள் குறித்தும், நோய் ஆய்வுப் பணியாளர்கள் ஒருபுறம் நேரிடப் பணியாளர்களுடனும், மறுபுறம் ஆராய்ச் சிக் கூடங்களுடனும் இணைந்து பணியாற்றுகின்றனர்.

கால்நடை, கோழி இனங்களின் வளர்ச்சியை மதிப்பிட்டுப் பார்த்த பிறகு அறிவியல் பாதையில் சிறந்த மேம்பாட்டிற்கும், முன்னேற்றத்திற்கும் போதுமான வாய்ப்பு உள்ளதென்று அரசாங்கம் கருதியது. இதனைக் கருத்தில் கொண்டு, திட்டத்தின்கீழும், விரைவுத் திட்டத்தின்கீழும் செயல்படுத்தப்பட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைப் புதுமுறையில் செயல்படுத்துவது குறித்தும் சிறந்த விளைவுகளை விரைவாகப் பெறுவதற் காக அவற்றை மாற்றியமைப்பதற்கான வழிவகைகளை ஆலோசித்துப் பார்ப்பதற்கும் 1967-ம் ஆண்டில் அரசு கோழி இன வளர்ப்புக் குழுவை யும், கால்நடை வளர்ப்புக் குழுவையும் அமைத்தது. கோழி இன வளர்ப்புக் குழு, தனது அறிக்கையை அனுப்பியுள்ளது. குழுவின் பரிந் துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன. பரிந்துரைகளில் சில நிறைவேற்றப் பட்டுள்ளன.





நமது மாநிலத்தில் உள்ள கால்நடைப் பண்ணைகள் செயல்படுவது குறித்து அரசு ஆய்வு செய்துள்ளது. பண்ணைகளில் உள்ள ஆதாரங்கள் விரயமாகின்றன என்பதைக் கண்டுபிடித்த பிறகு, அந்த ஆதாரங்களை, முக்கியமாகக் கால்நடை தீனி, தீவனம் வழங்குவதை மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் விளைவாக, இந்தப் பண்ணைகளை நிர்வகிப்பதற்கு ஏற்பட்ட செலவு பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது. கால்நடைப் பண்ணைகள் தன்னிறைவு பெறச் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

கால்நடை உதவி மருத்துவர்களை அரசிதழ் பதிவுத் தரத்திற்கு உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை நெடுங்காலமாக இருந்து வருகிறது. கால் நடைத் தொழிற் படிப்பின் நீண்டகாலத்தையும், கால்நடை உதவி மருத் துவர்களாக அவர்கள் ஆற்றவேண்டிய பணியையும் கருதிப் பார்த்து, அரசு அவர்களை அரசிதழ் பதிவுத்தரத்திற்கு உயர்த்தியுள்ளது.

கால்நடை ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்தப்படுவதற்காக வேளாண் மைச் சமூகத்தினரிடமிருந்து அடிக்கடி வேண்டுகோள்கள் வந்துள்ளன. அத்தகைய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்வதற்காக, நேரிட நிலைமைகளின்கீழ் கால்நடைகளிடையே உள்ள இறப்பு விகிதம் குறித்து, செங்கற்பட்டு மாவட்டத்தில் முன்னோடி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அத்தகைய முன்னோடி ஆய்வுகள் நாட்டின் பல பாகங்களிலும் நடத்தப்பட்டுள்ளன.

கால்நடை வளர்ப்புத்துறையின் கல்வி, ஆராய்ச்சிப் பிரிவுகளின் பணி யாளர் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், இந்தப் பிரிவுகள் வளர்ச்சிப் பிரிவினின்றும் தனித்துப் பணியாற்ற அனுமதிக்கவேண்டிய அவசியத்தை யும் அரசு உணர்ந்துள்ளது. அப்பொழுதுதான் கல்வி, ஆராய்ச்சிப் பணிகளை, நிர்வாகத் தடங்கல் இன்றித் தொடர்ந்தும், திறம்படவும் நிறைவேற்ற முடியும். எனவே, அரசு, கல்வி, ஆராய்ச்சிப் பிரிவுகளை வளர்ச்சிப் பிரிவி லிருந்து பிரித்து, கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர்—கால்நடை வளர்ப்பு கூடுதல் இயக்குநர் அதிகாரங்களைக் கூடுதலாக்கியுள்ளது. பணி யாளர்களையும் நிறுவனங்களையும், வளர்ச்சிப் பிரிவிற்கும், கல்வி ஆராய்ச்சிப் பிரிவிற்கும் பிரித்துக் கொடுப்பது குறித்து அரசு ஆய்வு செய்து வருகின்றது. இது குறித்த ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, பயங்கரமான கால்நடைத் தொத்து நோயாகிய வெக்கை நோய் மீண்டும் தமிழ்நாட்டில் பரவியது. இந்த நோயைத் தமிழ்நாட்டிலிருந்து அறவே ஒழித்து, மாநிலத்தில் உள்ள கால்நடைகளைப் பாதுகாப்பதற்காக சுமார் ரூபாய் 5 லட்சம் செலவில் வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்தைப் பெருமளவில் மேற்கொள்வதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### கால்நடை மேம்பாடு

**(அ) தீவன மேம்பாடு.**—கால்நடைகளின் வளர்ச்சி அவைகளுக்கு வேண்டிய தீனியின் வளத்தோடு பிணைந்துள்ளது. தீவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பண்படுத்தப்பட்ட மேய்ச்சல் நிலங்கள் ஏற்படுத்தப் படுகின்றன. ஆனால், இந்த மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்துவதைக் காட்டிலும், சிறந்த கால்நடைகளைப் பெறுவதற்குத் தீவனம் எவ்வளவு சிக்கனமானதும் இன்றியமையாததும் ஆகும் என்பதை உழவர்களுக்குப் படிப்படியாக அறிவூட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதைப்பற்றி கடந்த காலத்தில் அவர்கள் போதுமான அளவு அறிந்திருக்கவில்லை. கால்நடை வளர்ப்புத்துறையின் தீவன மேம்பாட்டுப் பணிகள் இந்த வகையில் கால்நடை வளர்ப்பவர்களின் உளப் பாங்கினை மாற்றி அவர்களைச் சரியான பாதையில் கொண்டு செல் கின்றனர். தீவன உற்பத்தி பற்றி உழவர்களுக்குக் கரபித்த பின் இறுதியாக கட்புல விளக்க முறைகள், தீவன பதன குழிகளை அமைத்தல், குறுகிய காலத் தீவனப் பயிர்களை வளர்த்தல், நிலையான கால்நடைத் தீவனத் தண்டுப் பயிர்களைப் பயிராக்கல் ஆகியவற்றைப் பற்றியும் செய்முறைகளுடன் விளக்கிக் காட்டுகின்றனர்.

(ஆ) **மையக் கிராமத் திட்டம்.**—ஏற்ற அடக்கமான பகுதிகளில் மும்முரக் கால்நடை வளர்ச்சிக்காக கால்நடை இனப் பெருக்கம், கால் நடைத் தீவனம், நிர்வாக முறைகள், நோய்க்கட்டுப்பாடு, விற்பனை வசதி ஆகியவற்றை அறிவியல் முறையில் மேற்கொள்வதே மையக் கிராமத் திட்டத்தின் நோக்கமாகும். கால்நடைகளை பணிகளிலீடு படுத்தும்வற்கும் பால் பெருக்க நோக்கங்களுக்காகவும் மேம்படுத்த இத் திட்டம் வகை செய்கிறது. தற்போது நமது மாநிலத்தில் 75 மையக் கிராம நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றோடு மையக் கிராமத்துணை நிலையங்கள் 650-ம், மையக் கிராம வளர்ச்சி நிலையங்கள் 18-ம் செயல்பட்டுவருகின்றன. 1967–68-ம் ஆண்டில் 4,12,887 ஆவினங்களுக்குச் செயற்கை முறையில் கருத்தரிப்பு செய்யப் பட்டது. எனவே, கருத்தரிப்பு வீதம் கிட்டத்தட்ட 52 சதவீதமாயிற்று.

(இ) **செயற்கை முறைக் கருத்தரிப்பு நிலையங்கள்.**—இந்த முறையின் மூலம் நம்மிடமுள்ள இனப்பெருக்கக் காளைகளைக் கொண்டு இருபது மடங்கு பலன் பெறப்படுகின்றது. இம் மாநிலத்தில் நகர, கிராமப் பகுதிகளில் உள்ள நாட்டு மாடுகளின் கறவைத் தன்மையை மேம் படுத்துவதே இந்த நிலையங்களின் நோக்கமாகும். தற்போது செயற்கை முறைக் கருத்தரிப்பு நிலையங்கள் 29 உள்ளன. 1968–69-ம் ஆண்டில் மேலும் பல நிலையங்களை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. நல்ல ரக இனப் பெருக்கக் காளைகள் போதுமான அளவில் இல்லாததால், கருவுறும் விதத்தை அல்லது பிறப்பு வீதத்தைப் பாதிக்காமல் செயற்கைக் கருத்தரிப்புகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் இனப்பெருக்க காளைகளின் பயனை உயர்த்த தகுந்த நடவடிக்கைகள் குறித்துத் தொடர்ந்து ஆய்வு செய்யப்படுகின்றது.

(ஈ) **துணை வளர்ச்சி நிலையங்கள் (மையக் கிராமம்).**—மையக் கிராமப் பகுதிகளில் உற்பத்தியாகும் சிறந்த வகை இனப் பெருக்கக் காளைகளை ஆதாயமான வீதத்தில் பயன்படுத்தும் பொருட்டு மையக் கிராம வளர்ச்சித் திட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த வளர்ச்சி நிலையங் களில் உள்ளூரிலுள்ள தரம் குறைந்த மாடுகளை உயரின மாடுகளாக தரம் உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் திடடத்தை விரிவுபடுத்தியதனாலும், கிடைக்கிற இனப்பெருக்கக் காளைகளை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள் வதன் அவசியத்தினாலும் இத்திட்டத்தைப் படிப்படியாகக் கைவிட வேண்டுமெனக் கருதப்பட்டது. நிறுவப்பட்ட 73 மையக் கிராம வளர்ச்சி நிலையங்களில் தற்போது 18 மையக் கிராம வளர்ச்சி நிலையங் களே செயல்படுகின்றன. எஞ்சிய 55 மையக் கிராம வளர்ச்சி நிலையங்கள் மூடப்பட்டன.

(உ) **கால்நடைப் பண்ணைகள்.**—ஒசூர், புதுக்கோட்டை, ஒரத்தநாடு, அபிசேகப்பட்டி, செட்டிநாடு, உதகை ஆகிய ஆறு இடங்களிலும் ஆறு கால்நடைப் பண்ணைகள் உள்ளன. சிந்தி, முர்ரா, ஜெர்சி, தார்பர்கார், கிர் போன்ற நன்கறியப்பட்ட இனங்கள் இந்தப் பண்ணைகளில் நல்ல முறையில் வளர்த்துப் பேணிவரப்படுகின்றன. நல்ல இனப்பெருக்கக் காளைகள் வெவ்வேறு மையக் கிராம நிலையங் களுக்கும் துணை வளர்ச்சி நிலையங்களுக்கும் கொடுக்கப்படுகின்றன. இம் மாநிலத்தில் கால்நடையினத்தின் தரம் உயர்த்துவதற்குத் தேவைப் படும் அடிப்படைக் கால்நடையினத்தை மேம்படுத்துவதற்காக கலப்பற்ற முறையிலும் கலப்பின முறையிலும் இனவிருத்தி செய்யும் பணி இந்தப் பண்ணைகளில் செய்யப்படுகின்றது. இந்தப் பண்ணைகள் முழுவதுமாகத் தன்னிறைவு வாய்ந்தவையாய்ச் செயல்படும் வகையில் மாற்றுவதற்கு இந்தப் பண்ணைகளில் தற்போதுள்ள ஆதாரங்களை முழுவதுமாகப் பயன் படுத்திக் கொள்வதற்கும் செலவைக் குறைப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பண்ணைகளின் நிர்வாகம் செவ்விய முறையில் நடந்து வருவதற்கான அறிகுறிகள் ஏற்கெனவே காணப்படுகின்றன. ஆனால், மேலும் ஆற்றவேண்டிய பணிகள் பல உள்ளன.





(ஊ) **மும்முரக் கால்நடை மேம்பாட்டுத் திட்டம்.**—செங்கற்பட்டு, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட மூன்று மும்முரக் கால்நடை மேம்பாட்டுத் திட்டங்கள் வரையறுக்கப் பட்டவாறு தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. கால்நடைகள் மேம்பாடு அடைவதற்குச் சில காலம் ஆகும். இக் கால்நடைகள் ஈனும் கன்றுகள் கண்கூடாக மேம்பாடு பெற்றுள்ளனவென்பதைச் சிறிது காலம் கழித்தே நாம் கண்ணுற முடியும். எனினும் இக் கால்நடை யினங்கள் விரைவிலேயே வயதடையும் தன்மையையும் செவ்விய முறை யில் கருவுறும் நிலையையும் நாம் நன்கு கவனிக்கலாம். இத்திட்டத்தின் மூலம் வந்த மேம்பாடுற்ற கால்நடைகளுக்கு மரணம் விளைவிக்கக்கூடிய நோய்கள் பாதிக்காவண்ணம் சிகிச்சையளிக்கப்படுகின்றது. முனைப்பான கால்நடை வளர்ச்சிப் பகுதிகளில், கால்நடை இறப்பு வீதம் பெரிதும் குறைக்கப்பட்டுள்ளது.

முனைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் ஆண்டுதோறும் தரம் உயர்த்தப்பட்ட கன்றுகள் சராசரி 9,900 பிறந்தன என்று மதிப்பிடப்படுகிறது. இந்தப் பகுதிகளில் நல்ல தீனி, தீவன ஆதாரங்கள் இருப்பதால், பல்வேறு பகுதிகளின் நிலைமைகளுக்கேற்ப, முன்பிருந்த பால் உற்பத்தியை விட 10-லிருந்து 30 சதவீதம் வரை பால் உற்பத்தி பெருகியுள்ளது. இப்பகுதிகளில் கால்நடைகளின் நிலை பொதுவாக உயர்ந்துள்ளதால், அவைகளுக்குச் சந்தையில் நல்ல விலைகள் கிடைக்கின்றன.

**கால்நடைகளின் கலப்பினப் பெருக்கம்.**

உள்ளூர் மாடுகளை ஜெர்சி மாடுகளுடன் சேர்த்து கலப்பினப் பெருக்கம் செய்யும் திட்டம் உதகையில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. மையக் கிராமப் பகுதிகளில் செய்யப்படுவது போன்றே தீவன வளர்ச்சிப் பணி களும் ஏனைய வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. கலப் பினப் பெருக்க முறையால் உள்ளூர் மாடுகள் தரத்தில் கண்கூடாக மேம்பாடு அடைந்துள்ளதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. கிடைக் கும் பாலின் சராசரி அளவும் உயர்ந்துள்ளது.

**ஆவினக் காப்பகங்கள் வளர்ச்சி (21 காப்பகங்கள்)**

சில பொது சமய அற நிலையங்களில் கிட்டும் வசதிகளைப் பயன்படுத்தியும், அரசு வழங்கும் ஊக்க மானியங்களையும் உதவித் தொகைகளையும் பெற்றும் ஆதாயமளிக்கும் ஆவினங்களைப் பெருக்குவதற்காக அந்த அறநிலையங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை நெறிப்படுத்தி இரண்டாவது திட்டக் காலத்தில் இந்த வேலைத் திட்டம் தொடங்கப்பட்டது.

நான்கு ஆவினக் காப்பகங்களுடன் இத் திட்டம் தொடங்கப்பட்டது. தற்போது 21 ஆவினக் காப்பகங்கள் உள்ளன. அங்கு தரம் உயர்த்தப்பட்ட 1,014 கால்நடைகள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை சிந்தியின மாடுகளாகும்.

**செம்மறியாடு இனப் பெருக்கம்**

உதகமண்டலத்திலுள்ள செம்மறியாடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தி லும், சின்னசேலம், காட்டுப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள செம்மறி யாட்டுப் பண்ணைகளிலும், கால்நடை ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்துள்ள செம்மறியாட்டுப் பிரிவிலும், ஒசூர் கால்நடைப் பண்ணையிலும், செட்டி நாட்டிலுள்ள இராமநாதபுரம் மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும் செம்மறியாடுகள் மேம்பாடு குறித்த பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. மேற்சொன்ன செம்மறியாட்டுப் பண்ணையிலிருந்து 1967–68-ம் ஆண்டில் 558 செம்மறியாடுகள் வளர்ப்புக்காகவும் 1,062 செம்மறியாடுகள் இறைச்சிக் காகவும் விற்கப்பட்டன. இம் மாநிலத்தில் செம்மறியாடு–கம்பளி வளர்ச்சி நிலையங்கள் 82 செயல்பட்டு வருகின்றன. இதுவரையில் செம்மறியாடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் 16 அமைக்கப்பட்டுள்ளன. கிராமப் பகுதிகளில் செம்மறியாடு–வெள்ளாடு வளர்ப்புப் பணியைப் பற்றி மக்களுக்கு எடுத்து விளக்குவதற்கென, செம்மறியாடு–வெள்ளாடு (கட்புல) விளக்கப் பிரிவுகள் ஏழு செயல்பட்டு வருகின்றன.

அரசு, செம்மறியாடு–கம்பளி வளர்ச்சி நிலையங்கள் செயல்படுவதை ஆய்வு செய்துள்ளது. இவைகளில் பல நிலையங்கள் தக்கமுறையில் செயல்படாத காரணத்தால் இந்நிலையங்களைச் சரிவர பயன்படுத்திக் கொள்ள வழிசெய்யும் வகையில் அரசு நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளது.

## பன்றி வளர்ப்புப் பிரிவு

ஓசூர் கால்நடை ஆராய்ச்சி நிலையத்திலும், காட்டுப்பாக்கத்திலுள்ள செம்மறியாட்டுப் பண்ணையிலும், புதுக்கோட்டை, ஒரத்தநாடு, செட்டிநாடு ஆகிய இடங்களிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளிலும், பன்றி வளர்ப்புப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் நீலகிரி, செங்கற்பட்டு மாவட்டங்கள் தவிர, மற்றெல்லாப் பகுதிகளிலும், 1966–67 வரையில் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் 13 நிறுவப்பட்டன. அலமாதியில் விரைவுத் திட்டத்தின்கீழ் பன்றி வளர்ப்புப் பண்ணை ஒன்று தொடங்கப்பட்டது. மேற்சொன்ன பன்றி வளர்ப்புப் பிரிவுகளிலிருந்து 1967–68-ல் 821 வெளிநாட்டு யார்க்ஷயர் பன்றிகள் இனப்பெருக்கத்திற்காக வழங்கப்பட்டன.

## கோழி இன வளர்ப்பு

இம்மாநிலத்தில் மக்கள் உணவில் பற்றுக்குறையாய் உள்ள புரதச் சத்தை ஈடு செய்யும் பொருட்டு, கோழி இறைச்சியையும், முட்டைகளையும் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை மக்களிடையே உணர்த்தும் பணியை இத்துறை தொடர்ந்து செய்து வருகின்றது. அறிவியல் முறையில் சிறிய அளவில கோழி இனவளர்ப்பு முறை மூலம் வேலைவாய்ப்பு குறைந்துள்ளவர்களுக்கு வேலை கிடைக்கும். மேலும் ஏழை எளியவர்களுக்கு ஓரளவு வருமானம கிடைக்கும். பெரிய அளவிற்கு மூலதனத்தையும் நிலத்தையும் ஆதாயமான தொழிலில் முதலீடு செய்ய வேண்டுமென்ற ஆர்வம் கொண்டுள்ளவர்களுக்கு மும்முர, பெரிய அளவு கோழிப் பண்ணைகள் முழுநேர வேலையளிக்கும். கோழியின மேம்பாட்டுப் பணி சென்னையிலுள்ள கோழியின ஆராய்ச்சி நிலையம், ஓசூர் கால்நடைப் பண்ணையிலுள்ள கோழியினப் பிரிவு, கோழியின வளர்ச்சி நிலையங்கள், கோழியின வளர்ச்சி மும்முர வட்டாரங்கள் ஆகியவற்றின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

இம் மாநிலத்தில் உள்ள கோழியினப் பண்ணைகள், வளர்ச்சி நிலையங்களிலிருந்து 1967–68-ல் 1,38,305 கோழிகள் வளர்ப்பதற்காக விற்கப்பட்டன. குஞ்சு பொரிப்பதற்காக 2,40,571 முட்டைகள் விற்கப்பட்டன. 1,421,384 முட்டைகள் உணவாக உட்கொள்ள விற்கப்பட்டன.

கோழியின வளர்ச்சி நிலையங்கள் செயல்படுவதை அரசு ஆய்வு செய்துள்ளது. இந்த நிலையங்களை மேலும் நல்ல முறையில் பயன்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன.

## முட்டை, கோழி மும்முர உற்பத்தி, விற்பனை நிலையங்கள்

இத்தகைய ஆறு நிலையங்கள் இப்போது செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டுப்பாக்கத்தில் ஒன்றும், சேலம் மாவட்டத்திலுள்ள சேஷன் சாவடியில் ஒன்றும், கோவை மாவட்டத்திலுள்ள அரசூரில் ஒன்றும், மதுரை மாவட்டத்திலுள்ள தருமத்துப்பட்டியில் ஒன்றும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கோட்டப்பட்டியில் ஒன்றும், தஞ்சாவூரில் ஒன்றுமாகச் செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூரில் உள்ள நிலையம் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவரின் நலனுக்காகத் தொடங்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் கோழி வளர்ப்போருக்கு அளிக்கப்படும் கடன்கள் முட்டைகளாகவும், கோழிகளாகவும் வசூலிக்கப்படுகின்றன. அந்தந்த நிலையங்களில் உள்ள விற்பனைப் பிரிவுகளின் மூலம் முட்டைகளும், பக்குவப்படுத்திய கோழிக்கறியும் விற்கப்படுகின்றன.



## மும்முர கோழி வளர்ப்பு வட்டாரங்கள்

ராணிப்பேட்டை, பறங்கிப்பேட்டை, ஓமலூர், கெட்டி, அச்சிறுபாக்கம், கொள்ளல், பொறையாறு, விருதுநகர் ஆகிய இடங்களில் மும்முர கோழி வளர்ப்பு வட்டாரங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் கோழி வளர்ப்போர்களில் 25 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு ரூ. 1,000 கடனுகவும், ரூ. 250 உதவித் தொகையாகவும் பகிர்ந்தளிக்கப்பட்டது. கோழி வளர்ப்போர் 100 கோழிகளை வளர்ப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இக் கோழி வளர்ப்பவர்களைக் கொண்டு கூட்டுறவுச் சங்கம் அமைக்கவேண்டும் என்பதே அரசின் குறிக்கோளாகும். கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொன்றுக்கும ரூ. 10,000 நடைமுதல் மூலதனக் கடன் வழங்கப்படும். கோழிப் பண்ணை வைத்திருப்பவர்களுக்கு கோழித் தீனி வழங்குவதற்கும் தீவனக் கலவை ஏற்பாடு செய்வதற்கும் கோழி வளர்ப்பவர்களால் கொடுக்கப்படும் கோழிகள், முட்டைகள் ஆகியவற்றின் விற்பனைக்கு ஏற்பாடு செய்து கொடுத்தலும் இச் சங்கங்களின் பணிகளாகும். விருதுநகரிலும், பொறையாற்றிலும் கூட்டுறவச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் பல கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொளளப்பட்டு வருகின்றன.

## கூட்டுறவு கோழிப் பண்ணை வளர்ச்சி வட்டாரங்களை நிறுவுதல்

இத் திட்டம் கோழி வளர்ப்பவர்களைக் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ப்பதன் மூலம் கோழிப் பண்ணை வளர்ச்சி வட்டாரங்களை நிறுவ வகை செய்கிறது. கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொன்றிலும் 5,000 கோழிகள் இருக்கும். இச் சங்கங்களில் 75 உறுப்பினர்கள் இருப்பர். முட்டையிடும் கோழிகள் 50 கொண்ட பிரிவுகளாகவும், 25 கொண்ட பிரிவுகளாகவும் ஒவ்வொரு சங்கத்தாலும் பேணி வரப்படும். இன வளர்ச்சிக்கான பறவைகள், தீனி, சாதனங்கள், தொழில் நுட்ப ஆலோசனை, நோய்க் கட்டுப்பாடு, கோழிப் பண்ணைப் பொருள்களுக்கு விற்பனை வசதி முதலிய கோழி வளர்ப்புப் பண்ணைகளின் தேவைகளை இத் திட்டம் நிறைவு செய்கிறது. மூன்றுவது ஆண்டுத் திட்டக் காலத்தில் 8 கோழிப் பண்ணை வளர்ச்சி வட்டாரங்கள் நிறுவப்பட்டன. ஒவ்வொரு வட்டாரத்திலும் 100 கோழிகள் வளர்க்கும் 25 பேருக்கு உதவி வழங்கப்பட்டது. 1966–67-ல் ஈரோட்டில் மும்முர கோழி வளர்ப்புத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

## குஞ்சு பொரிக்கும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், கோழி வளர்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 20 பேருக்கு, ஒவ்வொருவருக்கும் 20 வெள்ளை லெகார்ன் (White Leghorn) கோழிக் குஞ்சுகளை (4 முதல் 8 வார வயதுள்ளவை) வாங்குவதற்காகவும், உணவு, மருந்து முதலிய தொடர்பான செலவுகளுக்காகவும் ரூ. 12,000 கடனுகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட 600 ரூபாய் கடன் தொகை, 25 காசு விலையுள்ள குஞ்சு பொரிக்கும் முட்டைகளாக திருப்பிப் பெறப்பட்டது.

கோழி வளர்ப்பவர்களிலிருந்து 1966–67-ல் 55,363 முட்டைகள் சேகரிக்கப்பட்டிருக்க, 1967–68-ம் ஆண்டில் 42,494 முட்டைகளே சேகரிக்கப்பட்டன. 1967–68-ல் முட்டைகள் குறைவாகச் சேகரிக்கப் பட்டதற்குக் காரணம், கோழி வளர்ப்பவர்கள் தங்கள் கடன்களை முழுவதும் திருப்பிக் கொடுத்ததே ஆகும். 1966–67-ல் கோழி வளர்ப்போரிடமிருந்து ஏற்கனவே ரூ. 10,837 வசூலிக்கப்பட்டுவிட்டது. மீதியுள்ள ரூ. 1,163, 1967–68-ல் வசூலிக்கப்பட்டது.

## கால்நடை மருத்துவக் கல்வி

சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி—கால்நடை மருத்துவக் கல்வியையும், ஆராய்ச்சி வசதியையும் அளிக்கிற நாட்டின் முதன்மையானதொரு நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் பி. வி. எஸ். சி. பட்டப் படிப்பில் தகுதி பெற மாணவர்களுக்கு இக் கல்லூரி பயிற்சியளிக்கிறது. பண்ணைப் பயிற்சி உட்பட

பட்டப் படிப்பின் கால அளவு சுமார் 6 ஆண்டுகள் ஆகும். இந்த வகுப்பில் ஒவ்வொரு ஆண்டும் 136 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர்.

தோல் உரிப்பதில் தவறான முறைகளால் ஏற்படும் இழப்பைத் தவிர்ப்பதற்காக, தோல் உரிப்பைத் தொழிலாகக் கொண்டுள்ளவர்களுக்கு மாட்டுத் தோல், ஆட்டுத் தோல் உரிப்பதில் சரியான முறைகளில் பயிற்சியளிப்பதற்காக 3 மாத காலப் பயிற்சி வகுப்பு ஒன்று இந்தக் கல்லூரியில் நடத்தப்படுகிறது.

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் பல்வேறு துறைகளில் எம். வி. எஸ். சி.; பி. எச். டி. பட்டங்கள் பெற பட்ட மேற்படிப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. தமிழ் நாட்டிலிருந்து 48 மாணவர்களும், மற்ற மாநிலங்களிலிருந்து 36 மாணவர்களும் ஆக மொத்தம் 84 மாணவர்கள் இப்பயிற்சி வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். உலகச் சுகாதார நிறுவனத்திலிருந்து சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு வருகை தந்த ஒரு நிபுணர், இக் கல்லூரி சிறப்பு மிக்க கல்லூரிகளில் ஒன்று என்று கருத்து தெரிவித்துள்ளார்.

ஆராய்ச்சியின் முடிவுகள், உழவர்கள் செய்முறையில் மேற்கொள்வதற்காக அவர்களுக்குப் புகட்டப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். பட்டதாரிகள பட்டம் பெற்ற பிறகு தொழிலில் ஈடுபடும்பொழுது திறமையுள்ளவர்களாகச் செயல்படும் வகையில் கால்நடை மருத்துவத்தில் உள்ள நவீன முறைகளைப் பற்றிய கல்வியறிவும், பயிற்சியும் அளிப்பதற்காகத் தொழில் வளர்ச்சித் துறை ஒன்று, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நிறுவப்பட்டுள்ளது.

## கால்நடை நோய்த் தடுப்பு நிலையம், இராணிப்பேட்டை

இந் நிலையம் 1932-ல் நிறுவப்பட்டது ஆடு மாடுகளுக்கும், கோழி இனங்களுக்கும் ஏற்படும் தொத்து நோய்களை எதிர்த்துப் போராடுவதற்காக, உயிரியல் மருந்துகளைத் தயாரிக்கிறது. இம் மாநிலத்தின் உயிரியல் மருந்துத் தேவைகளை நிறைவு செய்வதோடு மட்டும் அல்லாமல் இந்தியாவிலுள்ள ஏனைய மாநிலங்களின் தேவைகளையும் நிறைவு செய்கிறது. இந் நிறுவனத்தின் பணிகள் இட்போது கணிசமான அளவு பெருகி உள்ளன. புது முறையில் அம்மைப் பால் தயாரிக்கும் பொருட்டு நவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இந் நிலையத்தில், அம்மைப் பால் அனைத்தும் உறைந்து உலர்ந்த நிலையிலேயே தயாரிக்கப்பட்டு வழங்கப் படுகின்றன. நோய்த் தடுப்புத் திறனைப் பற்றி ஆராய்ச்சி, பலவகை அம்மைப் பால்களைக் கலந்து சோதித்துப் பார்ப்பது போன்ற ஆராய்ச்சிகள் இந் நிலையத்தில் நடந்து வருகின்றன. கால்நடை, செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், கோழிகள் ஆகியவற்றின் நோய்களைக் கண்டறியும் நோய் ஆய்வுப்பணியாளர்கள், ஆய்வுக்கூடப் பணியாளர்களுடனும், நேரடிப் பணியாளர்களுடனும் இணைந்து செயல்படுகின்றனர்.

## ஆராய்ச்சி

கால்நடை மருத்துவக் கல்லூரியில் கால்நடை மருத்துவவியலின் பல்வகை நிலைகள் குறித்த ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. கோழிகளின் மூச்சுக் குழாயை சம்பந்தமான நோய்களை ஆய்வு செய்வதற்காக ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை ரூ 3 லட்சம் செலவில் மேற்கொள்ள அரசினால் ஒப்பளிக்கப்பட்டது. சுமார் ரூ. 15 லட்சம் செலவாகிற பல ஆராய்ச்சித் திட்டங்கள் அரசின் ஆலோசனையிலும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவின் ஆலோசனையிலும் இருக்கின்றன.

உயிரியல் மருந்துகள் தயாரிப்பு, அவற்றின் பாதுகாப்புத் திறன் ஆகியவை குறித்த ஆராய்ச்சி, இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையத்தில் நடத்தப்படுகின்றது. மிகு பயன் தரும் வெள்ளை லெகார்ன் கோழிகளில் அதிக முட்டையிடும் கோழி



யினம் ஒன்றை மேம்படுத்துவது குறித்த ஆராய்ச்சி நடந்தேறி வருகிறது. இந்த வகைக் கோழிகள் கோழி வளர்ப்பவர்களுக்கு விரைவில் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேளாண்மைத் துணை விளை பொருள்களில் தேவையற்ற பொருள்களைக் கொண்டு ஆடு மாடுகளுக்கும், கோழிகளுக்கும் வகை வாரியான தீனி தயாரிப்பது பற்றி ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட தீனி வகைகளில் சில செயல்படுத்தப்படும் நிலையிலுள்ளன.

கால்நடை அறுவை மருத்துவ முறைகள், கன்று ஈனுதல் குறித்த மருத்துவத்திலும் உள்ள புதுத் தொழில் நுட்பங்கள் மேம்படுத்தப்பட்டு வெற்றிகரமாகக் கையாளப்பட்டு வருகின்றன.

பெருச்சாளி மூலமாக விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் வெறி நோய் எந்த அளவிற்குப் பரவுகின்றது என்பது பற்றி ஆராயப்பட்டு வருகிறது. ஆடுகள் வளர்க்கும் குடியானவர்களுக்கும் தோல் தொழிலுக்கும் பெருமளவு இழப்பை உண்டாக்குகிற ஆட்டு அம்மை நோயைத் தடுப்பதற்காக P. L. 480 மானியத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆராய்ச்சி மும்முரமாக நடந்து வருகின்றது.

## கால்நடை மருத்துவ நிலையங்கள்

இம் மாநிலத்தில் 434 கால்நடை மருத்துவ நிலையங்கள் உள்ளன. இவற்றில் 36 கால்நடை மருத்துவ மனைகளும், 341 கால்நடை மருந்தகங்களும், 42 கால்நடை சிறு மருந்தகங்களும், 15 சுற்றி இயங்கும் மருத்துவப் பிரிவுகளும் உள்ளன. இவை தவிர, முதலுதவி நிலையங்களும் ஏராளமாக உள்ளன. நோயுற்ற கால்நடைகளுககு இந்த நிலையங்களில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இல்லையேல் இது கால்நடை உரிமையாளர்களுக்குப் பெரிய பொருளாதார இழப்பை உண்டாக்கும். மேலும் இவற்றில் கால்நடை வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப் படுகின்றன. சுற்றி இயங்கும் மருத்துவப் பிரிவுகள் அந்தந்தப் பகுதிகளில் தொத்து நோய்களைத் தடுப்பதற்காகவே பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன. கால்நடைச் சிறு மருந்தகங்களில் பொறுப்பு வகிக்கும் கால்நடை மருத்துவர்கள் தொத்து நோய் பற்றிய அறிக்கை கிடைத்தவுடன் அவ்விடங்களுக்கும் கொள்ளை நோய் பரவியுள்ள பகுதிகளுக்கும் சென்று அப் பகுதிகளில் நோய் தடுப்பு பணியையும் மேற்கொள்ளுகின்றனர்.

மேற்கண்ட கால்நடை மருத்துவ மனைகளிலும் மருந்தகங்களிலும், 4,869 கால்நடைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டு மருத்துவ உதவி அளிக்கப்பட்டன. 11,04,339 கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. 1,17,048 கால்நடைகள் காயடிக்கப்பட்டன. ஊர் ஊராகச் சுற்றி இயங்கி வரும் பணியாளர்கள் 1967–68-ம் ஆண்டில் 1,04,981 நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தனர். 1,24,344 கால்நடைகள் காயடிக்கப்பட்டன. 1967–68-ம் ஆண்டில், மாடு, கோழி ஆகியவற்றின் தொத்து நோய்களுக்காக 19,82,233 ஊசிகள் போடப்பட்டன.

## 1966–67-லிருந்து 1998–69 வரையான ஆண்டுத் திட்டம்

1966–67, 1967–68, 1968–1969 ஆண்டுத் திட்டக் காலங்களில் பத்து புது மையக்கிராம வட்டாரங்கள் நிறுவப்பட்டன. கன்று வளர்ப்பு உதவித் திட்டத்தின்கீழ் 1,000 கன்றுகள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. ஆவினக் காப்பகங்கள் இரண்டு நிறுவப்பட்டன. கோழி வளர்ப்பு வளர்ச்சி நிலையங்கள் ஏழு புதிதாக நிறுவப்பட்டன. ஏற்கனவே செயல்பட்டு வந்த கோழியின் வளர்ச்சி நிலையங்கள் பத்து விரிவுபடுத்தப்பட்டன. கோழிக் குஞ்சு வளர்ப்புத் திட்டம் ஒன்று ஓசூரில் செயல்படுத்தப்பட்டது. கோழி விற்பனை நிலையம் ஒன்று தஞ்சாவூரில் தொடங்கப்பட்டது. கோழி வளர்ப்புக் கூட்டுறவு வளர்ச்சி வட்டாரமொன்று ஈரோடு வட்டத்தில் நிறுவப்பட்டது. கோழி வளர்ப்பு பணியில் 180 குடியானவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. கோழி வளர்ப்புப் பெட்டிகள் மேம்பாட்டிற்காக 600 பேருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. செம்மறியாடு—கம்பளி

வளர்ச்சிப் பணி நிலையங்கள் பத்து நிறுவப்பட்டன. 75 கால்நடை மருந் தகங்கள் நிறுவுவதற்கு ஒப்பளிக்கப்பட்டது. 1968-69-ல் பெருமளவில் ஊசி குத்தும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டது. இவை தவிர, மூன்றாவது திட்டத்தில் நிறைவேற்றப்படாது, எஞ்சிய வேலைத் திட்டங்களும் இவ்வாண்டுகளில் நிறைவேற்றி முடிக்கப்பட்டன.

## நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பணிகளை நிலைப்படுத்துதலும், அவற்றை மேலும் விரிவுபடுத்துவதும் நான்காம் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளா யிருக்கும். பயன்படுத்தப்பட்ட தொகை, நிதி வாயில்கள், பணியாளர் இவற்றிற்கேற்ப பயன்பெறுவதும், அதன்மூலம் பால், இறைச்சி, முட்டை போன்ற உணவுப் பொருள்களை பெரிய அளவில் கிடைக்கச் செய்வதுமே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங் களாயிருக்கும். விஞ்ஞான ஆராய்ச்சி, கல்வி ஆகியவற்றை மேலும் மேம்படுத்துவதும், ஆதாயம் தரும் வகையில் கால்நடை வளர்ப்பு முறைகளை மேம்படுத்துவதற்காக புதிய முறைகளைப் பயன்படுத்துவதும் இத் திட்டத்தின் நோக்கங்களாகும்.

இப்போது தீட்டப்பட்டுள்ள நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1969-70-ம் ஆண்டிற்கான மூலதனம் ரூ. 58·34 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலடங்கியுள்ள திட்டங்களாவன :—

1. பால் உற்பத்தி பெருகியுள்ள பகுதிகளில் இரண்டு மையக் கிராம வட்டாரங்களை நிறுவுதல் ;

2. தற்போதய கால்நடை வளர்ப்பு மும்முரத் திட்டப் பகுதிகள் மூன்றினை வலுப்படுத்துதல் ;

3. புது ஆவின காப்பகங்கள் இரண்டினை நிறுவுதல் ;

4. திறன் வாய்ந்த பொலிகாளைகளிடமிருந்து கிடைக்கும் உறைந்த விந்தைப் பயன்படுத்துவதற்காக உறைந்த விந்து ஆய்வுக்கூடத்தை நிறுவுதல்;

5. கூடுதல் வசதிகளை அளிப்பதன் மூலம் தற்போதைய கால்நடைப் பண்ணைகளை விரிவுபடுத்துதல்;

6. கால்நடை வளர்ப்பு மும்முர வேலைத் திட்டப்பகுதிகளிலும், மையக்கிராமப் பகுதிகளிலும் கால்நடைகளுக்கு அளிக்கப்படும் தீவனா தீனி இவற்றை மேம்பாடு செய்தல்;

7. தற்போதுள்ள கோழியினப் பண்ணை வளர்ச்சி நிலையங்களை விரிவு படுத்துதல்;

8. 1,000 புறக்கடைக் கோழிப் பண்ணைப் பிரிவுகளைத் தொடங்குதல்;

9. கால்நடை மருந்தகங்கள் 35-ஐ துவக்குதல்.

மேற்கண்ட திட்டங்களைத் தவிர, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் கல்வி ஆராய்ச்சிப் பணிகளை விரிவாக்குவதற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 5·88 லட்சம் சேர்க்கப்பட்டுள்ளது. இது புதுத்துறைகளின் மேம்பாட்டிற்காகவும், பட்ட மேற்படிப்புக்கான புதுப்பாட முறைகளை அளிப்பதற்காகவும் பயன்படுத்தப்படும்.

வேளாண்மைச் சமுதாயத்தின் தேவைகளுக்கும், வளர்ச்சிப் பணி களின் விரிவான தேவைகளுக்கும் ஏற்ப கால்நடை வளர்ப்புத் துறையின் அமைப்பு அமைந்துள்ளதா என்று மதிப்பிடுவதற்கு அரசு, கால் நடை வளர்ப்புத் துறையின் நிர்வாக அமைப்பினை நாட்டமுடன் ஆராய்ந் துள்ளது. துறையின் நிர்வாக அமைப்பினைத் தக்கவாறு மாற்றுவதற் கான கணிசமாக வாய்ப்பு இருப்பதாக அரசு கருதுகிறது. இது பற்றி அரசு கவனமாக ஆராய்ந்து வருகின்றது. மக்களுக்குப் பணியாற்றும் இந்தத் தொண்டு புரியும் நிறுவனமாகச் செயல்படும் வகையில் துறையை மாற்றியமைப்பதற்கு விரைவில் முடிவு எடுக்கப்படும்.



தென்னாட்டில் எருமைகளுக்காக, மத்திய இன வளர்ச்சிப் பண்ணை ஒன்றை அமைப்பதற்கான இந்திய அரசின் செயற்குறிப்பை பயன்படுத்திக் கொண்டு, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள அலமாதியில் இப்பண்ணையை அமைக்க வேண்டும் என அரசு, மத்திய உணவு—வேளாண்மை அமைச்சரை வற்புறுத்தியுள்ளது. அலமாதியில் இப்பண்ணையை நிறுவு வதற்கு இந்திய அரசு விரைவில் ஒப்பளிப்பு வழங்கும் என்று அரசு நம்புகிறது.

வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத்தின் மூலம் கிடைக்கும் கடன் உதவியை பயன்படுத்திக் கொள்ளும் நோக்குடன், ரூ. 13·78 லட்சம் செலவில் கோழி இன வளர்ச்சிக்கான திட்டங்கள் இரண்டும், ரூ. 6,08,000 செலவில் செம்மறியாடு வளர்ச்சிக்கான திட்டங்கள் ஐந்தும் வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத்தின் ஒப்பளிப்பிற்காக அரசினால் பரிந்துரைக்கப் பட்டுள்ளன. மறு கடன் உதவியை பயன்படுத்திக் கொள்ளும் பல திட்டங்கள் வகுக்கப்பட்டும் தயாரிப்பிலும் ஆய்விலும் உள்ளன.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலும் வடஆர்க்காடு மாவட்டத்திலும் கால் நடை வளர்ப்புப் பணியும் கால்நடை மருத்துவப் பணியும் பெருமள விற்கு அதிகரித்துவிட்டதன் காரணமாக, இந்த இரு மாவடடங்களிலும் உள்ள கால்நடை மருத்துவப் பொறுப்புகளை இரு கூறுக்கி ஒவ்வொரு மாவட்டத்திலும் தற்போதுள்ள மாவட்டக் கால்நடை மருத்துவ அதிகாரி ஒருவருக்குப் பதிலாக இரண்டு அதிகாரிகளை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது.

# இணைப்பு 4.

## தமிழ் நாடு சின்கோனத் துறை குறிப்பு.

---

### " அ " பிரிவு

### தற்போதைய நிலை

### 1. முகவுரை

. தமிழ்நாடு சின்கோனத் துறை கடந்த நூறு ஆண்டுகளாகத் தமிழ்நாடு அரசின் ஒரு வணிக நிறுவனமாக இயங்கி வருகிறது. நீலகிரி மாவட்டத் திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆனைமலைப் பகுதி களிலும் இந்தத்துறை சின்கோனு, பிற மூலிகைச் செடிகள், மணம் கமழ் செடிகள், தைலச் செடிகள் முதலியவற்றைப் பயிரிடுகிறது. கொயினு உற்பத்திக்காக ஆனைமலைப் பகுதியில் இத் துறையைச் சேர்ந்த தொழிற் சாலை ஒன்று இருக்கிறது. யூகலிப்டஸ், ஜெரேனியம் போன்ற தைலங் களையும் மருந்து எண்ணெய்களையும் உற்பத்தி செய்து விற்பனைக்கு வேண்டிய அளவிற்குத் தூய்மையாக்கும் பணியில் நீலகிரியில் நடு வட்டத் தில் உள்ள தொழிற்சாலை ஈடுபட்டுள்ளது.

### 2. இத் துறையின் அலுவல்கள்

சின்கோனு பயிரிடுவதிலும், சின்கோனு மரப்பட்டையைப் பதனப்படுத்தி பல்வேறு கொய்னுப் பொருட்களைத் தயாரித்தலும், தயாரிக்கப்பட்ட பொருள்களை அயல் நாட்டிலும், நம் நாட்டிலும் விற்பனை செய்தலும் இத் துறையின் தலையாய பணிகளாகும். இதன் மூலம் வருவாயை உயர்த்தவும் குறிப்பிட்ட மருந்து, மற்றும் நறுமணப் பொருள் எண்ணெய் களுக்கு நம் நாட்டில் ஏற்பட்டுள்ள பெருமளவுத் தேவையை ஈடு செய்யவும் இந்தத் துறை பல வகையான மருந்து மற்றும மணங்கமழ்ச் செடிகளையும பயிரிடுகின்றது. அவற்றைப் பதனப்படுத்தி உற்பத்தி செய்த பொருள்களை நேரிடையாகவும் விற்பனை செய்கின்றது.

மலேரியா மற்றும் சாதாரணக் காய்ச்சல்களைத் தீர்க்கப் பயன்படுத்தப் படுவது கொயினு என்பது எல்லோரும் நன்கு அறிந்ததே. சின்கோனு மரப்பட்டையிலிருந்து இது கிடைக்கிறது. தென் அமெரிக்காவில் உள்ள

அதன் தாயகத்திலிருந்து இம் மரம் 1859-60-ம் ஆண்டு இந்தியாவிற்கு முதன் முறையாக கொண்டு வரப்பட்டது. தென்னிந்தியாவில் கடல் மட்டத்திற்கு மேல் 3,000 அடி உயரமுள்ள இடங்களில்தான் சின்கோனு மரம் நன்ருக வளருகிறது.

தேயிலை, காப்பி, ரப்பர் முதலியவற்றைப்போல் இதைப் பயிரிடுவதால் பெரும் ஆதாயம் கிட்டாததால் சின்கோனுப் பயிர் தனிப்பட்ட முதலாளி களின் ஆர்வத்தைத் தூண்டவில்லை. எனவே, இந்தியாவின் கொயினுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தமிழ்நாடு அரசாங்கமே இதனைப் பயிரிடும் பணியை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. இந்தியாவில் கொயினு தயாரிக்கும் மற்றெரு மாநிலம் மேற்குவங்காளம் ஒன்றுதான்.

## 3. பல்வகைப் பயிர்கள் பயிராகும் பரப்பளவு

1968-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி அன்று உள்ளபடி இத் துறையின் தோட்டங்களிலே பல வகையான பயிர்கள் பயிரிடப்படும் பரப்பளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| தொடர் எண். | பயிர்களின் பெயர்கள். | | ஏக்கர். | | |
|---|---|---|---|---|---|
| | | | நீலகிரி. | ஆனைமலை. | மொத்தம். |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| 1 | சின்கோனு. | | | | |
| | (ஹெக்டேர்) | .. | 443·62 | 1,898·70 | 2,342·32 |
| | (ஏக்கர்) | .. | (1,096·21) | (4,691·79) | (5,788·00) |
| | மருந்து மற்றும் வாசனை தைலச் செடிகள். | | | | |
| | (ஹெக்டேர்) | .. | 220·96 | 112·39 | 333·35 |
| | (ஏக்கர்) | .. | (546·00) | (277·00) | (823·00) |

## 4. தொழிற்சாலைகள்

### அ. ஆனைமலையிலுள்ள அரசாங்க கொய்னு தொழிற்சாலை

சின்கோனு மரப்பட்டையிலிருந்து கொய்னுவும், காய்ச்சல் தணிக்கும் சின்கோனு மருந்தும் (Cinchona fefrifuge) உற்பத்தி செய்கிற தொழிற் சாலை ஒன்று ஆனைமலையில் அமைக்கப்பட்டுள்ளது. அது 16,000 கிலோ கிராம் கொய்னு சல்பேட்டும் (Quinine sulphate) 12,000 கிலோ கிராம் சின்கோனு மருந்தும் சாதாரணமாக உற்பத்தி செய்யத்தக்க திறன் கொண்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த ஆலையின் உற்பத்திக் கணக்கு பின்வருமாறு :—

| | 1966-67. | 1967-68. | 1968-69. (மதிப்பிடப்பட்டது.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| கொய்னு சல்பேட் (கிலோ கிராம்.) | 20,004 | 18,937 | 16,000 |
| சின்கோனு மருந்து (கிலோ கிராம்.) | 18,198 | 22,211 | 13,000 |
| கொய்னு ஹைட்ரோ குளோரைடு. | 71,600 | 2,521 | 12,000 |

குறிப்பு.—கொய்னு ஹைட்ரோ குளோரைடு உற்பத்தி செய்வதற்கு அடிப்படைப் பொருளான கொய்னு சல்பேட்டிலிருந்து கொய்னு ஹைட்ரோ குளோரைடு இந்த ஆலையில் உற்பத்தி செய்யப்படுகிறது.

அயல்நாட்டுத் தேவையைக் கருதி மேற்குறிப்பிட்டுள்ள ஆண்டுகளில் இந்தத் தொழிற்சாலையின் உற்பத்தி சிறப்பாக அதிகரிக்கப்பட்டது.





### ஆ. நடுவட்டத்திலுள்ள மருந்து மற்றும் தைலத் தயாரிப்புத் தொழிற்சாலை

இந்தத் துறையின் தோட்டங்களில் விளைகிற தாவரங்களிலிருந்து உண்டாக்கப்படும், மருந்து மற்றும் தைலங்களைத் தூய் மையாக்கி, தரமடையச் செய்து, சிப்பங்கட்டும் பணி வரையில் உள்ள வேலைகளை இந்த ஆலை மேற் கொண்டுள்ளது. தரத்தை உயர்த்தவும் தைலங்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்குமான ஆராய்ச்சிகளையும் இந்த ஆலை மேற்கொண்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இவ்விதமாகத் தூய்மையாக்கி தரப்படுத்தப் பட்டு, சிப்பங்கட்டி முடித்த எண்ணெய்களின் மதிப்பு கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

| | | ரூ. |
|---|---|---|
| 1966—67 | .. | 4,10,507 |
| 1967—68 | .. | 4,89,000 |
| 1968—69 | .. | 5,24,400 |
| | | (மதிப்பிடப்பட்டது.) |

## 5. சின்கோனுத் துறை செய்த விற்பனைகளும், அவற்றின் மூலம் கிடைத்த வருமானமும்

### 1. கொய்னுப் பொருள்களின் விற்பனை

கடந்த 1964-ம் ஆண்டிலிருந்தே அயல்நாடுகளில் கொயினுப் பொருள் களுக்கு மிகுந்த தேவை ஏற்பட்டு வந்துள்ளது. அவற்றின் விலைகளும் கணிசமான அளவு உயர்ந்துவிட்டன. ஆனால் 1967-68-ல் விலைகள் சிறிதளவு குறைந்தன. மறுபடியும் விலை அளவு உயர்ந்து கொண்டு வருகிறது. இவற்றின் தேவையும் அதிகரித்து வருகிறது.

உலகம் முழுவதும் கொய்னுப் பொருள்கள் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே, விலை மேலும் உயர்வதற்கு வாய்ப்புகள் உள்ளன. சின்கோனுத் துறை தயாரிக்கும் பொருள்கள் தரத்திலும், கலப்பற்ற தன்மை யிலும் உலகச் சந்தையில் நல்ல புகழ் பெற்றுள்ளன.

ஏற்றுமதி செய்ததன் காரணமாகவும், இந்தியாவிற்குள்ளேயே விற்பனை செய்ததன் காரணமாகவும், கடந்த மூன்றுண்டுகளில் கிடைத்த வருவாய் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | | ஏற்றுமதி. | உள்நாட்டு விற்பனை. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1966—67 | .. | 57,29,438 | 10,43,304 | 67,72,742 |
| 1967—68 | .. | 26,55,500 | 7,61,043 | 34,16,543 |
| 1968—69 | .. | 45,00,000 | 6,52,400 | 51,52,400 |
| | | (மதிப்பிடப்பட்டது) | | |

### 2. மருந்து மற்றும் தைல விற்பனை

கடந்த மூன்றுண்டுகளாக, மருந்து எண்ணெய்கள், தைலங்களின் விற்பனை வாயிலாகக் கிடைத்த வருவாய் பின்வருமாறு :—

| ஆண்டு | | | விற்பனை மதிப்பு |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 1966—67 | .. | .. | 4,10,507 |
| 1967—68 | .. | .. | 4,89,000 |
| 1968—69 | (மதிப்பிடப்பட்டது.) | | 5,24,400 |

## 6. மருந்து மற்றும் தைலச் செடிகளைக் குறித்த ஆராய்ச்சி

மருந்துச் செடிகள் மற்றும் தைலச் செடிகளைப் பயிரிடுதலும், அவற்றைப் பதனப்படுத்துதலையும் தவிர இச் செடிகளைப்பயிரிடும் முறையை மேம்படுத்தவும், அவற்றினின்று மருந்து வகைகளையும், தைல வகைகளையும் உற்பத்தி செய்யும் வகைகளைச் செம்மைபடுத்துவதற்குமான ஆராய்ச்சிகளையும் இத் துறை மேற்கொண்டுள்ளது. இத்துறையிலே, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவினரின் நிதி உதவியைக் கொண்டு மருந்துச் செடிகளுக்கு உரித்தான ஓர் ஆராய்ச்சித் திட்டம் செயல்பட்டு வருகிறது.

## 7. இத் துறையின் நிதி அமைப்பு

1968-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாளிலுள்ளபடி இத் துறையின் மொத்த உடைமைகளின் மதிப்பு ரூ. 3,10,00,142. பொதுவாக அவ்வுடைமைகள் பற்றிய தனித் தனித் தலைப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

**இயங்கா உடைமைகள் :**

| | | ரூ. |
|---|---|---|
| 1. | சின்கோனத் தோட்டங்கள் .. .. | 1,06,11,947 |
| 2. | விறகு, மருந்து மற்றும் தைலச் செடிகளுள்ள தோட்டங்கள் .. .. .. | 8,65,430 |
| 3. | கட்டிடங்கள், சாலைகள், பாலங்கள், தொழிற்சாலைகள், இயந்திரங்கள், மோட்டார் வண்டிகள் முதலியன போன்ற மற்ற உடைமைகள் .. .. .. .. | 53,48,189 |
| 4. | சரக்குகள், முற்றுப்பெற்ற உற்பத்திப் பொருள்கள் போன்ற விவரம் தரப்படாத உடைமைகள் .. .. .. | 1,41,74,576 |
| | மொத்தம் .. | 3,10,00,142 |

## 8. சின்கோனத் துறை ஈட்டிய ஆதாயம்

1966-67-ம் ஆண்டில் இத் துறை ரூ. 23,99,910 ஆதாயம் ஈட்டியது. 1967-68-ல் 6,14,852 ரூபாய் ஆதாயம் ஈட்டியது. 1968-69-ம் ஆண்டு ரூ. 10,00,009 ஆதாயத்துடன் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 9. ஏற்றுமதியைப் பெருக்க இத் துறையின் முயற்சிகள்

1964-ம் ஆண்டில் அயல் நாடுகளுக்கு கொயினா ஏற்றுமதியாகும் அளவு கதுமென உயர்ந்தபொழுது, இத்துறை தன்னகத்தேயுள்ள எல்லா ஆதாரங்களையும் முனைப்பாகப் பயன்படுத்தித் தேவையை நிறைவேற்ற முற்பட்டது. அதற்காக சின்கோனாப் பட்டையைப் பெருமளவில் வெட்டி எடுப்பதற்காக ஒப்பந்த முறைகளையும் பணியாளர்களுக்குத் தூண்டுகோல் அளிக்கும் முறைகளையும் செயல்படுத்தியது. மேலும், உர்பத்தியைப் பெருக்குவதற்காகவும், கொய்னாப் பொருட்களின் தரத்தை உயர்த்தவும், பட்டையைப் பதனப்படுத்துவதற்காகவும், காலஅளவைக் குறைப்பதற்காகவும், தொழிற்சாலையில் கூடுதலான கருவிகளும் யந்திரங்களும் நிறுவப்பட்டன. அயல் நாடுகளில் கொய்னா சல்பேட்டைவிட, கொய்னா ஹைடிரோகுளோரைடையே பெரிதும் விரும்பிக் கேட்பதாகத் தெரிந்தது. சிறப்பான முயற்சிகள் எடுத்ததன் வாயிலாக



1966-67-ம் ஆண்டிலும், 1967-68-ம் ஆண்டிலும். 1968-69-ம் ஆண்டிலும் கீழே குறிக்கப்பட்டுள்ள அளவுகளில் கொய்னா ஹைடிரோகுளோரைடு தயாரிக்கப்பட்டது :—

| | | |
|---|---|---|
| | | கிலோ கிராம் |
| 1966-67 | .. .. | 7,160 |
| 1967-68 | .. .. | 2,521 |
| 1968-69 | .. .. | 12,000 |
| | | (மதிப்பிடப்பட்டது) |

## "ஆ" பிரிவு

### இத் துறையின் பொதுவான முன்னேற்றத் திட்டங்கள்

1. மேலும் பல ஆண்டுகளுக்கு இத் துறையினரால் தயாரிக்கப்படும் கொய்னா பொருட்களுக்குத் தொடர்ச்சியாகத் தேவை இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது நிலவிவரும் ஆதாய விலைகள் தொடர்ந்து நீடிக்கும் என்றும் கருதப்படுகிறது. கொய்னா உற்பத்தியை நாட்டில் அதிகரிக்கும் வழிகளை ஆராயவேண்டி இந்திய அரசினால் தொழில்நுட்பச் சிறப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகத் துறைகளிலே கொய்னாத் தயாரிப்புகளுக்கு ஏற்பட்டுள்ள செல்வாக்கான நிலைமையைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு தனது சின்கோனத் தோட்டங்களை மேம்பாடு செய்ய வேண்டுமென்றும், சின்கோனா பயிரிடும் பரப்பைப் பெருக்க வேண்டும் என்றும் மேற்கூறிய சிறப்புக் குழு பரிந்துரைத்துள்ளது. மலேரியா நுண்ணுயிர்கள், மலேரியா நோய் நீக்கும் பற்பல செயற்கை மருந்துகளை எதிர்த்து முற்பட்டுள்ளதால் அம்மருந்துகள் பயனற்றுப்போவதால் பின் ஒரு காலத்தில் நாட்டில் மலேரியா நோய் பரவலாகவும், கடுமையாகவும் ஏற்படுமானால் அதைக் கட்டுப்படுத்த கொய்னாப் பொருள்களின் உற்பத்தியைப் பேணிவரவேண்டுமென 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ம் தேதியில் டில்லியில் நடைபெற்ற கொய்னா மாநாட்டில் இந்திய அரசு வலியுறுத்திற்று.

2. சின்கோனா பயிரிடும் பரப்பளவு 2,630 ஹெக்டேராக (6,500 ஏக்கர்) விரிவுபடுத்த வேண்டும் என்று மாநில அரசு ஆணையிட்டுள்ளது. 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ந் தேதி அன்று உள்ளபடி, சின்கோனா பயிரிடப்படும் பரப்பளவு 2,342·32 ஹெக்டேராகும் (5,788 ஏக்கர்). அதை 6,500 ஏக்கர் அளவிற்கு விரைவிலேயே உயர்த்தும் நோக்கத்துடன் திட்டமிடப்பட்டு புதிதாக பயிரிடும் திட்டம் விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

3. மருந்து எண்ணெய்கள், தைலங்களின் உற்பத்தி வாயிலாக இத் துறைக்கு நிறைந்த ஆதாயம் கிடைக்கிறது. இத்தகைய எண்ணெய்களுக்கான விற்பனை வாய்ப்புக்களும் அதிகரித்து வருகின்றன. இந்தப் பயிர்கள் விளையும் பரப்பளவும் பெருக்கப்பட்டு வருகின்றது.

4. சின்கோனா தவிர ஏனைய மருந்துச் செடிகள் மற்றும் நறுமணப் பொருள்களைத் தரும் பயிர்களின் வளர்ச்சிக்கான நுண்ணிய ஆராய்ச்சித் திட்டமொன்று நிறைவேறி வருகிறது. உள்நாட்டில் மிகுந்த தேவை உள்ளவையும், அயல் நாட்டுச் செலாவணியை ஈட்டும் வகையிலும் உள்ள பொருட்கள் இத் திட்டத்தில் அடங்கியுள்ளன.

5. யூகலிப்டஸ் சிட்டியோடரா (Eucalyptus Cituodara) என்ற நறுமணங்கமழ் பயிர் நம் நாட்டின் வணிக வட்டாரங்களில் மேம்பாடு அடைந்துள்ளது. இதற்காக ஆராய்ச்சித் திட்டமொன்று இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மேற் குறிப்பிட்ட குழுவின் தொழில் நுட்ப ஒப்புதல் கிடைத்துள்ளது. செயலாற்றுவதற்கான [illegible] [illegible] அளிக்கப்படும்.

## "இ" பிரிவு

### 1969-70-ம் ஆண்டிற்கான திட்டம்

#### A. பொது

1. சின்கோனா உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு வழி செய்யும் வகையில் 100 ஹெக்டேரிலுள்ள (245 ஏக்கர்) சிதைந்த செடிகளை அகற்றி அவ்விடங்களில் புதிய செடிகளை நடுதல்.

2. தெரிந்தெடுக்கப்பட்ட பலவகை சின்கோனா செடிகளை 90 ஹெக்டேர் (222 ஏக்கர்) பரப்பளவில் பயிரிடுதல்.

3. கொய்னாச் செடிகளின் வளர்ச்சியை தூண்டவல்ல நுணுக்கமான செயல்முறைகளை 100 ஹெக்டேரில் (245 ஏக்கரில்) கையாளுதல்.

4. மேம்பாடான சின்கோனா விதைகள் அல்லது கொய்னா அதிகமாய் தரக்கூடிய சின்கோனா விதைகள் தொடர்ந்து உற்பத்தி செய்யப்படும். சின்கோனா விளையும் பரப்பளவை விரிவுபடுத்தும் திட்டத்திற்காக மேம்பாடான இவ்விதைகளைக் கொண்டும் மேலும் பல லட்சத்திற்கும் மேற்பட்ட சின்கோனா செடிகள் வளர்க்கப்படும்.

5. தரிசு நிலங்கள் எல்லாவற்றிலும் தழை உரப் பயிர்களை விளைவித்து மண்வளத்தைப் பெருக்கி அவற்றில் பொருளீட்டும் மருத்துவ, தைலச் செடிகள் பயிரிடும் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

6. இந்த ஆண்டில் கூடுதலாக 80 ஹெக்டேர் பரப்பளவில் மருந்துச் செடிகளையும், தைலச் செடிகளையும் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

7. 16,000 கிலோகிராம் கொய்னா சல்பேட்டும், 13,000 கிலோகிராம் சின்கோனா மருந்தும் நடப்பாண்டில் உற்பத்தி செய்யப்படும். வெளிநாட்டுத் தேவையை ஈடு செய்வதற்காக 7,500 கிலோகிராம் கொய்னா ஹைடிரோ குளோரைடும் உற்பத்தி செய்யப்படும்.

8. கீழ்க்கண்ட அளவில் மருந்து மற்றும் தைல எண்ணெய்கள் உற்பத்தி செய்யப்படும்; அதன் மொத்த மதிப்பு சுமார் ரூ. 5,16,000 ஆக இருக்கும் :—

| | | (கிலோகிராம்) |
|---|---|---|
| (1) | ஜெரோனியம் எண்ணெய் .. .. | 900 |
| (2) | யூகலிப்டஸ் சிட்ரியோடரா எண்ணெய் .. | 1,000 |
| (3) | ஜாவா சிட்ரோனெல்லா எண்ணெய் .. | 2,500 |
| (4) | வெட்டிவேர் எண்ணெய் .. .. | 69 |
| (5) | யூகலிப்டஸ் மருந்து எண்ணெய் (நீலகிரி தைலம்) | 130 |
| (6) | பிற எண்ணெய்கள் .. .. .. | 9,600 |



2. ஆய்வுக்கூட அளவில் மருத்துவ யூகலிப்டஸ் எண்ணெயிலிருந்து சினியோல் என்னும் கற்பூரத் தைலத்தை சிக்கன முறையில் தயாரிப்பதற்கான முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதற்கான முன்னோடி முறைச் சோதனைகள் நடத்தப்படும். இச்சோதனைகள் வெற்றிகரமான முறையில் முடிக்கப்பெற்றால், கற்பூரத் தைலத்தை பெருமளவில் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

3. மும்முர ஆராய்ச்சித் திட்டமும், மருந்தும், மற்றும் தைலச் செடிகளின் வளர்ச்சி குறித்த திட்டமும் ஆய்வில் உள்ளன.

#### C. இத் துறையின் நிதிநிலை

1969-70 ஆண்டிற்கான வருவாய் தோராயமாக ரூ 66 லட்சமாகும். ஆண்டு முடிவில் ரூ. 11·34 லட்சம் ஆதாயம் கிட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இணைப்பு—5.

### காடுகள் துறைக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பு

### 1968–69-ல் காட்டு வள நிர்வாகம் குறித்த முக்கிய கூறுகளும் 1969–70-ம் ஆண்டிற்கான வேலைத் திட்டங்களும்.

நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பங்காவது காடுகள் அமைய வேண்டும். அப்பொழுதுதான் நில வளம் சீராக அமையும். தமிழ் நாட்டின் நிலப்பரப்பில் பதினேழு சத வீதம் காடுகள் அடர்ந்துள்ளன. இக்காடுகளில் பெரும்பாலானவை உலர்ந்த காடுகளாகும் அல்லது அடர்த்திக் குறைவான காடுகளாகும். வளர்ச்சிப் பணிகள் பெருமளவில் நிறைவேற்றப்பட்டு வருவதாலும், வீட்டுத் தேவைகளுக்கு விறகும், எரி பொருளும் அதிக அளவில் தேவைப்படுவதாலும் காடுகளை வேளாண்மைக்காக விளை நிலங்களாக மாற்றுவதற்கான தேவையினாலும், வனவிலங்குகள் கண்மூடித்தனமாக அழிக்கப்படுவதாலும், நமது காடுகள் வெகு விரைவில் அழிந்து வருகின்றன. தற்போதுள்ள காடுகளைப் பாதுகாத்து, பேணி, நல்ல முறையில் பயன்படுத்துவதற்கும் புதிய காடுகளை வளர்ப்பதற்கும் நமக்கு உள்ள திறமையை விட அதிக விரைவாக அடவிகள் அழிந்து வருகின்றன. காடுபடு பொருள்களுக்கு நாளுக்குநாள் அதிகரித்துவரும் தேவையை நிறைவு செய்வதற்காக, ஐந்தாண்டுத் திட்டங்கள் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து வெட்டு மரம், வீட்டுத் தேவைகளுக்கான விறகு, எரி பொருள்கள் தொழிற்சாலைகளுக்கான மரம், முந்திரி, அரக்கு, சந்தனம், ரப்பர் போன்ற வணிக முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கவும், மண்வளப் பாதுகாப்பு வேலைகளை முக்கியமான நீர்த் தேக்கங்களில் நீர்கோள் பகுதிகளில் மேற்கொள்ளவும், நமது காடுகளையும் காடுவாழ் வன விலங்குகளையும், பாதுகாக்க சட்டங்களைச் செயல்படுத்தவும் பிரசாரம் செய்யவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. காடுகளின்கீழ் குறைவான நிலப் பரப்பேயுள்ளதால், அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களும், ஊராட்சிக்குச் சொந்தமான தரிசு நிலங்களும் காடுகள் வளர்க்கப் பயன்படுத்தப்படுகின்றன. நமது காட்டுப்பகுதியை கூட்டுவதற்கு ஒரு எல்லை உண்டு. காடு வளர்ப்புப் பணிகளை மும்முரமாக நிறைவேற்றவும், காடுபடு பொருள்களைப் பெருக்கவும், ஏற்ற தருணம் இதுவே. வேளாண்மை நிலத்தில் விளைச்சல் திறனை அதிகரிக்க நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் போன்றே இத்துறையிலும் மும்முரமாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தமிழ் நாட்டின் காடுகள் பரப்பளவு குறைவுதான்; என்றாலும் காடுகளிலிருந்து நமது மாநிலத்திற்குக் கணிசமான வருவாய் கிடைக்கிறது. 1967-68-ல் ரூ. 338·65 லட்சம் வருவாய் கிடைத்தது. இது இதுவரையில் கிடைத்துள்ள வருவாயிலேயே மிகவும் அதிகமானதாகும். காடுகள் துறை, காடுகளை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கான மூலப் பொருள்களை வழங்கு

வதற்காக காடுகளை வளர்ப்பது குறித்து அண்மைக் காலத்தில் மும்முரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டதே இந்த வருவாய் உயர்வுக்குக் காரணமாகும். மேலும், காடுகள் அண்மையில் உள்ள கிராம மக்களுக்கான, சிறு வெட்டு மரங்கள், எரி பொருள், தழை உரம், காடுபடு சிறு பொருள், மேய்ச்சல் நிலம் ஆகியவை குறித்த தேவைகளையும் நிறைவு செய்ய இந்த நடவடிக்கைகள் பயன்பட்டன.

2. தமிழ் நாட்டில் ஒதுக்கக் காடுகளின் மொத்தப் பரப்பளவு 17,264 சதுர கிலோ மீட்டர்; ஒதுக்க நிலங்களின் மொத்த பரப்பளவு 3,731 சதுர கிலோ மீட்டராகும். பசுமையான காடுகளிலிருந்து காட்டுச் செல்வம் கிடைக்கின்றது. கட்டிடங்களுக்கு இன்றியமையாத் தேவைகளாகிய மரங்கள் நமது காடுகளிலிருந்து குறைந்த அளவே கிடைக்கின்றது. காடுகள் துறை, காட்டு வள அதிகாரி மூலம் ரயில்வே நிர்வாகம், மீனளத் துறை, அரசு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு வெட்டு மரங்களை வழங்குவதுடன் வசதியான அளவில் துண்டிக்கப்பட்ட வெட்டு மரங்களைப் பொதுமக்களின் உபயோகத்திற்காகவும், பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்கின்றது. 34,000 க. மீட்டர் வெட்டு மரங்கள் நமது காடுகளிலிருந்து மொத்தம் உற்பத்தி செய்யப்படுகின்றது. 1967–68-ல் ரயில்வே நிர்வாகத்திற்கு ரூ. 7·68 லட்சம் மதிப்புள்ள 29,500 தண்டவாளக் கட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, ஒவ்வொரு குடும்பத்திற்குத் தேவையான விறகும் 377 லட்சம் க. மீட்டர் அளவு விறகு காடுகள் துறையினால் வழங்கப்படுகிறது. முந்திரி, கடுக்காய், தேன், அரக்கு, வாட்டில்பட்டை போன்ற காடுபடு சிறு பொருள்களும் ரூ. 27·15 லட்சம் மதிப்பிற்கு காடுகளிலிருந்து வழங்கப்பட்டுள்ளன. செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள திறந்த வெளி, முட்புதர்க் காடுகளை, காடுகள் துறை கடந்த 13 ஆண்டுகளில் முந்திரி மரத் தோட்டங்களாக மாற்றியுள்ளது. காடுகள் துறை இதுவரையில் ரூ. 15·72 லட்சம் மொத்தச் செலவில் 27,400 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரிக் காடுகளை வளர்த்துள்ளது. முன்பு வளர்க்கப்பட்ட முந்திரி மரத் தோட்டங்களில் நமது மாநிலத்திற்குக் கணிசமான வருவாய் கிடைத்து வருகிறது. 1968-ம் ஆண்டு ரூ. 11 லட்சம் வருவாய் கிட்டியுள்ளது. ரூ. 0·79 லட்சம் மதிப்புள்ள அரக்கும், அரக்குப் பொருள்களும், விற்பனை செய்யப்பட்டன. தேன் விற்பனையிலிருந்து ரூ. 0·22 லட்சம் கிட்டியுள்ளது. காடுகள் துறை காகித ஆலைகளுக்கான மூங்கில்களையும் தோல் பதனிடு தொழிற்சாலைகளுக்காக வாட்டில் பட்டைகளையும், ரயான் தொழிற்சாலைகளுக்காக கற்பூர மரங்களையும், சந்தனத் தைலத் தொழிற்சாலைக்காக சந்தன மரங்களையும் வழங்குகின்றது. தோல் பதனிடு தொழில், காகிதத் தொழில் ஆகியவற்றிற்கான மூலப் பொருள்களை இத்துறை வெளிச் சந்தை விலையைவிடக் குறைவான விலையில் வழங்குகின்றது. தமிழ்நாட்டில் இத்தகைய தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதே இதன் நோக்கமாகும்.

3. 1,082 டன் அளவு சந்தன மரம் விற்கப்பட்டது. இந்த விற்பனையிலிருந்து ரூ. 1,17·66 லட்சம் கிடைத்தது. காட்டில் உலர்ந்த 39,993 டன் மூங்கில் பள்ளிப்பாளையத்திலுள்ள திருவாளர்கள் சேஷசாயி காகித அட்டைகள் தயாரிப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. திருவாளர்கள் டான் இந்தியா வாட்டில் வெட்டியெடுக்கும் நிறுவனம் வாட்டில் மரங்களை வெட்டியெடுப்பதற்காக 249 ஹெக்டேர் பரப்பளவுள்ள வாட்டில் மரக் காடுகளும், திருவாளர்கள் தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனத்திற்கு 264 ஹெக்டேர் பரப்பளவுள்ள கற்பூர மாக்காடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

4. காட்டுப் பகுதிகளில் மேய்ச்சல் காரியங்களுக்கு பழைய கட்டணங்களே வசூலிக்கப்படுகின்றன. 16·69 லட்சம் கால்நடைகள் மேய்வதற்கு மேய்ச்சல் உரிமம் வழங்கப்பட்டு அவைமூலம் ரூ. 5·39 லட்சம் வருவாய் கிடைத்தது.

5. ஆராய்ச்சியைப் பொறுத்தவரையில், வாட்டில், யூகலிப்ட்ஸ், முந்திரி சவுக்கு, சந்தன மரங்கள் குறித்துப் பல்வேறு ஆராய்ச்சி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. காட்டு வள ஆராய்ச்சிக் குழு ஒன்றைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.



6. தமிழ் நாட்டிலுள்ள வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கும் நிர்வகிப்பதற்கும், மாநில வனவிலங்குப் பாதுகாப்பு நிறுவனம் என்று அழைக்கப்படும் தனிப்பட்டதொரு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. முதுமலை, கோடிக்கரை ஆகிய இடங்களிலுள்ள வன விலங்குகள் உய்விடங்களையும் முண்டந்துறையில் புலிகளுக்கான உய்விடத்தையும் பேணிவரும் பொறுப்பு இந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்காகச் சாலைகள், ஓய்வு இல்லங்கள், சிற்றுண்டிச்சாலைகள் போன்ற பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பணியை இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ளது. முதுமலை வனவிலங்குகள் உய்விடத்தில் இந்த ஆண்டில் தற்போதைய வசதிகளை அதிகரிக்கும் வகையில் புதிய ஓய்வு இல்லம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. மரங்கள் செறிந்த, எழில் நிறைந்த இயற்கைச் சூழ்நிலைகளினிடையே இப்புதிய ஓய்வு இல்லம் மோயாறு ஆற்றங்கரையில் தெப்பக்காடு என்னுமிடத்தில் அமைந்துள்ளது. வேடந்தாங்கல் பறவைகள் உய்விடத்தையும், கிண்டியிலுள்ள மான் பூங்கா, சிறுவர் பூங்கா ஆகியவற்றையும் மேம்படுத்த நாட்டம் செலுத்தப்பட்டுள்ளது.

7. மரம் வெட்டும் தொழிலை நவீன முறைகளில் மேற்கொள்ளுவதிலும், மரங்களைத் துண்டுகளாக வெட்டும் கருவிகளைப் பயன்படுத்துவதிலும், காடுகள் துறைப் பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கும் திட்டமொன்றை காடுகள் துறை செயலுக்குக் கொண்டுவந்துள்ளது. மரம் வெட்டுவதில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படைத் தொழில் முறைகளில், காடுகள் துறை அதிகாரிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக, மரங்கள் வெட்டுத்தொழில் பயிற்சி நிலையமொன்றை இந்திய அரசு கோவையில் தொடங்கியது.

8. காடுகளையும், காட்டுச் செல்வத்தினையும், தீ விபத்துக்களிலிருந்தும் பிற அபாயங்களிலிருந்தும் பாதுகாப்பதற்காக தீ விபத்துப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தீ விபத்துக் கண்காணிப்புப் படைகளை அமைப்பதன் மூலமும், தீ விபத்து அறிவதற்கான மாடங்கள் ஆகியவற்றை நிறுவுவதன் மூலம், தீ விபத்துகள் ஏற்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்காக பணியாளர்களை நியமிப்பதன் மூலம் இத்தகைய பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. காடுகள் சட்டத்தின் கீழ் தடை விதிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களைச் செய்வோரைக் கண்டறிந்து அவர்களைத் தண்டிப்பதற்காக காடுகளை மும்முரமாகச் சுற்றிப் பார்க்கும் தனி ரோந்துப் படைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

9. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏறத்தாழ 1,800 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் மரத் தோட்டங்களை வளர்த்ததே இத்துறையின் மகத்தான சாதனையாகும். ரப்பர் வணிக முக்கியத்துவம் வாய்ந்த பொருளாகும். பழைய ரப்பர் மரத் தோட்டங்கள் சிலவற்றிலிருந்து ரப்பர் மரப் பால் தயாரிக்கப்பட்டு, இதிலிருந்து ரப்பர் விரிப்புகள் தயாரிக்கப்பட்டு அவற்றை அரசாங்க ரப்பர் மரத் தோட்ட பொது மேலாளர் ஏலம் போடுவதன் மூலம் விற்பனை செய்கிறார். ரப்பர் மரப் பாலை வேலை முறைக்குட்படுத்துவதற்காக, இறக்குமதி செய்யப்படும் பொறியுடன் நவீன வகை தொழிற்சாலையொன்று விரைவில் நிறுவப்படும்.

10. இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப்படும் இந்தியர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக இத்துறை நீலகிரி மாவட்டத்தில் 1,500 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டங்களை நிறுவும் பணியை மேற்கொண்டுள்ளது. ரூ. 5·68 கோடி செலவில் நிறுவப்படும் இத் தேயிலைத் தோட்டத்திற்கான செலவு குறித்து இந்திய அரசின் உதவியும் கிடைக்கும். இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்படும் 1,700 குடும்பங்களைக் குடியேற்றுவதற்கு, இந்தத் தேயிலைத் தோட்டங்கள் உதவும்.

11. இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப்படும் 333 குடும்பங்களைக் குடியேற்றுவதற்காக, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 81·49 லட்சம் செலவில் 800 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் மரத் தோட்டங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

12. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த திருவரங்குளம் கிராமத்தில் உள்ள 1,200 ஹெக்டேர் பரப்பளவு காட்டு நிலத்தை இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப்படும் இந்தியர்களுக்குச் சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஒதுக்க ஆணையிடப்பட்டுள்ளது.

13. இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப்படும் இந்தியர்களைக் குடியேற்றுவதற்காகத் தென்னை வளர்ச்சித் திட்டம் ஒன்று மேற்கொள்ளுவதற்காக, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருவாடானை, முதுகுளத்தூர் வட்டங்களைச் சேர்ந்த காடுகள், வேளாண்மைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

14. தமிழ் நாட்டின் மொத்த நிலப் பரப்பளவில் ஒதுக்கக் காடுகளின் பரப்பளவு 13 சதவீதமே என்று அனைவருக்கும் தெரிந்ததே. ஆயினும், காட்டு வளமல்லாத பிற காரியங்களுக்காக காடுகளை வளர்ப்பதற்கான தேவை அதிகரித்து வருகிறது. காட்டு நிலங்கள் வேளாண்மைக் காரியங்களுக்காக தனிப்பட்டவர்களுக்கு பொதுவாகக் கொடுக்கப்படுவதில்லை. ஆயினும், காடுகள் வளர்ப்புக்காக உடனடியாகத் தேவைப்படாத காட்டு நிலங்களை, தற்போதுள்ள உணவு பற்றுக்குறையை முன்னிட்டு பயிர் வளர்ப்பதற்காக நிலமற்ற ஏழைகளுக்குக் குத்தகைக்கு விட கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.—

(1) கோபிசெட்டிப்பாளையம் வட்டத்திலுள்ள பவானிசாகர் நீர்த்தேக்கப் பகுதியில் நீரில் மூழ்கியுள்ள காட்டுப் பகுதிகளில் தண்ணீர் வடியும் போதுதான் சாதாரணமாகச் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இப்பகுதிகளிலுள்ள நிலங்களைக் குடும்பம் ஒன்றுக்கு 2 ஏக்கர் என்ற அளவில் 5 ஆண்டுகளுக்கு மேற்படாத கால அளவிற்கு உணவுப் பயிர்களை வளர்ப்பதற்காக நிலமற்ற ஏழைகளுக்கு குத்தகைக்கு விடத் திட்டமிடப்பட்டுள்ளது. கோபிச்செட்டிப்பாளையம் வருவாய்க் கோட்ட அதிகாரி, வடக்குக் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த வடக்கு, மத்தியக் கோட்டங்களின் மாவட்ட காடுகள்துறை அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று நிலத்தைக் குத்தகைக்கு விடுவதற்கான விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

(2) சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பக்கநாடு, வனவாசி ஒதுக்கக் காடுகளில் நெடுங்காலமாகப் பயிரிடப்பட்டு வரும் நிலங்களை, சில நிபந்தனைகளுக்குட்பட்டு விளைச்சலுக்காக 10 ஆண்டுக் கால அளவுக்குக் குத்தகைக்கு விடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கெனக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

(3) கண்டமநாயக்கனூர் முன்னாள் ஜமீன் காட்டுப் பகுதியில், நில ஆக்கிரமிப்புகள் பற்றிய பட்டியலைத் தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நெடுங்காலமாகப் பயிர் விளைவிக்கப்பட்டுவரும் நிலங்களைக் குத்தகைக்கு விடுவதே இதன் நோக்கமாகும்.

15. காடுகளின் பரப்பளவு மிகவும் குறைவு. காடுகளை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்குப் பல்வேறு மூலப் பொருட்களை வழங்குவதற்காக, காடுகளைப் பயனுள்ள முறையில் வளர்ப்பது அவசியமாகும். எனவே, காட்டுப் பகுதிகளில் மேற்கொண்டும் நில ஆக்கிரமிப்பு அனுமதிக்கப்படமாட்டாது. ஏற்கனவே இப்பகுதிகளில் அதிகாரமின்றிக் குடியேறியவர்கள் வெளியேற்றப்படுவர்.

16. காடுகள் துறையைச் சீரமைப்பதற்காகவும் அதன் பணிகளை ஒருங்கிணைப்பதற்காகவும், தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு கோட்டங்கள் ஒரே கோட்டமாக அமைக்கப்படும். அழிந்த காடுகளை மீண்டும் தழைக்கச் செய்வதற்காகவும் காடுகளுக்கு மும்முர அடிப்படையில் பாதுகாப்பு அளிப்பதற்காகவும் தருமபுரியில் புதிய கோட்டமொன்று அமைக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் காடுகள் துறை உதவித் தலைவர் பதவி ஒன்றை ஏற்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரி திருநெல்வேலி மாவட்டக் காடுகள் துறை அதிகாரிக்கு உதவிபுரிவார்.

17. 1967-68-ல் ரூ. 93 லட்சம் உபரி ஏற்பட்டது.



## காடுகள் மேம்பாட்டுத் திட்டம்

### முதல் ஐந்தாண்டுத் திட்டம்

18. முன்னாள் ஜமீன் காடுகளையும் ஊராட்சிக் காடுகளையும், மீண்டும் தளிர்க்கச் செய்வதற்காகவும், விறகு மரக் காடுகளையும், தீக்குச்சி மரக் காடுகளையும் வளர்ப்பதற்காகவும் இப்பணித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மொத்தச் செலவு ரூ. 30·43 லட்சம். வளர்க்கப்பட்ட காடுகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

| | ஹெக்டேர். |
|---|---|
| சவுக்கு | 160 |
| தீக்குச்சி மரம் | 1,080 |
| வாட்டில் | 1,120 |
| கற்பூரம் | 440 |
| விறகு மரக் காடுகள் | 12,000 |

### இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

19. முன்னாள் ஜமீன், முன்னாள் ஊராட்சிக் காடுகளைத் தளிர்க்கச்செய்ய வகை செய்யும் திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டன. முந்திரி மரக்காடுகள் பெருமளவில் வளர்க்கப்பட்டன. 18,970 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி மரக்காடுகள் வளர்க்கப்பட்டன. (1) ஆற்றங்கரையிலும், கால்வாய் கரைகளிலும், குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில் தேக்கு மரங்களையும், பிற கடின மரங்களையும் வளர்த்தல், (2) காடுகளை விரைவில் மேற்பார்வையிடுவதற்கும், காடுபடு பொருட்களை விரைவில் அகற்றுவதற்கும் வசதியாக இருக்கும் வகையில் காட்டுப் பகுதிகளில் புதிய சாலைகளை அமைத்தல், (3) ஒதுக்குக் காடுகளுக்கு வெளியே மண் அரிக்கப்பட்டுள்ள நிலங்களை காடுகளை வளர்ப்பதற்காக ஆய்வு செய்தல், (4) இம்மாநிலத்தில் தீவன வாயில்களை மேம்படுத்துதல் ஆகிய காரியங்களுக்காகப் புதிய கோட்டங்கள் அமைக்கப்பட்டன. பெருமளவுப் பகுதிகளில் தேக்கு, தீக்குச்சிமரம், வாட்டில், கற்பூர மரங்கள் வளர்க்கும் பணியும் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டன. ஊப் பகுதிகளில் எரிபொருள் வாயில்களை அதிகரிக்கும் பொருட்டு விறகு மரக்காடுகள் வளர்க்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. வளர்க்கப்பட்ட காடுகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | ஹெக்டேர். |
|---|---|
| சவுக்கு | 1,315 |
| விறகு மரக்காடுகள் | 24,350 |
| பண்ணைக்காடுகள் | 934 |
| அழிந்துவிட்ட காடுகளை மீண்டும் தழைக்கச் செய்தல். | 6,500 |
| தீவன வளர்ச்சியும் மேய்ச்சல் நிலங்களும் | 4,900 |
| தீக்குச்சி மரம் | 3,230 |
| வாட்டில் | 8,140 |
| கற்பூரம் | 1,210 |
| ஆற்றோர கால்வாய், ஏரிக்கரைக் காடுகள் | 1,550 |
| பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த காடுகள் (தேக்கு மூங்கில்). | 2,590 |
| முந்திரி | 18,970 |

ஒய்வு இல்லம் ஏற்படுத்துவதன் மூலமும், சாலைகளை மேம்பாடு செய்வ தன் மூலமும் முதுமலை வனவிலங்குகள் உய்விடம் ரூ. 4·35 லட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது. இராமங்களிலும் இராமங்களைச் சுற்றிலும் உள்ள பகுதிகளில் பண்ணைக்காடுகளை வளர்க்கும் பணி மேற்கொள்ளப் பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 60 ஹெக்டேர் பரப்பளவிற்கு மேற்பட்ட நிலங்களில் ரப்பர் மரத் தோட்டங்கள் வளர்க்கும் பணி மேற்கொள்ளப் பட்டது.

தகுந்த பகுதிகளில் அரக்குபற்றும் மரங்கள் வளர்க்கப்பட்டன.

திட்டப் பணிகளுக்காக ரூ. 147·27 லட்சம் செலவிடப்பட்டது.

## மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்.

20. வெட்டுமரம், எரிபொருள். தொழிற்சாலைகளுக்கான மூலப் பொருள்கள் ஆகியவை குறித்த இம்மாநிலத்தின் நீண்டகாலத் தேவைகளை நிறைவு செய்வதே மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாகும்.

இராம மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தில் ஒதுக்கக் காடுகளுக்குப் புறம்பேயுள்ள தரிசு நிலங்களில் பெருமளவில் பண்ணைக் காடுகள் வளர்க்கப்படுகின்றன. தொழில்களின் வளர்ந்து வரும் தேவையை சரிக்கட்ட சுமார் 1,775 ஹெக்டேர் பரப்பளவில் விரைந்து வளரும் மரவகைகள் வளர்க்கப்பட்டன. ரப்பர் மரங்கள் பரந்த அளவில் வளர்க்கப்பட்டன. சுமார் 1,190 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் மரங்கள் வளர்க்கப்பட்டன. தேக்கு, மென்மரம், சவுக்கு, கற்பூர மரம், வாட்டில் ஆகிய மரங்கள் தொடர்ந்து பயிரிடப்பட்டன. பயிர்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறுகும்:—

| | ஹெக்டேர். |
|---|---|
| பண்ணைக்காடு .. .. .. .. | 19,340 |
| தேக்கு .. .. .. .. .. | 2,390 |
| தீக்குச்சி மரம் .. .. .. .. | 3,000 |
| சவுக்கு .. .. .. .. .. | 1,415 |
| வாட்டில் .. .. .. .. .. | 6,750 |
| கற்பூர மரம் .. .. .. .. .. | 2,540 |
| மூங்கில் .. .. .. .. .. | 2,225 |
| ஆற்றோரக் காடுகள், வாய்க்கால் கரை, ஏரிக் கரைக் காடுகள். | 2,060 |
| ரப்பர் .. .. .. .. .. | 1,190 |
| சீர்குலைந்த காடுகளைச் சீரமைத்தல் .. .. | 5,275 |
| விரைவில் வளரும் மரங்கள் (மூங்கில், யூகலிப்டஸ்). | 1,775 |
| விறகு மரக்காடுகள் .. .. .. .. | 10,795 |
| முந்திரி .. .. .. .. .. | 5,380 |

வைகை அணையில் காடுகள்துறை பணியாளர்களுக்கும் காடுகள் துறைப் பாதுகாப்பாளர்களுக்கும் பயிற்சி அளிக்க பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. வாட்டில் மரம் பற்றி முனைப்பாக ஆராய ஒரு பிரிவு தொடங்கப்பட்டது. பரிசோதனைகள் நடத்தப்பட்டன.



குந்தா ஆற்றுப் பள்ளத்தாக்கு திட்டத்தின் நீர்கோள் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள தனி அமைப்பு ஒன்று தொடங்கப்பட்டது. வைகை, மேட்டூர் நீர்கோள் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளைத் தொடங்க இப்போது பிரிவுகள் உள்ளன. தனிப் பிரிவுகளில் செயல் திட்டங்கள் தயாரிக்கப்படவும், பணிகளைச் சிறப்பாக மேற்பார்வையிடவும், திட்டச்செயல்வட்டம் ஒன்று அமைக்கப்பட்டது. திட்டப் பணிகளின் செலவு ரூ. 372 லட்சம்.

21. **மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மேற்பட்ட காலப்பகுதி (1966—69).**—மூன்றுவது திட்டக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து செயல்பட்டன. விரைந்து வளரும் மரங்களைப் பயிரிட வும், வாட்டில், கற்பூரமரம், மூங்கில், சந்தன மரம் முதலிய தொழில் மதிப்புள்ள மரங்களை வளர்க்கவும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்பட்டது. காடுபடு சிறு பொருள் விளையும் மரங்களைச் செழிப்புறச் செய்து நமது ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ளவும் முயற்சி மேற்கொள்ளப் பட்டது. தேக்கு, மென்மரம், சவுக்கு ஆகியவற்றை மீண்டும் தளிர்க்கச் செய்யும் பணியும் தொடர்ந்தது. பயிரிடப்பட்ட மரங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | ஹெக்டேர். |
|---|---|
| பண்ணைக்காடு .. .. .. .. | 6,300 |
| தேக்கு .. .. .. .. .. | 1,380 |
| தீக்குச்சி மரம் .. .. .. .. .. | 740 |
| சவுக்கு .. .. .. .. .. | 600 |
| வாட்டில் .. .. .. .. .. | 2,120 |
| கற்பூர மரம் .. .. .. .. .. | 750 |
| ஆற்றங்கரைக்காடுகள், வாய்க்கால், ஏரிக்கரைக் காடுகள். | 1,270 |
| ரப்பர் .. .. .. .. .. | 600 |
| சீர்குலைந்த காடுகளைச் சீரமைத்தல் .. | 575 |
| விரைந்து வளரும் மரங்கள்—மூங்கில் .. | 6,200 |
| யூகலிப்டஸ் .. .. .. .. .. | 66( |
| விறகுக்காடு .. .. .. .. .. | 3,830 |
| முந்திரி .. .. .. .. .. | 3,010 |

மற்ற நாடுகளில் நமது வனவிலங்கு உய்விடங்கள் குறித்து விளம் பரம் கொடுக்கும் பொருட்டு, நமது வன விலங்குகளின் படங்கள் அடங்கிய 20,000 அஞ்சல் அட்டைகள் அச்சடிக்கப்பட்டன. இவை பயணிகளுக்கு விற்பனைக்கு வழங்கப்படவும், வெளிநாட்டிலுள்ள நமது தூதரகங்களுக்கு அளிக்கப்படவும் அச்சிடப்பட்டன. கிண்டி பூங்காவிலுள்ள குழந்தைகள் பகுதி இந்த இடத்திற்கு வரும் அதிக எண்ணிக்கையுள்ள குழந்தை களுக்கு வசதிகளை பெருக்கும்பொருட்டு 14 ஏக்கரிலிருந்து 22 ஏக்கருக்கு விரிவாக்கப்பட்டது.

இக் கால அளவில் திட்டப்பணிகளுக்கான செலவு ரூ. 287 லட்சம் ஆகும்.

## நான்காம் திட்டப் பணிகள்.

22. இத்திட்டத்தின் தலையாய குறிக்கோள்கள் வருமாறு—

(அ) உயர் அளவுப் பலன் பெற காடுகளின் உற்பத்தி அளவைப் பெருக்குதல்.

(ஆ) காகிதம், கூழ், ரயான், பிற காடுபடு பொருள்களை அடிப்படை யாகக்கொண்ட தொழில்கள் ஆகியவற்றின் தேவையைச் சரிக்கட்டுதல்,

(இ) காடுகளிலிருந்து கிடைக்கும் வர்த்தக மதிப்புள்ள மரங்களின் பலனை அதிகரித்தல்.

(ஈ) வெட்டுமரம், விறகு மரம், பிற மரங்கள் சம்பந்தமாக இயன்ற அளவுக்கு உள்ளூர்ப் பொதுமக்களின் தேவையைச் சரிக்கட்டுதல்.

(உ) வனவிலங்குகளைப் பாதுகாத்து மேம்படுத்துதல்.

(ஊ) இம் மாநிலத்திலுள்ள காட்டு வளம் பற்றிய சிறப்பான கூறுகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.

காட்டுவளத் திட்டங்களுக்காகும் மொத்த செலவு ரூ. 472·50 லட்சம், திட்டவாரியான நான்காம் திட்ட இலக்குகள், திட்டக் குறிக்கோள் அளவுகள், 1969–70-ம் ஆண்டுக்குத் திட்டமிடப்பட்டுள்ள இலக்குகள், செலவு ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## காடுகள்.

### மத்திய உதவி பெறும் திட்டங்கள்.

### (1) பண்ணைக் காடுகளும் விறகு மரங்களும்.

**(அ) பண்ணைக் காடுகள்—கிராமக் காடுகள்.**—கிராமங்களைச் சுற்றிலும் உள்ள தொகுதியான, தகுந்த நிலப் பரப்புகளிலும் 20 ஹெக்டேர் பரப்பிற்கு மேற்பட்ட அரசாங்கத் தரிசு நிலங்களிலும் புறம்போக்குகளிலும் கிராமக் காடுகளை வளர்ப்பது இத் திட்டத்தின் சிறப்பான நோக்கமாகும். கிராம மக்களுக்கு ஏற்படும் அன்றாடத் தேவைகளான, விறகு, வெட்டு மரம், தழை உரம், தீவனம் ஆகியவற்றை இக் கிராமக் காடுகள் நிறைவு செய்யும்.

நான்காம் திட்டக் காலத்தில் 18,000 ஹெக்டேர் பரப்பில் ரூ. 40·00 லட்சம் மொத்தச் செலவில் இக் காடுகள் பயிரிடப்படும். 1969—70-ல் ரூ. 5·00 லட்சம் செலவில் 2,000 ஹெக்டேர் நிலத்தில் கிராமக் காடுகள் பயிரிடப்படும்.

**(ஆ) விறகு மரங்கள்.**—விறகு மரங்கள் குறித்த பெரும் பற்றுக் குறையைச் சரிக்கட்ட மக்கள் பெருக்கம் மிக்க பகுதிகளின் அண்டைப் பரப்புகளில் விறகு மரங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காம் திட்டக் காலத்தில் 6,000 ஹெக்டேர் பரப்பில் விறகு மரங்கள் பயிரிடப்படும். 1969–70-ல் 600 ஹெக்டேர் பரப்பில் ரூ. 2·55 லட்சம் செலவில் யூகலிப்டஸ் மரங்களும் பிற மரங்களும் பயிரிடப்படும்.

### (2) பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரங்கள்.

**(i) தேக்கு.**—தற்போதுள்ள ஆதாரங்களைப் பெருக்குவதற்கு, தேக்கு மரங்களையும், கடின மரங்களையும் வளர்ப்பது இத் திட்டத்தின் நோக்க மாகும். நான்காவது திட்டத்தில் ரூ. 15 லட்சம் செலவில் 2,000 ஹெக்டேர் பரப்பில் மரங்கள் பயிரிடப்படும். 1969–70-ல் ரூ. 0·92 லட்சம் செலவில் 465 ஹெக்டேர் பரப்பில் இம் மரங்கள் பயிரிடப்படும்.

**(ii) மென்மரம்.**—தீப்பெட்டித் தயாரிப்புத் தொழிலுக்கு தற்போது வழங்கப்படும் மரங்களை அதிகப்படுத்தும் பொருட்டு தீக்குச்சி வெட்டு மரங்களை வளர்ப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது திட்டக் காலத்தில் 1,500 ஹெக்டேரில் மென்மரங்கள் ரூ. 5 லட்சம் செலவில் பயிரிடப்படும். 1969–70-ல் ரூ. 0·75 லட்சம் செலவில் 300 ஹெக்டேர் பரப்பளவில் இம்மரங்கள் பயிரிடப்படும்.

**(iii) சவுக்கு.**—கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் தேவைப்படும் விறகுகளை வழங்குவதற்குப் படுகை நிலங்களிலும் கடற்கரையோரங்களிலும் சவுக்கு மரங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.



நான்காம் திட்டக் காலத்தில் 2,000 ஹெக்டேர் பரப்பில் ரூ. 10 லட்சம் செலவில் சவுக்கு பயிரிடப்படும். 1969-70-ல் 270 ஹெக்டேர் பரப்பில் ரூ. 1·35 லட்சம் செலவில் சவுக்கு பயிரிடப்படும்.

**(iv) வாட்டில்.**—பதப்படுத்துவதற்கும் ரயான் கூழ் தயாரிப்புத் தொழிலுக்கும் தேவையான மூலப் பொருள்களைப் பெறுவதற்கு 4,000 ஹெக்டேர் பரப்பிறகு மேல் வாட்டில் மரங்களைப் பயிரிடுவது இத்திட்டதின் நோக்கமாகும்.

நான்காம் திட்டக் காலத்தில் ரூ. 20 லட்சம் மொத்தச் செலவில் 4,000 ஹெக்டேரில் வாட்டில பயிரிடப்படும. 1969–70-ல் 1,200 ஹெக டேர் பரப்பில் ரூ. 6·75 லட்சம் செலவில் பயிரிடப்படும்.

**(v) விரைந்து வளரும் மரங்களை நடுதல்.**—காகிதக் கூழ், காகிதத் தொழிலகளுக்கு மூலப் பொருள்களை அதிகம் வழங்கும் பொருட்டு மூங்கில், யூகலிப்டஸ் முதலிய விரைந்து வளரும் மரங்களைப் பயிரிடுவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது திட்டக்காலத்தில் ரூ. 75 லட்சம் செலவில் 12,000 ஹெக்டேர் பரப்பில் இம்மரம் பயிரிடப்படும். 1969–70-ல் 3,000 ஹெக் டேர் பரப்பில் ரூ. 15 லட்சம் செலவில் மூங்கிலும் யூகலிப்டஸ் மரங்களும் பயிரிடப்படும்.

**(vi) சந்தன மரம்.**—இம் மாநிலத்தின் சந்தன மரங்களின் வளத்தைப் பெருக்குவதற்கென சந்தன மரங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்க மாகும்.

நான்காவது திட்டக் காலத்தில் ரூ. 10 லட்சம் செலவில் 1,000 ஹெக்டேர் பரப்பில் இம்மரங்கள பயிரிடப்படும். 1969—70 ல் ரூ. 1·06 லட்சம் செலவில் 160 ஹெக்டேர் பரப்பில் சந்தன மரம் பயிரிடப் படும். சத்தியமங்கலத்தில் சந்தன மரத்திற்காக தூய்மைப்படுத்தி சேமித்து வைக்கும் கூடம் ஒன்று கட்டப்படும்.

**(vii) ஆறு, கால்வாய், ஏரிக்கரைக் காடுகள்.**—மர உற்பத்தியைப் பெருக்குவதுடன் மண் அரிப்பைத் தடுக்கும் பொருட்டு ஆற்றங்கரை களிலும் கால்வாய்க் கரைகளிலும் தேக்கு, மற்றும் கடின மரங்களைப் பயிரிடுவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் திட்டக் காலத்தில் 4,000 ஹெக்டேர் பரப்பில் ரூ. 20·00 லட்சம் செலவில் இம்மரங்கள் பயிரிடப்படும். 1969–70-ல் 600 ஹெக்டேர் பரப்பில் ரூ. 1·64 லட்சம் செலவில் இம்மரங்கள் நடப்படும்.

**(viii) ரப்பர்.**—ரப்பர் வாணிகச் சிறப்புள்ள பொருளாகையால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் திட்டக்காலத்தில் 800 ஹெக்டேர் பரப்பில் ரூ. 100 லட்சம் செலவில் ரப்பர் பயிரிடப்படும். 1969—70-ல் 200 ஹெகடேர் பரப்பில் ரூ. 10·82 லட்சம் செலவில் ரப்பர் பயிரிடப்படும்.

### (3) வெட்டுமரம் எடுத்தல்.

காடுகளிலிருந்து வெட்டு மரங்களை மேம்பட்ட முறையிலும் விரைவாகவும் விற்பனை நிலையங்களுக்கு அனுப்ப வகை செய்யும் பல நோக்குடைய திட்டம் இதுவாகும். வனப் பணியாளர்களுக்கு மரம் வெட்டும் நுட்பத்தில் பயிற்சியளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் திட்டக் காலத்தில் ரூ. 10·00 லட்சம் இக் காரியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1969–70-ல் ரூ. 1·77 லட்சம், வெட்டுக் கருவிகளும் பிற கருவிகளும் வாங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

[1969 மார்ச் 18

### (4) காட்டுவள ஆராய்ச்சி.

காட்டு வள ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவி காட்டு மரங்கள் குறித்தும் பிற தொழில் நுட்பங்கள் குறித்தும் முனைப்பாக ஆராய்ச்சி மேற்கொள்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் திட்டக் காலத்தில் இப்பணிக்கென ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969-70-ல் காடுவளர்ப்புப் பிரிவு ஒன்றும், விதை சேமிப்பு, தரம் பிரித்தல், வழங்குதல் நிலையம் ஒன்றையும் தொடங்குவதற்கான திட்டத்திற்கு ரூ. 1 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (5) காடுகளில் சாலை வசதி.

காடுகளில் மரங்களை வெட்டுவதும் அடிக்கடி போய் மேற்பார்வை யிடுவதும் நல்ல முறையில் பாதுகாப்பு அளிப்பதும் இயலும் வகையில் வாட்டில் மரம், மூங்கில், சந்தன மரப் பகுதிகளில் புதிய சாலைகளை அமைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காம் திட்டக் காலத்தில் 100 கிலோ மீட்டர் காட்டுச்சாலை போடுவதற்கான திட்டத்திற்கு ரூ. 30·00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969-70-ல் ரூ. 3·00 லட்சம் செலவில் புதிய சாலைகள் போடப்படும்.

### (6) கட்டிடங்கள் கட்டுதல்.

காடுகள் துறைப் பணியாளர்களுக்கு தகுந்த உறைவிட வசதி ஏற்படுத்துவதும் ஓய்வு இல்லங்கள் கட்டுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காம் திட்டத்தில் ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969-70-ல் ரூ. 2 லட்சம் செலவிடப்படும்.

### (7) காடுகள் துறைப் பணியாளர், தொழிலாளர்களுக்கு வசதிகள்.

பலவகைப் பணிகளில் ஈடுபட்டுள்ள காடுகள் துறைப் பணியாளருக்கும் தொழிலாளர்களுக்கும் வசதிகள் ஏற்படுத்தித் தருவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

நான்காம் திட்டத்திற்கு ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது; பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் குடியிருப்புகள், மருத்துவ மனை கட்டுவதும் பிற வசதிகள் ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் பணியாகும். 1969–70–ல் கம்பளிகள் வாங்கவும் தொழிலாளர் குடியிருப்புகள் கட்டவும் ரூ. 0·50 லட்சம் செலவிடப்படும்.

### (8) காட்டு வளச் செய்திப் பரப்பு.

வனத் துறையை பற்றிப் பொதுமக்களிடைப் பிரச்சாரம் செய்யும் பொருட்டும் காடுகளையும் வனவிலங்குகளையும் பாதுகாக்கும் அவசியத்தை அவர்களிடம் வலியுறுத்தவும் நான்காம் திட்டத்தில் ரூ.2·50 லட்சம் ஒதுக்கப் படும். 1969-70-ல் சில விளம்பரக் கருவிகள் வாங்கக் கருதப்பட்டுள்ளது.

### (9) காடுகள் பாதுகாப்பு.

கம்பியில்லாக் கருவிகளுடன் அமைந்த கண்காணிப்புக்கான மாடங்களை அமைத்து நவீன தீ அணைப்புச் சாதனங்கள் ஏற்படுத்துவது இத் திட்டத்தின் நோக்கமாகும். நான்காம் திட்டத்திற்கு ரூ. 10 லட்சம் செலவிடப்படும். 1969–70-ல் இரண்டு கண்காணிப்பு மாடங்களும் தீயணைப்புச் சாதனங்களும் அமைப்பதற்கு ரூ. 0·50 லட்சம் செலவிடப் படும்.

### (10) செயல் திட்டம்.

செயல்திட்டங்கள் தயாரிக்கப்படுவதைச் சிறப்பாக மேற்பார்வையிடும் பொருட்டு வேலைத் திட்டத்தில் விரிவான பணிகளை மேற்கொள்ள இத் திட்டம் வகை செய்கிறது.

நான்காம் திட்டக் காலத்தில் ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1969-70-ல் ரூ. 0·35 லட்சம் செலவிடப்படும்.



1969 மார்ச் 18]

### (11) காடுபடு சிறு பொருள்கள்.

புளியமரம், மாசக்காய், பிற பதனப் பொருள்கள் முதலிய காடுபடு சிறுபொருள்களைப் பயிரிடுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காம் திட்டத்தில் 1,500 ஹெக்டேர் பரப்பில் பயிரிட ரூ. 10 லட்சம் செலவிடப்படும். 1969–70-ல ரூ.0·77 லட்சம் 280 ஹெக்டேரில் காடுபடு சிறுபொருள்களை வழங்கும் மரவகைகளைப் பயிரிடச் செலவிடப்படும்.

### (12) வனவிலங்கு உய்விடங்களின் வளர்ச்சி.

ஓய்வு இல்லங்கள், சிற்றுண்டிச் சாலைகள், சாலைகள், பார்வையாளர் மாடங்கள் ஆகியவற்றைக் கட்டுவதன் மூலம், தற்போதுள்ள உய்விடங் களில் வசதிகள் செய்து தருவது இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காவது திட்டக்காலத்தில் ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வன விலங்கு உய்விடங்கள், பறவைகள் உய்விடங்கள், கிண்டியில் உள்ள குழந்தைகள் பூங்கா ஆகியவைகளின் முன்னேற்றத்திற்காக ரூ. 20 லட்சம் செலவிடப்படும். வனவிலங்குகள் உய்விடங்கள் ஆண்டு முழுவதும் உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து வருகின்றன. 1968-ல் முதுமலை வனவிலங்கு உய்விடத்திலிருந்து ரூ. 19,269–ம், கிண்டி யிலிருந்து ரூ. 19,294-ம் வருவாய் கிடைத்தது.

### மத்திய அரசுத் திட்டம்.

### காட்டுவள ஆதாரங்கள் குறித்த ஆய்வு.

23. தொழில் தேவைகளையும் உள்ளூர் மக்களின் தேவைகளையும் நிறைவு செய்யும் நோக்கத்துடன் காட்டுவள வாயில்கள் பற்றி விரிவான ஆய்வு செய்வதே இத் திட்டத்தின் குறிக்கோளாகும். நான்காவது திட்டக் காலத்தில் ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி, திருநெல் வேலி மாவட்டங்களில் உள்ள காடுகளில், காட்டுவள வாயில்கள் பற்றிய ஆய்வுப் பிரிவு ஒன்றைத் துவக்குவதற்காக 1969-70-ல் ரூ. 0·66 லட்சம் செலவிடப்படும்.

## மண்வளப் பாதுகாப்பு.

### மத்திய அரசுத் திட்டம்.

### குந்தா ஆற்றுப் பள்ளத்தாக்கு நீர் கோள் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு.

24. குந்தா ஆற்றுப் பள்ளத்தாக்கு நீர்கோள் பகுதியில் உள்ள வேளாண்மை நிலங்களிலும், காட்டு நிலங்களிலும் மண் அரிப்பைத் தடுப்பதற்காக, மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். 1969—70-ல் 1,795 ஹெக்டேர் நிலப் பரப்பில், மண்வளப் பாதுகாப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

### மத்திய அரசு உதவி பெறும் திட்டம்.

### மேட்டூர் நீர்த்தேக்க நீர்கோள் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு.

25. வண்டல் மண் படிவதைக் குறைப்பதற்காக, மேட்டூர் நீர்த்தேக்க நீர் கோள் பகுதியில் மண்வளப் பாதுகாப்புப் பணி மேற்கொள்வதே இவ் வேலைத் திட்டத்தின் குறிக்கோளாகும். 1969-70-ல், சுமார் 200 ஹெக்டேர் நிலப் பரப்பில், இம் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## வேளாண்மை உற்பத்தி.

### காட்டுப் பகுதியில் முந்திரி வளர்ப்பு.

27. முந்திரி பயிரிடப்படும் பகுதி அதிகப்படுத்தப்படும். முந்திரியும் முந்திரிப் பொருள்களும் அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவனவாகும். நான்காவது திட்டக் காலத்தில், ரூ. 30·00 லட்சம் செலவில் 5,400 ஹெக்டேரில் முந்திரி பயிரிடப்படும். 1969-70-ல் 1,200 ஹெக்டேரில் முந்திரி பயிரிடப்படப்போவது மட்டுமல்லாமல், 2,000 ஹெக்டேரில் ஏற்கனவே உள்ள முந்திரிப் பயிர்களும் முந்திரி முனைப்பு திட்டத்தின் கீழ் பேணி வளர்க்கப்படும். இதற்காகும் செலவு ரூ. 11·76 லட்சம் ஆகும்.

### அரக்கு உற்பத்திப் பெருக்கம்.

28. அரக்கும், அரக்கு துணைப் பொருள்களும் வாணிகப் பொருள்கள். எனவே, அரக்கின் உற்பத்தியைப் பெருக்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது திட்டக்காலத்தில், ரூ. 6 லட்சம் செலவில் 200 ஹெக்டேரில் அரககுப் பற்றும் மரங்களை நடுவதோடு மட்டுமல்லாமல் அரக்கு உற்பத்தியும் அதிகப்படுத்தப்படும். 1969-70-ல் 40 ஹெக்டேருக்கு மேற்பட்ட நிலங்களில் அரக்கு உற்பத்தி செய்யவும், அரக்குவகை மரங்களை நடவும் ரூ. 1·01 லட்சம் செலவிடப்படும்.

### துறையினர் தேயிலைத் தோட்டங்களைத் தொடங்குதல்.

29. இலங்கையிலிருந்து திரும்பி அனுப்பப்படுபவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மறு வாழ்வுத் திட்டங்களில், துறையினர் மேற்கொண்ட தேயிலைத் தோட்டங்களைத் தொடங்கும் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் 1,500 ஹெக்டேர் நிலத்தில் 15 ஆண்டுகளுக்கு தேயிலை பயிரிடப்படும். இதன் மூலம் இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்படும் 5,000 பேரைக் குடியேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. தேயிலைத் தோட்டத் திட்டத்திற்காக காடுகள் பாதுகாப்புத் துணைத் தலைவர் பதவி ஒன்றை ஏற்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவரது தலைமை அலுவலகம் குன்னூரில் இருக்கும். 1967—68-ல் நாற்றங்கால் பண்ணைகள் நிறுவுவதற்கான தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

### முடிவுரை.

30. வேளாண்மை வளர்ச்சிக்கும், கால்நடை வளர்ப்புக்கும் காடுகளைப் போதுமான அளவில் வளர்ப்பது இன்றியமையாதது என வலியுறுத்த தேவையில்லை. மரங்களை நட்டு அவை பெரிதாவதற்குப் பல ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் பெரிதான மரங்களை இமைப் பொழுதில் வெட்டி விடலாம். வேளாண்மைக்கு உறுதுணையாக விளங்கும் மண்ணின் மேற்பரபபு ஒரு அங்குலம் உயர்வதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகும். ஆனால் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் இராமையினால் இந்த மண்வள மேற்பரப்பு ஒரு சில ஆண்டுகளில் கரைந்து போய்விடலாம். காடுகளை வளர்த்துப் பாதுகாத்து அவற்றை நல்ல முறையில் பயன்படுத்துவது என்பது பெரியதொரு பணியாகும். மக்களும் அவர்கள் தலைவர்களும் இதனை உணர்ந்து தாமாக முன்வந்து அரசுடன் ஒத்துழைத்தால்தான் இப் பெரியதொரு பணியை நிறைவேற்ற அரசால் இயலும்.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

### வியாழக்கிழமை, 1969 மார்ச் 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில், பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### டால்மியாபுரம் இரயில் நிலையத்தை பளிங்கானத்தமாக மாற்றம்.

* **குறுகிய கால வினா எண் 2.—திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

டால்மியாபுரம் இரயில் நிலையத்தை பளிங்கானத்தம் என்று மாற்றக் கோரி அந்த ஊராட்சி தீர்மானம் அனுப்பியுள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆம்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, காலத்திற்கும் மக்கள் உணர்ச்சிக்கும் புறம்பான சில பெயர்கள் தெருக்களுக்கும், ரோட்டுகளுக்கும், சில ஊர்களுக்கும் உதாரணமாக பறச்சேரி என்றும், பள்ளர் சேரி என்றும் அழைக்கப்படுவதை மாற்றுவதற்கு அரசு செயற்குறிப்பு தயாரிக்கிறதா? அவைகளுக்கு மாற்றுப் பெயர் கொடுக்கும்படியான ஆலோசனை இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** யாருடைய உணர்ச்சிகளையும் புண்படுத்துவதாக இருந்தாலும் அதைப்பற்றி அரசு ஆலோசிக்கும்.

**திரு. கே. விநாயகம் :** இது நம்முடைய மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறதா? சொன்னதன் விளைவாக அவர்கள் என்ன பதில் அளித்தார்கள்? அதைக் கல்லக்குடி என்று மாற்றவேண்டுமென்று சொன்னார்களே, அது என்ன ஆனது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மத்திய சர்க்காரிடம் இதுபற்றி பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. கல்லக்குடியா அல்லது பழங்கானத்தமா என்பது முக்கியம் அல்ல. டால்மியாபுரம் என்பதை மாற்ற வேண்டுமென்று மாநில அரசு, மத்திய அரசுக்கு சொல்லியிருக்கிறது. கல்லக்குடி என்று பெயர் வைக்கவேண்டுமா அல்லது பளிங்கானத்தம் என்று பெயர் வைக்கவேண்டுமா என்பதுபற்றி மத்திய அரசு முடிவு செய்யும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இம்மோதலில் 28 பேர் காயமடைந்தனர்.

(இ) 1968, பிப்ரவரி, 12-ம் நாள் அன்று, சிம்சன் தொகுதி கம்பெனிகளைச் சேர்ந்தவர்களும், சிம்சன் இணைப்புக் கம்பெனிகள் தேசியத் தொழிலாளர் சங்க உறுப்பினர்களும் சேர்ந்த 100 பேர் அடங்கிய ஒரு பிரிவினர் திரு. என். கண்ணன் தலைமையில் ஊர்வலமாக வந்தனர். அச்சங்கத் தலைவர் திரு. கே. குருமூர்த்தி அச்சங்கத்திலிருந்து 16 உறுப்பினர்களை வெளியேற்றியமைக்காக அவரைக் கண்டிக்கவும், அக்கம்பெனியின் வாக்களிப்பு முறையை எதிர்த்தும் அவர்கள் ஊர்வலம் நடத்தினர். 'மெயில்' அலுவலகத்தை ஊர்வலத்தினர் கடக்கும்போது, சிம்சன் தொகுதி கம்பெனி தொழிலாளர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும், ஊர்வலத்தினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் காயமடைந்த அனைவரும் அரசாங்கப் பொது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து இந்தியத் தண்டனைச் சட்டக் கோவையின் 147, 148, 323, 324-வது பிரிவின்மேல் ஒரு வழக்கும், இந்திய தண்டனைச் சட்டக் கோவையின் 324-வது பிரிவின்மேல் மற்றொரு வழக்கும் திருவல்லிக்கேணி காவல் நிலையத்திலும், சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்திலும் முறையே குற்ற எண் 229/68 ஆகவும், 423/68 ஆகவும் பதிவு செய்யப்பட்டது. சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு போதிய ஆதாரம் இல்லை எனத் தள்ளப்பட்டது. திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு தற்போது விசாரணையிலுள்ளது.

THIRU T. MARTIN : May I request the Hon. Chief Minister to state whether anybody has previously asked for Police protection in this regard ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிக் கேட்டதாக விவரம் இல்லை.

திரு. பி. வேலுசாமி : இந்தப் பழைய தொழிற்சாலைகளிலே புதிய தொழிற்சங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றனவே அதைத் தடுப்பதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைத் தடுப்பதற்கு சர்க்கார் எந்தவித நடவடிக்கையும் எடுக்க இயலாது.

திரு. வி. கே. கோதண்டராமன் : 1967-ம் வருஷ தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்றதற்குப் பிறகு இதுபோன்று காங்கிரஸ்காரர்கள் தலைமையில் இருக்கின்ற தொழிற்சங்கம், கூட்டணியைச் சேர்ந்த தி.மு.க. தொழிற்சங்கத்தில் உள்ளவர்களையும், கம்யூனிஸ்ட் தொழிற்சங்கத்தில் உள்ளவர்களையும் தொடர்ந்து தாக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்று முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இது விஷயத்தில் பல முறை தொழிலாளர் நல இலாகா அமைச்சரிடத்தில் கூறப்பட்டிருந்த போதிலும் சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப் பல புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அதையொட்டி அந்தச் சங்கங்களின் மீது நடவடிக்கை எடுப்பது என்பது இயலாத காரியம். இதைத் தொடர்ந்து நடைபெறுகிற அந்த சச்சரவுகளைத் தடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கும். பழிவாங்குகிறார்கள் அல்லது அரசியல் ரீதியாக ஈடுபடுகிறார்கள் என்ற விஷயங்களில் சர்க்கார் தலையிடமுடியாது.

திரு. க. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் மத்தியிலே தகராறுகள் ஏற்படுகிற நேரத்திலே எந்தத் தொழிற்சங்கங்கள் காரணமாக இருக்கின்றனவோ, அந்தச்



சங்கங்களினுடையே நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலையிலே அவற்றை எச்சரிக்கை செய்யக்கூடிய அளவிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதற்குச் சட்டப் பிரச்சினைகள் ஆராயப்படவேண்டும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற நிலைமை உருவாக்கப்படுமானால் இதுபோன்ற மோதல்கள் ஏற்படாமல் தொழிலாளர்கள் தற்காத்துக்கொள்ள முடியும், தொழிற்பிரச்சினையும் சீர்படும். இதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நல்ல யோசனை, முயற்சிக்கலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா: ஐயா, திரு. குருமூர்த்தி அவர்கள் தலைமையிலுள்ள தொழிற்சங்கங்கள் முதலாளிகளுக்கு ஆதரவாக இருப்பதனால்தான் இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அடிப்படை விவரங்கள் என்ன என்று தெரியாது. கலவரத்தைப்பற்றி மாத்திரம் நான் விடை அளித்திருக்கிறேன்.

திரு. கே. விநாயகம்: சிம்சன் குரூப் கம்பனி ஒர்க்கர்ஸ் யூனியன் பல ஆண்டுகளாக வேலை செய்து வந்து இப்போது அரசியல் அடிப்படையிலே இன்னொரு கம்யூனிஸ்ட் யூனியனும், தி. மு. க. யூனியனும் ஈடுபட்டு தகராறுகளை ஏற்படுத்துகின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அவர்களிடையே மோதல் ஏற்படுவது கூலி அடிப்படையிலோ அல்லது பாக்டரி சம்பந்தமான சில்லறை விவகாரங்கள் அடிப்படையிலோ வரவில்லை. அரசியல் காரணமாகத்தான் வருகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தாக்குதலுக்கு உள்ளான கண்ணன் அவர்கள் ஐ. என். டி. யு. சி. யூனியனைச் சேர்ந்தவர் என்பதை கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*Anti-Hindi agitation*

* 382 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government are aware that the Central Government has decided to claim compensation from the respective States for the destruction of railway properties during the anti-Hindi agitation in 1968 ; and

(b) if so, what is the attitude of our State ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) & (இ) இழப்பீடு கோருகிற வகையில் மத்திய அரசு நம் மாநில அரசுக்கு எதும் எழுதவில்லை.

திரு. கே. விநாயகம்: இழப்பீடு சம்பந்தமாக அவர்கள் ஒன்றும் கொடுக்கவில்லை என்றாலும் அந்தக் கிளர்ச்சியினாலே மத்திய அரசாங்கத்தின் சொத்துக்களுக்கு—ரயில்வே இலாகாவிற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது? இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று அவர்கள் நமக்கு எழுதியிருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவர்கள் நமக்கு எதுவும் எழுத வில்லை. ஆனால் போலீஸ் துறையினர் ரயில்வே துறையில் பொதுவாக ஏற்பட்ட நஷ்டம் சுமார் 30 லட்சம் ரூபாய் இருக்கும் என்று தெரி வித்தார்கள்.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவர் அவர்களே, பொருட்சேதங்கள் எவ்வளவு ஏற்பட்டாலும் பொருள் வாங்கிக்கொள்ளலாம். ஆனால், ஒரு உயிர் போய்விட்டால் அதைப்பெற முடியாது என்று மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்களே, அதைப்பற்றி மத்திய அரசு என்ன கருதுகிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதைப் படித்துப் பார்த்தோ அல்லது சொல்லக்கேட்டோ இருந்தால் அவர்கள் அதை நல்ல கருத்து என்று மெச்சி இருப்பார்கள்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** தலைவர் அவர்களே, பொதுத் தேர்தலுக்கு முன்பிருந்த ஆட்சியாளர்கள் 1965-ல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது மாணவர்கள் மீது கடுமையான அடக்கு முறையைக் கையாண்டு ஆத்திரமூட்டியதால் தானா பல சம்பவங்கள் நிகழ்ந்தன என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு கருணாநிதி:** இது அடக்குமுறை பற்றிய கேள்வி அல்ல. 1965 பற்றி உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1968-ம் ஆண்டில் மாணவர்கள் நடத்திய கிளர்ச்சியின்போது அடக்குமுறை எதும் கையாளப்படவில்லை. மூலக் கேள்வி, அந்தக் கிளர்ச்சியில் ஏற்பட்ட சொத்துக்களின் நஷ்டம் எவ்வளவு என்பது பற்றியாகும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இத்தகைய கலவரங்கள் நடப்பதற்குக் காரணம் இந்திய அரசினுடைய மொழிக் கொள்கைதான். அத்தகைய கலவரங்களால் மாநிலத்தினுடைய சொத் துக்களுக்குச் சேதம் ஏற்பட்டிருக்குமானால் அந்த நஷ்ட ஈட்டுத் தொகையை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்கு, அவர்கள்தான் காரணம் என்பதைக் கருதி, அவர்களிடமிருந்து பெறுவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பொதுவாக, இப்படி ஒருவரை யொருவர் நஷ்டஈடு கேட்கத்தக்க அளவில் எந்தக் கிளர்ச்சியும் நடை பெறுமலிருக்கவேண்டும் என்று நாமெல்லாம் விரும்புவோமாக.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மத்திய அரசுக்கானாலும் சரி, மாநில அரசுக் கானாலும் சரி, பொதுச் சொத்துக்கள்' நஷ்டப்படுத்தப்பட்டன; ஆகவே, நஷ்டத்திற்குக் காரணமாயிருந்தவர்களிடமிருந்து அந்த நஷ்டத்தை ஈடாக்கிக்கொள்வதற்கு அரசு எண்ணுகிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நஷ்டத்திற்குக் காரணமாக இருந்த வர்கள் யார் என்று தனித்தனியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** இம்மாதிரி கலவரங்கள் மொழிக்கொள்கை காரணமாக ஏற்படுகிறதென்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. மொழிக் கொள்கை காரணமாக இம்மாதிரி சேதங்களும் துன்பங்களும் ஏற்படாமல் தடுப்பதற்குத் தக்க ஏற்பாடுகளை இந்த அரசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதற்காகத்தான் மொழிக் கொள்கையில் எந்த அவசரத்தையும் காட்ட வேண்டாம் என்று மத்திய அரசை அடிக்கடி இந்த அரசு வலியுறுத்தி வருகிறது.





களுக்கு ஏற்பட்ட சேதங்கள் அதிகமா? இதற்குக் காரணம் என்ன? அந்நாள் அரசினுடைய போக்கா? அல்லது, இந்நாள் அரசினுடைய நல்ல நிலைமையா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்தச் சொத்து இழப்பு மதிப் பீட்டினுடைய விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

**திரு. அ. மாரிமுத்து:** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நஷ்டங்கள் இனியாவது நமது மாநிலத்தில் ஏற்படாமலிருப்பதற்கான ஏதாவது தக்க நடவடிக்கை நமது அரசு எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இப்படி ஏற்படாமலிருப்பதற்கு மத்திய அரசு மொழிக் கொள்கையை சர்வ ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும் என்று மாநில அரசு அடிக்கடி வற்புறுத்திக் கொண்டே இருக்கும்.

**திரு. ஏ. எம். ராஜா:** தலைவர் அவர்களே, இரயில் பெட்டி களிலும் இரயில் நிலையங்களிலும் இந்தியில் எழுதுவதன் மூலம் மக்களின் உணர்ச்சி தூண்டப்பட்டு, அதனால் இரயில் சொத்துக்களுக்கு ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்க்க தமிழ்நாட்டில் உள்ள இரயில் நிலை யங்களிலும், தமிழ்நாட்டுக்கு வரும் இரயில் பெட்டிகளிலும் உள்ள இந்தி எழுத்துக்களை அகற்றவேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தமிழ்நாட்டில் உள்ளவர்களுடைய இந்த உணர்ச்சியை எந்த அளவுக்குப் புரிந்துகொள்ள முடியுமோ அந்த அளவுக்கு மத்திய அரசு புரிந்துகொண்டிருக்கிறதென்றே நான் கருதுகிறேன்.

**திரு. கே. விநாயகம்:** சார், இந்தக் குறிப்பிட்ட சம்பவம் நடந்த அன்று, இரயில் பெட்டிகள் கொளுத்தப்பட்ட அந்தத் தேதியில், அப்பொழுது பொதுப்பணித் துறை அமைச்சராகவும் இப்பொழுது முதல மைச்சராகவும் இருப்பவர் நேரடியாகப் போய் பார்த்ததாகப் பத்திரி கையில் படித்தோம். இப்போதைய முதலமைச்சர் அவர்கள் அந்த சம்பவம் நடந்தபோது நேரடியாகச் சென்று பார்த்தாரா? முன்பு முதலமைச்சராக இருந்த உயர்திரு அண்ணாதுரை அவர்கள், "இதெல் லாம் செய்யக்கூடாது, இப்படியெல்லாம் செய்வது தவறு" என்று கண் டித்தது நம்முடைய முதலமைச்சருக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்தக் கிளர்ச்சிகள் நடைபெற்ற நேரத்தில் அந்தந்த இடங்களுக்குச் சென்று மாணவர்களைச் சமாதா னப்படுத்துகிற வேலையில் நான் ஈடுபட்டேன். அந்தக் கிளர்ச்சிகள் நடந்தவை 1965-ம் ஆண்டில்; மாணவர்களைச் சமாதானப்படுத்தாமல், அந்தக் கிளர்ச்சிகளை அடக்க துப்பாக்கிகள் அப்பொழுது பயன்படுத்தப் பட்டன. ஆனால், நாங்கள் அரசுப் பொறுப்பை ஏற்றபிறகு, கூடுமான வரை மாணவர்களைச் சமாதானப்படுத்துவதற்கு நாங்கள் நேரடியாகவே சென்று அந்த முயற்சியிலே ஈடுபட்டோம். அப்படி ஈடுபட்ட காரணத் தால், சென்ட்ரல் ஸ்டேஷனில் நடைபெறவிருந்த பெரும் அமளியைத் தடுக்க முடிந்தது. பேரறிஞர் அண்ணா அவர்களே அப்பொழுது, "வன்முறையில் மாணவர்கள் ஈடுபடவேண்டாம்" என்று பல தடவைகள் அறிக்கைகள் விடுத்தார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களே, மத்திய சர்க் காரினுடைய சொத்துக்களுக்கு மட்டும் அழிவு ஏற்பட்டதா? மாநில சர்க்காருடைய சொத்துக்கும் அழிவு ஏற்பட்டதா? அப்படியானால், மாநில சர்க்காருடைய சொத்துக்கு அழிவு ஏற்பட்டதனுடைய மதிப்பு

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : பொதுவாக மூப்பது இலட்சம் ரூபாய் இருக்கும் என்று குறிப்பிட்டேன். அதிலே மாநில சர்க்காருடைய சொத்துக்கு ஏற்பட்ட சேதம் மிகக் குறைவாகத்தான் இருக்கும்.

* 383 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the students prevented a Hindi film producer from shooting a film at Ootacamund ; and

(*b*) whether any protection has been given to the producer by the Government to resume the shooting of the film ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) மாணவர்கள் சிலர் படம் எடுப்பதற்கு மறுப்பு தெரிவித்தனரே தவிர, படம் எடுப்பதைத் தடுக்க வில்லை.

(இ) படத் தயாரிப்பாளர் வேண்டுகோளின் மீது காவலர் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசைப் பொறுத்த மட்டில், மொழிப் பிரச்சினை தீர்ந்துவிட்டது. என்றாலும், ஆங்காங்கே மொழிப் பிரச்சினை என்ற அடிப்படையில், இந்தி எதிர்ப்பு என்ற பெயரில் பொதுச் சொத்துக்கள் நஷ்டப்படுத்தப்படுகின்றன. இம் மாதிரி சம்பவங்கள் ஆங்காங்கு நடைபெறுகின்றன. ஆகவே, இப்படிப் பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க அரசு ஏதாவது சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எந்தச் சம்பவம் எங்கே நடை பெற்றது என்று உறுப்பினர்கள் குறிப்பிட்டால் அதுபற்றி நடவடிக்கை எடுக்க இயலும்.

**திரு. பெ. மலைச்சாமி:** உதகையில் நடந்த இந்த நிகழ்ச்சிக்குக் காரணம், பம்பாயில் திரையிடப்பட்ட சில தமிழ்ப் படங்களுக்கு அங்குள்ள சிவசேனையினர் எதிர்ப்புத் தெரிவித்ததுதான் என்பதும், அதன் காரணமாகத்தான் இந்த நிகழ்ச்சி நடந்தது என்பதும் அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதனுடைய எதிரொலியாகவும் இந்த நிகழ்ச்சி நடந்தது என்பது உண்மைதான். ஆனால், நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள் மறுப்பு தெரிவித்தனரே தவிர, தங்களு டைய தமிழ்நாட்டுப் பண்பினைக் காப்பாற்றிக் கொண்டார்கள்.

**திரு. கே. விநாயகம்:** உதகையில் நடைபெற்ற இந்த சம்பவம் பின்னால் நடந்தது என்றும், அதற்கு முன்னால்தான் சிவசேனைக் கிளர்ச்சி நடந்தது என்றும் சொல்வது சரியல்ல. வட நாட்டவர்களின் படங்களை எடுக்கக்கூடாது என்று நாம் கிளர்ச்சி செய்ததன் விளைவாகத் தான் அங்கு நமது தமிழ்ப் படங்களைக் காட்டக்கூடாது என்று அங்கிருப் பவர்கள் கிளர்ச்சி செய்தார்கள் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எது உண்மையாக இருந்தாலும், அந்த எதிரொலி இங்கேயும், இந்த எதிரொலி அங்கேயும் மாறிமாறி ஒலித்தன.

**திரு. ஆர். நாகசுந்தரம்** : ஐயா, இந்திப் படங்களில் ஆபாசக் காட்சிகள் அதிகமாக உள்ளன, நமது பண்பாட்டுக்கு அது உகந்த தல்ல என்ற காரணத்தால் நமது மாணவர்கள் இந்திப் படங்களை எதிர்த்தார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? (சிரிப்பு)



THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state whether the Government will come forward to take action against the producers of " Nil, Gavani, Kathali " (நில்-கவனி-காதலி) (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்தச் சுவரொட்டிகள் சம்பந்த மாக போலீஸ் அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

### அமைச்சர்கள் விஜயத்தின் போது முன்னெச்சரிக்கையாகக் கைதானவர்கள்.

* **384 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) 1968 மே மாதத்தில் முன்னாள் உணவு வருவாய், பொதுப்பணித் துறை அமைச்சர்கள், மதுரை, இராமநாதபுரம் மாவட் டங்களில் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது முன்னெச்சரிக்கையாகக் காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டார்களா?

(இ) ஆம் எனில், ஊர்வாரியாக எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : (அ) ஆம்.

(இ) மதுரை நகரத்தில்: 1968-ம் ஆண்டு மே மாதம் 23-ம் நாளன்று குற்ற இயல் நடைமுறை விதிக்கோவையின் 151-வது பிரிவின் கீழ் 382 பேர் கைது செய்யப்பட்டார்கள். விசாரணைக்காக 261 பேர் அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆனால், அவர்கள் அனைவரும் 23—5—1968 அன்று மாலை விடுதலை செய்யப்பட்டார்கள்.

**மதுரை வடக்கு** : தமிழக அமைச்சர்களுக்கு முன்பாக கருப்புக் கொடி காட்ட மதுரை புறப்படும்போது, சோழவந்தானில் 22-5-1968-ம் தேதி இரவு இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த 12 பேர்கள் தடுப்பு முறை அடிப்படையில் கைது செய்யப்பட்டனர். அவர்களும் அன்று மாலை விடுதலை செய்யப்பட்டார்கள்.

**இராமநாதபுரம்**: 26—5—1968-ல் தமிழக நிதி அமைச்சர் அவர்கள் திருப்புவனம் வந்தபோது 61 காங்கிரஸ் தொண்டர்கள் கைது செய்யப் பட்டனர். அவர்களும் கைது செய்யப்பட்ட அன்று மாலை விடுதலை செய் யப்பட்டார்கள்.

**திரு. ஏ. முனியாண்டி** : தலைவர் அவர்களே, அவர்கள் அத்தனை பேருமே வெளியார்கள்—சம்பளம் கொடுத்துக் கூப்பிட்டுக்கொண்டுவரப் பட்டவர்கள்—என்ற செய்தி அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : 382 பேர் கைது செய்யப்பட்ட வர்களில் 261 பேர் வெளியூரிலிருந்து வந்தவர்கள். அவர்கள், ஏன் வந்தார்கள் என்று விசாரிக்கப்பட்டார்கள் என்ற அளவிலேதான் இங்கு விவரம் இருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : இதுபோன்று எதற்காக அவர்கள் கைது செய்யப்பட வேண்டும்? இப்படிக் கைது செய்வது, மேலும் காங்கிரசைப் பலப்படுத்தக்கூடிய தன்மையில், அவர்களுக்கு விளம்பரம் கொடுக்கக்கூடிய தன்மையில் உள்ளது என்பதை முதலமைச்சர் அவர்கள் உணருகிறாரா? இனிமேலாவது அப்படிக் கைது செய்வது நிறுத்தப் படுமா?

கருதப்பட்டால் அப்படிப்பட்ட இடங்களில் முன்ஜாக்கிரதையாக காலையில் கைது செய்து மாலையில் அவர்களை விடுதலை செய்யும் நிகழ்ச்சி ஒன் றிரண்டு இடங்களில் நடைபெற்றிருக்கிறது. மதுரையில் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சிக்கு அமைச்சர்கள் சென்ருர்கள். நானும் சென்றேன். அதாவது மதுரை முத்து அவர்கள் வீட்டுத் திருமண நிகழ்ச்சிக்குச் சென்றிருந் தோம். திருமணத்திற்கு வருகிறவர்களுக்குக் கருப்புக் கொடி காட்டுவது என்பது எந்தவகையிலும் நியாயம் அல்ல என்று அங்கிருக்கும் நல்ல காங்கிரஸ்காரர்களே கூட கருதினர்கள். ஆகவே, திருமணத்திற்கு வரும் நேரத்தில் கருப்புக் கொடி காட்டும்போது அமளி ஏதாவது ஏற்படக்கூடும் என்று கருதி, அவர்கள் காலையில் கைது செய்யப்பட்டு மாலையில் விடுதலை செய்யபபட்டார்கள்.

**திரு. ப. மகாதேவன் :** தலைவர் அவர்களே, கருப்புக் கொடி காட்டுவது என்பது ஜனநாயக முறையில் எதிர்ப்புத் தெரிவிக்கும் கருவியாக இருப்பதால், அதைத் தடுக்கும் நடவடிக்கை எடுக்காமல் இருக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கருப்புக்கொடி காட்டுவது என்பது ஜனநாயகத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றுதான். நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்த நேரத்தில் அப்படிக் காட்டியிருக்கிறோம். ஆனால் கல்யாணத்திற்குப் போகும் நேரத்தில் கருப்புக் கொடி காட்டிய நிகழ்ச் சியைப் பார்த்ததில்லை.

**திரு. ம. பொ. சிவஞானம் :** அமைச்சர்களிடத்தில் அதிருப்தியைத் தெரிவிப்பதற்கு அமைதியாகக் கருப்புக்கொடி காட்டப்படுமானல் அதை அரசு அனுமதிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கேள்வி கேட்கின்ற திரு. சிவஞானம் அவர்களே கருப்புக்கொடி காட்டியிருக்கிருர்கள். அரசு அனுமதித்திருக்கிறது.

**திரு. கே. போஜன் :** கருப்புக்கொடி காட்டுவதாகச் சொல்லி, பலாத் காரத்தை உபயோகிப்பது சரியா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி பலாத்காரத்தை உபயோ கிக்கக்கூடும் என்று தெரிகிறபோதுதான் முன் எச்சரிக்கையாக இருக் கிறார்கள்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** கருப்புக்கொடியை காட்டுவதாகச் சொல்லி பெரிய பெரிய தடிகளில் கொடிகளைக் கட்டிக்கொண்டு வருகிருர்களே, கொடிக் கம்பின் அளவு இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்று வரையறுக்க நடவடிக்கை எடுக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வாணியம்பாடிக்கு நான் சென்றி ருந்த போது கூட கொடி அல்ல, தடி கட்டிவந்தார்கள். கொடிப்பக்கம் அவர்கள் கையில் இருக்க, தடிப்பக்கம் என் முழங்கையில் பட்டது.



இன்னென்று, அமைதிக்குப் பங்கம் வரும் என்பதை எப்படித் தெரிந்துகொள்ள முடியும் என்று சொல்கிறேன். நம்முடைய உணவு அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள் திரிபுவனம் செல்கிற நேரத்தில் கருப்புக்கொடி காட்ட இருந்த காங்கிரஸ்காரர்களுக்கு நமது போலீசார் இடம் ஒதுக்கித் தந்து இன்ன இடத்தில் இருந்து காட்டுங்கள் என்று சொன்ஞர்கள். மற்றொரு இடத்தில் அமைச்சருக்கு திராவிட முன் னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வரவேற்புக் கொடுக்க இருந்தது. அந்த இடத்தில் இருந்துதான் கருப்புக்கொடி காட்டுவோம் என்ற கார ணத்தினுல் அவர்களை அப்புறப்படுத்தி கைது செய்து மாலையில் விடுதலை செய்தார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** ஸ்தாபன ரீதியாக கருப்புக் கொடி காட்ட முடிவு எடுத்து, முன் அறிவிப்புக் கொடுத்திருந்தார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஸ்தாபன ரீதியாக முடிவு எடுக்க வில்லை. காங்கிரஸ் தலைவர்களேகூட ஸ்தாபன ரீதியாக முடிவு எடுக்கப் பட்டதல்ல என்று அறிக்கை கொடுத்திருக்கிருர்கள். ஸ்தாபனத்திற்கே அவர்கள் கட்டுப்படாதிருக்கிறபோது அரசாங்கத்திற்கு எப்படி முன் அறி விப்புக் கொடுப்பார்கள் ?

## *Indian Institute of Public Administration*

* 385 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any grant has been made by the Government to the Indian Institute of Public Administration, Madras, in 1968 for conducting seminars ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:**

(அ) ஆம்.

(இ) 1968 ஆகஸ்ட் 9, 10-ம் நாட்களில் சென்னையில் நடைபெற்ற இம் மாநில இளநிலை அதிகாரிகளுக்கான ஒரு கருத்தரங்கு குறித்து ஆகும் செலவைச் சரிக்கட்ட பொது நிர்வாகம் குறித்த இந்திய நிறு வனத்தின் தமிழ்நாட்டு வட்டாரக் கிளைக்கு ரூ. 2,500 மானியம் வழங் கப்பட்டுள்ளது.

**திரு. கே. விநயகம் :** இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆப் பப்ளிக் அட் மினிஸ்ட்ரேஷன் ஆற்றுகின்ற நல்ல பணிகள் எவை எவை என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது சுயேச்சையான அரசியல் சார்பற்ற நிறுவனமாகும்.

பொது நிர்வாகத்தின் எல்லாப் பிரிவுகளைப் பற்றியும் பாடப் பயிற்சி வகுப்புகள் நடத்த வகை செய்து கொடுத்தல், மாநாடுகள் விவாதக் குழுக்களைக் கூட்டுதல், பொது நிர்வாகம் குறித்த ஆராய்ச்சியை மேற் கொள்ளுதல், பொது நிர்வாகம் பற்றிய வெளியீடுகள், , ஆராய்ச்சிக் குறிப்புகள், நூல்கள் வெளியிடுதல், கருத்துக்களையும், அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ளும் ஒரு அரங்கமாக அமைதல், பொதுவாக பொது நிர்வாகம் பற்றியத் தகவல்களை வெளியிடும் ஒரு நிலையமாகச் செயல் படுதல்.

## *Family cards system*

* 386 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether the Hon. Minister is aware of the fact that for many months the card holders of Tirunagar, Madurai City did not get rice supply?

[1969 மார்ச் 20

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திருநகரில் குடும்பக் கார்டு முறை அமல் செய்யப்படவில்லை.

* 387 வினா.—**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை நகரைச் சுற்றி ஐந்து மைல் சுற்றளவில் உள்ள பிரதேசங் களில், குடும்பக் கார்டுகளின் மூலம் அரிசி முதலிய தானியங்களை நியாய விலைக் கடைகளின் மூலம் வினியோகிப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்திடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இல்லை.

**திரு. கே. விநாயகம் :** இந்தத் திருநகர் பகுதியில் இருக்கிற குடும்பங் களுக்கு எத்தனை நாள் கொடுக்காமல் இருந்திருக்கிறார்கள் ? எப்போது கொடுக்க ஆரம்பித்தார்கள் ? இதன் விளைவாக லாபம் அடைந்த குடும் பங்கள் எத்தனை ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** எத்தனை நாள் கொடுக்காமல் இருந்தார்கள் என்று கேட்பதைவிட எத்தனை நாள் கொடுத்தார்கள் என்று கேட்கலாம். 7 நாட்களேதான் கொடுத்தார்கள். அதுவும் முன்னாள் முதல் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் 14—11—66 இல் இருந்து ஒருவாரம் கொடுத்தார்கள். மதுரையைச் சுற்றியுள்ள 26 கிராமங்களுக்குக் கொடுத்தார்கள். அப்புறம் நிறுத்திவிட்டார்கள்.

**திரு. என். சங்கரய்யா :** மதுரை, சென்னை நகருக்கு அடுத்தபடியாக பெரிய நகரம். அந்த நகரத்தைச் சுற்றி ஐந்தாறு மைல்களுக்குள் உள்ள பிரதேசம் தொழிலாளர்கள் நிறைந்த இடமாக இருக்கிறது. மத்திய மாநில ஊழியர்கள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. இவர்கள் விவசாயத்தை நம்பியிருக்கக்கூடியவர்கள் அல்ல. ஆகவே, மாவட்ட கலெக்டர் மூலமாக இந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கும் அரிசி கொடுக்க நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசு உத்தரவிடுமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மதுரை மாவட்டம் பற்றாக் குறை மாவட்டம்தான். மதுரையை அடுத்த 26 கிராமங்களுக்கு வழங்க வேண்டுமானால் 134 டன் தேவைப்படுகிறது. இன்றைக்கு இருக்கிற சூழ் நிலையில் அந்த அளவு கொடுக்க முடியாத காரணத்தினால் நிறுத்தப்பட் டிருக்கிறது.

**திரு. டி. மார்டின் :** திராவிட முன்னேற்றக் கழக தோதல் வாக் குறுதியில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுப்போம் என்று தெரி வித்தார்கள். 1972-ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்பாகவாவது எல்லா இடங்களுக்கும் படி அரிசித் திட்டத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்கும் திட்ட வாசகம் கிடையாது. தேர்தல் நேரத்தில் அப்படிக் கொடுக்க முடியாதா என்கிற கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கான சூழ்நிலையை உருவாக் கலாம் என்கிற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. ஆட்சிக்கு வந்தவுடன் சென்னை, கோவை போன்ற நகரங்களில் இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது. இன்னும் நாடு நல்ல வளம்பெறுகிற சூழ்நிலை வருகிறபோது இதை விஸ்தரிக்கும் யோசனை இருக்கிறதே தவிர, திட்டத் தைக் கைவிடும் ஆசை இல்லை. நேரம் [illegible]



1969 மார்ச் 20]

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மதுரை நகரில் குடியிருந்த ஆசிரியர்கள், அரசாங்க சிப்பந்திகள், இன்னும் நகர சபை ஊழியர்கள் ஆகியவர்கள்தான் சுற்றுப்புறங்களில் உள்ள காலனிகளில் குடியமர்த்தப் பட்டிருக்கிறார்கள். மதுரை நகரிலேயே வசித்தபோது அவர்களுக்குக் கார்டு கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் மதுரையைச் சுற்றி ஐந்து மைல் களுக்குள் அமைந்துள்ள காலனிகளில் குடியேற்றப்பட்டவுடன் கார்டு வழங்கப்படவில்லை. இவர்களுக்காவது வழங்குவது நியாயம் என்பதை உணர்ந்து அரசு இந்தப் பகுதிக்கும் விஸ்தரிக்க ஏற்பாடு செய்வார்களா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மதுரையில் இருந்து வெளி யேற்றப்பட்டுள்ளவர்களுக்கு மட்டும் காலனிப் பகுதியில் விஸ்தரித்தால் அந்தப் பகுதியில் குடியுள்ள மற்றவர்களும் கேட்பார்கள். சென்னை யிலேயே அதுபற்றி எழுந்துள்ள சங்கடங்களை நாம் அறிவோம். இப் போது சூழ்நிலை சரியில்லாத காரணத்தினால் இப்போது அந்தப் பகுதிக்கு விஸ்தரிப்பது சிரமமாக இருக்கும்.

**திரு. என். சங்கரய்யா :** அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட 26 கிரா முற்பகல் 9-30
மங்களுக்கு கொடுப்பது என்பது 134 டன் ஆகும் என்று சொன்னார்கள் மதுரையின் அதிகப்படி சுற்றளவு காரணமாக தொழிலாளர்கள் அதிக மாக உள்ள சில முக்கியமான கிராமங்களுக்கு அப்படிக் கொடுக்கலாம் என்று கலெக்டர் அவர்களுக்கு ஒரு ஆலோசனை இருப்பதாகக் கூறு கிறார்கள். ஆகவே 134 டன் என்று பாராமல் ஜெய்ஹிந்த்புரம், பழங்கா நத்தம் போன்ற பிரதேசங்களுக்கு கலெக்டர் அவர்களின் உசிதம்போல் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** இதுபற்றி கலெக்டர் அவர் களிடம் இருந்து தகவல் வந்து, அவசியமானால் பரிசீலிக்கலாம்.

**திரு. கே. விநாயகம் :** இந்த திருநகர் பொறுத்தவரையில், போன ஆட்சி என்ன செய்தது என்பதல்ல கேள்வி. 1967 மார்ச்சில் இந்த ஆட்சிவந்த பிறகு எந்த மாதத்தில் இந்தப் பகுதிக்கு அரிசி சப்ளை செய் யப்பட்டது ? எவ்வளவு நாட்கள் செய்யப்பட்டது ? எங்கே தடைபட்டிருக் கிறது ? இப்போது கொடுக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** இந்தக் கேள்வியே போன ஆட்சியில் நடந்த சம்பவத்தைப் பற்றித்தான். 14—11—1966 முதல்தான் ஒரு வாரத்திற்குத்தான் அரிசி வழங்கப்பட்டது திருநகரில். இது திரு. விநாயகத்திற்குத் தெரியவில்லை என்றால் மாவட்ட கலெக்டர் அவர்கள் கொடுத்திருக்கிற தகவலிலிருந்து இதைத் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். கலெக்டர் அவர்கள் கொடுக்கிற விஷயத்தை நம்பவேண்டாம் என்று திரு. விநாயகம் அவர்கள் சொல்வார்களானால் அப்படி திரு. விநாயகம் அவர்கள் கொடுக்கிற தகவலை அரசாங்கம் எப்படி நம்ப முடியும் ?

THIRU K. VINAYAKAM : Sir, my question has not been answered. இவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு இந்தப் பகுதியில் போட்டார்களா இல்லையா என்பதுதான் கேள்வி.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நாங்கள் ஆட்சிக்குவந்த பிறகு இந்தப் பகுதியில் அரிசி போடவில்லை என்பதை திட்டவட்டமாக கூறியிருக் கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. விநாயகம் அவர்கள் கேள் விக்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கவில்லை என்றால், பதில் அளிக்க வில்லை என்று சொல்லத் தேவையில்லை. அப்படிக் கேட்கக்கூடாது.

*388 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: [1969 மார்ச் 20
மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராஜபாளையத்தில் குடும்பக் கார்டுக்குப் போடப்படும் அரிசியின் அளவு 1968 ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் குறைக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(உ) அரிசியின் அளவை உயர்த்த வேண்டுமென்ற முறையீடு அரசுக்கு வந்ததா?

(எ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :**

(அ) ஜூலை மாதம் 28-ந் தேதி ஆரம்பமான வாரத்திலிருந்து இராஜபாளையத்தில் அரிசி வினியோக அளவு 1,200 கிராமிலிருந்து 1,000 கிராமாக குறைக்கப்பட்டது.

(இ) இராமநாதபுரம் மாவட்டத்தில் நபரொன்றுக்கு 1,200 கிராம் வீதம் குடும்பக்கார்டு வழங்க வாரம் ஒன்றுக்கு 750 டன் அரிசி தேவைப் படுகிறது. இம்மாவட்டத்திலுள்ள அரிசி கையிருப்பு குறைவாக இருந்தது. வெளி மாவட்டங்களிலிருந்து போதுமான அரிசி வரவும் வாய்ப்பில்லாம லிருந்தது. ஆகவே கையிருப்பு அரிசியை குறுவை நெல் அறுவடை வரை சமமாக பகிர்ந்தளிக்கும் நோக்கத்துடன் ஒருவருக்கு வாரத்திற்கு 1,200 கிராம் அரிசி அளித்து வந்ததை 1,000 கிராமாக தற்காலிகமாக குறைக்கப்பட்டது.

(உ) விருதுநகர், சிவகாசி பகுதிகளிலிருந்து உணவுக் குழுவின் மூலமாகவும் சட்டப்பேரவை உறுப்பினர் திரு ஏ. அ. சுப்பராஜா அவர்களின் நாட்ட ஈர்ப்பு அறிவிப்பின் மூலமும் அரிசி வினியோக அளவை உயர்த்தக் கோரி முறையீடுகள் வந்தன.

(எ) குறைக்கப்பட்ட அரிசியின் அளவை ஈடுசெய்யக் கோதுமை, கோதுமைப் பொருள்கள், மைலோ ஆகியவை வினியோகிக்கப்படுகின்றன. எல்லா உணவுப் பொருள்களும் சேர்ந்து நபர் ஒன்றுக்கு வாரத்திற்கு 2,000 கிராம் வினியோகிக்கப்படுகிறது. இது ஜூலை மாதத்திற்கு முன் வழங்கப்பட்ட உணவுப்பொருள்களின் மொத்த அளவை விட அதிகம். மேலும் மற்ற மாவட்டங்களிலிருந்து அரிசி போதுமான அளவு வந்ததும் அரிசியின் அளவு அதிகரிக்கப்படும்.

**திரு. டி. மார்டின் :** தாற்காலிகமாக நிறுத்தப்பட்ட அரிசியை இப்போது கொடுத்து வருகிறார்களா? அப்படிக் கொடுக்கவில்லையென்றால் டெல்லியிலிருந்து வரப்போகிற அரிசியிருக்கிறதே, அந்த அரிசி வந்தால் அந்த அளவைக் கூட்டிக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்போது அதே நிலைதான் இருக்கிறது. 10,000 டன் அரிசியை அனுப்புவதற்கு, முதன் முறையாக நமது முதல் அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருந்த நேரத்தில் அனுப்புவதற்கு மத்திய உணவு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். ஆனால், திரு. வினயகம் அவர்களுக்கு அதில் நம்பிக்கையில்லை. யார் கொடுக்கப்போகிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தயவு செய்து நான் கேள்விக்குப் பதில் சொல்லும் போது அவர்கள் சும்மாயிருந்தால் நான் பதில் சொல்வதற்கு சௌகரியமாக இருக்கும். அப்படிக் கொடுக்கவேண்டாமென்று திரு. வினயகம் அவர்கள் முயற்சி செய்தாலும் நிச்சயமாக அந்த அரிசி வந்தே தீரும். திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியே தீருவார்கள்.



1969 மார்ச் 20]

**திரு. அ. மாரிமுத்து:** நிறைய அரிசி கிடைக்கப்போவதாக அமைச் அவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்தையே நம் வாழும் கிராமங்களில் உள்ள மக்கள், விவசாயிகள், ஏழை எளியவர்க அரிசி கிடைக்காமல், தானியம் கிடைக்காமல், இரண்டொரு மாதங்களுக்கு தான் இருக்கும் என்ற நிலையில் இருக்கிறார்கள். ஆகவே இந்த அரசாங்க ஆய்வு செய்து, அந்த மக்களுக்கு அரிசி அளிப்பதற்கு நடவடிக்கைக எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தஞ்சை மாவட்டத்தில் கூட உண இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்வது உண்மையானால் அ கவனிக்கப்படும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையி அங்கு லெவி ஸிஸ்டம் இருக்கிறது. அதன்படி லெவி எவ்வளவு போட படுகிறது ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** கொள்முதல் பற்றி வரும்போ பின்னால் கேளுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** பற்றுக்குறை காரணமாக, பஞ்சநிலை காரணமாக இதுபோன்று பல பிரதேசங்களுக்கு கொடுக்க முடியாததொ நிலைமையும், கொடுத்ததைக்கூட குறைக்கக் கூடிய நிலைமையும் உள்ளது ஆகவே இதைச் சரிசெய்வதற்காக வேண்டி, விவசாய அபிவிருத்திக்கா வேண்டி, இதனால் ஏற்படக்கூடிய கஷ்டத்தை சரிசெய்வதற்காக வேண் மத்திய அரசிடம் முதல் அமைச்சர் அவர்கள் டெல்லிக்குப் போன போ ஏதாவது கேட்டார்களா? அப்படி கேட்டு அவர்கள் மறுப்பதாகயிருந்தா மதுவிலக்கை ரத்து செய்வதன் மூலம் 40 கோடி ரூபாய் வருமானம் வரு என்று சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது இராஜபாளையத்தில் குடும்ப கார்டுக்கு போடப்படும் அரிசி பற்றிய கேள்வி. எல்லாவற்றையும் பற் கேட்கக்கூடாது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அதை நடைமுறைக்குக் கொண் வந்து உடனடியாக போதுமான அளவு அரிசி விநியோகம் செய்யப்படுமா

(பதில் இல்லை.)

## தஞ்சையில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்

*389 வினா: திரு. என். கிட்டப்பா
திரு. என். எஸ். வி. சித்தன் } மாண்புமிகு உணவு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1968, ஜனவரி முதல் 14-4-1968 முடிய அரசினரால் கொள்முதல் செய்யப்பட்ட நெல் எவ்வளவு?

(இ) கொள்முதல் செய்யப்பட்ட நெல் தஞ்சை மாவட்ட மக்களுக்கு வினியோகிக்கப்பட்டதா? அல்லது வேறு மாவட்டங்களுக்கு கொண்டுபோகப் பட்டதா?

(உ) அப்படி கொண்டு போகப்பட்டிருந்தால் வேறு எந்தெந்த மாவட் டங்களுக்கு வினியோகிக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:**

(அ) 1-1-1968 முதல் 14-4-1968 முடிய தஞ்சை மாவட்டத்தில் 2,10,501 டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

(இ) கொள்முதல் செய்யப்பட்ட நெல் பற்றுக்குறை மாவட்டங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. தஞ்சாவூர் மாவட்ட மக்களுக்கும் வழங்கப்பட்டது.

(உ) 1-1-1968 முதல் 14-4-1968 முடிய வேறு மாவட்டங்களுக்குக் கொண்டு போகப்பட்ட அரிசியின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(அரிசி டன்களில்.)

| | | |
|---|---|---|
| 1. | சென்னை | 45,111 |
| 2. | கோயம்புத்தூர் | 28,824 |
| 3. | நீலகிரி | 5,027 |
| 4. | ராமநாதபுரம் | 12,549 |
| 5. | கன்னியாகுமரி | 15,711 |
| 6. | மதுரை | 9,260 |
| 7. | திருநெல்வேலி | 10,423 |
| 8. | சேலம் | 6,189 |
| | மொத்தம் | 1,33,094 |

**திரு. என். கிட்டப்பா:** அரசாங்கம் நெல் கொள்முதல் செய்யும்போது மிராசுதார்கள் விதை, தசு கூலிக்கு குறிப்பிட்ட அளவிற்கு நெல்லை ஒதுக்கி வைத்துக்கொண்டு மீதி நெல்லைத்தான் கொள்முதலுக்குத் தருகிறார்கள். விதை, தசு கூலிக்கு வைத்துக்கொள்ளும் நெல்லை பின்னால் அதிக விலைக்கு விற்றுவிட்டு விவசாயக் கூலிகளுக்கு கூலிக்கு நெல் தருவதற்குப் பதிலாக பணம்தான் கொடுக்கிறார்கள். கூலிக்கு நெல் தராததின் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் சில இடங்களில் அப்படி விவசாயத் தகராறுகள் ஏற்படுவதற்கு இது காரணமாகி விடுகிறது. ஆகவே அவர்களுக்கு கூலியை நெல்லாகவே வழங்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** அரசாங்கத்தின் நோக்கமும் அதுதான். தொழிலாளர்களின் கோரிக்கை நியாயம் என்பதை ஒத்துக் கொண்டு தானியமாகக் கொடுக்கவேண்டும் என்பதைத்தான் வலியுறுத்தி வருகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா:** அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் 2,10,000 டன் கொள்முதல் செய்வதாகச் சொன்னார்கள். எவ்வளவு இலட்சம் டன் கொள்முதல் செய்வதற்கு உத்தேசித்திருந்து இவ்வளவு செய்யப்பட்டிருக்கிறது? மற்ற மாவட்டங்களுக்கும் தஞ்சை மாவட்டத்திற்கும் இடையே கொள்முதலில் வித்தியாசப்பட்ட நடைமுறை கையாளப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** நான் குறிப்பிட்டது 1-1-1968 லிருந்து 14-4-1968 முடிய 2,10,601 டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிலைமையில் இன்னும் கொள்முதல் செய்யவேண்டிய நிலைமையிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் கூடுதலாக கொள்முதலுக்கு அளக்கிறார்கள். காரணம், அங்குதான் நெல் கூடுதல் விளைச்சலாகிறது.

**திரு. கே. பி. எஸ். மணி:** ஐயா, பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்கப்படுகின்ற நிலைக்கு தமிழகத்திலே நிலைமை வந்தும் தஞ்சை ஜில்லாவிலே இருக்கின்ற பெரிய மிராசுதாரர்கள் பூரணமாக நெல்லைக் கொள்முதலுக்கு கொடுக்காமல் பல்வேறு அதிகாரிகளை மிரட்டிக்கொண்டிருக்கிறார்களே, அம்மாதிரி இல்லாமல் விதைத் தசுவிற்கும், கூலிக்கும் போக மீதமுள்ள நெல்லை அதிகாரிகளே எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் அரசாங்கம் அவர்களுக்கு அதிகாரத்தையும் அனுமதியையும் கொடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** சில இடங்களில் தேவைக்கு அதிகமான நெல்லைத் தேக்கி வைத்திருக்கிறார்கள் என்ற தகவல் அரசுக்குக் கிடைக்கிற நேரத்திலே அந்த விவசாயிகளைக் கூடுதலாகக் கொள்முதலுக்காகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது.



நானே கூட சில விவசாயிகளைச் சந்தித்து, நீங்கள் தேவைக்குப் போக அதிகமாக வைத்திருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது, அதைக்கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். அப்படிப்பட்ட சிலர் தந்திருக்கிறார்கள். சிலர் சொந்த வீட்டில் பதுக்கி வைக்காமல் வேறு சில இடங்களில் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்றால், அப்படிப் பதுக்கி வைத்திருந்தால் அதையும் வாங்குவதற்கு அரசாங்கம் தயங்குவதில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** கொள்முதல் விஷயத்திலே ஐந்து ஏக்கருக்குக் குறைவாக வைத்திருக்கின்றவர்களிடமிருந்து எவ்வளவு கொள்முதல் செய்கிறார்கள், 4 ஏக்கர் வைத்திருக்கின்றவர்களிடமிருந்து எவ்வளவு கொள்முதல் செய்திருக்கின்றார்கள் என்று தெரிவிப்பார்களா? லெவி சிஸ்டத்தைப்பற்றி விளக்கம் அளிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. கே. சகாதேவக் கண்டர்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நெல்லை அறுவடை செய்கின்ற நேரத்திலே கொள்முதல் அதிகாரிகள் அதற்குக் காவல் போடும்படி செய்கிறார்கள். அப்படிப் போடும்படி அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** அறுவடையான பிறகு நெல் மாயமாகப் போய்விடுகிறது. அப்படிச் சந்தேகப்படுகிற இடத்திலேதான் அப்படிக் கண்காணிக்கப்படுகிறது. சிலர் கொள்முதலுக்கு வீடுகளில் அளக்கிறார்கள், சிலர் களத்திலேயே அளக்கிறார்கள், சிலர் சொந்த வீட்டிலே பதுக்கி வைக்கிறார்கள். சிலர் வேறு இடத்திலே பதுக்கி வைக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களிடம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டியிருக்கிறது. இவையெல்லாம் உறுப்பினர் திரு. சகாதேவக் கண்டர் அவர்களுக்குத் தெரியும்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தஞ்சை மாவட்டத்திலே உணவு தானியத்தைப் பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்கக்கூடியவர்கள் அதிக நிலம் உள்ளவர்கள். அதிக நிலம் உள்ளவர்கள் அம்மாதிரிச் செய்வதாலே 10 ஏக்கருக்கு மேல் நிலம் உள்ளவர்களிடம் களத்து மேட்டிலேயே செலவு போக மீதமுள்ளதை கட்டாயமாகக் கொள்முதலுக்கு அளக்க வேண்டுமென்ற முறையை அரசாங்கம் மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இது பற்றி உணவுக் கொள்கையைப் பற்றிப் பேசுகின்றபோது பதில் சொல்லலாம் என்று இருக்கிறேன். கனம் சுப்பையா அவர்கள் சொல்வதுபோல் 10 ஏக்கர் நிலம் உள்ளவர்களிடம் அம்மாதிரியாகக் கொள்முதல் செய்வதன் மூலமாக இந்தப் பிரச்னை தீரும் என்று அரசு கருதவில்லை.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திற்கு அதிகப்படியான அரிசி தேவைப்படுகிறது. அந்த நேரத்தில் பெரும் நிலப் பிரபுக்கள், மடாதிபதிகள், கோவில்கள் போன்ற இடங்களில் உள்ள சர்ப்ளஸ் நெல்லை கட்டாயமாகக் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் முயற்சித்தால் அதிகப்படியான தானியம் கிடைக்கும் என்பதால் அந்த முறையிலே சிந்தித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இன்று மொத்த விளைச்சலிலே ஐந்தில் ஒரு பங்குதான் கொள்முதல் செய்யப்படுகிறது. அதற்கே எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். நியாயமான அளவுக்குக் கொள்முதல் செய்தால் உணவு நெருக்கடியைத் தீர்த்துவிடலாம். அதிகப்படியான நெருக்கடி ஏற்படுகின்ற நேரத்திலே கனம் அங்கத்தினருடைய யோசனைப்படி கூடுதலாகக் கொள்முதல் செய்வதைப்பற்றி அரசு யோசிக்கும்

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட்டபடி கொள்முதல் செய்யப்பட்ட நெல்லில் ஃபுட் கார்ப்பரேஷன் மூலமாகக் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லும் அடங்குகிறதா? அல்லது அரசாங்கமும் ஃபுட் கார்ப்பரேஷனும் தனித்தனியே கொள்முதல் செய்கிறார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அவர்கள் கொள்முதல் செய்வதையும் நமக்குத்தான் கொடுக்கிறார்கள்.

## HIGH YIELDING GRAIN IN TIRUCHIRAPPALLI DISTRICT.

*390 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the Government proposes to bring under plough more acreage for high yielding grain in Tiruchirappalli district; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) ஆம்.

(இ) அமோக விளைச்சல் உணவு தானியம் 1967–68 இல் இருந்த 73,163 எக்கரிலிருந்து 1968–69-க்கு 1,68,000 எக்கருக்கு உயர்த்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு கே. வினாயகம் :** அமோக விளைச்சல் அடிப்படையிலே என்ன என்ன கிரெய்ன்ஸ், வாட் கைண்ட் ஆப் கிரெய்ன்ஸ், கோ. 2, எடிடி. 27 என்றெல்லாம் சொல்லுகிறார்களே, என்ன என்ன கிரெய்ன்ஸ் அமல் செய்யப்படுகிறது ?

According to the figures given by the Hon. Minister, will he be pleased to state what varieties of grain are being introduced in this area?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் உறுப்பினர் வினாயகம் அவர்கள் தப்பித்துக்கொண்டார்கள். அவர்கள் என்ன என்ன வகை நெல் என்று பெயரைக் குறிப்பிடுகின்ற நோத்திலே இங்கே அமலில் இல்லாத கோ. 2 பற்றியெல்லாம் சொன்னார்கள். ஒருவேளை திருத்தணியிலே போடுகிறார்களோ, என்னவோ? எடிடி 27, சிஓ 25, சிஓ 29 ஆகியவை தஞ்சாவூர் மாவட்டத்திலே அமலாக்கப்படுகிறது. திருச்சியிலே அதே நெல்தான். அதற்கு மேல் ஐ. ஆர். 8 வடிகால் வசதியுள்ள பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது.

**திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் :** தலைவர் அவர்களே, விவசாயிகள் கஷ்டப்பட்டு விளைவித்த நெல்லைக் கண்டிப்பாகக் கட்டாயப்படுத்திக் கொள்முதல் செய்யவேண்டுமென்று மன்ற - உறுப்பினர்கள் சொல்கிறார்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொள்முதல் பற்றிய கேள்வி போய்விட்டது.

THIRU B. VENKATASWAMY : May I know the increase in produce after introducing these graded grains in Thanjavur **district ?**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது திருச்சி டிஸ்ட்ரிக்ட் பற்றியது.

**THIRU** B. VENKATASWAMY : I will amend the question, **Sir, may** I know whether the produce increased after introducing **these** graded grains in Tiruchirappalli district?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இன்றைய தினத்தில் 1967—**68-லே 73,163** டன்னாக இருந்தது, 1968—69-லே 1,66,184 டன்னாக **உயர்ந்திருக்கிறது.**





**திரு. பா. நாகலிங்கம் :** தலைவர் அவர்களே, ஐ. ஆர். 8 முன்னதாக 370 ரூபாயிலிருந்து வந்தது. செங்கற்பட்டு மாவட்டத்திலே பல பகுதிகளில் ஐ. ஆர். 8 சாகுபடிக்குப் பயன்படவில்லை. அதனால் விவசாயிகளுக்கு............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது வேறு கேள்வி.

**திரு. கே. பி. எஸ். மணி :** சிஓ. 29 என்ற அதிக விளைச்சல் தரக்கூடிய தானியம் தஞ்சாவூரில் பெய்ல்யூராகி அதனால் விளைச்சல் குறைந்துவிட்டதாலே அதிகாரிகளே அந்த விதையைக் கொள்முதல் பண்ணவேண்டியதில்லை என்று சொல்லியிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சிஓ. 29 சாகுபடிக்கு கடைசி 2 மாதத்திற்குத் தண்ணீர் வேண்டியிருக்கிறது. எடிடி. 5, சிஓ. 31 ஆகிய ரகங்களை சாகுபடி செய்வதற்காக அரசாங்கம் விவசாயிகளுக்கு வழங்குகிறது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, சென்ற முறை நெல்லை மாவட்டத்தில் ஐ. ஆர். 8 நெல்லில் அதிகமாக கலப்பு இருந்ததன் காரணமாக அதிகமாக விளைச்சல் இல்லை என்று கூறப்படுகிறது. கலப்பு இல்லாத நெல்லை அரசாங்கம் கொடுக்குமா ? மேலும் ஐ. ஆர். 8, ஐ. ஆர். 5 போன்ற ரகங்களை ஹைஈல்டிங் வெரைட்டிகளை விவசாயிகள் பயிரிடுவதற்கு தரக்கூடிய முறையில் அரசாங்கம் ஏதாவது இன்சென்டிவ் கொடுக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஐ. ஆர். 8 போன்ற பொதுக்கு விதைகளில் கலப்படம் இருக்க நியாயமில்லை. எங்கே இருக்கிறது என்று அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் நல்லது. ஐ. ஆர். 8, 5 போன்றவற்றை சாகுபடி செய்கிறவர்களுக்குக் கூடுதலாக இரசாயன உரம் தேவைப்படுகிறது. எவ்வளவு வேண்டுமானாலும் அந்த உரம் கிடைக்கின்ற சூழ்நிலை இருப்பதாலே விவசாயிகள் தகுந்த யோசனையின் பேரில் பயிர்செய்தால் நல்ல விளைச்சல் ஏற்படும்.

## AUSTRALIAN JERSEY BULLS

*391 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether Australian jersey bulls were received by the Animal Husbandry Department during February and April 1968; and

(*b*) if so, the particulars thereof ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) & (இ) சென்னைத் துறைமுகத்தில் 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ம் தேதியிலும், 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதியிலும் கொழும்புத் திட்டத்தின்கீழ் 150 வெளிநாட்டுக் கால்நடைகள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றில் இந்திய அரசு 20 ஜெர்சி காளைகளைத் தமிழ் நாட்டிற்கென ஒதுக்கிவிட்டு எஞ்சிய காளைகளை பிற மாநிலங்களுக்கு ஒதுக்கியது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் உள்ள கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டத்திற்கென ஒவ்வொரு திட்டத்திற்கும் 6 ஜெர்சி காளைகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன. இரண்டு காளைகள் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளன.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், இந்த ஜெர்ஸி காளைகளை வழங்குகின்ற நேரத்தில் நெல்லை மாவட்டத்திற்கு ஒரு காளை கூட வழங்காமல் இருக்கிறார்கள் அது ஏன் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இங்கே, இப்பொழுது வழங்கி இருக்கிற இடங்கள் பற்றி குறிப்பிட்டேன். அந்தத் திட்டம் மேம்பாடாக இருக்கிற பகுதிகளில் மட்டும்தான் இதை வழங்கி இருக்கிறார்கள். அவர்கள் மாவட்டத்திற்கு தேவை என்றால் அந்த கோரிக்கையை பரிசீலனை செய்யலாம்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know the places where jersey breed develops well and whether there is any new scheme with the Government to improve this breed in our State?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அன்னிய நாட்டிலிருந்து நமக்கு உதவி கிடைக்கின்றதனாலே நமது உள்நாட்டு மாடுகளோடு அதை கலக்கச் செய்து, அதன்மூலமாக இவைகளினுடைய தரத்தை உயர்த்துவதற்கு பரீட்சார்த்தமாக மூன்று மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இங்கு பரீட்சார்த்தமாக சென்னையிலே வெட்டரினெரி காலேஜுக்கு இரண்டு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான தெரிவித்தேன். இனிதான் அவைகளை மேம்பாடுக்கு கொண்டு வருவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : கோவை மாவட்டத்திற்கு 6 காளைகள் வழங்கப்பட்டன என்று குறிப்பிட்டார்கள். கால்நடை ஏற்றத்திற்கு இவை போதுமானதாக இருக்கின்றன என்று அரசு கருதுகிறதா, அல்லது மேலும் வழங்க முற்படுமா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 6 காளைகள் நிச்சயமாக போதாது என்று அரசு கருதுகிறது. அது போதாது தான். 18 காளைகளை மூன்று மாவட்டங்களுக்கு, மாவட்டத்திற்கு 6 என்றும், அதல்லாமல் இரண்டு காளைகளை சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கும் அரசு வழங்கியிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : It is said that the Government have received some jersey cows. May I know from the Hon. Minister for Agriculture whether the Government have any proposal to start a jersey farm anywhere in the State and also the reason why the proposed site in Hosur Taluk was given up ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : ஜெர்ஸி காளைகள்தான் வழங்கப் பட்டதாக நான் அறிவித்தேன். அவர்கள் இங்கு காளைகளைப் பற்றி கேட்காமல் பசு பற்றி கேட்கிறார்கள். அந்த திட்டம் கைவிடப்படவில்லை என்பதை என்னுடைய மானியத்திலே பதில் அளிக்கும்போது தெரிவித் தேன். அதையே மீண்டும் கேட்கிறார்கள். இடம் கிடைப்பதிலேதான் சங்கடம் இருக்கிறது. தகுதியான இடம் கிடைத்தபிறகு அந்த திட்டம் மேற்கொள்ளப்படும். எந்த அரசியல் நோக்கத்தோடும் அதை கைவிடுவ தாக இல்லை என்பதை மட்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### உர விலை.

* 392 வினா.—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உர விலையை மத்திய சர்க்கார் உயர்த்தி இருக்கிறதா ?

(ஆ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன ?



மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம் 1-4-1968 முதல் செயற்கையான ரசாயன உரங்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ)—

| | இரசாயன உரத்தின் பெயர். | 1-4-1968-க்கு முந்தி நிலவிய தொகுப்பு விலை. (டன் ஒன்றுக்கு ரூ.) | 1-4-68 முதல் உள்ள தொகுப்பு விலை. (டன் ஒன்றுக்கு ரூ.) |
|---|---|---|---|
| 1 | அம்மோனியம் சல்பேட் | | |
| | 50 கிலோகிராம் | 448 | 458 |
| | 100 கிலோகிராம் | 437 | 447 |
| 2 | யூரியா | 760 | 780 |
| 3 | பொட்டாஷியம் யூரியேட் (இறக்குமதி செய்யப்பட்டது 60% லிருந்து 62% வரை கே. 20). | 405 | 445 |

DR. H. V. HANDE : Does this Government agree that, in addition to the increase in the cost of fertilisers already made some time back, the currently proposed extra tax to be levied by the Central Government on fertilisers will increase the cost of production and does this Government therefore realise that indirectly and in reality this reduces the procurement price, because what is given by one hand is taken away by the other hand. Will this Government get in touch with other like-minded Governments like the Andhra Government and send to the Central Government a strong protest note before the Union Finance Minister Mr. Morarji Desai finalises the Appropriation Bill at the Centre?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் ஹாண்டே அவர்கள் விவசாய மானியம் மீது நடந்த விவாதத்தின்போது இங்கே இருந்திருப்பாரானால் என்னுடைய விளக்கமான பதிலை அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். நான் பேசியதெல்லாம் பத்திரிகையிலே வந்திருக் கிறது. அதையாவது படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். மத்திய அரசு விதித்திருக்கிற வரிகளை தமிழக அரசின் சார்பிலே முதலமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும், நானும் மத்திய உணவு அமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்கள் தமிழகத்திற்கு வந்த நேரத்திலே அவரிடம் இந்த வரியினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவோர்கள் என்று திட்டவட்டமாக விளக்கிக் கூறி இருக்கிறோம். அது மட்டுமல்ல, ஏற் கனவே 1-3-69-க்கு முன்னாலே வந்த உரங்களுக்குக்கூட மத்திய அரசு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அதன் காரணமாக, தமிழகத்திலே தேங்கி இருக்கிற 83,000 டன்னுக்கு நாம் 2½ கோடி ரூபாய் அதிகமாக கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். அந்த 2½ கோடி ரூபாய் அவர்கள் மீது விழக் கூடாது என்ற கருத்தில் ஏற்கனவே வந்த உரத்தை பழைய விலைக்கே விற்கவேண்டுமென்று வற்புறுத்தினோம். அப்படி விற்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக்கொள்ளுவதற்கு அவர்கள் ஆலோசனை சொன்ன தோடு, அதுபற்றி மத்திய அரசுக்கு எழுதும்படிச் சொன்னார்கள். அரசாங்கத் திடமிருந்து ஹோல்சேல் வியாபாரிக்கும் சில்லரை வியாபாரிக்கும் ஏற்கனவே 1-3-1969-க்கு முன்னாலே வழங்கப்பட்ட 7,000 டன் உரத்தைப் பழைய விலை யிலே விற்கும்படி சொல்லி இருக்கிறோம். அதன்மூலமாக விவசாயிகளுக்கு

[1969 மார்ச் 20

ரூ. 20,000 ஆதாயம் எற்படுகிறது. அல்லது அரசாங்கத்திற்கு அந்த
ரூ. 20,000 கூடுதலாக வருமானம் வரவேண்டும்.
நன்மை செய்ய வேண்டும், உற்பத்தி செலவு அதிகரிக்கிற விவசாயிகளுக்கு
மேலும் அவர்கள் பாதிக்கக்கூடாது என்ற காரணத்தாலே
செலவையும் அரசாங்கம் செய்திருக்கிறது. காரணத்தாலே அந்தச்
அமைச்சரவர்களும் நாலும் எதிர்ப்பை முதலமைச்சரவர்களும் நிதி
காரணமாக ஜெகஜீவன் ராம் அவர்கள் வலியுறுத்திக் கூறியதன்
தித்திருக்கிற காரணத்தால் மத்திய மொரார்ஜி தேசாயிடத்தில் விவா
செய்யப்போவதாக மொரார்ஜி தேசாய் அரசு அதுபற்றி மறுபரிசீலனை
கள். ஹாண்டே அவர்கள் அதைப் படித்திருப்பார்கள் அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்
என்று கருதுகிறேன்.

**ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே
நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லி சென்றிருந்த நேரத்தில்
மொரார்ஜி தேசாயிடம் உரத்திற்கு அதிக வரி போட்டிருப்பதன் காரணமாக
நம்முடைய உணவு உற்பத்தி பாதிக்கப்படும் என்பது குறித்துப் பேசினார்
களா? நம்முடைய சர்க்காருடைய தரப்பில் இந்தியப் பிரதமரிடம் இது
குறித்து எதாவது கூறினார்களா என்பதை தெரிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் இப்பொழுது
விளக்கமாக பதிலில் சொன்னார்களே. இவ்வளவு நேரம் அதைத்தான்
விளக்கமாக பதிலில் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** முதலமைச்சரவர்கள்
மொரார்ஜி தேசாய் அவர்களிடத்திலே இது விஷயமாக எடுத்துச் சொல்லி
யிருக்கிறார்கள். அதுபற்றி மறு பரிசீலனை செய்வதாக அவர்கள் ஏற்
கனவே கொடுத்த அறிக்கை இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. ஜெ. பெள்ளி கௌடர் :** தலைவர் அவர்களே, உரத்தின் மீது
போட்டிருக்கிற வரி ஏழை விவசாயிகளை எல்லாம் நசித்துவிடும் என்ற
அடிப்படை இருக்கிற காரணத்தால், நமது அரசு எடுத்து தெரிவித்ததைப்
போல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் எடுத்து தெரிவித்திருக்கிறார்
களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
அது விஷயத்திலே மௌனம் சாதித்தார்கள், நல்ல வேலையாக அவர்கள்
கட்சியிலே திரு. நல்லசாமி அவர்கள் அதை வன்மையாகக் கண்டித்துப்
பேசியது இந்த மன்றத்திலே அனைவருக்கும் தெரியும்.

**திரு. கே. என். குமாரசாமி :** சார், நமது முதலமைச்சர் மொரார்ஜி
தேசாயிடம் பேசுகின்றபோது, இந்த பம்ப் செட்களுக்கு 20·/. வரி
போட்டிருக்கிறார்களே அது சம்பந்தமாகப் பேசப்பட்டதா ? அதுவும் விவ
சாயிகளை பாதிக்கின்ற பிரச்சினைதானே என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அது சம்பந்தமாகவும்
பேசியதோடு மட்டுமல்லாமல் ஒரு விளக்கமான அறிக்கையையும் சமர்ப்பித்
திருக்கிறார்கள் முதலமைச்சர் அவர்கள். ஆனால், கோயம்புத்தூர்
மாவட்டத்தை அது பெருவாரியாகப் பாதிக்கும். இந்த அரசு நிச்சயமாக
அதை கவனிக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த
எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான் இது விஷயத்திலே மௌனமாக
இருக்கிறார்கள்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, உர விலையை
உயர்த்துவது, உரத்தின்மீது வரி விதிப்பது, பம்ப் செட்கள் மீது வரி
விதிப்பது போன்ற நடவடிக்கைகளின் காரணமாக, விவசாயிகளுக்குத்
தொடர்ந்து உற்பத்திச் செலவை அதிகரித்து, திராவிட முன்னேற்றக்
கழகத்தின் உயிர்நாடியான படி அரிசித் திட்டத்தை சீரழிப்பதற்கு
ஏதேனும் இந்திய அரசு இந்த மறைமுக முயற்சிகளை மேற்கொள்ளு
கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1969 மார்ச் 20]

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்த வரி தமிழகத்தை
மட்டும் பாதிக்கவில்லை; தமிழகத்தைப் பெருவாரியாக பாதிக்கிறது.
ஆகையினால் அதற்கு நம்முடைய சர்க்கார் சார்பிலே எதிர்ப்பு தெரிவிக்
கிறோம். அனைத்துக் கட்சி சார்பிலே, அதற்கு கட்சி பாகுபாடில்லாமல்
எதிர்ப்பு தெரிவிப்பதன்மூலம் தமிழகத்தினுடைய விவசாயிகளுடைய குரலை
மத்திய அரசு உணருமபடியாகச் செய்யலாம். எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள், கனம் அங்கத்தினர் இராமச்சந்திரன் அவர்கள் கூறியதைப்
போல் ஏதேனும் கட்சி காரணத்தாலே இதுபற்றி ஒருவார்த்தை கூட
சொல்லாமல் விட்டுவிட்டார்கள். உற்பத்திச் செலவு அதிகரித்திருக்கிறது,
கொள்முதல் விலையைக் கூட்டித் தரவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் இதை சொல்லாமல் விட்டுவிட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவ
ருக்கு வேண்டுமானால் அந்த நோக்கம் இருக்கலாம். மத்திய அரசு
விதித்த வரியினாலே பெருவாரியாக இங்கே பாதகம் ஏற்படுகிறது.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், தூத்துக்குடியில் ஏற்படப்
போகின்ற உரத் தொழிற்சாலையாலே லாபம் வரும் என்ற நிலைமையை
புனராலோசனை செய்ய தாக்கீது எதுவும் அதனை ஆரம்பிப்பவர்களுக்கு
வந்துள்ளதா, அரசுக்குத் தெரியுமா ? இருக்கிற நிலைமைக்கு இந்த அரசு
எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதுபற்றி தனிக்கேள்வி
போடவும். உரத்திற்கு வரியை ஏற்றியதைப்பற்றி பேசுகின்ற நேரத்தில்
தூத்துக்குடி உர உற்பத்தி சாலை வேண்டாமென்ற கருத்தை மார்டின்
அவர்கள் கொண்டிருப்பாரானால் அதையாவது தெரிவிக்க வேண்டும்.

**திரு. டி. மார்டின் :** 'நோ, ஐ எம் சாரி'...... மு. ப. 10.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் பிறகு சொல்லுங்கள்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு
முன்பு தமிழக அரசினுடைய உணவுக் கொள்கையைப்பற்றி, விவசாயி
களின் நிலைமையைப்பற்றி தமிழ்நாடு காங்கிரஸ் பேரவை ஒரு தீர்மானம்
போட்டிருக்கிறது, சரியான உணவுக் கொள்கை இல்லை, விவசாயிகளுக்கு
வேண்டிய வசதிகள் செய்யவில்லை என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.
அதே நேரததில் மத்திய அரசு போட்டிருக்கிற வரிகளைப்பற்றியும் விவசாயி
களினுடைய தொல்லைகளை அதிகப்படுத்தியது பற்றியும் எதாவது கண்டித்து
தீர்மானம் போட்டிருக்கிறார்களா ? இந்த அரசுக்கு அதைப்பற்றி எதாவது
தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதைப்பற்றி தகவல் ஒன்று
மில்லை. ஆனால், இங்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மௌனம் சாதிப்பதி
லிருநது, அவர்களுடைய கொள்கையை நாம் புரிந்துகொள்ள முடியும்,

**திரு. கே விநாயகம் :** இப்பொழுது போடப்போகிற வரிகளைப்பற்றி
பின்னாலே பேசிக்கொள்ளலாம், பிரபோஸல்ஸ இன்னும் வரவில்லை,
போன ஆண்டு விலையை அதிகப்படுத்தியதன் விளைவாக, விலையை
உயர்த்தியதன் மூலமாக, அந்த விலையை 'இன்ஸிடன்ஸ் ஆஃப் தட்
டாக்ஸேஷன்' நம்முடைய அரசாங்கம் ஏற்றுக் கொண்டதா அல்லது
விவசாயிகளுக்குத் தள்ளப்பட்டதா ? அப்படி ஏற்றுக்கொண்டிருந்தால்
எவ்வளவு நஷ்டம் நமக்கு ! இல்லையென்றால் விவசாயிகளுக்கு பாஸ் ஆன்
செய்யப்பட்டதா, விவசாயிகள் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஏற்கனவே விலை அதிகரிக்கப்
பட்டது கூட டிவேல்யூவேஷன் காரணமாக ஏற்பட்டதுதான், அதற்கு
மத்திய அரசுதான் பொறுப்பு,

1969 மார்ச் 20

## செஞ்சி—மேல்மலையனூர் சாலை

*393 வின.—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) செஞ்சி வட்டம், செஞ்சியிலிருந்து மேல்மலையனூருக்கு மேலசேரி, தாதிகுளம், வளத்தி, சாத்தபுத்தூர் ஆகிய கிராமங்கள் வழியாக 1952-ல் டிஸ்டிரிக்ட் போர்டு ஏற்படுத்திய ரோடு இதுவரையில் முடிவு பெறாமல் இருப்பதற்கான காரணங்கள் யாவை ?

(இ) அந்த வழியாக பஸ் போக்குவரத்து அமையும் வண்ணம் பாதையை சீர் செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இந்தப் பகுதியில் ஏற்கெனவே சாலை ஒன்று உள்ளது. வழியில் உள்ள கிராமங்களில் உள்ள பட்டா நிலங்களைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள், ரெயில்வே செஸ் நிதித் திட்டத்தில் பணம் இல்லாததால் நிறுத்திவைக்கப்பட்டன. ரெயில்வே செஸ் நிதித்திட்டத்தின்கீழ் தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் தற்போது போதுமான நிதி ஒதுக்கியுள்ளார்.

(இ) இந்தச் சாலையைப் பெருந்துப் போக்குவரத்திற்கு ஏற்றதாக மேம்படுத்துவதற்குத் தோராயமாக ரூ. 80,000 செலவாகும். நிதி வசதி இல்லாததன் காரணமாகவும், ஏற்பளிக்கப்பட்ட திட்டங்கள் எதன் கீழும் இந்த வேலை சேர்க்கப்படாததாலும் இதனை எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது இல்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : இந்த ரோடு வேலையை எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு எதுவும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறிவிட்டார்கள். ஆனால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அதைச் சேர்த்து, அந்தப் பகுதி வழியாக பஸ் போக்குவரத்துக்கு நல்ல வசதி செய்து தர நமது அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட வேலைகளிலே கிட்டத்தட்ட இன்னமும் 200-க்கு எட்டிப்பிடிக்கத்தக்க அளவுக்கு இடம் பிடித்த வேலைகளை நிறைவேற முடியாமல் இருக்கின்றன. முதன்மை ஆகவே, வரிசைமுறைப்படி. நிதிநிலை இடம் கொடுக்குமானால், அதையும் பரிசீலிப்பதற்கு அரசாங்கத்திற்குத் தடை எதுமில்லை.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் பொழுது ரயில்வே செஸ் நிதி திட்டத்தின் கீழ் இந்தச் சாலை எடுக்கப்பட்டிருக்கிறது என்றும், தற்போது நிதி இல்லை என்றும் கூறினார்கள். 27-11-62ம் தேதியின் ஜி ஓ. 2581 உத்திரவுப்படி ரூ. 4·66,139 அளவில் ரயில்வே செஸ் நிதி, கலெக்டர் தனிக் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறது அதுவுமல்லாமல் தற்பொழுது ரயில்வே செஸ் நிதி ரூ 8,27,000 சொச்சம் கைவசமிருந்துகொண்டிருக்கிறது ஆகவே, இந்த நிதியை இதுபோன்ற சாலைகளுக்காக வேண்டி கலெக்டர் பெயரில் உள்ள பணத்தை மாற்றித்தர ஆர் டி எல் ஏ டிபார்ட்மெண்டில் ஃபைல் பெண்டிங்காக இருக்கிறது ஆகவே, அந்த நிதியை அளித்து, விரைவிலே இதுபோன்ற வேலைகளைத் துவக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : அப்படிப்பட்ட நிதியிலிருந்து இந்த வேலைக்காகத் தேவையான நிதியை மாவட்ட ஆட்சித் தலைவர் [illegible] என்பதை ஏற்கனவே நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன்.



1969 மார்ச் 20]

## கோவை நகரசபை ஊழியர்களுக்கு ஓய்வூதியம்

*394 வின.—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரசபை ஊழியர்களுக்கு பென்ஷன் திட்டம் அமலாக்குவதென முடிவு செய்யப்பட்ட அந்நகரசபையின் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் தேதியிட்ட தீர்மானம் எண் 298 சர்க்காருக்கு அனுப்பப்பட்டு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மேல் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) இது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

திரு. என். மருதாசலம் : இந்த நகராட்சியிலுள்ள உபாத்தியாயர்களுக்கு நாம் பென்ஷன் கொடுக்கிற மாதிரி, நகராட்சியிலுள்ள சிப்பந்திகளுக்கு பென்ஷன் திட்டம் கொண்டுவருவதற்கு 1966-ம் வருடம் இந்த நகரசபை ஒரு தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியுள்ளது. முன்னாலிருந்த அரசாங்கம் அதைக் கொடுக்காவிட்டாலும், இந்த அரசாங்கத்திற்காவது இந்தப் பென்ஷன் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இது கோவை நகராட்சிக்கு மட்டும் தொடர்புடையது அல்ல. மாநிலத்திலுள்ள எல்லா நகராட்சி மன்றங்களையும் பொறுத்து, மாநில ரீதியிலே முடிவு எடுக்கக்கூடிய ஒன்றாகும் இது. ஆகவே, மாநிலத்திலுள்ள நகராட்சி மன்றங்களின் நிதிநிலையை அடிப்படையாக வைத்து அந்தக் காரியங்களைப் பரிசீலிக்கவேண்டியிருக்கிறது. என்றாலும், அரசாங்கம் கனிவோடு இவைகளைப் பரிசீலித்துப் பார்க்கும் என்றுதான் நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். நிச்சயம் சட்டத் திருத்தங்கள் வருகிற நேரம், எந்த அளவுக்கு சாத்தியப்படுமோ அந்த அளவுக்கு பரிசீலித்து நியாயம் வழங்க அரசாங்கம் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், ஆன் எ பாயிண்டு ஆஃப் பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். உரம் சம்பந்தமாக நான் கேள்வி கேட்கும்பொழுது தூத்துக்குடி உரத் தொழிற்சாலை நிறுவுவதில் லாபம் ஏற்படுமா, நஷ்டம் ஏற்படுமா என்பதைப்பற்றி மறுபரிசீலனை செய்யுமாறு அதைத் தொடங்க இருப்பவர்களுக்கு ஏதாவது தாக்கீது வந்துள்ளது அரசுக்குத் தெரியுமா என்று மட்டும்தான் கேட்டேன். தூத்துக்குடி உரத் தொழிற்சாலை தொடங்கப்படவேண்டாம் என்ற பொருளில் நான் கேட்கவில்லை. ஆனால், அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது ஏதோ நான் தூத்துக்குடி உரத் தொழிற்சாலை தொடங்கப்படக்கூடாது என்ற அர்த்தத்தில் கேட்டதாகக் கூறினார்கள். அவ்வாறு கூறுவது நியாயமில்லை.

'It is very uncharitable.'

என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிக் கூற வேண்டாம். அப்படிச் சொல்லவில்லை என்று சொல்லுங்கள். குற்றம் சாட்டிச் சொல்ல வேண்டியதில்லை.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானம்

### இராணிப்பேட்டை பாரி கம்பெனி தொழிற்சாலை மூடப்பட்டதும், தொழிலாளர் அல்லலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களும், திரு. சி. கோவிந்தராசன் அவர்களும் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ராணிப்பேட்டையிலுள்ள பாரி கம்பெனித் தொழிலாளர்களுக்கும், கம்பெனி நிர்வாகத்திற்கும் சச்சரவு ஏற்பட்டதைத் தொடர்ந்து, கம்பெனி நிர்வாகம் சென்ற 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ம் தேதியிலிருந்து தொழிற்சாலையை மூடி, 2,500 தொழிலாளர்களுக்கு வேலையற்ற நிலையை உண்டாக்கியுள்ளதோடு, உற்பத்திப் பாதிப்பும் ஏற்பட்டுள்ள விஷயத்தை விவாதிக்க வேண்டும் என்று ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரி கதவடைப்பு முதலியவை காரணமாகக் கருதி, இந்தப் பேரவை நிகழ்ச்சிகளை ஒற்றிவைப்பது கூடாது என்று ஏற்கனவே பலமுறை தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கிற காரணத்தினால், இதற்கு அனுமதி தர நான் மறுக்கிறேன்.

## 3. நவடமுறைக் கேள்விகள்

### (அ) டெல்லியில் மைய அமைச்சர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து பேரவைக்கு முதலமைச்சரின் அறிக்கை.

DR. H. V. HANDE : Sir, I rise on a point of order. I want to know whether the Hon. Chief Minister, after his recent trip to Delhi, is going to make a statement about the discussions he had there with the Central Ministers and if so, whether the Chair would allow discussion for at least a few hours so that we can give proper suggestions with regard to drought and other problems which are facing the State of Tamil Nadu. Will the Hon. Chief Minister kindly indicate when exactly he is going to make a written statement or oral statement......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதில் என்ன பாயிண்டு ஆப் ஆர்டர் இருக்கிறது என்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்ல வேண்டும். எந்த விதியின்கீழ் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஸ்டேட்மெண்டு கொடுக்கவேண்டும், கொடுக்காமல் விட்டுவிட்டார்? அமைச்சர்கள் விரும்பினால்தான் ஸ்டேட்மெண்டு கொடுக்கவேண்டுமே ஒழிய, அவர்கள் ஸ்டேட்மெண்டு கொடுக்கவேண்டுமென்ற விதி இல்லை. அவர்கள் விரும்பினால்தான் கொடுக்கலாம். அதை உறுப்பினர்கள் கேட்பதற்கு உரிமை இல்லை. ஆகவே, இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்னையும் எழவில்லை. இது எந்த விதியின்கீழ் வருகிறது என்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் விளக்கவேண்டும்.

DR. H. V. HANDE : Sir, after the Question Hour, a Member has got a right to ask, with the permission of the Chair..............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது எங்கே இருக்கிறது? பாயிண்டு ஆப் ஆர்டர் என்று எழுந்தீர்கள். முதல் அமைச்சர் அவர்கள் ஸ்டேட்மெண்டு கொடுக்கவேண்டும். கொடுக்கவில்லை என்று சொன்னீர்கள். அவர்கள் விரும்பினால்தான் கொடுக்கலாம் என்று நான் சொன்னேன். உறுப்பினர்கள் அப்படி அமைச்சர்கள் ஏன் ஸ்டேட்மெண்டு கொடுக்க வில்லை என்று விளக்கம் கேட்பதற்கு எங்கே இடம் இருக்கிறது? அங்கத்தினர்களுக்கு அந்த உரிமை எந்த விதியின்கீழ் கொடுக்கப் பட்டிருக்கிறது? அதைச் சொல்லுங்கள். (சிறிது நேரம் கழித்து) எந்த விதியிலும் இல்லை.





## 4. 1969–70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"கோரிக்கை எண் 3—'பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,79,44,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. ஆ. கு. சுப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரி கொள்கையைக் குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 3—'பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்' என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 1,79,44,500-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

THIRU K. VINAYAKAM : Sir, to discuss the general policy and in particular the hardships caused by the departmental officers and assessing authorities to the merchant community at large, I move the following cut-motion :—

'That the allotment of Rs. 1,79,44,500 under Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration be reduced by Rs. 100.

DR. H. V. HANDE : Sir, to discuss ways and means of avoiding inordinate delay in the disposal of cases and preventing hardship to assessees, I move the following cut-motion :—

'that the allotment of Rs. 1,79,44,500 under Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration be reduced by Rs. 100.'

**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி துணிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 3—'பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்' என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 1,79,44,500-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி துணிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 3—'பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்' என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 1,79,44,500-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்கீழ் மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற இந்தக் கொள்கை விளக்க உரையை,* இந்த மாமன்றத்தில் நான் நிகழ்த்திய சொற்பொழிவாகக் கருதி, இந்த சட்டமன்றப் பதிவேடுகளில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த அளவில் நான் இந்த மானியத்தின்மேல் விவாதத்தைத் துவங்கி வைக்கிறேன். என்னுடைய மற்றக் கருத்துக்களை எல்லாம், பின்னால் பதிலில் விவரங்களோடு சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த அறிக்கையை நான் இங்கே நிகழ்த்திய சொற்பொழிவாக எடுத்துக் கொண்டு, இந்த விவாதத்தைத் தொடங்கலாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

## 3. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (ஆ) நிதிக் கோரிக்கைகள் பற்றிய கொள்கை விளக்க அறிக்கைகளை உறுப்பினர்களுக்கு முன்னதாக வழங்கல்

திரு. கே. விநாயகம் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஸார், தலைவர் அவர்களே, ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதாவது, அமைச்சரைக் குறை கூற வில்லை. இப்படிப்பட்ட டிமாண்டுகள் வரும்போது, குறிப்பிட்ட அமைச்சர் தன்னுடைய கருத்துக்களையெல்லாம், புத்தக வடிவத்தில் கொடுப்பார்கள். முன்னால் கொடுத்தால், மறுநாள் காலையில் அவற்றைப் படித்துத் தயாராக வர, விஷயங்களைச் சேகரித்துக்கொண்டு வர சௌகரிய மாக இருக்கும். அப்படிக் கொடுக்காதது அவருடைய தவறு என்று நான் கூறவில்லை. அந்தத் தவறு அலுவலகத்தால் செய்யப்பட்டது என்றும் கூறமாட்டேன். ஆனாலும்,

How can we read, assimilate, retain and then deliver?

ஆகவே, எங்களுக்கு இருக்கிற கஷ்டத்தைச் சொல்லுகிறேன். இன்றைக்குப் போகட்டும். நாளைக்காவது, எங்களுக்கு முன்கூட்டியே கொடுக்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். அமைச்சர்களுக்கு என்றால் ஆபீசர்கள் இருக்கிறார்கள். டீடெயில்டாக விவரங்களைக் கொடுப்பார்கள் எந்த நேரத் திலும். வேண்டிய புள்ளி விவரங்களைக் கொடுக்கமுடியும். எங்களுக்கு நாங்களே தான் செய்துகொள்ளவேண்டியிருக்கிறது. அதனால்தான் நான் இங்கே வைத்திருக்கிறேன்.—1967-ம் ஆண்டு மெட்ராஸ் ஸ்டேட் அட்மினிஸ்ட் ரேஷன் ரிபோர்ட்டை எடுத்து, அது இன்றைக்கு விவாதத்திற்கு ஒப்புமா என்று பார்த்து வேண்டிய தகவல்களைச் சேகரிக்க வேண்டியிருப்பதால், எங்களுக்கு நேரம் போதவில்லை. ஆகவே, தினந்தோறும், இப்படிப்பட்ட கொள்கை விளக்க அறிக்கைகளை முன்னதாகவே கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உறுப்பினர் குறிப்பிடுவது அவர் களுடைய சௌகரியத்திற்காகச் சொல்லுகிறார்கள். கொள்கை விளக்கக் குறிப்பு என்பதை, இப்பொழுது கூட, இந்த மன்றத்தின் விலை உயர்ந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றால், அதைப் படித்து என் உரையாக நிகழ்த்த நான் தயாராக இருக்கிறேன். ஆனால், அது வேண்டாம் என்று தான், நான் நிகழ்த்திய சொற்பொழிவாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டேன். படிக்க வேண்டும் என்றால், படிக்கிறேன். ஆனால், அது திரு. விநாயகத்தின் நேரத்தைக் குறைக்கும்; தங்களுக்கும் சங்கடத்தை உண்டாக்கும். இன்னும் கூட ஒரு கருத்தைச் சொல்லலாம்.

* 94–101-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



நியாயமாகச் சொல்லப் போனால், இதைக் கொடுக்கக்கூடாது. இது உறுப்பினர்களுடைய சௌகரியத்திற்காகக் கொடுக்கப்படுகிறது என்றாலும் அமைச்சர் அந்தத் துறை மானியத்தின் மேல், எப்படி பட்ஜட் உரையில் பிரச்சினைகள் முன்னாலேயே கொடுக்கப்படுவதில்லையோ, அதே போல, இதிலேயும், அந்த அந்த சமயத்தில் கொடுப்பதுதான் நியாயமாக இருக்கும். இருந்தாலும், உறுப்பினர்களுடைய வசதிக்காக முன்னாலேயே கொடுக்கிறோம். இதிலே எல்லாமே சற்று மந்தமாக இருக்கிறது என்ற நிலைகளையும் நாம் பார்க்க வேண்டும். அச்சுத்துறை, சொற்பொழிவு தயாரிக்கும் நிலை இவற்றில் எல்லாம் அப்படித்தான் இருக்கிறது. வருகிற ஆண்டுகளில் நல்ல வகையில் இருக்கும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. விநாயகத்திற்கு, எதுவேண்டு மென்றாலும், எதற்காவது எழுந்து நிற்கவேண்டும் என்றால், பாயிண்ட் ஆப் ஆர்டர், என்று சொல்வது சரியாக இருக்காது. வசதியைக் கேட்பதற்கு, பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னால் எப்படி ? அமைச்சர் அவர்கள் சொன்னது போல, முன்கூட்டியே அச்சடித்துத் தருவது உறுப்பினர் களுடைய வசதிக்காக. அதில் வசதிக் குறைவு என்று சொல்லலாம். அதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை என்பதைத்தான் சொல்லு கிறேன். அமைச்சர் வசதிக்காகக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதிலே கூட திரு. விநாயகத்திற்கு பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. அவர் களுக்கு வேண்டிய ஆங்கிலப் பிரதி நேற்றே கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம் : இல்லை, இல்லை. இரண்டும் இன்று காலையில் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதில் கூட பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லையே. உறுப்பினர்களுடைய வசதிக்காக, இவற்றையெல்லாம் முன் கூட்டியே கொடுக்க வழிவகை செய்யவேண்டும் என்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## 4. 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: இப்பொழுது விவாதம் தொடங்கலாம். இந்த மானியக் கோரிக்கைக்கு ஒன்றரை மணி நேரம் கொடுத்திருக்கிறோம். அதற்கு மேல் இன்னொரு மானியக் கோரிக்கை இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரிக் கோரிக்கை மீது விவாதத்தை தொடங்கி வைக்கும் நான், விற்பனை வரியின் ஏற்றம் பற்றியோ, அதன் அவசியத்தைப் பற்றியோ, எங்கள் கட்சி நன்றாக உணர்ந்திருப்பதால், அதைப் பற்றி அதிகமாகப் பேசவேண்டியதற்கோ, கண்டிப்பதற்கோ இடம் இல்லை என்றாலும், எங்கள் கட்சி சார்பில் கருத்துக்களையும் ஆலோசனைகளையும், சர்க்காருக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த அளவில் என்னுடைய பேச்சைத் துவங்குகிறேன்.

விற்பனை வரியைப் பொறுத்தவரையில், சர்க்காருக்கு இரண்டு நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடன் அவர் களுக்கு 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ந் தேதியிலிருந்து பலமுனை வரி விதிப்பை, 2½ பர்செண்டிலிருந்து, 3 பர்செண்டாக உயர்த்தி அதன் மூலம் கூடுதல் வருவாய் அரசுக்கும், ஆட்சிக்கும் ஏற்படுத்திக்கொண்டிருக் கிறார்கள். அதேபோல், ஒரு முனை வரி விதிப்பைப் பொறுத்தவரையில், முன்னாலே இருந்த காங்கிரஸ் சர்க்கார், விட்டுவிட்டுப்போன வரித் திட்டம் என்றாலும், அதை அமுல் நடத்தும் வாய்ப்பையும், வருவாயிலிருந்து கிடைக்கும் பலனை அனுபவிக்கும் லாபத்தையும், திராவிட முன்னேற்றக்

[திரு. க. இராமமூர்த்தி] [1969 மார்ச் 20

கறாக அரசு பெற்றிருக்கிறது. அந்த வகையில் இந்த இனங்களில் கூடுதல்
வருவாய் இந்த ஆட்சிக்குக் கிடைக்கிறது. அது வரவேற்கத்தக்கது. அதே
நேரத்தில், கூடுதல் வரி விதிப்பு அவசியமில்லை என்றாலும், கூடுதல்
வரி விதிப்பால் நடுத்தர மக்களுடைய நன்மை பாதிக்கப்படுகிறது. விலைவாசி
ஏற்றத்திற்கு அது துணை போகிறது என்றாலும், வரி விதிப்பால், வருவாய்
அதிகமாகி கடந்த ஒன்றரை ஆண்டுக்காலமாக அதன் மூலம் கிடைக்கும்
வருவாயை இந்த அரசு அனுபவித்துக்கொண்டு இருக்கிறது.
வேண்டியது வருவாய்தான் என்பதால் அதற்கும் இணங்குகிறோம். அரசுக்கு
அதே போல, சிறிய வியாபாரிகளை தொழிலில் ஊக்குவிக்க, இந்த அரசு
பதவி ஏற்ற பிறகு அவர்கள்மீது வரிவிதிக்கும் நிலையில், 10,000-லிருந்து
15,000 என்று உயர்த்தியது. அதேபோல அதிக டர்ன் ஓவர் கம்பவுண்டிங்
லிமிட்டை 50,000 லிருந்து 75,000-க்கு உயர்த்தினார்கள். 10,000-லிருந்து
15,000-க்கு உயர்த்தியது சரி என்று சிறிய வியாபாரிகள் சார்பாகச் செய்யப்
பட்டது என்று உணர்ந்தாலும், 50,000-லிருந்து 75,000-ஆக உயர்த்தியது
அவ்வளவு தேவைதானா என்பதையும், அவசியந்தானா என்பதையும்
இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்கவேண்டும். கம்பவுண்டிங் என்ற இனத்
தால் அதிக வருவாய் வருகிறது என்றாலும், கொள்கையளவில், அதை
சர்க்கார் மறு பரிசீலனை செய்யவேண்டும் என்பது மிகமிக அவசியமும்,
நிச்சயமும் வாய்ந்தது என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன் அமைச்சரவர்கள் சொன்னார்கள்,
வெல்லத்தின்மீது வரிவிதிப்பை இந்த அரசு கடமையாக, கொள்கையாக
ஏற்றிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், அந்த வரியை உயர்த்திய
போது, அவசியம் இருந்திருக்கலாம், தேவை இருந்திருக்கலாம். ஆனால்
இன்றைய சூழ்நிலையில், அந்த வரிவிதிப்புத் தேவைதானா என்பதை இந்த
அரசு மறுபரிசீலனை செய்யக் கடமைப்பட்டிருக்கிறது.

விவசாயிகளைப் பொறுத்தவரையில், கரும்பு பயிரிடுகிறார்கள். பல பகுதி
களில், அநேகமாக சர்க்கரை ஆலைகள் இருக்கும் இடத்தில் கரும்பு பயிரிட்
டிருக்கும் விவசாயிகள் மிகுந்த அல்லலுக்கு உட்பட்டிருக்கிறார்கள். அவர்
களுக்குத் தெரியாமலே, அறியாமலே, அங்கே இருக்கின்ற தொழிற்சாலை
சூப்பர்வைசர் போன்ற ரெஜிஸ்ட்ரேஷன் செய்யும் அதிகாரிகளை திருப்திப்
படுத்தத் தெரியாத காரணத்தால், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி
செய்யத் தெரியாத காரணத்தால், பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களில்
கரும்பு விவசாயம் செய்து தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு
போன்ற மாவட்டங்களில், ரெஜிஸ்டர் செய்யப்படாத நிலங்களாக கரும்பு
சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்த கரும்புகளை
இன்றையதினம் வேறு விதமாகப் பயன்படுத்தக்கூடிய ஒரே நிலை,
அவற்றை வெல்லமாகச் செய்வதுதான். அந்த மாதிரியான சூழ்நிலை
புதிதாக அங்கெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையில் சர்க்கார்
அவசியமாக, நிச்சயமாக வரி விதிப்பை மறு பரிசீலனை செய்யவேண்டும்
என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். வரியைப் பூரணமாக ரத்து செய்ய
முடியாவிட்டாலும், இந்த ஆண்டு வரையில் விதிகளைத் தளர்த்தி, வரி
விதிப்பைக் குறைப்பார்கள். விவசாயிகளை ஊக்குவிக்க நஷ்டப்படும் விவசாயி
களுக்குத் துணைபோக வேண்டும் என்று இந்த அரசு மனிதாபிமானத்
தோடு அதைச் செய்வார்கள் என்று நம்பி, அப்படிச் செய்யவேண்டும் என்று
என் கட்சியின் சார்பாக வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இந்த விற்பனை வரியைப் பொறுத்தவரையில் பல்வேறு இனங்களிலும்
கூடுதல் வரிவிதிப்பைச் செய்திருக்கிறார்கள்.

இன்றையதினம் அமைச்சர் அவர்களுடைய அறிக்கை படிக்கப்பட
விட்டாலும்கூட, அதிலுள்ள ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் சொல்ல
விரும்புகிறேன். குதிரைப் பந்தயத்திற்கு வரிவிதிப்பை உயர்த்தியிருக்கும்
அருமையை இந்தக் குறிப்பிலிருந்து அறிந்துகொள்கிறோம். குதிரைப்
பந்தயத்திலிருந்து வருமானம் எந்த அளவிற்கு வருகிறதோ அந்த
அளவிற்கு வரி உயர்த்தப்படவில்லையென்பதையே சொல்ல வேண்டி
யிருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக 'ஜாக்பாட்' என்று சொல்லக்



1969, மார்ச் 20] [திரு. க. இராமமூர்த்தி]

கூடிய, நல்ல வருவாய் தரக்கூடிய அளவிலே குதிரைப் பந்தயம் நடத்தப் படவில்லை. தற்போது ஜாக்பாட் பந்தயத்தின்மூலம் பெரும் அளவில் வருவாய் வருகிறது. குதிரைப் பந்தயத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலைமை வேறு. இன்றைய தினம் இருக்கின்ற நிலைமை வேறு. ஆகவே, நிலைமைக்குத் தக்கவாறு வரிவிதிப்பை உயர்த்த சர்க்கார் கடமைப்பட்டிருக்கிறது. வருவாய்க்குத் தக்க அளவில் வரிவிதிப்பை உயர்த்தச் சர்க்கார் தைரியமாக முன்வந்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி பதில் சொல்ல நான் இப்போது முற்படவில்லை. தற்போது இருக்கும் நிலைமைக்கு ஏற்ப, வருமானத்திற்குத் தக்கவாறு வரி விதிப்பை அரசாங்கம் உயர்த்திக்கொள்ளவேண்டும். அதற்கு எங்கள் தரப்பிலிருந்து நிச்சயமாக ஆதரவு கிடைக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டு பல்வேறு பகுதிகளிலே, பஞ்ச நிலைமை இருந்து வருகிறது. ஆகவே, விவசாயிகளைப் பொறுத்தவரையில் விவசாய வருமான வரியை வசூலிக்கக் கூடாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதிகமான நிலம் வைத் திருக்கிறார் என்பதல்ல இப்போதைய கேள்வி. விவசாயிகளிடமிருந்து வருமான வரியை வசூலிக்கக்கூடாது என்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும். விவசாய வருமான வரி வசூலிப்பதை இந்த ஆண்டு தள்ளிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் கொள்கையளவில், மனிதாபிமான உணர்ச்சி பூர்வமாக முன்பொருநாள் ஒத்துக்கொண்டார்கள். அதைச் செயலில் காட்டக்கூடிய தருணம் வந்து விட்டது என்பதை அமைச்சர் அவர்களுக்கு நினைவுறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தமாஷா வரியைப் (Entertainment Tax) பற்றியது. இந்த வரி வசூலிப்பதில் இருக்கின்ற சங்கடங்களை நோக்கும்போது, வரியை ஏமாற்றுபவர்கள் எவ்வளவு கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள், அதிகாரி கள் எவ்வளவு சாமர்த்தியக்காரர்களாக இருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இது ஒரு புறமிருக்க, இதில் ஒரு புதிய சூழ்நிலை ஏற்பட்டிருக் கிறது. இப்பொழுது பெரிய நகரங்களிலுள்ள ஓட்டல்களில் கேளிக்கைக் கூடங்கள் இருந்து வருகின்றன. முன்பெல்லாம் டிராமா கொட்டகைகள் மூலம்தான் டிராமா, நாட்டியம் போன்ற கேளிக்கைக் காட்சிகள் நடை பெறும். ஆனால் இப்பொழுது ஓட்டல்கள் எல்லாம் இரவு கேளிக்கைக் கூடங்களாக மாறி வருகின்றன. ஓட்டல் சொந்தக்காரர்கள் இரவு கேளிக்கை காட்சிகளை நடத்திக்கொண்டு தங்களுடைய வியாபாரத்தை அதிகமான அளவில் நடத்துகிறார்கள். அந்த ஓட்டல்களில் ஓட்டல் வியாபாரமும் நடக்கிறது; கேளிக்கைகளும் நடக்கின்றன. ஆகவே, அத்தகைய ஓட்டல்களை யெல்லாம் சர்க்கார் தமாஷா வரிவிதிப்பின் அடிப்படையில் கொண்டுவந்து அதிகமான அளவில் வரிவிதிப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். நான் இதைச் சொல்லும்போது, 'கழகத்தினர் இரவு கேளிக்கைகளை ஆதரிக்கிறாரா ?" என்று உடனே என்மீது பாய்வார்கள். நாங்கள் இதை ஆதரிக்கவில்லை. ஆனால், இவைகள் எல்லாம் நடக்கும் போது, நாட்டின் வருமானத்தையும் சுபிட்சத்தையும் கருதி, அதற்கு உண்டான வரிவிதிப்பை உயர்த்த வேண்டுமென்பதைச் சொல்லிக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, ஸேல்ஸ் டாக்ஸ் சம்பந்தமான அப்பீல் வழக்குகள் இன்னும் துரிதமான முறையில் பைசலாக வேண்டும். அதிகமான வழக்கு கள் வளர்ந்துகொண்டே போகின்றன. நாட்டினுடைய வரிவிதிப்புக் கொள்கையை மனத்தில் கொண்டு, இந்த வழக்குகளைத் துரிதமாகப் பைசல் செய்யவேண்டும். வழக்குகளைத் தீர்க்கின்ற நிலைமையிலும், அப்பீல் வழக்குகளைத் தீர்க்கின்ற நிலைமையிலும் சர்க்கார் அதிக கவனம் செலுத்தி, துரிதமாகப் பைசல் செய்ய வேண்டுமென்று அரசினரைக் கேட்டுக்கொள் கிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1969 மார்ச் 20

இந்த விற்பனை வரியைப் பொறுத்தவரையில், 1966-ம் ஆண்டிலிருந்து 1967-ம் ஆண்டு கடைசியாகக் கொடுத்த கணக்கின்படி 2 கோடி ரூபாய் அதிகரித்திருக்கிறது. இன்னும் பல கோடி ரூபாய்கள் அதிகரித்திருக் கிறது. விற்பனை வரியைப் பொறுத்தவரையில் ஆண்டுக்காண்டு அதிகரித்து வரும் நிலைமை இருந்தாலும்கூட, ஆளுகின்ற கட்சியும், மற்ற எல்லாக் கட்சிகளும் சேர்ந்துகூடி, ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது ஆளுகின்றவர்கள் கடந்த காலத்தில் நான் சொல்வதையேதான் அப்பொழுது சொல்லிவந்தார்கள். விற்பனை வரியைப் பொறுத்தவரையில் எந்த அளவுக்கு விதிக்கப்பட வேண்டுமோ அந்த அளவிற்கு நாம் எட்டிவிட்டோம். ஆகவே, வரி விதிப்புக்கு நாம் ஒரு உச்ச வரம்பை நிர்ணயித்து, அந்த வரம்புக்கு மேல் உயர்த்துவதில்லை என்பதை வரையறை செய்துகொள்ளவேண்டும். இன்றையதினம் நாம் இதைச் செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். இந்தச் சர்க்கார் உயர்த்துவது இல்லையென்ற முடிவு எடுப்பது மட்டுமல்ல. ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் எந்த சர்க்காரும் விற்பனை வரிவிதிப்பை உயர்த்துவது இல்லை என்ற முடிவுக்கு நாம் அனைவரும் வர வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இந்த அவையில் அங்கம் வகிக்கிற எல்லா அரசியல் கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து இனி விற்பனை வரியை உயர்த்து வதில்லையென்ற நிலையில் அதற்கு உச்ச வரம்போ, மாரடோரியமோ செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது அரசைப் பொறுத்தவரையில் புதிதாக ஜீப்புகள் வாங்குவதற்கும் செக் போஸ்டுகளை அமைப்பதற்கும் விற்பனை வரி இலாகாவுக்கு நிதி ஒதுக் கீட்டைச் செய்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் இந்த இலாகாவுக்குத் தேவையென்றாலும்கூட, இந்த இலாகாவைப் பொறுத்தவரையில் வரிவசூல் செய்யும் நிலைமை இன்னும் துரிதமாகவும், வேகமாகவும் நடக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வரிகளை ஏய்ப்பவர்கள், ஏமாற்றுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, அவர்களுக்குக் கடுமையான தண்டனையைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்காரும் தக்க முறையில் வரி வசூலிப்பதிலே கண்ணும்கருத்துமாக நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த விவாதத்திற்கு $1\frac{1}{2}$ மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் எதிர்க்கட்சி சார்பில் பேச வேண்டியிருக் கிறது. அமைச்சர் அவர்கள் விவாதத்திற்குப் பதிலளிக்க வேண்டும். இன்னும் பேசுவதற்கு ஏழு, எட்டு உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக் கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் ஐந்தாறு நிமிடங்களில் தன்னுடைய உரையை முடித்துக்கொள்ள வேண்டும்.

*திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் 1969-70-ம் ஆண்டுக்குக் கொண்டு வந்திருக்கிற பொது விற்பனை வரி மானியத்தை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த 1967–68-ம் ஆண்டு விற்பனை வரி வசூலானதைவிட கடந்த பத்து மாத காலத்தில் ஜனவரி இறுதிவரையில் 5,61,28,000 ரூபாய் விற்பனைவரியாக அதிகமாக வசூலிக்கப்பட்டிருக்கிறது. பிப்ரவரி, மார்ச் திங்கள்களில் இனி வசூலாகக்கூடிய தொகையையும் சேர்த்துப் பார்த்தால் இந்த ஆண்டு 18 கோடி ரூபாய் சென்ற ஆண்டைவிட அதிகமாக வசூலாகும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. 1968-69-ம் ஆண்டில் 70 கோடி ரூபாய் அளவிற்கு இந்த மாநில அரசு வசூல் செய்திருப்பதற்கு நாம் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், அதையொட்டிய அதிகாரிகளும் எடுத்துக்கொண்ட அதிக முயற்சியின் காரணமாக அதிகமான தொகை வசூலிக்கப்பட்டிருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 70 கோடி ரூபாயை வரியாகச் செலுத்தியிருக்கக்கூடிய வியாபாரிகளையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.



1969 மார்ச் 20] [திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்]

நமது மாநிலத்தின் வருமானத்தில் கிட்டத்தட்ட நாலிலே ஒரு பங்குத் தொகையை வியாபாரிகள் வரியாகக் கொடுக்கிறார்கள். மாநில வருமானத்தின் சுமார் 30 சதவீதம் தொகையை விற்பனை வரியாகச் செலுத்தியிருக்கிறார்கள். இந்த அரசு வியாபாரிகளைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறது. இந்த 70 கோடி ரூபாயைச் செலுத்துகின்ற நேரத்தில் மாதாமாதம் யாரும் ஆள் அனுப்பாமல், வாய்தா கேட்காமல், 25-ம் தேதிக் குள்ளாக செக்குகள் மூலமாகவோ, ரொக்கமாகவோ வியாபாரிகள் அரசாங்கக் கஜானாவில் பணத்தைச் செலுத்தி வருகிறார்கள். இம்மாதிரி ஒழுங்காக விற்பனை வரியைக் கட்டி வந்தவர்கள் வேறு யாரும் இல்லை யென்று கூறினால் அது மிகையாகாது. இயங்கிவரும் அரசாங்க நிர்வாகத் திற்கு அச்சாணிபோல் இருந்து அரசாங்கத்துக்கு வரி தேடிக்கொடுப்பவர்கள் இந்த வியாபாரிகளாகையால் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பொது விற்பனை வரிச் சட்டத்தை மேலும் எளிதாக்குவதன் மூலம் 70 கோடி ரூபாய் மட்டுமல்ல, 100 கோடி ரூபாயைக்கூட விற்பனை வரி மூலமாகப் பெறக் கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இனி, வரியை ஏமாற்றுபவர்கள் இருந்தால்கூட, வரி ஏய்க்கக்கூடியவர்களைக் கண்டுபிடிக்கவும், கடுமையான தண்டனைகளை அளிக்கவும் வகை செய்ய வேண்டும். விற்பனை வரிச் சட்டத்தை எளிதாக்கினால் இன்னும் அதிகமாக வரியைப் பெற வாய்ப்பு இருக்கிறதென்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த அளவுக்கு 70 கோடிக்கு மேல் வசூலிக்கக்கூடிய நிலை இருந்தும் முற் பகல் 10-30
சில இடங்களில், சில அதிகாரிகள் ஆண்டுக் கணக்கைப் பார்க்கிற நேரத்தில் பெஸ்ட் ஆப் ஜெட்ஜ்மெண்டு என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி–எவ்வளவு சரியான கணக்கைக் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளாது விற்பனைத் தொகையைக் கூட்டிப்போடுகிறார்கள் என்கிற புகார் எங்களுக்கும், தமிழ்நாடு வர்த்தகர் கழகத்திற்கும் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே நியாயமான கணக்குகள் என்று சொன்னால் அவைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலையை அமைக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், அதிகமான அளவுக்கு வருமானம் அளிக்கிற இத்துறையில் சில அவசியமான பொருள்களுக்கு வரிவிலக்கு அளிக்கவேண்டியது அவசியம். சென்ற ஆண்டே தேங்காயை அழுகும் பொருள்களோடு சேர்த்து, அதன்மீது விதிக்கப்படுகிற விற்பனை வரியை எடுத்துவிட வேண்டு மென்று அமைச்சர்களிடத்திலும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். சேலம் மாவட்டத்தில் தேங்காய் நாரினால் கயிறு போன்ற பொருள்கள் தயாரிக்கும் தொழில் அதிகமான அளவில் நடைபெறுகிறது. தேங்காய் நாரினால் பல பொருள்களைத் தயாரிக்கும் தொழில் கேரளாவிலும் நடைபெறுகிறது. அங்கே உற்பத்தியாகி மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. அங்கே அவற்றுக்கு வரி கிடையாது. ஆனால் இங்கே தேங்காய் நாரினால் தயாரிக்கப் படுகிற கயிறு போன்ற பொருள்களுக்கு எம்.ஜி.எஸ்.டி., ஸி.எஸ்.டி. ஆகிய இரண்டு வரிகளும் போடப்படுகின்றன. இந்த இரண்டும் 6 சதவீதம் அளவுக்கு போடப்படுவதால் கேரள மாநில பொருள்களுக்கும், நமது பொருள்களுக்கும் விலை வித்தியாசம் ஏற்படுகிறது. ஆகவே இது நம் மாநில வியாபாரத்தைப் பாதிக்காது இருக்க, தேங்காய் நாரினால் தயாரிக்கப்படுகிற கயிறு போன்ற பொருள்கள் மீது விதிக்கப்படுகிற விற்பனை வரியை ரத்து செய்து இவற்றுக்கு விலக்கு அளிக்கவேண்டும் என்பதாக மகிழ்வுடன் அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். இந்த இரண்டு இனங்களுக்கும் நமக்கு ஐந்தாறு லட்சத்திற்கு மேல் இழப்பு இருக்காது. இதனால் பல குடும்பங்கள் நன்மை அடையும். ஆகவே, இவற்றுக்கு விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன

அடுத்து, வரி விலக்குக்கான வரம்பை பத்தாயிரத்தில் இருந்து பதினைந்தாயிரமாக சென்ற ஆண்டு உயர்த்தியதை நான் வரவேற்கிறேன். அதை 25 ஆயிரமாக உயர்த்தவேண்டியது அவசியம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதனாலும் அதிக அளவுக்கு இழப்பு ஏற்பட்டுவிடாது. ஆகவே இதை 25 ஆயிரமாக உயர்த்தவேண்டும்.

[திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்] [1969 மார்ச் 20

அடுத்து, 1965-ஆம் ஆண்டு பொது கட்டட லைசென்சு என்கிற சட்டம் ஒன்றை காங்கிரஸ் அரசு கொண்டுவந்தது. இது தேவையில்லாத சட்டம், அதை ரத்து செய்ய வேண்டுமென்று வர்த்தகக் கழகங்களும், வியாபாரிகள் சங்கங்களும் கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே பொது கட்டட லைசென்சு சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்று இந்த அமைச்சரவைக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

விற்பனை வரி சம்பந்தமாக சமரச ஏற்பாட்டைச் செய்துவைக்க அமைச்சர்கள், வர்த்தகர்கள், வர்த்தக அதிகாரிகள் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும். கடந்த கால முதல் அமைச்சர் அவர்கள் அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தக் குழுவை விரைவில் அமைக்க கோருகிறேன்.

அடுத்து, நெல், அரிசி, கம்பு, சோளம், ராகி, பருத்தி போன்ற பொருள்களுக்கு விற்பனை வரி இல்லை. ஆகவே இந்தப் பொருள்களை விற்பனை செய்கிறவர்களுக்கு லைசென்சு கட்டணம் என்று வைத்தால் சில கோடி ரூபாய் வருமானம் வரும். ஒரு லட்சத்திற்கு இவ்வளவு, இரண்டு மூன்று லட்சத்திற்கு இவ்வளவு, ஐந்து லட்சத்திற்கு இவ்வளவு என்பதாக வைத்து வியாபாரம் செய்கிறவர்களிடத்தில் லைசென்சு கட்டணம் என்ற முறையில் வசூலித்தால் சில கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கலப்படத் தடைச் சட்டம் என்பதை மத்திய அரசு கொண்டுவந்தது. இந்தச் சட்டத்தினால் சிறுசிறு வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள். உற்பத்தி செய்கின்ற கட்டத்தை விட்டுவிட்டு, ஒரு டின் இரண்டு டின் என்று வாங்கி வைத்து வியாபாரம் செய்கின்றவர்களைப் பிடித்து இத்தனை சதவிகிதம் கலப்படம் செய்தாய் என்பதாக சிறை தண்டனைகூட அளிக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தின்படியும்—அதிகாரிகள், கூட்டுறவு இலாக்காவினர், ரசாயன ஆராய்ச்சி நிபுணர், எம். மக்கள் பிரதிநிதிகள் கொண்ட குழுவை அமைத்து அவர்கள் மூலமாகத்தான் தண்டனை கொடுப்பது என்றாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வனஸ்பதி சில்லறை வியாபாரிகளுக்கு லைசென்சு 5 ரூபாய், 2 ரூபாய் என்று இருக்கிறது. டெபாசிட் 100 ரூபாய் என்று இருக்கிறது. சில்லறை வியாபாரிகளுக்குத் தொல்லைகொடுக்கக்கூடாது. அதிகமான தொகை நமக்கு ஈட்டித் தருகிற வியாபாரிகள் சமுதாயத்திற்கு தகுந்த மரியாதையையும் மதிப்பையும் கொடுக்கவேண்டும் என்று சொல்லி, விற்பனை வரித்துறையில் அமைச்சர் எடுத்திருக்கிற முயற்சிக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்து என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, at the very outset I wish to state that as far this sales tax is concerned, it is a wonderful idea that emanated from the brains of my revered leader Sri Rajaji, some years ago. When Sri Rajaji introduced it, his intention was different. At that time there was practically no source of revenue for the State. In fact if today we have some semblance of freedom for the States, if we have freedom at least to some extent, if we have certain areas of taxation wherein we are free and do not look to Central Government, it is because of the idea of Rajaji, who introduced sales tax for the first time in our State. But for that the State would not have any freedom at all. For every source of revenue, they had to look to the Centre. Such a situation has been avoided as far as Madras State is concerned.



1969 மார்ச் 20] [Dr. H. V. Hande]

Commercial Taxes form the main source of revenue. In this context, I would like to offer a few remarks with regard to the method of collection of commercial taxes. There are two things that are to be properly attended to. Unless we collect this tax, we cannot run the administration. At the same time, there is a method by which we can collect the tax. We have thousands and thousands of customers in the trade paying this tax. What is the method by which we can collect the tax, without displeasing anybody. When we come to that point of collection of tax, there is a distinct difference between the way adopted by income-tax people and the way adopted by our sales-tax people in collecting the tax. According to me, the sales tax officers have invariably a sadistic tendency. The way in which these officers enter into the shop, the way in which they serve notice on the traders, the way in which they ask the shop-keepers to come to their offices—these are all things which are all important and which have to be improved. In the interest of this Government, special care should be taken in this direction so that this Government does not get a bad name. I have repeated this a number of times in both the Houses. These officers' attitude serves to disseminate discontentment among the people. They do not like the behaviour of some of these officers and they may think "This Government is also as bad as the previous Government." Such an idea is likely to come into the minds of the people. That should not come. So I want this Government to instruct these sales tax officials (there are not many officers there) not to serve as agents against the Government. That is very important.

With regard to betting tax, we are against the State indulging in lotteries. My submission is that the State must not indulge in these things. It must leave it to private parties and tax them heavily. Otherwise the common man will get the idea "After all the State itself is indulging in this betting. Why can't I also indulge in the same". This corrupt practice should not be favoured by the State itself running lotteries. They must keep clear of them. I know that the interest among the people is tapering off. The initial enthusiasm is not there. This Government should therefore issue a clear-cut order "Thus far and no further". If that is done, the market value that is there, I mean the good name of this Government, will go higher up. I demand on the floor of the House that the Government must stop indulging in these lotteries. About a year ago, when the question of abolition of racing came, when that question was raised, the late Chief Minister Thiru Anna said that they were likely to abolish racing. Then I got up and said "If you abolish racing here, there will be racing in the neighbouring State and there is no point in arguing that racing will develop horse breeding". He said that he would consider. Though the Government started with the idea that they will be able to abolish it later on, they came round to the view that it should not be abolished.

[Dr. H. V. Hande] [1969 மார்ச் 20

Whether it is good or bad, it has come to stay. They can tax very well and we are very happy about it. They can tax horse racing with greater justification than running State lotteries.

An appeal with regard to Urban Land Tax Act is pending before the Supreme Court. Judgment is reserved. Whether the State is competent to levy Urban Land Tax is a major question that has to be explored by experts in Constitutional Law. There are many experts both inside and outside the House. If we allow Urban Land Tax to be exploited, it will certainly end up like the Madras General Sales Tax. When Rajaji initiated sales tax, nobody ever expected that it would be such a major source of revenue for the State as it is today. Similarly, Urban Land Tax, though begun on a small scale, will later on end up like the sales tax. That will be the tendency. The Central Government will not allow the State any other area of taxation. We have got a Constitution in which there is a State List under which the State can levy taxes, a Union List under which the Union Government can levy taxes and then there is the Concurrent List. The areas of taxation by the State and the Centre are demarcated and the State will not be allowed to tax in other areas. The Centre-State relation is definitely going to deteriorate. There will be different forms of State Governments, the Centre will come in a particular way and several non-Congress Governments know that. I suggested in the budget discussion that the Chief Ministers of the four or five non-Congress Governments should sit together, discuss and arrive at a solution, so that we need not go to the Centre with a begging bowl. Why should we go? Let them come here. In no other country does the State go to the Centre for money. The areas of taxation are definitely fixed. Here we have to go and cajole. The Central Government have got discretionary grants which they can give or refuse according as we rub them on the right side or the wrong side. These problems will increase in dimension when the Centre-State relation deteriorates and there will be great scope for exploiting this Urban Land Tax.

(The time bell was rung.)

I will finish in three or four minutes. Even the other member is not speaking and I am speaking on behalf of the Party. After 1972 the same Ministers may stay or some other Ministers of the same Party may come. There will be a temptation to increase the tax. A person having half a ground of land, say in my constituency, has now to pay a tax of nearly twenty to thirty times what he was paying some years ago by one stroke of the pen. (Interruption.) Mr. Vinayakam says that it is much more. Therefore it will increase after some years.

THE HON. THIRU SI. PA. ADITANAR: On a point of elucidation. May I point out to the hon. Member that with regard to Urban Land Tax it is not so much the revenue which matters as the element of social justice behind it? The late revered



1969 மார்ச் 20] [Thiru Si. Pa. Aditanar]

Chief Minister pointed out on more than one occasion the element of social justice. In Australia urban tax is levied. The tax is levied because of the increase in value. In Madras City the value of a land which was Rs. 300 more than ten years ago has now risen to Rs. 15,000, not on account of individual effort but because of society or the expansion of the City. The tax is also based on the element of social justice.

DR. H. V. HANDE: I am thankful to the Minister for Co-operation. We were both in the other House. At that time Mr. M. Bhaktavatsalam brought forward the Urban Land Tax Bill. He did not participate in the discussion, if my memory is correct. But the other members of the Dravida Munnetra Kazhagam who participated voiced some concern. When the High Court struck down the Act in 1965, another Bill was brought forward and a number of Dravida Munnetra Kazhagam members participated in the discussion. I fully agree that it was social justice. But I am telling the Ministers that, if a person had half a ground of land, say in Sowcarpet, theoretically the price would have gone up, but it will be taxed very heavily. Reason No. 1 is that he will be subjected to a lot of hardship. In the name of social justice so many things happen. It is a question of where we sit. When we sit in the Opposition, we point out the grievances of the people and when we sit on the ministerial benches, we point out the difficulties of the Government. My job is to point out the difficulties of the people outside, what their feeling is and what happens in actual practice. A fear is expressed by the people. We cannot request the Government to stop, because they have already started it. After some years when the Centre-State relation deteriorates and when there is no other source of revenue, the Urban Land Tax will be raised so as to yield a revenue of thirty, forty or fifty crores of rupees.

With one more point, I will conclude. Sales Tax administrative set-up is divided into four zones—Madras, Tiruchirappalli, Madurai and Coimbatore zones. How are the posts of Assistant Commercial Tax Officers created? They are not really 'officers' because they are not gazetted. They are selected from the level of Upper Division Clerks. When they are selected from the general pool, they should be posted to all the four zones. For instance, the Board of Revenue supplies some Upper Division Clerks. The Board of Revenue is general for the whole State and as such the clerks from the Board selected as Assistant Commercial Tax Officers should be posted to all the four zones. That will be an incentive, as otherwise there is no scope and the Upper Division Clerks will be rotting. If this is done, their grievances will to a great extent be met.

The promotion list for 1965-67 for Madras Division must be drawn up and implemented without further delay. If this is done, the Upper Division Clerks employed in the Madras Division will

have an incentive, because they will have chances of promotion, and they will be grateful to the Minister. With these words I conclude my speech.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களே, சேல்ஸ்டாக்ஸ் மானியத்தின்மீது பேசக்கூடிய நேரத்தில் இது சேல்ஸ்டாக்ஸா, பர்சேஸ் டாக்ஸா என்ற சர்ச்சைக்குரிய விஷயமாக இருக்கிறது. வாங்குகின்றவர் களிடமிருந்து வசூலித்துக் கொடுக்கப்படக் கூடியதுதான் இந்த விற்பனை வரி. ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் அரை தம்பிடி என்று கொண்டு வந்தது இன்றைக்குப் பைசாக்கள் என்று ஏற்பட்ட காலத்தில் பல பைசாக்களை வரியாக வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த வரி ஏழைகளைப் பாதிக்கக்கூடிய வரியாக இருக்கிறது. விற்பனை வரியால் சிறுசிறு வியாபாரிகள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக் கிறது. அரைத் தம்பிடி போட்ட காலத்தில் எந்த அளவு வருமானம் இருந்ததோ அதைப் போல் பல மடங்கு வருமானம் பெருகிவிட்ட இந்த நேரத்திலும் வரம்பை ஐம்பதாயிரம் என்று உயர்த்தக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இருந்தும். அதை பதினைந்தாயிரம் என்றே இன்னும் வைத் திருக்கிறார்கள். இது நியாயமானதுதானா என்றால் இல்லை. ராஜஸ்தான் மாநிலத்திலே இன்றைக்கு இந்த வரம்பை 30,000 ரூபாய் என்று வைத் திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் இன்னும் ரூ.15,000 என்றே வரம்பை வைத்திருப்பதை உயர்த்துவது பற்றிப் பரிசீலிக்க வேண்டும்.

(திரு. பு. செ. முத்துச்செல்வன் தலைமை)

திடீர் திடீரென்று 'செக்' செய்யக்கூடிய அளவுக்கு லகுவாடுகள் இருக்கின்றன. அவர்கள் பரிசோதனைக்கு வரும் நேரத்தில் கடையில் எவ்வளவு பணம் இருக்கிறது என்பதைக் கணக்கிட்டு அந்தப் பணத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு நான்கு மடங்கு, ஐந்து மடங்காக வரி போடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. சிறிய வியாபாரிகள் பொருளை வாங்க அதிகப் பணம் இல்லாத நிலையில் பிறரிடத்தில் இருந்து வாங்கி வைத் திருக்கக்கூடிய பணத்தைக் கூடக் கணக்கில் எடுத்துக் கொண்டு வரியை அதிகப்படுத்தக்கூடிய நிலை இருக்கிறது. அது போன்ற அதிகாரத்திற்கு ஓரளவு வரம்பு கட்ட வேண்டும். சிறிய வியாபாரிகளை இதுபோன்ற கடுமையான நடவடிக்கைக்கு உள்ளாக்குவதால் பெரிய அளவு அவர் களுக்குப் பாதகமான நிலைமை ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

சமீபத்தில் வெல்லத்தின் மீது வரியைப் போட்டோம். வெல்லத்தை உற்பத்தி செய்து வட நாட்டுக்கு அனுப்பி விவசாயிகள் ஏராளமாகச் சம்பாதித்து விட்டார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஏதோ ஒரு வேளை அந்த மாதிரி சம்பாதித்திருக்கலாம். அன்றைக்கு இருந்த விலை மாறி, இன்றைக்கு பாதியாக விழுந்திருக்கிறது. விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கக்கூடிய காரணத்தால் வெல்லத்தின்மீது விதிக்கப்பட்டிருக்கக் கூடிய வரியைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறைந்த விலைக்கு மக்களுக்கு உணவுப் பொருள்களைக் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தால்தான் நஷ்டம் ஏற்பட்டால் கூட மக்களுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுகின்றோம். உணவுப் பொருள்கள் மீது விற்பனை வரி விதிப்பது அறவே நியாயமல்ல. உணவுப் பொருள் எதுவாக இருந்தாலும் சரி அவற்றின்மீதுள்ள விற்பனை வரியைத் தள்ளுபடி செய்யவேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** எந்த உணவுப் பொருள் மீது விற்பனை வரி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தேங்காயும் உணவுப் பொருள்தான், வெல்லமும் உணவுப் பொருள்தான். தேங்காயில் வைடமின் 'ஏ டீ இஸட்' வரை இருக்கிறது. அருமையான சத்துள்ள உணவுப் பொருள். அது அழுகல் பொருளிலே கூடச் சேர்க்கப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்திலே





வழக்குத் தொடரப்பட்டு அழுகல் பொருள் என்று தீர்ப்பு கொடுக்கப்பட்ட பிறகும், அதற்கு விற்பனை வரி வைத்திருப்பது சரியா? அதே மாதிரி வெல்லமும் உணவுப் பொருள்தான்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏழெட்டு வருஷத்திற்கு முன்பு உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரி இருந்த நேரத்தில் விவாதிப்பது போல் பேசுகிறார்கள். இப்போது உணவுப் பொருள்களுக்கு வரி இல்லை. தேங்காயையும், வெல்லத்தையும் உணவுப் பொருள் என்ற வகையிலே சேர்த்துக் கொள்ளலாமா என்று கேட்டால் மன்றத்திற்கும் சௌகரியமாக இருக்கும், அரசாங்கத்தைப்பற்றி தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தாத வகையிலும் இருக்கும். உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரி இருக்கிறது என்று சொல்லுவது விவாதத்திற்குப் பயன்படுமா என்று யோசிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** உணவுப் பொருள் என்றால் அமைச்சர் அவர்கள் அரிசியை மாத்திரந்தான் உணவுப் பொருள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்களா என்று புரியவில்லை. பலவிதமான பருப்பு வகைகள், மற்றும் அத்தியாவசியமாக உபயோகிக்கக்கூடிய எல்லாமே உணவுப் பொருள்கள்தான். எல்லா உணவுப் பொருள்களுக்கும் வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும். அழுகும் பொருளான தேங்காய்க்கும் விதிவிலக்கு அளிக்கவேண்டும்.

கைத்தறி நெசவாளர்கள் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். கைத்தறித் தொழிலாளர்களுடைய பாதுகாப்புக்காக வேண்டி இதுவரையில் நம்முடைய சர்க்கார் வந்து இரண்டு ஆண்டுகளாகியும் கூட ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. விற்பனை வரியிலிருந்து அவர் களுக்கு விலக்களித்து அவர்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

பிண்ணாக்கு, விவசாயிகள் உபயோகப்படுத்தக்கூடிய அத்தியாவசியமான உரம். அதன் மீது வரி விதிக்கப்பட்டிருப்பதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நாட்டுச் செக்கு வைத்து நடத்துவது குடிசைத் தொழில். அதற்கும் ஆண்டு ஒன்றுக்கு பத்து ரூபாய் லைசென்ஸ் கட்டவேண்டுமென்று சொல்லி அவர்கள் கணக்கும் வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பாமர மக்கள், கைநாட்டுப் பேர்வழிகள் எப்படிக் கணக்கு வைக்க முடியும்? அவர்கள் கணக்குப் பிள்ளையை சம்பளத்திற்கு வைத்துக் கொள்ள முடியாது. கணக்கு வைத்துக் கொள்ளாததால் பிராசிக்யூஷன் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது அந்த லைசென்ஸ் ஃபீ இருப்பது நியாயமே இல்லை. அதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஆர். நாகசுந்தரம்: தலைவர் அவர்களே, நமது அரசு கொண்டு வந்திருக்கின்ற விற்பனை வரி மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நமது அரசு சினிமாத் துறை வளர்ச்சிக்கு மிகவும் அரும்பாடுபட்டு வருகிறது. இந்த ஆண்டு சிறந்த படங்களுக்குப் பரிசளித்து அவர்களை ஊக்குவித்திருக்கிறது. டூரிங் டாக்கீஸ்காரர்கள் கடந்த அரசு காலத்தில் பல கொடுமைகளுக்கு உள்ளாகி அவை மூடப்பட்டு அந்த மெஷின்களை ஆந்திராவுக்கும், மைசூருக்கும் விற்று விட்டார்கள். நம்முடைய அரசு வந்த பிறகு அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து டூரிங் டாக்கீசுகளுக்கான லைசென்ஸை இரண்டு ஆண்டுகளுக்குத் தருவது என்று முடிவு செய்ததால் ஏராளமான மக்கள் இந்த அரசை வாழ்த்துகிறார்கள். இப்போது ஏராளமான படங்கள் வந்தும் கூட அவைகளைக் காண்பிக்கும் அளவுக்குப் போதுமான தியேட்டர் வசதிகள் கிடையாது.

சென்ற கால காங்கிரஸ் அரசு நிரந்தர சினிமாக் கொட்டகைக்காரர்கள் காங்கிரஸ்காரர்களாக இருந்ததால் அவர்களுக்கு பாதுகாப்பு தர வேண்டு மென்ற காரணத்தினால் நிரந்தர தியேட்டர்களுக்கு ஒரு மைலுக்கு அப்பால் மு. ப. 11-00

[திரு ஆர். நாகசுந்தரம்]

[1969 மார்ச் 20

தான் டூரிங் டாக்கீஸ் இருக்கவேண்டுமென்ற தடையை விதித்து அதனால் பல சிக்கல்களை உண்டு பண்ணிவிட்டார்கள். ஆகவே நமது அரசு அந்த ஒரு மைல் தூரம் என்ற தடையை எடுத்துவிட்டு டூரிங் டாக்கீஸ்களுக்கு இன்னும் அதிகப்படியான ஊக்கத்தை அளிக்கவேண்டும். அதே சமயத்தில் பொதுமக்களும் வெளி ஊர்களுக்குச் சென்று செலவு செய்து சினிமாப் படங்களைப் பார்க்காமல் உள்ளூரிலேயே வரும் புது புதுப் படங்களைப் பார்க்க வசதியாக இருக்கும். அதோடு நம் அரசுக்கும் வருவாய் அதிகரிக்கும்.

சில தியேட்டர்காரர்கள் வரி ஏய்ப்பதாகச் சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம், இருபது ஆண்டுகளுக்கு முன் அவர்கள் எந்த நுழைவுக் கட்டணத்தைப் போட்டிருந்தார்களோ அதே கட்டணம்தான் இன்னும் விதிக்கப்பட்டு வருகிறது. எல்லா விலைவாசிகளும் உயர்ந்திருக்கிற இந்த நேரத்தில் அவர்களும் கட்டணங்களை உயர்த்துவதற்கு நாம் அனுமதிக்க வேண்டும். அப்படி அனுமதிப்பதினால் அவர்களுக்கும் ஆதாயம் கிடைக்கும். நம் அரசுக்கும் அதிக வருமானம் கிடைக்கும்.

சென்ற ஆண்டு செமி பெர்மனெண்ட் தியேட்டர்கள் ஆரம்பிப்பதற்காக அரசு ஊக்கம் தரும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் அதற்கு எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை. ஆகவே உடனடியாக செமி பெர்மனெண்ட் தியேட்டர்களை ஆரம்பிப்பதற்கு வேண்டிய சட்டத்தை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக கிராமப்புறங்களிலுள்ள அரசாங்கப் புறம்போக்கு நிலங்களை இந்த செமி பெர்மனெண்ட் தியேட்டர்கள் ஆரம்பிப்போர்களுக்கு அசெஸ்மெண்டாகவோ அல்லது நீண்ட காலக்குத்தகைக்கோ விட்டு அவர்களை ஊக்குவிக்க வேண்டும். இதன் மூலம் அரசாங்கத்திற்கும் நல்ல வருமானம் கிடைக்கும்.

நம் விற்பனைவரிச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அந்த இலாக்காவில் உள்ள குஜராத்தி மொழி பயின்றவர்களுக்கு ஊக்கம் கொடுத்து ரூ. 500 பணம் அல்லது இரண்டு அட்வான்ஸ் இன்க்ரிமெண்ட்ஸ் கொடுத்து ஊக்கு வித்தது. அந்த சட்டத்தில் இரண்டொரு குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றை மட்டும் நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

பொது விற்பனைவரிச் சட்டத்தின் கீழ் மோட்டார் உறுப்புகள், வானொலிப் பெட்டிகள், குளிர்சாதனக்கருவிகள்போன்ற ஆடம்பர பொருள்களுக்கு முதல் விற்பனையின் பேரில் 12 % வீதம் பொது விற்பனைவரி விதிக்கப்படுகிறது. முதல் விற்பனை என்றால் தயாரிப்பாளர்கள் அல்லது மற்ற மாநிலங் களில் இருந்து கொள்முதல் செய்யும்போது மொத்த வியாபாரிகள் மற்ற வியாபாரிகளுக்கு விற்பனை செய்யும்போது 12 %. விற்பனைவரி விதிக்கப்படுகிறது. மத்திய விற்பனை வரிச்சட்டம் வேறு. மாநிலங்களுக் குள்ளே வாணிபம் பெருமளவில் நடைபெறவேண்டுமென்று, ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு விற்கப்படும்போது அதை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு 3 %. மட்டும் வரி விதிக்கப்படுகிறது. இதை தவறான வழியில் பயன்படுத்திக்கொண்டு பலர் இந்த 3 %. வரியை மட்டும் செலுத்திவிட்டு 12 %. வரி விதிக்கப்படாமல் தடுத்துக் கொள்கிறார்கள். உதாரணமாக, சென்னையிலுள்ள பெரிய கூட்டு நிறு வனத்தார்கள் தங்களிடம் வழக்கமாக கொள்முதல் செய்யும் சிறிய நிறுவனங்கள் அல்லது தனி வணிகர்களுக்கு விற்பனை செய்யும்போது நேரடியாக விற்பனைசெய்து 12 %. என்று வரிவிதிக்காமல் விரும்பிய சரக்குகளை தங்கள் பங்காளர்களை மூலம் விற்பனை செய்வதுபோல் கணக்கு காட்டி "ஸி" படிவங்களில் வாக்குறுதி பெற்று 3 %. வரி செலுத்து கிறார்கள். இப்படிச் செலுத்துவதன் காரணமாக பல லட்சக்கணக்கான ரூபாய் நம் அரசுக்கு வரவேண்டியது வராமல் நஷ்டம் ஏற்படுகிறது. இது சென்னையில் இருக்கும் இரு நிறுவனங்களுக்கு அல்லது வணிகர் களுக்கு இடையே நடக்கக் கூடிய விற்பனை. ஆனால் வேறு மாநிலத்தி லிருந்து வரவழைத்து கொடுப்பது போல் கணக்கு காட்டி வரியிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். தமிழ்நாடு



1969 மார்ச் 20]

[திரு ஆர். நாகசுந்தரம்]

பொது விற்பனை வரிச்சட்டம் வேறு, மத்திய விற்பனைவரிச் சட்டம் வேறு, வரி வசூல் செய்கிறமுறை ஒன்றாகயிருந்தாலும் வரி விகிதங்களில் மாறுதல் இருக்கிறது. தமிழ்நாடு விற்பனைவரிச் சட்டத்தின்கீழ் சில பொருள்களுக்கு முதல் விற்பனையின் மீது வரி விதிக்கப்படுகிறது. அது மறுமுறை விற்கப்படும்போது வரி விலக்கு அளிக்கப்படுகிறது. மத்திய விற்பனைவரிச் சட்டத்தின்கீழ், முதல் விற்பனை அல்லது இரண்டாவது விற்பனை என்பது பற்றி கவலையில்லை. ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு விற்பனை செய்து சரக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும். பதிவு செய்து கொண்டு வேற்று மாநில வணிகர்களுக்கு விற்பனை செய்வதாக இருந்தால் 3 %. வரி அப்படியில்லாமல் நேரடியாக என்றிருந்தால் 10 %. அல்லது 12 %. வரி என்று விதிக்கப்படுகிறது. இப்படித் தான் இதுகாறும் வரிவிதிப்பு இருந்து வந்தது.

தற்போது, இந்திய சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின்படி ஒரு மாநிலத்திலுள்ள ஒரு வணிகர் மற்றொரு மாநிலத்திலுள்ள வணிகர் ஒருவருக்கு பொருள்களை விற்பனை செய்யும்போது ஏற்கனவே உள்ள மாநிலத்தில் ஒரு வரி விதிக்கப்பட்டு விட்டதால் மற்றொரு தடவை வரி செலுத்த வேண்டியதில்லை என்று விளக்கம் கொடுத்துவிட்டார்கள். இதனால் அதிக வரி இழப்பு ஏற்படுகிறது. ஆகவே மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் 9-வது பிரிவு தக்கபடி திருத்தம் செய்யப்பட்டு நம் வருவாயைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். வெளிநாடுகளிலிருந்து சில பொருள்களை இறக்கு மதி செய்து வணிகர்கள் விற்பனை செய்கிறார்கள். அப்படி விற்பனை செய்யும் பொருள்களின்மீது தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரி செலுத்துகிறார்கள்.

'In the course of import.' வரி விதிக்கக் கூடாது, இறக்குமதி செய்த பின்புதான் வரி விதிக்கலாம் என்பது சட்டம். பெரிய வணிகர்கள், கூட்டு நிறுவனங்கள் பொருள் களை விற்பனை செய்வதற்கு இறக்குமதியாகிக்கொண்டிருக்கும் கட்டத்தில் கை மாறி விட்டதாக ரிக்கார்ட் பதிவு செய்து வரி விலக்கு கோரி சலுகை பெற்று வருகிறார்கள். இதனால் தமிழ்நாட்டுக்கு கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. இறக்குமதியாகும் கட்டத்தில் 'Sales in the course of import' என்ற விஷயம் சம்பந்தமாக இதுவரை வந்திருக்கும் நீதிமன்ற தீர்ப்புகளை அலசிப்பார்த்து வரி ஏய்ப்பு செய்யாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

பெட்ரோல், டீஸல் முதலிய எண்ணெய்களுக்கு விற்பனை வரி லிட்டருக்கு பத்து பைசா என்று விதிக்கப்படுகிறது. ஆனால் கேரளா, ஆந்திரா, பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களில் இன்று விற்பனை தொகை மீது வரி விதிக்கப்படுகிறது. அதேபோல் நம மாநிலத்திலும் லிட்டருக்குப் பதிலாக விற்பனைத்தொகை மீது வரி விதித்தால் நமக்கு லட்சக்கணக்கான ரூபாய் எதிர்பாராமலேயே கிடைக்கும். அதற்கான விதத்தில் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. நா. காசிராமன்: தலைவர் அவர்களே, 'General Sales Tax and other taxes and duties-administration.' என்ற மானிய கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். 64 கோடி ரூபாய்க்கு அதிகமாக வருவாய் கொடுக்கக் கூடிய இந்த இலாகாவிற்காக நாம் செலவிடுவது கிட்டத்தட்ட ஒன்னேமுக்கால் கோடி ரூபாய்தான். இரண்டு கோடி என்று வைத்துக்கொண்டால் கூட 3 %. தான் அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் நாம் செலவிடுகிறோம். இவ்வளவுகுறைவானவிகிதத்தில் வேறு எந்த இலாக்காவும் இல்லை. ஆனால் இந்த இலாக்காவிலிருந்து வருமானம் அதிகமாகக் கிடைக்கிறது. ஆகவே இதை இன்னும் ஊக்குவித்து அதிகாரிகளை நிறைய ஏற்படுத்தி நல்ல விதத்தில் இதில் ஏற்படும் லீக்கேஜ்களை குறைத்தால் நிறைய வருமானம் கிடைக்கும்.

[திரு நா. காசிராமன்]

[1969 மார்ச் 20

உதாரணத்திற்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். டீசல் என்ஜின் பொருத்தப் பட்ட வண்டிகளுக்கு கிரவஸின் உபயோகப்படுத்துவது சாத்தியம். அதனால் என்ஜின் கெடும் என்றாலும் கூட அதனால் ஆயிரக்கணக்கில் லாபம் ஏற்படும். 1965 செப்டம்பர் மாதம் மத்திய சர்க்கார், கிரவஸினை வீட்டு உப யோகத்திற்குத் தவிர மற்ற உபயோகங்களுக்கு உபயோகிக்கக் கூடாது என்று சட்டம் கொண்டு வருகிற வகையில் பல லாரிக்காரர்களும், பஸ்காரர்களும் கிரவஸினை டீஸல் என்ஜின் பொருத்தப்பட்ட வண்டிகளுக்கு உபயோகித்து வந்தார்கள். 1965 செப்டம்பருக்குப் பிறகு அப்படி கிரவஸினை உபயோகப் படுத்துவது குற்றமாகும். மது விலக்குச் சட்டம் அமலுக்குக் கொண்டு வருவதற்கு முன்னால் மது அருந்தினால் அது குற்றமாகாது. ஆனால் அதனால் பின் விளைவுகள் ஏற்பட்டு கலவரங்கள் ஏற்பட்டால் அது குற்றமாகக் கருதப் படுமே தவிர மது அருந்துவது குற்றமாகக் கருதப்படவில்லை, மது விலக்கு அமலுக்கு வருவதற்கு முன்பு. அதேபோல் 1965 செப்டம்பர் மாதத்திற்கு முன்பாக, மத்திய அரசு கிரவஸினை வீட்டு உபயோகத்திற்குத் தவிர மற்ற உபயோகங்களுக்கு உபயோகிக்கக்கூடாது என்று சட்டம் கொண்டு வருவதற்கு முன்பாக அப்படி கிரவஸினை உபயோகித்திருந்தால் அது குற்றமாகாது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்ததற்குப் பின்னால் அப்படி டீஸல் ஆயிலுக்குப் பதிலாக கிரவஸினை உபயோகிப்பது குற்றமாகும். இன்று காலை நான் கும்பகோணத்திலிருந்து காரில் வந்துகொண்டிருந்தேன். திண்டிவனம், செங்கற்பட்டு, தாம்பரம், மதுராந்தகம் போன்ற பல இடங்களில் ரோடுக்கு பக்கத்தில் கொட்டகைகள் போட்டுக்கொண்டு ஒவ்வொரு கொட்டகையிலும் பதினைந்து, இருபது பாரல் கிரவஸின் விற்று வருகிறார்கள். இதனால் நம் மாநில அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. கணக்குப் போட்டு பார்த்தால் 1,000 லிட்டர் டீஸல் ஆயில் விற்பனையானால் நம் மாநில சர்க்காருக்கு விற்பனை வரியாக ரூ. 100 கிடைக்கும். ஆனால் ஆயிரம்லிட்டர் மண்ணெண்ணெய் விற்றால் நம் அரசுக்கு வரியாகக் கிடைப்பது ரூ. 27 தான். ஆக ஆயிரம் லிட்டர் கிரவஸின் டீசல் ஆயிலுக்குப் பதிலாக விற்றால் ரூ. 73 நம் அரசுக்கு விற்பனை வரி மூலம் நஷ்டம் ஏற்படுகிறது.

ஒரு கிலோ லிட்டர் 10 லாரிகளுக்கு உண்டானது என்று எண்ணுகிறேன். நம் மாநிலத்தில் 6,000-க்கும் அதிகமான லாரிகள் இருக்கின்றன. மதுரை யிலே பார்த்தேன், திருநெல்வேலி பக்கத்திலே பார்த்தேன். பல இடங் களில் கெரஸின் ஆயிலைப்போட்டு லாரிகளை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி 6,000 லாரிகளில 3,000 லாரிகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது என்று பார்த்தாலும் ஒரு நாளைக்குக் குறைந்தது 25,000 ரூபாய் அளவிற்கு விற்பனைவரி மூலம் இந்த மாநிலத்திற்குக் கிடைக்கவேண்டிய தொகை நஷ்டமாகிக்கொண்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இப்படி மிக அதிகமாக இருக்கிறது, ஒருபக்கத்திலே லாரிகளுக்குக் கெரஸின் போட்டுக் கொண்டிருந்தால், செங்கல்பட்டிலே பார்த்தேன். பர்மா ஷெல்லுக்கு ஒரு பர்லாங் தூரத்தில் கெரஸினுக்காக கியூ நிற்பதையும் பார்த்தேன். மத்திய சர்க்கார் விதித்த தடைச்சட்டங்களைச் சரியான முறையில் அமல்படுத்தாத தினால் என்னென்ன கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்று பார்க்க வேண்டும். மாநில அரசுக்கு வரக்கூடிய, ஒரு நாளைக்கு 21,000 ரூபாய் வருமானம் தடைபடுகிறது. இரண்டாவதாக மத்திய சர்க்கார் தடை விதித் திருந்தும், அந்த தடையை அமல் படுத்தாத காரணத்தினால் பலர் குற்றம் செய்கிறார்கள், அதைக் கண்காணிக்காமல் விடப்படுகிறது. மூன்று வதாககிரவஸின்பல ஆயிரக்கணக்கானலிட்டர்கள் லாரிகளுக்குஉபயோகப்படுத்து வதன் காரணமாக, அத்தியாவசியமான உபயோகங்களுக்கு, வீட்டு உபயோகங் களுக்கு, ஏழைகளுக்குக் கிடைக்காமல் போய், சென்னை நகரிலும் பல ஊர் களிலும் தட்டுபாடு ஏற்படுவதையும் நாம் பார்த்தோம். ஏன் லாரிகளுக்கு கெரஸின் ஆயிலை இப்படி உபயோகப்படுத்துகிறார்கள் என்று பார்த்தால் டீசல் ஆயில் ஒரு லிட்டர் 82 காசு என்று சென்னை போலீஸ் கமிஷனர் உத்தரவு போட்டார். ஆனால், கெரஸின் விலை ஒரு லிட்டர் 51 காசு என்று 10-2-69 கெஜட்டில சிட்டி போலீஸ் கமிஷனர் வெளியிட்ட அறிக்கை யில் இருக்கிறது. இதனால் ஒரு லிட்டருக்கு 30 காசு ஆதாயம் ஏற்படுகிறது.



1969 மார்ச் 20] [திரு. ந. காசிராமன்]

ஆகவே, லாரிகளில் இந்தக் கெரஸின் ஆயிலை உபயோகப்படுத்துகிறார்கள். இதனால் நம் மாநிலத்திற்கு ஏறத்தாழ 70, 75 லட்சம் ரூபாய். ஒருநாளைக்கு 21,000 ரூபாய் என்று வைத்தால்கூட ஒரு வருஷத்திற்கு 75 லட்சம் ரூபாய் விற்பனைவரியின் மூலம் கிடைக்க வேண்டிய வருமானம் வராமல் போய் விடுகிறது. ஏன் அதிகாரிகள் இதைக் கண்காணிக்கவில்லை? மத்திய சர்க்கார் தடை உத்திரவு போட்டிருந்தும் மாநில அதிகாரிகள் ஏன் இதைக் கண்டுபிடிக்கவில்லை, ஏன் இதைத் தடைசெய்யவில்லை? இதனால் எவ்வளவோ ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. இதனால் ஜனங்களுக்கு அத்தியா வசியமான கெரஸின் ஆயில் கிடைக்காமல் போய்விடுகிறது. கெரஸின் வரவில்லை என்ற குறையிருந்தாலும்கூட, வந்த கெரஸின் அத்தியாவசிய மான வீட்டு காரியங்களுக்குப் போக வேண்டாமா? அப்படி அதற்குப் போகாமல் இம்மாதிரி unauthorised and illegal consumption of kerosene by lorries.

என்று அந்த மாதிரி ஒரு காரணத்திற்குப் போவதானல் கெரஸின் பஞ்சம் ஏற்படுகிறது. இந்தச் சட்டத்தை அமல்படுத்தினால் மாநில அரசுக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தை குறைக்க முடியும், கெரஸின் தட்டுப் பாட்டைக் குறைக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரே ஒரு வார்த்தை சொல்லி முடித்துக்கொள்கிறேன். சேல்ஸ் டாக்ஸ் களுக்காக செக் போஸ்ட்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நான் தாம்பரத் திலே பார்த்தேன். லாரிகளைச் செக் பண்ண வேண்டியதுதான். விற்பனை வரி ஏய்ப்பு இருக்கக்கூடாது. ஆனால் நிறுத்தும் வண்டிகளை போக்கு வரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் நிறுத்த வேண்டும். லாரிகள் ஒன்றுக் குப் பக்கத்திலே ஒன்றாக நிறுத்தப்பட்டிருந்தது. அதனால் ½ மணி நேரம் போக்குவரத்துத் தடைப்பட்டது. அம்மாதிரி இருக்கக்கூடாது. லாரி ஓட்டுபவர்கள், லாரி சர்வீஸ் நடத்துபவர்களுக்கு உண்டான கஷ்டங்களை அறிந்து அதற்குண்டான பரிகாரம் தேட வேண்டுமென்று கூறி என் னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, இந்த விற்பனை வரி சம் பந்தமான மானியத்தைப்பற்றி நினைக்கின்றபொழுது சிறு வியாபாரிகள் தான் கவனத்திற்கு வருகிறார்கள். இந்த ராஜ்யத்திலே லட்சக்கணக்கான சிறு வியாபாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு ஒரு கணக்குப் பிள்ளையை வைத்து, கணக்குகளை ஒழுங்காக எழுதி, அவர்களுக்குச் சம்பளங்களைக் கொடுப்பதற்குத் தகுதியானவர்களாக இல்லை. அதனால் அவர்கள் பல சந்தர்ப்பங்களிலே வரி வசூலிக்கும் அதிகாரிகளால் துன்பத்திற்குள்ளாகிறார்கள் என்ற புகார்கள் அவ்வப்பொழுது வருகின் றன. அவர்களுக்கு விதிவிலக்காக 15,000 ரூபாய் என்று ஆக்கியிருக் கிறோம். 15,000 ரூபாய் வரையில் பட்டும் வைத்திருப்பதால் அவர் களுக்கு அதிகப்படியான தொல்லைகள் ஏற்படுகின்றன. எனவே, அதைச் சிறிது அதிகமாக்கினால்தான் சரியானதாக இருக்கும் என்று கருதி அவர்கள் மூலமாக கோரிக்கைகள் வருகின்றன. வெளியிலேயிருக்கும் நிலைகளும் அதுதான். சிறு வியாபாரிகள் என்று சொல்பவர்கள் வாழ்க் கைக்கு ஒரு ஏற்பாடாக வைத்திருக்கிறார்களே தவிர, பெரும் லாபம் சம்பாதித்து, பெரும் பணக்காரர்களாவதற்கு ஒரு வழியாக அதை வைத்துக்கொண்டிருக்கவில்லை என்பதை இந்த அரசு உணர வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அப்படியுள்ளவர்களுடைய குறைந்தபட்ச அளவை 15,000 ரூபாய் என்றிருப்பதை இன்னும் ஒரு 10,000 ரூபாயைச் சேர்த்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் கூறியதைப்போல், 25,000 ரூபாய் என்று உயர்த்திக் கொண்டு வருவது மிகவும் அவசியம் என்று நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த ராஜ்யத்திலேயிருக்கும் பெருந்தொழில்களில் கைத்தறி இருக்கிறது. இந்தக் கைத்தறித்தொழில் விவசாயத்திற்கு அடுத் தாற்போல இருக்கிற ஒரு பெரும் கூட்டமான குடும்பங்களைச் சேர்ந்தது

அந்தத் தொழில் குடும்பங்களால் செய்யப்படும் தொழில், தனித்தனி யாகச் செய்யப்படும் தொழில் அல்ல. ஆகவே, குடும்பம் ஒட்டுக்குமாகச் சேர்ந்து செயல்படும் தொழிலாக அது அமைந்திருக்கிறது. அந்தத் தொழிலில் நூ லட்சக்கணக்கானவர்கள் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார் கள். இலட்சக்கணக்கானவர்கள் பங்கெடுத்துக்கொண்டிருக்கும் அந்தத் தொழில் இன்றைக்கு மிகவும் சீரழிந்து கொண்டிருக்கிறது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும். அதைப் பாதுகாப்பதற்கு வழி என்ன? இயந்திர நெசவாலையோடு இருக்கும் போட்டியைத் தவிர்த்து அவர்கள் புதிய வாழ்வு வாழ வழி என்ன? அதுபற்றிப் பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன, பல்வேறு சர்ச்சைகள் இருக்கின்றன. இருந் தாலும்கூட இன்றிருக்கும் நிலையிலே அந்தக் கைத்தறித் துணிகள் மிகவும் அதிகமாகத் தேங்கியிருக்கின்றன, விற்க முடியவில்லை. அதன் காரணமாகத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போய்விடுகிறது என்று கேள்விப்படும்பொழுது, குறைந்தபட்சம் அந்தக் கைத்தறித் துணியை உண்டாக்கும் உற்பத்தியாளர்களுக்கு நாம் இந்த வரியிலே விதிவிலக்கு அளிப்பது மிகவும் நியாயமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படிச் செய்வதால் அந்தத் துணிகளுக்கு வரி விலக்கு அளிப்பதால் அந்தக் குடும்பங்களைப் பாதுகாப்பது என்றுதான் பொருளே தவிர, அவர்கள் அதனால் சாதனைகளைப் பெற்று விடுகிறார்கள் என்பது பொருள் அல்ல. அந்தக் குடும்பங்கள் உயிர் வாழ வேண்டும், நிலையாக இருக்க வேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் அரசாங்கத்தின் ஒரு நல்லெண்ணம் என்பதாகும். அந்தச் சலுகையைக் கொடுப்பதற் காவது இந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்த ராஜ்யத்திலே இன்று அடிப்படைத் தேவையான வீடுகள் மிகவும் அதிகமாகத் தேவைப்படுகின்றன. இந்த ராஜ்யத்திலே இருக்கின்றவர்களில் வீடு இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகம். வீடுகளை விரைவாகக் கட்ட வேண்டும். அப்படி விரைவாகக் கட்டும்பொழுது, வீட்டுக்கு வேண்டிய சாமான்களுக்கு விற்பனை வரி விதிக்கப்படுகிறது. ஜல்லி வருகிறது, மணல் வருகிறது. இதுபோன்ற பல பொருள்கள் விற்பனை வரிக்கு உட்பட்டு வருகின்றன. அதன் காரணமாக வீட்டின் மதிப்பு, வீட்டின் விலை மிகவும் அதிகமாகிறது. ஆகவே, அந்தப் பொருள்களுக்கு விதிவிலக்கு அளிப்பது வீடுகள் கட்ட துரிதமான நடவடிக்கையாக இருக்கும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அதே நேரத்திலே, விற்பனை வரி விதிக்கப்படாமல் இருக்கின்ற வீடுகளும் சரி, நிலங்களும் சரி, விற்பனை செய்யப்படும்பொழுது அதன்பேரிலே வரி போடுவதில் தவறு இல்லை என்று கருதுகிறேன். வீடாகவோ, நிலமாகவோ, விற்பனை செய்யும்பொழுது அதன்மீது வரி விதிப்பதின் மூலம், இம்மாதிரி நஷ்டமடைகின்ற சில பொருள்களுக்கு வரிச் சலுகைகளை அளிப்பதால நஷ்டம் ஏற்படுகின்ற அந்த நஷ்டத்தை இதிலே ஈடு செய்ய முடியுமென்று நான் கருதுகிறேன். இன்னொரு விஷயம், பல சந்தர்ப்பங்களிலே குதிரைப் பந்தயத்தை நீக்க வேண்டு மென்று கருதியிருந்தோம், ஆனால் அது நீக்கப்படவில்லை. இருக்கும் பந்தயங்களுக்கு இன்னும் அதிகமான வரியைப் போடுவதில் எந்தவிதமான தவறும் இல்லை. அம்மாதிரி வரிகளை உயர்த்தி, சாதாரண ஏழைகளுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டியவர்களுக்குச் சலுகை காட்ட, இந்த வரிமுறைகளை மாற்றியமைப்பது இந்த அரசுக்கு மிகவும் அவசியம். ஏனென்றால் நிதியமைச்சரவர்கள் பல முற்போக்கான திட்டங்களை நம் முன்னால் வைத்திருக்கிறார்கள். அதேபோன்று அடித்தட்டிலே இருக் கின்ற, ஏழ்மையானவர்களிடத்திலே நாம் காட்டுகின்ற பரிவான உணர்வுகள் அவர்களிடத்திலே சென்று பயன்படும் முறையிலே செய்ய வேண்டு மென்றால் இம்மாதிரியான சலுகைகளைக் காட்ட வேண்டியது மிகவும் அவசியம். ஆகவே, இந்தக் கருத்துக்களை எடுத்து கவனம் செலுத்த வேண்டுமென்று குறிப்பிட்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகின்றேன்.





THIRU K. S. KOTHANDARAMIAH : Mr. Chairman, Sir, I wish to say a few words on the Demand-District Administration—presented to this House by the Hon. Minister.........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பு. செ. முத்துச்செல்வன்) : மாண்புமிகு உறுப்பினரை இங்கே விற்பனை வரியின் மீது பேசவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இது மாவட்ட நிர்வாகத்திற்கு உட்பட்ட தல்ல.

* ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : தலைவர் அவர்களே, அநேகம் பொருள்களுக்கு, அதுவும் உணவுப் பொருள்களாக இருக்கிற பொருள்களுக்கு வரி விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டு கின்றேன். அப்படி வரி விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிற இனங்களில் ஆட்டிறைச்சியும் ஒன்றாக இருக்கிறது. பெரிய ஆட்டிறைச்சி வியாபாரி களுக்கு, ஆடுகளை மொத்தமாகக் கொள்முதல் செய்து விற்பனை செய்ப வர்களுக்கு வரி போடுகின்ற ஒரு நிலை இருக்கிறது. நான்கைந்து ஆண்டு களாக சந்தைகளுக்குச் சென்று அங்கே இருந்து வாங்கி விற்கிற சிறிய ஆட்டிறைச்சி வியாபாரிகளுக்கு வரி விதி விலக்கு அளிக்கப்படவில்லை. பிற மாநிலங்களினுடைய எல்லையில் வசிக்கிற சிறிய ஆட்டிறைச்சி வியாபாரி களுக்கு ஒரு தொல்லை இருக்கிறது. பிற மாநிலங்களிலிருந்து வந்து நம் முடைய மாநிலத்தின் ஆடுகளை வாங்கிக் கொண்டு சென்று விடுகிறார்கள். இதனால் எல்லைப்புறங்களில் வாழ்கின்றவர்களுக்கு ஆடுகள் கிடைப்ப தில்லை. அந்த சிறிய ஆட்டிறைச்சி வியாபாரிகள் 50, 60 மைல்களுக் கப்பாலுள்ள சந்தைகளுக்குச் சென்று ஆடுகளை வாங்கி வருகிறார்கள். அப்படி வாங்கி வருகிறபோது, அவைகளை ஓட்டி வரக்கூடிய தூரம் அதிகம் இருப்பதால், நான்கைந்து வியாபாரிகளாகச் சேர்ந்து மொத்த மாக லாரிகளில் ஏற்றிக்கொண்டு வருகிறார்கள். அப்பொழுது நம்முடைய விற்பனை இனத்துறை பரிசோதனை அதிகாரிகள் அவைகள் மொத்த வியாபாரத்திற்கு செல்கின்றன என்று கூறி, அவைகளுக்கு வரி போடுவதன் காரணமாக சிறிய ஆட்டிறைச்சி வியாபாரிகள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இது குறித்து நம்முடைய நிதி அமைச்சரிடத்திலே நேரிலே பலமுறை கூறப்பட்டிருக்கிறது. அவர்களும் பரிவோடு அதற்கு விதி விலக்குத் தருவதாகக் கூறி இருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் அதை நினைவுபடுத்தி இந்த இனத்திற்கு வரி விலக்கு அளிக்க வேண்டுகிறேன்.

இன்னொன்றையும் நான் நம்முடைய நிதியமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கையாக சமர்ப்பித்திருக்கின்றேன். கோரைப் பாய்க்கு வரி விலக்கு தரப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பாயை உற்பத்தி செய்கிற கோரைப் புல்லுக்கு 3 சதவிகிதம் வரி போடுகிறார்கள். அப்படி 3 சதவிகிதம் வரி போடுகிறார்கள் என்று கூறுகிறபோது, கோரைப் புல்லை உற்பத்தி செய்கிற விவசாயியும் வரி கட்டுகிறார். அதைக் கோரையாக வாங்கி ஏழை எளியப் பெண்களுக்கு விற்கும் வியாபாரிகளும் கூட்டுறவு சங்கங்களும் அதற்கு வரி கட்டுகிறார்கள். நடைமுறையில் பார்த்தால் 6 சதவிகிதம் வரி குடிசைத் தொழிலான கோரைப் பாய்க்கு விதிக்கப்படுகிறது. அத்துடன் நம்முடைய மாநிலம் முழுவதும் இருக்கிற கோரை வரி வருவாய் ஒரு இலட்சத்திற்கு உட்பட்ட நிலையிலே இருப்பதாக அறியப்படுகிற காரணத்தினால் ஏழை எளியவர்கள், பெண்கள் குடிசைத் தொழிலாக செய்கின்ற இதற்கு அவர்களுக்கு உதவிசெய்கின்ற வகையில் கோரைக்கு வரி விலக்கு அளிக்கலாம்.

அதேபோன்று கைத்தறித் துணிக்கும் வரியிலிருந்து விதி விலக்கு கொடுப்போமானால் இப்பொழுது கைத்தறித் தொழிலில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடிக்கு ஒரு பரிகாரமாக அது இருக்கும் என்பதையும் நான் நினைவுப்படுத்தி, மாண்புமிகு அமைச்சரவர்கள் சிறிய ஆட்டிறைச்சி வியா

[ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது] [1969 மார்ச் 20

பாரிகள் பிரச்சினையிலும் கோரைப்பாய் நெய்கின்ற குடிசைத் தொழில் பிரச்சினையிலும் தங்களுடைய கவனத்தை செலுத்தி வரி விதிவிலக்கு தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

Thiru K. VINAYAKAM: Mr. Chairman, the Madras Sales Tax, introduced in 1939, has been rightly described as a "Kamadenu". From small beginnings, we are now assuming an income of Rs. 64 crores and odd for the coming year, from this sales tax. Now the Hon. Minister wants Rs. 1,00,79,000. This is a tantalising by negligible amount, which we have no objection to sanction.

At this time, I want to place some facts, which could be gone into and implemented, if necessary. In practice, we find that as far as sales tax is concerned, in the districts there is no appellate authority. The merchants had to travel to the Appellate Assistant Commissioner's Court, situated outside the Commercial Tax Office. Considering the difficulties at present experienced, Government may think of opening some more Appellate Assistant Commissioner's Court in every district.

As far as Deputy Commissioner's office is concerned, it is located in Madras, Coimbatore and Madurai. I hope the Government will think of the possibility of opening one more office in Tiruchirappalli, in the interest of people.

This Act has been in force from 1939 and we find it has been working successfully. But what about the huge rent that we have been paying by way of rents for these offices, in taluk headquarters? Why not Government think of the possibility of constructing its own buildings to house these officers? May be there might have been lapses in the past. At least this Government may think in terms of constructing its own buildings and save the huge rent we are paying at present.

The Central Intelligence Wing attached to the main office in Madras was doing some good work of detection, etc., in the past. But I believe for the past two years, not much of appreciable work had been done. If it is to be retained, let it work properly and book people who avoid taxes or it is better that we abolish that wing, instead of having it for the mere pleasure of it.

Regarding the way in which income-tax is collected, there is lot of room for the assessees and their lawyers to sit before being called upon by the officer concerned. But in the case of sales tax, unfortunately the picture is not so rosy. The practice here is to sit somewhere. In the district or taluk headquarters or main office, there is no proper accommodation for assessees or sales tax practitioners to sit. They have to wait for a long time. Proper accommodation may please be arranged in these offices.



1969 மார்ச் 20] [Thiru K. Vinayakam]

I have been observing these Commercial Tax department's check posts that are now situated all round the Madras City and the mofussil. A lot of stagnation of the vehicles is there. It is a menace to the travelling public. On flimsy grounds, the vehicles are stopped. There is wastage of a lot of time. The people there should turn out work quickly. Care should be taken to avoid the present handicap.

I shall refer to the enormous time wasted in hearing the cases. We receive notice to be present at 11 a.m. in the office. It is like Court summons. Otherwise we run the risk of having to pay penalty. We are punishable under law. We wait from 11 a.m. up to 5 p.m. the fag end of the day. The peon tells me "what can I do, Sir. The officer has gone on executive work. He has gone somewhere else. We do not know when he will come". exercise not books also for the sake of poor children of the State? may be instructed to avoid giving room for such complaints.

Regarding exemptions, there are of course exemption for the slate pencils and text books. May I ask for exemption for exercise note books also for the sake of poor children of the State? This may be considered.

As far as the working of this Act is concerned, whenever a lawyer presents his case before the Appellate Assistant Commissioner, he may get an order in his favour or against him. In the later case, he will have to go before the appellate authority. According to the Act, that lawyer will have to present a separate petition for stay. The usual practice in the judicial court is, when we go in appeal, automatically we get a stay and we need not move for a separate stay petition. According to the Act it is incumbent to get a stay from collecting the tax in dispute. This may be avoided and instructions may be issued to the effect that there is no need to apply for a stay petition. Proper security will have to be taken—that I admit. When we go in appeal, the assessee may circumvent this Act by disappearing from the place of business or by giving trouble to the officers in finding out his whereabouts. Proper security must be insisted on, but a separate stay petition need not be there. முற்பகல் 11-30

In these days, clocks, timepieces and watches are not considered as luxury items. Their possession has become almost a second nature with the people and they may be exempted from the payment of tax. Now they are taxed at 12 per cent. Twelve per cent is too much. If you cannot altogether exempt them, at least reduce the tax to three per cent and thus bring them on a par with the other commodities. Twenty years ago they might have been considered luxuries. Nowadays these are necessaries and everyone finds use for them.

The fee for registration as a dealer under the Act is Rs. 10. This amount was fixed when Adam and Eve were living.

This was fixed in 1959 and the same rate is being continued. It should be raised. But it does not mean that it should be raised to the unusually high figure of Rs. 100. It may be slightly raised and we can get a little more revenue.

'C' certificates are given to the assessees. People who manufacture commodities here market them outside the State and for that purpose they obtain 'C' certificates. I have known instances where 'C' certificates have been obtained and tax evaded even at the beginning when they manufactured the commodity in the State. While granting 'C' certificates we must be very careful. Commodities which are manufactured here but marketed outside the State must be brought within the scope of the tax at least at one point. There are very intelligent assessees who obtain bogus forms and avoid taxation. They say they are marketing the goods outside the State like Bombay and Calcutta.

Four or five people join together and they do business individually. But they all give one and the same place of registration. If four individuals A, B, C and D give X as their place of business, the assessing authority is handicapped in the sense that he cannot go and inspect each individual's account books and stock of goods. Whenever two or three persons give the same place as their place of business, the assessing authorities must be carful and see that there is no evasion of tax. I know in actual working 'A' says that the goods belongs to 'B' and that he has been wrongly assessed, and 'B' says that it is not his goods and that he has been wrongly assessed. Why should there be this confusion? The Government should insist that each dealer should have a separate place of business.

Maintenance of account books is causing head-ache to the assessees. There is no specific provision in the Act for the maintenance of certain books of accounts. For instance there is no provision that a cash book or ledger should be maintained. The department cannot question a dealer why he has not maintained account books for purchases and sales. As the Hon. Minister pointed out in his speech which he has not read in the House, there must be a finality for the books to be maintained. It will be in the interest of the Department as well as the assessees to prescribe the minimum accounts that should be maintained, so that the officers may not ask for all sorts of books which may not be useful as far as assessment is concerned. Suitable instructions in this regard may be given to the authorities concerned.

There is a way of avoiding Madras General Sales Tax as well as the Central Sales Tax if the assessee wants to evade. If a dealer says that the goods manufactured in this State are going to be marketed outside this State, the assessing authority is incapacitated from making the assessment. There must be a section in the Act



which must make the manufacturer pay at least one tax in this State. The Central Government should also be moved to amend the Central Sales Tax Act to achieve this object.

As far as Entertainment Tax is concerned, it is a fact that a lot of questionable practices are being indulged in by owners of theatres in the mofussil. I am not aware of the conditions obtaining in the city. Many a time I have been to the City theatres. There is exhibition of slides in the interval that counterfoils of tickets should be preserved and one who does not produce the counterfoil for inspection when asked for will be liable to a fine of five hundred rupees. Ever since my childhood I have been going to the theatres. But not once have I seen any officer doing any check. They must have taken it for granted that all have purchased tickets. (Interruption by the Hon. Thiru M. Karunanidhi.) I said that I have been going from my childhood. I do not question the fidelity of our officers, I do not suspect the owners of cinema theatres in the City of Madras. Probably things are going on all right. Periodically, at least once a month the concerned officers must butt in and give at least the impression that they are serious. Smoking inside the theatre has been put down in the City of Madras not only due to the voluntary co-operation of the people but also because of the co-operation of the Police. One can admit any number of people under a free pass and escape tax. In Bombay they have plugged this loophole. Theatre owners can admit persons under a free pass, but they have to pay entertainment tax for all free passes. That is the practice in Bombay. The Tamil Nadu Government should also think on similar lines. Sir, in the mofussil in most of the touring cinemas this is not perfectly observed. I know that bogus commercial tax seals are manufactured and duplicate seals are also manufactured and they are using them. They get into trouble when they are found out. But how many checks can be carried out by these Commercial Tax Officers when they do not have jeeps of their own? The Government have given jeeps for P.W.D. officials, Revenue officials, Agricultural officials and other officials. Almost all the other Departmental officials have got jeeps but the Assistant Commercial Tax Officers at the taluk headquarters do not have their own jeeps and it is also difficult to contact them after office hours, that is, after 5 p.m. Suppose I find that in a cinema some mistake is committed and there is evasion of tax and I want to contact the Commercial Tax officers but I cannot do so as they do not have residential telephones. I know from my personal experience how in my place a Commercial Tax Officer had to take his friend's car or an assessee's car to book culprits. So, my plea is that every Assistant Commercial Tax Officer in the taluk headquarters must be supplied with a jeep and if possible even residential telephones so that they may be contacted even outside office hours.

Then, Sir, these officers are doing onerous work. At the risk of their lives, they work. It is not an easy job to be a Commercial

[Thiru K. Vinayakam] [1969 மார்ச் 20

Tax Officer. That is my experience.

(குறுக்கீடு) நான்சொல்வதெல்லாம், நான் இருந்தேனென்றால் எப்படி?

This is all the experience gained from the working of the Department. These Commercial Tax Officers are not vested with police powers. Only higher officers can carry a pistol and that too in self-defence and not all officers. They have to do the very dangerous work of getting into various places, checking accounts, seizing books, etc. They are bringing in Rs. 68 crores for us whereas we are not sympathetic towards our own officers. I suggest awards must be given. You are giving awards to the officials of the Engineering Department. You are giving awards to teachers and others for their meritorious work. But these officers who are doing much more meritorious work are not given awards. So, they must be given awards. Are we giving them cash bonus? No. They must be encouraged so that they may feel that the Government have recognised their good work. Sir, our late Chief Minister, Thiru C. N. Annadurai, sanctioned a good proposal with regard to the encashment of leave. One month's leave can be cashed after putting in one year's hard work. But there is one snag in that proposal. After working for one year they apply for leave and higher officials may grant it but they do not avail of this leave for fear of being transferred from their place of duty. For instance, many persons working in the City of Madras are doing good work but if they go on one month's leave, they run the risk of being shifted to the Kanyakumari district where there is no water, on their return from leave. That is the trouble. We will have to find ways and means to get over it and see that some kind of to find ways and means to get over it and see that some kind of

(At this stage the Hon. Speaker occupied the Chair.)

Then, I come to another matter. All commodities are subject to sales tax except those that are exempted but according to the judgment of the Court, works contract cannot be assessed. I know as a legal practitioner I got into this muddle. Income-tax is levied on the works contract whereas sales tax cannot be levied. That is the snag in the Act. I think this Ministry should examine that point carefully and see what could be done in the matter.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு டிமாண்டு இருக்கிறது.

திரு. கே. விநாயகம் : வந்துவிட்டேன்; முடித்துவிடுகிறேன்.

Sir, there is a dangerous phrase in that very Act 'best of judgment'. The judgments given by the assessing authorities are not satisfactory and in their judgment they can use that phrase 'to the best of judgment' and that is the end of the matter. But my point is that while assessing any case the assessing officer must examine the issue properly from A to Z and he must argue the case within himself and then write his decision to the best of his judgment. But I know invariably these officers without hearing the argument and without going into the merits of the case and without even opening the case, give the decision that in the best of their judgment, an assessee is assessed to 100 per cent



1969 மார்ச் 20] [Thiru K. Vinayakam]

more tax. For instance, if 'A' was paying Rs. 10 as tax last year, suddenly—I do not know who gave instruction to them, either the Government or the Commercial Taxes Department which wanted more money, his assessment was doubled. Those things have happened only in your regime. What is the cause for doubling this taxation. Nobody knows when the assessment would be doubled by these officers to the best of their judgment. That is the sword which can cut both the ways. That is not the way the assessees must be treated. They must be given valid reasons why they have doubled the taxation or increased it never in their life they would decrease it. So, these are all pitfalls in the Act and they have to be gone through by the Government. With these few words, I conclude my speech.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும், நிர்வாகம் என்ற மானியத்தின் கீழ் நல்ல முறையில் விவாதம் நடந்திருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன். அதிலும், இன்றைக்கு ஒரு பெரிய சிறப்பான நிகழ்ச்சி என்னவென்றால், நம்முடைய அருமை நண்பர் திரு. விநாயகம் அவர்கள், அவர்கள் வழக்கமாக ஆற்றும் உரையிலிருந்து இன்றையதினம் மாறுபட்டு, ஒரு புரட்சிகரமான, ஒரு நல்ல அபிவிருத்தியான முறையில், பல நல்ல யோசனைகளைச் சொன்னார்கள். அந்த வகையில் அவர்களுடைய மற்ற உரைகளும் அமைந்தால் இந்த சட்ட மன்றத்திற்கும், நம்முடைய நடவடிக்கைகளுக்கும் அது பெரிதும் உதவியாக இருக்கும் என்பதால், இந்த உரைக்குப் பாராட்டுத்தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு பொதுவாக அதிகமாக விவாதம் நடைபெறவில்லை. அதிகமாக விவாதம் நடைபெறவில்லை என்றால், அது நன்றாக இருக்கிறது, ஒழுங்காக இருக்கிறது என்று தான் பொருள். அந்த வகையில் மேலான கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்கு நன்றி தெரிவித்து அடுத்த மானியக் கோரிக்கைக்கு சுருக்க வழி விடுவது நல்லது என்ற முறையில், உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, முன்னாலேயே என்னுடைய உரையில் சில விவரங்களைச் சொல்லியிருப்பதால், மறுபடியும் உறுப்பினர்களுடைய யோசனைகள் எல்லாவற்றையும் நல்ல முறையில் செயல்படுத்த வாய்ப்பு இருப்பதாகக் கருதிக்கொண்டு என் முடிவுரையைச் சொல்ல விரும்புகிறேன். உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டது போல, இந்த வரி நமக்கு ஒரு பெரிய ஆதாரமானது. நம்முடைய ராஜாஜி அவர்களுக்கு நம் மகிழ்ச்சியையும், பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் நினைத்த அளவிற்கும் மேலாக இன்றைக்கு நமக்கு நிதி ஆதாரமாக இருக்கிறது, என்பதில் கொஞ்சம்கூட சந்தேகம் இல்லை.

இந்த இலாகாவைப் பொருத்தவரையில், இன்னும் சீரான காரியங்களைச் செய்ய வேண்டும் என்று யோசனைகள் சொன்னார்கள். நம்முடைய ஆட்டகோணம் உறுப்பினர் திரு. காசிராமன் இதில் எவ்வளவு வேண்டுமானாலும் செய்யலாம் என்று சொன்னார்கள். உண்மையிலேயே இருக்கும் நிலை அதுதான்.

இன்றைக்கும் நம்முடைய பட்ஜட் 250 கோடி ரூபாய் என்றால், அரசாங்க வரவு செலவுத் திட்டத்திலே எல்லாம் வரியாகவே வருவது அல்ல. 239 கோடி பட்ஜெட் என்றால், அந்த ரூ. 239 கோடியும் வரியே என்று கருதுகிறார்கள். அப்படியில்லை நிலை. பட்ஜெட்டில் வருகிற வருமானம் இரண்டு மூன்று இனங்களில் வருகிறது. கடனாக நாம் வாங்குவது மக்களிடத்திலிருந்தும், இந்திய பேரரசிடமிருந்தும் வாங்கும் கடன்கள். பரிகத் திட்டத்தில் வரும் வருமானம். இன்னொரு வகை மத்திய சர்க்காரிட

மிருந்தும் மானியமாகவும், வரிகளில் பங்காகவும் பெறுகிற தொகை
என்கிற ஐடெம் இருக்கிறது. இந்த இரண்டு ஐடெமும் போக, மீதி
யிருக்கிறது வரியாகப் பெறுகிறோம். ஒட்டுமொத்தமாகச் சொல்லுகிறேன்.
புள்ளிவிவரத்தோடு சொல்லவில்லை. வெளியிலே மக்களுக்குத் தெரிவதற்
காகச் சொல்லுகிறேன். ரூ. 240 கோடி பட்ஜெட்டிலே, 120, 130 கோடி
வரையில் மானியமாகவும், கடனாகவும் பெறுகிறோம். மீதியிருக்கிற 110,
அல்லது 100 கோடி தான் வரிப்பணம். மீதி இருக்கும் இந்த 100 கோடி,
110 கோடி ரூபாய்தான் வரி. 60 கோடி ரூபாய் இந்த இலாகாவிலிருந்து
வருகிறது. இதுதான் உண்மையான நிலை. 240 கோடியிலே நமக்கு
வரியாக வருவது 120 கோடிதான். நிலவரி, மற்ற வரிகளையெல்லாம்
கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக்கொண்டு வருகிறோம். இந்த அரசின்
நிர்வாகச் சீரான முறையில் அமைந்து செயல்படுவதற்கும், அரசாங்
கத்தின் மற்ற எல்லாவிதமான இலாகாக்களும் சரியாக இயங்க விற்பனை
வரி இலாகா கேந்திரமாக அமைந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்
கொள்கிறேன். மறைந்த பேறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பை
ஏற்ற இரண்டு ஆண்டுக் காலத்தில் இந்த இலாகாவில் புதிய திருப்பத்
திற்கும் அதில் செய்யப்பட வேண்டிய மாறுதலுக்கும் தக்க ஆக்கத்தை
யும் ஊக்கத்தையும் அளித்து வந்திருக்கிறார்கள் என்பதை இந்த
மாமன்றத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். புதிதாக ஒரு
அரை பர்செண்ட்தான் வரி போட்டோம். மற்ற எந்தவிதமான வரிகளும்
விற்பனை வரியிலே சேர்க்கப்படவில்லை. நான் இதைச் சொல்வதற்குக்
காரணம் இருக்கிறது. கடந்த வருஷத்தில் 1967–68-ல் எந்தவிதமான
புதிய வரிவிதிப்பும் இல்லாமல் 8 கோடி ரூபாய்க்கு அதிகமான வரு
மானத்தை இந்த இலாகா வசூலித்துக் கொடுத்திருக்கிறது என்பதை
இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக நான்
பெருமைப்படுகிறேன். அதற்காக இந்த இலாகாவில் இருக்கின்ற கமிஷனர்
அவர்களையும் மற்ற அதிகாரிகளையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட
பிறகு புதிய வரி இனங்கள் விதிக்கப்படாமல் கூடுதலான பணத்தை
அரசாங்கக் கருவூலத்திற்குப் பெற்றுத் தந்திருக்கிறோம் என்பதை
மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணம் இரண்டு
வகைகளிலே கிடைத்திருக்கிறது. ஒன்று முதலில் வரி ஏய்ப்பு தடுக்கப்பட்
டிருக்கிறது. இது ஒரு முக்கிய அம்சம். அடுத்தபடியாக இதனுடைய
நிர்வாக இயந்திரம் திருத்தப்பட்டிருக்கிறது. இந்தத் துறையின் மூலம்
13 கோடி வராமலிருந்தால் புதிதான வரிகள் போடப்பட்டிருக்கும்.
ஏழை மக்கள்தான் பாதிக்கப்பட்டிருப்பார்கள். இது இந்த இலாகாவுக்குக்
கிடைத்திருக்கின்ற ஒரு பெரிய வெற்றி என்று கருதுகிறேன். எதிர்க்கட்சித்
தரப்பினர் இதை இந்த மன்றத்தில் பாராட்டுவார்கள் என்று எதிர்
பார்த்தேன். யாரும் பாராட்டவில்லை. ஆகவே நானே பாராட்டிக்கொள்
கிறேன் (சிரிப்பு). புதிதாக வரிபோட்டு, அதற்கு உங்களுடைய கண்ட
னத்தைப் பெறுவதைவிட என்னை, நானே பாராட்டிக்கொள்வது சிறந்தது.
கூடுதலான வருமானத்தைப் பெற்றுத் தந்ததற்காக அதிகாரிகளையும்
மற்றவர்களையும் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, கேளிக்கை வரியைப் பற்றி அதிகமாக யாரும் பேச
வில்லை. இந்த அரசாங்கம் பொறுப்பை ஏற்கும் நேரத்திலே 2 கோடியே
96 லட்சம் ரூபாய் சினிமாக் கொட்டகை மூலம் வந்துகொண்டிருந்தது
தற்போது 3 கோடியே 62 லட்சம் ரூபாய் அதிலே வரியாக வந்திருக்கிறது.
சினிமா கொட்டகைகளில் கொடுக்கப்படும் டிக்கெட்டைப் பற்றிப் பேசினார்
கள். சென்னை, கோயம்புத்தூர் போன்ற பெரிய நகரங்களில் டிக்கெட்
ஏமாற்றுதல்கள் இல்லை. சில இடங்களில் கள்ள நோட்டுகள் அச்சடிப்ப
தைப்போல சினிமா டிக்கெட்டுகளையும் அச்சடித்துக்கொள்கிறார்கள்.

**திரு. கே. விநாயகம்:** கோயம்புத்தூர் தங்களுடைய ஊர் இல்லையா?





**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கோயம்புத்தூர் என்று
சொன்னவுடன் என்னுடைய ஊர் இல்லையா என்று திரு. கே. விநாயகம்
அவர்கள் கேட்கிறார்கள். ஊர் என்ன செய்யும்? கோயம்புத்தூர் என்ன
பாவம் செய்யும்? அப்படிப்பட்ட மன இயல்பு கொண்டவர்கள்தான் செய்
கிறார்கள். இப்பொழுது திருத்தணியில், ராணிப்பேட்டையில், நாகப்பட்
டினத்தில் செய்தார்கள் என்றால் அந்த ஊரிலிருந்து வந்தவர்கள்
அதற்குப் பொறுப்பா? (சிரிப்பு).

சினிமாவினால் ஏராளமாக வருமானம் வரக்கூடியது. முதலில்
பொறுப்பு ஏற்கும் நேரத்தில் 2 கோடியே 96 லட்சம் ரூபாய்தான்
கிடைத்தது. இரண்டு ஆண்டுக் காலத்தில் இது 3 கோடியே 67 லட்சம்
அளவில் கிடைத்திருக்கிறது. இந்த வரியை அரசாங்கமே எடுத்துக்
கொள்வதில்லை. இதில் ஒரு பத்து சதவீதத்தை அரசாங்கம் நிர்வாகச்
செலவுகளுக்காக எடுத்துக்கொண்டு, மீதி 90 சதவீதத்தை அந்தந்த
ஊர்களிலுள்ள முனிசிபாலிட்டுகளுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் கொடுத்து
விடுகிறோம். இன்னும் இதில் ஏமாற்றுதல்கள், பித்தலாட்டங்கள் இல்லா
மலிருந்தால் இது 6 கோடி ரூபாய், 7 கோடி ரூபாய் என்ற அளவிற்குக்
கிடைக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். பரமக்குடிக்கு அருகில்
ஓர் ஊரில் ஒரு சினிமாக் கொட்டகையில் 500 பேர் உட்கார்ந்து சினிமா
பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்தச் சினிமா கொட்டகையைச் சோதனை
யிட்டுப் பார்த்ததில் அதில் 24 பேர்களே உண்மையான டிக்கெட் உடைய
வர்களாக இருந்தார்கள். பாக்கி அத்தனையும் போலி டிக்கெட்டுகள்.
(சிரிப்பு). அந்தச் சினிமா கொட்டகை முதலாளியின் மீது நடவடிக்கை
எடுத்து வருகிறோம். நாம் பொதுமக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில்
வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ள
வேண்டும். இது சினிமாக் கொட்டகைக்காரருக்குக் கொடுக்க வேண்டிய
வரி அல்ல; அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டிய வரி. அரசாங்
கத்திற்கு வரி கிடைக்காவிட்டால் பொதுமக்கள்தானே பாதிக்கப்
படுவார்கள்? வரி ஏய்ப்பின் மூலம் அரசாங்கத்தை ஏமாற்றி அரசாங்க
த்தின் கருவூலத்திற்குப் பணம் போய்ச் சேராதபடி சிலர் செய்வதை
–மிஸ் அப்ரோப்ரியேஷன் செய்வதை—தடுக்க வேண்டும். கேளிக்கை வரித்
துறையிலும் இன்றைக்கு ஒரு கோடி ரூபாய் அதிகமாகியிருக்கிறது
என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். வரி ஏய்ப்பை செய்பவர்கள் மீது எடுத்துக்கொள்ளும் நட
வடிக்கை எனக்கே கூட திருப்திகரமாக இல்லை. இன்னும் கொஞ்சம்
கடுமையான முறையில் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு, சினிமாக்
கொட்டகைகளில்—மிஸ் அப்ரோப்ரியேஷன்—வரி ஏய்ப்பு நடப்பதைத் தடுக்க
வேண்டும். அரசாங்கத்தின் பணத்தைக் கையாடல் செய்பவர்கள்மீது
கடுமையான நடவடிக்கை எடுத்து, கடுமையான தண்டனை
அளிக்கப்பட வேண்டும். வியாபாரிகள் என்போர் அரசாங்கத்திற்கு
நிதி ஆதாரத்தைத் தேடித் தரும் ஏஜெண்டுகள் என்ற அளவில்
தான் இருக்கவேண்டும்.

அடுத்தபடியாக, டாக்டர் ஹாண்டே அவர்கள் குதிரைப் பந்தயத்தைப்
பற்றிச் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையை
நிலைநாட்டுவதிலேதான் நாங்கள் அக்கறை கொண்டிருக்கிறோம். அதிலே
எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இப்பொழுது இருக்கிற நிலவரத்தைப்
பார்த்தால் நம்மை ஏமாளிகளாக ஆக்கும் நிலைமை இருக்கிறது.
குதிரைப் பந்தயம் போன்ற சூதாட்ட உணர்வுகளை மக்கள் சமுதாயத்தி
லிருந்து அகற்ற வேண்டுமென்ற புனிதமான கொள்கையிலிருந்து
இந்த அரசாங்கம் பின்வாங்கியதில்லை நடைமுறையில் பார்க்கிற
நேரத்தில் பல மாதிரியான நிலைமைகள் இருக்கின்றன. நாம் இப்போது
ஒரு வலையத்திற்குள் அகப்பட்டுக்கொண்டு திண்டாடுகிறோம். டாக்டர்
ஹாண்டே அவர்கள் சொன்ன குதிரைப்பந்தயத்தை ஒழிப்பது என்பது
நம் கொள்கை. இருக்கிற நிலைமைகளையும் நாம் கவனிக்க வேண்டி

யிருக்கிறது. நான் ஒன்றைச் சொன்னால் ஆந்திர மாநிலக்காரர்கள் தவருகக் கருதிக்கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஆந்திர மாநிலத்தின் முதல்வர் திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் ஒரு சமயம் பேசிக் கொண்டிருக்கும்போது, "நீங்கள் குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிடுவீர்களானால், நாங்கள் உடனே திருப்பதியிலேயே ஆரம்பிக்கலாம் என்று யோசனை செய்து கொண்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள். "நீங்கள் முதலிலேயே இதைக் கூறினீர்கள், அதற்காக மிக்க நன்றி" என்று முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதிக வரி விகிதத்தை உயர்த்தியதன் மூலம், குதிரைப் பந்தயத்தின் மூலம் 75 லட்சம் ரூபாய் கடந்த ஆண்டு வந்துகொண்டிருந்தது. இந்த ஆண்டு சில நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாக சில விகிதங்களிலே வரி அதிகமாகக் கிடைத்திருக்கிறது.

மூன்று மாதங்களுக்கு முன்புதான் அரசாங்கப் பிரதிநிதியாக இருக்கிற திரு. சினிவாசன் என்பவர் நமக்கு மிகவும் உதவியாக இருந்த காரணத்தினால், அவரது சிலபல யோசனைகளின்படி பெட்டிங் டாக்ஸ் $12\frac{1}{2}$ %ஆக இருந்ததை 15 %. என்றும், 15 %ஆக இருந்ததை 20 %. என்றும் உயர்த்தி உத்தரவுகள் எல்லாம் போட்டேன். இதன்மூலம் நமக்கு 50 லட்சம் ரூபாய் அதிக வருமானம் வந்திருக்கிறது என்பதை திரு. ஹாண்டே அவர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். இதனால் குதிரைப் பந்தயம் இருக்கவேண்டுமென்பது இந்த அரசின் நோக்கம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு குதிரைப் பந்தயத்தைப் பற்றித் தெரியாது. ஜாக்பாட், இரட்டைப் பந்தயம், மூன்று பந்தயம் -பெயர்கள் சரியாகத் தெரியாது-அவற்றின் மீது போடப் பட்டிருக்கிற வரி உயர்வின் மூலமாக நமக்கு 50 லட்சம் அதிகமாக இவ்வாண்டு வந்திருக்கிறது.

இன்னும் பெஸ்ட் ஆப் ஜெட்ஜ்மெண்ட் என்று வரிவிதிக்கப்படுவதைப்பற்றிச் சொன்னார்கள். அதுபற்றியும் கவனம் செலுத்தப்படும். திரு. பீர் முகம்மது அவர்கள் ஆட்டு இறைச்சிக்கு விலக்கு அளிக்கவேண்டும் என்றார்கள் அதைக் கொள்கை அளவில் அரசு ஏற்றுக்கொள்கிறது. அதற்கு விலக்கு அளிக்கப்படும்.

அடுத்து, திருச்சியில் அபலெட் ட்ரிப்யூனல் அமைக்கவேண்டுமென்று சொன்னார்கள் சென்னையில் இரண்டு இருக்கிறது. மதுரையில் மூன்றாவது, கோயம்பத்தூரில் நான்காவது, ஐந்தாவதாக திருச்சியிலும் மிக விரைவில் ஏற்படுத்தும் யோசனையை அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அர்பன் லாண்ட் டாக்சைப் பற்றிச் சொன்னார்கள். இந்த அரசு தெளிவான முறையில் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறது. கூட்டுறவு அமைச்சர் அவர்களும் விளக்கினார்கள். இந்த வரியை காங்கிரஸ் அரசாங்கம் கொண்டுவந்தது. அப்போது நான் திரு. விநாயகம் உட்கார்ந்திருந்த இடத்தில்தான் உட்கார்ந்திருந்தேன். (திரு. கே. விநாயகம் —இந்தப் பக்கம் உட்கார்ந்து அப்போது அது வேண்டாம் என்று எதிர்த்தீர் கள்) நான் அப்படிச் சொல்லியிருக்கமாட்டேன். கன்சிஸ்டன்ஸி ஒன்றுதான் எங்களிடத்திலிருக்கிற மூலதனம். நேற்று ஒன்று சொல்வது, இன்று ஒன்று சொல்வது என்ப இடையாது. அன்றைக்கு அந்த வரியை திரு. ராமையா அவர்கள் கொண்டுவந்தபோது அதை ஆதரித்து நான் ஆற்றிய உரையைப் படித்துப் பார்த்தால், இன்றைக்கு நிறைய பாயிண்டுகள் இதற்குச் சாதகமாகவே இருக்கும். தஞ்சைப் பகுதி மிராசுதார்களுக்கு எல்லாம் உச்சவரம்பு வைத்துவிட்டோம். நகர்ப்புற சொத்து சம்பந்த மாகவும் கட்டுப்பாடு இருக்கத்தான் வேண்டும். உதாரணமாக இன்றைக்கு நான் முன்பு குடியிருந்த பகுதியில்—முதல் அமைச்சரது பத்திரிகை அலுவலகத்திற்குப் பக்கத்தில் ஒரு கிரவுண்டு 50 ஆயிரம் ரூபாய். அதற்காக அவர்கள் என்ன செய்தார்கள்? ஆகவே இந்த வரியைப் போடவேண்டும் என்ற கொள்கையில் மாற்றம் இல்லை. ஹைக்கோர்ட் கூடச்



சட்டம் தவறு என்று சொல்லவில்லை. 6-வது செக்ஷனில் மதிப்பை நிர்ணயிப்பது சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது பற்றித்தான் சொல்லி யுள்ளார்கள். அந்த தாவாகூட சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் நேற்றைய தினம் ஆர்க்யுமெண்ட்ஸ் முடிந்துவிட்டன. தீர்ப்பு வழங்கப்படவேண்டிய கட்டத்தில் இருக்கிறது. அந்தத் தீர்ப்பு வந்தபிறகு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்பதைப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக தேங்காய், தேங்காய் நார் இவற்றுக்கு வரிவிலக்கு அளிக்கவேண்டும், பக்கத்தில் உள்ள கேரள மாநிலத்தில் இப்போது வரி போடப்படவில்லை என்றார்கள். கேரளாவோடு நாம் ஒப்பிட்டுப்பார்க்கவேண் டியதில்லை. அங்கே இருப்பது கம்யூனிஸ்டு அரசாங்கம். திரு. நம்பூதிரிபாட் எதை எதைச் செய்கிறாரோ, அதை எல்லாம் நாம் செய்யவேண்டும் என்பது நியாயமில்லை. அதைப்பற்றி நாமே பரிசீலித்துப் பார்க்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோதண்டராமன் அவர்கள் உணவுப் பொருள்களுக்கு வரி போடக் கூடாது என்று ரொம்ப நாளாகவே சொல்லி வருகிறார்கள். உணவுப் பொருள்களுக்கு வரி போடுவதாகச் சொல்வது தவறான கருத்து என்பதை இந்த மன்றத்திற்கும். மாநில மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். உணவுப்பொருள்களுக்கு விற்பனை வரி இல்லை. நெல், சோளம், கம்பு, தினை, வரகு, சாமை, கொள்ளு, அரிசி மாவு-இப்படி பல பொருள்களுக்கு வரி கிடையாது. பருப்பு வகைகளுக்கும், கோது மைக்கும் 1 %. பலமுனை கட்டத்தில் வரி இருக்கிறது. பழவகைகள், காய்கறிகள், பால் பதார்த்தங்கள், முட்டை, மீன, இறைச்சி ஆகிய இவற்றுக்கு எல்லாம் வரி கிடையாது. ஆகவேதான் சொல்லிக்கொள் கிறேன், உணவுப்பொருள்களுக்கு வரிபோடுவதாகச் சொல்வது சரியல்ல. பருப்பு, கோதுமை நமக்குக் கிடைப்பதே இல்லை. வெளியில் இருந்து வரவேண்டியதாக இருக்கிறது. அதற்குத்தான 1 %. பலமுனை வரி இருக்கிறது.

ஓட்டல்களுக்கு வரி போடக்கூடாது என்று திரு. விநாயகம் சொன்னார்கள். அவர் ஒரு ஹோட்டல் வைத்திருந்தார். அதன் காரண மாகச் சொல்லலாம். உணவுப் பண்டங்களைத் தயார் செய்து விற்பனை செய்து அவர்கள் லாபம் அடைகிறார்கள். லாபநோக்கோடு விற்பனை செய்யப்படுகிற ஹோட்டல்களுக்கு வரி போடத்தான் வேண்டும். அதே நேரத்தில் இப்போதே தொழிற்சாலைகளில் உள்ள காண்டீன், பள்ளிக் கூட ஹாஸ்டல்கள் இங்கெல்லாம் வரி கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெல்லத்திற்கு வரி போடக்கூடாது என்று சொன்னார்கள். இதுபற்றி ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். வியாபாரிகள் கிளர்ச்சி செய் கிறார்கள். அவர்களிடத்தில அரசு வன்மையாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளுக்குக் கெடுதி போலவும், உப யோகிப்போருக்குக் கெடுதி போலவும் அவர்கள் எடுத்துச்சொல்வது நியாயம் இல்லை. சர்க்கரை விலை ஏறி ஆலைகளுக்குக் கரும்பு கிடைக்காது, மிகவும் சங்கடமான நிலை இருந்தபோது சூதாட்ட மனப்பான்மையில் கரும்பை வெல்லமாக்கி-வியாபாரிகள் நம்முடைய அண்டை மாநிலங் களுக்கு—மராத்தி மாநிலம், மைசூர் மாநிலம் இவற்றுக்கு எல்லாம்- அனுப்பினார்கள். நாங்கள் எட்டு மாத காலம் பணிந்துபணிந்து பிச்சைக்காரர்களைப்போல் கேட்டுப் பார்த்தோம். விலை ஏறிக்கொண்டிருக் கின்ற நேரத்திலே நாமே வெல்லத்தை வெளியே எடுத்துக்கொண்டு போகக்கூடாது என்று போட்டோம். In anticipation of the Concurrence of the Union Government என்ற முறையிலே நாம் போட்டோம். அவர்கள் அங்கே கன்கரன்ஸ் வாங்கவேண்டுமென்று ஹைகோர்டிலே போட்டார்கள். உங்களுக்கு ஏது அதிகாரம், அவர்கள்தான் போடவேண்டு மென்று சொன்னார்கள். அதனால் அப்பொழுது என்ன நிலைமை இருந்தது

விலை என்ன நிலையில் இருந்தது ? திருச்சியிலே விலை என்ன விற்றது ?
இந்த நிலையில் மாநில அரசு—மத்திய அரசு உறவு முறைகளைப்
பற்றித் தெரிந்துகொள்ளலாம். இங்கே வெல்லத்தின் விலையைக் குறைக்க
வேண்டுமென்றால்கூட இங்கே இருக்கின்ற அமைச்சருக்கு உரிமை
கிடையாது, அதற்காக அங்கே கையேந்தவேண்டிய நிலைமையைத்தான்
நாம் பார்க்கிறோம். இதனால் விவசாயிகள் எந்த விதத்திலும் பாதிக்கப்
படமாட்டார்கள். நான் கரும்பு பயிர் செய்து இருக்கிறேன், இப்பொழுது
எல்லாம் செய்வது இல்லை. 16,000 ரூபாய் வரை விற்பனை செய்கிறவர்
களுக்கு வரியே கிடையாது. 15 ஆயிரத்திற்கு மேலே 75 ஆயிரம் ரூபாய்
வரைக்கும் இருந்தால் கம்பவுண்டிங் போட்டுக்கொள்ளலாம் என்று
இருக்கிறது. திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் கம்யூனிஸ்டு
கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் எப்படி இதைச் சொல்லுகிறார்கள்
என்பது எனக்குப் புரியவில்லை. 15 ஆயிரம் ரூபாய் வரையில் வரியே
கிடையாது, அதற்கும் மேலே கம்பவுண்டிங் இருக்கிறது. 15 ஆயிரம்
ரூபாய்க்கு மேலே விற்கிறவர்களுக்கு வரிபோட்டு அவர்கள் அந்த வரியைக்
கொடுத்தால் என்ன தவறாகிவிடும் ? அவர்களும் ஒத்துழைத்தால்
என்ன ? விவசாயிகள் கஷ்டப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள்.
அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. இருக்கிற நாலு வியாபாரிகள் சேர்ந்து
கொண்டு இப்படிச் செய்கிறார்கள் மிகப் பெரிய புரட்சிகரமான
காரியங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லுகிற இடதுசாரி கம்யூனிஸ்டு
கட்சியைச் சேர்ந்த திரு. கோதண்டராமன் அவர்கள் அப்படிச் சொல்வது
சரியல்ல. அந்த ஊர்ப்பக்கம் அவர்கள் இருப்பதால் சொல்கிறார்களோ
என்னவோ தெரியவில்லை. அவர்களுக்கும் தெரியும் போணம்பட்டி
லிருந்து எல்லாம் செய்கிறார்கள். இதிலே மிகப் பெரிய ஆபத்து
இருக்கிறது. குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டுமென்றுதான் அரசாங்கம்
விரும்புகிறது. வெல்லத்திற்கு வரிப்போட்டுவிட்டோம். கரும்புச் சாற்றை
ஆலைகளின் மூலம் எடுத்தபிறகு சக்கையைத் தியாக மாற்றிவிடுகிறார்கள்.
கிராமத்திலே உள்ள முறை மாதிரிச் செய்கிறார்கள். கிராம மக்களுக்குச்
சர்க்கரை கிடைக்கவில்லை, நகரத்திலே உள்ளவர்களுக்குத்தான்
கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டிலே 2 லட்சம் டன்
உற்பத்தியாகிறது. வெல்லத்திற்காக 4 லட்சம் டன் என்ற அளவிலே
ஒரு பயங்கரமான பொருளாதாரக் குற்றத்தைச் செய்து இருக்கிறார்கள்.
தமிழ் நாட்டிலே அதுமாதிரிச் செய்வதை நாம் குறைத்துக்கொள்ள
வேண்டியிருக்கிறது. 50 லட்ச ரூபாய்க்கு மேலே வருமானம் இதன்மூலம்
வருகிறது. இடையிலே இருக்கிறவர்கள்தான் கொஞ்சம் கொடுக்கிறார்கள்,
அதிலே ஒன்றும் தவறில்லை. நீதிமன்றத்திற்குப் போகிறார்கள்.
நீதிமன்றத்திற்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுக்கிறோம். நாம்
அவர்கள் அதைக் கொடுத்து விடலாம், இதை ஒன்றும் பெரியதாக
ஆக்கவேண்டாமென்று நான் உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தேங்காய் பற்றிச் சொன்னார்கள். அதற்கும் ஹைகோர்ட்டிலே கேஸ்
போட்டுவிட்டார்கள். அதனால் இப்பொழுது வசூல் செய்யவில்லை.
படுத்தப்பட்டிருக்கிறது. அது இருக்கலாம் என்ற முறையில் தடைப்
அரசாங்கம் முடிவெடுத்தது. வரி போடுங்கள் என்று அரசாங்கத்
திடம் சொல்லிவிட்டு அதனுடைய வசதிவாய்ப்புக்களை நிறுத்திவிடுங்கள்
என்று சொன்னால் மிகவும் பாதிக்கக்கூடிய நிலைமைதான் ஏற்படும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தவிதமான சிரமமும் இருக்கக்
கூடாது, அதேசமயம் வருமானமும் வரவேண்டும். மக்களைக் கசக்கிப்
பிழிவதற்காக அல்ல. மற்றப்படி உறுப்பினர்கள் சொன்ன யோசனைகளை
யெல்லாம்—நிர்வாகச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று சொன்னார்
கள்—அப்படிப்பட்ட சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அந்த
வகையில் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
என்னுடைய சொந்த அபிப்ராயம் என்னவென்றால்—இதிலே 13 கோடி
ரூபாய் வருமானம் வருகிறது. நாம் இதைப் பெருமையாகத்தான் கொள்ள
வேண்டும். இன்னும் இதிலே வாய்ப்புக்கள் இருக்கின்றன என்றுதான்
சொல்வேன். இப்பொழுது போடப்பட்டிருக்கின்ற வரியை வைத்துக்
கொண்டே வரி ஏய்ப்பைத் தடுத்து நிறையச் செய்யலாம். இந்த





அரசு வந்த பிறகு பல நன்மைகளைச் செய்திருக்கிறது. 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்றால் எக்ஸம்ஷன் செய்திருக்கிறோம். நாங்கள் வந்து செய்திருக்கிறோம். இதைத்தவிர 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 75 ஆயிரம் ரூபாய் வரையில் கம்பவுண்டிங் செய்துகொள்ளலாம் என்றும் சொல்லியிருக்கிறோம்.

அடுத்ததாக பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் பற்றிச் சொன்னார்கள். யாராவது ஒருவர் பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் செய்துதானே ஆகவேண்டும்? விதிமுறைகளில் தவறுகள் இருக்கின்றன என்று வேண்டுமானால் சொல்லலாம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். ஒருவர் தப்பு என்றும் இன்னொருவர் தப்பு என்றும் இப்படியே ஒவ்வொருவரும் சொல்லிக் கொண்டிருந்தால் கடைசியாக முதலமைச்சர் அவர்கள்தானே முடிவு சொல்லியாக வேண்டும்? அதேபோல்தான் வியாபாரத்தில் ஆகட்டும், நிர்வாகத்திலே ஆகட்டும் ஊர்க்காரர்களிடத்திலே எல்லாம் கணக்காபோய்ப்பார்த்துக்கொண்டு இருக்க முடியும்? எனவேதான், தொழில் துறையிலே ஆகட்டும், அரசாங்க நிர்வாகத் துறையிலே ஆகட்டும், அரசியல் கட்சியிலே ஆகட்டும், எவனோ ஒரு மனித ஜாதியைச் சேர்ந்தவன்தான் முடிவுசெய்யவேண்டும். எல்லாவற்றிற்கும் தாவா என்று சொல்லிக்கொண்டிருக்க முடியாது. இங்கே முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். சட்ட மன்றத்தினர் சொல்கிறார்கள், மந்திரிமார்கள் சொல்கிறார்கள், கடைசியில் யாராவது கையெழுத்துப் போடுத்தானே ஆகவேண்டும்? இல்லாவிட்டால் வாழ்க்கை, மனிதனின் செயல்கள் ஸ்தம்பித்து விடும்.

எனவே பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் பற்றி அவர்கள் சொன்ன விமர்சனம் சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வியாபாரிகளிடத்திலே இந்த அரசுக்கு நம்பிக்கை இருக்கிறது. அவர்களும் இந்த அரசிற்கு ஒத்துழைப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு ஆண்டுக் காலத்திலே அபகீர்த்திக்கு இலக்கான இந்த இலாக்காவை என் தலையிலே சுமத்தினார்கள், சுமத்தினார்கள் என்றால் நாங்கள் பகிர்ந்து கொண்டோம். அப்படிப்பட்ட இலாகா இன்றைக்கு நல்லபடியாகச் செய்யவேண்டுமென்ற முறையில்தான் அதிகாரிகளும் ஒத்துழைத்தார்கள். எனவே வணிகர்கள், வர்த்தகர்கள் இவர்களும் வரியைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் அவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புகார்கள் வருகின்றன. நானும் பார்க்கிறேன். எல்லாவற்றிலும்தான் அது இருக்கிறது. புகார்கள் கொண்டுவரப்படுகிற நேரத்திலே அதிலே தண்டனை கொடுப்பதற்கு அரசாங்கம் தயங்காது. வணிகத் துறையைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு ஆண்டுகள் பயங்கரமான நிலைமை, ரிசெஷன் பீரியட், தொழில்கள் ஸ்தம்பித்த நிலைமை இருந்தும் 12 கோடி ரூபாய் வருவாய் வந்திருக்கிறது. அதற்காக வணிகப் பெருமக்களுக்கும், இந்தத் துறையினருக்கும் நான் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஸ்குவீஸின் என்று சொல்கிறார்கள். ஸ்குவீஸ் என்ற வார்த்தையையே நான இந்த மூன்று மணி நேரத்திலே பார்க்கவில்லை. எந்தவிதமான ஸ்குவீஸிங்கும் இல்லாமல் இவ்வளவு ஆகியிருக்கிறது. இது பெருமைக்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கோயம்புத்தூர் பஞ்சாலைகளைப் பொறுத்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்ற நூலுக்கு விற்பனைவரியை ரத்து செய்திருக்கிறோம். அதைப்பற்றி யாரும் இங்கே சொல்லவில்லை. அந்தக் காரியமும் செய்யப்பட்டிருக்கிறது.

அதேமாதிரி கைத்தறித் துணியைப் பற்றிச் சொன்னார்கள். கைத்தறித் துணிக்கு இப்போதே விற்பனை வரி கிடையாது. ஏதோ விற்பனை வரி இருப்பதாகக் கருதிக்கொண்டு பேசினார்கள். Under item 7 of the third schedule of the Madras General Sales Tax Act, Handloom

cloth is already exempt from that கைத்தறித் துணிக்கு முன்பே வரி இல்லை. அதோடு ரிபேட் கூட பல சமயங்களில் கொடுக்கிறோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களைப் பார்த்துப் பேசிவிட்டு வந்திருக்கிறார்கள். கோவை பஞ்சாலைத் தொழில் நெருக்கடியில் எக்ஸைஸ் டியூட்டி தலைவலியாக இருக்கிறது. அதைப் பற்றி ஆக்கபூர்வமான முடிவுக்கு வாருங்கள் என்று அண்ணா அவர்களே கைப்பட மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். கணிசமான அளவுக்குச் சுங்கவரியில் உதவி செய்ய முன்வந்தால், விற்பனை வரியை நீக்குவதோடு, மின்சாரக் கட்டணத்திற்கான சர்சார்ஜையும் ரத்து செய்கிறோம் என்று எழுதினார்கள். இன்றுவரை மத்தியப் பேரரசு நல்ல ஒரு முயற்சியை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. நிதியமைச்சர் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள விதிவிலக்கு சாதாரணமானது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தற்போது சந்தித்த பிறகாவது நல்ல முடிவுக்கு அவர்கள் வருவார்கள் என்று கருதுகிறேன். இரண்டு, இரண்டரைக் கோடி ரூபாயை நூலுக்கு விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியைத் தள்ளிக் கொடுக்க நாம் தயாராக இருக்கிறோம் என்பது இந்த அரசு எந்த அளவுக்கு இந்தப் பிரச்சினையிலே அக்கறை கொண்டிருக்கின்றது என்பதைக் காட்டுவதாகும்.

இந்த அரசாங்கம், சட்டபூர்வமாக இந்த அரசாங்கத்துக்குத் தேவையில்லாத ஒரு பைசாவைக் கூட வசூலிக்க விரும்பாது. நியாயப்படி இந்த அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய தொகையை ஏமாற்ற நினைத்தார்களானால்—அது காலணாவாக இருந்தாலும்—இந்த அரசாங்கம் வசூலித்தே தீரும்.

நான்கு கோடி மக்களுடைய ஆணையின் பேரில் அவர்களுடைய கருவிகளாக, ஏஜெண்டுகளாக நாங்கள் இருக்கின்ற காரணத்தால் வரியை ஏய்த்துவிட முனைந்தால் நிச்சயமாக அதை வசூலிப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளுவோம். அதே சமயத்தில் அவர்களுக்கு ஏதேனும் இடைஞ்சல் இருக்குமானால், அதிகாரி தவறு செய்தால் அந்த அதிகாரியைத் தயவு தாட்சண்யம் இன்றி தண்டிக்க இந்த அரசாங்கம் ஒருநாளும் தயங்காது. இந்த வரி ஜனநாயக வரி என்று ஏற்கனவே நான் இந்த மன்றத்தில் சொன்னதாக ஞாபகம். மக்கள் எல்லோரும் பகிர்ந்து கொள்ளும் வரி இது. இந்தத் துறை வெற்றிகரமாகச் செயல்பட நல்ல யோசனைகளைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு, இந்தத் துறையின் பணிகளில் மேலும் ஆக்கமும், வளர்ச்சியும் ஏற்படும் வகையில் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. விநாயகம் : மெட்ராஸ் என்டர்டெயின்மென்ட் டாக்சில் நிறைய ஏமாற்றுகிறார்கள் என்பது தெரிந்த விஷயம். இப்போது இந்த சினிமா டிக்கெட்டுகளை அந்தந்த கொட்டகைக்காரர்களே அச்சடித்து அதிலே சேல்ஸ்டாக்ஸ் அதிகாரிகளிடத்திலிருந்து முத்திரை வாங்குகிறார்கள். இதிலே பல தவறுகள் இருப்பதால், அரசாங்கமே ஒட்டுமொத்தமாக டிக்கட்டுகளை ஜில்லாவாரியாக அச்சடித்து அதை சேல்ஸ் டாக்ஸ் டிப்பார்ட்மெண்டில் கொடுத்து முத்திரைகளைப் போட்டு இவர்களுக்குக் கொடுக்க முன் வருவார்களா? இதே முறையில் ஒரு மாநிலத்தில் நடந்து வருகிறது. They have plugged these loopholes. தாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது அர்பன் லாண்ட் டாக்ஸ் சட்டம் விவாதிக்கப்பட்ட நேரத்தில் அதைத் தாங்கள் ஆதரித்திருந்தாலும், 4% என்பதை 2% என்று ஆக்க வேண்டுமென்று தாங்கள் அமெண்ட்மெண்ட் கொடுத்து அது தோல்வியடைந்திருக்கிறதே....





மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் அப்போதும், இந்த மன்றத்திலும் சரி வெளியிலும் சரி, ஆதரித்துத்தான் இருக்கிறேன். நான் தவறாகச் சொல்லியிருந்தால் கொண்டு வந்து காண்பிக்கட்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திரு. விநாயகம் அவர்கள் முத்திரை அடித்துக் கொடுப்பதற்குப் பதிலாக அரசாங்கமே டிக்கட்டுகளை அச்சடித்துக் கொடுத்து விடலாம் என்று சொன்னார்கள். போலி முத்திரை போட்டுக் கொள்வது போல், போலி டிக்கட்டுகளையும் அவர்கள் அடித்துக் கொள்ளுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோரிக்கை எண் 3-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த திரு. ஆ. கு. சுப்பையா, திரு. என். வரதராஜன் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லையாதலால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

கோரிக்கை எண் 3-க்கு திரு. கே. விநாயகம், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. எம். சுரேந்திரன் ஆகியோர் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி : "கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,79,44,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(ஆ) கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் (இந்து சமய அறக்கட்டளை ஆட்சித் துறை உட்பட).

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் (இந்து சமய அறக்கட்டளை ஆட்சித்துறை உட்பட) என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,48,86,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

DR. H. V. HANDE : Sir, to discuss policy and to point out the need to minimise red-tapism in district administration, I move the cut motion standing in my name :

"That the allotment of Rs. 19,48,86,500 under Demand No. 9—District Administration and Miscellaneous—be reduced by Rs. 100."

THIRU K. VINAYAKAM : Sir, to discuss the general policy and the desirability of introducing some new changes and improvements in the district administration, I move the cut motion standing in my name :

"That the allotment of Rs. 19,48,86,500 under Demand No. 9—District Administration and Miscellaneous—be reduced by Rs. 100."

**திரு. வி. கே. கோதண்டராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாக வேலைகளில் ஏற்படும் காலதாமதத்தைப் போக்க வேண்டியது பற்றி விவாதிக்க:

"கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் (இந்து சமய அறக்கட்டளை ஆட்சித் துறை உட்பட) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 19,48,86,500-ல் இருந்து ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிலையில் தோன்றும் பிரச்சினைகளைத் துரிதமாகத் தீர்த்துவைப்பது குறித்து விவாதிக்க:

"கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் (இந்து சமய அறக்கட்டளை ஆட்சித் துறை உட்பட) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 19,48,86,500-ல் இருந்து ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்கிய பிறகு நான் இறுதியாக அந்தக் கருத்துக்களுக்கு விளக்கங்களைத் தர இருக்கிற வகையில் முதலில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களை வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணி நேரந்தான் இருக்கிறது. இரண்டு மணி வரை உட்காருவதாக இருந்தாலும் 1½ மணி நேரந்தான் இருக்கிறது. பதின்மூன்று உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒருவருக்கு ஐந்து நிமிடங்கள் என்று கொடுத்தாலும் ஒரு மணி நேரம் ஆகிவிடும். அமைச்சர் அரை மணி நேரத்தில் பதில் அளிக்கலாம். ஆகவே, உறுப்பினர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மேல் போகாமல் இருக்க வேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இது ரொம்ப முக்கியமான மானியம். ஒரு மணி நேரம் ஒதுக்கிய மானியத்திற்கே இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது. இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற இரண்டு மணி நேரமே ரொம்பக் குறைவு. ஒதுக்கப்பட்ட நேரத்தையாவது கொடுப்பது நல்லது.

**திரு. எம். சுரேந்திரன்:** இதற்குக் கொஞ்சம் அதிக நேரம் ஒதுக்க வேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாலையில் வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாலையில், பேசுகிறவர்கள் மட்டுந்தான் வருகிறார்கள், மற்றவர்கள் வருவதில்லை. இரண்டரை மணி வரை வைத்துக் கொள்ளலாம். அப்போது கூட உறுப்பினர்கள் ஐந்து நிமிடந்தான் பேச முடியும். அதற்கு ஒரு மணி நேரம் ஆகிவிட்ட பிறகு எதிர்க்கட்சித் தலைவர் பேசி அமைச்சர் பதில் அளிக்க வேண்டும். ஆகவே, உறுப்பினர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ள முடியாது.





**திரு. எம். வில்லியம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது நான் சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் இப்போது ஆலோசனைக் குழுக்களாக செயலாற்றி வருகின்றன. மாவட்ட மன்றங்களுக்கு சற்று அதிகாரங்கள் கூடுதலாக அளிப்பது மிகவும் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். முக்கியமாக மாவட்டங்களில் நடத்த வேண்டிய காரியங்களுக்காவது மாவட்ட குழுக்களுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். மாவட்ட அபிவிருத்தி மன்ற உறுப்பினர்கள் நல்ல பல ஆலோசனைகளைக் கூறுகிறார்கள். அங்கு ஒரு தீர்மானம் வடிவெடுக்கும்போது அந்தத் தீர்மானத்தை அந்த மாவட்டத்தில் உடனடியாக செயலுக்குக் கொண்டுவர அதிகாரம் அளிக்கப்படவேண்டும். அங்கு தீர்மானிக்கப்பட்டு சர்க்காருக்கு அனுப்பப்படும் தீர்மானங்கள் நல்லமுறையில் சர்க்காரால் பரிசீலிக்கப்பட்டு அவற்றை உடனுக்குடன் நடைமுறைக்குக் கொண்டுவர சர்க்கார் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். வெறும் ஆலோசனைக் குழுவாக இருப்பதால் தீர்மானங்கள் நடைமுறையில் கொண்டுவரப்படுவதற்குப் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே ஒவ்வொரு மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் அந்தத் தீர்மானங்களை உடனுக்குடன் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு தக்கபடியான அதிகாரங்கள் அளிக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, சிறு சிறு நியமனங்கள் விஷயமாக, கீழ் மட்ட உத்தியோகங்களில் நியமனங்கள் செய்வதில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பல ஏழைகள் அதனால் கஷ்டமடைகிறார்கள். ஒவ்வொரு இலாகா அதிகாரியும் அவரவர்கள் இஷ்டம்போல நியமனங்கள் நடத்துகிறார்கள். செல்வாக்கு படைத்தவர்களுக்குத்தான் நியமனங்கள் கிடைக்கிறது இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு நியமனக் குழு ஏற்படுத்துவது ஏற்றதாக இருக்கும். அப்படி கலெக்டர் தலைமையில் மூன்று அல்லது நான்கு பேர்கள் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தி அந்தக் குழு இப்படிப்பட்ட கீழ்மட்ட உத்தியோகங்களுக்கு நியமனம் செய்யலாம் என்று செய்யவேண்டும். 1966-ல் தக்கலையில் இருந்த மாவட்ட கல்வி அதிகாரி பத்து ரூபாய் கட்டிய, பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குப் பேட்டி அளித்தார்கள். அப்படிச் செய்து துவக்கப் பள்ளி ஆசிரியர்கள், நடுத்தரப் பள்ளி ஆசிரியர்கள் இவர்களின் நியமனத்திற்கான ஒரு லிஸ்ட் அவர்களால் தயாரிக்கப்பட்டது. அந்த லிஸ்டின்படி அவர்கள் நியமனம் நடத்திவந்தார்கள். அவர் மாற்றப்பட்டு இன்னொருவர் கல்வி அதிகாரியாக வந்தவுடன் அந்த லிஸ்டைக் கவனிக்காமல் கல்வி அதிகாரி தம் இஷ்டம்போல் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலிருந்து பெயர்களை வரவழைத்து நியமனம் செய்தார்கள். ஆகவே, எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் லிஸ்டிலிருந்து முதல் லிஸ்ட் பிரகாரம் உள்ள ஆசிரியர்களின் பெயர்கள் நீக்கிவிடப்பட்டன. ஆகவே புதிதாக எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலிருந்து வந்த லிஸ்டில் இவர்கள் பெயர்கள் வராமல் போய்விட்டன. அப்படி ஆசிரியர்கள் லிஸ்டிலிருந்து வந்தவர்கள் 70 பேர்களின் பெயர்களும் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் லிஸ்டிலிருந்து மாற்றப்பட்டுவிட்டன. அவர்கள் புதிதாக ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்றால், திரும்பவும் அவர்கள் பெயர்கள் வர மூன்று வருடங்களாகும். அதற்குள் அவர்கள் வயது வந்தவர்களாக ஆகிவிடுவார்கள். ஆகவே இப்படிப்பட்ட கஷ்டங்கள் ஏற்படாமல் இருக்க சர்வீஸ் கமிஷன் போல் ஒரு நியமனக் கமிட்டியை மாவட்டந்தோறும் ஏற்படுத்தவேண்டும். அப்படிச் செய்தால்தான் ஏழை எளிய மக்களுக்கு நியாயம் கிடைக்க வழி ஏற்படும்.

அடுத்தபடியாக, மாவட்டங்களில் பலவித ஊழல்கள் ஏற்படுகின்றன. குமரி மாவட்டத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு சிலர் தங்கள் சுயநலம் காரணமாக நிர்வாகத்தில் அதிகமாகத் தலையிடுகிறார்கள். குறிப்பாக போலீஸ், போலீஸ் நிர்வாகம், உணவு விநியோகம் ஆகிய துறைகளில் அதிகமாகத் தலையிடுகிறார்கள். அதனால் நிர்வாகம்

நல்லமுறையில் செயல்படாமல் போகின்றது. அதனால் அதிகாரிகளும் நல்ல முறையில் நீதி வழங்க முடியாமல் போய்விடுகிறது. அதிலும் முக்கியமாக போலீஸ் நிர்வாகத்தில் குறுக்கீடு அதிகமாக இருக்கிறது. உணவுத் துறையைப் பொறுத்தவரையில் இன்று லைசென்ஸ் பெற்று ரேஷன் கடைகள் நடத்திவருகிறார்கள். அந்த லைசென்ஸ்தாரர்கள் நல்லமுறையில் ரேஷன் விநியோகம் செய்யாவிட்டால் பராதிகள் எழும்பக் கூடும். அப்போது அதைப் பரிசீலனை செய்து அந்தப் பராதிகள் சரியாக யிருந்தால் லைசென்ஸை ரத்து செய்துவிடலாம். அப்படி ரத்து செய்த பின்னர் வேறு யாருக்காவது அதைக் கொடுக்கலாம். அப்படிச் செய்யாமல் 120 பேர்களின் லைசென்ஸை ரத்து செய்யப்போவதாக நான் கேள்விப்படுகிறேன். இப்போதுள்ள கடைகளை என்ன காரணத்திற்காக மாற்றப்போகிறார்கள் என்று தெரியவில்லை. குற்றங்கள் செய்திருந்தால், நிச்சயமாக தண்டிக்கத்தான் வேண்டும். அதற்கு நான் ஒருபோதும் ஆட்சேபிக்கமாட்டேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** 120 பேர்கள் லைசென்ஸை ரத்து செய்யப் போவதாகக் கூறுகிறார்கள். அந்தத் தகவல் உண்மையானதல்ல. அப்படி ஏதாவது 120 பேர்களின் பெயர்கள் உறுப்பினருக்குக் கிடைத்திருக்குமானால், அதைத் தெரிவித்தால், அது பற்றி பரிசீலனை செய்யலாம்.

**திரு. எம். வில்லியம்:** அவ்வண்ணம் நான் கேள்விப்பட்டேன். அது சரி என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்களுக்கும் அது பற்றி ஒரு சில விஷயங்கள் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அவ்வண்ணம் ஒரு லிஸ்ட் தயாரிக்கப்பட்டது நிச்சயம். இங்கு அது அனுப்பப்படவில்லை என்று கருதுகிறேன். அவ்வண்ணம் ஏற்படக்கூடாது. நல்லமுறையில் ஆட்சியை நடத்தவேண்டும் என்பதுதான் என் எண்ணம். அவ்வண்ணம் நடத்துவார்கள் என்றும் நினைக்கிறேன். குற்றங்கள் செய்தால் தனியார் நடத்தினாலும் சரி அல்லது கூட்டுறவு சங்கம் நடத்தினாலும் சரி அதை ரத்து செய்து மற்றவர்களுக்குக் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆகவே, நம் முதல் அமைச்சர் அவர்கள் இது பற்றி மாவட்டங்களில் செயலாற்றுகிற ஆட்சியில் உள்ளவர்களுக்கு ஒரு அறிவிப்பு கொடுப்பார்கள் என்று கருதுகிறேன். கிள்ளியூரில் டாப்பியோக்கா க்ராஷ் ப்ரோக்கிராமுக்காக இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள். முதற்படியாக ஒரு லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டது. இது எவ்வண்ணம் நடத்தப்பட்டது என்பதை நினைக்கும்போது சங்கடமாக இருக்கிறது. எந்தத் திட்டமானாலும் யூனியனுக்குள் நடத்தப்படுகிற திட்டங்கள் பற்றி யூனியன் கூட்டத்தில் வைத்து ஆலோசித்து அவை நல்லமுறையில் நடத்தப்பட வேண்டும். ஆனால் இந்த மரச்சீனி தீவிர சாகுபடி திட்டம் பற்றி அப்படிச் செய்யாமல் அதை ஒரு சில அதிகாரிகள் கையில் கொடுத்து அந்தத் தொகை—ஒரு லட்சம் ரூபாய்—மக்களுக்குப் பிரயோஜனம் இல்லாமல் போய்விட்டது. பணம் கையாடல் பற்றி ஒரு அதிகாரியின்மேல் இப்போது ஒரு கேஸ் எடுத்திருப்பதாக அறிகிறேன். அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. எஃப். ஐ. ஆர். எடுத்தார்கள். அந்த கேஸில் ஒரு முன்னேற்றமும் இல்லை என்று கேள்விப்பட்டேன். ஆகவே இவ்வண்ணம் சீர்கேடுகள் இல்லாமல் நல்லமுறையில் மாவட்ட நிர்வாக ஆட்சி நடைபெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. சி. வீரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமன்றத்தின் அரசியல் ஆசானாக விளங்கிய பேறறிஞர் அண்ணா அவர்கள் இங்கில்லை. தனது சொல்லால், எழுத்தால், செயலால் எதையும் மூடி வைக்கத் தெரியாத அண்ணா அவர்கள், தமிழ் மக்கள் தன்மேல் வைத்துள்ள பாசத்தால், நம்பிக்கையால், கடமையால் தன் நோயை மட்டும் மூடி வைத்துவிட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் தம் உழைப்பால், கஷ்டப்பட்டு உடலை வருத்திக் கொண்டு தமிழ்நாட்டுக்காக



தன் இன்னுயிரைத் தியாகம் செய்துவிட்டார்கள். அப்படிப்பட்ட அமரர் அண்ணா அவர்களின் நல்லெண்ணங்கள் ஈடேறும்வகையில் அவர்களது நிழலாக விளங்கிய கலைஞர் திரு. கருணாநிதி அவர்கள் இப்போது அமைச்சரவைக்குத் தலைமையேற்றிருக்கிறார்கள். அவருக்கு உறுதுணையாக இருந்து தமிழ் மணத்தைத் தரணியெங்கும் நாங்கள் பரப்புவோம்.

உடல் நடமாட உயிர் எவ்வளவு முக்கியமானதோ, அதேபோன்று அரசாங்கம் நடைபெற அலுவலக நடைமுறைகள் முக்கியமாக உள்ளது. நாம் உணவை எட்டு நிமிடங்களில் சாப்பிடுகிறோம். ஆனால் உடல் அந்த உணவு ஜீரணிக்க எட்டுமணி நேரம் எடுத்துக்கொள்கிறது. அதற்கு நல்ல உடல் உறுப்புகள் தேவைப்படுகின்றன. அதேபோன்று இன்றைய தினம் பல்லாயிரக் கணக்கான பிரச்சினைகள் அரசாங்கத்தின் முன்னால் அதிகரித்து வந்த வண்ணம் இருக்கின்றன. அந்தப் பிரச்னைகளையெல்லாம் ஜீரணிக்க நல்ல ஆரோக்கியமான அலுவலக நடைமுறைகள் தேவைப்படுகின்றன. நாம் மக்களின் நன்மைக்காக எவ்வளவோ திட்டங்கள் போடுகின்றோம். அதற்காக எவ்வளவோ தொகை மானியங்களாக ஒதுக்குகிறோம். அவையல்ல முக்கியமானவை. போடப்படக்கூடிய திட்டங்கள், அவற்றிற்காக ஒதுக்கப்படும் தொகைகள் மக்களுக்கு எந்த வகையில் போய்ச் சேருகிறது என்பதை தெள்ளத்தெளிவாக ஆராய வேண்டும். மாவட்ட நிர்வாகத்திற்காக பிரிட்டிஷ்காரன் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட முறைகளே இன்னும் அந்த நிர்வாகத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

அந்த முறைகள் எவ்வளவு கேடுகளை விளைவிக்கின்றன என்பதை தெள்ளத் தெளிவாகக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணமாக, ஹரிஜன நல இலாகாவை எடுத்துக்கொண்டால் ஒரு ஹரிஜன் வீட்டு மனைக்காக ஒரு மனு போடுகிறான். அந்த மனு மாவட்ட அதிகாரிக்குத் திருப்பி அனுப்பப்படுகிறது. அங்கிருந்து அந்த மனு திரும்பி டிஸ்ட்ரிக்ட் வெல்ஃபேர் ஆபீஸருக்குப் போகிறது. அங்கிருந்து அந்த மனு தாசில்தாருக்குப் போகிறது. தாசில்தார் ஆபீஸுக்கு அந்த மனு சென்றவுடன் அதை எடுத்துக்கொண்டு ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஸ்பாட்டுக்குப் போகிறார். ஸ்பாட்டிற்குப் போனவுடன் அங்கே போய் என்ன ஆகிறது என்றால், கர்ணத்தையும், முன்சீப்பையும் தேட வேண்டியதாகயிருக்கிறது. அவர்கள் தயவு இருந்தால்தான் எடுக்க முடியுமென்ற நிலையிருக்கிறது. அப்படி அவர்கள் எழுதினாலும் அது தாசில்தாருக்கு வருகிறது. பிறகு பரிசீலனைக்காக அது டிஸ்ட்ரிக்ட் வெல்ஃபேர் ஆபீசருக்கு வருகிறது. பிறகு மாவட்ட ஆட்சியிடம் வருகிறது, பிறகு நேரடியாக அரசாங்கத்திற்கு வருகிறது. அரசாங்கத்திற்கு வந்த பிறகு ரெவின்யூ போர்டுக்குப் போகிறது. அங்கு போய்ப் பிறகு அரசாங்கத்திற்கு வந்தாலும் 'ஃபோர் ஒன் நோட்டிபிகேஷன்' வர வேண்டும். அது வந்தாலும் கெஜட் பதிவுக்குப் போக வேண்டும். அப்படிப் போனபிறகு 'ஃபோர் ஒன் 'நோட்டிபிகேஷன்' வந்த பிறகு அந்த நிலத்தை எடுப்பதற்காக மறு பரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு வரவேண்டும். 'டெலிகேஷன்' அதிகாரம் ஏற்பட வேண்டும். அதற்குப்பிறகு நில ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டும், இப்படிப்பட்ட பல சங்கடங்களுக்குப் பிறகு கடைசியிலே நிலத்தை எடுக்கப்போகும் நேரத்தில் கவர்ன்மெண்டுக்கு ரிட் போட்டுவிட்டால் நிலமும் எடுக்க முடியாது, ஹரிஜனங்களுக்கு நிலமும் கிடைப்பதில்லை. இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் என்னவென்றால், அரசாங்கத்திலேயுள்ள நடைமுறைச் சிக்கல்கள் அதிகமாக இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்காகத்தான்.

எழுத்தர்கள் தன் பதிவேடுகளைப் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். கட்டுகள் அதிகமான நிலையில் இருக்கின்றன. அந்தக் கட்டுகள் சீர்கேடான முறையில் இருக்கின்றன. அந்தக் கட்டுகளை விரைவுபடுத்துகின்ற முறையிலே ஏற்படுத்த வேண்டுமென்றால், தன்

பதிவேடு என்ற முறையை ரத்து செய்துவிட வேண்டும். தன்பதிவேடு வைத்திருப்பதன் மூலம் ஒரு நாளைக்கு ஒரு எழுத்தருக்கு ஒரு மணி நேரம் வீணாகிறது. அப்படியென்றால் மாநிலம் பூராவுமுள்ள எவ்வளவு எழுத்தர்களின் வேலை நஷ்டம் ஏற்படுகிறது என்பதைத் தெளிவாக உணர முடிகிறது. அடுத்து இப்படிப்பட்ட நடைமுறைத் தாமதங்கள் ஏற்படுவதனால் லஞ்ச ஊழல் கஷ்டம் ஏற்படுகிறது. இந்த லஞ்சத் திற்கு மூலகாரணம், அலுவலக நடைமுறைகளிலே தாமதமான நிலை ஏற்பட்டு வருவதுதான். லஞ்சத்தைப் போக்க வேண்டுமென்றால், அலுவலக நடைமுறைகள் தெளிவாக்கப்பட வேண்டும். அரசாங்கத்திற்கு வருகின்ற மனுக்களின் மேலே அரசின் முத்திரை குத்தப்படுவதற்கு பதிலாக இவ்வளவு நாட்கள் தவணை என்ற முத்திரையைக் குத்தும் முறையைக் கொண்டு வர வேண்டும். லோன் என்று வந்தால் அதற்கு 6 மாதங்கள் என்று குறிப்பிட்டு 6 மாத முத்திரையைக் குத்த வேண்டும். ஆர்டினரி என்றால் அதன்மேல் 3 மாதம் என்று சிலக் குத்த வேண்டும். அப்படியாக, 3 மாதங்களுக்கு, 6 மாதங்களுக்கு, 2 மாதங்களுக்கு, ஒரு வருஷத்திற்கு என்று தவணைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பங்களின் மேல் குத்திக் கொடுக்கவேண்டும். ஒப்படைக்கப்பட்ட காலத்திற்குள் முடிக்கப்படாவிட்டால் அதற்குக் காரணமானவர்களிடம் 'எக்ஸ்ப்ளனேஷன்', தகுந்த முகாந்திரங்களை அலுவலக நிலையிலே கேட்க வேண்டும். அப்படியிருந்தால் சீரான முறையில் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

(திரு பு. செ. முத்துச்செல்வன் தலைமை)

அதோடு மட்டுமல்லாமல், இலாக்காக்களுக்குத் தனித்து இயங்கக்கூடிய சக்தியைக் கொடுக்க வேண்டும். விவசாய இலாகாவில் ஒரு அதி காரியை நியமித்தால் அவர் வேறு இலாக்காவிற்குப் போகாமல் இருக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது) தயவு செய்து இந்த மானியத்தின் மீது பேச இன்னும் கொஞ்சம் டைம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். நான் வேறு எந்த மானியத்திலும் பேச வில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பு. செ. முத்துச்செல்வன்) :** உங்களுக்கு 5 நிமிடங்கள் கொடுக்கப்பட்டன. இப்பொழுது 6 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. சி. வீரமணி:** சிக்கல் ஏற்படுவதற்கு இன்னொன்றும் காரணம். அம்பேத்கார் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் :

''இந்தியர்கள் மத உணர்வு, இன உணர்வு கொண்டவர்கள் என் பதை நான் மறக்க முடியாது. இந்தியர்கள் தங்களிடம் ஒப்படைக்கப் படும் நிர்வாகக் காரியங்களை சமுதாயக் கண்ணோட்டத்துடன், இன அடிப்படையிலோ சாதி அடிப்படையிலோ கவனிக்காது நிர்வாகத்தை நிர்வாக ரீதியிலே கவனிக்கும் நாள் வரும் என்று நான் நம்பவில்லை. இந்தியர்கள் சட்ட நிர்வாகத்தில் மத, இனக் கண்ணோட்டத்துடன்தான் செயல்படுவர். இதை நாம் மறக்க முடியாது; மறுக்க முடியாது; இக் காரணத்தினால் நான் மிகவும் இன்னல் அடைந்துள்ளேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல மாநில அரசாங்கத் திற்கும், மத்திய அரசாங்கத்திற்கும் உள்ள தொடர்பு பற்றி குறிப் பிடும்பொழுது மத்திய அரசிடம் அதிக அதிகாரங்கள் இருப்பதால் பின்தங்கிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அம்பேத்கார் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அவர்கள், ''மாநில சுய ஆட்சி பற்றி நான் சொல்வதெல்லாம் இதுதான். மாகாணங்களுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு சுய ஆட்சி கொடுக்கப்பட வேண்டும்; மேலும் தற்போது மத்திய அரசுக்கு அவற்றின் மீதுள்ள அதிகாரத்திலிருந்து அவை விடுபட வேண்டும் என்னும் கருத்துக்கு நான் ஆதரவு தருகிறேன். ஆனால், நான் இம்மாநாட்டில் பிரதிநிதியாகவுள்ள வகுப்பினரின்





நலனைக் கருத்தில் கொண்டு பார்க்கினும், இந்திய நாட்டின் நலனையும் குறிப்பாக தொழிலாளரின் நலனையும் கருத்தில் கொண்டு பார்க்கினும் மாநிலங்களுக்கு மாகாண சுயாட்சி உரிமை வழங்கும் வகையில் நாம் அரசியலமைப்பை"த் திருத்தியமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். எனவே, இப்பொழுதுள்ள முக்கியமான பிரச்சினை நம்முடைய மாநில நடைமுறைகளை, அலுவலக நடைமுறைகளை நல்ல முறையில் திருத்தியமைக்க வேண்டியது. மற்றொன்று மத்திய அரசாங் கத்திடம் இங்கு சென்னையிலிருக்கும் கட்டுகள், மத்திய சர்க்காரிடம் இரண்டாயிரம் மைல்கள் கடந்து போக வேண்டியதில்லை. மாநில சுயாட்சி வேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் வற்புறுத்த வேண்டும். இந்த இரண்டு காரியங்களும் தமிழக மக்களுக்கு முக்கியமானது.

(மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பு. செ. முத்துச்செல்வன்) :** அடுத்து திரு. கோதண்டராமன் அவர்கள். திரு. கோதண்டராமன் அவர்கள் இடத்தில் இல்லாததால் அடுத்து திரு. பெ. சீனிவாசன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

* **திரு. பெ. சீனிவாசன்:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மாவட்ட நிர்வாக மானியக் கோரிக்கையில் எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றிப் பேச விரும்புகிறேன். இந்த மன்றத்தில் இந்தத் தடவை மட்டுமல் லாமல் இதற்கு முன்னாலே பல தடவைகள் பல உறுப்பினர்கள், எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தை, அதனுடைய நிர்வாகத்தின் தன்மையைக் கருதி இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று பல்லாண்டு காலமாக வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். கடந்த இருபது ஆண்டு காலமாக காங்கிரஸ் ஆட்சியின்போது, அவர்களுக்கிடையேயிருந்த, கட்சிக்குள்ளேயிருந்த சில அரசியல் காரணங்களுக்காக, அதிலும் குறிப்பாக ஒரு தலைவருடைய செல்வாக்கு பாதிக்கப்படுமேயென்பதற்காக அந்த மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படவில்லை. அதையே தொடர்ந்து இந்த அரசாங்கமும் நீடித்துக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற அவசிய மில்லை. உடனடியாக இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று அந்த மாவட்ட மக்கள் சார்பில் நான் மிகப் பணிவன் புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிப் பதில் இடையூறான காரணங்கள் ஏதும் இருப்பதாக எங்களுக்குத் தெரிய வில்லை. இரண்டாகப் பிரித்தால் தலைநகரத்தை எங்கே அமைப்பது என்பது அதற்குப் பின்னாலே முடிவு செய்யப்பட வேண்டிய ஒரு சாதாரணமான விவகாரம். எனவே, கொள்கையளவில் இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதைப்பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து அறிவிக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் தமிழகத்திலேயே மிகவும் வறட்சியான மாவட்டமாகும். அதனுடைய உணவு நிலைமை மிகப் பயங்கரமாக இருக்கிறது. இது, இந்த ஆண்டில் மட்டுமல்ல, தொடர்ந்து பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது. அங்கேயிருக்கும் நிலைமையில் விவசாயிகளை முன்னேற்ற வேண்டுமென்றால் அந்த மாவட்டம் மிகப்பெரியதாக இருப்பது பெரிய இடையூறாக இருக்கிறது. மாவட்ட நிர்வாகத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் இருப்பது நம்முடைய நிர்வாகச் சீரமைப்பிற்கு மிகப்பெரிய இடையூறாக இருக்கிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். திரு. முருகேச முதலியார் அவர்களுடைய அறிக்கை எப்படி இருக்கிறதோ, சரியாகத் தெரியவில்லை. அதைப்பற்றி, அரசாங்கம் என்ன முடிவு எடுக்கிறார்கள் என்பதும் தெரியவில்லை. இருந்தாலும் நான் முக்கியமாகக் கூறுவது, பஞ்சாயத்து யூனியன்களைக் கலைத்துவிட்டு, மாவட்டங்களை மிகச் சிறிய அளவில், பழைய ஜில்லா போர்டு நிர்வாகத் தைப்போல் கொண்டு வந்தால் சீராக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். குறிப்பாக, எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில், பஞ்சாயத்து யூனியன் விவகாரங்களில் இங்கே பல உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல் தேர்தல் நேரங்களில் ஆள் கடத்துவதும்,

[திரு. பெ. சீனிவாசன்] [1969 மார்ச் 20

தேர்தல் செலவுகளை ஈடுகட்டுவதற்குத் தில்லு முல்லுகள் செய்வதும் இன்று சாதாரணமான, சகஜமான ஒரு உள்ளூர் அரசியலாக மாறிவிட்டிருக் இறது. இந்த நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டுமென்றால் தயவு செய்து பஞ்சாயத்து யூனியன் முறைகளை மாற்றி, பழைய ஜில்லா போர்டு முறைகளை நிறைவேற்றுதன் மூலம் மாவட்ட நிர்வாகத்தைச் சீராக நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொருத்தவரையில் தலைநகரத்திற்கும் மேற்குப் பகுதியிலிருக்கின்ற கடைசி ஊருக்கும் 130 மைல்கள் இருக்கின்றன. எங்கள் மாவட்டத்தில் அரசியலிலோ அல்லது பொது நிர்வாகத்திலோ நேரடியாக ஈடுபட்டிருக்கும் பலர் தலைநகரம் எப்படியிருக்கிறது என்று கூடப் பார்த்ததில்லை. இன்னும் சில அலுவலகங்கள், மதுரையிலே இருக்கும் அலுவலகங்கள் சிவகெங்கைக்கும், பரமக்குடிக்கும் திடீ திடீரென்று மாற்றப்படுகின்றன. சட்டமன்ற உறுப்பினர்களோ, அல்லது பொது ஊழியர்களோ அரசாங்க அலுவல்களுக்காகச் செல்ல வேண்டு மென்றால் தலைநகரத்திற்கு என்று செல்ல முடியாது, பரமக்குடிக்கு ஒரு நாளும், சிவகெங்கைக்கு ஒரு நாளும், இராமநாதபுரத்திற்கு ஒரு நாளும் அல்லது மதுரைக்கும் செல்லவேண்டும். அலுவலகங்கள் தெரியாது. இதனால் சிகப்பு நாடா முறை பத்திரமாக, தீவிரமாக அமுலில் இருந்து வருகிறது. இதைமாற்றியாக வேண்டுமென்றால் இராமநாதபுரம் மாவட்டத்தை இரண் டாகப் பிரிக்கவேண்டும். மேற்கு இராமநாதபுரத்தைப் பொறுத்தவரையில், அப்படிப் பிரிக்கப்படுவதால் தலைநகரம் பற்றி அபிப்பிராய பேதம் இல்லை. தலைநகரமாக விருதுநகரை வைப்பதா, அருப்புக்கோட்டையை வைப்பதா அல்லது சிவகாசியை வைப்பதா என்பதில் ஒரு சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அங்குள்ள முக்கியமான பெரியவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினால் சுமுகமான நிலை ஏற்பட்டு வரும். எனவே, தலைநகரப் பிரச்சினை ஒன்றை மட்டும் வைத்து இவ்வாறு பிரிப்பதில் காலத்தை நீடிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாவட்ட நிர்வாகத்தைப்பற்றி பல உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். புறம்போக்கு நிலங்கள் பல, ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுக்க முற்பட்டாலும் கூட எங்கள் மாவட்டத்தில் புறம்போக்கு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. இருக்கின்ற புறம்போக்கு நிலங்கள் ஏழைகளுக்கு ஜாரி செய்யப்படுவதில்லை. என்னுடைய தொகுதியில் கன்னிசேரியில் ஆர். டி. ஓ. அவர்கள் ஏற்கெனவே நிலமுள்ள ஒருவருக்கு, நிலத்தை ஜாரி செய்து கொடுத்திருக்கிறார்கள். அவருடைய மனைவிக்கு 15 ஏக்கரா நஞ்சை நிலம் இருக்கிறது. மனைவியின் பேரில் நிலம் இருக்கிறது, எனக்கு இல்லை என்று சொல்லி, அவர் இப்பொழுது இரண்டு மூன்று ஏக்கர் நஞ்சையை ஜாரி செய்திருக்கிறார். நான் அதை எடுத்துக் கூறியும் சிவகாசியிலே இருக்கிற ஆர். டி. ஓ. எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இராணுவத்திலேயிருந்து திரும்பியவர்களுக்கும், மற்ற ஏழை எளியவர்களுக்கும் நிலத்தை ஜாரி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, எங்களது இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி அமைகிறேன். வணக்கம்.

* THIRU K. S. KOTHANDARAMIAH: Mr. Chairman, Sir, I wish to say a few words on the Demand-District Administration-presented to this House by our Hon. Chief Minister. In this connection, I wish to state that I would support the Demand and say a few words about the administration that is prevailing in our Dharmapuri district in general and Hosur taluk in particular. As the proverb goes 'Art is great but life is short', the time given to me is very short. Therefore I would say one or two words.



1969 மார்ச் 20] [Thiru K. S. Kothandaramaiah]

Firstly, as regards the collection of Government loans from the ryots, my taluk is suffering from drought and the people there are not able to pay the Government loans and also the loans taken from the co-operative societies. We have already represented the matter to the Collector and he has ordered a go-slow policy in regard to this matter. But the local officials are compelling the ryots to pay the loan amounts immediately. So, I would request the Hon. Chief Minister to see that extension of time is given atleast to the next gingelly season for the recovery of the loans.

Next with regard to the supply of rations, the number of ration shops in our taluk is very small compared to the number of villages. Therefore, I would request the Hon. Chief Minister to take steps to see that they are increased and also a portion of the 10,000 tonnes of foodgrains promised to be supplied by the Central Government is allotted to the Dharmapuri district.

Sir, I learn that our Hon. Chief Minister has been able to convince the Prime Minister of India to tour the drought-affected districts of our State and also that she would tour only North Arcot and Chingleput districts. Since Hosur is near Bangalore, the Prime Minister can take the plane at Bangalore for Delhi, after visiting North Arcot District and Chingleput districts. So, I request the Government and the Hon. Chief Minister to arrange the programme of the Prime Minister in such a day that it should be possible for her to visit the Dharmapuri district also.

Then, with regard to the use of Telugu for official purposes in the Hosur taluk and certain other are[illegible] India and also the Government of Madras have accepted the recommendations of the Zonal Council and also the recommendations of the Commissioner for Linguistic Minorities. Last year our late Chief Minister was kind enough to say on two occasions that he would implement the decisions taken in the meeting of the Zonal Council. With regard to areas where other languages are predominent like Hosur, Ponneri, Tiruvallur, etc., the Commissioner has stated that all important documents and correspondence should also be given in Telugu so that the people of these languages may be able to understand the policies of the Government and the good work done by them and give their full co-operation to them. In this connection, I would refer to one matter, i.e., two months back a Member of the Board of Revenue, Thiru Mani, came to Hosur and visited a village one morning. At that time only a few people were standing and as soon as he began to put questions in Telugu: "Emandi, Mee Kashtamulu Cheppandi"—that is, 'please tell me, what are your difficulties'—within two or three minutes, it was a wonder to see more than 100 people gathered round him and they explained to him their difficulties. The Member of the Board of Revenue was able to understand their difficulties. From this, it is quite clear that if the officials who know the minority languages are posted to those areas, people will

be able to understand the good work of the Government. We have got excellent and kind Ministers and a number of them came to cur taluk and promised so many things. They even encouraged us to work hard and that they would give all help to us. So, I request our Hon. Chief Minister to remember the difficulties of the Non-Tamils, that is the Telugu people, who take the second place in our State and implement the decisions taken in the meetings of the Zonal Council so that they may also develop their language on a par with the Tamil language.

With regard to the District Development Council, at present as I have already stated on a previous occasion, the District Collector is presiding over its deliberations. In my opinion, if we want to derive full benefits from such an important Council, it is better a non-official presides over it. In the neighbouring State of Andhra Pradesh, the Council is presided over by a non-official and they find it very useful. Here the difficulty is we give a number of resolutions, and discuss so many important points but afterwards we do not know what happens to them. Only at times we get some information, but we want that full information should reach us, so that we may tell the people about it and also feel satisfied.

Next I come to the Employment Exchange. There are some complaints about it. It so happens that candidates who registered their names previously are left off and the candidates who registered their names afterwards got chances. These things happen particularly with regard to the appointments of teachers relating to the Panchayat Union Council and I request the Government to look into the matter.

Then I come to the treatment given to the village officers. Many revenue officials are very kind and considerate; but there are some officers who try to ill-treat these village officers. After all, they are very humble officers. If the big officers begin to ill-treat them, they have no other way but to simply suffer and bow their heads and submit to their ill-treatment. So, I request the Government to look into the matter.

Then, with regard to the hereditary system. . . . (Mr. Chairman sounded the gong.)

***திரு. பி. துரைராஜ்** : சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மாவட்ட நிர்வாக அமைப்பு மானியம் குறித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூறுவதற்கு ஆசைப்படுகிறேன். மாவட்ட நிர்வாகமானது ஒரு அரசாங்கத்தினுடைய சட்ட திட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் சரியாகக் கடைபிடித்து, செவ்வனே செயல்பட்டால்தான் அந்த மாவட்டத்திலுள்ள மக்களுடைய நலன்களை நல்லமுறையிலே பாதுகாக்கமுடியும், நல்ல காரியங்களை மிக விரைவிலே செய்ய முடியும் என்பதை யாரும் மறுக்க முடியாது. மாவட்ட நிர்வாகமானது மாவட்டத்திலுள்ள மக்களுடைய நலன்களில் அக்கறை கொண்டிருக்கிறது, அவர்களுடைய உணர்ச்சிகளை நல்லமுறையில் மதித்து, அந்த நல்ல





அதிகாரிகள் செயல்படுகிறார்கள் என்று மக்களுடைய நல்லெண்ணத்தைப் பெற்றால்தான் நம்முடைய அரசாங்கத்திற்கும் நல்லமுறையிலே நல்ல பெயர் ஏற்படும் என்பதை மறுக்கமுடியாது.

அதே போல நல்ல திட்டங்களுக்காகத்தான் மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு இருக்கிற நடைமுறையினை நாம் பார்ப்போமானால், அது உண்மையிலே நல்ல பயனைக் கொடுக்கக்கூடியதாக இல்லை. மாவட்ட. வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே ஒருசில தீர்மானங்களையோ, நிகழ்ச்சிகளையோ பற்றி கேட்போமானால் இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நாம் மீண்டும் சென்றோமானால் நாம் கொடுத்த கோரிக்கைகளுக்கு என்ன பதில் கிடைக்கும் என்ற நிலைமை கூட இல்லை. சுமார் ஒரு மணி நேரத்திற்குள்ளாகவோ அல்லது இரண்டு மணி நேரத்திற்குள்ளாகவோ முடிவுற்று திரும்பக் கூடிய காட்சிதான் இருக்கிறது. ஆகவே, அந்த நடைமுறைகளில், வேலைகளில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறைந்தது ஒரு மணி நேரமாவது வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் கேள்வி-பதில் என்ற முறையை நாம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி இருந்தால்தான் கடந்த கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கோ, அல்லது நிர்வாக சம்பந்தமான கேள்விகளையோ கேட்டால் இந்தக் கூட்டத்திலே பதில் பெற்று அதைச் சீர்படுத்திக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்து அந்த முறையைப் பின்பற்ற வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாம் ஜமாபந்தியில் முறையை ஒழித்துவிட்டோம், அதை மக்கள் வரவேற்கிறார்கள். அதே நேரத்தில் மக்களின் வாழ்க்கைக்கு முக்கியமான சில காரியங்களில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பட்டா வழங்குவது போன்ற விஷயங்களில் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. இந்தக் கஷ்டங்களையெல்லாம் தீர்த்துவைப்பதற்கு நாம் ஒரு மாற்று முறையை ஏற்படுத்துவது அவசியமாகிறது. தாலுகா மட்டத்தில் மாதம் ஒரு முறை அந்தத் தாலுகா அதிகாரிகள் பஞ்சாயத்து யூனியன் சேர்மன், சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் வந்து தாலுகா அலுவலகத்தில் கூடி மக்களின் குறைகளைக் கேட்டு நிவர்த்திப்பதற்கான ஒரு ஏற்பாட்டையும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கும், மற்றும் பல கோரிக்கைகளை பரிசீலிப்பதற்கும், இந்த மாதிரி வட்டார அளவில் கூடினால், குறைகளை விரைவிலே தீர்த்துக்கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பிற்பகல் 1·00

திருநெல்வேலி சங்கரன்கோவில் தொகுதியில் சங்கரன்கோவில் வட்டாரம் மிகவும் வரண்ட வட்டாரம். ஒரு சில தினங்களுக்கு முன்பு நான் ஊரிலிருந்து வருகிறபொழுது அங்குள்ள மக்கள் சில குறைகளை என்னிடம் சொன்னார்கள். இரண்டு தினங்களுக்கு முன்பு மாநில ரெவின்யூ போர்டு மெம்பர் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிடுவதாக இருந்தது. எனது தொகுதிக்கு ரெவின்யூ போர்டு மெம்பர் வருவதாக கலெக்டர் அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றார்கள். ஆனால், மறுநாள் ரெவின்யூ மெம்பர் அங்கே வரவில்லை. மக்களெல்லாம் அவர் வருகையை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் ரெவின்யூ போர்டு மெம்பர் அவர்கள் கோவில்பட்டியில் தங்கி, மாவட்டம் முழுவதுமுள்ள அதிகாரிகளை அங்கே வரச்சொல்லி, குறைகளைக் கேட்டு அறிந்து வந்தார்கள் என்று தெரியவருகிறது. ஏற்கெனவே அறிவித்திருந்தும், ரெவின்யூ போர்டு மெம்பர் அவர்கள் தங்களுடைய பகுதிக்கு வராதது குறித்து மக்கள் மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டு என்னிடம் சொன்னார்கள். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் போர்டு மெம்பர் அவர்கள் நிதர்சனமாக நேரிடையாக வறட்சிப் பிரதேசத்தைப் பார்வையிட்டால் அங்குள்ள மக்கள் ஓரளவுக்கு மனத் திருப்தி அடைவார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடன் வசூலை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டோம். தாலுகா அதிகாரிகளிடம் நான் சென்று கேட்கும்பொழுது அரசாங்கத்திலிருந்து தெளிவான உத்தரவு தங்களுக்கு இல்லை என்று சொல்கிறார்கள். சங்கரன்கோவில் தாலுகாவைப் பொறுத்த மட்டில் மிகவும் வறண்ட பிரதேசம் அது. அங்கு குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடையாது. கிணறுகளில் தண்ணீர் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, கடன் வசூலை, போஸ்ட்போன்மெண்ட், அதாவது தவணையை ஒத்திப் போடவேண்டும் என்று இந்த ஆண்டு கண்டிப்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் தயவோடு கேட்டுக்கொள்கிறேன். குடிப்பதற்குத் தண்ணீர் கூட இல்லாமல் மக்கள் கிராமங்களைவிட்டு வெளியேறக்கூடிய ஒரு சூழ்நிலை அங்கே நிலவுகிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அங்கே கடன் வசூல் தவணையை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பஞ்சாயத்து யூனியன் நிர்வாகம் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனு வாசன் அவர்கள் சொன்னதுபோல, பஞ்சாயத்து யூனியன்களில் ஆசிரியர்கள் நியமனம் எல்லாவிதத்திலும் நல்ல நோக்கத்தோடு நடத்தப்படவில்லை. குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பஞ்சாயத்து யூனியன் அலுவலகங் களில் சரியான முறையில் உத்தியோகங்கள் வழங்கப்படவில்லை. மாவட்டத்தில் 33 யூனியன்கள் இருக்கின்றன. ஒன்றிரண்டு யூனியன்களைத் எங்கள் தவிர, வேறு எந்த யூனியனிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு அதிகமாகக் கொடுக்கப்படாத ஒரு நிலைமை இருக்கிறது. சட்ட திட்டங்கள் தெளிவாக இருக்க வேண்டும். சட்ட திட்டங்களின்கீழ் நியாயமான முடிவுகளை அதிகாரிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் உத்தரவு தெளிவாக இருக்கும்பொழுது, அதற்கு வேறு இண்டர்பிரடேஷன் செய்துகொண்டு, அந்தக் காரியங்களை மிகவும் விரைவிலே செய்யமுடியாத நிலைமைக்கு காலதாமதம் ஏற்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டு வருகிறது. அந்த நிலையை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டத்திலுள்ள வேலைத்தேடித் தரும் நிறுவனத்தைப்பற்றி ஒரே ஒரு கருத்தைச் சொல்லி, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வேலை தேடித் தரும் நிறுவனத்தை ஒரு அதிகாரி வேலைக்கு ஆள் அனுப்பவேண்டும் என்று கேட்டால், பாரபட்சமான நிலையில் சில பேர்கள் சில நேரத்தில் நடந்துகொண்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களின் பெயர்களை அந்த வேலைத்தேடித் தரும் நிறுவனம் அனுப்புவது கிடையாது. யார் செல்வாக்கு உள்ளவர்களோ அவர்களுடைய பெயர்களைத்தான் அனுப்புகிறார்கள். செல்வாக்குள்ளவர்கள் தங்களுடைய பெயரை அனுப்ப வேண்டும் என்று சொன்னால், உடனே அவருடைய பெயரைத்தான் அங்கே கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக, குருவிகுளம் பஞ்சாயத்து யூனியனில் வேலைத் தேடித் தரும் நிறுவனத்தார் நான்கு தினங்களில் நான்கு லிஸ்டுகளை அனுப்பியிருக்கிறார்கள். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். நடைமுறையில் பாரபட்சமற்ற முறையைக் கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவுக்கு நான் பேச அனுமதித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, ஒரேஒரு வார்த்தை அறநிலையைக் கட்டளைத்துறையைப்பற்றி.... (மணி அடிக்கப் பட்டது)

*திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது பேசும்பொழுது, கலெக்டர் என்ற பெயரை மாற்றி, வேறு முறையிலே அந்தப் பெயரை அமைக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.



மாவட்டத்தில் இருக்கக்கூடிய எல்லாப் பிரச்னைகளைப் பற்றியும் டெவலப்மெண்ட் கவுன்சிலில் பேசவேண்டும். அப்படிப் பேசும்பொழுது, போலீஸ் இலாகாவின் பிரச்னைகளைப்பற்றியும் கூட அந்த அபிவிருத்தி மன்றத்தில் பேசுவது ரொம்ப அவசியம். போலீஸ் துறையினர் அபிவிருத்தி மன்றக் கூட்டத்திற்கு இப்பொழுது வருவதில்லை. அவர்கள் வருவதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிக்கவேண்டும்.

மாவட்ட ஸ்தலங்களில் மாவட்ட ஆட்சியாளர்களுடைய இடத்தில் "கைடு" என்ற ஒரு அதிகாரியை நியமித்து, அவர்கள் மக்களுடைய பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஜில்லா கெஜட் சில இடங்களில் அனுப்பப்படாத நிலை இருக்கிறது. அதை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

கோவில் டிரஸ்டிகளை நியமிப்பதில் பழைய கால முறை மிகவும் மோசமாக இருக்கிறது. அரிசனங்களை டிரஸ்டிகளாக நியமிக்கவேண்டும் என்ற ஒரு விதி இருந்தும்கூட, பல இடங்களில் அம்மாதிரி நியமிப்பது கிடையாது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் சிக்கலில் ராமநாதபுரம் தேவக்கோட்டை செட்டியார் ஒருவரை டிரஸ்டியாக நியமித்திருக்கிறார்கள். அந்த ஊரில் இருக்கும் அரிஜன் அதற்கு மனுப்போட்டும், அந்த அரிஜன் நியமிக்கப்படவில்லை. இந்த முறை மாற்றப்படவேண்டும். அதே நேரத்தில் கோவில் சொத்துக்களுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்படுகிறது. அதைச் சரியாகப் பயன்படுத்துவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அதேபோல், அற நிலைய அதிகாரிகளாக வருகிறவர்கள் அங்குள்ள பெரிய மடங்களைச் சார்ந்து போகிறார்கள் என்ற குறைபாடு மக்களிடையே உள்ளது. அப்படியில்லாமல் அவர்கள் நடுநிலையில் நின்று செயல்படுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

ஜில்லா வெல்பேர் பண்டு கமிட்டி என்ற ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அதற்குப் பணமெல்லாம் இருக்கிறது. அதில் ஊழல்கள் நிறைந்திருக் கின்றன என்று புகார்கள் வந்திருக்கின்றன. அம்மாதிரி ஊழல் இல்லாமல், சரியான முறையில் நிர்வாகம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி டெவலப்மெண்டு கவுன்சிலைப் பொறுத்தவரையில், அதிலே பல விஷயங்களைப் பற்றிப் பேசுகிறோமே தவிர, அவைகளை அமுல் படுத்துவதற்கான அதிகாரமோ, மற்றவைகளோ அதற்கு இல்லை. நான் என்ன யோசனை கூறுகிறேன் என்றால், டெவலப்மெண்டு கவுன்சில் அந்த ஜில்லாவிலே நடக்கக்கூடிய வேலைகளுக்கு பணம் சாங்ஷன் செய்யக்கூடிய சாங்ஷனிங் அதாரிடி அந்த டெவலப்மெண்டு கவுன்சிலுக்கு இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆழமான அபிப்பிராயம்.

அதேபோல் ஜில்லா அபிவிருத்தி கவுன்சிலுக்கு கலெக்டர் காரியதரிசி யாக இருந்து, ஒரு நான்-அபீஷியல் பிரசிடெண்டாக இருந்து நடவடிக்கையை கவனித்தால் சரியாக இருக்க முடியும் என்று கருதுகிறேன். எனக்கு முன்பு ஒரு உறுப்பினர் பேசியதுபோல், டெவலப்மெண்டு கவுன்சிலில் கேள்வி நேரத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஒரு நாளைக்கு அவசரம் அவசரமாகக் கூடுவது என்ற முறையை மாற்றி, இரண்டு நாட்களுக்குக் கூடுவது என்று வைத்துக்கொண்டு, கேள்விகளுக்குரிய நேரத்தை ஒதுக்கி, முதல் கவுன்சில் கூட்டத்திலிருந்து, மறு கவுன்சில் கூட்டம் வரை நடந்திருக்கக்கூடிய பல விஷயங்களைப்பற்றி கேள்விகளை அனுப்புவதும் கேள்விகளுக்கு பதில் சொல்லுவதுமான ஒரு முறையை ஏற்படுத்திக் கொண்டு, டெவலப்மெண்டு கவுன்சில் இயங்கினால் நலமாக இருக்கும். நாம் டெவலப்மெண்டு கவுன்சிலில் வந்து பிஸ்கட், டீ சாப்பிட்டுவிட்டுப் போய்க்கொண்டிருக்கிறோம். எந்தவிதமான காரியமும் உருப்படியாக

நடப்பதில்லை. சென்ற மூன்றாவது ஆண்டு கூட இதைப்பற்றி நான் சட்டமன்றத்தில் குறிப்பிட்டேன். அப்பொழுதிருந்த முதல் அமைச்சர் அவர்கள் கூட இது ஜனநாயக முறையில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். அம்மாதிரி விதத்தில் இதைத் திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

அமைச்சர்கள் சுற்றுப்பயணம் வரும்பொழுது, அந்தத் துறை அதிகாரிகள் மட்டும்தான் அவர்களோடு கூட வருவது என்ற ஒரு முறையை கண்டிப்பாக அமுல்படுத்தவேண்டும். அப்படியில்லாமல் பழைய காலத்தில் பல சிரமங்கள் ஏற்பட்டன. இப்பொழுது பல துறை அதிகாரி களும் அமைச்சர்கள் கூடவே வரும் முறையைப் பார்க்கிறோம். அதை மாற்றி அந்தத் துறையைச் சார்ந்த அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய அதிகாரிகள் மட்டும் அமைச்சர்களுடன் கூட இருந்தால் போதும் என்ற நிலையில் ஏற்பாடு செய்தால் உதவியாக இருக்கும்.

ஆர். டி. ஓ. பதவி தேவையில்லை. பெரிய மாவட்டங்களை சிறு சிறு மாவட்டங்களாக்கி, மேலே ஆட்சித் தலைவர், கீழே தாலுகா அதிகாரிகள் போதும். ஆர். டி. ஓ. பதவி வேண்டாம் என்று கருதுகிறேன். அது தேவையில்லை. அதிகாரிகள் பலதுறைகளிலும் பரவலாக்கப்பட்டிருக்கின்றனர். பஞ்சாயத்து கூட்டுமன்றம் பல காரியங்களைச் செய்துவருகிறது. ஆர். டி. ஓ. பதவி அவசியமில்லை. மாவட்ட ஆட்சியாளரின் தலைமையின் கீழ் தாலுகா அதிகாரிகள் இயங்கினால் போதும். பெரிய மாவட்டங்களை இரண்டு மாவட்டங்களாகப் பிரித்து, அம்மாதிரி நிர்வாகம் செய்தால், பணம் விரயமாவதைத் தடுக்கலாம், நிர்வாகம் சீராகவும், துரிதமாகவும் நடைபெற உதவியாக இருக்கும். ஆகவே, அந்த முறையில் நிர்வாகத்தைத் திருத்தி அமைக்கவேண்டும் என்பது என்னுடைய ஆலோசனை.

மாவட்ட வேலைகள் துரிதமாக நடத்தப்படமுடியாத நிலை இன்று இருக்கிறது. பல சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதியும்கூட, கடிதங் களுக்குப் பதில் கிடைப்பதில்லை. கவனிப்பது கிடையாது. கடிதம் கிடைத்தது என்று ஒரு அக்நாலெஜ் செய்யக்கூடிய அளவில் கூட நிர்வாகம் இல்லை. இந்த நிலையை மாற்றி அமைக்கவேண்டும். சட்ட மன்ற அங்கத்தினர்கள் மட்டும் அல்ல இந்த நாட்டுக் குடிமகன் எவன் கடிதம் எழுதினாலும், அந்தக் கடிதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அது கவனிக்கப்படவேண்டும். அந்தக் குடிமகனுக்கு தன்னுடைய கடிதத்திற்கு பதில் கிடைக்கவேண்டும். அப்பொழுதுதான் குடிமகனுக்கு கௌரவம் கொடுத்தவர்களாவோம். காலதாமதம் இல்லாமல் காரியங் களைக் கவனிப்பதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும். எல்.டிஸ். என்று டிஸ்போஸல் கொடுத்துவிட்டால், அந்த பைலிலிருந்து பேப்பர் திரும்பி வருவதே கிடையாது. பழைய சிவப்பு நாடா முறையை மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலத்திய ரெவின்யூ போர்டை, ஒழித்துவிட்டோம். ஜமாபந்தியை ஒழித்துவிட்டோம். ஆகவே, இந்த வழிகளிலும் உடனடி யாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மூன்று மாதத்திற்கு ஒருமுறை அந்தப் பகுதிகளுக்குச் சென்று, மக்களிடம் கேட்டறிந்து அவர்களுடைய கோரிக்கைகள் முடியுமா, முடி யாதா என்பதை ஆய்ந்து அறிந்து, எல்லாமே அரசாங்கத்திற்குப் போகாமல் கூடியவரையில் அங்கங்கே தீர்க்க வழிகாணவேண்டும். செமினார் வைக்கவேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் வட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்ட பகுதிகளுக்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை சென்று கவனித்து, அங்கங்கே முடிந்தவரையில் பிரச்சினைகளை டிஸ்போஸ் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தாமதம் தீர்க்கப்பட வேண்டும். அப்படிச் செய்வதால், அரசின்மீது வரும் பழி குறையும். அந்த வகைகளில் ஜில்லா நிர்வாகத்தை அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





கடைசியாக, இந்த எண்டோமெண்டுகள் சம்பந்தப்பட்ட வரையில், ஏரியாக் கமிட்டிகளை ஒழித்துவிட்டு, ஏ. ஸி. பொறுப்பிலேயோ அல்லது வேறு நிர்வாக அதிகாரி பொறுப்பிலேயோ வைக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுத்து அவர்களுடைய நடவடிக்கைகளை "ராமனை" செய்ய சட்ட மன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் கொண்ட அட்வைசரி பாடி ஒன்று அமைத்து, அவர்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்வது, இல்லையென்றால், அரசுக்கு அனுப்புவது என்று வைத்துக்கொள்ளலாம். அந்த வகையில் மாவட்ட அடிப்படையில் நடவடிக்கை எடுப்பது நலமாக இருக்கும். அறநிலையத் துறையில்தான் ஏராளமான ஊழல்கள் இருக் கின்றன. அதிகமாகப் பணமும் இருக்கிறது. சாமியின் பெயரால் கணக்கெழுதப்படுகிறது. ஆகவே அந்தத் துறையில் குறைபாடுகளைத் தவிர்த்தால், நிர்வாகத்திற்கு, நாட்டிற்கு, மக்களுக்கு நலன் என்பதால் அதில் அவசரமான அவசியமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. மா. பொ. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இங்கே வைக்கப்பட்டுள்ள மாவட்ட நிர்வாகம், பல்வகைகள் என்ற மானியத்தைப் புரிந்துகொண்டு, தெளிந்துகொண்டு, பேசுவதற்கு மற்ற மானியங்களுக்குப்போல், இதற்கு குறிப்புக்களோ, தகவல்களோ, இல்லாமல் இருக்கிறது. முக்கியமாக அறத்துறை, பல்வகை என்ற தலைப்பின்கீழ் பல ஆண்டுகளாக மறைந்து வந்திருக்கிறது; இந்த ஆண்டு அடைப்புக்குள்ளே வந்திருக்கும் நிலை இருப்பதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். அடுத்த ஆண்டிலிருந்தாவது, இது ஒரு தனிமானிய மாகவே சட்டமன்றத்திற்கு வந்தால், மக்கள் பிரதிநிதிகள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி, குறைபாடுகளை அறிந்து, அந்தத் துறையைச் சீர்திருத்த வாய்ப்பு ஏற்படும் என்று நினைக்கிறேன். அதுமட்டுமல்லாமல், அறத்துறை வரவுசெலவுகளை ஆடிட்செய்யும், ஆடிட் ரிபோர்ட் இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டால், பல தவறுகளையும் தவிர்க்கப் பயன்படும். இப் பொழுது அது நம்முடைய பார்வைக்கு அப்பாற்பட்டு இருப்பதால், மக்கள் மன்றத்திற்குத் தெரியாமல் இருப்பதால், இல்லாத தவறுகள்கூட இருப்பதாக மக்கள் நினைக்க வழி ஏற்படுகிறது. ஆகவே இதை ஒரு தனிமானியமாக பிரேரேபிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டால், கோவில்கள், மடங்கள் இவற்றின் நிர்வாகம் முன்னேற வழி வகுக்கப்படும். அதோடு, வழக்குகள் வருகின்றன. அறத்துறை சம்பந்தப்பட்ட வழக்குகள் டெபுடி கமிஷனருக்கும் வருகிறது. அவருடைய முடிவுக்குப் பின்னால், ஆணை யருக்குப் போகிறது. அதற்கும் பிறகு, சப்-ஜட்ஜுக்கு, அதன் பிறகு ஹைகோர்ட்டுக்குப் போகிறது. அதெல்லாம் முடிந்து ஒரு கேஸ் தீரு வதற்கு 10 ஆண்டுகள் ஆகின்றன. சாதாரண குடிமகன் அதிலே ஈடுபட்டு தீர்க்கமுடியாது. நீதி வழங்கும் வழி விரைவு படுத்தப்படவேண்டும். ஆகவே அதற்கு அவசியமான திருத்தங்களை சட்டத்தில் செய்யவேண்டும். வேண்டுமானால், டெபுடி கமிஷனருக்குப் பிறகு நேராகவே ஹைகோர்ட்டுக்குப் போகட்டும் என்கிற ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன.

கோவில்களில் இருக்கும் சாமிகளில்கூட பணக்கார சாமி, ஏழைச்சாமி என்று இருக்கிறது. அங்கேகூட சோஷலிசத்தைக் கடைபிடிக்கவேண்டும் என்று விரும்புகிறேன். ரூ. 20,000-க்கு மேற்பட்ட வருமானமுள்ள கோவில்கள் ஒரு பட்டியலும், ரூ. 7,000-க்கு குறைந்த வருமானம் உள்ளவைகள் ஒரு பட்டியலும் என்று இப்படி லிஸ்டட் டெம்பில்ஸ் என்றும் அன்லிஸ்டட் டெம்பில்ஸ் என்றும் பிரிக்கிறார்கள். அப்படிப் பிரிக்கும்போது, ரூ. 20,000 ஆண்டு வருவாய் உள்ள கோவில்களின் நிலை ஆண்டுதோறும் உபரியான வருவாய் வரும் என்றிருப்பதால், அப்படிப்பட்ட கோவில்களின் வருவாயைக் கொண்டு, நிதிவசதியில்லாத கோவில்களுக்குப் பயன்படுத்தவேண்டும். அமைச்சர் சொன்னதாகப் பத்திரிகையில் படித்தேன், கல்விக்கும், மற்றவைக்கும் அறநிலையப் பணங்கள் உபயோகிக்கப்படவேண்டும் என்று சொன்னதாக. அதே நேரத்தில், அறநிலையப்பணம் அறநிலையே, மற்ற ஆலயங்களுக்கு நிதி

உதவி செய்தபின் இவற்றிற்கு செய்யவேண்டும் என்பதை உணருகிறேன். சான்றாக, கங்கைகொண்ட சோழபுரம், தஞ்சாவூர் பிரகதீச்வரர் ஆலயம் இவை அறத்தோடு சம்பந்தப்பட்டவை. தமிழனின் தலைநிமிர்ந்த அரசியலோடு பெரும் பங்குகொண்டவை. நம்முடைய சரித்திரத்தோடு சம்பந்தப்பட்டவை. அசோகனுடையது போன்ற சாம்ராஜ்யத்தை வைத்திருந்த ராஜராஜ சோழன், அவன் மகன் ராஜேந்திர சோழன் அமைத்த கோவில்கள் இவை இரண்டும். இந்த இரண்டு கோவில்களுக்கும் ஏராளமான சொத்துக்களை வைத்துச் சென்றார்கள். ஆனால் [illegible] ஜீரணித்துவிட்டார்கள். [illegible] புண்ணியவான்கள் முயற்சி எடுக்கலாம். அதில் எவ்வளவு தூரம் சட்டம் கைகொடுக்கும் என்பது தெரியாது. முயன்று பார்க்கலாம். கங்கைகொண்ட சோழபுரத்துக் கோவில், [illegible] எப்படிக் கொண்டுவந்தான் என்பது எல்லாம் காட்டும் கோவில் இன்று பழுதடைந்து, பழுது பார்ப்பாரற்றுக் கிடக்கிறது. [illegible] பிரகதீச்வரர் கோவிலும் இருக்கிறது. [illegible] இவற்றையெல்லாம் பயன்படுத்தலாம். [illegible] ஏற்பாடுகளை [illegible] செய்யவேண்டும் என்று அறத்துறை [illegible] அமைச்சரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். இந்த கோவில்கள், மத்திய சர்க்காரிடம் ஞாபகச் சின்னம் என்ற பெயரில் இருக்கின்றன. கங்கைகொண்ட சோழபுரத்துக் கோவில் ஞாபகச் சின்னம் மட்டுமல்ல, பார்ப்பதற்காக காட்சிப் பொருள் மட்டுமல்ல, அது வழிபடும் கடவுள் கோவிலாகவும் இருக்கின்றது. அவற்றை தமிழ்நாட்டு அரசு எடுத்துக்கொள்ள முயற்சி எடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன், வெற்றி காணவேண்டும்.

(மதத்தில் தீண்டாமைக்கு [illegible] இடத்தவரையில், அந்தவரையில் சாத்திரங்களில், [illegible] இடமில்லை. ஆனாலும், மதவாதிகள் தீண்டாமையை அனுசரித்து வந்திருக்கிறார்கள். இந்து இந்துக்களால் தீண்டாமை அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இந்து மதத்தில், அது அனுஷ்டிக்கப் பட்டிருக்கிறது. ஒன்று சொல்லுவேன். கோவில்களில் உபரிப்பணம், மிச்சப்படும் பணம், இதில் ஆயிரமாண்டு காலமாக அரிசனங்களுக்கு இழைக்கப்பட்ட இடைக்கட்ட பிராயச்சித்தமாக, விடுதலை [illegible] அரிசனங்களுக்கு ஒரு 10 சத பேர்களுக்கு வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்தால் அது பாவப்பிராயச்சித்தமாக இருக்கும். அறத்துறையிலிருந்து அரிசனங்களுக்கு ஒதுக்கி, கல்வி, சுகாதாரம் இவற்றிற்கு மட்டும் பயன்படுத்துவது நலமாக இருக்கும். ஆனால் [illegible] என்றுகூட இல்லை. [illegible] செய்யவேண்டும் என்பதுகூட இல்லை. சட்டத்தைத் திருத்தி ட்ரஸ்டிகள், மடாதிபதிகள் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அப்படி இல்லையென்றால், ஆட்சி ஆணையிட்டே செய்வது நல்லது, அதனால் அரிசனங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.)

/பல விஷயங்கள் இருக்கின்றன. நேரம் இல்லை. ஒன்றிரண்டை மட்டும் சொல்லுகிறேன். நிர்வாகிகளை நியமிக்கிறோம். எல்லோரையும் சொல்லவில்லை. ஒரு சிலர் கோவில் வழிபாட்டில் நம்பிக்கை இல்லாதவர்களாக இருப்பதாக அறிகிறேன். ஆகவே, அறத்துறை சம்பந்தப்பட்ட கோவில்களுக்கு அதிகாரிகள் நியமிக்கப்படுகிறபோது, நிர்வாகிகள் தர்மகர்த்தாக்கள், ஒரு பிரமாணம், கோவில் வழிபாட்டில் நம்பிக்கை இருக்கிறது, என்று எடுத்துக்கொண்டு, நியமிக்கப்பட்டால் நல்லதாக இருக்கும். அப்படிச் செய்தால் ஒன்றும் செய்துவிடும் என்பதல்ல பொருள், ஆனாலும் மனச்சாட்சிக்கு விரோதமாக நடப்பதைத் தவிர்க்கும்./

மற்றொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல காரியங்களையும் பார்த்து, நீண்ட நெடுங்காலமாக தலைப்பாக வராமல்—இந்த மன்றத்தினுடைய பார்வையிலிருந்து மறைக்கப்பட்டது என்று சொல்ல



முன்வரவில்லை,—மறைந்திருந்த ஒன்றை உத்தியோகப் பற்றற்ற குழுவாக அமைத்து, அதில் இந்த மன்றத்திலே உள்ளவர்களும், மேலவையில் உள்ளவர்களும் சேர்க்கப்பட்டு, சம்பந்தப்பட்டவர்களோடு கலந்து ஆலோசித்து அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். டாக்டர் சர்.சி.பி. ராமசாமி அய்யர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, நாட்டில் இருக்கிற அத்தனை மடாலயங்களையும், அறநிலையங்களையும் பேணிப் பாதுகாக்க கமிஷன் நியமிக்கப்பட்டு, அறிக்கை ஒன்று வந்திருக்கிறது. அந்த அறிக்கையைப் பார்க்கிற நேரத்தில் அதில் பல நல்ல ஆலோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. /"கோயில்களில் வடமொழியில் மந்திரங்கள் சொன்னாலும் கூட, பக்தர்கள் புரிந்துகொள்ளும் வகையில் பிரதேச மொழியிலும் சொல்லவேண்டும்"/ என்று சர்.சி.பி. ராமசாமி அய்யர் அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார். அந்த முறையை அமல் நடத்த ஒரு குழுவை அமைத்து, பரிசீலனை செய்து, அந்த முறை சரியாகப் பின்பற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்./

அடுத்து, திருப்பதி கோவில் தமிழனுடைய கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்ற கோயில், தமிழனுடைய நாகரிகத்திற்கு ஒரு சான்று என்பதற்கு திரு. கே. விநாயகம் அவர்கள் இன்று எந்தப் பக்கத்தில் இருந்தாலும் ஒத்துழைப்பு அளிப்பார் என்று நம்புகிறேன். திருப்பதியைப் பற்றிப் பாடும் திருவேங்கடமாலையும் "ஆழ்வார்கள் செந்தமிழை ஆதரிக்கும் வேங்கடம்" என்று பாடுகிற பிள்ளைப் பிரபந்தமும் திருப்பதியின் புகழைப் பாடுகின்றன. திருப்பதி இன்று நம்மைவிட்டுப் போய்விட்டிருக்கிறது. அந்த உரிமை பற்றி பேச ஆரம்பித்தால், இப்பொழுது ஆளுகின்ற ஆட்சி 'மீண்டும் தலைவலிப் பிரச்சினையா?' என்று நினைக்குமோ என்ற அளவில் இதை விட்டுவிடுகிறேன். ஆந்திரப் பிரதேசத்துடன் திருப்பதியைச் சேர்த்தபோது, அப்போதிருந்த முதல் அமைச்சர், அப்போதிருந்த அறத்துறை அமைச்சர் அவர்களும் ஓர் உறுதிமொழி கொடுத்தார்கள். இந்த இடம் அப்பொழுது மேலவையாக இருந்தது. நானும் உறுப்பினராக இருந்தேன். "திருப்பதி பற்றிய உரிமை கேட்கவேண்டாம், ஒன்று இரண்டு என்றால் என்ன? ஒகடி ரெண்டு என்றால் என்ன? இரண்டும் ஒன்றுதானே? ஆதலால் ஊரைப்பற்றிய உரிமை கேட்கவேண்டாம்" என்று கூறினார்கள். இந்த ராஜ்யத்தின் கலாசார உரிமையைப்பற்றி உரிய காலத்தில் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். திருப்பதி தேவஸ்தான போர்டிலே நம்முடைய ராஜ்யத்தின உறுப்பினர்கள் அங்கம் வகிக்க இந்த அரசு முன்னின்று முயற்சி எடுத்துக்கொண்டு, அந்த முயற்சியில் வெற்றி பெறவேண்டும். மாநில சுய ஆட்சிப் பிரச்சினையைவிட இது பெரியதாக இருக்கும். இந்த விஷயத்தில் மாநில அரசு வெற்றி பெறவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொள்கிறேன்/

அதோடு, அடுத்த ஆண்டிலிருந்து அறத்துறை மானியம் என்று தனியாக தலைப்புக் கொடுத்து, இதற்கென்று தனியாக ஒரு நாளை ஒதுக்கித் தரவேண்டும். ஆலயங்கள் அடைகின்ற அபிவிருத்தி, அறநிலையங்கள் ஆற்றுகின்ற பணிகள் போன்றவற்றை விரிவான அளவில் அறிக்கையாக வைத்து, ஒவ்வொரு ஆண்டும் ஆலயங்களின் வரவினை—செலவினைக் கணக்குகளை ஆடிட் செய்து, ஆடிட் ரிப்போர்ட் வைக்க வேண்டும். ஸ்தல புராண வரலாறுகள் வாய்ந்த கோவில்கள் பலப்பல. இந்த/ கோயில்கள் எல்லாம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆன்மீக கலாசாரத்தை வளர்த்து வருகின்ற கருவூலங்கள். இவற்றை நல்ல முறையில் மேலும் மேலும் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு, இத்துறை மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்/

***திரு. என். இட்டப்பா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் கலெக்டராகப் பணியாற்றிய மதிப்பிற்குரிய

திரு ரெங்கபாஷயம் அவர்கள் அந்த மாவட்டத்தில் ஏற்பட்ட விவசாயப் பிரச்சினையில் தீர்வு காண்பதற்காக திருவாரூர், மன்னார்குடி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் முத்தரப்பு மாநாடுகளைக் கூட்டி, சிறப்பான முறையில் தீர்வு கண்டமைக்காக அந்த மாவட்ட விவசாயிகளின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளுக்குத் தேவையான நேரங்களில் உரம், கடன்வசதி, நல்லரக வித்துக்கள் ஆகியவற்றை அரசாங்கம் கொடுத்தும் தஞ்சை போன்ற செழிப்பான மாவட்டங்களில்கூட சில சமயங்களில் சரியாக வெள்ளாமை காண்பதில்லை. விவசாய செலவு கட்டுப்படியாகவில்லை. மாயூரம் தொகுதியில் வாரதாரர் குத்தகைதாரர் ஆகியோர் உண்மையாக உழைத்தும், வாரக் குத்தகையைச் சரிவர அளக்கமுடியாமல் நிலத்தைவிட்டு வெளியேற்றப்படுகிறார்கள். அப்படி அவர்கள் அநியாயமாக நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடுத்து நிறுத்த ஒரு தனித் தாசில்தாரை ஒவ்வொரு தாலூகா தலைநகரத்திலும் நியமித்து விவசாயிகள் கோரிக்கை விடுகின்ற நேரத்தில் கண்டுமுதலை நேரில் பார்வையிட்டு விளைவை நிர்ணயித்து விவசாயிகளுக்கு உதவி செய்து, விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், மாவட்ட வெல்ஃபேர் ஆபீசர் என்று இருப்பதைப் போல, இரண்டு மூன்று தாலூக்காக்கள் சேர்ந்த ஒரு பகுதிக்கு ஒரு வெல்ஃபேர் தாசில்தார் நியமிக்கப்பட்டுள்ளார். ஹரிஜன மக்களும் பின்தங்கியவர்களும் வெல்ஃபேர் ஆபீசுக்குப் போகக்கூடிய நிலைமை தொடர்ந்து இருந்து வருகிறது. வெல்ஃபேர் ஆபீசில் ஏழு, எட்டு ஆண்டுகளாகியும் காரியங்கள் பைசல் செய்யப்படாமல் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களும், சட்டமன்றத்தில் இருக்கிற உறுப்பினர் களும் அறிவார்கள். ஆகவே, இரண்டு மூன்று தாலூக்காக்களுக்குச் சேர்ந்து ஒரு வெல்ஃபேர் தாசில்தாரை நியமிப்பதற்குப் பதிலாக தாலூகாவிற்கு ஒரு வெல்ஃபேர் ஆபீசர் வீதம் நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு பல உறுப்பினர்கள் மாவட்ட நிர்வாகத்தைப்பற்றிப் பேசினார்கள். நிர்வாக வசதிக்காக பெரிய மாவட்டமாக இருக்கின்ற சிறப்புத்தன்மை வாய்ந்ததாக இருக்கின்ற, கலைஞர் கருணாநிதி அவர்கள் சொந்த மாவட்டமாகிய தஞ்சை மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரித்து, தஞ்சை மாவட்டம் என்றும், நாகை மாவட்டம் என்றும் பிரித்து, நிர்வாகம் இன்னும் சிறப்பாக நடைபெறும் வகையில் செய்ய அரசு முன்வரும் என்று நம்புகிறேன். நாகை மாவட்டம் இன்றைய முதல் அமைச்சர் அவர்களுடைய மாவட்டமாக இருக்கும் என்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்து, அறங்காவலர்களைப்பற்றி உறுப்பினர்கள் சொன்னார்கள். அறங் வலர்கள் நியமிக்கப்படுகிற நேரத்தில், ஆதித்திராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்பட வேண்டும். இன்றைய தினம் அந்தச் சமூகம் புறக்கணிக்கப்படவில்லை என்றாலும் அறங் காவலர்களில் நான்கில் ஒரு பங்கினர் ஆதித்திராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்களாக நியமிக்கப்படவேண்டுமென்று அரசு ஆணையிடும் என்று நம்புகிறேன். இப்படிப்பட்ட கோயில்களில், இதற்கு முன்னாலே சிறப்பாக எடுத்துரைத்த ஸ்தலபுராணம் வாய்ந்த கோயில்களில் சில இடங்களில் ஊழல்கள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. என்னுடைய வட்டாரத்தை பொறுத்தவரையில் மாப்படுகை எனும் ஊரிலுள்ள கோயிலில் நடந்த ஊழலைப்பற்றி, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் எடுத்துச் சொல்லியும் இதுவரையில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லையென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. இந்நிலைமை மாற்ற அரசு முன் வருமென நம்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பிலே இருந்தபோது சொன்னார்கள் என்று கருதுகிறேன்.



"தேவஸ்தானங்களுக்கும் மடாலயங்களுக்கும் சொந்தமான சொத்துக்களிலிருந்து வரும் வருமானத்தில், செலவுகளுக்குப்போன பாக்கித் தொகைகளை மருத்துவ மனைகளுக்கும், கல்வி வளர்ச்சிக்கும் செலவிட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நான் கலந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறேன்" என்று மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறினார்கள். நிலத்திற்கு உச்சவரம்பு கட்டும் நேரத்தில் நிதியமைச்சர் அவர்கள் சிறப்பாக இதனைக் கருத்திற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இரண்டு மூன்று மடாலயங் கள் தருமபுரம்—திருவாவடுதுறை—திருப்பனந்தாள் ஆகிய மடாலயங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு ஆயிரக்கணக்கான வேலி நிலங்கள், 12 ஆயிரம் வேலி, 15 ஆயிரம் வேலி என்று இருக்கின்றன. கேட்டால் எல்லாம் ஆண்டவனுக்கு என்று சொல்கிறார்கள். ஆண்டவனுக்கு என்ன அவ்வளவு பெரிய வயிறு? ஆகவே, தேவஸ்தானச் செலவுகளுக்குப் போதுமான நிலத் தை வைத்துக்கொண்டு மீதி நிலங்களை, அந்த நிலங்களில் வேலைசெய்யும் ஆதித்திராவிட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிரித்துக் கொடுத்து உரிமையாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அறநிலையத்தைச் சேர்ந்த நிலங்களில் பல்லாண்டுக் காலமாக குத்தகை பாக்கியை வைத்திருக்கின்ற ஆதித்திராவிட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் ஆண்டவனுடைய பெருமக்கள், ஆண்டவனுடைய குடிமக்கள் தான் என்று எண்ணி அவர்களுக்கு தள்ளுபடி செய்துகொடுக்க இப்போது இருக்கிற சட்டத்தில் அதற்கு இடம் இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்து, சட்டத்தில் இடம் இல்லாவிட்டால் தகுந்த மாதிரி மாற்றியமைத்து—தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

*திரு. ந. தீர்த்தகிரி : மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய தர்மபுரி ஜில்லாவைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூற முனைகிறேன். ஏற்கெனவே எங்கள் ஜில்லா பின்தங்கிய ஜில்லா. அங்கு ஏழை மக்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள். அரிசியின் விலை அதிகமாக விற்கின்றபடியால் ஏழை மக்களுக்குப் பஞ்ச நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே பஞ்ச நிவாரணக் கடைகளைத் திறந்து புஞ்சை தானியம் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயப் பொருள்களுக்கு வரிவிதிப்பு ஏற்பட்டதால் கரும்பு, குச்சி பிற்பகல் 1–30
பருத்தி போன்றவற்றின் விலை குறைந்து விவசாயத் தொழிலுக்கு மிகவும் நெருக்கடியாய் இருக்கிறது. அதோடு எனது பகுதியில் தண்ணீர்ப் பஞ்சம் மிகக் கடுமையாக ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகள் தங்களுடைய கிணறுகளை ஆழப்படுத்த கடன் கொடுக்க வேண்டும். சர்க்காரே மிஷின் மூலமாக கிணறுகளை ஆழப்படுத்திக்கொடுக்க முன்வரவேண்டும். அதற் காகும் தொகையைக் கடனாகக் கொடுத்தால் விவசாயிகள் திருப்பிக் கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள். தண்ணீர்ப் பஞ்சம் நீங்கினாலே விவசாயக் கூலிகளுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். பஞ்ச நிலைமை மாறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவில் வறட்சி நிலைமை ஏற்பட்டிருப்பதால் முன்பு கொடுத்துள்ள உர லோன் போன்ற கடன்களை வசூலிக்காமல் நிறுத்தி வைக்கவேண்டும். அரூர் பகுதியில் மாட்டு லோன் போன்ற இதர லோன்களைக் கொடுத்து வசதியைப் பெருக்க வேண்டும். என்னுடைய தொகுதியில் ஏழை மக்கள், ஹரிஜன மக்கள் அதிகமாக இருக் கிறார்கள். இவர்கள் வாழ வழியில்லாமல் பாரம்பரியமாகவே தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சிறு சிறு தொழில்கள் செய்ய மானியமாகவோ, கடனாகவோ பணம் கொடுத்து தொழில் நடத்த வசதி செய்துதர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி ஜில்லா பிற்போக்கான பஞ்சப் பிரதேசம். பஞ்ச நிவாரண வேலைக்காக அந்த மாவட்டத்திற்குப் பத்து லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக் கிறது. அது போதாது. மற்ற மாவட்டத்திற்கு அதிகமாக ஒதுக்கியிருப்பதைப் போல இந்த மாவட்டத்திற்கும் அதிகமாய் ஒதுக்கித்தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சில கஷ்டங்கள் முன்பு இருந்த சர்க்கார் காலத்தும் இருந்தது. இப்போதும் இருந்துகொண்டி ருக்கிறது. அதை களைந்தெரியவேண்டுமானால் கண்ணும் கருத்துமாகச் செயல்படவேண்டும். நாங்கள் சட்டமன்றத்தில் கூக்குரல் போடுவதைத் தவிர இன்று வேறு வழியில்லை. பஞ்சாயத்துகளிலே சில வேலைகள் நடந்துகொண்டிருந்தன. முன்னாலே நடந்ததுபோல இப்போது நடக்க வில்லை. இரண்டு வருடமாக ஸ்தம்பித்துவிட்டன. ஏனென்று கேட்டால் பணம் இல்லை என்கிறார்கள். என்ஜினியர்களைக் கேட்டால் அதற்காகப் பணம் அதிகம் ஒதுக்கப்படவில்லை என்கிறார்கள். நாங்கள் சொல்வது ஒன்றுகூட நடக்கவில்லை. இதைக் கவனித்து அதிகப் பணம் ஒதுக்கி வேலைகள் நடப்பதற்கு ஆவன செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய அரூர் பகுதி பஞ்சப் பிரதேசமாக இருப்பதால் வரிகளை வஜா செய்யவேண்டுமாறு கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. எம். சுரேந்திரன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, சபைமுன் வைக்கப்பட்டிருக்கிற ஜில்லா மானியக் கோரிக்கை மீது பேசுகின்றபோது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், வருங்காலத்தில் தாம் செய்ய . இருக்கிற சில புரட்சிகரமான மாற்றங்களைக் கூறியிருக்கிறார்கள். ஜமாபந்தி முறையை ஒழிப்பது, ரெவின்யூ போர்டைக் கலைத்துவிடுவது என்பதாக, மிகப் பழமையான காலமாகத் தொடர்ந்து இருந்து வருகின்ற இந்த அமைப்புகளை மாற்றி அமைக்கவேண்டுமென்ற துடிப்பு அவர்களது முந்தைய உரையில் தென்பட்டது. அப்படி மாற்றி அமைக்க முற்படுகிறபோது மறுபக்கத்தில் அதன் பலாபலன்களைப்பற்றியும் நாம் சரியாகக் கவனிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இவற்றை மாற்றி அமைக்கும்போது இவற்றினுடைய தொடர்பாக இருக்கிற எல்லா அமைப்பினையும் சரியாக மாற்றி அமைத்தால்தான் ஜனங்களுக்கு அதிக வசதிகளை நம்மால் உண்டாக்க முடியும். மாற்றி அமைக்கிற விஷயம் வருகிறபோது ஜில்லா நிர்வாகம் மிகவும் முக்கியமாக வருகிறது. ஜில்லா நிர்வாகம் அமைந்த காலம் மிகவும் பழமையானது. முன்பு கலெக்டர்களுக்கு வரி வசூலிக்கின்ற பொறுப்பு மட்டும் இருந்தது. இன்றைக்கு எந்த அம்சத்தை எடுத்துக்கொண்டாலும் உடை கொடுப்பது. உணவு கொடுப்பது, வீடு கொடுப்பது, இப்படி எல்லாத் துறைகளிலும் கலெக்டருடைய, ரெவின்யூ இலாக்கா சம்பந்தம் இல்லாது ஒரு பிரச்சினை கூட இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. எல்லாமே ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து ரெவின்யூ இலாக்காவுக்கு வந்தபிறகு தீர்வு பெறவேண்டிய நிலை இருக்கிறது. இந்த நிலையை இப்படியே வைத்துக் கொண்டிருப்பது நாம் அறிவித்திருக்கின்ற நிலைக்குப் பொருந்தியதாக இருக்காது. இப்படி இருக்கிற காரணமாக வேலைப் பளு ஏற்பட்டு எந்தப் பேப்பரும் நகராமல் தேங்கி நிற்கின்ற நிலை உண்டாகிறது. ஒவ்வொரு இடத்திலும் எந்தப் பேப்பரையும் குத்திக் குத்தி நகர்த்தவேண்டிய தாக இருக்கிறது. அதன் காரணமாக எந்த விண்ணப்பத்தை யார் போட்டாலும் அவன் வயது முடிந்து—அந்தப் பலன் அவனுக்குக் கிடைக்காமலே போகிறது. பழைய காலத்தில் ஒரு ஜில்லாவானது 10 லட்சம் ஜனத்தொகைக்குள் அமைந்திருக்கும். இப்போது ஒவ்வொரு மாவட்டத்தின் ஜனத்தொகை 35 லட்சம் வரை வந்திருக்கிறது என்று புள்ளிவிவரம் காட்டுகிறது. நிர்வாகத்தில் ஒரு ஜில்லாவின் ஜனத் தொகை மிகவும் அதிகமாகவும் இன்னொரு ஜில்லா குறைவாகவும் இருப்பதன் காரணமாக பல்வேறு நிர்வாகச் சங்கடங்கள் உண்டாகின்றன. நிலப்பரப்பை எடுத்துக்கொண்டாலும் இப்படியே ஒரு மாவட்டம் மிக அதிகமான நிலப்பரப்பையும், இன்னொரு மாவட்டம் குறைவான நிலப்



பரப்பையும் உடையதாக அமைந்திருக்கிறது. மாநிலத்தில் உள்ள 14 மாவட்டங்களையும் எடுத்துக்கொண்டால் 3,595 சதுர மைல் சராசரி பரப்பு வருகிறது. ஜனத்தொகை சராசரி 26,63,921 வருகிறது. இந்தப் பதினான்கு மாவட்டங்களை 20 மாவட்டங்கள் என்று பிரித்து சராசரி சதுர மைல் 2,500க்கு மேல் போகாமலும், ஜனத்தொகை 18, 20 லட்சத்திற்குள்ளும் அமையும்படியான ஏற்பாட்டைச் செய்வது நிர்வாகத்தைச் செம்மை படுத்த உதவக்கூடும். அதேபோல் மாவட்ட அதிகாரிக்கு அடுத்தாற் போல தாலுக்கா மட்ட அதிகாரி இருந்தால் போதும். மத்தியில் இருக்கிற ஆர். டி. ஓ அமைப்பு உண்மையில் தேவையில்லை. எப்படி அரசாங்கம் மாவட்ட கலெக்டருக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இருக்கிற ரெவின்யூ போர்டை எடுத்துவிடலாம் என்று யோசிக்கிறதோ அதுபோலவே கீழே மாவட்ட அதிகாரிக்கும் தாலுகா அதிகாரிக்கும் நடுவில் உள்ள ஆர். டி. ஓ. அமைப்பை எடுத்துவிடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் அடுத்தாற்போல இன்றைக்கு அடிமட்டத்தில் இருக்கிற கிராம அதிகாரிகளின் நிலையைப் பார்க்கிறபோது வேதனை உண்டாகும். ஆயிரக்கணக்கான பேர்கள் 28 ரூபாய், 34 ரூபாய் சம்பளத்தில் இருக் கிறார்கள். இந்தக் காலத்திற்கு இது பொருந்துமா என்று பார்க்க வேண்டும். தலையாரி, வெட்டியான் என்ற முறையில் 28 ரூபாயில் 26 ஆயிரம் சொச்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அடுத்து 34 ரூபாய், 36 ரூபாய் என்று சம்பளம் வாங்குவோர்களும் 25,000 பேர்கள் இருக்கின்றனர். இந்த நிலைமை இருந்தால் ஏன் ஊழல் செய்யமாட்டார்கள், ஏன் லஞ்சம் வாங்கமாட்டார்கள்? நாம் எப்படி அவர்கள்மேல் குற்றம்சாட்டுவது, சரியாகக் கடமையைச் செய்யவில்லை என்பது? இன்னும் ஒரு அடிப்படையான விஷயம். கிராமங்களிலே இருக்கிற ரிக்கார்டுகளைப் பொறுத்தவரையில் அவை பழைய காலத்திலிருந்து உருவாக்கப்பட்டவை. அவற்றைக் கண்டுபிடிப்பது என்று சொன்னால் பெரிய எக்ஸ்பர்ட் சென்றால்கூட கண்டுபிடிக்க கஷ்டமாக இருக்கிறது. எனவே இருக்கிற ரிக்கார்டுகளை மாற்றியமைக்கவேண்டியது அவசியமாகும்.

என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு விஷயம் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி யிலே மேட்டூர் அணையைக் கட்டிய காரணத்தாலே மராமத்து இலாக்கா நிலங்கள் மிகுதியாக இருக்கின்றன. அவற்றை ஜனங்களுக்கு வீடு கட்டு வதற்காகவும், விவசாயம் செய்வதற்காகவும் கொடுக்கவேண்டுமென்று 1954–இல் ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டு, பிறகு அதற்காக 1964-ல் ஸ்பெஷல் ஆபீஸர் போடப்பட்டு இதுவரை 3,000 விண்ணப்பங்கள் வந்தும் கூட அவை எல்லாம் பெண்டிங் ஆக இருக்கின்றன. எனவே ஸ்பெஷல் ஆபீஸர் போட்டு ரெவின்யூ டிபார்ட்மெண்ட் அளித்து இருக்கிற நிலங்களை விரைவிலே பைசல் செய்வதற்கு—புறம்போக்கு நிலங்கள் எல்லாம்கூட இருக்கின்றன, பெரிய நம்பரிலே இருந்துகொண்டிருக்கிறது. ஆயிரம், 2 ஆயிரம் ஏக்கர் என்ற அளவிலே இருக்கின்றன—அவற்றையெல்லாம் சப்டிவிஷன் செய்து ஜனங்களுக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இன்னும் குறிப்பாக சில விஷயங்கள் பேசுவதற்கு இருந்தாலும் நேரம் இல்லாததால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கொளத்தூர் கோதண்டம்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மாவட்ட நிர் வாகமும் பலவகை ஊதியமும் என்ற தலைப்பின்கீழ் உள்ள மானியத்தினை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். இன்றைய தினம் எதிர்க்கட்சியிலிருந்து கொண்டிருக்கின்ற அருமை நண்பர்களின் கவனத்திற்கு 1966-லே காங்கிரஸ் கட்சி உறுப் பினராக இருந்த அனந்தநாயகி அவர்கள் இந்த ஆட்சி யிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பொதுமக்களாலே

பார்க்க முடியவில்லை, பொதுமக்களாலே [illegible] உறுப்பினர்களாலேகூட பார்க்கமுடியவில்லை [illegible] மன்ற இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே மாவட்ட ஆட்சித் தலைவரையும், மாவட்ட ஆட்சி நிர்வாகத்தைப் பொறுப்பேற்றிருக்கிற அத்தனை அதிகாரி களையும் மக்களுடைய தொண்டர்களாக, மக்களுக்குச் சேவை செய்ய வந்திருக்கிறோம் என்ற நிலையிலே பார்க்கிறோம், இப்படிப்பட்ட நிலைமையை அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்ற பாராட்டைக் தெரிவிக்கின்ற நேரத்திலே தொடர்ந்து இந்த அரசு நல்ல பல பணிகளைச் செய்யவேண்டு மென்று வேண்டுகோள் விடுத்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட ஆட்சிப் பொறுப் பையேற்று இருக்கின்ற அதிகாரிகள் இளைஞர்களாக இருக்கவேண்டு மென்று பேறிஞர் மறைந்த மாமேதை அண்ணா அவர்கள் சொன்னார் கள். அப்படிச் சொல்லியதற்கேற்ப இன்றைக்கு இளைஞர்களாக அவர்கள் இருப்பதால் மாவட்ட ஆட்சி நிர்வாகம் சிறப்பாக இருக்கிறது. 1967-ஆம் ஆண்டிலே நான் இந்த மன்றத்திலே பேசுகின்றபொழுது என்னுடைய தொகுதியிலே பட்டாக்கள் வழங்கப்படவேண்டிய இடங்கள் பல இருக் கின்றன என்று கூறினேன். முன்பிருந்த அரசாங்கம் 1965–66-லே 20 பட்டாக்கள், 30 பட்டாக்கள் என்ற அளவிலேதான் வழங்கிக்கொண் டிருந்தார்கள். அந்த நிலைமையை மாற்றி இப்பொழுது 1967-லே 200 பட்டாக்களுக்கும் மேற்பட்ட அளவிலே வழங்கப்பட்டிருக்கின்றன என்றால் அந்த அளவுக்கு மாவட்ட நிர்வாகம் நல்ல வகையில் பணியாற்றி வருகிறது என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

மாவட்ட அபிவிருத்திக் குழுவினைப்பற்றிச் சில பல கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாவட்ட அபிவிருத்திக் குழுவிலே சில சீர்திருத் தங்களைச் செய்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்தான் அதனுடைய தலைமைப் பொறுப்பையேற்று நடத்துகிறார். அதற்கு நான்—அபிஷியல், உத்தியோகச் சார்பற்ற ஒருவர் தலைவராக இருக்கவேண்டுமென்ற கருத்தையும் நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். அதோடு அங்கே வடிக்கப்படுகின்ற தீர்மானங் கள் ஏட்டளவிலே நின்றுவிடுகின்றன. சட்டமன்றத்திலே செய்யப்படுகின்ற காரியங்கள் உடனடியாகச் செயல்படுத்தக்கூடிய நிலைமை இருக்கின்ற பொழுது அந்த மன்றத்திலே செய்யப்படுகின்ற முடிவுகளும் உடனே நிறைவேற்றப்படவேண்டுமென்றும் அதற்கான அதிகாரம் தரப்பட வேண்டும் என்றும், அந்த மன்றக் கூட்டம் ஆரம்பிக்கப்படுகின்ற நேரத்தில் முதலில் கேள்வி நேரம் ஒதுக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றத் துறைகளிலும் நல்ல பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக் கின்றன. ஊராட்சி ஒன்றியங்களில் சில துறைகளைப் பொறுத்தவரையில் தொடர்புகள், அதாவது அரிசன நலத்துறை, நில ஆர்ஜிதத் துறை, சிவில் சப்ளைஸ் துறை போன்றவை தாலுகாத் தலைமை அலுவலகத் திடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் துறைகளையும் ஊராட்சி ஒன்றியத் தோடு இணைத்து அங்கேயுள்ள பி. டி. ஓ.வுக்கு நல்ல அதிகாரம் கொடுத்து, இன்னும் வேண்டுமானால் பி.டி.ஒக்களை கெஜட் பதிவுள்ள அதிகாரிகளாக ஆக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்வதின் மூலம் கிராமத்திலே உள்ள மக்கள் தாலுகா அளவுக்குச் செல்லவேண்டிய நிலைமை இல்லாமல் தங்களுக்கு வேண்டிய காரியங்களை யூனியன் நிலையிலேயே முடித்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எந்த ஒரு திட்டத்தைத் தீட்டவேண்டுமானாலும் பஞ்சாயத்து யூனியன் களிலே செய்யப்படவேண்டிய காரியங்களுக்காக ஆர். டி. ஓக்களிடமிருந்து அனுமதி பெற்றுத்தான் செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆர். டி. ஓ.க்களுக்குப் பல பொறுப்புக்கள் இருக்கின்ற காரணத்தினாலே ஊராட்சி



ஒன்றியங்களைப் பொறுத்தவரையிலே ஒரு தனி ஆர். டி. ஓ. போடவேண்டும். அடுத்தபடியாக என்னுடைய மாவட்டத்தைப்பற்றி நான் வற்புறுத்த வேண்டியதில்லை, எல்லோரும் அறிவார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதன் மூலம் நல்ல பல நன்மைகள் உருவாகி மக்களுக்கு அதிக வசதிகள் ஏற்படும் என்பதைக் கூறிக்கொண்டு ஜமாபந்தி முறையை ஒழித்து, ரெவின்யூ போர்டு மூடப்படும் என்ற வாக்குறுதியைக் கொடுத்திருப்பதை மக்கள் வரவேற்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. க. ர. நல்லசிவன் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த சபையிலே மாவட்டங்களைப் பிரிக்கவேண்டுமென்று பல அங்கத்தினர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். நானும் அதை ஆதரிக்கிறேன். கோயம் புத்தூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சுமார் 80 மைல் 90 மைல் சென்று மாவட்டத் தலைநகரை அடையக்கூடிய நிலைமை எல்லா இடங்களிலிருந்தும் இருக்கிறது இப்படிப்பட்ட நிலைமை பல மாவட்டங்களில் ஏற்பட்டு ஒரு பெரிய தொல்லையாக இருக்கிறது. விவசாய மக்கள் தங்களுடைய பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு மாவட்டத் தலைநகருக்கு வரவேண்டுமென்பது பெரிய தொல்லையாக இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு முன்பு இருந்த சர்க்காரும்சரி, இந்த சர்க்காரும் சரி, இதிலே கருத்து வேறுபாடு இல்லை. இதைச் செய்வதிலேதான் காலதாமதம் இருக்கிறது. இதிலே செலவு அதிகம் ஆகும் என்றாலும் சிக்கனமாகப் பிரிப்பதற்கு முயற்சிகள் விரைவாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் பழையபோக்குதான் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. வேகமாகச் செல்லக்கூடிய போக்கு இல்லை. இதை மாற்றி விரைவிலே ஜனங்களுக்கு நன்மைகள் செய்வதற்கு வழிவகை காண வேண்டும்.

இந்து அறநிலையப் பாதுகாப்பு சம்பந்தமாக இரண்டொரு வார்த்தை களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சுமார் 15 லட்சம் ஏக்கர் நிலம் இந்த கோயில், மடம் இவற்றிற்குச் சொந்தமாக இருக்கின்றன. அவற்றிலிருந்து வரக்கூடிய வருமானம் நல்ல முறையிலே செலவு செய்யப்படுகிறது என்று சொல்ல முடியாது. இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். புதிய சர்க்கார் ஒருகால் நாம் கோயில் விவகாரத்தில் தலையிட்டால் பாதிக்கக்கூடிய சூழ்நிலை வருமோ என்ற அச்சத்தோடு இருக்கிறார்கள் என்ற நிலைமையை நான் ஒத்துக் கொள்கிறேன். பக்தர்களுக்கு விரோதிகள் என்று யாரும் சொல்லமாட் டார்கள். இந்த நேரத்திலே விவேகாநந்தர் சொன்னது எனக்கு ஞாபகம் வருகிறது. பாடுபடக்கூடிய ஏழைகளின் கரங்களில்தான் ஆண்டவன் இருக்கிறார் என்று சொன்னார். எனவே அவற்றிலிருந்து வருகின்ற வருமானத்தை ஒழுங்காகப் பெறக்கூடிய நிலைமையையும் நாம் ஏற்படுத்த வேண்டும். நாம் எந்த முறையிலே செலவு செய்கிறோமோ அந்த முறையையும் நாம் கவனிக்க வேண்டும். மதத்தையும், ஒழுங் கையும், பண்பாட்டையும் வளர்ப்பதற்கு எந்த அளவுக்கு அதைப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்திக்கொண்டு என்னுடைய சக உறுப்பினர் ஒருவர் பேசியதைப் போன்று அரிசனங் களின் நலனுக்காக என்று ஒரு தொகையை அதிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்.

நான் எங்கோ ஓர் இடத்திலே நம்முடைய அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் பேசியதாக பத்திரிகையிலே பார்த்தேன். அதிகப்படியாக வருமானத்தைப் பெறுவதற்கு முயற்சிக்கப்படும் என்று சொல்லியிருக் கிறார்கள். அப்படி அதிகப்படியாகப் பெறுகின்றபொழுது விவசாயிகளைக் கசக்கிப் பிழிந்து வாங்கக்கூடிய நிலைமையில் வருமானம் இருக்க வேண்டுமென்ற முறை இருக்கக்கூடாது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. க. ர. நல்லசிவன்] [1969 மார்ச் 20

அறநிலையப் பாதுகாப்பு இலாகாவைப் பொறுத்தவரை அதிலே நிறைய ஊழல்கள் இருக்கின்றன. நேரம் இல்லாததால் அதைப் பற்றி விளக்க வில்லை. இந்தச் சர்க்கார் நல்ல முறையிலே அதிலே கவனம் செலுத்தி தங்கள் மீது குற்றச்சாட்டு வருமோ என்று அஞ்சாமல் சரியான நிர்வா கத்தை ஏற்படுத்தும் வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

கோவிலில் வேலை செய்யக்கூடிய பூசாரிகள், ஊழியர்களுக்கு இனும் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் நிலம் கிடைக்க வழிவகைகள் இல்லை. அவர்கள் 5 ரூபாய், 10 ரூபாய், 15 ரூபாய் என்ற அளவுக்குத்தான் சம்பளம் பெறக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இரண்டு ஏக்கர் முதல் ஐந்து ஏக்கர் வரை கிடைக்கக்கூடிய வகையில் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இது ரொம்ப டிரை சப்ஜெக்ட். லஞ்சம் பெருகிக்கொண்டிருக்கிறது, அப்படி இப்படி என்று பேசலாம். மகாத்மா காந்தியே சர்க்கார் நடத்தினாலும் இது கொஞ்சம் இருக்கத்தான் செய்யும். அப்படிப் பேசுவது சாதாரண மாகப் பேசப்படுகின்ற பேச்சே தவிர அதிலே உப்பு சப்பு இருக்கிறது என்று சொல்ல முடியாது.

ரெவின்யூ இலாகா இந்த நாட்டுக்கு ஒரு முதுகெலும்பு. வெள்ளைக் காரன் இந்த நாட்டில் விட்டுப்போனதில் ரெவின்யூ இலாகா ஒரு அபூர்வமான சொத்து. ரெவின்யூ போர்டை ஒழித்துவிட்டோம், ஜமா பந்தியை ஒழித்துவிட்டோம் என்றெல்லாம் சொன்னார்கள். அதைச் செய்ததோடு இருக்கட்டும். அந்தச் சீர்திருத்தம் இந்தச் சீர்திருத்தம் என்று சொல்லி ஆணிவேரை எடுத்துவிடாதீர்கள். இன்றைக்கு எம். எல். ஏ. ஒரு ஆணிவேர் போல் இருக்கும் நிலை இருக்கிறது. புருஷன் பெண் டாட்டி சண்டையிலிருந்து பிரச்சினைகளைச் சொல்ல வந்துவிடுகிறார்கள். டிஸ்ட்ரிக்ட் முன்சீப் வேலைக்கு உங்களுடைய சிபாரிசு வேண்டுமென்று ஒருவர் என்னிடம் வந்து கேட்டார். டிஸ்ட்ரிக்ட் முன்சீப்புக்கும் எம். எல். ஏ.க்கும் என்ன ஸ்நான பிராப்தி? எம். எல். ஏ.வுக்கு எந்த அளவுக்கு வேலைப் பளுவும், துன்பங்களும் இருக்கின்றனவோ அந்த மாதிரிதான் ரெவின்யூ இலாகாவும் சிக்கிக்கொண்டிருக்கிறது.

சில பேர் பேசும்போது ஆர். டி. ஓ.வை நீக்கிவிடலாம் என்று பேசினார்கள். அப்படியெல்லாம் நீக்கிக்கொண்டே போனால் நிர்வாகம் சீரழிந்து சர்க்காருக்குக் கெட்ட பெயர் வரும். ஆகவே அந்த இலாகாவைச் சீர்திருத்தம் செய்யும்போது ஜாக்கிரதையாக அணுக வேண்டும். இந்தச் சர்க்கார் வந்தவுடனே ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கக்கூடிய பிளானிங் பி. ஏ.வை 'கட்' செய்துவிட்டார்கள். ஜில்லா நிர்வாக அமைப்பு திட்டத்தின் அடிப்படையில் இருந்துகொண்டிருக்கின்ற நிலையில் இரண்டு பி. ஏ.க்கள் இருந்தார்கள். அதிலே ஒருவரை எடுத்து விட்டதில் இருந்து வேலைப் பளு மிகவும் அதிகமாகியிருக்கிறது, அவர் களால் சமாளிக்க முடியவில்லை. செகரடேரியட்டில் ஒரு அசிஸ்டன்ட் செகரடரிக்கு ஒரு நாளைக்கு 75 பைல்கள் வரும் என்றால் அங்கே பி. ஏ.வுக்கு ஒரு நாளைக்கு 350, 400 பைல்கள் வரும். அந்த நிலையில் எப்படி வேலை திறமையாக நடக்க முடியும்? ஆகவே, பழைய முறையில் இரண்டு பி. ஏ.க்களை வைத்துக்கொள்வது என்று மாற்ற முடியுமா என்று பார்க்க வேண்டும்.

பஞ்சாயத்து வரி வசூல் பொறுப்பு ரெவின்யூ இலாகாவிடம் கொடுக் கப்பட்டிருக்கிறது. அவர்களுக்குள்ள அந்த வேலைப் பளுவை நீக்கி மறுபடியும் பஞ்சாயத்து யூனியன்களிடமே அந்த வரிவசூல் பொறுப்பைக் கொடுக்க வேண்டும். ரெவின்யூ இலாகாவில் உள்ளவர்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் சொல்லு கிறேன். ஓட்டுப் பிடிக்க நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவருகிறோம்.



1969 மார்ச் 20] [திரு. டி. எஸ். ஆதிமூலம்]

அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னால் அதற்காக ரெவின்யூ இலாகாவினர், அந்த அதிகாரிகள் பாடுபட்டு பல புள்ளிவிவரங்களைச் சேகரிக்க வேண்டியிருக்கிறது. அதை அமல் நடத் தும்போது எம வேதனைப்பட வேண்டியிருக்கிறது. ப்ரொக்யூர்மெண்ட் நிலையும் அப்படித்தான். ப்ரொக்யூர்மெண்ட் என்று ஒன்று இருக் கும்வரை அவர்கள்தான் பொறுப்பாக நடத்த முடியும். அதற்குத் தகுந்த ஏஜென்சி வேறு கிடையாது. ஆனால் ப்ரொக்யூர்மெண்ட்டில் ஈடுபட்டிருக்கும் ரெவின்யூ அபிஷியல்ஸ் போலீஸ் அபிஷியலைச விட ஒரு படி அதிகமாகக் கெடுபிடி செய்கிறார்கள். அவர்களுக்கு அப்படிப்பட்ட துன்பமான வேலைகள் எல்லாம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்பதற்காகத்தான் சொல்லு கிறேன். ரெவின்யூ இலாகா அதிகாரிகளுடைய அந்தஸ்தை, தாசில்தார் களுடைய அந்தஸ்தைக் கூட்ட சர்க்கார் முன்வரவேண்டும். இருக்கிற தாசில்தார் அதிகாரத்தைக் குறைக்கலாமா, சிக்கனம் பண்ணலாமா என்ற முறையில் இந்தச் சர்க்கார் அந்த இலாகாவில் வைத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டம் நடக்கிறது. ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை என்ற மாதிரி அது நடக்கிறது. ஸ்டாச்சுடரி பாடியாக, பழைய ஜில்லா போர்டு மாதிரி ஆக்கவேண்டும். தேர்தல் வேண்டாம். தேர்தலில் ஆளைத் தூக்கிக்கொண்டுபோகிற காலம் இது. கொலை கூட நடக்கிறது. தற்போது பஞ்சாயத்து போர்டு தேர்தலிலேயே கொலை நடக்கிறது. ஜில்லா கலெக்டரே தலைவராக இருப்பதைப் பற்றி ஒன்றும் இல்லை. அந்தக் கவுன்சிலை அதிகாரபூர்வமான 'பாடி' ஆக ஆக்கவேண்டும்.

எங்கள் ஜில்லா கலெக்டரைத் திடீரென்று மாற்றிவிட்டார்கள். முதன் மந்திரி அவர்கள் ஏதோ காரணத்தினால்தான் மாற்றியிருப் பார்கள். இருந்தாலும் பொதுவாக ஜில்லா கலெக்டர்களை அடிக்கடி மாற்றக்கூடாது. அந்த ஜில்லாவைப் பற்றிய நிலைமைகளைத் தெரிந்து கொள்ளவே ஒரு வருடம் ஆகிவிடும். ஆகவே, ஒரு ஜில்லாவில் மூன்று வருடமாவது ஒருவர் இருந்தால்தான் அந்த ஜில்லாவுக்கான காரியங் களைத் திறமையாகச் செய்ய முடியும்.

அறநிலையம் இதிலே வருகிறது. அதைப் பற்றி அதிகம் பேசி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. அது நம்முடைய ராஜ்யத்தில் நல்ல சட்டத்தைக் கொண்டு நல்ல முறையில்தான் நடந்துகொண்டிருக்கின்றது. நீங்கள் நிறையக் கோவில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்த வேண்டும். சர்க்காருக்கு நல்ல பெயர் கிடைக்கும். அதற்கு வேண்டிய கவனத்தைச் செலுத்த அதிகப்பணம் ஒதுக்கி கமிஷனருக்கு அதிகாரத்தையும் கொடுக்க வேண்டும்.

டெனண்ட்ஸ் ப்ரொட்டக்ஷன் ஆக்ட் போன்ற பல சட்டங்களை ஓட்டுக்காக போட்டுக்கொண்டிருக்கிறோம். அது கோவில் நிலங்களுக்கு அப்ளிகபிள் ஆகி அநேக கோயில்களில் ஆறு கால பூஜை ஒன்றரைக் கால பூஜையாகி விட்டது. பொங்கல், புளியோதரை நிறைய சாப்பிட்டு வந்த சாமிகள் எல்லாம் பட்டினி கிடக்கின்றன, குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றைப் போடும்போது அதிலே அறநிலையங்கள் சம்பந்தப்பட்ட வரையில் விதிவிலக்கு கொடுக்க வேண்டும். மடாதிபதிகளைப் பற்றி யெல்லாம் எனக்குக் கவலை இல்லை.

கூடுமானவரையில் தேவஸ்தான நிலங்கள் சம்பந்தப்பட்டவரையில் பிற்பகல்
பயிர் வைப்பவர்கள் பாக்கிகளை ஒழுங்காகக் கொடுத்துவிட வேண்டும். 2-00.
விவசாயிகளுக்காக, ஏழைகளுக்காக அவர்களுக்கு அனுகூலம் செய்வ தற்காக சட்டங்கள் போட்டாலும் கோவில் நிலங்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவைகளை பாதிக்காத நிலையில் சட்டங்கள் போடவேண்டும்.

இதற்கு முன்னால் உள்ள பாதிப்பான சட்டங்களை அகற்றுவதற்கும் சர்க்கார் சீர்திருத்தமான அமெண்ட்மெண்ட்களைக் கொண்டு வந்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நேரம் இல்லாததால் இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. விநாயகம்:** மன்றத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட ஆட்சியைப் பற்றி நான் ஒரு சில கருத்துக்களை, எனக்குத் தோன்றியதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எனக்குக் கொஞ்சம் அனுபவம் இருக்கிறது. அதைப் பற்றிச் சொன்னதற்குப் பிறகு நான் வசிக்கிற சென்னைக்கு வருகிறேன். செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைமை அலுவலகம் சைதையில் இருந்தது. அதை காஞ்சிபுரத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். காரணம் என்னவாயிருப்பினும் அதைப் பற்றி இப்போது ஆராய்வதில் அர்த்தமில்லை. அங்கு போன பிறகு என்ன அனுபவங்கள் ஏற்படுகின்றன என்பதைப் பற்றி அதிகாரிகள் சொன்னால் போதாது, பொது மக்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள் சொல்வதைக் கேட்க வேண்டும். அம்மாவட்டத்தின் தலைநகரை மத்திய பிரதேசத்தில், சென்ட்ரல் பிளேஸில், வைத்திருந்தால் தவறில்லை. முன்பு அது ஈஸ்டெர்ன் எண்ட்-ல் இருந்தது, இப்போது அது இருப்பது வெஸ்டேர்ன் எண்ட்-ல். ஆகவே முன்பிருந்த இடத்திலேயே இருந்திருந்தால் என்ன? செய்ததை நல்லவிதமாகச் செய்திருக்க வேண்டும். அதை பூந்தமல்லி அல்லது ஸ்ரீபெரும்புதூரில், மத்திய பிரதேசத்தில் வைத்திருந்தால் பரவாயில்லை. அதைப் பற்றி இப்போது ஆராய்வதில் பலன் இல்லை. (From Delhi to Daulatabad and from Daulatabad to Delhi) அந்த முடிவை எடுப்பதற்கு முன்பு உறுப்பினர்களின் கருத்துக்கள், மக்களின் வசதிகள் இவற்றையெல்லாம் கவனித்துப் பார்த்து முடிவெடுத்திருந்தால் நல்லதொரு முடிவாக அது இருந்திருக்கும்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு சில நல்ல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. முன்பு கலெக்டர் ஆபீஸுக்கு போனால் தென்றால் காலை 10 மணிக்குப் போய் அங்குள்ள புளியமரத்தடியில் படுத்து தூங்கி விட்டு எழுந்தால், ஒன்று கலெக்டர் வந்து விட்டுப்போய்விட்டார் என்று சொல்லுவார்கள், அல்லது கலெக்டர் வரவில்லை என்று சொல்வார்கள். ஆக, ஐந்து மணி வரையில் இருந்துவிட்டு ஒன்றும் நடக்கவில்லையே என்றுதான் திரும்ப வேண்டியிருக்கும். இப்போது ஓரளவு அதிகாரிகளை கொஞ்சம் இளமையாக இருப்பவர்களைப் போட்டு நிர்வாகம் நடத்துவதில் கொஞ்சம் நல்ல மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அன்று அவர்கள் கூடச் சொன்னார்கள். Most of my Collectors are just like college boy என்று. ஆம். கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் போல்தான் இன்றையதினம் கலெக்டர்கள் இருக்கிறார்கள். அப்படி இளைஞர்களைப் போட்டிருப்பதால் அவர்கள் மக்களோடு தொடர்புகொண்டு மக்களின் குறைகளைத் தீர்க்கவேண்டிய முயற்சிகள் எடுக்கிறார்கள்.

த்ரீ பாயிண்ட் ப்ரோகிராம் எங்கள் மாவட்டத்தில் அமலாக்கப்பட்டது, ஒன்று, எங்கள் குறைகளைச் சொல்வது, இரண்டு, அவை பற்றி ஆராய கிராமங்களுக்கு அதிகாரிகளை அனுப்புவது. மூன்றாவது, அதைப் பற்றி முடிவு எடுப்பது. நல்லதோ கெட்டதோ ஆண்டவனுக்குத்தான் தெரியும். அப்படி ஒரு முயற்சி எடுத்திருப்பது நல்லது. இதே முயற்சியை எல்லா மாவட்டங்களிலும் அனுசரிக்க வேண்டும், எங்கள் மாவட்டத்தில் இந்த மாறுதலைக் கொண்டு வந்தார்கள். ஒரு மனு போட்டால் அது எந்த மனுவாக இருந்தாலும் சரி, நல்லதோ கெட்டதோ அதற்குப் பதில் வரவேண்டும், சாதாரண விஷயமாக இருந்தால் ஒரு மாதத்திற்குள் பதில் வரவேண்டும். ஆராய்ச்சி செய்து பல இடங்களுக்குப் போய் அபிப்ராயங்கள் எல்லாம் கேட்டு கடைசியில் முடிவு எடுக்க வேண்டும் என்றிருந்தால் அதற்கான பதில்கள் இரண்டு மாதங்களுக்குள் வரவேண்டும்



என்று அப்படிப்பட்ட ஒரு நியதி இருக்க வேண்டும். இப்போது மனுப் போட்டுவிட்டோம் என்ற திருப்தி இருக்கிறதே தவிர, அதனால் என்ன பலன் கிடைத்தது, லாபம் கிடைத்ததா அல்லது நஷ்டம் கிடைத்ததா என்று தெரியாத நிலைதான் இருக்கிறது. ஆகவே மனுப் போட்டவுடன் கலெக்டர் அவர்கள் என்ன செய்யவேண்டும். 'Party must be given a reply within a time-limit of 30 days from to-day' என்று ஏதாவது குறிப்பு போட்டு அப்படி வந்தால்தான் அதன் மீதான முடிவு தெரிய வரும். மனுவைப் போட்டுவிட்டு அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று தெரியாமல் இருப்பதினால் பலன் இல்லை. எவ்வளவுதான் எஃபிஷியண்ட் டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷன் வைத்திருந்தாலும் அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்பது பற்றிப் பொது மக்களுக்குத் தெரியவேண்டும். 'What action was taken on the petition?' என்று தெரியவேண்டும். எங்கள் மாவட்டத்தின் தலைமை அலுவலகம் சைதையில்இருந்தபோது எங்கள் மாவட்ட கலெக்டருக்கு உள்ள பெரும்பாலான வேலை மீனம்பாக்கம் ஏரோட்ரோமில் வருகிற வெளிநாட்டு அல்லது வடக்கேயிருந்து வருகிற வி. ஐ. பி.க்களை வரவேற்பதுதான். ஆறு வொர்கிங் டேஸில் ஐந்து வொர்கிங் டேஸ் மீனம்பாக்கம் ஏரோட்ரோமுக்குப் போக வேண்டிய வேலையில் சரியாகப் போய்விடும். போய் அவர்களுக்கு மாலை போட்டு வரவேற்க வேண்டும். இல்லை, மந்திரிகள் மாலை போட்டாலும் இவர்கள் பக்கத்தில் இருக்கவேண்டும். இப்படி அடிக்கடி ஏரோட்ரோமுக்குப் போய் வருவதால் அவர்கள் வேலைகள் கெட்டுவிடுகின்றன என்று நான் முன்பே இங்கு சொல்லியிருக்கிறேன். அந்தப் பணிக்கு இவர்களை ஆளாக்கக்கூடாது. அதற்கென்று தனியாக ஒரு லேயஸான் ஆபீஸர் இருக்க வேண்டும். குறிப்பாக, செங்கல்பட்டு மாவட்டத்திற்குத்தான் இந்தத் தொல்லை அதிகம். வெளிநாட்டவர்கள் இங்கு வரும்போது அவர்களை காஞ்சிபுரம், மகாபலிபுரம் இவற்றைப் பார்ப்பதற்காக அழைத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. அதற்காக கலெக்டரோ அல்லது டெபுடி கலெக்டரோ அல்லது கலெக்டர் பி.ஏ.-யோ போக வேண்டியிருக்கிறது. மகாபலிபுரத்திற்கு அடிக்கடி போய் பல வருடங்களாகக் காட்டிக் காட்டி. இதுதான் அது, அதுதான் இது என்று சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லவேண்டியிருக்கிறது.

Their services are lost to the public. இதனால் எங்களுக்கு ஒரு லாபமும் இல்லை. ஆகவே நான் சொல்வது என்னவென்றால், செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ரெவன்யூ இலாகா அதிகாரிகளை இந்த வேலைகளுக்கு எந்தக் காரணத்தையொட்டியும் பயன்படுத்தக்கூடாது. நம் மந்திரிகள் வரும்போதும் போகும்போதும் கூட அவர்கள் ஏரோட்ரோமுக்கு போக வேண்டியிருக்கிறது. நம் மந்திரிகள்தானே, அவர்கள் வருவார்கள், போவார்கள், அதற்குக்கூட போக வேண்டுமா என்று கேட்டேன். 'That is an incumbent duty cast upon me' என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆகவே, தனி ஒரு லேயஸான் ஆபீசரைப் போடவேண்டும் இதற்காக.

அடுத்தபடியாக, மதராஸ்—செங்கல்பட்டு டிஸ்ட்ரிக்ட் கெஸட் என்று போடுகிறார்கள். அதில் என்ன இருக்கிறது? அதை யார் வாங்கிப் பார்க்கிறார்கள். Most uninformative Gazette on the face of the earth. அது மக்களுக்கு என்ன முறையில் பயன்படுகிறது என்று கேட்கிறேன். நீதானடா கொண்டுவந்தாய் என்று முதல் அமைச்சர் அவர்கள் சிரிக்கிறார்கள். நாங்கள் கொண்டு வந்தது பயனற்றது என்றால் நீங்கள் அதை ஏன் பயன் உள்ளதாக ஆக்கவில்லை என்று கேட்கிறேன். நான் அதைப் பற்றி ஞாபகப்படுத்துவதற்கு முன் அதைப் பயன் உள்ளதாகச் செய்திருக்க வேண்டும். டிஸ்ட்ரிக்ட் கெஸட் என்றால், It must be helpful to the people. இந்த ஜில்லா பற்றியுள்ள இன்பர்மேஷன் வரவேண்டும். Lake-bunding anddeepening of wells etc, எந்த ஊர்களில் எவ்வளவு காம்பு நிலம் இருக்கிறது, எவ்வளவு

[திரு. கே. விநாயகம்] [1969 மார்ச் 20

நிலம் சாகுபடியில் இருக்கிறது. எவ்வளவு பேர்கள் நிலத்திற்காக, மனு போட்டார்கள். எவ்வளவு எவ்வளவு பேர்களுக்கு ஜாரி செய்து கொடுக்கப்பட்டது என்பது போன்ற இன்பர்மேஷன் வரவேண்டும். இந்த இந்த ஊர்களில் இவ்வளவு, இவ்வளவு நிலம் இருக்கிறது. இன்னின்ன நிலங்களின் பட்டாதாரர்கள் இவர் இவர்கள், இந்த ஊரில் இவ்வளவு புதிய கிணறுகள் எடுத்தோம் என்பது போன்ற நல்ல, நல்ல காரியங்கள் பற்றி கெஜட்டில் வரவேண்டும். நான் பார்த் திருக்கிறேன். மதராஸ்—செங்கல்பட்டு டிஸ்ட்ரிக்ட் கெஸட் நான்கு மாதங் களுக்கு ஒரு தடவை வருகிறது, அப்படி வந்தாலும் அதில் ஜனங்களின் லாபத்திற்கு ஒரு இன்பர்மேஷனும் இல்லை. இருபது வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு விஷயத்தைப் பற்றிப் போட்டு. "Action is still being pursued" என்று கடைசியில் வருகிறது. ஆகவே இதைத் திருத்தியமைக்கவேண்டும். இதுபற்றி எங்கள் மாவட்ட கலக்டர் அவர்களிடம் சொன்னேன். இந்த டிஸ்ட்ரிக்ட் கெஸட் கொஞ்சம் பயன் உள்ளதாக ஆகவேண்டுமென்று கூறினேன். அவர்கள் யோசித்துக் கொண்டிருந் தார்கள். ஆனால் அதற்குள் அவரை மாற்றிவிட்டார்கள். Administrative convenience என்பதினாலோ அல்லது On his personal request ஆனாலோ மாற்றிவிட்டார்கள். அது பயன் உள்ளதாக ஆக்கப்பட வேண்டும். ஃபோர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜெட்டைக் கூட நாங்கள் பார்ப்பதில்லை. எங்களைப் பாதிக்கும் விஷயங்கள் அதில் வரும்.

Refer to the fort st. George Gazette என்று வரும். எங்கள் பெயர்கள் இருக்கும், அதிலிருந்து எடுத்து விட்டோம், இதிலிருந்து எடுத்து விட்டோம் என்று வரும். ஆக எங்களை பாதிக்கும் விஷயங்கள் பற்றிக் கூட தெரிவதில்லை.

அடுத்தபடியாக, இந்த டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷனில் ஒரு புது மாறுதல் ஏற்படவேண்டும். Village must be made a unit இதை நான் பல ஆண்டுகளாகச் சொல்லி வருகிறேன். நான் ஒரு விவசாயி. வில்லேஜ் ஆபீசரிடம் போய் எவ்வளவு பாக்கியிருக்கிறது என்று சொல்லுங்கள் என்று கேட்டால் அவர்கள் ஞாபகத்தில் சொல்கிறாரா அல்லது அடங்கலைப் பார்த்துச் சொல்கிறாரா தெரியாது. 7½ ரூபாய் கட்டிவிடுங்கள் என்று கூறுகிறார்கள். அந்த ரூபாயை வரப்பின் மேல் வாங்கிக்கொண்டு போகிறார், ரசீது கிடையாது, அவர் தகராறு எதிலாவது மாட்டிக்கொண்டால் ரசீது இல்லை என்பது தெரியவரும். வில்லேஜ் ஆபீஸர் எஸ். எஸ். எல். ஸி. யாவது படித்தவராகயிருக்க வேண்டும் என்று சொல்லக் காரணம் இதுதான். அவர் அரசாங்க உத்தியோகஸ்தராக இருக்க வேண்டும். இப்போது 'க்வாஸி கவர்ன்மெண்ட் சர்வீஸ்', போல் இருக்கிறது. சரியான தகவலும் கொடுப்பதில்லை.

ஆகையால், ஒரு கிராமத்திலே நிர்வாகம் நல்லமுறையில் நடக்க வேண்டுமென்றால், எத்தனை கோழிகள் இருக்கின்றன என்று கேட்டால் கரெக்ட் இன்பர்மேஷன் வரவேண்டும், எத்தனை மாடு இருக்கிறது என்று கேட்டால் சரியாகச் சொல்ல வேண்டும், எத்தனை கிணறுகள் இருக்கின்றன, எத்தனை ஏரிகள் மராமத்து செய்யப்பட்டிருக்கின்றன, எவ்வளவு புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன என்பதற்கெல்லாம் லேட்டஸ்ட் டெடெயில்ஸ் கொடுத்தால் மக்களுக்கு நன்மையாக இருக் கமே தவிர, நாம் உட்கார்ந்துவிட்டோம், மூன்று வருஷத்திற்குப் பிறகு யாரோ வருகிறார்கள், போகிறார்கள் என்று பார்ப்பது நல்லது இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாம் செய்வது மக்களுக்கு நல்லதாக இருக்க வேண்டும்.

டிஸ்ட்ரிக்ட் டெவலெப்மெண்ட் கவுன்சிலைப் பற்றிச் சொல்லிவிட் டார்கள், அட்வைசரி கமிட்டி மாதிரி இருக்கிறது என்று கான்ஸ்டிட்யூஷனில் அப்படிப் போட்டிருக்கிறது, ஆலோசனை சொல்வதற்கென்று.



1969 மார்ச் 20] [திரு. கே. விநாயகம்]

ஜமாபந்தியை 'ஆன்யுவல் தமாஷா' என்று சொன்னார்கள். அதைப் போலவே இரண்டு மாத தமாஷா மாதிரி இது இருக்கிறது. நாங்கள் போகிறோம், டீ. ஏ. வாங்குகிறோம், டீயைக் குடிக்கிறோம், வீட்டிற்கு வருவோம். என்ன தீர்மானம் போட்டோம். 'Progress made so far'. என்று அவராலும் சொல்ல முடியாது. கலெக்டரும் ஒரு மனிதர்தானே. என்ன Is he a Super Human being to deliver the goods straight away across the table. முடிகிறதா, இல்லை. ஆகவே நல்லது செய்ய வேண்டும். இது செங்கல்பட்டைப் பொறுத்தவரையில் Scrap the entire thing and then replace it by a sane legislation.

இப்பொழுது சென்னைக்கு வருகிறேன். சென்னை கலெக்டர் Figure head or administrative head. அவ்வளவுதான். எவ்வளவு திறமையானவர்களாக கலெக்டர்கள் இருந்தவர்கள். அவர்களைப் பயன்படுத்தவில்லை. ஜில்லாவிலே ஒரு கலெக்டர் என்றால் He is a small king with good powers. எவ்வளவு அதிகாரத்தையும் நல்லதாகவும் பயன்படுத்தலாம், தவறாகவும் பயன்படுத்த முடியும். எவ்வளவு அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோம்? சென்னை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், நம்முடைய கலெக்டருக்கு என்ன பவர் கொடுத்திருக்கிறோம் ?

He does not even come into contact with the people unless there is a fire which God forbid. எங்கேயாவது நெருப்புப் பற்றிக்கொண்டால் கலெக்டர் வருவது மாதிரி வைத்திருக்கிறோம். இது சீர்திருத்தம் அடைய வேண்டுமென்றால் சென்னை கலெக்டருக்கு அதிகப்படியான அதிகாரங்கள் தரவேண்டும். எப்படி என்பதைப் போக்கிலே சொல்லாமல் Concrete instance ஆகச் சொல்லுகிறேன். Cinemotograph Act. மாவட்டங்களிலே கலெக்டர்கள் நடைமுறைக்குக் கொண்டு வருவார்கள். அதை சென்னை கலெக்டருக்குத் தரக்கூடாதா? இவர் திறமையற்ற வரா? போலீஸ் அதிகாரிகள்தான் திறமைசாலியா? ஏன் அவர்களுக்குத் தரவேண்டும்? அப்படி வைத்தால் என்ன என்று யோசிக்க வேண்டும். எலெக்ஷன் ஓர்க்ஸை எடுத்துக்கொண்டால், சென்னை தேர்தல் வேலைகளையெல்லாம் கார்ப்பொரேஷன் அதிகாரிகளுக்குத்தான் தருகிறோம். அவர்கள் தப்பு பண்ணுகிறார்கள் என்று சொல்லவில்லை. **Collector is neglected. Collector is a figure head in the Madras City** and I do not know how many of you know who is the Collector of Madras. அதுமாதிரி. அதனால்தான் சொல்லுகிறேன். தெரியாது என்று சொல்லவில்லை. (குறுக்கீடு) வட இந்தியராக இருந்தால் மாற்றிவிட்டுத் தென்னிந்தியராகப் போட்டுக்கொள்ளுங்களேன். அதிக அதிகாரத்தைக் கொடுத்துப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு, இப்போது ' Diffusion of power '. யார் யாருக்குக் கொடுத்திருக்கிறோம். தேர்தல் வேலை கொடுக்கலாம். சிவில் சப்ளை ஒர்க்ஸ் தரலாம். இதுவரையில் கலெக்டரிடம்தான் விநியோகம் இருந்தது. திடீரென்று அதற்குத் தனியாக உத்தியோகஸ்தரைப் போட்டிருக்கிறார்கள். என்ன தவறு, எங்கே நடந்தது, எதற்காக மாற்றினார்கள்? Accommodation control. உத்தியோகஸ்தர்களுக்கும் நமக்கும் வீடு வாங்கித் தருவது. இந்த வேலையை அவர் செய்ததாகத் தெரியவில்லை. அதை ஏன் அவர் களுக்குத் தரக்கூடாது? அதையும் செய்ய முடியும். இன்னும் பல வேலைகள் இருக்கின்றன.

Arms act அவர்கள் பார்க்கிறார்கள். அதை ஏன் இவருக்குத் தரக்கூடாது? இப்பொழுதிருப்பவர் என்னைக் கேட்டு நான் சொன்னதாகநினைக்கக் கூடாது? The House is liable to come to that conclusion if I have to talk about some administrative reforms. அதுவல்ல நான் சொல்வது. இம்மாதிரி, Invidious distinction. வெளி மாவட்டங்களில் இருப்பவர் களுக்கு அதிக அதிகாரம் கொடுத்துவிட்டு, சென்னை மாவட்டக்

கலெக்டருக்கு மட்டும் அதிக அதிகாரம் கொடுக்காமல் வேலைக்கும் பயன்படுத்திக்கொள்ளாமல் இருப்பதைத்தான் சரியல்ல என்று சொன்னேன். பயனுள்ளதாகச் செய்யவேண்டும், இளைஞர்களைப்போட்டு, மக்களோடு தொடர்பு கொண்டு நன்மை செய்யும் அதிகாரிகளைப் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். வட இந்தியாவா, தென்னிந்தியாவா என்பது பற்றி பேச்சு அல்ல. அதை விட்டுவிட்டு, மக்களுக்குப் பயன்படும் மாதிரி ஜில்லா அதிகாரத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லி முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர்களே, இன்று மாவட்ட நிர்வாகம், பலவகையும் என்கின்ற தலைப்பில் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையின் மீது பல்வேறு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பிரதான எதிர்க்கட்சிக்கு இது பிரதானமாகத் தெரியாத காரணத்தாலோ என்னவோ, நல்ல வேளையாக நான்கு பேர்களாவது இந்த மானியக் கோரிக்கையின்பொழுது விவாதத்திலே கலந்துகொண்டமைக்காக நான் நன்றி பாராட்டுகிறேன்.

திரு. கே. விநாயகம்: சார், ஒரு விளக்கம் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் கட்சியைச் சேர்ந்த ஒரு அங்கத்தினர் புதுக்கோட்டை இளவரசருக்குத் திருமணம் இன்று. நாங்களெல்லாம்கூடப் போயிருக்க வேண்டும். உங்கள் அனுமதியில்லையே. தள்ளி வைத்து, விடுமுறை கொடுத்திருந்தால், முதலமைச்சர்கூடச் சேர்ந்து கோஷ்டியாகப்போயிருக்கலாம். அங்கத்தினர்கள் பலர் போயிருக்கலாம். மிஞ்சியிருக்கிறோமே நான்கு பேர், அதற்காக நன்றி செலுத்த வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதற்குத்தான் நன்றி செலுத்தினேன். நான் சொன்னதெல்லாம் காலையிலே வந்தவர்கள் இப்பொழுது இல்லையே என்பதுதான்.

இந்த மானியக்கோரிக்கை எவ்வளவு முக்கியமானது என்பதனையும், இதிலே பல்வேறு அம்சங்களை இணைத்துப் பேசவேண்டிய நிலைமையிருக்கிறது என்பதனையும் இதிலே தனித்தனிக் கோரிக்கைகளை, அம்சங்களை எடுத்து ஆராய வேண்டுமென்பதனையும் மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சி எப்படி நடைபெற வேண்டும், இதுவரை எப்படி நடந்தது என்பதனையெல்லாம் இங்கு உறுப்பினர்கள் வெகு தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். பிரிட்டிஷார் விட்டுப்போன நிர்வாக முறை அடிப்படையில் மாவட்டங்களிலே ஆட்சித் தலைவர்கள் கடந்த காலத்திலே செயல்பட்டு வந்தார்கள் என்றாலும் அதே ரீதியிலேதான் இந்த இருபதாண்டுக் காலத்திலே கூட அந்த நிலைமைகள் மாற்றியமைக்கப்படாமல் அந்தச் சூழ்நிலை வளர்ந்துகொண்டேயிருந்தது என்பதையும், புதிய அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு நன்கு ஆராய்ந்து, மாவட்டங்களிலே இருக்கின்ற கலெக்டர்கள், அவர்களுக்குக் கீழே பணிபுரிகின்ற ஏனைய அதிகாரிகளெல்லாம், அதிகாரிகள் என்கின்ற பெயரளவிலே இருக்க வேண்டுமே தவிர, மக்களுடைய தொண்டர்களாகயிருந்து மக்கள் அரசினை நடாத்திச் செல்லுகின்ற அந்தக் கடமை உணர்வோடு அவர்கள் பாடுபட வேண்டுமென்பதனை அரசு வலியுறுத்திக் கூறியது மாத்திரம் அல்ல, திட்டவட்டமாக அது செயல்பட வேண்டுமென்பதற்காக பல்வகைச் செயல் முறைகளையும் தீட்டி அந்த அளவிலே நிர்வாகம் நடைபெற்று வருகிறது.

மாவட்டக் கலெக்டர்கள், தமிழக அரசு ஏழை எளிய மக்களுடைய நடுத்தர மக்களுடைய நல்வாழ்வை மையமாக வைத்துக்கொண்டிருக்கும் அரசு என்கின்ற அளவில், இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகள் அத்தனைக்கும் தங்களால் இயன்ற நல்ல ஒத்துழைப்பினைத்





தந்திருக்கிறார்கள். இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில அதிகாரிகள் மீது தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டன. நான் அவற்றையெல்லாம் அறவே மறுத்திடவில்லை. இவை ஒரு பரந்த நாட்டில், ஒரு பரந்த மாநிலத்தில், பல்லாயிரக்கணக்கான அதிகாரிகள் இருந்து பணிபுரிகின்ற, பல்வேறு துறைகளைக் கொண்ட ஒரு ஆட்சியில் அங்குமிங்கும் சில தவறுகள் இருக்கக்கூடியதும், அது தவிர்க்க முடியாத அளவுக்கு இருக்கக்கூடியதும், ஆனால் அவையும் தவிர்க்கப்பட வேண்டுமென்ற நிலையிலே ஒரு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுவதும், நிச்சயமாக நாம் அனைவரும் வேறுபாடில்லாமல் ஒத்துக்கொள்ளக்கூடிய உண்மைகளாகும். அதன் அடிப்படையிலே பார்த்தால் இந்த இரண்டாண்டுக் காலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்த அரசோடு ஒத்துழைத்து மக்களுக்குச் செய்திருக்கும் பணிகள் ஏராளமானவை. மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் கூட எடுத்துக் காட்டினார்கள், செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், காரியங்களை எந்தெந்த வகைகளிலே பிரித்து, எந்தெந்தக் காரியங்களுக்கு உடனடியாகப் பதில் அனுப்பவேண்டும், எந்தக் காரியங்களுக்கு ஒரு வார காலத்தில் பதில் அனுப்பலாம், எந்தக் காரியங்களுக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து அந்த முறைகளிலே நிறைவேற்றி வைக்கலாம் என்ற ரீதியில் எல்லாம் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒரு கொள்கையை, திட்டத்தை வகுத்துக் கொண்டார்கள் என்று தெரிவித்தார்கள்.

அதைப்போலவே, மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர்களும் தம்முடைய இன்றைய நிதி அமைச்சர் மாண்புமிகு மதியழகன் அவர்களும் மூன்று அம்ச திட்டம் என்கின்ற திட்டத்தினை செங்கற்பட்டு மாவட்டத்திலே நிறைவேற்றுகின்ற அளவுக்கு அது வெற்றிகரமாக செயல்படுகின்ற அளவுக்கு அங்கே இன்றையதினம் நடைபெற்று வருவதை நாமெல்லாம் நன்றாக அறிவோம். அந்த மூன்று அம்ச திட்டத்தில் மக்களுடைய முறையீடுகளை நேரடியாகச் சென்று சந்தித்து, அவற்றை உடனடியாகக் களைவதற்கும் பட்டா வழங்குதல், அவர்களுக்கு இருக்கிற குடி தண்ணீர் பிரச்னைகள் இப்படிப்பட்ட பிரச்னைகளிலே கவனத்தை செலுத்துவதற்கும் செங்கற்பட்டு மாவட்டம் மூன்று அம்ச திட்டத்திலே ஒரு முன்னோடியாக இருந்து வருகிறது. அதேபோல் இன்னும் சில மாவட்டங்களிலே—ஒரேயடியாக எல்லா மாவட்டங்களிலும் அதை அமுல்படுத்தமுடியாவிட்டாலும்—இன்னும் சில மாவட்டங்களிலே செங்கற்பட்டு மாவட்டத்தைப்போல் அந்த மூன்று அம்சத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும், அதற்கான வாய்ப்புக் கூறுகளை உருவாக்கவேண்டுமென்று அரசு கருதியிருக்கிறது. அந்த வேலைகள் தீவிரமாகச் செயல்பட இருக்கின்றன என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்டவிரும்புகிறேன்.

இந்த இரண்டு ஆண்டுகளில் நான் ஏற்கனவே சொன்னதைப்போல் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர்கள் குறிப்பாகவும் சிறப்பாகவும் உணவுக் கொள்முதலில் எந்த அளவுக்கு ஒத்துழைக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் 15 இலட்சம் டன் இந்த இரண்டு ஆண்டுகளிலே உணவுக் கொள்முதல் செய்யப்படவும், அதிலே 14 இலட்சம் டன் விநியோகம் செய்யப்படவும் ஏறத்தாழ 150 கோடி ரூபாய்க்கு உணவு தானியங்களை வழங்குகிற அளவிலே அவர்கள் தங்கள் முயற்சிகளை நல்லமுறையிலே ஆக்கப்படுத்திக்கொள்ளவும் பணி புரிந்திருக்கிறார்கள்.

அது மாத்திரமல்ல, இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் முதல் ஆண்டில் இன்றைய நிதி அமைச்சரும் வருவாய்த் துறை அமைச்சருமான மாண்புமிகு மதியழகன் அவர்களுடைய பெரு முயற்சியினாலும் அவர்களோடு அதிகாரிகள் தந்த நல்ல ஒத்துழைப்பின் காரணமாகவும் 20,000 ஏக்கரா தரிசு நிலங்கள் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன, அடுத்த ஆண்டில், இரண்டாம் ஆண்டில் 50,000 ஏக்கரா, ஆக 70,000 ஏக்கரா தரிசு நிலங்களுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கின்றன

[திரு. மு. கருணாநிதி] [1969 மார்ச் 20

என்றால் அந்த தீவிரமான எண்ணத்திற்கு முயற்சி எடுத்துக் கொண்ட இரண்டே ஆண்டுக் காலத்திலே 70,000 ஏக்கரா நிலங்கள் பட்டா செய்கின்ற அளவுக்கு பணி புரிந்த அந்த அதிகாரிகள் எல்லாம் நம்முடைய பாராட்டுக்குரியவர்களாக இருக்கிறார்கள். அதைப்போலவே, மாவட்டத்திலே நல்லபடி அபிவிருத்தி வேலைகளிலும் மாவட்டத்தினுடைய பொறுப்பை ஏற்றிருக்கிற பல்வேறு அதிகாரிகளும் சிறந்த முறையிலே பணியாற்றி இருக்கின்றார்கள்.

இப்பொழுது ஏற்பட்டிருக்கிற இந்த வறட்சி நிலையில் நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் கூட்டிய மாநாட்டில் 1 கோடியே 57 இலட்சம் ரூபாய் அளவுக்கு வேலைகளை, வறண்டிருக்கிற பகுதிகளிலே ஆரம்பிப்பது, அதன் மூலமாக வேலையில்லாத மக்களிடத்திலே வேலை வாய்ப்பை உருவாக்குவது, அவர்களுக்கு உணவு தானியங்கள் வழங்கப்படுகிறநேரத்திலே அதை வாங்குவதற்கு ஏற்ற அளவுக்குவகைகளைச் செய்வதற்கு ஏற்றநிலையில் திட்டமிட்டு அதை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு, இதுவரையிலே 68 இலட்சம் ரூபாய்க்கான வேலைகள் நடைபெற்று முடிந்தன. ஆனால் அது முழுவதும் மன நிறைவு அளிக்கத்தக்க அளவுக்கு செய்யப்பட்டு முடிந்துவிட்டன என்று சொல்லவில்லை. இந்த வறட்சி நிலையை பல்வேறு மாவட்டங்களிலே நாம் ஆராய்ச்சி செய்து அதற்கு ஏற்றவகையிலே பல காரியங்களைச் செய்திட வேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்ட காரணத்தால்தான் நான் டெல்லி சென்றிருந்த நேரத்திலே இந்தியாவினுடைய பிரதமரையும் துணைப் பிரதமரையும், 5 கோடி ரூபாய் அளவுக்கு இந்த வறட்சிப் பகுதிகளுக்கு உடனடியாக மத்திய அரசு நிதி உதவி தந்திட வேண்டுமென்று கேட்ட நேரத்தில் எப்ரல் திங்களிலே ஒரு 'டீமினை' ஒரு குழுவினை அங்கிருந்து அனுப்பி வைப்பதாகவும், பிறகு அந்த கோரிக்கை பற்றி கவனிப்பதாகவும் சொன்னார்கள். எப்ரல் திங்கள் என்பது கூட அதிக நாள் கடத்தலாக ஆகிவிடும், உடனடியாக அதைச்செய்யவேண்டுமென்று உதவிப் பிரதமரிடத்திலே நான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, உதவிப் பிரதமர் உடனடியாக அதற்கான உத்தரவைப் போட்டு, இந்த மாதத்திலேயே அந்தக் குழு அதற்கான ஆராய்ச்சியிலே ஈடுபடுவதற்கும் எங்கெங்கே எப்படிப்பட்ட நிவாரணங்கள் அளிக்கப்பட வேண்டுமென்றும், எந்த அளவுக்குத் தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் ஆய்வு நடத்துவதற்கு இந்த மாதத்திலேயே வர இருக்கிறார்கள்.

நம்முடைய அழைப்பினை ஏற்று, எப்ரல் திங்கள் 17-ம் நாள் அன்று இந்தியாவினுடைய பிரதமர் அவர்களும் சென்னைக்கு அருகிலுள்ள செங்கற்பட்டையும், வட ஆற்காடு மாவட்டத்தில் சில இடங்களையும் அடையாளமாக பார்வையிட்டு அவருக்கு இருக்கிற அவசர வேலைகளின் நிமித்தமாக உடனடியாகத் திரும்ப இருக்கிறார்கள். பிரதமர் அவர்களுக்கு எல்லா இடங்களையும் பார்வையிடுவது என்பது இயலாத காரியம். ஏனென்றால் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்கனவே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒத்துக்கொண்ட நிகழ்ச்சிகளைக் கூட ரத்து செய்துவிட்டு 17-ம் தேதி அடையாள பூர்வமாக இங்கே கஷ்டப்படுகின்ற மக்கள் மீது இருக்கிற அனுதாபத்திற்கு அறிகுறியாக அவர்கள் இங்கே வருகிறார்கள். அவர்கள் வருவதும் அனுதாபம் காட்டப்போவதும் நம்முடைய மாநில மக்கள் மீது, மத்திய அரசிடம் மாநில அரசு எடுத்துச் சொல்லியிருக்கிற இந்த கோரிக்கைகள் மீது, அவர்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையை, அதே நேரத்திலே மாநிலத்திலே கஷ்டப்படுகின்ற மக்களுக்கு; வறட்சிப் பகுதிகளிலே இருக்கிற மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று அவர்கள் கனிவோடு எண்ணுகிறார்கள் என்ற நம்பிக்கையை நமக்கெல்லாம் ஏற்படுத்த இருக்கிறது என்பதற்கு இது நல்ல அடையாளமாகும்.

அந்த வகையிலே அவர்கள் வருவதற்கு முன்பாகவும், வருகின்ற குழு இடத்திலே சில நிலைகளை எடுத்துச் சொல்லவும் எந்தெந்த மாவட்டங்களில் அந்த வறட்சிப் பகுதிகள் இருக்கின்றன என்ற



69 மார்ச் 20] [திரு. மு. கருணாநிதி]

ண்ணோட்டத்துடன் நாம் செயல்பட வேண்டுமென்பதை நினைவூட்டிக்கவும் ருகிற எப்ரல் திங்கள் முதல் வாரத்தில் கலெக்டர்களுடைய மாநாடு ன்றினை சென்னையிலே கூட்டுவதாக இருக்கிறோம். அந்த மாநாட்டில் அந்தந்த மாவட்ட நிலைகளைக் கலெக்டர்கள் எடுத்துச் சொல்ல இருக்கிறார் ள். ஆகவே, வறட்சிப் பகுதிகளில் நாம் இந்த அரசின் சார்பாகச் செய்யவேண்டிய காரியங்களை எவ்வெவ்வாறு செய்வது என்று தீர்மானித்து அதற்கு வேண்டிய முறைகளை வகுப்பதற்கு இந்த கலெக்டர்களுடைய மாநாடு, எப்ரல் திங்களில் நடைபெறுகின்ற மாநாடு பெரிதும் பயனுடையதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர்கள் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு எந்த வகையிலே உதவி இருக்கிறார்கள் என்பதை எல்லாம் நாம் நன்றாக அறிவோம். இந்த ஆண்டு பருவ மழைக் கோளாறின் காரணமாக, இங்கே கொள்முதலுக்கு நிறைய தானியத்தை வழங்கிக் கொண்டிருந்த வட ஆற்காடு, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்கள் வறண்ட நிலைக்கு ஆளாகிவிட்ட காரணத்தினால் அங்கே கொள்முதலில் துரிதமாக முன்னேற முடியவில்லையே தவிர, சென்ற ஆண்டு அவர்கள் செய்த கொள்முதலும் அதைப் போலவே இந்த ஆண்டு தஞ்சை மாவட்டம் ஓரளவுக்குக் கொள்முதலிலே நமக்கு உதவிகரமாக இருக்கிறது என்றால் அவைகளுக்கெல்லாம் விவசாயத் துறையிலே உள்ள அதிகாரிகள், அந்த அந்த மாவட்டத்தினுடைய கலெக்டர்கள், அவர்களுடைய தலைமையிலே பணியாற்றி இருக்கிற மற்றவர்களின் ஒத்துழைப்பின் காரணமாக தஞ்சை மாவட்டத்திலே இருபோகச் சாகுபடி போன்ற புரட்சிகரமான திட்டங்களின்மூலம் நல்ல உணவு உற்பத்தியை நம்மால் பெருக்க முடிந்தது.

பல உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எல்லாம் இங்கே எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அமைச்சர்கள் வருகிற நேரத்திலே அந்த அமைச்சர்களுக்குத் தொடர்புடைய இலாகாக்களுடைய அதிகாரிகள்தான் மாவட்டங்களிலே அமைச்சர்களோடு செல்ல வேண்டுமென்ற கருத்தினை— நண்பர் திரு ஞானசம்பந்தன் என்றுகருதுகிறேன்—அவர் இங்கேகுறிப்பிட்டுக் காட்டினார்கள். சில நேரங்களில் அந்தத் தொடர்புடைய இலாகாக்களுடைய அதிகாரிகள் வருவது என்பது உசிதமானதாக இருக்க முடியாது. ஏனென்றால் முறையிடுகின்ற மக்கள் இந்த இலாகாவுக்குத் தொடர்புடையவர் ஆகவே இந்த முறையீட்டை நாம் அவரிடத்திலே தரவேண்டுமென்று கருதிக் கொண்டு இல்லை. விவசாயத் துறை அமைச்சர் செல்லுகிற நேரத்தில் அவரிடத்திலே சுகாதாரத் துறை பற்றிய முறையீட்டைத் தருகிறார்கள். அதைப்போலவே, உள்ளாட்சித்துறை அமைச்சர் செல்லுகிற நேரத்தில் அவரிடத்திலே போலீஸ் சம்பந்தப்பட்ட ஒரு காரியத்தைச் சொல்கிறார்கள். அப்படிச் சொல்கிற நேரத்தில் எல்லா அதிகாரிகளும் கூடுமானவரையில் அமைச்சர்களோடு இருந்தால்தான் அந்த உசிதமான முறையீடுகளைப் பற்றி அவர்களை கவனிக்கச் சொல்வதற்கு ஏற்ற வாய்ப்புக் கூறுகள் இருக்க முடியும். அதற்காக அமைச்சர்கள் செல்லுகிற எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அதிகாரிகள் செல்லவேண்டிய அவசியம் இல்லை. அதை நம்முடைய மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் வெகுத் தெளிவாக எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். அமைச்சர்கள், அரசாங்க நிகழ்ச்சிகள், கட்சி சார்பற்ற நிகழ்ச்சிகள் இவற்றிற்குச் செல்லுகின்ற நேரத்தில், அமைச்சர்கள் விரும்பினால், அவர்கள் தேவை என்று கருதினால், அவர்களோடு அதிகாரிகள் சென்றால் போதும் என்ற அளவுக்குத்தான் இந்த இரண்டு ஆண்டு காலத்திலே நடைமுறை இருந்து வந்தது. ஆகவே, அதிகாரிகள் தங்களுடைய வேலைகளை விட்டுவிட்டு அமைச்சர்கள் பின்னால் சுற்ற வேண்டுமென்ற நிலையில் இந்த அரசு இல்லை என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டவிரும்புகிறேன்.

மாவட்டங்களையெல்லாம் நிர்வாக வசதிக்காக இரண்டு மூன்றாகப்பிரிக்க வேண்டுமென்ற கொள்கை எடுத்துச் சொல்லப்பட்டது. அது கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றாலும் நடைமுறை அளவுக்கு உடனடியாகச் செய்யக் கூடியது அல்ல. ஏனென்றால் அப்படி நிர்வாக வசதிக்காகப் பிரிக்கிற நேரத்தில் நிதிநிலை, அதற்காகச் செலவிடப்பட வேண்டிய பணம், அதே நேரத்தில் அதற்காக அமைக்கப்பட வேண்டிய அலுவலர்கள், இவற்றை எல்லாம் நாம் கணக்கிட்டுப் பார்த்தால் அது உடனடியாகச் செய்யக் கூடிய ஒன்று அல்ல என்பதையும் கொள்கை ரீதியில் ஒப்புக்கொண்டால் மெல்ல மெல்ல அது செய்யப்பட வேண்டிய காரியம் என்பதையும் நான் இங்கே ஒத்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழரசுக் கழகத் தலைவர் மாண்புமிகு திரு. ம. பொ. சி. அவர்கள் இந்த மானியத்தோடு அறநிலையத்தையும் இணைத்து, அது
பிற்பகல் 2-30. இருக்கிறதா, இல்லையா என்று தெரியாத அளவுக்கு, அதைப்பற்றி பேசுவதா, இல்லையா என்று புரியாத அளவுக்கு இது செய்யப்பட்டு வருகிறது என்பதையும், இனிமேலாவது அடுத்த தடவை இந்த மானியம் இங்கே வைக்கப்படுகிற நேரத்திலே அறநிலையத் துறையைப் பொறுத்த வரையில், அதைத் தனியாக, தனி மானியமாக இங்கே விவாதித்தாக வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் இங்கே அதைப்பற்றிப் பேசிய நேரத்தில் மாவட்ட நிர்வாகத்தைப்பற்றிக் குறிப்பிடாமல், பேச எடுத்துக்கொண்ட நேரம் முழுவதும் அறநிலைய மானியத்திற்கே செலவிட்ட திலிருந்து, இதுபோல பலரும் பேசக்கூடும் என்ற காரணத்தினால், இது தனி மானியமாக விவாதிக்கப்படக்கூடிய ஒன்று என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சியினர் வரிசையில் நாங்கள் அமர்ந்திருந்த நேரத்தில் இதைப்பற்றி எடுத்துக் காட்டியிருக்கிறோம். ஆனால், எப்படியோ இந்த அற நிலையம் இந்த மாவட்ட நிர்வாகத்திற்குள்ளே வந்து புகுந்து கொள்கிறது. இனிமேல் அப்படிப் புகுந்து கொள்ளாமல் தனியாக இருக்கவேண்டும் என்பதற்கு அடையாளமாகத்தான் அற நிலையத்திற்கு என்று தனி மந்திரி ஒருவரை நாம் அமர்த்தியிருக்கிறோம். ஆகவே, இப்பொழுது அற நிலையம் தனியாக மாற்றி அமைக்கப்பட்டது இந்த ஆண்டு. இது அடுத்த ஆண்டு அற நிலையம் தனியாக விவாதிக்கப் படுகிற மானியமாகும் என்பதற்கு ஒரு அடையாளம் என்பதை நான் தமிழரசுக்கழகத்தலைவர் அவர்களுக்கு இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அறநிலையத்தைப் பொறுத்தவரையிலே..

திரு. கே. விநாயகம்: வெங்கடசாமி நாயுடு அவர்களைத் தனியாக அதற்கு நாங்கள் போட்டிருந்தோம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: முன்பு திரு. வெங்கடசாமி நாயுடு என்று அதற்கு ஒருவர் இருந்தார். தனியாகப் போட்டீர்கள். அப்படியிருந்ததை இடையிலே ஏன் கெடுத்தீர்கள் என்பதுதான் புரியவில்லை.

திரு. கே. விநாயகம்: அவர் இருந்தவரையில் அவர்தான் அதற்குத் தனியாக அமைச்சராக இருந்தார், அவரை மாற்றி வேறு யாரையும் நாங்கள் போடவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படியானால், அறநிலையம் என்றால், திரு. வெங்கடசாமி நாயுடு ஒருவர்தான் தமிழ் நாட்டில் இருந்தாரா, வேறு எந்த மந்திரியும் தமிழ் நாட்டில் கிடைக்கவில்லையா என்று எனக்குத் தெரியாது.



அறநிலையத்தைப் பொறுத்தவரையில், திரு. ம. பொ. சி. அவர்கள் கூறியதில் எவ்வளவு நியாயம் இருக்கிறது என்பதைப் பார்த்தால், தமிழ் நாட்டில் 9,000 கோவில்கள் இருக்கின்றன. ரூ. 10,000-க்கு மேல் வருமானம் உடைய கோவில்கள் 434 கோவில்கள் ஆகும். ரூ. 1,000-த்திலிருந்து ரூ. 10,000 வரையில் வருமானம் வரத்தக்க கோவில்கள் 2,777 ஆகும். எனவே, மிச்சமுள்ள 5,789 கோவில்களும் ரூ. 1,000-க்கும் கீழே தான் வருமானம் உடைய கோவில்கள் ஆகும். இதிலே 3,500 கோவில்களுக்கு டிரஸ்டிகள் இருக்கிறார்கள். அங்கு இருக்கிற கமிஷனரோடு ஒத்துழைக்கக்கூடிய நிலைமையில் 340 கோவில்களுக்கு அப்பாயிண்டிங் டிரஸ்டிகள் இருக்கிறார்கள். ஆக, இது பெரிய நிர்வாகமாக இந்த மாநிலத்தில் செயல்பட்டுவருகிற ஒரு இலாகாவாகும். அந்த நிலையில் அது தனியாக விவாதிக்கப்படவேண்டிய ஒரு மானியமாகும். அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லவேண்டியதும் முற்றிலும் நியாயமான ஒன்றாகும்.

இதிலே திரு. ம. பொ. சி. அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள், பணக்காரக் கோவில்கள், ஏழைக் கோவில்கள் என்று இருக்கின்றன, ஏழைக் கோவில்களுக்கு நாம் சமத்துவம் தருவதற்கு, பணக்காரக் கோவில்களில் மிச்சப்படுகிற உபரித் தொகையை ஏழைக் கோவில்களுக்கு எடுத்துத் தரவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இதிலே சட்டப் பிரச்னைகளெல்லாம் ஆராய வேண்டியிருக்கிறது. பணக்காரக் கோவில்கள் உபரித் தொகையைக் கொடுப்பதற்கு முன்வருமா? என்னென்ன மறுப்புகள், என்னென்ன ஆட்சேபனைகள் வரும்? அவர்கள் நீதிமன்றத்தின் நீண்ட நெடிய படிக்கட்டுகள் வரையில் போகமாட்டார்களா என்பதையெல்லாம் யோசித்துப் பார்க்கவேண்டும். ஏனென்றால் கடவுள்கள் நடத்துகின்ற சமதர்மம் அல்ல இது. கடவுள்களை வைத்துப் பரிபாலிக்கும் சில மனிதர்கள் எடுத்துக்கொடுக்கவேண்டிய முயற்சியாகும் இது. ஆகவேதான் அந்த நிர்வாகத்தை ஏற்று நடத்துகின்ற அதிகாரிகள் ஏழைக் கோவில்களுக்கு அள்ளித்தரலாம், உபரியைத்தரலாம் என்று எண்ணிப் பார்ப்பார்களா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்றாகும். ஆகவே அது ஆராய்ச்சிக்குரிய ஒன்றாகும். சட்டப் பிரச்னைகளை ஆய்ந்து செய்யக் கூடிய ஒன்றாக இருக்கிறது.

1968-69-ம் ஆண்டிலிருந்து ரூ. 4 லட்சம் அளவுக்கு 60 ஏழைக் கோவில்களுக்கு தமிழக அரசு பண உதவி செய்து வருகிறது. ஆண்டவனுக்கு அளிக்கிறார்கள், உதவி செய்துகொண்டு வருகிறார்கள். 60 கோவில்களுக்கு ரூ. 4 லட்சம் அளவுக்கு, ஆண்டவனுக்கு என்றால், நீங்கள் பாஸ்ட் டென்ஸில் எடுத்துக்கொண்டு காங்கிரஸ்காரர்களுக்கு என்று கருதிக்கொள்ளவேண்டாம். ஆண்டவனுக்கு, கடவுளுக்கு அளிக்கின்றது திராவிட முன்னேற்றக் கழக அரசு; ரூ. 4 லட்சம் அளவுக்கு 60 கோவில்களுக்குத் தருகிறது, தந்திருக்கிறது. இதை எடுத்துக்காட்டுவதற்குக் காரணம் கோவில்களின் உபரிப்பணத்தை நல்ல காரியங்களுக்காகப் பயன் படுத்தவேண்டும் என்று முன்னாள் கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்ன நேரத்தில், சில பத்திரிகைக்காரர்கள் தாக்கி எழுதினார்கள். நம்முடைய திரு. ம. பொ. சி. அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள், உபரி போக, மற்றக் கோவில்களுக்கு அளித்தது போக, மிச்சம் இருப்பதை அரிசன மக்களுடைய கல்விச் சலுகைகளுக்காக அளிக்கலாம் என்று எடுத்துச் சொன்னார்கள். அது அவர்கள் சொல்லுகிற நேரத்தில் நாஸ்திக வாதமாக இருப்பதில்லை. ஆனால், தமிழக அரசின் சார்பாக நாங்கள் எடுத்துச் சொன்னால், அது நாஸ்திக வாதமாக ஆகிவிடுகிறது.

திரு. ம. பொ. சி. அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள், தஞ்சாவூரில் இருக்கின்ற இராஜராஜேஸ்வரன் கட்டிய பிரகதீசுவரர் ஆலயம், கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள ராஜேந்திரன் கட்டிய கோவில் இந்த இரண்டு கோவில்களும் இன்று மத்திய சர்க்காருடைய தொல் பொருள் பாதுகாப்புக் குழுவின் கீழே நேரடியாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அவற்றை மாநில அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற

ஒரு முயற்சி சென்ற ஆண்டில் நடைபெற்றது. ஆனால், அந்த முயற்சி இன்னும் வெற்றிகரமான முடிவினை எய்திடவில்லை. அதற்கு மத்திய அரசு மறுக்கிறதோ, இல்லையோ, அங்கே இருக்கிற சிலர் மறுப்புத் தெரிவித்தார்கள். சில பத்திரிகைகளும் மறுப்புத் தெரிவித்துத் தலையங்கங்கள் தீட்டின. தஞ்சாவூர்க் கோவில், கங்கைகொண்ட சோழபுரம் கோவில் இந்த இரண்டு கோவில்களையும் மாநில அரசு எடுத்துக் கொள்ளுமானால், அங்கே இருக்கிற கடவுள்களுக்கு எந்த பூஜையும் செய்யமாட்டார்கள், நாஸ்திகக் கொள்கையின் அடிப்படையில் அந்தக் கடவுள்களை அனாதைகளாக விட்டுவிடமாட்டார்களா என்றெல்லாம் எழுதினார்கள். அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். 60 ஆலயங்களுக்கு இரண்டு ஆண்டுக் காலத்தில் தமிழக அரசு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4 லட்சம் வீதம் அந்தக் கோவில்களுக்குத் தந்து, அவைகளுடைய பூஜை நைவேத்தியங்களை, அர்ச்சனை ஆராதனைகளை ஒழுங்காக நடத்துகிறோம். தஞ்சாவூர் கோவில், கங்கைகொண்ட சோழபுரம் கோவில் இவை மாநில அரசின் நிர்வாகத்தின்கீழ் வருமானால், நிச்சயம் பக்திபூர்வமாக அது பாதிக்கப்படமாட்டாது என்ற உறுதியை நான் இந்த மன்றத்தின் சார்பாக மத்திய அரசுக்குத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். டெல்லியில் இந்தத் துறையின் அமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவ் அவர்களிடத்தில் இப்பொழுது நான் சென்றிருந்தபொழுது இதுபற்றி விளக்கமாகப் பேசியிருக்கிறேன். அவர்கள்கூடக் கேட்டார்கள், எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது என்று கேட்டார்கள். தஞ்சாவூர்க் கோவிலிலும், கங்கைகொண்ட சோழபுரம் கோவிலிலும், வேறு எங்கும் போய் பார்த்தால், அவையெல்லாம் பாழடைந்து கிடக்கின்றன. அங்கே இருக்கிற அகழ்கள் தூர்ந்துபோய், கோட்டைச் சுவர்கள் எல்லாம் குட்டிச்சுவர்களாக மாறி, எங்கு பார்த்தாலும் குப்பை கூளங்கள் நிறைந்து, மடங்கள் மூண்டது. கோபுரங்களை இடித்துத் தள்ளி, மேலும் மேலும் இடிபாடுகளுக்கு ஆளாகின்ற அளவுக்கு இன்னும் 10, 15 ஆண்டுகளுக்குப் பிறகு இங்கே ஒரு கோவில் இருந்தது என்று சொல்லக்கூடுமா என்ற அளவுக்கு, பாழ்நிலையை நோக்கி அந்தக் கோவில்கள் சென்று கொண்டிருக்கின்றன. அவை பக்திபூர்வமானவை மட்டுமல்ல, வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள். வரலாற்றுச் சிறப்புப் பாதுகாக்கப்படவேண்டும், இராஜராஜேசுவரன் பெயரும் புகழும், இராஜேந்திரன் பெயரும், புகழும் நாம் என்றென்றும் எண்ணி மகிழத்தக்கவையாகும். அந்த இடங்களை மாநில அரசுக்கு அவர்கள் தருவார்களேயானால் பூஜை நைவேத்தியங்கள் பாதிக்கப்படமாட்டாது, வரலாற்றுச் சிறப்பும் குன்றாமல் நிச்சயம் அவற்றை நாம் பாதுகாக்க முடியும். இந்த அளவில் நான் இந்த மாமன்றத்தின் சார்பாக மீண்டும் ஒரு முறை மத்திய அரசினரை இந்த முறையீட்டைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு ஆலயங்களில் டிரஸ்டிகளாக இடம் அளிக்கப்படவில்லை என்ற ஒரு முறையீடும் இங்கே சொல்லப்பட்டது. அதற்கு மாத்திரம் ஒரே ஒரு உதாரணமாகச் சொல்லப்பட்டது. ஆனால், இப்பொழுது சிக்கல் இருக்கிற 317 ஆலயங்களில் 298 அரிசன டிரஸ்டிகள் இருக்கிறார்கள் என்பதை நான் ஞாபகப்படுத்துகிறேன். ஒன்றிரண்டு இடங்களில் வேறு பல சிக்கல்களின் காரணமாக குறிப்பிட்டவர்கள் வரமுடியாமல் போய் இருக்கலாமே தவிர, அரிசனங்கள் டிரஸ்டிகளாக ஆகக்கூடாது என்ற கொள்கை அடிப்படையில் நடைபெற்ற தவறு அல்ல இது என்பதையும் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

திருப்பதி தேவஸ்தானத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழரசுக் கழகத் தலைவர் அவர்கள் அந்த தேவஸ்தான போர்டில் நம்முடைய மாநிலத்துப் பிரதிநிதி ஒருவர் இருக்கவேண்டும், அங்கு சென்று ஆண்டவனை வணங்குகின்ற இந்த மாநிலத்து மக்களுடைய கலாசாரத்தைப் பாதுகாப்பதற்கு அந்த உறுப்பினர் அங்கே இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அது எந்த வகையில் சாத்தியக் கூறுள்ளது என்பதை



நாங்கள் அந்த மாநில அரசோடு கலந்தாலோசித்து, அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுகிறோம் என்பதையும் நான் இங்கே எடுத்துக் காட்டுகிறேன்.

திரு. [illegible] நீக் விட்டோம், [illegible] கேட்டார்கள் [illegible] வேண்டும் [illegible] குறிப்பாக [illegible] மதுரை [illegible] தக் [illegible] தருவதி [illegible] விஞை [illegible] இல் [illegible] அ [illegible] அதிகார [illegible] பற்றி ஒரு வார்த்தை கூட [illegible] (மேசை தட்டல்) கட்டுக்கு அதிகாரம் [illegible] கொண்டிருக்கிறோம். மாநிலங்களுக்கு அதிகாரம் வேண்டும் [illegible] எங்களுடைய [illegible] திரு. விநாயகத்தின் உரத்த குரலையும் இணைக்க வேண்டும் என்று மிகுந்த பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. கே. விநாயகம்:—அப்படி டிமாண்ட் ஏதாவது இருக்கிறதா, அதன் மேல் விவாதத்திற்கு சட்டத்தில் இடம் இருக்கிறதா? இல்லையே? எதன் மேல் அபிப்பிராயம் கொடுப்பது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : என்னுடைய டிமாண்ட், திரு. விநாயகம் எங்கள் குரலோடு, தன்னுடைய குரலையும் சேர்க்க வேண்டும் என்பது தான். அதுதான் என்னுடைய டிமாண்ட். (சிரிப்பு)

ஆக, பொதுவாக இந்த விவாதத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நல்ல நிர்வாகம் நடைபெற வேண்டும், இது அவர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும், தாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும், அதிகாரிகள் நல்ல ஒழுங்கோடு, கண்ணியத்தோடு, கட்டுப்பாட்டோடு நடந்துகொள்ள வேண்டும் என்று எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களை அதிகாரிகளும் கவனித்திருப்பார்கள். இன்றைய அதிகாரிகள், அரசுக்கு நல்ல முறையில் உதவியாக இருந்து, அரசுக் காரியங்களை நிறைவேற்றப் பணிபுரிந்து வருகிறார்கள். உயர் மட்ட அதிகாரிகளும், அவர்கள் தலைமையில் வேறு வேறு மட்ட அதிகாரிகளும், அவர்களெல்லாம் நல்ல வகையில் பணி புரிந்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம், தமிழக அரசு சார்பாக நன்றியினைத் தெரிவிக்கிறேன். இருக்கின்ற சிலபல குறைபாடுகளை தவிர்ப்பதற்கு இங்கே நடைபெற்ற விவாதம் நல்ல முறையில் பயன்படும் என்று கருதுகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்களை சந்தித்துப் பேசும் போதும், வேறு பல மாவட்டக் கூட்டங்கள் நடத்தும்போதும், மாவட்ட நிர்வாகம் எப்படியிருக்க வேண்டும் என்று திட்டமிடும்போதும், மன்றத்தில் விவாதத்தில் சொல்லப்பட்ட கருத்துக்களை தொகுப்பாக வைத்துக் கொண்டு, அமைச்சரவையளவில் முதலிலே விவாதித்து, பிறகு மாவட்டத் தலைவர்களைக் கேட்டறிந்து, அதற்கேற்ப மாவட்ட நிர்வாகங்களை சீர்படுத்த இந்த அரசு முயற்சி எடுக்கும் என்கிற உறுதியினைக் கொடுத்து, அதன் காரணமாக கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப்பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. கே. விநாயகம் : பாயிண்ட் ஆப் க்ளாரிபிகேஷன்; பிரதமர் அவர்கள் நம்முடைய தலைநகருக்கு வருகிறபோது, அவர்கள் இருப்பது ஒரு நாள் தான், அதற்குத்தான் வசதியிருக்கிறது. ஆதலால், இரண்டு மாவட்டங்களை மட்டும்தான் பார்க்க முடியும். ஒன்றைக் கேட்கிறேன், இந்த இரண்டு மாவட்டங்கள் போக, இதர மாவட்டங்களும் பஞ்சத்தால்

அடிபட்டிருக்கின்றனவே, அந்த மாவட்ட லெஜிஸ்லேட்டர்களை, மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களை சென்னையில் கூட்டி, அம்மையாருக்கு குறைபாடுகளைத் தெரிவிக்க, அம்மையாரிடம் அவற்றிற்கும் நிவாரணம் கேட்க முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த நிகழ்ச்சிகளுக்கு இப்பொழுது நேரம் இல்லை. அப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் என்னிடத்தில் தந்தால், அவைகளையெல்லாம் தொகுப்பாக பிரதமரிடம் தர ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. "கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் (இந்து சமய அறக்கட்டளை ஆட்சித் துறை உட்பட)" என்பதற்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் யாவும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன. பேரவையின் முன் உள்ள கேள்வி :—

"கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் (இந்து சமய அறக்கட்டளை ஆட்சித் துறை உட்பட) "என்ற தலைப்பின் கீழ்" ரூ. 19,48,86,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர், பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.*

## 5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

பிற்பகல் 2-40

* 94. Notification issued with G.O. Ms. No. 2481, Home, dated the 30th August 1968 in regard to exemption from payment of tax leviable in respect of certain vehicles belonging to the United States Agency for International Development Mission for India. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III* of 1931).]

* 95. Notification issued with G.O. Ms. No. 799, Home, dated the 20th March 1968 in regard to tax payable in respect of the Lorry MDJ 3358, belonging to the German Leprosy Centre, Chetput, North Arcot district. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

* 96. Notification issued with G.O. Ms. No. 2413, Home, dated the 21st August 1968 in regard to exemption from payment of tax leviable in respect of the car bearing registration number MSQ 3612, belonging to Thiru Eugene W. Shaw, United States Agency for International Development Mission for India. [*Laid* on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

* **Laid on the Table of the House on 18th March**



97. Appropriation Accounts of the Government of Tamil Nadu for the year 1967-68 and Audit Report, 1969. [*Laid on the Table of the House under section* 151 (2) *of the Constitution of India.*]

98. Finance Accounts of the Government of Tamil Nadu for the year 1967-68 [*Laid on the Table of the House under section* **151** (2) *of the constitution of India.*]

### B. Reports, Notifications and Other Papers.

† 94. A review on the progress made in the Forest Department (Tamil).

† 95. Policy Note on Demand No. XVIII—Animal Husbandry (Tamil).

† 96. Policy Note on Demand Nos. 16 and 39—Agriculture (Tamil).

† **Despatched to Members on 17th March 1969**

[1969 மார்ச் 20

## இணைப்பு

[96-ம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை எண் 3 பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் "கோரிக்கை—3 பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்" என் பதின்கீழ் 1,79,44,500 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டுமென நான் வேண்டுகிறேன்.

2. பொது விற்பனை வரியும் இதைப்போன்ற வணிக வரிகளும் தமிழ் நாட்டு வருவாய் வாயில்களில் முக்கியமானவையாக அமைந்துள்ளன. வணிக வளர்ச்சி, தொழில் வளர்ச்சியின் போக்கிற்கிணங்க ஆண்டுக்கு ஆண்டு இவ் வருவாய் சிறிது சிறிதாக அதிகரித்து வருகிறது. தொழில் துறையிலும் வேளாண்மைத் துறையிலும் ஏற்பட்டுள்ள மந்த நிலை காரணமாக, நயக்கு அண்மையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. பொருளாதார நிலை மேம்படுகையில், வருங்காலத்தில் இவ் வரிகளின் மூலம் நமது வரவினம் மேலும் உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. விற்பனைவரி குறித்த சட்டம் நன்கு அமையப்பெற்றுள்ளது. இச் சட்டத்திற்கு உயர்நீதிமன்றமும், தலைமை நீதிமன்றமும் நல்ல பொருள் விளக்கம் கொடுத்துள்ளன. விற்பனைவரிச் சட்டத்தை முறைப்படுத்தும் கொள்கைகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இத் துறையின் வெற்றி, இது செயல்படும் முறையைப் பொறுத்துள்ளது. வரி விதிப்பு, வசூல் ஆகியவற்றில் இத் துறை திறம்படச் செயல்பட்டு வருகின்றது என்பதை நான் அறிவேன். நிர்வாக சட்டப்படிக்கான சிக்கல்கள் ஏற்பட்டபோதிலும் இத் துறை திறமையாகச் செயல்பட்டுள்ளது. ஆனால், கடந்த காலத்தில் வணிக வரி நிர்வாகத்திற்கு வணிகர்களின் ஒத்துழைப்பு முழு அளவில் கிடைத்துள்ளது என்று நான் கூற முடியாது. வரிகள் அவ்வப்போது மதிப்பிடப்பட்டு வசூலிக்கப்பட வேண்டும் என்று கருதுவதோடு விற்பனைவரி விதிக்கப்பெறுபவர்களிடையே அரசு தங்களுக்கு உற்ற நண்பன் என்னும் உணர்வு ஏற்பட வேண்டும் என்பதும் அரசின் அவாவாகும். விற்பனை வரி விதிக்கப் பெறுபவர்கள் தங்களுக்கு சேரவேண்டிய விற்பனை வரி பாக்கியைப் பயன் துய்ப்போரிடமிருந்து வசூலித்துத் தரும் அரசு முகவர்களாகவே நடைமுறையில் செயல்படுகின்றனர் என்பதுதான் விற்பனை வரியின் அடிப்படைக் கொள்கையாகும். இயல்பாக, இந்த வரி வசூலிப்பில் சிக்கல்கள் எதுவும் இருப்பதற்கில்லை.

சிறு வணிகர்களைப் பொறுத்தவரையில், விற்பனை வரியைச் சரியாக மதிப்பிடுவதற்காக வைத்து வரப்படவேண்டிய கணக்குப் புத்தகங்களை வைத்துவரும் சுமையினின்றும் அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கொடுக்கவேண்டிய வரி நிலுவைகளை உடன்பட்டுத் தீர்த்துக்கொள்ள வேண்டிய முறை ஒன்று தயாரிக்கப்பட்டது. இந்த முறை, மன நிறைவளிக்கும் வழியில் செயல்பட வேண்டும்.

ஆயினும் விற்பனை வரி விதிக்கப்பெறும் பெரும் வணிகர்கள் ஒழுங்கான கணக்குப் புத்தகங்கள் வைத்துவரத் தவறுகின்றனர் என்பது அனுபவ வாயிலாகக் கண்டறிந்த உண்மை. எனவே, "உளம் அறிந்த தீர்ப்பு" என்று தாம் கருதும் முறைப்படி வரிவிதிப்பு செய்ய வேண்டியவராகின்றனர் என்பது அனுபவ வாயிலாகத் தெரியவருகிறது. "உளம் அறிந்த தீர்ப்பு" என்பது யதேச்சாதிகாரத் தன்மை வாய்ந்ததாகத் தோன்றலாம் என்று எனக்குத் தெரியும். ஏதாவதொரு முறையைக் கொண்டு வரி விதிப்பு செய்ய வேண்டியது நிர்வாகத்தில் அவசியமாகிறது. வரிவிதிப்பு வசதியாக இருக்கும்பொருட்டு, வரிவிதிக்கப் பெறுபவர்களின் சொந்த அலுவல்கள் பற்றிய தகவலை விற்பனைவரி அதிகாரிகள் சேகரிக்கவேண்டிய நிலையும் ஏற்படுகிறது. இதனால் இவ்வதிகாரிகளைப் பற்றித் தவறான எண்ணம் மக்களிடையே நிலவுகிறது. ஆகவே, விற்பனை வரி அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளத்தக்க செவ்விய முறையில் கணக்குகளை வைத்து வருமாறு வணிக சமூகத்தினருக்கு வேண்டுகோள் விடுக்கவும் வரி செலுத்துபவர்களிடம் பரிவுடனும் இணக்கமுடனும் நடந்துகொள்ளுமாறு என்னுடைய அதிகாரிகளுக்கு கட்டளையிடவும் கருதுகிறேன். வரி விற்பனை அதிகாரிகளில் சிலர் தாங்கள் செய்யும் வரி மதிப்பீடுகளுக்குப் போதிய காரணங்களைப் பதிவு செய்வதில்லை என்றும் வணிக வரித்துறை ஆணையாளர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். வரி செலுத்துவோா வரிவிதிப்புத் தீர்ப்புகளைக் குறித்து மன நிறைவடையவில்லை என்றும் அவர்கள் இச் சட்டத்தின்கீழ் வகை செய்துள்ள மேல் முறையிடுகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியவர்களாயுள்ளனர் என்றும் இதனின்று விளங்குகிறது. வரி விதிக்கும் அதிகாரிகள் குறிப்பிட்ட முறையில் தாங்கள் வரி விதிக்கவேண்டிய காரணங்களை எழுதிவைத்தால் இந்த மேல் முறையீடுகள் குறைக்கப்படலாம். இதற்கென்றே வணிக வரித்துறை ஆணையாளர் கேட்ட பணியாளர்கள் நியமனத்திற்கும் நான் ஒப்புதல் வழங்கியுள்ளேன். வரி மதிப்பீட்டுப் பணியை சிறப்பாக நிறைவேற்றுவது குறித்து வரி விதிப்பு அதிகாரிகளுக்குத் தகுந்த பயிற்சியளிக்கவேண்டும். என்பதும் என் கருத்தாகும்.



வரி அமைப்பு முறையைக் குறித்து அறிவியல் முறையில் ஆய்வு செய்வதற்காக இத்துறை தற்போது போதிய அளவில் தகவல்கள் சேகரிக்கவில்லை என்பது வணிக வரித்துறை செயல்படுவது பற்றிய பாகுபாட்டு ஆராய்ச்சியிலிருந்து தெரிகிறது. இதற்கெனத் தனி நிறுவனம் அமைக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். வரிப் போக்கு, பேரளவு வரி வருவாய் அளிக்கும் பொருள்கள், சிறப்பாக மாநிலங்களுக்கிடையே சரக்குப் போக்குவரத்து முதலியவற்றையொட்டி, வணிகத் துறையில் காணும் மாறுதல்கள் ஆகியவற்றைக் குறித்து அரசு எந்த நேரத்திலும் அறியும் நிலை ஏற்படவேண்டும் என்பதுதான் என் கருத்து. ஒரு பிரிவு அத்தகைய தகவல் சேகரிப்பதால், அறிவியல் முறையில் மேலும் வரி விதித்து சிறப்பாக வரி வசூலிக்கவும் இயலும்.

4. விற்பனை வரிச் சட்டம் இம் மன்றத்தில் பலமுறை திருத்தத்துக்கு உள்ளாகியது என்பது உறுப்பினர் அனைவரும் அறிந்ததே. அனுபவ அடிப்படையில் இச் சட்டத்தில் காணும் ஓழுக்கல்களை அடைப்பதற்காக வணிக வரித்துறை ஆணையாளர் சிறு திருத்தங்கள் சிலவற்றைச் செய்ய வேண்டுமென ஆலோசனை கூறினார். இத்தகைய எல்லா நேர்வுகளுக்கும் வகை செய்து செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த விற்பனை வரி திருத்தம் மசோதா ஒன்றைக் கொண்டுவரவும் கருதப்பட்டுள்ளது.

5. இது குறித்த சில வழக்குகள் உயர்நீதிமன்றத்திலும் தலைமை நீதிமன்றத்திலும் முடிவாகாமல் உள்ளன. கணிசமான வருவாய் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியிருந்த [வழக்குகளில் மட்டும், கடந்த ஒரு தேதியிலிருந்தே வரி விதிப்புகளைச் செல் திறனுக்கு அரசு கருதியுள்ளது. இத்தகைய ஒரு சில வழக்குகள் நீங்கலாக, நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு இவ்வரசு எப்போதுமே மதிப்பளித்து வந்துள்ளது. இதனால் வணிகர்களுக்குத் தம் தொழில் பாதுகாக்கப்படுமென்ற நம்பிக்கை உணர்வு ஏற்படும்.

6. இத் துறையின் சிறப்புக் கூறுகள் சிலவற்றை இம் மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

வணிக வரிகள் துறை நிதிசார்ந்த கீழ்காணும் ஆறு சட்டங்களைத் தொடர்ந்து நிர்வகித்து வருகிறது:—

(1) தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959.

(2) மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956.

(3) தமிழ் நாடு மோட்டார் எண்ணெய் விற்பனை வரிச் சட்டம், 1939.

(4) தமிழ் நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939.

(5) தமிழ் நாடு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம், 1961.

(6) தமிழ் நாடு பந்தய வரிச் சட்டம், 1935.

1968-69-ம் ஆண்டில் ஜனவரி 1969 வரையில் அனைத்துக்குமாகச் சேர்ந்து மொத்த வரி வருவாய் ரூ. 5,787·71 லட்சமாகும். கடந்த ஆண்டில் இதற்கு நிகரான கால அளவில் ரூ. 5,226·43 லட்சமே வசூலாகியது என்பது குறிப்பிடத் தக்கதாகும். வரி வசூல் இப்போது ரூ. 561·28 லட்சம் அதாவது 1967-68-ம் ஆண்டிற்கான வரி வசூலைவிட இந்த ஆண்டில் வசூல் 11 சத வீதம் கூடுதலாகியுள்ளது.

7. செலவினத்தில், கீழே காட்டியுள்ளபடி, 1968-69-ல் சிறிது அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது :—

(ரூ. லட்சத்தில்.)

| | 1965-66. | 1966-67. | 1967-68 |
|---|---|---|---|
| 12 விற்பனை வரிச் செலவு .. | 110·20 | 117·80 | 133·06 |
| 13 பிற வரிகளும் தீர்வைகளும்—பந்தய வரி—குதிரைப் பந்தய கிளப்புக்குச் செலுத்தத் தக்கதாகு. | 0·06 | 0·58 | 0·26 |

1968-69-ம் ஆண்டுக்காக, 1969 ஜனவரி முடிய திருத்திய செலவு மதிப்பீடு ரூ. 156.05 லட்சம் ஆகும். இது வர்த்தக வரிகளின் மொத்த வருவாயில் மூன்று சதவீதத்திற்கும் குறைவு என்று கணக்கிடப்படுகிறது. இச் செலவினம் மிகவும் நியாயமானதென்றே கருதப்படுகிறது.

8. ஒவ்வொரு சட்டத்தின் கீழும் வசூலிக்கப்பட்ட வரி பற்றிய சிறப்புக் கூறுகள் :—

(a) தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959.

1969 ஜனவரியுடன் முடிவடைந்த காலத்திற்காகவும், கடந்த ஆண்டில் அதற்கு நிகரான காலத்திலும் தமிழ் நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரி வருவாய்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| காலம். | மொத்த வருவாய். (ரூ. லட்சத்தில்.) | அதிகரிப்பு. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| 1967-68 (1967 ஏப்ரல் 1-ம் தேதி முதல் 1968 ஜனவரி 31-ம் தேதி வரை). | 3,378·88 | .... |
| 1968-69 (1968 ஏப்ரல் 1-ம் தேதி முதல் 1969 ஜனவரி 31-ம் தேதி வரை). | 3,770·99 | 392·11 (அல்லது 12 சதவீதம்). |



மேலும் உயர்ந்திருக்கலாம். மேலும், நம் கட்டுக்கு மீறிய காரணங்களினால் ஐந்தாண்டுத் திட்டப் பணிகளில் குறைவான முதலீடு செய்தமை, மேலும் பல பஞ்சாலைகள் மூடப்பட்டமை, மற்ற பஞ்சாலைகள் உற்பத்தியைக் குறைத்துக்கொண்டமை, வேர்க்கடலை, கடலை எண்ணெய், நல்லெண்ணெய், எள், மிளகாய் முதலிய பொருள்களின் விலைகளில் ஏற்பட்ட சரிவு ஆகியவையும் இதற்குக் காரணங்களாகும். 1968 ஜனவரி முதற்கொண்டு வெல்லத்திற்கு வரி விதிக்கத்தக்கதாயிருந்தும், வரி விதிப்பு செய்ய முடியவில்லை. வசூலிக்க வேண்டிய சுமார் ரூ. 50 லட்சம் வரி விதிப்பின் செல்திறனைக் குறித்து செய்துகொண்ட ரிட் மனுக்கள் குறித்து உயர்நீதி மன்றம் தடை ஆணை விதித்துள்ளதன் விளைவாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வெல்ல வரி விதிப்பு சரியென்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதால், வெல்ல வணிகர்களிடமிருந்து வரி நிலுவை வசூலிப்பதற்கு துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஆனால், சில வணிகர்கள் இது குறித்து, தலைமை நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்துகொண்டுள்ளனர்.

இம்மாநிலத்தில் பஞ்சாலைத் தொழிலின் இடர்ப்பாட்டைக் குறைப்பதன் பொருட்டு, இவ்வரசு, 1-6-1968-ம் தேதி முதற்கொண்டு, இம்மாநிலத்தில் உள்ள பஞ்சாலைகளால் தயாரிக்கப்படும் பருத்தி நூல் பதிவுபெற்ற ஏற்றுமதி வணிகர்களுக்கு விற்பனை செய்யப்படுகையில், அந்த விற்பனை குறித்து வரி விதிக்கப்படுவதினின்றும் கீழ்க்காணும் நிபந்தனைக்குட்பட்டு விலக்கு வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வரி விதிப்பு அதிகாரிகளுக்கு மன நிறைவளிக்கும் வகையில் விற்பனைத் தேதியிலிருந்து ஆறு திங்களுக்குள் வணிகர்கள் பருத்தி நூல் ஏற்றுமதி செய்யப்பட்டதை மெய்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இந்த விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. பதிவு பெறு ஏற்றுமதியாளர்கள் செய்யும் விற்பனையைப் பொறுத்தவரையில், கப்பலில் ஏற்றுமதி செய்ததற்கான பத்திரங்கள், ஆலைகள் விற்பனை செய்த நூலின் அளவு, தரம், ஆகிய விவரங்களுடன் ஆலைகள் கொடுத்த விற்பனைப் பட்டிகள் ஆகியவற்றைக் கொடுத்து, பதிவு பெறு ஏற்றுமதியாளர்கள் தொகை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்று ஆணையிட்டுள்ளது. இத்தகைய தடைகள் இருந்த போதிலும், இத்துறை வரி வருவாய் நிலையை நுணுக்கமாக மேற்பார்வையிட்டு, ஆய்வு செய்ததன் மூலமாக வரி வருவாயில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்பட்டுள்ளது. மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனுக்குடன் அறிவுரைகள் கொடுக்கப்பட்டும், தொழில், வாணிபம் வாயிலாக கிடைக்கப் பெறும் புகார்களுக்கு உரிய நாட்டம் செலுத்தியும், உண்மையான நேர்வுகளில் குறைகளைப் போக்கியும், நடவடிக்கைகள் எடுப்பதனால், மனக்கசப்புகள் பெரிதும் குறைவதுடன் வரி வருவாயும், அதிகரித்துள்ளது. துறைத் தலைமை நிலையில் வரி வருவாய் பற்றிய நிலை குறித்து அவ்வப்போது ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. வாணிபம் நடைபெறும் இடங்களுக்கு அடிக்கடியும், திடீரென்றும் சென்று பார்வையிட்டு, இருப்புகளைச் சரி பார்ப்பதன் மூலமாகவும் சோதனைச் சாவடிகளில் நிலையான கண்காணிப்பு மேற்கொள்வதன் மூலமாகவும், வரி ஏய்ப்புகளைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(b) மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956.

1969 ஜனவரி முடியவும், முந்திய ஆண்டு இதே கால அளவிலும், மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்க் கிடைத்த வரி வசூல் புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

| கால அளவு. | மொத்த வரவு. (ரூ. லட்சத்தில்). | அதிகரித்த தொகை. |
|---|---|---|
| 1967-68 (1968 ஜனவரி வரை) .. .. | 854·06 | |
| 1968-69 (1969 ஜனவரி வரை) .. .. | 860·76 | 6·70 (அல்லது 1 சதவீதம்). |

இந்த ஆண்டில் விதிக்கப்பட்ட வரி வீதத்தில் மாற்றம் ஏதுமில்லை. 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதியிலிருந்து மத்திய விற்பனைவரி மூன்று சதவீதம் அதிகரிக்கப்பட்டபோதிலும் கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் குறிப்பிடத்தக்க அளவில் வருவாய் அதிகரிக்கவில்லை. பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்ட நெருக்கடி, பருத்தித் தொழிலில் ஏற்பட்ட மந்தநிலை, மோட்டார் வண்டிகள், உதிரிப் பகுதிகள் ஆகியவை குறித்து மாநிலங்களுக்கிடையே செய்யப்படும் வணிகத்தில் ஏற்பட்ட பொதுவான பொருளாதார மந்தநிலை, வேர்க்கடலை, கடலை எண்ணெய், ஏனைய பருவகாலப் பொருள்கள் இவற்றை மாநிலங்களுக்கிடையில் விற்பனை செய்யும்போது பொதுவாக ஏற்பட்ட மந்தநிலை ஆகியவையே இதற்குக் காரணமாகும்.

1956-ம் ஆண்டு மத்திய விற்பனைவரிச் சட்டத்தின் 8-வது பிரிவைச் சேர்ந்த (2), (2 A), (5) ஆகிய உட்பிரிவுகள் அரசியலமைப்பு செல்திறன் உடையனவாகும் என தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனினும், 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு முன்னதாக உள்ள கால அளவுக்கு 1956-ம் ஆண்டு மத்திய விற்பனைவரிச் சட்டத்தின் கீழ் வரிவிதிப்பு செய்யப்படுவதற்காக ஆயத்தீர்வையையும் வியாபாரத் தொகையில் சேர்க்கக்கூடாது என்ற சென்னை உயர்நீதி மன்றத்தின ஆணையை தலைமை நீதிமன்றம் உறுதி செய்தது. மொத்த வியாபாரத் தொகையில் ஆயத் தீர்வையைச் சேர்த்து 1956-ம் ஆண்டு மத்திய விற்பனைச் வரிச் சட்டத்தின் கீழ் அரசு வரி வசூலித்ததால், கடந்த காலத்தில் விதிக்கப்பட்ட வரியைச் செல்திறனுள்ளதாக்குவதற்காக தமிழ் நாடு 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (ஐந்தாவது) திருத்த அவசரச் சட்டத்தை அரசு சாற்றுரைத்தது. இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது) திருத்தம் இயற்றப்பட்டுள்ளது.

(c) தமிழ் நாடு 1939-ம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்புச் சட்டம்.

தமிழ் நாடு 1939-ம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்புச் சட்டம் குறித்து 1969-ம் ஆண்டு ஜனவரி இறுதிவரை கிடைத்த வருவாய்க் கணக்கு விவரமும் முந்தைய ஆண்டில் அதே கால அளவில் கிடைத்த வருவாய்க் கணக்கு விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| கால அளவு. | | மொத்த வருவாய். | அதிகரித்த தொகை. |
|---|---|---|---|
| | | (ரூ. லட்சத்தில்). | |
| 1967-68 (1968 ஜனவரி வரை) | .. .. | 411·22 | |
| 1968-69 (1969 ஜனவரி வரை) | .. .. | 472·15 | 60·93 (அல்லது 15 சத வீதம்). |

எண்ணெய் நிறுவனங்கள் எரி எண்ணெய் விற்பனை செய்யும் முதல் நிலையில் இந்த வரி ஒருமுனை வரி விதிப்பாகும். இந்த ஆண்டில் இச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் எத்தகைய மாற்றமுமில்லை. தமிழ்நாடு 1939-ம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் வரி விதிப்பு வீதத்திலும் மாற்றம் ஏதுமில்லை.



(d) தமிழ் நாடு 1939-ம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

தமிழ்நாடு 1939-ம் ஆண்டு கேளிக்கை வரி சட்டத்தைப் பொறுத்த வரையில், 1969-ம் ஆண்டு ஜனவரி இறுதிவரையில் கிடைத்த வருவாய்க் கணக்கு விவரமும் கடந்த ஆண்டு இதே கால அளவில கிடைத்த வருவாய்க் கணக்கு விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கால அளவு. | | கிடைத்த மொத்த வருவாய். | அதிகரித்த தொகை. |
|---|---|---|---|
| | | (ரூ. லட்சத்தில்). | |
| 1967-68 (1968 ஜனவரி இறுதிவரை) | .. | 267·17 | |
| 1968-69 (1969 ஜனவரி இறுதிவரை) | .. | 305·38 | 38·21 (அல்லது 14 சத வீதம்). |

தமிழ்நாடு 1939-ம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் வரி வீதத்தில் எத்தகைய மாற்றமுமில்லை. கடந்த ஆண்டில் இதே கால அளவில் கிடைத்த வருவாயைக் காட்டிலும் ரூ. 38·21 லட்சம் அளவிற்கு வருவாய் அதிகரித்துள்ளது. கேளிக்கை வரியின்கீழ் வசூலிக்கப்பட்ட வருவாயில் 90 சதவீதம் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டது. ஊர் ஊராகச் செல்லும் திரைப்படக் கொட்டகைகளே பெரிதும் வரி ஏய்ப்பு செய்ய முனைகின்றன. இவற்றை இத்துறை கண்டு பிடித்தது. இத் திரைப்பட அரங்குகளைக் கண்காணிப்பதற்காக இந்த ஆண்டு அரசு சிறப்புப் பணியாளர்களை நியமிக்க ஒப்புதலளித்தது. இந்த சிறப்புப் பணியாளர்கள் எதிர்பாராதவிதமாக திரைப்பட அரங்குகளைக் கண்காணித்து வருவதால் திரைப்பட அதிபர்கள் செய்யும் முறைகேடுகளைத் திறம்படத் தடுத்துவிட முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றைக் கண்டுபிடிப்பதன் மூலம் இந்தத் தலைப்பின்கீழ் வரவினத்தைப் பெருக்க முடியும்.

(e) தமிழ் நாடு 1961-ம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

தமிழ் நாடு 1961-ம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம் குறித்து, 1969-ம் ஆண்டு ஜனவரி இறுதிவரையில் வருவாய்க் கணக்கும் முந்தைய ஆண்டில் இதே கால அளவில் கிடைத்த வருவாய்க் கணக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| கால அளவு. | | கிடைத்த மொத்த வருவாய். | அதிகரித்த தொகை. |
|---|---|---|---|
| | | (ரூ. லட்சத்தில்). | |
| 1967-68 (1968 ஜனவரி இறுதிவரை) | .. | 270·97 | |
| 1968-69 (1969 ஜனவரி இறுதிவரை) | .. | 310·89 | 39·92 (அல்லது 15 சத வீதம்). |

இச்சட்டம் 1961-ல் முதலில் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. 1962-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதியன்றிலிருந்து செயல்படுத்தப்பட்டது. இந்த வரி கேளிக்கை வரியின் மீதும் காட்சி வரியின் மீதும் மேல் வரியாக விதிக்கப்படுகிறது. உள்ளாட்சி மன்றங்கள் மேல்வரி விதிக்கும் அதிகாரம் பெற்றுள்ளன. தீர்மானம் நிறைவேற்றி அதை முறையாக வெளியிடுவதன் மூலம் இத்தகைய வரி விதிக்கும் அதிகாரத்தை அவை பெறுகின்றன. அதிக அளவு வரி கேளிக்கை வரிக்குச் சமமாகவும் காட்சி வரியைப் போல் மூன்று மடங்கும் விதிக்கத்தக்கதாகும். மேல்வரி வீதம் உள்ளாட்சி மன்றங்களின் முடிவிற்கேற்ப மாறுபாடுகிறது. இந்த மேல்வரியின் மூலம் கிடைக்கும் தொகை முழுவதும் உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்படுகின்றன.

(f) தமிழ் நாடு 1935-ம் ஆண்டு பந்தய வரிச் சட்டம்.

1935-ம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின்கீழ் கிடைக்கும் வருவாய் கிண்டியிலும், உதகையிலும் நடத்தப்படும் குதிரைப் பந்தயங்கள் மூலம் பெறப்படுகிறது.

1969-ம் ஆண்டு ஜனவரி இறுதிவரை உள்ள கால அளவுக்கான வருவாய்க் கணக்கும் கடந்த ஆண்டில் இதே கால அளவில் கிடைத்த வருவாய்க் கணக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| கால அளவு. | | கிடைத்த மொத்த வருவாய். | அதிகரித்த தொகை. |
|---|---|---|---|
| | | (ரூ. லட்சத்தில்.) | |
| 1967-68 (1968 ஜனவரி இறுதிவரை) | .. | 44·13 | |
| 1968-69 (1969 ஜனவரி இறுதிவரை) | .. | 67·54 | 23·41 (அல்லது 53 சத வீதம்). |

சென்னை கிண்டி குதிரைப் பந்தயத்தில் மொத்த பணயத் தொகை மின்பொறிகளின் (Electric totalisators) மீதும் பந்தயப் பணயத் தொழிலர் (Book makers) மீதும் விதிக்கப்படும் வரி 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ம் தேதி முதல் 12½ சத வீதத்திலிருந்து 15 சத வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

சென்னை கிண்டி குதிரைப்பந்தயத்தில் மொத்த பணயத் தொகையின் பொறிகள் அல்லாத ஏனைய பொறிகள் மீது அதாவது இருநிலைப் பந்தயம் (Double events), மூன்று நிலைப் பந்தயம் (treble events), ஜாக்பாட், குவினெல்லா (quinella) மதிப்பீட்டுப் பந்தயம் (Forecast) ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரி வீதமும் 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் தேதியிலிருந்து 15 சத வீதத்திலிருந்து 20 சத வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இச் சட்டத்தை செயல்படுத்துவதில் மாற்றம் ஏதுமில்லை.

9. **நகர்ப்புற நிலவரி.**—வேளாண்மைச் சார்பற்ற பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் நகர்ப்புற நிலங்களின் நகர நிலங்களின் மதிப்பு பேரளவுக்கு உயர்ந்துவிட்டதற்குச் சமமாக மாநில வருவாயைத் திரட்டுவதற்காக, இவ்வரசு தமிழ்நாடு 1963-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தை இயற்றியது. இச் சட்டத்தின் 7-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்கீழ் ஒரு துணை மண்டலத்திலுள்ள நகர்ப்புற நிலத்திற்கு முடிவு செய்யப்பட்ட அங்காடி மதிப்பு நகர்ப்புற நிலத்தின் வரியை முடிவு செய்வதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. நகர்ப்புற நிலத்தின் சராசரி சந்தை மதிப்பு வீதத்தில் நூற்றுக்கு 4 காசு வீதம் வரி வீதம் முடிவு செய்யப்பட்டது. இது குறித்து மாநில அரசு சட்டம் கொண்டுவந்தது சரிதானா என்பதுபற்றி உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுவில் மேற்படி சட்டம் தன் போக்கானதென்றும் வரி விதிப்பு சமமாக இல்லையென்றும் இச் சட்டம் இந்திய அரசியலமைப்பின் 14-வது விதிக்கு முரணானதென்றும் அந்த மனுவில் சொல்லப்பட்டுள்ளது. அத்தகைய சட்டம் ஒன்றைச் சட்டமன்றம் இயற்றியது சரியேயென்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அங்காடி மதிப்பு முடிவு செய்த அடிப்படையைப் பொறுத்து மேற்படி சட்டம் ஒரு சார்புடையதென்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்து மேற்படி சட்டம் தள்ளப்பட்டது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்கிணங்க தமிழ் நாடு 1966-ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி அவசரச் சட்டம் (தமிழ் நாட்டு அவசரச் சட்டம்) 1966-ம் ஆண்டு மே மாதம் 20-ம் தேதியன்று ஆளுநர் அவர்களால் சாற்றப்பட்டது. இந்த அவசரச் சட்டம் பின்னர் தமிழ்நாடு 1966-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டமாக இயற்றப்பட்டது. இச் சட்டம் 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு சென்னை மாநகரில் செயலுக்குக் கொண்டுவரப்பட்டதாகக் கருதப்பட்டது.





தமிழ்நாடு 1966-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் செல்திறனை மறுத்து 400 ரிட் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. உயர் நீதிமன்றத்தின் முழு நீதிபதிக் குழுவினர் ரிட் மனுக்களை விசாரித்தனர். அவர்கள் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் தேதியன்று தீர்ப்பு வழங்கினர். தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தினை இயற்றுவதற்கு மாநில அரசுக்குத் தகுதியுண்டு என்று உயர் நீதிமன்றத்தின் முழு நீதிபதிக் குழு தீர்ப்பளித்தது. ஆனால், நகர்ப்புற நிலத்தின் அங்காடி மதிப்பை முடிவு செய்வது குறித்த சட்டத்தின் 6-வது பிரிவு இந்திய அரசியலமைப்பின் 14, 19 (1) (f) பிரிவுகளுக்கு முரணானதாகுமென்று பெரும்பான்மையான நீதிபதிகள் கருதினர். உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து அரசு தலைமை நீதிமன்றத்திடம் மேல் முறையீடு செய்துகொண்டது. தலைமை நீதிமன்றம் இந்த வழக்கு குறித்து இறுதியான முடிவெடுப்பதற்காக மார்ச் மூன்றாவது வாரத்தில் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவிருக்கிறது. மேல்முறையீடு பற்றிய தீர்ப்பு அளிக்கப்படாததால் அதுவரை சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைச் செயல்படுத்தாமல் தடையாணை பிறப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் இந்த வேண்டுகோள் தள்ளிவிடப்பட்டது.

சென்னை உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பையொட்டி, நகர்ப்புற நிலவரி வசூலிக்கப்படக்கூடாதென்றும் இச் சட்டத்தின்கீழ் கேட்பு அறிக்கைகள் கொடுக்கப்படக்கூடாதென்றும் வரித்தீர்வை ஆணைகள் பிறப்பிக்கப்படுவதை உடனடியாக நிறுத்திவிட வேண்டுமென்றும் வருவாயத்துறை வாரியத்திற்கு நகர்ப்புற நிலவரிப் பிரிவிற்கு உத்தரவிடப்பட்டது. நகர்ப்புற நிலவரி வசூலிப்பதை கவனித்துக்கொண்டிருந்த பணியாளர்கள் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ம் தேதியன்று கலைக்கப்பட்டனர். மிகவும் தேவையான பணியாளர்கள் மட்டுமே எஞ்சியுள்ள பணிகளைக் கவனித்து வருகின்றனர்.

தலைமை நீதி மன்றத்திடம் செய்துகொள்ளப்பட்ட மேல் முறையீடு குறித்து இன்னும் தீர்ப்பளிக்கப்படாததால், இந்த மேல் முறையீடு குறித்து தலைமை நீதிமன்றம் முடிவெடுத்த பிறகு ஏற்கனவே வசூலிக்கப்பட்ட நிலவரியைத் திருப்பிக் கொடுத்துவிடுவது பற்றி ஆலோசிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. இதுவரை நகர்ப்புற நிலவரி ரூ. 1·01 கோடி அளவுக்கு வசூலிக்கப்பட்டுள்ளது.

———

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

வெள்ளிக்கிழமை, 1969 மார்ச் 21.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### முதலமைச்சர்கள் மகாநாடு

*395 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதத்தில் கூடிய முதலமைச்சர்களின் கூட்டத்தில் கஜேந்திரகட்கர் கமிஷன் தீர்ப்பைப்பற்றி விவாதிக்கப்பட்டா ?

(இ) ஆம் எனில், நமது சர்க்காரின் அபிப்பிராயம் என்ன கூறப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

(அ) ஆம், ஐயா.

(இ) கஜேந்திரகட்கர் ஆணைக்குழு வரையறுத்துள்ள பாங்கிற்கிணங்க அகவிலைப்படி வீதங்களை, விலைவாசிகள் ஏறுமுகமாயுள்ள காலத்தில் உயர்த்த வேண்டியது அவசியமென்பதும், இதற்கென மாநிலங்களுக்குத் தக்க நிதி உதவியை மத்திய அரசு அளிக்க வேண்டுமென்பதும் இந்த அரசாங்கத்தின் கருத்தாகும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், அகவிலைப்படி வீதங்களை உயர்த்துவது தவிர, வேறு எந்த எந்தப் பிரச்சினைகளைப்பற்றி அந்தக் கமிஷன் தீர்ப்பிலே இருந்தது ? அது சம்பந்தமாகவும் விவாதிக்கப்பட்டதா ? அதன் விவரங்களை முதலமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எல்லாப் பிரச்சினைகளும் விவாதிக்கப்பட்டன. இந்த அரசின் கருத்துக்களை மாண்புமிகு முன்னாள் கூட்டுறவு அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் அந்த மாநாட்டில் எடுத்து விளக்கி இருக்கிறார்கள். கடிதத்தின் மூலமும் அரசாங்கத்தின் கருத்துக்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. அவைகளாவன—

1960-ல் செய்யப்பட்ட சம்பள மாற்றத்திற்குப் பிறகு, மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு ஏதாவது கிராக்கிப் படியில் உயர்வு அளிக்கப்படுமானால், அதே வீதத்தில் மாநில அரசாங்க ஊழியர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று மாநில ஊதியக் குழு குறிப்பிட்டிருக்கிறது.

இந்த அரசாங்கம் தன்னுடைய ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கிராக்கிப்படி உயர்வை ஒத்துக்கொள்ள வேண்டுமென்றும் இந்தத் தவிர்க்கமுடியாத செலவைச் சமாளிக்க மத்திய அரசாங்கத்தின் [illegible] உதவியைக் கோர வேண்டும் என்றும் இருந்தது.

[1969 மார்ச் 21

தொடர்ந்து விலைவாசிகள் ஏறிக்கொண்டு போகும்போது, கிராக்கிப் படியில் மாற்றம் என்பது தவிர்க்க முடியாததாகவும், ஒத்துக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

ஆகவே, மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கத்திற்கு, குறிப்பிட்டு, மாநில அரசாங்கம் தன்னுடைய சிப்பந்திகளின் கிராக்கிப் படியை உயர்த்துவதற்காக என்று, தனிப்பட, தற்போது எவ்வாறு மாநில அரசாங்கம் எப்படி உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அவர்களுடைய ஊழியர்களுக்குக் கிராக்கிப் படி உயர்விற்காக உதவி அளிக்கிறதோ, அந்த வகையில் உதவி செய்ய ஒரு திட்டம் வகுக்கவேண்டும்.

இது சம்பந்தமாக அவ்வப்போது ஏற்படும் மாநில அரசின் பொருளாதாரத் தேவைகளை, மத்திய அரசும், மாநில அரசும் கலந்து பரிசீலனை செய்ய ஏதாவது ஏற்பாடுகள் செய்தாக வேண்டும்.

மாநில சிப்பந்திகளுக்கு இந்த நிலைமை ஏற்படாவிட்டால் அதனால் பொது நிர்வாகம் கெடுவதுடன், மாநில அரசினைப் போலவே மத்திய அரசும் சிரமப்பட வேண்டிய நிலைமைகள் ஏற்படும்.

ஆகவே, மத்திய, மாநில நிலைமைகள் ஆராயப்பட்டு, இந்தத் திட்டத்தினை அமல் செய்வதற்கு ஒரு பொதுவான நிலைமையினை ஆராயவேண்டும் என்று கருத்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** நமது சர்க்கார், கஜேந்திரகட்கர் கமிஷன் சிபார்சுப்படி அதிக உதவியை மத்திய அரசிடமிருந்து கேட்டதே, அதற்கு அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் ? கொடுப்பதாக இருக்கிறார்களா ? இல்லையா ? அவர்கள் கொடுக்கவில்லையென்றால், நமது மாநில சர்க்காரே தன்னுடைய நிதியிலிருந்து இவர்களுக்கு அதிகக் கிராக்கிப் படி தரக்கூடிய சாத்தியம் இருக்கிறதா ? அந்த வகையில் நமது மாநில சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்குள் 'கொடுக்கவில்லையென்றால்' என்ற கேள்விக்கு விடை காண வேண்டிய அவசியம் இல்லை.

DR. H. V. HANDE : Sir, according to the recommendations in the report of the Gajendragadkar Commission, what is the extra committment on the part of the Central Government ? How much money are we going to receive from the Central Government by way of assistance for the grant of extra dearness allowance on a par with the dearness allowance granted to the employees of the Central Government?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதற்காக 39 கோடி ரூபாய் அளவுக்கு தமிழ் நாட்டுக்கு மத்திய அரசு வழங்கவேண்டும் என்று கேட்டிருக்கின்றோம். அரசாங்க ஊழியர்களுக்கு 1969-70-ம் ஆண்டில் டியர்னஸ் அலவன்ஸ் கொடுத்தவகையில் மொத்தமாக 28·6 கோடி ரூபாய் அதன் மூலமாக நமக்குத் தேவைப்படுகிறது. 1967-68-ம் ஆண்டில் இரண்டு முறை டியர்னஸ் அலவன்ஸ் உயர்த்திக் கொடுக்கப்பட்டதாலும், 'அரியர்ஸ்' நான்கு மாதங்களுக்குச் சேர்த்துக் கொடுத்ததால் மாநில அரசுக்கு 9·2 கோடி ரூபாயும், 1968-69-ம் ஆண்டில் இரண்டு முறை டியர்னஸ் அலவன்ஸ் கொடுத்த வகையில் 4 கோடி ரூபாயும் மாநில அரசுக்கு அதிகப்படியாகச் செலவாகி யிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, முப்பது கோடி ரூபாய்க்கு மேல் மாநில அரசுக்கு அதிகமாகச் செலவாகியிருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வாழ்க்கைப் புள்ளி



1969 மார்ச் 21]

கோவை நகரத்திலும், சென்னை நகரத்திலும், மதுரை நகரத்திலும் அதிகமாக இருக்கிறது. எந்த அடிப்படையில் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டன ? எந்தப் புள்ளிவிவர அடிப்படையில் அந்தத் தொகை கோரப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பொதுவான அடிப்படையில்தான் இந்த வாழ்க்கைத்தரக் குறியீடு எண்கள் சேகரிக்கப்படுகின்றன.

THIRU T. MARTIN : When such important matters are discussed in a conference like this, will the Hon. Chief Minister at least hereafter make the proceedings available to the House, if it is allowed under the law, for the perusal of the Members?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி வழங்கமுடியுமா என்று யோசித்து, கனம் உறுப்பினருடைய அபிப்பிராயத்தை நிறைவேற்றுவதற்கு முடியுமா என்று இந்த அரசு முயற்சி செய்யும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இப்படி அகவிலை உயர்ந்துகொண்டே போகக்கூடிய இந்தக் கால கட்டத்தில் பஞ்சப்படியும் உயர்ந்துகொண்டே போவது மட்டுமல்ல; சம்பளம் ஒரு பங்கு என்றால் பஞ்சப்படி நான்கு, ஐந்து பங்கு கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, மாநில அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்துடன் அந்தப் பஞ்சப்படியையும் இணைத்துக் கொடுக்கும் விஷயமாக என்ன முடிவு செய்யப்பட்டது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி இணைப்பதைப்பற்றி மாநில அரசாங்கம் ஒரு கருத்தினைத் தெரிவித்திருக்கிறது. அப்படி இணைக்கும் நேரத்தில், 500 ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்கக்கூடியவர்களைப் பொறுத்து தனியாகப் பத்துக் கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அது பற்றி மத்திய அரசாங்கத்திடம் மாநில அரசாங்கம் கேட்டிருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** நம்முடைய முதலமைச்சர் அவர்கள் படித்த கணக்கிலிருந்து குறைந்தது நாற்பது கோடி ரூபாய் வேண்டும் என்று தெரிய வருகிறது. இம்மாதிரி மற்ற மாநில முதலமைச்சர்களும் அவரவர்கள் மாநிலத்திலும் இந்தச் சிக்கல் இருக்கிறது என்று அந்த மாநாட்டில் எடுத்துச் சொன்னார்களா ? மத்திய அரசாங்கம் இப்படித் தொகை ஒதுக்கவேண்டும் என்று மற்ற மாநில முதலமைச்சர்கள் கேட்டார்களா ? அதற்கு மத்திய அரசினர் இணங்கினார்களா ? இல்லையென்றால், இதை எப்படிச் சமாளிப்பது ? நம்முடைய மாநில சர்க்காரின் பணத்தைக்கொண்டும் இதைச் சமாளிக்க முடியாதே. மத்திய அரசாங்கம் நாம் கோரிய தொகையைக் கொடுக்கவில்லையென்றாலும் கஷ்டம் ஏற்படுமே. இதற்கு ஏதாவது பரிகாரம் தேட முயற்சி செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 'நம்முடைய மாநிலம் கேட்பது போல் மற்ற மாநிலங்கள் கேட்கின்றனவா ?' என்று அந்தந்த மாநிலங்களில் உள்ள உறுப்பினர்கள் அந்தந்த மாநில அமைச்சர்களைப் பார்த்துக் கேட்டிருக்கவேண்டும். ஆனால், பெரும்பாலான மாநிலங்களில் கிராக்கிப் படி உயர்வுகள் கொடுக்கப்படவில்லை என்றுதான் நான் அறிகிறேன்.

[1969 மார்ச் 21

*Arrests on corruption charges.*

* 396. *Q.*—THIRU K. M. RAMASWAMI GOUNDER: Will the Hon. the Chief Minister be pleased to state: the number of persons arrested (i) in Police Service and (ii) in other services, on charges of corruption by the Directorate of Vigilance and Anti-Corruption between 1st January 1967 and 31st October 1967?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதி வரையிலான காலத்தில், காவல்துறையைச் சேர்ந்த 2 அரசாங்கப் பணியாளர்களும், ஏனையத் துறைகளைச் சேர்ந்த 16 பேரும் கைது செய்யப்பட்டனர்.

THIRU T. MARTIN: May I request the Hon. Chief Minister to state whether the Directorate of Vigilance and Anti-Corruption have their sub-offices in all the District Centres of the State?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்த விவரங்கள் இல்லை.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவர் அவர்களே, சில உண்மையான வழக்குகள் கூட நீதிமன்றத்திலே தோல்வி அடைந்து விடுகின்றன. எனவே, லஞ்ச ஊழல் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் அதிகாரிகளுக்கே நீதி வழங்கும் அதிகாரத்தை அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** 'உண்மையான வழக்குகள் நீதி மன்றத்திலே தோல்வி அடைகின்றன' என்பதை நான் இப்பொழுது ஒத்துக்கொள்வதாக இல்லை. வழக்கு உண்மையானதாக இருக்குமானால் நீதிபதி உண்மையான தீர்ப்புதான் அளிப்பார்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** 16 பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டு கைது செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அவர்களில் எத்தனை பேர்கள் நிரபராதிகள் என்று விடுதலை செய்யப்பட்டார்கள் ? எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்தப் பதினாறு பேர்களில் குற்ற மற்றவர் என்று விடுதலை செய்யப்பட்டவர் ஒருவர்தான்.

**திரு. சு. துரைசாமி:** 16 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எந்த எந்த ஊரிலிருந்து இந்தக் குற்றங்களைச் செய்திருக்கிறார்கள் என்று அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** முன்பே சொன்னேன், அந்த விவரம் இல்லை என்று.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, இந்த லஞ்சக் குற்ற வழக்குகளில் பிடிபட்டவர்கள் எவ்வளவு தொகை சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் ? அதிகப்படியான தொகையா, குறைந்த தொகையா என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்த வழக்குகள் பற்றிய விவரங்கள் எல்லாம் இல்லை. எத்தனைபேர் மீது வழக்கு போடப்பட்டது, அந்த வழக்குகள் எந்த நிலையில் இருக்கின்றன என்ற விவரங்கள் மாத்திரம்தான் என்னிடத்தில் இருக்கின்றன.



1969 மார்ச் 21]

**வேட்டைக்காரன்புதூரில் விவசாய வருமான வரி வசூல்**

* 397 வினா.—திரு. கரு. சீமைச்சாமி,
திரு. வி. கே கோதண்டராமன்,
திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்,
திரு. என். எஸ். வி. சித்தன்.
} மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) வேட்டைக்காரன்புதூரில் விவசாய வருமான வரி பாக்கியை வசூலிப்பதற்காகச் சென்ற அதிகாரிகளால் தனியார் ஒருவர் சித்திரவதை செய்யப்பட்டது சம்பந்தமான புகாரை விசாரிக்க தமிழ்நாடு அரசு ரெவின்யூ போர்டு மெம்பர் ஒருவரை நியமித்துள்ளதா ?

(இ) ஆம் என்றால், அதன் விபரமென்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) சம்பவத்தை ஒட்டிய சில வழக்குகள் வழக்குமன்றத்திலுள்ளதால், விவரங்கள் தெரிவிக்க இயலவில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் என்று சொல்லக்கூடியவர் அதிகாரிகளாலும், போலீஸ் அதிகாரிகளாலும் அடிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டாரா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இந்தச் சம்பவத்தையொட்டிய சில வழக்குகள் வழக்குமன்றத்தில் இருப்பதால் விவரங்கள் சொல்வதற்கில்லையென்று கூறினார்கள். மீண்டும் அதைப்பற்றி விளக்கம் கேட்கக்கூடாது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களே, வழக்குகள் வழக்குமன்றத்தில் இருக்கிறதென்பது எனக்குத் தெரியும். சித்திரவதை செய்த அதிகாரிகள் சஸ்பென்ஷனில் இருக்கிறார்களா அல்லது இப்பொழுதும் தொடர்ந்து வேலையிலே இருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அந்த வழக்கைப்பற்றி திரு. செய்வார் அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். வழக்குமன்றத்தில் வழக்கு இருப்பதன் காரணமாகத்தான் அந்த அறிக்கை கூட வெளியிட முடியாமல் இருந்து வருகிறது. அந்த அதிகாரிகள் சஸ்பென்ஷனில் இருக்கிறார்களா, இல்லையா என்ற தகவல் என்னிடத்தில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் 398 முதல் 401 வரை, அமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க, பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

**பயிர் செய்வதற்கான செலவு**

* 402 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசினர் கணக்குப்படி நெற்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ஆகின்ற விவசாயச் செலவும், கரும்பு, வேர்க்கடலை ஆகியவற்றின் உற்பத்திக்கு ஆகின்ற செலவும் முறையே எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:**

**ஒரு ஏக்கர் நிலத்தில் பயிர் செய்வதற்கான செலவு :—**

| | |
|---|---|
| (1) நெல்— | |
| (அ) இறைவைப் பாசனம் மூலம் | ரூ. 330·00 |
| (ஆ) பாய்ச்சல் பாசனம் மூலம் | ரூ. 268·00 |
| (2) கரும்பு— | ரூ. 1081·74 |

(3) வேர்க்கடலை—

(அ) மானவாரி—

(1) துறையினரின் முறை.

| | |
|---|---|
| கொத்து வேர்க்கடலை, கொடி வேர்க்கடலை இவை இரண்டிற்கான சராசரி செலவு. | ரூ. 343·00 |

(2) உள்ளூர் முறை—

| | |
|---|---|
| கொத்து வேர்க்கடலை, கொடி வேர்க்கடலை இவை இரண்டுக்குமான சராசரி செலவு. | ரூ. 286·62 |

(ஆ) பாசனம் மூலம் விளைவித்தல் :—

துறையினர் முறை :—

| | |
|---|---|
| (1) கொத்து வேர்க்கடலை வகைக்கும், கொடி வேர்க்கடலை வகைக்கும் சராசரி செலவு. | ரூ. 575·75 |

(2) உள்ளூர் முறை :—

| | |
|---|---|
| கொத்து வேர்க்கடலை வகைக்கும், கொடி வேர்க்கடலை வகைக்கும் சராசரி செலவு. | ரூ. 380·50 |

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லியது எல்லா மாவட்டங்களுக்கும் பொருந்துமா ? அல்லது சில குறிப்பிட்ட மாவட்டங்களுக்குப் பொருந்துமா? ஒரு ஏக்கருக்கு எவ்வளவு செலவாகிறது ? எவ்வளவு வருமானம் கிடைக்கிறது என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள்தான் கணக்கு விவரங்களைப் படித்துவிட்டாரே ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, சராசரிக் கணக்கு எடுத்துத்தான் இந்த விவரம் தெரிவிக்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்குச் சராசரி வருமானம் 768 ரூபாய் என்றும், செலவு 330 போக பாக்கி 438 ரூபாய் என்றும் கணக்கிடப்படுகிறது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கு 330 ரூபாய் என்றும் மற்றவற்றிற்கு 220 ரூபாய் என்றும் செலவு ஏற்படுகிறது என்று சொல்லப்பட்டது. இன்னின்ன அயிட்டத்திற்கு இவ்வளவு ரூபாய் செலவாகிறது என்கிற கணக்கை பேரவைமுன் வைக்க சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, முழு விவரமாக, அதாவது என்னென்ன நெல்லுக்கு என்று கேட்டால் தேவையான விவரம் அச்சடிக்கப்பட்டு, பேரவைமுன் வைக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்திச் செலவைக் கணக்கிடும்போது, விதைக்கான விலை, உழுத செலவு போன்றவை கணக்கிடப்படுவதோடு, சொந்த நிலம் வைத்திருப்பவர்கள் உழைக்கும்போது அவர்களுடைய உழைப்புச் செலவையும் சேர்த்துக் கணக்கிடப்படுகிறதா ? அப்படியென்றால் அவர்களுடைய உழைப்புச் செலவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.



படுத்தப்படுமா ? தற்போது 85 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்க உணவு அமைச்சர் அவர்கள் குறைந்தபட்சம் 100 ரூபாய் ஒரு டன்னுக்கு விலை கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, இதை அதிகப்படுத்த மாநில அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் முழுமையாகத் தெரிந்துகொண்டு கேட்கவில்லையென்று நினைக்கிறேன். கரும்பு விலை டன்னுக்கு 90 ரூபாய் என்று விற்கப்படுகிறது. ஆரம்பத்திலே டன்னுக்கு 85 ரூபாய் என்றும், சீஸன் காலத்தில் 90 ரூபாய் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆலைக்காரர்களும், விவசாயிகளும் சேர்ந்து கூடிப்பேசி எடுத்த முடிவு இது.

**திரு. ஆர். கருப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டைவிட இனி வருகிற ஆண்டுகளில் உற்பத்திச் செலவு அதிகமாகுமென எதிர்பார்க்கிறார்கள். உரத்தின் விலை 52 ரூபாய்க்கு விற்றது 59 ரூபாய் என்று கூடிவிட்டது. ஆகவே, உர விலையைக் குறைக்கும்படி மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுமா ? அல்லது அதற்குத் தகுந்த அளவில் மானியமாவது விவசாயிகட்குக் கொடுக்க மாநில அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியும் கேட்டு, பதிலையும் அவரே சொல்லியிருக்கிறார். மத்திய அரசு உரத்தின்மீது போட்டிருக்கிற வரியின் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தை மத்திய உணவு அமைச்சர் அவர்களிடத்தில் நானும், நிதியமைச்சர் அவர்களும் வற்புறுத்தியிருக்கிறோம். உரத்தின்மீது போடப்பட்டிருக்கிற வரியை வாபஸ் பெறவேண்டும். மத்திய உணவு அமைச்சர் அவர்களும், திரு. மொரார்ஜி தேசாய் அவர்களும் இதை மறு பரிசீலனை செய்வதாக கருத்து தெரிவித்திருக்கிறார்கள். பாராளுமன்றத்தில் இருக்கக்கூடிய காங்கிரஸ் உறுப்பினர்கள்கூட உரத்தின்மீது போட்டிருக்கிற வரியை எதிர்த்திருக்கிறார்கள். ஆனால் இந்த மன்றத்தில் திரு. நல்லசாமி அவர்கள் ஒருவரைத் தவிர மற்றக் காங்கிரஸ் உறுப்பினர்கள் இதை எதிர்த்ததாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வி உற்பத்திச் செலவைப்பற்றியது; விலையைப்பற்றியது அல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் நெல்லுக்கு என்ன விலை, கரும்புக்கு என்ன விலை என்று கேட்க ஆரம்பித்தால் துணைக் கேள்விகள் மூலக் கேள்வியையொட்டி அமையவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு ஏக்கருக்கு செலவு எவ்வளவு என்ற புள்ளிவிவரக் கணக்கைக் கொடுத்தார்கள். இந்தக் கணக்கு எங்கிருந்து பெறப்பட்டது? விதைப்பண்ணையிலிருந்து புள்ளிவிவரம் பெறப்பட்டதா? அல்லது அதிகாரிகள் இதைக் கொடுத்தார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, இந்தப் புள்ளிவிவரக் கணக்கை விவசாய இலாகா தயார் செய்துகொடுத்தது.

[1969 மார்ச் 21

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அரிசி ஆலைகளை நிறுவுவதற்கான அனுமதிச் சீட்டுகள் அரசாங்க உணவுத் துறையில் மட்டுமே வழங்கப்படுகின்றன. அந்த அனுமதிச் சீட்டுகளுக்கிணங்க அரிசி ஆலைகளை நடத்துவதற்கான உரிமங்கள் மாவட்ட வருவாய் அதிகாரிகளால் கொடுக்கப்படுகின்றன. மாவட்ட வருவாய் அதிகாரிகள் இல்லாத மாவட்டங்களில் அவை மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வழங்கப்படுகின்றன.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ரைஸ் மில் லைசென்ஸ் பெறவேண்டுமானால், மாநிலத்தின் தலைமை அதிகாரிகளிடத்தில் வந்து, அமைச்சர்களைக் கண்டு பேசி, சிபாரிசு பிடித்து வாங்கவேண்டியிருக்கிறது. எம்.எல்.ஏ.க்களாகிய எங்களுக்கு இதனால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. இந்த லைசென்ஸ் வழங்கும் அதிகாரத்தை மாவட்டத்திலே வழங்கினால் எங்களுடைய தொல்லைகளும் குறையும். ஆகவே, அத்தகைய அதிகாரத்தை மாவட்டக் கலெக்டர்களுக்கு வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இதில் தகராறுகள் ஏற்பட்டால் கடைசியில் அரசாங்கத்திடம் வந்ததுதான் முடிவு எடுக்கப்படுகிறது. ஆகையினால்தான் ரைஸ்மில் லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் இங்கேயே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரைஸ் மில் விஷயத்தில், "ரைஸ் மில்லிங் இண்டஸ்ட்ரியல் ரெகுலேஷன் ஆக்ட்" என்று மத்திய சர்க்கார் போட்டதன் விளைவாக மாநில அதிகாரிகள் யாருக்கு வேண்டுமானாலும் லைசென்ஸ் கொடுக்கலாம் என்று இருக்கிறது. அந்த அதிகாரத்தைக் கலெக்டர்களுக்குக் கொடுத்ததால் சிக்கல்கள் ஏற்பட்டு, தகுதியில்லாதவர்களுக்கெல்லாம் கிடைக்கிறது என்பதால்தான் சர்க்காரே பொறுப்பை ஏற்றுக்கொண்டது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, ரைஸ் மில் பற்றிய ஆக்டிங் 5—வது செக்ஷன் பிரகாரம் ராஜ்ய அரசே லைசென்ஸ் வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. மாவட்டக் கலெக்டர்களின் கீழ் இந்த அதிகாரம் இருந்தபொழுது சில தகராறுகள் ஏற்பட்டன. அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவே, லைசென்ஸ் வழங்கும் இறுதியான அதிகாரத்தை அரசாங்கமே பெற்றுக் கொண்டது.

**திரு. எம். சண்முகம் :** 1967 ஜனவரி மாதத்தில் மட்டும் அரிசி அரைக்கும் இயந்திரசாலைகளுக்கு 200-க்கும் மேற்பட்ட லைசென்சுகள் வழங்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன என்று விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மூலக்கேள்வியின்படி லைசென்சு வழங்க யாருக்கு அதிகாரம் இருக்கிறது என்கிற விவரத்தைத்தான் கொடுத்திருக்கிறேனே தவிர எத்தனை லைசென்சு வழங்கப்பட்டன என்கிற விவரம் தரவில்லை. அவர்கள் எந்தக் கணக்கை வைத்துச் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு லைசென்சு வழங்கப்பட்டிருக்கிறது என்கிற விவரம் கொடுக்கிறேன்.



1969 மார்ச் 21]

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஒரு குறிப்பிட்ட கிராமத்தைப் பற்றிக் கேட்கிறார்கள். தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன். பொதுவாக 10 °/. கைக்குத்தலுக்கு ஒதுக்கிய பிறகு ஒரு மில்லுக்கு 12,500 மூட்டை நெல் வரத்து இருக்கும் என்று தெரிந்தால், அந்தப் பகுதியில் ஆலை வரவேண்டியதன் நியாயத்தையும் பரிசீலித்து வழங்கப்படும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** இப்போது இருக்கிற விதிமுறைகளின்படி ஸ்டாடிஸ்டிகல் ஆபீசர், ஹெல்த் ஆபீசர் என்பதாகப் பரிசீலித்து லைசென்சு வழங்குவது என்கிறபோது காலதாமதம் ஆகிறது. இதைத் தவிர்க்க விதிமுறைகளைத் திருத்தும் உத்தேசம் உண்டா ? மாடர்ன் ரைஸ் மில் என்று கூட்டுறவு சங்கத்திலே ஆரம்பிக்கப்படுகிற பகுதியில் தனியாருக்கு ரைஸ் மில் வைக்க அனுமதி வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மாடர்ன் ரைஸ் மில் ஏற்படுத்தப்படுகிற பகுதியில் தனியார் ரைஸ் மில்கள் வைக்கவேண்டிய அவசியம் குறைகிறது. மற்றப் பகுதிகளுக்கு லைசென்சு வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** புதிய மில்களுக்கு லைசென்சு கொடுப்பதற்கு முன்பாக பழைய காலம் தொட்டே இருந்து வருகிற மில்களுக்கே போதுமான நெல் கிடைப்பதில்லை என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்போது இருக்கிற மில் போதாத இடங்களில் அனுமதி வழங்கப்படுகிறது. அங்கே அறவை செய்து சென்னை போன்ற நகரங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** மத்திய சர்க்கார் போடுகிற உத்தரவுகளை மாநில சர்க்கார் முழுக்க முழுக்க அப்படியே பின்பற்றுகிறதா? நம்முடைய மாநிலத்திற்கு ஏற்றாற்போல ஏற்றுக்கொள்கிறதா? அவர்கள் பணத்தைப் போட்டு மில் ஆரம்பிக்க முன்வரும்போது நமக்கு என்ன கஷ்டம்? கேட்கிறவர்கள் எல்லோருக்கும் அனுமதி வழங்கப்பட்டால் என்ன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பத்தாயிரம், இருபதாயிரம் என்று மூலதனம் போட்டு ஆரம்பிக்கிறபோது வட்டி, மூலதனம் இவற்றுக்கு ஏற்ற வருமானமாவது வரவேண்டும். திரு. கோதண்டராமன் சொல்கிற யோசனை மில்லை நடத்த முன்வருகிறவர்களுக்கே வசதியாக அமையாது. இதன் காரணமாக நாம் சில விதிமுறைகளைப் பின்பற்றத்தான் வேண்டியிருக்கிறது.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** ரைஸ் மில் ஏற்படுத்துவதற்கு 12,500 மூட்டைகளாவது வரத்து இருக்கக்கூடிய இடமாக இருக்கவேண்டும் என்கிறார்கள். அதுபோல இருந்து தாசில்தார் அலுவலகம், கலெக்டர் அலுவலகம் ஆகியவற்றின் மூலமாக அரசுக்குப் பரிந்துரைத்து அனுப்பப்படுகிற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றனவே, எந்த அடிப்படையில் நிராகரிக்கப்படுகின்றன?

[1969 மார்ச் 21

## *Fishing in sea coast.*

* 404. *Q.*—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether there is any scheme proposed by the Government for fishing through out the sea coast in our State; and

(*b*) if so, when it will be implemented?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ), (இ): இம்மாநிலத்தையொட்டியுள்ள அண்மைக்கடல், தொலைகடல், ஆழ்கடல் பகுதிகளில் மீன்பிடி வாய்ப்புக் கூறுகள் குறித்து ஆய்வுப்பணி மேற்கொள்ளப்படவேண்டும். அண்மைக் கடல் பகுதிகளில் விசைப்படகுகள் மூலமும் தொலைகடல் பகுதியிலும் ஆழ்கடல் பகுதியிலும் பெரிய கலங்களைக் கொண்டும் மீன் பிடிப்பதற்காக மேற்சொன்ன ஆய்வுப்பணி மேற்கொள்ளப்படவேண்டும். இம் முயற்சியில் முதற்படியாக சென்னை, கடலூர், இராமேசுவரம் ஆகிய இடங்களில் ஆய்வு அண்மைக்கடல் மீன்பிடி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அண்மைக்கடல் பகுதியில் மீன் பிடிப்பு வாய்ப்புகளின் ஆய்வை இந்த நிலையங்கள் நடத்துகின்றன. இந்த ஆய்விலிருந்து கண்டறிந்தவை விசைப்படகுகளின் உரிமையாளர்களுக்கும் பிற மீனவர்களுக்கும் தெரிவிக்கப்படுகின்றன. அவர்கள் அவற்றை மீன்பிடி வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்வர்.

Thiru B. VENKATASWAMY : Sir, fish is rich in proteins and it is much needed by our peopie and at the same time it has brought about Rs. 35 lakhs of foreign exchange this year to the Madras State and we can solve the food problem also to the maximum extent by fishing more fish. So, will this Government come forward to intensify sea-fishing throughout the Madras sea-coast and introduce deep-sea fishing also immediately in these hard days of food scarcity by getting aid from any of the foreign countries.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் சொல்வதுதான் அரசாங்கத்தின் கொள்கை. போதுமான அளவுக்கு அந்நிய நாட்டு உதவி பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது. பிரஞ்சு நாட்டு உதவியுடன் ஆழ்கடல் மீன்பிடி கப்பல் தயாரிக்கப்படுகிறது. பெல்ஜிய நாட்டு உதவியுடன் கட்டுமரத்திலேயே விசை பொருத்தி மீன்பிடிக்க வசதி செய்யப்படுகிறது. இப்படி மீன் பிடிப்பதற்கு மட்டும் அல்ல, உபயோகிப்போர் வசதியைக் குறித்தும் பல தொழிற்சாலைகள், மீன் பிடித் துறைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**திரு. மு. ச. சிவசாமி :** தூத்துக்குடி, கன்னியாகுமரி பகுதிகளில் உள்ள ஆழ்கடலில் ஜப்பான் நாட்டுக் கப்பல்கள் வந்து துறு பிஃஷ் பிடிப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதிகமான அளவில் அந்நிய நாடுகளால் விரும்பப்படுகிற துறு மீன்களை நாமும் பிடித்து ஏன் அந்நியச் செலாவணியைப் பெறக்கூடாது?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதுபற்றித் தகவல் இல்லை. விசாரிக்கிறேன்.



1969 மார்ச் 21]

**திரு. என். கிட்டப்பா :** உணவுப் பற்றுக்குறையை நீக்க அரசாங்கமே மீன்பிடித் தொழிலை ஏற்று நடத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அரசாங்கத் துறையில் மீன் பிடிப்பதைவிட தனியார் துறையில் இருப்பதுதான் லாபகரமாக இருக்கும். சமீபத்தில் எண்ணூரில் ஏற்படுத்தப்பட்ட தனியார் துறை மூலம் 35 லட்சத்திற்கு விரால் மீன் ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** நம்முடைய தமிழகத்தைச் சுற்றி பனிகாலம், வெப்பகாலம் என்பது இல்லாது உறையாமல் இருக்கிற கடலைப் பெற்றிருக்கிறோம். அண்டை நாடுகளில் இருந்து ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்கள் இங்கே வந்து மீன்பிடித்துச் செல்வதாகச் சொல்லப்படுகிறது. அதை நாம் ஏன் செய்ய முடியாது? இன்னும் அதிக அளவில் ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்களைக்கொண்டு அதிக அளவில் மீன்பிடித்து அந்நிய நாட்டுச் செலாவணியை ஈட்ட முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நமக்குப் போதுமான வசதி இல்லை. இந்த ஆண்டில் நான்கு ஆழ்கடல் மீன்பிடிக்கப்பல்களை அமைக்கிறோம். போதுமான அளவில் அமைக்க அந்நியச்செலாவணி இல்லை. கொச்சின் பகுதியில் கேரள அரசாங்கத்தார் அதிகக் கப்பல்களைக் கட்டுகிறார்கள். தமிழகத்தில் 500 மைல் கடற்கரை இருக்கிறது. நிறைய மீன்பிடித் துறைமுகங்களை அமைக்க வாய்ப்பும், வசதியும் இருக்கிறது. இப்போது பலர் இத்தொழிலில் மூலதனமிட முன்வருகிறார்கள். பஸ்கள் தேசியமாக்கபபட்டதன் காரணமாக பஸ் தொழிலில் ஈடுபட்டவர்கள் கூட இத்தொழிலுக்கு வருகிறார்கள். 36 அடி நீளமுள்ள படகுகள் கட்டப்படுகின்றன.

இப்போதுள்ள சூழ்நிலையில் மற்ற நாடுகளோடு போட்டியிடுகின்ற சூழ்நிலை நமக்கு இல்லை. ஆனால் சிறிது காலத்தில் நம்முடைய இத்தொழில் நல்லமுறையில் வளர்ச்சி அடைய எல்லாக் காரியங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், பொதுவாக நம்முடைய மீன முற்பகல்
வர்கூட்டத்தில் கட்டுமரங்கள்தான் அதிகமாக இருக்கின்றன. கட்டுமரங் 9-30
களில் ஆழ்கடலிலே போய் மீன்பிடிக்க முடியாத நிலைமை இருக்கிறது. எனவே பெல்ஜியத்திலிருந்து பசி பிணிபோக்கும் இயக்கத்தினர் 100 அவுட்போர்டு மோட்டார்கள் தரப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை வாங்கி, புன்னைக்காயல், பழைய காயல், பெரியதாழை, மணப்பாடு, ஆலந்தலை, உவரி, கூத்தன்குளி, இடிந்தகரை போன்ற இடங்களில் உள்ள மீனவர்களுக்கு வழங்கினால் அவர்களுக்கு மீன்பிடிக்க வசதியாக இருக்கும் என்பதால் அரசு அந்த இயக்கத்தோடு தொடர்பு கொண்டு அதிகமான அப்படிப்பட்ட அவுட்போர்டு மோட்டார்களை வாங்கி வழங்குவதற்கு முயற்சி செய்யுமா?

[1969 மார்ச் 21

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கடலோரப் பகுதிகளில் மீன்பிடிப்பது வரவேற்கக்கூடிய திட்டம்தான். அவர்கள் கடலோரம் இருக்கக்கூடிய மக்களுக்கும் கிராம மக்களுக்கும் டவுன் மக்களுக்கும்தான் சப்ளை செய்கிறார்கள். தூரத்திலே உள்ள வடஆற்காடு மாவட்டத்திற்குச் சப்ளை செய்வதில்லை. பிஷரீஸ் வேன் எல்லாம் இருக்கிறது. எனவே வடஆற்காடு மாவட்டத்திற்கோ அல்லது வேறு தூரத்தில் உள்ள இடங்களுக்கோ சப்ளை செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அவர்களுடைய தக்கோலத்திற்கு வேண்டுமானால் அனுப்பிவைக்கத் தயாராக இருக்கிறோம். வண்டிகள் போய்க்கொண்டிருக்கின்றன. கனம் அங்கத்தினர் அவர்கள் சாத்தனூர் மீன் சாப்பிடுவதற்கும் வசதி இருக்கிறது. நல்ல தண்ணீர் மீன் வேண்டுமானாலும் சரி, உப்புத் தண்ணீர் மீன் வேண்டுமானாலும் சரி அவர்கள் சாப்பிடுவதற்கு வசதி இருக்கிறது.

*Supply of raw rice in Madras.*

*405 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether the rupee-a-measure scheme with regard to raw rice supply in Madras city has been stopped; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, raw rice eaters as well as boiled rice eaters are living in Madras city and Coimbatore town. Raw rice eaters are deprived of rice at one rupee a measure even though they are very poor. So will this Government come forward to issue at least the coarse variety of raw rice at one rupee a measure at Coimbatore and Madras?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுது வழங்கப்படுவதிலே ஒன்றும் தடங்கல் இல்லை. கனம் உறுப்பினர் கேட்டிருக்கிற கேள்வி சென்னையைப் பொறுத்தது. இப்பொழுது கோயம்புத்தூரைப்பற்றியும் சேர்த்துக் கேட்கிறார்கள். சென்னையிலும், கோயம்புத்தூரிலும் புழுங்கல் அரிசியும், பச்சை அரிசியும் வழங்கப்படுவதில் எந்தவிதமான தடையும் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : It appears that there is a demand for boiled rice in hotter districts, and cooler districts like Dharmapuri and parts of Coimbatore district require only raw rice on the ground of health. Considering this, may I request the Hon. Minister for Food and Agriculture to state whether he will think of supplying more raw rice to the needy districts and seeing that the people are not put to inconvenience?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உஷ்ணப்பிரதேசம், அல்லது குளிர்ப்பிரதேசம் என்றல்ல பிரச்னை. சைவ உணவைச் சாப்பிடுகிறவர்கள் பச்சை அரிசியைச் சாப்பிடுகிறார்கள். அசைவ உணவு சாப்பிடுகிறவர்கள் (குறுக்கீடு) வினாயகம் அவர்களுக்குத் தெரியாதா [illegible]



1969 மார்ச் 21]

அவர்கள்தான் புழுங்கல் அரிசி அதிகமாக உபயோகப்படுத்தக்கூடியவர்கள். சென்னையிலே புழுங்கல் அரிசியும் தேவையான அளவுக்குக் கிடைக்கிறது, பச்சை அரிசியும் கிடைக்கிறது.

திரு. கே. வினாயகம் : சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் பச்சை அரிசி ஒரு ரூபாய்க்கு ஒரு படி என்று எப்பொழுதும் போடவில்லை, ஆரம்பித்ததிலிருந்தே இருந்தது இல்லை. ஆகையால் நிறுத்தப்படுவது என்ற பிரசனை இல்லை. புழுங்கல் அரிசி எப்படி இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் என்றாகிலும் சாப்பிட்டுப் பார்த்தார்களா? Is it not a fact that it is unfit for human consumption?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வினாயகம் அவர்களுக்குப் பல முறை சொல்லியிருக்கிறேன், கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு இருக்கக் கூடாது என்று.

THIRU K. VINAYAKAM : I want information from the Minister.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியிலே குற்றச்சாட்டு இருக்கக் கூடாது என்பதைத்தான் சொல்கிறேன். இப்பொழுது நமது விதிமுறைகளிலே கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டுகள் செய்யக்கூடாது என்று இருக்கிறது.

திரு. கே. வினாயகம் : எவ்வளவோ முறை பலர் குற்றம் சாட்டுவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு உதாரணம் திரு வினாயகம் அவர்கள் தரவேண்டும். எந்த உறுப்பினர் குற்றச்சாட்டு சொல்லும்போது அனுமதித்திருக்கிறேன், திரு. வினாயகம் சொல்லும்பொழுது மறுத்து இருக்கிறேன் என்பதை அவர்கள் சொல்லவேண்டும்.

THIRU K. VINAYAKAM : Why should the Government be so allergic?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அல்ல, பேரவைத் தலைவருக்கும் திரு. வினாயகம் அவர்களுக்கும் இருக்கிற வாதம். எப்பொழுது அப்படி அனுமதித்து இருக்கிறேன் என்பதை அவர்கள் சொல்லவேண்டும்.

திரு. கே. வினாயகம் : கேள்வி நேரம் என்பதே.... .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு கூடாது. தகவல் கேட்கலாம் என்றுதான் விதிமுறைகளிலே இருக்கிறது.

திரு. கே. வினாயகம் : தகவல்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேளுங்கள்.

THIRU K. VINAYAKAM : Is it fit for human consumption?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, வினாயகம் அவர்கள் சென்னையிலே ரேஷன் அரிசி அமைச்சர் அவர்கள் வாங்கிச் சாப்பிடுகிறார்களா என்று கேட்டார்கள். ரேஷன் அரிசிதான் வாங்கிச் சாப்பிடுகிறேன். Is it fit for human consumption? என்று கேட்டார்கள். திரு. வினாயகம் அவர்கள் உடம்பைப் பார்க்கிறபோதே It is fit for human consumption என்று தெரிகிறது.

[1969 மார்ச் 21

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, அரிசியாக மக்களுக்குக் கொடுப்பதிலே கெட்ட நிலைமையிலே அரிசியைப் போடுவதால்.. ...... (திரு கே. விநாயகம் எழுந்திருந்தார்)....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குள் என் திரு. விநாயகம் அவர்கள் எழுந்திருக்க வேண்டும் ? நான்தான் சொல்கிறேனே, குற்றச் சாட்டு கேள்வி நேரத்தின்போது கூடாது.

திரு. கே. என். குமாரசாமி: அரிசியின் நிலைமை மோசமாக இருக்கிறது. அரிசிக்குப் பதிலாக நெல்லைக் கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது போடுகிற அரிசியைவிட நல்ல அரிசியாகக் கொடுக்க முடியுமா என்று கேளுங்கள்.

திரு. கே. என். குமாரசாமி: இப்பொழுது வழங்குகின்ற அரிசியை விட நல்ல அரிசி கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நெல்லாகப் போடவேண்டுமென்பதை வீட்டிலே இருக்கிறவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். வீட்டிலே உள்ளவர்கள் என்ன செய்வார்கள் என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும். கைக்குத்தல் போன்றவற்றை தாய்மார்கள் செய்ய முடியாது. எனவே நெல்லாகக் கொடுத்துவிட்டால் அன்றாடம் வாங்கிச் சாப்பிடக் கூடியவர்கள் எப்படிச் சாப்பிட முடியும் என்பதையும் கனம் அங்கத்தினர் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. மகாதேவன்:சென்னையிலே உள்ள கோடம்பாக்கம் ரயில்நிலையம் அரிசி ஸ்டேஷன் என்று ஒரு பத்திரிக்கையில் பெயர் சூட்டக்கூடியஅளவுக்கு ஏராளமான அரிசி அங்கு வந்து இறக்கப்பட்டு கோடம்பாக்கம் ஸ்டேஷனுக்கும், நுங்கம்பாக்கம் ஸ்டேஷனுக்கும் இடையில் உள்ள மேம்பாலத்தின் அடியில் ஏராளமாக அரிசி விற்கப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படிப்பட்ட அரிசிக் கடைகள் இப்போதும் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: எங்காவது அப்படிப்பட்ட தவறுகள் நடக்கலாம். தவறு செய்கிறவர்கள் இயற்கையிலேயே இருக்கிறார்கள். கள்ள மார்க்கெட்டில் அதிகப்படியான விலைக்கு அரிசியை விற்றால் நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

THIRU B. VENKATASWAMY : Sir, the Hon. Minister has stated in his reply that in the Madras city and Coimbatore they are issuing raw and boiled rice. But my question is, whether this Government would come forward to issue one-rupee-a-measure of raw rice to the poor people living in the Madras city and Coimbatore?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போதே பச்சரிசி கொடுப்பதாகத்தான் தகவல் கொடுத்தேன். பச்சரிசி 1 லிட்டர் 66 பைசாவுக்குக் கொடுக்கப்படுகிறது. விவரத்தைத் தெரிந்து கொள்ளாமல் கேள்வி கேட்பதில் பயன் இல்லை.

### இடைக்கழி நாட்டில் கயிறு உற்பத்தி தொழிற்சாலை

* 329 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) மதுராந்தகம் வட்டம், இடைக்கழி நாட்டில் கயிறு உற்பத்தி தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?



1969 மார்ச் 21]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : அந்தப் பகுதியில் அதிகமான தென்னை மரங்கள் இருப்பதால் அங்குள்ள மக்கள் கயிறு உற்பத்தி செய்து வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மூன்றாண்டுகளுக்கு முன்பு இதைக் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. இனிமேலாவது கயிறு உற்பத்திச்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தத் தொழிற்சாலையைக் கூட்டுறவுத் துறையில் வைக்க அரசாங்கம் உதவி செய்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் அந்த முயற்சியை எடுத்துக் கொண்டால் அரசாங்கம் பரிசீலிக்கும்.

### தொழிற் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்கள்.

* 330 வினா.—திரு. ந. தருமலிங்கம்: மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பல துறையிலும் போதகர்களாகப் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஒரே விதமான அடிப்படை சம்பளம் தரும் செயற்குறிப்பு எதுவும் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆம், வெவ்வேறு தொழில்களைக் கற்பிக்கும் கைப்பணி ஆசிரியர்களைப் போலவே, முழுத் தகுதி பெற்றவர்களாய் தொடர்பான தொழில் ஆசிரியர்களாகவும், ஓவிய ஆசிரியர்களாகவும், தொழில்பயிற்சிப் பள்ளிகளில் நியமிக்கப்படுபவர்களுக்கும் ரூ. 150 உயரிய சம்பள வீதத்தைத் தொடங்குவது பற்றிய செயற்குறிப்பை அரசாங்கம் ஆலோசனை செய்துவருகிறது.

### தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி

* 331—வினா. திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை தனியார் நிறுவன ஆசிரியர்களுக்கு (Aided Sc':ool Teachers) வீட்டு வாடகை அலவன்ஸ் (House Rent Allowance) கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, may I know what would be the commitment to the Government if this kind of concession is granted to the teachers working in the aided schools and what is the thing which prevents them from doing their obligation to those teachers?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதில் எவ்வளவு மொத்தத் தொகை என்ற தகவல் இல்லை. உதவி பெறுகின்ற பள்ளிகளுக்கு இப்போதைக்கு ஹவுஸ் ரெண்ட் கொடுப்பதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா:** சென்னை மாநகரத்தில் ஆசிரியர்கள் வாங்கும் சம்பளத்தில் பாதியை வீட்டு வாடகையாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்தக் கஷ்டத்தை நீக்க வீட்டுப்படியை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஆசிரியர்களுடைய கஷ்டத்தை அரசாங்கம் உணருகிறது. வசதி ஏற்படும்போது பரிசீலிக்கப்படும்.

**திரு. டி. மார்டின்:** இந்த வீட்டு வாடகை உயர்வைத் தற்சமயம் கொடுக்க முடியாவிட்டாலும், கடந்த 3 மாதங்களாக உடன்குடி ஊராட்சி ஒன்றியம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடன்குடியைப் பற்றி திரு. மார்ட்டின் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கேள்வி சென்னையைப் பற்றியது.

THIRU T. MARTIN: Sir, the main question relates to teachers. தாங்களே ஆசிரியர்; ஆசிரியர்களுடைய நிலைமையை நன்றாகப் புரிந்தவர்கள். ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ் இப்போது கொடுக்க முடியாவிட்டாலும் நெல்லை மாவட்டத்திலுள்ள உடன்குடி ஊராட்சி ஒன்றியம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், கடையம் ஊராட்சி ஒன்றியம் ஆகிய ஒன்றியங்களில் பணி புரிந்துவரும் ஆசிரியர்களுக்குக் கடந்த மூன்று மாதங்களாகச் சம்பளம் கொடுக்கப்படாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற நிலை ஏற்படாதபடி அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காவது அரசாங்கம் உடனே நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஆசிரியர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரிதாபமாகக் கேட்டது உண்மையிலேயே வருத்தப்படக்கூடிய செய்திதான். அங்கத்தினர் சொன்ன நிகழ்ச்சியிலே யாருடைய பொறுப்பு என்று பார்க்க வேண்டும். பஞ்சாயத்தில் பணி புரிகின்ற ஆசிரியர்களுக்கு அரசாங்கம் எதைக் கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுத்திருக்கிறது. உடன்குடி பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்க வேண்டிய தொகையை முன்பணமாக கொடுத்திருக்கிறோம். அந்தப் பஞ்சாயத்து யூனியனில் நிதிநிலைமை சரியில்லை. இதுபோன்ற நிலைமைகளைப் பற்றி உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள். அப்படி பஞ்சாயத்து யூனியனில் நிதியில்லாத நிலைமையில் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டால் அரசு உதவி செய்ய வேண்டுமென்பது பற்றிய கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** வாழ்க்கைச் செலவுப் புள்ளி கூடியிருக்கும் காரணத்தால் அரசு தரப்பு பள்ளிக்கூடத்தில் பணிபுரிகிற ஆசிரியர்கள் அல்லலுக்குள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே, வாழ்க்கைச் செலவுப் புள்ளியை அடிப்படையாக வைத்து ஆசிரியர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** வாழ்க்கைச் செலவுப் புள்ளி அதிகரித்தவுடனே பஞ்சப்படியை உயர்த்த வேண்டுமென்ற முறையில் அதைக் கூட்டிக் கொடுத்தால் மறுபடியும் விலைவாசி ஏறுகிறது. இது ஒரு 'விஷியஸ் சர்க்கில்' சுற்றிச் சுற்றி வரும் நச்சு வட்டமாக இருக்கிறது. இதைப்பற்றி ஆராய்ந்து எப்படிச் செய்தால் விலைவாசியும் ஏறாமல் ஆசிரியர்களும் நல்வாழ்வு பெற முடியும் என்பதைப் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM: Sir, is it a fact that the house rent allowance is at present allowed only to teachers working in the Government educational institutions in the Madras City and if so, why invidious distinction is shown in the grant of the house rent allowance to the teachers working in other educational institutions in the Madras City?



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஆசிரியர்களுடைய கோரிக்கை அது தான். 'நீங்கள் இலவசக் கல்வித் திட்டத்தை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு தனியார் துறைப் பள்ளி ஆசிரியர்களுக்குக் குறைத்துக் கொடுப்பது சரியா' என்று கேட்கிறார்கள். அந்த நியாயத்திலே எந்த விதமான சந்தேகமும் இல்லை, எப்படிக் கொடுப்பது, கொடுத்தால் எவ்வளவு பணம் வேண்டும் என்பதுதான் நம்முன் உள்ள பிரச்சினை.

*New College for Madurai*

* 332 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government has permitted the State Wakf Board to start a college at Madurai this year; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) அரசாங்கத்திடமிருந்து அனுமதி எதும் பெற வேண்டிய தேவையில்லை.

(ஆ) அனுமதி வழங்குவதற்குத் தகுதி வாய்ந்த அதிகார நிறுவனமாகிய மதுரைப் பல்கலைக் கழகம் வக்ஃப் வாரிய நிர்வாகத்தின் கீழ் 1968-69-ம் ஆண்டில் கல்லூரி ஒன்றைத் தொடங்குவதற்குத் தாற்காலிக இணைப்பு வழங்கியுள்ளது.

புகுமுக வகுப்பில் பாடத்திட்டத்தின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| பகுதி 1 — | ஆங்கிலம். | |
| பகுதி 2 — | தமிழ், உருது, அராபி, ஹிந்தி. | |
| பகுதி 3 — | கணிதம், பௌதிகயியல், வேதியியல் இயற்கை, விஞ்ஞானம். | (80) |
| | பௌதிகயியல், வேதியியல் (கற்பிக்கும் மொழி ஆங்கிலம்). | (80) |
| | இயற்கை, விஞ்ஞானம், பௌதிகயியல், வேதியியல் (கற்பிக்கும் மொழி தமிழ்). | (80) |
| | பொருளாதாரம், வரலாறு, தருக்கவியல் (கற்பிக்கும் மொழி ஆங்கிலம்). | (90) |
| | பொருளாதாரம், வரலாறு, சிறப்புத் தமிழ் (கற்பிக்கும் மொழி தமிழ்). | (90) |

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** வக்ஃப் வாரியத்தின் சார்பில் மதுரை நகரத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கும் புதிய கல்லூரியில் எப்போது பட்டப் படிப்பு தொடங்கப்படும? அதற்குரிய புதிய கட்டடத்தை எப்போது அரசு கட்டிக் கொடுக்கும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கட்டடம் கட்டுவதும் பட்டப்படிப்பு தொடங்குவதும் ஒன்றுக்கொன்று இணைந்த செயல்களாகும். பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் உயர் பட்டப் படிப்புக்குப் பல்கலைக் கழகத்தின் அனுமதி பெற்றுத் தொடங்கப்படும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இரண்டாம் பகுதியில் தமிழ், உருது, இந்தி கற்றுக் கொடுக்கப்படும் என்றார்கள். இந்திப் படிப்பு சொல்லிக் கொடுக்கப் போவதில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

*Employment Officers—Employers contact*

* 406 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the details of the scheme of Employment Officers contacting employers adopted in Employment Exchanges?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிலதிபர்களுடன் தொடர்பு கொள்வது வேலை வாய்ப்பு அதிகாரிகளின் முக்கியமான அலுவல்களில் ஒன்று. உயிர்ப் பதிவேடுகளில் விண்ணப்பதாரர்களைக் கொண்டு பதவிக் காலியிடங்களை நிரப்புவதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு மட்டுமின்றி மாவட்டத்தில் உள்ள ஆள்பலம் குறித்துத் தொழிலதிபர்களுக்குத் தகவலும், புள்ளி விவரமும் தருவதற்காகவும் இந்தத் தொடர்பு வேண்டியுள்ளது. 1959-ம் ஆண்டு வேலை வாய்ப்பு அலுவலகங்கள் (பதவிக் காலியிடங்களைக் கட்டாயமாக அறிவித்தல்) சட்டத்தைச் செயல்படுத்துவதும் தொழிலதிபர்கள் தங்கள் தரப்பில் கடமைகளை நிறைவேற்றுவதும் இத் தொடர்பின் மற்றொரு நோக்கமாகும்.

இத்தகைய தொடர்புகளைப் பலனளிக்கத் தக்க வகையாகச் செய்வதற்கென பொதுத்துறையிலும், 10 அல்லது 10-க்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள தனிப்பட்ட நிறுவனங்களிலும் உள்ள எல்லாத் தொழிலதிபர்களின் பட்டியல் ஒன்றை வேலைவாய்ப்பு அதிகாரிகள் அனைவரும் வைத்து வருகின்றனர். எல்லா நிறுவனங்களும் படிப்படியாகத் தொடர்பு கொள்வதற்கு இவ்வதிகாரிகள் திங்கள் தோறும் தொடர்புத் திட்டம் வகுத்துக் கொள்கின்றனர். பட்டியலில் உள்ள எல்லாத் தொழிலதிபர்களையும் அவர்கள் ஆண்டுக்கு ஒரு முறையாகிலும் தொடர்பு கொள்ளும் வகையில் தொடர்புத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

**திரு. பி. வேலுசாமி :** சென்ற ஆண்டு இந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் ? அவர்களில் எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது ? எவ்வளவு பேர்களுக்கு கிடைக்காமல் இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தகவல் இல்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு தேடித் தரும் நிறுவனங்களிடம் தனியார் துறையில் தொழில் ஆரம்பிக்கிறவர்கள் இவைகளையெல்லாம் தெரிவிக்க வேண்டுமென்று இருந்தும்கூட பொதுவாகப் பல இடங்களில் இருந்தும் அப்படிப்பட்ட தகவல்களை அந்த அதிகாரிகளுக்குத் தருவதில்லை. அவரவர்களே நியமித்துக் கொள்கிறார்கள். ஏற்கனவே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கும் இந்த நேரத்தில் இந்த நிறுவனங்கள் மூலமாக அதிக வேலைகளை தேடித் தர முடியும். எனவே எல்லா தனியார் துறை நிறுவனங்களும் வேலை தேடித் தரும் அலுவலகங்களில் இருந்துதான் வேலைக்கு ஆட்களைக் கேட்க வேண்டும் என்ற ஒரு கண்டிப்பான உத்தரவை அரசு இடுமா ? அதை மீறுகிறவர்களுக்கு ஏதாவது தண்டனை கொடுக்க இந்த அரசு முடிவு எடுக்குமா ?





**திரு. ஏ. சி. நரசிம்மன் :** பல கூட்டுறவு நிறுவனங்கள் தாங்களாகவே நியமனம் செய்து கொள்கிறார்கள். அவர்கள் எம்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலம் விண்ணப்பங்களை வரவழைத்து நியமனங்கள் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அது பற்றிய தகவல் இல்லை.

**சுந்தரராஜபுரம் அருகிலுள்ள குறுகிய பாலம்**

* 407 வினா.— **திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் வட்டம், சுந்தரராஜபுரத்திற்கு அண்மையில் உள்ள பெரியாற்றுக் கால்வாயில் கட்டப்பட்டுள்ள மிகக் குறுகிய பாலத்தை விரிவாக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை தொடங்கப்பெறும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) சுந்தரராஜபுரத்திற்கு அருகில் பெரியார் கால் வாயில் கட்டப்பட்டுள்ள குறுகிய பாலத்தை மேம்படுத்துவதற்காகவும் அகலப்படுத்துவதற்காகவும் ரூபாய் 8,000 செலவில் மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(இ) வேலை நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது.

*Retired Supervising staff of Public Works Department*

* 408 Q.—DR. H V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Hon. the Chief Minister has received any petition signed by a couple of retired Supervising staff of State Public Works Department on 31st May 1968 requesting him to reconsider their demand of liberalised pension scheme and other retirement benefits; and

(b) if so, the action taken by the Government so far?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) ஆம். அம் மனுசார்புள்ள தலைமைப் பொறியாளர்களுக்கு அனுப்பப்பட்டது. எனினில் மேற்சொன்ன மனுவைக் கொடுத்த மேற்பார்வையாளர்கள் பொறியியல் பட்டறையில் வேலை ரீதியில் ஊதியம் பெறுபவர்களாக இருந்தமையால் அவர்கள் ஓய்வு கால ஊதியமில்லாத ஊழியர்களாகக் கருதப்பட்டு, 1960-ம் ஆண்டின் தமிழ்நாட்டுத் தாராள ஓய்வு கால விதிகள் அவர்கட்குப் பொருந்தாது என்பதை அரசு ஏற்கனவே தலைமைப் பொறியாளருக்கு அறிவித்துள்ளது.

DR. H. V. HANDE : Is it a fact that after that, the Chief Engineer wrote a letter to Government? While the G.O. on the liberalised pension scheme is applicable to the C.P.W.D. staff of the same category, why is it not made applicable to the P.W.D. staff, taking into consideration the recommendations contained in Chief Engnieer's letter No. C.E. 1/76/379, dated 5th March 1962?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிய விவரம் தற்போது என்னிடமில்லை.

## 2. நடைமுறைக் கேள்வி

மூல வினாவில் ஒரு பகுதி நீக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Dr. H. V. HANDE : On a of point order, Sir. In the original question that was sent by post to me, this supplementary also was included. Actually it has come from the department. But surprisingly in today's list containing questions, this supplementary has not been included. So I had to put the supplementary with your permission and the Hon. Minister was good enough to answer. Otherwise I would have again to put a fresh question for that supplementary and wait for six months to get the answer. In the original question which I had sent, this supplementary was included and subsequently I find it had been deleted, after it has been allowed by the Hon. Speaker.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விகள் கேட்க உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் அந்தக் கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டுமென்று அமைச்சர்களைக் கட்டாயப்படுத்த விதியில் இடமில்லை.

Dr. H. V. HANDE : I am not denying that. The Hon. Minister can answer or withhold answer. What I say is, according to the reply I got from the department.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்த டிபார்ட்மெண்ட் ?

Dr. H. V. HANDE : Hon. Speaker's department. That supplementary had been allowed. But subsequently it has been omitted when the original question containing this supplementary had been allowed by the Hon. Speaker. I had no idea that it would be deleted later. That is why I raise the point of order and I request you Sir, to give your ruling.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் தங்கள் வினாவில் உட்பிரிவுகள் (ஏ) (பி) யை மட்டுந்தான் அனுமதித்திருக்கிறார்கள். உட்பிரிவு (சி)-யை அனுமதிக்கவில்லை. உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிற நேரத்தில் அந்தத் தகவல் தெரிவிக்கப்படாமல் இருக்கிறது. அது பற்றி நான் ஆராய்ந்து பார்க்கிறேன்.

## 1. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி.

### தலைஞாயிறுப்பகுதி மானாவாரி நிலங்களுக்குப் பாசன வசதி

*409 வினா.—**திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தாலூகா தலைஞாயிறு பகுதியில் வாட்டாகுடி, ஓரணி அம்பலம் ஆகிய கிராமங்களில் 1,000 ஏக்கருக்கு குறையாத அளவு விளை நிலங்களில் பெரும்பாலும் தேங்கியுள்ள தண்ணீரை அதற்கு மேல் உள்ள 250 ஏக்கருக்கு குறையாத அளவுள்ள மானாவாரி நிலங்களுக்கு பம்பு வாயிலாக பாய்ச்சிக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** வடகூர், ஆய்மூர், தலைஞாயிறு (5-வது சேத்தி), காடாத்திருத்தி முதலிய கிராமங்களில் சுமார் 2,000 ஏக்கர் பரப்பளவுக்கு வடிகால் வசதி செய்து கொடுக்கவும், இந்த குறிப்பிட்ட வடிகால் நீரை விசையேற்றம் மூலம் இறைத்து [illegible]





I, III, IV சேத்தி கிராமங்களுக்குப் பாசன வசதி அளிக்கவும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. வட்டாகுடி, ஓரணி அம்பலம் சிற்றூர்கள், இச்செயற் குறிப்பில் அடங்குகின்றன.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தயாரிக்கப்பட்ட திட்டம் எப்போது அமலுக்கு வரும்? அதைத் துரிதமாக அமல்படுத்த அரசு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தஞ்சை மாவட்ட தலைவர் ஏற்றுக்கொண்டு இத்திட்டம் குறித்த வருவாய் துறை வாரியத்தின் அறிக்கை கிடைத்த பின் அரசாங்கம் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

### திருப்பூர் நகரைச்சுற்றி வட்டசாலை

*410 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரைச்சுற்றி வட்ட வடிவமான ரோடு அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இது குறித்து செயற் குறிப்பு ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சு. துரைசாமி :** திருப்பூர் நகரில் நொய்யல் நதியைக் கடக்க குறுக்கே பாலம் இருக்கிறது. பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, திருச்சி ஆகிய இடங்களிலிருந்து வந்து போகிற வண்டிகளின் பாதை நகரத்தின் மத்தியில் இருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, வட்ட வடிவமான பாதை இருந்தால் நகரத்திற்குள் வருகிற லாரிகள். பஸ்கள் போன்றவற்றின் போக்குவரத்து வசதி சௌகரியமாக இருக்கும், ஆகவே திருப்பூர் நகரத்தில் அப்படி ஒரு ரோடை அமைப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அங்கு அப்படி ஒரு புற வழிச் சாலை அமைக்க செயற்குறிப்பு இல்லை. அதை நான்காவது திட்டத்தில் மேற்கொள்ள குறிக்கோள் இல்லை.

Thiru K. VINAYAKAM : Even though this question applies to the town of Tiruppur, this is a problem concerning every town in the State of Madras. May I know whether the Government is thinking of launching upon a wider programme of constructing this kind of round roads in places where there is this kind of traffic congestion?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றி தனிக் கேள்வி போட்டால் விவரங்களை தெரிவிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

## 2. நடைமுறைக் கேள்வி—தொடர்ச்சி.

மூலவினாவில் ஒரு பகுதி நீக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : டாக்டர் ஹாண்டே அவர்கள் முதலில் கேள்வி கொடுத்திருக்கிறார்கள். கடைசியாக (வி) பகுதியை நீக்கித்தான் அனுமதிக்கப்பட்டு டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 29—7—68-ல் அனுப்பியதில் வி) பகுதி இல்லை. கேள்வி கேட்டிருப்பது வேறு. கேள்விக்கு விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. (வி)-க்கு என்ன ஆதாரம் என்று கேட்டிருக்கிறார்கள் அலுவலகத்திலிருந்து. கடைசியாக அனுமதித்தபோது (வி) பகுதியை நீக்கித்தான் அனுமதித்திருக்கிறார்கள். அதற்கான தகவல் உறுப்பினர் அவர்களுக்கு 29—7—68-ல் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, அது அனுமதிக்கப்பட்டு அதற்குரிய விடை ஏன் இல்லை என்று கேட்பது ஒழுங்குப் பிரச்சினையாகாது.

## 3. தன்னிலை விளக்கம்

### (அ) நடைமுறைக் கேள்வி எழுப்பும் நேரமும், வினா நேரத்திற்குப் பின் தகவல் கோர (ஸீரோ அவர்) அனுமதிப்பது குறித்தும் ஹாண்டே அவர்களின் விளக்கம்.

DR. H. V. HANDE : On a point of personal explanation, Sir. Yesterday when I raised a point of order, immediately after questions were over, the Hon. Speaker asked me under what rule I had raised the point of order. May I point out that sub-rsle (4) of Rule 83 says as follows :—

A point of order may be raised in relation to the business before the House at the moment.

It was to elicit information from the Hon. Chief Minister regarding the discussions he had with the Prime Minister and other Ministers in Delhi recently and whether he could explain to the House the discussions he had at Delhi. The Hon. Ex-Speaker had allowed Thiru K. Vinayakam a number of times to raise point of order like that to elicit information from the Chief Minister. I raised my point of order like that.

Immediately after questions were over, this is mild zero hour we are having. Even in Parliament, the move is to extend the zero hour. May I request you, Sir, to be more liberal during zero hour? I was not for raising any privilege issue but my point was to request the Hon. Chief Minister to explain to the House the discussions he had with the Prime Minister and other Minister of Delhi as regards the burning problems of the day, i.e., Centre-State relationship, etc. That was in relation to the business before the House at the moment.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நன்றாக விளக்கம் சொல்ல விரும்புகிறேன். நான் சொல்லுவது, எந்தவிதமான பாயிண்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை என்பதுதான். இப்பொழுது அவர்கள் 'ஸீரோ அவர்' வேண்டுமென்று சொல்லுகிறார்கள் பார்லிமெண்டிலே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். கொடுக்கின்ற நேரத்தில் எவ்வளவு ஜாக்கிரதையாக அந்த வார்த்தைகள் வந்திருக்கின்றன என்பதைப் பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம். 'ஸீரோ அவரை'ப் பயன்படுத்தும்பொழுது எவ்வளவு விழிப்பாக இருக்க வேண்டும்? இந்த 'ஸீரோ அவர்' என்பதை அங்கே கொடுத்திருக்கிறார்கள். அது நம்முடைய விதிமுறைகளில் கொடுக்கப்படவில்லை. கொடுக்க வேண்டுமென்று கேட்பது வேறு. அதிலே எந்தவிதமான பாயிண்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை. விதிமுறைகளை வேண்டுமானால் மாற்றுங்கள்; 'ஸீரோ அவர்' வேண்டுமென்று மாற்றுங்கள், அப்படி விதிமுறைகளை மாற்றிவிட்டுக் கேட்பதிலே ஆட்சேபணை இல்லை. விதிமுறைகளில் இல்லை என்பதைத்தான் சொல்லுகிறேன். எனவே, இதில் எந்த விதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை.



DR. H. V. HANDE : Sub-rule (4) says that a point of order may be raised in relation to the business before the House at the moment.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பாயிண்ட் ஆப் ஆர்டர் எப்பொழுது வேண்டுமானாலும் எழுப்பலாம், எழுப்பக்கூடாது என்று சொல்லவில்லை. இந்தப் பேரவையின் நடைமுறையிலே, மரபு பாதிக்கப்படுமேயானால் அப்பொழுதைக்கப்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவதிலே எந்தவிதமான தவறுமில்லை. ஆனால் டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பியது, சட்டமன்ற விதிமுறைகளை, நடைமுறைகளை மீறி ஏதாவது நிகழ்ந்து அதற்காக எழுப்பப்படவில்லை. அதைத்தான் குறிப்பிடுகிறேன். பாயிண்ட் ஆஃப் ஆர்டர் வேறு, விளக்கம் கேட்பது வேறு, அமைச்சர்களிடமிருந்து எதிர்பார்ப்பது வேறு. எனவே, இது ஒழுங்குப் பிரச்சினையின் கீழ் வராது என்பதைத்தான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

DR. H. V. HANDE : The proviso to sub-rule (4) says—

"Provided that the Speaker may permit a member to raise a point of order during the interval between the termination of one item of business and the commencement of another if it relates to maintenance of order, in or arrangement of business before the House."

Questions were over. Before the next item in the agenda was taken, in the interval, I had raised the point of order. It is clearly provided for in the rules. The proviso is clear. The previous Speaker who is now Minister for Co-operation had allowed Thiru K. Vinayakam to raise point of order like this on many occasions. When I had asked him under what rule it was allowed, he had referred to this rule. That is how I had raised the point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் மீண்டும், மீண்டும் அதைத்தான் சொல்லுகின்றீர்கள். பாயிண்ட் ஆஃப் ஆர்டரை எந்த நேரத்திலே அனுமதிக்கலாம் என்பதுதான் நான் பலமுறை சொல்வது. பாயிண்ட் ஆஃப் ஆர்டரே எழுப்ப வேண்டாமென்று சொல்லவில்லை. பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்பதெல்லாம், விதிமுறைகளை மீறி இந்தப் பேரவை நடைபெறுகிறது என்ற நிகழ்ச்சி ஏற்பட்ட நேரத்திலேதான் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பலாம் என்று சொல்லியிருக்கிறேன். எழுப்பவே வேண்டாமென்று சொல்லவில்லை. பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்பது எது? அதைத்தான் உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பியது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை, பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை என்று பலமுறை சொல்லியிருக்கிறேன். பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்பது கொடுத்திருக்கும் விதிமுறைகளை மீறி யாராவது நடந்துகொண்டால், பேரவையின் நடைமுறை மரபிலேயிருந்து மாறி பேரவை நடந்தால் அதைச் சுட்டிக்காட்டி எழுப்புவதுதான் ஒழுங்குப் பிரச்சினை, பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்பது. மற்றவற்றைப்பற்றிக் கேட்க வேறு விதிமுறைகளில் இடம் இருக்கிறது. அப்படிக் கேட்கலாம். பாயிண்ட் ஆஃப் ஆர்டரே எழுப்ப வேண்டாமென்று சொல்லவில்லை.

[1969 மார்ச் 21

திரு. கே. விநாயகம் : பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆஃப் இன்பர்மேஷன் எப்பொழுது கேட்கலாமென்றால் . . . .

திரு. கே. விநாயகம் : எனக்குப் பேச வாய்ப்புக் கொடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆஃப் இன்பர்மேஷன் என்பது, அமைச்சர்கள் ஏதாவது அறிக்கை விட்டு, அதிலேயிருந்து ஏதாவது செய்தி தெரிய வேண்டுமானால் அப்பொழுது கேட்பதாகும். அப்படிப்பட்ட நிலைமை ஒன்றும் இப்பொழுது வரவில்லை. பாயிண்ட் ஆஃப் இன்பர்மேஷன் என்பது, டெல்லியிலே நடக்கும் அந்த அவையிலே 'ஸீரோ அவர்' என்று உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள், நம்முடைய விதிமுறைகளிலும் அப்படி உருவாக்கிவிட்டு அந்த நிலையிலே இன்பர்மேஷன் கேளுங்கள், ஆனால் இப்பொழுது விதிமுறைகளிலே இடமில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, பாராளுமன்ற விதிமுறைகளிலும் 'ஸீரோ அவர்' என்று ஒன்றுமில்லை. நம்முடைய தமிழ் நாடு சட்டமன்றம் பாராளுமன்றத்தைவிடச் சிறப்பாக நடக்கிறது என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகும். அதைவிடச் சிறப்பாக நடக்கவேண்டுமென்றால் அறிவுரைகளைப் பரிமாறிக்கொள்ள சந்தர்ப்பம் இருக்கவேண்டும். எல்லா விஷயத்தையும் சட்டதிட்டத்திற்குள்ளேயே அடக்கப் பார்க்கிறீர்கள். எதற்கெடுத்தாலும் சட்டம் என்றால் உலகத்தில் மனிதன் நடக்கவே முடியாது. சட்டத்திலே உள்ளபடியேவா நாம் நடந்து கொண்டிருக்கிறோம் ? சட்டம், ஒழுங்கு சரியில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கு சட்டம், ஒழுங்கு சரியில்லை என்று சொல்கிறீர்களா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : வெளியிலே இருப்பதைச் சர்க்காருக்காக சொல்லுகிறேன். ஆகவே, 'ஸீரோ அவர்' என்று அங்கேயும் கிடையாது விதிகள் மூலம் கிடையாது. ஒரு சில பிரச்னைகளைக் கேட்பதற்கு சந்தர்ப்பம் கொடுத்து, அதற்கு அமைச்சர்களும் பதில் சொல்லுவார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே....

THIRU K. VINAYAKAM : The Hon. Chief Minister has now risen. May I know under what rule, it is permitted?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் எந்த நேரத்திலும் பேசுவதற்கு விதிமுறைகளிலே இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.



1969 மார்ச் 21] [திரு மு. கருணாநிதி]

தீர்ப்பளித்திருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சபையிலே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எந்த நேரமும் கருத்துக்களைச் சொல்வதற்கு ஒரு மரபு இருந்து வந்திருக்கிறது. அது போய்விட்டதுபோல கருதிக்கொண்டு, சட்டத்தின்படி நடக்க முடிகிறதா என்றெல்லாம் கூறுவது மற்ற உறுப்பினர்களைக் கட்டவிழ்த்துவிட்டதுபோன்ற சூழ்நிலையை உருவாக்கும். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் எதற்கெடுத்தாலும் சட்டம், ஒழுங்கு சரியில்லை என்று சபையில் கூறும் அந்தக் கருத்தை அவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவில்லை, மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு முதலமைச்சரவர்கள் சபையில் இல்லை. எனவே, அன்று சபையில் நடந்தது அவர்களுக்குத் தெரியாது. எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றி, மரபு பற்றி அன்று வந்தது. சட்டத்திலே இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் அன்று சொன்னது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அன்று சபையில் இல்லாமலிருந்தாலும், மரபைக் காக்க வேண்டுமென்று மரபைச் சொல்லியிருக்கிறார்கள், சபாநாயகரவர்கள்தான் கண்டிப்பாக இருக்கிறார்கள். அவர்களுடைய வார்த்தைக்கு மதிப்பைச் சபாநாயகர் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறேன். அன்றைக்கு முதலமைச்சரவர்கள் இல்லை. சூடு கொஞ்சம் அதிகமாக போய்விட்டது. சபாநாயகரவர்களுக்குச் சூடு கொஞ்சம் அதிகமாகி, பிறகு தணிந்தது. முதலமைச்சரவர்கள் இப்பொழுது எனக்காகப் பேசுகிறார்கள். என்னுடைய மரபுத் தன்மையைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இதில் தலையீடு கிடையாது. இப்பொழுது பார்த்தால் என்றென்றைக்கும் என்று அறுதியிட்டுச் சொல்லமுடியாது. பழக்கவழக்கத்திலே நல்லமுறை வரவேண்டும். தலையீடு என்று சொல்ல விரும்பவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், பாயிண்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன், பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் என்கின்ற பல தலைப்புக்கள் இருக்கின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேரும், ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, யாராவது ஒரு உறுப்பினர் இடையில் எழுந்து ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், அதற்கு அந்தப் பேசிக்கொண்டிருக்கின்ற உறுப்பினர் இணங்கினால்தான் சொல்லமுடியும் என்றிருக்கிறது. அப்படி அந்தப் பேசிக்கொண்டிருக்கும் உறுப்பினர் இணங்கவில்லையென்றால், சொல்ல முடியாது. ஆகவே, ஒரு ஆயுதமாக, தந்திரமாக இந்த பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிவிட்டால் யார் பேசிக்கொண்டிருந்தாலும் உட்கார்ந்துதான் தீரவேண்டும். அவ்வாறு அதைப் பயன்படுத்திக்கொண்டு, பிறகு பாயிண்ட் ஆஃப் ஆர்டருக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களைப் பேசிவிடுகிறார்கள். அதற்குப்பிறகு மறுபடியும், சபாநாயகரவர்கள் அது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல என்று சொல்ல-வேண்டியிருக்கிறது. முதலிலேயே அப்படிச் சொல்லிவிட்டால் நான் சொல்லப்போவது எப்படித் தெரியும் என்று கேட்கலாம். இனிமேலாவது, பாயிண்ட் ஆர்டர், பாயிண்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன், பாயிண்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன் என்பவைகளுக்குள்ள வேறுபாடுகளை உணர்ந்து சபையில் நடந்து கொள்வது நல்லது என்ற கருத்தை அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தவறு இருந்தால் தவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டியதுதான். எதிர்க் கட்சித் தலைவரைக்காட்டி, முதலமைச்சரவர்கள் விழியாலேயே சொல்வதாக இருக்கிறது. நீங்களே வழிகாட்டியிருக்கிறீர்கள். சில சில விஷயங்களிலே அது தவறு என்று சொல்லவில்லை. ஆனால் முதலமைச்சரவர்கள் சொல்லியபடி, நினைத்ததெற்கெல்லாம் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுப்புவது நல்லது அல்ல. அதனால் காலமும் வீணாகும் நிலை ஏற்படும். முடிந்தவரை விதிகளை அனுசரித்துத்தான் செல்ல வேண்டும்.

[1969 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவரவர்கள் முதலமைச்சர் தாராளமாக நடந்துகொள்கிறார், பேரவைத் தலைவர்தான் கண்டிப்பாக நடந்துகொள்கிறார் என்ற கருத்தில் சொல்கிறார். நானே கூடச் சொல்லியிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எழுந்து கொண்டு தன்னுடைய கருத்துக்களை விளக்குவதற்கு எந்தக் காலத்திலும் மறுக்கவில்லை. ஆனால், நம்முடைய சட்டமன்ற விதிமுறைகளிலே இடம் இருக்கிறதா என்றால் இடமில்லை என்றுதான் சொல்ல வந்தேனே தவிர, அதை அடிப்படையாக வைத்து எழுந்திருக்கவே வேண்டாமென்று எப்பொழுதும் மறுக்கவில்லை. சலுகையா, உரிமையா என்ற இந்த இரண்டு சொற்களில் எதைச் சொல்வது என்பதில்தான் வேறுபாடே தவிர, எழுந்திருக்கவே வேண்டாமென்ற நிலை எப்பொழுதும் உருவாகவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மக்கள் அவையிலே அப்படி ஒரு நிலை இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், மக்கள் அவையைக் காட்டிலும் நம்முடைய சட்டமன்றம் நல்ல முறையிலே நடக்கிறது என்று சொன்னார்கள். விதிமுறைகளைக் கொஞ்சம் நல்ல முறையிலே கடைப் பிடிக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் வற்புறுத்துகின்ற காரணத் தாலேதான் தமிழ்நாடு சட்டமன்றம் நல்ல முறையிலே நடைபெறு கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, உறுப்பினர்களுக்கு வழங்குகிற அந்த உரிமைகளிலே எந்தவிதமான வேறுபாடும் கிடையாது. உறுப்பினர்களுக்கு எந்த அளவுக்கு உரிமை காட்ட முடியுமோ அதற்குத் தான் பேரவைத் தலைவர் இருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இதை வளர்க்க வேண்டாமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, திரு ஞானசம்பந்தன் அவர்கள் ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அது நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்

மாநில அரசுகள் பற்றுக்குறை நிதிநிலை அறிக்கைகள் அளிப்பதற்கும் ரிஸர்வ் வங்கியிலிருந்து அதிகப் பற்றுக நிதி பெறுவதற்கும் அனுமதி மறுத்து மாநிலங்கள் அவையில் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் விடுத்த அறிக்கையும், அதன் விளைவுகளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது—

"I move that this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the threat caused to the financial stability of the Government of Tamil Nadu and the strained relations between the Centre and the State as a result of the statement of Deputy Prime Minister Mr. Morarji Desai in the Rajya Sabha on 20th March 1969 indicating his refusal to allow the State Governments to present deficit budgets and warning the State Governments against overdrawing from the Reserve Bank of India".

என்ற கருத்தை விவாதிக்க வேண்டுமென்பதற்காக ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்களை, இது எப்படி இந்த பேரவை நிகழ்ச்சியை ஒத்திவைத்து விவாதிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி மட்டிலும் சுருக்கமாக விளக்கம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1969 மார்ச் 21]

[Dr. H. V. Hande]

affecting the financial stability of our State. Tomorrow a number of persons will have to depend upon the rules and orders passed by this Government, and the financial implications are going to be evident even while we discuss the Appropriation Bill, after a few days. Therefore I feel that if half an hour or one hour is allotted to this House to have a discussion on this subject, we will be able to property explain our stand that the financial stability of our State is good, so that it will give confidence to the people. Otherwise we will be in a very serious condition. Even the Central Government have to depend on overdrafts, and they get loans and gifts from other countries.

This is going to affect also the Centre-State relations. Unless we clearly explain that there should be proper devolution of funds and powers from the Centre to the State and put the relations on a proper keel or railing, we will be always having this conflict. That is why I want that the Centre-State relations must be put on a permanent and proper basis so that the State need not be at the mercy of the changing moods of the Central Government. Let us not make it a party issue, it is an issue relating to the entire State. Therefore I request the Hon. Speaker to allot, in consultation with the Leader of the House, at least one hour so that we can properly discuss the subject.

**திரு பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இருக்கும்படியான இந்த ஒத்திவைப்புப் பிரேரணையிலே என்னுடைய கருத்தையும் சொல்லலாம் என்று நான் நினைக்கிறேன். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாலே திடீரென்று ராஜ்ய சபையிலே ஒரு கேள்வி கேட்கும்படியான சந்தர்ப்பத்திலே, தமிழ் நாடு சர்க்காருக்கு 23 கோடியே 75 இலட்சம் ரூபாய் ரிசர்வ் பாங்கியிலே அதிகப் பற்று இருப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். இந்த சர்க்கார் சமர்ப்பித்த பட்ஜெட் மெமோ ரண்டத்திலேயே கொஞ்சம் ஓவர் டிராப்ட் இருக்க வேண்டும். என்னென்றால் இவ்வளவு தொகை ஓவர் டிராப்ட் இருப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பெரிய தொகையை, இவ்வளவு பணத்தை, இவ்வளவு தூரம் அதிகமாகச் செலவழித்திருக்கிறோம் என்ற நிலைமை கூடத் தெரியாமல் பொறுப்புள்ள நிதி அமைச்சர் எழுந்து "எங்களுக்குத் தெரியாது" என்று சொல்லிவிட்டார்கள் சட்டசபையிலே. நிதி அமைச்சருக்கும் தெரியாமல் ஒரு நிலை இங்கு ஏற்பட்டிருக்கு மானால் அது மிகவும் வருந்தத்தக்க விஷயம். அவர் இங்கே, சட்ட சபையிலே தெரியாது என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார். உங்களுக்குத் தெரியாமல் நடந்திருக்கும்படியான நிலை மிகவும் வருந்தத் தக்க நிலை. பினான்ஷியல் ஸ்டேட்மெண்டில் ஓவர் டிராப்ட்-ஐ காண்பித்திருக்க வேண்டும்....

[1969 மார்ச் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு மாவைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கின்ற நேரத்திலே அந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு ஏன் அனுமதி தரவேண்டுமென்பது பற்றித்தான் இப்போது விவாதம் நடத்தலாம். அனுமதி தந்ததற்குப் பிறகுதான் அதைப்பற்றி விளக்க மாகப் பேசவேண்டுமென்ற நிலை குறித்து ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இப்போது அதற்கு ஏன் அனுமதி கொடுக்கவேண்டுமென்பதற்கான காரணத்தை மட்டிலும்தான் காட்டவேண்டுமே தவிர மற்ற விளக்கங்களைப் பற்றி எல்லாம் பேசுவதற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியாது.

திரு பி. ஜி. கருத்திருமன்: இது முக்கியமான விஷயம். 23 கோடி ரூபாய் ஓவர் டிராபட் விஷயம் பொருளாதார நிலையைக் குலைக்கக் கூடிய விஷயம். ஒத்தி வைத்து விவாதிப்பதற்குரிய விஷயம். அவ் விவாதத்தின் மூலம் சர்க்காருடைய நிலையைத் தெரிந்துகொள்வதற்கு நிச்சயமாக ஒரு மணி நேரம் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டு மென்று நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு கருத்திருமன் அவர்கள் சொல்வது வேறு, டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டு வந்திருப்பது வேறு. திரு கருத்திருமன் அவர்கள் 23 கோடி ரூபாய் ஓவர் டிராப்ட், அதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்குத் தனியாக தீர்மானம் கொடுங்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் மொரார்ஜி தேசாய் அவர்கள் மாநிலங்கள் அவையிலே கூறிய ஸ்டேட்மெண்ட், நம்முடைய மாநிலத்திற்கும் மத்திய சர்க்காருக்கும் உள்ள உறவைக் கெடுத்துவிடும், நம்முடைய நிதி நிலையை பாதிக்கும், ஆகவே அதை விவாதிக்க வேண்டுமென்று கூறி இருக்கிறார். டாக்டர் ஹாண்டே கொண்டு வந்திருப்பது வேறு, எதிர்க்கட்சித் தலைவர் கூறுவது வேறு. அந்த நிலையை நீங்கள் விளக்க வேண்டும்.

திரு பி. ஜி. கருத்திருமன்: ஓவர் டிராப்ட் விஷயமாகத்தான் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஓவர் டிராப்ட் விஷயமாகத்தான் கொண்டு வந்திருக்கிறார் என்று நினைக்கிறேன். அதைத்தான் விவாதிக்க வேண்டு மென்று சொல்லுகிறார்கள், அதிலே மத்திய சர்க்காருக்கும் நம்முடைய சர்க்காருக்கும் உள்ள உறவு நிலையைப் பற்றியுள்ளது. அதிலே இரண்டு பகுதி உள்ளது. ஓவர் டிராப்ட் பற்றிய பகுதியை ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டுவந்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தினுடைய உட்பொருளைப் புரிந்து கொள்ளாமல் ஆனால் விளக்கி, இதை விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்பதை அவர் ஆதரித்தார். டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டுவந்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானம், அண்மையில் டெல்லி பட்டணத்தில் மாநிலங்களவையிலே மத்திய அரசாங்கத்தினுடைய நிதி அமைச்சரும் துணைப் பிரதமருமான மாண்புமிகு மொரார்ஜிதேசாய் அவர்கள் வெளியிட்ட சில கருத்துக்களை ஒட்டி, அதன் காரணமாக இந்த மாநிலம் பாதிக்கப்படக்கூடும் என்ற அளவில் அந்த கருத்துப்படி இந்த சட்டசபையை ஒத்திவைத்து, அதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்ற நிலையில் ஒரு பிரேரணையை கொண்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதை முழுவதும் கவனிக்காத காரணத் தால் இவ்வாறு கூறி இருக்கிறார். ஏனென்றால், டாக்டர் ஹாண்டே அவர்கள் அதைக் கொண்டுவரும்போது மாண்புமிகு விநாயகம் அவர்க ளோடு இவர் பேசிக்கொண்டிருந்தார். ஆகவே, அதை முழுவதும் கவனிக்கவில்லை. (குறுக்கீடு) இல்லை கவனித்ததாகச் சொல்கிறார். ஹாண்டே அவர்கள் ஒரு பக்கம் நின்று, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மாநிலத்திற்கு சாதகமான ஒரு அபிப்பிராயத்தை அழுத்தம் திருத்தமாக கூறியதற்கு நான் அவர்களுக்கும் அவருடைய காங்கிரஸ் கட்சியினருக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், மொரார்ஜி தேசாய்



1969 மார்ச் 21] [திரு மு. கருணாநிதி]

அவர்கள் அங்கு ரிசர்வ் பாங்கு ஓவர் டிராப்ட்களை அனுமதிக்கமாட்டோம் என்று குறிப்பிட்டார்கள். ரிசர்வ் பாங்கிலே ஓவர் டிராப்ட் பெறுவது என்பது எல்லா மாநிலங்களிலும் நடைபெற்று வருகின்ற ஒன்றாகும். 'வேஸ் அண்ட் மீன்ஸ்', வழிவகைச் செலவினைப் பொறுத்த இந்த ஓவர் டிராப்ட்டை ஒவ்வொரு மாநிலமும் பெறுவதும் அதை ஆண்டு முடிவிலே கட்டி விடுவதும் வழக்கமாக இருந்து வருகிற ஒன்றாகும். அந்த வகையிலே மத்திய சர்க்காருடைய உதவித் தொகை வந்து சேருவதற்குக் காலதாமத மானால், அப்படி காலதாமதமாகிற அந்தக் கட்டத்தில் ரிசர்வ் பாங்கியிலே ஓவர் டிராப்ட்களை வாங்கி அந்தச் செலவைச் சரிக்கட்டுவதும் அந்த உதவி வந்ததும் அதைக் கட்டுவதும் முறையாக இருந்து வருகிறது. 23 கோடி ரூபாய என்று சொன்னார்கள். 8 கோடி ரூபாய் கொடுத்தாகிவிட்டது. 23 கோடி ரூபாயில் 18—3—1969-ல் 15·39 கோடி ரூபாய்தான் இருக்கிறது.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஏதோ இவ்வளவு வரும் என்று தனக்கே தெரியாது என்று குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். அவர்கள் என்ன வாசகம் சொன்னார்கள் என்று அந்த தெளிவான வாக்கியம் எனக்குத் தெரியாத காரணத்தினால் நான் அதைப்பற்றி இங்கே குறிப்பிட விரும்பவில்லை. மொரார்ஜி தேசாய் அவர்கள் ரிசர்வ் பாங்கியிலே ஓவர்டிராப்ட் அனுமதிக்கப்பட முடியாது என்று கூறியது ஆச்சரியத்திற் குரியதாக இருக்கிறது. ஏனென்றால், பழைய அரசும் இப்படிப்பட்ட ஓவர் டிராப்ட் முறைகளைப் பின்பற்றி வந்திருக்கிறது. இந்த அரசும் அப்படித்தான் பின்பற்றி வருகிறது மற்ற மாநிலங்களும் இந்த முறையைப் பின்பற்றி வருகின்றன. அவர்கள் திடீரென்று அப்படிக் குறிப்பிட்டது உள்ளபடியே தமிழ் நாட்டு மக்கள் அனைவருமே சேர்ந்து வருந்தத் தக்க ஒன்றாகும்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் தன்னுடைய தீர்மானத்தில் குறிப் பிட்டிருப்பதைப் போல பற்றாக்குறை பட்ஜெட் போட்டிருப்பது வேண்டும் என்று செய்யப்பட்ட காரியம் என்று மத்திய நிதி அமைச்சர் அவர்கள் விதிப்பதும் நல்லது ஒரு அல்ல. இது வேண்டும் என்று போடப்பட்ட பற்றாக் குறை பட்ஜெட் அல்ல. வருமானங்களைப் பெறுவதற்குக் கூட வரி விதிப்பது என்பது ஒரு முறையானாலும், அப்படி வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பழைய அரசிலிருந்து, நாம் போடவேண்டிய வரிகளைப் போட்டிருக்கிறோம். ஒரு சிலருக்கு தாங்கக்கூடியவர்களுக்கு வரி போட வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருப்பது கழக அரசாகும். தாங்கக்கூடியவர்களுக்கு வரி போட வேண்டும், தாங்க முடியாதவர்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்பது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. அந்த வகையிலே ஏன் வரி போடவில்லை என்று கேட்டு அப்படிப்பட்ட நிர்ப்பந்தத்தை ஒரு மாநிலத்திற்கு அளிப்பது சரியான வாதமாகாது. இப்பொழுது அவர்கள் இல்லை என்று கூறிவிட்டாலும், மீண்டும் மத்திய அரசை வற்புறுத்துவதற்கான உரிமை நமக்கு இருக் கிறது. அதைப் போலவே மாநில அரசுக்குக் கொடுக்கவேண்டியகடமையும் அவர்களுக்கு இருக்கிறது. இந்த உரிமையையும், கடமையையும் எண்ணிப் பார்த்து மத்திய அரசு நடந்து கொள்ளும் என்று கருதுகிறோம். இப்பொழுது மத்திய அரசினுடைய நிதி அமைச்சர் அவர்கள் இல்லை யென்று கைவிரித்து விட்டாலும் கூட, ஆமாம், இல்லை. என்று எடுத்துக் கொண்டு பேசாமல் இருந்துவிடப் போவதில்லை. தொடர்ந்து நம்முடைய தேவைகளை வலியுறுத்திக்கொண்டே இருப்போம். அப்படி வலியுறுத்து வதற்கு ஒரு நல்ல அடையாளமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறார் என்ற அளவிலே எடுத்துக் கொள்ளலாம். "அதில் ஒரு பகுதியை வேறு ஒரு காரணத்திற்காக ஒத்துக்கொண்டோம். அவையின் நடவடிக்கைகளை ஒற்றி வைத்து அதை விவாதிக்க வேண்டும்" என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறிய கருத்து நம்முடைய வாதத்தை வலுப்படுத்துகிறது என்கின்ற அளவில், இந்த நிலையிலே இதை நிறுத்தி விட்டு, அவையின் நடவடிக்கைகளை ஒற்றி வைத்து இதை விவாதத்திற்குரிய ஒன்றாக ஆக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு மு. கருணாநிதி] [1969 மார்ச் 21

இந்த 23 கோடி ரூபாய் ஓவர்டிராப்ட் எதற்காக ரிசர்வ் பாங்கியி
லிருந்து வாங்கினோம் என்பதற்கு உள்ள விவரத்தையும் இங்கே படித்துவிட
விரும்புகிறேன். மத்திய அரசு மாநில அரசுகள் ரிசர்வ் பாங்கிலிருந்து
ஓவர் டிராப்ட்கள் வாங்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்துள்ளது,
பத்திரிகைகளிலே அதை ஒட்டிய செய்தியும் வந்துள்ளது. அதை ஒட்டி
ரிசர்வ் பாங்கு மாநில அரசுக்கு நோட்டீஸ் ஒன்று அனுப்பியிருக்கிறது.
நாம் இப்பொழுது 23 கோடி ரூபாய் பெறுமானமுள்ள ரசாயன உரத்தை
கையிருப்பு வைத்திருக்கிறோம். சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் நாம்
வைத்திருக்கும் கையிருப்பின்பேரில் பாங்கில் கடன்வாங்கி சரிக்கட்டலாம்.
அதைப் போல ரூ. 23 கோடி பெறுமானமுள்ள உரத்தின்பேரில் பாங்கில்
கடன் வாங்கி இன்றைய ரூ. 15 கோடி ஓவர்டிராப்ட்டை நீக்கி விடலாம்
என்று நாம் அபிப்பிராயப்படுகிறோம்.

இந்த அளவில் ரிசர்வ் பாங்கில் வாங்கப்பட்டிருக்கிற ஓவர் டிராப்ட்
எப்படிப்பட்ட ஒரு பயங்கரமான நிலைமையையும் ஏற்படுத்தி விடப்
போவதில்லை என்று நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் இந்த
மாமன்றத்திற்கும் தெரிவித்துக்கொள்கிறேன். இது வழக்கமாக கடைப்
பிடிக்கப்பட்டு வருகிற ஒரு முறைதான் என்று இந்த மன்றத்தின்
மூலமாக திரு. மொரார்ஜி தேசாய் அவர்களின் அறிவிப்பினால் அதிர்ச்சி
அடைந்துள்ள தமிழக மக்களுக்கு தெரிவிப்பது என்னுடைய கடமை
என்று கருதி, அதற்கு வழிவகை செய்கின்ற வகையில் மாத்திரம்
இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் பயன்பட்டது என்ற அளவில் டாக்டர்
ஹாண்டே அவர்களைப் பாராட்டி, இந்த அளவோடு இதை விவாதத்திற்கு
எடுத்துக்கொள்ளாமல் நிறுத்திவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு
அமர்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, I just want a clarification from the
Hon. Chief Minister. I want to know whether the previous Con-
gress Government was not overdrawing much more than what the
present Government is doing. Also, I want to know whether the
sudden change in the policy adopted by the Hon. Thiru Morarji
Desai is not done with the idea of completely squeezing the resour-
ces of the Non-Congress Governments and whether we can put up
with this sort of difficulty and also what is the attitude which the
Government are going to take in regard to this matter?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மோட்டிவ் கற்பிக்கக்கூடாது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : முன்பிருந்த அரசு வாங்கிய ஓவர்
டிராப்ட், இப்பொழுது இருக்கிற அரசு வாங்கிய ஓவர் டிராப்ட் எந்த நிலையில்
உள்ளது என்பதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு விவரங்கள் என்னிடம்
இல்லை. ஆனால், பழைய அரசும் ஓவர் டிராப்ட் வாங்கியிருக்கிறது.
பழைய அரசு மாத்திரமல்ல. காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற பல மாநிலங்
களிலும் ரிசர்வ் பாங்கில் ஓவர் டிராப்ட் வாங்குகின்ற முறை இருந்து
வருகிறது.



1969 மார்ச் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு முதல் அமைச்சர் கூறிய
விளக்கத்தை ஒட்டி, இதை விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை
ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதி, இதற்கு அனுமதி அளிக்க
மறுக்கிறேன்.

## 5. கவன ஈர்ப்பு

### (அ) கவன ஈர்ப்பு அறிக்கைகளுக்கு அறிக்கை அளிப்பதில் தாமதம்.

***திரு. கோ. பூவராகன்** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த கவன
ஈர்ப்புத் தீர்மானம் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு
3-3-1969-ம் தேதியன்று கொடுக்கப்பட்டது. கவன ஈர்ப்புத் தீர்மானத்
திலேயே 'மாட்டர் ஆஃப் அர்ஜெண்ட் பப்ளிக் இம்பார்டன்ஸ்' என்று
கூறப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானம் இப்பொழுது சுமார் 20 நாட்
களுக்குப் பிறகு சபை முன்பு வருகிறது. இன்றையதினம் பார்க்கிற
பொழுது, இதனுடைய அவசரமும் போய்விட்டது, பொது முக்கியத்துவமும்
போய்விட்டது என்பதை இந்த அரசுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன்.
இதை நான் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குத்தான் கொண்டு
வந்தேன். அது கல்வி அமைச்சரின் கவனத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது.
இந்தச் சமயத்தில் அவர் பதிலை எதிர்பார்த்து, பிறகு தான் இதைக்
கொண்டு வருகிறதா, இல்லையா என்று சொல்கிறேன் . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த
உறுப்பினர் தீர்மானத்தைப் படித்து விட்டு, 'அமைச்சர் அவர்களின்
அறிக்கையை எதிர்பார்க்கிறேன்' என்று சொல்லிவிட்டு, அமைச்சர் அறிக்கை
அளித்த பிறகு வேண்டுமானால் எதாவது விளக்கம் கேட்டுக்கொள்ளலாம்
என்ற நிலைதான் இருக்கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானம் இத்தனை
நாட்களுக்கு முன்பு கொடுத்தேன், இப்பொழுதுதான் வருகிறது"
என்பது போன்ற பிரச்னைகளை இந்த அவையிலே எழுப்பக்கூடாது.
பேரவைத் தலைவருடைய அறையிலே தான் எழுப்ப வேண்டும் என்பது
மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்களுக்குத் தெரியும்
என்று நான் கருதுகிறேன். ஆகவே, அதை அவர்கள் இங்கே எழுப்புவது
முறையாகாது.

**திரு. கோ. பூவராகன்** : கனம் சபாநாயகர் அவர்களே, அவசரமும்
பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைத்தான் அமைச்சர்
அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அவசரமும், பொது
முக்கியத்துவமும் எவ்வளவு நாட்களுக்குப் பிறகு இந்த அரசாங்கத்தின்
கவனத்திற்கு வருகிறது என்பது இதிலிருந்து புரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அதை இந்த அவையிலே எழுப்பக்
கூடாது. இதைப் பற்றி எதாவது தெளிவு பெற வேண்டுமானால், அதை
இந்த அவையிலே எழுப்பக்கூடாது. பேரவைத் தலைவருடைய அறையிலே
தான் எழுப்ப வேண்டும்.

[திரு மு. கருணாநிதி] [1969 மார்ச் 21

விட்டு உட்காருவதும், அதற்குப் பிறகு அமைச்சர் அதற்கான விளக்கத்தை அளிப்பதும், அதற்குப் பிறகு, புதிதாகச் சேர்க்கப்பட்ட விதிகளின்படி ஏதாவது விளக்கம் வேண்டுமென்றால், ஒன்றிரண்டு கேள்விகள் கேட்டு விளக்கத்தை அந்த உறுப்பினர் பெறலாம் என்ற அளவிலேதான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது. கவன ஈர்ப்புத் தீர்மானம் ஏன் தாமதமாக எடுத்துக் கொள்ளப்பட்டது என்பது போன்ற பொது விஷயங்களெல்லாம் சபையின் நடவடிக்கைகளில் மானிய விவாதம் நடைபெறுகிற நேரத்தில் பேசப்பட வேண்டிய விஷயங்களாகும்.

(ஆ) விருத்தாசலம் அரசினர் கலைக்கல்லூரி மாணவர்களுக்கும் டோல்கேட் கண்ட்ராக்டருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு.

MR. SPEAKER : So, the hon. Member is not calling the attention of the Hon. Minister . . . . .

THIRU G. BHUVARAHAN : Sir, I call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, namely, the clash between the tollgate contractor and the students of the Government Arts College, Virudhachalam which has resulted in serious injuries to a number of students and innocent public on 24th February 1969 as also the closure of the College up to 5th March 1969.

THIRU K. RAMAMOORTHY : Sir, I call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, namely, the clash between the tollgate contractor and the students of the Government Arts College, Virudhachalam which has resulted in serious injuries to a number of students and innocent public on 24th February 1969 as also the closure of the College upto 5th March 1969.

திரு. செஞ்சி வெ. முனுசாமி: தலைவர் அவர்களே, மன்ற உறுப்பினர் திரு. பூவராகன், அவசரமும், பொது முக்கியத்துவமும் போய்விட்டது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, இதைக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொண்டு விளக்கம் அளிக்க வழி இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30 THIRU K. VINAYAKAM : The hon. Member is questioning your right Sir, in having admitted this statement.

திரு. செஞ்சி வெ. முனுசாமி அவசரம் போன பிறகு கவன ஈர்ப்புத் தீர்மானம் ஆகாது. மன்றத்தில் வைக்கக்கூடிய வகையில் அது ஆகாது. விதிக்குப் புறம்பாக ஆகாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் தீர்மானத்தைக் கொடுத்த நேரத்தில் அதற்கு அவசியம் இருந்தது. இப்பொழுது அறிக்கை வந்திருக்கிறது. அறிக்கை அரசாங்கம் கொடுக்கிறார்கள். அந்த அறிக்கையில் என்ன இருக்கிறது என்றெல்லாம் பார்க்க இப்பொழுது நேரம் இல்லை.

* மாண்புமிகு திரு செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிரச்சினையை எழுப்பியதால் விளக்கம் சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட தீர்மானங்கள் வந்தவுடன் தாங்கள் எங்களுக்கு அவற்றை [illegible]. நாங்கள் அவற்றை சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகளுக்கு அனுப்புகிறோம். [illegible] பெறவேண்டியிருக்கிறது. கனம் உறுப்பினர் [illegible] [illegible]ர்கள், 20 நாட்கள் ஆகும் [illegible] திரு. [illegible] பெற்றுத்தர வேண்டும் என்றால், அதைப் பார[illegible]



1969 மார்ச் 21] [திரு. செ. மாதவன்]

ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லுவது என்றால், எங்கள் மீது தவறில்லை. ஒவ்வொரு மாவட்ட அதிகாரியும், தன் கீழ் உள்ள அதிகாரிகளுக்கு அனுப்பித் தகவல்களைச் சேகரிக்க வேண்டியிருக்கிறது. அப்படிச் சேகரித்த தகவலைத்தான் இப்பொழுது கொடுக்கிறேன்.

I wish to place the following statement under Rule 41 of the Assembly Rules :—

According to the reports received by the Government the Vridhagiriswarar temple festival at Vridhachalam started on 23rd February 1969, and it is customary to collect toll-tax for vehicles coming into the town as authorised by the Panchayat through a contractor. On 24th February 1969, 8 students from the Arts College, Vridhachalam, were coming on cycles to the College from outside Vridhachalam and an altercation ensued between the students and the toll-tax collectors when the toll-collectors demanded payment of toll from the students. The students went to college, came back with a large crowd of students and attacked the toll-tax contractor's men. The contractor's men and some members of the public retaliated. The situation was brought under control promptly by the Revenue and police officials. A sizable armed police force is at present keeping vigil in the place. The Principal of the College closed the college up to 3rd March. The police authorities have registered a case under section 147 and section 323, Indian Penal Code against some students and one against the other party under sections 147, 447, 448 and 323, Indian Penal Code and they are under investigation. The situation is now peaceful and the Government have taken adequate steps for maintaining order in the place. The college was re-opened on 5th March 1969 and the situation is reported to be peaceful.

திரு. கோ. பூவராகன்: கனம் சபாநாயகர் அவர்களே, அதைக் கொடுக்கும்போது முதல் அமைச்சர் மறுதினத்துக்கு மறுதினமே அறிக்கை வைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னதால்தான் கொடுத்தேன். மேலும், ஏற்கெனவே, அரசாங்கத்திற்கு முன்கூட்டியே, அன்றையதினமே தகவல் கிடைத்திருக்கிறது. தகவல் சேகரிக்க காலதாமதம் என்பது சரியான வாதமாகாது.

A question shall ordinarily be forwarded to the department within four days from the date of receipt by the Secretary. The department shall send a reply to the question to the Secretary within fifteen days from the date of receipt of it.

என்று கேள்விகள் சம்பந்தமான விதி இருக்கிறது. ஆனால் 41-வது விதியில் அப்படியில்லை. ஆனால், இல்லையென்பதற்காக காலம் கடத்த வேண்டும் என்று நினைக்காமல், கூடியவரையில் பேரவைத் தலைவர் அவர்களே எத்தனையோ கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள், அறிக்கை உடனே வரவேண்டும் என்றும். எத்தனை எத்தனை அறிக்கைகள் அமைச்சர்களிடமிருந்து வர வேண்டும் என்று கேட்கிறோம். மேலும், 10-ம் தேதி, 17-ம் தேதி போட்டு விடுவோம் அதற்குள்ளாக அறிக்கை கொடுக்கவேண்டும் அனுப்ப வேண்டும் என்று எழுதுகிறோம். அவர்கள், அவர்களுக்கு உரிய முறையில் விவரங்கள் சேகரித்து அனுப்பக் காலதாமதம் ஆகிறது. வேறொன்றும் இல்லை. இதெல்லாம் முன்னாள் அமைச்சருக்குத் தெரியும். ஆகவே இந்தத் தேதியில்தான் கொடுத்தாகவேண்டும் என்று வற்புறுத்துவதற்கில்லை; அதற்கு விதி எதுவும் இல்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் சபாநாயகர் அவர்களே, விஷயம் என்னவென்றால், இவ்வளவுதூரம் அடிதடி நடந்து, மாணவர்களுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கும்போது, ட்ரங்கால் போட்டுக்கூட தகவல் சேகரித்திருக்க முடியும் சர்க்கார் நினைத்தால் 24 மணி நேரத்தில் கிடைக்கும் அப்படிக் கிடைக்கச்செய்யும், தகவல் வாங்கும் ஆற்றல் இருக்கிறது, திறமை இருக்கிறது இந்த அரசாங்கத்திற்கு. அப்படியிருக்கும்போது, 20 நாட்கள் ஆவானேன் என்பதுதான் அங்கத்தினருடைய கவலை. அது கனம் உறுப்பினர் அவர்களுடைய தொகுதி. இவ்வளவு அங்கே நடக்கும்போது, பொறுப்புள்ள ஒரு சட்டமன்ற அங்கத்தினர் எப்படிச் சும்மா இருக்க முடியும்? உடனடியாகத் தெரிவேண்டும் என்று அதைக் கவனிக்கவில்லை என்றும் அங்குள்ள மக்கள், மாணவர்கள் நினைக்கிறார்கள். முதல் அமைச்சர் பேசினார்கள், சொல்லுவதாகச் சொன்னார்கள். அன்று னவோ காலதாமதம் ஆகியிருக்கிறது. இனிமேலாவது, இப்படிப்பட்ட விஷயங்களில் சீக்கிரத்தில் அதிகாரிகளிடமிருந்து தகவல்களைச் சேகரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, விருத்தாசலத்தில் கலவரம் ஏற்பட்டது. உடனடியாக அது அடங்கிவிட்டது. அடங்கியபிறகு அதைப்பற்றி உடனடியாக என்ன சொல்வது? விவரங்கள் எல்லாம் சேகரித்துத் தரலாம் என்று செய்தோம். உடனடியாகக் கலவரம் அடங்கி அமைதியான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. அமைச்சர் இப்பொழுது எல்லா விவரங்களையும் சேகரித்துத் தந்திருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த விருத்தாசலம் நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், உடனடியாக கல்லூரி மூடப்படுகிறது. கல்லூரி இருக்கும் இடங்களில் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏதாவது தகராறு ஏற்பட்டால், கல்லூரியை மூடிவிடுவது என்கிற நிலை இருக்கிறது. இதைத் தவிர்க்க இனிமேலாவது முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, கல்லூரிமாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சில சந்தர்ப்பங்களில் தகராறுகள் ஏற்படும் போது, அரசாங்கமும், அதிகாரிகளும் தலையிட்டு அதைத் தீர்க்கிறார்கள். இது அரசாங்கத்தின் தவறினால் ஏற்படவில்லை. பொதுமக்களின் ஒரு பகுதியினருக்கும், மாணவர்களில் ஒரு பகுதியினருக்கும் ஏற்பட்ட தகராறு [illegible] பெரிதுபடுத்துவதற்குப் பதிலாக, நம்மைப் போன்ற சட்டமன்ற [illegible] என்று அமைதியை உண்டாக்கி, நியாயம் எங்கு இருக்கிறது [illegible] பார்க்க வேண்டும். எனக்குக் கிடைத்த தகவல்படி, [illegible]







முதல்வர், அந்தப் பகுதியில் முக்கியமானவர்களைக் கூட்டி, அதிகாரிகளையும் சந்தித்து இருக்கிறார்கள். கல்லூரியை மூடவேண்டுமென்று முடிவிருக்கிறார்கள். பின்னால், 5-ம் தேதி திறந்துவிட்டார்கள். மாணவர்களுக்கு எந்தவிதமான குறையும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்த திரு. பெ. சௌந்தரபாண்டியன் இடத்தில் இல்லாததால், அது எடுத்துக் கொள்ளப்படவில்லை. அடுத்து, மானியக் கோரிக்கைகள்.

## 6. 1969–70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 14—மருத்துவம்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.—

"கோரிக்கை எண் 14—மருத்துவம்—என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,67,46,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

THIRU K. RAMAMOORTHY : To discuss policy, I move the following cut motion—

" That the allotment of Rs. 15,67,46,000 under Demand No. 14—Medical be reduced by Rs. 100 ".

DR. H. V. HANDE : To discuss policy and to bring home the need to make the hospitals up-to-date and to reduce the work load of each doctor and to increase the number of hospitals and bed strength, I move the following cut motion—

" That the allotment of Rs. 15,67,46,000 under Demand No. 14—Medical be reduced by Rs. 100".

திரு. வி. கே. கோதண்டராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையில் நடத்தப்படும் மருத்துவக் கல்லூரிகளில் குறிப்பிட்ட சமூகத்தை மட்டுமே சேர்க்கும் போக்கைப்பற்றி விவாதிக்க.—

"கோரிக்கை எண் 14—மருத்துவம்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,67,46,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்கிற, என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: ஐயா, தாலூகா தலைமையிடங்களில் உள்ள மருத்துவ மனைகளை விஸ்தரிக்க வேண்டிய அவசியத்தைக் குறித்து விவாதிக்க.—

"கோரிக்கை எண் 14—மருத்துவம்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,67,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்கிற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, கோவை மருத்துவ மனையில் இட வசதி இல்லாததனால் எலும்புருக்கி நோயால் பாதிக்கப்படும் மக்களைப் பாதுகாக்கக்கூடிய காசநோய் மருத்துவ மனை ஒன்று கோவையில் கட்டுவதுபற்றி விவாதிக்க.—

"கோரிக்கை எண் 14—மருத்துவம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,67,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கிறேன்.

(ஆ) கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம்

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து**: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.—

"கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம்—என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,95,04,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. கே. என். குமாரசாமி**: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராமங்களுக்கும் குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதைப்பற்றி விவாதிக்க.—

"கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ, 6,95,04,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்கிற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. ஆர். கருப்பையா**: பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் தாய்-சேய் நல விடுதி ஏற்படுத்துவதன் அவசியம் பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,95,04,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்கிற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss about the necessity for starting Primary Health Centres in rural areas and provide drinking water facilities in villages, I move—

" That the allotment of Rs. 6,95,04,900 under Demand No. 15—Public Health—be reduced by Rs. 100. "

**திரு. இ. கோவிந்தராசன்**: பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரகர்களாக ஹோமியோபதியாளர்களை நியமிக்கவேண்டியதன் அவசியத்தைப்பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,95,04,900-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்"

என்கிற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

(இ) கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து**: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.—

"கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு—என்ற தலைப்பின்கீழ் ரூ. 51,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."





THIRU K. RAMAMOORTHY : Sir, to discuss policy I move the following cut motion standing in my name—

" That the allotment of Rs. 51,800 under Demand No. 38—Capital Outlay on Public Health—be reduced by Rs. 100. "

**திரு. என். வரதராஜன்**: பேரவைத் தலைவர் அவர்களே, நகரசுத்தித் தொழிலாளர்கள் வாழ்க்கை நிலை, வேலை நிலை, ஊதியம், வசதிகள் பற்றி பரிசீலிப்பதற்கு தொழிலாளர்கள் பிரதிநிதி, உள்ளாட்சித்துறை பிரதிநிதி, அரசு பிரதிநிதி ஆக மூவர் கொண்ட குழு அமைப்பதுபற்றி விவாதிக்க.—

"கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 51,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்கிற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இப்பொழுது மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. முதலில் மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது சொல்ல விரும்பினால், உரையாற்றலாம்.

* **மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து**: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளின் கீழ், அதற்கான விளக்க உரைகளை* ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த விளக்க உரைகளைக் கூர்ந்து படித்து பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். நேரம் அதிகமாக இல்லாத காரணத்தால் நான் துவக்க உரையாக எதுவும் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களைக் கூறுவார்கள் என்று கருதுகிறேன். எல்லாவற்றிற்கும் இறுதியாக நான் கூற வேண்டியவைகளைக் கூறலாம் என்று கூறி, இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

**திரு ப. மகாதேவன்**: பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம்—பொதுச் சுகாதாரம் என்ற மானியங்கள்மீது என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது மாநிலத்தின் மறைந்த முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் உடல்நலக் குறைவாக இருந்த காலத்தில் நமது மாநிலத்திலுள்ள டாக்டர்கள் மிகவும் சிறப்பாகப் பணியாற்றினார்கள் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். டாக்டர்கள் அல்லும் பகலும் விழிப்புடன் பணியாற்றி, அண்ணா அவர்களின் உயிரைக் காப்பாற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள், டாக்டர்கள் நல்ல முறையில் பணியாற்றினார்கள் என்று பொதுமக்கள் பாராட்டுவது போல், நாங்களும், எங்கள் கட்சியின் சார்பில் எங்களுடைய பாராட்டுதல்களை அந்த டாக்டர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். அதேபோல, டாக்டர்கள் எல்லா நோயாளிகளையும், எல்லா மருத்துவ மனைகளிலும் மிக்க பொறுப்போடு, கடமையுணர்ச்சியோடு சிகிச்சையளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பல மாவட்டங்களிலே டாக்டர்களுக்கும் மருத்துவ மனைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கும் சில சச்சரவுகள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

உதாரணமாக, நாகர்கோயிலில் உள்ள ஆஸ்பத்திரியில் அங்கு பணியாற்றும் டாக்டர்களுக்கும், உதவிப் பணியாளர்களுக்கும் சச்சரவு ஏற்பட்டு, டாக்டர்கள் ஒருபுறம் சத்தியாக்ரகம் செய்வதாகச் சொன்னார்கள். அதே போல், உதவிப் பணியாளர்கள் ஸ்டிரைக் செய்யப்போவதாகச் சொன்னார்கள். இருதரப்பாருக்கும் ஒற்றுமையுணர்வு இல்லாததால் அங்கு நோயாளி

* 119-148-ம் பக்கங்களில் 1 முதல் 3-வது இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.

[திரு. ப. மகாதேவன்] [1969 மார்ச் 21

ளுக்குத் தக்கமுறையில் சிகிச்சையளிக்க முடியாத நிலைமை இருந்தது. ாவட்டக் கலெக்டர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, இருதரப்பாரையும் அழைத்துப் பேசி சமாதானம் செய்து வைப்பது பெரும் அரும்பாடாகிவிட் டது. மருத்துவ அதிகாரி குற்றம் புரிந்தவரை உடனுக்குடன் தண்டித் திருந்தால் அந்த நிலைமை இவ்வளவுதூரத்திற்கு முற்றிப் போய்விட் டிருக்காது என்பதைச் சொல்பவர்களும் உண்டு. டாக்டர்கள்—தொழிலா ளர்கள் இருதரப்பாருக்கும் இடையில் தவித்தவர்கள் நோயாளிகள்தான். டாக்டர்கள் வேலை செய்யாமல் சும்மா உட்கார்ந்திருப்போம் என்று சொன் ஞர்கள். அதேபோல தொழிலாளர்களும் வேலை செய்யாமல் சும்மா இருப்போம் என்றார்கள். டாக்டர் படிப்பு படிப்பதற்காக ஒவ்வொரு மாணவனுக்கும் அவனுடைய பெற்றோர்கள் 50 ஆயிரம் ரூபாய் வரையில் செலவு செய்து படிக்க வைக்கிறார்கள். அதே அளவில் அரசாங்கமும ஒவ் வொரு மாணவனுக்கும் 50 ஆயிரம் ரூபாய் செலவுசெய்து அவனுக்குப்படிப்பு சொல்லித் தருகிறது இவ்வளவுதூரம் செலவு செய்து படித்துப் பட்டம் பெற்று டாக்டர் தொழில் நடத்த வரும்போது, "நாங்கள் வேலை செய்யாமல் சும்மா உட்கார்ந்திருப்போம்" என்று சொன்னால் அதை என்னவென்று சொல்வது? இதுவிஷயத்தில் அரசாங்கம் மிக்க விழிப்போடு இருந்து டாக் டர்களும், மற்றவர்களும் தங்கள் தங்கள் பணிகளையாற்ற வேண்டுமென்ற நிலைமையை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, தனியாகத் தொழில் நடத்தும் டாக்டர்களுக்கு நல்ல வருவாய் வருகிறது. அவர்களைப்போல் தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்று அர சாங்க மருத்துவ மனைகளில் வேலைசெய்யும் டாக்டர்கள் நினைக்கிறார்கள். பார்க்கப்போனால் அது நியாயமான குறைதான். மேலும் டாக்டர்கள் கிராமங்களுக்குப் போவதற்குத் தயங்குகிறார்கள் கிராமங்களில் டென்னிஸ் போன்ற உடற் பயிற்சி செய்ய இடம் இல்லை யென்றும், கிளப் போன்ற நவீன வசதிகள் இல்லையென்றும் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். அப்படி யாரையாவது நாம் கிராமப் பகுதிக்கு மாற்றிவிட்டால், அந்த டாக்டர் சில நாட்களில் தன்னுடைய வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டு, தனி யாகத் தொழில் நடத்த ஆரம்பிக்கிறார். கேரள மாநிலத்தில் டாக்டர் படிப்புக்கு அட்மிஷன் ஆகும்போதே, 'மூன்று ஆண்டுகளில் கட்டாயமாக கிராமங்களில் பணியாற்ற வேண்டும்' என்ற நிர்ப்பந்தம் செய்யப்பட்டு உறுதிமொழி பெறப்படுகிறது. அம்மாதிரியான நிர்ப்பந்தத்தை இங்கும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கிராமப் பகுதிகளுக்குச் செல்லும் டாக்டர்களுக்குக் கூடுதலான சம்பளத்தைப் போட் டுத்தர வேண்டும். தனியாகத் தொழில் நடத்துவோருக்கு பணம் அதிகம் கிடைக்கிறதாகையால். கிராமங்களுக்குச் செல்லும் டாக்டர்களுக்கு அதிக மான சம்பளத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில இடங்களில் லேபரர்ஸ் இருக்கிறார்கள். என்னுடைய பகுதியில் ரப்பர் பிளான்டேஷன் கீரிப்பாறையில் இருக்கிறது. அந்தத் தொழிலா ளர்கள் 17 நாள்தான் லீவு எடுக்க முடியும் அதற்குமேல் இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் வேண்டுமென்றால் அவர்களுடைய சம்பளத் தில் மூன்றில் ஒரு பங்குதான் கொடுக்கிறார்கள். மருத்துவர்களிடமிருந்து சர்டிபிகேட் வாங்கித் தரவேண்டுமென்ற நியதி இருக்கிறது. அந்தத் தொழிலாளியின் இரண்டுநாட்கள் சம்பளம் 3 ரூபாய் 3-3/4 ரூபாய் தான் கிடைக்கும். ஆனால் அவன் டாக்டர் சர்டிபிகேட்டுக்காக ஐந்து ரூபாய் தரவேண்டும். இந்தக் காரணத்தினால் தொழிலாளர்களுடைய நிலைமை சிரமமாக இருக்கிறது. அங்கு சுமார் 500 தொழிலாளர் குடும் பங்கள் இருக்கின்றன. 500 குடும்பங்கள் உள்ள இடத்தில் ஒரு டிஸ் பென்ஸரியை வைக்க வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. ஆகவே, தடிக்காரன்கோணத்தில் ஒரு டிஸ்பென்ஸரியும், கீரிப்பாறையில் ஒரு டிஸ்பென்ஸரியும் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சமீபத்திலே, டைரக்டர் ஆஃப் மெடிகல் எஜுகேஷன் ஆபீசராக இருந்தவரை மாற்றிவிட்டு, வேறு ஒருவரைப் போட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது. பிறகு முதலில் இருந்தவரையே



1969 மார்ச் 21] [திரு. ப. மகாதேவன்]

நியமித்திருப்பதாகச் செய்தி வந்தது. ஆகவே, முதலில் இருந்தவருடைய காலக்கெடு பீரியட் முடிவதற்குள்ளாக வேறு ஒருவரைப் போட்டதாகச் செய்தி வந்தது பொது மக்களிடையே பல சந்தேகங்களை உண்டாக்கினால் அது ஆச்சரியப்படுவதற்கில்லை.

அடுத்தபடியாக, ஸ்டான்லி மெடிகல் ஆஸ்பத்திரிக்கு புதிதாக ஒருவரை டீன் ஆக நியமித்திருக்கிறார்கள். டீன் ஆக நியமிக்கப்படு கிறவர் மருத்துவத் துறையில் பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும். ஸ்டான்லி மெடிகல் ஆஸ்பத்திரிக்கு ரயில்வேயில் பணியாற்றிய ஒருவரை ஏன் நியமிக்க வேண்டும்? அந்தப் பதவிக்கு தகுதியானவர்கள் அங்கு எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஏன் புதியதாக நியமிக்கப்பட வேண்டும் என்ற வினாக்குறி எழத்தான செய்கிறது. இந்த நியமனத்தைப் பொது மக்கள் சந்தேகத்தோடுதான் நோக்குகிறார்கள். அவர் ஆளும் கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகத்துடன் ஈடுபாடு கொண்ட ஒருவரின் உறவினராக இருக்கிற காரணத்தால்தான் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருக் கிறார் என்ற சந்தேகம் வருகிறது. பொதுமக்களிடையே நிலவும் இச் சந்தேகத்தை நாம் தட்டிக் கழிப்பதற்கில்லை

அடுத்தபடியாக, மெடிகல் காலேஜ் அட்மிஷன் விஷயம் இன்னும் சீர்ப்படவில்லை. இந்த விஷயத்தில் பலவிதமான பேச்சுக்கள் இருக் கின்றன. நாம் அதை நம்புகிறோமா, இல்லையா என்பது பேச்சல்ல. அட்மிஷன் சீரிய முறையில் நடைபெற வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாட்டு மருத்துவ முறைக் கல்லூரியைப் பற்றியது. அங்கே படித்துப் பட்டம் பெற்ற டாக்டர்கள் தங்களுக்கு எம்.பி.பி.எஸ். டாக்டர்களைப்போல சம்பளம் தரப்பட வேண்டும். அவர்களைப்போன்ற அந்தஸ்து தரப்பட வேண்டும் என்ற கோரிக்கை விட்டுக்கொண்டிருக் கிறார்கள். இதைப்பற்றி சட்டமன்ற உறுப்பினர்களிடமும், அமைச்சர் களிடமும் அவர்கள் கோரிக்கை கொடுத்து வருகிறார்கள். அரசாங்கம் அவர்கள் கோருவதை தப்பு என்று சொல்ல முடியாது. அவர்களும் மற்ற டாக்டர்கள் செய்யும் மருத்துவத் தொழிலைத்தான் செய்கிறார்கள். அரசாங்கம் அவர்களுடைய அந்தஸ்தையும், சம்பளத்தையும் உயர்த்திக் கொடுத்து, அவர்களுக்கு வேண்டியதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்.ஜி.ஓ.-க்களுக்கு ப்ரீ மெடிகல் எய்ட் இருக்கிறது. அவர்கள் மருந் துகள் வாங்கிக் கொண்டு பில்லைக் கொடுத்து பணம் வாங்கிக் கொள்ளலாம் என்கிற முறை இருக்கிறது. நான்கைந்து குழந்தைகள் இருப்பதாக 200 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர் 250 வரை பில் வாங்கியபோல தாகத் தெரிகிறது. இது உண்மையாக இருக்குமானால் கட்டாயம் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் இப்படித் தவறான முறையில் நடக் கிறது என்றால் அப்படி நடைபெறாது தடுக்க அரசு கண்காணிப்பாக இருக்கவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

மலேரியா எர்ராடிகேஷன் திட்டத்தில் கிட்டத்தட்ட 4,000 பேர்கள் வேலை செய்கிறார்கள். கடந்த 10 வருஷங்களாகத் தொடர்ந்து பணி யாற்றிக் கொண்டு வந்திருந்தும் அவர்கள் சர்வீஸ் ரெகுலரைஸ் செய்யப் படாமல் இருக்கிறது. அதனால் அவர்களுக்கு ஊக்கம் குறைகிறது. அவர்களுடைய சர்வீசை ரெகுலரைஸ் செய்ய ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். மேலும் செலக்ஷன் கிரேடு என்பதற்கு எம்.எல்.எம்.டி. வேண்டுமா? அதுபோல எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பது தெரிந்தால் நல்லதாக இருக்கும். சுகாதார அமைச்சர் தம் பதில் உரையில் கூறுவார்கள் என்று நினைக்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு பற்றி நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள். எதிர்க் கட்சியில் இருந்தபோது எதிர்த்துப் பேசியிருந்தாலும் இப்போது நல்ல முறையில் செயல்படுவதை வரவேற்கிறேன். அப்படிச் செயல்

[திரு. ப. மகாதேவன்] [1969 மார்ச் 21

பருவது அவர்களது கடமையும் ஆகும். ஐம்பது வருஷங்களுக்கு முன்னலேயே கவிஞர் பாரதிதாசன் 'சந்தான முறை நன்று தவிர்சகும் முறை நீதா' என்பதான ஒரு கவிதையில் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை நன்ருகச் சித்தரித்திருக்கிருர்கள். அவர்களது கட்சிக் கவிஞருடைய கருத்து அது. ஆகவே இத்துறையில் ஊக்கம் காட்டி வருவது நல்லது, மேலும் காட்ட வேண்டும்.

கடைசியாக நான் நமது மாநில டாக்டர்களைப் பற்றிக் குறிப்பிட்ட போது டாக்டர் மில்லரைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்று நினைக்கிறேன். • • • • இறுதியாக நமது முதலமைச்சர் அவர்களை அடக்கம் செய்தது பற்றி சர்ச்சை ஏற்பட்டது. அது ஒருவகையில் பார்த்தால் நல்லது என்றே சொல்லவேண்டும். அவருடைய உடலிலே ரேடியம் வைக்கப் பட்டது. அது 70 நாட்கள் வரை வீர்யத்தோடு இருக்கும் என்ற காரணத்தினுல் எரித்திருந்தால் கூட......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவர்களுடைய வீட்டுப் பிரச்சினை. அதை இப்போது சொல்லத் தேவையில்லை.

திரு. ப. மகாதேவன்: நான் அதைத் தவருகச் சொல்லவில்லை. மருத்துவ முறைப்படி அவரைப் புதைத்ததே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவர்களது குடும்பப் பிரச்சினை. தீர்ந்துபோன பிரச்சினை. இந்த விவாதத்தின்போது பேசுவதற்கு இடம் இல்லை. பொதுவாகச் சொல்வது என்ருல் எல்லோருடைய உடம்பையும் வைத்து எரிப்பது சரியில்லை, புதைப்பதுதான் நல்லது என்பதாகச் சொல்லலாம். ஆகவே அதைப் பற்றிக் குறிப்பிடக் கூடாது.

திரு. ப. மகாதேவன் : நான் பொதுவாகச் சொல்கிறேன். ரேடியம் வைக்கப்பட்டவர்கள் இறக்கிறபோது புதைப்பதுதான் நல்லது. எரித்தால் மறுநாள் அஸ்தி எடுக்கிறவர்கள் கண்களோ, மற்ற உறுப்புக்களோ பாதிக்கப்படலாம் என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. இ. ஜயராமன் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம், சுகாதாரம் ஆகிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

நம்முடைய பேறிஞர் அண்ணு அவர்கள் நோய் உற்றிருந்தபோது இரவு பகல் என்று பாராமல் பல நாட்கள் நமது மருத்துவர்கள் எத்தனையோ உதவிகளைச் செய்து சரித்திரத்திலே யாரும் கண்டிராத வகையில் போன உயிரைக் கூடப் பலமுறை மீட்டுச் சிறப்பான பல உதவி களைச் செய்தார்கள். அதற்காக அத்துறையினருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும் கூட அதை உணர்ந்து பாராட்டியிருக்கிருர்கள்.

இந்த மானியத்தில் மத்திய அரசு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவோ தொகைகளைக் குறைத்துக் கொண்டாலும் சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 5 சதவீதம் அதிகமாக நாம் செலவு செய்ய முன் வந்திருப்பதற்காக நான் அமைச்சரவையைப் பாராட்டுகிறேன்.

நோக்கத்தைப்பற்றிப் பேசுகின்ற நேரத்தில் சாதாரண ஏழை எளியவர் களுக்கும் அதிக மருத்துவ வசதி கிடைக்கச் செய்வதுதான் நோக்கம் என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். அந்த அடிப்படையில் அதிகமாக மருத்துவ மனைகளுக்கும், வசதிகளைச் செய்து கொடுக்க பணம் ஒதுக்கியிருக்கிருர்கள். குறிப்பாக சேலம் மாவட்டத்தில் பப்ளிக் ஹெல்த் லாபரட்ரி என்று பெயர் அளவில் இருந்து வந்திருக்கிறது. அதைப் பெரும் அளவில் அபிவிருத்தி செய்ய அதிகத் தொகை ஒதுக்கியிருப்பது குறித்து மகிழ்ச்சி அடை கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1969 மார்ச் 21] [திரு. இ. ஜெயராமன்]

அதேபோல சேலம் மாவட்ட தலைமை மருத்துவ மனையில் மெண்டல் செல் என்ற பிரிவை முதன்முதலாக ஆரம்பித்திருப்பதைக் குறிப்பிட்டுப் பாராட்டுகிறேன்.

மேலும் பாதாள சாக்கடைத் திட்டம் கடந்த மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு 25 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. அப்போது இருந்த அரசு எந்தக் காரணமும் சொல்லாமல் தொகை ஒதுக்கிய திட்டத்தை நிறைவேற்ற முடியாது செய்துவிட்டது. அதற்குப் பிறகு நமது புதிய தமிழக அரசு அந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிச்சயமாக அமுல்படுத்த முற்படுகிறபோது நான் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களை நான் பாராட்டுகிறேன்.

மற்றும் நம்முடைய மாவட்ட மருத்துவகங்களில் மேற்படிப்புப் பட்டம் [முற்பகல் 11-00]
பெற்ற எம்.டி.,எம்.எஸ்.களை நியமிக்காமல் இருக்கிருர்கள். அவர்களை நியமிப் பதன் மூலமாக சிக்கல் நிறைந்த வியாதிகளை தீர்க்க வசதி செய்கின்ற முறை மேற்கொள்ளப்படும் என்று இந்த அறிக்கையில் சொல்லியிருக் கிருர்கள். அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். பொதுவாக எத்தனையோ வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிருர்கள். இந்தக் குறிப்பிலே Genito-urinary surgery department ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். அதுவும் பாராட்டுக்குரியதாகும். Diabetic cell என்று முதன்முதலிலே கீழ்ப்பாக்கத்திலே ஆரம்பித் திருக்கிருர்கள். அதுவும் புதிய நிகழ்ச்சிதான். மேலும் மூன்று நோய்கள் என்ற பெயரிலே Diphtheria, tetanus and whooping cough இருப்பதை தடுப்பதற்காக குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது. இதைக் கட்டாயமாக்கவேண்டும். இளம்பிள்ளை வாதம் என்ற நோயிலே சேலத்தைப் பொறுத்தவரையில் 52 கேஸ்களை நேரடியாகப் பார்த்துள்ளேன். அதற்காக Polio and Rehabilitation Centre ஒன்று சேலம் மாவட்டத் தலைமை மருந்தகத்திலே ஆரம்பிப்பார்கள் என்று நம்புகிறேன். நகரசபைகளின் வருவாய்த்துறையைப் பெருக்க நகர சபைகளுக்கு என்று மொத்தமாகப் பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக் கிருர்கள். அதிகமாக வருவாயத் துறையில் ஈட்டுவதிலேயே கவனஞ் செலுத்தி வருகின்ற சேலம் நகரசபைக்கு அதிலேயிருந்து கணிசமாக ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Kidney trouble-ஐப் போக்குவதற்கு சரியான இயந்திரங்கள் நம்முடைய மாநில சர்க்காரிடத் திலே இல்லை. தலைமை மருந்தகத்திலேகூட இல்லாத நிலைமை இருக் கிறது. ஒன்றே ஒன்றுதான் வேலூரிலே இருக்கிறது. கிட்னியில் வியாதி வந்தால் அல்லல்படுவோர் அதிகம். எனவே, Artificial kidney-க்கு யந்திரம் வாங்கி அதன்மூலம் அந்த வியாதியால் அவதிப்படுபவர்களுக்கு உதவுவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக இன்ஸ்டெலேஷன் லைசென்ஸ் வழங்கப்படுகிற நேரத் திலே பஞ்சாப், டெல்லி போன்ற பிரதேசங்களிலே தாராளமாக எந்த விதமான விதிமுறைகளும் இல்லாமல் அனுமதி வழங்குகிருர்கள். அதன் காரணமாக நல்லமுறையில் அந்தத் தொழில் அபிவிருத்தி ஏற்பட்டு வாழ்க்கைத்தரம் அங்கே உயர்ந்திருக்கிறது நம்முடைய மாநிலத்தில் டவுன் பிளானிங் ஆக்ட் மூலமாகவும். மெட்ராஸ் பப்ளிக் ஹெல்த் ஆக்ட் மூலமாகவும் உள்ள விதிமுறைகளை தளர்த்தவேண்டும். நாமோ குடிசைத் தொழில்களிலும் சிறிய தொழில்களிலும் முன்னேற்றம் அடையாத நிலைமையிலே இருக்கிருேம். எனவே இந்த நேரத்திலே அவற்றைத் தளர்த்திளுல்தான் தொழில் அபிவிருத்தி அடையும். இல்லாவிட்டால் அதிகமாக முதலீடு செய்துதான் முதலாளிகள் ஆரம் பிக்க முடியும். நம்மிடம் சிறிய அளவில் மூலதனம் போடக்கூடிய முதலாளிகள்தான் இருக்கிருர்கள். எனவே அவர்கள் ஆரம்பிக்கக்கூடிய முறையில் விதிமுறைகளில் தளர்ச்சி காட்டாவிட்டால் — அப்படிப்பட்ட தொழில் ஆரம்பிக்கின்ற எண்ணமே இல்லாத நிலைமை வந்துவிடும்.

[திரு. இ. ஜெயராமன்] [1969 மார்ச் 21

எனவே அந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு வேண்டிய விதிமுறைகளைக் குறிப்பிட்ட காலத்திற்கு தளர்த்துவதற்கு வகையில் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கும் என்று நம்புகிறேன். இந்த

அடுத்தபடியாக, நகரசுத்தித் தொழிலாளர்கள் பிரச்சினை எத்தனையோ துறைகளில் உள்ளவர்களுக்கு நிலம் கொடுக்கிறோம். இருக்கிறது. கொடுக்கிறோம். ஆனால் இந்த நகரசுத்தி தொழிலாளர்களுக்கு கடன்கள் கொடுக்காமல் இருக்கிறோம். அவர்கள் இதுவரை எதுவும் களாகவே இருக்கிறார்கள். இதற்காக இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு எடுப்பார் கைப்பிள்ளை முன் மத்திய அரசு அவர்களுடைய தேவைகளையும் கண்டறிவதற்கு ஒரு கமிட்டி போட்டார்கள். குறைகளையும் முடிவுகளை நாம் இன்னும் அமுலாக்கவில்லை. அந்தக் கமிட்டி எடுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அதன்மீது நம்முடைய நம்புகிறேன்.

அடுத்ததாக, தொகுதிப் பிரச்னையைப் பார்ப்போமானால் வசதியைப் பொறுத்தவரையில் சேலம் நகரத்திலே இரண்டாவது குடிநீர் வழங்கும் திட்டம் அமலாக்கப்படுகிறது என்றாலும் அதிக வசதிகள் குடிநீர் வதற்குத் திட்டம் இருக்கிறது. அங்கே இருக்கின்ற நகரமன்ற செய் பினர்கள், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், காட்டேரிப் பகுதி உறுப் யிலிருந்து மின்சாரச் செலவில்லாமல் நீரைக் கொண்டுவரக்கூடிய திட்டத்தை வைத்திருக்கிறார்கள். அதன் மூலமாக இந்தச் சிக்கலான பிரச்னையை தீர்க்கமுடியும் என்று நம்பி இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே 26 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. இப்பொழுது மணி 11. இன்னும் 2½ மணிநேரம் தான் இருக்கிறது. ஆகவே, உறுப்பினர் ஒவ்வொருவரும் ஐந்து நிமிடத் திற்கு மேலே எடுத்துக்கொள்ளவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த சுகாதார மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கட்சியிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு முழுவதுமாக டாக்டர்கள் போட்டு விடப் போகிறோம் என்று கண்டிருக்கிறது. அதுவும் பாராட்டுதலுக்கு உரியது. பிரைமரி ஹெல்த் சென்டர்கள் எப்படி இருக்கின்றன என்பதை உணர்ந்து அதற்கு வேண்டியவைகளைச் செய்தால்தான் சரியாக நடக்கும். பிரைமரி ஹெல்த் சென்டர்களை வைத்துவிட்டால் மாத்திரம் கிராமங்களிலே வைத்திய வசதி பெருகிவிட முடியாது. அவற்றிற்கு நல்ல கட்டடங்கள் இல்லை.

என்னுடைய தொகுதியிலே கண்ணங்குடியிலே ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிறது. அதிகாரிகள் அதற்கான கட்டடம் சரியாக இல்லை என்று வேறு இடத்திற்கு மாற்றவேண்டுமென்றும் கூறினார்கள். அந்த ஊரிலே வேறு கட்டடம் இல்லாத காரணத்தினாலே அனுமந்தக்குடி என்ற இடத்தில் இப்பொழுது அது நடந்து வருகிறது. இப்பொழுது அந்தக் கட்டடமும் சரியான நிலைமையில் இல்லை. அதற்காக நானும் சேர்ந்து பல முயற்சிகள் எடுத்துக்கொண்டேன். கட்டடத்திற்காக கட்டடம் இருந்தால்தானே அதை மாற்றிவைக்கமுடியும்? இருந்தும்கூட மோசமாக இருக்கிற இடங்களிலே பிரைமரி ஹெல்த் சென்டர்களை கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிரைமரி ஹெல்த் சென்டர்களிலே ஒரு லேடி டாக்டரைக் கண்டிப்பாகப் போடவேண்டும். பிரசவக் கேஸ்கள் அதிகமாக வருவதால் கட்டாயமாக லேடி டாக்டர் என்று இருந்தால்தான் தாய்மார்களுக்குப் பிரயோஜனமாக



1969 மார்ச் 21] [திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்]

இருக்கும். ஆண் டாக்டர்களாக இருந்தால் பிரசவக் கேஸ்களைப் பொறுத்த வரையில் தாய்மார்களுக்கு சங்கடங்கள் இருக்கும் என்பதை உணர்ந்து லேடி டாக்டரை அவசியம் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே பிரைமரி ஹெல்த் சென்டர்களில் வைத்திய வசதிகள் கிடையாது. பிரசவக் கேஸ்களைக் கொண்டுபோவதற்குள் எத்தனையோ பேர்கள் இறந்துபோய்விடக்கூடிய நிலைமையெல்லாம் இருக் கிறது. எவ்வளவு வைத்திய வசதிகள் இல்லாமல் இருக்கிறார்கள் என்பது அந்த கிராம மக்களுக்குத்தான் தெரியும். பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இருக்கிற இடங்களிலே நோயாளிகளைக் கொண்டுபோவதற்கு போக்கு வரத்து சரியாக இருக்கவேண்டும். கிராமங்களிலே வைத்திய வசதி சீக்கிரமாக நல்ல முறையில் பெறக்கூடிய வகையில் ரோடு வசதிகள் போடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அவசியமாக செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு மருந்துகள் அதிகமாகக் கொடுப்ப தில்லை. ஏதோ கொஞ்சம் கண்துடைப்புக்காகத்தான் கொடுக்கப்படுகிறதே தவிர ஜாஸ்தியாகப் பணம் ஒதுக்கப்பட்டு மருந்துகள் தருவதில்லை. எனவே போதுமான அளவுக்கு மருந்துகள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சித்த வைத்தியத்தைப் பொறுத்தவரையில் அதைப் பெருக்கு வதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது. இந்த சித்த வைத்தியத்தை கிராமப்புறங்களிலே டாக்டர்கள் செல்வதற்கு மறுக்கின்ற நிலைமையை ஓரளவு நிவர்த்தி செய்யக்கூடிய முறையில் ஏற்படுத்தலாம். இந்த அரசாங்கம் சித்த வைத்தியர்களை அதிகமாகப் போட்டு கிராமப்புறங்களிலே சித்த வைத்திய சாலைகளை ஏற்படுத்த வேண்டும்.

கிராமப்புறங்களிலே குடிநீர் வசதி மிகவும் மோசமாக இருக்கிறது. சுதந்திரம் அடைந்தும்கூட கிராமப்புறங்களிலே குடிநீர் வசதி இல்லை யென்றால் அங்குள்ள மக்கள் மிகவும் தொல்லையுற்று இருக்கிறார்கள். இந்த அரசாவது-ஏற்கனவே இருந்த அரசிடம் இதைப்பற்றி பல முறை கள் எடுத்துச் சொல்லிக் கொண்டே வந்தோம், செய்யாமல் போய் விட்டது. கிராமப் புறங்களிலே குடிநீர் வசதியைப் பெருக்குவதற்கு பட்ஜெட்டிலேயே அதிகமாகப் பணம் ஒதுக்கி ஸ்பெஷலாக இதைச் செய்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே தொண்டி என்ற இடத்திலே ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. அதை அரசாங்கத்திலே எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அது எடுத்துக் கொள்ளப்பட்டு ஒரு வருஷத்திற்கு மேல் ஆகியும்கூட இன்னும் அந்த ஸ்டாஃபுக்கு எல்லாம் சம்பளம் கிடைக்கவில்லை. ஒருவருஷமாக சம்பளம்கிடைக்கவில்லையென்றால் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். எனவே அவர்களுக்குச் சம்பளம் உடனடியாகக் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேவக்கோட்டையிலேயே புதிதாக ஆஸ்பத்திரிக் கட்டடம் கட்டுவதற் காக 1967-லே சாங்ஷன் செய்யப்பட்டது. ஆனால் இன்னும் அந்தக் கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறது. ஒரு வருஷத்திற்கு மேலாகியும் கூட அஸ்திவாரக்கல்கூட நடப்படாமல் இருக்கிறது. உடனடியாக அந்தக் கட்டடத்தைக் கட்டிக்கொடுத்து வேண்டிய சாதனங்களையும் அமைத்து அந்த ஆஸ்பத்திரியை நல்ல முறையிலே இயங்கச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு பேச வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

[1969 மார்ச் 21

* திரு. எம். கந்தசாமி : பெருமதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே. மருத்துவம், சுகாதார மானியக் கோரிக்கைகளை ஆதரித்து சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு, குறிப்பாக கடைசி வருஷ மாணவர்களுக்கு செப்டம்பர் தேர்வு இந்த ஆண்டு ரத்து செய்யப்படும் என்று சொன்ன தன் காரணமாக, அவர்கள் இந்தத் தேர்வை அரசாங்கம் ரத்து செய்யக்கூடாது, நடத்த வேண்டுமென்ற அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதால் எப்போதும் போல் செப்டம்பர் தேர்வை இந்த ஆண்டு நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்தைப் பொருத்த அளவில் அங்குள்ள மக்கள் திருச்சி நகரத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டு மென்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் பண்ட் என்ற முறையில் ஒரு தொகையை கணிசமாக வசூல் செய்து வைத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டிலேயே அந்தக் கல்லூரி ஏற்படுத்தப் படும் என்று திருச்சி மாவட்ட மக்கள் எதிர்பார்த்தார்கள். இந்த ஆண்டாவது அதற்கான நிலை இல்லை. அடுத்த ஆண்டிலாவது அங்கே ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவ மனைகளிலே, அரசாங்க மருத்துவ மனை என்றும் பஞ்சாயத்து யூனியன் கீழ் இருக்கும் மருத்துவ மனை என்றும் பிரிவாக இருக்கும் காரணத்தால் பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனைக்கு எந்த டாக்டரைப் போடுவது என்ற குழப்பமும், அதே சமயத் தில் இரண்டு நிர்வாகம் இரண்டு இலாக்காவிடம் இருக்கும் காரணத் தால் சரியான முறையில் செயல்படாத நிலைமையும் இருக்கின்ற காரணத்தால் அந்த இரண்டு இலாகாக்களும் இணைந்த முறையில் அரசாங்கத்தின்கீழ் அந்த மருத்துவ மனைகள் இயங்கப்பட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள மணப்பாறை, நகரசபையாக இருந்து வருவதோடு, வட்டத்தின் தலைநகராகவும் இருந்து வருகிறது. அப்படி இருந்தும்கூட அங்கு பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனைதான், படுக்கை வசதிகூட இல்லாத நிலைமையிலே இருந்து கொண்டிருச்கிறது. அதை அரசாங்க மருத்துவமனையாக மாற்றுவதுகூட படுக்கை வசதிகள் பொருந்திய மருத்துவமனையாகவும் ஆக்கவேண்டும். அங்கு தற்போது ஆண் டாக்டர் ஒருவர்தான் இருக்கிறார், பெண் டாக்டர் ஒருவரையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மணப்பாறை குடிதண்ணீர்ப் பிரச்சினை, பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இந்த வருஷம் பருவ மழை இல்லாத காரணத்தால் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். 1928-இல் மணப்பாறை பேரூராட்சி மூலமாக 18 லட்சம் ரூபாய்க்குத் திட்டம் தீட்டப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டிருக்கிறது. அந்தத் திட்டம், குளித்தலை காவேரியில் இருந்து மணப்பாறைச்குத் தண்ணீர் கொண்டு வர வேண்டுமென்பதாகும். அந்த முறையில் இந்த அரசு அதற்கான முயற்சியில் ஈடுபட்டு குளித்தலையில் இருந்து மணப்பாறைக்குக் குடிதண்ணீர் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குளித்தலை மருத்துவமனைப் பிரச்சினை நீண்ட நாள் பிரச்சினையாக இருந்து வருகிறது. அந்த மருத்துவமனையில் எட்டு படுக்கைகள்தான் இருக்கின்றன. 1950-ல் இருந்த அதே நிலைமையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. "இன்-பேஷண்ட்" ஆக ஒரு நாளைக்கு 40 பேர் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. அந்தப் பகுதியில் சுற்றுப் பயணம் செய்த முன்னாள் சுகாதார அமைச்சர் மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள் அந்த மருத்துவமனையை விஸ்தரிப்பதற்காகத் தனியாக ஒரு



1969 மார்ச் 21] [திரு. எம். கந்தசாமி]

இடத்தைப் பார்த்து அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்படியான நிலை இருக்கிறது. அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

குளித்தலைக் குடிதண்ணீர்த் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதற்காக குளித்தலை நகர மக்களின் சார்பில் அரசுக்கு நன்றியைக் கூறி சீக்கிரமாக நடவடிக்கை எடுத்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி நகரத்தைப் பொறுத்த அளவில் பாதாளச் சாக்கடைத் திட்டம் என்பது திட்ட அளவிலே இருக்கிறதே தவிர, இதுவரையில் அது எந்த விதமாகவும் செயல்படவில்லை. இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அரசாங்க மருத்துவமனைகளில், குறிப்பாக சென்னையிலுள்ள தலைமை மருத்துவமனையில் வேலை செய்யும் மருத்துவர்கள் திறமையானவர்களாக இருக்கிறார்கள் என்றாலும் போதுமான அளவுக்கு "எக்விப்மென்ட்ஸ்" இல்லாத காரணத்தால் நல்ல முறையில் வேலை செய்ய முடியவில்லை. வேலூர் மருத்துவமனையில் நல்ல எக்விப்மென்ட்ஸ் இருக்கின்ற காரணத் தால் டீம்-ஆப்-டாக்டர்ஸ்—மருத்துவக் குழு என்று போட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறார்கள். அதே போன்று சென்னையிலுள்ள தலைமை மருத்துவமனையிலும் நல்ல எக்விப்மெண்ட்ஸ் வைக்க ஏற்பாடு செய்து மருத்துவக் குழு ஒன்றை பரீட்சார்த்தமாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நங்கவரம், தோகமலை போன்ற பகுதிகளில் மருத்தவமனைகளில் போதிய மருந்து இல்லாமல் கிராமமக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். போதிய அளவு மருந்துகளை வைப்பதற்கு ஏற்பாடு செய்வதோடு நல்ல டாக்டர்களையும் போட்டு அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது புதிதாக அந்த இலாகாவை நிர்வகித்து வரும் அமைச்சர் மாண்புமிகு சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் முன்பு இருந்த அமைச்சர் மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்களைப்போல் அடிக்கடி மருத்துவ மனைகளிலே திடீர் சோதனைகளை நடத்தி ஆங்காங்குள்ள நிலைமைகளுக் கேற்ப நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறி இந்த வாய்ப்பை அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. என். சங்கரய்யா : மதிப்பிற்குரிய உப தலைவர் அவர்களே, பொதுச் சுகாதார மானியக் கோரிக்கையின் மீது பின்வரும் கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, இன்றைக்கு "ஆனரரி டாக்டர்"—கவுரவத்திற்காக இருக்கின்ற முறை இருப்பதை நீக்கிவிடலாம் என்பது என்னுடைய கருத்தாகும். இதனால் ஆஸ்பத்திரியிலுள்ள பிணியாளர்களுக்கு நல்ல முறையில் எந்த விதமான வசதியும் கிடைப்பதில்லை. பெரும்பாலும் இது பயனற்ற முறை என்றுதான் நடைமுறை அனுபவம் காட்டுகிறது. இந்த முறையை நீக்கி விட வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1969 மார்ச் 21

டாக்டர்கள் முழுநேர அரசு ஊழியர்களாக, வெளியில் தொழில் புரிய உரிமையின்றி ஏற்பாடு செய்வதுதான் சிறந்தாக இருக்கும். இப்படிச் செய்யும்போது டாக்டர்களின் ஊதியத்தை ஓரளவு அதிகரிக்க வேண்டும். மத்திய அரசு அவர்களுடைய டாக்டர்களுக்குச் செய்திருப்பது போல் முழு நேர ஊழியர்களாகச் செய்தால்தான் மக்களுக்கு உதவி செய்யக் கூடிய முறையில் டாக்டர்கள் பணியாற்ற முடியும்.

இந்திய சித்த வைத்தியக் கல்லூரி பாளையங்கோட்டையில் நடைபெறு கிறது. அங்குள்ள மாணவர்களின் பல்வேறு பிரச்சினைகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இதர வைத்திய கல்லூரி மாணவர்கள் தொழிலில் முன்னேற்றமடைவதற்கு எந்த அளவுக்கு வசதிகள், சாதனங்கள் கொடுக்கப்படுகின்றனவோ அந்த அளவுக்கு இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அவர்களும் மருத்துவர் களாகச் செயல்பட வேண்டியவர்கள்தான். தமிழ் நாட்டில் தொன்று தொட்டு நம்முடைய சித்தர்களால் உருவாக்கப்பட்ட அந்த முறைக்கு நவீன கருவிகளைப் பயன்படுத்தி எந்த வகையில் பயன்படுத்திக் கொள்வது என்ற முறையில் சித்த வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

ஹோமியோபதி டாக்டர்களுடைய நிலைமையையும் முறைப்படுத்த திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் காணப்படுகிறது. அதையும் முறைப்படுத்துவது அவசியமாகும்.

மருந்தாளுநர்கள் (பார்மசிஸ்ட்) கடந்த இரண்டு ஆண்டுகளாகவே முக்கிய கோரிக்கைகளை அரசாங்கத்திடம் வைத்து வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அரசாங்கமும் கவனிப்பதாகக் கூறியிருக்கிறது. அவர்கள் எழுத்து வேலை செய்வதற்கு ஊதியமும், வாராந்திர விடுமுறை யும், பதவி உயர்வு பெறுவதற்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்த வேண்டும். வைத்தியப் பிரிவில் முக்கியமானவர்களாகப் பணியாற்றுகின்ற அவர்களுடைய கோரிக்கைகளை அனுதாபத்துடன் இந்த அரசு கவனிக்கும் என்று கருதுகிறேன்.

மதுரையில் இருக்கக்கூடிய ஆஸ்பத்திரியில் சென்னையில் இருப்பது போல் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் தனியான பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அதற்காக தனி ஆஸ்பத்திரி என்று ஏற்படுத்தா விட்டாலும் பெரிய பிரிவு ஒன்றை சென்னையிலுள்ள அடிப்படையில் ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

மதுரை ஆஸ்பத்திரியில் பணிபுரியும் ஊழியர்கள், எம்.என்.ஒ.-க்கள் குடியிருக்கும் பகுதியில் மின்சார விளக்குகளை அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள்; அவர்களுடைய கோரிக்கையைக் கவனித்து அந்த ஊழியர்கள் குடியிருக்கும் பகுதிக்கு மின்சார விளக்குகள் அளிக்க வேண்டியது அவசியமானதாகும்.

ஆஸ்பத்திரிகளில் அவசரக் கேஸ்களை கவனிக்கும் இடங்களில் போது மான உதவியாளர்கள் இல்லாமலும், வீல் சேர்ஸ் இல்லாமலும் இருப்ப தால் காலதாமதம் ஏற்படுகிறது. இது மாநிலம் முழுவதும் இருக்கக் கூடிய பிரச்சினையாகும். முக்கிய அவசர கேஸ்கள் வரும்போது அந்த இடத்திலேயே சிகிச்சை செய்யும் அளவுக்கு டாக்டர்கள் இருக்கவேண்டும். வார்டுக்குக் கொண்டு போய் சிகிச்சை செய்வது என்றால் காலதாமதம் ஆகிறது. சில நேரங்களில் வார்டுகளில் டாக்டர்கள் இல்லாத நிலையில் அவசரக் கேஸ்களை கவனிப்பதில் கூட ஒரு மணி நேரத்திற்கு மேல் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் வெளி ஊர்களிலிருந்து வரும் நோயாளிகளை கவனிக்கும் அவுட் பேஷண்ட் டிபார்ட்மெண்டில் பல அபிவிருத்திகளைச் செய்து கொடுக்க வேண்டும். சில நாட்களுக்குச் சேர்ந்தாற்போல் மருந்துகளைக்



1969 மார்ச் 21] [திரு. என். சங்கரய்யா]

கொடுப்பதால் அவர்கள் தினசரி வாங்கிக் கொண்டு போவதை நிறுத்த முடியும். தூரத்தில் இருந்து வரும் நோயாளிகள் மருந்துகளை எழுதிக் கொடுத்து விட்டால் போதும், நாங்கள் வெளியே வாங்கிக் கொள்கிறோம் என்று சொன்னால் அப்படி எழுதிக் கொடுக்கும் முறையை ஏற்படுத்த வேண்டும். யார் குறைந்த விலையில் மருந்துகளை சப்ளை செய்கிறோம் என்று சொல்கிறார்களோ அந்தக் கம்பெனிகளிடமிருந்து மருந்துகளை வாங்குகிறார்கள். இதனால் மருந்தின் தன்மை குறைகிறது. ஐந்து நாட்களில் குணமாகும் மருந்துகளைக் கொடுக்காமல் பத்து நாட்களில் குணமாகும் குறைந்த விலையில் உள்ள மருந்துகளைக் கொடுப்பதால் அவர்கள் மேலும் ஐந்து நாட்கள் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதனால் தேசத்தின் மனித சக்தி பாதிக்கப்படுகிறது. ஆகவே, விலை அதிகமாக இருந்தாலும் நல்ல மருந்துகளை, சீக்கிரம் நோயைக் குணப்படுத்தும் மருந்துகளை வாங்குவது மிகவும் அவசியமானது.

அடுத்தபடியாக, மருத்துவமனைகளிலுள்ள சமையல் அறைகளிலிருந்து உணவுப் பொருள்கள் வெளியே செல்வது தடுக்கப்பட வேண்டும். அதோடு மருத்துவ மனைகளிலிருந்து பல்வேறு சாதனங்கள் வெளியே செல்லக் கூடிய நிலைமை இருப்பதாக பல்வேறு ஆஸ்பத்திரிகள் பற்றிப் புகார்கள் வருகின்றன. அந்த நிலை தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

அடுத்தபடியாக, தனிப்பட்ட டாக்டர்களிடம் வேலை செய்யும் பார்மஸிஸ்ட், கம்பவுண்டர்கள், நர்ஸஸ் இவர்களுடைய வேலை என்ன, அவர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்பது பற்றி யெல்லாம் இதர தொழில் பிரிவினருக்கு ஏற்படுத்தியிருக்கும் சட்டத்தைப் போல் ஒரு சட்டத்தை அல்லது விதிகளை இவர்களுக்காக ஏற்படுத்துவது அவசியம்.

அடுத்தபடியாக, எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.-க்கள் போன்றவர்கள் சிறைச்சாலை அதிகாரிக்கு தகவல் கொடுத்துவிட்டு சிறைச்சாலைகளுக்குச் சென்று பார்வையிடலாம் என்று சிறைச்சாலை அமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவு இட்டார்கள். அது மிகவும் வசதியாக இருக்கிறது. அதே போன்று மாநிலத்தில் உள்ள ஆஸ்பத்திரிகள், பப்ளிக் ஹெல்த் சென்டர்ஸ் போன்ற இடங்களுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சென்று பார்வையிட்டு—தலைமை அதிகாரியிடம் தெரிவித்து விட்டு—அங்கு என்னென்ன வசதிகள் செய்யப்படுகின்றன என்பது பற்றி யெல்லாம் கேட்கக்கூடிய உரிமை இவர்களுக்கு இருக்கிறது என்ற முறை யில் ஒரு சுற்றறிக்கை அனுப்பினால் இந்த நிர்வாகத்தை நல்ல முறை யில் நடத்துவதற்கு நாங்கள் ஓரளவிற்கு உதவி புரிய முடியும்.

அடுத்தபடியாக, சுகாதாரத் துறையை எடுத்துக் கொண்டால், மதுரை நகரில் தண்ணீர் பிரச்சினை என்பது மிகப் பயங்கரமான நிலையை அடைந்திருக்கிறது. சென்னை, கோவை போன்ற இடங்களுக்கு இன்று தண்ணீருக்காக,பொது சுகாதாரத் திட்டத்தின்கீழ் ஏற்பாடுகள் செய்கிறோம். இந்த மாநிலத்தில் இரண்டாவது பெரிய நகரமான மதுரையில் சுமார் ஆறு லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். அங்கு தண்ணீர் இல்லாத நிலையில் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாநில அரசு தங்களால் இயன்ற அளவிற்குக் கடன் உதவி செய்து அங்கு மதுரையில் உள்ள தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை அங்குள்ளக் கட்சியினரும் வற்புறுத்து கிறார்கள். இதை ஒரு அவசரப் பிரச்னையாகக் கவனிக்க வேண்டும். திண்டுக்கல் நகரில் தண்ணீர் சப்ளை ஸிஸ்டம் இருந்தாலும் தொழிலாளர் கள் வசிக்கக் கூடிய சௌரியார் பாளையத்திற்குத் தண்ணீர் கொடுக்கும் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, குடும்பக் கட்டுப்பாடு என்பது அவரவர்கள் விருப்பப் படி நடைபெற வேண்டியதொன்றாகும். இதில் நிதானமாகச் செல்வது நல்லது. திருச்சியில் உள்ள அன்னவாசல் பஞ்சாயத்து யூனியனில் உள்ள ஆசிரியர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

அங்குள்ள ஆசிரியர்கள் தங்கள் அருகாமையில் உள்ள அறுவை
சிகிச்சை நிலையத்திற்குக் குறைந்தபட்சம் ஐந்து பேர்களையாவது அழைத்துச்
செல்ல வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.
இது மிகவும் அவசியமற்றதாகும். இப்படி ஆசிரியர்களைக் கட்டாயப்
படுத்தி இதில் ஈடுபடுத்துவது என்ருல், குறைந்தது ஐந்து பேர்களையாவது
கூட்டிச் செல்ல வேண்டும் என்று சொன்னல் அந்த ஆசிரியர்கள்
தங்கள் ஆசிரியர் தொழிலில் கவனம் செலுத்துவார்களா அல்லது இம்
மாதிரிக் காரியங்களில் கவனம் செலுத்துவார்களா என்பதை எண்ணிப்
பார்க்கவேண்டும். ஆக இப்படி அதிகாரத்தின் மூலம் நிர்ப்பந்தம்
செய்யப்படக்கூடாது. இது வாலண்டரியாகச் செய்யப்பட வேண்டிய ஒன்று.
குடும்பத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது சொந்த
விஷயம். பிரசாரத்தின் மூலம் இதற்கு முக்கியத்துவம் தரப்படவேண்டுமே
தவிர இப்படி ஆசிரியர்களை இம்மாதிரியான வேலைகளில் ஈடுபடுத்துவது
என்பது முற்றிலும் சரியானதாகாது.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஆசிரியர்களைக்
கட்டாயமாக இந்தப் பணியில் யாரும் ஈடுபடுத்தியிருக்கமாட்டார்கள்.
ஆசிரியர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் அக்கரை காட்டி அவர்களும்
இந்தப் பிரசாரத்தில் ஈடுபட்டு துணை செய்ய வேண்டும் என்ற எண்ணந்
தான். கூடுமானவரையில் பிரசாரத்தின் மூலம் ஐந்து பேர்களை அழைத்து
வரவேண்டும் என்றிருக்குமே தவிர கட்டாயப்படுத்தி அழைத்து வர
வேண்டும் என்ற நிபந்தனையிருக்காது. ஐந்து பேர்களை அழைத்து வர
வேண்டுமென்று சொல்வதால் அது கட்டாயமல்ல.

**திரு. என். சங்கரய்யா :** அன்னவாசலில் அப்படி ஒரு சுற்றறிக்கை
1969-ம் ஆண்டு மார்ச் திங்கள் 6-ம் நாள் அனுப்பப்பட்டிருக்கிறது.
பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் ஐந்து பேர்களுக்குக் குறையாமல்
அருகாமையில் உள்ள அறுவை சிகிச்சை நிலையத்திற்கு அழைத்துச்
செல்ல வேண்டுமென்று தெரிவித்திருக்கிருர்கள். இப்படி மாவட்ட
ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவித்துள்ளார்கள் என்று சொன்னல்
பிறகு ஆசிரியர்கள் அப்படிச் செய்யாவிட்டால் அவர்களின் நிலைமை
என்ன என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்படி சொன்னதற்குப்
பிறகு ஆசிரியர்கள் அவ்விதம் செய்யாவிட்டால் அவர்கள் நிலை என்ன
வாகும்? ஆகவே, அமைச்சர் அவர்கள் அதைப் பார்வையிட்டு இவ்விதம்
நடைபெருமல் இருக்கும்படிச் செய்ய வேண்டும்.

இம்மாநிலத்தில் குஷ்டரோகிகளின் நிலை சிக்கலான நிலையில்
இருக்கிறது. அந்த நோயாளிகளைப் பொது இடங்களில் நாம் பார்க்கிறேம்.
அந்த குஷ்டரோகிகள் இந்தந்த இடங்களில் வேலை செய்து ஓய்வு
எடுக்கும் முறையில் அவர்களுக்கு காலனிகள் அமைத்து அவர்களை
அங்கு இருக்க வைப்பதற்குப் பணம் செலவு செய்தால் அது பொது
மக்களின் சுகாதாரத்தைப் பாதுகாப்பதாக அமையும்.

அடுத்தபடியாக, எனக்கு முன் பேசிய ஒருவர் குறிப்பிட்டார்கள்.
அதுதான் முனிசிபல் தொழிலாளர்களின் பிரச்னை. பப்ளிக் ஹெல்த்
இலாகாவில் இந்த முனிசிபல் தொழிலாளர்களின் வேலை மிகவும்
முக்கியமானது. இதர மக்களின் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் வேலை
அவர்களுடையது. அந்தப் பணியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிருர்கள்.
அவர்கள் மதுரையிலும் குடியிருக்கிருர்கள். அவர்களை, அவர்கள் குடி
யிருக்கும் இடங்களிலிருந்து அப்புறப்படுத்தும் நிலையில் பல இடர்பாடுகள்
ஏற்படுகின்றன. நான் சொல்லுவது, அந்தத் தொழிலாளர்களின் நிலை
குறித்து, அவர்கள் வேலை நிலை, அவர்களது ஊதியம் இவற்றைப் பற்றி
விசாரிக்க ஒரு விசாரணைக் குழு ஏற்படுத்தி அவர்கள் நிலையை மேம்பாடு
அடையச் செய்ய வேண்டும்.





படுத்திப் பயன்படுத்துவது என்பது பற்றி சில திட்டங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். மேட்டூரி லுள்ள ஆர். ஸி. கெமிக்கல் ப்ளாண்ட் போன்ற ரசாயன தொழிற்சாலை களில் இருந்து வெளியாகும் கழிவு நீர் விவசாய நிலங்களைப் பாழ்படுத்து வதோடு மக்களின் குடிநீரையும் கெடுத்துவிடுகிறது. சேலத்திலுள்ள சிலநாய்க்கன்பட்டியில் உள்ள தோல் ஷாப்களிலிருந்து வரும் கழிவுநீர் விவசாய நிலங்களையும், குடிதண்ணீரையும் பாதிக்கிறது. ஆகவே, தொழிற்சாலைகளிலிருந்து வெளி வரும் கழிவுநீரை, அந்தத் தொழிற் சாலைகள் ஏற்படுவதற்கு முன்னல் பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டி லிருந்து அங்கிருந்து வரும் கழிவுநீரை எப்படி மக்களுக்கு பாதக மில்லாமல் கொண்டு செல்ல முடியும் என்பது பற்றி கவனித்துப் பார்க்கவேண்டும். அந்தக் கழிவுநீரை வெளியே விடாது தொழிற்சாலைக் குள்ளேயே இரசாயன நிகழ்ச்சிகள் மூலம் வேறு வகையில் மாற்றி, அங்கு டாங்குகள் அமைத்து, அவற்றில் வைத்துக் கொள்வது பற்றி ஆலோசித்து அதை வெளியே விடாமல் இருப்பது நல்லது. மேட்டூரில் அந்த கழிவுநீரை காவிரியில் சேர்த்து விடுகிருர்கள். அதனல் காவிரி நீரை உபயோகிப்பவர் களுக்கு நாளடைவில் பாதிப்பு ஏற்படும். ஆகவே, இப்படிக் கழிவு நீர் வெளியே செல்வது தடுத்து நிறுத்தப்படவேண்டும. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஒரு சில முனிசிப்பாலிட்டிகளில் தான், ஒரு சில டவுன்ஷிப்களில்தான் பாதாளச் சாக்கடைத் திட்டம் இருக்கிறது. அடுத்தப்படியாக திட்டமிடும்போது அதற்காக போதுமான அளவிற்கு நிதி ஒதுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஈ. எம். நடராசன்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவத் துறை மானியக் கோரிக்கையை நான் ஆதரித்து சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். இன்று தமிழ்நாட்டில் டாக்டர்கள் மக்களின் ரேஷியோ 1: 5900 என்றிருக்கிறது. மக்களின் நலன் நல்ல முறையில் காக்கப்பட வேண்டுமென்ருல் இந்த ரேஷியோ 1 : 1000 என்ற முறையில் இருக்க வேண்டும். அதற்கு அதிகப்படியான டாக்டர்கள் தேவை. ஆகவே, நிறைய மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்படவேண்டும். ஒரு மருத்துவக் கல்லூரி மாணவனுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10,000-க்கு மேல் நாம் செலவு செய்கிறேம். ஆனல். மருத்துவப் படிப்பு படித்து விட்டு வெளியே வரும் டாக்டர்கள் தனியாகத் தொழில் நடத்தப் போய்விடு கிருர்கள். இதனல் வரி கொடுக்கும் சாதாரண மக்களுக்கு அவர்கள் பயன்படுவதில்லை. ஆகவே, அப்படி அவர்கள் தனியாகத் தொழில் செய்வதைச் சட்டம் மூலம் தடை செய்யவேண்டும். அதற்குத் தேவையான சட்டத்தை நாம் கொண்டு வர வேண்டுமென்று இந்தச் சமயத்திலே முற்பகல்
குறிப்பிட விரும்புகிறேன். 11-30

இன்று அரசாங்கத்தில் டாக்டர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம் அதிகம். ஐந்தாண்டு படிக்கும் பொறியியல் வல்லுநர்களுக்கும், ஐந்தாண்டு கால்நடை மருத்துவம் படிக்கும் டாக்டர்களுக்கும் எவ்வளவு ஊதியம் கொடுக்கின்ருேமோ அவ்வளவு கொடுத்தால் போதும். எந்த வழியிலும் இந்த டாக்டர்கள் மற்றவர்களைவிட உயர்ந்தவர்களல்லர் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளுகின்றேன்.

அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் டாக்டர்கள் தனி ஆலோசனை (கன்சல்டிங் ப்ராக்டிஸ்) தொழில் தனியே நடத்துகின்றனர். இது ஒழிக் கப்படவேண்டும். அதற்குப் பதிலாக அரசாங்க மருத்துவமனைகளிலேயே இந்த தனி ஆலோசனை பிரிவு ஏற்படுத்தி அதற்கென நாம் பணம் வசூலிக்கலாம். அதன் மூலம் எல்லா மக்களும் பயன்பெற முடியும்.

அரசாங்க மருத்துவமனைகளில் ஹானரரி அசிஸ்டன்ட்ஸ் நியமிப்பதை உடனடியாக ஒழிக்க வேண்டும். இம்மாதிரியான உத்தியோகங்களால் தனிப்பட்ட டாக்டர்கள் பயனடைகின்ருர்களே ஒழிய, பொது மக்கள் பயனடைய முடிவதில்லை. ஆந்திர மாநிலத்தில் இம் முறை ஒழிக்கப்பட்டு விட்டது.

நமது மாநிலத்தில் நர்ஸ் வேலைக்குப் பயிற்சி பெற்றவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். ஆனால், ஆஸ்பத்திரிகளில் போதுமான அளவிற்கு நர்ஸ்கள் கிடையாது. ஆகவே, ஆஸ்பத்திரிகளில் நர்ஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத் தலைநகரான கோவையில், மருத்துவக் கல்லூரிக்கு மாவட்டத் தலைமை மருத்துவ மனையைக் கொடுப்பதால் தலைமை மருத்துவ மனையை மாவட்டத்தில் உள்ள வேறு ஊருக்கு மாற்ற அரசு உத்தேசித்துள்ளது. ஈரோடு நகரமானது கோவை மாவட்டத்தில் உள்ள ஈரோடு, தாராபுரம், கோபிசெட்டிப்பாளையம், பவானி ஆகிய வட்டங்கள் அடங்கிய பகுதித் தலைநகரமாக இருக்கிறது; ஏற்கெனவே, பல மாவட்ட அலுவலகங்கள் ஈரோட்டுக்கு மாற்றப்பட்டுள்ளன. ஆகவே, கோவை மாவட்டத் தலைமை மருத்துவமனையையும் ஈரோடுக்கு மாற்றுதல் செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பவானி வட்ட மருத்துவ மனையை முன்னாள் பொதுநலத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். அப்பொழுது அவர்களே கேட்டார்கள், இது மருத்துவமனையா? அல்லது மாட்டுக் கொட்டகையா என்றார்கள். ஆகவே, பவானியில் புதிய மருத்துவ மனையைச் சீக்கிரம் கட்டிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, எனது தொகுதியான அந்தியூரில் மருத்துவமனை நல்லதொரு இடத்தில் அமைந்திருக்கிறது. ஏராளமான இடமும் இருக்கிறது. ஆகவே, அந்தியூர் ஆஸ்பத்திரியில் உள்ள படுக்கைகளை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். மேலும் அந்தியூர் மருத்துவமனைக்கு பெண் டாக்டர் இல்லை. எனவே, ஒரு பெண் டாக்டரையும் அமர்த்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேலும், எனது தொகுதியைச் சேர்ந்த பர்கூர்மலைப் பகுதிக்கு இதுவரை எந்தவிதமான மருத்துவ வசதியும் இல்லை. ஆகவே, பர்கூர்மலை மக்களுக்கு பர்கூரில் ஒரு ரூரல் டிஸ்பென்சரியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் அல்லது ஒரு மொபைல் ஆஸ்பத்திரி வசதியாவது செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மருத்துவத்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது பேச்சை முடித்துக்கொள்ளுகின்றேன்.

**திரு. க. ர. நல்லசிவன்:** பெருமதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நம் மாநிலத்தினுடைய ஜனத்தொகை 4 கோடியாக இருக்கிறது. ஆனால் நமக்குள்ள ஆஸ்பத்திரி படுக்கை வசதிகள் சுமார் 20,000 கொண்ட ஆஸ்பத்திரிகள்தான் இருக்கின்றன. ஆயிரம் பேருக்கு ஒரு படுக்கை என்றாலும், குறைந்தபட்சம் 40,000 படுக்கைகள் தேவை. இது இன்னும் வருகின்ற ஆண்டுகளில் வளர்ந்துகொண்டு போகும். இப்பொழுது, ஜனத்தொகையும் வளர்ந்துகொண்டே போகும். இந்தப் பிரச்னையை அரசாங்கம் எப்படித் தீர்க்க வேண்டுமென்பதற்கு ஒரு திட்டமான கருத்தை என்னால் சொல்ல முடியவில்லை. வளர்ந்துவரும் ஜனத்தொகையைப் பார்த்தால், கோடி கோடியாகச் செலவு செய்து பல ஆஸ்பத்திரிகளையும், படுக்கைகளையும் உண்டாக்க 15 கோடி ரூபாய் ஒதுக்கியதைவிட மேலும் இன்னும் 10 கோடி ரூபாய் செலவு செய்தாலும் ஆயிரம் படுக்கைகளுக்கு மேல் இன்னும் ஒரு 500 பேர்களுக்கு அந்தப் படுக்கை வசதிகளைக் கொடுக்க முடியுமா என்பது சந்தேகத்திற்குரியதாகும். இந்த மருத்துவத்தில், இந்திய வைத்திய முறைகளை எந்த அளவுக்குப் பயன்படுத்தி, குறைந்த செலவில் அதிக மக்களுக்கு வைத்தியம் செய்யலாம் என்பதைப்பற்றி இந்த நேரத்தில் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, மருத்துவக் கல்விக்கு வருஷம் ஒன்றுக்கு சுமார் ஆயிரம் பேர்களுக்கு நாம் பயிற்சி கொடுத்து அனுப்புகிறோம். ஒருவருக்கு, குறைந்த பட்சம், எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்





சொன்னதுபோல், 10,000 ரூபாய் என்று மத்திய சர்க்கார் கொடுத்திருக்கிறார்கள். ஒரு டாக்டருக்கு பயிற்சி கொடுப்பதற்கான செலவு 30,000 ரூபாய் என்று கணக்குச் சொல்லப்பட்டது. இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்த அடிப்படையில் டாக்டர்களைத் தயார் செய்வதற்கு நம் நாடு தாங்குமா? அதுமாத்திரமல்ல, இந்த மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு இருக்கும் போட்டியிருக்கிறதே, அது மிகவும் பயங்கரமானதாக இருக்கிறது. கல்லூரியில் சேர்க்க வேண்டுமென்பதற்காக பொதுமக்களில் பலர் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகள் பயங்கரமானதாக இருக்கிறது. இந்தப் போட்டியைக் குறைக்க வேண்டுமானால் அதற்குள்ள ஒரே வழி செல்வர் வீட்டுக் குழந்தைகளை இந்தத் துறையிலே நாம் எடுத்துக்கொள்ளாமல் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும். வருமானத்தைப் பார்த்து, குறிப்பிட்ட வருமானத்திற்கு மேல் உள்ளவர்களைச் சேர்ப்பது குறைவாகத்தான் இருக்க வேண்டும். இரண்டாவது, பின்தங்கிய ஜனங்களுக்கு அதிகமாக இதிலே வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும். இதைப்போலவே, பெண்களையும் சேர்க்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அடுத்தப்படியாக, இன்றைக்கு அலோபதி ஆங்கில முறை இருக்கிறதே, அதை நம் ராஜ்யத்திலே ஒழுங்காகச் செய்ய முடியுமா என்பது சந்தேகமாகயிருக்கிறது. இந்திய மருத்துவ முறைக்கு, புதிய அரசாங்கம் வந்த பிறகு எடுத்துக்கொண்ட முயற்சியையும், ஆதரவையும் உண்மையிலே பாராட்ட விரும்புகிறேன். ஆனால் இது போதுமானது அல்ல என்பது என் கருத்து. இப்பொழுது, சித்த, யுனானி ஆயூர்வேத வைத்திய நிலையத்தைப் பாளையங்கோட்டையில் ஆரம்பித்திருக்கிறோம். குறிப்பாக ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அங்கிருக்கும் முதல்வர் இந்திய யுனானி வைத்தியத்தில் நம்பிக்கை உள்ளவரா என்பதை யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். எனக்குத் தெரிந்த வரையில் முழு நம்பிக்கையுள்ளவராகத் தெரியவில்லை. சித்த, யுனானி வைத்தியத்தில் முழு நம்பிக்கையுள்ளவரை அந்தக் கல்லூரித் தலைவராகப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். உதவித் தலைவர் நம்பிக்கை உள்ளவராக இருக்கிறார்கள். அவர்களையே பார்த்து அந்தப் பதவியைக் கொடுப்பதற்கு ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் கண்ணாரப் பார்த்தேன். தோல் வியாதி இருக்கிறதே, அதற்காக கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து பல ஆஸ்பத்திரிகளை நிறுவியிருக்கிறோம். குறிப்பாக, நான் கண்ணாரப் பார்த்தேன், குஷ்டரோகம் பிடித்த ஒருவருக்கு ஒரு சாமியார், சித்த வைத்தியர் ஐந்தாறு முறை மருந்து கொடுத்தார். 10, 15 நாட்களில் அந்தத் தோல் வியாதிக்காரரின் உடலில் பெரியதொரு மாறுதல் ஏற்பட்டதை நான் கண்ணால் பார்த்தேன். எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், சித்த, யுனானி வைத்திய முறைகளைப் பொறுத்த வரையில் இன்னும் அரசாங்கம் நிறைய பரிசீலிக்க வேண்டும். 'ஸயன்டிஃபிக் ரிசர்ச்' பண்ணவேண்டுமென்றால் பண்ண வேண்டியதுதான். அவ்வாறு செய்து அதை அதிகமாகத் தமிழகத்திலே பரப்புவதற்கு முயற்சியெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நானே நேரில் பார்த்தேன், கக்குவானுக்கு டாக்டரிடம் போய் அதற்காக ஓரளவு பணமும் செலவு செய்து, அது மூன்று மாதத்திற்குப் பிறகு கக்குவான் இருமல் நின்றுவிடும் என்று சொன்னார்கள். ஆனால், ஹோமியோபதி மருந்தை வாங்கி நானே என்னுடைய பேரக் குழந்தைக்குக் கொடுத்தேன், மூன்று நாட்களிலேயே இருக்குமிடம் தெரியாமல் அந்த கக்குவான் போய்விட்டது. எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், நாட்டு வைத்தியத்தில் பல விசேஷ அம்சங்கள் இருக்கின்றன. அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். முழுக்க முழுக்க ஆங்கில வைத்திய முறையில் இருந்துகொண்டிருக்காமல் இதைக் கொஞ்சம் ரிசர்ச் பண்ணி நியாயமானவற்றை விஸ்தரிக்கத் தீவிர முயற்சியெடுக்க வேண்டு

[திரு. க. ர. நல்லசிவன்] [1969 மார்ச் 21

மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஆங்கில வைத்தியத்தைப் பிடித்துக் கொண்டிருப்பது பெரும் செலவுக்கு ஆதாரமாக இருக்கிறது. இந்த நாடு ஏழ்மையான நாடு. பெரிய கட்டடங்களையும், சாதனங்களையும் உருவாக்க வேண்டுமென்றால் ஒரு அமெரிக்காவாகவோ அல்லது ஒரு ரஷ்யாவாகவோ இருந்தால் தான் நடத்த முடியுமே தவிர நம்மை போன்ற ஏழைநாட்டுக்கு, 270 கோடி ரூபாய் வருஷம் ஒன்றுக்கு வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கும் மாநிலத்திலே, 100 கோடி ரூபாயை இதற்காக ஒதுக்க முடியாது. எனவே, இந்திய வைத்திய முறையில் இந்தச் சர்க்கார் தீவிர கவனம் செலுத்தி, ஆங்கில வைத்தியத்திற்கு எந்த அளவுக்கு அந்தஸ்தும், சமபளமுய கொடுக்கப்படுகிறதோ அதைக் கொடுக்க வேண்டுமென்று முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். தமிழ் வைத்திய முறை, தமிழ்நாட்டில் இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. ஆயிரம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டதாகும். அதைப் பொறுத்தவரையில், அதற்கு இன்னும் நல்ல முறையில் ஆக்கமும், ஊக்கமும் கொடுத்தால் அதன் மூலம் பல வியாதிகளைச் சரி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

குடிதண்ணீர்ப் பிரச்சினை நம் மாநிலத்தில் ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. பஞ்சப் பிரதேசங்களில் ஒரு பெரும் பிரச்னையாக ஆகியிருக்கிறது. இன்று நீர்ப்பாசனத்திற்கு எவ்வளவு திட்டமிட்டுச் செய்யப்படுகிறதோ, அதைப்போல குடிதண்ணீர்ப் பிரச்னைக்கும் திட்டமிட்டுச் செய்தாக வேண்டும். எந்த ஊரிலும், யாருக்கும் குடிதண்ணீர் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இல்லாத அளவிற்கு, ஒரு பெரிய இணைப்பை உண்டாக்க வேண்டும். மற்றும் கோவையிலும் சுற்றுப்புறங்களிலும் குடிதண்ணீர் கிடைப்பதே கஷ்டமாக இருக்கிறது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பெருந்துறை தொகுதியில் 10, 15 ஊர்களை ஒன்றாக இணைத்து ஒரு குடிதண்ணீர் திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. வேலை கொஞ்சம் தாமதமாகிறது. அதைக் கொஞ்சம் வேகமாக ஆக்க வேண்டு மென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தோட்டித் தொழிலாளர்களுக்கு தயவுசெய்து நாம் முதலிலே சலுகை கொடுக்க வேண்டும். அவர்களுடைய அடிப்படையான சம்பளத்தை நூறு ரூபாயாக நிர்ணயிக்க வேண்டும். வேறு எந்தத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுத்தாலும் அதை இரண்டாவது பட்சமாக வைத்து, முதலில் தோட்டித் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தைக் குறைந்த பட்சம் 100 ரூபாயாக ஆக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வைத்தியத் துறையில் நாம் கவனம் செலுத்தினால் மட்டும் போதாது. தேக ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் முயற்சியெடுத்துக்கொள்ளவேண்டும். இப்பொழுது பள்ளிகளிலோ, கல்லூரிகளிலோ தேகப்பயிற்சிக்கு என்று நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர, குழந்தைகளுக்கு அதில் உற்சாகமோ, விறுவிறுப்போ நம்பிக்கையோ இருப்பதாகத் தெரியவில்லை. தேகப்பயிற்சியின் மூலமாக உடல்நலத்தைப் பேணிக் காப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். யோகாசனம் இருக்கிறது. அது பல பேர்களுக்குத் தெரியாது. சமீபத்திலே சில புத்தகங்களிலே படித்தேன். அதன் மூலமாகப் பல நோய்களை நீக்க முடியுமென்பதெல்லாம் நான் கண்டுகொண்டிருக்கிறேன். எனவே, தேகப்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

அடுத்து, மாநிலம் பூராவும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் தொடர்பான திட்டத்தை மேற்கொண்டு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகின்றேன்.

*திரு. அ. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்த மாமேதை தமிழ்த் தாயின் தனித் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு எனது தொகுதியின் சார்பாகவும் என்னுடைய



1969 மார்ச் 21] [திரு. அ. ஆறுமுகம்]

சார்பாகவும் எனது ஆழ்ந்த அஞ்சலியை முதற்கண் நான் தெரிவித்துக் கொண்டு இன்றைய தினம் மருத்துவத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

இன்று, இயங்கி வருகின்ற பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு அனுபவம் இல்லாதப் மருத்துவர்களைப் போட்டுவிடுகின்றார்கள். அவர்களை நீக்கிவிட்டு நல்ல அனுபவமும் பயிற்சியும் பெற்ற டாக்டர்களை நியமிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எந்த மாவட்டத்தில் எந்த நோய் பரவுகிறது என்பதை அறிந்து அந்த நோய்கருத் தக்க மருந்துகளையும் உடனடியாக டாக்டர்களுக்கு நல்ல சிகிச்சை முறையை அளிக்கத் தக்க ஆலோசனைகளையும் கூற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட மருத்துவ மனைகளில் காது, மூக்கு, தொண்டை போன்ற நோயாளிகளுக்குத் தனியார் டாக்டர் ஒருவரை நியமித்துள்ளார்கள். அவர் குறிப்பிட்ட நேரம் மட்டும் வந்துவிட்டுப் போகின்றார். அந்த நிலை மாறி முழு நேரமும் மருத்துவ மனையில் ஒரு டாக்டரை நியமிக்க இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்க மருத்துவ மனைகளில் மருந்து இல்லாத காரணத்தால் ஏழை பாமர மக்கள் வெளியிலே சென்று வாங்கிவர வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, மருந்துகளை உடனடியாக மருத்துவ மனைகளுக்கு வழங்க இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸார் மது அருந்தியவர்கள் என்று மருத்துவ மனைக்கு அழைத்து வருகின்றபொழுது, குடிப்பழக்கம் இல்லாத நிரபராதிகள் குடித்ததாக சர்ட்டிபிகேட்டுகள் வழங்கப்படுகின்றன. அந்த நேரத்தில் டாக்டர்கள் நன்கு பரிசோதனை செய்து, அப்படிக் குடித்திருக்கின்றார்களா என்பதை அறிய ரத்தப் பரிசோதனைக்கு அனுப்பி நல்ல முறையிலே பரிசோதித்து நிரபராதிகளை விடுவிக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட நோயாளிகளை வெளியிலிருந்து பார்க்க வருகின்ற நண்பர்கள், உறவினர்கள், அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்று அலைந்தலைந்து தேட வேண்டிய நிலை இருக்கிறது. அவர்கள் குறையைப் போக்குவதற்கு இந்த இடத்திலே, இந்த நோயாளிகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற பட்டியலை அரசாங்க மருத்துவ மனை முகப்பிலே வைத்தால், வருகின்றவர்கள் பார்ப்பதற்கும், நோயாளிகளைச் சென்று கண்டுபிடிப்பதற்கும் வசதியாக இருக்கும். அந்த வசதியை நம்முடைய தமிழக அரசு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தாலூகா தலைநகரம் ஓவ்வொன்றிலும் ஒரு மருத்துவ மனை இப்பொழுது இயங்கி வருகிறது. அந்த மருத்துவ மனைகள் சில இடங்களில் மிகவும் சிறியதாக உள்ளன. அதுவுமில்லாமல், போதிய அளவுக்கு அங்கு மருந்து வசதி இல்லாத நிலையும் இருக்கிறது. ஆகவே, அந்தக் குறைகளை எல்லாம் போக்க தாலூகா தலைநகரிலே உள்ள மருத்துவ மனைகளை விரிவுபடுத்தவும் அங்கு தேவைப்படுகின்ற மருந்துகளை உடனடியாக வழங்கவும் அரசு தக்க முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எடுத்துக்காட்டாக எனது தொகுதியான எடப்பாடி மருத்துவ மனையில் இந்தக் குறைபாடுகள் மிகவும் உள்ளன. அவற்றைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிரசவ காலங்களில் எனது தொகுதியான எடப்பாடியிலிருந்து சேலம் செல்ல வேண்டுமென்றால் 30 மைல் தூரம் செல்ல வேண்டும். அங்கு செல்வதற்குள் பிரசவ கேஸ் மிக மோசமான நிலையை அடைந்து விடுகின்றது. ஆகவே, எடப்பாடி நகரம் ஒரு முனிசி பாலிட்டி நகரமாக இருக்கிற காரணத்தால், அங்கு ஒரு பிரசவ ஆஸ் பத்திரியை ஏற்படுத்திக் கொடுக்கும்படி நம்முடைய அரசை மிகப் பணி வன்போடு நான் விரும்பி வேண்டிக்கொள்கிறேன் (மணி அடிக்கப்பட்டது). சேலத்திற்கு நோயாளிகளை அழைத்துச் செல்லவேண்டுமானால் 30 மைல் தூரம் செல்ல வேண்டி இருப்பதால், ஒவ்வொரு தாலுகா மட்டத்திலும் ஒவ்வொரு ஆம்புலன்ஸ் வண்டியை வைக்க வேண்டுமென்று விரும்பி வேண்டி கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. பெ. மலைச்சாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொது நலத்துறை மானியத்தின்மீது எனது கருத்துக்களைச் சொல்லுகின்ற வாய்ப்பு பெற்றமைக்கு நன்றி கூறுகின்றேன் இன்று தமிழக அரசிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் முக்கியமாக அவர்களுக் குள்ள ஒரு பெரிய சிக்கல், அவரவர்கள் தொகுதியிலிருந்து மருத்துவக் கல்லூரியிலே இடம் வேண்டுமென்று தேடி வருகின்ற நண்பர்களுக்கு அவர்களாலே போதுமான அளவு உதவி செய்ய முடியவில்லை. எனவே, இந்த தமிழக அரசு சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒவ்வொரு இடம் என்று ஒதுக்கிக் கிட்ட தட்ட 234 இடங்களை கட்சி வேறுபாடின்றி தரவேண்டுமென்று இந்த அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், சிற்றூர் பகுதியிலே இருக்கிற மாணவர்கள் ஓரளவு படிப்பதற்குத் தேவையான வசதியில்லாத காரணத்தால் குறிப்பிட்ட மதிப்பெண்கள் பெற முடியாத நிலையிலே அவதிப்படுகிறார்கள். நகரத்திலே இருக்கிற தாய், தந்தையர்கள் அவர்களுக்கு வசதியான முறையிலே கல்வி அறிவு ஊட்டுகின்ற காரணத் தால், அவர்கள் குறிப்பிட்ட பாடங்களில் தேவையான மதிப்பெண்கள் பெற முடிகின்றது. என் போன்ற சிற்றூர் பகுதியிலே இருக்கிறவர்கள் அதிகமாகப் படித்தும், அனுபவ ரீதியிலே குறைந்த மதிப்பெண்கள் பெற முடிந்த காரணத்தால் மருத்துவக் கல்லூரியிலே போதுமான இடம் பெற முடியவில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசின் ஏனைய துறையிலே இருக்கிற எல்.டி.சி., யூ.டி.சி. யாக உயர்வு பெறுகிறார். பின்னாலே கோட்டாட்சித் தலைவராகக் கூட உயர் கிறார். ஆனால் மருத்துவத் துறையில் கம்பௌண்டராக இருப்பவர், அவர் காலம் வரையிலே அதே குறிப்பிட்ட நிலையிலேதான் வாழ்ந்து சாக முடிகிறது. எனவே, 10 ஆண்டுக் காலம் கம்பௌண்டராக வேலை பார்த்தவர்களை மருத்துவ அதிகாரிகளாக தயவுசெய்து மாற்ற வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், அனுபவ ரீதியில் படிப்பது இந்த மருத்துவ துறையும் பொறி இயல் துறையும், அந்த அனுபவ ரீதியிலே தான், பயிற்சி முறையிலேதான் வாழ்க்கையினுடைய தன்மையைப் பெற முடிகிறது. எனவே, கம்பௌண்டர்களை எல்லாம் மருத்துவ அதிகாரி களாகவும், நர்சுகளை பெண் டாக்டர்களாகவும் அக்குவதற்கு இந்த அரசு துணை புரிய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடும்ப நலத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இன் னும் சிற்றூர் பகுதிகளில், கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் குடும்ப நலத் திட்டத்தை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. காரணம், அறுவை சிகிச்சை என்றால் பயப்படுகிறார்கள். இரா என்றால் பயப் படுகிறார்கள். அந்த பயத்தைப் போக்குவதற்கு அரசு ஒரு சிறப்பான முறையைக் கண்டாக வேண்டும். குறிப்பாக குடும்ப நலத்திட்ட வாரம் என்று ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை நடக்கிறது. இந்த வார விழாக்கள் அதிகமாகப் பயன்படுகின்றன. அத்தகைய வார விழாக்களை அதிகமாக சிற்றூர் பகுதியிலே நடத்தி, குடும்பத்திலே இருக்கிற அத்தனைபேரையும், ஊர் பொது மக்களையும் அழைத்து அவர்





களுக்குரித்த முறையில், அவர்களது மன நிலையை ஆராய்ந்து அறிந்து எந்தெந்த முறைகளை அவர்கள் உள்ளம் ஏற்கின்றதோ அந்த முறை களை அந்த சிற்றூர் பகுதி மக்கள் ஏற்கத்தக்க தெளிவான முறையிலே இந்த குடும்ப நலத் திட்டத்தை ஆக்கித்தர வேண்டும். இன்னும் சொல்லப் போனால் நமது முதலமைச்சர் அவர்கள் நல்ல நாடகம் எழுதுபவர்கள். இதைப்பற்றி அவரே நாடகம் எழுதி, சட்ட மன்ற உறுப்பினர்களை எல்லாம் நடிக்க வைத்து, சிற்றூர் பகுதியிலே இந்தக் குடும்ப நலத் திட்டத்திற்கு விளம்பரம் தேடினால் கூட நல்ல பயனைத் தரும் என்று கருதுகிறேன்.

ஒன்றியத்திலே இருக்கிற சில மருத்துவர்கள் செம்மையான முறை யிலே ஈடுபடுவதில்லை. குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே ஒரு சில குறைபாடுகளை நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலூரில் குடி நீர் திட்டம் தேவை என்று கிட்டத்தட்ட 2 ஆண்டு காலத்திற்கு முன்னாலே இருந்து, ஒரு திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று முயற்சி செய்திருக்கிறோம். மேலூர் ஊராட்சி ஆய்வுத் தொகையாக கிட்டத்தட்ட ரூ. 13,000-ஐ அரசாங்கத்திற்குச் செலுத்தி விட்டது. இது வரையிலும் இன்னும் அது முடிவு பெறவில்லை (மணி அடிக்கப்பட்டது).

அடுத்தபடியாக, நத்தம் டௌன் பஞ்சாயத்து 22 ஊராட்சிகளைக் கொண்டது. அங்கு இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையத்தை, அரசாங்க மருத்துவ மனையாக ஆக்கவேண்டும் என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் கூட அரசாங்கத்திற்கு குறிப்பு எழுதி இருக்கிறார்கள். இயற்கைக் கோளாறு காரணமாக இறந்து போனவர்களை அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமானால் அங்கிருந்து 60 மைல் தூரம் உள்ள மேலூர், மதுரை போன்ற நகரங்களுக்குத்தான் செல்ல வேண்டி இருக்கிறது. எனவே நத்தத்தில் போலீஸ் அதிகாரியின் குறிப்பை ஏற்று இருக்கிற மருத்துவ நிலை யத்தை பெரிய அரசாங்க ஆஸ்பத்திரியாக ஆக்கவேண்டுமென்று கேட் டுக் கொண்டு கொட்டாம்பட்டியில் யூனியன் ஆஸ்பத்திரிதான் இருக்கிறது, அதை அரசாங்க மருத்துவ மனையாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு குறை, கருங்காலக்குடியிலுள்ள யூனியன் ஆஸ்பத்திரியை சேக்கிப்பட்டிற்கு மாற்ற வேண்டுமென்று $2\frac{1}{2}$ ஆண்டு கால மாகக் கூறியும் இன்னும் ஆணை பிறப்பிக்கவில்லை. இதில் என்ன தவறு இருக்கிறது என்பது எனக்கே புரியவில்லை. எனவே அந்த ஒன்றிய மருந்தகத்தை கருங்காலக்குடியிலிருந்து சேக்கிப்பட்டிக்கு மாற்று வதற்கு விரைவிலே அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு விரைவிலே கட்டடங்கள் கட்டித் தரவேண்டுமென்று கேட்டு உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. என். துரைபாண்டியன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கு அடிப்படையாக இருப்பது திட்டமிட்ட குடி தண்ணீர்தான் என்பது நாம் எல்லோரும் அறிந்த விஷயம். நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலத்தில் கடந்த அமைச்சர் சபையில் செய்து வைத்திருந்த குடி தண்ணீர் திட்டங்களையாவது வெகு சீக்கிரத்தில் பூர்த்தி செய்து தருவார்கள் என்று நினைக்கிறேன். குறிப்பாக எனது தொகுதியில் நாங்குநேரியில் குடி தண்ணீர் திட்டம் ஒன்று தயார் செய்யப்பட்டு, வேலைகளெல்லாம் அநேக மாகப் பூர்த்தியாகி விட்டது. ஆனால், ஒரு சிறிய ரோடு வழியாக அதை கிராஸ் பண்ணி குழாய் போடுவது சம்பந்தமாக டெக்னிகல் விஷயம் சம்பந்தமாக, அதேத சர்க்காரிடமிருந்து இதற்குள்ள பெர்மிஷன் கிடைக் காத காரணத்தினால், அந்த வேலை நிறுத்தப்பட்டு ஒரு ஆண்டுக்கு மேலாகிவிட்டது. இதுவரையில் அதற்கு ஒரு முடிவு காணாமல் இருக்கி றார்கள். ஆகவே, இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களை

நான் பரிந்து கேட்டுக்கொள்வது என்னவென்றால், அதில் கொஞ்சம் தீவிர கவனம் காட்டி, அதையெல்லாம் உடனடியாகச் செய்து தர வேண்டும் என்பதுதான்.

அடுத்தபடியாக, புளியங்குடியில் ஒரு பெரிய குடி தண்ணீர் திட்டம ப ஐ லட்ச ரூபாய் செலவில் போடப்படும், சாங்ஷன் செய்யப்பட்டிருக் கிறது என்று நினைக்கிறேன். அதுவும் வேலை ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. மேலும் நான் குறை சொல்ல வேண்டாமென்று நினைத் தயும், பழையபடியும் எந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும கூட, குடி தண்ணீர்த் திட்டம், சுகாதாரத் திட்டம் எதை எடுத்துக்கொண்டு பா த்தாலும். எல்லாம் சென்னையைப் போன்ற பெரிய நகரங்களில் செயல்படுத்தப்படுகிறதே தவிர, கிராமங்களில் செயல்படுத்தப்படுவதில்லை. கிராமங்களில் குடி தண்ணீர் இல்லாமல் மக்கள் எவ்வளவு கஷ்டப் படுகிறார்கள் என்பது அமைச்சர்கள் எல்லோருக்கும் நன்கு தெரியும். ஆங்காங்குள்ள சிறிய கிராமங்களில் ஒரு கிணறு எடுக்க வேண்டுமென் ருலும் கூட, சட்டப்படி நான்கில் ஒரு பங்கு பஞ்சாயத்து கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதற்கு எந்த வசதியும் பஞ்சாயத்து களுக்கு இல்லை. பின் தங்கிய வகுப்பினர்கள் இருக்கிற கடற்கரை ஓரத் திலுள்ள எல்லா ஊர்களுக்கும் சர்க்காரே கிணறுகள் எடுத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சித்த வைத்தியத்தைப் பற்றி, இண்டியன் மெடி ஸின்பற்றி எல்லோரும் நன்ருகச் சொன்ஞர்கள். உண்மையாகவே நாம் பெருமைப்படுகிறோம். தமிழிலே இந்த நாட்டை ஆள வேண்டும்; தமிழ் மக்களுக்கு எல்லாவிதமான வசதிகளையும் செய்யவேண்டும் என்றெல் லாம் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனல் சித்த வைத்தியக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு பாளையங்கோட்டையில் ஹாஸ்டல் வசதி இருக்கிறதா என்றல் இல்லை. எம். பி. பி. எஸ். படிக்கிறவர்கள் பி. யு. சி. படித்துவிட்டு வந்து ஐந்து வருஷங்கள் படிக்கிறார்கள். அதே மாதிரிதான் சித்த வைத்தியக் கல்லூரி மாணவர்கள். ஆனல் எம்.பி. பி.எஸ். மாணவர்களுக்குக் கொடுக்கிற ஸ்டைபெண்ட் இந்த மாணவர்களுக்கு கொடுப்பதில்லை. மேலும், அவர்கள் பாஸ் பண்ணி வந்த பிறகு அவர் களுக்குத் கொடுக்கிற சம்பளம் எம். பி. பி. எஸ். படித்தவர்களுக்கு கொடுப்பதைவிட குறைவாகக் கொடுக்கப்படுகிறது. இப்படி பாகுபாடு செய்து கொடுத்துக் கொண்டிருந்தால், இதில் எந்த மாணவன் அக் கறையும், ஊக்கமும், ஆர்வமும் கொண்டு படிக்க முன்வருவான் என்பதை இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, எம். பி. பி. எஸ்., எம். டி. படித்தவர்களுக்கு உத்தி யோகம் கொடுத்த பின், 4, 5, வருஷங்கள் ஆகியும் அவர்கள் சர் வீஸை ரெகுலரைஸ் செய்வதில்லை. அவர்களுடைய சர்வீஸை உடனே ரெகுலரைஸ் செய்வதற்குச் சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, மெடிகல் காலேஜ்களுக்குத் தேர்வு சம்பந்தமாக, எந்த அரசாங்கமாக இருந்தாலும், எப்பொழுதும் ஒரு குறை இருந்து வருகிறது. மந்திரிகளுக்கு வேண்டியவர்கள், அல்லது சட்டமன்ற மெம்பர்களுக்கு வேண்டியவர்கள், அல்லது பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளைகள் இவர்களுக்குத் தான் அங்கே இடம் இருக்கிறது என்ற குறைபாடு இருந்து வருகிறது.....

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:**—மந்திரிகள் வீட்டுக் குழந்தை கள் யாருக்குக் கொடுத்தார்கள் என்கிற தகவலை கொடுக்க வேண்டும் ஒட்டு மொத்தமாகச் சொல்வதைவிட எந்த மந்திரி வீட்டுக் குழந் தைக்கு இடம் கொடுக்கப்பட்டது என்று திட்டவட்டமாக கனம் அங்கத் தினர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டு சொன்னல் நலமாக இருக்கும்.



**திரு. என். துரைபாண்டியன்:** அமைச்சர் அவர்கள் நான் சொன்னதை நன்ருகப் புரிந்துகொள்ளவில்லை. என்று நினைக்கிறேன். நான் என்ன சொன்னேன் என்ருல், பொதுவாக ஒரு குறைபாடு, சட்டமன்ற மெம் பர்களுக்கு வேண்டியவர்கள், மந்திரிகளுக்கு வேண்டியவர்கள், பணக் காரர்களுக்கு வேண்டியவர்கள் ஆகியோர்களுக்குத்தான் இடம் கிடைக் கிறது என்ற ஒரு புகார் பெரும்பாலும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தப் புகார் அறவே நீங்க வேண்டும். இன்றைய தினம் தேர் வுக்கான ஒரு கமிட்டி என்று இருப்பதன் காரணமாகத்தான் இப்படிப் பட்ட புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தப் புகார்கள் இல்லாமலே போகவேண்டுமென்ருல், இந்தக் கமிட்டி இல்லாமல், பையன்களின் மெரிட்டை அடிப்படையாக வைத்து, ஆங்காங்குள்ள உத் தியோகஸ்தர்களே தேர்வு செய்து கொண்டால், இந்த மாதிரியான குறை வராது என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** புகார்கள் வருகின்றன என்ருல் பொதுவாக வெளியில் கூறுவதற்கும், சட்டமன்றத்தில் கூறுவதற்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது, சட்டமன்ற உறுப்பினர்களுடைய குழந்தை களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். முறை தவருக இடம் கொடுத்திருக்கி ருர்கள் என்ருல், உறுப்பினர் அவர்கள் விவரத்தைச் சொல்ல வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுடைய குழந்தைகள் தேர்வில் வெற்றி பெறக் கூடாது என்பது அல்ல. அப்படிக் கொடுத்தார்கள் என்ருல், அவர்கள் மார்க்குகள் வாங்காமல், குறைவாக வாங்கி, அவர்களுக்குத் தனிப்பட்ட விசேஷ சலுகைகள் கொடுத்து எடுத்திருக்கிருர்கள் என்ருல், அதனு டைய விவரத்தை எடுத்துச் சொன்னல், இந்த மன்றத்திற்கு உதவியாக இருக்கும். அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் இனி வராமல் பார்த்துக் கொள் வதற்கும் நலமாக இருக்கும். இப்படி ஒட்டு மொத்தமாகச் சொல்வதை விட, குறிப்பாக உறுப்பினர் அவர்களிடத்தில் தகவல் இருந்தால், அதைக் கொடுத்தால் நலமாக இருக்கும். வேண்டியவர்களுக்குக் கொடுத்தார்கள் என்று ஒட்டு மொத்தமாகச் சொல்வதில் பயனில்லை.

**திரு. என். துரைபாண்டியன்:** நான் குறை கூற வேண்டும் என்று சொல்லவில்லை. பொதுவாகச் சொல்கிருர்கள். அந்தச் சொல்லின் காரணமாகத் தான் ஹைகோர்ட்டில் 500 ரிட் பெடிஷன் போடக்கூடிய அளவில் இந்த அரசாங்கத்தின் தேர்வு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பிலே அமைச்சர்களுடைய குழந்தைகளுக்குக் கொடுத்தார்கள் என்ற காரணத் திற்காகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்களுடைய குழந்தைகளுக்குக் கொடுத்தார்கள் என்ற காரணத்திற்காகவோ அந்தத் தீர்ப்பு அளிக்கப் பட்டதா என்பதைப் பத்திரிகை படித்த உறுப்பினர் அவர்கள் நன்கு உணர்ந்திருப்பார்கள். ஆகவே, ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பை இதில் கொண்டு வந்து ஒப்பிட்டுக் காட்டவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். துரைபாண்டியன்:** தேர்வு சரியான முறையில் இல்லை என்பதற்காக ஹைகோர்ட்டுக்கு சென்றிருக்கிருர்கள்: ஹைகோர்ட்டில் இந்தத் தேர்வு முறை பற்றித் தீர்ப்புத் அளிக்கப்பட்டிருக்கிறதா, இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** மந்திரிகளின் குழந்தைகளோ, சட்டமன்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கோ, பணக்காரர்களுடைய குழந்தைகளுக்கோ கொடுத்தோம் என்ற குற்றச்சாட்டை சொல்கிற பொழுது, அந்தக் குற்றச் சாட்டிற்கும், ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பிற்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் விளக்க வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டியவர்கள், பணக்காரர்களுக்கு
வேண்டியவர்கள் இவர்களுக்குத் தான் இடம் கிடைக்கிறது என்று
பொதுவாக பொது மக்கள் மத்தியிலே ஒரு புகார் நடமாடுகிறது,
அந்தப் புகாரைத் தடுக்க வேண்டும். அதற்கு இப்படிச் செய்யலாம்
என்ற ஒரு யோசனையைச் சொன்னேனே தவிர, மந்திரிகளுடைய
பிள்ளைகளுக்கு, சட்டமன்ற உறுப்பினர்களுடைய பிள்ளைகளுக்கு, பணக்
காரர்களுடைய பிள்ளைகளுக்குக் கொடுத்தார்கள் என்று நான் சொல்ல
வில்லை.

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் புகார்களைச் சொல்லும்பொழுது,
புகார்களைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத அளவுக்கு, யாரோ சொன்னார்
கள் என்பது போன்ற புகார்களைப்பற்றி எல்லாம் பொறுப்பு வாய்ந்த உறுப்பி
னர்கள் இந்த மாமன்றத்தில் சொல்லக்கூடாது என்று பலமுறை இந்தச்
சபையில் தீர்ப்பு கூறப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்கள் பேசிய
பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னபோது,
உறுப்பினர் அவர்கள் வழக்கு மன்றத்தில் கூட அதற்காக வழக்கு சென்றிருக்
கிறது என்று மேலும் அவர்கள் கூறிய கூற்றை வலியுறுத்திக் கூறும் வகை
யில் சொன்னது சரியல்ல. யாரோ எங்கோ சொல்லிக்கொண்டார்கள் என்ற
புகாரை கனம் உறுப்பினர் அவர்கள் இங்கே சட்டமன்றத்தில் அப்படி
பொதுப்படையாகக் கூறுவது சரியல்ல. சட்டமன்ற உறுப்பினர்களுடைய
பிள்ளைகளுக்குக் கொடுத்தார்கள் என்ற புகாரை யாராவது கூறி, அது
பற்றி பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறதா அல்லது மந்திரிகள் வீட்டுப்
பிள்ளைகளுக்கு இடம் கொடுத்தார்கள் என்று புகார் கூறி பத்திரிகை
யிலே செய்தி வந்திருக்கிறதா? குறிப்பிட்ட முறையில் புகார் இல்லாத
வரையில், அதை மேலும் வலியுறுத்துவது போல வழக்கு மன்றத்தில்
இதற்குத்தான் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது என்று கூறினது கூட சரி
யல்ல. வழக்கு மன்றத்தில் கூட தங்களுக்கு இடம் கிடைக்கவில்லை.
தகுதி யிருந்தும் இடம் கிடைக்கவில்லை என்றுதான் புகார்கள்
கொடுக்கப்பட்டனவே தவிர, மந்திரிகள் வீட்டுப் பிள்ளைகளுக்கோ அல்லது
சட்டமன்ற உறுப்பினர்களின் வீட்டுப் பிள்ளைகளுக்கோ இடம்
கொடுக்கப்பட்டது என்ற முறையில் புகார்கள் இருக்கவில்லை.
கனம் உறுப்பினர் அவர்கள் நல்ல மானியத்தின் மீது பேசு
கிறார்கள். அவர்களுடைய அருமையான கருத்தை மேலும் தொடர்ந்து
கூறுமாறும், இதைப்பற்றிய விவாதத்தை இத்தோடு நிறுத்திவிட வேண்டு
மென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்குக் கொடுக்கப்
பட்டிருப்பது ஐந்து நிமிடங்கள். நான்கு நிமிடங்கள் ஏற்கனவே தாங்கள்
எடுத்துக் கொண்டுவிட்டீர்கள். நீங்களும், மந்திரிகளும் கருத்து பரிமாறிக்
கொண்ட காரணத்தினால் கூடுதலாக நான்கு நிமிடங்கள் கொடுத்தேன்.
உங்களுக்குத் தரவேண்டிய ஒரு நிமிடத்தைக் கொடுப்பதற்குத் தயாராக
இருக்கிறேன். அந்த ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். துரைபாண்டியன். அடுத்தபடியாக, மெடிகல் கல்லூரியில்
ஒரு மாணவன் படித்து வெளிவர வேண்டுமென்றால், ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 10,000-க்கும் மேலாக செலவு ஆகிறது என்பதை நாம் பார்க்கிறோம்.
ஆகவே அந்த அளவுக்கு அந்த மாணவன் படித்துவிட்டு வந்த பின்
இந்த நாட்டு மக்களுக்கு அவன் சேவை செய்ய வேண்டும் என்று தான்
இந்த அரசு அவனுக்குப் படிக்க உதவி செய்கிறதே தவிர, அதை விட்டு
விட்டு அந்த மாணவன் படித்த பிறகு தனியாக பிராக்டிஸ் செய்வது
என்றால், அதைத் தடுத்து, அதற்கு ஒரு சட்டபூர்வமாக ஏற்பாடு செய்து
எத்தனை வருஷங்களுக்கு அரசாங்கத்தில் ஒரு மாணவன் வேலை செய்ய
வேண்டும் என்பதை நிர்ணயம் செய்துவிட வேண்டும் என்று நான் இங்கே
குறிப்பிட விரும்புகிறேன்.

நண்பகல் 12-00 அடுத்து, ஊழல்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், ஆஸ்பத்திரி
களில் என்ன ஊழல் என்று கேட்டால், இறைச்சி, முட்டை இவைகளை



சப்ளை செய்ய டெண்டர் கேட்கிறார்கள். அதிலெல்லாம் ஊழல்கள்
இருக்கின்றன என்பதை அமைச்சரவர்கள் உற்றுக் கவனிக்க வேண்டும்.
அப்படிக் கவனித்தால், லட்சக்கணக்கான ரூபாய்கள் சர்க்காருக்கு ஆதாயம்
வரும் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
(மணியடிக்கப்பட்டது.)

திரு. டி. எஸ். ஆதிமூலம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
இந்த மானியத்தில் பேசும்போது, பொதுவாக ஒரு விஷயம் சொல்ல
வேண்டியிருக்கிறது. மற்ற எல்லாத் துறைகளையும் விட, இந்தத் துறையில்
வசதிகள் இடைக்கவேயில்லை. குறிப்பாக, அறிக்கையில் கூடச் சொல்லப்
பட்டிருக்கிறது. கிராமாந்தரங்களுக்கு வசதி செய்யப்படவில்லை என்பதை
ஒத்துக் கொண்டிருக்கிறது, சர்க்கார் சார்பில் முன்னேறிய நாடுகளி
லெல்லாம், முன்னேறிய நாடு என்றால், ஐரோப்பாக் கண்டத்தைப் பற்றிச்
சொல்லுகிறேன், கிட்டத்தட்ட 600, 700 பேர்களுக்கு ஒரு டாக்டர் இருக்கிறார்;
ஆனால் இங்கே 8,000, 10,000 பேர்களுக்குக் கூட ஒரு டாக்டர் கிடைக்கவில்லை.
சாதாரணமாக, 15 வருஷங்களுக்கு முன்னால், வைத்திய வசதிகள் எந்த
அளவிற்கு இருந்தனவோ அந்த அளவிற்குத்தான் ஒவ்வொரு ஜில்லாவிலும்
கிராமத்திலும் இருக்கிறது. நான் ஜில்லா போர்டு பிரசிடெண்டாக இருந்த
போது, எங்கள ஜில்லாவில் எவ்வளவு டிஸ்பென்ஸரிகள், தலைமை
ஆஸ்பத்திரிகள் இருந்தனவோ, அவ்வளவுதான் இப்பொழுதும் இருக்
கின்றன. இப்பொழுது ப்ரைமரி ஹெல்த் சென்டர், என்று ஏதோ நோய்
தடுப்பு வைத்தியசாலை என்று எதையோ சொல்லுகிறார்கள். ஆரம்ப
சுகாதார நிலையம் என்கிறார்கள். பேர்தான் பெத்த பேர்—பேரு பெத்த
பேரு, தாக உண்டி நீளு லேது என்பார்கள்—அப்படிப் போல, (குறுக்கீடு)
நமக்கு என்ன தெலுங்கு தெரியும், அரைகுறைதானே. அந்த மாதிரி
போதிய அளவில் வைத்திய வசதிகள் கிராம மக்களுக்குக் கிடைக்கவில்லை.
ஆகவே, சாதாரணமாக ரெகுலர் ஆஸ்பத்திரிகளில் காலை மாலை வைத்தியம்
செய்கிறார்கள். 11 மணி வரையில் வைத்தியம் நடக்கிறது. மத்தியானத்திற்கு
மேல், இந்த மாதிரி இடங்களுக்குப் போய் வைத்தியம் செய்கிறார்கள்.
அதற்கு என்று அவர்களிடம் ஆல்டர்னேடிவ் ப்ரோக்ராம் இருக்கிறது.
அதுவும் சில இடங்களில் போக வாகன வசதி செய்து கொடுக்கப்படாததால்,
டாக்டர்கள் 11 மணி வரையில் டிஸ்பென்சரியில் திறந்து வைத்துக்கொண்டு
இருந்துவிட்டு, வேலைசெய்து விட்டு, சுகமாகப் போய்விடுகிறார்கள். ஆகவே,
கிராமாந்தர வைத்திய வசதி இந்த நாட்டில் ரொம்பவும் புறக்கணிக்கப்
பட்டிருக்கிறது. அது எந்தச் சர்க்காராக இருந்தாலும் சரியே, காங்கிரஸ்
சர்க்காரானாலும், இந்தச் சர்க்காரானாலும், வசதிகள் பெருகவில்லை. அதைத்
தவிர்க்க வேண்டும். சிடியிலே கொஞ்சம் வசதி இருக்கிறது. அதுவும்
மெட்ராஸ் சிடியில், 20 வருஷத்திற்கு முன்னாலே, 7, 8 லட்சம் ஜனத்
தொகை இருந்தது. அப்பொழுது வெள்ளைக்காரர்கள் ஜெனரல் ஆஸ்பத்திரி,
ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, ஸ்டான்லி ஆஸ்பத்திரி போன்று சில
ஆஸ்பத்திரிகளை அமைத்தார்கள். இன்றைக்கு ஜனத்தொகை 25 லட்சம்
அளவில் இருக்கிறது. நல்லகாலமாக பட்டணத்தைச் சேர்ந்த அம்மையாரே
மந்திரியாக வந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் காலத்தில் சிடியில்,
சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், ஜனத்தொகைப் பெருக்கத்திற்கு
ஏற்ப ஆஸ்பத்திரிகள் அமைக்கப்பட வேண்டும். கிராமாந்தரங்களில்,
தாலுகா அளவில் கூடுதலாக ஆஸ்பத்திரிகள், மக்களுடைய தேவைக்குத்
தக்கபடி, மக்கள் முன் வந்து கேட்டால், பெரிய ஆஸ்பத்திரிகள் இல்லா
விட்டாலும், 50 சத விகித அளவில் உள்ள ஆஸ்பத்திரிகளை அமைக்க
சர்க்கார் திட்டம் வைத்து, செய்தால், நாட்டிலுள்ள கிராம மக்களுக்கு
வைத்திய வசதி நிறையக் கிடைக்க வழி ஏற்படும். ஒரு மெடிகல் காலேஜ்
ஸ்டுடெண்டைப் படிக்க வைக்க, சர்க்கார் கணக்கையும் சேர்த்துப் பார்த்தால்,
கிட்டத்தட்ட ரூ. 40 ஆயிரம் ஆகிறது. எல்லோரும் படித்துவிட்டு, வெளியில்
வரும்போது, பட்டணத்திலேயே தங்கிவிடுகிறார்கள். ஜெனரல் ஆஸ்பத்திரி
யில் மூன்று வருஷத்திற்கு மேல் ஆள்களைப் பிடித்து, ஆர்டர்களை வாங்கி
இங்கேயே தங்கிவிடுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டு விடுகிறார்கள்.
கிராமாந்தரங்களுக்கு வைத்திய வசதி செய்ய வாய்ப்பு இல்லாமல் போய்
விடுகிறது. இந்த மாதிரி முறை இன்றைக்கு இருக்கிறது. இதை நீக்க
வேண்டும்.

வேறு பெரிய விஷயங்கள் பற்றிச் சொல்லுகிறார்கள். ஆந்திராவில் ஹானரரி அப்பாய்ண்ட்மெண்ட் முறையை அப்புறப்படுத்தி விட்டார்கள். ஹானரரி டாக்டர்கள் ஆள்களைப் பிடித்து, பெரிய பெரிய அதிகாரிகளைப் பிடித்து, ஆர்டர்களை வாங்கிக் கொண்டு, சொந்தத் தொழிலை வளர்த்து, ஆயிரக்கணக்கான ரூபாய்களைப் பெருக்கிக்கொள்ள, ஆனரரி டாக்டர்கள் என்ற ஒரு அப்பாயிண்ட்மென்டை பிரயோசனப்படுத்திக் கொள்ளுகிறார்கள். அதை, அந்த டாக்டர்களை அப்புறப்படுத்தலாமா என்று நம்முடைய சர்க்காரும் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனக்கு ஒரு சொந்த விஷயம் இருக்கிறது. சபாநாயகர், என்னை விரட்டவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சென்ற டிசம்பர் மாதம் நான் ஆஸ்பத்திரியில் சேரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதற்கு என் பெயரை ஒரு ஸ்பெஷல் வார்டு வேண்டும், என்று ஏற்பாடாக எழுதிவைத்துவிட்டு வந்தேன். நான்கு ஐந்து தினங்களுக்குப் பிறகு, ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போய், கேட்டேன். அவர்கள் வழியில்லை என்றதின் பேரில், உடனே அப்பொழுது இருந்த சுகாதார மந்திரியிடம் வந்து, எனக்கு ஸ்பெஷல் வார்டு கொடுக்க வழியில்லையா சர்க்கார் தரப்பிலுள்ள கோட்டாவில் ஏதாவது நீங்கள் வைத்து இருக்கக் கூடிய ஒன்றிரண்டு அறைகளைக் கொடுத்து உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அவர்களும் உடனே, செக்ரடரியிடம் சொல்ல, ஜெனரல் ஆஸ்பத்திரியில் இடம் கொடுக்கச் சொல்லி லெட்டர் அனுப்ப ஏற்பாடு செய்தார்கள். சரியென்று, மறுநாள் காலையில், நான் ஜெனரல் ஆஸ்பத்திரிக்குச் சென்று, சர்க்காரிடமிருந்து லெட்டர் வந்திருக்குமே என்றேன். அவர்கள் வரவில்லை என்று சொன்னார்கள். உடனே நான் வந்து செக்ரடரியைக் கேட்டேன். அவர்கள் நான் மெடிகல் எஜுகேஷன் டைரக்டரிடம் சொல்லிவிட்டேன். அவர்கள் ஏற்பாடு செய்து இருப்பார்கள் என்றார். நான் அவர்களுக்குப் போன் செய்தேன். உனக்கு என்ன வியாதி என்றாரே பார்க்க வேண்டும். கேட்டார்கள், நான் சொன்னேன் எனக்கு, சும்மா எக்ஸிமா சம்மந்தமாக, டாக்டர் தம்பையா வைத்தியம் செய்யவேண்டும், என்று சொன்னேன். ஏற்கனவே நான் ஒரு ஹார்ட் பேஷண்ட். இருந்தாலும், அவர் கேட்ட உடனே, மந்திரியவர்கள் உத்தரவு போட்ட பிறகும், என்ன வியாதி என்று கேட்கும் நிலை வந்துவிட்டதே என்று நினைத்துக்கொண்டு, சும்மா எக்ஸிமா சம்மந்தமான வியாதி என்றேன்........(மணியடிக்கப்பட்டது) ஒரு நிமிஷம், அரை நிமிஷம் இரும். தெரியுமா? (மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நீங்கள் பேசுங்கள். பரவாயில்லை, பேசுங்கள்) அவர்கள் என்ன வியாதி என்று கேட்ட உடன் (குறுக்கீடு) அம்மையார் அவர்கள் சொல்லிவிட்டார்கள், அவர்களுடைய நேரத்தில் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுகிறேன், எனக்குக் கொடுக்கிறேன் என்று. ஆகவே, என்ன வியாதி என்று கேட்டவுடன், எனக்கு ஹார்ட் டிஸீஸ் என்று சொல்லவில்லை, ஏதோ ஸ்கின் சம்பந்தமான டிஸீஸ் என்றேன். அவர், ப்ரையாரிடியில் வராது என்றார். அப்பொழுது நான், ஹார்ட் டிஸிஸ் கூட இருக்கிறது என்றேன். அப்படியானால், டாக்டரிடமிருந்து சர்ட்டிபிகேட் வாங்கிவர வேண்டும் என்றார். போனைக் கீழேவைத்துவிட்டு, செக்ரடரியிடம் தொடர்பு கொண்டு, விஷயத்தைச் சொன்னேன். அவர்கள், அவர் சொன்னது சரிதான், கவர்ன்மெண்டில் ப்ரொவிஸர் இருக்கிறது என்றார். அப்படி ஒருநிலை ஏற்பட்டது. மந்திரியவர்கள் சொல்லி, ரூம் கொடுக்கச் சொல்லிய பிறகு, அதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொன்ன பிறகு, என்னவெல்லாமோ கேள்விகள் கேட்கிறார்கள் அரசாங்கத்தில் இருக்கும் அதிகாரிகள். தமாஷாக இருக்கவில்லை? நான் சொன்னேன், சர்ட்டிபிகேட் வாங்கி வருகிறேன், இதற்கு மத்தியில் சர்ட்டிபிகேட் கொண்டு வந்தால் இடம் கொடுக்கலாமா என்று லா டிபார்ட்மெண்டில் கன்ஸல்ட் செய்து வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிப் போனேன். இந்தச் சர்க்காரிலுள்ள அதிகாரிகளை நான் ரொம்ப மதிக்கிறவன். நான் ஜில்லா போர்டு பிரசிடெண்டாக இருந்த காலத் தில் ஒரு டாக்டர் இருந்தார். அவர் வந்த ஆறு மாத காலத்தில் மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள், தகுந்த காரணம் இருந்தால் மாற்று





கிறேன் என்று நான் சொல்லிவிட்டேன். அவர் பெரிய காங்கிரஸ் புள்ளி. பெரிய பெரிய எம்.எல்.ஏ.க்களையும் மற்றவர்களையும் போய் பார்த்தார். தகுந்த காரணமில்லாமல் மாற்ற முடியாது என்று சொல்லிவிட்டேன். டாக்டர்கள், ஐ.ஏ.எஸ். படித்தவர்கள், இன்ஜீனியர்கள் போன்றவர்கள் பெரிய மேதைகள். அவர்களையெல்லாம் அடிக்கடி மாற்றக்கூடாது. அவர்களுடைய சேவை நமக்குத் தேவைப்படுகிறது. இதற்காக ஜில்லா போர்டு பிரசிடெண்டாகிய என்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்கூட கொண்டு வரப்பட்டது. பிறகு நான் அதைச் சமாளித்துவிட்டேன். நானா சமாளிக்காமல் விடுவேன்! (சிரிப்பு) நான் இதைச் சட்டமன்றத்தில் சொல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடு, பெரிய அதிகாரிகளைப் பற்றிச் சொல்லவில்லை. இப்படி மந்திரி உத்தரவு போட்ட பிறகுகூட அதிகாரிகள் கெடுபிடி செய்யக்கூடிய காரியங்களைச் செய்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான், மந்திரிசபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொன்னேன்.

அடுத்தபடியாக, ஆஸ்பத்திரிகளில் முட்டைகள் வாங்கும்போது, அதிக டெண்டர் தொகையை கேட்பவர்களுக்குத்தான் உரிமை கொடுக்கப்படுகிறது. குறைந்த டெண்டர் தொகை கேட்பவர்களுக்குக் கொடுத்தால் நல்லது. அதிக தொகை கேட்கும் டெண்டர்தாரர்களுக்கு உரிமை கொடுப்பதால் சர்க்காருக்கு அதன் மூலம் பல லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. இதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும். இது மிகவும் முக்கியமான இனாசா. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நல்ல முறையில் வேலை செய்வதற்கு மந்திரி அவர்கள் நல்ல கவனம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சுகாதார வசதிகள் சரியாகச் செய்து தரப்பட வேண்டும். சுகாதாரத்திற்கு நல்ல குடிதண்ணீர் மிகவும் முக்கியமானது. அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி ஆகிய இரண்டுக்கும் சேர்த்து குடிநீர்த் திட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்காக ரொம்ப நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பக்கத்தில் இருக்கும் வீராநல்லூர் என்ற ஊர் 20 ஆயிரம் ஜனத்தொகையைக் கொண்ட ஊர். ஆகவே, அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, வீராநல்லூர் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்து ஒரு பெரிய திட்டமாகப் போட்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இதற்கு முதலிடம் கொடுத்து, நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அம்பாசமுத்திரம், அம்பாசமுத்திர தாலுகாவின் தலைநகர் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(திரு. சு. துரைசாமி—தலைமை.)

அடுத்து, மெடிகல் காலேஜ் அட்மிஷன் விஷயமாக பல புகார்கள் சொன்னார்கள். சர்க்காரின்மீது பல புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள மாணிக்கம் என்ற அரிசன மாணவன் ஒரு போலீஸ் கான்ஸ்டேபிளின் மகன். அவன் மெடிகல் காலேஜ் இன்டர்வ்யூவிற்குப் போய் செலக்ஷன் எல்லாம் ஆகிவிட்டது. அட்மிஷன் சமயத்தில் போய் பார்த்தால், 'உன்னுடைய பெயர் செலக்ஷன் லிஸ்டில் வரவில்லை' என்று சொல்லியதால் அவன் படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது என்று சொன்னார்கள். இதைப் பற்றிக் கேட்டால் உத்தியோகஸ்தர்களிடையே ஏதோ நடந்துவிட்டது என்று சொன்னார்கள். இது நியாயமா? இந்த இலாகாவானது பொதுவாக கிராமாந்தரங்களில் உள்ள மக்களுக்குக் கூடுதலான வைத்திய வசதியைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியத்தை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய மாவட்டம் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்பதை எல்லோரும் அறிவார்கள். அந்த மாவட்டத்தின் பஞ்ச நிலையைப் போக்குவதற்கு ஏறத்தாழ 38 லட்சம் ரூபாய் தொகை

[திரு. ஏ. சி. நரசிம்மன்] [1969 மார்ச் 21

ஒதுக்க இந்த அரசு முன்வந்திருக்கிறது. ஏறத்தாழ 10 லட்சம் ரூபாய் குடிதண்ணீர் பிரச்னைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நன்றியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய மாவட்டத்தைப் பற்றிப் பேசியவர் களுக்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நான் இதை மிகவும் வலியுறுத்திச் சொல்ல விரும்பு கிறேன்.

என்னுடைய மாவட்டத்திலே தண்ணீருக்காக ரேஷன் கார்டு கொடுக்கப் பட்டதாக தமிழ்நாடு காங்கிரசின் பேரவைக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். யார் பேசினாரோ அவருடைய ஊரில்தான் தண்ணீருக்காக ரேஷன் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. யார் பேசினாரோ அவரால் ஆக்கப்பட்டவர்தான் அந்த ஊர் காங்கிரஸ் பஞ்சாயத்தின் தலைவர். ஊராட்சி ஒன்றியத்தின் துணைத் தலைவர். அவர்களாகவே தண்ணீருக்கு ரேஷன் கார்டு கொடுத்து விட்டு, “பாருங்கள், தண்ணீருக்கு ரேஷன் கார்டு கொடுக்கிறார்கள்” என்று சொல்வது, தங்களைத் தாங்களே கேலி செய்துகொள்வது போலாகிறது. அதுமட்டுமல்ல, எந்த உறுப்பினர் இந்தக் குற்றச்சாட்டைக் கூறினாரோ அவர் இந்த மன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறார். அவருடைய காலத்தில் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து தண்ணீருக்கு ரேஷன் கார்டு கொடுத்திருக்கிறார். இவ்வளவையும் செய்துவிட்டு, நம்மைப் பார்த்துக் கேலி செய்கிறார் என்றால் இது அரசுக்குக் கேலி அல்ல. அத்தகைய குற்றச்சாட்டுகளைப் பேசும்போது பொறுப்புடன் பேசவேண்டும்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் ஆரணியில் கட்டப்பட் டிருக்கும் மருத்துவமனை, பெரிய கட்டடமாக, நல்ல முறையில் கட்டப்பட் டிருக்கிறது. ஆனால் அந்த மருத்துவ மனைக்கு மருந்துகள் சரியாக வருவதில்லை. டாக்டர்கள் ‘இண்டெண்ட்’ எழுதியனுப்பி, டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீசில் சிபாரிசு செய்து மெடிகல் ஸ்டோருக்கு அனுப்ப வேண்டும். இதனால் அதிக காலதாமதமாகிறது. மேலும் எழுதியனுப்பும் மருந்துகளில் சில ரக மருந்துகள்தான் வருகின்றன. மீதி மருந்துகள் கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள். இதனால் தேவையான மருந்துகள், தேவையான நோய்களில் கிடைப்பதில்லையென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். ‘இண்டெண்ட்’ எழுதியனுப்பிய ஒரு மாத காலத்திற் குள்ளாவது கேட்ட மருந்துகளை அனுப்ப வழிவகை செய்யவேண்டும். டாக்டர்கள் எழுதியனுப்பும் மருந்து சரிவர கிடைக்காததன் காரணமாக பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். அரசு தீவிர முயற்சி செய்து தேவையான மருந்துகளை மருத்துவமனைக்குச் சப்ளை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேலூரிலே ஒரு பெரிய மாவட்ட மருத்துவமனை இருக் கிறது. அந்த மருத்துவமனையில் கண் டாக்டர் இல்லை, பல் டாக்டர் இல்லை, சர்ஜன் இல்லை, காது, மூக்கு, தொண்டை (E.N.T.) டாக்டர்கள் இல்லை. இவ்வளவு டாக்டர்களும் இல்லையென்றால் அதை மாவட்ட மருத்துவமனை என்று சொல்வதன் பொருள் என்ன என்றே தெரியவில்லை. வேலூரில் சி.எம்.சி. ஆஸ்பத்திரி இருக்கிறதே, அரசாங்க ஆஸ்பத்திரிக்கு டாக்டர்கள் தேவையில்லையென்று இங்குள்ள அதிகாரிகள் நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் பெரிய பணக்காரர்கள் தான் வைத்திய வசதி பெற முடிகிறது. சாதாரண நிலையிலுள்ள பொது மக்கள் அந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற முடியாது. ஆகவே, மாவட்ட மருத்துவ மனைக்கு வேண்டிய எல்லா டாக்டர்களையும் நியமித்து பொது மக்களுக்குச் சௌகரியம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், இந்த மாவட்ட மருத்துவமனையில் சர்ஜன்கள் இல்லாமல் ஆபரேஷன் நடைபெறுகிறது. அவசர கேஸ்களை—இரண்டு மணி நேரமானாலும்—கவனிப்பதற்கு டாக்டர் இல்லை. ஒரு அவசர கேஸ் மருத்துவ மனைக்கு வந்தபோது அதைப்பற்றி பாராளுமன்ற உறுப்பினர், ஒரு சட்ட மன்ற உறுப்பினர் இவர்கள் எல்லாம் போன்செய்தும் விபத்துக்குள்ளான டிரைவரை இரண்டு மணி நேரத்திற்கு மேலாகியும் கவனிப்பதற்கு வசதி



1969 மார்ச் 21] [திரு. ஏ. சி. நரசிம்மன்]

யில்லாமல் இருந்தது. பிறகு, டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீசருக்குப் போன் செய்த பிறகு, அவர் டாக்டருக்குப் போன்செய்து வந்து பார்த்தும், காலம் கடந்துவிட்ட காரணத்தினால் சிகிச்சை பயன் அளிக்காமல் விபத்துக்கான டிரைவர் இறந்துவிட்டார். இந்த மாதிரியான நிலைமை ஏற்படுவதைப் போக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆரணிக்கு குடிதண்ணீர் திட்டம். மிக வறட்சியான நேரத்தில் தண்ணீர் சப்ளை செய்ய மற்றுமொரு குடிதண்ணீர் கிணறு வெட்டப்படவேண்டும் என்று கடந்த ஜூலை மாதத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அது நிறைவேற்றப்பட்டு ஏறத்தாழ 9 மாதங்கள் ஆகின்றன. அதன் நிலைமை என்னவென்றால் அது எக்சிக்யூடிவ் என்ஜினியருக்குச் சென்று திட்டமிட்டு எஸ்டிமேட் தயாரிக்க நான்கு மாதமாகி எஸ்.இ.-க்கு அனுப்பியிருக்கிறார்கள். மேலும் 2 மாதமாகிவிட்டது எஸ்.எஸ். தற்காலிகத் திட்டமாக 50 ஆயிரத்தில் அந்தத் திட்டத்தை அமைத்து அரசாங்க அனுமதிக்கு அனுப்பியிருக்கிறார்கள். இப்படி ஒவ் வொரு இடத்திலும் காலதாமதமானதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தீர்மானம் போட்டு 9 மாதமாகியும், இன்னும் அரசாங்க அனுமதிக்குத்தான் வந்திருக்கிறது என்றால் எந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் ?

அதேமாதிரி பாதாள சாக்கடைத் திட்டம். அதற்கு பல லட்ச ரூபாய்கள் தேவைப்படலாம். ஆரணி நகராட்சியிடம் சர்ப்ளஸ் தொகை இருக்கிறது. அவர்கள் இப்போது கேட்பது எல்லாம் அதைப்பற்றி பரி சீலனைக்கு—ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற எவ்வளவு லட்சம் ரூபாய் தேவைப்படும் என்கிற விபரத்தையாவது கொடுக்க வேண்டும். தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ஆய்வுக்கு எடுத் துக்கொண்டு எவ்வளவுசெலவாகும் என்று சொன்னால்—சர்க்கார் கடன் கொடுக்கவேண்டாம்—எல்.ஐ.சி. போன்ற ஸ்தாபனங்கள் கடன் கொடுக்கத் தயாராய் இருக்கின்றன. ஆகவே இந்தத் திட்டத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஸ்காவன்ஜர்களுடைய நிலைமை, 12½ ரூபாய் சம்பளம் கொடுத்தால் இந்தக் காலத்தில் அவர்களால் வாழ முடியுமா ? பஞ்சப்படி கொடுக்கிறோம் பஞ்சபடியைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டாகிலும் சம் பளத்தை அதிகமாக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எங்கள் மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலை கள் இருக்கின்றன. அவற்றில் இருந்து ஏராளமான கழிவுநீர் வெளியேறு கிறது. அந்தக் கழிவுநீர் பட்ட இடத்தில் புல்கூட முளைக்காது. கிணறுகள் பாதிக்கப்படுகின்றன. பொதுச் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. ஆகவே அதற்கு உடனடியாகப் பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

எங்கள் செங்கம் மாவட்டத்தில் காரப்பட்டு கிராமம் இருக்கிறது. அங்கே ப்ரைமரி ஹெல்த் சென்டருக்காக 50 ஆயிரம் ரூபாய் கட்டடத்தை வாடகை இல்லாமல் ஒருவர் கொடுத்திருக்கிறார். 5 ஏக்கர் நிலத்தை பொதுமக்கள் கொடுத்திருக்கிறார்கள். கிராமத்தார் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள், உடனடியாக அங்கே நல்ல வசதிகளை ஏற்படுத்த வேண்டும், டாக்டர் இருக்கிறார், அடிக்கடி விடுமுறையில் சென்றுவிடுகிறார். ஆகவே டாக்டர் அங்கேயே இருந்து கவனிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு கலப்படச் சட்டத்தைப்பற்றி ஒரே ஒரு வார்த்தை, உண்மையில், கலப்படம் செய்கிறார்கள் என்றால் தண்டிக்கப்பட வேண்டியது தான். ஆனால் நிரபராதிகள் தண்டிக்கப்படுகிறார்கள். ஆக்ராவில் இருந்து பருப்பு வருகிறது, அதிலே என்ன கலப்படம் செய்திருக்கிறார்கள் என்பது இங்கே உள்ளவர்களுக்கு எப்படி தெரியும் ? அதுபோல மஞ்சள், வியாபாரிக்கு அதில் என்ன கலப்படம் செய்யப்பட்டிருக்கிறது என்று எப்படி தெரியும் ? பாலையும் தண்ணீரையும் கலந்தால் குற்றம், எருமைப்பாலையும், பசும் பாலையும் ஒன்றோடொன்று கலந்து விற்றால் குற்றம், ஆகவே கலப்படம்

செய்கிறவர்களைத் தண்டிக்க வேண்டுமே தவிர—வாங்கி விற்கிற குற்றமற்ற வியாபாரிகளைக் குற்றவாளியாக்குவது சரியல்ல, இதைத் தகுந்தமுறையில் ஆய்வு செய்யவேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. பி. வேலுசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சுகாதார மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலிலே சிங்கநல்லூர் முனிசிபாலிடி என்று இருக்கிறது. அதற்குத் தேர்தல் நடக்கவில்லை. தேர்தல் என்றால் ஜெயிக்க முடியாது என்கிற காரணத்தினாலே முன்னால் இருந்த ஆட்சியினர் சுற்றுப்புறங்களை எல்லாம் சேர்த்து அதை முனிசிபாலிடி என்று ஆக்கினார்கள். அதற்குப் பிறகு அந்தப் பகுதியில் தண்ணீர் கஷ்டம் சொல்ல முடியாமல் இருக்கிறது. பல பஞ்சாலைகள் இருக்கிற பகுதி; குடம் ஒன்று 15 பைசா என்று கொடுத்து வாங்குகிறார்கள். அந்தப் பகுதியில் உள்ள தண்ணீர் கஷ்டத்தைப் போக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரசாயனத் தொழிற்சாலை பற்றி எல்லோரும் சொன்னதை நானும் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆஸ்பத்திரிகளில் அவுட் பேஷண்ட் என்று வைக்கிறார்கள். மாவட்ட தலைநகரில் இருக்கிற ஆஸ்பத்திரிகளில் 2 மணிக்கு 200 பேர்களுக்கு மேல் வருகிறார்கள். ஒரு பேஷண்டுக்கு ஒரு நிமிஷம் என்றால் கூட நேரம் இல்லை. அத்தனை பேர்களையும் டாக்டரால் எப்படி பார்க்க முடியும் என்பதை யோசிக்க வேண்டும். ஆகவே ஓ.பி. யாக வருகிறவர்களுடைய எண்ணிக்கை அளவு எதுவோ அதைக் கணக்கில் எடுத்து—எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல அதிகமான டாக்டர்களைப் நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்போதுதான் அங்கே வைத்தியத்திற்காக வருகிறவர்களுக்கு நலம் கிடைக்கும்.

அதோடு ஆஸ்பத்திரியில் 200 படுக்கை என்றால் சராசரி 500, 600 பேர்கள் படுக்கிறார்கள். இரண்டு இரண்டு கட்டிலுக்கு இடையில் பாய்களைப் போட்டு படுக்க வைக்கிறார்கள். நகரங்களில் ஜனத்தொகை பெருகி வருகிற காலக்கட்டத்தில் ஆஸ்பத்திரிகளில் முன்பு எவ்வளவு படுக்கைகள் இருந்தனவோ அதே அளவு இப்போதும் இருக்கச் செய்வது சரியல்ல. அவற்றை விஸ்தரித்து, படுக்கை வசதிகளைப் பெருக்க ஆவன செய்ய வேண்டும்.

தாலுகா தலைநகரங்களில் இருக்கிற ஆஸ்பத்திரிக்கு ஒரு ஆண் டாக்டர், ஒரு பெண் டாக்டர் என்று போடுகிறார்கள். அவர்கள் ஓ.பி. யைக் கவனிக்க வேண்டும். இன்பேஷண்டைத் கவனிக்கவேண்டும். வெளியில் இருந்து வருகிற ஆக்சிடெண்ட் கேஸ்கள், அவசரகேஸ்கள் எல்லாம் கவனிக்க வேண்டும். கணக்குகளையும் பராமரிக்கவேண்டும் என்றால் இவை உண்மையில் முடிகிற காரியமா ? திருப்பூர் நகரத்தில் உள்ள ஆஸ்பத்திரியிலும் ஒரு ஆண் டாக்டர், ஒரு பெண் டாக்டர் தான் இருக்கிறார்கள். ஒரு நாளைக்கு சராசரி 140 பேர்கள், 150 பேர்கள் அவுட் பேஷண்டாக வருகிறார்கள், நான் கணக்கெடுத்துப்பார்த்தேன். அதைத்தவிர இன்பேஷண்டுகள் இருக்கிறார்கள். போலீஸ் கேஸ்கள் வருகின்றன. சாராயக் கேஸ்கள் வருகின்றன. அதே நேரத்தில் வயிற்றுவலி என்று வந்து துடித்துக்கொண்டிருந்த அவசரக்கேஸ் ஒன்றையும் பார்த்தேன். இம்மாதிரி நகரங்களிலாவது எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து அதிகமான டாக்டர்களைப் போடவேண்டும் என்பதாக இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்று டாக்டர்களையே எழுதச் சொல்வது சரியல்ல. அவர்களுக்கு இருக்கிற மற்ற வேலைகளோடு இதையும் அவர்களிடமே கொடுப்பது சரியல்ல. ஒரு கிளார்க் உதவியோடு ஒரு அக்கவுண்டெண்டையாவது போட்டு இந்தக் கணக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஒப்படைத்து இதில் இருந்து டாக்டர்களுக்கு நிம்மதி கொடுக்கவேண்டும்.



அடுத்து தலைநகர ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொண்டால் அதிகமான பேர்கள் கண் வைத்தியத்திற்குத்தான் வருவார்கள். அதற்கு முக்கியமான காரணமும் இருக்கிறது. அங்கங்கே நிறைய பாக்டரிகள் வந்துவிட்டன. பாக்டரியில் வேலைசெய்கிறவர்களுக்கு தனியாக ஒரு கண்ணாடி இருக்கிறது. பலயிடங்களில் தொழிலாளர்களுக்கு அந்தக் கண்ணாடி கொடுப்பதில்லை. அதனால் கண்கள் பெரிதாகி வீங்கி கண்பார்வை பாதிக்கப்படுகிறது. டர்னிங் செக்ஷன் கடைசல் பகுதியில் பிசிருகள் அடித்து கண்பார்வையையே தொலைப்பட்டு பார்வை பாதிக்கப்படுகிறவர்களும் இருக்கிறார்கள். இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி இருக்கிறது. ஆனால் கண் வைத்தியப் பிரிவு, தொண்டைப் பிரிவு இவை இல்லை. இங்கிருந்து நோயாளிகளை தலைநகர ஆஸ்பத்திரிக்கு அனுப்பினால் மாற்றாந்தாய் பிள்ளையாகவே பார்க்கிறார்கள். இவர்களைச் சரியாக கவனிப்பது இல்லை. ஆகவே இ.எஸ் ஐ. ஆஸ்பத்திரிகளிலேயே கண் வைத்தியப் பிரிவு, தொண்டை வைத்தியப் பிரிவு செக்ஷன்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல டி.பி. வருவது சர்வசாதாரணம் தொழிலாளர்களுக்கு.— பிற்பகல் 12 30
டி.பியைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுக்குத் தனியாகக் ஏற்படுத்துவது அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு நண்பர்கள் பலரும் பேசுகின்றபொழுது ஒரு காரணத்தைக் குறிப்பிட்டார்கள். வைத்தியப் பிரிவிலே படிப்பு முடித்துவிட்டு வெளியே வருகிறவர்கள் நகரத்திலே இருப்பதற்கு ஆசைப்படுகிறார்கள். வைத்தியப் பயிற்சியை முடித்தபிறகு தலைநகரத்திலே இருப்பதற்குதான் ஆசைப்படுகிறார்கள். வைத்தியப் பயிற்சியை முடித்தபிறகு தலைநகரத்திலே ஆஸ்பத்திரியிலே ஒரு ஆண்டு வைத்தியராக இருந்துவிட்டு பிறகு கிராமத்திலே 3 ஆண்டுகளாவது கண்டிப்பாக இருக்கவேண்டுமென்ற முறையை வகுப்பது மிக மிக அவசியம். கிராமங்களிலே உள்ள மக்களுக்கு வைத்திய வசதிகள் கிடைக்கவேண்டுமென்றால் மொபைல் வேன்கள் மூலமாக ஒரு வாரத்திற்கு ஒரு முறையாவது சென்று வைத்திய வசதிகள் செய்யவேண்டும். அந்த நேரத்திலே பயிற்சி பெற்றவர்கள் கிராமங்களிலே குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளாவது சர்வீஸ் செய்யவேண்டுமென்று ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக இந்தக் குடும்பக் கட்டுப்பாடு. இது ரொம்பவும் ஆச்சரியமாக இருக்கிறது. நானே குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டு இருக்கிறேன். குடும்பக் கட்டுப்பாடு அவசியம் என்று கருதுகிறேன். அதிலே இன்னொரு விஷயம் என்னவென்றால் சமீபத்திலே ஒரு சம்பவம் நடந்தது. சத்திரத்திலே ஒரு சாமியார் படுத்திருந்தார். அவரை அங்கே இருக்கிற கிராம சேவக் பார்த்து கண்டிப்பாக நீ வந்துதான் ஆகவேண்டும், இந்த மாதத்திலே கோட்டாவைப் பூர்த்தி செய்தாக வேண்டும் (சிரிப்பு) என்று அவரை வற்புறுத்திக் கூப்பிட்டிருக்கிறார். அது பெரிய பிரச்னையாகிவிட்டது. பக்கத்திலே இருந்தவர் அவரைப் பார்த்து நீ எப்படியப்பா அப்படிக் கேட்கலாம் என்று கேட்டிருக்கிறார். இப்படி சாமியாரை விட்டுவிட்டு அவரும் சண்டைபோடக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இப்படிச் சத்திரம், சாவடியிலே இருக்கிற சாமியாரைக் கூட குடும்பக் கட்டுப்பாட்டிலே கொண்டு வந்திருக்கிறார்கள். உணர்வுப் பூர்வமாக ஜனங்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு தேவை என்பதை உணர்த்தவேண்டும், நிர்பந்தமாக மற்றவர்கள் சொல்வதால் ஏற்படாது. கல்யாணம் நடக்கின்ற நேரத்தில் கல்யாணம் செய்தவுடன், குடும்பக் கட்டுப்பாட்டுக்குரிய தக்க ஆலோசனைகளைச் சொல்லக்கூடிய அளவிலே ஏற்பாடுகள் செய்யவேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்திலிருந்தும் இரண்டு பேர்கள் அந்தக் கல்யாணத்திற்குச் சென்று அவர்களுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய விதிமுறைகளை ஏற்படுத்தவேண்டும். அதற்காக அதிகாரத்தின் மூலமாகச் செய்யச் சொல்லவில்லை. நட்பின் மூலமாக பாசத்தின் மூலமாகச் சொல்லும்படி செய்யவேண்டும். இந்தக் குடும்பக் கட்டுப்பாடு பற்றி இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். படத்திலே சினிமா போஸ்டர்களைப் பார்த்தால் யாரும் குடும்பக் கட்டுப்பாடு செய்ய

மாட்டார்கள். மகா கண்டமுவியாக இருக்கிறது. சென்ஸார் போர்டிலே
சரியாகக் கண்காணித்து போஸ்டர்களை அகற்றி, அதோடு சினிமாவிலே
வருகிற—நான் பார்ப்பதில்லை—அந்த மாதிரியான இடங்களையெல்லாம் கட்
செய்து சினிமாக்களை முறைப்படுத்தவும் ஜனங்களுக்குத் தவறான உணர்வு
களை வராமல் செய்வதற்காகவும் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சுகாதார நிலையங்கள் சிறப்பாக
வளர்ந்து ஓங்கவும் அதற்காக இந்த வைத்தியப் பிரிவினர் பெரு
முயற்சிகள் மேற்கொண்டிருந்தாலும் இன்னும் சிறப்பாக அவை அமைய
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, இன்றைக்குக்
கொண்டுவரப்பட்டிருக்கிற மானியத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களைக்
கூறலாம் என்று கருதுகிறேன். இந்திய மருத்துவக் கல்லூரி பற்றி
நான் சில விளக்கங்கள் சொல்வதற்காக இருப்பதால் சிறிது நேரம்
நீட்டிக் கொடுக்க வேண்டுமென்று தலைவர் அவர்களையும் இப்பொழுது

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பொறுப்பேற்றிருக்கிற துணைத் தலைவர் அவர்களையும் வேண்டிக் கேட்டுக்
கொள்கிறேன். இந்த இந்திய மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டை
யிலே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்தக் கல்லூரியிலிருந்து இந்த
ஆண்டு முதன்முதலாகப் பட்டதாரிகள் வெளியே வருகிறார்கள். அந்தக்
கல்லூரியிலே சில தற்காலிகக் குறைபாடுகளும், சில நிரந்தரக் குறை
பாடுகளும் இருப்பதாகவும் அவற்றைப் போக்கவேண்டுமென்றும் சென்ற
ஆண்டிலேயே அந்த மாணவர்கள் வற்புறுத்தினார்கள்; அதற்காக வேலை
நிறுத்தம் செய்தார்கள். நானும் அவர்களைச் சந்தித்தேன். பேரறிஞர்
அண்ணா அவர்களோடு தொடர்பு கொண்டதற்குப் பிறகு பேரறிஞர்
அண்ணா அவர்கள் அளித்த உறுதிமொழியின்பேரில் அவர்கள் வேலை
நிறுத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். இப்போதே பஸ்
வசதிகள் வேண்டும், பேராசிரியர் போடவேண்டும். என்றெல்லாம் கேட்கப்
பட்டன. அவையெல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்களால் தீர்க்கப்பட்டு
விட்டன. அதற்காக அவர்கள் இந்த அரசைப் பாராட்டியிருக்கிறார்கள்;
நானும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அந்த மாணவர்
களுடைய நிரந்தர குறைபாடுகள் இன்னும் இந்த ஆண்டுவரை தீர்க்கப்
படாமல் இருக்கின்றன என்பதை இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற
புதிய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு
கிறேன். சென்ற காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே—நான் இதை ஒரு குற்றச்
சாட்டு ஆகச் சொல்லவில்லை—நல்ல முறையிலே இதற்குத் திட்டமிடாததன்
காரணம் ஆகத்தான் இப்படிப்பட்ட பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன.
அதற்காக டாக்டர் மேத்தா தலைமையின்கீழ் ஒரு கமிட்டி போடபபட்டு
அந்தக் கமிட்டி ஒரு ரிப்போர்ட்டிலே சீர்திருத்தங்கள் பற்றித் தெளிவாகச்
சொல்லியிருக்கிறது. இந்திய மருத்துக் கல்லூரி மாணவர்களுக்கு,
ஆங்கில மருத்துவத்தைப் படித்துவிட்டு எம்.பி.பி.எஸ். பட்ட
தாரிகள் என்ன சம்பளம் பெறுகிறார்களோ, அதே சம்பளத்தையும்
அதே ஸ்டேட்டஸையும் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுடைய
இந்தக் கோரிக்கை நியாயமான கோரிக்கை என்று கருதுகிறேன்.
ஏனென்றால் எம்.பி.பி.எஸ். மாணவர்கள் பி.யு.சி. படித்துவிட்டு
எத்தனை ஆண்டுகள் படிக்கிறார்களோ அத்தனை ஆண்டுகள்தான்
இந்திய மருத்துவக் கல்லூரி மாணவர்களைப் பொறுத்தவரையிலும்
மினிமம் குவாலிபிகேஷன் என்று சொல்லப்படுகின்ற
பி. யு. சி. க்கு மேல் படிக்கிறார்கள். எனவே, ஒரே அளவிலே
இரண்டு பேர்களும் சம ஆண்டுகள் கல்வி பயில்கிறார்கள். இப்படி
இருக்கிற நேரத்திலே எம்.பி.பி.எஸ். படித்தவர்களுக்கு என்ன சம்பளம்
தரப்படுகிறதோ அதே சம்பளம்தான் அவர்களுக்கும் தரப்படவேண்டும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு மாணவர்கள்
வெளியே வருகிறார்கள். எனவே கூடிய விரைவில் அரசாங்கம் நட
வடிக்கை எடுக்க வேண்டும். எனக்கு வந்த தகவலின்படி அவர்களுக்கு
இன்றைக்கு இருக்கிற பி.வி.எஸ்.சி. படித்தவர்களுக்கு என்ன சம்பளம்





தரப்படுகிறதோ அதையே கொடுப்பதற்கு அரசாங்கத்தில் ஒரு கருத்து நிலவுவதாக அறிகிறேன். அதை மாற்றி எம்.பி.பி.எஸ். படித்தவர்களுக்குக் கொடுக்கப்படுவதைப் போன்ற சம்பளத்தை அவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் இன்னொரு குறையையும் சொல்லியிருக்கிறார்கள். இன்டர்னியாக இருக்கிறவர்கள், எம்.பி.பி.எஸ். படிப்பைப் பொறுத்த வரையில் 150 ரூபாய் கொடுக்கப்படுகிறார்கள். ஆனால் இந்திய மருத்துவக் கல்வித் துறையில் உள்ளவர்கள் பி.ஐ.எம். படிப்பைப் படிக்கிறவர்களைப் பொறுத்த வரையில் 100 ரூபாய்தான் தரப்படுகிறது. எனவே, அதையும் அவர்களைப் போன்றே 150 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதன்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைப்போன்ற அடிப்படைப் பிரச்னைகள் பல இருக்கின்றன. இந்த மருத்துவக் கல்வியைப் பொறுத்தவரையில் இரண்டுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. சிலர், இந்திய மருத்துவக் கல்வியில், ஆங்கில முறையிலே உள்ள மாடர்ன் எக்விப்மெண்ட்ஸ், வியாதிகளை அறிந்து கொள்வதற்குக்கூட பயன்படுத்தக்கூடாது என்பது ஒரு சாராருடைய வாதம். ஒரு சாராருடைய வாதம் என்னவென்றால், வியாதிகளை அறிந்துகொள்வதற்காக அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம்; ஆனால் அந்த மருந்துகளைத்தான் பயன்படுத்தக்கூடாது என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி டாக்டர் மேத்தா அவர்களே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். முன்பிருந்த காலத்திலே எல்லாம் துல்லியமாக வியாதியைப் பற்றித் தெரிந்துகொள்ளமுடியாத நிலைமை இருந்தது. என்ன வியாதி, எவ்வளவு டெம்பரேச்சர் என்று அறியமுடியாத நிலையில் இருந்தோம். இன்றைக்கு டெம்பரேச்சர் எவ்வளவு என்றால் 98 டிகிரி, 99 டிகிரி என்று துல்லியமாக அறிந்துகொள்ளக்கூடிய வசதிகள் இருப்பதால் அந்தக் கருவிகளை இந்தியக் கல்வியிலே பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதோடு வியாதிகளை அறிந்துகொள்வதற்காக மாடர்ன் எக்விப்மெண்ட்ஸ் பயன்படுத்தப்படலாம். ஆனால், மருந்துகளைப் பயன்படுத்தக்கூடாது என்ற கொள்கையை வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய மருத்துவக் கல்வியைப்பற்றி ஆராய ஒரு ஆலோசனைக் குழு போடப்பட்டது. நானும் அதில் உறுப்பினராக இருக்கிறேன். இரண்டு ஆண்டுக்காலமாக அந்தக் குழு ஒரு முறைகூட கூட்டப்படவில்லை. அதைப் பற்றிக் கேட்ட நேரத்திலே அந்தக் குழுவைக் கூட்டுவதற்கான "ரூல்ஸ்" இன்னும் அமைக்கப்படவில்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதை விரைவிலே அமைத்து குழுவைக் கூட்டினால் நல்ல ஆலோசனைகளை அந்தக் குழுவில் கூற வசதியாக இருக்கும்.

பாளையங்கோட்டையில் இருக்கும் இந்திய மருததுவக் கல்லூரியில் "காஷுவாலிடி வார்டு" இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அதையும் உடனே ஆரம்பித்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். சென்ட்ரல் பார்மசி வேண்டுமென்ற கோரிக்கையையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்திய மருத்துவத்தைப் பொருத்தவரை பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த நேரத்தில் மிருந்த அக்கறையைக் காட்டி வந்தார்கள். அவர்கள் வழியில் நடக்கின்ற முதலமைச்சர் அவர்களும், மருத்துவத் துறை அமைச்சர் அவர்களும் இவர்களுடைய சம்பள விகிதத்தை எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் பெறும்படியான சம்பள விகிதத்தின் அளவுக்கு ஆக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"ரீ-இம்பர்ஸ்மெண்ட்"டைப் பொறுத்தவரை அரசு அலுவலகங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு ஆங்கில மருத்துவ முறைக்கு மட்டுந்தான் அனுமதிக்கப்படுகிறது. இந்திய மருத்துவத்தைப் பொறுத்தவரையில் "ரீ-இம்பர்ஸ்மெண்ட்" அவர்களுக்குத் தரப்படவில்லை. இந்திய மருத்து

[திரு. அ. லெ. சுப்பிரமணியம்] [1969 மார்ச் 21

வத்தில் பி.ஐ.எம். டாக்டர்களிடம் சிகிச்சை பெற்றாலும் அதற்காக பெறுகிற பில்லைக் கொடுத்து "ரீ-இம்பர்ஸ்மெண்ட்" செய்துகொள்வதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள "ரீ-இம்பர்ஸ்மெண்ட்" சிஸ்டத்தைப் பற்றி பல அங்கத்தினர்கள் குறை பட்டுக் கொண்டார்கள். பலர் அதை "மிஸ் யூஸ்" செய்யும் அளவில் நிலைமைகள் போய்க்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அரசாங்கம் இந்த "ரீ-இம்பர்ஸ்மெண்ட்" சிஸ்டத்தை எடுத்துவிட்டு ஐநூறு ரூபாய்க்குக் குறைவான சம்பளத்தைப் பெறுகின்றவர்களுக்கு மருத்துவ அலவன்ஸ் என்று கொடுத்துவிட்டால்கூட நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய மருத்துவத் துறையில் உள்ள குறைபாடுகளை எல்லாம் தீர்க்க வேண்டுமென்றால் அதற்காக தனி டைரக்டர் போடவேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்துவருகிறது. இதற்கு முன்னால் இருந்த அமைச்சர் அவர்கள் கூட கொள்கையளவில் ஒப்புக்கொண் டார்கள். இன்னும் இந்திய மருத்துவத் துறைக்குத் தனி டைரக்டர் போடப்படவில்லை. தனி டைரக்டர் போடப்படுமானால் அந்தத் துறையும் நல்ல முறையில் முன்னுக்கு வர வழியாக இருக்கும். தற்போது டைரக்டர்களாக இருப்பவர்கள் எல்லாம் ஆங்கில மருத்துவ முறையில் பயின்றவர்களாக இருக்கும் காரணத்தால் அவர்கள் இந்திய மருத்துவ முறையில் அவ்வளவு அக்கறை காட்டவில்லை என்ற குறைபாடும், குற்றச்சாட்டும் இருக்கிறது. அதில் இருக்கும் குறைபாடுகளை எல்லாம் அகற்ற தனி டைரக்டர் போடுவது பயனுடையதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல்லை மருத்துவக் கல்லூரி பற்றி ஒரு சிறிது கூற விரும்புகிறேன். திருநெல்வேலியில் உள்ள மருத்துவக் கல்லூரி இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பாக டி.எம்.ஓ. கண்ட்ரோலிலிருந்து டி.எம்.ஏ. கண்ட்ரோலுக்கு வந்திருக்கிறது. மெடிகல் காலேஜ் கட்ட பணம் ஒதுக்கி கட்டடம் கட்டப்பட்டிருக்கிறதே தவிர, கல்லூரியைச் சேர்ந்த 900 படுக்கை கள் கொண்ட மருத்துவ மனை கட்டுகின்ற திட்டம் இருந்தது தற்போது அனுமதிக்கப்படாத நிலை இருக்கிறது. ஏற்கனவே உள்ள மருத்துவ மனையில் மற்றொரு மாடி கட்டி அதை நிறைவேற்றிவிடலாம் என்ற கருத்து இருப்பதாகத் தெரிகிறது. அவ்வாறு செய்யாமல் மருத்துவக் கல்லூரிக்கென்று தனியாக ஒரு மருத்துவ மனையைக் கட்டித் தரவேண்டு மென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியை மகப்பேறு நிலையமாகஆக்கிவிட்டால்,அங்கு மகப்பேறுநிலையம் இல்லையென்ற குறைபாடும் நீங்கிவிடும். இன்றைக்கு இருக்கும் மருத்துவ மனையில் வெளியிலிருந்து வியாதியஸ்தர்களைப் பார்க்கவரும் உறவினர்கள் தங்க கூட இடம் இல்லாத நிலைமை இருக்கிறது. அவ்வாறு வெளியில் இருந்து வருகிறவர்கள் தங்குவதற்கு ஒரு 'ஷெட்' அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்த மருத்துவ மனையைப் பற்றி மற்றும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அது டி.எம்.ஓ. கண்ட்ரோலிலிருந்து டி.எம்.ஏ. கண்ட்ரோலுக்கு வந்திருக் கிறது. அங்கிருந்து லேபரடரி சாதனங்கள் எல்லாம் டி.எம்.ஓ. அவர்க ளால் தூத்துக்குடிக்குத் தூக்கிச் சென்றுவிட்டார்கள். அதைப் பற்றி நான் கூடக் கேட்ட நேரத்தில் "எங்களுக்குச் சொந்தமான சாதனங்களை நாங்கள் தூக்கிக்கொண்டு போகிறோம்" என்று சொன்னார்கள். இதனால் அந்தப் பகுதி மக்களுக்கு இப்படிப்பட்ட சாதனங்களினால் கிடைக்கக் கூடிய நன்மை கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, அதை மீண்டும் விரைவில் உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரியைப் பொருத்தவரை அனுபவமுள்ள லெக்சரர் களைப் போட வேண்டுமென்று மூன்று ஆண்டுகளாகக் கேட்டு வந்திருக் கிறார்கள். தற்போது அதிக அனுபவம் இல்லாத லெக்சரர்ஸ் இருக்கி றார்கள். அவர்களை மாற்றி அனுபவம் உள்ள லெக்சரர்களைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



1969 மார்ச் 21] [திரு. அ. லெ. சுப்பிரமணியம்]

நாசரத்தில், துணைத் தலைவர் அவர்களுடைய பகுதியில் ஒரு மருத்துவமனை இருக்கிறது. அங்கு நீண்ட நாட்களாக டாக்டர்கள் இல்லை யென்ற குறை இருக்கிறது. அந்தக் குறையைப் போக்க வேண்டும். கங்கைகொண்டான் 15,000 மக்கள் ஜனத்தொகை உள்ள பகுதி. அங்கு ஒரு மருத்துவமனை கட்டித் தரவேண்டும்.

பொதுச் சுகாதாரத்தைத் பற்றி ஒரு வார்த்தை. திருநெல்வேலி யில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க வேண்டுமென்ற திட்டம் இருந்தது. அது நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாகக் குறிப்புகள் காட்டுகின்றன. அதற்காக லைஃப் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷ னிடமிருந்து பணத்தைக் கடனாகப் பெறலாமா என்ற கொள்கை முன்னால் இருந்தது. அது எந்த அளவுக்கு முடிவு செய்யப்பட்டிருக் கிறது என்று தெரியவில்லை. பாளையங்கோட்டையில் குடிதண்ணீர் வசதியைப் பெருக்குகின்ற வகையில் இந்த அரசாங்கம் வந்த பிறகு பெருமாள்புரத்தில் 12 லட்சம் ரூபாய்க்கு சப்-டாங்க் ஒன்றைக் கட்டித் தந்திருக்கிறார்கள். அதற்காகத் தொகுதி மக்கள் சார்பில் இந்த அரசாங்கத்திற்குப் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். தச்சநல்லூரில் விரைவில் குடிதண்ணீர்த் திட்டத்தை உருவாக்கித் தந்தால் மிக நலமாக இருக்குமென்ற கருத்தையும் தெரி வித்துக் கொள்கிறேன். இந்திய மருத்துவக் கல்லூரி மாணவர்களுடைய குறைகளை இந்த ஆண்டிலாவது தீர்த்துவைக்கும் வகையில் அமைச்சரவர் கள் நல்லதொரு முடிவை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அறிஞர் அண்ணா அவர்கள் இந்திய மருத்துவக் கல்லூரி பற்றிக் காட்டிவந்த நல்ல அக்கறையை இந்த அமைச்சரவையும் காட்டும் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. நா. சௌந்தரபாண்டியன்** : துணைத் தலைவர் அவர்களே மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மருத்துவப் பொதுச் சுகாதார மானியங்களின் மீது எங்களுடைய கட்சி யின் சார்பாகக் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நாட்டில் மக்கள் தொகை எவ்வளவு வேகமாக வளர்ந்து வருகிறதோ அவ்வளவு வேகமாக மருத்துவம், பொதுச் சுகாதாரத் துறை முன்னேறவில்லை என்பதை முதலிலே சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். குறிப்பாக, கிராமப்புறங்களில் மருத்துவ வசதியும், பொதுச் சுகாதார வசதிகளும் நல்ல முறையில் செய்யப்படவில்லை, செய்வதற்கு அரசாங்கம் முயற்சி ஒன்றும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, மருத்துவர்கள் கிராமாந்திரங்களில் பணி புரிய விரும்ப வில்லை. அதன் காரணமாக மருத்துவ நிலையங்களுக்கு மருத்துவர்கள் போட முடியவில்லை என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசியவர்கள் மருத்துவப் படிப்பு முடிந்த பிறகு மூன்றாண்டு கள் கண்டிப்பாக கிராமங்களில் பணி புரிய வேண்டுமென்று அரசாங்கம் கட்டளை இடவேண்டுமென்று சொன்னார்கள். ஐந்தாண்டு காலம் பெரிய ஆஸ்பத்திரிகளில் வேலை செய்துவிட்டு அதற்குப் பிறகுதான் கிராமாந்தி ரங்களில் கண்டிப்பாக மூன்றாண்டுகள் வேலை செய்யவேண்டும் என்ற விதியை அரசாங்கம் வகுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல் மருத்துவப் பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லையென்று அறிக்கையில் காணப்படுகிறது. அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவேண்டுமென்றால் எல்லா மாவட்டத் தலைநகரங்களி லும், வட்டத் தலைநகரங்களிலும் பல் பிரிவு ஒன்று தனியாக இயங் குவதற்கு அரசாங்கம் வழி செய்யவேண்டும். குறிப்பாக மனிதனுக்கு

[திரு. நா. சௌந்தரபாண்டியன்] [1969 மார்ச் 21

அதிகமான வியாதி இந்தப் பல் மூலமாகத்தான் வருகிறது. அதை
அரசாங்கம் உணர்ந்து தீவிர நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவப் படிப்புக்கு மாணவர்களை இன்னும் அதிகமாகச்
சேர்க்க வேண்டும். மாணவர்களைச் சேர்க்கும் விஷயத்தில் தற்பொழுது
தேர்ந்தெடுக்கப்படும் முறையை மாற்றி நல்ல முறையில் தேர்ந்
தெடுக்க வேண்டும். மதிப்பெண்களை அடிப்படையாகக் கொண்டு
மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு
அந்த மாணவர்களின் ஊர், பெயர், முகவரி, பெற்ற மதிப்பெண்கள்
ஆகியவற்றை எல்லாம் அரசிதழ் மூலமாகப் பொதுமக்களுக்கு அறிவிக்க
வேண்டும்.

செவிலியர் பயிற்சியில் (நர்சஸ் டிரெயினிங்) கூடுதல் கவனம்
செலுத்த வேண்டும். கிராமாந்திரங்களில் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்
களில் பணியாற்ற நர்சுகள் வேண்டுமென்று கேட்டால் கிடைப்பதில்லை.
ஆகவே, அதற்குக் கூடுதல் பயிற்சி கொடுக்க வேண்டும். ஊராட்சி
ஒன்றியங்கள் நடத்திவரும் மருந்தகங்களை—முன்பு மாவட்டக் கழகங்கள்
நடத்திவந்த மருந்தகங்களை—படிப்படியாக அரசே ஏற்று நடத்த
திட்டத்தைத் தீட்டவேண்டும். என்னுடைய ஊராட்சி ஒன்றியத்தை
எடுத்துக்கொண்டால் இரண்டு மருந்தகங்கள் வள்ளியூரிலும், பணகுடி
யிலும் இருக்கின்றன.

இதற்காக மொத்தம் ரூ. 45,000-ல் இருந்து ரூ. 50,000 வரை
செலவாகிக்கொண்டு வருகிறது. இதை ஒன்றிய பொது நிதியிலிருந்து
செலவு செய்யவேண்டியிருப்பதால் மற்ற வேலைகளைச் செய்ய முடிய
வில்லை. ஆகவே அரசாங்கம் படிப்படியாக இந்த மருந்தகங்களை
மேற்கொள்ள வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து சென்ட்ரல்
மெடிக்கல் ஸ்டோர்ஸுக்கு மருந்துகள் தேவை என்று, 1966–67-ல்
பட்டியல் அனுப்பி பணம் அனுப்பியும் கூட இந்த மருந்துகள்
இன்னும் அனுப்பப்படவில்லை. இப்படி அந்த மருந்துகள் அனுப்பப்படா
மல் இருந்தால் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மருத்துவ மனைகளில்
எப்படி வைத்திய வசதி செய்து கொடுக்க முடியும்? ஆகவே இதில்
தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அடுத்தபடியாக, சித்த மருத்துவம் பற்றி இங்கு பலர் எடுத்துக் கூறி
னார்கள். அவர்களின் படிப்பு இப்போது முடியும் தருவாயில் இருக்
கிறது. அவர்களுக்கு நாம் வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டிய நிலையும்
இருக்கிறது. ஆகவே அவர்களின் தகுதி, சம்பள உயர்வு இவற்றை
நல்லமுறையில் நிர்ணயிக்க வேண்டும். அடுத்தபடியாக, ஊராட்சி
ஒன்றியங்களில், கிட்டத்தட்ட 85,000, 90,000 மக்கள் வசிக்கக் கூடிய
இடத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்பது போதாது. ஆகவே
50,000 ஜனத்தொகை உள்ள இடங்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார
நிலையம் ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டு அதற்கான உதவியைச் செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாய் சேய் நல விடுதிகள்
ஊராட்சி ஒன்றியங்களில், 10,000 ஜனத்தொகைக்கு ஒன்று என்ற
விகிதத்தில் ஏற்படுத்தப்படுகின்றன. சில விடுதிகள் ஊராட்சி ஒன்றியங்
களின் மேற்பார்வையில் இருக்கின்றன. சில சுகாதார இலாகா நிர்வா
கத்தின் கீழும் செயல்படுகிறது. ஆக, இரண்டு நிர்வாகங்களின்கீழ்
இவை இயங்கவேண்டியிருக்கிறது. ஆகவே, அங்கு பணியாற்றுகிறவர்களை
இடத்திற்குத் தக்கபடி மாற்றியமைக்க ஊராட்சி ஒன்றியத்தினால் முடிவ
தில்லை. ஆகவே, இந்த தாய் சேய் நல விடுதிகளை ஊராட்சி ஒன்றியங்
களிடம் கொடுத்து அதற்காக வேண்டிய நிதி வசதியும் செய்து
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறுவர்களுக்கு
ஏற்படுகிற கக்குவான், தொண்டைக்கட்டு நோய், இழுப்பு வாதம்
போன்றவைகளுக்கு அரசாங்கம் ஓரளவிற்கு நடவடிக்கைகள் எடுத்தா
லும் அது மந்த நிலையில்தான் இருக்கிறது. ஆகவே சிறுவர் சமுதா
யத்தினிடையே இதற்கான தடுப்பு ஊசிகள் போட்டு தடுத்து நிறுத்தி



1969 மார்ச் 21] [திரு நா. சௌந்தரபாண்டியன்]

னால்தான் இன்றைய சிறுவர் சமுதாயம் நல்லதொரு சமுதாயமாக பிற்காலத்தில் விளங்க முடியும். கிராமப்புறங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தேவை. அதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். கடலோரப் பகுதி களில் இருக்கக்கூடிய மக்களுக்கு நல்ல குடிதண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே அவர்களுக்கும் நல்ல பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதியைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. என். ராஜாங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நானைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இந்த மானியத்தின்மீது எவ்வளவு குறைகள் இந்த மன்றத்தில் பேசப்பட்டதோ அவைகள் எல்லாம் நாளடைவிலே மறைந்துபோய் இன்று குறையே இல்லாத அளவிற்கு இருப்பதை உறுப்பினர்கள் பேசுவதிலிருந்து இந்த மன்றம் அறியும். நான் அதிகமாக போற்றிப் புகழ்ந்து பேசுவதாக நினைக்க வேண்டாம். இரண்டு மூன்று ஆண்டு காலமாக மருத்துவத் துறைக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஒரு தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. முன்பு பொதுமக்கள் டாக்டர்களைக் கண்டு பயந்து அவர்களை அணுக முடியாத ஒரு நிலைமை இருந்துவந்தது. ஆனால் இன்று பொதுமக்கள் டாக்டர் களிடம் தங்கள் வியாதி பற்றிக் கூறும்போது அவர்கள் உன்னிப்பாக கவனம் செலுத்தி ஆவன செய்துவருவதை யாரும் மறுக்கமாட்டார் கள் என்று நினைக்கிறேன். அதற்கு முக்கிய காரணம் என்னவென்று நான் கருதுகிறேன் என்றால், பொதுவாக இந்த இலாகாவை பெண்களே பராமரித்து வருகிறார்கள் என்பதுதான். தாய் உள்ளம் படைத்த ஒரு பெண்மணி அந்த இலாகாவின் தலைவராக இருந்து வருவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதோ என்று கருத இடம் இருக்கிறது. பொதுவாக இந்த இலாகாவில் எவ்வளவு மருத்துவ மனைகள் ஏற்பட்டாலும் அவ்வளவு டாக்டர்கள் போடவேண்டிய நிலைமை இருந்தும் ஒரு சில இடங்களில் டாக்டர்கள் போடப்படாமல் இருப்பது அந்த இலாகாவின் தவறாகாது. அது அரசாங்கத்தின் நிதி நிலைமையைப் பொறுத்து இருக்கிறது. ஆகவே, டாக்டர்கள் இல்லையே என்று குறை சொல்வதை விட்டுவிட்டு நிதி நிலைமையை உயர்த்துவதற்கு உறுப்பினர்கள் ஆவன சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள தலைமை மருத்துவ நிலையம் நல்லமுறையில் நடந்துவருகிறது என்பதை இரண்டு மூன்று ஆண்டுகளாக அங்கு வருகிற அதிகாரிகளும், பொது மக்களும் சொல்லிக் கொண்டிருப்பதை நாடு அறியும். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட சிதம்பரத்திலுள்ள மருத்துவ மனையில் டாக்டர்கள் போட்டாலும் பொது மக்கள் வந்து வைத்திய வசதி செய்துகொள்ள இடவசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அதை அரசாங்கம் கவனித்து அங்கு மேலும் நல்ல கட்டடங்களைக் கட்டிக் கொடுத்தால் அங்கு மக்கள் வந்து மருத்துவ வசதி பெற்றுச் செல்ல உதவியாக இருக்கும்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நான்கு முனிசிபல் நகரங்கள் இருந்தது இன்று ஏழாக ஆகியிருக்கின்றன. அங்கு ஒரு நகரத்தி லாவது வடிகால் திட்டம் சரியானபடி நிறைவேற்றப்படவில்லை. அதற்குக் காரணம் முனிசிபாலிட்டிகளின் நிதி நிலைமை அப்படி இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் சுகாதார வசதிகளைப் பெருக்க சில கோடிக்கணக் கான ரூபாய்களை ஒதுக்கி இந்தத் திட்டத்தை அரசாங்கமே ஏற்றெடுத்து நடத்தவேண்டும் என்ற என் ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குள்ளம்சாவடி, குறிஞ்சிப்பாடி இவற்றில் குறிஞ்சிப்பாடி 12,000 ஜனத்தொகை கொண்ட ஒரு பஞ்சாயத்து. பக்கத்தில் சேஷசாயி சிமெண்ட் தொழிற்சாலை இருக்கிறது. பல்வேறு தொழிற்சாலைகள் அதைச் சுற்றிலும் உள்ளன. அங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து சேருகிறார்கள். அங்கு ஒருகாலத்தில் ஏற்படுத்திய ரூரல் டிஸ்பென்சரி

தான் இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. மருத்துவம் நல்ல முறையில் செய்து கொள்வதற்காகப் போகவேண்டுமானால் மேற்கே போனால் விருத்தாசலம், கிழக்கே போனால் கடலூர் என்று இருபது மைல் தூரத்தில் தான் ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஆகவே, அங்குள்ள அந்த டிஸ்பென்சரியை விரிவுபடுத்தி ஒரு ஆண் டாக்டர், ஒரு பெண் டாக்டர் என்று எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்களைப் போட்டு அதைப் பத்து படுக்கைகளாவது கொண்ட ஒரு ஆஸ்பத்திரியாக அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குள்ளம்சாவடியை எடுத்துக்கொண்டால் அது கடற்கரையோரத்தில் இருக்கிறது. அவர்கள் ஆஸ்பத்திரிக்குச் செல்லவேண்டுமென்றால் கடலூருக்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே குள்ளம்சாவடியில் ஒரு ஆஸ்பத்திரி அமைத்துக் கொடுத்தால் அங்குள்ள கடற்கரைப் பகுதி மக்களுக்கு அது மிகவும் உதவியாக இருக்கும்.

அடுத்தபடியாக, எம்.பி.பி.எஸ். படிக்கும் மாணவர்கள் தேர்வில் வெற்றி பெறாவிட்டால் நான்கு தடவைகள் அவர்கள் தேர்வுக்குப் போகலாம் என்றிருந்தது. அந்த விதியை, நான்கு தடவை என்றிருப்பதை, இப்போது குறைத்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, மீண்டும் நான்கு தடவை மாணவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கவேண்டும். இல்லாவிடில் பலவிடங்களில் இருந்து வந்து படித்தும் அது பயன் இல்லாமல் போய்விடும். ஆகவே விடுபட்ட மாணவர்களுக்காவது இந்தச் சலுகையை, நான்கு தடவை எழுதலாம் என்ற சலுகையை அளிக்கவேண்டும் என்ற என் ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 1950-52-ல் லலிதா-பத்மினி நடனங்கள் நடத்தி வசூல் செய்து காடாம்புலியூர் பிர்க்காவை அபிவிருத்தி செய்ய திட்டமிட்டார்கள். நடன நிகழ்ச்சிகளால் ஒரு பிர்க்காவை அபிவிருத்தி செய்ய திட்டமிட்டது தமிழ்நாட்டில் அந்த ஒரு பிர்க்காவைத் தான். எதை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கருதி முதலாவதாக அந்தத் திட்டம் இடப்பட்டதோ அந்த பிர்க்கா இன்னும் அப்படியே இருக்கிறது. அங்கு குடிக்க குடிதண்ணீர் இல்லை. மழை பெய்யும் போது தண்ணீரைக் குட்டைகளில் தேக்கி வைத்து உபயோகப்படுத்துவதினால் அங்குள்ள மக்களுக்கு நரம்புச் சிலந்தி வியாதி ஏற்பட்டு பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். ஆகவே வறட்சிக்காக ஒதுக்கப்படும் நிதியிலிருந்தாவது, அரசாங்கத்திடம் நிதியில்லை என்று சொன்னாலும்; நிதி ஒதுக்கி அந்தப் பகுதி மக்களுக்குக் குடிதண்ணீர் கிடைப்பதற்கான திட்டத்தை ஏற்படுத்தி வேண்டிய வசதிகளை செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பதினைந்து வருடங்களாகச் செய்யாததை நாங்கள் செய்தோம் என்ற புகழைத் தேடிக் கொள்ளவேண்டும்.

முன்பு யமன்தான் உயிரைக் காப்பாற்றிக் கொடுக்கவேண்டுமென்பார்கள். இப்போது அந்த நிலைமாறி நம்மை எதிர்த்து யமன், யமனை எதிர்த்து டாக்டர் என்ற அளவில் இன்று மருத்துவம் நடைபெற்று வருகிறது. மருத்துவத் துறையும் சுகாதாரத் துறையும் இன்று மிக நல்ல முறையில் செயல்படுகின்றன. ஆகவே, இந்தத் துறைகள் இன்னும் நல்ல முறையில் மக்களுக்கு சேவை செய்ய நாம் ஊக்கம் அளிக்கவேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஒரு பக்கத்தில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இருப்பவர்களை நல்ல விதத்தில் வாழ வைக்க இந்த இலாகாக்கள் உதவுகின்றன. ஆகவே, உறுப்பினர்கள் இந்தத் துறைகளை குறைகூறாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் சொன்ன கருத்துக்களுக்கு அமைச்சர் அவர்கள் ஆதரவு தருவார்கள் என்று நம்பி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–00 * திரு. ஆ. கு. சுப்பையா: மன்ற உதவித் தலைவரவர்களே, இந்த மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன் வருகிறேன். இன்றையத்தினம் மருத்துவ. பொதுச்சுகாதார மானியம்





சம்பந்தமாக வாதிக்கின்றபோது, முக்கியமான மனித சமுதாயத்தை ஆரோக்கியப்படுத்துவதற்குரிய ஒரு துறையைக் குறித்து வாதித்துக் கொண்டிருக்கிறோம். அவ்வாறு வாதிக்கின்றபொழுது, இந்தத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய 22½ கோடி ரூபாய் போதுமானது அல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். எவ்வாறு இந்த நாட்டிற்குக் கல்வி வளர்ச்சிக்காக அதிகத் தொகை ஒதுக்குகின்றோமோ, அதே சம அளவிற்கு சுகாதாரத்திற்கு ஒதுக்குவதுதான் மக்களுக்கு ஏற்படுகின்ற பிணியைப் போக்க ஒரு அருமையான வழியேற்படுவதற்கு முடியுமென்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கிராமப் புறங்களில் வைத்திய வசதிகள் மிகமிகக் குறைவாக இருந்து கொண்டிருக்கின்றன. கிராமப் புறங்களில் இருக்கின்ற கிராம மருத்துவ நிலையங்களை அபிவிருத்தி செய்வதன் மூலமாக கிராமப் புற வைத்திய நிலையங்களிலே பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதன் மூலமாகத்தான் கிராமத்திலேயிருந்து நகரத்தை நோக்கி மக்கள் நடையாக நடந்து வண்ணமிருக்கிறார்கள். அதிகப்படியான தொகைகளைச் செலவுசெய்து நஷ்டத்தை ஏற்படுத்தாத ஒரு நிலையை ஏற்படுத்தமுடியும். அதுபோன்றே, தாலுக்கா மருத்துவ மனைகளை எடுத்துக் கொண்டால் மிகக் குறைவான படுக்கை வசதிகள் உள்ளவையாக இருக்கின்றன. அதிலும் அபிவிருத்தி செய்து கொடுக்கப்படவேண்டிய ஆஸ்பத்திரிகள் ஏராளமாக இருக்கின்றன. அந்தந்த தாலுக்கா மருத்துவ மனைகளில் குறைந்த பட்சம் 250, 300 படுக்கைகள் கொண்ட ஏற்பாடுகளைச் செய்தாகவேண்டும். பழைய காலங்களில் கட்டப்பட்ட கட்டிடங்கள் இன்னும் இருந்துகொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் மாற்றியமைத்து நவீன முறையிலே, சுகாதார முறையிலே கட்டிடங்களை அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். அவ்வாறு செய்கின்றபொழுது குறிப்பாக என்னுடைய தொகுதியில், மன்னார்குடியை எடுத்துக்கொண்டால் எந்தவிதமான அபிவிருத்தியும் அங்கு கிடையாது. அங்கிருக்கும் படுக்கைகளும் ரிப்பேராகி சீர் செய்து கொடுக்க முடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. வியாதியஸ்தர்கள் தரையில் படுத்துக் கொண்டிருக்கும் நிலையிருக்கிறது. கூத்தாநல்லூர் ஒரு சிறு நகரமாக உருவாகிக்கொண்டிருக்கிறது. அந்த நகரத்தில், அங்கிருக்கும் மருத்துவ மனையைச் சுற்றி காம்பவுண்டு சுவர் இல்லாத காரணத்தினால் ஆபத்தான நிலையில், ஆடுமாடுகள், அல்லது நாய் போன்ற மிருகங்கள் உள்ளே நுழைந்து வியாதியஸ்தர்களுக்குத் தொந்தரவு கொடுக்கும் நிலையில் இருக்கிறது. அதற்கு காம்பவுண்ட் சுவர் அமைத்துக் கொடுப்பது மட்டுமல்லாமல், கட்டிடங்களையும் நல்லமுறையில் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாவட்ட தலைமை மருத்துவ மனைகளை எடுத்துக்கொண்டால், தஞ்சை மாவட்டத்திற்கு நாகப்பட்டினத்தில் தலைமை மருத்துவ மனையாக வைத்திருக்கிறார்கள், அங்கே பழைய காலத்துக் கட்டிடங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. மழை பெய்தால் அங்கிருக்கக்கூடிய வியாதியஸ்தர்கள் மழையிலே நனைந்து போகும் நிலையிருக்கிறது. அவைகளையும் புதுப்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதேபோன்று இராசா மிராசுதார் மருத்துவ மனையில் அங்கு குழந்தைகளுக்கும், பிரசவத்திற்குமான வைத்தியங்கள் செய்யப்படுகிறது. 500 படுக்கைகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆனால் 1,500, 2,000 வியாதியஸ்தர்களை அங்கு படுக்க வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் அவர்களைப் பார்க்க வருகின்றவர்கள் என்ற பெயரில் 2,000 பேர்கள் கூடிவிடுகிறார்கள். தாங்க முடியாத கஷ்டம் ஏற்படுகிறது. அதையெல்லாம் குறைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நிர்வாகத்திலே செய்ய வேண்டும். நான் இவ்வாறு சொல்லுகின்றபொழுது, என்னுடைய அபிப்பிராயம், சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடக்கின்றன. பணியாற்றக்கூடிய மருத்துவர்களுக்கும் அல்லது நர்ஸ்களுக்கு, மற்றுமுள்ள

[திரு. ஆ. கு. சுப்பையா] [1969 மார்ச் 21

இதர சிப்பந்திகளுக்குப் பாதுகாப்பில்லாத ஒரு நிலை ஏற்படுகிறது. இரவு நேரங்களில் சமூக விரோதிகள் உள்ளே சென்று அனாவசியமான தகராறுகள் செய்கிறார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அல்லது அந்த ஆபத்திலிருந்து அவர்களைப் பாதுகாக்க எந்த விதமான ஏற்பாடு களும் இல்லாமல் இருந்துகொண்டிருக்கின்றன. தலைமை மருத்துவ நிலையங்களிலேயாவது அவுட் போஸ்ட் போலீஸ் நியமனம் செய்ய வேண்டுமென்ற யோசனையை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு, மருந்தாளுநர்கள் கோரிக்கையைப்பற்றி காலஞ்சென்ற முதலமைச்சரவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள். அப்பொழுது இரண்டு தரப்பாருக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதன் பிரகாரம், மருந்தாளுநர்களுக்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகள், வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதன் காரணமாக இன்றையத்தினம் அவர்களுக்கு ஒரு பெரிய குறையாக இருந்து கொண்டிருக்கிறது. அவர்களின் அடிப்படைச் சம்பளத்தை 100 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள், குடியிருப்பதற்கு வீடு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள், வாரந்தோறும் ஒரு நாள் லீவ் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். பதவி உயர்வு வேண்டுமென்று கோருகிறார்கள். இம்மாதிரியான நியாயமான கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அரசாங்கத் தரப்பிலேயிருந்து ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது நாளது வரை அமலுக்கு வரவில்லை. 4,500 பேர்கள் நம்முடைய ராஜ்யத்திலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளைச் சீக்கிரமாகப் பரிசீலனை செய்து அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்று மருந்து தயாரிக்க லைசென்ஸ்கள் வழங்கப்படுகிறது. மருந்து தயாரிப்பாளர்கள் கலப்படம் செய்வது அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. அந்தக் கலப்படம் இல்லாத அளவுக்குச் செய்ய வேண்டுமென்றால் இந்த மருந்துக் கட்டுப்பாடு அதிகாரிகள், அவர்கள் 600 லைசென்ஸ்தாரர்களுக்கு ஒருவர் வீதம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலும் பெரிய குறைபாடுகள் இருக்கின்றன. அதைக் குறைத்து 2[illegible]0 250 மருந்து தயாரிக்கும் நிலையங்கட்கு ஒரு மருந்துக் கட்டுப்பாடு அதிகாரி வீதம் செய்வதன் மூலமாக இன்னும் அதிகமாகக் கண்காணிக்கலாம். கலப்படத்தையும் தடுத்து நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்யமுடியும்.

நரம்புச் சிலந்தி என்ற வியாதி நிறைய இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் வல்லத்தின் பக்கத்து கிராமங்களில் அந்த நரம்புச் சிலந்தி வியாதி மிகப்பெரிய அளவுக்குப் பாதித்திருக்கிறது. அதை ஒழிக்க ஏற்பாடுகள் செய்தாகவேண்டும்.

மற்றொன்று இந்த அறிக்கையிலே பார்க்கும்பொழுது, தோல் வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள் நம் ராஜ்யத்திலே இருப்பதாகவும், திருச்சி மாவட்டத்திலேயிருந்து இரண்டு பேர்களைக் கொண்டு வந்து ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் இரண்டாண்டுகளாக நடத்திய ஆராய்ச்சியில் பலன் என்ன ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்வது நலமாக இருக்க முடியும்.

ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலமாக கிராமப்புற மக்களுக்கு வேண்டிய பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனுக்கு ஒன்று வீதம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை இன்றையத்தினம் அதிகரித்தாகவேண்டும். அதோடு மட்டுமல்ல, ஆரம்ப சுகாதார நிலையங்களில் வேலை செய்பவர்கள் சகல [illegible] மற்றும் [illegible] வசதிகளை [illegible]



1969 மார்ச் 21] ]திரு. ஆ. கு. சுப்பையா]

மூலமாக ஓரளவு கிராமப்புற மக்களுக்கு வேண்டிய சுகாதார வசதியைச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய முடியும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தாய் சேய் நல விடுதிகள் 10,000 பேர்களுக்கு ஒன்று என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பது சரியாக இருக்க முடியாது. ஜனப் பெருக்கத்திற்குத் தகுந்தவாறு 5,000 பேர்களுக்கு ஒரு தாய் சேய் நல விடுதி வீதம் ஏற்படுத்துவது நியாயமாகவும், உதவியாகவும் இருக்க முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குழந்தைகள் வைத்தியம். எங்கு பார்த்தாலும் குழந்தைகளுக்கு அதிகமான வியாதிகள் வந்துகொண்டிருக்கின்றன. அதை முறையாகப் பார்த்துக் கவனிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதன் மூலமாகத்தான் நல்லதொரு நிலையை ஏற்படுத்த முடியும். குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதிலே அதிக அக்கறை செலுத்திக்கொண்டிருக்கிறோம். அப்படிச் செலுத்திக் கொண்டிருக்கும்பொழுது, என்னுடைய கருத்து என்னவென்றால், என் சினிமாக்களில் செய்திப்படங்களின் மூலமாக காண்பிக்கப்படக்கூடாது என்பதுதான். அம்மாதிரியான படங்களைத் தயார் செய்து, குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்ளாததாலும், அதிகமாகக் குழந்தைகள் இருப்பதாலும் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது, குடும்பங்களில் வாழ்க்கை நடத்த முடியாமல் எந்த அளவுக்குக் கஷ்டப்படுகிறோம் என்ற நிலையை சினிமாப் படங்களின் மூலமாகக் காட்டுவது மிக அவசியமாக இருக்க முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மத்திய அரசாங்கத்தில் பேசப்படுவதாகக் கேள்விப்படுகிறோம். கருச்சிதைவுச் சட்டத்தைக் கொண்டுவரலாமென்று மத்திய சர்க்கார் யோசிப்பதாகத் தெரிகிறது. அப்படியிருந்தால் நம்முடைய மாநிலத்தையும் மத்திய அரசு கேட்டார்களா ? அதற்கு நம்முடைய மாநிலத்தில் என்ன பதில் சொன்னார்கள், என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லுவது உதவிகரமாக இருக்குமென்று வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இந்த ரீதியில் இன்று மக்களுக்கு ஏற்படுகின்ற பிணியைப் போக்கும் முறையில் நல்லமுறையிலே இந்தத் துறையை ஒழுங்குபடுத்தி சுறுசுறுப்போடு இயங்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதோடுகூட கடைசியாக ஒரு வார்த்தை சொல்லி முடித்துக்கொள்ளுகின்றேன்.

ஒரு மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒருவர் ஒரே பிரதேசத்திலே ஒரு மாவட்டத்திலே அல்லது ஒரு மருத்துவ மனையிலே இருக்கக்கூடாது என்ற விதியை சகல பேர்களின் விஷயத்திலும் கையாள வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் சில பேர்கள் 10 வருஷங்கள், 8 வருஷங்கள், 12 வருஷங்கள் என்று ஒரேயிடத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள் அவர்களையெல்லாம் மாற்றுவதற்கு வேண்டிய அல்லது 3 வருஷங்களுக்கு என்கின்ற முறையை அவர்கள் பெரியவர்களாகயிருந்தாலும் சிறியவர்களாயிருந்தாலும், சகலமான பேர்களுக்கு அந்த விதியைக் கடைப்பிடித்து, தயவு தாட்சண்யம் இன்றி மாற்ற ஏற்பாடு செய்யவேண்டும். நல்ல பழக்கப்பட்டவர்கள் அல்லது ஓய்வுபெறக்கூடிய நிலைமையிலே இருக்கக்கூடிய டாக்டர்களை கிராமப் புறங்களுக்கு அனுப்பி கிராம மக்களிடம் பழகி கிராம மக்களுக்கு வைத்தியம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். மாணவர்களை அனுப்பினால் அவர்கள் போகமாட்டார்கள். மாணவர்கள் மேன்மேலும் நாகரீகத்தை விரும்பிக்கொண்டிருப்பவர்கள். நகரத்திலிருக்கத்தான் விரும்புவார்கள். ஆகவே, வயதானவர்கள், ஓய்வு பெறுபவர்கள் சென்றால் தான் கிராமத்திலே ஏழை எளிய மக்களோடு பழகுவதற்கும் அவர்களுக்குரிய நோய்களைத் தீர்ப்பதற்கும் வசதியாக இருக்கும். அந்த முறையிலே செயல்பட வேண்டும். 10 வருடம் ஒரே இடத்திலே இருக்கக்கூடியவர்களுக்கெல்லாம் சலுகை அளிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

• திரு. கே. சகாதேவக் கண்டர்: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது சுகாதார மானியத்தின்மீது என் கட்சிக்காரரால் கொண்டு வரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன். பொதுவாகவே தமிழ்நாட்டிலே உள்ள மருத்துவ மனைகளில் இப்பொழுது போதுமான மருந்து சப்ளை செய்யப்படவில்லையென்ற புகார் இருந்து வருகிறது. நோயாளிகள் வைத்தியத்திற்குச் சென்றால் அங்கே சீட்டு எழுதி கொடுக்கப்பட்டு வெளியிலே சென்று மருந்து வாங்கி வருவீர்களானால் உங்களுடைய நோயைப் போக்குகிறேன் என்று கூறுவதாகப் புகார்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அப்படி குறைகள் மேற்கொண்டு இல்லாத வகையில் ஒவ்வொரு மருத்துவ நிலையத்திற்கும் போதுமான மருந்துகளை சப்ளை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, நம்முடைய மாநிலத்திலே உள்ள மருத்துவ நிலையங்களில், சில கிராமப் பகுதியிலே உள்ள மருத்துவ நிலையங்களில் போதுமான படுக்கை வசதிகளில்லை. என்னுடைய தொகுதியில் சுமார் 30 மைலுக்கு ஓர் ஆஸ்பத்திரி இருக்கிறது. திருவண்ணாமலையில் தான் பெரிய ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்கே தான் படுக்கை வசதிகள் இருக்கின்றன. குறைந்தது 30, 35 மைல் தூரத்திலுள்ளவர்கள் கூட அங்கே வரவேண்டிய நிலைமை இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே தானிப்பட்டி கிராமத்திலே சர்க்கார் ஆஸ்பத்திரி இருக்கிறது. அந்த ஆஸ்பத்திரியிலே படுக்கை வசதிகள் இல்லை. அந்த மருத்துவ மனையில் 5 படுக்கைகளாவது ஏற்படுத்தி வசதி செய்து கொடுக்க இந்த அரசாங்கம் முன் வரவேண்டுமென்று நான் மிகமிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, திருவண்ணாமலையிலே டவுன் பிளானிங் ஆபீஸர் பல ஊழல்கள் புரிவதாகவும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அந்த ஊழலை விசாரிக்கவேண்டுமென்றும் அவர்கள் உடனடியாக மாற்றப்பட வேண்டுமென்றும் அந்த நகரசபையிலே எல்லா கட்சிக்காரர்களும் ஒன்றுபட்டு ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி இந்த சர்க்காருக்கு அனுப்பி 6 மாதங்கள் ஆகின்றன. 6 மாதங்கள் ஆகியும் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, அல்லது விசாரணையோ, அல்லது மாற்றமோ செய்யப்படவில்லை. இதனால் அந்த நகரசபை உறுப்பினர்கள் அனைவரும் மிகவும் வேதனைப்படுவதோடு அங்கே நடைபெறக்கூடிய வேலைகள் எல்லாம் தடுக்கப்பட்டிருக்கின்றன என்று ஞாபகப்படுத்துகிறேன். அரசு விசாரணை செய்து நீதி வழங்கவேண்டுமென்றும், அந்த அதிகாரி அங்கிருந்து மாற்றப்படவேண்டுமென்றும் மிகமிகப்பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தண்டராம்பட்டு யூனியனிலே வாணபுரம் என்ற கிராமத்தில் பிரைமரி ஹெல்த் சென்டர், ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று 1967-ம் ஆண்டிலே கூட திட்டம் தீட்டப்பட்டது. அந்த கட்டடத்திலே போதுமான மின்சார வசதிகள், தண்ணீர் வசதிகள், கக்கூஸ் வசதிகள், இதர வசதிகள் எல்லாம் வேண்டுமென்று 1967-ம் ஆண்டே இந்த அரசின் அனுமதி வழங்கவேண்டுமென்று ஜில்லா ஹெல்த் ஆபீஸர் அவர்களால் அனுப்பப்பட்டது. 2 ஆண்டு காலமாக நானே இரண்டு மூன்று முறை செக்ரட்டரியைப் பார்த்து உடனடியாக அனுமதி வழங்குங்கள் என்றும் கூட அனுமதி வழங்கப்படவில்லை. அதற்குப் பிறகு வந்தவைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு அங்கங்கே பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட பாரபட்சங்கள் காட்டப்படாமல் இந்த ஆண்டிலேயே, ஏப்ரல் மாதத்திலேயே துவக்கி, மருந்துகளையும் அளிக்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலே சுமார் 6 இலட்சம் குஷ்டரோகிகள் இருக்கிறார்கள். அவர்களில் சுமார் 2 இலட்சம் பேர்கள் தான் வைத்திய வசதிகள் பெறுகிறார்கள். 4 இலட்சம் பேர்கள் வைத்திய வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். குஷ்டரோக நிவாரண பயிற்சி நிலையங்கள்கூட. இந்த ஆண்டில் மூடப்பட்டதாகத் தெரிகிறது. இதனாலே சுமார் 177 பேர்கள்



வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்த 4 இலட்சம் பேர்களுக்காக மீண்டும் குஷ்டரோக நிவாரண நிலையங்களை ஆரம்பித்து இந்த 177 பேர்களுக்கு வேலை தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு கே. பி. எஸ். மணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மானியக் கோரிக்கையின்மீது நான் சார்ந்திருக்கிற இந்திய குடியரசுக் கட்சியின் சார்பில் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மானியத்தைப்பற்றி பேசும் போது பண்டைக்காலத்திலே பெரிய புலவர்கள் சொன்ன ஒரு பழமொழி ஞாபகத்திற்கு வருகிறது. 'உடலை வளர்த்தால் இந்த உயிரை வளர்க்கலாம்' என்பது அது. இந்த நாடு வாழவேண்டும், நாம் வாழவேண்டும், இந்த அரசு வாழவேண்டுமென்பதற்கு அடிப்படையான தத்துவம் மனிதன் உடல் நன்றாக இருக்கவேண்டும். அந்த தத்துவத்தைக் கொண்டு தான் இந்த மருத்துவ மானியமும் இன்று இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாது. அங்கே பழைய காலத்தினுடைய கொள்கைகளையே, திட்டங்களையே நாம் வைத்துக்கொண்டிருப்பது தவறான ஒரு காரியம். காலப்போக்கிலே இந்த திட்டங்களிலே சில மாறுதல்களை ஏற்படுத்தவேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்து. குறிப்பாக, முன்னால் கட்டப்பட்ட ஜில்லா தாலுக்கா ஆஸ்பத்திரிகளைப் பார்த்தால் வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்டது எப்படி இருந்ததோ அப்படியேதான் இருந்து வருகிறது. ஏதோ புதிதாக கட்டப்பட்ட விடுதிகளிலே அந்த மாற்றம் இருக்கிறது. ஆகவே. அந்த கட்டிடங்களை மாற்றி அமைத்து ஒரு வார்டுக்கும் மற்றொரு வார்டுக்கும் போக்குவரத்துக்கு தொடர்புள்ள முறையிலே அந்த விடுதிகளை மாற்றி அமைக்கவேண்டும்.

தஞ்சையில் இருக்கிற ராஜா மிராசுதார் ஆஸ்பத்திரியை எடுத்துக் கொண்டால், மிகப்பெரிய ஆஸ்பத்திரி, சிறந்த நிபுணர்கள் அங்கே இருக்கிறார்கள். ஆனால் அங்கே இருக்கிற நிலை மோசமாக இருக்கிறது. அங்கு இருக்கிற டாக்டர்களைக் குறை சொல்லவில்லை. ஆனால், அதற்குக் காரணமான பாரம்பரியமான முறைகளைக் குறை சொல்லுகிறேன். அங்கு இருக்கிற கண்ட்ராக்டர்கள் பெரிய மனிதர்களாக இருக்கிறார்கள். அவர்கள் டாக்டர்களை மிரட்டுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த ஆஸ்பத்திரிக்கு 4 வாயில்கள் இருக்கின்றன. அந்த 4 வாயில்களையும் மூடிவிட்டு ஒரே ஒரு வாயில் வழியாகச் செல்வதற்குரிய ஏற்பாட்டைச் செய்தால்தான் அந்த ராஜா மிராசுதார் ஆஸ்பத்திரி வசதி அளிக்கக்கூடியதாய் இருக்கும். அந்த ஆஸ்பத்திரியில் இருக்கிற டாக்டர்கள் கொடுத்த தகவலைத்தான் இப்போது உங்களிடத்திலே சொல்கிறேன்.

தாலுகா ஹெட்குவார்ட்டர்ஸிலே இருக்கிற ஆஸ்பத்திரி ஒவ்வொன்றையும் மாற்றி அமைக்கவேண்டும். சென்னை போன்ற மிகப் பெரிய நகரங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளிலே அங்கேயே குடும்பங்களை நடத்துகிறார்கள். ஆஸ்பத்திரிக்கு வருகின்றவர்கள் திரும்பிப் போவதில்லை. சர்க்கார் எவ்வளவு பணம் கொடுத்தும் அதை முறையாக செயல்படுத்தாததால்தான் அவைகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. அநாவசியமானவர்கள், வேலை அற்றவர்கள் இருப்பார்களானால் அவர்களை அங்கு இருக்கவிடாமல் தடை செய்வது மிக அவசியம். அப்பொழுது தான் முறையாக ஒரு நல்ல காரியத்தை நாம் செய்தவர்கள் ஆவோம்.

இன்னும் குறிப்பாக ஆஸ்பத்திரியிலே இருக்கிற மற்றவர்கள், எங்களைப் போன்ற எம்.எல்.ஏ.க்கள், எம்.பிக்கள் போன்றவர்கள் தலையீடு இல்லாமல் இருந்தாலே அதிகாரிகள் சிறப்பாக நடத்தமுடியும் என்று இந்த சபையிலே சொல்ல விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது)

இன்னொன்றைச் சொன்னால் தீண்டாமையைச் சொல்கிறானே என்று நினைப்பார்கள். தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமானால் மருத்துவத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிகமான சலுகை தரவேண்டும். அப்படி சலுகையைப்பெற்று நாங்கள் படித்தாலும், படித்து பட்டம் பெற்ற பிறகு

ஈ. எஸ்.ஐ., பிரைமரி ஹெல்த் சென்டர்போன்ற ஆஸ்பத்திரிகளில் தான் எங்களுடைய சகோதரர்கள் போடப்படுகிறார்கள். அது வருத்தத்தை அளிக்கக்கூடிய காரியம். தாழ்த்தப்பட்ட டாக்டர்கள் இருக்கிற பட்டியலைப் பார்த்தால் அவர்கள் சேரிக்குத்தான் அனுப்பப்படுகிறார்கள். ஆனால், நடக்கிற நிலை என்ன? தாழ்த்தப்பட்ட சகோதரன், எம்.பி.பி.எஸ். பட்டம் படித்தவன், ஆஸ்பத்திரியில் மருந்து கொடுத்தால் அது மறுக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. அவன் கொடுக்கிற 'லிக்விட் மெடிசினை' வாங்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். இன்றும் நடக்கிறது. படித்து பட்டம் பெற்றாலும்.... ........

* மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : துணைத் தலைவர் அவர்களே கனம் உறுப்பினர் அவர்கள் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த டாக்டர்கள் தண்ணீர் கலந்த மருந்து கொடுத்தால், 'லிக்விட் மெடிசின்ஸ்' கொடுத்தால் வாங்க மறுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது எந்த மருத்துவ மனையில், எந்த டாக்டர் கொடுத்த மருந்தை என்று அவர்கள் குறிப்பாகச் சொன்னாரானால் நான் தகுந்த நடவடிக்கை எடுக்கமுடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : உண்மையிலேயே வருத்தப்படுகிறேன் அதைச் சொல்வதற்கு. சேலம் ஜில்லாவில் சாமல்பட்டி என்ற கிராமத்தில் கடந்த வாரம் நடந்தது. மதிப்பிற்குரிய மருத்துவ அதிகாரி அவர் களிடம் சொல்லித்தான், அவர்கள் இதற்கான வழிவகை செய்து வைத்தார்கள். நான் நடக்காததைத ஒன்றும் கற்பனையாகச் சொல்ல வில்லை. மேலும் தாழ்த்தப்பட்ட சகோதரிகள் நர்ஸ் பயிற்சி பெற்று பாஸ் செய்திருந்தும், தேர்வு ஆகி இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகியும் கூட, அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை.

(திரு. சு. துரைசாமி—தலைமை)

தாழ்த்தப்பட்ட சகோதர, சகோதரிகள் படித்து பாஸ் செய்த பிறகும், எத்தனை ஆண்டுகள் காலம் வேலையில்லாமல், வாழ்க்கை நடத்த முடியாமல் இருப்பது? ஆகவே அவர்களுக்கு தனிச் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு மருந்துகள் வருவதில்லை. யூனியன் பணம் கொடுத்தாலும், குறிப்பிட்ட காலத்தில் மருந்துகள் வருவதில்லை. இங்கு இருக்கிற மத்திய சர்க்கார் நடத்துகின்ற மருந்து தயாரிக்கும் நிலையத்திலிருந்து நாம் கேட்ட மருந்துகளை விட்டுவிட்டு, வேறு மருந்துகளை அனுப்புகிறார்கள். மருந்துகள் ஸ்டாக் இல்லை என்று சொல்கிறார்கள்.

கம்பவுண்டர்களை எம்.பி.பி.எஸ். டாக்டர் கிரேடில் போட்டு, டாக்டர்கள் மாதிரி பணியாற்றச்சொல்லலாம் என்ற யோசனை இருப்பதாகச் சொல்லப் படுகிறது. அது மிகவும் வருந்தத்தக்க விஷயம். அதற்கு எம்.பி.பி.எஸ். கோர்ஸையே எடுத்துவிடலாம். அப்படிச் செய்யமுடியாது, செய்யவும் கூடாது. அப்படிச் செய்தால் தவறான பாதையில் செல்வதற்கு அவர்களை ஆளாக்குவதாக இருக்கும் என்ற என்னுடைய தாழ்மையான கருத்தைக் கூறிக்கொள்கிறேன்.

மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில், யூனியனில் 10,000 ஜனத் தொகைக்கு ஒரு மருத்துவ மனை என்ற ஏற்பாடு இருந்துகொண்டிருக் கிறது. கிட்டத்தட்ட 20, 25 மைல் ரேடியஸ் உள்ள ஒரு பஞ்சாயத்து யூனியன் எல்லையில், 10,000 ஜனத்தொகைக்கு ஒரு மருத்துவ மனை என்றால் 4, 5 மைல் ரேடியஸுக்கு ஒரு மருத்துவ மனை வருகிறது. அப்படி இருக்கும்பொழுது அந்த மருத்துவமனையில் வேலை செய்யும் ஊழியர்கள், குறிப்பாக பெண் ஊழியர்கள், 4 5 மைல்கள் நடந்து போகவேண்டிய நிலை இருக்கிறது. மழை காலத்தில் 4, 5 மைல் நடந்து வெளியே போய்வரவேண்டிய நிலை இருக்கிறது. அதுவும் பெண்





ஊழியர்கள் எப்படி நடக்கமுடியும்? ஆகவே, 5.000 பேர்களுக்கு ஒரு மருத்துவமனை என்ற அளவில் ஏற்பாடு செய்தால், கிராமத்திலுள்ள மக்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும்.

மேலும், மதுபானம் என்ற குடிக்கு எந்தத் துறையிலோ அனுமதி கொடுக்கிறார்கள். இந்த மதுபானம் நாட்டில் பலருடைய வாழ்வைக் கெடுத்துக்கொண்டிருக்கிறது. மெடிகல் டிபார்ட்மெண்டில் தான் இதை கண்காணித்து இதற்கான அனுமதியை ரத்து செய்வதற்கான நட வடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீனவர்களுக்குக் குடி தண்ணீர் வசதி. இதை ஒரு பேஸிக் பிரின்ஸிபலாக வைத்து, அடிப்படையாக வைத்து, மாநிலத்திலுள்ள கடலோரப் பகுதியிலுள்ள மீனவர்களுக்கு குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டும். குடிதண்ணீர் திட்டங்களை விரைவிலே நிறைவேற்றித் தரவேண்டும். எங்கள் வட்டாரத்தில் மீனவர்களுக்கு வேறு ஒரு வசதி யும் குறிப்பாகச் செய்துகொடுக்கவில்லை. ஓரளவுக்கு படிப்பு வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். குடிதண்ணீர் வசதி அவர்களுக்கு அவசியம் செய்துகொடுக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியனில் அவர்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியவில்லை. ஆகவே, அரசாங்கம் தயவுசெய்து இந்த ஒரு துறையில், அதாவது அவர்கள் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடைக்கும்படி குடிநீர் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய ஸ்டான்லி ஹாஸ்பிடலில் ஒரு ஹாஸ்டல் கட்டி, இரண்டு வருஷங்களுக்கு மேலாகிவிட்டது. அது இன்னும் திறக்கப்படவில்லை. ஒரு ரூமில் 7 பிள்ளைகள் இருக்கிறார்கள். ஏன் இன்னும் திறக்கப்படாமல் என்று கேட்பதற்கு யாரும் நாதி இல்லாமல் இருக்கிறது. இம்மாதிரி பல இடங்களில் இருக்கிறது. இதை உடனடியாக கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாமிலி பிளானிங்கை நான் எதிர்ப்பவன் அல்ல. உண்மையிலேயே பாமிலி பிளானிங் என்றால் தனிப்பட்ட முறையில் தாழ்த்தப்பட்ட மக்களுக் காகச் செய்வதாகத் தான் நினைக்கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டிலே பூராவும் எடுத்துக்கொண்டால், 10 லட்சம் பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருந்தால், அதில் 9 லட்சம் பேர்கள் தாழ்த்தப்பட்ட மக்களாகத் தான் இருப்பார்கள். நான் அதைத் தான் முதலிலேயே சொன்னேன். கிறிஸ்தவர்கள் செய்துகொள்வதில்லை, ஏதோ ஒன்றிரண்டு பேர்கள் செய்து கொண்டுவிட்டு, தாங்கள் செய்து கொண்டுவிட்டோம் என்று சொல்கிறார்கள். அதே மாதிரி முஸ்லிம்களும் செய்துகொள்வதில்லை. ஏதோ ஒன்றிரண்டு பேர்கள் செய்துகொண்டுவிட்டு, தாங்கள் செய்துகொண்டுவிட்டோம் என்று சொல்கிறார்கள். இந்த சமுதாயத்தைக் கட்டிக்காக்கின்ற மடாதிபதிகளாக இருப்பவர்கள் இதில் நடவடிக்கை எடுப்பதில்லை. இந்து ரிலிஜனே அழிந்துபோய்விடும்படியான அப்படிப்பட்ட ஒரு நிலைமை எங்கள் ஜில்லா வில் வளர்ந்துகொண்டிருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால் கட்டாயமாக டார்ஜெட் என்று சொல்லாமல், மத்திய சர்க்கார் ஏதோ கேட்கிறது என்று சொல்லி, இத்தனை தான் செய்து தீரவேண்டும் என்று நிர்ப்பந்திக்காமல் இருக்கவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள் கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்படுகிற அலாட்மெண்ட்ஸ் எங்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்திருக்கிறது. இம்மாதிரி செய்து கொண்டே போனால். 20 ஆண்டுகளுக்குள் இந்த சமுதாயமே அழிந்து போய்விடும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது)

*திரு. அ. கருப்பையா:—மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து, எனது கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். இந்த

[திரு. ஆ. கருப்பையா] [1969 மார்ச் 21

மானியக் கோரிக்கையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்ல பல வசதிகள் செய்து கொடுக்ககூடிய ஒரு நிலையில் கிராமப்புறங்களி லெல்லாம் ஏறத்தாழ 20,000 ஜனத்தொகை கொண்ட கிராமங்களில் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதைக் கண்டு நான் மிகவும் பாராட்டுகிறேன்.

கங்கைகொண்டான் தொகுதியைப் பொறுத்த அளவில் அங்கே ஒரே ஒரு பிரைமரி ஹெல்த் செண்டர் மட்டும் தான் இருக்கிறது. மானூர் யூனியனில் சுமார் முப்பது மைல் தூரத்தில் உள்ள உப்பரங்கோட்டையில் மட்டும் தான் ஒரு சுகாதார நிலையம் இருக்கிறது. ஆகவே, ஏழை மக்கள் வைத்திய வசதி செய்து கொள்ளவேண்டுமென்றால், திருநெல் வேலிக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. திருநெல்வேலிக்குப் போகவேண்டுமென்றால் ஏறத்தாழ 12, 13 மைல்கள் தாண்டித் தான் அவர்கள் போய் வைத்திய வசதி செய்துகொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, கங்கைகொண்டான் ஏறத்தாழ 10, 15 பஞ்சாயத்துக்கள் உள்ளடங்கிய நடுநிலையான இடத்தில் இருக்கிற காரணத்தினால் அங்கே ஒரு நல்ல சுகாதார நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியான கங்கைகொண்டானில் குடிதண்ணீர் வசதி மிகவும் சிக்கலான நிலையில் இருந்துகொண்டிருக் கிறது. வருஷத்தில் ஜூன், ஜூலை மாதங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிற காரணத்தினால், எல்லா கிணறுகளும் வறண்டுபோய்விடுகின்றன. குடிதண்ணீருக்காக மக்கள் பெரிதும் கஷ்டப்படக்கூடிய நிலை இருக்கிறது. நமது அரசாங்கத்தில் கோவில்பட்டிக்கு தாமிரபரணி நதியிலிருந்து தண்ணீர் கொண்டுபோக ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் மூலம் கங்கைகொண்டானுக்கும் தண்ணீர் கொடுப்பதாக இருந்தது. பஞ்சாயத்தில் தீர்மானம் போட்டு இதற்கு உதவித்தொகை கொடுப்பதாக முடிவு செய்திருக்கிறோம். இந்தத் திட்டத்தை உடனடியாக நிறை வேற்றிக் கொடுத்து, கயத்தார், கங்கைகொண்டான், கோவில்பட்டி ஆகிய பற்றாக்குறை பகுதிகளுக்கு நாம் குடிதண்ணீர் வழங்க நல்ல முடிவு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றும் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். திருநெல்வேலியில் நமது மருத்துவ நிலையத்தில் அவசரக் கேஸ்களை கவனிப்பதற்கு ஒரு செக்ஷன் வைத்திருந்தும்கூட, அங்கே அவசர கேஸ்களைக் கொண்டுபோனால், உடனடியாகக் கவனிப்பதில்லை. காலையிலே ரொம்பவும் சீரியஸாக இருக்கும் ஒரு கேஸைக் கொண்டு போனால், டி. எம். ஓ. பெர்மிஷன் வந்து, 10, 11 மணிக்குத் தான் அதற்குப் பின்னாலே முதல் உதவி செய்யக்கூடிய ஒரு நிலைதான் இருக்கிறது. யமன் அதுவரையில் காத்துக்கொண்டிருப்பதில்லை. ஏழை எளிய மக்கள் இந்த நிலையில் நடத்தப்பட்டால், அவர்கள் அங்கே போய் வைத்திய வசதி செய்துகொள்ளாத நிலைதான் இருக்கிறது. ஆகவே, கிராமப புறங்களில் சுகாதார நிலையங்களை ஏற்படுத்தி, விஸ்தரிப்புச் செய்தால் மிகவும் நலமாக இருக்கும். தாய்மார்களுக்கு இருக்கக்கூடிய ஒரு கஷ்டமான நிலையைக்கூட போக்க முடியும். கங்கைகொண்டான் சுற்றி யுள்ள கிராமங்கள் முழுவதும் போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்கள். ஒரு பிரசவ கேஸ் இருந்தால் மிகவும் கஷ்டமான நிலை ஏற்படுகிறது. ஏனென்றால், திருநெல்வேலிக்குப் போய் அங்கிருந்து ஒரு டாக்டரை அழைத்துக்கொண்டுவந்து, திரும்பவும் திருநெல்வேலிக்குப் போய் பிரசவ கேஸை கவனிக்கக்கூடிய நிலையில், பெரும் சங்கடமான சூழ்நிலைகள் உருவாகிவிடுகின்றன. நமது அரசில் சுகாதார அமைச்சராக பொறுப்பேற்றுள்ள தாய்குலத்தின் தலைவியாக உள்ள அமைச்சர் அவர்கள் தாய்மார்களுடைய இன்னல்களைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு, 15,000 ஜனத்தொகை கொண்ட கிராமங்களில் மகப்பேறு நிலையங்களை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று பணிவோடு



1969 மார்ச் 21] [திரு. ஆ. கருப்பையா]

கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம். பிற்பகல் 1-30.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்–தலைமை]

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, at the outset, on behalf of the Swatantra party I want to state, that even though we have given cut motions, we approve and complement the manner in which this Government is conducting the affairs of this department. We are happy that this department has now been given to a lady. That only shows the extent to which this Government believes that women have a major role to play in shaping the future of the Health Department and looking after the health needs of the State.

I want to give a few observations which I hope and trust this Ministry will give careful attention and try to implement, at least a few of them. Let us take the Director of Medical Education and Director of Medical Services. Whether we should have an intergrated service or separate service is a question that has been engaging the attention of thinkers all over the country. My submission is that it is better the two are integrated. I have been saying so both in the Legislative Council and here in this House. I reiterate that these two departments must be once again amalgamated so that the Hon. Minister will have a single departmental head and so that she will also know the number of doctors produced and the number distributed. At present one department deals with production of doctors, and another department is concerned with distribution. Whatever may be the mysterious reason for the splitting up (let us not go into those reasons as this is not the forum for it), I request this Government to reconsider the action of the previous Ministry and integrate these two departments once again.

I have gone carefully into the amount spent on medical education and the expenditure on health. When I am mentioning the amount spent on medical education, it includes the amount spent on running of teaching hospitals like General Hospital, etc. The figures are as follows :—

| Year. | Amount spent on medical education. | Amount spent on health services, etc. |
|---|---|---|
| 1967–68 | 6·09 | 4·82 |
| 1968–69 | 6·62 | 5·3 |
| 1969–70 | 7·66 | 6·17 |

I come to the other important point with regard to the manner in which some hospitals are conducted. The modern facilities available in different hospitals in the mofussil is low. X-ray facility is not available in Villupuram, Kallakurichi and Tiruvannamalai. They have to travel nearly 45 miles and come to Cuddalore.

Running a hospital without X-ray is like running a dispensary without an injection needle or a syringe. I request the Hon. Minister for Finance, who is present here, to be liberal so far as the Medical and Health departments are concerned and allot more funds so that mofussil hospitals may be provided with modern facilities like X-ray equipment, etc., I am not unaware of his difficulties. Still, I hope he will not grudge some more money for this department.

There should be better supervision of work by doctors. Working conditions in mofussil areas needs to be improved. Better facilities should be provided for good working of primary health centres. It is also important that the doctor should be given a decent place to live in. I am not saying that the doctor should be given more importance first than the public. But all the same it is necessary that the quarters provided for his stay should be decent. Most of the places are primitive. We are providing primary health centres in panchayat union areas. Then the doctors may be able to deal with the real situation.

I am now coming to the most important point of allowing private practice to doctors. I firmly believe that the policy of allowing private practice for Government doctors should be put an end to. It has been stopped in our neighbouring State of Andhra Pradesh. Once it is stopped then the present tendency not to move out of city, by the Doctors, would stop. At present many Doctors try to get transfer to city and then try to remain here itself so that they could get more private practice in city. Once the private practice is not allowed, the Doctors would concentrate more on the working of the hospital and it will be toning up the administration in hospitals also. Then Doctors will be able to give greater facilities to the people coming to hospital.



I now come to retirement age. I feel that Government should lay down clear cut policy. Put it at 55 and stick to it. Let there be no changes afterwards. Then it will cause relief to the youngsters also, to get their chances of promotion.

I want to say a few words about leprosy work. I have spoken on the same in last year's budget also. It is not a small issue. I am glad the P.W.D. Minister had come now. He must have been familiar with my song in regard to leprosy work. He must have heard it many times. My suggestion is that money spent on leprosy relief is sum well spent. If you save one man from leprosy, you are preventing ten people from contracting that disease. I hope and trust that some more extra sum will be spent on leprosy relief work. With regard to facilities for hospitalisation of leprosy patients, there is the Tirumani settlement. Most of them do not have beds for in-patients. I hope Government will consider this point and do the needful.

Coming to the medical college admissions, this problem can easily be solved. We have to allot seats for Harijans, Scheduled Castes and then Backward Classes. By all means, allot seats for these people. But with regard to the rest, I want to say one thing very clearly. Place trust in the University. Take the marks awarded by the University into consideration. Don't have this adding of 3 or 4 per cent marks by the Committee. I know the difficulty of the present Ministry. I have no complaint against them. But let them not allow other persons to exploit the situation and bring discredit to the Government. Place trust in the marks awarded by the University. The best thing is to do away with this *viva voce* test, because so many things may take place without the knowledge of the Ministry.

Then I come to jaundice and cholera. My submission is that jaundice is a disease which has not been controlled. But cholera has been controlled. Many people do not know that jaundice stays in the house for a long time and without the knowledge of those affected by it, it is passed on to other persons.

(மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்பொழுதே மணி 1-45 ஆகி விட்டது. இன்னும் சிலர் பேசவேண்டியிருக்கிறது. பின்னர் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். உறுப்பினர் அதிக நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார். சீக்கிரம் முடித்துக்கொள்ளவேண்டும்.

DR. H. V. HANDE : Within two minutes I will conclude my speech. The moment you ring the bell next time, I will definitely sit down. My suggestion will be useful to the Ministry and they can implement it.

Cholera is a ghastly disease which we can see. It has been controlled. But jaundice is not controlled. It is an insidious disease which may pass on to others. A paper may be prepared on preventive measures against jaundice, and if it is published in the newspapers, it will be very good.

[Dr. H. V. Hande] [1969 மார்ச் 21

Separation of medical administration and medical education has taken place and I have given my comments on it. But after separation there has not been the follow-up.

There is the problem of dental Doctors, the problem of drug inspectors and the problem of pharmacists. I hope the Government will consider the petitions that have been submitted on their behalf to the previous Health Minister and give a suitable reply.

*திரு. ஏ. அ. சுப்பராஜா : பேரவைத் தலைவர் அவர்களே. இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒருசில வார்த்தைகள் பேசலாம் என்று கருதுகிறேன். டவுன் பிளானிங் ஸ்கீமைப் பற்றி வெகுவாக எங்கு பார்த்தாலும் பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. சுமார் 10, 20 வருஷத்திற்கு முன்னால் இதைக் கொண்டுவந்தபோது சங்கடம் எழாமல் இருந்தது. இன்றைக்கு இதனால் ஏழை எளிய மக்கள்தான் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஸ்கீமை நோட்டிபை செய்தபோது பொதுமக்களின் சுகாதாரத்திற்கு நல்ல மாதிரியாகச் செய்ய வேண்டும் என்ற நிலைமை இருந்தது. முன்னால் இவ்வளவு இடம், பின்னால் இவ்வளவு இடம், பக்கவாட்டில இவ்வளவு இடம் விடவேண்டுமென்று ஸ்கீம் போட்டு, டவுன் பிளானிங் ஆக்டில் இது இதற்கு இத்தனை ஸ்கொயர் ஃபீட் இருக்க வேண்டும் என்று விதி செய்யப்பட்டிருக்கிறது. அப்படி இடம் விடாத மக்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியாது. ஒருவனுக்கு நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றால், அந்த இடத்தை நான்கு பேருக்கும் பிரிக்கும் போது எப்படி இடம் கிடைக்கும்? ஆகவே, அந்த இடத்தை பக்கத்தில் இருக்கும் பெரிய பணக்காரருக்கோ, மற்றவருக்கோ கொடுத்துவிட வேண்டுமென்று சட்டம் இருக்கிறது.

என்னுடைய தொகுதியான ராஜபாளையத்தை எடுத்துக்கொண்டால், 6 ஸ்கீம்கள் போட்டார்கள். அதில் மூன்று சாங்ஷன் ஆகிவிட்டது. மீதி 3 ஸ்கீம்கள் "நாட் சாங்ஷன்ட்" என்று Notify ஆனவுடன் அந்த ஸ்கீம் அங்கிருந்து ஆர். டி. ஓ. மூலமாக கலெக்டருக்குச் செல்ல வேண்டும். பிறகு ரெவின்யூ போர்டுக்குச் செல்ல வேண்டும். பின்பு ரெவின்யூ போர்டிலிருந்து, டைரக்டர் ஆப் டவுன் பிளானிங் அவர்களுக்கு செல்லவேண்டும். அதற்குப்பின் அரசாங்க அனுமதி பெற்று சாங்ஷன் ஆகவேண்டிய நிலை இருக்கிறது. ஒரு ஸ்கீம் சம்பந்தமாக கலெக்டரிடத்தில் கேட்டேன.

The Collector of Ramanathapuram at Madurai has informed in his letter, dated 19th June 1964 that the entire file, which was sent on 25th March 1960 was destroyed.

அங்கே அப்படி முடிந்துவிட்டது. இன்றைக்குக் கிட்டத்தட்ட 1944-லிருந்து 1969 வரை சாங்ஷன் ஆகவில்லை. அதற்கு சட்டப்படி நீங்கள் நடவடிக்கை எடுக்க முடியுமா என்றால் முடியாது. டவுன் பிளானிங் டைரக்டர் அவர்களிடமிருந்து,



1969 மார்ச் 21] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

District Municipalities Act, 1920. It is also stated by Government that only after Town Planning Scheme is sanctioned and comes into force that proceedings can be initiated by the responsible authority of the scheme to demolish or remove the unauthorised building or work in pursuance of section 19 of the Town Planning Act and to prosecute the party concerned under section 44-B of that Act. ஒன்றும் செய்யமுடியாது. நாமே இதைக் கொடுத்திருக்கிறோம். சாங்ஷன் ஆகவில்லையென்றால், ஏழைகள் வாழ முடியாது. அதற்குமேல் நோட்டீஸ் அனுப்பினாலும் பிரயோசனம் இல்லை. பெரிய பணக்காரர்கள்தான் ரோடு மேலேயே வீடு கட்டிக்கொள்கிறார்கள். நாம் போய் கேட்டால்

The scheme is not sanctioned and so scheme rules will not apply, என்று சொல்கிறார்கள். அதற்காக இந்த ஆக்டை எடுத்துவிட வேண்டுமென்று சொல்லவில்லை இப்போது இருக்கக்கூடிய பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்பதைப் பார்க்கவேண்டும். சாதாரண ஏழை எளியவர்கள் கேட்கிறார்கள். அவர்களால் கோர்ட்டுக்குப் போக முடியாத நிலை ஏற்படுகிறது. பெரும் பணக்காரர்களால்தான் அதைச் செய்ய முடிகிறது. 20 வருஷ காலத்திற்குமுன் ரோடுக்காக, பள்ளிக்கூடங்களுக்காக, ஆஸ்பத்திரிக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் எல்லாம் வீடுகளாகக் கட்டப்பட்டுவிட்டன. இனிமேல் இம்ப்ரூவ் ஆகும் இடங்களில் டவுன் பிளானிங் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும். இந்த ஆக்டையும் ஸ்கீமையும் நன்றாகக் கொண்டு வரவில்லையென்றால் மோசமான நிலைமை ஏற்படும் என்பதை சொல்லிக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டும். சேர்மன் சேம்பர்ஸிலிருந்தும் நாங்கள்கூட கோரிக்கைகள் கொடுத்திருக்கிறோம் இப்பொழுது பில்ட்ப் ஆன இடங்களையெல்லாம் இடித்துவிட்டு, முன்னாலே பத்து அடி, பின்னாலே பத்து அடி, பக்கவாட்டத்தில் நான்கு அடி விடு என்று சொல்ல முடியாது. பொதுஜன சுகாதாரத்திற்கும், நவநாகரிகத்திற்கும் இது சிறந்ததாக இருக்கும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது எங்களுக்கு ஆறுதல் கூறத்தக்க விதத்தில் பதில் அமைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. கே. மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, 1969-70-ம் ஆண்டுக்கான மருத்துவம்-பொதுச் சுகாதாரம் மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தற்போதுள்ள அரசாங்க மருத்துவமனைகளிலும், ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் மருந்து தட்டுப்பாடு அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. பொதுமக்கள் மருத்துவமனையை நாடிச் செல்லும்போது, அங்கிருக்கிற டாக்டர்கள் "உங்களுடைய நோய்க்குத் தகுந்த மருந்து ஆஸ்பத்திரியில் இல்லை, வெளியில் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று தான் சொல்லுகிறார்கள். மருந்து, மருத்துவமனைகளில் இல்லையென்று சொல்லும் நிலை பரவலாக இருந்து வருகிறது. பொதுமக்கள் குறிப்பாக அரசாங்க மருத்துவமனையை நாடி வருவதற்குக் காரணம், இலவச சிகிச்சை பெறலாம், பணம் கொடுத்து மருந்து வாங்காமல் உடல் நோய்களைத் தீர்க்கலாம் என்ற நிலையில்தான் வருகிறார்கள். பணம் கொடுத்து மருந்துகளை வாங்கக்கூடிய நிலைமையில் இருந்தால் அவர்கள் ஏன் அரசாங்க மருத்துவமனைகளுக்கு வரப்போகிறார்கள்? மருந்து மருத்துவமனைகளில் இல்லையென்ற தட்டுப்பாட்டை மருத்துவ அதிகாரிகள் நீக்க வேண்டும். ஒவ்வொரு மருத்துவமனையிலும் மருந்து இருக்கிறதா, இல்லையா, என்னென்ன மருந்துகள் தேவை, எவ்வளவு தேவை என்பதைக் கணக்கிட்டு, மாதத்திற்கு ஒருமுறையாவது பார்வையிட்டு, தேவையான மருந்துகளை உடனுக்குடன் சப்ளை செய்யவேண்டும். இப்படிச் செய்தால் நல்ல மருந்துகள் தேவையான நேரத்தில் கிடைத்து. அதன் காரணமாக பொதுமக்கள் மிகவும் பயன் அடைவார்கள் என்பதைச் சொல்லிக்

[திரு. எ. கே. மூர்த்தி] [1969 மார்ச் 21

அடுத்தாற்போல, மருத்துவமனைகளிலும், ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் நல்ல வசதியான கட்டிடங்கள் இல்லை. இப்பொழுதுள்ள கட்டிடங்கள் எல்லாம் இடிந்த நிலையில்தான் இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், தாலுகாவைப் பொறுத்த வரையில் ஆண்டிமடம் என்கிற ஊருக்கு அருகில் கவரப் பாளையம் என்ற ஊரில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கிறது. அந்த இடம் முன்னால் மாட்டுத் தொழுவமாகப் பயன்பட்டு வந்தது. ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் இல்லாமல் அந்த இடத்தி லேயே வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கு கட்டிடம் ஒன்றைக் கட்டிக் கொடுத்து, ஆரம்பச் சுகாதார நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றி, கட்டிட வசதிகளைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல மருத்துவக் கல்லூரியை விட்டு வெளியே வருகிற டாக்டர்களை உடனடியாக கிராமங்களுக்கு அனுப்பக் கூடாது. ஏழை எளிய மக்களுடைய நோய்களை நல்ல முறையில் கவனித்து சிகிச்சை அளிக்க நல்ல அனுபவம் உள்ள டாக்டர்களை கிராமப் பகுதிகளுக்குப் போடவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல கடந்த பதினைந்து ஆண்டு காலமாக விஸ்தரிக்கப் படாமல் இருந்த எங்களது ஜெயங்கொண்டான் மருத்துவமனையை விஸ்தரிக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதற்காக நான் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முப்பது மைல் சுற்றளவுக்கு மருத்துவமனைக் கட்டிடம் இல்லாமல், படுக்கை வசதி இல்லாமல் இருக்கிறது. 50 படுக்கை வசதி களையும், ஒரு பெண் டாக்டரோடு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல் ஆரம்ப சுகாதார நிலையங்களை ஒன்று அல்லது இரண்டு ஒவ்வொரு யூனியனிலும் ஏற்படுத்தி, தக்க மருத்துவ வசதி களையும் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்கள் மூன்று ஆண்டுக் காலத்தில் குடிதண்ணீர் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்துவிடுவதாக நல்ல எண்ணத்தோடு குறிப்பிட்டிருக்கிற கருத்துக்களை வரவேற்று— ஜெயங்கொண்டான் பகுதி மக்கள் குடிதண்ணீருக்கு மிகவும் கஷ்டப் படுகிறார்கள். பழைய சட்டமன்ற உறுப்பினரும் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார். ஒன்றும் நடக்கவில்லை. உடனடியாக இதில் கவனம் செலுத்தினால் வருகிற வழியில் 15 பஞ்சாயத்துகளுக்கு மேல் பயன் அடையும் என்று சொல்லிக்கொண்டு......

(மணி அடிக்கப்பட்டது)

**திரு. மு. கந்தசாமி படையாச்சி :** பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதார அமைச்சர் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையின்மீது எங்கள் கட்சி கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தின்பேரில் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக பத்தாயிரம் ஜனத்தொகை கொண்ட பகுதியில் மருத்துவ மனை வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. என்னுடைய உளுந்தூர்பேட்டை மேஜர் பஞ்சாயத்தில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகை இருக்கிறது. 1962-லேயே அங்கே இருந்த மருத்துவ மனையை அரசாங்க மருத்துவமனையாக எடுத்திருக்கிறார்கள். எடுத் திருந்தபோதிலும்கூட அந்த மருத்துவமனையில் எந்தவித முன்னேற்றமும் செய்யவில்லை. மெட்ராஸ் போகிற சாலை, கன்னியாகுமரி போகிற சாலை, சேலம் போகிற சாலை—இவை எல்லாம் விருத்தாசலம் மார்க்கமாக அந்தப் பக்கம் போவதால் பஸ் போக்குவரத்து, லாரி போக்குவரத்து



1969 மார்ச் 21] [திரு. மு. கந்தசாமி படையாச்சி]

அதிகம் உள்ள இடமாக இருக்கிறது. அடிக்கடி ஆக்சிடெண்டுகள்கூட நடக்கின்றன. அந்தச் சமயங்களில் அடிபட்டவர்களை அங்கே கொண்டு போய் சிகிச்சை செய்ய வசதி இல்லை. உடனடியாக முதல் உதவியாவது கொடுத்து கடலூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகலாம் என்றாலும் வசதி இல்லை. 5 லட்சம் சாங்ஷன் செய்தார்கள் 62-லேயே நடவடிக்கை எடுக்கப்பட்டு பாகிஸ்தான்–இந்தியா சண்டையினால் நிறுத்தப்பட்டுவிட்டது. அதை அவசியமாக இந்த அமைச்சரவை கவனித்து எடுத்துக்கொள்ள வேண்டும். சுற்று வட்டாரத்தில் 40 கிராமங்கள் இருக்கின்றன.

ப்ரைமரி ஹெல்த் செண்டர் மூலம் குழந்தை சிகிச்சை—குழந்தைகளுக்கு பால் கொடுப்பது ஆகிய காரியங்கள் பற்றியும் நிறைய புகார்கள் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன் தலைவர்தான் என்றாலும் அவற்றைக் கவனிக்கிற அதிகாரம் எங்களுக்கு இல்லை என்று நினைக் கிறேன். ஹெல்த் ஆபீசரோ, வைத்திய வசதிகளோ கிடையாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவசர கேஸ்—பக்கத்தில் உள்ள கடலூர் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டுமென்றால் வாகன வசதி கிடையாது. ஆகவே, ஆம்புலன்ஸ் அமைக்க தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கடலூர் 40 மைலில் இருக்கிறது. ஆகவே உடனடியாக அவசர கேஸ்களைக் கொண்டுபோக எங்களுக்கு ஆம்புலன்ஸ் வண்டி கொடுக்கவேண்டும். குழந்தை சிகிச்சை, பால் வழங்கும் முறையையும் நல்ல முறையில் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். உளுந்தூர்பேட்டை ஆஸ்பத்திரி விஸ்தரிப்பு வேலையை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்திருப்பார்கள் என்று நினைத்தேன். சேர்த்ததாகத் தெரியவில்லை. அதை உடனடியாகக் கவனித்து எங்கள் பகுதியில் நல்ல ஆஸ்பத்திரி விஸ்தரிப்ப வேலை நடக்கவேண்டும், அங்கே ஆம்புலன்ஸ் வண்டி அமைக்கவேண்டும் என்று சொல்லி இதை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொள்ளவேண்டுமென்று வேண்டி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜெயராமன் :** தலைவர் அவர்களே, இன்றையதினம் கொண்டு வரப்பட்டிருக்கிற மருத்துவத் துறை மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அவரவர்களுடைய தொகுதிப் பிரச்சினையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசு இத் துறைக்காக ரூ. 15,67,46,000 ஒதுக்கியிருக்கிறது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களும் சொல்கிற குறைகளை நிவர்த்திக்க இது போதுமா என்பதை யாரும் சொல்லாமல் விட்டுவிட்டார்கள் என்று நினைக்கிறேன். உள்ளபடியே நாம் சொல்கிற கோரிக்கைகள் அவ்வளவும் நியாயமான தாகவே இருந்தாலும் ஆட்சி பீடத்தில் உள்ளவர்கள் இருக்கிற வருவாயை வைத்துத்தான் காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த அரசு முடிந்த அளவு நாட்டு மக்களுக்கு நல்ல பணி யாற்றி வருவதை நான் பாராட்டுகிறேன். நானும் சில கோரிக்கைகளை வைப்பது பத்திரிகையில் வருவதற்குத்தான் பயன்படும், நடைமுறைக்கு ஒத்ததாக இருக்காது என்று அறிவேன். ஆயினும் எங்களுடைய அரசுக்கு சில ஆலோசனைகளைக் கூற விரும்புகிறேன்.

பேரணாம்பட்டில் பஞ்சாயத்து யூனியன் மூலமாக நடைபெறுகிற மருத்துவ மனை சரியான முறையில் செயல்படாமல் இருக்கிற காரணத்தை ஒட்டி தமிழக அரசே அதை ஏற்று நடத்துகிற நிலையை உருவாக்கித்தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நாட்டில் எம். பி. பி. எஸ். படித்த டாக்டர்கள் நல்ல முறையில் நாட்டு மக்களுக்குப் பணியாற்றி வருகிறார்கள். எவ்விதக் குறையும் இல்லை என்று பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். மகாத்மாகாந்தி சொன்னபடி

[திரு. பி. ஜெயராமன்] [1969 மார்ச் 21

நர்சுகள் சேவை புனிதமானது. டாக்டர்கள், நர்சுகள் ஆகியோர்
பிற்பகல் 2-00. ஆற்றிவருகிற சிறப்பான பணியை இந்தச் சந்தர்ப்பத்தில் நான்
பாராட்டுகிறேன். அதோடுகூட என்னுடைய சர்க்காருக்கு ஒரு ஆலோசனை
சொல்ல ஆசைப்படுகிறேன். எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள் கிராமங்
களுக்குச் சென்று பணியாற்ற முடியாத நிலைமை இருக்கிறதைப் பார்க்கிற
போது காட்டுப் பகுதிகளிலே உள்ள கிராமப் பகுதிகளிலே ஹோமியோபதி
டாக்டர்கள் அமர்த்தி மக்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு ஏற்பாடுகள்
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹோமியோபதி டாக்டர்கள்
இருபது ஆண்டுகளாக நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு சர்க்காரிலே
வேலை கிடைக்கும் என்ற முறையில் பலமுறைகள் முயற்சிகள் செய்தும்
இந்த நாட்டிலே அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. ஹோமியோபதி
டாக்டர்கள் வேலையில்லாமல் தொழில் செய்யக்கூடிய நிலைமையில்
இல்லாமல் கஷ்டப்படுகிற நிலைமை இருப்பதால் ஒவ்வொரு கிராமத்திற்கும்
அவர்களை அனுப்பி அவர்கள் சிகிச்சை செய்வதற்கும் அதன் மூலம் அவர்
களுக்கு வாழ்வு அளிப்பதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச்
செய்தால் கிராம மக்களிடத்திலே உள்ள நோயைச் செலவில்லாமல்
தீர்க்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.
ஹோமியோபதி டாக்டர்கள் சிறந்த முறையில் பணியாற்றுகிறார்கள், அவர்
கள் திறமைசாலிகளாக இருக்கிறார்கள். அவர்கள் சிறந்த முறையிலே
வைத்தியம் செய்வதை நான் நேரிலே கண்டு அறிந்திருக்கிறேன்.
சென்னையிலே மஞ்சக்காமாலை என்ற நோய் இருக்கிறது. இதைத்
தீர்ப்பதற்கு இந்த ஹோமியோபதி டாக்டர்களால் முடியும். ஒரு வாரத்திற்
குள்ளாக அவர்கள் தீர்ப்பதற்குள்ள திறமையும் மருந்தும் இருக்கிறது.
அப்படி தீராவிட்டால் என்றால் 1,000 ரூபாய் பரிசு அளிக்கத் தயாராக இருக்
கிறோம் என்பதைச் சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்
கொள்கிறேன். வணக்கம்.

*திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, இந்த மருத்துவ
மானியத்தின்மீதும் பொதுச் சுகாதார மானியத்தின்மீதும் என்னுடைய
கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு
சில கருத்துக்களைக்கூற விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் சொன்ன
கருத்துக்களையே மீண்டும் சொல்லவேண்டாம் என்று சொன்னார்கள்.
நானும் சொல்லப்போவது இதுவரை யாரும் இங்கே சொல்லாத கருத்துக்
களாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

குறிப்பாக இந்த மானியத்திலே 15·65 கோடி ரூபாய் கேட்டிருக்கிறார்
கள். 1969–70-க்காக 15·65 கோடி ரூபாய் அளவிலே கேட்டிருக்கிறார்கள்.
அதிலே எந்த அளவுக்குச் சம்பளத்திற்காகவும் டியர்னஸ் அலவன்ஸுக்
காகவும் கொடுக்கப்படுகிறது என்று பார்த்தால் 7·98 கோடி ரூபாய் அதற்
காகப் போய்விடுகிறது. மீதி உள்ள 7·69 கோடி ரூபாய்தான் மருத்துவ
வகையிலே, மருந்துகள் வகையிலும், நோயாளிகளுக்கு ஆகாரங்கள்
வகையிலும் செலவிடப்படுகிறது. இதே மருத்துவத்திற்காக 1967—68-ம்
ஆண்டு 12·8 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருந்தது. அதிலே 5·97 கோடி
ரூபாய்தான் சம்பளத்திற்காகவும் மற்றவற்றிற்காகவும் கொடுக்கப்பட்டது.
மீதம் உள்ள 7·84 கோடி ரூபாய் 1967—68-லே மருத்துவ வகையிலே
மருந்துகள் வகையிலும் நோயாளிகள் ஆகார வகையிலும் நேரடியாக
மக்களுக்குப் பயன்பட்டது. இப்பொழுது சம்பளத்தைப் பொறுத்த
வரையில் 2 கோடி ரூபாய் உயர்த்தியிருப்பதும், அதே நேரத்திலே
மருத்துவ வகையிலே 15 லட்சம் ரூபாய் குறைத்து இருப்பதும் காணப்
படுகிறது. அதிகாரிகளுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டியதுதான். வேண்டா
மென்று நான் சொல்லவில்லை. அதுவும் குறிப்பாக மறைந்த முதலமைச்சர்
அவர்களைப் பிழைக்க வைக்கவேண்டுமென்று அரும்பாடுபட்டதற்காக அந்த
டாக்டர்களுக்கும், மருத்துவர்களுக்கும் நாம் நன்றி கூறிக்கொள்ளாமல்
இருக்க முடியாது. மறைந்த முதலமைச்சர் மறையும்பொழுதுகூட தமிழ்
நாட்டு டாக்டர்களுக்கும், மருத்துவர்களுக்கும் வசதியும் வாய்ப்பும்
கொடுத்தால் எந்த அளவுக்கு அவர்கள் தங்களுடைய திறமையைக் காட்ட
முடியும் [illegible] நிரூபிக்கின்ற அளவிலே தம்மையே அர்ப்பணித்துக்



1969 மார்ச் 21] [திரு. நா. காசிராமன்]

கொண்டார்கள் என்றுகூடச் சொல்லலாம். எனவே, அந்த அளவுக்கு
அவர்களுக்குச் சம்பளம் கொடுத்ததைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாது.
ஆனால், மருத்துவ வகையிலே 15 லட்சம் ரூபாய் குறைத்திருப்பதுதான்
பலவகையிலும் பாதிக்கிறது. அது எந்த, எந்த வகையில் என்று பார்த்
தால் ஆகாரம் நோயாளிகளுக்கு சென்னை போன்ற இடங்களைத் தவிர
மொஃபுஸலில் டயட் என்பதைப் பார்த்தால் 1966—67-க்கு 80 லட்ச
ரூபாய் என்று இருந்தது. இப்பொழுது 78 லட்சமாகக் குறைக்கப்பட்டு
2 இலட்சம் குறைந்திருக்கிறது. ' Medicine and hospital necessaries '.
என்பதிலே மருந்துகள் வேண்டும், எக்ஸ்ரே வேண்டும், மருத்துவ
வசதிகள் வேண்டும் என்றெல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்கள்
குறிப்பிட்டார்கள். திரு. நரசிம்மன் அவர்கள் பேசும் பொழுது
கூட வேலூரில் பலவிதமான உபகரணங்கள் இல்லை என்று
எல்லாம் குறிப்பிட்டுச் சொன்னார்கள். 145 லட்சம் ரூபாய் ஒதுக்கியதற்கு
இப்பொழுது 114 லட்சம்தான் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் எப்படி
மருத்துவ வசதிகளைச் செய்துகொடுக்க முடியும் ? எப்படி எக்ஸ்ரே
போன்ற வசதிகள் எல்லாம் செய்ய முடியும் ? இவ்வாறு குறைத்து இருப்ப
தால் கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

ஏற்கனவே நகரசபைகள், பஞ்சாயத்துக்கள் நடத்துகின்ற ஆஸ்பத்திரி
களுக்கு மருந்து வேண்டுமென்று கேட்டால் தயக்கமும், தாமதமும் ஏற்படு
கின்றன. மருந்துகள் வேண்டுமென்று சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோருக்கு
அனுப்புகிறோம். பல மாதங்களுக்கு மருந்து வருவதே இல்லை. அதன்
காரணமாக அனாவசியமாக அவர்கள் கொட்டேஷன் டெண்டர் கால்ஃபார்
பண்ணி அவர்கள் அதிக விலை கொடுத்து மருந்துகளை வாங்கவேண்டியிருக்
இதன் காரணமாக ஏற்கனவே நலிவுற்ற நிலையில் உள்ள பஞ்சா
1966-ர், நகரசபைகள் எல்லாம் இன்னும் பாதிக்கப்படுகிறது.
க்க வர்கள்
றுவ லேனே பிரஸிடென்ஸி ஹாஸ்பிடலைப் பொறுத்த வரையில் நிறையச்
சன் ய் வேண்டியதுதான். அது அவசியமும்கூட. நாங்கள் மறுக்க
வில்லை. ஆனால், மொஃபுஸலுக்குக் குறைக்கவேண்டியதில்லை. இங்கே
என்னவென்றால் 36 லட்சம் டயட்டுக்காக ஒதுக்கியதை 50 லட்சமாக
ஒதுக்கியிருக்கிறார்கள். அது வேண்டியதுதான். வேண்டாமென்று
சொல்லவில்லை.

1966-67-லே நடந்த செலவுகளைப்பற்றி ஆடிட் ரிப்போர்ட் கொடுத்
திருக்கிறார்கள். அதிலே ரொட்டிகள் வாங்குவது சம்பந்தமாக
காண்ட்ராக்டிலே உரிய நேரத்திலே முடிவெடுக்காததன் காரணமாக,
மார்ச் மாதத்திலே எடுக்க வேண்டிய முடிவை ஆகஸ்டு மாதத்திலே
எடுத்ததின் காரணமாக, 55 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது
என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். காலதாமதமாவதினால் பணம் விரய
மாகிறது. இதை உடனுக்குடன் அமைச்சர்களும், மற்றவர்களும்
கண்காணிக்கவேண்டும். அப்படிச் செய்தால் இந்த நஷ்டத்தைத்
தவிர்த்திருக்கமுடியும். மற்ற மருத்துவ வசதிகளுக்கு அந்தப்
பணத்தைப் பயன்படுத்திக்கொண்டிருக்கலாம். காண்ட்ராக்ட் மூலமாகவும்
டெண்டர்கள் மூலமாகவும் ரொட்டிகள் வாங்காமல், சர்க்கார் உடைய
சார்பிலே சென்னையிலே மாடர்ன் ரொட்டி பேக்கரி இருக்கிறது,
அதிலிருந்து நல்ல ரொட்டிகள் விற்கிறார்கள், சத்துள்ள ரொட்டிகள்,
அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு அவற்றை வாங்கிக் கொண்டால் தனியார்
லாபம் பெறுவதைத் தடுக்கமுடியும்.

நகரசபைகளுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் மருந்து வருவதைப் பற்றிச்
சொன்னார்கள். 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் தேதி மாண்புமிகு
அமைச்சர், முன்பு அமைச்சராக இருந்தவர்கள் சொன்னார்கள்.
மக்கீல் யுனிவர்சிடி ஆப் கனடாவிலிருந்து அங்கேயுள்ள மருத்துவர்களை
இங்கேயும், இங்கேயுள்ள மருத்துவர்களை அங்கேயும் அனுப்பி பரிமாறிக்
கொண்டால் மருத்துவத் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்
என்று சொல்லியிருக்கிறார்கள். அது அமல்படுத்தப்பட்டதாகத் தெரிய

வில்லை. இன்னும் அமுல்படுத்துவதற்கு குறிப்பு ஒன்றையும் காணோம். எனவே அதையும் யோசித்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இதைத்தவிர அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இப்பொழுதைய முன்னாள் அமைச்சராக இருக்கும் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் சொன்னார்கள், நகராட்சிகளிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் உள்ள ஆஸ்பத்திரிகளை சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும், அப்படிச் செய்தால்தான் மக்கள் முழுப் பலனையும் அனுபவிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் உடனடியாகச் செய்தால் அதனால் நகராட்சிகள், பஞ்சாயத்துக்களுக்கு இருக்கிற இக்கட்டான நிதிநிலைமை நல்ல முறையில் வரும். அதனால் நிர்வாகமும் நல்ல முறையிலே இருக்கும், அதனாலே மற்ற காரியங்களையும் நல்ல முறையில் அவர்கள் செய்ய முடியும். எனவே அதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவ நிபுணர்களைப்பற்றிச் சொல்லும்பொழுது, ஒரு விஷயத்தை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். மறைந்த முதலமைச்சர் அவர்கள் நல்லவிதத்தில்தான் சிகிச்சை பெற்றார்கள். மருத்துவர்களும் நல்ல முறையில் சிகிச்சைகள் அளித்தார்கள். ஆனால் அவர்களைப் பற்றி அனாவசியமாக அவர்களுடைய மனது புண்படும்படி, அதை விசாரணை செய்ய வேண்டும், விசாரணைக்குழு அமைக்க வேண்டும் என்று பேசினார்கள். அது நல்லதல்ல. அப்படிச் செய்தால் பெரிய அமைச்சர்கள், புகழ்பெற்றவர்கள் வைத்தியத்திற்கு வருகிறது. வராத அளவுக்கு இவர்களுக்கு ஒரு கெட்ட பெயர் ஏற்பட இருக் அளவில் அவர்கள் வெளியூர்களுக்குச் சென்று மருத்துவம் பெற்றுக் என்று சொல்லக்கூடிய நிலைமை வராமல் இருக்க வேண்டும். மருத்துவர்களைக் குற்றம் சாட்டுவது சரியல்ல.

ஒரு மருத்துவ நிகழ்ச்சியிலே பங்குகொண்ட அமைச்சர் அவர்கள் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். கோ எஜுகேஷன் வேண்டும் அதாவது மருத்துவக் கல்வியில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்க வேண்டும் என்று சொன்னதாகப் பார்த்தேன். மருத்துவத் துறையிலே வயது வந்தவர்கள், பருவமடைந்தவர்கள் படிக்கின்ற நிலைமை இருப்பதாலே எந்தக் காரணத்தையொட்டியும் அப்படி கோ எஜுகேஷன் கொண்டுவருவது இந்த மெடிக்கல் லைனைப் பொறுத்த வரையில் நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது நம் நாட்டு மாணவர்களுக்கு நல்ல நடத்தையை உண்டாக் காது. அவர்கள் பேரில் சந்தேகத்தோடு சொல்லவில்லை. நெருப்பையும் பஞ்சையும் ஒரே இடத்தில் வைத்துவிட்டு நெருப்பு பற்றிக் கொள்ளாது என்று சொன்னால் எப்படி இருக்குமோ அந்த அளவுக்குத்தான் இருக்கிறதே தவிர, அதனால் நன்மை ஏற்பட முடியாது. மாணவர்கள் தங்கள் விருப்பத்தைச் சொல்லியிருந்தாலும் கூட நன்கு ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மெடிகல் காலேஜ் அட்மிஷன் சம்பந்தமாகக் கமிட்டிகள் போடப்படு கின்றன. அது நன்ருக இயங்குவதாக அரசு சார்பில் சொல்லுகிறார்கள். அதனால் அனாவசியமான ரிட்கள் எல்லாம் வந்து காலதாமதம் ஏற்படுவ தோடு கெட்ட பெயரும் உண்டாகிறது. எஸ். எஸ். எல். சி. வரை இலவசக் கல்வி என்று இருந்ததை பி. யு. சி. வரை என்று செய்திருக்கிறோம். அவ் வாறு தமிழ் நாட்டில் உள்ள 3½ கோடி மக்களின் வரிப்பணத்தில் இருந்து இலவசக் கல்வியைக் கொடுக்கும்போது அந்த மாணவர்களிடமிருந்து சிலவற்றைக் கேட்டுப் பெற உரிமை இருக்கிறது. மாணவர்கள் நன்ருகப் படிக்க வேண்டும்; தரமுள்ள கல்வியைப் பெற்று நல்லவர்களாக நடக்க வேண்டும். அப்படி அவர்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் சொல்ல முன்வரவேண்டும். அப்படிச் சொல்லி மருத்துவக் கல்லூரியிலோ மற்ற தொழில் கல்லூரியிலோ சேர்க்கும்போது தகுதியின் அடிப்படையில்



On the basis of merit only admission should be given. குறைந்த அளவு 50% மார்க்காவது வாங்கியிருக்க வேண்டுமென்ற கட்டாயத்தை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் கல்வி யில் ஊக்கமாகக் கவனத்தைச் செலுத்துவார்கள்; அப்படிச் செலுத்துவது அவசியமாகும். அப்படி தங்கள் கவனத்தைக் கல்வியிலே செலுத்து வதன் காரணமாக அரசியல் குழப்பங்களிலே தலையிட்டு தங்களைத் தாங்களே பாழாக்கிக் கொள்ளுவதோடு பெற்றோர்களுக்கு வேதனையையும் நாட்டைப் பாழாக்குவதில் அவர்கள் கவனம் திரும்புவதும் தடைப்படும். அது ஒரு உத்தியாக, தூண்டுகோலாக இருக்கவேண்டும். ஆகவே, இதற்கு கமிட்டிகள் வேண்டாம், அதனால் தொல்லைகள் வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மருத்துவத் துறையில் ட்ரக் இன்ஸ்பெக்டர்ஸ் என்று ஏற்படுத்தி இருக்கிறோம். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு ட்ரக் இன்ஸ்பெக்டர் இருக் கிறார். அவர்களுக்கு ஃபிக்ஸட் டி.ஏ. 75 ரூபாய் என்று இருக்கிறது. மாதத்தில் 25 நாட்களுக்குக் குறையாமல் அவர்கள் சுற்றுப்பயணம் செய்யவேண்டும். அப்படிப் பார்த்தால் ஒரு நாளைக்கு 3 ரூபாய் வருகிறது. அந்த மூன்று ரூபாயிலே அவர்கள் போக்குவரத்துச் செலவு, சாப்பாட்டுச் செலவு எல்லாம் எந்த அளவுக்குக் கட்டுபடியாகும். இதன் காரணமாக அவர்கள் மருந்து விற்பனையாளர்களின் தயவை அணுகும் நிலை ஏற்படு கிறது. இதனால் போலி மருந்துகள் மக்களிடையே நடமாடும் நிலை ஏற்படுகிறது. ஆகவே இதையெல்லாம் தடுக்க அந்த மருத்துவப் பரிசோதகர்களுக்கு நல்லவிதத்திலே அலவன்ஸைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ந் தேதியில் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது என்.ஜி.ஓ-க்களுக்காக தனியாக ஆஸ்பத்திரியை நிறுவ வேண்டுமென்று சொன்னார்கள். அம்மாதிரி ஏற்படுத்தினால் நல்ல விதத்தில் அவர்களுக்குப் பலன் ஏற்படுவதோடு தவருகவோ, சரியாகவோ அவர்கள் மேல் வரக்கூடிய புகார்களுக்கும் இடம் இல்லாத நிலை ஏற்பட்டு விடும். ஆகவே, அவர்களுக்குத் தனியான ஆஸ்பத்திரியை ஏற்படுத்திக் கொடுப்பது நல்லது.

மத்திய சர்க்காரில்கூட ஒரு யோசனை இருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். டாக்டர் படிப்பு படிக்காவிட்டாலும் பல காலம் கம்பவுண்டர் களாக இருப்பவர்களை மருத்துவ அதிகாரிகளாகவும், மருத்துவர்களாகவும் அனுமதிக்கலாம் என்ற எண்ணம் இருப்பதாகத் தெரிகிறது. தயவு செய்து இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு நன்ருக எடுத்துச் சொல்லி அம்மாதிரி செய்வது நல்லதல்ல, நாட்டுமக்களுக்கும் நல்லதல்ல, எவ்வளவுதான் அனுபவம் பெற்றவர்களாக இருந்தாலும் இந்தத் துறையில், டெக்னிகல் சப்ஜக்டில் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள்தான் மருத்துவர்களாகவும், மருத்துவ அதிகாரிகளாகவும் இருக்க வேண்டு மென்று கூறவேண்டும். இல்லாவிட்டால் அது மக்களை 'குவாக்ஸ்'களிடம் ஒப்படைப்பு செய்வதாக ஆகிவிடும். அவர்களுடைய அல்லலை வேடிக்கை பார்ப்பதாக முடியும்.

பல தாலுகா ஆஸ்பத்திரிகளில் ப்ளட் பாங்க் இல்லை. தற்போது வாகனங்கள் அதிகமாகக்கூடிய நிலையில், விபத்துக்களும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. இந்த விபத்துக்களைப் பார்க்கும்போது ஒவ்வொரு தாலுக்கா ஆஸ்பத்திரிகளிலும் ரத்த பாங்கு அவசியம் இருக்க வேண்டு மென்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி இருந்தால்தான் நாம் மக்களை விபத்துக்களினால் பாதிக்கப்படுகின்ற நேரத்தில் அவர்களைக் காப்பாற்ற முடியும்.

ஆஸ்பத்திரிகளில் மாதம் 100 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்களுக்குத்தான் இலவச மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. ஆஸ்பத்திரிகளுக்கு யார் போனாலும் 100 ரூபாய்க்குக் குறைவான

வருமானம் என்று சொல்லி பல பேர் வைத்திய வசதி பெறுகிறார்கள். அதற்காக தவறான வழியை அங்கே இருப்பவர்களே சொல்லித் தருகிறார்கள். இதனால் பல தவறான காரியங்களைச் செய்யும்படியான நிலைக்கு ஆளாக்குகிறார்கள். சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் பெரும்பாலும் சிகிச்சை பெறுபவர்கள் ஏழைகளாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே, இதிலே பாகுபாடு காட்ட வேண்டிய அவசியம் இல்லை. அவர்களிடம் இருந்து பணத்தை வசூலிப்பதற்காகச் செலவழிக்கப்படுகின்ற அளவுக்குக் கூடப் பணம் வருவதில்லை. இப்படி இருக்கும்போது இந்த அனாவசிய வேலையை விட்டு விட்டு எல்லோருக்கும் இலவச மருத்துவ வசதி என்று ஏற்படுத்தி விடலாம். பெரும் பணக்காரர்களாக இருப்பவர்கள் சர்க்கார் ஆஸ்பத்திரிகளுக்கு வருவதில்லை. அவர்கள் ஸ்பெஷலிஸ்டுகளிடம் சென்று விடுகிறார்கள். ஆகவே, மருத்துவ வசதியை எல்லோருக்கும் இலவசமாகச் செய்வது பயன் உள்ளதாக இருக்கும்.

பல் வைத்திய முறையைப் பொறுத்தவரை பார்த்தால் இங்கிலாந்து தேசத்தில் பல் வைத்தியம் எல்லோருக்கும் இலவசம். பல் கட்டிக் கொடுப்பதுகூட இலவசம் என்று பேப்பரில் பார்த்ததாக ஞாபகம். அந்த முறையை நம் தமிழ் நாட்டிலும் ஏற்படுத்த வேண்டும்.

கும்பகோணம் ஆஸ்பத்திரியில் லேபர் வார்டு இருக்கிறது. அது பரிதாபகரமான நிலைமையில் இருக்கிறது. கல்கத்தா இருட்டறை போல் இருக்கிறது. வெளிச்சம் இல்லை, காற்றோட்டம் இல்லை. பயங்கரமான இன்னொரு நிலை படிக்கட்டுகளிலே நாய்கள் படுத்திருப்பதாகும். அந்த ஆஸ்பத்திரிக்குக் காம்பவுண்ட் வால் கிடையாது. ரோடை ஒட்டிக் காம்பவுண்ட் வால் இருந்தாலும் வயல்வெளி, ஆற்றங்கரைப் பக்கம் காம்பவுண்ட் வால் கிடையாது. நாய் போன்ற ஜந்துக்கள் அங்கு இருப்பதால் என்ன ஆபத்து வரும் என்பது நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை, பல இடங்களில் நடக்கின்ற நிகழ்ச்சிகளை அமைச்சர்களும் அறிவார்கள். இந்த நிலை கும்பகோணம் ஆஸ்பத்திரியில் மட்டுமல்ல பல இடங்களில் இருக்கிறது. அங்கெல்லாம் சரியான பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திண்டிவனம் ஆஸ்பத்திரியிலும் வேகமான விரிவான அபிவிருத்திகளைச் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. அந்த அபிவிருத்திகளையும் பார்த்துச் செய்ய வேண்டும்.

முக்கியமான இன்னொரு விஷயம். ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்கு வருகின்றவர்கள் வெளியிலே கூடையிலே விற்கப்படுகின்ற இட்லி, வடை போன்றவற்றை வாங்கிச் சாப்பிடுகின்ற நிலை இருப்பதால் அவர்கள் திரும்பிச் செல்லும்போதும் நோய் குணமாகாத நிலையிலேயே திரும்ப வேண்டியிருக்கிறது. ஆகவே, ஆஸ்பத்திரியைச் சுற்றிக் குறிப்பிட்ட தூரத்திற்குள் யாரும் இம்மாதிரி சாப்பாட்டுக் கடைகளை வைக்கக் கூடாது என்று உத்திரவிட வேண்டும். அந்த ஆஸ்பத்திரி அதிகாரியின் அனுமதி பெற்றவர்கள் மட்டும்தான் வியாபாரம் செய்யலாம் என்ற நிலையை ஏற்படுத்தினால்தான் அங்கு சிகிச்சை பெற வருகின்றவர்களுக்கு நல்ல உபகாரத்தைச் செய்தவர்களாக இருப்போம்.

பொதுச் சுகாதாரத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பொதுச் சுகாதாரத்திலே நகரசபைகளுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் குடிதண்ணீர்த் திட்டத்திற்கும், சாக்கடைத் திட்டத்திற்கும், கடன்கள் கொடுக்கிறோம். பல லட்சக்கணக்கில் கொடுத்து வருஷா வருஷம் தவணையாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் கூறும்போது, மாநில அரசு மத்திய அரசுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன்களின் தவணைகளைப் பரிசீலித்து வேறு முறையில் அமைத்தால் வருஷா வருஷம் ஏற்படக்கூடிய பொறுப்பு குறையும் என்றார்கள்.

"Re-scheduling of the loans so that they will be spread over a long period,' என்று குறிப்பிட்டார்கள்.



ஆனால், இப்போது மாநில அரசு முனிசிப்பாலிட்டிகளுக்குக் கொடுக்கும் கடன்களை என்ன செய்திருக்கிறது, என்ன உத்தரவு போட்டிருக்கிறது என்று பார்த்தால், இதுவரை நாற்பது வருடங்களில் அந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுத்தால் போதும் என்று வகை செய்யப்பட்டிருந்தது. இப்போது ஓர் உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். 1969-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ம் தேதியில போடப்பட்டது அதன் பிரகாரம் 40 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய அந்த கடன்கள் 30 வருடங்களில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். மாநில அரசு மத்திய அரசைக் கேட்கும்போது விரிவான தவணைகளில், குறைந்த அளவில் தொகை திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். ஆனால் மாநில அரசுக்கு முனிசிப்பாலிட்டிகள் கொடுக்க வேண்டிய கடன்களை சீக்கிரத்தில், குறைந்த தவணையில், திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறோம். ஆக, நாம் திருப்பிக் கொடுக்கும்போது ஒரு மாதிரியாகவும், நமக்குப் பிறர் திருப்பிக் கொடுக்கும்போது ஒருமாதிரியாகவும் இருப்பது நல்லதுதானா என்று அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும்

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவர்கள் தவணை கொடுத்தால் நாமும் தவணை கொடுக்க சௌகரியமாக இருக்கும் என்பதால்தான் அங்கு தவணை கேட்கிறோம்.

**திரு. நா. காசிராமன்:** முதல் அமைச்சர் அவர்கள் கூறியது நியாயமான காரணம்தான். தவணையை அதிகரிக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில் மாநில அரசுக்கு முனிசிப்பாலிட்டிகள் கொடுக்கிற கடன்களைத் திருப்பிக்கொடுக்கும்போது தவணைகளைக் குறைக்காமலிருந்தால் ஒன்றும் பாதகமில்லை. அதிகப்படுத்த வேண்டாம் அதைக் குறைக்காமலாவது இருக்கலாம் அல்லவா? ஏற்கனவே நகரசபைகளுக்குப் பொறுப்புகள் ஜாஸ்தி; வருவாயும் குறைச்சல்; செலவும் ஜாஸ்தி. 30 லட்சம் ரூபாயை நாற்பது வருடங்களில் திருப்பிக் கொடுப்பது என்றால். ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 75,000 கொடுத்தால் போதும். அதை முப்பது ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் வருடத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் வருகிறது. ஆக, 25,000 ரூபாய் செலவு உடனே ஏற்பட்டு விடுகிறது. இது நல்லதுதானா என்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

நகரசபைகளுக்கு குடி நீருக்காகவும், சாக்கடைத் திட்ட வசதிகளுக்காகவும் கடன்கள் கொடுக்கும்போது அது எப்படி நடக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அரசாங்கம் பத்து லட்சம் ரூபாய் கடனாகக் கொடுக்கிறது. அதை உடனடியாக பப்ளிக் ஹெல்த் என்ஜினியரிங் டிப்பார்ட்மென்டிடம் டெப்பாஸிட் செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். வாங்கிய அந்த தினமே அது டெப்பாஸிட் செய்யப்படுகிறது. அந்த இலாகா சர்க்கார் இலாகாவாக இருப்பதினால் நிதி வசதிக்கேற்ப, அவர்கள் சௌகரியங்களை முன்னிட்டு திட்டங்களை நடத்துகிறார்கள். சில பல ஆண்டுகளாகியும் நடைபெறுவதில்லை; சில சில மாதங்களில் நடைபெறுகின்றன. அவையெல்லாம் சர்க்கார் வசதியை, எண்ணத்தைப் பொறுத்தது. ஆனால் நகரசபைகள் அந்தப் பணத்தை எப்படித் திருப்பிக் கட்டவேண்டியிருக்கிறது என்று பார்க்கவேண்டும். எந்தத் தேதியில் பணம் வாங்கப்பட்டதோ அந்தத் தேதிக்கு ஒரு வருடத்திலிருந்து வட்டியும் முதலுமாக அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. சில வடநாட்டுக்காரர்கள் பணத்தை வட்டிக்குக் கொடுக்கிறார்கள், அவர்கள் பெயர்களைச் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் தேவலைபோல் இருக்கிறது. இதனால் சர்க்காருக்கு முனிஸிப்பாலிட்டிகளில் இருந்து அதிக வருவாய் வருகிறது. ஆகவே, போட்ட திட்டம் பலன் அளிக்க ஆரம்பித்த தேதியிலிருந்துதான் வட்டியைக் கணக்கிடவேண்டும். அல்லது கொடுக்கப்படுகிற பணத்தை நகரசபை அல்லது பஞ்சாயத்து, பாங்கிலோ அல்லது செக்யூரிட்டி டெப்பாஸிட்டிலோ போட்டு வைக்க அனுமதித்தால் வட்டியாவது வரும். அந்த வட்டியை இங்கு வட்டியாகத் திருப்பிக் கொடுக்கலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படி வட்டி வாங்குவது இரண்டு ஆண்டுகளாகத்தான் நடைபெறுகிறதா அல்லது பல ஆண்டுகளாக நடைபெறுகிறதா?

**திரு. நா. காசிராமன்:** கேட்டதற்கு நன்றி. எவ்வளவு காலமாக நடந் தாலும் குற்றம் குற்றமே. இந்த அரசு அதைத் திருத்தும் என்று நம்பு கிறேன். யார் செய்தால் என்ன? அதுவா போட்டி? யார் குற்றம் செய்கிறார்கள் என்பதில் போட்டி கூடாது. எப்படி அதைத் திருத்துவது என்பதில்தான் போட்டி போடவேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** விளக்கம் தெரிந்து கொள்ளத் தான் கேட்டேன். அவர்கள் நகரசபைத் தலைவராக இருப்பதால் விளக் கத்தை நன்கு அளிக்க முடியும் என்றுதான் கேட்டேன். விளக்கம் அளித்ததற்கு நன்றி.

**திரு. நா. காசிராமன்:** நகரசபைகளுக்குக் கொடுக்கப்படுகிற கடன் களுக்கு எப்படி வட்டி போடப்படுகிறது என்று பார்க்கலாம். 1967–68-ல் $6\frac{3}{4}$ சதவிகிதம் என்றிருந்தது. 1968–69-ல் 7 சதவிகிதம் ஆக உயர்ந் திருக்கிறது. ஒரு பக்கத்தில் மத்திய அரசு வட்டியைக் குறைக்கவேண்டு மென்று சொல்கிறோம், ஆனால் ஒரு பக்கத்தில் வட்டியைக் கூட்டுகிறோம். பட்ஜெட் மெமோராண்டங்களில் உள்ள கணக்குகளைப் பார்க்கும்போது மத்திய அரசிலிருந்து பெற்றிருக்கும் கடன்களுக்கு எந்த ஒரு இனத்திலும் 1963-64-ஐத் தவிர எந்த வருடத்திலும் $5\frac{3}{4}$ சதவிகிதத்திற்கு மேல் அவர்கள் வட்டி கேட்கவில்லை. ஆனால் மாநில அரசு நகரசபைகளிட மிருந்து $6\frac{3}{4}$ சதவிகிதம் 7 சதவிகிதம் அளவிற்கு வட்டி வாங்கிக் கொண்டிருக்கிறது. கும்பகோணம், நாகப்பட்டணம், திருநெல்வேலி, நாகர்கோவில் போன்ற இடங்களில் ஊரில் உள்ளவர்களிடமிருந்து சொத்து வரி போட்டு வரி வசூல் செய்து மாநில அரசுக்கு வட்டியாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. நல்ல காரியங்களைச் செய்ய முடிவதில்லை. ஆகவே, அந்த வட்டி விகிதத்தைக் குறைக்கவேண்டும்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. முன்பு எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த இன்றைய நம் முதலமைச்சர் அவர்கள் வெகு அழகாக தண்ணீர்ப் பஞ்சம் கொடி கட்டிக்கொண்டு பறந்து கொண்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அந்தக் கொடி இறங்கவே இல்லை. அது பறந்துகொண்டுதான் இருக் கிறது. மறைந்த முதல் அமைச்சர் அவர்களின் சொந்த ஊரில் அங்குள்ள மக்களுக்கு உண்ண அரிசியும் இல்லை, குடிக்கத் தண்ணீரும் இல்லை என்ற செய்தி இந்தியன் எக்ஸ்பிரஸில் வந்திருக்கிறது. பேப்பரில் வந்திருப்பதை வைத்துச் சொல்லக்கூடாது என்று சொல்வார்கள். ஆனால், பேப்பர்கள் வாயிலாகத்தான் நாம் காரியங்களைத் தெரிந்து கொள்ளவேண்டியிருக் கிறது. அந்தப் பேப்பர் தேர்தல் சமயத்தில் எப்படி நடந்துகொண்டது என்று பார்த்தால், இயற்கையால் ஏற்பட்ட உற்பாதங்களை எவ்வளவு பெரிதுபடுத்திக் காட்டியது என்பதைப் பார்க்கும்போது முதல் அமைச்சராக இருந்த அண்ணா அவர்களின் ஊரிலிருந்து அந்தச் செய்தி வந்திருப்பது வருத்தத்தைக் கொடுக்கக்கூடிய வகையில் இருக்கிறது.

மொபஸலுக்கு குடிதண்ணீருக்காகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 208 லட்சத்திலிருந்து ரூ. 150 லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்பத்திரி வசதிக்காக, சாலைகள் வசதிக்காகக் கொடுக்கப்பட்டிருந்த தொகைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

படி அரிசி பட்டணத்திற்கு, குடிதண்ணீர் பட்டணத்திற்கு, ஆஸ்பத்திரி வசதிகள் பட்டணத்திற்கு, பால் வசதி பட்டணத்திற்கு, எல்லாம் பட்டணத் திற்கு என்றிருக்கிறது. நகர்ப்புறங்களில் உள்ள, கிராமங்களில் உள்ள நாங்கள் எல்லோரும் கொடுக்கிற அரிசியை, நாங்கள் கொடுக்கிற வரிகளை பட்டணத்தில் உள்ள மக்கள் மட்டும் அனுபவிக்கவா கொடுக் கிறோம்? இங்கு வசதிகள் செய்து கொடுக்கப்படுவதுபற்றி நான் குறை



சொல்லவில்லை. சென்னை நகரம் உலகத்திலுள்ள அழகான நகரங்களில் ஒன்றாகும். சென்னையில் உள்ளவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுப்பது கூடாது என்று சொல்லவில்லை. ஆனால், மற்றப் பகுதிகளில் உள்ள $3\frac{1}{2}$ கோடி மக்களின் சௌகரியங்களை அதிகப்படுத்திக் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை, உள்ள சௌகரியங்களைக் குறைக்காதீர்கள்.

சென்னையை அழகுபடுத்தவேண்டுமென்று சொல்கிறோம். சென்னை மெரினா எவ்வளவு அழகாக இருந்தது? ஐந்தாறு ஆண்டுகளுக்குள்ளாக அங்கு பல குடிசைகள் தோன்றியுள்ளன. ஏழைகள் இடமில்லாததால் குடிசைகள் போட்டிருக்கிறார்கள்; வாஸ்தவந்தான். அந்த இடத்தை அவர்கள் சுத்தமாகக்கூட வைத்துக் கொள்வதில்லை. அங்கு மாலை நேரங் களில் போக முடிவதில்லை. அவ்வளவு துர்நாற்றம் ஏற்படுகிறது. இந்த சமயத்தில் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. இதற்கு சம்பந்தமில்லா விட்டாலும் அதைச் சொல்ல விரும்புகிறேன்.

சிலைகள் வைத்திருக்கிறார்கள். அதில் தவறு இல்லை. நல்ல காரியங் களுக்காக சிலைகள் வைத்திருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ளு கிறார்கள். அங்கு கண்ணகி சிலை இருக்கிறது. அந்தச் சிலையைப் பார்த்தேன். அதன் இடுப்பில வெடிப்பு ஏற்பட்டிருக்கிறது. மற்ற சிலை களைப் போல் அது விழுந்ததற்குப் பிறகு புதுப்பிப்பது என்றில்லாமல் உடனடியாக அதை மாற்றி நல்லமாதிரியாகச் சிலை வைத்து சென்னை நகரம் மேலும் அழகுறும் விதத்தில் அமைக்கவேண்டும்.

அடுத்தபடியாக, நகரசபைகள், பஞ்சாயத்துக்கள் இவற்றின் குடி தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க எலக்ட்ரிஸிட்டி போர்டு நிறுவியிருப் பதுபோல் ஒரு வாட்டர் சப்ளை அண்டு ஸுவேஜ் போர்டு என்று ஒரு போர்டு நிறுவி தண்ணீர்ப் பற்றாக்குறைக்கு நல்லதொரு நிவாரணம் அளிக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் பல ஸ்தாபனங்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும கடன்கள் எழுப்பி அதைக் கொண்டு பல திட்டங்களை நிறைவேற்ற முடியும். நல்ல சம்பளம் கொடுக்கப்பட்டு நல்ல பொறுப்பில் என்ஜினியர்கள் இருக் கிறார்கள். அவர்கள் வேலை செய்வதற்குத் திட்டங்கள் கொடுக்காமல் துருபிடித்த கத்திபோல் அவர்களை வைத்திருப்பது என்றால் அது நாட்டுக்கும் நல்லதல்ல, அரசுக்கும் நல்லதல்ல ஆகவே, நல்ல பல திட்டங்களைப் போடுவதற்காக நிதிவசதிகளைக் கண்டு பிடிக்கவேண்டும். அதற்கு இந்த போர்ட்டை ஏற்படுத்தவேண்டும்.

குடி தண்ணீர்த் திட்டத்தோடு சாக்கடைத் திட்டத்தையும் இணைத்துச் செய்யவேண்டும். திண்டுக்கல்லில் குடிநீர் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் கொசு இல்லாத ஊரில் கொசு உற்பத்தியாகிவிட்டது. காரணம், தண்ணீர் ஓட சாக்கடை வசதி இல்லை. குடிதண்ணீர்த் திட்டமும் சாக்கடைத் திட்டமும் இணைந்து செயல்படாததால் பல ஊர்களில் கொசுத் தொல்லை ஏற்பட்டிருக்கிறது குடிதண்ணீர் வசதிக்காக நாம் அதிகச் செலவு செய்யவேண்டியிருக்கிறது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், ஜாண்டிஸ் போன்ற நோய் கள் இருப்பதுபற்றி. நல்ல குடிதண்ணீர் கிடைக்காத காரணத்தினால்தான் ஜாண்டிஸ், காலரா போன்ற வியாதிகள் பரவுகின்றன. ஒரு குறித்த காலத் திற்குள்ளாக சென்னையில் காலரா, காஞ்சிபுரத்தில் காலரா என்று பரவி யிருக்கிறது. இறந்தவர்கள் ஒன்றிரண்டு பேர்கள்தான் என்றிருந்தாலும் ஐந்தாறு ஆண்டுகளாக தலைதூக்காமல் இருந்த வியாதிகள் ஏன் உண்டாகி யிருக்கிறது என்று பார்க்கவேண்டும் கண்ட்ரோல் ஆஃப் எபிடமிக் டிஸீஸஸ் என்பதற்காக 1967-68 ல் 75 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. இப்போது அதற்காக $9\frac{1}{2}$ லட்சம் ரூபாய்தான ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிற்பகல் 2-3
இப்படியிருந்தால் எப்படி அந்த எண்டெமிக் டிஸீஸைக் கண்ட்ரோல் செய்ய முடியும்? அதிலிருந்து எப்படி மக்களைக் காப்பாற்ற முடியும்?

கிராமப் பகுதிகளுக்கு, மருத்துவத் துறையை விஸ்தரிக்கும் நோக்கத்தில்
ப்ரைமரி ஹெல்த் சென்டருககாக ஸ்டேட் ஸ்கீமில் 1966-67-ல் ஒதுக்கப்
பட்டது $6\frac{3}{4}$ லட்சம்—1968-69-ல் 3·6 லட்சம், 1969-70-ல் 2·46 லட்சம்
என்று இருக்கிறது. கழுதை தேய்ந்து என்னமோ ஆகுமென்பார்களே
கட்டெறும்பாகும் என்பார்களே அதுமாதிரி, வருஷாவருஷம் குறைந்து
கொண்டே வருகிறது. இப்படிக் குறைந்துகொண்டே வந்தால் கிராமங்
களிலே எப்படி வசதி கொடுக்க முடியும்?

கிராமங்களிலே உள்ள வாய்க்கால்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன.
எங்களுடைய கும்பகோணம் 10 கிராமங்களைக் கொண்டதாக இருந்தது 100
வருஷங்களுக்கு முன்பு. பாய்கால்களாக 3 வாய்க்கால்கள் இருந்தன.
அந்த மூன்று வாய்க்கால்களும், எங்களுடைய ஊரின் ஜனப்பெருக்கத்தின்
காரணமாகத் தூர்ந்துபோய், நல்ல விதத்தில் பயன்படவில்லை. இம்
மாதிரி அய்யம்பேட்டையிலே இருக்கிறது, சேலத்திலே இருக்கிறது.
மாயவரத்திலே இருக்கிறது. பாய்கால்களாகப் பயன்பட்டு வந்த வாய்க்
கால்கள், நகர்ப்புறத்திலுள்ள சாக்கடை நீர் கலப்பதனாலும், குப்பைகளைக்
கொட்டுவதாலும் தூர்ந்துவிட்டன. அதனால் கொசுப்பெருக்கம் ஏற்படுகிறது.
பாசன வசதியும் தடைப்படுகிறது. இந்த இரண்டு கஷ்டங்களையும்
நிவர்த்திக்க வேண்டுமானால், நகர்ப்புற வாய்க்கால்களில் சிமெண்ட்
குழாய்களை அமைத்து, காவிரித் திட்டத்திற்காக 6 அடி விட்டமுள்ள
குழாய் என்று சொல்லுகிறார்களே அம்மாதிரி குழாய்களை நகர்ப்பகுதி
களுக்குக் கொடுக்கும் வகையில் செய்தால், தண்ணீர்த் தேக்கமும்
ஏற்படாமல், கொசுப்பெருக்கமும் ஏற்படாமல், சுகாதாரக் குறைவும்
ஏற்படாமல், உணவுத்துறைக்கும் கெடுதல் இல்லாமல் நல்ல காரியத்தைச்
செய்ததாக ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்காக நிறையப் பணத்தைச் செல
வழிக்கிறோம். பிரச்சார காரியங்களுக்குச் செலவு செய்கிறோம். குடும்பங்
களைப் பெருக்க விடாமல் செய்யவேண்டுமென்று நினைக்கும் அதேநேரத்
திலே நோய் வந்தால், ஜனங்கள் நோய்க்கு ஆளாகித் தொல்லையுற்று
மடியக்கூடாது என்பதையும் கவனிக்க வேண்டும். இதற்குச் சௌகரியமாகச்
செய்ய வேண்டுமென்றால், மருத்துவத்துறை, பொதுச் சுகாதாரத் துறை
குடிநீர்த்திட்டம் ஆகியவற்றிற்கு நிறையப் பணம் ஒதுக்க வேண்டும்.
இல்லையென்றால் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நல்லமுறையில்
அமலாக்கி, இம்மாதிரித் திட்டங்களுக்குப் பணம் ஒதுக்காமல் இருந்தால்,
உணவுப் பிரச்னையைச் சமாளிக்க இது ஒரு வழிதானோ என்று பலர்
சந்தேகப்படக்கூடிய சூழ்நிலை உருவாகும். அது இந்த மாநிலத்திற்குக்
களங்கமாக அமையும் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்
கொள்ளுகின்றேன்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மாண்புமிகு
தலைவரவர்களே, பொதுச் சுகாதாரம், மருத்துவம். பொதுச் சுகாதார நலத்
ணச் செலவு என்கிற செலவினங்களுக்காக அரசாங்கத்தின் சார்பில் கோரியுள்ள
கோரிக்கைகளை எந்தவிதத் தடங்கலுமின்றி அனுமதிக்க வேண்டுமென்று
தான் இந்தக் கோரிக்கைகளை இந்த அவையின் முன் வைத்திருக்கின்
றேன். காலையிலிருந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சில குறை
பாடுகளை எடுத்துச் சொன்னாலும் பரவலாக இந்தக் கோரிக்கைகளுக்காக
ஒதுக்குகின்ற தொகை நியாயமற்றது என்று விவாதிக்க முடியவில்லை.
போதுமான தொகை ஒதுக்கப்படவில்லையே என்றுதான் பொதுவாகக்
கூறப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிகிறேன். ஒவ்வொரு தொகுதி
யிலும் இருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் எடுத்துச் சொல்லி இருக்
கிறார்கள். நான் அந்தக் கருத்துக்களையெல்லாம் எடுத்து, தனித்தனிக்
குறைபாடுகளுக்கெல்லாம் இப்பொழுது பதிலைச் சொல்லிக்கொண்டிருந்
தால் அதிக நேரமாகிவிடும். ஏற்கெனவே காலதாமதமாகிவிட்டது.
நான் எழும்பொழுதே நான் எவ்வளவு நேரம் பேசுவேனோ என்று பல
பேர் என் முகத்தைப் பார்க்கிறார்கள்; பசியினாலும் பார்க்கலாம் அல்லது
இன்னுமா இங்கு உட்கார்ந்திருக்கவேண்டும் என்ற எண்ணத்தினாலும்
பார்க்கலாம். ஆகவே, அந்தக் குறிப்புக்களை அறிந்திருப்பதால்தான்





நீண்ட நேரம் என்னுடைய பேச்சை ஆற்ற விரும்பவில்லை. ஆனாலும்
ஆரம்பத்திலேயிருந்து உறுப்பினர்கள் பலர் சில நல்ல கருத்துக்களைக்
கூறியிருக்கிறார்கள். அவற்றை இந்த அரசாங்கம் கவனத்திலே வைத்து
"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பெரியவர்கள் உரைக்
கிணங்க, மக்களுக்கு நல்வாழ்வு தருவதிலே இந்த அரசாங்கம் அக்கறை
காட்டுகின்ற காரணத்தினாலே அவைகளில் மிகவும் கவனம் செலுத்தும்
என்ற உறுதியைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நிர்வாகத்திலே பல குறைகள் எடுத்துச் சொல்லப்பட்டன. இந்தத்
துறையிலே பணியாற்றும் சிப்பந்திகளுக்கும், மருத்துவர்களுக்கும் இருக்
கும் வசதிக் குறைவுகளையெல்லாம் கூட எடுத்துச் சொன்னார்கள். சிப்பந்தி
களாக இருந்தாலும் சரி, அதிகாரிகளாகயிருந்தாலும் சரி, உயர்ந்த
பதவியிலேயிருந்தாலும் சரி, அவர்களுக்கெல்லாம் எவ்வளவு வசதிகள்
செய்து தர வேண்டுமோ அவைகளை இந்த அரசாங்கம் உணர்ந்திருக்கிறது.
ஆனால், சிப்பந்திகளும், அதிகாரிகளும் நல்ல பூரணமான ஒத்துழைப்பைத்
தந்தால்தான் எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாக ஆக்க முடியும.

ஆரம்பத்தில் பேசிய மதிப்பிற்குரிய திரு. மகாம்தவன் அவர்கள
நாகர்கோயில் மருத்துவ மனையில் ஏற்பட்ட தகராறை எடுத்துச் சொன்
னார்கள். அங்கே, டாக்டர்களுக்கும், சிப்பந்திகளுக்கும் தகராறு ஏற்பட்டு,
அதனாலே உண்ணாவிரதம் போன்ற நெருக்கடிகளுக்கெல்லாம் அந்த மருத்
துவமனையிலே ஆளாக்கப்பட்டார்கள். அதனையறிந்த உடனே அரசாங்கம்
நடவடிக்கை எடுத்து அவ்வளவு வேறுபாட்டு உணர்ச்சியிருக்கின்ற அந்த
கலவரங்களுக்கும், காரணமாயிருந்த சிப்பந்திகள் வேறு இடத்திற்கு
மாற்றப்பட்டு, அந்தக் கலவரத்தை இப்பொழுது ஓரளவுக்கு சுமுகமான
முறையில் தீர்த்து வைத்திருக்கிறது. எவ்வளவு விரைவிலே அரசாங்கத்தின்
கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறதோ அவ்வளவு விரைவில் அவைகளைச்
செய்ய அரசு முனைந்திருக்கிறது. ஏதோ இந்த அரசாங்கத்தை நடத்து
கிறவர்கள் மீது நாம் குற்றம் சுமத்துகிறோம் என்ற எண்ணத்தில் பல
வற்றை மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச்சொன்னார்கள். டி.எம்.இ.
என்பதற்கு அவர்கள் சொன்னார்கள், Director of Medical Education
என்பதற்குப் பதிலாக District Medical Education என்று
சொன்னார்கள். அது தவறாகக்கூட இருக்கலாம். அவர்களை நீக்கி
விட்டார்கள், பிறகு அவர்கள் போகவில்லை, என் இப்படியெல்லாம்
மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அரசாங்கத்திலே பணியாற்று
கின்ற அதிகாரிகளுக்கு, ஓரளவுக்குப் பணிபுரிகின்ற காலம் முடிவுறும்
என்றால் அவர்கள் மாற்றப்படத்தான் செய்வார்கள். மாற்றிவிட்டு ஏன்
நிறுத்திவிட்டார்கள் என்றால், நிறுத்திவிட்டார்களா என்பதை கனம்
உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொண்டு பேசவேண்டும். மே மாதம்
1-ஆம் தேதியிலிருந்து அவர் பதவி விலக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்,
எனவே அதை நிறுத்தவில்லை.

ஸ்டான்லி மருத்துவ மனையில் உள்ள டீன், முன்னேற்றக் கழக
உறுப்பினருக்கு உறவினராக இருப்பதால்தான் இரயில்வேயிலே இருந்த
வரைக் கொண்டுவந்து இங்கே டீனாகப் போட்டிருப்பதாகச் சொன்னார்
கள். அது தவறு. டீனாகப் பொறுப்பேற்பவர்கள் நல்ல அனுபவம்
பெற்றவர்களாக இருக்கவேண்டும், அவர்கள்தான் வரவேண்டும். அதிலும்
அந்தப் பதவிக்கு வந்துவிட்டபிறகு வேறு பல தொழில்களை, சொந்த
அனுபவத்தை வைத்துக்கொண்டு பயிற்சி கொடுப்பதோ, வேறு தொழி
லில் ஈடுபடுவதோ கூடாது. அப்பேர்ப்பட்டவர்கள்தான் டீனாக வரவேண்டும்.
அப்படி வருகிறவர்கள் யாராக இருந்தாலும் அனுபவம் மிகுந்தவர்களை
இந்த அரசாங்கம் அந்தப் பணியிலே அமர்த்துகிறது. இந்த வகையிலே
இப்பொழுது புதியதாக ஸ்டான்லி மருத்துவமனையின் டீன் போடப்பட்
டிருக்கிறார். அவர் வேறு பல துறைகளில் வருமானத்தைச் சம்பாதிக்க

விரும்பாமல், டீன்ஷிப் பதவியிலே அக்கறையோடு பணியாற்றுவார் எனற நம்பிக்கையிலே அவருக்கு அந்தப் பொறுப்பு தரப்பட்டிருக்கிறது. அந்தப் பதவியைக் கொடுத்ததாலே முன்னேற்றக் கழக உறுப்பினருக்கு உற வினராக இருப்பவர்கள் என்பதற்காக இங்கே கொடுத்தார்கள் என்பது தவறு. அப்படி யாரும் உறவினராக, முன்னேற்றக்கழகத்தின் உறுப்பி னராக இருக்கவில்லை, அதை உறுதியாகச் சொல்லமுடியும். எதையோ நினைத்துக்கொண்டு, எதையோ தாக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் இடைமறிப்பதற்கு மன்னிக்க வேண்டும். அவருக்குக் கொடுப்பதைப்பற்றி இல்லை. ஆனால், வேறு ஒருவரும் அதேமாதிரி பணியாற்றவில்லையா? கொடுப்பது என்றால், இரா யில்வேயில் இருந்தவரைப்போல் ஸ்டான்லி மருத்துவ மனையிலோ, மெட்ராஸ் மெடிகல் காலேஜிலேயோ அந்தத் தகுதியின் அடிப்படை யிலே யாராக இருந்தாலும் தயாராக இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** டீன் பதவிக்கு யாராவது முன்வருகிறார்களா என்று அரசாங்கத்தின் சர்க்குலர் அனுப்பப்பட்டது. ஒருவரும் முன்வரவில்லை. இப்பொழுதுகூட முன்வரத் தயாராகயிருந் தால், 3, 4 கல்லூரிகளில் டீன் பதவி கொடுக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இந்தப் பத விக்கு வந்துவிட்டால் தனியாகப் ப்ராகடீஸ் செய்யக் கூடாது. எனவே தான், அந்தப் பதவியைப் பலர் விரும்புவது இல்லை.

பாளையங்கோட்டையிலே இருக்கின்ற இந்திய மருத்துவ கல்லூரி பற்றி, அங்கே இருக்கும் மாணவர்களுக்கு சம்பள உயர்வைபபற்றிப் பரவலாக இங்கு பேசப்பட்டது. அந்த இந்திய மருத்துவ முறைக் படையிலே விளங்குகின்ற மருத்துவமனைக் கல்லூரியில் படிக்கும் மாண வர்கள் 4 ஆண்டுக்காலம் அவர்களுக்கு படிப்பிற்கான காலயாக இருக் கிறது. ஆனால் அலோபதி முறையில் எம்.பி.பி.எஸ்.-க்கு 5½ ஆண்டு, 6½ ஆண்டு காலம் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. 4 ஆண்டுக் காலம் அவர்கள் படிக்கிறார்கள். அங்கே அவர்கள் படித்துவிட்டு-இனை மும் யாரும் படித்து முடித்துவிட்டு டாக்டராக வெளிவரவில்லை, அப்படி வந்தால் குறைவான சம்பளம் தருவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. குறைவு என்ற அளவில் மிகக்குறைவு என்றும் சொல்ல முடியாது.

அவர்களைப் போலவே இன்றைக்கு வெட்டரினரி டாக்டர்களாக இருப் பவர்கள் கூதைப்பற்றி 4 ஆண்டுகாலத்திற்கு படிக்கின்றார்கள். காலநடை மருத்துவத்திற்கு படிக்கின்றவர்களுடைய படிப்புக் காலமும் 4 ஆண்டு காலம், இந்த இந்திய மருத்துவக் கல்லூரியில் படிக்கின்றவர் களுடைய படிப்புக் காலமும் 4 ஆண்டு காலம். எனவே தான் கால்நடை மருத்துவர்களுக்குத் தரப்படுகின்ற சம்பளத்தை இவர்களுக்கும் தருவதற்கு அரசாஙகம் முடிவு செய்திருக்கிறது. 225—10—275—15, ஆக 425 வரையிலும் அவர்களுக்குச் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஹவுஸ் சர்ஜன்ஸ் ஆன பிறகு, இந்த இந்திய வைத்திய முறையிலே படிக்கின்ற வர்களுக்கு ரூ 100-ம், எம்.பி.பி.எஸ். படிக்கின்றவர்களுக்கு ரூ. 150-ம் என்று இருப்பதே கூட, இந்தப்படிப்பின் காலத்தை ஒட்டித்தான். அவர் களுக்கு ரூ. 100, எம்.பி.பி.எஸ். படித்தவர்களுக்கு ரூ. 150 என்று ஹவுஸ் சர்ஜன்ஸ் ஆக இருக்கும்போது கொடுக்கப்பட்டு வருகிறது. 4 ஆண்டு படிப்பதினால் இந்த வேறுபாடே தவிர எம்.பி.பி.எஸ். படிப்ப வர்களுடைய காலம் ஏறத்தாழ 5½ ஆண்டு காலம். அவர்களுடைய படிப்புக் காலமும் உயர்கிறது, ஹவுஸ் சர்ஜன்ஷி பணமும் உயர்கிறது. இந்திய மருத்துவம் படிப்பதனாலேயே அவர்கள் தரக்குறைவானவர்கள் என்ற முறையிலே சம்பள வேறுபாடு ஏற்பட்டதல்ல என்பதை இது குறித்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் தெரி வித்துக்கொள்கிறேன்.



இந்த அரசாங்கத்தில் நடைபெறுகின்ற மருத்துவ முறையில் புதிய முறைகளெல்லாம் இருக்கவில்லை என்று மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். உள்ளபடியே அதற்காக அரசாங்கம் அதிகக் கவனம் செலுத்தி வருகிறது என்பதை அருள்கூர்ந்து அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். புதிய 'எக்ஸ்-ரே பிளாண்ட்கள்' முறைகளெல்லாம் நமது மாநிலத்தில் பல இடங்களில் வைப்பதற்கு இன்றைக்கு ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய் அதிகமாக, கடந்தஆண்டு இருந்ததைவிட அதிகமாகச் செலவழித்து, இன்னும் நமது மாநிலம் முழுவதிலும் நல்லமுறையிலே 'எக்ஸ்-ரே பிளாண்ட்கள்' வைப் பதற்கும், நமது பொது மருத்துவமனையில் ஜெனிட்டோ யூரினரி சர்ஜரி என்று 24 மணி நேரமும் பணிபுரிகின்ற உயர் இரசாயன ஆய்வுக்கூடத் திற்கு இன்றைக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கி அதை இப்பொழுது ஏற்பாடு செய்து வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன. 1969–70-லே இந்த எக்ஸ்-ரே பிளாண்ட்கள் வைக்க 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டி ருக்கிறது. எனவே மேலும் மேலும் இன்னும் நவீன முறையில் எல்லாவிதமான வசதிகளும் அதிகப்படியாக ஆக்கவேண்டுமென்பதற்காகத் தான் இந்த அரசாங்கம் அதிகப்பணத்தைச் செலவழித்து வருகிறது. கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் டையபெட்டிக் செல் ஒன்றைத் துவக்கி வைத்திருக்கிறோம். டிஃப்தீரியா, டெட்டனஸ், ஊப்பிங் காஃப் இவை களுக்காக அதிகபடியான பணத்தைச்செலவழித்து, குழந்தைகளுக்கு வரும் இந்த நோய்களைத் தடுப்பதற்கு மேலும் அதிகப்படியாகச் செலவழிக்கவும் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

தொழிற் கூடங்களிலே கழிவு நீர்கள், மற்றவர்கள் குடிக்கின்ற தண்ணீரிலே கலந்து அதனால் விவசாயம் கெடுகிறது, அதனாலே மக் களுக்கும் நோய்கள் ஏற்படுகின்றன என்றெல்லாம் இங்கே பரவலாக எடுத்துச் சொல்லப்பட்டது. நான் இந்த மன்றத்தில் பலமுறை கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கூட விளககவுரை தந்திருப்பதை அங்கத்தினர் களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தொழிற்சாலை நடத்து பவர்களுக்கும் தொழிற்சாலை அதிபர்களுக்கும் தகுந்த எச்சரிக்கை கொடுக் கப்பட்டிருக்கிறது. கழிவு நீரை எல்லாம் சுத்தமாக்கி, நல்ல நீரைக் கலந்து வேறு ஆற்றோரத்திலே விடவேண்டும். இல்லையென்றால் அந்தத் தண்ணீரை மீண்டும் தொழிற்சாலையிலே தொழில் கருவிகளை எல்லாம் குளுமைப் படுத்துவதற்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்தத் தண்ணீரில் கிருமிகள் சேர்ந்து, நோய் உண்டாக்கக் கூடிய அளவுக்கு கெட்டுப்போன தண்ணீரை வெளியிலே விடக்கூடாது என்றுதான் அரசாங்கம் ஏற்கெனவே அறிவிப்பு தந்திருக் கிறது. அந்த வகையிலே அவர்களும் செய்கிறார்கள், அதிலே தவறுகள் ஏற்படும்போதெல்லாம் அரசாங்கம் தலையிடுகிறது, அவர்களுக்கு துணை செய்கிறது, அதன் மூலமாக அவர்கள் தண்ணீரை அகற்றுவதற்கான வழி வகைகளைச் சொல்லி, நல்ல முறைகளைக் கையாள அரசாங்கம் வழி கூறி இருக்கிறது. இதை ஒரு பெரிய அபாய அறிவிப்பாக பல பேர் எடுத்துச் சொன்னார்கள். இனியும் இதுபோன்ற தவறுகள் ஏற்படாத அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை எல்லாம் பத்திரிகை மூலமாகக் கூடக் கேட்டு, அவர்கள் இனியும் திருந்திக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ் இருக்கிற இடங்களில் கட்டடங்கள் இல்லையென்று சொன்னார்கள். ஒருவர் சொன்னார், மாட்டுத் தொழுவத் திலே கூட அந்தக் கட்டடங்கள் இருக்கின்றன, நிலையங்கள் இருக்கின்றன, நல்ல கட்டட வசதியில்லை என்று. எமர்ஜென்ஸி காரணமாக புதிய கட்டடங்கள் கட்டக் கூடாது என்று மத்திய அரசாங்கம் ஒரு அறிவிப்பு கொடுத்து, அதிலேயிருந்து ஒரு தடை (பான்) போட்டு இருக்கிறார்கள் ஏற் கனவே. அந்தத் தடை நீக்கப்பட்டால்தான் புதிய கட்டடங்கள் கூட கட்ட முடியும். அந்தத் தடையை எடுக்கவேண்டுமென்று கூட இந்த அரசாங் கம் கேட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, அது எடுக்கப்பட்டுவிட்டால் புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளையும் இந்த அரசாங்கம் செய்யும். அதை மத்திய அரசாங்கத்திடம் அடிக்கடி வற்புறுத்தி வருகின்ற கார

ணத்தினால் நல்ல கட்டடங்களை இப்பொழுது கட்டுவதற்கில்லை. ஒவ்வொரு ஆண்டும் அதைப் பரிசீலனை செய்து, அந்தத் தடை நீங்கியதற்குப்பிறகு அதைக் கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்னும், கனம் உறுப்பினர் திரு. கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் சித்த வைத்தியசாலைகளை கிராமங்களிலே திறக்கலாம் என்று சொன்னார்கள். இந்திய மருத்துவமனைகளை நாம் அதிகப்படியாகத் திறக்க வேண்டுமென்று பல பேர் எடுத்துச் சொன்னார்கள். பாளையங்கோட்டையிலே கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. கீழ்ப்பாக்கத்திலே இருக்கிற மருத்துவமனையில் தனிப்பிரிவு கூட திறக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அரும்பாக்கத்திலே 100 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு பெரிய மருத்துவமனையைக் கட்டி, இந்த இந்திய சிகிச்சை முறைப்படி சிகிச்சை தருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்படிப் பல முறைகளிலே அரசாங்கம் அபிவிருத்தி செய்து வருகிறது. திருச்சியிலே சித்த வைத்தியசாலை வைத்திருக்கிறது, நமது இந்தத் தலைமைச் செயலகத்திலே சித்த வைத்தியசாலை திறக்கப்பட்டு, முறைப்படி சிகிச்சை செய்யப்பட்டு, பலபேர்கள் அதிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்பது உறுப்பினர்கள் பலருக்கும் தெரியும். ஆனாலும், 1964-ஆம் ஆண்டு இந்தக் கல்லூரி பாளையங்கோட்டையிலே திறக்கப்பட்டு மாணவர்கள் படித்தாலும் மாணவர்கள் இதிலே அக்கறை காட்டாமல் இருப்பதாகத்தான் எனக்குத் தெரியவருகிறது. ஆயுர்வேத முறைக்கோ, யுனானி முறைக்கோ மாணவர்கள் வரவில்லை. சித்த முறையைக் கற்றுக் கொள்வதற்குத்தான் மாணவர்கள் வந்திருக்கிறார்கள். 147 பேர் நான்காண்டு காலமாக அங்கே பயிற்சி பெற்று வருகிறார்கள். எனவே, சித்த முறைக்குத்தான் மாணவர்கள் வருகிறார்களே தவிர, ஆயுர்வேத, யுனானி முறைக்கு மாணவர்கள் வரவில்லை. பலரும் எடுத்துச் சொன்னார்கள். ஆயுர்வேதத்திலே, யுனானியிலே அதிகப்படியாக மாணவர்கள் விருப்பம் காட்டாத காரணத்தினால்தான் சித்த முறைகளைக் கையாண்டு வருகிறோம். அதையெல்லாம் மேலும் அபிவிருத்தி செய்யவேண்டுமென்றுதான் பெரிய திட்டங்களை எல்லாம் இந்த அரசாங்கம் உருவாக்கிக் கொண்டு வருகிறது.

உறுப்பினர்கள் பலர் ஹோமியோபதி முறையையும் அரசாங்க ரீதியாக அங்கீகாரம் செய்யவேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். கடந்த முறை இந்த மாமன்றத்திலே அதற்காக நல்ல ஒரு மசோதா உருவாக்கப்பட்டிருக்கிறது. 1965-ஆம் ஆண்டு இந்த முறைகளை எல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டும், அதற்காக நாம் திட்டங்களை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த மாமன்றத்திலே இரண்டு அவைகளும், மேலவை, கீழவை இரண்டு அவைகளிலுமுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அடங்கிய பொறுக்குக் குழுவுக்கு, செலக்ட் கமிட்டிக்கு விடப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு ஒரு மசோதா உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த மசோதா விரைவிலே இந்த மன்றத்திலே உங்கள் முன்னால் உங்களது கருத்துக்களுக்காகக் கொண்டு வரப்படும். அதிலே நீங்கள் உங்கள் கருத்துக்களைச் சொல்லி, மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டும். அந்த மசோதா விரைவிலே வரும் என்ற உறுதியையும் நான் உங்கள் மத்தியிலே சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாகவே, அதிகப்படியாக படுக்கை வசதிகள் இருக்கவில்லை, மருந்துகள் இருக்கவில்லை என்று கனம் உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் கூட பேசும்போது சொன்னார்கள். மருந்துகள் எல்லாம் அதிகப்படியாகக் கொடுக்கப்படவில்லை, இந்தப் பட்ஜெட்டைப் பார்க்கும்போது அதிகப்படியாக கணக்கு இருக்கவில்லை என்று சொன்னார்கள். உள்ளபடியே கவனித்தோமானால், அதிகப்படியாக ஆகியிருக்கிறதே தவிர, குறைவாக இருக்கவில்லை.





இனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 1967–68-ல் ஆக்சுவல்ஸ் ரூ 2,45,00,000. 1968–69-ல் ரிவைஸ்டு எஸ்டிமேட்படி ரூ. 2,65,00,000. 1969–70-ல் ரூ. 2,74,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர, குறைவாக இருக்கவில்லை. மருந்து போதுமானதாக இருக்கவில்லை. இன்னும் அதிகப்படியான மருந்துகள் தேவை என்றெல்லாம் இங்கு குறைகள் எடுத்துச் சொல்லப்பட்டன. மருத்துவ மனைகளில் இருக்கும் சிவில் அசிஸ்டெண்டு சர்ஜன்களுக்கு அதிகப்படியான மருந்துகள் தேவையானால், அவ்வப்பொழுது மருந்துகள் இல்லையென்றால், அவர்கள் நேரடியாகக் கடைகளில் ஒரு நேரத்தில் ரூ. 50 பெறுமானமுள்ள மருந்துகளை வாங்க அதிகாரம் இருக்கிறது. மருந்து இல்லை என்று சொல்லி வைத்தியம் செய்துவிடாமல் விட்டுவிடுவதற்கு எந்த நியாயமும் இல்லை. அப்படி அவசரமாக மருந்து வேண்டுமென்றால் அவர்களே நேரில் வாங்கிக்கொள்வதற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. மருந்து இல்லாமல் சிகிச்சை செய்யவில்லை என்ற குறை எங்குமே இருப்பதற்கு இடமில்லை. நாளுக்கு நாள் அதிகமான தொகையைத்தான் ஒதுக்கிக் கொண்டிருக்கிறோம்.

மேலும், பொதுவாக இங்கே பலபேர்கள் பேசினார்கள். மருந்து கலப்பவர்களை, நீண்டகாலமாக இந்தத் துறையிலே இருந்து அனுபவம் பெற்ற காரணத்தினால் அவர்களை டாக்டர்களாக்கிவிடக்கூடாது என்று இங்கே குறிப்பிட்டார்கள். அவர்களை டாக்டர்களாக்கிவிட வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இருக்கவில்லை. அவர்களை டாக்டர்களாக்கப் போகிறோம் என்று யாரும் சொன்னதாக நான் அறியவில்லை. ஆனால், மத்திய அரசிலே இப்படி மருந்து கலப்பவர்கள் நீண்டகாலமாக அனுபவம் பெற்று, 28, 30 வயது ஆகி, 10 ஆண்டு காலம் அனுபவம் இருந்து, அப்படி இந்தத் துறையிலே நன்றாக வேலைசெய்யக்கூடிய அனுபவம் பெற்றவர்களையெல்லாம் மருத்துவத்தில் ஈடுபடுத்தலாமா என்று அவர்களே ஒரு எண்ணத்தை வெளியிட்டார்கள். நம்முடைய அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ,000 பேர்கள் மருத்துவக் கல்லூரிகளில் படித்துவிட்டு, பட்டம் பெற்று வெளிவருகிறார்கள். நாளுக்கு நாள் அதிகப்படியாகப் படித்துக்கொண்டே வருகிறார்கள். இப்படி நல்ல முறையில் படித்துத் தேர்வுபெற்று, பட்டம் பெற்றவர்கள் ஆண்டுக்கு ஆண்டு அதிகப்படியான எண்ணிக்கையில் வருகிறார்கள். நாம் அவர்கள் எல்லோருக்குமே வேலைக் கொடுக்க முடியுமா என்ற சந்தேகம் கூட எழும்புகிற இந்த நேரத்தில், மருந்து கலப்பவர்களை மருத்துவம் செய்ய அனுமதிப்பது என்பதை இந்த அரசாங்கம் நிச்சயம் செய்யாது. அந்த எண்ணமும் இந்த அரசாங்கத்திற்கு இருக்கவில்லை என்று உறுதியாக எடுத்துச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, மருத்துவக் கல்லூரிகளுக்கு செலக்ஷன் பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஆண்டுக்கு ஆண்டுதான் அவர்கள் வழக்குப் போடுகிறார்கள் என்று கனம் உறுப்பினர் எதிர்கட்சியைச் சேர்ந்தவர் கூட சொன்னார். மந்திரிகள் வீட்டுப் பிள்ளைகளுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எம்.எல்.ஏ.-க்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று புகார்கள் சொல்லப்பட்டதாகச் சொன்னார்கள். அப்பொழுதே குறுக்கிட்டுக் கேட்டோம். குறிப்பிட்ட முறையில் புகார்களைச் சொல்ல வேண்டுமென்று சொன்னோம். இன்னும் சொல்லப்போனால், மந்திரிகள் வீட்டுப் பிள்ளைகளுக்குக் கேட்டுக் கூட இடம் கிடைக்கவில்லை. நமது விவசாய அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்களுடைய மகளுக்கு இடம் கிடைக்கவில்லை. அமைச்சர் வீட்டுப் பிள்ளைக்கு இடம் வேண்டுமென்றால், இடம் பெற்றுக்கொண்டிருக்கலாம். ஆனால், அப்படி எடுத்துக் கொள்ளவில்லை. அதற்கு வாய்ப்பும், வசதியும் இருந்தும் கூட அப்படிச் செய்து கொள்ளவில்லை. அம்மாதிரி செய்வது தவறு என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அம்மாதிரி இடம் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று நினைத்திருந்தால், பெற்றுக்கொண்டிருக்கலாம். அப்படிச் செய்யவில்லை. எங்கள் கட்சியைச் சேர்ந்த கொறடா திரு டி. பி. அழகமுத்து அவர்கள் மகளுக்குக் கூட இடம் கிடைக்கவில்லை. காங்கிரஸ் கட்சியைச்

சேர்ந்த உறுப்பினர்களுடைய பிள்ளைகளுக்கு வேண்டுமானால் இடம் கிடைத் திருக்கலாம். அதை வைத்துக்கொண்டுதான அவர் அப்படிப் பேசினாரோ, என்னவோ எனக்குத் தெரியாது.

**திரு. பீ. ஜி கருத்திருமன் :** அப்படிக் கிடைத்திருந்தாலும் தவருகக் கிடைக்கவில்லை. இது மட்டும் தவருகக் கிடைத்திருக்கும் என்று எப்படிச் சொல்ல முடியும்? யாருக்குத் தகுதியிருக்கிறதோ அவர்களுக்குக் கிடைத் திருக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அதற்கு நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி கூற விரும்புகிறேன. அதைத் தான் அவர்கள், அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது எம்.எல்.ஏ. வீட்டுப் பிள்ளைகளுக்கு, மந்திரி வீட்டுப் பிள்ளைகளுக்கு இடம் கிடைத்திருக்கிறது என்று புகார்கள் கூறிக் கொண்டிருக்கிருர்கள என்று சொன்னார்கள. அப்படி யாராவது புகார் சொன்னால், அவர்களுக்குத் தகுதியிருக்கிறது, எனவே அந்தப் பிள்ளைகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கிருர்கள் என்று அவர்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிருர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள். அதை வைத்துக்கொண்டு இந்த மன்றத்தில் பொதுவாக புகார்கள் வந்திருக்கின்றன என்று சொல்வது சரியல்ல. தங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு இடம் கிடைக்கவில்லையே என்று வழக்கு மன்றத்தில் வழக்குப் போடுகிருர்கள. வழக்குப் போடுவதினாலேயே தவறு என்று கூறிவிட முடியாது. பலர் தங்களுக்கு இடம் கிடைக்க வில்லையே என்பதற்காக கற்பனையாக பல குறைகளை வைத்துக்கொண்டு கூட வழக்கு மன்றத்தில் வழக்குப் போடலாம். பிறகு வழக்கு மன்றத்தில் நீதிபதி அந்தக் குறைகள் நியாயமானவைதானா என்று பரிசீலனை செய்து தீர்ப்புக் கூறுகிருர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மருத்துவக் கல்லூரிகளுக்குத் தேர்வு சம்பந்தமாக இம்மாதிரி புகார்கள் வருவதற்குக் காரணம், அதற்காக ஒரு கமிட்டி போடுகிருர்கள். அந்தத் தேர்வில் மாணவர்கள் வாங்கிய மார்க்கு களை வெளியிடுவதில்லை. சிபார்சு இருப்பவர்களுக்குத்தான் கிடைக்கிறது என்று வெளியிலே இருக்கும்படியான புகாரை யாரும் மறுக்க முடியாது. இப்பொழுது மட்டுமல்ல, பழைய காலத்திலிருந்தே இம்மாதிரி புகார்கள் இருந்து கொண்டிருக்கின்றன. மாணவர்களுக்கு பரீட்சையில் கிடைத்த மார்க்குகள் எத்தனை, அவர்கள் கமிட்டியினரிடத்தில் வாங்கிய மார்க்குகள் எத்தனை, யார் யார் அப்ளிகேஷன் போட்டிருக்கிருர்கள், யார் யாருக்கு எப்படி சீட் கிடைத்திருக்கிறது என்ற விவரங்களெல்லாம் வெளியிடப்படுவ தில்லை. அந்த நிலையில் கமிட்டி செய்ததுதான் சரி என்று எப்படிச் சொல்வது? தவறே நடந்து இருக்க முடியாது என்று சொல்ல முடியாது. முன்பு என்னுடைய மகனுக்கே மார்க்குகள் வாங்கியிருந்தும் முதல் வகுப் பில் தேறியிருந்தும், பிற்போக்கான நிலையில் இருந்தும் இடம் கிடைக்க வில்லை. அதை எடுத்து ஒரு சாக்காக வைத்துக்கொண்டு, எல்லாம் சரியா கத்தான் நடந்தது என்று சொல்லிவிட முடியாது. நாங்கள் சொல்வ தெல்லாம், பொதுவாக பொதுமக்களிடையே புகார்கள் இருக்கின்றன. சிபார்சு உள்ளவர்களுக்குத்தான் இடம் கிடைக்கிறது என்று பொதுவாகப் புகார் இருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. பொது மக்க ளிடத்திலே உள்ள அந்த எண்ணத்தை நீக்க வேண்டுமென்ருல், என்ன மார்க்குகள் வாங்கிஞர்கள் மாணவர்கள் என்ற பட்டியலை வெளியிடுவதன் மூலம்தான் அதை நீக்க முடியும். இல்லாவிட்டால், அப்படிப்பட்ட புகார்கள் இருந்துகொண்டேதான் இருக்கும் என்பதை நிச்சயமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய பிள்ளைக்குக்கூட கிடைக்கவில்லை என்று. முதல் வருடத்தில் கிடைக்காவிட்டாலும், அடுத்த ஆண்டிலாவது கிடைத்திருக்கும். எப்படியாவது கிடைத்திருக்கிறது.





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கிடைத்திருக்கும் என்ருல், எப்படிக் கிடைத் திருக்கிறது? மார்க்குகள், தகுதி எல்லாவற்றையும்தான் பார்க்கவேண்டும் என்றுசொல்கிறேன். நான் ஒன்று சொல்கிறேன். இப்பொழுது வேண்டுமானு லும் எடுத்துப் பரிசீலனை செய்து பார்க்கலாம் எந்த முறையிலாவது, ஏதா வது தவறுதலாக என் மகனுக்கு இடம் கிடைத்திருக்குமானால், இப்பொழுது வேண்டுமானாலும் கல்லூரியைவிட்டு அவனை நிறுத்துவதற்குத் தயாராக இருக்கிறேன். பாக்கி இருப்பவர்கள் தயாராக இருக்கிருர்களா? தவருக இடம் கிடைத்திருக்கிறது என்று நிரூபிக்கப்பட்டால், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குத் தவருகக் கிடைத்திருக்கிறது என்று நிரூபிக்கப்பட்டால், நாங்கள் எங்கள் பிள்ளைகளை கல்லூரியிலிருந்து வாபஸ் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். அப்படி நிரூபிக்கப்பட்டால் உங்கள் கட்சியில் இருப் பவர்கள் வாபஸ் வாங்கிக்கொள்ளத் தயாரா?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** அது தவறு என்று அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலில் சொல்லும்பொழுது தகுதியை வைத்துக் கிடைத்திருக்கலாம் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் அமைச்சர் அவர்கள் இப் பொழுது பேசிக்கொண்டிருக்கிருர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நான் தவறு என்று சொல்லவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர், கனம் துரைபாண்டியன் அவர்கள் சொன்னார்கள். எம்.எல்.ஏ. பிள்ளைகளுக்கு கிடைக்கிறது என்று ஊரில் இருப்பவர்கள் புகார் சொல்கிருர்கள் என்று சொன்னார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் எதிர்க்கட்சியில் இருந்த பொழுது இந்தவிதமான புகார்களை நீங்கள் சொல்லவில்லையா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நீங்கள் அப்பொழுது சொன்னதை விட இப்பொழுது குறைவாகத்தான் சொல்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இங்கே சட்டமன் றத்தில் புகார்கள் சொல்லும்பொழுது . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள் வீணன புகார்களைச் சொல்ல வில்லை. மக்கள் வெளியே பேசிக்கொண்டிருக்கிருர்கள். அப்படிப்பட்ட புகார்கள் இருக்கின்றன. அவைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான் இதை சட்டமன்றத்தில் சொல்கிறோம். அந்தக் கமிட்டி செலக்ஷன் லிஸ்டை மார்க்குகளோடு வெளியிட்டுவிட்டால் இந்த புகார்களுக்கு இடம் இருக்காது. 20 வருஷங்களாக நாங்கள் செய்யவில்லை என்ருல், நாங்கள் தவறு செய்தோம் என்ருல், நீங்கள் இப்பொழுது வந்திருக்கிறீர்களே. ஏன் ரைட்டாக இருப்பதைச் செய்யக்கூடாது?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** அதே மாதிரி எதிர்க்கட்சியில் நாங்கள் இருந்தபொழுது புகார் செய்தது தவறு என்று வைத்துக் கொண்டு, நீங்கள் இப்பொழுது புகார் செய்யாமல் இருக்கலாமே?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நீங்கள் பெருந்தன்மையோடு செய்யலாம். இந்தக் கமிட்டியினர் அப்ளிகேஷன் எத்தனை, யார் யார் எவ்வளவு எவ்வளவு மார்க்குகள் வாங்கினுர்கள் என்ற விவரங்களையெல்லாம் வெளி யிட்டுவிட்டால், எல்லாவற்றிற்கும் மேலாக நீங்கள் ஆதாரபூர்வமாக நிரூ பிக்க ஒரு ஆதாரம் கிடைக்கும அல்லவா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக்கொள்கிருர்கள், 20 ஆண்டுகாலமாக "நாங்கள் மார்க்குகளை வெளியிடவில்லை" என்று. நீங்களே வெளியிடவில்லையே, எங்களை ஏன் வெளியிடுங்கள், ஏன் வெளியிடக்கூடாது என்று கேட்கிறீர்கள் என்றுதான் கேட்க விரும்புகிறேன். பிற்பகல் 3–00

[1969 மார்ச் 21

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்களுக்கு சௌகரியமாக இருக்கிறதை
எடுத்துக்கொள்ளுகிறீர்கள். காங்கிரஸ்காரக்கள் செய்தார்கள் என்றால்
கஷ்டமாக இருப்பதாலுல், அதை வேண்டாம் என்கிறீர்கள். இப்பொழுது
இருக்கும்படியான பிரச்சினை என்னவென்றால், தவறு செய்துவிட்டோம்.
அதைத் தவிர்க்கும் முறையில், இதைச் செய்யுங்கள் என்கிறோம். இங்கே
உங்களைத்தான் நான் ஸப்போர்ட் செய்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அதிகப்படியான
பணத்தை குடி தண்ணீருக்காக ஒதுக்கவில்லை என்று சொன்னார்கள்.
உள்ளபடியே, நாட்டு மக்கள் அறிவார்கள், நாமும் பார்க்கிறோம். பருவ
மழை தவறிவிட்டது. காலத்தில் மழை பெய்யாததால், குடிநீருக்கு
நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அதை நீக்குவதற்கு இந்த அரசாங்கம்,
மிகவும் அதிகமான கவனம் செலுத்த வேண்டும் என்று மாண்புமிகு
முதல் அமைச்சர் கூட அதிகப்படியான பணத்தைச் செலவழித்து நல்ல
திட்டங்கள் வெகுவிரைவில் குடி தண்ணீர் கொடுக்க நிறைவேற்றப்பட
வேண்டும் என்று இருக்கிறார்கள். ஆகவேதான், இன்றைக்கு உறுப்பினர்
கள் அறிவார்கள். கிராமங்களில் அதிகப்படியான தண்ணீர் கொடுக்க
வேண்டும் என்ற எண்ணத்தில் அதிகப்படியான கிணறுகளை வெட்டியிருக்
கிறது. ஓவர்-ஹெட் டாங்க்ஸ் கட்டியிருக்கிறது. வில்லேஜ் கிராண்ட் என்ற
வகையில், 20 சதவிகிதம் தண்ணீருக்காகவும் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்
கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1969–70-ம் ஆண்டில்
ரூ. 2,47,92,000 என்ற அளவில் வில்லேஜ் கிராண்ட் அதிகமாக உயர்த்
தப்பட்டிருக்கிறது. 31—12—1968 வரையில் 2,770 ஓவர்-ஹெட் டாங்க்ஸ்
கட்டப்பட்டிருக்கின்றன. குடிதண்ணீர்க் கிணறுகள், ட்ரிங்கிங் வெல்ஸ்
54,000 கட்டப்பட்டிருக்கின்றன. அதிகமாகச் செய்ய வேண்டும் என்று
அரசாங்கம் மானியத் தொகையைப் பஞ்சாயத்துக்களுக்கும், நகராட்சி
களுக்கும் பல இடங்களில் கொடுத்து, அரசாங்கத்திற்குக் கொடுக்க
வேண்டிய தவணைப் பணத்தை விரைவிலே கொடுக்கச் செய்வதில் தவறு
கள் ஏற்பட்டிருக்கின்றன. போதுமான பணம் அவர்களிடம் இல்லை.
இடைக்காலத் திட்டங்களை துரிதமாகச் செய்ய முன்வருவதில்லை. நாங்கு
நேரி போன்ற இடங்களுக்கு மானியம் கொடுத்திருக்கிறது. சாக்கடை
திட்டத்திற்காக சாத்தூருக்கு மானியம் கொடுத்திருக்கிறது. அது ஒரு
சலுகையாகக் கொடுத்திருக்கிறது. கோயம்புத்தூர். உதகை, கோவில்பட்டி
போன்ற பல இடங்களில் இடைக்காலத் திட்டம் போட்டு, நெருக்கடியைத்
தீர்க்க அவசர அவசரமாக ஒதுக்கீடு செய்து குடிநீர்த் திட்டங்களைச்
செய்துகொண்டிருக்கிறார்கள். குடிநீர் வேண்டிய அளவிற்குக் கொடுக்க
வில்லை என்றாலும், அரசாங்கம் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு
அதிகமான உதவிகளைச் செய்துகொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்
காட்ட வேண்டிய அவசியம் இல்லை.

கனம் உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்கள் கூறினார்கள், கட்டடங்
களை டவுன் ப்ளானிங் ஸ்கீம்படிக் கட்டச் செய்வதில் தாமதம் ஆகி
விட்டது, குறிப்பிட்ட ஒரு ஸ்கீம் 1944 முதல் 1969 வரை நிறைவேற்றப்
படவில்லை என்று சொன்னார்கள். உள்ளபடியே அது அரசாங்கத்தின்
பரிசீலனையில் இருக்கிறது. சட்ட இலாகா கவனித்து வருகிறது. எவ்
வளவு விரைவிலே கவனம் செலுத்தி, திருத்த முடியுமோ அவ்வளவு
சீக்கிரம் திருத்த இந்த அரசாங்கம் பின்தங்காது. சட்ட இலாகா கூர்ந்து
கவனித்து வருகிறது.

சுதந்திராக் கட்சித் தலைவர் வேதனையோடு சொன்னார்கள்.
களுக்கு "ஏ" கிளாஸ் வேண்டும் என்று கேட்டதாகவும், அவர்
அமைச்சர் செயலாளரிடம் சொன்னதாகவும், அவர் டி.எம்.இ. சுகாதார
சொல்ல, அவர் என்ன வியாதி என்று கேட்க, இவர் இடத்தில்
கோளாறு என்பதை மறைத்து, தோலிலே கெடுதல் என்று இருதயக்
யிருக்கிறார். உள்ளபடியே கேட்க வேதனையாக சொல்லி
அரசாங்கத்தின் பொறுப்பிலே இருந்து இருந்தாலும்,
"ஏ" கிளாஸ் அறைகள் இரண்டுதான் உதவக்கூடியவை
[illegible]வது சிகிச்சை பெற்றுக்கொண்டு இருக்கின்றன. அதில்
[illegible]ருந்து காலிசெய்துவிட்டு, உடனே மற்றவர்களுக்குக் இருந்தால், அவரை கொடுக்க



1969 மார்ச் 21] [டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து]

அமைச்சராக இருந்தாலும், அதிகாரம் இருக்க முடியாது. ஏற்கனவே அந்த அறையில், யாராவது தங்கியிருந்தால், காலிசெய்துவிட்டு, வேறு ஒருவருக்கு யாராலும் கொடுக்க முடியாது. அப்படிப்பட்ட நெருக்கடி ஏற்பட்டு இருக்கலாம். அந்த நிலைக்கு மிக்க வருந்துகிறேன். இடம் இல்லாத காரணத்தால், கொடுக்க முடியாமல் போயிருக்கும். இடம் இருந்து கொடுக்கவில்லை என்று இருக்காது. இருந்தாலும் அப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படாமல் இனி முழுக்கவனம் செலுத்துவோம். அவர்கள் இப்பொழுது இங்கே இல்லை என்றாலும், டாக்டர் ஹாண்டே அவர்களுக்குக் கூற விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். அதிகாரிகளை இது போன்ற காரியங்களில் எல்லாம் குறை கூறவேண்டாம். எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டது போல, நாமாகவே அவர்களை இதைச் செய், அதைச் செய் என்று நேரிடையாக வற்புறுத்திவிட்டு, செய்தாலும் தவறுகச் செய்தார் என்பது, செய்யாவிட்டாலும், செய்யவில்லை என்று குறைகூறுவது என்பது முறை ஆகாது நேரிடையாக அரசாங்க அதிகாரிகளிடம் சொல்லுவது முறையல்ல என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னும், அவுட்-பேஷண்ட்ஸ்க்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் கும்பல் அதிகமாக வருகிறது என்று சொன்னார்கள். இது ஒவ்வொரு மருத்துவ மனையிலும் இருக்கும் பிரச்சினை. இதை அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. சென்னையிலே பெரிய மருத்துவ மனையிலே, ஆயிரக் கணக்கான பேர்கள், நிறைய பேர்கள் கூட்டம் கூடுகிறார்கள்; அவசரமான நோயாளிகளைப் பார்க்க முடியாத அளவிற்குப் பல சங்கடங்கள், நிர்ப்பந்தங்கள் ஏற்படுகின்றன. அதற்காகக் கூடுமான வரையில் சென்னை போன்ற பெரிய நகரங்களில் நகராட்சியின் அதிகாரத்தில் உட்பட்டிருக்கிற மருத்துவ மனைகளில் கூடுமான வரையில் சாதாரண சுரம், காய்ச்சல், தலைவலி, வயிற்றுவலி போன்ற கேடுகளுக்கு சிகிச்சை பெற வேண்டும் என்றும், நீண்டகால நோயாக இருந்தால், அப்படிப்பட்ட மருத்துவ மனைகளில் உள்ள டாக்டர்கள் சிபாரிசின் மேல் பெரிய மருத்துவ மனையில் எடுத்துக்கொள்ளும் அளவுக்கு ஏற்பாடு செய்து செயல்பட முடியுமா என்கிற ஆலோசனை ஒன்று அரசாங்க மட்டத்திலே நடக்கிறது. அப்படிப்பட்ட ஆலோசனை நல்ல முறையில் முடிவுற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டால் அரசாங்க பெரிய மருத்துவ மனைகளில் ஜன நெருக்கடியை நீக்கவும் அவசரமாகச் சிகிச்சை பெற வேண்டியவர்களுக்கு நேரிடையாக சிகிச்சை கொடுக்கவும் வாய்ப்பு அளிக்க முடியும் என்கிற அளவில் அதை அரசாங்கம் கவனித்துக்கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுச்சாமி அவர்கள் சொன்னார்கள். ஏதோ தூங்கிக் கொண்டு இருந்த சாமியாரை குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் அறுவைச் சிகிச்சை செய்துவிட்டார்கள் என்று. ஒருகால் சாமியாருக்கு குழந்தைகள் பிறந்து, தகப்பன் இல்லாத குழந்தைகளாக இருக்கக்கூடாது என்று செய்து இருக்கலாம். அல்லது முப்பது ரூபாய் கிடைக்கிறது என்பதற்காக சாமியார் அறுவை சிகிச்சை செய்துகொண்டிருக்கலாம். தவறுகள் ஏற்படுகின்றன. அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்கிறது. தவறுகள் இருக்கலாம். அறுவை சிகிச்சை தவறாக நடக்கக் கூடாது என்றுதான் கவனம் செலுத்தப்படுகிறது.

இன்னொரு கருத்துச் சொல்லப்பட்டது. மணமக்களுக்கு அறிவுரை கூறலாமே என்று பல உறுப்பினர்களும் கூறினார்கள். நாங்களெல்லாம் கூட அதைத்தான் செய்கிறோம். சீர்திருத்தத் திருமணங்கள் நடக்கும் போது, மணமக்களை நாங்கள் வாழ்த்தும்போது, மூன்று குழந்தைகள் பெற்று நல்வாழ்வு வாழவேண்டும் என்று வாழ்த்திவிட்டு வருகிறோம். இதற்காகத் தனியாகப் பணியாளர்கள் தேவையில்லை. மக்களும்

இதை உணர்ந்திருக்கிறார்கள். ஆசிரியர்களைக் கட்டாயமாக இதில் ஈடுபடுத்து
வதாக இன்று காலையில் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள்.
ஆசிரியர்கள் கட்டாயமாக இதில் ஈடுபட வேண்டுமென்று யாரும்
சொல்லவில்லை. அவர்களுக்கு ஆலோசனைதான் கூறப்படுகிறது.
முறையில்தான் மணமக்களுக்கு அறிவுரை கூறப்படுகிறது. அந்த
உறுப்பினர்களும் மணமக்களுக்கு இப்படி அறிவுரை கூறினால் இது நல்ல
வெற்றியாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கனம்

குடும்பக் கட்டுப்பாடு திட்டம் மேலும் மேலும் வெற்றி காணக்கூடிய
திட்டமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். சிலர் அதைப்
பற்றிய சினிமாப் படம் எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். சினிமாப்
படம் எடுப்பதற்கு முறை இருக்கிறது. சினிமாப் படங்களை எடுப்பதற்கு
வகை செய்யப்பட்டிருக்கிறது. எல்லாரும் நல்ல ஊக்கத்தைத் தந்தால்
மேலும் நல்ல படங்களை எடுக்க முடியும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே பி.எஸ். மணி அவர்கள் 'குடும்பக்
கட்டுப்பாடு திட்டத்தை இந்துக்களிலேதான் அதிகப்படியானவர்கள் செய்து
கொள்கிறார்கள். அதனால் இந்துக்கள் ஜனத்தொகை குறைகிறது. வேறு
மதத்தைச் சேர்ந்தவர்கள் அவ்வாறு செய்துகொள்வதில்லை" என்று
சொன்னார்கள். அது தவறு. எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் குடும்
பக் கட்டுப்பாடு திட்ட சிகிச்சையை செய்துகொள்கிறார்கள். அவர் சொன்ன
அபாய அறிவிப்பு என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பெரு
பாலும் எல்லா மதத்தைச சேர்ந்தவர்களும் இதில் அக்கறை காட்டியிருக்
கிறார்கள்.

அடுத்தபடியாக, சேலம் ஜில்லாவிலுள்ள சாமல்பட்டியில் தாழ்த்தப்
பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு டாக்டர் கொடுத்த மிக்சர் மருந்தை வாங்க
மறுத்ததாகப் புகார் சொன்னார்கள். அந்தப் புகாரைக் கவனித்து தக்க
நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வேன் என்பதை இந்த மன்றத்திலே
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டாக்டர் ஹாண்டே அவர்கள் பப்ளிக் ஹெல்த் சர்வீசை
யும், மெடிகல் சர்வீசையும் ஒன்றாக இணைக்க வேண்டும் என்று சொன
னார்கள். ஏற்னெவே தனித்தனியாக இருந்தவைகளை ஒன்றாக இணைக்க
வேண்டும்......

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவர் அவர்களே, மெடிகல் எஜுகேஷனை
யும், மெடிகல் அட்மினிஸ்ட்ரேஷனையும் ஒன்றாக இணைக்க வேண்டுமென்று
சொன்னேன். இவை ஏற்கெனவே இணைந்திருந்தது. சென்ற ஆட்சியில்
தனித்தனியாகப் பிரிக்கப்பட்டது. ஆகவே, இந்த இரண்டு பிரிவுகளையும்
ஒன்றாக இணைத்தால் ஒரே டைரக்டரின் நிர்வாகத்தின்கீழ் வந்து
திறமையாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்
களே, இது குறித்து எந்த முடிவையும் அரசாங்கம் எடுக்கவில்லை.

அடுத்தபடியாக, எக்ஸ்ரே மெஷின்கள் வேண்டுமென்று சொன்னார்
கள், தென்னார்க்காடு மாவட்டத்தில் அதிகப்படியான இடங்களுக்கு
எக்ஸ்ரே மெஷின்கள் தேவையென்று சொன்னார்கள். மேலும், டாக்டர்
கள் பிரைவேட் பிராக்டீஸ் செய்யக்கூடாது என்றும் சொன்னார்கள்.
டீச்சிங் ஆஸ்பத்திரியிலே இருப்பவர்களுக்கு அதிகப்படியான வருமானம்
வருகிறது. இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி, கிண்டி போன்ற இடங்களில் இருப்ப
வர்கள் எல்லாம் பிரைவேட் பிராக்டீஸ் செய்யக்கூடாது. அரசாங்கம்
அவர்களுக்கு ரூ. 600-க்கு மேற்பட்ட பணத்தை அலவென்ஸ் ஆகக் கொடுத்
துக்கொண்டிருக்கிறது. பிரைவேட் பிராக்டீஸ் செய்யக்கூடாது என்று
சொன்னார்கள். பிரைவேட் பிராக்டீஸ் செய்யக்கூடாது என்று
தடுத்துவிட்டால், ஆஸ்பத்திரிகளுக்கு மருத்துவத்திலே சிறந்தவர்கள், நல்ல
நிபுணர்கள் கிடைக்காமல் போய்விடலாம். பிரைவேட் பிராக்டீஸின் மூலமாக
மருத்துவத் துறையில் டாக்டர்கள் நிபுணர்களாக விளங்குகிறார்கள்.





மேலும், பணம் கொடுத்து சிகிச்சை பெற விரும்புகிறவர்கள் உயர்ந்த அனுபவம் பெற்றவர்களிடத்தில்தான் சிகிச்சை பெற விரும்புகிறார்கள். உயர்ந்த அனுபவம் பெற்றவர்கள் கிடைக்காமல் போய்விடக் கூடும். அந்த ஆலோசனைகளில் அரசாங்கம் இப்போது ஈடுபடவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே காலேஜ்களில் பணியாற்றக்கூடிய நிபுணர்கள் பிரைவேட் பிராக்டீஸ் செய்யக் கூடாது என்ற உத்தரவு இருக்கிறது.

Highly qualified persons will be in the colleges.

சாதாரணமாக அவ்வளவு உயர்ந்த க்வாலிஃபிகேஷன் இல்லாதவர்கள்தான் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். நிபுணர்கள் கிடைக்காத நிலைமைக்குப் போய்விடாது. ஆந்திர மாநிலத்தில் பிரைவேட் பிராக்டீஸ் செய்யக்கூடாது என்று செய்திருக்கிறார்கள். அதனால்தான் எல்லோரும் சென்னைக்கு வரவேண்டுமென்று விரும்புகிறார்கள். பிரைவேட் பிராக்டீஸ் செய்யக்கூடாது என்று செய்துவிட்டால் அது அரசாங்கத்திற்கும் ஒரு நல்ல பெயர். இப்படிச செய்தால் அரசாங்கத்திற்கும் உதவியாக இருக்கும், பொது மக்களுக்கும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அதைப்பற்றி எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை.

அடுத்தபடியாக 'யாஸ்' என்று சொல்லக்கூடிய தொத்து தோல் நோய்கள், ஜாண்டிஸ் போன்ற நோய்கள் மேலும் பரவாதபடி தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றன தொத்துநோய்த் தடுப்பிற்காக எவ்வளவு தொகைகள் ஒதுக்கியிருக்கிறோம், என்ன என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்ற நல்ல விளக்கங்கள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கக் குறிப்புப் புத்தகங்களில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தால் இவைகளைபபற்றி நான் மேலும் விளக்க விரும்பவில்லை.

அடுத்து, திரு. காசிராமன் அவர்கள், 'பத்திரிகையிலே செய்தி போடப்பட்டிருக்கிறது' என்று சொன்னார்கள். பத்திரிகைச் செய்திகளை வைத்துக் கொண்டு நாம் பெரிதுபடுததக்கூடாது. பத்திரிகைகளில் தவறான செய்திகளும் வரலாம், உண்மையான செய்திகளும் வரலாம். பத்திரிகையிலே கூட ஒரு செய்தி வந்தது. "முன்னாள் முதலமைச்சர் அவர்களுடைய ஊரிலே கூட அரிசி கிடைக்கவில்லை, தண்ணீர் கிடைக்கவில்லை" என்று இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது என்று கூறினார். பத்திரிகைகள் எல்லாம் எப்பொழுதுமே உண்மையான செய்திகளைத்தான் போடுகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. உதாரணத்திற்கு "மத்திய பாதுகாப்பு இலாகாவில் இருக்கின்ற ஒரு நிலையத்தை மத்திய அரசாங்கம் சென்னையிலிருந்து வடக்கிற்கு எடுத்துக் கொண்டபோது நமது அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை" என்ற புகார் இந்துப் பத்திரிகையில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, பத்திரிகையிலேகூட தவறுகள் ஏற்படுகின்றன. உறுப்பினர்கள் பத்திரிகைகளில் வரும் செய்திகளைக் குறித்து அதிகம் பேசாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளுக்கு அதிகமான முக்கியத்துவம் தர வேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலே வரும் செய்திகள் தவறு என்றால் எந்தச் செய்தியைத்தான் நம்புவது ? நாங்கள் பல இடங்களுக்கும் போகிறோம். பத்திரிகைகளிலே வரும் செய்திகளை நம்பாவிட்டால் வேறு எப்படி தகவல்களைப் பெறுவது ?

[1969 மார்ச் 21

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பத்திரிகைகளிலே பூராவிலுமே தவறு என்று சொல்லவில்லை. நாமும பத்திரிகைச் செய்திகளை ஆலோசனை செய்து பார்த்து, இது இருக்குமா, இது நடந்திருக்குமா என்று தீர யோசித்துத்தான் நம்ப வேண்டும். பல செய்திகள் தவருகவே வருகின்றன. இந்துப் பத்திரிகையிலே வந்த செய்தியைக் குறிப்பிட விரும்புகிறேன். "நமது சென்னையிலே உள்ள அடையாறு பகுதியிலுள்ள 'டிஃபன்ஸ் இன்ஸ்ட்யூட் ஆஃப் ஃபிஸியாலஜி அண்டு அலேட் ஸயின்ஸ்' என்ற இன்ஸ்டிட்யூட்டை வட நாட்டிற்கு எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். இந்த அரசாங்கம் அதை நிறுத்தி வைக்க எந்த நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளவில்லை" என்று இந்த அரசாங்கத்தின்மீது புகார் கூறி, கட்டுரை எழுதியிருக்கிறது. அது குறித்து இந்த இலாகா தயார்செய்த ஓர் அறிக்கையை இங்கே வாசிக்க விரும்புகிறேன்.

The Defence Institute of Physiology and Allied Sciences was set up in the campus of the Madras Medical College in 1963. From time to time the Government of India were considering the question of the permanent location of the institute but we thought that the matter had been settled once for all that Madras would be the venue, as land and other facilities wanted by the Government of India had been offered by us. In fact even at Ministerial level this Government had been informed that Madras was considered to be the proper location.

In November 1967, a committee constituted by the Defence Ministry, consisting of a Joint Secretary of the Ministry, the Director-General of Armed Forces and Medical Services and three other officers as members visited Madras. The Secretary, Health and Family Planning Department, the Director of Medical Education and the Chief Engineer (Buildings) had detailed discussions and made out a strong case for the permanent location of the institute at Madras itself. It was then made clear to that Committee that Thiru Thomas, formerly Minister for State in the Ministry of Defence, had categorically informed in 1964–65 the then Chief Minister and Minister for Health that the site at Adyar in Madras had been selected as the best location from various points of view, the most important being its distance from the border. Cheaper cost of construction, proximity to the Naval Laboratory, Cochin and Aviation Laboratory, Bangalore were factors favouring the continuance of the Institute at Madras.

In March 1968, the then Chief Minister of Tamil Nadu who was apprised of the move to shift the institute from Madras to the north, sent a D.O. letter to Sardar Swaran Singh, Union Minister for Defence, explaining at length the justification for the location at Madras. In June 1968, the Union Minister for Defence replied that the Government of India had since then considered the need to shift the institute to the north for strategic reasons and decided on the move. The Chief Minister again wrote to the Union Minister for Defence reiterating the earlier stand of this Government and expressing regret that the Central Government had decided to move the institute to Delhi and requested a reconsideration of the matter. The Union Minister for Defence replied in January 1969 stating that the main consideration for the location of the institute in a new site was from the point of view of functional effectiveness.



1969 மார்ச் 21] [டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து]

It is clear from the above that the matter has received the attention at the highest level and all effective steps have been taken to move the Defence Ministry not to shift the Defence Institute from Madras.

இப்படி இரு முறை நமது மறைந்த முதல் அமைச்சர் அவர்கள், இங்கிருந்து அந்த நிறுவனத்தை எடுத்துப் போகக்கூடாது என்பதற்காகக் கடிதம் எழுதியுள்ளார்கள். அப்படி இருக்கிறபோது அதைத் தடுக்க இந்த அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று இந்துப் பத்திரிகையில் வந்திருப்பது சரியல்ல என்பதற்காகத்தான் படித்துக்காட்டினேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பத்திரிகையில் வந்தது கூட தப்பு என்று சொல்ல முடியாது. கடிதம் எழுதியதைத்தவிர என்ன செய்தீர்கள்? அவர்கள்தான் எடுத்துப் போயிருக்கிறார்களே இன்னும் வன்மையான முறையில் அதைத் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும் என்றுதான்...

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசாங்கம் நடவடிக்கை எதுவுமே எடுக்கவில்லை என்று எழுதப்பட்டதுதான் தவறு என்று சொன்னார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இன்னும் தீவிர நடவடிக்கை எடுத்திருக்கலாம். எடுக்கவில்லைதான் என்று தெரிகிறது. பத்திரிகையில் வந்திருப்பது தவறு என்று எப்படி ஆகும்?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : மறைந்த முதல் அமைச்சர் அவர்கள் மிகத் தீவிரமாக இரண்டு முறை இதைக் கண்டித்து எழுதியும் மத்திய சர்க்கார் எடுத்துப்போகிறார்கள் என்றால் இதுதான் அவர்கள் கையாள்கிற தேசிய ஒருமைப்பாடு.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அப்படியானால் இதை வைத்து தீவிரமான போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருக்கலாமே ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்துப் பத்திரிகையைக் காப்பற்ற ஏனோ வலிய வந்து பேசுகின்றார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் ஒன்றும் இந்துப் பத்திரிகை ஏஜெண்டு அல்ல, அதில் வந்ததில் தவறு ஒன்றும் கிடையாது. அந்த ஸ்தாபனத்தை எடுத்துப் போயிருக்கிறார்கள் என்பது உண்மை. இந்த அரசு தீவிர நடவடிக்கை எடுத்திருந்தால் தடுத்திருக்கலாம் என்று எழுதக்கூடாதா? அது ஒரு தரமுள்ள முக்கியமான பத்திரிகை. இன்னும் உங்கள் பத்திரிகையில் என்ன என்ன, எவ்வளவு மோசமாக வருகிறது தெரியுமா? வேண்டாம் அந்தக் கதை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அது தரமான பத்திரிகை என்ற காரணத்திளுல்தான், அந்தத் தரமான பத்திரிகையில் இப்படித் தவருன செய்தி வந்துவிட்டதே என்பதற்காக இப்படி ஒரு விளக்கத்தை அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிருர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பத்திரிகையில் வருகிற செய்தி உண்மையா, தவறு என்று ஆராய்ந்து பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் மெரினு கடற்கரையை அழகுபடுத்துவதுபற்றிச் சொன்னுர்கள். அதுவும் அது உள்ளபடியே அரசாங்கம் இதைக் கவனித்து வருகிறது. அதுவும் முதல் அமைச்சர் அண்ணு அவர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடம். ஆகவே, இன்னும் அதிக அழகாக, தூய்மையாக அதை வைத்துக் கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்படும்.

[டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து] [1969 மார்ச் 21

கடைசியாக, உறுப்பினர்கள் குறிப்பிட்ட நல்ல கருத்துக்களை எல்லாம் இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்று தெரிவித்து—இந்த மானியங்களுக்குக் கொடுத்துள்ள அத்தனை வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப்பெற்று இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேரம் அதிகமாகிவிட்டது என்றாலும், எதிர்க்கட்சித் தலைவர் இங்கு எழுப்பிய ஒரு பிரச்சினைக்கு விளக்கம் அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கிற நேரத்தில் அவர்கள் வாங்கிய எண்களைப் பத்திரிகையில் பகிரங்கமாக வெளியிட வேண்டும், அதுபற்றி புகார்கள் வருகின்றன, தாம் அதை நம்பவில்லை என்றாலும் புகார்கள் வருகின்ற நேரத்தில பதிலளிக்க முடியாது இருக்கிறது, ஆகவே அவர்கள் வாங்குகிற எண்களைப் பத்திரிகையில் வெளியிட்டு புகார் களுக்கு இடம் இல்லாத வகையில் செய்ய வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார்கள். உள்ளபடியே ஒவ்வொரு காரியத்திலும் இப்படிப் புகார்கள் வருகின்றன என்பதற்காக எல்லா விவரங்களையும் மக்கள் மன்றத்தில் வைக்க வேண்டும் என்று சொல்கிற வாதம் சரியான வாதமாகுமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

உதாரணத்திற்கு, வேடிக்கையாகச் சொல்கிறேன், தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் முதுகில் திடீரென்று ஒரு கட்டி வந்திருக்கிறது என்று ஒருவர் சொன்னால் இல்லை இல்லை, அது தவறு, என்பதை எடுத்துக்காட்டுவதற்காக நாளைக்குச் சட்டமன்றத்திற்கு வரும்போது சட்டையைக் கழற்றி விட்டு வரமுடியுமா ?

யார் வேண்டுமானாலும் பொதுக்கூட்டத்தில் சொல்லிவிடலாம். முதல் அமைச்சர் கருணாநிதியின் கால் வீங்கியிருக்கிறது என்பதாக, அதற்காக நானும் ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்டி, என் கால் வீங்கியிருக்கிறது என்று சொன்னது தவறு, இதோ பாருங்கள் என் காலை என்பதாக கூட்டத்தினருக்குக் காலைத் தூக்கிக் காண்பிக்க முடியுமா ? அப்படிக் காட்டினாலும் உடனே அவர்கள் மறுநாளே கூட்டம் போட்டு 'பார்த்தீரா, முதல் அமைச்சர் செய்த தந்திரத்தை, அவர் தூக்கிக் காட்டிய கால் எது—வலது கால் அல்லவா? வீக்கம் இருப்பது இடது காலதானே, அதைக் காட்டினாரா?' என்று சொல்லக்கூடும். அதற்காக மறுநாளே நானும் ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்டி, ஒரு ஸ்டூலைப்போட்டு 'இதோ பாருங்கள் எனது இடது காலை, இதிலும் வீக்கம் இல்லை' என்று சொல்லவேண்டும் என்றால் இது சரிதானா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இப்படித்தான் அரசாங்கம் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் புகார்கள் வருகின்றன என்பதற்காக மக்கள் மன்றத்திலே எல்லா வற்றையும் எடுத்து வைப்பது என்பது சரியாகாது.

குறிப்பாக, மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு விண்ணப்பம் போட்ட மாணவர்கள் பெறுகிற மதிப்பு எண்களைப் பகிரங்கமாக வெளியிடுவதற்கு மாணவர்கள் தேர்வுக் குழுவினர் சம்மதிக்கவில்லை. அரசாங்கம் எல்லாப் பொறுப்புகளையும் அந்தக் குழுவினிடத்திலேயே ஒப்படைத்திருக்கிறது. யார், யார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற லிஸ்டை அவர்கள் அரசாங்கத்தினிடம் கொடுக்க அந்தப் பெயர்களைத்தான் அரசாங்கம் வெளியிடுகிறதே தவிர, யார் யார் விண்ணப்பித்துக்கொண்டார்கள், யார் யார் எவ்வளவு மதிப்பு எண்கள் பெற்றார்கள், யார் யார் மறுக்கப் பட்டார்கள் என்கிற பட்டியல் அரசாங்கத்திற்கு வருவதில்லை.

கடந்த காலங்களில் காங்கிரஸ் கட்சி அரசாங்கம் இருந்த நேரத்தில் கூட மாணவர்கள் பெறுகிற மதிப்பெண் பட்டியலை வைப்பதில்லை. அதை ஒட்டித்தான் 1967-ல் நாமும் மார்க் லிஸ்டைப் பாதுகாத்து வைக்க முடியாமல் போய் விட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் கேட்டுக்



1969 மார்ச் 21] [திரு. மு. கருணாநிதி]

கொண்டதற்கிணங்க, அதற்குப் பிறகுதான் மாணவர்களுடைய மார்க் லிஸ்டு ஒவ்வொரு ஆண்டும்—அரசாங்கத்தினிடம் கூட இல்லை, ஸ்டேட் பாங்கில் பத்திரமாக டெபாசிட் பண்ணி வைக்கப்படுகிறது. யார் தனக்கு அநீதி வழங்கப்பட்டுவிட்டதாகக் கருதுகிறாரோ அவர் நீதிமன்றத்திற்குச் செல்கிற நேரத்தில், ஸ்டேட் பாங்கில் இருந்து நேரே நீதிமன்றத்திற்கு சாட்சிக்கு வர அந்த மார்க் லிஸ்டு தயாராய் இருக்கிறது. ஆக, இப்போது மார்க் லிஸ்டு பத்திரமாகக் காப்பாற்றப்படுகிற அளவில் இருக்கிறது என்பதை வெளிப்படையாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முதல் அமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது கருத்திருமன் முதுகிலே கட்டி என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதற்காகச் சட்டையைக் கழற்ற வேண்டாம். (சிரிப்பு)

திரு. பி. ஜி. கருத்திருமன் : நீங்கள்தான் உங்கள் சட்டையைக் கழற்றி வைக்கிறீர்கள். மருத்துவக் கல்லூரி அட்மிஷன் பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. எவ்வளவுதூரம் உண்மை என்பதுதான் தெரியவேண்டும். இன்னும் தனிப்பட்டமுறையில் முதல் அமைச்சர் அவர்களிடமும் அந்தப் புகார்கள் பற்றிச் சொல்லி யிருக்கிறேன். இதற்கு என்றால் ஐயாயிரம், அதற்கு என்றால் பத்தாயிரம் என்பதாக வாங்கப்படுவது பொதுக்கூட்டத்தில் சொல்லப்பட்டு பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிறது. என்ஜினியரிங் கல்லூரியைப் பற்றி இப்படிப் புகார் வருகின்றதா? கிடையாது. அங்கே அதிகமான போட்டி கிடையாது. உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களே வந்து என்னிடம் சொல்கிறார்கள். 3 டி வாங்கியவனுக்குக் கிடைக்கவில்லை, 2 டி, ஒரு டி, ஒருவ வாங்கிய வனுக்கு எல்லாம் 'சீட்' கிடைத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். என்னிடம் சொல்பவர்களிடம் கூடச் சொல்வேன், நான் நம்புவதற்கு இல்லை, நேரிடையாக நிரூபிக்கவேண்டும், என்று சொல்வேன். எதனால் இப்படிப்பட்ட நிலை வருகிறது? பரவலாகப் புகார்கள் வருகின்றன என்றால் அதை இந்த அரசு தவிர்க்கவேண்டும், தங்களுடைய நல்லபெயரைக் காப்பாற்றிக் கொள்ள முற்படவேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இப்படிப்பட்ட புகார்கள் வரவில்லை என்று சொல்ல முடியுமா? மனசாட்சி இருக்கிறது என்றால் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற் காகத்தான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர், புகார்கள் வருகின்றன, புகார்கள் வருகின்றன என்று சொன் னார்கள். 'டி' வாங்கியவர்களுக்கு செலக்‌ஷன் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் எல்லாம் இன்டர்வ்யூ குழுவினை வைத்துத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மூன்று 'டி' வாங்கியவர்கள் வத்தலும் தொத்தலுமாகப் போய் நின்றால் அவர்கள் டாக்டர் வேலைக்கு லாயக் கானவர்களா என்று பார்க்கவேண்டிய பொறுப்பும் அந்த இன்டர்வ்யூ குழுவினருக்கு இருக்கிறது. எந்தக் கேள்விக்குப் பதில் அளித்து 'டி' வாங்கினார்களோ அவர்களிடம் அதே கேள்வியைக் கேட்டபொழுது அந்தக் கேள்விக்குக்கூட அவர்கள் பதில் சொல்ல முடியாமல் திணறியிருக் கிறார்கள் என்ற செய்தியையும் தெரிவித்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் கூறியதற்கு, நேரமாகிறது என்றாலும்கூட பதில் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இன்டர்வ்யூ நேரத்திலே அவர்களுக்கு பெர்சனாலிடி, சமயோசிதமான பதில் அளிக்கும் திறன் இவற்றைப்பொறுத்தும் அவர்களுக்கு மார்க்குகள் வழங்கப்படுகின்றன. 'டி' வாங்கியவர்கள் பிற்போக்கு வகுப்பைச் சேராதவர்களாக இருந்து, முற்போக்கு வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணிக் கையிலே வருகின்றபொழுது அவர்கள் தள்ளப்படுகின்ற நிலைமையெல்லாம் கூட இருக்கிறது. இதுவும் பல காலமாக இருந்து வருகின்ற நிலைமைதான். ரேட்டு வைத்து வாங்குகிறார்கள், ஐயாயிரம், ஏழாயிரம் பத்தாயிரம் என்று வாங்குகிறார்கள் என்று பழைய காலத்துச் சம்பிரதாயத்தை எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்கள் என்று கருதுகிறேன். பிற்பகல் 3–30

[திரு. மு. கருணாநிதி] [1969 மார்ச் 21

பத்திரிகையிலே எழுதுகிறார்கள், எழுதுகின்ற வீரத்தோடு இன்னார் வாங்கினார்கள் இவரிடம் வாங்கினார்கள் என்று அந்த வீரத்தோடும் அவர்கள் எழுதவேண்டும். வழக்குமன்றத்திற்குச் சென்றால், நீதான் செய்தாய் என்று பத்திரிகையிலே சுட்டிக் காட்டி எழுதுகிறவர்கள் வழக்குமன்றத்திலே அந்தப் பத்திரிகையையே என்னுடைய பத்திரிகை அல்ல என்று வழக்காடுகிறார்கள்.

அதேமாதிரித்தான் இரும்புக் குல்லாயைப்பற்றி எழுதினார்கள்: மோட்டார் வண்டிகளில் செல்லுகின்றவர்கள் இரும்புத்தொப்பி அணிய வேண்டுமென்று ஒரு உத்தரவை நான் பொது மக்களுடைய கருத்தை அறியவேண்டுமென்பதற்காகப் போட்டேன். ஒருவர்—உடனே எதிர்க்கட்சித் தலைவர் சொல்லுவார், அவர் காங்கிரஸ்காரர் அல்ல என்று—அவர் சாதாரணக் காங்கிரஸ்காரர் அல்ல, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்—அவர் எழுதிய கட்டுரையிலே கருணாநிதி ஒரு கம்பெனியுடன் பேரம் பேசிக்கொண்டு இரும்புக் கவசம் அணியவேண்டுமென்று உத்திரவு போட்டிருக்கிறார் என்று எழுதினார். நான் வழக்குமன்றம் சென்றேன். அங்கே, கருணாநிதி அவர்களின் நேர்மையிலும் நாணயத்திலும் எனக்குச் சந்தேகம் இல்லை, நான் அந்தக் கருத்திலே எழுதவில்லை, வேறு கருத்திலே எழுதினேன் என்று சொன்னார். அதற்காக நீதிமன்றத்தால் 500 ரூபாய் அபராதம் கட்டவேண்டுமென்று தண்டனையளிக்கப்பட்டார். அதற்குப் பிறகும் அவர் அப்பீல் செய்துகொண்டிருக்கிறார், நான் அந்த எண்ணத்திலே எழுதவில்லை என்று நிரூபிப்பதற்காக அப்பீல் செய்திருக்கிறார்.

நான் கழகத்தினுடைய பணத்தைக் கையாடிவிட்டேன் என்று எழுதிய போதும் வழக்குமன்றத்திலே அவர்கள் அப்போது தண்டிக்கப்பட்டார்கள்.

பிறகு மதுரையிலே என்னைப் பற்றியும், மதுரை முத்துவைப்பற்றியும் எழுதியதைப்பற்றி வழக்குப் போடப்பட்டது. அப்பொழுது சொன்னார்கள், கருணாநிதியும் முத்துவும் அந்தப் பத்திரிகையை அச்சடித்துக்கொண்டார்கள் என்று.

இம்மாதிரி எழுதுகின்ற நேரத்திலே இருக்கின்ற வீரம் நீதிமன்றப் படிக்கட்டுகளை மிதிக்கின்ற நேரத்திலேயும் இருக்கவேண்டும். அப்படியில் லாமல், 'புகார்கள் வருகின்றன, புகார்கள் வருகின்றன' என்று அவர்கள் சொல்வது அரசியல் நாகரீகமல்ல, பண்புக்குரியதல்ல. எழுதும்பொழுது குறித்து எழுதுங்கள், அப்படி எழுதினால் அதைச் சந்திப்பதற்கு தயாராக இருக்கிறோம் என்ற நிலையிலே எழுதுங்கள். மேடையிலே ஒன்றைப் பேசிவிட்டு நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டால், இல்லை என்று சொல்லக் கூடிய நிலையில இருக்கக்கூடாது.

இது மருத்துவ மானியம் என்பதால் இன்னொன்றையும் இங்கே சொல்ல விரும்புகிறேன். "டாக்டர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உடல் குலுங்கக்கூடாது என்று கூறியிருந்தார்கள். கருணாநிதி அடிக்கடி அவர்களுடைய காலை ஆட்டி ஆட்டி குலுக்கினார், அவர் செத்துவிட வேண்டுமென்று அப்படிச் செய்தார். காமராஜர் வந்து அவரை அப்புறப் படுத்தினார்" என்று மேடையிலே பேசியிருக்கிறார்கள். காமராஜ் அவர்கள் அண்ணா அவர்கள் மேல் எவ்வளவு அன்பு வைத்து இருக்கிறார்கள் என்பதற்காகப் பேசினார்கள் என்றால் அதுவேறு. நான்போய் அவர்களுடைய உயிர் போய்விடவேண்டுமென்பதற்காக ஒரு காரணமாக இருந்தேன் என்று எல்லாம் மேடையிலே பேசுகிறார்கள். இதைவிட மோசமாக பத்திரிகையிலே எழுதுகிறார்கள்.

எழுதுகிறவர்கள் குறிப்பிட்டு எழுதுகிறார்களா? எப்படியாவது தப்பித்துக் கொள்ளவேண்டும் என்ற முறையிலேதான் எழுதுகிறார்கள். தப்பித்துக் கொள்ள வழியில்லை என்றால் கோர்ட்டிலே மன்னிப்புக் கேட்டுக்கொள் கிறார்கள் சமரஸம் கோருகிறார்கள், இல்லையென்றால் தண்டனையடைகிறார்கள். இதுதான் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக கடைசியாகத் அவர்கள் நடத்தி வருகின்ற நிகழ்ச்சிகள்.



1969 மார்ச் 21] [திரு. மு. கருணாநிதி]

எதிர்க்கட்சித் தலைவர் மற்றப் பத்திரிகைகளைப்பற்றிச் சொன்னால் ஒத்துக் கொள்ளமாட்டார்கள். நவசக்தி பற்றிச் சொன்னால் ஒத்துக்கொள்வார்கள். அதிலே இன்று ஒரு செய்தி வந்திருக்கிறது. கருணாநிதியிடம் இருக்கிற கார்கள் கழகத் தோழர்கள் பதவியைப் பயன்படுத்திக்கொண்டு எப்படிச் சம்பாதிக்கிறார்கள் தெரியுமா? எடுத்துக்காட்டாக கருணாநிதியிடம் 1335 அம்பாஸிடர் கார். இன்னொரு கார் ஹெரால்டு கார் இருந்தது. இப்பொழுது 2728 என்கிற கார் கருணாநிதியின் பெயரில் இருக்கிறது. 4555 என்ற கார் கருணாநிதியின் பெயரில் இருக்கிறது. அதேபோல 9999 என்கிற காரும் கருணாநிதியின் பெயரில் இருக்கிறது. இப்படி 5 கார்களை வைத்துக்கொண்டிருக்கிறார் என்றும் ஒரு லட்சம் ரூபாய் பெறுமான முள்ள கார்களை வைத்துக்கொண்டிருக்கிறார் என்றும் எழுதியிருக்கிறார்கள். நீதிமன்றத்திற்கு வந்து நிரூபிப்பார்களா? என்னிடம் 1335 என்கிற கார் இருந்தது. அது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே விற்கப்பட்டு விட்டது. ஹெரால்டு கார், என்னுடையது அல்ல, மாறனுடையது. அதுவும் விற்கப்பட்டுவிட்டது. 9999 என்ற கார் என்னிடத்தில இல்லை. ஒரு சினிமாக் கம்பெனிக்கு ஏறத்தாழ 10, 20 கார்கள இருக்கும், மேகலா பிக்சர்சுக்கு இருக்கக்கூடிய ஒரே கார்தான் 9999. 4555 என்ற கார் மாறன் எம்.பி.யின் கார். அடுத்தபடியாக 2728, அதுகூட என் பெயரில் இல்லை, சர்க்காருடையது. இதைக்கூடத் தெரிந்துகொள்ளமுடியாத பத்திரிகைக்காரர்கள் முதல்வர் 5 கார்கள் வைத்திருக்கிறார் என்று எழுதுகிறார்கள் என்றால் என்ன பொருள்? கருத்திருமன் சாக்கடைப் பத்திரிகைகள் என்று சொன்னார். இது பூக்கடைப் பத்திரிகையாயிற்றே. இப்படி எழுதலாமா? நீதிமன்றத்திற்குச் சென்று நிரூபிக்கலாமா? எனவே, வெளியே உள்ளவர்கள் சொல்கிறார்கள் சொல்கிறார்கள் என்று சொல்லாமல் என்ன என்ன குற்றம் என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள். அந்தக் குற்றச்சாட்டுக்கு நாங்கள் இலக்காகிறோம் என்றால் நாங்கள் பதவியைப் பெரிதாகக் கருதமாட்டோம், ராஜினாமா செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** காங்கிரஸ் கட்சிப் பத்திரிகை, அந்தப் பத்திரிகை, இந்தப் பத்திரிகை என்று குறிப்பிட்டு எல்லாம் சொன்னார்கள். ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன், காங்கிரஸ் கட்சிக்கு என்று எந்தப் பத்திரிகையும் இல்லை, பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறேன். கடிதம், நாத்திகம் போன்ற பத்திரிகைகள் இருக்கலாம். காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்று எந்தப் பத்திரிகையும் கிடையாது. அனுதாப பத்திரிகையாக இருக்கலாம். பத்திரிகை எந்தக் கட்சியைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம், ஆனால்....

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் சொன்னதற்குப் பதில் சொல்லுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** காங்கிரஸ் கட்சிக்கே பத்திரிகை எதுவும் கிடையாது. காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கின்ற பத்திரிகைள் இருக்கலாம், காங்கிரஸ்காரர்கள் நடத்துகிற பத்திரிகைகளாக இருக்கலாம். அதை வைத்துக்கொண்டு குழப்பத்தை உண்டாக்கக்கூடாது. இரும்புத் தொப்பி சமாசாரத்தைப் பற்றிச் சம்பந்தப்பட்டவரிடம் விசாரித்தேன். அவர் சொன்னது என்ன? 'கருணாநிதியும் நானும் ரொம்ப காலம் ஒன்றாக இருந்தவர்கள். நான் எந்த அளவுக்குக் கெட்டவனோ, நான் எந்த அளவுக்குத் தவறுகளைச் செய்வேனோ அதற்குச் சமமாக கருணாநிதி அவர்களும் செய்வார்கள்' என்று கூறினார். (குறுக்கீடு) கோர்ட்டிலே சொன்னார்களா என்று கேட்டால், வெளியிலே என்னிடத்தில் சொன்னதைச் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தெருவிலே, வெளியிலே சொன்னதையெல்லாம் இங்கே பேசுவது நியாயமல்ல. நீதி மன்றத்திலே என்ன சொல்லியிருக்கிறார் என்பதை திரு. கருத்திருமன் அவர்கள் இங்கே சொல்லவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வெளியிலே என்னிடத்திலே அவர் சொன்னதைச் சொன்னேன். நீதிமன்றத்திலே சொன்னதாகச் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளியிலே இப்படிச் சொல்லுவதை எல்லாம் சட்ட மன்றத்திலே சொல்வதற்கு உரிமையிருக்கிறதா ? சொல்லுகின்ற கூற்றுக்குப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் குறிப்பிட்டுச் சொன்னது அவர் நீதிமன்றத்திலே சொன்னது. அவ்வாறு இல்லாமல் கருணாநிதி தவறு செய்யக்கூடியவர் என்ற முறையிலே அவர் சொன்னதாக இவர் சொல்லுகிறார் என்றால் அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். நீதிமன்றத்தில் அவர் சொன்னதைத்தான் சொல்லுகிறார் என்றால் அதற்கும் அவர் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் சொன்னதைச் சொல்லுவதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன். நீதிமன்றத்தில் சொன்னதாக அவர் என்னிடத்தில் சொன்னார். நவசக்தி பத்திரிகையில் வந்த குற்றச்சாட்டுகளைப் பற்றிச் சொல்லி, அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார். காங்கிரஸ் கட்சிக்கு என்று எந்தப் பத்திரிகையும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியது, மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் இப்படிப்பட்ட புகார்கள் இருக்கின்றன என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லும்போது அந்தக் குற்றச்சாட்டு தெளிவான குற்றச்சாட்டாக இருக்கவேண்டும், பத்திரிகைகளிலோ, தெருவிலோ பேசுவதை எல்லாம் இங்கே வந்து பேசக் கூடாது என்பதற்காகச் சொல்லப்பட்ட வாதந்தான். காங்கிரஸ்காரர்கள் பத்திரிகையோ வேறு எந்தப் பத்திரிகையோ இதுபோன்ற செய்திகளை வெளியிட்டு அதைப் பற்றி இந்த மன்றத்திலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடும்போது அந்தக் கூற்றுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளத் தயாரா என்பதற்கான விளக்கத்தைக் கொடுக்கக்கூடிய வகையில் நீங்கள் பேசவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அந்தப் பத்திரிகைகள் எங்கள் கட்சிப் பத்திரிகைகள், அதிலே வந்திருப்பதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்கக்கூடிய நிலை இருக்கக்கூடாது.

அடுத்தபடியாக, மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றிச் சொன்னார்கள். என்னுடைய மகன் பரீட்சைக்குப் போனான். ஃபர்ஸ்ட் கிளாசில் பாஸ் பண்ணினான். இப்போது சட்டசபை முன்னால் வேண்டுமானாலும் கொண்டுவந்து நிறுத்துகிறேன். (குறுக்கீடு : எந்த வருஷம் ?) 1960-ம் ஆண்டு. எந்த முறையில் அவனுக்கு ஸீரோ கொடுக்கப்பட்டிருக்கிறது ? பொறுக்குக் கமிட்டியில் போட்டிருப்பவர்கள் எல்லோரும் நல்லவர்கள் என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வாதம் தேவையில்லை. தேர்வு முறையில் தவறு என்று சொன்னால், எல்லா முறையிலும் தவறு என்றால் தேர்வு செய்கிறவர்களை ஐயுறுவது என்றால் விவாதம் தவறான நிலைக்குப் போகக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. அப்படிச் சொல்லும்போது 'டி' வாங்கிய தேர்வில் கூட தவறு ஏற்பட்டிருக்கலாம் என்று வேறு சிலர் கருதக்கூடும். தேர்வுக்கு என்று அதிகாரிகளை நியமித்துவிட்டு பிறகு அவர்களை நம்பிக்கைக்கு உரியவர்களாகத்தான் கருதவேண்டும். சந்தேகிப்பது என்று போனால் எல்லோரையும் சந்தேகிக்கத்தான் வேண்டியிருக்கும். அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 'இந்த மாணவனை அநியாயமாக நிறுத்திவிட்டார்கள்; தகுதி இல்லாத



இந்த மாணவனைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்' என்று சொன்னால், கோர்ட்டுக்குப் போனால், கோர்ட்டிலே அந்த விவரங்களைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று அமைச்சர் சொல்லிவிட்ட பிறகு அதன்மீது தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பது முறையாகாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு எல்லாம் பொறுத்துக் கொண்டிருந்தீர்கள். அதை மறுத்துச் சொல்ல எனக்கு இடம் கொடுங்கள். ஆகவே, நூற்றுக்கு நூறு தேர்வுக் குழுவில் இருப்பவர்கள் எல்லாம் நல்லவர்கள் என்று சொல்ல முடியாது. 'டி. டி.' வாங்கி இருந்தால் கூட அவர்களும் கூட எக்ஸாமினரைப் பிடித்திருக்கலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எந்த மாணவன் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய வாதம் மாநிலத்திலே இருக்கின்ற பரீட்சைத் தேர்வு அதிகாரிகளைப் பற்றித் தவறான கருத்தை இந்த மன்றம் கொண்டிருக்கிறதோ என்ற எண்ணத்தைக் கொடுப்பதாக இருப்பதால் அது இந்த மாநிலத்தின் பெருமையைக் கெடுப்பதாக ஆகிவிடும். அந்த முறையில் இந்த விவாதம் செல்லுவது விரும்பத் தக்கது அல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலமைச்சர் அவர்கள் பேசிய பேச்சில் 'டி' வாங்கியவர்கள் கூட அதே கேள்விக்குப் பதில் சொல்லவில்லை என்றார்கள். (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மறந்திருக்கலாம்) எப்படி மறந்திருக்கலாம் ? இப்படிச் சொன்னால் தவறு மறந்துவிடுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மறுபடியும் சொல்லுகிறேன். யாருக்கு அநீதி இழைக்கப்பட்டது ? தாங்கள் தயவுசெய்து குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். எதோ பத்திரிகையில் வந்தது, யாரோ வெளியிலே சொன்னார்கள் என்றெல்லாம் பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்கள் கட்சி அங்கத்தினர்களே கூடச் சொன்னார்கள்.

**ஆளும் கட்சி வரிசையில் பலர் :** யார் ? யார் ? யார் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சும்மா சத்தம் போடாதீர்கள். பயம் இருப்பதால்தான் சத்தம் போடுகிறீர்கள். பொதுவான தவறைச் சொல்லுகிறோம். அதைப் பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் புகார் எல்லாத் தரப்பில் இருந்தும் வருகிறது. முதலமைச்சர் அவர்கள் கேசைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். தனியாக அதைப்பற்றி விவாதம் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். இதைப் போக்க என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போகிறார்கள் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தெளிவாக முதலமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். தேர்வு முறையில் தவறு இருக்கிறது என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். தவறு நிகழ்ந்திருந்தால் அதைப்பற்றிக் குறிப்பாகச் சுட்டிக்காட்டினால் தீர்வு காண வழி இருக்கிறது. அந்த மார்க்குகள் எல்லாம் சென்ற ஆண்டைப்போல் அழிக்கப்படவில்லை. பத்திரமாக ஸ்டேட் பாங்கில் வைக்கப்பட்டிருக்கிறது, யாராவது சந்தேகப்பட்டால் நீதிமன்றத்திற்குப் போகின்ற நேரத்தில் அந்த மார்க் விவரங்கள் எல்லாம் அங்கே வரும். அதைப் பார்த்து தீர்ப்பளிக்கலாம். ஆகவே, மேற்கொண்டு இந்த விவாதத்தைத் தொடரவேண்டாம். இந்த அளவோடு நிறுத்தி விடுவது நல்லது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். 'டி' பெற்றிருக்கிறார் என்றால் அவருடைய பெற்றோர்கள் முயற்சி செய்து வாங்கி இருக்கலாம் என்றெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். அவர்கள் புகார் சொல்வதைப்பற்றி வருத்தம் இல்லை, இந்த அரசாங்கம் பயப்பட்டுக் கொண்டும் இருக்கவில்லை. அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கி இருக்கிறார்கள். பொறுப்பு வாய்ந்த இந்த இடத்தில் பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புகாரை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இன்னார் என்று சொல்லுவதற்கு அவர் அச்சப்பட வேண்டியதில்லை, கூச்சப்பட வேண்டிய தில்லை. பெரிய குற்றச்சாட்டைக் கூறிவிட்டு அதை நிரூபிக்காமல் பொதுப்படையாகப் பேசுவது நல்லதல்ல. இந்த மன்றத்திலே அப்படி நடந்துகொண்டதும் சரியானது அல்ல. இது சம்பந்தமாகத் தாங்கள் இந்த மன்றத்தின் உரிமைகளைக் காப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். அவருடைய நோக்கம், "சாக்கடைப் பத்திரிகை" "சம்பந்தம் இல்லை" என்று சொன்னாலும் கூட, வெளியிலே ஒரு தவறான பிரசாரத்தைச் செய்வதற்காக இந்த மன்றத்தைப பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். குற்றத்தை நிரூபிக்கவில்லை. இந்தமாதிரி பலமுறை அவர்களும் மற்றவர்களும் பேசி அந்த மாதிரிக் குற்றங்களை நிரூபிக்க முடியாத நிலையிலே அவை திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன. ஆகவே, அவர்கள் இந்தமாதிரி பேசியிருப்பதால் இதுவரை, இந்தப் பகுதிகளைப் பொறுத்தவரை மன்றத்தின் நடவடிக்கைகள் முழுவதையும் எடுத்து விடுவது நல்லது. வெளியிலே தவறான முறையிலே பிரசாரம் செய்வதற்கு அவர்கள் இந்த மன்றத்தை பயன்படுத்திக்கொள்வது சரியல்ல. குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும். ஆகவே, அந்த விவகாரங்களை எடுத்து விடவேண்டும். இருக்கட்டும் என்று சொல்கிறார்கள் முதல் அமைச்சர் அவர்கள். நீங்கள் இந்த மன்றத்தின் உரிமைகளைக் காப்பாற்ற வேண்டும். அவற்றை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்று சொல்லிக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் பலமுறை சொல்லி யிருக்கிறேன். அப்படிச் சொல்கிற நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் ஒருதலைப்பட்சமாக இருக்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்படுகிறது. குற்றம் சாட்ட வேண்டாமென்று சொல்லவில்லை. குற்றம் சாட்டும்போது அந்தக் குற்றச்சாட்டு தெளிவாக இருக்கவேண்டும், ஆதாரம் உடையதாக இருக்கவேண்டும், பொதுவான குற்றச்சாட்டுகளாக இருக்கக்கூடாது என்று பலமுறை சொல்லி யிருக்கிறேன். அப்படிச் சொன்னால் அதற்கெல்லாம் பொறுப்பேற்றுக் கொள்ள முடியுமா, அதற்கு ஒரு கமிட்டி அமைக்கவேண்டுமென்று சொல்வது முறையா என்று கேட்டுவிட்டுப் போய்விடுகிறார். பல தீர்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. குற்றச்சாட்டு என்றால் அந்தக் குற்றச்சாட்டு ஆதாரத்தோடு செய்யப்படவேண்டும். குற்றச்சாட்டு சாட்டுகிற உறுப்பினர்கள் அந்தக் குற்றத்தை நிரூபிக்கப் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டு மென்று நான் பல முறை சொல்லியிருக்கிறேன். அந்த மரபை, பெருமையைக் காக்கவேண்டியது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் தலையாய கடமையாக இருக்கிறது. அந்தத் தலையாய கடமையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேரவைத் தலைவருடன் ஒத்துழைப்ப தில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு விதிகள் நல்லமுறையில் கடைப்பிடிக்கப்படுவதால்தான் தமிழ் நாடு சட்டமன்றம் இந்திய நாட்டிலேயே பாராட்டக்கூடிய அளவில் நடை பெற்று வருகிறது. அந்த மரபு, பெருமை மேலும் தொடர்ந்து விளங்குவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இனியாவது ஒத்துழைக்க வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதைப்பற்றி ஒன்றும் சொல்ல வேண்டாம். கோரிக்கைமீது நடந்த விவாதம் பற்றியானால் சொல்லுங்கள்.



**திரு. நா. காசிராமன் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். நான் தடம் புரண்டு போகவில்லை. சூடாக நடந்தது விவாதம். இது அதைச் சற்று தணிக்கும் என்று நினைக்கிறேன்.

மருத்துவ வசதிக்கான செலவுகள் அதிகப்படுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் குறிப்பிட்டது "Directorate of Health Services and Family Planning". -ல் தொகை குறைக்கப் பட்டிருக்கிறது என்பதற்காக சில உதாரணங்களைக் கூறினேன். அப்படிக் குறிப்பிட்டதில் தவறு இல்லை. அடுத்தபடியாக, பேப்பரில் வருகிற சமாசாரங்களைப்பற்றிச் சொல்ல வேண்டாம் என்று சொன்னார்கள். தவறுகள் இருந்தால் அவற்றைத் திருத்திக் கொள்வதற்காகச் சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் சொன்னது, பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. அந்தச் செய்திகள் கூட உண்மையானவைதானா இல்லையா என்பதை ஆராய்ந்து வெளியிட முடியாத நிலையில் கூட வெளியிட்டிருப்பார்கள். மறுநாளே கூட திருத்தம் வரும் அடுத்த நாள் பத்திரிகையில் பார்த்தால் "காஞ்சி புரத்தில் இருந்து வந்த செய்தி தவறானது" என்று கூட வரும். மொத்தத்தில் பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாக வைத்து பேசக் கூடாது என்பதுதான் மரபு.

## 2. தன்னிலை விளக்கம்—தொடர்ச்சி.

**(ஆ) தன் உரையில் குறிப்பிட்ட ஒரு கூற்றை திரு. அ. லெ. சுப்பிரமணியம் திரும்பப் பெறுதல்.**

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். நான் பேசுகிறபோது பி ஐ.எம்.க்கும், எம்.பி.பி.எஸ். க்கும் ஒரு காலகட்டம் என்று சொன்னேன். பி.ஐ எம்.க்கு ஒரு வருடம் குறைவு என்று சொல்லியிருக்கிறார்கள். தவறுதலாகச் சொல்லிவிட்டேன். அதை வித்ட்ரா செய்துகொள்கிறேன். பி ஐ. எம். கோர்ஸ் முடித்துவிட்டு ஹவுஸ் சர்ஜன்ஸாக வருகிறார்கள். அப்படி வரும்போது எம்.பி.பி.எஸ், படித்துவிட்டு வருகிறவர்களுக்கு ரூ. 150 ஸ்டைபண்ட்டும், இவர்களுக்கு ரூ. 100 என்றும் இருக்கிறது. அது ரூ. 150 என்று மாற்றியமைக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பரிசீலிக்கலாம்.

## 6. 1969–70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கை எண் 14—மருத்துவம். வெட்டுத் தீர்மானங்கள்.

திரு. க. இராமமூர்த்தி, திரு. வி. கே. கோதண்டராமன், திரு. கே. என். குமாரசாமி ஆகியோர் இருக்கையில் இல்லையாதலால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பட்டனவாகக் கருதப்படும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஆ. கு. சுப்பையா இவர்களின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் படுகின்றன.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,67,46,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

*நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம்.

திரு. கே. என். குமாரசாமி, திரு. ஆர். கருப்பையா, திரு. சி. கோவிந்தராசன் ஆகியோர் இருக்கையில் இல்லையாதலால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பட்டனவாகக் கருதப்படும்.

திரு. கே. எஸ். கோதண்டராமையா அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

பேரவை முன் உள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,95,04,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு.

வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

பேரவையின் முன் உள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 51,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

பிற்பகல் 8·56 **மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவில் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

7. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and orders.

*Nil.*

*B.—Reports, notifications and other papers.*

* 97. Special Water-Supply and Drainage Schemes 1969–70 (English and Tamil).

† 98. Speech by Hon. Thiru K. A. Mathialagan, Minister for Finance on Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties Administration (English and Tamil).

‡ 99. Policy note under Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading (English and Tamil).

---

* Despatched to Members on 19—3—1969.
† Despatched to Members on 20—3—1969.
‡ Placed on the Table of the House on 20—3—1969.



## இணைப்பு I

[37-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## மருத்துவத் துறை

### கோரிக்கை 14—மருத்துவம் 1969–70.

### கொள்கை.

1. வளங்கொழு அரசு ஒன்றில் மக்களின் உடல் நலனைக் காப்பதும் அவர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதிகளை அளிப்பதும் அரசாங்கத்தின் முக்கியக் கடமைகளாகும். குடியாட்சியின் இறுதி வெற்றி நாட்டு மக்களின் வளமார்ந்த நல்லுடலைப் பொறுத்துள்ளதால் மருத்துவப் பணி மேன் மேலும் திறனும் காலத்திற்கேற்ற முன்னேற்றமும் கொண்டதாய் அமை யும் வண்ணம் அரசு இடையறாது முயன்று வருகிறது. அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களில் ஏற்கனவே உள்ள மருத் துவப் பணிகளை விரிவுபடுத்துவதும், எல்லா மக்களுக்கும் சிறந்த மருத்துவ வசதிகளை அதிக அளவில் எளிதில் கிடைக்கச் செய்வதும், மருத்துவப் பட்டதாரிகளின் எண்ணிக்கையையும், செவிலியர், மருந்து கலப்பவர்கள் முதலிய துணைப் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதும், குடும்ப நலத் திட்டத்தைப் பரப்புதலும், நாட்டு மக்களின் உடல் நலனைப் படிப்படி யாகப் பேணி வளர்ப்பதும் இந்த அரசாங்கத்தின் நோக்கங்களாக இருந்து வந்துள்ளன.

### முதல் ஐந்தாண்டுத் திட்டம்.

2. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மருத்துவப் பணி இயக்குநர் மருத்துவக் கல்விக்கும் பொறுப்புடையவராயிருந்தார் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மருத்துவப் பணிகளுக்கும் மருத்துவக் கல்விக்கும் திட்ட முதலீடு ரூ. 2·48 கோடியாக இருந்தது.

3. முதல் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் அரசு மருத்துவ நிறுவனங்களில் 7,955 படுக்கைகள் மட்டுமே இருந்தன. பிறகு 4 851 படுக்கைகள் கூடுதலாக்கப்பட்டு படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை 12,806 ஆக உயர்த்தப்பட்டது. இத்திட்டக் காலத்தில் உள்ளாட்சிமன்ற மருத்துவ நிறுவனங்களை அரசு எடுத்துக் கொண்டது. இந்த முதல் திட்டக் காலத்திலேதான், மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளின் முக்கியத் துவம் உணரப்பட்டது. மருத்துவத் தனித் துறைகளில் பட்ட மேற்படிப்புத் தகுதியுடைய மருத்துவ அதிகாரிகளைக் கொண்ட வல்லுநர் சிகிச்சை வசதிகளை ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனையிலும் ஏற்படுத்துவதும் மருத்துவக் கல்விக்கான மருத்துவமனைகளில் கூட்டத்தைக் குறைப்பதும் இதன் முடி வான நோக்கமாகும்.

### இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்.

4. மருத்துவப் பணிகளுக்கும், மருத்துவக் கல்விக்கும் செய்யப்பட்ட முதலீடு இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 458.65 லட்சமாக இருந்தது. இத்திட்டக் காலத்தில் ரூ. 458·24 லட்சம் செலவு செய்யப்பட்டது. இரண்டா வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 4,067 படுக்கைகள் கூடுதலாக்கப் பட்டன. ஆக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் அரசு மருத்துவ நிறுவனங்களில் படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை 16,873 ஆக உயர்த் தப்பட்டது.

### மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்.

5. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மருத்துவப் பணிகள், மருத்துவக் கல்வி ஆகிய இவற்றைக் குறித்த திட்ட முதலீடு ரூ. 644·47 லட்சமாக இருந்தது. இத்திட்டக் காலத்தில் செலவிடப்பட்ட தொகை ரூ. 667·03 லட்சம் ஆகும்.

[1969 மார்ச் 21

6. இத்திட்டக் காலத்தில் 3,055 படுக்கைகள் கூடுதலாக்கப்பட்டன. ஆக, அரசு மருத்துவ நிறுவனங்களில் படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை, திட்ட முடிவில் 19,928 ஆக உயர்த்தப்பட்டது. 1966-67 முதல் 1968-69 வரை ஆண்டுத் திட்டக்கால அளவுகளில் 1,371 படுக்கைகள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டு மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 21,299 ஆக உயர்ந்தது.

## நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்.

7. இம்மாநிலத்தில் பிறப்பு, இறப்பு வீதங்கள், ஆயுட்கால நீடிப்பு வீதம் ஆகியவை பற்றிய புள்ளிவிவரங்களைக் காட்டுகிற பின்சேர்க்கப்பட்ட அட்டவணை, திட்ட வேலையாக நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டங்களுடன், மக்களின் பொதுவான உடல்நல நிலையும் முன்னேற்றமடைந்து வருவதைத் தெளிவாக விளக்குகிறது.

| ஆண்டு. | குழந்தை இறப்பு வீதம். | | மகப்பேற்றில் மகளிர் இறப்பு வீதம். | பிறப்பில் ஆயுட்கால நீடிப்பு. | |
|---|---|---|---|---|---|
| | ஆண். | பெண். | | ஆண். | பெண். |
| 1941 | 180·3 | 161·1 | 9·1 | 35·03 | 36·19 |
| 1951 | 123.1 | 113·9 | 5·8 | 36.22 | 37·23 |
| 1961 | 91·5 | 87·2 | 3·6 | 41·09 | 39·24 |

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் சுகாதாரத் துறையில் மனதில் பதியும் வகையான முன்னேற்றம் சந்தேகமின்றி ஏற்பட்டிருக்கையில், சில குறைபாடுகளும் உள்ளன. இவை இதுவரையில் தவிர்க்கப்படாததற்கு முக்கிய காரணம், நிதிவாயில்கள் தொடர்ந்து இக்கட்டான நிலையில் இருந்து வருவது ஆகும். ஏனெனில், கிடைக்கக்கூடிய நிதிவாயில்களை ஒப்பு நோக்கின், இத் தேவைகள் மிகுதியாக உள்ள ஒரு துறையாகும். எனவே, சுற்றுப்புறச் சுகாதாரம், நிறுவன மருத்துவக் கவனிப்பு, மருத்துவப் பணியாளர்கள் பயிற்சி, தொற்று நோய் கட்டுப்பாடு போன்ற மருத்துவ துணை மிகவும் முன்னுரிமை பெற்ற மிகவும் தவிர்க்க முடியாத தேவைகளுக்கும் வரையறுக்கப்பட்டுள்ள நிதிவாயில்களுக்கும் இடையே சமன் காண்பது மிகவும் அவசியமாகிறது. ஒதுக்கப்பட்ட நிதிவாயில்களுக்குள், குடும்பநலத் திட்டத்திற்கு மிக உயர்ந்த முன்னுரிமை அளிப்பது அவசியம் ஆகிறது. ஏனெனில், பொருளாதார மேம்பாட்டின் பலன்கள் கட்டுப்படுத்தப்படாத மக்கள் பெருக்கத்தினால் வீணாவதை அனுமதிக்கக் கூடாது.

8. கடந்த பதினைந்து ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றம் மருத்துவப் பேணுதல் நிறுவன வசதிகளைப் பொறுத்தவரையில் குறிப்பாகக் கிராமப் பகுதிகளில் போதியவை என்று சொல்வதற்கில்லை. கிராமப் பகுதிகளில் மருத்துவர்கள் பற்றாக்குறை இன்னும் நீடித்து வருகிறது. கடந்த காலத்தில் ஆண்டுத் திட்டங்களினால் மாநில மருத்துவக் கல்லூரிகள் எட்டில அனுமதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 1,125 ஆக உயர்த்த முடிந்தது. மேலும் இந்த எண்ணிக்கை முடிந்தபோதிலெல்லாம் உயர்த்தப்படும்.



1969 மார்ச் 21]

அதிகரித்து வருகிறது. 1968-69-ம் ஆண்டில் ஏற்பட்ட செலவு தலைக்கு ரூ. 4·00 ஆக இருக்கையில், இத்தொகை 1969-70-ம் ஆண்டில் ரூ. 4·62 ஆக அதிகரித்தது. கட்டிடத் திட்டங்களுக்காக திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப் பட்ட நிதி ஒதுக்கீடுகளையும் கணக்கில் கொள்வோமானால், நபர்வாரிச் செலவு ரூ. 5·11 ஆகும் என்று கணக்கிடப்படுகிறது.

## மருத்துவக் கல்வி.

10. சிக்கனம், நிர்வாகச் சீரமைப்புப் பற்றிய உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளுக்கிணங்க, தனி மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம் அமைக்கப்பட்டது. மருத்துவக் கல்விப் பயிற்சி, ஆராய்ச்சித் திட்டங்கள் அனைத்திற்கும் இவ்வலுவலகம் பொறுப்பேற்கும். மருத்துவக் கல்விக் கான நிறுவனங்கள். மருத்துவ மனைகள் இவற்றின் நிர்வாகமும் இதன் கீழ் அமையும்.

11. திட்டங்களில் மருத்துவக் கல்வி கணிசமான முக்கியத்துவம் பெற்றுள்ளது. இம் மாநிலத்தில் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளில் சேர்க் கப்படும் மாணவரின் எண்ணிக்கையில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் விளக்கிக் காட்டுகின்றன:—

| | மாநிலத்தில் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை. (1) | திட்டகாலத்தின் முடிவில் சேர்க்கப் பட்டோரின் எண்ணிக்கை. (2) |
|---|---|---|
| முதல் திட்டம் .. .. | 3 | 300 |
| இரண்டாவது திட்டம் .. | 5 | 600 |
| மூன்றாவது திட்டம் .. .. | 8 | 1,025 |
| ஆண்டுத் திட்டங்கள் 1966–69. | 8 | 1,125 |

12. பல்வேறு மருத்துவக் கல்லூரிகளில் முதல் ஆண்டு ஒருங்கிணைப்பு எம்.பி.பி.எஸ். வகுப்பில் இப்பொழுது அனுமதிக்கப்படும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| மருத்துவக் கல்லூரியின் பெயர். (1) | இருக்கைகளின் மொத்த எண்ணிக்கை. (2) |
|---|---|
| சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை .. .. .. | 200 |
| ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை .. .. | 200 |
| கீழ்ப்பாக்கம் மருத்துவக் கலலூரி, சென்னை .. .. | 100 |
| மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை .. .. .. | 200 |
| தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் .. .. | 200 |
| செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு .. | 50 |
| திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி .. | 75 |
| கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர் .. | 100 |
| மொத்தம் .. | 1,125 |

13. புதிய மருத்துவக் கல்லூரி எதுவும் ஏற்படுத்தப்படாத நிலையில், இம் மாநிலத்தில் திறக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளை நின்று நிலை பெறச்செய்து, மேம்படுத்துவதற்காக போதிய நிதி வசதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[1969 மார்ச் 21

பேரளவுக்கு 1968-ல் அனுமதி அளிக்கப்பட்டது. மனையக மருத்துவர் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 150 ஊதியமாகக் கொடுக்கப் பெறவும் அரசு அதிகாரம் அளித்தது.

### முதுநிலை மனையக மருத்துவம்.

**15.** (சுற்றுமுறைக் கட்டாய மனையக மருத்துவப் பயிற்சி முடித்தவர் களும்) இப்பயிற்சி பெற விருப்பமுடையவர்களுமான எம்.பி.பி.எஸ். பட்டதாரிகளுக்கு ஓராண்டு முதுநிலைப் பயிற்சிக் கால மருத்துவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. விருப்பமுடைய மருத்துவர்கள் ஆண்டு ரூ. 120 கட்டணம் செலுத்துவதன்பேரில் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர். பல்கலைக் கழக விதிகளுக்கிணங்க, ஓராண்டு முதுநிலைப் பயிற்சிக்கால மருத்துவப் பயிற்சி முடிக்கும் மருத்துவர்கள், மருத்துவ கல்லூரிகளில் பட்ட மேற்படிப்புப் பட்டமும், தகுதிப் பட்டயப் படிப்புக்கும் (diploma course) அனுமதி கோரி விண்ணப்பம் செய்து கொள்ளும் உரிமை உடையவர்களாவர்.

### மாநில மருத்துவக் கல்லூரிகளில் 1-வது ஆண்டு இணைப்பு

### எம்.பி.பி.எஸ். வகுப்பு தேறத் தவறிய மாணவர்களுக்குக் கூடுதல் வகுப்புகள்.

**16.** 1967-ம் கல்வி ஆண்டுக்கு முன்பு 1-வது ஆண்டு இணைப்பு எம்.பி.பி.எஸ். தேறத தவறிய மாணவர்களுக்காக பல்கலைக் கழகம் கூடுதல் வகுப்பு எதுவும் நடத்த வகை செய்யவில்லை. 1-வது ஆண்டு இணைப்பு எம்.பி.பி.எஸ். வகுப்பில் தேறத் தவறிய மாணவர்கள் தனியே படித்து 1-வது ஆண்டு இணைப்பு எம்.பி.பி.எஸ்.சில் தேர்ச்சியடை யாத பாடங்களில் தேர்வு எழுத வேண்டும். 1-வது ஆண்டு இணைப்பு எம்.பி.பி.எஸ். தேர்வில் தவறிவிட்ட மாணவர்கள், தவறிப்போன பாடங்களில் கூடுதல் பயிற்சி பெற வேண்டுமென்றும், தவறிப்போன பாடங்களில் 1-வது ஆண்டு இணைப்பு எம்.பி.பி.எஸ். எழுதுவதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு மேல்படிப்புச் சான்று பெறுதலும் வேண்டும் என்று 1967-ல் பல்கலைக் கழகம் முடிவு எடுத்தது. பல்கலைக் கழகம் எடுத்த மேற்சொன்ன முடிவையொட்டி, 1-வது ஆண்டு இணைப்பு எம்.பி.பி.எஸ். வகுப்பு நடத்தப்படுகிற சென்னை, மருத்துவக் கல்லூரி யிலும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியிலும் மதுரை மருத்துவக் கல்லூரி யிலும் 1-வது ஆண்டு எம்.பி.பி.எஸ்-சில் கூடுதல் வகுப்புகள் நடத்தப்பட அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இத்தகைய மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்புகள் நடத்துவதை முன்னிட்டு ஏற்பட்ட கூடுதல் வேலைச் சுமையை ஈடு செய்யும் வகையில் கூடுதல் ஆசிரியப் பணியாளரை நிய மிக்கவும் அவசியமான அனுமதியை அரசு வழங்கியது.

**17.** 1968-ம் ஆண்டு முதல் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி யிலும் 1-வது ஆண்டு இணைப்பு எம்.பி.பி.எஸ். வகுப்பு தொடங்கப் பட்டுள்ளது. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் 1-வது ஆண்டு இணைப்பு எம்.பி.பி.எஸ். வகுப்புத் தொடங்கும் செயற்குறிப்புப் பரிசீலனையில் இருந்து வருகிறது.

### 3. பல் மருத்துவப் பட்டப் படிப்பு.

**18.** 1953-ம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் மருத்துவ பிரிவில் பல் மருத்துவப் பட்டப் படிப்பு ஒன்று தொடங்கப்பட்டது. இதில் ஆண்டுதோறும் 15 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பல் மருத்துவப் பிரிவுக்குப் போதிய அளவு இட வசதியின்மையால், தனிப் பட்ட கட்டிட தொகுதி ஒன்று ரூ. 15 லட்சம் செலவில் கட்டப்பட்டது. இதனால் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆக உயர்த்தப்பட்டது. இதுவரை இந்த நிறுவனத்திலிருந்து 191 பேர் பல்



1969 மார்ச் 21]

மருத்துவப் பட்டம் பெற்றுள்ளனர். மருத்துவக் கல்விக்கான நிறுவனங் களில் இதுவரையில் பணியில் அமர்த்தப்பட்டுள்ள பல் மருத்துவப் பட்ட தாரிகள் மொத்தம் 41 பேர் உள்ளனர். பல் மருத்துவப் பட்டம் பெற்ற இளம் மருத்துவர்களிடையே வேலையில்லாச் சிக்கல் மிகுந்த கவலையைக் கொடுத்து வருகிறது. இச்சிக்கலைத் தீர்ப்பதற்காக, வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் பல் சிகிச்சை நிலையங்கள் திறப்பது என்னும் செயற் குறிப்பு ஆலோசனையில் உள்ளது.

### மருந்து தயாரிப்போர் பட்டப் படிப்பு.

**19.** 1939-ம் ஆண்டில் சென்னை மருத்துவக் கல்லூரியில் முதன் முதலாக மருந்து தயாரிப்பு இரண்டாண்டுப் பட்டப் படிப்பு தொடங்கப் பட்டது. மருந்து தயாரிக்கும் துறையில் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டதன் காரணமாக, இந்தப் படிப்பு 1950-ம் ஆண்டில் 3 ஆண்டுப் படிப்பாக மாற்றியமைக்கப்பட்டது. அதன் பின்னர் இப்படிப்பின் கால அளவு மேலும் ஓராண்டு காலம் நீடிக்கப்பட்டது. எனவே, இப்போது இப்படிப்பின் கால அளவு 4 ஆண்டுகளாகும். இப்படிப்பில் 1939-ம் ஆண்டில் 12 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்க, இப்போது 35 பேர் சேர்க்கப்படுகின்றனர்.

**20.** தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் மருந்து தயாரிக்கும் பட்டம் பெற்றவர்கள் அதிக அளவு தேவைப்படுவதால், மருந்து தயாரிக்கும் பட்டப் படிப்பு 1963-ம் ஆண்டில் மதுரையிலுள்ள மதுரை மருத்துவக் கல்லூரியில் தொடங்கப்பட்டது. இதில் 25 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

### மருத்துவம், அறுவை மருத்துவச் சுருக்கப் பட்டப் படிப்பு

**21.** இணை மருத்துவப் பட்டப் படிப்பு (G.C.I.M.) ரத்து செய்யப்பட்டதன் விளைவாக, 1963-ம் ஆண்டில் மருத்துவம், அறுவை மருத்துவத் தகுதி பட்டப் படிப்பு 6 மாத சுருக்கப் படிப்பு முறை கொண்டு வரப்பட்டது. நாட்டு மருத்துவ டிப்ளமோ பெற்றவர்கள் மருத்து வத்திலும், அறுவை மருத்துவத்திலும் தகுதிப் பட்டயத் தகுதியும் பெறுவதற்கு வசதியாக, ஆண்டுதோறும் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் 50 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 400 மாணவர் களுக்கு மேல், மருத்துவத்திலும் அறுவை மருத்துவத்திலும் தகுதிப் பட்டயப் படிப்பில் பணியிருப்புப் பயிற்சியும், தனியார் நடை முறைப் பயிற்சியும் பெற்றனர். நாட்டு மருத்துவப் பட்டம் பெற்ற எல்லா தனியார் மருத்துவர்களும் பணியிருப்புப் பயிற்சி பெறும் மருத்துவர்களும் இந்தத் தகுதிப் பட்டயம் பெற்றனர்.

### சுருக்க எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பு

**22.** மருத்துவ, அறுவை மருத்துவத் தகுதிப் பட்டயம் உடையவர்கள் எம்.பி.பி.எஸ். பட்டம் பெறுவதற்கு வசதி செய்து கொடுக்கும் நோக்கத் துடன் செங்கற்பட்டு அரசாங்கத் தலைமையிட மருத்துவ மனையில் ஒவ்வொரு பிரிவிலும் 80 மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான ஏற்பாட்டுடன் 1964-ல் அரசு சுருக்க எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பு அளிப் பதற்கு அனுமதியளித்தது. படிப்புக்கால அளவு 18 மாதங்களாகும். இவ்வகுப்பு 1965 ஜனவரி முதல் தொடங்கிற்று.

இந்திய மருத்துவ மன்றம் 1970-க்குப் பின்பு சுருக்க எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பைத் தொடர்ந்து நடத்தக் கூடாது என்று தீர்மானித்தது.

### மருத்துவக் கல்வி பட்ட மேற்படிப்பு

**23.** இம் மாநிலத்தில் மருத்துவக் கல்லூரிகளில் அண்மைக் காலங் களில் சேர்த்துக் கொள்ளப்படுவோரின் எண்ணிக்கை விரைந்து அதிகரித்து வருவதால், ஆசிரியர்கள் பயிற்சிக்கான வசதிகளைப் பெருக்குவதன் அவசியம் பெருகிற்று. இம் மாநிலத்தில் பல்வேறு மருத்துவக்

கல்லூரிகளில் பட்ட மேற்படிப்புக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது
தகுதிப் பட்டயம் முதலியவை உட்பட பல்வேறு சிறப்புப் பட்டம்,
தற்போது சேர்த்துக் கொள்ளப்படுவோரின் எண்ணிக்கை சுமார் பாடங்களில்
பேராக இருந்து வருகிறது. ஆனல், இம் மாநிலத்தில் முழுத்தகைமை 750
பெற்ற பட்ட மேற்படிப்பு நிறுவனம் வளர்ச்சி பெற்ருலொழிய, இப்போது
அளிக்கப்பட்டு வரும் பயிற்சியின் தரத்திலும் மேற்கொள்ளப்படுகிற
ஆராய்ச்சிப் பணியின் நிலையிலும் இம்மாநிலம் மிகுந்த
முன்னேற்றத்தைக் காணமுடியாது. மூன்ருவது திட்டக் காலத்திலேயே,
சென்னை அடையாற்றில் அத்தகையதொரு நிறுவனத்தை ஏற்படுத்து
வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அடிப்படை மருத்துவ அறிவியல்
குறித்து இந்நிறுவனத்தின் ஒரு பிரிவின் வளர்ச்சியில் ஏற்கெனவே
பல்கலைக் கழகம் முன்னேறியுள்ளது. அத்தகையதொரு பட்ட மேற்
படிப்பு நிலையத்தைத் துவக்குவதற்கு இந்திய அரசு முறை மரபுப்
படிக்கான ஒப்புதலை இன்னும் அளிக்கவில்லை.

24. 1967–68-ல் கீழ்க்காணும் பட்ட மேற்படிப்புப் பாடங்கள் தொடங்கப் பட்டன :—

எம்.டி. (மயக்க மருந்தியல்), சென்னை, மதுரை மருத்துவக் கல்லூரிகள்.

எம்.டி. (கதிர்வீச்சு மருத்துவம்), சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.

எம்.டி. (தோல் நோயியல்), சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.

தகுதிப் பட்டயம் (மயக்க மருந்தியல்), ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை.

25. 1969–70-ம் ஆண்டில் கீழ்க்காணும் பட்ட மேற்படிப்புகள் தொடங்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது :—

| | |
|---|---|
| சென்னை மருத்துவக் கல்லூரி .. | டி.பி.எம். |
| தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர். | டி.எம். இதய நோயியல்.<br>எம்.டி. பொது மருத்துவம்.<br>எம்.எஸ். பொது அறுவை மருத்துவம். |

**மருத்துவப் பட்டதாரிகள் அல்லாதவருக்கு எம்.எஸ்.சி. பட்டப்படிப்பு**

26. மருத்துவ அறிவியல் பட்டதாரிகள் அல்லாதவருக்கு எம்.எஸ்.சி. பட்டப் படிப்பு 1963-ம் கல்வி ஆண்டு முதற்கொண்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் தொடங்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டிலும் கீழ்க்காணும் பிரிவுகளில் 6 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் :—

பிரிவு .. .. .. உடற்கூற்றியல்.
பிரிவு .. .. .. உடலியல்.
பிரிவு .. .. .. உயிர் ரசாயன இயல்.
பிரிவு .. .. .. மருந்து இயல்.
பிரிவு .. .. .. நுண் உயிரியல்.

**குற்றவியலிலும் குற்றவியல் மருத்துவத்திலும் தகுதிப் பட்டயப் படிப்பு**

27. இம்மாநில அரசாங்க ஒப்பளிப்புடன் காவல், சட்டம், சிறைகள், மருத்துவம் முதலிய துறைகளின் பயனுக்காக குற்றவியலிலும், குற்றவியல், மருத்துவத்திலும் தகுதிப் பட்டயமும், எம்.ஏ. பட்டப் படிப்பும் சென்னை மருத்துவக் கல்லூரியால் நடத்தப்பட்டு வருகின்றன.



**வெளிநாட்டில் உயர்தரப் பயிற்சி**

28. கொழும்புத் திட்டம், உலகச் சுகாதார நிறுவனம் போன்ற பல்வேறு உதவித் திட்டத்தின்கீழ் உயர்தரப் பயிற்சி பெறுவதற்கான வசதிகள் கிடைக்கின்றன. 1960 முதல் 1968 வரை வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்ட மருத்துவ அதிகாரிகள் மொத்தம் 61 பேர் ஆகும்.

**மருத்துவ ஆராய்ச்சி**

29. மாநில மருத்துவ ஆராய்ச்சிக் குழு அமைக்கப்பட்டு, மருத்துவ அறிவியல் கலை இவற்றில் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் 1964-ம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இக்காரியத்திற்கு இக்குழுவினருக்கு ஆண்டுதோறும் மொத்த மானியமாக ரூ. 50,000 கொடுக்கப்படுகிறது. இந்த மொத்த மானியம் 1968-ம் ஆண்டிலிருந்து ரூ. 65,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

**மருத்துவப் பதிவேடுகள் துறையை நிறுவுதல்**

30. சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில், அரசு, மருத்துவப் பதிவேட்டுத் துறையை 1966-ல் தொடங்கியது. நோயாளிகளின் நலனைப் பேணுவதற்கான திட்டங்களை வகுக்கவும், அவர்களின் நலனை நன்கு காக்கவும், மருத்துவ ஆராய்ச்சியில் பயிற்சி அளிக்கவும், வளர்ச்சி காணவும், நெறிப்படுத்தவும் இத்துறை பேருதவியாக உள்ளது.

31. சென்னை, சிசுநல நிறுவனம், குழந்தைகளுக்கான மருத்துவ மனையில் மருத்துவப் பதிவேட்டுத் துறை அமைப்பதற்காக, 1968-ல் மருத்துவப் பதிவேட்டு அதிகாரி ஒருவரும், மருத்துவப் பதிவேடு தொழில் நுட்பன்னர் ஒருவரும் நியமிக்கப்பட்டனர். இத்துறை இப்போது அமைக்கப்பட்டு வருகிறது. படிப்படியாக மற்றுமுள்ள பெரிய மருத்துவக் கல்வி பயிலும் மருத்துவ மனைகளிலும் இத்தகைய துறைகளை நிறுவவும் திட்டமுள்ளது.

**அரசினர் கண்நோய் மருத்துவமனை, சென்னை**

32. அரசினர் கண்நோய் மருந்துவமனை 1819-ல் துவக்கப்பட்டது. உலகத்திலே உள்ள மிகத் தொன்மை வாய்ந்த மருத்துவ மனைகளில் இது இரண்டாவதாகச் சொல்லப்படுகிறது. ("க்ளாகோமா") கண்விழி விறைப்பு நோய் சிகிச்சை பெற பெருவாரியாக நோயாளிகள் இந்த மருத்துவமனைக்கு வருகின்றனர். பல்வேறு தரமான சோதனைகள் இங்கு நடத்தப்படுகின்றன. நோய்த் தன்மைபற்றி அவ்வப்போது ஆய்வு செய்யப்படுகிறது.

33. கண் சேமிப்பு நிலையம் ஒன்று 1947-லேயே துவக்கப்பட்டது. இந்த மருத்துவ மனையில் கண்விழி பின்புறத் திரை அகற்றும் (ரெடினவைப் பிரித்தெடுக்கும்) அறுவை மருத்துவம் நடத்தப்படுகிறது. உட்பகுதிகளுக்கு மின் வெப்பமூட்டுதல், தசைச் சவ்வு-குறுத்தெலும்பு அறுவைச் சிகிச்சை "அருகா" கண் அறுவைச் சிகிச்சை முறை நடத்தப்படுகின்றன.

**கண் முகாம்கள்**

34. சுற்றியங்கும் கண் நோய் மருத்துவப் பிரிவுகளையும் நிறுவுவது ஒவ்வொரு நிலையத்திலிருந்தும் 100 மைலுக்கு மேல் சுற்றிலுமுள்ள கிராமத்தினரின் தேவைகளைக் கவனிக்கவும், கண் நோய் துயர் தணிப்பு நடவடிக்கைகளைக் குறித்து பிரச்சார வேலையைச் செய்யவும், சென்னையிலும் மதுரையிலும் கண் முகாம்களை ஏற்படுத்துவது ஆகிய செயற்குறிப்புகளுக்கு அரசு 1957-ல் அனுமதியளித்தது. ஒவ்வொரு நிலையமும், ஒவ்வொரு முகாமுக்கும் ரூ. 5,000-க்கு மேற்படாத செலவில் ஒவ்வோர் ஆண்டிலும் நான்கு கண் முகாம்களுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அறுவை சிகிச்சை முன் அல்லது பின் பராமரிப்பு வசதிகள் போதிய அளவு இல்லாததால் சிக்கலாகிவிடுகிற அறுவை சிகிச்சைகளை பெருவாரியாகச் செய்ய

முன்வரும் தனியார்களை இந்த முகாம்கள் பயனளிக்கத் தக்கவகையில் தடுத்து நிறுத்துகின்றன. இந்த முகாம்களை மூடிவிடு முன்பு, தேர்ச்சி பெற்றவர்கள் நோய் நீங்கப் பெற்று வெளி அனுப்பப்படுகின்றனர். மேலும் சிகிச்சை பெறவேண்டியவர்கள் தலைமையிட மருத்துவ மனைக்குக் கொண்டுவரப்படுகின்றனர்.

**கண்நோய் இயலிலும் மற்ற படிப்புகளிலும் பயிற்சி (பட்ட மேற்படிப்புகள்)**

35. ஒவ்வொரு மாநிலமும் தனியே கண்நோய் மருத்துவ மனையும், மாவட்டத் தலைமையிட மருத்துவமனை ஒவ்வொன்றிலும் சிவில் அறுவை மருத்துவர் அல்லது சிறப்புப் பாட வல்லுநர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்பது முதலியார் சுகாதார ஆய்வுக்குழு செய்த பரிந்துரை களில் ஒன்றாகும். முறையாக மருத்துவர்களாகப் பணியாற்றுபவர்களுக்கு மட்டுமே நமது மாநிலத்தில் கண் மருத்துவ இயலில் தகுதிப் பட்டயப் படிப்பும், மேற்பட்டப் படிப்பும் படிப்பு விடுப்பு அளிக்கப்படுவதால், நடை முறையில் அப்படிப்புகளில் சேர்ந்து படிக்கச் சிலரே முன் வந்தனர். ஆகவே கண்நோய் மருத்துவ இயல் தகுதிப் பட்டயம், பட்டம் பெற படிப்பு விடுப்பு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மருத்துவர்களுக்கு அளிப்பதென் றும் கருதப்பட்டுள்ளது. மற்றச் சிறப்புப் படிப்புகளுக்கும் இதே நிலை பொருந்தும். பல்வேறு சிறப்புப் படிப்புகளில் உயர்தரப் பயிற்சி பெற இத்தகைய வசதிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

36. உதவி மருத்துவர்களுக்கு ஊக்கம் அளிப்பதன் பொருட்டு "தேர் வுத்தர உதவி மருத்துவர்கள்" (Selection category Assistant Surgeons) எனப்படும் மேல் பதவிகள் முந்தியே ஏற்படுத்தப்பட்டன. 1969—70-ல் இந்த தேர்வுத்தர உதவி மருத்துவர்களின் எண்ணிக்கையை 60-லிருந்து 120 ஆக உயர்த்தவும் இப்போது கருதப்பட்டுள்ளது.

**அரசு இராயப்பேட்டை மருத்துவ மனை**

37. இந்நிறுவனம் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிக்கான பயிற்சி தரும் மருத்துவ மனையாகும். அனுமதியுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 340. ஆனால் அகத்துள்ள பிணியாளர் தொகை பொதுவாக 500-க்கு மேலாக இருப்பதுடன். வரம்புக்கு மேலும் உள்ளது. எல்லா பிரிவுகளிலும் சிறந்த வசதிகளைக் கொண்ட ஒரு சிறந்த மருத்துவமனை இது. மருத்துவமனைக்கு வரும் புறப்பிணியாளர்களின் எண்ணிக்கை 3,500-க்கு மேலாக உள்ளது. இங்கு நாளொன்றுக்கு வரும் விபத்துக்களின் எண்ணிக்கை மாநகரிலுள்ள மருத்துவ மனைகள் எல்லாவற்றையும்விட அதிகமாயுள்ளது. 24 மணி நேர விபத்து மருத்துவ சிகிச்சையும், 24 மணி நேர எலும்பு முறிவு சிகிச்சையும் நடப்பது இங்கு பிரசித்தமானது. 24 மணி நேர உயிர் ரசாயன ஆய்வுக்கூடப்பணி, இரவுக்குள் எல்லா சோதனைகளையும் நடத்துவதற்கான வசதிகளைக் கொண்டு தொடங்கப்பட்டிருக்கிறது. இம் மருத்துவ மனையில் நெஞ்சப்பை முனைப்பு சுவர் சிகிச்சைப் பிரிவு (Intensive cardiac care unit) தொடங்கும் திட்டம் உள்ளது. இம்மாநகரில் இது தனிச் சிறப்புபெற்று விளங்கக்கூடிய இத்திட்டம் குறித்து ஆலோசிக்கப்படும்.

**பயிற்சித் திட்டங்கள்**

**மருந்தியல் தகுதி பட்டப் படிப்பு**

38. இம்மாநிலத்தில் சென்னை மருத்துவக் கல்லூரியில் 1955-ம் ஆண் டில் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட மருந்தியல் தகுதிப் பட்டயப் படிப்பு கொண்டுவரப்பட்டது. சென்னை மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத் துவக் கல்லூரியிலும் மருந்தியல் தகுதிப் பட்டயப் படிப்பில் தற்போது ஆண்டுதோறும் சேர்த்துக் கொள்ளப்படுவோரின் எண்ணிக்கை முறையே 50, 100 பேர் ஆகும். புகுமுக வகுப்புத் தகுதியுடைய மருந்தியல் தகுதிப் பட்டயம் பெற்றவர்கள், இந்தப் படிப்பில் உயர்தரத் தகுதி அடைய வசதி யாக இருக்கும் பொருட்டு, இரண்டாவது ஆண்டு இணைப்பு மருந்தியல்



பட்ட வகுப்பில் சேருவதற்கு இம்மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்கள் அனுமதி அளித்துள்ளன. இதற்கென இவ்வகுப்புகளில் சேர்க்கப்படு வோரின் எண்ணிக்கை சென்னை மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் ஒவ்வொன்றிலும் 15 பேராக இருக்கும்.

**மூக்குக் கண்ணாடி செய்வோருக்குப் பயிற்சி**

39. சென்னை, அரசினர் கண்நோய் மருத்துவ மனையில் இப்பயிற்சி முறை 1962-ல் துவக்கப்பட்டது. பயிற்சிக் கால அளவு இரண்டாண்டு களாகும். ஒவ்வொரு ஆண்டும் இதில் 30 பேர் சேர்க்கப்படுகின்றனர். இம்மாநிலத்தில் பல்வேறு மருத்துவ மனைகளில் உள்ள கண்நோய் மருத்துவத் துறைகளில் மூக்குக்கண்ணாடி செய்பவருக்கு 1966-ல் அரசு 10 பதவிகள் ஏற்படுத்தியுள்ளது. கண்நோய் மருத்துவத் துறைகள் இயங்குகிற மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் மூக்குக் கண் ணாடி செய்பவருக்குப் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

**முடநோயியல் மருத்துவப் படிப்பு (Orthoptists course)**

40. இந்தப் பயிற்சி வகுப்பு தற்போது மதுரையிலுள்ள மதுரை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படுகிறது மகளிர் மட்டுமே இதில் சேர அனுமதிக்கப்படுகின்றனர். இப்பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்படுவோருக்கு படிப்பு உதவிப் பணமாக திங்கள்தோறும் ரூ. 60 வழங்கப்படுகிறது. இப்பயிற்சி வகுப்பு நடத்துவதற்கு அவசியமான ஆசிரியப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

**துப்புரவு ஆய்வாளர் பயிற்சி**

41. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியிலும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியிலும் ஒவ்வொன்றிலும் ஆண்டொன்றுக்கு 50 மாணவர்களுடன் துப்புரவு ஆய்வாளர் பயிற்சி வகுப்பு 1966-ல் தொடங்கப்பட்டது. அடுத்த கல்வி ஆண்டு முதல் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் ஆண்டொன் றுக்கு சேர்க்கப்படுவோரின் எண்ணிக்கையை 100 பேராக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**கதிர்வீச்சு மருத்துவ உதவியாளர்கள் சான்றிதழ் பயிற்சி**

42. சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவமனையில் பார்னார்டு கதிர்வீச்சு மருத்துவ நிலையத்தில் இப் பாடமுறை முதன் முதலில் துவக்கப் பட்டது. ஆண்டுதோறும் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மாவட்ட, வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கென கதிர்வீச்சு மருத்துவப் பணியாளர்கள் அதிகமாகத் தேவைப்பட்டதால், சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் இப்பாடமுறை துவக்கப்பட்டு 1960 முதல் ஆண்டுதோறும் 15 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இப்பாட முறையின் கால அளவு ஓராண்டாகும். பயிற்சி பெற்றவர்களுக்குப் போதிய வேலைவாய்ப்பு கிட்டாமையால் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இப்பாடமுறை பின்னர் நிறுத்திவிடப்பட்டது. இந்தப் பாடமுறை இப்போது சென்னை மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் 20 மாணவருடன் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இப்பாட முறையில் சேர்க்கப்படும் மாணவர் ஒவ்வொருவருக்கும் படிப்பு உதவித் தொகையாக ரூ. 50 அளிக்கப்படுகிறது.

**நிழற்படம் கழுவுவதற்கான உதவியாளர்களுக்குப் பயிற்சி**

43. சென்னை பார்னார்டு கதிர்வீச்சு மருத்துவ நிலையத்திலும், சென்னை ஸ்டான்லி மருத்துவமனையின் கதிர்வீச்சுத் துறையிலும் இப் பாடமுறை நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பயிற்சித் தொடரிலும் இரு மாண வர்கள் இப் படிப்பில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். படிப்புக் கால அளவு 6 திங்களாகும். இதில் சேருபவர்கள் இம்மாநிலத்தில் மருத்துவ மனையிலுள்ள கதிர்வீச்சு மருத்துவத் துறைகளின் நிழற்படம் கழுவும்

உதவியாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். இப் பாட முறையில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களுக்குத் திங்கள்தோறும் படிப்புத் தொகையாக ரூ. 90 அளிக்கப்படுகிறது.

**பல்நோய் சுகாதாரப் பணியாளர்களுக்கும் பல்நோய் குறித்த தொழிலியல் பணியாளர்களுக்கும் பயிற்சி**

44. பல் மருத்துவத் துறையில் சிறந்த கவனிப்புச் சிகிச்சையும் கிடைப்பதற்கு, தகுதியுள்ள துணைப் பணியாளர் கிட்டும் பொருட்டு, பல் நோய் சுகாதாரப் பணியாளர்களுக்கும், பல் நோய் குறித்த தொழிலியல் பணியாளர்களுக்கும் உரிய பயிற்சி முறைகள் மத்திய அரசு தரும் நிதி உதவியைப் பயன்படுத்தி 1965 செப்டம்பர் முதற்கொண்டு சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் மருத்துவப் பிரிவில தொடங்கி வைக்கப் பட்டன. பல் நோய் தொழிலியல் பணியாளர்களுக்கு இரண்டாண்டும் பல் நோய் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஓராண்டும் பயிற்சி அளிக்கப்படு கிறது.

45. 1965–ம் ஆண்டு முதல் இதுவரை பல் நோய் சுகாதார பணியாளர் கள் பயிற்சி முறையில் 18 பேருக்கும், பல்நோய் தொழிலியல் பணியாளர் பயிற்சி முறையில் 12 பேருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பல் நோய் சுகாதார பணியாளர்கள் நால்வரையும் பல் நோய் தொழிலியல் பணியாளர்கள் நால்வரையும் நியமிப்பதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**சென்னை கிண்டியிலுள்ள கிங் நிறுவனத்தில் ஆய்வுக் கூடத் தொழிலியல் படிப்பு**

46. இந்தப் படிப்பு 1960-ம் ஆண்டு முதல் மத்திய அரசு உதவியுடன் தொடங்கப்பட்டது. இதில் ஒவ்வொரு ஆண்டும் 17 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதுவரை 115 பேர்கள் இதில் பயிற்சி பெற்றுள்ளனர்.

**ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர்**

47. இந்தப் பயிற்சி சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, கிண்டி கிங் நிலையம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, மதுரையிலுள்ள மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் நடத்தப்படுகிறது. கிண்டி கிங் நிலையம் நீங்கலாக ஏனைய கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வோராண்டும் 12 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். கிங் நிலையத்தில் 30 பேர் சேர்த்துக்கொள்ளப்படு கின்றனர். பயிற்சிகால அளவில், பணியிலுள்ளவர்கள், இப்பயிற்சிக்கு வராதிருந்தால், என்ன சம்பளமும் படிகளும் வாங்கியிருப்பார்களோ, அதே சம்பளமும் படிகளும் அவர்களுக்கு இப்பயிற்சிக் கால அளவிலும் அளிக்கப்படும். இதுவரை 251 பேர் இவ்வாறு பயிற்சி பெற்றுள்ளனர்.

**மின்முறை-இயன்முறை மருத்துவப் பயிற்சி**

48. சென்னையிலுள்ள அரசுப் பொது மருத்துவமனையில் 1958-ம் ஆண்டு முதல் மின்முறை-இயன்முறை மருத்துவப் பயிற்சிப் பள்ளி யொன்று செயல்பட்டு வருகிறது. 1968-ம் ஆண்டில் இப்பயிற்சி பெற 13 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். மருத்துவக் கல்லூரிகளாகவும் விளங்கும் மருத்துவமனைகளிலும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளிலும், மின்முறை-இயன்முறை மருத்துவர் மூவரின் பணி பயன்படுத்திக்கொள்ளப்பட்டது.

**செவிலியர் சிறப்புப் பயிற்சி**

49. இம்மாநிலத்திலுள்ள அரசு மருத்துவ நிலையங்களின் சிறப்புத் துறைகளிலே செவிலியர் பணியை மேம்படுத்துவதற்காகவே இப்பயிற்சி முறை தொடங்கப்பட்டுள்ளது.





**செவிலியர் பயிற்சி**

50. மூன்றாண்டு செவிலியர் பயிற்சிக்கென 6 பள்ளிகள் உள்ளன. ருத்துவச்சிகளுக்கு 6 திங்கள் பயிற்சியளிப்பதற்கென 5 பள்ளிகளும் ள்ளன. 1968-ம் ஆண்டில் மேற்கூறிய பயிற்சி பெறுவதற்கு 370 பர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். மூன்றும ஐந்தாண்டுத் திட்ட வேலைத் ட்டத்தின்கீழ் 400 பேர் செவிலியர் பயிற்சி பெற்றனர். நான்காம் ந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 450 பேர் செவிலியர் பயிற்சி பெற அனுமதிக் பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.

**துணைச் செவிலியர் மருத்துவச்சிகள் பயிற்சி.**

51. துணைச் செவிலியர்-மருத்துவச்சிகளுக்காக 8 பயிற்சிப் பள்ளிகள் ள்ளன. இவற்றில் ஆண்டுதோறும் 255 பேர் சேர்த்துக் கொள்ளப்படு ன்றனர். இப்போது மொத்தம் 510 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். துவரை 1,918 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்கள் ஆரம்ப காதார நிலையம், குடும்ப நலத் திட்ட அறுவைச் சிகிச்சை நிலையம் முதலானவற்றில் பணியாற்றி வருகின்றனர்.

**புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு மேம்பாடுகள்.**

52. பல்வேறு மருத்துவக் கல்லூரிகளுக்கு கருவிகள், புத்தகங்கள் மேசை, நாற்காலிகள் முதலியவை வாங்குவதற்கு அவசியமான செலவு செய்ய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கல்லூரிகளின் கட்டிடத் திட்டங் களுக்கும ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் புதிய விடுதிக் கட்டிடப் பணியாளர் குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிக்கும 100 மாணவர் தங்கியிருக்க விடுதி கட்டவும், இன்றியமையாப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு கட்டவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இக்கல்லூரிக்கு வேண்டிய கருவிகள், புத்தகங்கள், வெளியீடுகள் முதலியவற்றை வாங்குவதற்கு வேண்டிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இருபாலரும் இணைந்து படிக்கும் மருத்துவக் கல்லூரிக்குக் கல்லூரிக் கட்டிடங்களும், 50 ஆண்கள், 50 பெண்கள் தங்கியிருக்கும்படியான விடுதியும், விடுதிக் காப்பாளர் இருவருக்கும் குடியிருப்புகளும், விளை யாட்டுத்திடலும், ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**மருத்துவக் கல்லூரிகளாகவும் விளங்கும் மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.**

53. அரசுப் பொது மருத்துவமனையில் இதயநோய் பிரிவு ஒன்றைக் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சென்னையில் அரசுப் பொது மருத்துவமனையில் ரூ. 7 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் நரம்பியல் மருத்துவப் பிரிவு ஒன்றைக் கட்டும் பணி நடந்தேறி வருகிறது. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் பிணியியல் பிரிவு ஒன்றும் நுண்ணுயிர்ப் பிரிவு ஒன்றும் கட்டுவதற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. சென்னை, ராயப் பேட்டை அரசு மருத்துவமனையின் தங்கவிழா கொண்டாட்டக் குழுவிட மிருந்து கிடைத்த ரூ. 1·25 லட்சம் நன்கொடையைப் பயன்படுத்தி, அம் மருத்துவமனையில், ரூ 6·25 லட்சம் செலவில் 3 மாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. முடநீக்கியல் பிரிவுக்கும் எக்ஸ்-கதிர் பிரிவுக்கும் மிகவும் அவசியமாயுள்ள இடவசதி இதனால் கிடைக்கும். இப்பணி நிறைவேறி வருகிறது.

## ஏனைய மேம்பாடுகள்.

54. சென்னையில் அரசுப் பொது மருத்துவமனையின் பிறப்புறுப்பு சிறுநீரக அறுவைச் சிகிச்சைத் துறையும் (Genito-Urinary Surgery Department) 24 மணி நேரமும் பணிபுரிகிற பிணியியல்-நுண்ணுயிரியல், உயிர் ரசாயன ஆய்வுக்கூடம் ஒன்றுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 1969-70-ம் ஆண்டில் ரூ. 1 லட்சம் செலவில் நீராவிச் சலவைச் சாலை ஏற்படுத்துவதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்க எண்ணியுள்ளது. வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் புதிய எக்ஸ்-கதிர் இயந்திரங்கள் வாங்கவும், எக்ஸ்-கதிரில் பிரிவுகள் அமைக்கவும், 1969-70 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 5 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மருத்துவக் கல்லூரிகளாகவும் உள்ள மருத்துவ மனைகளில் எக்ஸ்-கதிர் இயந்திரங் கள் அமைக்கவும் மேலும் ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. செங்கற் பட்டிலுள்ள காஞ்சிபுரம் அரசுத் தலைமையிட மருத்துவமனையில் 24 மணி நேரமும் பணிபுரியும் உடன் கவனிப்பு துறையை ஏற்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## மருத்துவக் கல்லூரிகளாய் இராத மருத்துவ மனைகளில் புதிய கட்டிடங்கள்.

55. கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் புதுக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது:—

(1) அரசு மருத்துவமனை, கீழக்கரை.

(2) அரசு மருத்துவமனை, திண்டிவனம்.

(3) அரசு மருத்துவமனை, தேவக்கோட்டை.

(4) அரசு மருத்துவமனை, திருத்தணி.

(5) அரசு மருத்துவமனை, தேனீ.

(6) அரசு மருத்துவமனை, ஜெயங்கொண்டசோழபுரம்.

(7) அரசு மருத்துவமனை, பவானி.

(8) அரசு மருத்துவமனை, துறையூர்.

(9) அரசு மருத்துவமனை, பாகனேரி.

(10) அரசு மருத்துவமனை, அறந்தாங்கி.

56. கீழ்க்கண்ட இடங்களில் பொதுமக்கள் தர முன் வந்துள்ள நன்கொடைகளைப் பயன்படுத்தி புதுகட்டிடங்களையும் மருத்துவ மனைகளையும் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது:—

(1) சேலம் மாவட்டம் ஆலம்பட்டில் 6 படுக்கைகள் உள்ள அரசு மருத்துவமனை.

(2) கோயம்புத்தூர் மாவட்டம், கோட்டூரில் 10 படுக்கையுள்ள மகப்பேறு மருத்துவப் பிரிவு ஒன்றைக் கட்டுதல்.

(3) செங்கற்பட்டு அரசு மருத்துவமனையில் 10 படுக்கையுள்ள மருத்துவ மனைப் பிரிவு ஒன்று கட்டுதல்.

(4) கோயம்புத்தூர் லயன்ஸ் கிளப் கோயம்புத்தூர் மாவட்ட தலைமை யிட அரசு மருத்துவமனையில் 60 படுக்கையுள்ள மகப்பேறு மருத்துவப் பிரிவு ஒன்று கட்டுதல்.

(5) சேலத்தில் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் 12 படுக்கை யுள்ள சிறுவர் வார்டு ஒன்று கட்டுதல்.

## உள்ளாட்சி ஒன்றிய மருந்தகங்களை மாநில அரசு மேற்கொள்வது.

57. உள்ளாட்சி நிதி மருத்துவ நிறுவனங்களை மாநில அரசு மேற் கொள்ளும் திட்டம், கிடைக்கின்ற நிதி வசதி, அந்த இடத்தில் அரசு மருத்துவமனை இருக்க வேண்டியதன் அவசியம், ஏனைய கூறுகள் ஆகிய வற்றைக் கருத்திற் கொண்டு படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.





## தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்.

58. இப்போது தொழு நோய் கட்டுப்பாட்டு முழுநேரச் சிகிச்சை நிலையங் கள் 14 இடங்களில் உள்ளன. இதற்கு மருதது௮ அதிகாரி ஒருவர் பொறுப்பு வகிக்கிறார். இவருக்கு 11 துணை மருத்துவப் பணியாளர்கள் உதவி புரிகின்றனர் எட்டு இடங்களில் முழுநேரத் தொழு நோய்க் கட்டுப் பாட்டு துணை சிகிச்சை நிலையங்கள் உள்ளன. இவற்றிலே மருத்துவ அதிகாரி ஒருவரும், துணை மருத்துவப் பணியாளர்கள் மூவரும் பணியாற்று கின்றனர். ஆய்வு-கல்வி சிகிச்சைப் பிரிவுகள் 78 இடங்களில் தொடங்கப் பட்டுள்ளன. தொழுநோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகளில் நேரடிப் பணி புரிவதற்குத் தேவைப்படும் துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் மருத் துவத் துறையைச் சாராத மேற்பார்வையாளர்களுக்கும் பயிற்சி அளிப் பதற்காக 3 பயிற்சி நிலையங்கள் உள்ளன. இம் மாநிலத்தில் தொழு நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் அனைத்திலுமாக பதிவுபெற்ற மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை (திட்டப் பகுதியிலும் பிற பகுதியிலுமாக) 1,75,892 ஆகும்.

## காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்

59. இம் மாநிலத்திலே 13 காசநோய் நலம் பேண் நிலையங்களும், பொது மருத்துவ மனைகளில் 25 காசநோய் மருத்துவப் பிரிவுகளும், 24 காசநோய் சிகிச்சை நிலையங்களும் உள்ளன. காசநோயாளிகளுக்கு 3,315 படுக்கைகள் உள்ளன. இவை தவிர, தருமபுரி மாவட்டம் நீங்கலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் தரம் உயர்த்தப்பட்ட மாவட்ட காசநோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்று உள்ளது. இம்மாநிலத்திலுள்ள 13 மாவட்டங் களிலும் தரம் உயர்த்தப்பட்ட காசநோய் சிகிச்சை நிலையங்கள் வைத் திருப்பதன் வாயிலாகவும் பி.ஸி.ஜி. ஊசி போடும் பணியை மாவட்ட வேலைத் திட்டத்துடன் இணைத்திருப்பதன் வாயிலாகவும், தமிழ்நாடு இந்தியாவிலே மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. காச நோய் தேசிய நிறுவனத்தில் பயிற்சி பெற்ற முக்கியப் பணியாளர்கள் மாவட்டக் காசநோய் நிலையங்கள் அனைத்திலும் பணியாற்றி வருகின்றனர். 13 பி.ஸி.ஜி. தொகுதியினர் வீடு வீடாகச் சென்று ஊசிபோட்டு வருகின் றனர். வெளியூர்களிலே மாவட்டக் காசநோய் சிகிச்சை நிலையம் செயலாற்றுவதறகு நிகராக, சென்னை மாநகரில் அரசு காசநோய் விளக்க பயிற்சி நிலையம் செயலாற்றி வருகிறது.

60. சென்னை மாநகரத்தில் உள்ள அரசாங்க மகப்பேறு மருத்துவ மனைகள் மூன்றில் பிறக்கும் குழந்தைகளுக்கும், அம் மருத்தவ மனை களில் குழந்தை மருத்துவத் துறைக்குச் சிகிச்சைக்கு வரும் குழந்தை களுக்கும் நேரடி பி·ஸி.ஜி. ஊசி போடப்பட்டது. மற்ற மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கும் இந்த வேலைத் திட்டம் நீடிக்கப் பட்டுள்ளது.

## புற்றுநோய்த் தடுப்பு முன்னோடித் திட்டம்

61. செங்கற்பட்டு மாவட்டத்தில் புற்று நோய் பரவியுள்ள நிலையைப் பற்றி ஆய்வு நடத்தியதைத் தொடர்ந்து, உலக சுகாதார நிறுவனம், காஞ்சிபுரத்தில் புற்றுநோய்த் தடுப்பு முன்னோடித் திட்ட அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு முன் வந்தது. உலக சுகாதார நிறுவனம் அந்தத் திட்டத்திற்கு ஆலோசகர் ஒருவரையும் அனுப்பியுள்ளது. பணி யாளர்களுக்குத் தொடக்க நிலைப்பயிற்சி தொடங்கிவிட்டது. இதற்கு வேண் டிய நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## சுகாதாரப் படிப்பும், பிரசாரமும்

62. காசநோய் தேசியத் திட்டத்தின் கீழ், தலைமையிடத்தைச் சென்னை யிலும் மதுரையிலும் கொண்ட இரண்டு விளம்பரக் குழுக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. சென்னையில் தலைமையிடத்தைக் கொண்ட விளம் பரக் குழு பிரசாரமும் விளம்பரமும் செய்வதற்காக, திருச்சிராப்பள்ளி,

சேலம், தருமபுரி, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், செங்கற் பட்டு, சென்னை மாநகரம் ஆகிய இடங்களுக்குச் செல்கிறது. இரண்டாவது குழு மற்ற மாவட்டங்களுக்குச் செல்கிறது. பொது இடங்களிலும், பள்ளிக் கூடம் போன்ற நிறுவனங்களிலும் தொடர்பு கொள்ளுதல் மூலமும், கூட்டம் கூட்டி விவாதித்தல் மூலமும், படக் காட்சிகளின் மூலமும் முன் கூட்டியே விளம்பரமும் பிரசாரமும் செய்யும் பணி விளம்பரக் குழுக் களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதித் திட்டம்.

63. (1) கோயம்புத்தூரில் 1955 ஜனவரித் திங்களில் முதற்கண் செயலுக் குக்கொண்டு வரப்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதித்திட்டம் இப்பொழுது தென் ஆர்க்காடு, நீலகிரி, தருமபுரி மாவட்டங்கள் தவிர இது மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் செயலில் உள்ளது. இத்திட்டம் தின் கீழ் இம் மாநிலத்தில் இப்போது 3,36,500 பேரும், 2,04,650 குடுத் பங்களும் பயன் பெறுகின்றனர். 1968-69-ம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஊத்துக்குழி பல்லடம்; திருநெல்வேலி மாவட்டத்தில் கோயில்பட்டி, கரிசல் குளம்; சேலம் மாவட்டத்தில் ஒட்டப்பள்ளி, பள்ளிப் பாளையம், வட ஆற்காடு மாவட்டத்தில் ஆரணி ஆகிய புதிய பகுதிகளுக்குத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தை அரசு நீட்டித்துள்ளது. இத் திட்டத்தை விருதுநகரின் புறநகர்ப் பகுதிகளுக்கும், நெல்லிக்குப்பம் பகுதிக் கும் நீட்டிக்க வேண்டும் எனவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத் திட்டம் இப் பகுதிகளிலே விரைவில் செயல்படுத்தப்படும். கோயம் புத்தூர் பகுதியிலும் அதன் புறநகர்களிலும் ஈட்டுறுதி செய்துகொண்டவர் களின் குடும்பத்தினருக்குத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித்திட்டம் அடுத்த தமிழ்ப் புத்தாண்டு முதல் நீட்டிக்கப்பட்டு மருத்துவ வசதி அளிக் கப்படவிருப்பதால், கோயம்புத்தூர் பகுதியில் பட்டியல் மருத்துவர் ஏற் பாட்டிற்கு (panel system) பதிலாக, பணி ஏற்பாட்டினை (service system) வைத்துக் கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காகத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் 13 ஏற்படுத்தப் படும். இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் கோயம்புத்தூர் பகுதியில் 86,700 குடும்பத்தினர் பயன் பெறுவர். இத் திட்டத்தின் கீழ் ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பத்தினருக்கு மதுரை, தூத்துக்குடி, விக்ரம சிங்கபுரம் பகுதிகளில் மருத்துவ வசதிகளை நீட்டிப்பது குறித்தும் அரசு ஆலோசித்து வருகிறது.

(2) இப்போது சென்னை மாநகரில் 625 படுக்கைகள் கொண்ட பல வசதி கள் நிரம்பிய மருத்துவமனை ஒன்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதிப் பிணி யாளர்களுக்கென்று செயல்பட்டு வருகிறது. கோயம்புத்தூரில் 500 படுக்கை கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை ஒன்று பெரும் பாலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனை விரைவிலே செயல்படத் தொடங்குவதற்காக, இந்த மருத்துவ மனையில் கருவிகள் முதலான வேண்டிய வசதிகள் செய்வதற்குத் தொடக்கப்பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. மதுரையிலே இப்போதுள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் கூடுதல் கட்டிடங்கள் கட்டி அம் மருத்துவமனை தொழி லாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையாக மாற்றப்பட்டு வருகிறது. கட் டிடப்பணி பெரும்பாலும் முடிந்துவிட்டது. இப்போதுள்ள தொற்றுநோய் மருத்துவமனை வேறிடத்திற்கு மாற்றப்பட்டவுடன் அந்த இடத்தில் இந்த மருத்துவமனை செயல்படத் தொடங்கும்.

(3) 36 இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங் களுக்குக் கட்டிடம் கட்டுவதற்தகாக அரசு இதுவரை ஒப்பளிப்பு வழங்கியுள் ளது. இவற்றிலே 32 மருந்தகங்கள் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட் டுள்ளன. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் பொது மருத்து வத்திற்கும் மகப்பேறு மருத்துவத்திற்குமாக 13 இடங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிலும் 16 படுக்கைகள் உள்ள அகத்துள்ள பிணியாளர் மருத்துவப் பிரிவு கட்டுவதற்கும், வட ஆர்க்காடு மாவட்டம்





ணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதும்
இந்தியாவிலுள்ள தலை சிறந்த கம். சென்னையிலுள்ள மகளிர்
கோளாறுகள், ஊட்டச் சத்துக் இணைந்துள்ள குடும்ப நல பயிற்சி
கோளாறு, குழந்தை சிறப்பு விலியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்
களைப் பற்றிய சிக்கல்கள், இவை வட்டாரக் குடும்ப நலப் பயிற்சி
நேடி ஆராய்ச்சி செய்து வருகிற குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.
புதிய கட்டிடம் இந்த நிறுவனத்திற் மாறு, இம்மன்றத்தினை நான்
பட்டது. இம் மருத்துவ மனையி
குழந்தை அறுவை சிகிச்சை. குழந்
அறுவை சிகிச்சை, குழந்தை கதிர்
பல் மற்றும் குழந்தை கவனிப்
வற்றிற்குத் தனித் தனி பகுதி
வகையான வசதிகளையும் பெற்றிரு

பு 2

## துச் சுகாதாரம், 1969-70.

ஹோ ...றிவரும் பணிகளின் முக்கியக் கூறு

69. ஹோமியோபதி மருத்துவ ...றேன் :—

இம்மாநிலத்தில் இப்பொழுது ...

தொழிலை முறைப்படுத்தவும் நவீ... கட்டுப்படுத்தல்.

யோபதிக் கழகம் ஒன்றினை அமை... பேதி.

ஹோமியோபதி மருத்துவர்களைப் ...

யுள்ளது. தகுதியில்லாதவர்கள் ...ார்க்கும்போது, இம் மாநிலத்தில்

ஹோமியோபதி மருத்துவத் தொ... திபேதித் தடுப்புத் திட்டங்களைச்

...க 1968–69-ம் ஆண்டில் பெரிதும்

...ரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்

குடும்பக் ... கருவிகள் முதலியவற்றையும்

...காள்ளை நோய் ஒழிப்பு இயங்கும்

70. (1) சுகாதார-மருத்துவ வ... எதிர்ப்புக் குழுவும், தஞ்சாவூரில்
இறப்பு வீதம் குறைந்து மக்கள் ...ன்றன. தடுப்பு, கட்டுப்பாடு நட
மக்கள் தொகைக்குப் போதிய ... பெரிதும் பயனுள்ளவையாக
மாயின், பிறப்பு வீதம் குறைய
நலத்திட்டத்தை அரசு பெருமள
நிலத்தில் இந்த வேலைத் திட்ட
இயக்குநரின் பொறுப்பில் உள்... மை.
பற்பல நிறுவனங்களிலும் இவ்வே...
படுகிறது. இம்மாநிலத்தின் குடும்ப... ட்டம் 1964-ம் ஆண்டு மார்ச்சுத்
படும் ரூ. 206·09 லட்சம் மொத்த... பின் இம் மாநிலத்தின் எல்லாப்
கையிலே ரூ. 51·64 லட்சம் சேர்க்கம்... பெரியவர்களுக்கும் படிப்படி
...க நடைபெற்றது. பெரியம்மை

(2) குடும்ப நல அறுவை நி... பலனை நிலை நிறுத்தும் நட
வட்டத் தலைமையிடங்களிலும் உள்... எல்லா வயதினர்க்கும்
துள்ளன. இந்த நிலையங்களி... ார்க்கும், இம் மாநிலம் எங்கும்
மிகப் பெரும்பாலோர் ஆண் உறுப்... முனைப்பாகச் செய்யப்பட்டு வரு
ளவே முன் வருகின்றனர். தகுக...
அறுவை சிகிச்சை செய்யப்படுகிற...
அறுவை சிகிச்சை செய்து கொள்ள... ண்டும் பெரியம்மை அதிக அள
அளிக்கப்படுகிறது. 1967-68, 1968... ம், மீண்டும் பெரிய அம்மை
இம்மாநிலம் எங்கினும் மொத்த... தடவை அம்மை குத்தப்படுவோ
பெண்களும் அறுவை சிகிச்சை செ... ர்களுக்கு மட்டும் 1969-70-ம்
துறை நிறுவனங்களில் மட்டும் 61... துக்கொள்வதெனத் திட்டமிடப்
அறுவை சிகிச்சை செய்து கொண்ட...

(3) மகப்பேறுகளுக்கு இடை...
படிப்பு கற்பிக்கும் மருத்துவமனைக...
மருத்துவ மனைகளிலும் சில நக... ஆண்டிலும் இம்மாநிலத்தில்
தாய்மார்களுக்குக் கருத்தடை வ... நோய் பீடித்திருந்த பகுதிகளில்
இட்டத்திற்கு அரசு அனுமதி வ... சிறப்புப் பணியாளர்கள் மேற்
1968—டிசம்பர் வரை 16,472
பொருத்தப்பட்டது.

கொண்ட சீரிய முயற்சிகள் காரணமாக இம்மாநிலத்தில் பிளேக் இல்லை. பிளேக் தடுப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்காகப் போதுமான மருந்துகளும் கருவிகளும் வாங்கிச் சேகரித்து வைத்துப் பயன்படுத்தப் பட்டன.

ஒரு சில சுகாதார மேற்பார்வையாளருக்கு பிளேக் தடுப்பு நடவடிக்கைகளில் ஒவ்வோராண்டும் பயிற்சி அளிப்பதற்காக தருமபுரி மாவட்டத்திலுள்ள ஓசூரில் பயிற்சிப் பிரிவு ஒன்று உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நோயினால் ஏராளமானவர் உயிரிழந்து வந்தனர். சுகாதாரத் துறை எடுத்துக்கொண்ட பயன் தரும் நடவடிக்கைகள் காரணமாக இது இப்போது தவிர்க்கப்பட்டுள்ளது.

### (4) மலேரியா.

இந்த நோய் காண்போரின் எண்ணிக்கையும், இந்த நோயில் இறப்பவர்களின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்துள்ளன. மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டம் திறமையாகச் செயல்படுத்தப்பட்டது தான் இதற்கு முக்கியக் காரணமாகும். புதிய குடும்ப நலத் திட்டம் செயலுக்கு கொண்டுவரப்பட்டுள்ள 125 வட்டாரங்களில் குடும்பநலத்திட்டத்திலிருந்து மலேரியா ஒழிப்புத் திட்டத்தைப் பிரித்து விட்டதால், மலேரியா பணியை மாவட்டச் சுகாதார அதிகாரிகளிடம் அரசு ஒப்படைத்துள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள 125 வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும், மலேரியா பணியையும் பொதுச் சுகாதாரப் பணியையும் செய்வதற்காக, கூடுதலாகச் சுகாதார ஆய்வாளர்கள் இருவர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### (5) யானைக்கால் காய்ச்சல்.

தமிழ்நாட்டில் செங்கற்பட்டு, தென்ஆர்க்காடு, தஞ்சாவூர், வடஆர்க்காடு மாவட்டங்களில் செங்கற்பட்டு, சிதம்பரம், கும்பகோணம், வேலூர் ஆகிய இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்டு "ஃபைலேரியா" கட்டுப்பாட்டுப் பிரிவுகள் நான்கு உள்ளன. 5 முதல் 15 வயது பள்ளி செல்லும் சிறுவர்களிடையே யானைக்கால் காய்ச்சல் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தினால் பாதுகாக்கப்பட்ட மக்கட் தொகை 15 லட்சமாகும். தொழில் நுட்பக் கூட்டுறவு நிறுவனத் திட்டத்தின்கீழ் இத் திட்டத்துக்காக இந்திய அரசால் இலவசமாக இதுவரையில் வழங்கப்பட்ட பொருள்கள், சாதனங்களின் மதிப்பு ரூ. 8·92 லட்சம் ஆகும். நான்காவது திட்டக் காலத்தில் இம்மாநிலத்தில் ஃபைலேரியா ஒழிப்புத் தேசிய நடவடிக்கைகள் சீரமைப்புக்கான செயற்குறிப்புகள் ஆலோசனையில் உள்ளன.

## II. நரம்புச் சிலந்தி நோய் ஒழிப்புத் திட்டம்.

2. நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக எல்லா மாவட்டங்களிலும் இந்த நோய் கண்டுள்ளது. ஆய்வாண்டில் நரம்புச் சிலந்தி நோய் தொற்றிக்கொள்வது குறித்து 17,124 கிராமங்களிலும், சிற்றூர்களிலும் ஆய்வு நடத்தப்பட்டது. அவற்றில் 182 கிராமங்களில் இந்த நோய் பரவலாகக் கண்டுள்ளதாக அறியப்பட்டது. 1,367 நேர்வுகளில் இந்த நோய் தொற்றியுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டது.

3. இந்நோய் எவ்வாறு பரவுகிறது, அதை ஒழிப்பது எவ்வாறு என்பதைப் பற்றி முனைப்பாக ஆய்வு நடத்துதல், சிகிச்சையளித்தல், கல்வியறிவூட்டுதல் ஆகியவற்றை பழனி, பெரியகுளம் வட்டம், கரூர் வட்டம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் நோய் முழுவதும் ஒழிக்கப்பட்டு இரண்டாவது முறையாக இந்நோய் பாதிப்பதும் தடுக்கப்படும் மும்முரச் சுகாதாரக் கல்வியும் கொடுக்கப்படுகிறது.

## III. தொற்றுத் தோல் நோய்க் (Yaws) கட்டுப்பாட்டுத் திட்டம்.

4. முதல் ஆய்வு நடத்தியதற்கிணங்க இம்மாநிலத்தில் இந்நோய் பீடித்திருப்பதாகக் காணப்பட்ட மதுரை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் 1968–69-லும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுகிறது. 1967-ம் ஆண்டு



ஆகஸ்டு மாதம் முதல் தேதி முதல் மதுரை மாவட்டத்தின் பெரியகுளம் வட்டத்தில் ஒன்றும் பழனி வட்டத்தில் ஒன்றும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் கரூர் வட்டத்தில் ஒன்றும் ஆக மூன்று பிரிவுகள் செயல்படுகின்றன. இந்நோயினால் மிகவும் பாதிக்கப்பட்ட இருவர் ஆராய்ச்சி நடத்தப்படுவதற்காக 1968 நவம்பரில் திருச்சியிலிருந்து சென்னைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

## IV. ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

5. ஒரு பகுதியில் வசிக்கும் மக்களுக்கு நோயைக் குணப்படுத்தவும், வரும் நோயைத் தடுக்கவும், ஒருங்கிணைந்த முறையில் மருத்துவப் பாதுகாப்பு அளிக்கும் ஒரு சிறிய மருத்துவப் பிரிவே ஆரம்பச் சுகாதார நிலையமாகும்.

6. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் இம் மாநிலத்தில் 188 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டன. 1968–69-ம் ஆண்டுக்கு முடிவாகிய 45 திட்ட இலக்கில் 43 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. 1969–70-ம் ஆண்டில் 3? புதிய ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கவும் திட்டமிடப்படுகிறது. இம் மாநிலத்தில் 1969 மார்ச் 1-ம் தேதி நிலவரப்படி 315 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் உள்ளன.

## V. தாய்–சேய் நலப் பணிகள்

7. நகராட்சிகளில் தற்போது 71 பேறுகால இல்லங்களும் 215 பேறுகால குழந்தை நல நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

8. தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் பத்தாயிரம் மக்கள் தொகையுள்ள ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தாய்-சேய் நிலையம் தொடங்குவது ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பாகும். மகப்பேறு-குழந்தை நல நிலையங்களையும் பேணி வருவதற்காக, 1967–68-ல் உள்ளாட்சி மன்றங்களுக்கும் சென்னை மாநகராட்சிக்கும் ரூ. 42,270 மானியமாக அரசு ஒப்பளிப்பு வழங்கியது.

## VI. சுகாதாரப் பார்வையாளர் பயிற்சி

9. சுகாதாரப் பார்வையாளர்கள் சுகாதாரத் துறையினால் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படுகின்றனர். ஒருங்கிணைந்த பயிற்சியின் கீழ் 1966-ம் ஆண்டு ஜூலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட 48 பேரும் முறையான பயிற்சிக்கு 1967-ம் ஆண்டு ஜூலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட 31 பேரும் 1968 டிசம்பர் முடிவில் தங்கள் பயிற்சியை முடித்தனர். முறையான பயிற்சியின்கீழ் 28 மாணவர்களும் ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் 55 பேரும் 1968-ல் தொடர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர். 1966–67-ம் ஆண்டில் 50 நிலையங்களுக்கு 50 சுகாதாரப் பார்வையாளர் இரண்டாவது சுகாதாரப் பார்வையாளர் பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இவற்றில் 44 பேர் எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

## VII. வெண்ணெய் நீக்கப்பட்ட பால் திட்டம்

10. நமது மாநில முழுவதிலும் இத் திட்டம் பரவலாகச் செயல்பட்டு வருகிறது. சத்துணவு நிலையை மேம்படுத்தி உணவுக் குறையை ஈடு செய்யும் முக்கியமான திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். ஐக்கிய நாடுகள் சிசு நல நிதி நிறுவன உதவியுடன் இது செயல்படுகிறது. நிறை கர்ப்பிணிகள், குழந்தைகள், பால் கொடுக்கும் தாய்மார்கள் ஆகியோர் மக்கள் தொகையில் முக்கியமான பகுதியினர். இவர்களிடையே ஊட்டக் குறையைப் போக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இம் மாநிலத்தில் பேறுகால நிலையங்கள், சிசு நல நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவ மனையைச் சேர்ந்த குழந்தை மருத்துவப் பிரிவு போன்ற இரண்டாயிரம் நிலையங்களுக்கு இத் திட்டத்தின்கீழ் வெண்ணெய்

நீக்கப்பட்ட பால் வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் சுமார் 60,000 குழந்தைகளும், தாய்மார்களும் பலன் அடைந்தார்கள். யுனிசெஃப் நிறுவனம் 1968-ம் ஆண்டுக்கு உணவளிப்புத் திட்டத்தைத் தொடர்வதற்கு 12 லட்சம் ராத்தல் பால் உணவு ஒதுக்கியுள்ளது.

## VIII. மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடும் திட்டம்

11. கக்குவான், தொண்டைக்கட்டு நோய், இழுப்பு வாதம் ஆகிய நோய்களிலிருந்து பள்ளிப் பருவம் அடையாத குழந்தைகளுக்குப் பாது காப்பு அளிக்க முப்பால் அம்மை கொண்டு மூன்று நோய் தடுப்பு ஊசி போடும் திட்டம் 1964-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

12. மூன்று நோய்த் தடுப்பு ஊசி 5 வயது வரையுள்ள குழந்தை களுக்கு சிறப்பாக—சிறு குழந்தைகளுக்கு—போடப்படுகிறது. தற்பொழுது இத்திட்டம் கிராமப் பகுதிகளில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மூல மாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது..

13. 1968–69-ம் ஆண்டில் 51,362 சிறுவர்களுக்கு இந்த முப்பால் ஊசிகள் 1,76,768 போடப்பட்டன. இத்திட்டம் 1969–70-ம் ஆண்டிலும் தொடர்ந்து நடத்தப்படுகிறது. இதற்காக 1,22,000 செலவிட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1969–70-ல் ஒரு லட்சம் சிறுவர்களுக்கு தடுப்பு ஊசி போடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## IX. பள்ளிகளில் சூழ்நிலைத் துப்புரவு

14. 1968–69-ம் ஆண்டில் ஆய்வு செயல் திட்டம் நடைபெறும் ஐந்து மாவட்டங்களில் 30 பள்ளிகளில், "பள்ளிகளில் சூழ்நிலைத் துப்புரவுத் திட்டத்தினை" செயல்படுத்துவதற்காக ரூ. 1 லட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டத்தை ஆய்வு நடவடிக்கைத் திட்ட உதவிப் பொறியாளர்கள் மூலம் இப்பணிகளைச் சுகாதாரத் துறையினர் நிறை வேற்றி வருகின்றனர். 30 பள்ளிகளில் 2 பள்ளிக்கு துப்புரவு வசதிகள் கொடுக்கப்படுகின்றன. 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதியுடன் முடியும் கடைசிக் காலாண்டில் எஞ்சிய பள்ளிகளிலும் இவ்வேலை நிறை வேற்றப்படும். இத்திட்டத்திற்கு 1969–70-லும் ரூ. 1 லட்சம் நிதி ஒதுக்கி தொடர்ந்து நடத்தவும் திட்டமிடப்படுகிறது.

## X. சந்தைகளும் திருவிழாக்களும்

15. இம்மாநிலத்தில் நடைபெற்ற எல்லாத் திருவிழாக்களிலும் எப்போதும் போலவே மிக விரிவான துப்புரவு ஏற்பாடுகள் செய்யப் பட்டன.

## XI. மக்கள் பிறப்பு–இறப்புப் புள்ளி விவரம்

16. ஐந்தாண்டுத் திட்டங்கள், பொதுச் சுகாதார வேலைத் திட்டங்கள் குடும்ப நலத் திட்டங்களின் பலன்களை அறியத் தேவைப்படும் அடிப்படைப் புள்ளி விவரங்களைப் பெறுவதன் பொருட்டு தற்போது யந்திரம் மூலமே இப்புள்ளி விவரத் தொகுப்பு வேலை நடைபெற்று வருகின்றது.

17. எட்டு பெரிய நகராட்சிகளிலும், மாவட்டங்களிலும் புள்ளி விவரச் சேகரிப்பு உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மக்கள் பிறப்பு–இறப்பு குறித்த புள்ளி விவரங்களைப் பதிவு செய்யும் முறையை மேம் படுத்தும் பணிக்காக சென்னை மாநகராட்சிக்காக, துணைப் பணியாளருடன் புள்ளிவிவர வல்லுநர் பதவி ஒன்று, புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற் காக ஒப்பளிக்கப்பட்டுள்ளது.



## XII. மாதிரிப் பதிவுத் திட்டம் அல்லது இறப்பின் காரணம் குறித்த ஆய்வு

18. கிராமப் பகுதிகளில் எக்காரணத்தினால் அதிக அளவு மக்கள் இறக்கின்றனர் என்பதைக் கண்டறியவும் பதிவு செய்யப்படாத பிறப்பு–இறப்பு நிகழ்ச்சிகளைக் கண்டுபிடிக்கவும் வகை செய்வதே இத் திட்டத் தின் நோக்கமாகும். ஆங்காங்கே நிகழ்ந்த மரணம் குறித்த சூழ்நிலை களை குடும்ப உறுப்பினர்களைக் கேட்டறிந்து கிடைக்கும் தகவல்களைக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்படுகின்றது. பத்து லட்சம் மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையமாக, 34 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 1968 ஜனவரி முதல் இத் திட்டம் நடைபெற்று வருகிறது.

## XIII. மாதிரிப் பதிவுத் திட்டம்

19. இம் மாநிலம் முழுவதும் பரவலாக, 150 கிராமப்புற பிரிவு களில் 1968–69-ல் இத்திட்டத்தை நிறைவேற்ற அரசு ஒப்பளிப்பு வழங்கி யுள்ளது. இத் திட்டம் 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம்தேதி முதற் கொண்டு செயல்பட்டு வருகிறது. 150 கிராமப்புற பிரிவுகளிலிருந்து திங்கள்தோறும் வரப்பெறும் பிறப்பு–இறப்பு விவரங்கள் தொகுக்கப் பட்டு, அடங்கல் அறிக்கைகள் திங்கள்தோறும் இந்தியத் தலைமைப் பதி வாளருக்கு அனுப்பப்படுகின்றன. தெரிந்தெடுக்கப்பட்ட கிராமப்புறப் பிரிவுகளில் தொடர்ந்து பதிவு வேலை செய்வதன் மூலமாக நம்பகமான பிறப்பு-இறப்பு மதிப்பீடுகளைக் கணக்கிடுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

20. நூறு நகர்புற பிரிவுகளில் இத் திட்டத்தைச் செயல்படுத்தும் செயற்குறிப்புகளும் ஆய்வில் உள்ளன.

## XIV. சுகாதாரக் கல்விக் கழகம்

21. 1960-ல் சுகாதாரக் கல்விக் கழகம் அமைக்கப்பட்டது. "தமிழ் நாடு சுகாதாரக் கல்வி" என்ற காலாண்டு ஆங்கிலப் பத்திரிகையும் "ஆரோக்கிய மார்க்கம்" என்னும் தமிழ்ப் பத்திரிகையும் வெளியிடப்படு கின்றன.

22. சுகாதாரப் பொருள்கள் குறித்து 16 மி.மீ. அளவுடைய சுமார் 365 திரைப்படங்கள் திரைப்பட நூலகத்திடம் உள்ளன. திரைப்படங்கள் இப்போது இலவசமாக வழங்கப்படுகின்றன. 1968-ல் 12 திரைப்படங்கள் சேர்க்கப்பட்டன. சுகாதாரக் கல்விக் கழகம் பொருட்காட்சிகளில் முறை யாகப் பங்குகொள்கிறது. இக் கழகம் இதுவரை 14 பணியிருப்புப் பயிற்சித் திட்டங்களை நடத்தியுள்ளது. இதில் 4 திட்டங்கள் 1968-ல் நடத்தப்பட்டன.

## XV. உணவுக் கலப்படத் தடுப்பு

23. உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம் இப்போது 274 உள்ளாட்சி மன்றங்களிலும், சென்னை மாநகராட்சியிலும், 84 நகராட்சிகளிலும், 178 ஊராட்சிகளிலும், 8 நகரியக் குழுக்களிலும் 2 பாளையவாரியங்களிலும், 2 ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

24. இச் சட்டத்தின் ஆளுகையின்கீழ் இப்போதுள்ள பரப்பளவு மாநிலத்தின் மொத்த பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியாகும். 1968-ம் ஆண்டில் செப்டம்பர் வரை இச் சட்டத்தின்கீழ் பல்வேறு உணவுப் பொருள்களின் 18,831 மாதிரிகள் எடுக்கப்பட்டன. இவற்றில் 21 சத வீதம் பொருள்களில் கலப்படம் செய்யப்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டது. தொடரப்பட்ட 902 வழக்குகளில் 343 பேருக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. 1968 ஜூன் முடிய வசூலிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை சுமார் 0·7 லட்சமாக இருந்தது. உணவு பகுப்பாய்வுக்கான

கூடுதல் வசதிகளை அளிக்க, கோயம்புத்தூரில் உள்ள தலைமை ஆய்வுக் கூடத்தில் உணவுப் பகுப்பாய்வுக் கூடம் ஒன்றை நிறுவும் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

## XVI. கழிவுநீர் பகுப்பாய்வு—நீர்ப் பகுப்பாய்வுக் கிளையில் சாக்கடை தொழிற்சாலைக் கழிவு பகுப்பாய்வுப் பிரிவும் நேரிடப் புலனாய்வுக்கான இயங்கும் பிரிவும்

25. காற்றையும் நீரையும் அசுத்தப்படுத்துவதை புலனாய்வு செய்வதற்காக சாக்கடைத் தொழிற்சாலைக் கழிவுப் பகுப்பாய்வுப் பிரிவு ஒன்றையும், நீர் வழங்கு முறைகளையும் சாக்கடை, தொழிற்சாலை கழிவு மற்றும் அவற்றை அகற்றும் முறைகளையும் ஆங்காங்கே சென்று புலனாய்வு செய்வதற்கான இயங்கும் பிரிவு ஒன்றையும் தேவையான பணியாளர்களுடனும் தேவையான கருவிகளைக் கொண்டும் சுகாதாரத் துறையின் நீர் பகுப்பாய்வுக் கிளையில அரசு அமைத்துள்ளது.

26. இந்தப் பிரிவுகளை 1969–70-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல் படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## XVII. ஊட்டச்சத்து ஆய்வுக்கூடம்

27. உணவுகளை எல்லா வகையான சாதாரண முறை இரசாயனப் பகுப்பாய்வு செய்வதற்கும் பொதுப்பணித் துறையுடன் இணைந்துள்ள இந்த ஊட்டச்சத்து ஆய்வுக்கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உயிரியல் சோதனைகள் செய்வதற்காக விலங்கு அறை ஒன்றும் இதனுடன் இணைக்கப் பட்டுள்ளது. இந்த ஊட்டச்சத்து ஆய்வுக்கூடம் பின்வரும் பணிகளைச் செய்து வருகின்றது:—

(1) வட்டார தொழில், சமுதாய அடிப்படையில் ஊட்டச்சத்து அட்டவணைப்படிக்கான உணவு முறைகள் குறித்து ஆய்வு செய்தல்;

(2) சற்று அரிதான உள்நாட்டு உணவுப் பொருள்களின் உணவு மதிப்பை, சிறப்பாக பச்சை இலைக் காய்கறிகளின் உணவு மதிப்பை ஆய்வுக்கூட முறையில் ஆராய்ச்சி செய்தல்;

(3) மாதிரி உணவுகள், இல்லங்களில் பெரும்பாலும் தயாரிக்கப் படுகின்ற உணவுப் பண்டங்கள் ஆகியவற்றின் ஊட்டச்சத்தினை மதிப்பீடு செய்தல்;

(4) கல்வி நிறுவனங்களிலும் மருத்துவமனைகளிலும் வழங்கப்படும் உணவுகளைப் பகுப்பாய்வு செய்தல்;

(5) பள்ளிகளில் வழங்கப்படும் நண்பகல் உணவுகள், மருத்துவ மனைகளில் வழங்கப்படும் உணவுகள் முதலியவை குறைந்த விலையில் ஊட்டச்சத்து அமைந்ததாக இருக்கும்பொருட்டு தகுந்த தயாரிப்பு வழி வகைகளையும் உணவு வகைகளையும் கண்டறிதல்;

(6) நிறைவற்ற அரிசி உணவுகளைச் சரி செய்வது குறித்து ஆராய்ச்சி நடத்துதல் ;

(7) அடுத்தடுத்து கணக்காய்வு செய்வதன் மூலம் உணவு முறையில் காணப்படும் இயல்புகள், குழந்தைகள் பிறப்பு வீதம் ஆகியவை குறித்து ஆராய்ச்சி செய்தல் ;

(8) பயன்முறை ஊட்டச்சத்து குறித்து சுகாதாரப் பணியாளர்களுக்குப் பல்வேறு தரங்களில் பயிற்சியளித்தல்.





## XVIII. குடும்பநலத் திட்டம்

28. இம்மாநிலத்தில் குடும்ப நலத் திட்டத்துறை நிறைவேற்றும் பொறுப்பு சுகாதாரப் பணிகள், குடும்பநலத் திட்ட இயக்குநரிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளது. குடும்ப நலத் திட்டத்திற்கு மட்டுமே பொறுப்புடைய துணை இயக்குநர், இவரின் கீழ்ப் பணியாற்ற நியமிக்கப்பட்டுள்ளார். இந் திய அரசு கீழ் இயங்கும் துறையின் அமைப்பிற்கிணங்க மாநில குடும்ப நலத் திட்டக் கழகம் இந்திய அரசு அடிப்படையில் சீரமைக்கப்பட்டு சுகாதாரப் பணிகள் குடும்ப நலத் திட்ட இயக்குநரின் பொறுப்பில் உள்ளது.

29. சீரமைக்கப்பட்ட குடும்பநலத் திட்டம் 125 வட்டாரங்களில் செயல் படுத்தப்பட்டுவருகிறது. தற்போது 125 கிராம குடும்பநலப்பிரிவுகள் உள்ளன. மேலும், மாவட்டத்திற்கு ஒரு நிலையமாக 13 மாவட்டக் குடும்ப நலத் திட்ட நிலையங்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் மாவட்ட குடும்ப நலத் திட்ட தாய்-சேய் நல அதிகாரி ஒருவர் உள்ளார். அரசாங்க மருத்துவ மனை களில் முதலாவது, இரண்டாவது திட்டங்களின்போது ஏற்படுத்தப்பட்ட 15 நகர்ப்புற குடும்பநலத் திட்ட நிலையங்களும் 85 கிராமப்புற குடும்பநலத் திட்ட நிலையங்களும் தொடர்ந்து செயல்படுகின்றன. அத்துடன் 9 நகராட்சி கள் 22 குடும்ப நலத் திட்ட நிலையங்களை நடத்தி வருகின்றன.

30. சென்னை மாநகராட்சி சென்னையில் 24 நகர்புற குடும்ப நலத் திட்ட நிலையங்களை நடத்தி வருகிறது. ஏழு தொண்டு நிறுவனங்கள், எட்டு குடும்ப நலத் திட்ட நிலையங்களை நடத்தி வருகின்றன. இவற்றிற்கெல்லாம் இந்திய அரசிடமிருந்து முழு நிதி உதவி கிடைக்கிறது.

31. மலேரியா ஒழிப்புத் துறை குடும்ப நலத்திட்டப் பிரிவிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளது. மாவட்டக் குடும்ப நலத் திட்ட மலேரியா ஒழிப்பு அதிகாரிகளுக்குப் பதிலாக, மாவட்டக் குடும்ப நலத்திட்ட மகப்பேறு குழந்தை நல அதிகாரி என்ற பெயரில் தேர்வுத்தர உதவி அறுவை மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 13 அதிகாரி கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

32. வெளிவட்ட நிலையில், 80,000 மக்கட் தொகை கொண்ட சீரமைக்கப்பட்ட வளர்ச்சி வட்டாரத்தில் குடும்ப நல வேலையை மட்டும் 4 சுகாதார ஆய்வாளர்கள் செய்யவேண்டும். மலேரியா, பொதுச் சுகாதார வேலைக்காக சீரமைத்த குடும்ப நலத் திட்டம் செயலில் உள்ள 125 வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் 2 தனித்தனி சுகாதார ஆய்வாளர்கள் நியமிக்கப்படவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பச் சுகாதார நிலையத்துடன் இணைந்துள்ள 125 கிராமப்புற குடும்ப நலத் திட்டப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் கணக்கிடுபவர் பதவி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

33. சீரமைக்கப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 44 கிராமப் புற குடும்ப நலத் திட்ட நிலையங்களுக்கான கட்டடங்கள் நிலையம் ஒன்றுக்கு ரூ. 92,000 செலவில் கட்டப்படவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

34. குடும்ப நலத் திட்டம் பற்றி பொது மக்களுக்கு அறி வூட்டுவதற்கும் மாவட்டங்களில் குடும்ப நலத் திட்டப் பிரச்சாரம் செய்வதற்கும், மாவட்டங்களில் இப்போது பொதுமக்களுக்கு அறி வூட்டும் தகவல் அதிகாரிகள் 11 பேர் உள்ளனர். குடும்ப நலத்திட்டப் பிரச்சாரம், நாடகங்கள், வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகள் அனைத்திந்திய வானொலி நிகழ்ச்சிகள், திரைப்படக் காட்சிகள், பொருட்காட்சிகள், கருத்தரங்குகள் முதலியவற்றின் வாயிலாக நடத்தப்படுகிறது.

35. **"வாசெக்டமி".**—வாசெக்டமி மக்களிடையே செல்வாக்கடைந்து வருகிறது. ஏற்புடைய அறுவை சிகிச்சை நிலையங்களாக, அரசு ஏற்றுக்கொண்ட நிலையங்களின் எண்ணிக்கை 483 ஆகும். 1968 ஏப்ரலிலிருந்து 1968 டிசம்பர் வரை இம் மாநிலத்தில் கருத்தடை செய்துகொண்ட ஆண்கள் 77,537 பேர்; பெண்கள் 8,199 பேர்.

36. **பயிற்சி.**—குடும்ப நலத் திட்டத்தின்கீழ் பணியாற்றும் எல்லா வகையான அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்க 3 வட்டாரக் குடும்ப நலத் திட்ட பயிற்சி நிலையங்கள் உள்ளன. இவை சென்னையில் அடையாறிலும், எழும்பூரிலும், மதுரை மாவட்டத்தில் காந்தி கிராமத்திலும் உள்ளன. அடையாறில் உள்ள வட்டாரக் குடும்ப நலத் திட்ட நிலையம், விரைவில் சேலத்திற்கு மாற்றப்படவிருக்கிறது. கருத்தடை வளையம் (I.U.C.D.) பொருத்துவது எவ்வாறு என்பதில் போதிய பயிற்சி பெறுவதற்காக 21 நாள் பயிற்சியை எழும்பூரில் உள்ள வட்டாரக் குடும்ப நலத் திட்ட நிலையம் மகளிர் மருத்துவ அதிகாரிகளுக்கு அளித்து வருகிறது.

37. குடும்ப நலத்திட்ட நிலையங்களை வைத்து வரும் நகராட்சிகளில் துணை மருத்துவப் பணியாளர்களுக்குப் பயிறசி அளிப்பதற்காக, இந்த 3 வட்டாரக் குடும்ப நலத் திட்ட நிலையங்களன்றி, இந்திய அரசு மத்திய குடும்ப நலத் திட்டத் துறையும் பயிற்சி அளித்து வருகிறது. "வாசெக்டமி" அறுவை சிகிச்சையைத் தொழில் நுட்பத்துடன் செய்வதில் 7 நாள் பயிற்சி அந்த அந்த மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் அரசு மருத்துவக் கல்வி நிலையங்களைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

38. **கருத்தடை வளையத் (லூப்) திட்டம்.**—கருத்தரிப்பதைத் தள்ளிப் போடுவதற்காக, கருத்தடை வளையம் (லூப்) பொருத்துதல், மருத்துவக் கல்வியளிக்கும் மருத்துவ மனைகளிலும், மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும், வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் மற்ற மருத்துவ மனைகளிலும், உள்ளாட்சி மன்றங்களும், தொண்டு நிறுவனங்களும் நடத்தும் குடும்ப நலத் திட்ட நிலையங்களிலும் மேற்கொள்ளப்படுகிறது. இம் மாநிலத்தில் 1968 ஏப்ரல் முதல் 196[illegible] டிசம்பர் முடிய கருத்தடை வளையங்கள் பொருத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 16,472.





(vi) வட்டாரக் குடும்ப நலத் திட்டப் பயிற்சி நிலையங்களில் விடுதி வசதியுடன் கட்டிடங்கள் கட்டுவது ;

(vii) அரசு, உள்ளாட்சி மன்றங்கள், தனியார் நிறுவனங்கள் வேலையிலமர்த்தியுள்ள பல்வேறு வகையான ஊழியர்களுக்காக, பயிற்சித் திட்டத்தை மூன்று வட்டாரக் குடும்ப நலத் திட்டப் பயிற்சி நிலையங்களிலும் முடுமுரப் படுத்துவது ;

(viii) ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும், கிராமப் புறங்களில் உள்ள அரசாங்க மருந்தகங்களிலும் இயங்கும் மருததுவப் பிரிவுகள் மூலமாக கருத்தடை வளையத் திட்டத்தை விரிவு படுத்துவது.

## XIX. குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்று வேலைத் திட்டங்கள்

40. இந்த கோரிக்கையில், நகர்ப்புற குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்று வேலைத் திட்டங்களின் செலவு சேர்க்கப்படவில்லை. இத்தகைய வேலைத் திட்டங்களுக்காக ஒப்பளிப்பு வழங்குவதில் பின்பற்றப்படும் பொதுவான கொள்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

41. குடிநீர் வழங்கு வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் பொதுவாகக் கடன் மட்டுமே கொடுக்கப்பட்டு வருகின்றது. நகராட்சிகளும், பேரூராட்சிகளும் தங்களுடைய குடிநீர் வழங்கு வேலைத் திட்டங்களைத் தாங்களாகவே ஏற்று நடத்தவேண்டும். அவை வீட்டுக் குழாய் இணைப்புகளுக்கு அளவு மானி பொருத்தி பேணுதல் செலவுகளைச் சரிக்கட்டுவதற்காக மட்டுமன்றி திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவை வாங்கிய கடனுக்காக ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்துவதற்காகவும் திட்டங்களின் எதிர்கால மேம்பாட்டிற்கும் தங்களுக்கு வேண்டிய வருவாய் அளிக்கும் வகையில் கட்டணம் விதித்து வாங்கவேண்டும். நிதி நிலை மனநிறைவு அளிக்கும் வகையில் இல்லாத உள்ளாட்சி மன்றங்கள் குடிநீர் வழங்கு வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக தாங்கள் வாங்கிய கடனுக்கு, இத் திட்டங்கள் பொதுமக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் ஆண்டுத் தொகை செலுத்த அனுமதிக்கப்படுகின்றனர். எனினும், இந்தக் கடன்களுக்காக, அவை அதுவரையில் சாதாரண வட்டியைச் செலுத்திவர வேண்டும். அரசிடமிருந்து கடன் பெற்றும் இவ்வேலைத் திட்டங்களை எடுத்துச் செய்ய முடியாத நகராட்சிகளைப் பொறுத்தவரையில் இவ்வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அவசியமான அளவிற்கு உதவி மானியங்கள் கொடுக்கப்படுகின்றன.

42. கழிவுநீர் அகற்று வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக தண்ணீர், வடிநீர் வரிகளைப் பொருத்தமான வீதங்களில் ஓரளவு விதித்து வருவாய் திரட்டியும், தாங்கள் கடனைத் திருப்பிச் செலுத்தும் சக்திக்கு ஏற்ப அரசிடம் இருந்து பெருமளவு கடனைப் பெற்றுங்கூட மூலதனச் செலவுப் பகுதியை சரிக்கட்ட முடியாத உள்ளாட்சி மன்றங்களுக்கு உதவி மானியங்கள் கொடுக்கப்படுகின்றன.

## XX. சென்னை மாநகர் குடிநீர் வழங்கல்—கழிவு நீர் அகற்று வேலைத் திட்டங்கள்

43. சுமார் 20 லட்சம் மக்கள் தொகை கொண்ட இம்மாநகருக்காக நாளொன்றுக்கு சென்னை மாநகராட்சி சுமார் 3·8 கோடி காலன் நீர் மட்டுமே முன்பு வழங்கியது. பொதுச் சுகாதாரத் தரங்களின்படி குறைந்த அளவு தலைக்கு 25 காலன் தண்ணீராவது தேவையாய் இருக்க தண்ணீர் வழங்கப்படும் வீதம் தலைக்கு சுமார் 15 காலனுகவே இருந்தது. இப்பொழுது மாநகரம் முழுவதற்கும் 2·5 கோடி காலனுகக் குறைக்கப்பட்டுள்ளது. மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்குத் தற்போதைய குடிநீர் வழங்கல் முறை போதுமானதாகவே இல்லை. ஆகவே, ரூபாய்

300 லட்சம் செலவு மதிப்பீட்டில் நீர் வழங்கல் முறையை மாற்றியமைப்
பதற்கு அடங்கல் திட்டங்களை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது. தியாகராய
நகரில் ரூபாய் 78 லட்சம் செலவு மதிப்பீட்டில் தனியே தலைப்புப் பகுதி
வேலைகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

44. சென்னை மாநகருக்குத் தேவைப்படும் குடிநீர் சோழவரம் ஏரி,
புழலேரி, பூண்டியிலுள்ள சத்தியமூர்த்தி சாகரம், ஆகிய இடங்களிலிருந்து
பெறப்படுகிறது. இத்தகைய ஏரிகள் அனைத்தின் மொத்தக் கொள்திறன்
அளவு 580 கோடி கன அடியாக இருந்த போதிலும் ஆவியாகப்போவது,
கசிவது ஆகியவை போக, பயனுறு கொள்ளளவு இதைவிடக் குறை
வாகவே இருக்கும். புழலேரி, சோழவரம் ஏரி, ஆகியவற்றின் கொள்
திறனை உயர்த்துவதற்காக ரூபாய் 15·72 லட்சம் செலவு மதிப்பீட்டில்,
இவற்றின் நீர் மட்டங்கள் முறையே 2 அடி, 4 அடி உயர்த்தப்பட்டு
வருகின்றன. பூண்டி நீர்த் தேக்கத்திலிருந்து புழலேரிக்குத் தண்ணீர்
கொண்டு செல்வதற்கென மூடப்படாத காரைப்பூச்சுக் கால்வாய்கள்
ரூபாய் 85 லட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

45. இப்போது பாசனத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிற 55 கோடி
கன அடி நீரை குடிநீர்க் காரியங்களுக்காக பாதுகாக்கப்படும் வகையில்
புழலேரி, சோழவரம் ஏரிகளின் கீழ் 7,500 ஏக்கர் நன்செய் ஆயக்கட்டு
முழுவதையும் கையகப்படுத்துமாறு குடிநீர் வழங்குவதற்காக உயர்நிலைக்
குழு 1961-ல் பரிந்துரைத்தது. அவ்வண்ணமே புழலேரி, சோழவரம்
ஏரிகளின் கீழ் 7,500 ஏக்கர் ஆயக்கட்டு முழுவதையும் கையகப்படுத்த
ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. நிலத்தைக் கையகப்படுத்திய பிறகு நன்செய்
நிலத்தின் மதிப்பில் 50 சதவீதம் வசூலித்துக்கொண்டு புன்செய் நிலமாக
மேற்படி நன்செய் நிலங்களை அதன் மூல ஆயக்கட்டுதாரர்களுக்கே திருப்பி
ஒப்படைக்கப்படவேண்டுமென்றும் ஆணையிடப்பட்டது. நிலச் சொந்தக்காரர்
களுக்கு இழப்பீடு கொடுப்பதற்காக ரூ. 210 லட்சம் ஒப்பளிப்பு வழங்கப்
பட்டுள்ளது.

46. சென்ற பருவமழை பொய்த்துவிட்டதால் வீட்டுக் காரியங்களுக்காக
வும், தொழிற்சாலைக் காரியங்களுக்காகவும் குடிநீர் பற்றுக்குறை சென்னை
மாநகரத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. சென்னை மாநகரத்தின் குடிநீர் வரவைப்
பெருக்குவதற்காக, வீராணம ஏரியிலிருந்து காவிரி நீரைக் கொண்டு வருவ
தற்கு ரூ. 21·30 கோடி செலவிட அரசு ஒப்பளித்துள்ளது. வீராணம் திட்ட
வேலையை உடனடியாக எடுத்துக்கொள்ளுமாறு கட்டிடத் தலைமைப் பொறி
யாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். உடனடித் தேவைகளை ஈடு செய்வதற்
காக பஞ்சட்டி, தாமரைப்பாக்கம் பகுதிகளில் ஊற்று நீர் வாயில்களிலிருந்து
நீரைக்கொண்டு வருவதற்கு ரூ. 37 லட்சம் செலவில் அவசரத் திட்டம்
ஒன்றிற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

47. ஐ. நா. மன்ற ஆதரவின்கீழ் ஊற்று நீர்த் திட்டம் ஒன்று
1966 மார்ச் 17-ம் தேதியிலிருந்து சென்னை மாநகரில் செயல்படத் தொடங்
கியது. ஊற்று நீர் வாயில்களைப் பற்றி ஆய்வதும், தமிழ் நாட்டின் நான்கு
வட்டாரங்களில் அதாவது சென்னை மாநகரம், அதைச் சுற்றியுள்ள பகுதி
பாலாறு வடிநிலம், நெய்வேலிப் பகுதி, காவிரிக் கழிமுகம் ஆகிய
வற்றில் ஊற்று நீர் வாயில்களை மேம்படுத்துவதற்கான தொழில் நுட்ப
சிக்கன வாய்ப்புகளை மதிப்பிடுவதுமே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத்
திட்டத்தின் கால அளவு மூன்று ஆண்டுகளாகும். வானிலை இயல், நீரியல்
நிலவியல், நீர் நிலவியல், நில ரசாயன நூல் ஆகியவை குறித்துக் கிடைக்
கின்ற எல்லாப் புள்ளி விவரங்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு
சேகரிக்கப்பட்ட புள்ளி விவரத்தின் முதல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

48. சாக்கடை நீரைத் தூய்மைப்படுத்தி தொழிற்சாலைக் காரியங்களுக்
காகப் பயன்படுத்துவது குறித்து ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று முன்னோடி ஆய்வு
பணிகளை மேற்கொண்டுள்ளது. இம் மாநகரின் கழிவு நீர் அகற்று
ஏற்பாடு நகர மக்களின் தற்போதைய தேவைக்குப் போதுமானதாக





இல்லை. இதனால் பக்கிங்ஹாம் கால்வாயிலும், கூவம் ஆற்றிலும்,
சாக்கடை நீர் கலந்து விடுகிறது. சென்னை மாநகராட்சியிடம் ஆதறகான
அடங்கல் வேலைத் திட்டங்கள் உள்ளன. இதன்படிச் சென்னை மாநகரம்
ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மண்டலத்திலும்
நீர் இறைக்கும் நிலையங்கள் கொண்ட ஒரு தொகுதி அடங்கியுள்ளது.
சென்னை மாநகருக்கு வெளியே கழிவு நீரைக் கொண்டு சேர்ப்பதற்குத்
தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களுக்கு ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இதன்
மூலம் சாக்கடை நீர் அகற்றப்படுகிறது. நான்கு மண்டலங்களைப் பொறுத்த
வரை திருத்த வேலைத் திட்டங்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கி
யுள்ளது. 1-வது, 2-வது மண்டலங்களில் தூய்மைப்படுத்தும் வேலைகள்
நீங்கலாக, மற்ற வேலைத் திட்டங்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்
காலத்தில் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

49. சென்னை மாநகராட்சி குடிநீர் வழங்கல்—கழிவு நீர் அகற்றல்
வேலைத் திட்டங்கள் பாதி கடன்—பாதி மானிய அடிப்படையில் நிதி உதவி
பெறுகின்றன.

## XXI. நகரமைப்பு வேலைத் திட்டங்கள்

50. பன்னெடுங்காலமாகவே நகரமைப்புத் திட்டத்திற்கு மிகுந்த
முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதனால் நகரின் வளர்ச்சி சீராக
அமையும்; கவினுறு இடங்கள் காக்கப்படும்; குடி மக்களின் உடல் நலம்
மேம்படும். தமிழ் நாட்டில் நகரமைப்புச் சட்டம் 1920-ல் சட்டமாகக்கொண்டு
வரப்பட்டது. இச் சட்டத்தின் விதித்துறைகளின்கீழ், நகரமைப்பு பற்றிய
வேலையை கவனித்துக் கொள்வதற்குச் செவ்விய நிர்வாக அமைப்பு
உள்ளது. தலைமையிடத்தில் நகரமைப்பு இயக்குநர் இருக்கிறார். இவருக்கு
உதவியாக தொழில் நுட்பத் தகுதி பெற்ற நகரமைப்பு இணை இயக்குநர்
உள்ளார். இத்துறை மற்ற தொழில் நுட்ப, நிர்வாக பணியாளர்களைக்
கொண்டு செயல்படுகிறது. இத்துறை மிகுந்த திறமையுடன் செயல்படும்
பொருட்டு அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளது. இதன் வட்டாரப் பிரிவுகள்
சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய
இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டார பிரிவும், நகரமைப்பு
துணை இயக்குநரைத் தலைமையதிகாரியாகக் கொண்டுள்ளது. இவர்
3 அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களின் வேலையைக் கவனித்துக்
கொள்கிறார்.

51. இத்துடன், எல்லா நகராட்சிகளிலும் நிர்வாகப் பிரிவுகளின்
இணைப்பாக நகரமைப்புப் பணியாளர் உள்ளனர். பொதுவாக, நகரமைப்பு
பற்றிய வேலைத் திட்டங்கள் நகராட்சிகளால் தங்களுடைய பணியாளர்களின்
உதவியுடனும் நகரமைப்புத்துறை வகுத்துக் காட்டும் வழியிலும் தயாரிக்க
படுகின்றன. இவை நிறைவேற்றப்படுவதற்காக இவ்வேலைத் திட்டங்களுக்கு
அரசு அவ்வப்போது ஒப்புதல் வழங்குகிறது.

52. உள்ளாட்சி மன்றங்கள் நகரமைப்பு வேலைத் திட்டங்களை எடுத்து
நிறைவேற்றுகின்றன. இவ்வேலைத் திட்டங்களை ஐந்தாண்டு வேலைத்
திட்டங்களின்கீழ்த் திட்டுவதில் நகராட்சிகளுக்கும் சென்னை மாநகராட்சிக்கும்
மாநில அரசு உதவி செய்து வருகிறது. மத்திய அரசு முழு நிதி உதவி
யுடன் பெரிய மாநகரங்களிலும், நகரங்களிலும், இந்திய அரசு நேரடி
ஆட்சிப் பகுதிகளிலும் "பெருந் திட்டங்களை" தயாரிப்பதற்கான வேலைத்
திட்டங்களுக்கு ஆதரவு அளித்துள்ளது. இந்த வேலைத் திட்டத்தின் கீழ்
சென்னைப் பெரு நகர்ப் பகுதி (Madras City Metropolitan area) கோயம்
புத்தூர் பெருநகரப் பகுதி, தூத்துக்குடி துறைமுக வளர்ச்சிப்பகுதி
ஆகியவற்றிற்கான பொது விவர வளர்ச்சித் திட்டங்களை நகரமைப்புத்துறை
ஏற்கெனவே தயாரித்துள்ளது. 1968–69-ம் நிதியாண்டில் ஐந்தாண்டுத்
திட்டத்தின்கீழ் வரும் அடியிற்கண்ட 4 வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்
பட்டிருந்தன. அவையாவன: (1) நெய்வேலி பழுப்பு நிலக்கரி வள
வட்டாரத் திட்டம், (2) திருச்சிராப்பள்ளி பெருநகரப் பெருந்திட்டம்,

[1969 மார்ச் 21

(3) மதுரைப் பெருநகரப் பெருந்திட்டம், (4) சென்னை பெருநகரப் பகுதியில் போக்குவரத்து ஆய்வு. இவ்வேலைத் திட்டங்கள் அடுத்த நிதி யாண்டிலும் தொடரப்பட்டு எவ்வளவு விரைவில் முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் முடிக்கப்படும். இத்தகைய பெருந்திட்டங்களைத் தீட்டுவதற்காக ஏற்படும் செலவை ஈடு செய்ய 1969–70 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 11·66 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

53. மேற்சொன்ன பெருந்திட்டங்களன்றியும், நகரமைப்புத்துறை மாநிலத் திட்டத்தின்கீழ், தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்ட வட்டாரங்களுக்காக வட்டாரத் திட்டங்களையும், தெரிந்தெடுக்கப்பட்ட நகராட்சிகளுக்காக பொது விவர வளர்ச்சித் திட்டங்களையும், பெருந்திட்டங்களையும் தயாரிப்பதிலும் ஈடுபட்டுள்ளது. இவ்வேலைகளைக் கவனிக்க, 1969–70-ம் ஆண்டு வரவு-செலவு மானியக் கோரிக்கையில் ரூபாய் 1·92 லட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

54. நகரமைப்பு வல்லுநர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும் திட்டம் ஒன்று உள்ளது. இதன்கீழ், பட்ட மேற் படிப்பிற்காகவும், பட்டய மேற்படிப்பிற்காகவும் (Post Diploma) பயிற்சி பெற தகுதிப் யிலிருந்து பணியாளர்கள் அனுப்பப்படுகின்றனர். இது குறித்து துறை 1969–70-ம் ஆண்டு செலவுக்காக ரூபாய் 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

55. உள்ளாட்சி மன்றங்கள் நகரமைப்புத் திட்டங்களை நிறைவேற்று வதற்குக் கடன் வகையில் நிதி உதவி அளிப்பதற்காக 1969–70 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 2·00 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. அரசு தரும் உதவி மட்டுமன்றி, சீரான நிதி வசதி உடைய நகராட்சிகளும் தம்மிடமுள்ள நிதி வசதியை நகரமைப்பு வேலைகளுக்காக பயன்படுத்துகின்றன. நகராட்சிகள் நேரடியாக மேற் கொள்ளும் இச் செலவு மாநிலக் கணக்குகளில் காட்டப்படுவதில்லை.

56. இம் மானியக் கோரிக்கையை ஏற்குமாறு இம் மன்றத்தினை வேண்டுகிறேன்.

## இணைப்பு—3.

### கோரிக்கை 38-பொதுச் சுகாதார மூலதனச் செலவு.

இந்த மானியக் கோரிக்கையில் கீழ்க்கண்ட இனங்கள் அடங்கும் :—

| | | |
|---|---|---|
| | | ரூ. |
| (i) a. பணிகள் .. .. | (—) | 37,25,000 |
| (ii) b. உதவி மானியங்கள் .. .. | (—) | 1,26,200 |
| (iii) c. ஏனைய பணிகள் .. .. | | .. |
| (iv) d. வளர்ச்சிப் பணித் திட்டங்கள் .. | | 51,800 |
| (v) e. கழிக்கவும்—30. பொதுச் சுகாதாரத்திற்கு மாற்றப்பட்ட மூலதனச் செலவு. | (—) | 5,200 |
| மொத்தம்—பெருந்தலைப்பு .. | (—) | 38,04,600 |
| கூட்டுக-வசூல்-வரக்களிக்கப்பட்டது. | | 38,56,400 |
| பெருமொத்தக் கோரிக்கை .. .. | | 51,800 |



1969 மார்ச் 21]

**இனம் (i)—a. பணிகள்.—[(—) ரூ. 37,25,000]—**

நகராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் நீர் வழங்கு திட்டங்களையும் கழிவு நீர் அகற்றல் திட்டங்களையும் விரைந்து நிறைவேற்றும் பொருட்டு, வெளிக்கடைகளில் எளிதில் இடைக்காத குழாய் முதலிய பொருள்களைத் தேவையான அளவிற்கு அரசு வாங்கி, இருப்பில் வைத்து வருகின்றது. நீர் வழங்குதல், கழிவு நீர் அகற்றுதல் ஆகிய வேலைத் திட்டங்க ளுக்காகப் பயன்படுத்தப்படும் குழாய்கள், ஏனைய பொருள்கள் ஆகியவை குறித்த செலவு, சரிகட்டுதல் மூலம், சம்பந்தப்பட்ட வேலைத் திட்டங்களுக்குப் பற்றுக எழுதப்பட்டு, அந்தந்த உள்ளாட்சி மன்றங் களிடமிருந்து வசூலிக்கப்படும். பொருள்கள் செலவாக ஆக, அவற்றிற்கு ஈடாகப் பொருள்கள் வாங்கி இருப்பு வைக்கப்படுகின்றது.

**இனம் (ii)—b. உதவி மானியங்கள்.—[(—) ரூ. 1,26,200]—**

சென்னை மாநகராட்சி நிறைவேற்றும் நீர்வழங்கு திட்டங்களுக்கும் கழிவுநீர் அகற்றல் திட்டங்களுக்கும் வழங்கப்பட்ட உதவி மானியங்கள் குறித்த செலவு, 1956–57, 1957–58-ம் ஆண்டுகளில் முதற்கண் மூலதனக் கணக்கிலிருந்து சரிக்கட்டப்பட்டது. இச் செலவுத் தொகையை மூலதனக் கணக்கிலிருந்து 15 ஆண்டுகளில் வருமானக் கணக்கிற்கு மாற்றி எழுதப்படவேண்டுமென்று ஆணையிடப்பட்டது. இதற்கு நிகராக "30. பொதுச் சுகாதாரம்" என்பதன்கீழ் செலவு கூட்டப்பட்டுள்ளது.

**இனம் (iii)—c. ஏனைய பணிகள்.**—நிதி ஒதுக்க கருதப்படவில்லை.

**இனம் (iv)—d. வளர்ச்சி வேலைத் திட்டங்கள்.—[ரூ. 51,800]—**

கிராமப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குவதே கிராம நீர் வழங்கு (அடங்கல்) வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.—(i) விசை ஏற்ற அமைப்பு இணைக்கப்பட்ட துணைக் கிணறுகள், (ii) மேந்தொட்டிகளும் (overhead tanks) விசை ஏற்ற அமைப்புகளும் கொண்ட மூடப்பட்ட கிணறுகள், (iii) நகராட்சிகளின் நீர் பெருங் குழாய்களிலிருந்து இணைப்புகள், (iv) இழு கிணறுகள் ஆகியவற்றின்மூலம் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கப்படும். பொதுவாக வேலைத் திட்டத்தின் செலவில் 25 சத வீதம், இவ் வேலைத் திட்டத்தினால் பயன்பெறுபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும். ஆனால், அரிசனங்கள், ஏழை மக்கள், பின்னிலை வகுப்பினர் ஆகியோர் பயன்படுத்தும் கிணறுகளுக்காக எவ்விதத் தொகையும் வசூலிக்கப்படுவதில்லை. முதலாவது, இரண்டாவது திட்டக் காலத்தில், 14,272 நீர் வழங்கு வேலைகள் நிறைவெய்தின. இவ் வேலைத் திட்டம், பின்னர் கிராமப் பணிகள் திட்டத்துடன் இணைக்கப் பட்டது.

கம்பம் பள்ளத்தாக்கு பஞ்சாயத்துக்களுக்கான நீர்வழங்கு (அடங்கல்) திட்டத்திற்கு 1955-ல ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத் திட்டம் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. பெரியாற்றின் குறுக்கே படுகை அணை கட்டுவது தவிர, மற்றெல்லாப் பணிகளும் செய்து முடிக்கப் பட்டுள்ளன. இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஊராட்சிகள இப் பணிக்காகும் செலவினைச் செய்வதற்காக, அந்த ஊராட்சிகளுக்கு மானிய உதவி அளிக்கும் பொருட்டு ரூ. 1,800 ஒதுக்கப்பட்டுள்ளது.

1966 டிசம்பர் திங்களில் நாங்குனேரி ஊராட்சிக்குக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ் வேலை நிறைவேறி வருகிறது. இத் திட்டத்திற்காகும் செலவினைச் செய்வதற்காக, நாங்குனேரி ஊராட்சிக்கு மானிய உதவி வழங்குவதன் பொருட்டு ரூ. 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

இனம் (v)—ல. கழிக்கவும்—"30. பொதுச் சுகாதாரத்திற்கு" மாற்றப் [1969 மார்ச் 21
பட்ட மூலதனச் செலவு.—[(—) ரூ. 5,200]—

கிராம நீர் வழங்கு (அடங்கல்) வேலைத் திட்டத்தின்கீழ் மேற்
கொள்ளப்படும் வேலைகளுக்கு, அவற்றிலிருந்து பயன்பெறுபவர்களிட
மிருந்து திட்டத்திற்காகும் செலவில் 25 சத வீதம் வசூலிக்கப்படும். எஞ்சிய
தொகையாக ரூ 5,200 பயன்பெறுபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும்
என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத் தொகையை மூலதனக் கணக்கி
லிருந்து வருமானக் கணக்கிற்கு மாற்றவேண்டும்.

இம் மானியக் கோரிக்கையின்கீழ், ரூ. 51,800 ஒதுக்குமாறு
இம் மன்றத்தை வேண்டுகிறேன்.



## How to use the index.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading ' Bill (s) '.

Various bodies like CommitteeJs, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., ' Committee(s) ', ' Council(s) ', ' Corporation(s) ', etc.

Various Schools, Colleges, Conferences Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading " Papers Laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

A.M./Ad. Motion—Adjournment Motion.

Ann.—Announcement.

B.O.H.—Business of the House.

C.A.—Calling Attention to a Matter of Urgent Public Importance.

C.A.St.—Calling Attention Statement.

Consid.—Consideration stage of a Bill.

**This stage includes—**

(i) Motion to refer to Select/Joint Select Committee.

(ii) Amendment to refer to Select/Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

Consid. Cl.—Consideration of clauses of a Bill.
D.E.E.—Demands for Excess Expenditure.
Dis. S.D. or D.S.D.—Discussion for Short Duration on an urgent matter of Administration.
D.S.G.—Demands for Supplementary Grants.
G.A.—Governor's Address.
G.D.—General Discussion.
H.A.H. Dis./H.H.D.—Half-hour Discussion.
Int.—Introduction stage of a Bill.
L.A.—Legislative Assembly.
L.C.—Legislative Council.
M.—Motion.
P.M.—Privilege **Motion.**
R/Res.—Resolution.
**St.—Statement.**

# Tamil Nadu Legislative Assembly Debates

Fifth Session of the Fourth Legislative Assembly under the Constitution of India.

15th to 21st March 1969

Volume XIX (Nos. 1 to 5)


PAGES

A

ADITANAR, THIRU SI. PA.—
Non-disbursement of loan through Land Mortgage Banks—Ramanathapuram (C.A. St.) ... ... 227

AGRICULTURE—
Paddy and other crops, cost of cultivation ... ... 509–511
Report, double crop cultivation ... .. .. 122–124

ALAGARSWAMY, THIRU S.—
Budget, 1969–70, voting—
Irrigation
Capital Outlay on Irrigation
Public Works—Works
Public Works—Establishment and Tools and Plant
Capital Outlay on Public Works ... ... 148, 149

ANDI ALIAS GURUSAMY, THIRU K.—
Budget, 1969–70, voting—
Irrigation
Capital Outlay on Irrigation
Public Works—Works
Public Works—Establishment and Tools and Plant
Capital Outlay on Public Works ... ... 190

A—*cont.*


PAGES

ANNAMALAI, THIRU C. V. M.—
Budget 1969-70, Voting—
Agriculture
Animal Husbandry
Capital outlay on Agriculture
Capital outlay on Forests
Cinchona
Fisheries
Forests ... ... ... ... ... ... 251–253

ANTI-HINDI AGITATION ... ... ... ... 403–407

ARRESTS—
Corruption Charges ... ... ... ... 508
Ministers' visits ... ... ... ... ... 407–409

ARUMUGAM, THIRU A.—
Budget 1969-70, Voting—
Medical, Public Health—Capital outlay on Public Health ... ... ... ... ... 556–558

AUTHIMOOLAM, THIRU D. S.—
Budget 1969-70, Voting—
District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Administration) ... ... ... ... 480–482
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ... ...
Public Works—Works
Public Works—Establishment and Tools and Plant
Capital Outlay on Public Works ... ... ... 186–189
Medical, Public Health—Capital Outlay on Public Health ... ... ... ... ... ... 563–565


B.


BABY FOOD—
Burma Market ... ... ... ... ... 109–111

BALAN, THIRU M. C.—
Budget 1969-70, Voting—
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ... ...
Forests ... ... ... ... ... ... 277–280




B—cont.


PAGES

BALARAMAN, THIRU L.—
Budget 1969-70, Voting— ... ... ...
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ...
Forests ... ... ... ... ... 229, 232, 257–258

BALASUBRAMANYAN, THIRU A.
Budget 1969-70, Voting—
Police ... ... ... ... ... ... 29, 42–47

BELLIE GOWDER, THIRU J.—
Budget 1969-70, Voting— ... ... ...
Agriculture ... ... ... ...
Animal Husbandry ... ... ...
Capital Outlay on Agriculture ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ... 255–257
Forests ... ...

BHARATHI MOHAN, THIRU K.—
Budget 1969-70, Voting— ... ... ...
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ... 249–251
Forests ... ...

BHUPATHY, THIRU M.—
Budget 1969-70, Voting—
Animal Husbandry ... ... ... ... ... 228

BHUVARAHAN, THIRU G.—
Calling attention statement, complaint of delay ... 535
Clash between the toll-gate contractor and Virudhachalam Arts College students (C.A.) ... ... 536, 537

BILL(S)—

PAGES

Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1969—
Motion to pass ... ... ... ... ... 138–146
Passed ... ... ... ... ... 146

BOJAN, THIRU K.—

Budget 1969–70, Voting—
Agriculture ... ... ... ... 271–273
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ... ...
Chinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ...
Forests ... ... ... ... ...

Co-operative Institutions, audit ... ... ... 131–132
Government servants, Nilgiris, winter allowance ... 222–223
Kundah Power Project Rehabilitation of Villagers of Attuboil and Porthi ... ... ... 10–11

BOOK(S)—

Obscene ... ... ... ... ... 12

BRIDGE(S)—

Vettaru, in Vedampur ... ... ... ... 10
Widening, across Periyar Canal near Sundararajapuram ... ... ... ... ... ... 523

BURMA MARKET—

Baby foods, seizure ... ... ... ... 109–110
Raiding ... ... ... ... ... ... 217–220

C

CALLING ATTENTION—

Big Tank, Ramanathapuram, renovation ... ... 227
Clash between the toll-gate Contractor and Virudhachalam Arts College students ... ... 536–539
Non-disbursement of loan through Land Mortgage Banks—Ramanathapuram ... ... ... 227–228
Statement, Complaint of delay ... ... ... 535



PAGES

CATTLE—

Australian Jersy bulls ... ... ... ... 417–418

CHAIR—

Rulings and Observations :

Adjournment Motions :

*Closure of Parry and Company Factory at Ranipet and the plight of labourers.*—Consent was withheld on the ground that there were previous rulings to the effect that lock-outs should not form the subject matter of an adjournment motion ... ... ... 424

*Scope of discussion.*—While seeking consent for an adjournment motion, a Member should confine his remarks to convince the Chair as to how the matter was so important and urgent as to warrant his consent for the motion and it was not in order to take advantage of the opportunity to go into the merits of the subject matter contained in the motion. 530–532

*Shifting of Defence Institute of Physiology and Allied Sciences from Madras to Delhi.*—Consent was withheld on the ground that the subject matter of the motion came within the responsibility of the Central Government ... 23

*Statement of the Deputy Prime Minister (Shri Morarji Desai) against State Governments' presenting deficit budgets and receiving overdrafts from the Reserve Bank and its consequences.*—Consent was withheld in the light of the clarifications of the Chief Minister and on the ground that the business of the House need not be adjourned to discuss the matter. 530–535

" Bill(s)—

*Bill passed by the Legislative Council with amendment—Introduction and notice for consideration.*—On 17th March 1969, immediately after question hour, a Member rose on a point of order and said that the next item after " Questions and Answers " in the Agenda for the day was " Government Bills " under which came the consideration of amendments made by the Legislative

PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Bill(s)—*cont.*

Council in respect of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969. He contended that the Bill had to be formally introduced and three days' notice had to be given for taking it into consideration in the Legislative Assembly, as even an amending Bill had the same disability of any other normal Bill and hence should undergo all the formalities that any other Bill had to undergo. The Leader of the Opposition and some other Members suggested that the consideration may be postponed.

The Finance Minister stated that while the suggestion for postponement might be considered, it was not correct to state that three days' notice had not been given as in fact three days' notice had been given. The procedure to be followed in the case of other Bills might not apply to a Bill returned by the Council with the amendments as different sets of rules govern their consideration. So, the Bill need not be formally introduced as suggested by the Member and thus there was no point of order.

In reply to the above discussion and in reply to other points raised about lack of time for giving notice of amendments, the Chair held that in the instant case, as per the rules, there was no need to introduce the Bill and it could be taken up for consideration straightaway. The Members would be allowed to give notice of amendments even at the time of consideration. With these observations, the point raised by the Member was ruled out of order. ... ... ... ... ... ... 132–134

Call attention—

*Delay in giving statements by Ministers.*—On a Member pointing out that there was delay in getting statements from Ministers to their Call Attention Notices, the Chair observed that such matters should be brought to his notice in his Chamber and not in the House.



PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Call attention—*cont.*

The Chair added that there was no time limit for furnishing statements to Call Attention Notices under Rule 41 unlike replies to questions where there was a time limit prescribed. Nevertheless, he sent reminders to the Departments to furnish statements to Call Attention Notices and also fixed certain dates within which the Departments should send their statements, but there was no rule to compel them to furnish the statements within a stipulated time ... ... ... ... 538–539

If the Member who had given a Call Attention Notice was not in his seat at the time it was taken up, it would not be considered ... ... 539

With reference to a query from a Member whether it would be in order to take up a Call Attention Notice in the House after the urgency of the matter was over as a matter which was not urgent could not be considered under the rules relating to Call Attention Notices.

The Chair observed that at the time the notice was given, there was urgency, the statement in response thereto had just then been received from Government and there was no time to look into the contents of the statement ... ... ... 536

Committee of enquiry—

On 14th March 1969, the Deputy Speaker announced that a Committee would be constituted to enquire into certain allegations made by a Member and the Member might prove his allegations in the Committee.

On 15th March 1969, the Speaker announced that the Member who had made the allegation the previous day had placed before him the relevant Assembly proceedings in support of his allegation and has proved his allegations and hence there was no need for the constitution of the Committee as earlier announced by the Deputy Speaker.

PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Committee of enquiry—*cont.*

In reply to points of order raised by the Leader of the Opposition and some other Members, the Speaker observed that there was no question of abrogation of the ruling of the Deputy Speaker nor was there any legal flaw, as the need for the Committee ceased the moment the purpose for which it was announced to be constituted had been achieved. If similar evidence was produced before him in a similar instance, he would act as he had acted in the instant case ... ... ... 23–28

Debate—

*Abuses.*—After the Chief Minister moved the "Police" Demand and made his introductory remarks and before the discussion commenced, the Chair appealed to the Members to refrain from mutual abuses and to offer their sound suggestions and views in a calm manner. While they were free to make allegations, let them be specific, let them not indulge in generalisation, let them import "force" in their views and not "heat" in their words ... ... ... ... 30

*Allegations.*—Members should take responsibility for the allegations that they make ... ... 76–77

With reference to certain allegations made by the Leader of the Opposition and the explanation of the Chief Minister and some other Ministers in regard to the selection of candidates for admission to Medical Colleges, the Chair observed that allegations should be specific and should not be based on press reports and "street-talks" and the Members should take full responsibility for the allegations that they made and they should be prepared to prove them.

The Chair added that it would not be desirable to cast aspersions on the Members of the Selection Committee as it would tend to lower the prestige of the State ... ... ... ... ... 618–621



PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Debate—*cont.*

*Chief Minister's right to participate.*—The Chief Minister was entitled to speak at any time of a debate in the House ... ... ... .. 528

*Clarification not permissible at the time of voting.*—At the time of putting the Demands and the Cut Motions to the vote of the House, a Member was required to say only whether he pressed or withdrew his Cut Motion and he was not entitled to make a speech or to ask for any clarification from the Minister ... ... ... ... ... 202

*Interruption.*—A Member should not interrupt another Member to reply to the points referred to by him then and there ... ... ... ... 192–193

*Leader of the Opposition's speech.*—On the 18 March 1969, the Leader of the Opposition spoke in the middle of a discussion on the Demand for Grants. A Member pointed out that the usual convention was for the Leader of the Opposition to speak at the end of the discussion and then the Minister would reply to it. He enquired whether other Members would not have the opportunities to speak as the Leader of the Opposition had spoken.

The Chair observed that, irrespective of the practice or convention that prevailed, he had the right to change it. In the instant case, as the Leader of the Opposition had an engagement in the afternoon, the Chair had permitted him to speak just then ... ... ... ... ... ... 270

*Reference to a newspaper.*—During the debate on "Police" Demand, the Leader of the Opposition criticised a newspaper without mentioning its name, on the manner in which it had been presenting the news.

The Chair observed that the Leader of the Opposition could refer to a matter only when no action was taken by the Police against the paper even though they knew that it went wrong, but it was not desirable to refer to the manner in which it

CHAIR—*cont.* **PAGES**

Rulings and Observations—*cont.*

Debate—*cont.*

presented the news, as the papers presented the news in such a manner that was conducive to their growth. ... ... ... ... ... 75

*Reference to family matters*—

When a Member began to refer to the burial of the late Chief Minister (Thiru C. N. Annadurai), the Chair observed that it was a family matter and that it could not be referred to in the House. ... ... ... ... ... 544

*Relevancy*—

Members' remarks relate to the subject under discussions ... ... ... ... ... 244, 245, 443

*Right of second speech*—

After the Minister had replied to a discussion, a Member could ask for clarification, but could not offer explanation as no Member had the right to make a second speech on the same subject ... ... ... ... ... 145

Decorum—

Members should address the Chair ... ... 62

Members should resume their seats when the Chair was on its legs ... ... ... ... 234

No abusive or disparaging remarks should be made by a Member against another Member .. 36, 47

*Members not to speak sitting*—

With reference to certain remarks made by a Member sitting, the Chair deprecating the practice observed that if all the Members were to speak sitting, it would resemble a public meeting and Members would do well not to follow that practice ... ... ... ... 117-118, 121-122

*Use of the pronoun " நீங்கள் " (You)*—

It is not in order to refer to other Members as 'You', as it will refer only to the Chair ... 142



CHAIR—*cont.* **PAGES**

Rulings and Observations—*cont.*

Demands for grants—

*Consideration of other business*—

There is no rule to the effect that Bills should not be brought before the House during the consideration of the Budget or the Demands for Grants, and the rules permit the consideration of Government Bills with the permission of the Speaker. ... ... ... ... ... 135

*Introductory speeches*—

A Member rose on a point of order and enquired why the English version of an introductory speech of a Minister had not been supplied to the Members as had been done in the case of other Ministers' Demands, especially as the rule laid down that " the business of the Assembly shall be transacted in English or in Tamil ".

The Chair observed that it was stated in the rule 'English' or 'Tamil' and so the Member could not insist that the speech should be in English also, and held that there was no point of order. ... ... ... ... ... ... 240-241

With reference to a point of order raised that the policy notes, etc. on Demands for Grants were not circulated in advance and so they were not able to study them beforehand, the Speaker endorsing the view expressed by the Finance Minister, stated that it was only as a matter of facility the policy notes were circulated in advance and the matter could not be raised as a point of order. He added that the Government might try to arrange to circulate the notes in advance ... ... ... ... ... 426-427

Expressions used in the House—

*Objectionable Expressions*—

'RUINED' ( குட்டிச்சுவர் )—in the sentence " They have utterly ruined the Police Department to that extent (*அந்த அளவிற்கு போலீஸ் இலாகாவை கெடுத்துக் குட்டிச்சுவராக்கி இருக்கிறார்கள்*) —**Deprecated** ... ... ... ... **76**

CHAIR—*cont.*

PAGES

Leader of the Opposition—

Rulings and Observations—*cont.*

Enjoyed such privileges that are granted to him under the Assembly Rules ... ... ... 237

Though the rules did not provide for special rights for the Leader of the Opposition, though there might be difference of opinion as to whether it was a "concession" or "privilege", the Chair had always allowed him to speak whenever he rose, and so, there was no question of the Chief Minister being liberal and the Chair being rigid in regard to allowing the Leader of the Opposition to speak whenever he wanted.

In that connection, the Chair reminded the House that on account of his properly enforcing the rules, they were able to conduct the proceedings in a dignified manner.

The Chair would continue to safeguard the rights and privileges of the Members. ... ... ... 530

With reference to certain allegations persistently made by the Leader of the Opposition, the Chair regretted that he was not getting that much of co-operation that he expected from the Leader of the Opposition in the enforcement of the rules and conventions and appealed to him to extend his co-operation at least in future. The Chair added that because they were enforcing the rules carefully they were able to conduct the proceedings in a dignified manner ... ... ... ... ... 520

Matters Sub Judice—

On a Member pointing out that another Member was referring in his speech to the merits of a case pending before a Court, the Chair observed that there were rulings to the effect that matters *sub judice* should not be referred to and that he was himself watching his speech and the moment the member went into the merits of the case he would intervene and stop him. The Chair too had its responsibility in the matter ... ... 35–36

When a matter had gone on appeal, it was not proper to discuss it on the floor of the House ... 116



PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Matters Sub Judice—*cont.*

When a Minister said that as some cases relating to the subject matter of a question were pending in a Court, further details could not be furnished, members should not seek further clarification ... 509

*Committee of Enquiry*—

With reference to a point of order raised by a Member on 13th March 1969 whether it was in order to appoint a Committee to enquire into certain allegation made by a Member as the subject matter referred to by the Member was *sub judice*, the Chair observed that in the conference of Presiding Officers, the view expressed by the Speaker of the Lok Sabha, viz., " While on the one hand the Chair has to ensure that no discussion in the House tends to prejudice the course of justice, the Chair has to see that the House is not debarred from discussing an urgent matter of public importance on the ground that a similar, allied or linked matter is before a court of law. The test of *sub judice* in my opinion should be that the matter sought to be raised in the House is substantially identical with the one on which a court of law has to adjudicate. " has been endorsed by the Presiding Officers.

In the light of the above decision, and as the Member concerned had only made a general allegation and had taken responsibility for the allegation, the constitution of a Committee to enquire into the allegation would not in any way prejudic the case ebfore the Court ... 137

Ministers' Statements—

With reference to a point of order raised by a Member whether the Chief Minister would make a statement on the talks that he had with the Central Ministers, the Chair held that it was not a point of order. The Ministers might, if they so wished, make a statement, but there was no rule to compel them to make a statement ... 424

PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Ministers' Statements—*cont.*

*No debate permissible*—

On 18th March 1969, after a Minister made a statement under Rule 82 on a matter of public importance, the Leader of the Opposition rose to seek some clarification. The Chair pointed out that according to the rules there should be no debate on a statement made under Rule 82. On the Leader of the Opposition persistently insisting that he should be heard and on the Minister who made the statement also favouring the Chair's consent to the Leader of the Opposition to make his osbervations, the Chair observed that it was his duty to faithfully enforce the rules framed by all of them. The relevant rule did not permit a debate on the occasion eventhough the Minister might favour it.

The Chair added that while he might permit one or two questions by a Member on a statement made under Rule 41, on a statement made under Rule 82 no deabte was permissible.

Until the relevant rules were modified, the Chair had to ait as per the rules, and the Leader of the Opposition and other Memebrs would do well in co-operating with him to enforce the rules. The Leader of the Opposition would have plenty of other opportunities to seek the clarification that he wanted ... ... ... 233-238

Personal Explanation—

*Time to raise*—

When a Member rose on a point of personal explanation after the Minister had replied to a supplementary question of another Member, the Chair observed that he could raise it after the question hour was over. ... ... ... 117

While offering his personal explanation, a member should not make allegations. It was enough if he denied any statement which was attributed to him ... ... ... ... ... ...





PAGES.

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Points of Orders*—cont.

Point of information—

Point of information could be raised only to elicit information arising from a Minister's statement. In the Rules, there was no provision for a Zero Hour. After making provision for Zero Hour in the Rules, such a point of information could be sought ... ... ... ... ... ... 528

Points of Order—

*Chair to decide*—

It was not in order for a Member to say that a point of order raised by another Member was not a point of order ... ... ... ... 75

*Chief Minister" Statement about his discussion with the Central Ministers*—

On 20th March 1969, a Member rose on a point of order and asked whether the Chief Minister would make a statement about his discussion with the Central Ministers with regard to the problems facing Tamil Nadu.

The Chair ruled that there was no point of order in it and observed that only when Ministers wished to make a statement they would do so and that there was no provision in the Rules for the Members to demand such statements from Ministers. ... ... ... ... 424

*Criteria and scope*—

On the 21st March 1969, a Member rose on a point of order and stated that with reference to a query from the Chair regarding a point of order raised by him the previous day, he wanted to point out that under rule 83(4) a point of order might be raised in relation to the business before the House at the moment. He only sought some information from the Chief Minister on some burning problems of the day. He requested the Chair to be liberal in allowing the ZERO HOUR discussion after question hour as was done in Parliament.

PAGES.

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Points of Order—*cont.*

*Criteria and scope*—cont.

The Chair observed that he was not against points of order being raised. But such points of order should be raised according to the rules and only when there was any breach of the rules or convention. There were other opportunities to raise other matters.

As for allowing 'ZERO HOUR' discussion, there was no provision in the rules for such discussion. Such a discussion could be asked for only after the rules were amended providing for such discussion. ... ... ... 526–527

Only when anything happened in the House which was contrary to the procedure prescribed in the Rules, it could be brought to the notice of the Chair by means of a point of order. But, when a Member referred to another Member and spoke about him, the latter could not rise on a Point of order and offer his explanation as that could be done only by way of personal explanation, at the end of the Member's speech. ... ... ... ... ... 75–76

*Right of the Leader of the Opposition to intervene in a debate*—

A Member rose on a point of order and enquired whether the Leader of the Opposition had got a right to intervene in a debate at any time by written rule or convention.

The Chair observed that it was not a point of order as a point of order could be raised only when there was a breach of observance of the rules. Members would do well not to rise on points of order and refer to anything they liked. ... ... ... ... 289

Privilege Matters—

*Publication of expunged portion of a Member's speech in 'Maravan Madal'*—

On a matter of privilege given notice of by Member that the newspaper 'Maravan Madal' had published a portion of the speech of a



PAGES.

CHAIR—*cont.*

Rulings and Obervations—*cont.*

Privilege Matters—*cont.*

*Publication of expunged portion of a Members' speech in 'Maravan Madal'*—cont.

Member which was ordered to be expunged by the Chair and thus committed a breach of privilege, the Speaker observed that it was a breach of privilege and he would himself take action against the newspaper following precedents in that regard ... ... ... 22–23

Questions—

During question-hour, only information could be sought. ... ... ... ... ... ... 517

*Allegations*—

Allegations should not be made during question hour. ... ... ... ... ... 212, 517, 518

*Deletion of a sub-division of a question*—

A Member rising on a point of order stated that a sub-division of the question given notice of by him had been omitted in the question list which was taken up for answering in the House, though the particular sub-division of the question was admitted by the Speaker and included in the question list sent to him earlier.

The Chair observed that he had admitted the question given notice of by the Member only after deleting the last sub-division, the information had been communicated to the Member and held that it was not a point of order ... ... 524, 526

*Personal explanation*—

Should not eb made during question-hour ... 220

*Supplementaries*—

If a Minister did not answer a particular supplementary question of a Member, it was not in order for the Member to specifically point it out ... ... ... ... ... ... 411

Should not be put with reference to each and every item in the list furnished by a Minister in answer to a main question ... ... 208, 210

CHAIR—*cont.* PAGES.

Rulings and Observations—*cont.*

Questions—*cont.*

*Supplementaries*—cont.

When the Chair had passed on to the next question, a Member expressed a desire to put a supplementary to the previous question. The Chair observed that the convention that no supplementary to a previous question should be asked after the Chair had passed on to the next question should be respected. When the Member persisted, the Chair refused to comply with his request observing that the subject matter was *sub judice* ... ... ... ... 117-118

*Clarification.*—

Should not be sought for what all was said by a Minister in reply to a question. ... ... 216

*Relevancy*—

Should not go far beyond the subject matter of the main question. ... ... ... ... 210

Should relate to the main question ... ... 111-112, 116, 123, 213, 216, 413, 416, 417, 511, 520.

Sittings of the house—

*Non-commencement of the sitting of the House at the specified time and late attendance of Ministers*—

On 15th March 1969, the House met fifteen minutes late. A Member rose on a point of order and said that the House had not been constituted properly at the specified hour. He wanted to know the reason for the unusual delay.

Another Member pointed out that except some Ministers, others attended the Assembly sittings late every day and requested the Chair to advise them to be present in the House at the time of commencement of its sitting.



PAGES.

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Sittings of the House—*cont.*

The Chair assured the House that such a situation would not recur in future and said that the Ministers would realise what had happened that morning and there might not be any need to remind them in the matter.

Later, the Chief Minister explained the reasons for the delay on the part of some Ministers and expressed regret ... ... ... ... 1, 28

Zero hour—

Rising on a point of order requesting the Chair to allow him to ask for clarifications to a statement made by the Minister under Rule 82, a Member suggested that there was a move in the Parliament to extend the "Zero Hour" and requested the Chair to be more liberal during the "Zero Hour."

The Chair observed that under the rules, there was no provision for Zero Hour. If the rules were amended by the House providing for Zero Hour, he would not have any objection to allow it ... 526-528

CHEEMAICHAMY, THIRU K.—

Agricultural Income-Tax collection in Vettaikaranputhur ... ... ... ... ... 509

Fertiliser price, rise ... ... ... ... 418-421

CHITHAN, THIRU N. S. V.—

Agricultural Income-Tax, collection in Vettaikaranputhur ... ... ... ... ... ... 509

Anti-Hindi agitation, Hindi film shooting ... 406-407

Arrests during Ministers' visits ... ... ... 407-409

Cattle, Australian jersy bulls ... ... ... 417-418

Commissioner of Civil Supplies, staff pattern ... 19

Conference of Chief Ministers, 1968, decisions ... 5-8

Dearness Allowance, merger with pay ... ... 16-18

Employment exchanges, working ... ... 522-523

Indian Institute of Public Administration, grant 409

Paddy, procurement in Thanjavur ... ... 413-416

Paddy Producers, writ petitions ... ... ... 115-118

Ramanathapuram district, bifurcation ... ... 223-225

Ration, distribution of cards in Madurai ... 118-120

C—*cont.*

PAGES.

CHITHAN, THIRU N. S. V.—*cont.*
Ration, reduction in Rajapalayam ... ... 412–413
Ration shops in Madras city ... ... ... 120–122
Secretariat, five days' week ... ... ... 14–15
Tar, purchase from Neyveli ... ... ... 215–217
Wakf Board, college in Madurai ... ... ... 521–522

CIVIL SUPPLIES—
Commissioner's Office, staff pattern ... ... 19

COLLEGE(S)—
Wakf Board, Madurai ... ... ... ... 521–522

CO-OPERATIVE INSTITUTIONS—
**Audit of accounts** ... ... ... ... **181–182**

COMMITTEES—
Announcement—Committee announced earlier by Deputy Speaker, considered unnecessary ... 23–28

COMPLAINTS—
Acknowledgement ... ... ... ... 11–12

CONFERENCE(S)—
Chief Minister's Conference, 1967 ... ... ... 505–507
Chief Minister's Conference, 1968 ... ... 5–8

CORPORATION WATER WORKS—
Smoke nuisance ... ... ... ... 2

COTTON—
Package programme ... ... ... ... 113–115

D

" DALMIAPURAM "—
Change of name ... ... ... ... ... 401

DEARNESS ALLOWANCE—
Merger with pay ... ... ... ... ... 16–18

DHANUSHKODI, THIRU P. S.—
Budget 1969–70, Voting—Forests ... ... 231

DHARMALINGAM, THIRU N.—
Instructors' Pay, Industrial Training Institutes 519
Irrigation, dry lands in Thalaignayuru area ... 524–525



*D—cont.*

PAGES

DISTRICT ADMINISTRATION—
Ramanathapuram district, bifurcation ... ... 223–225

DROUGHT—
Areas affected—Prime Minister's visit (St.) ... 233

DURAIARASAN, THIRU A.—
Budget 1969–70—
**Irrigation**
Capital Outlay on Irrigation
Public Works—Works
Public Works—Establishment and Tools and **Plant**
Capital Outlay on Public Works ... 171–172

DURAIPANDIAN, THIRU N.—
Budget 1969–70—Voting—
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 559–563

DURAIRAJ, THIRU P.—
Budget 1969–70, Voting—
District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Administration) ... ... ... 466–468

DURAISWAMY, THIRU S.—
Circular Road, Thirupur town ... ... ... 525
Conference of Chief Ministers' 1968 ... ... 5–8
Co-operative Milk Supply Society, Tiruppur, lands leased out ... ... ... ... 19–21
Overbridge near CSW Mills, Coimbatore ... 205–208
Roads, widening, junction of Palladam Road—Eswarankoil Road ... ... ... 21

E

ELAMVAZHUTHI, THIRU Ere.—
Budget, 1969–70, Voting—
Polic ... ... ... ... ... ... 34–38

ELECTRICITY—
Grid station at Hosur ... ... ... ... 217
Revenue Divisional Offices, electrification ... 16

ELENCHEZHIAN, THIRU V. S.—
Budget 1969–70, Voting—
Agriculture ... ... ... ...
Animal Husbandry ... ... ... ... 295–297
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ... ...
**Fisheries** ... ... ...

E—*cont.*


PAGES

EMPLOYEES—
Panchayats and Municipalities, revision of pay scales ... ... ... ... ... 126

EMPLOYMENT EXCHANGES—
Working ... ... ... ... ... 522-523

F.

FERTILISER—
Rise in price ... ... ... ... ... 418-421

FINANCIAL BUSINESS—
Budget 1969-70, Voting:
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ... 228-232,
Capital Outlay on Forests ... ... ... 232-334
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ...
Forests ... ... ... ... ...
District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Administration) ... ... ... 457-494
General Sales Tax and Other Taxes and Duties Administration ... ... ... ... 425, 427-457
Irrigation ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ...
Capital Outlay on Public Works ... 146-204
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ...
Police ... ... ... ... ... 539-622

FISHERIES— ... ... ... ... 28-93
Fishing in Sea-Cost ...
Power boats, Import ... ... ... ... 514-516

FOODGRAINS— ... ... ... ... 111-113
Wheat, supply to Tiruchirappalli town ... ... 18-19




G.


PAGES

GANESAN, THIRU S.—
Budget 1969-70, voting:
Agriculture ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ...
Fisheries ... ... ... ... 284-285
Forests ... ... ... ...

GNANASAMBANDAN, THIRU K. B.— 10
Bridge across Vettaru in Vedampur ... ...
Budget 1969-70, Voting: ... ... ...
District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Administrations) ... ... ... 468-471
Fisheries ... ... ... ... ... 230
Irrigation ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... 149
Capital Outlay on Public Works ... ... ...

GOMATHYSANKARA DIKSHIDAR, THIRU G.—
Agricultural Income-tax, collection in Vettaikaranputhur ... ... ... ... ... ... 509, 109-111
Baby food, Burma Market ... ... ... 217-220
Burma Market, raiding ... ... ... ... 11-12
Complaints from public, acknowledgement ... 401-403
Trade Unions, Simpson and Company Limited

GOVERNMENT OFFICES—
Commissioner of Civil Supplies Office, staff pattern ... ... ... ... 19
Revenue Divisional Offices, electrification ... 16

GOVERNMENT SERVANTS— 16-18
Dearness Allowance, merger with pay ... ... 14-15
"Five-days' week" office work, Secretariat N.G.O's views ... ... ... ... 222-223
Winter Allowance, Nilgiris ... ... ... ...

PAGES

GOVINDARAJAN, THIRU C.—
Budget 1969–70, Voting :
Irrigation,
Capital Outlay on Irrigation
Public Works—Works ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ...
Capital Outlay on Public Works ... ... ...
Medical, Public Health—Capital Outlay on Public Health ... ... ... ... ... ... 148, 540

GOVINDARASAN, THIRU A.—
Budget 1969–70, Voting :
Agriculture ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ...
Fisheries ... ... ... ... ...
Forests ... ... ... ... ... 291–292

GOVINDASWAMY, THIRU A.—
Budget 1969–70, Voting :
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outaly on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ...
Fisheries ... ... ... ... ...
Forests ... ... ... ... ... 228, 229, 230, 231, 232, 239, 240, 252, 263, 267, 268, 269, 270, 312–332

## H.

HANDE, DR. H. V.—
Budget 1969–70, Voting :
District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Administration ... ... ... 457
Fisheries ... ... ... ... ... ...
Forests ... ... ... ... ... 229, 231



PAGES

HANDE DR. H. V.—cont.
Budget, 1969–70, voting—cont.
General Sales Tax and other Taxes and Duties Administration ... ... ... 425, 432–436
Medical, Public Health—Capital Outlay on Public Health ... ...... ... 539, 585–588
Police ... ... ... ... 29, 61–65
Chairman of Panchayat Unions, Scheduled caste 8–10
Personal explanation, Scope and time for raising, and provision of Zeror Hour ... ... ... 526–527
Pension, Liberalisation to Supervising staff of Public Works Department—Retired ... ... ... 523
Points of Order—
Consideration by the Assembly of a bill amended by the Council, three days' notice ... ... 132–137
Omission of supplementary item in the original question ... ... ... ... ... 524–526
Statement, Chief Minister's meet with Central Ministers ... ... ... ... 424
Statement by the Deputy Prime Minister indicating his refusal to allow deficit budgets and warning against overdrawal from the Reserve Bank by State Governments (A.M.) ... ... 530-531, 534

HOSPITAL(S)—
Headquarters Hospital, Thirumayam ... ... 4–5

## I

INDUSTRIES—
Coir industry, Idaikazhinadu of Madurantakam taluk ... ... ... ... ... ... 518–519

INSTITUTION(S)
Indian Institute of Public Administration Grant ... 409

PAGES.

INSTITUTIONS—cont.
Industrial Training Institutes, Instructors' Pay ... 519

IRRIGATION—
Dry lands in Thalaignayam area ... ... 524–525
Nandhiyur Channel ... ... ... ... 21–22
Palaniandavar Odai scheme ... ... ... 214

J.

JAGGERY—
Multi-point tax. ... ... ... ... ... 226

JAMES THIRU, J.—
Budget 1969–70, Voting—
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ... 229, 231
Capital Outlay on Forests ... ... ... 301–303
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ...
Forests ... ... ... ... ...

JANAKIAMMAL, THIRUMATHI K. P.—
Budget 1969–70, Voting : Agriculture ... ... 229

JAYARAMAN, THIRU K.—
Budget 1969–70—Voting :
Medical, Public Health, Capital outlay on Public Health ... ... ... ... ... ... 544–546

JAYARAMAN, THIRU P.—
Budget 1969–70, voting :
Medical, Public Health—Capital Outlay on Public Health ... ... ... ... ... ... 591–592

JEEPS—
Supply to Tahsilars ... ... ... ... 220–222

K

KANDASAMY PADAYACHI, THIRU M.—
Budget 1969–70, voting :
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 590–591



PAGES.

KANDASWAMY, THIRU M.—
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 548–549

KANNAPPAN, THIRU M.—
Budget, 1969–70, Voting : 40–42
Police ... ... ... ... ... ...

KARIAMANIKAM AMBALAM, THIRU Kr. Rm.—
Budget, 1969–70, Voting : 181–182
Irrigation ... ... ... ... ...
Capital Outlay on Irrigation
Public Works—Works
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Public Works ... ... ...
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 546–547
Police ... ... ... ... ... 38–40

KARUTHIRUMAN, THIRU P. G.—
Budget, 1969–70, Voting :
Agriculture ... ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ...
Forests ... ... ... ...
220
258–267
268–269
270
190–195
Irrigation ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ...
Capital outlay on Public Works ... ... ... 30, 35
Police ... ... ... ... ... 68, 69
70–80

PAGES

KARUTHIRUMAN, THIRU P. G.—cont.

Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1969 ... ... ... 144

Minister's statement under rule 82, right of Leader of Opposition to ask for clarification ... ... 234, 235, 236, 237, 238

Point of information etc. and provision for Zero Hour discussion ... ... ... ... ... ... 529

Statement by the Deputy Prime Minister indicating his refusal to allow deficit budgets and warning against overdrawal from the Reserve Bank by State Governments and its repercussion (A.M.). 531, 532

KARUNANIDHI, THIRU M.—

Budget 1969–70, Voting:

District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Administration) ... ... ... ... 457, 486–494

Medical ... ... ... ... ... ...

Public Health ... ... ... ... ...

Capital Outlay on Public Health ... ... ... 614–615, 615–617, 618, 619

Police ... ... ... ... ... ... 28, 29, 30, 36, 69, 71, 80–93

Calling attention statement, complaint of delay ... 535–536

House, late commencement and late attendance by Ministers, clarification ... ... ... 23

Point of information etc. and Zero Hour ... ... ... 528, 529

Statement by the Deputy Prime Minister indicating his refusal to allow deficit budgets and warning against overdrawal from the Reserve Bank by State Governments (A.M.) ... ... ... 532–534



PAGES

KARUPPIAH, THIRU A.—

Budget 1969–70, Voting:

Irrigation

Capital Outlay on Irrigation

Public Works—Works

Public Works—Establishment and Tools and Plant ... 179–181

Capital Outlay on Public Works ... ... ...

Medical, Public Health Health, Capital Outlay on Public Health ... ... ... ... 583–585

KARUPPIAH, THIRU R.—

Budget, 1969–70, Voting:

Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... ... 540

Police ... ... ... ... ... ... 65–66

Dalmiapuram, Change of name ... ... ... 401

Jaggery—multi-point tax ... ... ... 226

Nandhiyur Channel ... ... ... ... 21–22

KASIRAMAN, THIRU N.—

Budget 1969–70, Voting:

General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... ... 439–441

Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 592–600

Employees under Panchayats and Municipalities revision of pay scales ... ... ... ... 126

KHADI—

Increase in weavers' wages ... ... ... ... 125–126

Sales ... ... ... ... ... ... ... 124–125

KITTAPPA, THIRU N.—

Budget 1969–70, Voting:

District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Administration) ... ... ... ... ... 473–475

Paddy, procurement in Thanjavur ... ... 413–416

Revenue divisional offices, electrification ... 16

K—*cont.*

PAGES

KOTHANDAM, THIRU KOLATHUR—
Budget 1969–70, Voting :
District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Administration) ... ... ... 477–479
Police ... ... ... ... ... ... 50–51
Coir Industry, Idaikazhinadu of Madurantakam taluk ... ... ... ... ... ... 518–519
Khadi, quantum sold .. .... ... ... ... 124–125
Overbridge, Irumpuliyur ... ... ... ... 205–208
Paddy and other crops, cost of cultivation ... ... 509–511

KOTHANDARAMAN, THIRU V. K.—
Agricultural income-tax, collection in Vettakaranputhur ... ... ... ... ... ... 509
Budget 1969–70, Voting :
Capital Outlay on Forests ... ... ... ... 232
District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Administration) ... ... ... ... 458
General Sales Tax and Other Taxes and Duties —Administration ... ... ... ... 436–437
Irrigation
Capital Outlay on Irrigation
Public Works—Works
Public Works—Establishment and Tools and Plant
Capital Outlay on Public Works
147, 150
202, 203
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... ... 539

KOTHANADARAMAN, THIRU V. K. (*cont.*).
Chief Ministers' Conference 1967 ... ... ... 505–507
Chief Ministers' Conference 1968 ... ... ... 5–8
Municipal services, provincialisation of ... ... 127–129
Obscene books ... ... ... ... ... ... 12
Point of Order, late commencement of House and late attendance of Ministers ... ... ... ... 1, 23
Rice mill licences ... ... ... ... ... 511–513

KOTHANDARAMIAH, THIRU K. S.—
Budget 1967–70, Voting :
Agriculture
Animal Husbandry
Capital Outlay on Agriculture
Capital Outlay on Forests
Cinchona
Fisheries 230,
Forests 299–301
District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Administration) ... ... ... ... 464–466
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... ... 540

KRISHNAN, THIRU E. R.—
Budget 1969–70, Voting :
General Sales Tax and Other Taxes and Duties— ... ... ... 430–432
Administration ... ... ... ... ...
Police ... ... ... ... ... 52–53

KRISHNASAMI GOUNDER, THIRU R.—
Budget 1969–70, Voting : ... ... ...
Agriculture ... ... ... 228
Irrigation
Capital Outlay on Irrigation
Public Works—Works
Public Works—Establishment and Tools and Plant
Capital Outlay on Public Works 150,
169-171
Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill 1969 ... ... ... 140–142

KUNDHA POWER PROJECT—
Rehabilitation of Villagers of Attuboil and Porthi ... 10–11

K—*cont.*


| | PAGES |
|---|---|
| KUMARASWAMI, THIRU K. N.— | |
| Budget 1969-70, Voting: | |
| Agriculture | |
| Annimal Husbandry | |
| Capital Outlay on Agriculture | |
| Capital Outlay on Forests | |
| Cinchona | |
| Fisheries | |
| Forests | 229, 230 |
| Irrigation | 274-277 |
| Capital Outlay on Irrigation | |
| Public Works—Works | |
| Public Works—Establishment and Tools and Plant | |
| Capital Outlay on Public Works | |
| Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... | 147, 148 |
| Police ... ... ... ... ... ... | 539, 540 |
| Khadi, increase in weavers wages ... ... ... | 29, 93 |
| Subway near Somanur Railway Station ... ... | 125-126 |
| | 22 |

L.

| | |
|---|---|
| LANDS— | |
| Boundary stones, painting ... ... ... ... | 15-16 |
| Co-operative Milk Supply Society, Tiruppur lease ... | 19-21 |
| LOANS— | |
| Land Mortgage Banks Non-disbursement of loan, Ramanathapuram (C.A.) ... ... ... | 227, 228 |

M.

| | |
|---|---|
| MADHAVAN, THIRU, S.— | |
| Budget 1969-70, Voting: | |
| Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... | 541-544 |
| Clash between toll-gate contractor and Vridhachalam Arts College students (C.A. St.) ... | 536-537 |
| MALAICHAMY, THIRU P.— | |
| Bridge across Periyar Canal near Sundararajapuram, widening ... ... ... ... | 523 |




M—*cont.*


| | PAGES. |
|---|---|
| MALAICHAMY, THIRU P.—*cont.* | |
| Budget 1969-70—Voting: | |
| Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... | 558-559 |
| Fishing, import of power boats ... ... ... | 111-113 |
| Railway laying Madurai-Karaikudi, etc., lines ... | 209-211 |
| MALAIKANNAN, THIRU, V.— | |
| Budget 1969-70, Voting: | |
| Irrigation ... ... ... ... ... | |
| Capital Outlay on Irrigation ... ... ... | |
| Public Works—Works ... ... ... | |
| Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... | |
| Capital Outlay on Public Works ... ... | 158-160 |
| MANI, THIRU K. B. S.— | |
| Budget 1969-70—Voting: | |
| Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... | 581-583 |
| MANIAN, THIRU P. S.— | |
| Jeep, supply to Tahsildars ... ... ... ... | 220-222 |
| Palaniandavar Odai scheme, ... ... ... | 214 |
| MARIMUTHU, THIRU A.— | |
| Budget 1969-70, Voting: | |
| Agriculture ... ... ... ... ... | |
| Animal Husbandry ... ... ... ... | |
| Capital Outlay on Agriculture ... ... ... | |
| Capital Outlay on Forests ... ... ... | |
| Cinchona ... ... ... ... | |
| Fisheries ... ... ... ... | |
| Forests ... ... ... ... | 294-295 |
| MARTIN, THIRU T.— | |
| Budget, 1969-70, Voting: | |
| Police ... ... ... ... ... | 29, 30-34 35, 36, 93, |
| | 3 |
| Orphanages, donation ... ... ... ... | |
| Minister's statement under rule 82, rihgt of Leader of Opposition to ask for clarification ... ... | 239 |

M—*cont*

MARUDACHALAM, THIRU N.—
Coimbatore Municipality, pension for employees ... 423

MATHIALAGAN, THIRU K. A.—
Budget 1969-70, Voting :
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ... ...
Forests ... ... ... ... ... 241

General Sales Tax and other taxes and duties, Administration ... ... ... 425, 449–457

Cultivating Tenants Protection and Payment of Fair Fair Rent (Amendment) Bill, 1969 ... ... 138–139, 143–144

Draught affected areas—Prime Minister's visit (St.) 233
Minister's statement under Rule 82—right of Leader of Opposition to ask for clarification ... 236

Policy statement on Demands, advance supply (Point of order) ... ... ... ... ... ... 426–427

MOORTHY, THIRU A. K. (Kaliamoorthy alias)—
Budget 1969-70—Voting :
Medical, Public Health, Capital outlay on Public Health ... ... ... ... ... 589–590

MOTION(S)—
Ad. Motions :
Lock-out in Parry and Company, Ranipet ... 424
Shifting of Defence Institute of Physiology and allied Sciences from Madras to Delhi ... ... 23
Statement by the Deputy Prime Minister indicating his refusal to allow deficit budgets and warning against over-drawal from the Reserve Bank by State Governments ... 530–535



M—*cont*

MUTHIAH, THIRU M.—
Budget 1969-70, Voting :
Agriculture ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ...
Fisheries ... ... ... ... ... 51–52
Forests ... ... ... ... ... ...
Police ... ... ...

MUNICIPALITIES—
Coimbatore, Pension to employees ... ... 423
Municipal Services, provincialisation ... ... 126–129

MUTHUSAMY, THIRU M.—
Madras District Municipalities Act, 1920, Draft amendment ... ... ... ... ... 146

NAGASUNDARAM, THIRU R.—
Budget 1969-70, Voting :
General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... 437–439

N

NALLASIVAN, THIRU K. R.—
Budget 1969-70, Voting :
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ... 253–255
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ... ...
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ...
Forests ... ...
District Administration and Miscellaneous including Hindu Religious and Charitable Endowments Administration ... ... ... 479–480
Irrigation ... ... ... ... ... 167–169
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Public Works
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... [illegible]–556

PAGES.

N—*cont.*

NALLASWAMI, THIRU T. M.—
Budget 1969-70—Voting:
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ...
Forests ... ... ... ... ... 304–312

NARASIMHAN, THIRU A. C.—
Budget 1969-70—Voting:
Irrigation ... ... ... ... ... 173–175
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Public Works ... ...
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... ... 565–568

NATARAJAN, THIRU E. M.—
Budget 1969-70—Voting:
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 553–554

NATARAJAN, THIRU G.—
Budget 1969-70—Voting:
Agriculture ... ... ... ... ... 282–284
Animal Husbandry ... ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ...
Forests ... ... ... ... ... ...

O

OMBUDSMAN—
Introduction ... ... ... ... ... 13–14

ORPHANAGES—
Donation ... ... ... ... ... ... 283

OVERBRIDGES—
Construction ... ... ... ... ... 205–208



PAGES.

P.

PADDY—
High-Yielding grain, Tiruchirappalli ... ... 416–417
Procurement in Thanjavur ... ... ... 413–416
Writ petitions, Paddy Producers ... ... 115–118

PALANI, THIRU C.—
Budget 1969-70—Voting: 293–294
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ...
Forests ... ... ... ... ...

PANCHAYAT UNIONS—
Audit of accounts ... ... ... ... ... 129-130
Chairman from scheduled castes ... ... ... 8–10

PANNEERSELVAM, THIRU M.—
Budget 1969-70—Voting: ... 273–274
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ...
Forests ... ... ... ... ...

PAPERS LAID ON THE TABLE—
Agriculture, Policy note ... ... ... ... 495
Animal Husbandry, Policy note ... ... ... 495
Appropriation Accounts for 1967-68 and Audit Report, 1949 ... ... ... ... 495
Capital Outlay on schemes of Government Trading. ... 622
Policy note ... ... ... ... ... ... 94
Committee on Rules, 1969, fifth report ... ...
Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1969—Annexure ... 334
Cinchona Department—Note ... ... ... 334
Finance Accounts for 1967-68 ... ... ... 495
Forest Department, Review ... ... ... 495
Fisheries, Policy note ... ... ... 334
General Sales Tax and other Taxes and Duties Administration, speech by Minister. ... ... 622

PAGES.

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont*

Housing in Tamil Nadu, 1968–69 ... ... 94
Irrigation in Tamil Nadu, review ... ... ... 334
Minor ports in Tamil Nadu, review ... ... 334
Motor Vehicles Taxation Act, 1931—Notification ... 94
Public Works Demand, 1969–70—Speech of Minister 204, 494
Revenue Demands—Policy note ... ... ... 334
Road Development and Building Programme in Tamil Nadu, review ... ... ... ... 94
State Housing Board Act, 1961, Notification ... 334
Tamil Nadu Police, 1968–69, Review ... 204
Water Supply and Drainage Schemes, 1969–70, Note 204, 622

PATTABI NAIDU, THIRU A.—

Budget 1969–70—Voting:

Agriculture
Animal Husbandry
Capital Outlay on Agriculture
Capital Outlay on Forests
Cinchona
Fisheries
Forests ... ... ... ... ... 242–245

PEER MOHAMED, HAJI M. M.—

Budget 1969–70—Voting:

Agriculture
Animal Husbandry
Capital Outlay on Agriculture
Capital Outlay on Forests
Cinchona
Fisheries
Forests ... ... ... ... ... 287–290

General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... ... 443–444

PENSION—

Retired Supervising staff, Public Works Department ... ... ... ... ... ... 523



PAGES.

P—*cont.*

PERSONAL EXPLANATION—

Time for raising point of order and provision for Zero Hour discussion—by Dr. H. V. Hande ... ... 526–530
Withdrawal of certain remarks by Thiru A. L. Subramaniam ... ... ... ... ... 621

POINTS OF ORDER—

Bill passed in the Council with amendments, consideration in Assembly ... ... ... ... 132–137
House, late commencement and late attendance of Ministers ... ... ... ... ...... 1, 23
Omission of supplementary item in the original question ... ... ... ... ... ... 524, 526
Policy statement booklets on Demands, advance supply to Members ... ... ... ... 426–427
Scope and time for raising ... ... ... 526–527
Statement, Chief Ministers' meet with Central Ministers ... ... ... ... ... 424
Three days' notice for consideration by the Legislative Assembly of a Bill amended by the Legislative Council ... ... ... ... ... 132–137

PONNAMBALAM PULAVAR, P.—

Headquarters Hospital at Tirumayam ... ... 4–5

PONNAPPA NADAR, THIRU R.—

Budget, 1969–70—Voting:

Police ... ... ... ... ... 47–49

PRIVILEGE—

Publication of expunged portion of Assembly Proceedings in "Maravan Madal" ... ... 22–23

R.

RAILWAYS—

New Lines, Madurai-Karaikudi, etc., lines, laying 209–211

RAJA, THIRU A. M.—

Ombudsman, introduction ... ... ... ... 13–14

RAJANGAM, THIRU N.—

Budget, 1969–70—Voting:

**Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 575–576**

PAGES

R—*cont.*


RAMACHANDRAN, THIRU S.—

- Assistant Engineers, Highways Department, regularisation of service ... ... ... ... 211–214
- Budget, 1969–70—Voting :
  - Police ... ... .. ... ... 66–70
- Transport Department, introduction of collection bonus system ... ... ... ... 130–131

RAMAMOORTHI, THIRU K.—

- Budget, 1969–70, Voting :
  - Animal Husbandry ... ... ... ... 230, 231
  - Cinchona ... ... ... ... ... ...
  - General Sales Tax and other Taxes and Duties—
    - Administration ... ... ... ... 427–430
    - Irrigation ... ... ... ... ... 147
    - Capital Outlay on Irrigation ... ... ...
    - Public Works—Works ... ... ...
    - Public Works—Establishment and Tools and Plant ... ... ... ...
    - Capital Outlay on Public Works ... ...
    - Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 539, 541
  - Police ... ... ... ... ... 56–58
- Clash between the toll gate contractor and Virudhachalam Arts College students (C.A.) ... 536
- Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1969 ... ... ... 139–140

RAMASWAMI, THIRU S. J.—

- Budget, 1969–70—Voting :
  - Agriculture ... ... ... ... ... 245–247
  - Animal Husbandry ... ... ... ...
  - Capital Outlay on Agriculture ... ... ...
  - Capital Outlay on Forests ... ... ...
  - Cinchona ... ... ... ... ... ...
  - Fisheries ... ... ... ... ... ...
  - Forests ... ... ... ... ... ...

RAMASWAMI GOUNDER, THIRU K. M.—

- Arrests, corruption charges ... ... ... 508




R—*cont.*

PAGES


RAMARASAN, THIRU V. S.—

- Budget, 1969–70—Voting : 248–249
  - Agriculture ... ... ... ... ...
  - Animal Husbandry ... ... ... ...
  - Capital Outlay on Agriculture ... ... ...
  - Capital Outlay on Forests ... ... ...
  - Cinchona ... ... ... ... ... ...
  - Fisheries ... ... ... ... ... ...
  - Forests ... ... ... ... ... ...

RATION—

- Cards, distribution in Madurai ... ... ... 118–120
- Madurai Town ... ... ... ... ... 410–411
- Reduction in Rajapalayam ... ... ... ... 412–413
- Shops, Madras City ... ... ... ... 120–122
- Supply in Tirunagar ... ... ... ... 409–410

RATHINASABAPATHY, THIRU M.—

- Budget 1969–70—Voting : 185–186
  - Irrigation ... ... ... ... ...
  - Capital Outlay on Irrigation ... ... ...
  - Public Works—Works ... ... ... ...
  - Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
  - Capital Outlay on Public Works ... ...

RESOLUTION (S)—

- Madras District Municipalities Act, 1920, Draft amendment ... ... ... ... 146

RICE—

- Mills, licences ... ... ... ... ... 511–513
- Rupee-a-measure scheme ... ... ... 516–518

ROAD(S)—

- Gingee—Melmalayanur road ... ... ... 422
- Palladam Road—Eswarankoil Road Junction widening ... ... ... ... ... ... 21
- Thirupur town, Circular road ... ... ... 525


S


SADIQ PASHA, THIRU S. J.—

- Big Tank—Ramanathapuram—Nomination (C.A. St.) ... ... ... ... ... ... 227

PAGES

SADIQ PASHA, THIRU S. J.—*cont.*
Budget, 1969-70, Voting :
Irrigation ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... 146,147, 148,149, 150,195-201

SAHADEVA KANDER, THIRU K.—
Budget, 1969-70—Voting :
Irrigation ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 146, 164-166
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 580-581

SANKARIAH, THIRU N.—
Budget, 1969-70—Voting :
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 549-553
Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1969 ... ... 142
Ration, Madurai Town ... ... ... ... 410-411

SATHIAVANI MUTHU DR. (THIRUMATHI)—
Budget, 1969-70—Voting :
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 539, 540, 541, 600-614

SECRETARIAT—
Five days' week ... ... ... ... ... 14-15

PAGES

SIVAGNANAM, M. P.—*cont.*
District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowment Administration) ... ... ... ... 471–473

SOUNDARAPANDIAN, THIRU N.—
Budget, 1969–70—Voting :
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 573–575

SOUNDARAPANDIAN, THIRU P.—
Budget, 1969–70—Voting :
Irrigaton :
Capital Outlay on Irrigation
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 182–183

Panchayat Union, audit of accounts ... ... 129–130

SOUNDARARAJA MOOPANAR, THIRU R.—
Budget, 1969–70—Voting :
Irrigaton :
Capital Outlay on Irrigation
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 150–153

SUBBIAH, THIRU A. K.—
Budget, 1969–70—Voting :
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ... ...
Forests ... ... ... ... ... 229, 230
280–282

General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... ... ... 425



PAGES

SUBBIA, THIRU A. K.—*cont.*
Budget, 1967–70, Voting—*cont.*
Irrigation :
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... 147, 148
172–173

Medical ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... ... 539,
576–579

Police ... ... ... ... ... ... ... 29, 59–61

Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1969 ... ... 143, 144

SUBBIAH MUDALIAR, THIRU A. R.—
Budget, 1969–70—Voting :
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ... ...
Forests ... ... ... ... ... 297–299

Irrigation :
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... 183–185

SUBBARAJA, THIRU A. A.—
Budget, 1969–70, Voting :
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ... ...
Forests ... ... ... ... ... 281,
292–296

PAGES

SUBBARAJA, THIRU A. A.—cont.
Budget 1967–70, Voting—cont.
Medical ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... 588–589
Non-disbursement of loan through Land Mortgage Banks Ramanathapuram (C.A.) ... ... 227, 228

SUBRAMANIAM, THIRU A. L.—
Budget 1969–70, Voting :
Irrigation :
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... 153–156
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 570–573
Personal Explanation, withdrawal of statement made ... ... ... ... ... ... 621

SUB-WAY.
Somanur Railway Station ... ... ... 24

SUNDARA BHARATHI SOWDI, S.—
Budget 1969–70, Voting :
Irrigation :
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... 147, 148
156–158

SURENDRAN, THIRU M.—
Budget 1969–70, Voting :
District Administration and Misellaneous (including Hindu Religious and Charitable Endowments Administration) ... ... ... ... ... 458
476–477
General Sales-Tax and other Taxes and Duties—
Administration ...... ... ... ... 425,
441–442
Police ... ... ... ... ... 53–56





PAGES

SWAMINATHAN, THIRU V.—
Budget 1969–70, Voting : 232
Capital Outlay on Forests ... ... ... ...
Irrigation ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plants ... ... ... ... ... 148, 149
176–178
Capital Outlay on Public Works ... ... 519–521
House-rent allowance to teachers in aided Schools ...

T

TANK. 227
Ramanathapuram, Big—Renovation (C.A.) ...

TAR. 215–217
Purchase from Neyveli ... ... ... ...

TAXES.
Agricultural Income-tax, collection in Vettaikaranputhur ... ... ... ... ... 509

TEACHERS. 519–521
House-rent allowance ... ... ... ...

THEERTHAGIRI, THIRU N.—
Budget 1969–70, Voting :
District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Administration) ... ... 475–476

THANGAPPAN, THIRU T.— 227
Big Tank, Ramanathapuram, renovation (C.A.) ...
Budget, 1969–70— ... ... ... ...
Irrigation ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... 175–179
Capital Outlay on Public Works ... 180–181

TRANSPORT DEPARTMENT—
Collection bonus ... ... ... ... ...

PAGES

[T]RADE UNIONS.
Simpson and Company, Limited ... ... ... 401–403

V

[V]ARADARAJAN, THIRU N.
Budget 1969–70, Voting :
General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... ... 425
Irriagtion ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 147, 160–163
Medical ... ... ... ... ...
Public Health ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... 541
[V]EERAMANI, THIRU C.—
Budget 1969–70, Voting :
District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Administration) ... ... ... 460–463
[V]ELLATHURAI, THIRU A.—
Budget 1969–70, Voting :
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona Fisheries ... ... ... ...
Forests ... ... ... ... ... 303–304
[V]ELUSAMY, THIRU P.—
Budget 1969–70—
Irriagtion ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... 149,178–179



PAGES

VELUSAMY, THIRU P.—*cont.*
Budget 1969–70, Voting—*cont.*
Medical ... ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ...
Public Health ... ... ... ... ... 568–570
VENKATASWAMI, THIRU B.—
Boundary stones, painting ... ... ... 15–16
Budget 1969–70, Voting :
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ...
Forests ... ... ... ... ... 241, 247
Electricity, grid station at Hosur ... ... ... 217
Fishing in sea coast ... ... ... ... 514–516
Potato seeds cold storage in Hosur taluk ... .. 124
Rice, rupee-a-measure scheme ... ... ... 516–518
VINAYAKAM, THIRU K.—
Anti-Hindi agitation ... ... ... .. 403–406
Budget 1969–70, Voting :
Agriculture ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Forests ... ... ...
Cinchona Fisheries ... ... ... ...
Forests ... ... ... ... ... 240
District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Administration) ... ... ... ... 457–458, 482–486
General Sales Tax and other taxes of Duties—Administration ... ... ... ... 425, 444 449,456
Corporation Water Works, smoke nuisance ... ... 2
Cotton package programme ... ... ... 113–115

PAGES

VINAYAKAM, THIRU K.—*cont.*
Budget 1969–70, Voting—*contd.*
High-yielding grains, Tiruchirappalli district ... 416–417
Date commencement of the House adn late attendance by Ministers (Point of order) ... ... 1, 2
Paddy producers, writ petitions ... ... ... 115–118
Policy statement booklet on Demands, advance supply to Members (Point of order) ... ... 426–427
Ration, supply in Tirunagar ... ... ... ... 409–410
Report on double crop cultivation ... ... ... 122–123
Wheat supply, Tiruchirappalli town ... ... ... 18–19

W

WAKF BOARD.
*See* Colleges

WATER-WORKS.
Corporation, smoke nuisance ... ... ... 2

WILLIAM, THIRU M.
Budget 1969–70, Voting :
District Administration and Miscellaneous (including Hindu Religious and Charitable Endowments Administration) ... ... ... 459–460
Irrigation :
Capital Outlay on Public Works ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
180–190

Z

ZERO HOUR.
Clarification ... ... ... ... ... 528–530

61455